# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான
ஏழாவது சட்டமன்றப் பேரவையின்
இரண்டாவது கூட்டத்தொடர்

1981 மார்ச் 31, மற்றும் ஏப்ரல் 1, 2, 3 ஆம் நாட்கள்

(தொகுதி XVII - எண்கள் 1 முதல் 4 வரை)

©
தமிழ்நாடு அரசு
1988

சட்டமன்றப் பேரவைத் துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.
விலை ரூ. 11

Y211,31 N81
N83.17;2
122170

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சாதிக் அலி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சி பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதிஅமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு,: மீன்வளம் பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள். உள்ளிட்ட ஊரக தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன (செய்தி அறநிலையத்துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்பட தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சி கழகம், திரைப்படச்சட்டம், இந்து அறநிலையத்துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம்: பூமிதானம், கிராமதானம் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதி கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை

13. மாண்புமிகு திரு. கே. இராஜாராமநாயுடு (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—வேளாண்மை பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துதுறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து. இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் (கைத்தறி-கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

# PERSONNEL OF THE GOVERNMENT CF TAMILNADU

Governor of Tamil Nadu

Thiru SADIQ ALI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M.G. RAMACHANDRAN (Chief Minister)—Public General Administration, Planning, Indian Administrative Service District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating ot Public Works Department.

2. Hon. D . V.R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K.A. KRISHNASAMY (Minister for Rural)—Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R.M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Pesmits.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official Language.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture) - Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedeness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDAM (Minister for Labour—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H.V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S.N. RAJENDRAN (Minister for Handloom and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits and Passports.

17. Hon. Thiru M. VIJAYASARATHY (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare) Social Welfare including Women and Children Welfare Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.



## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

*மாண்புமிகு திரு. க. இராசாராம்

### பேரவைத் துணைத் தலைவர்.

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### † மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வி. வி. சுவாமிநாதன்.
2. திரு. ஜே. எஸ். இராசு.
3. திரு. என். எஸ். வி. சித்தன்.
4. திரு. எஸ். சிவசாமி.

### சட்ட மன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ.,பி.எல்.

### துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல.

### குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்).

### சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. செ. சு. ஞானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. பா. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ.
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அதிகாரி).

---

* 21 6 1980 அன்று தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.
† 23-1-1981 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

## பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்.

### தலைமை நிருபர்

திரு. மா. சந்திரசேகரன்.

### விவாதப் பதிப்பாளர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.



## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| (1) | (2) |
| 1 அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 3 அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 4 அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 5 அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 6 அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ. வ.) |
| 7 அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 8 அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 9 அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ. வ.) |
| 10 அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 11 அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 12 அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 13 அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 14 ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 15 ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 16 ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ. வ.) |
| 17 சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 18 ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 19 இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 20 இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 21 இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 22 இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 23 இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ |
| 24 இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 25 இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 26 இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ |
| 27 இராசேந்திரன், திரு. எஸ்.என். | ஆத்துக்குடி |
| 28 இராமச்சந்திரன், திரு. எம்.ஜி. | மதுரை (மேற்கு) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 29 இராமச்சந்திரன், திரு. கே.கே. | .. | சாத்தூர் |
| 30 இராமச்சந்திரன், திரு. ச. | .. | பண்ருட்டி |
| 31 இராமச்சந்திரன், திரு. ந. செஞ்சி. | .. | செஞ்சி |
| 32 இராமசாமி, திரு. த. | .. | இராமநாதபுரம் |
| 33 இராமசுப்பிரமணியம், திரு. எஸ். | .. | ஸ்ரீவைகுண்டம் |
| 34 இராமலிங்கம், திரு. ஏ. | .. | காட்டுமன்னார் (செ. வ.) |
| 35 இராமலிங்கம், டாக்டர் கே. பி. | .. | இராசிபுரம் |
| 36 இராமலிங்கம், திரு. செ. | .. | திருவிடைமருதூர் |
| 37 இராஜசேகரன், திரு. வெ. | .. | இராதாகிருஷ்ண நகர் |
| 38 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | .. | நம்பி |
| 39 இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | .. | ஆண்டிப்பட்டி |
| 40 இளையபெருமாள், திரு. எல். | .. | எழும்பூர் (செ. வ.) |
| 41 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | .. | அம்பாசமுத்திரம் |
| 42 உகம்சந்த், திரு. எஸ். டி. | .. | மதுராந்தகம் |
| 43 உச்சி, திரு. கே. | .. | கூடலூர் |
| 44 உத்திராபதி, திரு. பொ. | .. | திருத்துறைப்பூண்டி (செ. வ.) |
| 45 உமாநாத், திரு. ரா. | .. | நாகை |
| 46 கண்ணன், திரு. ம. | .. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 47 கணபதி, திரு. கே. ஆர். | .. | சிதம்பரம் |
| 48 கணேசன், திரு. இ. | .. | இடைப்பாடி |
| 49 கணேசன், திரு. சி. | .. | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 50 கந்தசாமி, திரு. கா. வே. | .. | கிணத்துக்கடவு |
| 51 கந்தசாமி, திரு. பி. | .. | பொங்கலூர் |
| 52 கபாலி, திரு. டி. கே. | .. | மைலாப்பூர் |
| 53 கருணாநிதி, டாக்டர், மு. | .. | அண்ணா நகர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 54 கருப்பசாமிப் பாண்டியன் திரு. வி. | .. | பாளையங்கோட்டை |
| 55 கருப்பையா, திரு. இரா. | .. | குளித்தலை |
| 56 கருப்பையா, திரு. ஏ. டி. | .. | வால்பாறை (செ. வ.) |
| 57 கல்லன், திரு. கே. | .. | உதகமண்டலம் |
| 58 கலிதீர்த்தான், திரு. சோ. | .. | சங்கராபுரம் |
| 59 கலியமூர்த்தி, திரு. பெ. | .. | மங்கலூர் (செ. வ.) |
| 60 நன்னிலம் கலையரசன், திரு. ஆ. | .. | நன்னிலம் (செ. வ.) |
| 61 காளிமுத்து, திரு. கா. | .. | திருப்பரங்குன்றம் |
| 62 கிட்டப்பா, திரு. என். | .. | மாயவரம் |
| 63 கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | .. | காங்கேயம் |
| 64 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | .. | ஆயிரம் விளக்கு |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. கா. | .. | ஆண்டிமடம் |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | .. | நெல்லிக்குப்பம் |
| 67 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | .. | சேலம்-1 |
| 68 கிருஷ்ணன், திரு. ரா. | .. | வாசுதேவநல்லூர் |
| 69 குப்புசாமி, திரு. என். | .. | மொரப்பூர் |
| 70 குப்புசாமி, திரு. கே. | .. | பெட்டன்சத்திரம் |
| 71 குப்புசாமி, திரு. செ. | .. | வந்தவாசி (செ. வ.) |
| 72 குமரிஅனந்தன், திரு. | .. | திருவொற்றியூர் |
| 73 குருசாமி, திரு. ப. | .. | அந்தியூர் (செ. வ.) |
| 74 அண்ணாதாசன், திரு. எம். | .. | திருவெறும்பூர் |
| 75 குலசேகர், திரு. ஏ. டி. | .. | சிங்காநல்லூர் |
| 76 குலசேகரப் பாண்டியன், திரு. ந. | .. | வாணியம்பாடி |
| 77 குழந்தைவேலு, திரு. ப. | .. | உடுமலைப்பேட்டை |
| 78 கேசவ ஆதித்தன், திரு. சி. | .. | திருச்செந்தூர் |
| 79 கோபால், திரு. சி. | .. | சோளிங்கர் |
| 80 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | .. | பெரியகுளம் |
| 81 கோபாலன், திரு. ஆர். டி. | .. | கம்பம் |
| 82 கோமதி சீனிவாசன், திருமதி. | .. | வலங்கை (செ. வ.) |
| 83 கோவேந்தன் திரு. எம். ஆர். | .. | பேராவூரணி |
| 84 கோவைத்தம்பி, திரு. | .. | பேரூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 85 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 86 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 87 | சட்டநாத கரையாளர் திரு. வி. | தென்காசி |
| 88 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 89 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 90 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 91 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 92 | சபாபதி, திரு. பி. | அரூர் (செ. வ.) |
| 93 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டணம் |
| 94 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 95 | சாமிக்கண்ணு, திரு. நா. | செங்கம் |
| 96 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 97 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 98 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 99 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 100 | சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (செ. வ.) |
| 101 | சிவபெருமான், திரு. மு. | ஓமலூர் |
| 102 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 103 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 104 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 105 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 106 | சின்னராஜ், திரு. எம். | தொண்டாமுத்தூர் |
| 107 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 108 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 109 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 110 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 111 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 112 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 113 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 114 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |
| 115 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 116 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 117 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 118 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 119 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 120 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 121 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ. வ.) |
| 122 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 123 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. பூ. செ. | அரவக்குறிச்சி |
| 124 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 125 | சொக்கலிங்கம், திரு. கே. | திருப்போரூர் |
| 126 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 127 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 128 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி—2 |
| 129 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர் |
| 130 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம் |
| 131 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 132 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 133 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 134 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ. வ.) |
| 135 | தனபால், திரு. ப. | சங்கரி (செ. வ.) |
| 136 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 137 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 138 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 139 | திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 140 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 141 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 142 | திருமான், திரு. | ஏற்காடு (செ.வ.) |
| 143 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 144 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 145 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 146 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 147 | துரைராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 148 | துரைராஜ், திரு. பி. | சங்கரநாயினார் கோவில் (செ.வ. |
| 149 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 150 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 151 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 152 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 153 | நவநீதகிருஷ்ணபாண்டியன், திரு. | ஆலங்குளம் |
| 154 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 155 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 156 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 157 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 158 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 159 | பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 160 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 161 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 162 | பரமசிவகவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 163 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 164 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 165 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 166 | பழனியப்பன், திரு. கு. | விழுப்புரம் |
| 167 | பழனிவேல், திரு. என். | பழனி (செ. வ.) |
| 168 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 169 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 170 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 171 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ. வ.) |
| 172 | பாலகிருஷ்ணன், திரு. க. | மொடக்குறிச்சி |
| 173 | பாலகிருஷ்ணன், திரு. | சிவகாசி |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 174 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ. வ.) |
| 175 | வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 176 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ. வ |
| 177 | பானுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ. வ.) |
| 178 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 179 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 180 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 181 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 182 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ. வ.) |
| 183 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ) |
| 184 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 185 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 186 | பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ. வ.) |
| 187 | பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 188 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 189 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 190 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 191 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 192 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ. வ.) |
| 193 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 194 | முசிறிப்புத்தன், திரு. ம. | திருச்சி–11 |
| 195 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 196 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 197 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 198 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ. வ.) |
| 199 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 200 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிபூண்டி |
| 201 | முனுசாமி, திரு. மு. ப | பாலக்கோடு |
| 202 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட்டு (செ. வ.) |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

### இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்ட மன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்.

### 1981 மார்ச் 31, ஏப்ரல் 1, 2 மற்றும் 3ஆம் நாட்கள் (தொகுதி XVII எண்கள் 1-4)

உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **அரசினர் சட்ட முன்வடிவுகள்—** | |
| கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981, .. | 636 |
| கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு, 1981 .. | 323 |
| மாவட்டக் காவல்—சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. | 457—458 |
| **அரசினர் தீர்மானம்—** | |
| விதி 58 ஐத் தளர்த்தல் .. | 600 |
| **அறிக்கைகள் அளித்தல்—** | |
| அரசு உறுதிமொழிக் குழு .. | 39 |
| கல்வி அமைச்சரின் திருத்த அறிக்கை .. | 443 |
| சட்ட விதிகள் ஆய்வுக் குழு .. | 39 |
| **அறிவிப்புகள்—** | |
| ஆளுநர் செய்தி—1981–82 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் .. | 38 |
| நிதி அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க கவனஈர்ப்பு ஒத்திவைக்கப் பெறுதல் .. | 34 |
| **உரிமைப் பிரச்சினை—** | |
| வானொலியில் பேரவை நடவடிக்கை தவறாக அறிவிக்கப் பெற்றது—தீர்ப்பு .. | 433—434 |

பக்கங்கள்

**ஒத்திவைப்புத் தீர்மானங்கள்**

- எண்ணூரர் மின் நிலையத்தில் நிலக்கரிப் பற்றாக்குறையினால் உற்பத்தி பாதிக்கப்பெற்றுள்ளது. 619—630
- திருச்சி மாவட்டத்தில் நிலவரிக்காக ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப் பெறுவது .. 434—442
- திருப்பத்தூரில் புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் இந்து முஸ்லீம் பீடித் தொழிலாளர்கள் வெளியேற்றம் .. 31—31
- மதுராந்தகத்தில் ஒரு பெண் மர்மமான முறையில் மரணம் அடைந்துள்ளது .. 298—31[illegible]
- மதுரை தியாகராயர் பொறியியல் கல்லூரி மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில் இரு மாணவர்கள் மரணம் அடைந்துள்ளது .. 600—619

**கவன ஈர்ப்புகள்**

- கல்வி நிலையங்களுக்கு அருகில் திரை அரங்குகள் கட்டுதல் .. 321—323
- காலரா, வேதாரண்யம் பகுதி .. 34—39
- கோவை நகரில் ரேஷன் கடைகளில் கோதுமை கொடுக்கப் பெறாதது .. 631—633
- தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தில் பல பதவிகள் நிரப்பப்பெறாமல் இருப்பது .. 633—636
- திருச்சி மாவட்டம் மணச்சநல்லூர் அரிசி ஆலைகள் இயங்காமல் இருப்பது .. 450—457
- திருவொற்றியூர்—பொன்னேரி பகுதி மீனவர்களிடையே தொடர்ந்து மோதல் ஏற்பட்டு வருவது .. 443—449
- விவசாயிகள் ஓர் அளவுக்கு மேல் தங்களிடம் இருக்கும் நெல் கையிருப்பை அரசுக்கு அறிவித்தல் .. 313—321

**தகவல் கோரல் —**

- அரசுத் துறைகளில் பெயர்ப் பலகைகள் தமிழில் இருத்தல் .. 432
- அரசுப் பேருந்துகளில் உறுப்பினர்களுக்கு அளிக்கப் பெற்றுள்ள சலுகை .. 295—298
- உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் .. 293, 294, 433, 597—600

**பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்** .. 115, 386, 387, 574, 681





**வரவு—செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு—**

- சமுதாய நலவளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் சாலைகளும், பாலங்களும், சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு — 40—114, 323—386
- பாசனம் .. 459—574
- பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 637—680

**வினாக்கள்— விடைகள்—**

- உடுக்குறியிட்ட வினாக்கள் .. 1—31, 2[illegible]3—293, 395—432, 555—597

அகர வரிசை தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன. துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளை குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பொதுவாக பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'மாநகராட்சி(கள்)'' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள், குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத்தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின்கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர், மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் ''தலைவர்' என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப்பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது :—

| | | |
|---|---|---|
| அ. | .. | அறிக்கை |
| அறுவி. | .. | அறிவிப் |



| | | |
|---|---|---|
| கு.வி. | .. | குறுகிய கால விவாதம் |
| பொ.வி. | .. | பொது விவாதம் |
| ஆ.உ. | .. | ஆளுநர் உரை |
| உ.பி. | .. | உரிமைப் பிரச்சினை |
| ஒ.பி. | .. | ஒழுங்குப் பிரச்சினை |
| க.ஈ. | .. | கவன ஈர்ப்பு |
| க.ஈ.அ. | .. | கவன ஈர்ப்பு அறிக்கை |
| ச.அ.நி. | .. | சட்ட முன்வடிவின் அறிமுக நிலை |
| ச.ஆ.நி. | .. | சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை இந்நிலையில்;—<br>(1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம்.<br>(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்.<br>(3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம்.<br>(4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கான தீர்மானம்.<br>(5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன. |
| ச.பிரி.ஆ. | .. | சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்தல் |
| ச.பே. | .. | சட்டமன்ற பேரவை |
| ச.மே. | .. | சட்டமன்ற மேலவை |
| த.கோ. | .. | தகவல் கோரல் |
| த.வி. | .. | தன்னிலை விளக்கம் |
| தீ. | .. | தீர்மானம் |
| உ.தீ. | .. | உரிமைத் தீர்மானம் |
| ஒ.தீ. | .. | ஒத்திவைப்புத் தீர்மானம் |
| த.தீ. | .. | தனித் தீர்மானம் |
| து.மா.கோ. | .. | துணை மானியக் கோரிக்கை |
| மி.மா.கோ. | .. | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை |

பக்கங்கள்

ஆ—தொடர்ச்சி

ஆலயங்கள்—

திருப்பரங்குன்றம் சுப்பிரமணியர் கோவில், ..
தனி நிர்வாக அமைப்பு .. 10—12

திருப்புடைமருதூர் (திருநெல்வேலி) திருப்பணி, .. 402—403

வேதாரண்யேஸ்வரர், உப்பள நிலங்கள் .. 7—10

ஸ்ரீரங்கம், ராஜகோபுரம் திருப்பணி .. 12—16

ஆறுமுகம், திரு. எம்

எண்ணூர் மின் நிலையம், நிலக்கரிப் பற்றாக்
குறையினால் உற்பத்தி பாதிப்பு (ஒ.தீ) .. 619

தியாகராயர் பொறியியல் கல்லூரி (மதுரை),
மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ.) 601

திருச்சி மாவட்டம் மணச்சநல்லூர் அரிசி ஆலை
கள் இயங்காமல் இருப்பது (க.ஈ) .. 450—456

ஆறுமுகம் திரு. சேலம், மு—

வரவு-செலவுத் திட்டம் 1981—82, வாக்கெடுப்பு:
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும்
நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும், பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச்
செலவு } 348—349

ஆறுமுகம், திரு. கு—

சிமெண்ட் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்கள்
சிமெண்ட் ஒதுக்கீடு .. 582—583

வரவு-செலவுத் திட்டம், 1981—82, வாக்கெடுப்பு:
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச்செலவு } 637—640

ஆலூர் ஜெகதீசன், திரு. பு. கோ—

வரவு-செலவுத் திட்டம், 1981—82, வாக்கெடுப்பு:
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும்,
நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும், பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச்
செலவு } 62—69



"இ"

இராசமாணிக்கம், திரு. இரெ.
ஓர் அளவுக்குமேல் உள்ள நெல்லை அரசுக்கு
அறிவிக்கவேண்டுமென்ற அரசு உத்தரவினால்
விவசாயிகள் பாதிப்பு (க.ஈ.) .. 314, 315, 316, 317—318

குத்தாலம் ஒன்றியம், மேல்நிலை நீர்த்தேக்கத்
தொட்டிகள் 575—576

சிமெண்ட் பற்றாக்குறை 583—586

வரவு—செலவுத் திட்டம், 1981—82, வாக்கெடுப்பு
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும்,
நகராட்சி நிர்வாகமும், சாலைகளும் பாலங்
களும் சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச்
செலவு 103—109

பாசனம்— 384

பாசனம் குறித்த மூலதனச் செலவு 459

இராசரத்தினம், திரு. து—

வரவு செலவுத் திட்டம் 1981—82, வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும்
நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும், பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச்
செலவு 325—328

இராசாம்பாள், திருமதி. தா.—

தியாகராய பொறியியல் கல்லூரி (மதுரை)
மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ.) 601

மதுராந்தகத்தில் ஒரு பெண் மர்ம மரணம்
(ஒ. தீ.) 298

இராசாராமன், திரு. எஸ்.—

தியாகராய பொறியியல் கல்லூரி (மதுரை)
மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ தீ.) 601

இராசு, திரு ஜே. எம்.—

ஆலம்பாடி நடுநிலைப்பள்ளி 593—595

தியாகராய பொறியியல் கல்லூரி (மதுரை)
மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ.) 610—612

இராமசாமி, திரு எஸ். என்.—

தியாகராயர் பொறியியற் கல்லூரி (மதுரை)
மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ.) 607

"இ"—தொடர்ச்சி


இராமச்சந்திரன் திரு. ச.—

எண்ணூர் மின் நிலையம், நிலக்கரிப்பற்றாக்குறையினால் உற்பத்தி பாதிப்பு (ஒ.தீ.) 626—630

மதுராந்தகத்தில் ஒர் பெண் மர்ம மரணம் (ஒ.தீ.) 300

இராமச்சந்திரன் திரு. செஞ்சி ந.—

முடையூர் (தெ. ஆ மாவட்டம்) பெரிய ஆச்சூர் சாலை 417—418

இராமலிங்கம் திரு செ—

கும்பகோணம் மருத்துவமனை, நாய்கடி மருந்து நிலை தட்டுப்பாடு 18—20

தியாகராய பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ.) 601

இராஜசேகரன் திரு வெ—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும், சாலைகளும் பாலங்களும் சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 54—6.

இராஜா முகமது திரு. சே.—

வரவு-செலவுத் திட்டம், 1981—82 வாக்கெடுப்பு பாசனம் 459, 460, 462

பாசன குறித்த மூலதனச்செலவு 670—679

இளையபெருமாள் திரு. எல்.—

தியாகராய பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ.) 601, 613, 614

1976 ல் நியமிக்கப் பெற்ற மாவட்ட நீதிபதிகள், ஆதிதிராவிடர்கள், மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்கள் 5…1


"ஈ"


ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் திரு பி.—

எண்ணூர் மின் நிலையம், நிலக்கரிப் பற்றாக் குறையினால் உற்பத்தி பாதிப்பு (ஒ.தீ.) 619—620

தமிழ்நாட்டில் ஓடும் நதிகள், வெள்ளக்கட்டுப் பாடு பணிகள் 274—277

தியாகராய பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ) 601

திருக்கோவிலூர் கூட்டுறவு நகரவங்கி, முறைகேடுகள் 563—565

திருச்சி மாவட்ட மணச்சநல்லூர் அரிசி …




ஈ—தொடர்ச்சி


ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், திரு. பி.—தொடர்ச்சி

திருப்பத்தூரில் பீடித் தொழிலாளர்கள் புறம்போக்கு நிலங்களிலிருந்து வெளியேற்றம் (ஒ.தீ.) 32

நிலப்பதிவேடுகள், புதுப்பிக்கும் திட்டம் 262—263

ரேஷன் கடைகள், கோவை நகர், கோதுமை வழங்கல் (க.ஈ.) 631—632

விவசாயத் தொழிலாளர்கள், குறைந்தபட்ச ஊதியம் 565—570


"உ"


உணவு தானியங்கள்

ஒரளவுக்கு மேல் உள்ள நெல்லை அரசுக்கு தெரிவிக்க வேண்டுமென்ற அரசு உத்தரவினால் விவசாயிகள் பாதிப்பு (க.ஈ.) 313—321

உணவுப் பொருள்கள்—

ரேஷன் கடைகள், கோவை நகர், கோதுமை வழங்கல் (க.ஈ.) 631—632

உத்திராபதி, திரு. பொ.—

அரசுத் துறைகளில் பெயர்ப் பலகைகள் தமிழில் இருத்தல். (த. கே.) 432

எண்ணூர் மின்நிலையம், நிலக்கரிப் பற்றாக் குறையினால் உற்பத்தி பாதிப்பு (ஒ.தீ.) 619

காலரா, வேதாரண்யம் பகுதி (க.ஈ.) 34—38

வரவு-செலவுத் திட்டம், 1981—82 வாக்கெடுப்பு — சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சிநிர்வாகமும் சாலைகளும் பாலங்களும் சாலைகளும், பாலங்களும், குறித்த மூலதனச் செலவு 80—86

உப்பு—

உற்பத்தி 586—590

உமாநாத் திரு. ரா.—

அரசுப் பேருந்துகளில் உறுப்பினர்களுக்கு சலுகை (த.கே.) 295

எண்ணூர் மின் நிலையம், நிலக்கரிப் பற்றாக்குறையினால் உற்பத்தி பாதிப்பு (ஒ.தீ.) 619

தியாகராயர் பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ) 601

திருச்சி மாவட்டத்தில் நிலவரிக்காக ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப் பெறுவது 437-438, 439

உமாநாத், திரு. ஆர்.—தொடர்ச்சி

திருச்சி மாவட்டம் மணச்சநல்லூர் அரிசி ஆலைகள் இயங்காமல் இருப்பது (க.ஈ.) 450, 454—455

நாகூர், நகரியமாக்குதல். 418—420

உரிமைப் பிரச்சினைகள்—

பார்க்க—தலைவர்.

உள்ளாட்சிகள்—

நாகூர், நகரியம் அமைத்தல். 418—420

"ஏ"

ஏடுகள்—

பேரவை முன் வைக்கப்பெற்றவை 115, 386—387, 514, 681

"க"

கருணாநிதி, டாக்டர் மு.—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள். (த.கோ.) 598

மதுராந்தகத்தில் ஒரு பெண் மர்ம மரணம் (ஒ.தீ.) 309—310

கருப்பையா, திரு. இரா.—

எண்ணூர் மின் நிலையம், நிலக்கரிப் பற்றாக் குறையினால் உற்பத்தி பாதிப்பு (ஒ.தீ.) 632

திருச்சி மாவட்டத்தில் நிலவரிக்காக ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பெறுவது. 436—437

திருச்சி மாவட்டம் மணச்சநல்லூர் அரிசி ஆலைகள் இயங்காமல் இருப்பது. (க.ஈ.) 450, 453, 454

பாடநூல் நிறுவனம், பல பதவிகள் நிரப்பப் படாமை. (க.ஈ.) 634, 635

கருப்பையா, திரு. ஏ.டி.—

தியாகராயர் பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல்







கவன ஈர்ப்புகள்—

ஓர் அளவுக்குமேல் உள்ள நெல்லை அரசுக்கு அறிவிக்க வேண்டுமென்ற அரசு உத்திரவினால் விவசாயிகள் பாதிப்பு. 313—321

கல்வி நிலையங்களுக்கு அருகில் திரை அரங்குகள் கட்டுதல். 321—323

காலரா, வேதாரண்யப் பகுதி. 34—39

திருச்சி மாவட்டம், மணச்சநல்லூர் அரிசி ஆலைகள் இயங்காமல் இருப்பது. 450—457

திருவொற்றியூர்—பொன்னேரி பகுதி மீனவர்களிடையே தொடர்ந்து மோதல் ஏற்பட்டு வருவது. 447—449

பாடநூல் நிறுவனம், பல பதவிகள் நிரப்பப் படாமை. 633—636

ரேஷன் கடைகள், கோவை நகர், கோதுமை வழங்கல். 631—633

கல்விக் கூடங்கள்—

பச்சையப்பன் பொறுப்புக் கழக நிர்வாகம் பற்றிய சட்ட முன்வடிவு, திருத்தம் (அ.நி.) 443

கனிமங்கள்—

கருப்புக் கற்கள். 581

கிட்டப்பா, திரு. என்.—

அயல் நாடுகளில் வேலைவாய்ப்பு. 590—593

ஆலந்தூர், குடிநீர் வழங்கல். 575

பாலி கலப்படம், நடவடிக்கை. 400—401

கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.—

அரசுப் பேருந்துகளில் உறுப்பினர்களுக்கு சலுகை (த.கோ.) 47

கிருஷ்ணன், திரு. ரா.—

தியாகராயர் பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ) 601

தொழிற்சாலைகள், மின்கட்டணம், வசூலாக வேண்டிய தொகை 253—260

ரேஷன் கடைகள், கோவை நகர், கோதுமை வழங்கல் (க.ஈ.) 631

கு—தொடர்ச்சி.

குடிநீர்

ஆலந்தூர், வழங்கல்— 575

குத்தாலம் ஒன்றியம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள். 575—576

திருப்பரங்குன்றம். 273—274

பாலாற்றின் நிலத்தடி நீர், ஆய்வு. 570—572

குமரிஅனந்தன், திரு—

தொழிற்சாலைகள், மின்கட்டணம், செலுத்த வேண்டிய தொகை .. 253—260

வரவு-செலவுத் திட்டம், 1981–82, வாக்கெடுப்பு:
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 86—94

குலசேகரபாண்டியன், திரு. த.—

வரவு-செலவுத் திட்டம் 1981—82, வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்.
சாலைகளும், பாலங்களும்.
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. 326—330

குழந்தைவேலு, திரு. ப.—

கோயமுத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு, 1981 323

வரவு-செலவுத் திட்டம், 1981–82, வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் 40, 41, 42, 43
சாலைகளும், பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. 365—384

குழுக்கள்—

அரசு உறுதிமொழிக் குழு முதலாவது அறிக்கை, அளித்தல். 39

சட்ட விதிகள் ஆய்வுக்குழு, முதலாவது அறிக்கை, அளித்தல். 39



"கூ"—தொடர்ச்சி

கூட்டுறவு—

திருக்கோவிலூர் நகர வங்கி, முறைகேடுகள். 563—565

பலநோக்குச் சங்கங்கள் நிர்வாக சீரமைப்பு 282—284

கேசவஆதித்தன், திரு. சி.—

வரவு-செலவுத் திட்டம் 1981–82, வாக்கெடுப்பு:
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும், பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 333—336

கைத்தறி—

நவீன வடிவமைப்பு நிலையம் 428—430

கோபாலகிருஷ்ணன், திரு. கா.—

வரவு செலவுத் திட்டம் 1981—82, வாக்கெடுப்பு
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் —
சாலைகளும், பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. 352

கோபாலன், திரு. ஆர். டி.—

வரவு-செலவுத் திட்டம் 1981-82, வாக்கெடுப்பு
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும், பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. 350—351

"ச"

சங்கரய்யா, திரு. என்.—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த. கோ.) .. 597

சட்டநாத கரையாளர், திரு. கி.—

அரசு உறுதிமொழிக் குழு, முதலாவது அறிக்கை அளித்தல் .. 39

சட்டம் ஒழுங்கு—

திருவொற்றியூர்—பொன்னேரி பகுதி மீனவர்களிடையே தொடர்ந்து மோதல் ஏற்பட்டு வருவது (க.ஈ.) .. 443—449

வாகைக்குளம் துப்பாக்கிச் சூடு, இறந்தோரின் குடும்பத்திற்கு நிதியுதவி .. 398—399

சட்ட முன்வடிவுகள்—

கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1

அ.நி. .. 636

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு 1981
அ.நி. ... 323

மாவட்டக் காவல்—சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு 1981
அ.நி. .. 457—458

சந்திரசேகரன், திரு. ஏ.—
தியாகராயர் பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட போதல் (ஒ.நீ.) 607

சமூக நலன்—
கொல்லிமலை, பால்மாடு வளர்ப்புப் பண்ணை அமைத்தல் .. 31
முதியோர்கள், உதவித் தொகை .. 28—30

சாகுல் ஹமீது, திரு. ஏ.—
வரவு-செலவுத் திட்டம் 1981-82, வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும், பாலங்களும் 354—355
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு

சாலைகள்—
முடையூர்—பெரிய தச்சூர் சாலை 417—418

சித்தன், திரு. எம். எஸ். வி.—
எண்ணூர் மின் நிலையம், நிலக்கரிப் பற்றாக் குறையினால் உற்பத்தி பாதிப்பு (ஒ.நீ.) 62 —623
தியாகராய பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட போதல் (ஒ.நீ.) 602—603
திருப்பரங்குன்றம் சுப்பிரமணியர் கோவில், தனி நிர்வாக அமைப்பு .. 10—12
மதுராந்தகத்தில் ஒரு பெண் மர்ம மரணம் (ஒ.நீ.) .. 298
வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு
சமுதாயர் நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும், பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. 40

சிமெண்ட்—
சிமெண்ட் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்கள், ஒதுக்கீடு .. 582—583



சிவசாமி, திரு. செ.—
தியாகராயர் பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட போதல் (ஒ.நீ.) .. 607
வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. 40—41

சிவஞானம், திரு. ந.—
வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும், பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. 41
பாசனம் 459,
பாசனம் குறித்த மூலதனச் செலவு 460—461
498—503

சிவப்பிரகாசம், திரு. சி.—
கொல்லிமலை, பால்மாடு வளர்ப்புப் பண்ணை அமைத்தல் .. 31
சேலம் மாவட்டம், பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வாக சீரமைப்பு .. 282—284
வரவு-செலவுத் திட்டம் 1981-82, வாக்கெடுப்பு
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும், பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. 354
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 510—512

சின்னசாமி, திரு. எம்.—
கரூர், அரசினர் மாணவியர் விடுதி .. 597
கரூர், தீ அணைப்பு வண்டிகள் .. 1—5
திருச்சி மாவட்டம், மணச்ச நல்லூர் அரிசி ஆலைகள் இயங்காமல் இருப்பது (க.ஈ.) 450
வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 503—507

ச—தொடர்ச்சி — பக்கங்கள்

சின்னராசு, திரு. மா.—
- காகித ஆலை, திருச்சி மாவட்டம் .. 280—282
- வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு
  - சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்
  - சாலைகளும் பாலங்களும்
  - சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. 94—99
  - பாசனம்
  - பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 512—514

சுந்தரம், திரு. கே. ஆர்.—
- சட்டமன்றத் தேர்தல், 1980, கலவரங்கள், 395—398
- திருப்பத்தூரில் பீடித் தொழிலாளர்கள் புறம்போக்கு நிலங்களிலிருந்து வெளியேற்றம் (ஒ. தீ.) .. 32
- வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
  - சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்
  - சாலைகளும், பாலங்களும்
  - சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. 40,69—75
  - பாசனம்
  - பாசனம் குறித்த மூலதனச் செலவு 459

சுந்தரம், திரு. ப.—
- கறுப்புக் கற்கள் .. 581
- திருப்பத்தூரில் பீடித் தொழிலாளர்கள் புறம்போக்கு நிலங்களிலிருந்து வெளியேற்றம் (ஒ. தீ) .. 32—33
- வரவு-செலவுத் திட்டம், 1981—82, வாக்கெடுப்பு—
  - பாசனம்
  - பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 493—495
- வேலைவாய்ப்பு அலுவலகம், வட ஆற்காடு, இடமாற்றம் 287—289

சுந்தரராசன், திரு. மு.—
- வரவு-செலவுத் திட்டம், 1981—82 வாக்கெடுப்பு—
  - பாசனம்
  - பாசனம் குறித்த மூலதனச் செலவு 475—478

சுப்பிரமணியன், திரு. உ.—
- தியாகராயர் பொறியியல் கல்லூரி (மதுரை) [illegible]ளிடையே ஏற்பட்ட மோதல்கள் (ஒ. தீ) 60





ச—தொடர்ச்சி. — பக்கங்கள்

சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ்.—
- வரவு செலவுத் திட்டம் 1981-82, வாக்கெடுப்பு—
  - சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
  - சாலைகளும், பாலங்களும்
  - சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 351—352

சுற்றுலா—
- காஞ்சி, அலுவலகம் மற்றும் தங்கும் விடுதிகள் கட்டுதல் .. 16—18

செங்கோட்டையன், திரு. கு. அ.—
- டிஜிடல் எலக்ட்ரானிக், கைக்கடியாரங்கள், உதிரிப்பாகங்கள் தயாரித்தல் 292—293
- பாலியஸ்டர் இழை நூல் உற்பத்தி. .. 289—291

செம்மலை, திரு. செ.—
- தலைப் பாதுகாப்பு கவசம் அணிதல் .. 25—27
- வெள்ளார் (மேட்டூர்) கால்நடை மருத்துவமனை 431—432

செல்வராஜ், திரு. அ.—
- ஸ்டான்லி மருத்துவமனை, நீக்காயங்களுக்கான தனி வார்டு 20

சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ.—
- வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
  - பாசனம்
  - பாசனம் குறித்த மூலதனச் செலவு 490—493

சேதுராமன், திரு. ஏ. எம்.—
- மூல்லுவாடி, எண்ணெய் மூலவிதைப் பண்ணை. 416—417

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—
- திருச்சி மாவட்டத்தில் நிலவரிக்காக ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப் பெறுவது (ஒ. தீ) 438—439
  440—442

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

எண்ணூர் மின் நிலையத்தில் நிலக்கரி பற்றாக்குறையினால் உற்பத்தி பாதிக்கப் பெற்றுள்ளது.

அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது .. 619—630

திருச்சி மாவட்டத்தில் நிலவரிக்காக ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப் பெறுவது.

அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது. .. 434—442

திருப்பூரில் புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் இந்து முஸ்லீம் பீடித் தொழிலாளர்கள் வெளியேற்றம்.

அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப் பெற்றது. .. 32—34

மதுராந்தகத்தில் ஒரு பெண் மர்மமான முறையில் மரணம் அடைந்துள்ளது.

அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது. .. 298—313

மதுரை தியாகராயர் பொறியியல் கல்லூரி மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில் இரு மாணவர்கள் மரணம் அடைந்துள்ளது.

அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப் பெற்றது. .. 600—619

ஒழுங்குப் பிரச்சினை—

'முதலமைச்சரின் பெயரிலுள்ள சட்ட முன்வடிவு ஒன்றை, முதலமைச்சர் அவையில் இருக்கும் போது இன்னொரு அமைச்சர் முன்மொழியலாமா' என்பதாக ஓர் உறுப்பினர் பிரச்சினையை எழுப்பியபோது, தலைவர் அளித்த தீர்ப்பாவது:

''எந்த அமைச்சர் வேண்டுமானாலும் இன்னொரு அமைச்சருக்காக மொழியலாம். இது எல்லாக் காலத்திலும், எல்லாச் சட்டமன்றங்களிலும் இருக்கிற நடைமுறை. இதில் ஒன்றும் ஒழுங்குப் பிரச்சினைக்கு இடமில்லை'' 458

கவன ஈர்ப்புகள்—

விளக்கம் கேட்பது கேள்வியாக, சுருக்கமாக







தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி

குற்றச்சாட்டுகள்—

குற்றச்சாட்டுகள் கூடாது (து.வி.) 267, 285

வினாக்கள்—விடைகள்—

சுருக்கமாகயிருத்தல் வேண்டும் (து.வி.) 9, 259

மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாகயிருத்தல் வேண்டும் (து.வி.) 574

தளபதி திரு. ஆர்.—

வரவு-செலவுத் திட்டம், 1981—82, வாக்கெடுப்பு—

பாசனம்

பாசனம் குறித்த மூலதனச் செலவு 658—660

தாமரைக்கனி திரு. இரா.—

இடைநிலை தமிழ் ஆசிரியர்கள், ஊதிய உயர்வு 562—563

கைத்தறி நவீன வடிவமைப்பு நிலையம் 423—430

சிற்றார் பட்டணங்கால் நீர்த்திட்டம், தேங்காய் பட்டணத்திற்குப் பாசன வசதி 277—279

திருப்பரங்குன்றம் குழாய்மூலம் குடிநீர் வசதி 273—274

திருப்புடை மருதூர் (திருநெல்வேலி) ஆலயத் திருப்பணி 402—403

திருவொற்றியூர்-பொன்னேரி பகுதி மீனவர்களிடையே தொடர்ந்து மோதல் ஏற்பட்டு வருவது (க.ஈ.) 443, 449

முதியோர்கள் உதவித் தொகை 28—30

ரேஷன் கடைகள், கோவை நகர், கோதுமை வழங்கல் (க.ஈ.) 631—633

வாழைக்குளம் கண்மாய், மனைப் பட்டா வழங்கல் 560—562

திட்டங்கள்—

கழிவுநீர்ப் போக்கு, குடிநீர் குழாய் இணைப்பு விவரம் 271—273

தியாகராசன் திரு. ஆர்.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்

சாலைகளும் பாலங்களும்

சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 330—333

த—தொடர்ச்சி | பக்கங்கள்

திருநாவுக்கரசு, திரு. எஸ்.—
மதுராந்தகத்தில் ஒரு பெண் மர்ம மரணம் (ஒ.நி) 299

திருவேங்கடம், திரு. பெ.சு.
குற்ற வழக்குகள், நீதிமன்றங்களில் முடிவுறாமல் உள்ளவை 266—270
வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு
சமுதாய நலவளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 40
ஸ்ரீரங்கம் ஆலயம், ராஜகோபுரத் திருப்பணி 12—16

திரை அரங்குகள்—
கல்வி நிலையங்களருகில் கட்டுதல் (க.ஈ) 321—323

தீயணைப்புப் பணிகள்—
வண்டிகள், கரூர் 1—5

தீர்த்தராமன், திரு. ப.—
கல்வி நிலையங்கள் அருகில் திரை அரங்குகள் கட்டுதல் (க.ஈ.) 321

தீர்மானங்கள்—
ஒத்திவைப்புத் தீர்மானங்கள்— பார்க்க—தலைவர் 32, 33
விதி 58ஐத் தளர்த்தல் 600

துரைமுருகன், திரு.—
ஓர் அளவுக்கு மேல் உள்ள நெல்லை அரசுக்கு அறிவிக்க வேண்டுமென்ற அரசு உத்தரவினால் விவசாயிகள் பாதிப்பு (க.ஈ.) 319, 320—321

தேர்தல்கள்—
சட்டமன்றத் தேர்தல், 1980, கலவரங்கள் 395—398

தொழிலாளர்கள்—
பீடித் தொழிலாளர் சேமநல நிதி, ஆலோசனைக் குழு 572—575
விவசாயம், குறைந்தபட்ச ஊதியம் 565—570

தொழிற்சாலைகள்—
காகித ஆலை, திருச்சி மாவட்டம் 281—282
கைக்கடியாரங்கள், டிஜிடல் எலக்ட்ரானிக், உதிரிப்பாகங்கள் தயாரித்தல் 292—293



திருச்சி மணச்சநல்லூர் அரிசி ஆலைகள் இயங்காமல் இருப்பது (க.ஈ.அ.) 8, 4[illegible]—457
நத்தம் (மதுரை) மாம்பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை 101—102
மின் கட்டணம், வசூலாக வேண்டிய தொகை 253—260

ந

நல்லப்பன், திரு. தி. கா—
காங்கேயம் அரிசன நல தாசில்தார் அலுவலகம் மாற்றுதல் 95—96
தியாகராய பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.நி.)
பாடநூல் நிறுவனம், பல பதவிகள் நிரப்பப் படாமை (க.ஈ.அ.) 634—626
வரவு-செலவுத் திட்டம், 1981—82, வாக்கெடுப்பு
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும், பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 43

பாசனம்—
பாசனம் குறித்த மூலதனச் செலவு 487—490

நவநீதகிருஷ்ண பாண்டியன், ஆர்.—
திருச்சி மணச்சநல்லூர், அரிசி ஆலைகள், இயங்காமல் இருப்பது (க.ஈ) 450

நாராயணன், திரு. பி. ஜி.—
வரவு-செலவுத் திட்டம், 1981—82 வாக்கெடுப்பு
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு 196—498

நிதி அலுவலகங்கள்—
வரவு-செலவுத் திட்டம், 1981—82, வாக்கெடுப்பு
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 40, 114, 323, 336

ந—தொடர்ச்சி
பாசனம்
நிதி அலுவலங்கள்—தொடர்ச்சி
வரவு செலவுத் திட்டம் 1981—82 வாக்கெடுப்பு—தொடர்ச்சி
பாசனம்—
பாசனம் குறித்த மூலதனச் செலவு 4[illegible]9—514, 637—680

பதிவேடுகள்—புதுப்பிக்கும் திட்டம் .. 212—213
நீக்கம் 207, 427

**நீதிமன்றங்கள்**

முடிவுபெறாமல் இருக்கும் வழக்குகள்- ... வரை முறைப்படுத்துதல் 206—210

**நூல்—**

பாலியஸ்டர் இழை உற்பத்தி 289—291

நெடுஞ்செழியன், டாக்டர், இரா.

ஓர் அளவுக்கு மேல் உள்ள நெல்லை அரசுக்கு அறிவிக்க வேண்டுமென்ற அரசு உத்திரவினால் விவசாயிகள் பாதிப்பு (க.ஈ.அ.) 314—315, 318—319, 320—321

திருச்சி மணச்சநல்லூர் அரிசி ஆலைகள் இயங்காமல் இருப்பது (க.ஈ.அ.) 450—457

திருவொற்றியூர் பொன்னேரி பகுதி மீனவர்களிடையே தொடர்ந்து மோதல் ஏற்பட்டு வருவது (க.ஈ.அ.) 444—445, 447—149, 149

மதுராந்தகத்தில் ஓர் பெண் மர்ம மரணம் (ஒ.தீ.) 302—304, 308—309, 310—313

ரேஷன் கடைகள், கோவை, கோதுமை வழங்கல் (க.ஈ.அ.) 631—632, 633

விதி 58ஐத் தளர்த்தல் (தீ) 600

**நெடுமாறன், திரு ப—**

தியாகராயர் பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ.) 601—602

வரவு—செலவுத் திட்டம், 1981—82, வாக்கெடுப்பு
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச்செலவு 661—666

**நோய்கள்—**

காலரா, வேதாரண்யம் பகுதி (க.ஈ) 34—3
குஷ்டரோகிகள் எண்ணிக்கை, ... 20—2

'ப'

**பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம்—**

கும்பகோணம் மருத்துவமனை நாய்க்கடி, மருந்து தட்டுப்பாடு 18—20

தியாகராயர் பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ.) 607





**பணப்பயிர்கள்**

வனத்துறையின் கீழ் உள்ள முந்திரி தோட்டங்கள் 403—407

**பல்கலைக் கழகங்கள்—**

மருத்துவப் பல்கலைக் கழகம், அமைத்தல் 22—23

**பலராமன், திரு. இல.**

தொழிற்சாலைகள், மின்கட்டணம், வசூலாக வேண்டிய தொகை 253—260

பாலாற்றின் நிலத்தடி நீர், ஆய்வு 570—572

வரவு—செலவுத் திட்டம், 1981—82, வாக்கெடுப்பு
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 43

**பழனிமுத்து, திரு. சி.**

தியாகராய பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ) 601

வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு.
பாசனம்.
பாசனம் குறித்த மூலதனச் செலவு 471—475

**பழனியப்பன், திரு, கு.பா—**

வரவு செலவுத் திட்டம், 1981—82, வாக்கெடுப்பு 666—670
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு 666—670

**பழனிவேல், திரு. என்.**

சண்முகாநதி நீர்மின் திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், மாற்றல் 556—560

தியாகராயர் பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ) 601

மருத்துவப் பல்கலைக் கழகம், அமைத்தல் 22—23

வரவு செலவுத்திட்டம், 1981—82, வாக்கெடுப்பு
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு 461, 647—651

ப—தொடர்ச்சி

பழனிவேல் திரு. என்—தொடர்ச்சி

வானொலி, சட்டமன்ற நிகழ்ச்சிகள் ஒலிபரப்பு 497—414

**பாசனம்—**

திட்டங்கள், உலக வங்கி உதவியுடன் நடைபெறுபவை .. .. 576—580

தேங்காய் பட்டணத்திற்கு வசதி, சித்தார் பட்டணங்கால் திட்டத்தின் மூலம் 277—279

நதிகள், வெள்ளக் கட்டுப்பாடு பணிகள் 274—277
மாங்கோம்பை ஆறு, கரைகளைச் சீரமைத்தல் 580

பாபு ஜனார்த்தனன் திரு.

எண்ணூர் மின் நிலையம், நிலக்கரிப் பற்றாக் குறையினால் உற்பத்தி பாதிப்பு (ஒ.தீ) 62—625
வரவு செலவுத்திட்டம், 1981—82 வாக்கெடுப்பு. பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு 462 467
வாகைக்குளம் துப்பாக்கிச் சூடு. இறந்தோரின் குடும்பத்திற்கு நிதியுதவி. 398 400

பாரமலை, திரு, க—

தியாகராய பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ) 601
வரவு—செலவுத் திட்டம் 1981—82, வாக்கெடுப்பு
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும், பாலங்களும்
சாலைகள். பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 353—

பாலகிருஷ்ணன், திரு, வி—

பள்ளிச் சிறார்கள், சலுகைப் பயணச் சீட்டுகள் 23 25
வரவு—செலவுத் திட்டம், 1981 82, வாக்கெடுப்பு—
சமுதாய நலவளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் சாலைகளும் பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 109—111

பாலங்கள்—

நிலக்கோட்டை காமுப்பிள்ளை சத்திரம், ஓடைகளின் மீது பாலம் அமைத்தல். 120—122

பாலசுப்பிரமணியன், திரு வேடசந்தூர் வி.பி.

அரசுப் பண்ணைகள், விதை உற்பத்தி .. 41—46
அரசு புளிய மரங்கள், பட்டாக்கள் ஒப்படை செய்தல் 260—262
சட்ட விதிகள் ஆய்வுக்குழு, முதலாவது அறிக்கை அளித்தல் 39

பாலசுப்பிரமணியன் திரு. வேடசந்தூர் வி.பி.—தொடர்ச்சி

நத்தம் (மதுரை) மாம்பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை. 41—42
பார்வையிழந்தோர், இலவச பயணச்சீட்டு 27—28
மாங்கோம்பை ஆறு, கரைகளைச் சீரமைத்தல்



பாலசுப்பிரமணியன். திரு க

வரவு—செலவுத் திட்டம், 1981—82 வாக்கெடுப்பு—பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு 481—487

பால்வளம்

பாலில் கலப்படம், நடவடிக்கை. 409—401

பாலன் திரு,. சு.

வரவு—செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 42, 44—48

புருஷோத்தமன், திரு. து.

உறுப்பினர் கொடுத்துள்ள அறிக்கை (த.கோ.) 13
கழிவு நீர்ப்போக்கு, குடிநீர் குழாய் இணைப்பு திட்டங்கள், சைதை, விவரம் 271—273
வட்டிக்கடைக்காரர்கள், சென்னை, இந்தியில் கணக்கு 263—265

பூங்காவனம், திரு. என். ஏ.

வரவு—செலவுத் திட்டம் 1981—82, வாக்கெடுப்பு
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும், பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 342—343

பொன்னம்மாள் திருமதி, ஏ. எஸ்.

தியாகராய பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ) 901
நிலக்கோட்டை காமுப்பிள்ளை சத்திரம், ஓடைகளின் மீது பாலம் அமைத்தல். 420—422

பொன்னுரங்கம், திரு.பெ.

திருவொற்றியூர் பொன்னேரி பகுதி மீனவர்களிடையே தொடர்ந்து மோதல் ஏற்பட்டு வருவது (க.ஈ) 443, 445
446 447

பொன்னையன். திரு.சி.

கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 198 . 636

மாவட்டக் காவல் சென்னை மாநகரக்காவல் (திருத்த) சட்ட முன் வடிவு, 1981 457—458

போக்குவரத்து—

தலைப் பாதுகாப்பு கவசம் அணிதல் 2—27

பள்ளிச் சிறார்கள், சலுகைப் பயணச் சீட்டுகள் 23—25

பஸ் கட்டண உயர்வு 422—428

பார்வையிழந்தோர் இலவசப் பயணச்சீட்டு 27—28

'ம'

மணி, திரு.டி.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் சாலைகளும் பாலங்களும் சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் 43

பாசனம்

பாசனம் குறித்த மூலதனச் செலவு 478—4

மருத்துவம் ... குறித்த ... 403—40

மரங்கள்

புளி, பட்டாக்கள் ஒப்படை செய்தல்.. 260—262

மருத்துவமனைகள்—

கும்பகோணம், நாய்க்கடி மருந்து தட்டுப்பாடு 18—20

வெள்ளார் (மேட்டூர்) கால்நடை 431—432

மருத்துவமனை .. 20

ஸ்டான்லி, தீக்காயங்களுக்கான தனி வார்டு

மாணிக்கம், திரு. எம். எஸ்.—

காலரா, வேதாரண்யம் பகுதி (க. ஈ) 35,36

வரவு-செலவுத் திட்டம் 1981-82, வாக்கெடுப்பு—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் சாலைகளும் பாலங்களும் சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. 76—79

வேதாரண்யேஸ்வரர் ஆலய உப்பள நிலங்கள்.. 7—10

வேளாங்கண்ணி சாலை, சுங்க 418



மின்சாரம்—

மேட்டூர் மின் திட்டங்கள் விவரங்கள் 555

முசிறிபுத்தன், திரு. பி.—

திருச்சி மணச்சநல்லூர் அரிசி ஆலைகள் இயங்காமல் இருப்பது (க.ஈ) 450

முத்துச்சாமி திரு. க.—

அரசுப்பேருந்துகளில் உறுப்பினர்களுக்கு சலுகை (த.கோ). 295—296
297—298

முத்துராமலிங்கம், திரு. இ—

தியாகராயர் பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ. தீ) 601

வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு—

பாசனம்

பாசனம் குறித்த மூலதனச் செலவு 507—510

மூர்த்தி திரு. ஜீ.—

தியாகாரயர் பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ. தீ.) 609—610

மதுராந்தகத்தில் ஓர் பெண் மர்ம மரணம் (ஒ.தீ) 48,
297—307
308—309

வரவு-செலவுத் திட்டம், 1981-82— வாக்கெடுப்பு

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் சாலைகளும் பாலங்களும் சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 99—103

மொழிகள்—

சென்னை வட்டிக்கடைக்காரர்கள். இந்தி கணக்கு 263—265

'ய'

யசோதா திருமதி டி.—

மதுராந்தகத்தில் ஓர் பெண் மர்ம மரணம் (ஒ.தீ.) 298, 303
304—307

'ர'

ரகுமான்கான், திரு. அ.—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் 433

தியாகராயர் பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ) 601, 619

மதுராந்தகத்தில் ஒரு பெண் மர்ம மரணம் (ஒ.தீ) 298

மாவட்டக் காவல்-சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 458

வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு .. 78
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச்செலவு

ரங்கசாமி திரு. ஆர்—

தொழிற்சாலைகள், மின்கட்டணம் வசூலாக வேண்டிய தொகை .. 253—260

ரமணி திரு. கு— ..

சிமெண்ட் பற்றாக்குறை .. 583—586
பஸ் கட்டண உயர்வு .. 122—426
பீடித்தொழிலாளர் சேமநல நிதி, ஆலோசனைக் குழு .. 572—575
ரேஷன் கடைகள், கோவை, கோதுமை வழங்கல் (க.ஈ.) .. 631

ராஜமாணிக்கம், திரு. எம். கே.

திருச்சி மணச்சநல்லூர் அரிசி .. 450—451
ஆலைகள் இயங்காமல் இருப்பது (க.ஈ.) .. 452—453
முசிறி, குஷ்டரோகிகள் எண்ணிக்கை .. 20—22


**'வ'**


வரதராஜன், திரு. என்.

திருச்சி மணச்சநல்லூர் அரிசி
ஆலைகள் இயங்காமல் இருப்பது (க.ஈ) .. 450
.. 455—456
தியாகராயர் பொறியியல் கல்லூரி (மதுரை)
மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல்
(ஒ.தீ.) .. 605—607
திருப்பத்தூரில் பீடித் தொழிலாளர்கள் புறம்போக்கு நிலங்களிலிருந்து வெளியேற்றம் (ஒ.தீ) 32
ரேஷன் கடைகள், கோவை கோதுமை வழங்கல் (க.ஈ.) .. 631
532—533
வரவு செலவுத் திட்டம் 1981—82, வாக்கெடுப்பு ..
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும்
நகராட்சி நிர்வாகமும் ..
சாலைகளும், பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. 339—341







வரிகள்—

வேதாரண்யம்—வேளாங்கண்ணி சாலை, சுங்க வசூல். .. 418

வானொலி—

சட்டமன்ற நிகழ்ச்சிகள் ஒலிபரப்பு, .. 407—41

விஜயபாலன், திரு. என்—

காலரா, வேதாரண்யம் பகுதி (க.ஈ) .. 34—36

விஜயராகவன் திரு. பொ—

எண்ணூர் மின் நிலையம், நிலக்கரிப் பற்றாக்குறையினால் உற்பத்தி பாதிப்பு (ஒ.தீ.) .. 623—624
தியாகராய பொறியியல் கல்லூரி (மதுரை) மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் (ஒ.தீ.) .. 612—613
பாசனத்திட்டங்கள், உலக வங்கி உதவியுடன் நடைபெறுபவை .. 576—280
வரவு—செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு-
சமுதாய நலவளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும், பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செல்வு .. 41,42,43
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 460—461
.. 650—651

வீட்டு வசதி—

வாழைக்குளம் கண்மாய், பட்டா வழங்கல் .. 500—562
வீரப்பன், திரு. ஆர். எம்.
கல்வி நிலையங்களுக்கு அருகில் திரையரங்குகள் கட்டுதல் (க,ஈ.அ) .. 321—323

வீராசாமி திரு. த—

வரவு-செலவுத் திட்டம், 1981—82, வாக்கெடுப்பு
பாசனம்
பாசனம் குறித்த மூலதனக் செலவு .. 645—647

வெங்கடசுப்பிரமணியம் திரு. ப.—

காஞ்சி, சுற்றுலாத் துறை அலுவலகம் மற்றும் தங்கும் விடுதிகள் கட்டுதல் .. 16—18

வ—தொடர்ச்சி

வெள்ளைச்சாமி திரு. ஆ.

வரவு—செலவுத் திட்டம் 1981-82, வாக்கெடுப்பு:..

சமுதாய நல வளர்ச்சித்திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்

சாலைகளும், பாலங்களும்

சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. 336—338

வேணுகோபால் திரு. த—

திருப்பத்தூரில் பீடித்தொழிலாளர்கள் புறம் போக்கு நிலங்களிலிருந்து/ வெளியேற்றம். .. (ஒ.தீ.) .. 32

வரவு—செலவுத் திட்டம். 1981—82, வாக்கெடுப்பு

பாசனம் ..

பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 460

வேலப்பன் திரு சி.வி—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு.

பாசனம்

பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 640—642

வேலைவாய்ப்பு

அயல் நாடுகளில் வசதி .. 590—593

அலுவலகம், வடாற்காடு, இடமாற்றல் .. 287—289

கிடைக்காமல் அவதியுறும் இளைஞர்கள் .. 284—287

வேளாண்மை

அரசுப்பண்ணைகள், விதை உற்பத்தி .. 421—416

முல்லுவாடி (ஆற்காடு) எண்ணெய் மூலவிதைப் பண்ணை. .. 416—417

ஜ—தொடர்ச்சி

ஜெயராமன், திரு.வே.இரா.

வரவு—செலவுத் திட்டம், 1981—82, வாக்கெடுப்பு

பாசனம் ..

பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 468—471

ஹ—தொடர்ச்சி

ஹண்டே டாக்டர் எச்.வி—

காலரா, வேதாரண்யம் பகுதி (க.ஈ.) .. 35,36,37, .. 38,39

ஹாஜாசெரீப் திரு.கே.எஸ்.ஜி.— ..

எண்ணூர் மின் நிலையம், நிலக்கரிப் பற்றாக் குறையினால் உற்பத்தி பாதிப்பு (ஒ.தீ.) .. 625—626 .. 630





ஹ—தொடர்ச்சி

ஹேமச்சந்திரன் திரு. ஜே.— ..

எண்ணூர் மின் நிலையம். நிலக்கரி பற்றாக் குறையினால் உற்பத்தி பாதிப்பு (ஒ.தீ.) ... 619

திருச்சி மணச்சநல்லூர் அரிசி ஆலைகள. இயங்காமல் இருப்பது. (க.ஈ.) .. 450—456

திருப்பத்தூரில் பீடித் தொழிலாளர்கள் புறம் போக்கு நிலங்களிலிருந்து வெளியேற்றம். (ஒ.தீ.) .. 32

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு- சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும்,

நகராட்சி நிர்வாகமும், சாலைகளும், பாலங்களும் சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. 41—42

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**செவ்வாய்க் கிழமை 1981 மார்ச்சு 31.**

**பங்குனி 18, ரௌத்திரி—திருவள்ளுவர்—ஆண்டு 2012.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவைக் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

ஆழ்ந்து சிந்தித்தவர், சிந்தித்தவற்றைச் செய்து முடிக்கும் உள்ளவுறுதியை உடையவராகப் பொலிவுற வேண்டும். இந்த உள்ளவுறுதியை உடையவர்களே, தாம் எண்ணியவற்றை எண்ணியபடி செய்து முடிப்பர்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கரூரில் உள்ள தீ அணைப்பு வண்டிகள்.

*வினா எண். 564—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், கரூரில் உள்ள தீ அணைப்பு வண்டிகள் தீ விபத்துக்களின் போது செயலற்று போனது குறித்து ஏதேனும் புகார்கள் வந்துள்ளனவா?

(ஆ) பழுதுபட்ட தீ அணைப்பு வண்டிகளை உடனே சீர்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

(அ) ஆம். புகார்கள் வந்துள்ளன,

(ஆ) தீயணைப்புத் துறையில் உள்ள பழைய ஊர்திகளை எல்லாம் கண்டனம் செய்து புதுப்பிக்கும் பணி துரிதப்படுத்தப் பட்டுள்ளது. முதல் கட்டமாக இவ்வாண்டு 31 நீர் தாங்கி வண்டிகளும், 35 தொடர் ஊர்தி பம்புகளும் புதிதாக வாங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிதி நிலையைக் கருத்தில் கொண்டு படிப்படியாக எல்லா பழைய ஊர்திகளும் புதுப்பிக்கப்படும்.

**திரு. எம். சின்னசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கரூரில் உள்ள அந்த தீ அணைப்பு வண்டி 1948-ல் இருந்து அதே வண்டியாக இருந்து வருகின்றது. கடந்த 2 ஆண்டுகளில் திருக்காம்புலியூர், செங்குந்தபுரம், கோட்டையண்ணன், கோயில் தோப்பு, வெங்கமேடு போன்ற பகுதிகளில், நெசவாளர்கள் வாழ்கின்ற பகுதிகளில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் இந்த எஞ்சினானது அணைக்க முடியாமல் செயலற்றுப் போயிருந்தது. ஆகவே அந்த தீ அணைப்பு அதிகாரிகள் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்துகின்ற அளவுக்கு நிலைமை மோசமாக இருந்தது. எனவே இதைக் கருத்தில் கொண்டு உடனடியாக அந்த வண்டியை மாற்ற அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, 30—3—1980 அன்று கரூரை அடுத்த செங்குந்தபுரம் என்னும் இடத்தில் ஏற்பட்ட தீ விபத்திற்கு உடனடியாக நீர் தாங்கி வண்டி, மற்றும் தொடர்பு ஊர்தி பம்ப் ஆகியவை தீ அணைக்கும் பணிக்குச் சென்றன. தீ கட்டுக்கடங்காமல் இருந்தது. சிறிது நேரத்தில் தண்ணீர் தீர்ந்து விட்டதால், அருகாமையில் உள்ள நீர் நிலையில் இருந்து தண்ணீர் கொண்டு வர தாமதம் ஆயிற்று. இதற்குள் பொதுமக்கள் பதட்டத்திற்குள்ளாகி, தீ அணைப்புப் பணியாளர்கள் மற்றும் ஊர்திகளுக்கு சேதம் ஏற்படுத்த முயன்றனர். அதனால் தீ அணைப்புப் பணி சரிவர நடைபெறவில்லை. இது சம்பந்தமாக கரூர் நகர வணிகக் கழகச் செயலாளரிடமிருந்து புகார் ஒன்று வந்திருக்கின்றது. ஆனால் அதை விசாரித்துப் பார்த்ததில் ஊர்திகள் பழுதின் காரணமாக செயலற்றுப் போகவில்லை, ஆனால் 8-05 மணிக்கு தீ விபத்து நிகழ்ந்ததாக செய்தி வந்தது. 8-08 மணி அளவுக்கு, அங்கு போய் சேர்ந்திருக்கிறார்கள். இருந்தாலும் ஒரு தீ அணைப்பு வண்டியின் கொள்ளளவு 500 காலன் தான். அந்த 500 காலன் கொள்ளளவு தீர்ந்த பிறகு தொலைவிலே போய் தண்ணீர் கொண்டு வர காலதாமதம் ஆகி இருக்கிறது. அதற்குள் பொதுமக்கள் சினம் கொண்டு அதைத் தாக்கி இருக்கிறார்கள். இருந்தாலும் பழுது அடைந்த வண்டிகள் அனைத்தையும் புதுப்பிக்கின்ற முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. 21—1—1981 அன்று 34 நீர் தாங்கி வண்டிகள் கொடுப்பதற்கான ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. மேலும் 35 தொடர்பு ஊர்திகள் பம்புகள் வாங்குவதற்கு ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் வந்த உடனே இந்த கரூர் தீ அணைப்பு நிலையத்திற்கு தேவையான வண்டிகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.



**திரு. எம். சின்னசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, கரூரினுடைய தேவைக்கு அங்குள்ள ஒரே ஒரு யூனிட் போதாது. ஆகவே குறைந்தது 3 யூனிட்டுகளாவது தேவை. இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும் அடுத்த நிதி ஆண்டிலாவது 3 யூனிட்டுகளைக் கரூருக்குத் தர அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, தீ அணைப்பு நிலையங்களை எங்கெங்கு ஏற்படுத்துவது எப்படிப்பட்ட வண்டிகளை போடுவது என்பதற்கு ஒரு நியதியை, முறைகளை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டு, எந்த அளவுக்கு அதிகரிக்க முடியுமோ அந்த அளவுக்கு நடவடிக்கை மேற்கொள்ள இந்தத் துறை முயலும்.

**திரு. ந. உமாநாத்** : தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் கூறுகிறபோது, படிப்படியாக, ஒரு ஃபேசாக நிதி நிலைமையை ஒட்டி ரிப்ளேஸ்மென்ட் செய்யப்படும் என்று கூறினார். நெருப்பு என்கிறபோது, பிராபர்டி டெஸ்டிராய் ஆகிறது, மனித உயிர்கள் டெஸ்டிராய் ஆகின்றன. இது மிகவும் முக்கியமான விஷயமாக இருப்பதால், இந்த ஒரு விஷயத்திலாவது, ரிபிளேஸ்மென்டைப் பொருத்த வரையில், நிதி நிலைமையைப் பார்க்காமல் பழைய வண்டிகள் பூராவையும் 'கன்டம்' செய்து விட்டு, புதிதாக ரிபிளேஸ்மென்ட் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, இருக்கின்ற வண்டிகள் எல்லாம் செயலற்றதாகிக் கொண்டிருக்கின்றன என்று பொருளல்ல. ஆனால் பழைய வண்டிகள் பயன்பட்டு வருகின்றன. சில பல, ஆண்டுகளாகத்தான், பழுதடைந்திருக்கின்றன என்ற காரணத்தினால் அதைப் புதுப்பித்தால் இன்னும் பணிகள் ஐயப்பாட்டுக்கு இடமில்லாமல் நடைபெறும் என்பதற்காகத்தான் புதுப்பித்துக் கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே தான் இந்த ஆண்டு நான் சொல்லி இருக்கிற கணக்குப்படி 34 ஊர்திகளும், 35 தொடர்பு பம்ப் ஊர்திகளும் இந்த ஆண்டில் வாங்க இருக்கிறோம். தேவைப்படுகின்ற அளவுக்கு வருமேயானால் இடையிலே கூட மேற்கொண்டு அதற்கான அளவுக்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம். இருந்தாலும் இருக்கின்ற பழைய வண்டிகளை பழுது பார்த்து, எப்போதும் அவைகள் பணியாற்ற வேண்டிய அளவில் வைக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

**திரு. என். வரதராஜன்** : தலைவர் அவர்களே, அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்று தமிழ் நாட்டில் சொல்வார்கள். ஆனால் நெருப்பு அந்த நிமிடத்திலேயே மிகப்பெரிய நாசத்தை விளைவிக்கும். இதிலே அமைச்சர்

அவர்கள் சொல்கிற போது படிப்படியாக இந்தப் பழுதுபட்ட வண்டிகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். நான் கேட்கவிரும்புவது தமிழ் நாட்டில் இருக்கும் டயர் ஸ்டேஷன்களில் எத்தனை இடங்களில் இந்த மாதிரி பழுது ஆகியிருக்கும் வண்டிகள் இருக்கின்றன என்ற விவரங்கள் அரசிடம் இருக்கிறதா? நான் அறிந்த வரையில் நெருப்புப் பிடித்தவுடனே சென்று அணைப்புப் பணியை மேற்கொள்ள முடியாத அளவிற்கு தண்ணீர் இல்லாமல் ஒரு பக்கம் வண்டிகள் தேங்கி நிற்கின்றன. பைப்புகள் நீளமாக இல்லாததால் தண்ணீர் எடுக்க முடியாமல் வண்டிகள் தேங்கி நிற்கின்றன. தண்ணீர் எடுக்கத் தொட்டிகள் இல்லாமல் வண்டிகள் தேங்கி நிற்கின்றன. ஆகவே, இவற்றை முழுவதையும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா? தண்ணீர் அடித்தால்நெருப்பு மேலும் அதிகமாக எரியும் நிலைமை இருக்கிற இந்த நேரத்தில் நவீன இயந்திரங்களை வாங்கி தீயணைப்புப் பணிக்குஉபயோகிக்க அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் 120 தீயணைப்பு இயந்திரங்கள் இருக்கின்றன. அந்த 120 தீயணைப்பு இயந்திரங்களும் நல்ல வகையில் உடனடியாக தீயணைப்புப் பணியில் ஈடுபடுவதற்கு வசதியாக ஒவ்வொன்றுக்கும் எல்லைகள் நிர்ணயித்து, அந்த எல்லைக்குள் அவைகள் நல்லமுறையில் செயலாற்றி வருகின்றன. தீயணைப்புப் பணிகள் மூலமாக கோடிக்கணக்கான ரூபாய் அளவிற்குச் சேதம் ஏற்பட இருந்த இடங்களில் கூட நல்ல முறையில் பணியாற்றி அந்த இடங்களில் அதிக நஷ்டம் ஏற்படாமல் காப்பாற்றி பணியைச் செம்மையாகச் செய்து இருக்கிறார்கள். அதற்கான எடுத்துக்காட்டுகள் எல்லாம் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறியது போன்ற பிரச்னைகள் சில பல இடங்களில் ஏற்பட்டு இருக்கக் கூடும். ஆங்காங்கு ஏற்படுகின்ற அனுபவத்தின் அடிப்படையில், அந்தந்த நிலையங்களின் தன்மையைப் பொறுத்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிதாக பல லட்சக்கணக்கான ரூபாய் செலவில் நவீன இயந்திரங்களை, கிட்டத்தட்ட 100 அல்லது 120 அடி உயரே செல்லக்கூடிய ஏணிகளைக் கொண்டதாக 1 ஏணி இரண்டு ஏணி அல்லது 4—5 ஏணிகள் கூட உயரமாகச் செல்கிற அளவிற்கு உள்ள இயந்திரங்களை வாங்குவதில் அரசு ஈடுபட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறியது போன்ற பழுதடைந்த நிலையிலும், பயன்படாத நிலையிலும் உள்ள தீயணைப்பு இயந்திரங்களை பழுது பார்க்க, அவற்றைச் சீர்ப்படுத்த தக்க முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

**திரு. இரா. கருப்பையா:** தலைவர் அவர்களே, கரூர் பெரிய நகரம். அதோடு, அங்கே 500-க்கும் அதிகமான கைத்தறி நெசவுத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. சமீப காலத்தில் அதிகமான தீவிபத்துகள் கரூர் நகரத்தில் ஏற்பட்டு





இருக்கின்றன. அதையொட்டிய பகுதிகளிலும் ஏற்பட்டு இருக்கின்றன. ஆகவே, அரசு இவற்றைக் கணக்கில் கொண்டு உடனடியாக அங்கே பழுதுபட்டு இருக்கும் வண்டிகளைப் பழுது பார்க்கவும், மேலும் புதிய ஒரு யூனிட்டை ஏற்படுத்தித் தரவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே இந்தத் துணை வினா கேட்கப்பட்டு, பதிலளிக்கப்பட்டதால், இந்தத் துணைக் கேள்விக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## District Judges from Scheduled Castes and Scheduled Tribes appointed during 1976,

* Q. No. 565; THIRU L. ELAYAPERUMAL: Will the Hon. the Chief Minister be pleased to state:—

(a) the number of District Judges recruited from the Scheduled Castes and Scheduled Tribes during the year 1976; and

(b) whether the reserved quota from Scheduled Castes and Scheduled Tribes has been filled up?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:**

(அ) மற்றும் (ஆ): 1976ஆம் ஆண்டில் ஒரு மாவட்ட நீதிபதி பதவிக்கு நேரடி நியமனம் செய்யப்பட்டது. இத்தேர்வு மாவட்ட நீதிபதி பதவிக்கு நேரடி நியமனம் செய்யப்படும் போது பதவி ஒதுக்க விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்னும் அரசு ஆணை அமுலுக்கு வந்தபின் செய்யப்பட்ட முதல் தேர்வாகும். அவ்விதிகளின்படி, முதல்முறைத் தேர்வு, 'பொதுத் தேர்வு,' மூலம் நிரப்பப்பட வேண்டியதாகும். எனவே பொதுத் தேர்வின் மூலம் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்களை நியமிக்க வேண்டிய முறை (turn) அப்போது வரவில்லை.

**திரு. கோவைத் தம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீதிபதிகள் நியமனத்தில் ஆதிதிராவிடர்களுக்கு அரசு ஒதுக்கீடு எந்த முறையில் செயல்படுகிறது? மற்ற அரசுத் துறைகளில் உள்ளது போல் விழுக்காடு அடிப்படையிலா அல்லது ஏதாவது தனிப்பட்ட முறையிலா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, 10–2–1975–ல் ஒரு விதிமுறைகள் வகுக்கப்பட்டன. பிற்பட்ட வகுப்பினர்களுக்கு என்றும், உயர் வகுப்பினர்களுக்கு என்றும், ஆதிதிராவிட வகுப்பினர்களுக்கு என்றும் கோட்டா ஒதுக்கி வைத்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் 1976–ஆம் ஆண்டில் ஓர் இடம் காலியானபோது, அதை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த இடத்தில் பொதுப்பட்டியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை நியமிக்கப்பட வேண்டும் என்கிற காரணத்தால், பிற்படுத்தப்பட்டவர்களும், ஆதிதிராவிடர் வகுப்பினரும் போட்டியிடலாம். அப்போது 88 மனுக்கள் பெறப்பட்டன. உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியும் மற்ற இரண்டு உயர்நீதி மன்றம் நீதிபதிகளும் நேர்முகத் தேர்வு நடத்தி 3 பேரைத் தேர்ந்தெடுத்தார்கள். திரு. பெய்சி முகமது, கே. கோவிந்தன், எஸ். கல்யாணம். இதிலே திரு. கோவிந்தன் என்பவர் கள்ளக் கடத்தல் கூட்டம் ஒன்றுக்குத் தலைமை தாங்குகிறார் என்றும், இராமேஸ்வரத்தில் இருந்து மதுரைக்கு தங்கம், வெள்ளி போன்றவற்றை கடத்திச் செல்ல முயல்கிறார் என்றும் புகார்கள் வந்ததால், அவரை நியமனம் செய்வது சரியல்ல என்ற முடிவுக்கு வந்த பிறகு, திரு. பெய்சி முகமது தேர்ந்தெடுக்கப்பட்டார்.

[முற்பகல் 9-10]

பெய்சி முகமது இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்: எஸ். கல்யாணம் ஆதித்திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர். நீதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய அந்த பட்டியலில் அவர்கள் பெயர் இருந்தாலும் பெய்சி முகமது என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்குப் பின்னால் ஏற்படும் காலி இடத்திற்கு அந்த 'டேர்ன்'படி அரிசன மக்களுக்கு வரும். ஆனால் 1976–ஆம் ஆண்டு அது எழவில்லை.

**திரு. ராஜகுமார் விஜயரெகுநாத தொண்டைமான்** : தலைவரவர்களே, 1976–ஆம் ஆண்டு பாக்வர்டு கிளாசுக்கு எவ்வளவு நீதிபதிகள் கொடுத்திருக்கிறார்கள் என்ற விவரத்தைத் தெரிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, அதுபற்றிய குறிப்பு இல்லை. பெய்சி முகமது பாக்வர்டு கம்யூனிடியாகத்தான் இருக்குமென்று கருதுகிறேன். ஏனென்றால் இஸ்லாமிய சமூகத்தினர் பாக்வர்டு பட்டியலில் சேர்க்கப்பட்ட பிறகுதான் இந்தத் தேர்வு நடைபெற்றிருக்கும் என்று கருதுகிறேன். இருந்தாலும் இது பொதுப்பட்டியலிலிருந்து தேர்வு செய்யப்பட வேண்டியது ஆகையால் உயர் வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர்களும் போட்டியிடலாம். அந்த அடிப்படையில் தேர்வுக்கு வந்ததில், ஒரே ஒரு இடம் தான் இருந்தது. அந்த இடத்திற்கு பெய்சி முகமது தேர்வு செய்யப்பட்டு, நியமிக்கப்பட்டிருக்கிறார்.



**திரு. ரா. கிருஷ்ணன்** : தலைவரவர்களே, இந்த நீதித் துறையைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே 18 சத விதம் இதுவரை நிரப்பப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? அமைச்சரவர்கள் இங்கே சொல்லும்போது கோவிந்தன் அவர்கள் பல்வேறு வழக்குகளில் சம்பந்தப்பட்டவர் என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால் அவர்மீது ஏதாவது சார்ஜ் ஜீட் போடப்பட்டு தண்டிக்கப்பட்டிருக்கிறாரா ? பதவி உயர்வு போன்றவை வருகின்ற இத்தகைய சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே உண்மைக்கு மாறான தகவல்களை கொடுத்து, அவர்களுடைய பதவி உயர்வு முடக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பைச் சொன்னேன். விசாரணையின்போது அவரே ஒப்புக்கொண்டதாகவும் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றி. இதிலே உண்மைக்கு மாறாக எதுவும் நடைபெற்றிருக்காது என்று கருதுகிறேன். ஏனென்றால் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களும் மற்ற நீதிபதிகளும் இருந்துதான் தேர்வு செய்திருக்கிறார்கள். முறை தவறி ஏதாவது நடைபெற்றதாகத் தெரிந்தால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** : தலைவரவர்களே, மாவட்ட நீதிபதி போன்ற உயர்ந்த பதவிகளுக்கு நியமனம் செய்யும்போது பெண்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கீடு செய்ய அரசு பரிசிலனை செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஒதுக்கீடு இல்லை.

## வேதாரண்யேஸ்வர் கோவிலுக்கு சொந்தமான உப்பள நிலங்கள்.

*வினா எண். 566—திரு எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேதாரண்யம், வேதாரண்யேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான உப்பள நிலங்களை மத்திய அரசு எடுத்துக் கொண்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதை கோவிலுக்குத் திரும்பப்பெற முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : (அ) மற்றும் (ஆ) : விவர அறிக்கை *பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

---

*113 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவரவர்களே, இந்த நிலம் குத்தகைக்கு விடப்படும்போது 1,800 மோகினிப் பணம் என்று அந்தக் கோவிலுக்குக் கிடைத்ததாகச் சொன்னார்கள். நிலத்தை மத்திய அரசுக்குத் கொடுக்கும் போது அந்த ஒப்பந்தத்தில் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர்தான் கையெழுத்து போட்டிருக்கிறார். இப்போதும் அந்த நிலம் மத்திய அரசின் பொறுப்பில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர்தான் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்பதால், நம்முடைய மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அந்த நிலத்தைப் பெற்று, அந்தக் கோவிலுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இது சுமார் 2,400 ஏக்கர் நிலம் மத்திய அரசுக்கு 1806 ஆம் ஆண்டிலே கிழக்கிந்திய கம்பெனியோடு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் அந்த அரசுக்கு உரிமை என்று உச்ச நீதிமன்றம் வரையில் சென்று, தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. அந்த 4,200 ரூபாய் குத்தகைத் தொகையை உயர்த்து வேண்டுமென்று ஆலயத்தின் கோரிக்கையையும் உச்ச நீதிமன்றம் நிராகரித்து விட்டது. அதன் பிறகு மாநில அரசின் பொறுப்புக்கு வந்து, மீண்டும் மத்திய உப்பளத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்போது 400 ஏக்கர் நிலம்தான் உப்பளமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பாக்கி 2,000 ஏக்கர் நிலத்தை, மாநில அரசு புறம்போக்கு நிலம் என்று அறிவித்து, அதிலே ஆக்கிரமிப்பு செய்திருக்கிறவர்களுக்கு 'பி' மெமோ கொடுத்து, மாநில அரசின் பொறுப்பில் இருந்து வருகிறது. ஆனால் அந்த ஆலயத்தினர் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அடிப்படையாக வைத்து, ஆலயத்திற்கு அந்த நிலத்தை பட்டா செய்து தர வேண்டுமென்று தஞ்சை மாவட்ட செட்டில்மென்ட் கோர்ட்டில் ஒரு தாவாவை பதிவு செய்திருக்கிறார்கள்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த 2,000 ஏக்கர் நிலத்தையும் அந்த கோயில் திரும்பப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கோயில் 23,000 ஏக்கர் நிலங்களைப் பெற்றிருந்தாலும் கூட அந்தக் கோவிலின் பூசை போன்ற காரியங்களுக்குக் கூட செலவழிப்பதற்கு பணம் இல்லாமல் அந்தக் கோவில் சீர் செய்யப்படாத நிலையில் இருக்கின்றது. ஆகவே, அந்த நிலையை போக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அந்தக் கோவிலின் அறங்காவலர் தமிழ்நாட்டைச் சார்ந்தவராக இல்லாமல், இலங்கையிலிருந்து வந்தவராக இருப்பதன் காரணத்தால் அந்தக் கோயில் நிலம் பற்றிய வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கு வருகின்றபோது அவர் போதிய முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை,





அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கு சென்ற நேரத்தில் அது தள்ளிவிடப்பட்டிருக்கின்றது. அதனுடைய லிமிட்டேஷன் அதாவது 12 ஆண்டுகள் ஆகிவிட்ட காரணத்தால் கோவிலுக்கு உரிமை இல்லை என்று சொல்லப்பட்டிருக்கின்றது..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேள்வி கேட்க வேண்டுமேயொழிய விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த வேதாரண்யம் கோவிலுக்கு இப்படி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சொந்தமாக இருந்தும் அது இப்போது தரித்திர நிலைமையில் இருக்கின்றது என்ற அந்தச் செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் மத்திய அரசு ஒப்பந்தத்தின்படி 25 ஆண்டு காலத்திற்கு சுமார் 1,68,168 ரூபாய் டைம் பார் ஆகிவிட்டது. லிமிடேஷன் பார் ஆகிவிட்டது என்று கூறி பணத்தைத் தருவதற்கு மறுக்கிறார்கள். ஆண்டவனுக்குத் தரவேண்டிய பணத்தையே இப்படி அரசாங்கமே தர மறுக்கின்றபோது சாதாரணத் தனியார்கள் எப்படி இருப்பார்கள் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. இருந்தாலும் இப்போது நாம் அதற்கும் முயற்சி செய்வதோடு அதற்கடுத்தபடியாக மாநில அரசின் பொறுப்பிலே இருக்கின்ற 2,000 ஏக்கருக்கும் ஆண்டு ஒன்றுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 200 ரூபாய்வீதம் 4 இலட்சம் ரூபாய் வரை தரவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரையும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். நாம் என்ன செய்வது? ஆண்டவனுக்காக நாம் இப்படி அரசாங்கத்திடம் கூட போராட வேண்டி இருக்கின்றது.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவரவர்களே, இந்த வேதாரண்யம் கோவிலுக்கு 2,400 ஏக்கர் இருந்ததில் இப்போது 400 ஏக்கர் உப்பளங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் மீதி இருக்கின்ற 2,000 ஏக்கர் நிலங்களை சில சிறு விவசாயிகள் குத்தகைக்கு எடுத்திருப்பதாகவும் சில பேர் ஆக்கிரமித்து அவர்களுக்கு பி மெமோ வழங்கி அதற்குரிய அபராதத் தொகையையும் அவர்கள் கட்டி விட்டதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்தக் கோவிலுக்கு வேண்டுமானால் எப்படிப்பட்ட உதவியினையும் செய்வதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் அந்த இரண்டாயிரம் ஏக்கர் நிலத்தையும் அந்தக் கோயில் திரும்பப் பெறாத வகையில் சிறு விவசாயிகளுக்கே அது சொந்தமாகக் கூடிய வகையில் அதிலே இருந்து வரக்கூடிய வருவாயின் ஒரு பகுதியை மட்டும் கோவிலுக்கு சேர்ப்பதற்குரிய வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் : தலைவரவர்களே, அந்த இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களும் கோவிலுக்குப் போய்விடுகின்றபோது அதை ஆண்டவனே எடுத்து வைத்துக் கொள்ளப்போவதில்லை. அந்த உரிமையை அந்தக் கோவிலுக்குத் தர வேண்டும் என்பதுதான் அந்த ஆலயத்தின் சார்பிலே வைக்கப் படுகின்ற வாதம். அந்த சொத்தை இந்திய அரசுக்குத் கொடுத்து இந்திய அரசு அதை மாநில அரசுக்குக் கொடுத்து பின்னர் மீண்டும் மத்திய அரசு அதை எடுத்துக் கொண்ட பிறகு அதில் 400 ஏக்கர் நிலம் மட்டும் உப்பளமாகப் பயன்பட்டு வருகின்றது. மீதியுள்ள 2,000 ஏக்கர் நிலத்தினை மத்திய அரசு தரிசாகப் போட்டு அநாதைச் சொத்தைப் போல விட்டுவிட்ட காரணத் தால் பலபேர் அதிலே ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றார்கள். இருந்தாலும் அந்தச் சொத்துக்கள் வேதாரண்யம் கோவிலுக்குச் சொந்தமானது என்று அறிவித்து விட்டு அதற்குப் பிறகு அந் நிலத்தை அனுபவித்துக் கொண்டிருக்கக் கூடிய மக்கள் ஏழை எளிய மக்களாக இருந்தால், ஏன் என்றால் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் கூட அங்கே ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள், அவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற வகையிலேயும் ஆனால் அவர்கள் ஆலயத்தின் உரிமையை ஒப்புக்கொள்கின்ற வகையிலேயும் பிரச்சினை களைத் தீர்க்க வேண்டும் என்றுதான் அற நிலையத்துறை விரும்பு கிறது.

திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியர் கோவில்

*வினா எண். 567—திரு. என். எஸ். வி. சித்தன் மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியர் கோவில் நிர்வாகத்தை மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய நிர்வாகத்தில் இருந்து பிரிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசாமி கோவில் நிர்வாகத்தை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலின் நிர்வாகத்திலிருந்து பிரித்து தனியாக நிர்வாகம் செய்ய அரசாணை எண். 627, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 7-6-1979-ல் உத்தரவிடப்பட்டது.

(ஆ) இந்த ஆணையை எதிர்த்து ஒருவர் உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை மனு தாக்கல் செய்து தடை உத்தரவு பெற்று வழக்கு நிலுவையில் இருப்பதால் மேற்படி இரு ஆலயங்களின் நிர்வாகமும் ஒருங்கிணைந்தே இயங்குகின்றன.



[முற்பகல் 9.20]

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்திலே, 1979 ஆம் ஆண்டிலேயே உயர் நீதிமன்றத்தில், இது சம்பந்தமான வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த இடைக்கால தடையை நீக்க, அல்லது இந்த வழக்கு முடிவடைவதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு என்ன முயற்சிகளை, உயர் நீதிமன்றத்தின் மூலமாக செய்து கொண்டிருக்கிறது. அப்படி திருப்பரங்குன்றம் கோவில் நிர்வாகத்தை மீனாட்சிசுந்தரேஸ்வரர் கோயில் நிர்வாகத்திலிருந்து பிரிப்பதால் சுப்பிரமணியர் கோவிலுக்கு வரும் அதிக மான வருவாயைக் கொண்டு அந்தப் பகுதிகளில் நல்ல பணிகள் பல செய்யப்படவிருக்கின்றன என்ற காரணத்தால் விரைவில், அதற்கான முயற்சிகளில் அரசு இறங்குமா என்றும் அறிய விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அந்த நல்ல எண்ணத்தின் மீது தான் அருள்மிகு சுப்பிரமணியஸ்வாமி கோவிலினுடைய நிர் வாகம் தனியாக இயங்குமேயானால் அந்தக் கோவிலினுடைய நிர்வாகத்தை சிறப்பாக நடத்த முடியும், அதன் மூலமாக, அந்தப் பகுதிகளுக்கு சிறப்பான நல்ல பணிகள் செய்ய முடியும் என்ற எண்ணத்தினால் தான், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, நமது அரசு ஆணை பிறப்பித்து, அந்த ஆணையின்படி நிர்வாக அலுவலர் கூட அங்கே நியமிக்கப்பட்டு விட்டார். அப்படி நியமிக்கப்பட்டு விட்ட ஒரு உத்தரவின் மீதுதான் நீதிமன்றம் தடை பிறப்பித்திருக்கிற ஒரு அற்புதம் நிகழ்ந்திருக்கிறது. தடையை நீக்க வேண்டும் என்றுதான் மனு போட்டிருக்கிறோம். நீதிமன்றத்திற்கு என்று போய் விட்டால், எப்பொழுதும் முடியும் என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துக் கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்றுதோறும் ஆடி வருகிற குமரப் பெருமானுடைய அந்தத் திருத்தலத்திலே, அறுபடை வீடுகளுடைய மாதிரிகளைப் போல திருப்பரங்குன்றம் மலையின் மேலே அமைக்க விருக்கிற ஒரு எண்ணத்தை அரசு மேற்கொண் டிருக்கிறதா ? அப்படியானால் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லாத கேள்வி என்றாலும், தெரிந்திருக்கிற விபரத்தை அவைக்கு தெரிவித்து விடுகிறேன். அரசோ, அல்லது அற நிலையத் துறையோ அப்படிப்பட்ட ஒரு திட்டத்தினை அறி விக்கவில்லை. அருள்மிகு சுப்பிரமணியஸ்வாமி ஆலயத்தினு டைய அறங்காவல் குழு, அந்த ஆலயத்தினுடைய சிறப்பை

மேலும் பெருக்குகிற வகையில், குமரனின் அறுபடை வீடுகளில் ஒரு படை வீடான அந்தத் திருப்பரங்குன்றத்திலேயே, மற்றப் படை வீடுகளுடைய மாதிரிகளை பொதுவாக அமைக்கிற வகையில் உருவாக்கினால், குமரனை தரிசிக்க வருகிறவர்களுக்கு சிறப்பாக அமையும் என்று உணர்ந்திருக்கிறார்கள். அதிலே கூட பொது மக்களிடம் இருந்து நன்கொடைகளாக வசூலித்து அமைக்கலாம் என்றுதான் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒருவர் திருச்செந்தூர் போன்ற ஆலயத்தை அமைப்பார்களேயானால், அதற்காக இரண்டு இலட்சம் தன்னுடைய செலவிலே தருவதாகச் தெரிவித்திருக்கிறார்கள். அது அறநிலயத்துறையின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்திலே மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்துடன், திருப்பரங்குன்றம் சுப்பிரமணியஸ்வாமி கோவில் நிர்வாகத்தையும் இணைந்து நடத்துவதற்கு, மீனாட்சி கோவிலினுடைய வருமானம் குறைவு என்பது ஒரு காரணமாக இருந்திருக்கிறது. ஆனால் இப்பொழுது இரண்டாகப் பிரிப்பதன் மூலம், மீனாட்சி கோவிலினுடைய வருமானம் உயர்ந்திருக்கிறதா ? அதனுடைய செலவுகளை தன்னிறைவாகச் செய்துக் கொள்ளக் கூடிய நிலைமையை அது அடைந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்திலே மீனாட்சி அம்மன் தன்னுடைய பிள்ளையை நம்பித்தான் வாழ வேண்டியவர்களாக இருந்தார்கள். ஆனால் இப்பொழுது தாயார் மிகப் பெரிய அளவிலே மக்களால் வணங்கப்படுகிற காரணத்தினால், மிகப் பெரிய அளவு வருமானத்தையும் பெற்றிருக்கிறார்கள். கடந்த ஆண்டு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய வருமானம் 45,63,435. ஆனால் அதே நேரத்தில் திருப்பரங்குன்றம் சுப்பிரமணியஸ்வாமி கோவிலினுடைய வருமானம் 9,95,213. ஆகவே இரண்டு ஆலயங்களும் தனித் தனியாகவே சிறந்த நிர்வாகத்தின் மூலம், வருமானத்தின் அடிப்படையில் நடைபெறுமேயானால், அது நலம் பயக்கும் என்று தான் அரசு ஆணை பிறப்பித்தது.

## ஸ்ரீரங்கம் ராஜகோபுரத் திருப்பணி.

* வினா எண் 568—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் திருப்பணி வேலை நடைபெற்று வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?





(இ) அவ்வேலையின் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ), (ஆ) மற்றும் (இ) திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாத சுவாமி ஆலயத்தில் உள்ள தெற்கு மொட்டை கோபுரத்தின் மீது இராய கோபுரம் கட்டும் திருப்பணி வேலை அஹோபில மடம் ஜீயர் அவர்களால் ரூ. 52,00,000 மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு, நன்கொடை மூலமாக தற்போது நடைபெற்று வருகிறது. ரூபாய் 20,00,000 செலவில் கல்காரம் பலப்படுத்துதல், இராய கோபுரத்தின் முதல் நிலை ஆகிய வேலைகள் முடிக்கப்பட்டு விட்டன. இரண்டாவது நிலை ரூ. 5 இலட்சம் செலவிடப்பட்டு 60 சதவிகிதம் முடிக்கப்பட்டு வேலை நடந்து வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இந்தத் திருப்பணி அரசாங்கத்தின் மேற்பார்வையில் நடக்கிறதா ? அல்லது அங்குள்ள அறங்காவலர்கள் குழுவினர் செய்கிறார்களா ? அந்த அறங்காவலர்கள் குழு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அறங்காவலர் குழு அரசாங்கத்தால் நியமிக்கப்பெற்ற ஒன்று. இந்தத் திருப்பணி வேலைக்கு அறநிலையத் துறை அங்கீகாரம் அளித்திருக்கிறது. ஆனால் இது முழுவதுமே நன்கொடையால நடத்தப்படுகிற திருப்பணி. ஒரு காசு கூட அறநிலையத் துறையிலிருந்து தரப்படவில்லை. அஹோபிலமடம் ஜீயர் அவர்களால் அவர்கள் சொந்தப் பொறுப்பில் ஏற்றுக் கொண்டு இதை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆக, அறநிலையத் துறையினுடைய கண்காணிப்பு இருக்கிறது. பரிசீலனை இருக்கிறது. அந்தப் பணியை, அதைக் கட்டுகிற வேலை முழுவதையும் 85 வயது நிரம்பிய அந்த ஜீயர் அவர்கள் காலையில் போய் உட்கார்ந்து கொண்டு, அந்த அறுபது அடி உயரத்தில் உட்கார்ந்து கொண்டு மாலை ஐந்து மணி வரை அவர்கள் நேரடிப் பார்வையில் கவனித்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இந்தத் திருப்பணி வேலை எப்போது முடிவடையும் ? ஏற்கனவே இப்போது ஒரு மகா கும்பாபிஷேகம் கூட ஸ்ரீரங்கத்தில் நடைபெற்றதாக பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. அது இந்த ஆலயத்திலா அல்லது வேறு ஆலயத்திலா என அறிய விரும்புகிறேன்.

மேலும் பெருக்குகிற வகையில், குமரனின் அறுபடை வீடுகளில் ஒரு படை வீடான அந்தத் திருப்பரங்குன்றத்திலேயே, மற்றப் படை வீடுகளுடைய மாதிரிகளை பொதுவாக அமைக்கிற வகையில் உருவாக்கினால், குமரனை தரிசிக்க வருகிறவர்களுக்கு சிறப்பாக அமையும் என்று உணர்ந்திருக்கிறார்கள். அதிலே கூட பொது மக்களிடம் இருந்து நன்கொடைகளாக வசூலித்து அமைக்கலாம் என்றுதான் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒருவர் திருச்செந்தூர் போன்ற ஆலயத்தை அமைப்பார்களேயானால், அதற்காக இரண்டு இலட்சம் தன்னுடைய செலவிலே தருவதாகச் தெரிவித்திருக்கிறார்கள். அது அறநிலயத்துறையின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்திலே மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்துடன், திருப்பரங்குன்றம் சுப்பிரமணியஸ்வாமி கோவில் நிர்வாகத்தையும் இணைந்து நடத்துவதற்கு, மீனாட்சி கோவிலினுடைய வருமானம் குறைவு என்பது ஒரு காரணமாக இருந்திருக்கிறது. ஆனால் இப்பொழுது இரண்டாகப் பிரிப்பதன் மூலம், மீனாட்சி கோவிலினுடைய வருமானம் உயர்ந்திருக்கிறதா ? அதனுடைய செலவுகளை தன்னிறைவாகச் செய்துக் கொள்ளக் கூடிய நிலைமையை அது அடைந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்திலே மீனாட்சி அம்மன் தன்னுடைய பிள்ளையை நம்பித்தான் வாழ வேண்டியவர்களாக இருந்தார்கள். ஆனால் இப்பொழுது தாயார் மிகப் பெரிய அளவிலே மக்களால் வணங்கப்படுகிற காரணத்தினால், மிகப் பெரிய அளவு வருமானத்தையும் பெற்றிருக்கிறார்கள். கடந்த ஆண்டு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய வருமானம் 45,63,435. ஆனால் அதே நேரத்தில் திருப்பரங்குன்றம் சுப்பிரமணியஸ்வாமி கோவிலினுடைய வருமானம் 9,95,213. ஆகவே இரண்டு ஆலயங்களும் தனித் தனியாகவே, சிறந்த நிர்வாகத்தின் மூலம், வருமானத்தின் அடிப்படையில் நடைபெறுமேயானால், அது நலம் பயக்கும் என்று தான் அரசு ஆணை பிறப்பித்தது.

ஸ்ரீரங்கம் ராஜகோபுரத் திருப்பணி.

* வினா எண் 568—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் திருப்பணி வேலை நடைபெற்று வருகின்றதா ?



(இ) அவ்வேலையின் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ), (ஆ) மற்றும் (இ) திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாத சுவாமி ஆலயத்தில் உள்ள தெற்கு மொட்டை கோபுரத்தின் மீது இராய கோபுரம் கட்டும் திருப்பணி வேலை அஹோபில மடம் ஜீயர் அவர்களால் ரூ. 62,00,000 மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு, நன்கொடை மூலமாக தற்போது நடைபெற்று வருகிறது. ரூபாய் 20,00,000 செலவில் கல்காரம் பலப்படுத்துதல், இராய கோபுரத்தின் முதல் நிலை ஆகிய வேலைகள் முடிக்கப்பட்டு விட்டன. இரண்டாவது நிலை ரூ. 5 இலட்சம் செலவிடப்பட்டு 60 சதவிகிதம் முடிக்கப்பட்டு வேலை நடந்து வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இந்தத் திருப்பணி அரசாங்கத்தின் மேற்பார்வையில் நடக்கிறதா ? அல்லது அங்குள்ள அறங்காவலர்கள் குழுவினர் செய்கிறார்களா ? அந்த அறங்காவலர்கள் குழு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அறங்காவலர் குழு அரசாங்கத்தால் நியமிக்கப்பெற்ற ஒன்று. இந்தத் திருப்பணி வேலைக்கு அறநிலையத் துறை அங்கீகாரம் அளித்திருக்கிறது. ஆனால் இது முழுவதுமே நன்கொடையால் நடத்தப்படுகிற திருப்பணி. ஒரு காசு கூட அறநிலையத் துறையிலிருந்து தரப்படவில்லை. அகோபிலமடம் ஜீயர் அவர்களால் அவர்கள் சொந்தப் பொறுப்பில் ஏற்றுக் கொண்டு இதை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆக, அறநிலையத் துறையினுடைய கண்காணிப்பு இருக்கிறது. பரிசீலனை இருக்கிறது. அந்தப் பணியை, அதைக் கட்டுகிற வேலை முழுவதையும் 85 வயது நிரம்பிய அந்த ஜீயர் அவர்கள் காலையில் போய் உட்கார்ந்து கொண்டு, அந்த அறுபது அடி உயரத்தில் உட்கார்ந்து கொண்டு மாலை ஐந்து மணி வரை அவர்கள் நேரடிப் பார்வையில் கவனித்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இந்தத் திருப்பணி வேலை எப்போது முடிவடையும் ? ஏற்கனவே இப்போது ஒரு மகா கும்பாபிஷேகம் கூட ஸ்ரீரங்கத்தில் நடைபெற்றதாக பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. அது இந்த ஆலயத்திலா அல்லது வேறு ஆலயத்திலா என அறிய விரும்புகிறேன்.

[1981 மார்ச் 31

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இதே ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தில்தான் இப்போது மகாசம்ப்ரோக்ஷணம் என்று அழைக்கப்படுகிற அந்த குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது. ஆனால் அது அந்தக் கோவிலின மற்ற வேலைக்காக அது 1966-ல் துவங்கப் பெற்ற வேலை. மறைந்த டாக்டர் சர். ஏ. இராமசுவாமி முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு திருப்பணிக் குழு நியமிக்கப்பெற்றது. அதற்குப் பிறகு திரு. டி. எம். நாராயணசுவாமி பிள்ளை அவர்கள் தலைமையில அந்தப் பணி தொடர்ந்து நடைபெற்று அவர்கள் காலமானதற்குப் பிறகு அதே குழுவின் துணைத்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்று வந்தது. அந்தத் திருப்பணி சுமார் 19 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு அதில் சுமார் 17 இலட்சம் ரூபாய் அளவிற்கு முடிக்கப்பெற்று அதற்கான குடமுழுக்குதான் இப்போது நடைபெற்றிருக்கிறது. இந்தக் கோபுரம எனபது இது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கோபுரமாகும். கிருஷ்ண தேவராயர் அவர்கள் காலத்தில் இந்தக் கோபுரத்தைக் கட்ட ஆரம்பித்து அது ஏதோ காரணங்களினால் இடையில் தடைபட்டு மொட்டை கோபுரம் என்ற பெயரால் நிறுத்தப்பட்டு விட்டது. இந்த கோபுரத்திற்கு மேலே ஒரு கோபுரம் எழுப்புவது எனபது அது ஒரு வேளை தீதாக வந்துவிடுமோ என்றளவில் கூட நீண்ட நாட்களாக அது அப்படியே இருந்து வந்து தொல் பொருள் ஆய்வுத் துறையினர் கூட இது மொட்டை கோபுரமாக இருக்க வேண்டுமே தவிர இதை கட்டி முடிக்கக் கூடாது என்று ஆட்சேபணை தெரிவித்தார்கள். ஆனால் ஜீயர் அவர்களைப் போன்ற பெரியோர்கள் எல்லாம் முன் வந்து இதை நாங்களே கட்டுகிறோம் என்று முன் வந்து இப்போது பணி நடைபெற்று வருகிறது. இந்தக் கோபுரம் கட்டி முடிக்கப்படுமேயானால் இந்திய துணைக் கண்டத்திலேயே மிக உயர்ந்த கோபுரமாக 226 அடியில் இருபதாவது நூற்றாண்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் இப்படி ஒரு கோபுரத்தை எழுப்பினோம் என்ற பெருமையை உலகத்திலே பெறுவோம்.

திரு. உ. சுப்பிரமணியன் : ஸ்ரீரங்கநாதர் கோவில் திருப்பணிக்கு யுனெஸ்கோவிலிருந்து ஏற்கனவே நன்கொடை வழங்கி உள்ளதாக அறிந்தோம். அப்படி யுனெஸ்கோவிலிருந்து கிடைக்கிற தொகைகளைக் கொண்டு கட்டுகிற நேரத்தில் நமது தமிழ் நாட்டு கலை அம்சம் மாறாமல் இருக்க வேண்டும் என்று அரசு பார்த்துக்கொள்ளுமா? சிதம்பரத்தில் அந்த ஸ்தாபனத்தின் மூலம் கட்டப்படுகிற ஒரு மண்டபம் நவீனமுறையில் காண்க்ரீட்டால் கட்டப்படுகிறது. ஆகவே பழைமையான தமிழர்கள் கட்டடக் கலைத் திறமையை உயர்த்தும் வகையில்—வெளிநாட்டு உதவியுடன் கட்டினாலும் அதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இது போன்ற திருப்பணிகளுக்கு யுனெஸ்கோ நிறுவனம் பணமாகக் கொடுப்பதே இல்லையது. பொருளாகத்தான் தருகிறார்கள். அவர்கள் ஒரு எட்டு பொருள்களை, ரூ. 1,77,370 பெறுமானமுள்ள அந்தப்



1981 மார்ச் 31]

பொருள்களை ஸ்ரீரங்கநாதர் ஆலயத்திற்கு யுனெஸ்கோ தந்து இருக்கிறது. வேறு எந்த ஆலயத்திற்கும் அவர்கள் பணமாகத் தருவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிதம்பரம் கோவிலில் யுனெஸ்கோ சார்பில் ஏதோ நடைபெறுவதாகத் தெரிவிக்கிறார்கள். அந்த திருப்பணிக் குழு நடத்திக் கொண்டிருக்கிறது என்று நான் அறிகிறேன். அப்படி ஒருவேளை இருந்தால்—யுனெஸ்கோ பணமாகத் தருவது கிடையாது. பொருளாகத்தான் தந்துகொண்டிருக்கிறது.

[முற்பகல் 9-30]

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஸ்ரீரங்கம் ராயகோபுரத் திருப்பணியை என்னுடைய தொகுதியைச் சேர்ந்த முக்கூர் அகோபில மட ஜீயர் அவர்கள் பொறுப்பேற்று நடத்துவது குறித்து நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். அவர்கள் 52 இலட்சம் மதிப்பீட்டில் இந்த இராய கோபுரத் திருப்பணியைச் செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னது போல், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 225 அடிக்கு மேல் கட்டப்பட இருக்கும் இந்த இராயகோபுரத் திருப்பணிக்கு அரசு மானியமாகவோ அல்லது உதவியோ தந்தால், அந்தப் பெருமை அரசுக்கும் சாரும் என்பது என்னுடைய வேண்டுகோள். எனவே, அரசு மானியம் இதற்குத் தர அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகோபில மட ஜீயர் அவர்கள் இதைத் தன்னுடைய வாழ்நாளில் ஒரு மிகச் சிறந்த லட்சியப் பணியாக ஏற்றுக்கொண்டு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே தான் அரசிடமிருந்தோ அல்லது அறநிலையத் துறையிடமிருந்தோ ஒரு காசுகூட நன்கொடையோ, உதவியோ தர வேண்டுமென்று கேட்கவில்லை. அவர்களுக்கு இருந்த சங்கடமெல்லாம், நீண்ட காலமாக இந்த இராய கோபுரத் திருப்பணியை அவர்கள் செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள். அதற்கு அரசு, அறநிலையத் துறை அனுமதியைத் தடுத்துக் கொண்டு வந்தது. அந்தத் தடையை இந்த அரசு வந்ததற்குப் பிறகு நீக்கி, அவர்கள் இந்தத் திருப்பணியை நடத்துவதற்கு அனுமதி அளித்திருக்கிறது. அவர்கள் தன் வாழ்நாளில் இதை ஒரு லட்சியமாகக் கொண்டு, 52 இலட்சம் ரூபாய் அளவிலே திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் இது முடிகிறபோது சுமார் 75 இலட்சம் அல்லது 80 இலட்சம் அளவிற்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அதையும் நான் முடித்து விடுகிறேன் என்கிற அந்த லட்சிய உணர்வோடு அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போன கேள்வியில் மதுரை கோவிலைப் பற்றிக் கேட்டீர்கள். இப்போது ஸ்ரீரங்கம் கோவிலைப் பற்றியும் கேட்கப்போகிறீர்களா? திரு. நெடுமாறன்.

[1981 மார்ச் 31

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் இராய கோபுரம் பற்றிய வரலாற்றை அமைச்சர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அந்த இராயகோபுரத்தின் அடித்தளம் கிருஷ்ணதேவராயரால் ஆரம்பிக்கப்பட்டது; அதை அவர் முடிக்கவில்லை என்று சொன்னார்கள். அது உண்மைதான். அதே நேரத்திலே, ஸ்ரீரங்கம் இராய கோபுரத்தின் அடித்தளம் அமைக்கப்பட்டது போல், மதுரையிலே கிருஷ்ணதேவராயர் ஒரு இராயகோபுர அடித்தளத்தை அமைத்தார். ஸ்ரீரங்கம் இராயகோபுரம் போல் ..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மதுரைக்குப் போய் விடுவீர்கள், இந்த கோவிலுக்கு வர மாட்டீர்கள் என்று தெரிந்துதான் நான் முதலிலேயே கேட்டேன். அடுத்த கேள்வி.

காஞ்சி மாநகரில் சுற்றுலாத்துறை அலுவலகம் மற்றும் தங்கும் விடுதி கட்டும் இடம்.

* வினா எண் 569—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காஞ்சி மாநகரில் சுற்றுலாத்துறை அலுவலகம், சுற்றுலா தங்கும் விடுதி ஆகியவைகள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) காஞ்சி மாநகரில் சுற்றுலாத் துறை அலுவலகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. அங்கு ஹோட்டல் (சுற்றுலா மாளிகை) ஒன்றினை கட்ட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிகழகத்தின் இயக்குநர் குழு காஞ்சி மாநகரில் ரூ. 10 லட்சம் செலவில் 1980—81 ஆம் நிதியாண்டில் ஒரு (ஹோட்டல்) சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இது குறித்துவிரிவான கருத்துக்கள் அக்கழகத்தின் பொறியியல் பிரிவினால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காஞ்சி மாநகரம் வரலாற்று சிறப்புமிக்க பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த ஊர், ஆகவே, இந்த ஊருக்கு வருகின்ற சுற்றுலாப் பிரயாணிகளுக்கு ஒவ்வொரு கோவிலாகச் சென்று விளக்கம்கொடுக்க வழிகாட்டி சர்வீசை ஆரம்பிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1981 மார்ச் 31]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின அந்தப் பேருந்துகளிலேயே பழக்கப்பட்ட, பயிற்சிபெற்ற வழிகாட்டிகள் போய்க் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அங்கே செல்லும் பயணிகளுக்கு அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே வேறு யாரையாவது ஏற்பாடு செய்தால், ஒழுங்காக கொண்டுபோய் சரியான கதைகளைச் சொல்வதற்குப் பதிலாக, அவர்களே உருவாக்குகின்ற கற்பனைக் கதைகளைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அதிலே சங்கடம் வந்துவிடும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா விடுதி அமைக்கிற நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எப்போது அது முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் பதிலில் தெரிவித்து இருக்கிறேன். 1980—81 நிதி ஆண்டிலேயே அதற்கான அனுமதி சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் பொறியியல் நிபுணர்களின் கருத்துக்களை கழகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அவை கிடைத்தவுடன் கழகம் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று கருதுகிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா தங்கும் விடுதி அமைப்பதற்கு, சுற்றுலாத் துறை அலுவலகம் அமைப்பதற்கு அரசினுடைய சார்பிலே என்னென்ன விதிகள் கடைபிடிக்கப்படுகின்றன? சில இடங்களில் அதை அமைக்கிறபோது அது வரலாற்று சிறப்புமிக்க நகராக இருக்கிற காரணத்தாலா? அல்லது வியாபாரத்தின் முக்கியத்துவம் கருதி அந்த அடிப்படையில் இருக்கிற காரணத்தாலா? அல்லது என்னென்ன விதிமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி சுற்றுலாத்துறை அலுவலகம் அமைக்கின்ற திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கடுத்து கேட்ட துணைக்கேள்வியின் மூலம், சுற்றுலா வழிகாட்டுகிறவர்கள் நியமிக்க இருக்கிறார்களா என்று கேட்டதின் மூலம், இப்படிப்பட்ட ஒரு துறை அலுவலகத்தை அமைத்தால், அதன்மூலம் இந்த பணிகள் நடைபெறும் என்று அவர்கள் கருதுகிறார்கள் என்பதை புரிந்துகொள்ள முடிந்தது. ஆகவே சுற்றுலாத்துறைக்கு

அலுவலகம் என்பது அரசின் துறையாக சில இடங்களில் நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தன்னுடைய உணவு விடுதிகளை அல்லது ஓய்வு கூடங்களை அமைக்கின்ற அந்த அடிப்படை, அந்த பகுதி சுற்றுலா பயணிகள் வருகிற எண்ணிக்கையை ஒட்டியும், அந்த பகுதி சுற்றுலா முக்கியத்துவத்திலே எந்த அளவு இடம் பெற்றிருக்கிறது என்பதையும் பார்த்து இப்படிப்பட்ட சுற்றுலா விடுதிகள் கட்டப்படுகிறது; அதனுடைய வரவு செலவுத் திட்டத்திலே ஆண்டு இறுதியிலே கையை கடிக்காமல் இருக்குமா என்பதையும் மனதிலே வைத்துதான் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலா விடுதிகளை, உணவு விடுதிகளை அமைத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிமாநகரதில் ஆயிரக்கணக்கான கோவில்கள் இருப்பதாக சொல்கின்றார்கள். அங்கு தான் அண்ணா அவர்கள் தோன்றினார்கள். அண்ணா அவர்களின் கொள்கையான ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கையை விளக்குகிற அளவில் அங்கு ஒலி-ஒளி காட்சி அமைக்க........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலில் உறுப்பினர் காஞ்சிபுரத்திற்கு போய் வாருங்கள். ஆயிரக்கணக்கான கோவில்கள் என்று ஆரம்பித்தால் என்ன செய்வது ?

## கும்பகோணம் அரசு மருத்துவமனை.

***வினா எண் 570—திரு. செ. இராமலிங்கம் : திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் அரசு மருத்துவமனையில் நாய்கடி மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் தட்டுப்பாடு நீங்க மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

(அ) மே – ஜூலை 1980-ல் சுமார் 2 மாதம் தட்டுப்பாடு ஏற்பட்டது உண்மை ;

(ஆ) நாய்க்கடி மருந்தை குன்னூரிலே உள்ள பாஸ்டர் நிறுவனம் விநியோகித்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்ட தலைமை மருத்துவ அதிகாரி இந்த நிறுவனத்திற்கு கடிதம் எழுதியும், தந்தி கொடுத்தும் அவர்கள் மருந்தை சப்ளை செய்ய



வில்லை. 1980 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18 ஆம் நாளன்று நாகப்பட்டினத்திலுள்ள தலைமை மருத்துவ மனையிலிருந்து 300 சி. சி. மருந்து கும்பகோணம் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டு, தட்டுப்பாடு ஓரளவிற்கு சமாளிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் பாஸ்டர் இன்ஸ்டிடியூட் 3000 சி.சி. சப்ளை செய்துள்ளார்கள். தற்போது இதுபோன்ற எந்த விதமான புகாருக்கும் இடமில்லை.

**திரு மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற பொழுது இரண்டு மாத காலமாக அந்த நாய்க்கடி மருந்து தட்டுப்பாடு இருந்தது என்றும், குன்னூரிலே இருக்கக்கூடிய நிறுவனம் மருந்தை அனுப்பாததால் காலதாமதம் ஏற்பட்டது என்று சொன்னார்கள். இது கும்பகோணத்தில் மட்டுமல்லாமல், மன்னார்குடி, திருத்துறைப் பூண்டி போன்ற இடங்களிலும் இநத நாய்க்கடி மருந்து கிடைக்காததால், நாய் கடித்தவர்கள் வெறியாகி மனிதர்களை கடிக்கிற நெருக்கடி ஏற்பட்டது. எனவே சட்டி சுட்டதடா, கை விட்டதடா என்று இல்லாமல் அரசாங்கமே இப்படிப்பட்ட மருந்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாஸ்டடியூர் இன்ஸ்டிடியூட் என்பது குன்னூரில் இருக்கக்கூடிய மத்திய அரசாங்கத்தாலே நடத்தப்படுகிற ஒரு நிறுவனம். நமக்கு உடனடியாக மருந்து அனுப்பவேண்டுமென்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். சில மருத்துவ மனைகளிலிருந்து அந்த மருந்து கொடுத்த பிறகு பணம் அதற்காக கொடுக்கப்படவில்லை என்ற புகாரை வைத்து அவர்கள் தாமதப்படுத்தினார்கள். அப்படி இனி நடக்கக்கூடாது என்றுச் சொல்லி எங்கெங்கு தட்டுப்பாடு இருக்கிறதோ, தலைமை மருத்துவ மனையிலிருந்தே நேரடியாக மருந்து அனுப்பி அந்த நிலைமைகளை சமாளித்து இருக்கிறோம்.

(முற்பகல் 9–40.)

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. அம்பிகாபதி அவர்கள் சொல்வதைப் போல் வெறி நாய் கடித்த மனிதன் வேறு மனிதனைக் கடித்து பெரும் ஆபத்து ஏற்பட இருக்கிறது. இந்த மாதிரி அபாயம் ஏற்படாத வகையில் மருந்தை காலந் தாழ்த்தாது கொடுப்பதிலே அரசு கவனக் குறைவாக இருந்ததுதான் காரணம். இனிமேலாவது அவ்வாறு காலதாமதம் ஆகாமல் இருப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** நம் கவனக் குறைவாக இருந்திருக்கும். மாவட்ட மருத்துவ மனையிலிருந்து நாம் அனுப்பாதிருந்தால் Post haste in sending medicine immediately கவனக் குறைவாக இருந்திருக்கும். அந்தச் சூழ்நிலையிருந்தாலும்கூட சமாளித்து கவனக் குறைவு இல்லாமல் நாய்க்கடியிலே இரண்டு வகைகள் இருக்கின்றன, மேட் டாக் பைட் இருந்தால், ரேபிஷ், அதற்கு மருந்தும், சாதாரணமான நாய் கடித்துவிட்டால் பை வே ஆப் அபன்டன்ட் காஷன் பாதுகாப்புக்காக ஊசி போடுகிறோம். நடவடிக்கை எடுத்திருக்கிறோம். பைத்திய நாயாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், சாதாரண நாய் கடித்தாலும் அதற்கு 7 ஊசிகள் போடுகிறோம், இதற்கு 14 ஊசிகள் போடுகிறோம். தட்டுப்பாடு இருந்தாலும்கூட உடனடியாக சமாளித்து இருக்கிறோம். அது மட்டுமல்லாமல் நடவடிக்கையையும் எடுத்திருக்கிறோம். By way of abundant caution, a permanent advance of Rs. 1000 ஆயிரம் ரூபாய் மாவட்ட மருத்துவ மனைக்கு முன் கூட்டியே பாஷ்டியூர் இன்ஸ்டியூட்டிற்கு அந்தப் பணத்தைக் கட்டிவிடுங்கள் எந்தவிதமான தாமதமும் ஆகிவிடக்கூடாது என்று அட்வான்ஸாகக் கொடுத்து வைத்திருக்கிறோம். ஆகவே இனிமேல் இப்படிப்பட்ட பிரச்சினைக்கு வாய்ப்பு இல்லை.

### சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் தீக்காயங்களுக்கான தனி வார்டு.

*வினா எண் 571—திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் தீக்காயங்களுக்காக தனியாக ஏர்கண்டிஷன் வார்டு ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் உடனடியாக துவங்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### முசிறி பகுதியிலுள்ள குஷ்டரோகிகள்.

*வினா எண் 572—திரு. எம். கே. ராஜமாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி பகுதியில் குஷ்டரோகிகள். எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருப்பது உண்மையா ?





(ஆ) ஆம் எனில் அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :**

(அ) இல்லை.

(ஆ) ஏற்கனவே எல்லா நடவடிக்கைகளும் எடுத்து வருகின்ற காரணத்தால் இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். கே. ராஜமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது அந்தப் பகுதியிலே இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் காவிரிக் கரையோரமாக இருக்கக்கூடிய இனம் சாலியர் என்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள். அந்த அந்த வட்டாரத்திலே இருக்கக் கூடியவர்கள் சரியான மருத்துவ ஆலோசனைகளைப் பெறாத காரணத்தால் காவிரிக் கரையோரமாக அவர்கள் அசிங்கப்படுத்தி அந்த வியாதி அதிகப்படுவதற்கு என்ன என்ன வாய்ப்புகள் உண்டோ அவ்வளவும் அங்கே நடந்துக் கொண்டிருக்கின்றன. இதுகுறித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அந்தப் பகுதிகளுக்கு எல்லாம் தோளூர்பட்டி என்ற லெப்ரஸி கன்ட்ரோல் யூனிட்டிலிருந்து வேன்கள் சென்று லெப்ரஸி டிடக்ஷன் ஆயிரம் பேர்களுக்கு இவ்வளவு என்று செய்து பார்த்து அதன் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். 1978 ஆம் ஆண்டிலே,, 56,889 பேர்கள் இருக்கிறார்கள், அவர்களில் 1,014 பேர்களுக்கு ஆக்டிவ் கேஸஸ் இருந்தது, 1979 ஆம் ஆண்டிலே அதே தொகை தான், அவர்களில் 885 பேர்களுக்கு இருந்தது. 1980 ஆம் ஆண்டிலே 504 பேர்களுக்கு இருந்தது. ஆகவே பர்சன்டேஜ் பார்த்தால் 1978 ஆம் ஆண்டு, 17 சதவீதம், 1979 ஆம் ஆண்டு 15 சதவீதம், 1980 ஆம் ஆண்டு 12 சதவீதம் என்று இருக்கிறது. ஆகவே தான் குறைந்திருக்கிறது என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடியதை எழுதிக் கொடுத்தால் உடனடியாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஷ்டரோகிகளுக்கு என்று தங்கும் இடங்கள் Leprosy Units கட்டப்பட்டிருந்தும், வெளியிலே அதிகமான பேர் நடமாடிக்கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படிப்பட்டவர்களைத் தீவிரமாகப் பிடித்து, அந்த விடுதிகளில் தங்க வைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விடுதிகளை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், அதிலே இடம் போதாமல் வெளியே இன்னும் இருக்கிறார்கள் ; அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் இம்மாதிரியான மருந்தை ஊர்திகள் மூலமாக எடுத்துச் சென்று அந்தந்த இடங்களில் மருந்து கொடுத்து ஓரளவுக்கு அதைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

## மருத்துவப் பல்கலைக்கழகம் அமைக்கும் திட்டம்

* வினா எண் 573—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் மருத்துவப் பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :-**

(அ) மற்றும் (ஆ): ஆம். இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது தமிழகத்தில் மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னதற்கு நன்றி. இன்றைக்கு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்று தனியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அதைப் போல, அமைக்கவிருக்கும் மருத்துவப் பல்கலைக் கழககத்தை எந்த மாவட்டத்தில் அமைப்பது என்று அரசு ஏதாவது முடிவு செய்திருக்கிறதா ? அப்படியிருந்தால் அதை அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய பதிலிலேயே சொல்லியிருக்கிறேன் பரிசீலனையில் உள்ளது என்று. அதற்காக ஸ்பெஷல் ஆபீசர் ஒருவரை நியமித்து, என்னென்ன தேவைகள், எப்படிப்பட்ட தேவைகள், நில ஆர்ஜிதம் எவ்வளவு செய்ய வேண்டும் ; அதுமட்டுமல்லாமல், கட்டிட கன்ஸ்ட்ரக்ஷனுக்கு நமக்கு எவ்வளவு தொகை செலவாகும் ; equipment purchase, furniture ஆகியவற்றின் அமைப்பு எப்படியிருக்க வேண்டும் ; அப்படிச் சட்டத்தைக் கொண்டு வந்தால் அது எப்படி இருக்க வேண்டும் ஆகிய எல்லாவற்றையும் பற்றி ஸ்பெஷல் ஆபீசர் பரிசீலனை செய்தால், அதற்குப்பிறகு அம்மாதிரி ஒரு பல்கலைக் கழகத்தைக் கொண்டு வருவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.



**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அம்மாதிரி பல்கலைக் கழகம் ஏற்படுவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது நாம் சொல்ல இயலாது ; பரிசீலனைக்குப் பிறகுதான் சொல்ல முடியும்.

**டாக்டர் கே. சமரசம் :** பேரவைத் தலைவரவர்களே, வேளாண்மைப் பல்கலைக் கழகம் என்றும், கல்விக்குப் பல்கலைக் கழகம் என்றும், பொறியியல் பல்கலைக் கழகம் என்றும் இருக்கின்ற நேரத்தில் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்ற அடிப்படையைக் கருதி, எல்லாவற்றிற்கும் முக்கியமானது இந்த மருத்துவத் துறை என்பதைக் கருத்திற் கொண்டு, இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்தை உடனடியாக ஏற்படுத்துவதற்கான பரிசீலனையை வேகமாகச் செய்து அதை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது நல்ல யோசனை. இதைத்தான் நான் சொன்னேன், முன் வர வேண்டுமென்றுதான் ஒரு ஸ்பெஷல் ஆபீசர் எல்லா சாத்திய கூறுகளையும் ஆராயலாம் என்று நான் சொன்னேன்.

## பள்ளிச் சிறார்களுக்கு சலுகை பயணச்சீட்டு வழங்கும் திட்டம்.

*வினா எண். 574—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் வழங்குவது போல் பள்ளிச் சிறார்களுக்கு மற்ற கழகங்களின் மூலம் பாஸ் கொடுக்கும் திட்டம் ஏதும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு க. முத்துசாமி :**

அதே போன்று இல்லை. எனினும், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைத் தவிர, மற்ற போக்குவரத்துக் கழகங்களில் மாதாந்திர சலுகை பயணச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த ஆண்டு உடல் ஊனமுற்றோர் ஆண்டு. எனவே இந்த ஆண்டில் ஊனமுற்ற பள்ளிச் சிறார்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

[1981 மார்ச் 31

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவரவர்களே, சலுகை அடிப்படையிலே நாம் இப்பொழுது பயணச் சீட்டுகள் வழங்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பதில் அளிக்கும் நேரத்திலே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்களின் துணைவியாரும் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பாஸ் வழங்கப்படும் என்று சொன்னார்கள். அண்மையில் நானும் என் மனைவியும் கன்னியாகுமரிக்குப் போய் வந்தோம். என்னுடைய மனைவி பயணம் செய்ததற்குக் கட்டணம் வசூலித்தார்கள். இந்தத் திட்டம் ஏன் அமல் நடத்தப்படவில்லை. அமைச்சர் அறிவித்த பிறகும் அதை அமல் நடத்துவதிலே இவ்வளவு காலதாமதம் ஏன் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இந்தக் கேள்வியை அனுமதித்ததற்குக் காரணம், அவர்களுடைய சொந்தப் பிரச்னை என்பதால்தான்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, என்னுடைய சொந்தப் பிரச்னை மட்டுமல்ல. எல்லா உறுப்பினர்களின் பிரச்னைதான்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு திரு. சித்தன் அவர்கள் சட்டமன்றத்திற்கு வருகிறார் என்று கருதிக்கொண்டிருந்தேன்; ஆனால் அவர் கல்லூரிக்கும், பள்ளிக்கும் போய்க் கொண்டிருக்கிறார்போல் தெரிகிறது. காரணம், இந்தக் கேள்வி மாணவர்களைப் பற்றியது. இருந்தாலும் சொல்கிறேன். அப்படிக் கட்டணம் வசூல் செய்யக்கூடாது; அவ்வாறு கட்டணம் வசூலித்திருப்பதாகக் குறிப்பாகச் சொன்னால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு) சொல்லியிருக்கிறீர்கள்; அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

[முற்பகல் 9-50]

திரு. ப. சுந்தரம்: தலைவர் அவர்களே, இது போன்ற பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் அரசுப் போக்குவரத்து இல்லாத இடங்களில், தனியார் பஸ்களில் சென்றால் இது போன்ற சலுகை வழங்க அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.



1981 மார்ச் 31]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கப் பேருந்துகளிலே அந்தச் சலுகையை வழங்கிக் கொண்டிருக்கிறோம். தனியார் பேருந்துகளில் அவர்கள் கட்டாயமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்ல முடியாத நிலைமை இருக்கிறது. அங்கு கூட முடியுமா என்பதைப் பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. ப. நெடுமாறன்: மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு எல்லாம் 1/2 கட்டணம் வசூலிக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மட்டும்தான் 1/2 கட்டணம். அதற்குக் கீழே உள்ள குழந்தைகளுக்குக் கட்டணம் இல்லை. அதற்கு மேலே உள்ள குழந்தைகள், 12 வயதிற்குள் நிச்சயமாகப் பள்ளிக்கூடம் போய்க் கொண்டுதான் இருக்கும். அவர்களுக்கு இந்தச் சலுகை பொருந்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இது போல் நிருபர்களுக்கு பாஸ் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஏற்கனவே கொடுத்தாகிவிட்டது. காலதாமதமாகக் கேட்கிறீர்கள், பத்திரிகையிலே வராது.

தலை பாதுகாப்பு கவசம் அணிதல்.

* வினா எண். 575—திரு. செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களை ஓட்டுபவர்கள் கட்டாயமாக 'தலை பாதுகாப்பு கவசம்' (Helmet) அணியவேண்டும் என்ற உத்தரவை கட்டாயமாக்க அரசு ஆலோசித்து வருகிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மத்திய அரசு, 1939 ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தில் சேர்க்கப்பட்ட புதிய பிரிவு 85-ன்படி ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள்கள் ஓட்டுநர், பின்னால் அமர்ந்து செல்பவர்கள் கட்டாயமாகத் தலைக் கவசம் அணிய வேண்டும் என்று உத்திரவிட்டது. இது 1980-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் தேதி முதல் அமுலுக்கு வரும் என்று சொன்னார்கள். அதற்குப் பின்பு அந்த உத்தரவு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1981 மார்ச் 31

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களை ஓட்டுபவர்கள் விபத்துக்கு ஆளாகும்போது, பெரும்பாலும் தலையில் சேதம் ஏற்பட்டு உயிர்ச் சேதம் ஏற்படுகிற நிலை இருக்கிறது. எனவே அதைத் தவிர்க்கிற நிலையிலே மத்திய சர்க்கார் அந்த உத்தரவை வற்புறுத்த வில்லையென்றாலும், மாநில சர்க்காரே தன்னுடைய சட்டத்திற்கு உட்பட்டு, அந்த நிலையை வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தலைக் கவசம் அணிந்து செல்வதுதான் ஆபத்தைத் தவிர்க்கக் கூடியது என்று அந்த ஓட்டுநர்களுக்குத் தெரிந்திருந்தும் கூட அவர்கள் அதை நடைமுறையிலே கொண்டு வராதது வருந்தத்தக்கது ஆகும். இருந்தாலும்கூட, அந்த ஆபத்துக்களைக் குறைக்கின்ற அளவுக்கு, மத்திய அரசாங்கம் அதன்மீது நடவடிக்கை எடுக்கவில்லையென்றாலும், மாநில அரசே அதை செய்ய முடியுமா என்று பார்த்து, எதிர் காலத்திலே நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களை ஒட்டுபவர்கள் கட்டாயமாகத் தலைப் பாதுகாப்புக் கவசம் 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் தேதி முதல் அணிய வேண்டுமென்று மத்திய அரசு அறிவித்து விட்டு, திருப்பி, 1980-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் தேதி முதல் தலைக் கவசம் அணிய வேண்டாம் எனச் சொல்லப்பட்டதற்கு ஏதாவது காரணங்கள் சொல்லப்பட்டாதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே அதற்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை. அந்த உத்தரவு போடப்பட்டது. பிறகு திரும்பப் பெறப்பட்டது என்ன காரணம் என்று தெரியவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் தலைக் கவசம் அணிய வேண்டுமென அரசு உத்தேசித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தற்சமயம் ஒரு மோட்டார் பைக்கில் 3, 4 பேர் குழந்தைகளோடு குடும்பத்தோடு போகிறார்கள். பின்னாலே, அவருடைய மனைவிமார்களையும் அழைத்துச் செல்கிறார்கள். அவர்களும் கவசம் அணிய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி; மோட்டார் சைக்கிள் பின்னாலே எத்தனையோ பேர்களை ஏற்றிக்கொண்டு போகிறார்கள் என்று சொல்கிறார்கள். மனைவிமார்கள் என்று சொல்லும்போது, 2 பேருக்கு மேல், 3 பேர், 4 பேர்களை



1981 மார்ச் 31]

ஏற்றிச் செல்கிறார்கள் என்ற பொருள் வரும். அந்த வாகனத்தில் இரண்டு பேர்தான் செல்ல வேண்டும். அந்த இரண்டு பேரும் தலைக் கவசம் அணிய வேண்டுமென்பதைப் பற்றி நாம் ஆராய்ந்து வருகிறோம்.

### பார்வை இழந்தோருக்கு இலவசப் பயணச்சீட்டு சலுகை

*வினா எண். 576—திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண்பார்வை இழந்தோருக்கு மாதம் இரு முறை சிகிச்சைக்கு செல்வதற்காக இலவசப் பயணச் சீட்டு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் அளிக்கப்பட்டு வந்தது இன்னும் அளிக்கப்படுகிறதா ?

(ஆ) அத்திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

(அ) ஆம்.

(ஆ) கண் பார்வையற்றவர்கள் மருத்துவமனை/வேலை செய்யுமிடம்/கல்விக்கூடம் முதலிய இடங்களுக்கு தங்கள் இல்லங்களிலிருந்து பேருந்துகளில் இலவசமாக சென்று வர இலவச பாஸ் கொடுக்கப்படுகிறது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைத் தவிர ஏனைய போக்குவரத்துக் கழகங்களில் வழங்கப்படுகின்றன.

திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த இலவச பஸ் வசதி எத்தனை பேர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மேலும் கண்பார்வை அற்றவர்களுக்கு மட்டுமல்லாமல் ஏனைய ஊனமுற்றோர்களுக்கு இந்த வசதி நீட்டிக்கப்படுமா என்பதை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: : தலைவர் அவர்களே, இதுவரையில் 1,044 பேர்களுக்கு இப்படிப்பட்ட பாஸ் வழங்கப்படுகிறது. இன்னும் உள்ள ஊனமுற்றோர்களுக்கு அளிக்கப்படுமா என்று கேட்டார்கள். இது ஊனமுற்றோர் ஆண்டாக இருப்பதால் மற்ற ஊனமுற்றோர்களுக்கும் இந்தச் சலுகை வழங்கப்படுமா என்பது பற்றி பின்புதான் அரசு முடிவெடுக்கும்.

டாக்டர் கே. சௌரிராஜன்: தலைவர் அவர்களே, கண் பார்வை அற்றவர்கள் பேருந்துகளில் தாங்களாகவே ஏறி கண் மருத்துவ மனைக்குச் செல்ல முடியாது. அவர்கள் துணைக்கு ஒருவர் நிச்சயமாக செல்ல வேண்டும். அப்படி துணைக்குச் செல்லுகிறவர்களுக்கும் இத்தகைய பாஸ் வசதி செய்து கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் துணைக்குச் செல்பவர்களுக்குத்தான் வழங்கினோம் என்று சொன்னால், இதை ஏன் உறுப்பினர் கேட்டார் என்று புரியவில்லை. இருந்தாலும் இப்போதுதான் முதன் முறையாக அவர்களுக்குக் கொடுக்கிறோம். அடுத்தவர்களுக்கு சலுகை அளிப்பது பற்றி மீண்டும் சிந்திப்போம்.

### கிராமங்களிலுள்ள முதியோர்களுக்கான உதவித்தொகை.

*வினா எண். 577—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களிலுள்ள தகுதி வாய்ந்த முதியோர்கள் அனைவருக்கும் முதியோர் பென்சன் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன்:

(அ) ஆம்.

(ஆ) இம்மாநிலத்தில் 1,51,224 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மாவட்ட ஆட்சியர்களால் அனுமதி வழங்கப்பட்டு தற்சமயம் 1,27,610 நபர்கள் உதவித்தொகை பெறுகின்றனர். மீதமுள்ளவர்களுக்கும் விரைவில் வழங்கப்படும். இதுதவிர தகுதி வாய்ந்த அனைவரும் முதியோர் உதவித் தொகை பெற வழி வகை செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித்தொகைக்காக எல்லா வயதானவர்களும் போடுகிறார்கள். ஆனால் அப்படிப் போடும்போது அரசு பரிசீலனை செய்து அவர்களுக்குக் குழந்தைகள் இருந்தால் அந்த முதியோர் உதவித் தொகை கிடையாது என்று சொல்லு





கிறார்கள். இப்போதுள்ள குழந்தைகள் பெற்றோர்களுக்குச் சோறு போடாமல், சொத்துக்களை எல்லாம் பறித்துக் கொண்டு வீட்டை விட்டு விரட்டிவிடுகிறார்கள். அந்த வயதானவர்கள் தெருவிலே பிச்சை எடுக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே, 65 வயதானவர்கள் எல்லோருக்கும் இந்த முதியோர் உதவித் தொகையைக் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர்களைக் கவனிப்பது என்பது பிள்ளைகளின் மனதைப் பொறுத்ததாக அமையும். ஏனென்று சொன்னால், சில பிள்ளைகள் தாய், தகப்பனுக்கு உதவி செய்ய வேண்டுமென்று எண்ணம் இருக்கும். சில பிள்ளைகளுக்கு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டாம் என்று எண்ணம் இருக்கும். இவை எல்லாம் பிள்ளைகளின் மனதைப் பொருத்துதான் அமையும். ஆகவேதான், பிள்ளைகள் இருக்கின்ற முதியோர்களுக்கு அரசாங்க உதவித் தொகை வழங்குவதில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, முதியோர் பென்சன் பெறுவதற்காக அப்ளிகேஷன் போட்டுவிட்டு 5 வருடம் 10 வருடம் என்று ஆகியும் கூட அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கின்றது. டெய்லி அவர்கள் திண்ணையில் உட்கார்ந்துக் கொண்டு போஸ்டுமேன் வருகிறாரா என்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சில நேரங்களில் அவர்கள் செத்த பிறகும் கூட வருகிறது. எனவே இது காலாகாலத்தில் கிடைப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் என்றுதான் இப்போது செய்துக் கொண்டிருக்கிறோம். அரசு இதுவரையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உதவித் தொகை வழங்கப்படுகின்ற எண்ணிக்கைகளை குறிப்பிட்ட அளவே ஒதுக்கியுள்ளது. ஆனால் தற்போது இந்தத்திட்டத்தின் கீழ் ஆதரவற்ற, தகுதி வாய்ந்த முதியோர்கள் அனைவரும் உதவிபெற வேண்டும் என்பதில் அரசு தனிக் கவனமும் அக்கரையும் காட்டி வருகிறது. உதவித் தொகையை வழங்குவதற்கு மனுப்போட்ட இடங்களுக்குப் போதுமானதாக இல்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருதினால் கூடுதல் இடம் வேண்டும் என்று அரசுக்கு அறிக்கை அனுப்பினால் அரசு அதைப் பரிசீலனை செய்யும். ஆகவே மனு செய்த எல்லோருக்கும் தற்போது உதவித் தொகை வழங்கப்பட வேண்டும் என்று அரசு பரிசீலனை செய்து கொண்டுவருகிறது.

திரு. சு. பலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே முதியோர்கள், தங்களுக்கு உதவித் தொகை வேண்டும் என்று ஏராளமான பேர்கள் மனுச் செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டதா?

(திரு. சு. பாலன்) [1981 மார்ச் 31

இல்லையா என்கின்ற விவரம் பல மாதங்களுக்கு தெரிவதில்லை. எனவே அவர்கள் மனுச் செய்த 3 மாதங்களுக்குள் அவர்களு டைய மனு ஏற்றுக் கொள்ளப்பட்டதா இல்லையா என்று அவர் களுக்குக் குறிப்பு அனுப்பப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல் அரசாங்கத்திற்கு விவரம் எதுவும் வரவில்லை. மாண்பு மிகு உறுப்பினர் அந்த மாதிரி விவரம் எழுதிக் கொடுப்பாரா னால் நடவடிக்கை எடுக்கப்படும்.

[முற்பகல் 10-00.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதி யோடு, வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ். ஆண்டித்தேவர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிற போது, ஒரு இலட்சத்திற்கு அதிகமான நபர்களுக்கு பென்ஷன் கொடுப்பதாகச் சொன்னார்கள். என்ன விதிமுறைகளைப் பின் பற்றி இவை கொடுக்கப்படுகின்றன? ஏற்கனவே அரசு விதி முறைகளுக்கு உட்பட்டு குழந்தைகள் இல்லை, 65-வயதுக்கு மேலாகிவிட்டது என்று எங்களைப் போன்றவர்கள் சான்றிதழ்கள் வழங்கி, மாவட்டக் கலெக்டருக்கு பலர் அனுப்பியிருந்தும் அவர்களுக்கு பதில் எதுவும் வரவில்லை. அது குறித்து இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, தற்போது மாநிலத்தில் 1,51,224 நபர்களுக்கு உதவித் தொகை தருவதற்கான ஆணை பிறப்பிக் கப்பட்டுள்ளது. அது எந்த அடிப்படையில் கொடுக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். 65 வயதுக்கு மேற்பட்டு, முதியோர்களாக இருந்தால் — ஆதர வற்ற முதியோர்களாக இருந்தால் — அவர்களுக்கு கண்டிப் பாக உதவித் தொகை வழங்கப்படும். நான் ஏற்கனவே மாண்பு மிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்களுக்குக் கூறியதைப் போல், பிள்ளைகள் மனது வைத்தால் பெற்றோர்களுக்கு உதவி செய்கிறார்கள், சிலர் செய்வது இல்லை. மனம் இருந்தால் செய்யலாம் என்கிற நிலைமை இருப்பதால், பிள்ளைகள் இருப்ப வர்களுக்கு அரசாங்கம் உதவித் தொகை கொடுப்பது இல்லை.



1981 மார்ச் 31]

## கொல்லிமலையில் பால்மாடு வளர்ப்பு பண்ணை ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 578—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

கொல்லிமலையில் அரசின் சார்பில் பால்மாடு வளர்ப்புப் பண்ணை ஒன்று ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** கொல்லிமலையில் அரசின் சார்பில் பால்மாடு வளர்ப்புப் பண்ணை ஒன்று ஏற்படுத்த அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

**திரு. சி. பழனிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில் தழை நிறைந்த காடுகள் உள்ளன. ஆகவே, அங்கே பால் மாடு வளர்ப்புப் பண்ணை ஏற் படுத்த அரசு பரிசீலனை செய்யுமா? அதன் மூலம் அங்கே யுள்ள ஏழை எளிய மலை வாழ் மக்கள் வாழ்வு பெறுவதற்கு வசதி அளிக்க முடியும் என்பதால், அந்தத் திட்டத்தை அரசு மீண்டும் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் ஏற்கனவே உள்ள பண்ணைகளில் பாசன வசதிகள் மற்றும் உள் அமைப்பு வசதிகள் இல்லாத காரணத்தால், பசுந்தழை பயிர் உற்பத்திக் கும், தீவன உற்பத்திக்கும் அரசு மிகுந்த கவனம் செலுத்த வேண்டியிருப்பதால் பல சிரமங்கள் இருக்கின்றன. ஏற்கனவே உள்ள பண்ணைகளைப் பராமரிக்க அவற்றில் இருந்து கிடைக் கும் வருமானத்தை விட 3 பங்கு செலவு அதிகமாகிறது. ஆகவே, கொல்லிமலையில் பால்மாடு வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சேலம் மு. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, சேலத் தில் பால் பவுடர் தொழிற்சாலை ஆரம்பிக்க இருப்பதால், ரெட்டேன், ஜெர்சி, பெர்சியன் போன்ற மாடுகளை வளர்க்க ஏற்காட்டில் ஒரு பண்ணை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி கொல்லி மலை பற்றியது.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### திருப்பூரில் புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் இந்து-முஸ்லீம் பீடித் தொழிலாளர்கள் வெளியேற்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரில் அரசு புறம்போக்கு நிலங்களில் இந்து-முஸ்லீம் பீடித் தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கானவர்கள் குடிசைகளைக் கட்டிக்கொண்டு 20 வருஷங்களுக்கு மேலாக தீர்வை செலுத்தி வசித்து வருபவர்களை திடீரென்று காலி செய்யும்படி கூறுவதானாலும், அப்பகுதியில் வகுப்புக் கலவரம் ஏற்படக்கூடிய நிலையை உருவாக்கியுள்ளதாலும் அப்பகுதி பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்" என்று கேட்டு திருவாளர்கள் கே. ஆர். சுந்தரம், என். வரதராஜன், ஜே. ஹேமச்சந்திரன், டி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், ப. சுந்தரம், த. வேணுகோபால் ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்துச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் கோவிலுக்கு எதிரிலுள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் கடந்த 20, 25 ஆண்டுகளாக அங்கே வசிக்கின்ற பீடித் தொழிலாளர்கள், இந்துக்கள், முஸ்லீம்கள், இன்னும் பல்வேறு வகுப்பினர் குடிசைகள் போட்டு வசித்து வருகிறார்கள். அந்தப் பகுதியிலே இந்து முன்னணி என்ற பெயரில் நோட்டீஸ் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் வருகிற சித்திரை, வைகாசி மாதங்களுக்குள் அந்த இடத்தை அவர்கள் காலி செய்யாவிட்டால் அவர்களை அப்புறப் படுத்தாவிட்டால் குடிசைகளுக்கு தீயிட்டு கொளுத்துவோம் என்று சொல்லி அச்சுறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கே ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் இது பற்றி பரிபூரணமாக விவாதித்து முடிவு செய்ய அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு ப. சுந்தரம்: தலைவரவர்களே, திருப்பத்தூர் நகரில் எல்லம்மன் கோவில், ஈஸ்வரன் கோவில் ஆஞ்சநேயர் கோவில் என்ற மூன்று கோவில்கள் இருக்கின்றன. அந்தக் கோவில்களுக்குச் சொந்தமான இடம் என்று சொல்லப்படு கிற அந்த இடத்திலிருக்கிற வீடுகளை காலி செய்யவேண்டு மென்று, இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதாகச் சொல்லப் படுகிற இந்து சமதர்ம கட்சியினர் சொல்லியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. நான் ஞாயிற்றுக்கிழமை அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தேன். எல்லம்மன் கோவில் என்பது—இப்போது அங்கே கோவில் இல்லை; அங்கே ஒரு பழைய மண்டபம்தான்





இருக்கிறது. இருந்தாலும் கோவிலுக்குச் சொந்தமான இடம் என்று சொல்லப்படுகிற அந்தப் பகுதியிலே ஏறத்தாழ 20, 25 ஆண்டுகளாக 200 குடிசைகள் போட்டு வாழ்ந்து வருகிறார்கள். இதைபோன்ற பிரச்சினை இதற்கு முன்னால் பலதடவை எழுந் திருக்கிறது. இருந்தாலும் இந்தப் பிரச்சினைப்பற்றி இந்த சட்டமன்றத்தில் விரிவாக விவாதிக்க, இந்து முஸ்லீம் கலவரம் ஏற்படாமல் இருக்க, இந்த அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டுவந்திருக்கிற ஒத்திவைப்பு தீர்மானத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டது. ஆனால் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் இந்து-முஸ்லீம் கலவரம் வரும், மதமாச்சரியம் வரும் என்று குறிபிட்டு, அதேநேரத்தில் 20 25 ஆண்டு காலமாக இந்துக்களுக்கும் முஸ்லீம்களும்தான் அங்கே குடிசைகள் போட்டிருக்கிறார்கள் என்றும் குறிப்பிட் டார்கள். குடிசைகள் போட்ட பிறகு இன்றைக்கு இந்துக்கள், முஸ்லீம்கள் என்று சொல்லி, அவர்களை அப்புறப்படுத்த முயல்கிறார்கள் என்று சொல்லும்போது, இந்துக்களையும் அப்புறப்படுத்த முயலுகிறார்கள், முஸ்லீம்களையும் அப்புறப்படுத்த முயல்கிறார்கள் என்றுதான் இரு உறுப்பினர் களும் கூறியதிலிருந்து நான் தெரிந்துகொள்கிறேன். ஆகவே, இந்துக்களும் முஸ்லீம்களும் அங்கே இருக்கும்போது மதமாச்ச ரியம் வருவதற்கு எந்தக் காரணமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தபிறகு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விவரம் கேட்கப்பட்டது. அங்கே யிருந்து எனக்குத் தரப்பட்ட அறிக்கைப்படி, இந்து முன்னணி யினர் என்ற அமைப்பு வழங்கிய துண்டு பிரச்சாரம் சிறிது காலம் பரபரப்பை ஏற்படுத்தியது என்றும் அந்த செய்தி அறிந்து திருப்பத்தூர் துணை ஆட்சியர், திருப்பத்தூர் துணை போலீஸ் கண்காணிப்பாளர் ஆகியோர் விசாரித்து, திருப்பூரில் புலன் எண். 768 (1) மற்றும் 704-ன்படி அந்தக் குடிசைப் பகுதிகளை நேரில் சென்று பார்த்தார்கள். அந்த நிலத்தை நத்தம் புறம்போக்கு என்றும், ஆஞ்நேயர் சன்னதி என்றும் கிராமக் கணக்கில் வகைப்படுத்தியிருக்கிறார்கள். திருப்பத்தூர் துணை ஆட்சியர் அங்கே உள்ள இந்து தலைவர்களையும், முஸ்லீம் தலைவர்களையும் 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாளன்று அழைத்து, கூட்டத் தைக் கூட்டி, அமைதி காக்க ஆவன செய்ய வேண்டு மென்றும், தீவிர நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க வேண்டு மென்றும் எடுத்துரைத்தார். இரு சமுதாயத்தைச் சேர்ந்தவர் களும் பதட்ட நிலை போக்கப்படவும், அமைதி காக்கப்படவும்

இசைந்துள்ளனர். மேற்கொண்டு ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றும் நடவடிக்கையை உடனடியாகச் செய்ய வேண்டாம் என்றும் இன்றைக்கு அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் திருப்பூர் நகருக்கு நேரில் சென்று, திருப்பத்தூர் துணை ஆட்சியருடன் கலந்து பேசி, நிலைமையைத் தெரிந்துகொண்டிருக்கிறார்.

[முற்பகல் 10.10]

தகாத சம்பவம் எதுவும் நிகழவில்லை. அங்கு தற்சமயம் முழு அமைதி நிலவி வருவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து அறிக்கை வந்திருக்கின்றது. வடஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திருப்பத்தூரில் நகரில் ஏற்பட்ட பதட்ட நிலை முற்றிலும் மாறி அசம்பாவிதமான நிகழ்ச்சி எதுவும் இன்றி அமைதியாக நிலைமை இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது பற்றி விவாதிக்கத் தேவையில்லை என்று நான் கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

3. அறிவிப்பு.

(அ) நிதியமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க கவன ஈர்ப்பு ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு திரு. இரெ. இராசமாணிக்கம், திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் மேலவையில் பதிலளிக்க வேண்டி இருப்பதால் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் நாளை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

வேதாரண்யம் பகுதியில் காலரா நோய்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேதாரண்யம் பகுதியில் காலரா பரவியுள்ளதால் சிலர் இறந்தது குறித்து திருவாளர்கள் எம். எஸ். மாணிக்கம், என். விஜயபாலன் மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.



திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியில் காலரா பரவியுள்ளதால் சிலர் இறந்தது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, பேரவை முன் அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் பேரூராட்சி பகுதியில் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதங்களில் 27 பேர் சீதபேதியால் பாதிக்கப்பட்டனர். இது தவிர அந்தப் பகுதியில் உள்ள 14 கிராமங்களில் 31 பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டனர். தஞ்சை மாவட்ட சுகாதார அலுவலர் காலரா தடுப்புக்குழுவுடன் அப் பகுதிக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளித்தும், நோய் மேலும் பரவாமலும் இருக்க தக்க தடுப்பு நடவடிக்கை எடுத்தார். சென்னை பொது சுகாதாரத்துறை இயக்கத்தைச் சேர்ந்த ஒரு சுகாதார அலுவலர் அப் பகுதியில் முகாமிட்டு தடுப்பு நடவடிக்கைகளைக் கண்காணித்துவந்தார். சிகிச்சைக்குப்பின்

பாதிக்கப்பட்டவர் அனைவரும் குணமடைந்தனர்.

வேதாரண்யம் பகுதியில் நடப்பாண்டில் 29 பேர் குடல் அழற்சி நோயினால் (Acute Gastro Enteritis) பாதிக்கப்பட்டு அதில் ஒருவர் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 ஆம் தேதியில் இறந்தார். பாதிக்கப்பட்டவர்களின் மலமாதிரியை சோதனை செய்ததில், பாதிக்கப்பட்ட 29 பேரில் இருவர் மட்டுமே காலரா நோயினால் பாதிக்கப்பட்டதாகத் தெரிய வந்தது. ஆனால் காலரா நோயினால் இறப்பு ஏதுமில்லை.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளித்ததுடன், தீவிர நோய் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது. நீர் நிலைகளுக்கு மருந்திட்டு பாதுகாக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு காலரா தடுப்பு ஊசி போடப்பட்டது. நோயுற்றவர்களின் வீடுகள் கிருமி நாசினியிட்டு சுத்தப்படுத்தப்பட்டது. தேவையான மருந்துகள் கைவசம் உள்ளது. இப்பகுதி தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளது. நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளது என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தை, மாசி மாதங்களில் இப்படி ஆண்டுக்காண்டு அந்தப் பகுதியிலே காலரா போன்ற வியாதிகள் வரக்கூடிய நிலைமை உருவாகி இருக்கின்றது. அதாவது வயல்களில் தண்ணீர் குறைந்து விடுகின்ற நேரங்களில் அந்தப் பகுதியிலே

உள்ள மக்கள் வறுமையின் காரணமாக, அங்கே வருகின்ற மீன் குஞ்சுகளை பிடித்துச் சாப்பிடுகின்ற காரணத்தால்தான் இப்படி நோய் ஆண்டுதோறும் வருகின்றது. எனவே அந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தந்த அறிக்கையிலேயே ஏற்கனவே எடுத்துக் கூறியபடியாக அது காலரா நோய் அல்ல. (Acute Gastro Enteritis) எனப்படும் வாந்திபேதி என்னும் நோய்தான். இந்த நோய் வருவதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. சாதாரணமாக காரத்தை அதிகமாக உணவில் சேர்த்துக் கொண்டால்கூட போதும் வந்துவிடும். இந்த நோயை பொருத்தவரையில் உணவு விஷயத்தில்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தண்ணீர் கூட பாயில்ட் வாட்டராக காய்ச்சி ஆற்றிய நீரை குடித்தால் நல்லது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் அந்தப் பகுதிகளுக்கு தனிக்கவனம் செலுத்தப்பட்டு, எந்தெந்தப் பகுதிகளிலெல்லாம், அந்த நோய் வரக்கூடிய நிலைமை இருக்கிறதோ அங்கேயெல்லாம் சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தடுக்கப்பட்டு விட்டது. ஆகவே எந்தவிதமான கவலையும் தேவையில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு தனி துறையாக இருந்தாலும் கூட, அரசாங்க மருத்துவமனை அங்கே அருகில் இல்லாத காரணத்தால், இப்படிப்பட்ட நிலைமைகள் ஆண்டுதோறும் வருகின்றன. ஆகவே வேதாரண்யத்தில் ஒரு மருத்துவமனையை உண்டாக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனை தான். அங்கே. என்ன சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை ஆராயலாம். அங்கே இப்போது இருக்கிற சின்ன மருத்துவமனையை விரிவு படுத்தலாமா, அல்லது ஆரம்ப சுகாதார நிலையங்களை அப்கிரேட் செய்வதற்கான திட்டத்தை மேற்கொள்ள விருக்கிறோம் அதில் சேர்த்துக் கொள்ளலாமா? அல்லது தனியாக ஏதாவது எற்பாடு செய்ய முடியுமா என்பது குறித்து எல்லாம் ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொள்ளும்.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோய் ஏற்பட்டவுடன் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு பதில் ஏற்படுவதற்கு முன்னதாகவே, அத்தகைய நீர் நிலைகளில் அல்லது கிராமப்புறங்களில் தேவையான தடுப்பு மருந்துகளை தெளித்து, அந்த நோயே வராமல் தடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். இந்த நோய் வராமல் தடுப்பதற்கு கொஞ்சம் சுகாதாரமாக இருந்தாலே போதும். இரண்டு மூன்று நாட்கள் சேமித்து வைக்கப்பட்ட உணவு பொருள்களை சாப்பிடுவது, அவற்றை சுகாதாரமற்ற முறையிலே வைத்திருப்பது போன்ற செயல்களால்தான் இந்நோயே வருகிறது. இது காலரா நோய் அல்ல. சாதாரண வாந்தி பேதிதான். தண்ணீரை காய்ச்சிக் குடிக்க வேண்டும். கிராமப்புறங்களில் இவைகள் ஓரளவிற்கு இப்போது போதிக்கப்படுகின்றன. தடுப்பு மருந்துகளை அளவுக்கு அதிகமாக தெளிப்போமேயானால் அது நமக்கு பாதிப்பை ஏற்படுத்தும். அதனால் தேவையான தடுப்பு நடவடிக்கைகளை நாமே தான் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே எந்தவிதமான கவலையும் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காலரா நோய் என்பது வேதாரண்யம் பகுதியில் மட்டும் அல்ல, மன்னார்குடி, கும்பகோணம் திருத்துறைப்பூண்டி போன்ற சில பகுதிகளிலும் காணப்படுகிறது. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலரா என்பது மனித சமுதாயத்திற்கே பொதுவாக வருகிற ஒரு நோய்தான். ஒவ்வொரு இடமாகச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காலரா நோய் நீண்ட நெடுநாட்களாக வராமல் இருந்தது. இப்போது திடீரென்று வருவதற்கான காரணம் என்ன? இது நீர்நிலை தேக்கங்களின் வழியாக வருகிறதா? அல்லது மாண்புமிகு உறுப்பினர் மாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல வயல்களில் உள்ள மீன்களைச் சாப்பிட்டதினால் வருகிறதா? அதை அரசாங்கம் ஆராய்ந்ததா? இனிமேல் அப்படி வராமல் தடுக்க எடுத்த நடவடிக்கைகள் என்ன? ஏனென்றால் காலரா என்றாலே, மக்கள் பயந்து போய்விடுகிறார்கள். சாதாரண வாந்திபேதி என்றாலும் கூட, இரண்டையும் ஒன்றாக பார்க்கும்போது, அது காலராதான் என்று முடிவு கட்டி பயந்து அதிலேயே செத்தும் விடுகிறார்கள். சாதாரண தண்ணீர் பாம்பு கடித்தால்கூட, நல்ல பாம்புதான் கடித்துவிட்டது என்று நினைத்துக் கொண்டு பயத்திலேயே செத்துபோகிறானே, அது போல பயந்தே செத்துவிடுகிறார்களே ஆகவே இனிமேல் அது வராமல் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் எவ்வளவு மிரட்டினாலும் அந்த அளவு மக்கள் பயந்து விட மாட்டார்கள். ஆகையினால் அதைப்பற்றிக் கவலை இல்லை. மன்னார்குடி பகுதியில் காலரா நோய் என்பது போலச் சொன்னார். அங்கே எல்லாம் கிடையவே கிடையாது. நாமாகவே ஒரு கற்பனை உலகத்தில் இருக்க வேண்டாம், ஏனென்றால் வேதராண்யம் பகுதியிலே கூட காலரா கிடையாது. (Acute Castro Enteritis) எனப்படும் வாந்தி பேதி என்னும் நோய்தான் அது. சாதாரணமாக சுகாதாரமற்ற முறையில் இரண்டு மூன்று நாட்கள் சமைத்து வைத்த உணவை அப்படியே வைத்துக்கொண்டிருந்தால் இத்தகைய நோய் ஏற்படுகிறது. அந்தப்பகுதியில் தேவையான நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்தாகிவிட்டது. ஆகையினால் எந்தவிதமான பயத்திற்கும் இடம் ஏற்படாது என்று கூறிக்கொள்கிறேன்.

*திரு. கோ. உத்தி பதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் என்று இங்கு குறிப்பிடப்பெற்றிருந்தாலும், காலரா என்பது கிராமப்புறங்களில் பரவலாகவே தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. அங்கேயெல்லாம் தண்ணீர் சுகாதாரமான முறையிலே இல்லை. இன்னும் பல காரணங்கள் இருக்கின்றன. இன்றைக்கு திருத்துறைப்பூண்டி மருத்துவமனையில், வாந்தி வயத்துப்போக்கு நோயினால் சேர்க்கப்பட்டிருப்பவர்களுக்கு படுப்பதற்கு இடம் இல்லை.

[முற்பகல் 10-20]

அப்படி ஒரு நெருக்கடியான சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் போக்குவதற்கு கிராமங்களுக்கு சுகாதார அதிகாரிகளை அனுப்பி, ஒவ்வொரு மாதமும் இப்படிப்பட்ட சுகாதாரக்கேடுகள் வராமல் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? மேலும் இப்போது இரண்டு நாட்களுக்கு முன்பாக நான் ஊருக்கு சென்றிருந்தேன். அங்கு பெரும்பாலான இடங்களில் அம்மை வார்த்துக்கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் வெய்யில் அதிகமாக இருக்கிறது. இந்நோயும் பரவந் தொடங்கியிருக்கிறது. இதையும் தடுப்பதற்கான துரித நடதடிக்கைகளை எடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய கருத்து சில பகுதிகளில் என்டெமிக் என்று சொல்லக்கூடிய அந்தப்பகுதிகளில்தான் எப்போதும் இந்த வியாதி வந்துகொண்டிருக்கும் என்று சொல்வார்கள். கிழக்கு தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஆங்காங்கே ஒன்றிரண்டு இடங்களில் நோய் வந்திருக்கிறதுண்டு. ஆனால் காலரா கிடையாது. பெரும்பாலான கேஸ்கள்



வாந்தி பேதி, குழந்தைகளுக்கு நிறைய வரும். அதைத் தடுப்பதற்கான முறைகளை எடுத்துவருகிறோம். டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீஸருக்கு ஆணையிட்டிருக்கிறோம். என்டமிக்காக இருக்கக் கூடிய அந்த பகுதிகளில் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். கிழக்கு தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தீவிர கவனம் செலுத்திவருகிறார்கள். அம்மை நோய் கிடையாது. அதாவது ஸ்மால்பாக்ஸ் கிடையாது சிக்கன்பாக்ஸ் வரலாம், அது பெப்ரவரி, மார்ச் மாதங்களில் சாதாரணமாக வரும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போதுதான் தகவல் கொடுத்திருக்கிறார்கள். இந்த கவன ஈர்ப்பையொட்டியதாக இது இல்லை என்றாலும் அந்தக் கருத்தையும் பரிசீலனை செய்து ஆக்கதை செய்யலாம்.

5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

THIRU VEDASENDUR V.P. BALASUBRAMANIAM: Sir, I present the first report of the Committee on Delegated Legislation.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

திரு. கி. சட்டநாத கரையாளர்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது (ஏழாவது சட்டமன்ற பேரவை) அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) 1981-82 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்,—ஆ. இ.

MR. SPEAKER: I have recived the following message from the Governor of Tamil Nadu:

In pursuance of Article 203 (3) of the Constitution of India, I, Sadiq Ali, Governor of Tamil Nadu, herby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1981-82.

6. வரவு-செலவுத் திட்டம் 1981-82—வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 95,93,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, ''ஊராட்சிகளில் குடி தண்ணீர் மேநீர் தேக்க தொட்டிகளையும் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகளையும் பராமரிக்கும் பொறுப்பை, ஊராட்சிகளிடம் இருந்ததை குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைத்துள்ளதை மாற்றி பழைய முறைப்படி ஊராட்சித்களிடம் ஒப்படைக்க வேண்டுமெனக் கோரி விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 95,93,67,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. என். எஸ். வ. சித்தன்: தலைவரவர்களே, ''திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தை 1981–82 ஆம் ஆண்டிலேயே தன்னிறைவுத் திட்டத்தில் சேர்ப்பதுபற்றி விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண்—28 சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்க பெறுகின்ற ரூ. 95,93,67,000 இல் ரூ. 100 குறைக் வேண்டும்.''

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவரவர்களே, ''குடியாத்தம் நகர மக்களுக்கு குடிநீர் வழங்க ஜெனரேட்டர் பொருத்துவதற்கு நிதி ஒதுக்காதது குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 95,93,67,000 இல் ரூ. 100 குறைக் வேண்டும்.''

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, ''இளையான்குடி யூனியன் போன்ற இடங்களில் நீண்ட நாட்களாக 25 முதல் 30 லட்சம் ரூபாய் இருப்பு இருந்தும் சரியானபடி திட்டமிட்டு சாலைகளும் பாலங்களும் இணைப்புச் சாலைகளும் கட்டாமல்



உதாசீனம் செய்திருப்பது பற்றி விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 95,93,67,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் .''

திரு. பொ. விஜயராகவன்: தலைவரவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கருங்கல் கப்பியறை ஆகிய பேரூராட்சிகளுக்கும், பாலூர் திப்பிரமலை ஆகிய ஊராட்சிகளுக்குமாகச் சேர்ந்த மொத்தமான குடிநீர் வழங்கு திட்டம் இன்னும் செயல்படுத்தப்படாமல் அரசிடமே நிலுவையாக இருப்பது குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 95,93,67,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண் 39 சாலைகளும் பாலங்களும்,

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 39 சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 58,01,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''

திரு. ந. சிவஞானம்: தலைவர் அவர்களே, ''தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஒன்றியத்திலுள்ள ஊரணி புரத்திலிருந்து அண்ணாபுரம் வரை 12 கி. மீ. தூரம் வரை கல்லணை கால்வாய் இடது கரையில் '' கிராம சாலைகள் '' திட்டத்தின்கீழ் எடுத்து வேலை செய்வதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 58,01,22000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ''உலகமெங்கிலுமிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்லும் உல்லாச ஸ்தலமான கன்னியாகுமரியில் மக்களுடைய போக்குவரத்துக்கு பயன்படும் வகையில் கடற்கரையிலிருந்து விவேகானந்

தர் மண்டபத்துக்கு கடல் வழியாக செல்ல ஒரு பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம்'' பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 58,01,22,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. மு. அப்பாதுரை: தலைவர் அவர்களே, ''கயத்தாறு ஒன்றியம் சிதம்பரம்பட்டி ஓடையில் கட்டப்பட்டுள்ள பாலத்தைத் திருப்பிக் கட்டுவதைப் பற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 58,01,22,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொ. விஜயராகவன்: தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குழித்துறை ஆற்றின் குறுக்காக கணபதியான் கடவு என்னுமிடத்தில் பாலம் அமைக்காதது குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 58,01,22,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்.''

(இ) கோரிக்கை எண். 52—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 52.—சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,95,08,000 ரூபாய்க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, ''கொள்கையைப் பற்றி விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண் 52—சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 7,95,08,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்''.



திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, ''நிலவரி துறை கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 52—சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,95,08,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்.''

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, ''குமரி மாவட்டத்தில் உணவுக்காக வேலைத் திட்டத்தில் பணி புரிபவர்களுக்குப் போதுமான சம்பளம் கொடுக்காததால், மாநில சர்க்கார் சம்பளத்தையோ, அரிசியையோ அதிகப்படுத்தாதது குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 52—சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 7,95,08,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்.''

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, '' பெருந்துறை வட்டம், கருமாண்டி—செல்லிப்பாளையம் பேரூராட்சிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவது சம்பந்தமாக விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 52—சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 7,95,08,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொ. விஜயராகவன்: தலைவர் அவர்களே, ''கொள்கையைப் பற்றி விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண் 52—சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 7,95,08,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையில் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகள் 28, 39, 52 பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் * அவை முன்னாலே வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் நான் படித்ததாக ஏற்றுக் கொண்டு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேலான யோசனைகளையெல்லாம் தெரிவித்ததற்குப் பின்னால், அதற்கு பதில் சொல்கிறேன்.

* 114—246 .... பக்கங்களில் இணைப்புகள் II, III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கைகளான சமுதாய வளர்ச்சி, நகர நிர்வாகம் என்ற தலைப்பிலே பேசுகின்ற ஒரு நல்வாய்ப்பை கொடுத்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஊர்ப்புற முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு அரசு பல முன்னோடித் திட்டங்களை நிறைவேற்றி வருவதாகவும், கிராமப் புறங்களிலே வறுமையில் வாழ்கின்ற கிராமப்புற மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும், அவர்களுடைய வாழ்வை மேம்படுத்துவதிலும் அரசு கவனம் செலுத்தி வருவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டம், மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகியவை கிராமப்புற பொருளாதாரத்தை வெகு விரைவிலே உயர்த்தி, பெரிதும் துணை புரிந்து, வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் நலனை உயர்த்துவதிலும், நலிந்த பிரிவினருக்கு நலம் பல பெறுவதற்கும், அதிகம் கவனம் எடுத்துக் கொள்ளப்படுவதாகவும், கிராமப்புறங்களில் தேவையான வசதிகள் செய்யப்பட்டு வருவதாகவும் சொல்லப்படுவதுடன், இன்னும் அதிகமாக செய்ய வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை

சென்னையைப் பொறுத்தமட்டில், சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில், இன்றைய தினம் 12 புற நகரங்கள் சென்னையுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைய தினம் சென்னை மாநகராட்சியானது தனி அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 1973-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்ட பிறகு, இதுவரையிலே 5 தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் எல்லாம் இன்றைய தினம் சென்னை நகரத்தை அபிவிருத்தி செய்வதில், அழகுபடுத்துவதில் நடவடிக்கை எடுத்தார்களா என்றால், நிச்சயமாக இல்லை என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10–30)

1973-ஆம் ஆண்டு சென்னை மாநகர உறுப்பினர்கள், பேயர்கள் இருந்த காலத்தில் கட்டப்பட்ட பள்ளிக் கூடங்கள், சமுதாய நலக்கூடங்கள், அமைத்துக் கொடுக்கப்பட்ட விளக்கு வசதிகள் ஆகிய அனைத்தும் அப்படியே இருக்கிறதே தவிர, தனி அதிகாரிகளால் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலில் கலைக்கப்பட்ட நேரத்தில் சென்னை மாநகராட்சியின் தனி அதிகாரியாக அன்றைய தினம் 1973-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ஆம் நாளில் திரு. அந்தோணி, ஐ.ஏ.எஸ் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் 1976-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29-ஆம் நாள் வரை தனி அதிகாரியாக இருந்தார். அவர்கள் இருந்த காலத்தில் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு அதிக அக்கறை காட்டினாரே தவிர, பள்ளிக்கூடங்கள்,



விளையாட்டு திடல்கள், பூங்காக்கள் ஆகியவற்றை அதிகமாக்க வேண்டுமென்ற எண்ணம் அவரிடத்திலே இல்லை. அவருடைய காலத்தில் 1973-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியின் வருமானம் 16 கோடியாக இருந்தது, 1975–76-ஆம் ஆண்டில் அதனுடைய வருமானம் 21 கோடியே 86 இலட்சத்து, 94 ஆயிரத்து, 700 ஆக அதிகமாக்கப்பட்டது. இந்த உடனடியான உயர்வு எப்படி ஏற்பட்டது என்றால் வீட்டு வரியை தனி அதிகாரிகள் உயர்த்தி இருக்கிறார்கள். அதன் காரணமாக வீட்டுச் சொந்தக்காரர்கள் வீட்டு வரியை அதிகமாக்கப்பட்டதை குறைக்க வேண்டுமென்று கேட்டு பல முறையீடுகளை மாநகராட்சியிடமும், அமைச்சர்களிடமும் செய்தார்கள். அவைகள் நியாயமாக கவனிக்கப்படவில்லை ; இன்னும் அவைகள் தீர்க்கப்படாமல் இருந்துகொண்டிருக்கின்றன.

அன்றைய தினம் நகராட்சி மன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் சென்னை மாநகராட்சிக்கு பட்ஜெட் போடுகின்ற காலத்தில் அவர்கள் குடிசை வாழ் மக்களுக்கு தனியாக பணம் ஒதுக்குவார்கள். நல்ல முறையில் அந்தப் பணத்தை செலவு செய்ய வேண்டுமென்ற எண்ணத்திலே உறுப்பினர்கள் போட்டிப் போட்டுக் கொண்டு குடிசை வாழ் மக்களுக்கு, நடுத்தர மக்கள் வாழ்கின்ற இடங்களுக்கெல்லாம் பாதைகளை அமைத்து விளக்கு வசதிகளை அமைத்துக் கொடுப்பார்கள். அவர்கள் இல்லாததன் குறையை இன்று மக்கள் நன்றாக உணர்கின்ற தன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது சென்னை மாநகரத்தில் குடிநீர் வழங்கல் கழிவு நீர் அகற்றும் வாரியம் தனியாக அமைக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் மக்களுக்கு குடிநீர் சரியாகக் கிடைப்பதில்லை. கழிவு நீர் அகற்றப்படுவதில்லை. யாரிடத்திலே சென்று சொல்வது என்று மக்கள் திண்டாடுகிறார்கள். அந்த வாரியம் எங்கு அமைக்கப்பட்டிருக்கிறதென்று எங்களுக்கே தெரியாமல் இருந்து வருகிறது. அன்றைய தினம் குடிநீர் வாரியமும், வடிகால் வாரியமும் சேர்ந்து மக்களின் குறைபாடுகள் நல்ல முறையில் தீர்க்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, தனி அதிகாரிகள் வந்தவுடனே அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் ? அன்றைய தினம் மாநகராட்சி கலைக்கப்பட்ட நேரத்திலே உறுப்பினராக இருந்தவர்கள் தவறு செய்துவிட்டார்கள் என்பதை அடிப்படையாக வைத்து அன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எல்லா அரசியல் கட்சிகளைப் பற்றியும் தவறு செய்துவிட்டார்கள் என்று மக்கள் எண்ணுகிறார்கள் என்ற முறையிலே கலைக்கப்பட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு கலைத்து தனி அதிகாரியை நியமித்தார்கள் அப்போது ஒரு டிவிஷனுக்கு ஒரு ஓவர்சியர் இருந்தார், ஒரு சர்க்கிள் எஞ்சினியர் இருந்தார், எக்சிகியூடிவ் எஞ்சினியர் இருந்தார். மக்கள்

[திரு. சு. பாலன்] [1981 மார்ச் 31

குறைகளைத் தீர்ப்பதற்காகவும், தேவைகளைப் பூர்த்தி செய்
வதற்காகவும் அவர்களை அணுகி காரியங்களை செய்யக்கூடிய
நிலைமை இருந்தது. ஆனால் இப்போது தனி அதிகாரிகள்
ஏற்படுத்தியதற்குப் பிறகு அவர்கள் நம்பிக்கையற்றவர்கள் என்ற
அடிப்படையிலேயும், அவர்கள் தவறு செய்வார்கள் என்ற
அடிப்படையிலேயும் அரசாங்க அதிகாரிகளை அங்கே நியமித்
திருக்கிறார்கள். ஒரு ரோடு போடப்பட்டால் பல அதிகாரிகள்
வந்து இன்ஸ்பெக்ஷன் செய்து ரோடுகள் ஒழுங்காகப் போடப்
பட்டிருக்கின்றனவா என்று பார்க்கக்கூடிய நிலைமை இருப்பதால்
ஏற்கெனவே அங்கே வேலை செய்து கொண்டிருக்கின்ற அந்த அதி
காரிகள் தங்களை நம்பவில்லையே என்ற காரணத்தால் அவர்
கள் மனதெல்லாம் எவ்வளவு புண்பட்டுப் போயிருக்கிறார்கள்
என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்
கிறேன். இந்த நிலை ஏன் ஏற்படவேண்டும் என்று கேட்க
விரும்புகிறேன்.

மாநகராட்சியினுடைய நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால்,
1981–82 ஆம் ஆண்டு 23.69 கோடி ரூபாய் எதிர்பார்க்கப்படுவ
தாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. வரிகள் மூலமாக வருமானம்
வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால், சொத்துவரி
பல ஆண்டுகளாக மாற்றியமைக்கப்படாமல் இருந்துகொண்டு
இருக்கிறது. தனி அதிகாரிகளை ஏற்படுத்தியதற்குப் பிறகு
மக்களிடமிருந்து பெறவேண்டிய வரியை உயர்த்தியதன் கார
ணத்தினால் மக்கள் அதிகமான சொத்து வரியைக் கட்ட முடி
யாது என்ற அச்சத்தின் காரணமாகத்தான் இப்படிப்பட்ட
நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மேலும் வரியை மக்கள் கட்
டாத நிலைமை இருக்கிறது. 1976 ஆம் ஆண்டு முதல் இதுவரை
யில் வரியை உயர்த்தியதின் காரணமாக அவர்கள் குழுவுக்கு
மனுச்செய்தாலும்கூட முடிவு செய்யப்படாத காரணத்தால்
பழைய வரியைச் செலுத்துவதா அல்லது புதிய வரியைச்
செலுத்துவதா என்று எண்ணிக்கொண்டு கட்டாமல் இருக்கி
கிறார்கள். எப்படியாவது மாநகராட்சிக்குப் பணம் வரவேண்
டும் என்ற அடிப்படையிலே பழைய வரியே வாங்கிக்கொண்டு
வருகிற காரணத்தினால் புதிய வரி அப்படியே இருப்பதாகச்
சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட குறைகளை எல்லாம் உட
னடியாக நீக்க வேண்டுமென்றால் சென்னை மாநகராட்சிக்கு
ஒரு நல்ல குழுவை அமைத்து இதிலே உள்ள நிலைமைகளைத்
தீர்க்கவேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன். மாநகராட்
சிக்கு வரவேண்டிய தொழில் வரி, கம்பெனிகள் செலுத்தும் வரி,
விளம்பர வரி, வியாபார வரி எல்லாம் வசூலிக்கப்படுவதிலே
காலதாமதம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், மாநகராட்சியாலே
கணிசமான பள்ளிகள், 25 நடுநிலைப்பள்ளிகளும், 9 மேல்நிலைப்
பள்ளிகளும், 320 ஆரம்பப் பள்ளிகளும் நடத்தப்படுவதாகச்
சொல்கிறார்கள். ஆனால், 1977 ஆம் ஆண்டுக்கு முன்னாலே



1981 மார்ச் 31] [திரு. சு. பாலன்]

இருப்பவைகள்தான் அவைகள். பொறுப்பிலே இருக்கின்ற
அதிகாரிகள் புதிய பள்ளிக்கூடங்களை, உயர்நிலைப்பள்ளிகளை
ஏற்படுத்தினார்களா என்றால் நிச்சயமாக இல்லை என்பதைத்
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[மணி 10-40]

மாநகராட்சி உறுப்பினர்கள் இருக்கின்றபொழுது தங்களு
டைய வட்டத்திற்கு உயர்நிலைப்பள்ளி வேண்டும், நடுநிலைப்
பள்ளி வேண்டும் என்றெல்லாம் அன்றைய தினம் வாதாடி,
பணத்தைப் பெற்று ஒவ்வொரு வட்டத்திலும் பள்ளிகள் உண்
டாகின்ற நிலைமை இருந்தது. ஆனால் இன்றைய தினம் அதி
காரிகள் அதைத் தேக்கி வைத்திருக்கிறார்கள் என்பதைச்
சொல்ல விரும்புகிறேன்.

பள்ளிகளிலே படிக்கும் மாணவர்களைப் பற்றிய எண்ணிக்
கையைச் சொல்லும்பொழுது ஏறத்தாழ 2,12,000 பேர் நகர
சபை பள்ளிகளிலே படிப்பதாகச் சொல்கிறார்கள். நகரசபை
பள்ளிகளிலே படிக்கின்ற ஏழை எளிய பிள்ளைகள் பகல் உண
வுக்காக ஏங்கித் தவிக்கிறார்கள். 2,12,000 பிள்ளைகள் படிக்
கின்ற நிலைமை இருக்கும்பொழுது 60,000 பேர்களுக்குத்தான்
பகல் உணவு கொடுப்பதாகச் சொல்கிறார்கள். இது போதுமா
என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று இந்த அவையை
நான் கேட்டுக்கொள்கிறேன். 60,000 என்பதை உயர்த்தி இன்
னும் அதிக எண்ணிக்கையில் ஏழை எளிய பிள்ளைகளுக்குப் பகல்
உணவைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

314 பள்ளிகளுக்குக் கட்டடங்கள் இருப்பதாகச் சொல்
கிறார்கள். ஆனால் அவை எல்லாம் சரியான முறையில்
பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன. வெள்ளையடித்து, சுத்த
மாக வைத்து கொள்ளுகின்ற நிலைமைகள் இல்லாமல் இருக்
கிறது என்ற குறை இருக்கிறது. அந்தக் குறைகளைப் போக்க
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நகரசபை ஆண்டறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது ; நிர்
வாக மற்றும் கட்டடச் செலவுகள் உட்பட கல்வித் துறைக்கு
நடப்பு ஆண்டில் ரூ. 7 கோடியே 34 இலட்சமும், 1981–82 ஆம்
ஆண்டில் ரூ. 7 கோடியே 93 இலட்சமும் செலவாகுமென்று
எதிர்பார்க்கப்படுகின்றது. 314 பள்ளிக் கட்டடங்களுக்
காகும் பராமரிப்புச் செலவும் மற்றும் மாணவர்கள், ஆசிரி
யர்கள் ஆகியவர்களுக்கு தேவைப்படும் பெஞ்ச், மேசை,
நாற்காலிகளுக்காகும் செலவினங்களும் இத்தொகையில்
அடங்கும். மாநகராட்சி அமைப்பு விதிகளின்படி உயர்நிலைப்

பள்ளிகளை நடத்தும் பொறுப்பு மாநகராட்சியைச் சார்ந்த தல்ல என்னும் உண்மையை இவ்வமயம் தெரிவித்தல் பொருத்த மானதாக இருக்கும். எனினும் சில சூழ்நிலையின் காரணமாக உயர்நிலைப் பள்ளிகளையும் மாநகராட்சி நடத்தும் கட்டாயத் தில் உள்ளது. இதன் மூலம் மாநகராட்சிக்கு அதிக செலவே தவிர வருவாய் எதுவுமில்லை. (மணியடிக்கப்பட்டது) நான்தான் ஆரம்பித்து வைத்துப் பேசுகிறேன்; இனிஷியேட் செய்து பேசுகிறேன். எனக்கு இன்னும் நேரம் கொடுக்க வேண்டும்.

அரசினரும் இச்செலவை முழுமையாக ஈடு செய்யவில்லை. அரசினரின் கொள்கைப்படி மூன்றில் இரண்டு பங்கு சம்பள செலவினை மானியமாக அளித்து வருகின்றது. கல்விக்காக மட்டும் மாநகராட்சி ஆண்டுதோறும் ரூ. 7·5 கோடி செலவிடு கிறது. அதே நேரத்தில் சொத்துவரியில் 4 முதல் 5 சதவீதம் தான் கல்விப்பணிக்காக வசூல் செய்யப்படுகின்றதென்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு மாநகராட்சியின் வரவு-செலவு திட்டம் குறித்து விளக்க உரையில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, மாநகராட்சி உயர்நிலைப்பள்ளிகளுக்கு ஆகும் செலவுகளை இந்த அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மதுரையில் வீடுகளுக்கு மின்சாரம் அளிக்கும் பொறுப்பு மாநகராட்சிக்கு இருக்கிறது. ஆனால் சென்னையில் அப்படிப் பட்ட ஒரு நிலை இல்லை. மதுரை மாநகராட்சிக்கு ஒரு நீதி, சென்னை மாநகராட்சிக்கு ஒரு நீதியா? அவ்வாறு இல்லாமல், சென்னையிலும் வீடுகளுக்கு மின்சாரம் அளிக்கின்ற பொறுப்பை மாநகராட்சிக்குக் கொடுத்தால் அதற்கு அதிக வருவாய் கிடைக்கும் என்று கூறிக்கொண்டு, இத்தகைய அரிய சந்தர்ப்பத்தை எனக்கு அளித்த துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் சமுதாய நல வளர்ச்சி மற்றும் சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கான வரவு-செலவுத் திட்ட மானியக் கோரிக்கைகளின் கீழ் பேசு வதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்காக முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் நம்முடைய ஊரக வளர்ச்சித் துறையின் அமைச்சரவர்கள் இங்கே சாலை மேம் பாட்டுத் திட்டத்திற்காக 58,01,22,000 ரூபாயும், சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவுக்காக சுமார் 8 கோடி ரூபாயும், சமுதாய ஊரக வளர்ச்சிக்காக ஏறத்தாழ 95 கோடி ரூபாய்க்கும் திட்டம் தீட்டி சபை முன் வைத்திருக்கிறார்கள். கடந்த மூன்றாண்டு காலமாக தமிழகத்தின் கிராமங்கள் எந்த அளவிற்கு வளர்ந்துள்ளன என்பதை எண்ணிப்பார்த்தால் பேரறிஞர் அண்ணா அவர்கள் கனவு கண்ட கிராம வளர்ச்சியும்,



கிராம மேம்பாட்டுத் திட்டங்களும் எந்த அளவிற்குப் புரட்சி தலைவரவர்களின் ஆட்சியிலே சீரோடும், சிறப்போடும் நடை பெறுகின்றன என்பதை எண்ணிப்பார்த்து நான் மட்டுமல்ல, கிராமப் பகுதி மக்களும் இன்றைய தினம் மிகுந்த மகிழ்ச்சி யோடு இருக்கிறார்கள்.

ஒரு புறத்திலே வறட்சி நிலை ஏற்பட்டாலும், கடந்த மூன்றாண்டுக் காலத்தில் தமிழகத்தின் கிராமப்புறங்களுக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் தரப்பட்டு, எந்த அளவிற்கு அங்குள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு தமிழக அரசு திட்டங்களைத் தீட்டுவதன் மூலம் முனைந்து பாடுபட்டு அவர்கள் வாழ்க்கை யிலே எழுச்சிமிக்க நாட்களை உருவாக்கியிருக்கிறது என்பதை நான் வெறும் பெருமைக்காக மட்டும் இந்த நேரத்தில் கூறிக் கொள்ளவில்லை. ஆனால் நாட்டிலேயிருக்கிற நிலைமையை எடுத்துக் கூற வேண்டியது என்னுடைய கடமை என்று கருது கிறேன். இன்னும் சொல்லப் போனால், இந்த ஆண்டு தன் னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்த அரசு 69 ஊராட்சி ஒன்றியங் களை எடுத்துக்கொண்டு அந்த ஊராட்சி ஒன்றியங்களிலே பணி யாற்றுகின்ற முறையைப் பார்க்கின்றபொழுது, எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள், இன்றையதினம் எங்களுக்கெல்லாம் அந்தத் திட்டங்கள் வேண்டும், அந்தத் திட்டங்களின் மூலமாகத் தங்களுடைய பகுதி வளம் பெற வேண்டுமென்பதற்காக, இந்த மன்றத்திலே கோரிக்கைகள் வைக்கிற காட்சியைப் பார்க்கிற பொழுது, இந்தத் திட்டத்தின் மூலமாகவும், தமிழகத்தில் அதைச் செயல்படுத்துகிற செயல்முறை மூலமாகவும், அது எந்த அளவுக்கு மக்களைக் கவர்ந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இன்னும் சொல்லப்போனால், இந்தத் தன்னிறைவுத் திட்டத் தின்கீழ் 150 ஒன்றியங்களை, 1981–82-வது ஆண்டில் எடுத்துக் கொள்ளவிருக்கிறார்கள். விடுபட்ட சில ஒன்றியங்களிலே எல்லாம் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று இன்றையதினம் கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் எண்ணிப்பார்க்கும்போது, தமிழகத்திலே இருக்கிற கிராமங்கள் எந்த அளவு வளர்ந்து கொண்டிருக்கின்றன அதற்கான திட்டங்கள் எந்த அளவு முறையாக தீட்டப்படுகின்றன அந்தத் திட்டங்களை நிறைவேற்ற இன்றையதினம் எந்த அளவு அரசாங்கமும் அதிகாரிகளும் இணைந்து செயல்படுகிறார்கள் என்பதைத் தமிழக மக்கள் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள் என்பதன் அறிகுறி, இன்றையதினம் அந்தத் திட்டத்திற்கு சட்ட மன்றத்திலே மட்டும் அல்ல, கிராமப் புறமானாலும், நகர்ப்புற மானலும் எங்கு சென்றாலும் நல்ல வரவேற்பு இருக்கிறது.

[திரு. கே. சௌந்திரராசன்] [1981 மார்ச் 31

அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிற அதிகாரிகள், தங்களுடைய உள்ளத்தோடு ஒன்றி, அத்திட்டம் செயல்படப் பாடுபடுகிறார்கள் என்பதை அறியும்போது அவர்களையெல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகிற இடங்களுக்கு மட்டுமல்லாது, இந்தத் திட்டங்கள் இல்லாத இடங்களுக்குக்கூட, மக்கள் அழைக்கும்போது ஓடோடிச் சென்று, அங்கே மக்களுடைய பிரச்னைகளைத் தீர்க்கின்ற அளவிலேயும், மக்களது கோரிக்கைகளை அணுகுகின்ற முறையிலேயும் மிகுந்த எழுச்சியையும், பொலிவையும் உருவாக்கியிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய ஆணையர்களாலே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமா என்பதை எண்ணிப் பார்க்கும்போது, முக்கியமான திட்டமாக, விரிவான திட்டமாக, மிகப்பெரிய திட்டமாக இருக்கிற நேரத்திலே, ஆணையர்கள் பல இடங்களிலே சங்கடப்படுகிறார்கள். அவர்களுக்கு உதவியாக, துணை ஆணையாளர்களை நியமிப்பதன் மூலமாக, அந்தத் திட்டத்தின் தரத்தை மேலும் உயர்த்த முடியும், செயல்படுத்த முடியும் என்று எண்ணும்போது, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு துணை ஆணையாளர்களை நியமிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஊரக வளர்ச்சித் துறையைப் பற்றி இன்னொரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊரக வளர்ச்சி என்று சொன்னாலும், நகராட்சி மன்றங்கள் என்று சொன்னாலும், அங்கிருக்கிற முக்கியமான பிரச்னை, குடிதண்ணீர் பிரச்னை. அதற்காக அமைக்கப்பட்டிருக்கிற குடிநீர் வடிகால் வாரியம் வேறு அமைச்சரோடு இணைக்கப்பட்டிருக்கிறது. ஊரக வளர்ச்சி அமைச்சர், ஊரகப் பகுதிகளுக்குச் செல்கிற நேரத்தில், அவர் முன்னால் தெரிவிக்கப்படுகிற முக்கியமான பிரச்னை குடிநீர் பிரச்னை. அந்தப் பிரச்னையை அணுகுகிற நேரத்தில், அவருக்கு பிரச்னைகள் உருவாகின்றன. ஆகவே, கிராமப்புறமாக இருந்தாலும், நகர்ப்புறமாக இருந்தாலும், குடிநீர்ப் பிரச்னையை விரைந்து தீர்க்க, திட்டங்களை விரைந்து செயல்படுத்த, அத்தக் குடிநீர் வடிகால் வாரியத்தை ஊரக வளர்ச்சி அமைச்சர் பொறுப்பில் விட்டால், அது உறுதுணையாக அமையும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதைப் போல், டவுன் பிளானிங் ஹவுசிங், இவைகள் எல்லாம், ஊரக வளர்ச்சியோடு, நகர வளர்ச்சியோடு, இணைந்தவைகள் என்ற காரணத்தால், அவைகளையும் அத்தோடு இணைப்பது முறை- என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



981 மார்ச் 31] [திரு. கே. சௌந்திரராசன்]

அதே நேரத்தில், இந்தத் திட்டங்கள் எல்லாம், கால வரையறைக்குட்பட்டு நிறைவேற்றுகிற திட்டங்களாக இருக்கிற காரணத்தால், அந்தத் திட்டங்கள் மிக வேகமாவும், எழுச்சியோடும், பொலிவோடும் நிறைவேறும் திட்டங்களாக இருக்கிற காரணத்தால், அதனை நிறைவேற்றும் அதிகாரிகளை, திறமை மிக்கவர்களாக, ஆற்றல் மிக்கவர்களாக, உடனடியாக மக்களுடைய தேவைகளைப் புரிந்து செயல் படுகிறவர்களாக நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றையதினம் நாட்டிலே இருக்கிற தேவைகள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. அந்தத் தேவைகள் வளர, வளர, நம்முடைய மக்கள் தேவைகளுடைய அடிப்படையிலே, அவர்களுடைய தேவைகளைப் பொதுப் பிரச்னையாக்குகிற தன்மைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

[முற்பகல் 10-50]

இந்தியா விடுதலைப் பெற்று 34 ஆண்டுகள் ஆனாலும், இன்றையதினம் வரையிலும் பல்வேறு கிராமங்களில் சாலைப் போக்குவரத்து இல்லாத நிலை இருக்கின்றது. பல கிராமங் களுக்கு பேருந்து வசதி இல்லாத நிலை இருக்கின்றது. இன்றையதினம் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 10 கோடி ரூபாயை ஒதுக்கித் திட்டம் தீட்டி மேலும் பல கிராமங்களை இணைப்பதற்குத் திட்டம் தீட்டியிருப்பதை நான் வரவேற்க கடமைப் பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத் தினால் 4,819 கிலோ மீட்டர் நீளம் சாலைகள் புதிதாக உருவாக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதன் மூலம் 2,779 கிராமங்களுக்கு இணைப்பு கிடைக்க இருப்பதாலும், இந்த முயற்சிக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதே நேரத்தில் கிராமங்களிலே உள்ள பள்ளிக் கூடங்களில் சரியான சுகாதார வசதிகள் இல்லாத நிலை இருக்கின்றது. நாம் எவ்வளவுதான் வேகமாகத் திட்டங்களைத் தீட்டினாலும் போதிய அளவுக்கு அவைகள் கிராம மக்களுக்குப் பயன்படுவதில்லை. காரணம் கிராமப் புறங்களில் ஜனத்தொகையும், தேவைகளும் அதிகமாகிக் கொண்டிருக்கிற காரணத்தினால், ஒரு 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் 20 ஆண்டுகளுக்கு முன்னால் தீட்டப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம், ஒன்றியத்திற்கென்று சில குறிப்பிட்ட அளவுக்கு இருக்கின்றன. இவைகளை மாற்றி அமைப்பதற்கு புதிய சிந்தனையோடு பரிசீலிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து சாலை வசதிகளை எடுத்துக் கொள்கிறபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய திட்டங்களை உருவாக்கி அதற்காக 68 கோடி ரூபாய்களை ஒதுக்கி

திட்டங்களை உருவாக்கி இருக்கிறார்கள். ஆனால் ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த திட்டங்களைச் செயல்படுத்துகின்ற நேரத்தில் இருக்கின்ற கான்ட்ராக்டர்கள் கடந்த காலங்களில் இருந்து தொடர்ந்து வந்திருக்கின்ற காரணங்களினால், பல நேரங்களில் தவறுகள் உருவாக வாய்ப்பிருக்கின்றது. அதைப் பரிசீலித்து தரமான கான்ட்ராக்டர்களை தேர்வு செய்து இவைகளை செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நகராட்சிகளிலே நிதிநிலை பற்றக்குறை இருக்கின்றது. அந்த நகராட்சிகளை நடத்துவதற்கு வேண்டிய எஸ்டாபிளிஸ்மென்ட் செலவுகளைக் கூட அந்த நகராட்சி வருமானம் ஈட்டித்தர முடியாத நிலைமையில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

ஆனால் அப்படிபட்ட நகராட்சி மன்றங்களில் பல பெரிய பணக்காரர்கள் பல்வேறு தொழில்களை செய்வதன் மூலமாக இங்கே ஏராளமான பணத்தை சம்பாதித்து குவித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் நமது அரசு செய்யவேண்டிய முக்கிய பணி, இந்த பகுதியிலே இருக்கின்ற நகராட்சி மன்றங்களின் பகுதியிலே இருக்கின்ற திரைப்பட மாளிகைகளானாலும், அதைப்போலவே பேருந்துகளானாலும் அவைகளை நடத்துகின்ற உரிமைகளை அந்த நகராட்சி மன்றங்களுக்கு அளிப்பதன் மூலமாக, அந்த நகரம் சுய தேவை பூர்த்தி செய்து கொள்ளுகிற அளவுக்கு அதனுடைய நிதிநிலைமையை வளர்த்து அதன் மூலமாக நகரத்தினுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு அது வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து நகராட்சி மன்றத்தினுடைய எல்லைப் பகுதிகளில் நெடுஞ்சாலை அமைப்படுகிறபோது அந்த நகராட்சியும் அதற்கான நிதி நிலையில் பங்கு கொள்ளவேண்டும் என்று குறிப்பைத் தந்திருக்கிறார்கள். அது எந்தக்காலத்திலே போடப்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. இன்றையதினம் நகராட்சிகள் இருக்கிற நிலையிலே நகராட்சி மன்றத்திற்கு இந்தப் பளுவை வைப்பதன் மூலமாக அவைகள் செய்யவேண்டிய கன்சர்வேடிவ் போன்ற பணிகளையும், கழிப்பிடங்களை அகற்றுகின்ற பணிகளையும், கழிவறைகளை உருவாக்குகின்ற பணிகளையும், நகராட்சிக்குத் தேவையான சுகாதார பணிகளைச் செய்கின்ற பணிகள் அத்தனையும் இன்றையதினம் செய்ய முடியாத சூழ்நிலையில் அவர்களுக்கு அந்தப் பளுவை வைக்கவேண்டியதில்லை. அந்தப் பணத்தைக் கொண்டு நகரத்தின் சுகாதார வசதியைப் பெருக்குவதற்கு பயனுடையதாக செய்ய முடியும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட முயற்சிகளிலே இந்த அரசு



உடனடியாக இறங்கி அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற அந்தப் பளுவைக் குறைக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் கூற விரும்புவது, இன்றையதினம் என்னுடைய தொகுதியான திருச்சி நகரத்தில் உள்ள நகரமன்றம் மிகவும் க்ஷீண திசையில் இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அவர்களுடைய நிதிநிலைமை மோசமாக இருக்கின்றது. அதற்கு வேண்டிய சுகாதாரப் பணிகளை நிறைவேற்றுவதற்கு கூட தகுதி இல்லாத அளவுக்கு மிகுந்த அவல நிலையில் இருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு ஏற்றவகையிலே பணியாற்றுவதற்கும், அதனுடைய நிதிநிலைமையை திருத்தி அமைக்கின்ற முறையிலே திட்டங்களை தீட்டவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அங்கே பல பகுதிகளில் இன்றைக்குக் குடிநீர் இல்லாத நிலைஇருக்கிறது.

இன்றையதினம் வறட்சி இருக்கிற காரணத்தினால் தான் குடிநீர் இல்லை என்ற நிலமை கூட இல்லை. காவிரி நீர் கரைபுரண்டு போனபோதிலும், மழை விடாமல் பெய்தாலும் கூட, பல குடிசைப் பகுதிகளிலே இன்றையதினம் குடிநீர் கிடைப்பதற்கு வாய்ப்புகள் இல்லை. அவைகளை எல்லாம் முறையாக அரசு திட்டம் தீட்டி, அப்படிப்பட்ட குடிசைப் பகுதி மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழே இவைகளை எல்லாம் கொண்டு வருவதன் மூலமாக அங்கே தேவையான அளவுக்கு மக்களுடைய எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, குடிநீர் வழங்கும் திட்டத்தை உடனடியாக செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒருவேளை வறட்சி இருப்பதாலே நான் சொல்கிறேன் என்று யாரும் கருதவேண்டாம். வறட்சி இருந்தாலும் இல்லாவிட்டாலும், நான் முதலிலே குறிப்பிட்டபடி, வெள்ளம் போனாலும் அந்தக் குடிசை வாழ் மக்கள் சுத்தம் செய்யப்பட்ட குடிநீர் கிடைக்காத நிலையில் தான் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு உடனடியாக சுத்தம் செய்யப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட பகுதிகள் திருச்சியில் ஏராளமாக இருக்கின்றன. குழாயைப் பார்க்காத குடிசை வாழ் மக்கள் பலர் அங்கே இருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை அங்கே உடனடியாக நிறைவேற்ற அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி பகுதியில் ஏராளமான பீடி சுற்றும் தொழிலாளர்கள், கல் பட்டரைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சுகாதார வசதி இல்லை. மருத்துவ வசதி இல்லை. தேவையான சுகாதார வசதி இல்லாத காரணத்தால் டி. பி. போன்ற வியாதிகள் ஏற்படுகின்றன. நகராட்சி மன்றத்திற்கும்

[திரு. கே. சௌந்திரராசன்] [1981 மார்ச் 31

சுத்தம் செய்கிற வசதி போதுமான அளவிற்கு இல்லாத காரணத்தால் கழிவு நீர் சாலைகளில் செல்கிற நிலைமை இருக்கிறது. அதன் காரணமாகவும் நோய்கள் பரவுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக திருச்சி நகரத்திற்கு ஏற்ற அளவிற்கு மருத்துவ மனை வசதியும் இல்லை. இருக்கின்ற மருத்துவ மனைகளில் படுக்கை வசதிகளும் இல்லை. அங்கேயிருக்கிற ராஜாஜி டி.பி. சானடோரியத்தில் ஏராளமான கட்டிடங்கள் இருந்தும், அதிகமான அளவிற்கு ஆயிரம் படுக்கை வசதிகள் செய்ய இடம் இருந்தும் 100 படுக்கைகள் தான் உள்ளன. ஆகவே, இங்கே நகராட்சி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக அல்லது வேறு திட்டத்தின் மூலமாக அங்கே சுகாதார வசதி, மருத்துவ வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் கிராமப்புறங்களில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் மற்றும் உழைப்புக்கு உணவுத் திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் உள்ள மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம். இந்த நேரத்தில் நான் அரசின் கவனத்திற்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்களை என். சி.சி. பயில வேண்டுமென்றும், உடல் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நாம் வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். அதே நேரத்தில் அவர்களுக்கு நாம் தொழில் பயிற்சி அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தால், அதன் மூலம் அவர்கள் ஒரு தொழில் செய்து வாழ்க்கை நடத்துவதற்கு வழிகாட்டியதாக இருக்கும். அதன் காரணமாக அவர்கள் வாழ்வில் ஒளி பிறக்கும். ஆகவே, கிராமப்புறங்களில் இருக்கும் இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி அளிக்கும் திட்டத்தை அரசு கம்பல்சரியாக கொண்டு வருவதன் மூலம் அவர்களுடைய வாழ்வு முன்னேறும் என்பதோடு மட்டுமல்லாமல், அந்தப் பகுதியே முன்னேறுவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகளை— மாணிக்கக் கோரிக்கைகளை— வரவேற்று என் உரையை முடிக்கிறேன்.

*திரு. வெ. இராஜசேகரன்: பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, துணைத் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள், நகராட்சி நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாக கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து சில கருத்துக்களை கூற முன்வருகிறேன்.

உடல் ஊனமுற்றோர் ஆண்டாக அறிவிக்கப்பட்டு இருக்கின்ற இந்த ஆண்டில் அரசு பதவிகளிலும் அரசின் இலாக்காக்களிலும் வேலை வாய்ப்புகள் உடல் ஊனமுற்றோருக்கு என்று குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கிட அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். வயது வரம்பு வைத்திருக்கிற அரசு, உடல் ஊனமுற்றோர்களைப் பொறுத்த வரையில் உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிற வகையில்



1981 மார்ச் 31] [திரு. வெ. இராஜசேகரன்]

அந்த விதிமுறைகள் அவர்களுக்குப் பொருந்தாது என்கிற முறையில் சட்டத்தைத் திருத்த முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விதவைகளுக்கு உதவித் தொகை பெற வயது வரம்பு 45 என்று இருப்பதை 40 என்று குறைத்து இருப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. இப்படி வயது அடிப்படையில் அவர்களுக்கு உதவி செய்வதற்கு பதிலாக விதவைகள் என்று இருந்தாலே உதவி செய்ய அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே முதியோர் பென்ஷன் என்பது காமராஜர் காலத்தில் 1957-ல் ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகும். அன்றைக்கு அரசின் சார்பாக அதற்காக எவ்வளவு மானியம் ஒதுக்கப்பட்டதோ எந்த அளவிற்கு அந்தத் தொகை நிர்ணயிக்கப்பட்டதோ அதுவே இன்று வரைக்கும் இருந்து வருகிறது. ஆகவே, அந்தத் தொகையை ரூ. 75 என்று உயர்த்தி பென்ஷன் வழங்கும் திட்டத்தை அரசு அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11–00]

மத்திய அரசினுடைய தொலைபேசி இலாகாவிலே உடல் ஊனமுற்றவர்களுக்கு எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் ஒவ்வொருவருக்கும் போன் வசதி செய்து கொடுத்து இருக்கிறது. ஒரு தடவை பேசுவதற்கு 50 காசு வசூல் செய்து கொள்ளவும் அதில் 30 காசை அரசுக்கு செலுத்திவிட்டு மீதி 20 காசை அந்த உடல் ஊனமுற்றவர்கள் எடுத்துக்கொள்ள வசதி செய்திருக்கிறார்கள். அதன் மூலம் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை செப்பனிட்டுக்கொள்ள வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள வசதி செய்துகொடுத்திருக்கிறது மத்திய அரசு. காரணம் அவர்கள் மற்றவர்களைப் போல ஓடி ஆடி வேலை செய்ய முடியாது. ஆகவே அவர்கள் ஒரே இடத்தில் இருந்து முடிந்த வேலையை செய்து தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள தொலைபேசி இலாகாவிலே பல சட்டத் திட்டங்கள் இருந்தாலும் அவைகளை எல்லாம் தளர்த்தி அவர்களுக்கு இந்த வசதியை செய்துகொடுத்திருக்கிறார்கள்.

அதைப் போல, இன்றைக்கு தமிழக அரசு அறிவித்திருக்கிற மதுக் கடைகள் திறப்பு தமிழகம் எங்கும் 'லிக்கர் ஷாப்' திறக்கப்பட இருக்கிறது. அதற்கு பல்வேறு நிபந்தனைகள், சட்டத் திட்டங்கள் இருந்தாலும் இந்த உடல் ஊனமுற்றோர் ஆண்டில் உடல் ஊனமுற்றவர்களில் குறைந்தபட்சம் 25,000 பேர்களுக்காவது எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல்' சட்டத் திட்டங்களை தளர்த்தி லிக்கர் ஷாப் லைசென்ஸ் வழங்க அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரில் ஒரு தொகுதியாகிய டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர் தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் சென்னை மாநகராட்சி பற்றியும்

[திரு. வெ. இராஜசேகரன்]

மாநகராட்சி மக்கள் படுகின்ற துன்பங்களைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்னை மாநகரின் மக்கள் தொகை 10 ஆண்டுகளில் 50 சதவீதம் உயர்ந்துள்ளது. 1975-ல் 27,88,000 என்று இருந்தது. 1980-ல் 33,23,000 என்ற அளவுக்கு உயர்ந்து இன்றைய தினம் 1981-ல் சுமார் 42,76,000-க்கு உயர்ந்திருக்கிறது.

அதைப் போல சென்னை மாநகரின் குடிசைகளின் எண்ணிக்கை 10 ஆண்டுகளில் 100 சதவீதம் உயர்ந்திருக்கிறது. 1971—72-ல் 1202 ஸ்லம்ஸ் பகுதிகள் இருந்தன. ஆனால் 1981-ல் 1,428 ஸ்லம்ஸ் இருக்கின்றன. 1971-லே 7 இலட்சமாக இருந்த குடிசை வாழ் மக்கள் தொகை 1981-லே 12 இலட்சமாக உயர்ந்திருக்கிறது.

இந்த மக்கள் தொகை அடிப்படையில் வீடுகள் பல மாடிக் கட்டிடங்கள், பங்களாக்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் நகரில் நாள் தோறும் வந்துபோகிற 'ப்ளோட்டிங் பாப்புலேஷன்' ஒவ்வொரு நாளும் கூடிக்கொண்டே இருக்கிறது. முன்னால் 50 டிவிஷன்கள் இருந்த சென்னை மாநகராட்சியில் 75 டிவிஷன்கள் ஆகி 100 டிவிஷன்கள் ஆகி 125 டிவிஷன்கள் ஆகி இன்றைய தினம் 1981-ல் 12 கிராமங்களையும் மாநகராட்சியோடு சேர்த்து 150 டிவிஷன்களாக உயர்ந்திருக்கிறது.

சென்னை மாநகரின் பரப்பளவை எடுத்துக்கொண்டால், 120 டிவிஷன்களாக இருக்கும்போது 128.82 சதுர கிலோ மீட்டர். இன்றைக்கு 150 டிவிஷன்களாக உயர்த்தப்பட்ட பிறகு அதனுடைய பரப்பளவு 172.42 சதுர கிலோ மீட்டர் என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இந்த பரப்பளவிலே வாழக்கூடிய மக்களுக்கு மாநகராட்சி செய்து கொடுக்க வேண்டிய சாதாரண காரியங்கள் ஏராளமாக இருக்கின்றன; அத்தியாவசியமான தேவைகளும் இருக்கின்றன. தெரு விளக்குகள், குடிநீர், பாதாள சாக்கடைத் திட்டம், மழைத் தண்ணீர் வடிந்து செல்ல வசதி, சுகாதாரம், கல்வி, பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் என்று பல்வேறு வசதிகளை திட்டங்களை மாநகராட்சி சென்னை மாநகர மக்களுக்கு செய்து தரவேண்டியதிருக்கிறது. ஆனால் மாநகராட்சியின் நிதிநிலை என்னவென்றால் இப்படிப்பட்டக் காரியங்களுக்கு செலவிடக்கூடிய நிலையில், திட்டங்களை நிறைவேற்றக்கூடிய நிலையில் இல்லை.

1981—82 ஆம் ஆண்டு மாநகராட்சி வரவு செலவுத் திட்டத்தில் 23.69 கோடி ரூபாய் செலவில் காட்டியிருக்கிறார்கள்; வரவு 22.32 கோடி ரூபாய்; பற்றாக்குறை 1.37 கோடி ரூபாய்.

இந்த பட்ஜெட்டை வைத்துக் கொண்டு மேலே கூறிய காரியங்களில் எந்தக் காரியத்தையும் முறையாகச் செய்ய முடியாத சூழ்நிலையில் இந்த மாநகராட்சி விடப்பட்டிருக்கின்ற நிலைமை இருக்கின்றது. இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு



 [திரு. வெ. இராஜசேகரன்]

சுமார் 43 இலட்சம் மக்கள் வாழக் கூடிய இந்த நகரத்திற்கு என்ன நல்ல காரியங்களைச் செய்ய முடியும். இந்தியாவிலுள்ள மற்ற மாநகராட்சிகள் ஒரு தனி மனிதனுக்கு ஒதுக்கியிருக்கின்ற பணத்தோடு ஒப்பிடுகின்றபோது அது மிகவும் வேதனை தரக் கூடிய ஒன்றாக இருக்கின்றது. பம்பாய் மாநகராட்சி ஒரு தனி மனிதனுக்கு 124.46 காசு ஒதுக்கி இருக்கின்றது. கல்கத்தா மாநகராட்சி 102.42, பெங்களூர் மாநகராட்சி 90.44 காசு ஒதுக்கி இருக்கின்றது. ஆகவே சென்னை மாநகராட்சி தனி நபருக்கு ஒதுக்கி இருக்கின்ற தொகை மிகவும் 60.17 குறைவாக இருக்கின்றது. இந்த விகிதாச்சாரத்தை வைத்துக் கொண்டு பார்த்தால் சென்னை மாநகராட்சி ஒதுக்கி இருக்கின்ற பணத்தை வைத்து எப்படி சென்னை மாநகர மக்களுக்கு குடிக்க தண்ணீர் கொடுக்க முடியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சாக்கடைத் தண்ணீரை அடைப்புகள் இல்லாமல் எப்படி வெளியேற்றி சுகாதாரத்தைப் பாதுகாக்க முடியும்? பள்ளம் இல்லாத சாலைகளிலும், குப்பை இல்லாத ரோடுகளிலும், எப்போது நாம் நடப்பது? எரிகின்ற விளக்குகள் எத்தனை? எரியாத விளக்குகளை எந்த ஆண்டில் எரிய வைக்க முடியும்? ஒன்று மாநகராட்சியின் வருமானம் அதிகமாக்கப்பட வேண்டும். இல்லை என்றால் அரசாவது மாநகராட்சிக்கு உதவ வேண்டும். ஆனால் இருக்கின்ற நிலைமை என்னவென்றால் எல்லாப் பிரச்சினைகளுக்கும் அரசிடம் அனுமதி பெற வேண்டி இருக்கின்றது. பல அனுமதிகள் மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றன. பல அனுமதிகள் காலதாமதப்படுத்தப்படுகின்றன. இவை எல்லாவற்றுக்கும் அரசினுடைய அலுவலகங்களின் படிக்கட்டுகளில் காத்துக் கிடக்க வேண்டிய நிலைமையில் தனி அலுவலர்கள் இருக்கின்றனர். ஆகவே அனைத்து காரியங்களுக்கும் உங்களிடம் அனுமதி பெற வேண்டும் என்ற நிலையில் மக்களுடைய தொடர்புடைய அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களையும் சுயமாக இயங்கவிடாமல் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் மட்டும் மத்திய அரசிடம் அதிக அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன என்றும் அவை மாநிலங்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும் என்றும் பேசுகிறீர்கள். உரிமைகள் கேட்டு அனுப்பப்பட்டவை அனைத்தும் ஆமை வேகத்தில் நகர்கின்றன என்று சொல்கிறீர்கள். கோரிக்கைகள் அனுப்பப்பட்டும் கேளாக்காதினர்களாக இருக்கின்றார்கள் என்று சொல்கிறீர்கள்.

சென்னை மாநகராட்சியிலிருந்து குடிதண்ணீர் வழங்கல், சாலை பராமரிப்பு, கழிவுத் தண்ணீர் வெளியேற்றம், விளக்குகளை சரியாக எரிய வைத்தல், கேபின் பழுது பார்த்தல் போன்ற பணிகளுக்காக உங்களிடம் 20 கோடி ரூபாய் கேட்டால் நீங்கள் 5 கோடி மட்டும் ஒதுக்கி ஒரு குறிப்பிட்ட காரியங்களை மட்டும் செய்யவும் என்று சொல்லி அவர்களைக் கட்டுப்படுத்துகிறீர்கள். மதுரை மாநகராட்சியின் வீடுகளுக்கு மின்சாரக் கட்டணம் வசூலிக்கின்ற உரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதே போன்று சென்னை மாநகராட்சிக்கும் அப்படி மின்சாரக் கட்டணம் வசூலிக்கின்ற உரிமை

யைக் கொடுத்தால் அதன் மூலம் பல கோடி ரூபாய் வருமானம் அவர்களுக்குக் கிடைக்கும். ஆனால் அரசுதான் அந்தப் பணத்தை வசூலித்துக் கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல ரோடுகளிலே ஓடக்கூடிய ஆயிரக்கணக்கான வாகனங்களுக்கான வரிகளையும் நீங்களே வசூலிக்கிறீர்கள். அதைக்கூட சென்னை மாநகராட்சிக்குக் கொடுப்பதில்லை. ஆகவே அதிலே வரக்கூடிய இலட்சக் கணக்கான ரூபாயையும் நீங்களே வைத்துக் கொள்கிறீர்கள். ஆகவே மாநகராட்சி வருமானத்திற்காக வீட்டுச் சொந்தக் காரர்களிடத்திலே வரியினை அதிகப்படுத்தி வசூலிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. 23 கோடி ரூபாய் வருமானம் வருகின்ற பட்ஜெட்டில் இப்படிப்பட்ட வரியினைப் போடுவதன் மூலம் 14.50 கோடி ரூபாய் வீட்டு வரியின் மூலம் வருகின்ற வகையிலே ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். ஆகவால் வீட்டுச் சொந்தக்காரர்கள் உயர்கின்ற வரிக்கேற்ப வீட்டின் வாடகையை உயர்த்தி விடுகிறார்கள். வீட்டிலே குடியிருப்பவர்களின் தலையிலேதான் அந்த வரி உயர்வு விழுகின்ற நிலைமை ஏற்படுகின்றது. குடியிருப்பவர்களிடம் 3 மாதங்களுக்கு ஒரு முறை வீட்டுச் சொந்தக்காரர்கள் வீட்டின் வாடகையைக் கூட்டி விடுகிறார்கள். ஆகவே 100 ரூபாய்க்கு குடிபுகுந்த ஒருவர் இரண்டாண்டு காலத்திலே அந்த வீட்டுக்கு 400 ரூபாய்கூட கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது சென்னையில். இந்த மாதிரி வீடுகளிலே குடியிருப்பவர்கள் எல்லோருமே அரசு அலுவலகங்கள் போன்றவற்றிலே பணியாற்றுபவர்கள் தான். இவர்களுடைய தலையிலேதான். வீட்டு வரி உயர்த்தப்படுகின்ற போதெல்லாம் வீட்டின் சொந்தக்காரர்கள் வாடகையை உயர்த்துவதன் மூலம் அந்தப் பளுவினைப் போடுகிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சென்னை மாநகராட்சியில் போதிய நிதிநிலை இல்லாததால் அவர்களால் இவைகளில் கவனம் செலுத்த முடியவில்லை. நிதி வசதியைப் பெருக்கும் பொருட்டு பொதுமக்களிடமிருந்து கடன் பத்திரம் மூலம் பணம் பெறும் திட்டத்தை செயல்படுத்த உங்களிடம் அனுமதி கேட்கப்பட்டது அதன் மூலம் 400 இலட்சம் ரூபாய் கிடைக்கும். அந்தத் திட்டத்திற்கு அனுமதி தருவதில் நீங்கள் காலதாமதம் செய்கின்ற காரணத்தால் சென்னை மாநகராட்சியின் அதிகாரத்தை நீங்கள் மறைமுகமாகப் பிடுங்கிக் கொள்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11—10)

இதில் அதிக அதிகாரங்களை பகிர்ந்துக் கொடுக்கின்ற மனப்பான்மையை நீங்கள் செய்து காட்டுகிறீர்களா என கேட்க விரும்புகிறேன்.

சென்னை நகரம் 172 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ளது இதில் 43 இலட்சம் மக்கள் வாழக்கூடிய பல்லாயிரக்கணக்கான தெருக்களில், நகரை சுத்தம் செய்கின்ற தொழிலைச் செய்பவர்கள் 6,400 பேர். குப்பைகளை ஏற்றிச் செல்லுகின்ற லாரிகள் 150. மாட்டு வண்டிகள் 700. இவைகளில் ஓர்க் ஷாப்புகளில், டெப்போக்களில் இருந்து எடுக்கின்ற போது, நிற்கின்ற வண்டிகள் போக, மீதம் உள்ள வண்டிகளை வைத்து எவ்வாறு நகரை சுத்தமாக வைத்திருக்க முடியும்.



அதேபோல கொசுத் தொல்லையிலிருந்து சென்னை நகர மக்களை எப்போது காப்பாற்றப் போகிறீர்கள்? பம்பாய் மாநகராட்சியில் கொசுத் தொல்லை ஒழிக்கப்பட்டு மலேரியா நோயே இல்லை என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே அங்கிருந்து மிஸ்டர் டி.யோபாங்கர் என்பவரை சென்னைக்கு அழைத்து, அதற்கான யோசனைகளை கேட்டீர்கள். ஆனால் அந்த யோசனைகளை அமுல் செய்ய ஏதாவது நடவடிக்கையை எடுத்தீர்களா? அவர் நல்ல பல யோசனைகளை சொன்னார். அதில் சுகாதார இலாகாவில் எம்.ஈ.பி.எச். பட்டம் பெற்றவர்கள், எம்.பி.பி.எஸ். டி.பி.எச். பட்டம் பெற்றவர்கள் தான் சுகாதார அதிகாரிகளாக இருக்கலாம் என்று உத்தரவு போடுவது ஒன்று. அப்படி ஒரு உத்தரவை போடுவீர்களா? அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சியையாவது எடுத்தீர்களா? என்று கேட்க விரும்புகிறேன்

அதே போன்று சில தினங்களுக்குமுன்பு கடற்கரை பகுதியில் உள்ள கட்டிடங்களில் ஒரு ராட்சத மிஷின் புகைகளை கக்கி கொசுக்களை ஒழிக்கிறது என்று பத்திரிகைகளில் செய்தியோடு படம் போட்டிருந்தார்கள்.

அந்த இராட்சத மிஷின் இப்போது எங்கே? சென்னை நகர கொசுக்கள் அதை விழுங்கிவிட்டதா? அந்த மெஷின் எப்போது வாங்கப்பட்டது, அது இப்போது எங்கே என்ற விவரத்தை கேட்க விரும்புகிறேன்.

அதோடு மட்டுமில்லை, 50 ஆயிரம் பேருக்கு ஒரு சானிடரி இன்ஸ்பெக்டர், 5 இலட்சம் பேருக்கு ஒரு ஹெல்த் ஆபீசர் என்று இருப்பதின் காரணமாகத்தான் சென்னை மாநகரத்தின் சுகாதாரத்தை சரிவர கவனிக்க முடியவில்லை. அதன் காரணமாகத்தான் சென்னை நகரத்தில் இளம் பிள்ளைவாதம், காலரா, மலேரியா போன்ற தொத்து நோய்கள் பரவ வழி ஏற்படுகிறது என்று 1978 ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்ற, சட்டநாதன் கமிட்டியின் பரிந்துரைகளை ஏற்று, தற்போது இருக்கும் நிலையை மாற்றி அமைத்து செயல்படுத்த இந்த அரசு முன் வருமா? அந்தப் பரிந்துரைகளின் விவரங்களையாவது வெளியிட அரசு முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

இந்த நகரை சுத்தம் செய்கின்ற தொழிலாளர்களில் பலர் சுத்தமற்ற பல இடங்களில் குடியேறி உள்ளனர். என்னுடைய தொகுதியிலேயே, காமராஜ் நகர், மோட்சபுரம், சாஸ்திரி நகர், போஜராஜ நகர் போன்ற இடங்களில், குப்பை மேடுகளில், குடிக்க தண்ணீர் இல்லாமல், விளக்கு வசதி இல்லாமல், சாலை வசதிகள் இல்லாமல், குப்பைமேடு குடிசைகளில் குடியிருக்கிறார்கள். அவர்களின் நிலை மாற்றப்பட வேண்டாமா? அவர்களுக்கு அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து ரோடுகளைப் பற்றி எடுத்துக் கொண்டால் சென்னை நகரத்தின் ரோடுகளின் மொத்த நீளம் 1,272 கிலோ

மீட்டர். இதில் சில குறிப்பிட்ட ரோடுகளைத் தவிர, தெருக்களின் உள் பகுதிகளில் உள்ள பல சிறிய ரோடுகள், முதலிலே போடப்பட்டதற்குப் பின்னால், மறுமுறை பழுதுகூடப் பார்க்கப் பெறவில்லை. பெருந் தலைவர் காமராஜ், பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் இராஜாஜி போன்றவர்களின் பெயர்களால் போடப்பட்டுள்ள சாலைகள் மட்டும் புதுப்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு முறையும் 6 அங்குலம், 9 அங்குலம் என்று இருக்கின்ற ரோடுகள் மேலேயே, அவற்றைப் புதுப்பிப்பதற்கான ரோடுகளையும் போடுகிறார்கள். 4 படிக்கட்டுகள் வைத்திருந்த வீட்டுக்காரர், இப்போது ஒரு படிக்கட்டுக்கு மட்டுமே சொந்தக்காரராக மாறியிருக்கிறார். இந்த நிலையே நீடித்துக் கொண்டு மேயானால், நாம் இருக்கின்ற இந்தச் சட்டமன்றக் கட்டடம் பேஸ்மெண்டாகவும், பார்வையாளர்கள் அமர்ந்திருக்கக் கூடிய காலரி கிரவுண்ட் ஃப்ளோராகவும் மாறக்கூடிய நிலை வரும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து மின் இணைப்பு வசதிகளை எடுத்துக் கொண்டால், தமிழகத்தின் அனைத்து கிராமங்களிலும் மின்-இணைப்பு நிறைவு நாள் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஆனால் தலைநகரான சென்னை நகரத்தில், ஒரு பக்கம் பௌர்ணமியாகவும், மறுபக்கம் அமாவாசையாகவுமே காட்சியளிக்கிறது. சென்னை நகரத்தில் சுமார் 45,000 விளக்குகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. இதில் அண்ணா சாலையில் தற்போது போடப்பட்டிருக்கின்ற சோடியம் வேப்பர் விளக்குகளும் அடங்கும். இந்த சோடியம் வேப்பர் விளக்கின் மதிப்பு சுமார் 5,200 ரூபாய். அண்ணா சாலைகள் போன்ற முக்கிய சாலைகள் முறையாக பராமரிக்கப்படுவதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணையான கருத்துக்கள் இல்லை. அது தேவைதான். ஆனால் அத்தலைவர்களின் பெயரால் அமைந்திருக்கும் அந்தத் தெருக்களைச் செப்பனிட்டு, விளக்குகளைப் போடும்போது, அல்லது மாற்றும் போது, அந்தத் தலைவர்கள் கூறிச் சென்ற கருத்துக்கள் ஏழைகள் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும் என்ற அவர்களுடைய நல்ல எண்ணங்கள் உங்களுடைய கவனத்திற்கு வருவதேயில்லையா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

ஆனால் அந்தத் தலைவர்களின் எண்ணங்கள், ஆட்சியில் அவர்கள் இருந்தபோது போட்ட சட்டங்கள், ஹரிஜன மக்கள் ஏழை மக்கள், நடுத்தர மக்கள் வாழக்கூடிய கிராமங்களில் உள்ள பகுதிகளில் உள்ள தெருக்களில் குடிதண்ணீர் வசதி, விளக்கு வசதி, சுகாதாரம் இவை முறையாக இருக்கவேண்டும் என்று எண்ணியவர்கள்; அதைக் கருத்தில்கொண்டு விளக்குகளே இல்லாமல் இருக்கின்ற தெருக்கள், தொடர்ந்து எரியாமல் இருக்கிற கம்பங்கள் இவற்றில் கவனம் செலுத்தவேண்டும்.

சென்னை நகரில் 54 துணைமின் நிலையங்கள் இருக்கின்றன. இவைகளிலிருந்து சமமாக மின் பங்கீடு எல்லா பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு, சிறிய தொழிற்சாலைகளுக்கு கிடைப்பது இல்லை. சில இடங்களில் ஹைவோல்டேஜ், பல இடங்களில் லோ வோல்டேஜ். மின்சார விநியோகத்திற்கு பூமிக்குள் போடப்பட்ட கேபிள்கள் பல ஆண்டுகளாக ஆகிவிட்டன. அவைகளில் அடிக்கடி பழுது ஏற்படுவதுடன் மின்சார லீக்கேஜும் இருக்கிறது. இந்தக் குறைகளைப் போக்க அதிக துணை மின் நிலையங்களும் டிரான்ஸ்பார்மர்களும் வேண்டும்.

குடி தண்ணீரை எடுத்துக்கொண்டால், 75 டிவிஷன்களாக இருக்கும்போது பதிக்கப்பட்ட பைப்கள் சிறியன. புதிய புதிய வீடுகள், பல மாடிக்கட்டடங்கள் இப்போது கட்டப்பட்டுள்ளன ஆகவே குழாய்களை நீட்டிக்கொண்டே போய் கடைசியில் தண்ணீர் வருவதில்லை. காற்றுதான் வருகிறது. கேட்டால், காற்று தாங்க கடற்கரைக்குப் போகவேண்டாம் என்று சொன்னாலும் சொல்வீர்கள். ஆகையால் பெரிய பைப்கள் பதித்தால் தான் எல்லாப் பகுதிகளிலும் உள்ள வீடுகளுக்கும் தண்ணீர் வரும்.



குடிசைப் பகுதிகளுக்கு எம். எம். டபிள்யு. எஸ். எஸ். பி. லாரிகள் மூலம் தண்ணீர் டாங்குகளில் ஊற்றுகிறார்கள். இப்போதுள்ள தண்ணீர் லாரிகள் போதாது, அதுவும் வட சென்னைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தண்ணீர் லாரிகளை அதிகபடுத்த வேண்டும். வட சென்னை நேப்பியர் பூங்காவில் கட்டப்பட்டுள்ள தண்ணீர் மேல் நிலைத் தொட்டி இன்னும் செயலுக்கு வரவில்லை. அது வேலை செய்ய ஆவன செய்யவேண்டும்.

பாதாளச் சாக்கடைகளை எடுத்துக்கொண்டால், கழிவுநீர்க் குழாய்கள் பல ஆண்டுகளுக்கு முன் பதிக்கப்பட்டவை. அவை கிறிஸ்து பிறப்பதற்கு முன் பதிக்கப்பட்டவை. அவை மாற்றப்பட வேண்டும். பம்பிங் ஸ்டேஷன்கள் அதிகப்படுத்தப்படவேண்டும். அதிக சக்தி உள்ள ஜெனரேட்டர்கள் பம்பிங் ஸ்டேஷன்களில் அவசியம் பொருத்தப்படவேண்டும்.

குடிநீரும், பாதாளச் சாக்கடை வேலைகளும் மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்படவேண்டும். ரிப்பேர் செய்கிறபோது குழாய்களில் பட்டு விரிசல் ஏற்பட்டு சாக்கடை நீரும் குடிநீரும் கலந்துவிடுகின்றன. அதைப்போக்க புதிய சக்தி மிக்க பைகள் போடப்படவேண்டும்.

பேசின் பிரிட்ஜ் அனல்மின் நிலையத்திலிருந்து வரும் கரித்தூள்களினால் இருபது லட்சம் மக்கள் வாழக்கூடிய வட சென்னை பகுதி முழுவதும் பாதிக்கப்படுகிறது. டி. பி. நோய், காலரா போன்ற வியாதிகள் ஏற்பட அது வழிவகுக்கிறது. ஆகவே விஞ்ஞான முறைப்படி அதைத் தடுக்க வேண்டும். இவை எல்லாம் சென்னை நகரம் உருவானபோது அந்தந்த சந்தர்ப்பங்களில் விரிவடையக் கூடிய பகுதிகளுக்கு வேண்டிய தேவைகளை செய்து கொடுத்ததன் விளைவாக திட்டமிடப்படாமல் பல வேலைகள் நடந்துள்ளன. ஆனால் இப்போது பெரிய அளவில் நிரந்தரமான அளவில் சென்னை நகருக்கு முன் கூறிய குறைபாடுகளைப் போக்க புதிய திட்டம் தீட்டி உலக வங்கியிடம் கடன் பெற்று வேலை செய்தால்தான் வளரும் நகரில் உள்ள மக்கள் நிம்மதியாக வாழமுடியும். ஆனால் அதை செயல்படுத்த

[திரு. வெ. இராஜசேகரன்] [1981 மார்ச் 31

மாட்டார்கள். மாற்றுவேன். மாற்றியே தீருவேன் தலைநகரை என்று முதல்வர் அவர்கள் சில நாட்களாக பேசிவருகிறார்கள். அதனால் மாறப்போகிற நகருக்கு ஏன் பல கோடி திட்டம் என்று நினைக்கலாம். இல்லையானால் 14-ல் இரண்டு பேர்கள்தானே என்று கூட நினைக்கலாம். சிங்காரச் சென்னையை சீர்கெட்ட சென்னையாக மாற்றிய பெருமை உங்களைத்தான் சாரும்.

தலைநகரை மாற்றுகிறேன் என்று சொல்லி தமிழகத்தின் தலைநகரான சென்னையை தலைநாகமாக மாற்றிவிடாதீர்கள். சென்னை நகராட்சி மக்களுக்கு [illegible] கலந்த தண்ணீர் வேண்டாம் குடிதண்ணீரும் சாக்கடைத் தண்ணீரும் அந்த கருப்புத் தண்ணீர் வேண்டாம். சென்னை நகர மக்கள் குடிக்க தண்ணீர் கேட்கிறார்கள்—பன்னீர் கேட்கவில்லை. வணக்கம்.

[முற்பகல் 11-20]

திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், நெடுஞ்சாலைகள் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய பணிவான கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தின் உள்ளாட்சி நிர்வாகங்கள் அனைத்தும் ஆரம்ப காலத்திலிருந்தே இந்தியத் துணைக் கண்டத்தில் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக சீரும் சிறப்புமாக செயல்பட்டு வந்திருக்கின்றன. புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே அது மேலும் சிறந்து விளங்கி வந்திருக்கின்றது என்று சொன்னால், அது மிகையாகாது. ஊராட்சிகள், ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகியவற்றிற்கு தேர்தல் நடைபெறவில்லை என்று மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் அனைவருக்கும் ஊராட்சி நிர்வாகத் தேர்தலிலே வாக்களிக்க உரிமை தரப்படவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகவே, வாக்காளர் பட்டியல் திருத்தி அமைக்கப்பட வேண்டும். ஒன்றிய ஆணையர்கள், நகராட்சி ஆணையர்கள் ஆகியோர் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலேதான் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள்கூட 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளுக்குப் பிறகு மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்தபிறகு, வாக்காளர் பட்டியல் திருத்தப்பட்டு, விரைவிலே உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுமென்று அறிவித்திருக்கிறார்கள். உள்ளாட்சித் தேர்தல் பணி முடிவதற்கு முன்பாக பல காலமாக அனுபவப்பட்ட உறுப்பினர்களும், அனுபவஸ்தர்களும் சொல்லி வருகின்ற குறைபாடுகள் நிறைந்த 1958 ஆம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டம் முழுமையாக பரிசீலனை செய்து, புதிய சட்டத்தை உருவாக்கப்பட வேண்டும். ஏனென்று சொன்னால் அப்போது போடப்பட்ட பஞ்சாயத்துச் சட்டத்தில், ஏராளமான குறைபாடுகள் மலிந்து கிடக்கின்றன. உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பாக நாம் செய்ய வேண்டிய மற்றொரு நல்ல பணி என்னவென்றால் 5, 6 ரெவின்யூ கிராமங்களை உள்ளடக்கி பல பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன.



1981 மார்ச் 31] [திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்]

அவைகள் எல்லாம் சீராக செயல்பட வேண்டுமென்று சொன்னால் இதைத் திருத்தியாக வேண்டும். அதற்காக 3 மாத காலம் அதிகமானாலும், இந்த பெரிய ஊராட்சிகளை ஒழுங்காக தனித் தனியாக பிரிக்கின்ற பணியை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல் என்னுடைய தொகுதிக்கு அடுத்துள்ள உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை எடுத்துக்கொண்டால், அந்த ஒன்றியம் 72 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கி இருக்கின்றது. சில இடங்களில் 30 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கிய ஒன்றியங்களும் இருக்கின்றன. நிர்வாகம், சீராக நடைபெற வேண்டுமானால், இப்படி 60, 70 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கியதாக இருந்தால், அந்த ஒன்றியம் சிறப்பாக செயல்பட முடியாது அப்படிப்பட்ட ஒன்றியங்கள் நல்லமுறையிலே பிரிக்கப்பட்டாக வேண்டும். அதற்காக 2, 3 மாதங்கள் அவகாசம் கொடுத்தாவது பிரித்து, பிறகு தேர்தல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். 40 பஞ்சாயத்துக்களுக்கு மேல் ஒரு ஒன்றியத்தில் இருந்தால் நிர்வாகம் நடைபெறுவது கடினம் என்பதால் இதை கட்டாயம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, ஊராட்சி ஒன்றியங்களிலே சர்சார்ஜ் வசூலிக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் இவ்வரி வசூலிப்பதில் மாறுபாடான கொள்கை இருப்பதால், ஒரு ஒன்றியத்திலே ரூ. 2 என்றும், மற்றொரு ஒன்றியத்திலே ரூ. 2.50 என்றும் வசூல் செய்யப்படுகின்றது. ஆகவே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒழுங்காக, முறைப்படி வருமானம் வருவதில்லை. மிகுந்த பாகுபாடு காட்டப்படுகின்றது. ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே ரூ. 5,000 பொது நிதி என்று சொன்னால், அதற்குப் பக்கத்திலே இருக்கின்ற மற்றொரு ஊராட்சி ஒன்றியத்திலே 17 இலட்சம் ரூபாய் பொது நிதியில் இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் இந்த அரசுக்கு இருக்கிறது. இவைகளை மாற்றியமைக்க, மக்கள் தொகை, பரப்பளவு ஆகியவற்றின் அடிப்படையிலே கணக்கில் எடுத்துக்கொண்டு, வருமானத்தை நிர்ணயிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றுக் பணிவாக கேட்டுக் கொள்கிறேன்.

இதேபோல் ஊராட்சிகள் வருவாய்க்கான வீட்டு வரி, வாகன வரி, தொழில் வரி ஆகியவைகள் தொடர்ந்து பல ஆண்டுகளாக வசூலிக்கப்படவில்லை. கிராமக் கர்ணமோ, மணியமோ இவைகளை வசூலிப்பதை நிறுத்தி விட்டார்கள். இப்போது நியமிக்கப்பட உள்ள வி. ஏ. ஓ.க்கள் மூலம் இவைகளை வசூலிப்பதற்குப் பதில், குறைந்தபட்சம் ஐந்து ஐந்து ஊராட்சிகளுக்கு ஒரு பில் கலெக்டர் நியமித்து, அவர்கள் இந்த பஞ்சாயத்து வரிகளை வசூல்செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு தனி ஆட்களை நியமனம் செய்ய வேண்டும். அப்போது அவர்கள் இந்த நிலுவை வரிகளைச் செம்மையாக வசூலிப்பார்கள், அது நிர்வாகத்திற்கு உகந்ததாகவும் இருக்கும். அது மட்டுமல்ல. இதனால், 2,500 பேர்களுக்கு மேல் புதிய வேலை வாய்ப்பை அரசு ஏற்படுத்து

வதற்கு வழிவகை செய்யும். அதைச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள் குழு இருக்கிறது. இந்த குழு ஒழுங்காகக் கூட்டப்படுவதில்லை. மாதத்திற்கு ஒருமுறையாவது முன்பெல்லாம் இந்த குழு கூட்டப்பட்டு வந்தது. என்ன காரணத்தினாலோ இப்போது இது விடப்பட்டிருக்கிறது. அதனால் மக்களுடைய குறைகளைச் சொல்ல முடியாமல் இருந்து வருகின்றது. குழுவின் முடிவுகளை அரசு அதிகாரிகள் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து செய்வதற்கு முன் வரவேண்டும். அரசு அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடையத் திட்டங்களைப் பொறுத்த வரையில் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டமும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமும் கிராமப் புற பொருளாதாரத்தை வெகுவாக உயர்த்தியிருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. தன்னிறைவுத் திட்டத்தை ஏற்படுத்தி புதிய வரலாற்றை இந்த அரசு படைத்திருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களில் புதிய பள்ளிக்கூடங்கள் கட்ட வேண்டுமென்று சொன்னால் ஓர் ஆண்டுக்கு 30 ஆயிரம் 40 ஆயிரம் என்று ஒதுக்குவார்கள். சிறுபாசனத்திற்கு 25 ஆயிரம் என்று ஒதுக்குவார்கள். இப்படி சொற்ப தொகை ஒதுக்குவதால் நான்கைந்து வேலைகளைக் கூட எடுத்துச் செய்ய முடியுமா என்றால், அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு தேவையான அத்தனை காரியங்களையும் செய்ய முடியாது. அப்படிப்பட்ட பிரச்சினை முன்பு இருந்தது. தன்னிறைவுத் திட்டம் மூலமாக பல இலட்சக் கணக்கான ரூபாய்களை ஒட்டுமொத்தமாகத் தருவதின் மூலமாக ஊராட்சி ஒன்றியத்தில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றனவோ—சாலை வசதியாக இருந்தாலும், பள்ளிக்கூட வசதியாக இருந்தாலும், எந்த வசதியாக இருந்தாலும்—உடனடியாகத் தீர்க்கப்படுவதற்கு தன்னிறைவுத் திட்டம் மிகவும் பயன் உள்ளத்திட்டமாக அமைந்திருக்கிறது. என்னுடையத் தொகுதியில் காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியம் என்ன காரணத்தினாலோ சேர்க்கப்படாமல் விடப்பட்டிருக்கிறது. இதை சேர்க்கவேண்டுமென்று முன்பே கேட்டிருக்கிறேன். ஆகவே காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைத் தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆடுமாடுகள் நீர் குடிக்கின்ற குளங்கள், குட்டைகள் எந்தக் காலத்திலும் பழுது பார்க்கப்பட்டது இல்லை. வேலைக்கு உணவுத் திட்டத்தில் குளங்கள் குட்டைகள் எல்லாம் தூர் வாரப்பட்டு எல்லா ஊர்களிலும் வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. இந்த ஆண்டு மழை பெய்திருந்தால் எந்தவிதமான குறையும் இல்லாமல் ஆடுமாடுகள் குடிக்கப் போதுமான தண்ணீர் கிடைக்க ஏதுவாக இருந்திருக்கும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக மழை இல்லாமல் போய் விட்டதால் பலன் இல்லாமல் இருக்கிறது. என்றாலும் வருகின்ற காலத்தில் நல்ல பலன் கிடைக்கும் என்பதை இங்கு நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

---



ஏழை பெண்களுக்கு தையல் பயிற்சியும் மெஷினும் கொடுக்கும் திட்டம் ஒன்றினை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒரு பகுதியில் பதினைந்து பெண்களை, அதாவது வேலை வாய்ப்பும் வசதியும் இல்லாத பெண்களை எடுத்துக் கொண்டு அவர்களுக்கு அந்த பயிற்சித் திட்டத்தைக் கொடுக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய் உதவிப் பணம் கிடைக்கும். தையல் மெஷின் மதிப்பு ரூ. 900 அந்த மெஷின் கொடுப்பதற்கு முன்னால் ரூபாய் 300 நாம் 'சப்சிடியாக' கொடுத்து விடுகிறோம். வட்டியில்லாத கடனாக அவர்கள் மீதமுள்ள 600 ரூபாயை திருப்பிச் செலுத்த வேண்டும். இதில் என்னவென்று சொன்னால் உதவிப்பணத்தை இலகுவாக மாதா மாதம் ரூபாய் 100 வீதம் பிடித்துக்கொண்டு ஆறு மாதம் முடிந்த பின் அந்த மெஷினை அவர்களுக்கு இலவசமாக கொடுப்பது போல கொடுக்கிற ஒரு நிலைமை இருந்து வருகிறது. இது ஒரு நல்ல திட்டம். ஆனால் 100 ரூபாயை கடனை அடைக்க கொடுத்து விட்டு, அவர்களுக்கு மீதம் ஏதாவது கிடைக்குமா என்றால் அதற்கு வழியில்லை. ஆகவே உதவிப்பணம் 100 ரூபாய் என்பதை 150 ரூபாய் என்று கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆறு மாதம் முடிந்த பிறகு இந்தத் திட்டத்தை ரத்து செய்யக்கூடாது. ஏனென்றுச் சொன்னால் இந்த திட்டம் நல்ல பயனுள்ள திட்டம். ஆறு மாதத்திற்குப் பிறகு மீண்டும் ஒரு அமைப்பு ஏற்படுத்தி, 15, 15 நபர்கள் என்று தொடர்ந்து இந்த பயிற்சி தரும் பணியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல ஊராட்சிகளில் பல நல்ல குடிநீர் கிணறுகள் இருக்கின்றன. பல ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்டவை. அதனால் அவற்றின் சுற்று கைப்பிடி சுவர்கள் இடிந்து விழுந்தும் பிளாட்பாரம் பழுதடைந்தும் இருக்கின்றன. மழை காலத்தில் வெளியே இருக்கிற நீர் உள்ளே சென்று விடுகிறது. ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து அதற்காக செலவிடக் கூடாது என்று இருக்கிறது. ஆகவே அதை மாற்றியமைத்து மூன்றாயிரம் நாலாயிரம் ஆனாலும் கூட அந்த கைப்பிடிச் சுவர்களை எழுப்பி பயனுள்ள குடிதண்ணீர் கிடைக்க இந்த அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இணைப்புச் சாலைகள், பஞ்சாயத்து சாலைகளில் கிராவல் போடப்படுகிறது. முறையாக போடப்படுகிறதா என்றால் இல்லை. ரோடு ரோலர்களை வைத்து உருட்டப்படுகிறதா என்று சொன்னால் இல்லை. காரணம் கேட்கிற பொழுது போதுமான ரோடு ரோலர்கள் ஹைவேஸ் டிபார்ட்மென்டிலிருந்து பெறமுடியவில்லை என்று ஊராட்சி ஒன்றியங்களில் கூறப்படுகிறது. அதன் மூலம் என்ன நடக்கிறது என்று சொன்னால் போட்ட ஒரு பதினைந்து நாட்களுக்குள் அந்த சாலை மீண்டும் பழுதடைந்து விடுகிறது. ஆகவே ஒரு மூன்று ஒன்றியங்களாக சேர்த்து, ஒரு சிறிய ரோடு ரோலரை வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பு.கோ. ஆனூர் ஜெகதீசன்] [1981 மார்ச் 31
[முற்பகல் 11.30]

அதே போல் ஜீப்புகள் ஒவ்வொரு ஒன்றியத்திலும் பழுது பட்டிருக்கின்றன. அதனால் என்ன நடக்கிறது என்றால் கான்ட்ராக்டர்கள் வேலை முடிந்த பிறகு ஒன்றிய என்ஜினியர்களை காரிலோ அல்லது டாக்சியிலோ வைத்து வேலை நடக்கும் இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்ட வேண்டிய துர்பாக்கியமான நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலேயும் உள்ள ஜீப்புகள் சரியாக வேலை செய்யவில்லை. ஒழுங்காக வேலை செய்யவில்லை. ஆகவே, அவைகளை உடனடியாகப் பழுதுபார்க்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம நல ஊழியர்கள், அவர்கள் பணியாற்றும் தங்கள் பகுதிகளிலேயே இருப்பதில்லை. திருக்கழுக்குன்றம் ஊராட்சியிலே பணியாற்றுகிறவர்கள் 10 பேர்கள் திருக்கழுக்குன்றம் நகரத்திலே தான் இருக்கிறார்களே தவிர அவரவர்கள் பணியாற்றுகின்ற இடங்களிலே இல்லை. அதைப் போலவே தொடக்கப் பள்ளி ஆசிரியர்களும்கூட தாங்கள் பணியாற்றுகின்ற இடங்களிலே குடியிருப்பதில்லை. தலைநகரத்திலே தான் இருக்கிறார்கள், இந்த நிலைமையை மாற்ற அவர்களுக்கு எல்லாம் பணியாற்றுகின்ற இடங்களிலேயே குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தித் தந்து அந்த அந்த இடங்களிலேயே இருக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்கள் மாற்றம் கோடை விடுமுறையிலே தான் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அவ்வாறு செய்வது தான் சாலச் சிறந்ததாகும். கர்ம வீரர் காமராஜர் அவர்கள் ஊருக்கு ஒரு பள்ளிக்கூடம் என்ற திட்டத்தை ஏற்படுத்தினார்கள். ஆனால் குறைந்தது 20 ஆண்டுகளாக கூரைக் கட்டடங்களிலேதான் பள்ளிக்கூடங்கள் நடந்துவந்தன. கடந்த 2, 3 ஆண்டுகளாகக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய ஒன்றியத்தை எடுத்துக்கொண்டால் எந்த ஒரு பள்ளிக்கூடமும் கூரைக் கட்டடத்திலே இருக்கின்ற நிலைமை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தில் 12 பள்ளிக்கூடங்கள் எடுக்கப்படுகின்றன. அவைகள் எல்லாம் துணைப் பள்ளிக்கூடங்கள். குடிசைகளுக்குப் பக்கத்திலே இருக்கின்ற அவைகளையும் எடுத்து கட்டடங்கள் கட்டப்படுவதற்காக நான் இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பகலுணவு வண்டிகளிலே எடுத்துச் செல்லப்படுகின்றது. ஆனால், இன்றைய நிலையில் பார்த்தால் வண்டிகள் பழுதடைந்து சரி செய்யப்படாமல் இருக்கின்றன. அதனால் குழந்தைகளுக்கு வண்டிகளிலே பகலுணவு எடுத்துச் செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. இவைகளையும் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 மார்ச் 31] [திரு பு. கோ. ஆனூர் ஜகதீசன்]

7,200 ஊராட்சி அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே அந்த ஊராட்சிகளின் தலைவர்களின் வீட்டிலே உள்ள திண்ணையிலே பஞ்சாயத்து போர்டு நடத்தி வந்த நிலைமை இருந்தது, தங்களுடைய வீட்டிலேயே ரேடியோ போன்றவற்றையும் வைத்தார்கள். அந்த நிலைமையை மாற்ற வேண்டும். 41 ஊராட்சிகளிலே அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது போதுமானதல்ல, மேலும் ஒதுக்கீடு செய்து கட்டடங்களைக் கட்ட நாம் தயாராக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையை எடுத்துக்கொண்டால், அந்தத் துறையிலே பணியாற்றுகின்ற சாலை கூலிகள், காங்க் கூலியாட்கள் பல ஆண்டுகளாக வேலை செய்தும் நிரந்தரமாக்கப்படவில்லை, நம்முடைய அரசு அவர்களை உடனடியாக நிரந்தரமாக்க வேண்டும். சொற்ப கூலி வாங்கக்கூடியவர்கள் எல்லாம் 15, 20 மைல் தூரம் சென்று வேலை செய்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது. வசிக்கும் அந்த அந்த ஊரிலேயே அவர்களுக்குப் பக்கத்திலே இருக்கின்ற நெடுஞ்சாலைப் பணிகளிலே வேலை கொடுக்கக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாலைகளிலே கூலி வேலை செய்யக்கூடிய ஆட்கள் சில அதிகாரிகளின் வீடுகளிலே அடிமைகளாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள், இப்படிப்பட்ட நிலைமையை நாமாவது மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்குக் கடற்கரை சாலை ஒரு சிறந்த நல்ல திட்டம். கிழக்கிலே உள்ள சாலைகளையெல்லாம் இணைக்கக்கூடிய முறையிலே தூத்துக்குடியிலிருந்து சென்னைவரை சாலை அமைக்கின்ற சிறப்பான திட்டம் இது. அதை ஏதோ சுணக்கத்திலே வைத்திருக்கிறார்கள். அதை உடனடியாக மேற்கொள்ள முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கரும்பாலை சாலை வளர்ச்சி வேலைகள் நடைபெறவில்லை. பல இடங்களிலே சர்சார்ஜ் நாம் கட்டிக்கொண்டிருக்கிறோம். அந்தச் சாலை வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டும். இந்த ஆண்டு 20 இலட்ச ரூபாய் அதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். அது போதுமானதல்ல. என்னுடைய தொகுதியிலே பாலாற்றுக்கு நடுவிலே இடையாத்தூர் என்ற ஊர் இருக்கிறது, அதைச் சுற்றி நான்குபுறங்களும் பாலாறு சூழ்ந்து இருக்கிறது. பிரசவ வேதனை ஏற்பட்டால்கூட வண்டியில் கொண்டுவர முடியாது. கட்டிலில் வைத்துத்தான் கொண்டுவர வேண்டும். இதைப்பற்றி பல ஆண்டுகளாக எடுத்துச் சொல்லியும் தரைப் பாலம் கட்டப்படவில்லை. அதை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீனவ குப்பங்கள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கே யெல்லாம் மணல் பரப்பிலே நல்ல சாலை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். கிராமங்களை ஒட்டியுள்ள நெடுஞ்சாலை ஓரமாக கிராமப் பஞ்சாயத்துக்கள் செய்ய வேண்டுமென்று எதிர் பார்க்காமல், இரு பக்கத்திலேயும் வடிகால் கட்டிக் கொடுத்தால் தான் தண்ணீர் வடிந்து ஓடக்கூடிய வசதிகள் இருக்கும். ஆகவே, அதை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் பஞ்சாயத்துக்கள் செய்வதற்கு அவைகளிடம் போதிய நிதிவசதி கிடையாது. வெள்ளப் பணிகளைப் பொறுத்த வரையில் இரண்டாண்டுகளாக வேலைகள் நடைபெற்று, இன்றைக்கு அது அரைகுறையாக நின்று கொண்டிருக்கின்ற சிறு சிறு பாலங்கள் இருக்கின்றன; அவைகளை முழுமையாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

வீராணம் திட்டக் குழாய்கள் பல இடங்களில் நிறுத்தப்பட்டு இருக்கின்றன. அது எந்தக் காலத்திலே முடியும் என்று தெரிய வில்லை. அந்த வீராணம் திட்டக் குழாய்களுக்குப் பக்கத்தில் சால்வாய்கள் தோண்டப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக அந்தப் பகுதிகளில் குறுக்கே அணை போட்டது போல தோண் டப்பட்டிருக்கிறது. அதனால் போக்குவரத்து வசதி சரியாக நடக்கவில்லை. உடனே அங்கு பாதை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசீய நெடுஞ்சாலையிலே ஒரே இடத்திலே தொடர்ந்து விபத்து நடக்கிறது; எந்த இடத்திலே நடைபெற்றதோ அதே இடத்திலேயே நடைபெறுகிறது. கேட்டால் பேய், பிசாசு இருக் கிறது என்று சொல்கிறார்கள். ஆராய்ச்சித் துறையைச் சேர்ந் வர்கள் ஏன் அவ்வாறு நடக்கிறது என்பதைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற மாற்று வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலையோரங்களில் மரங்களை நடுவதற்கான அரிய வாய்ப்பு இருக்கிறது. அதை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளிலே பணியாற்றுகின்ற குப்பை கூட்டும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு மற்றவர்களுக்குத் தருகின்ற எல்லாச் சலுகைகளும் தரப்பட வேண்டும். அவர் களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படவில்லை; அதை அவர்களுக்கு அளிப்பதற்கு இந்த அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு வீட்டு வசதி கிடையாது. பன்றி யோடு சேர்ந்து அவர்கள் குடியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றித் தீர வேண்டும்.

சென்னை மாநகராட்சி மைதானங்களில் குடிநீர் வசதி சரி யாக இல்லை. சரியான குடிநீர் இல்லாததால் குழந்தைகள் வெயில் காலத்திலே மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்





பட்ட மாநகராட்சி மைதானங்களில் குடிநீர் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், கிராமப் பகுதிகளில் பெண்கள் ஒதுங்குவதற்கான ஒதுங்குமிடம் நிச்சயம் தேவை என்பதை உணர்ந்து, வெட்ட வெளியாக இருந்தாலும் அங்கே சுற்றுச் சுவர் எழுப்பி அதைப் பயன்படுத்திக்கொள்கின்ற நிலையை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

*திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின் மீது மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என் பெயரிலும், மற்ற உறுப்பினர்கள் பெயரிலும் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

தேர்தல் நடத்துவதற்கு உடனே ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படத் தக்க விதத்தில் 58 ஆம் ஆண்டு ஊராட்சி சட்டத்தில் திருத்தத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் வருவாயைப் பெருக்கத் தக்க வழிவகைகளைச் செய்ய வேண்டும். சென்னையிலும், மற்றும் மாவட்ட நகரங்களிலும் பெரிய பெரிய மாடிக் கட்டிடங்கள், தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக் கின்றன. அவைகளுக்கான வரிகளை அதிகரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவைகளுக்கு இப்பொழுது வரி குறைவாக இருப்ப தாகத் தெரிகிறது. அதற்கு ஏதாவது சட்டம் நிறைவேற்ற வேண்டுமென்றாலும் கூட தக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தளவாய்புரம் செட்டியார் பட்டியில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே அதைப் பேரூராட்சியாக மாற்றி அதிக வருவாய் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வேலைகளை எல்லாம் செய்வதற்கு வருவாய் சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதற்காக மாநிலத்தில் இரண்டு மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஆய்வுக் குழு அமைத்து பரிசீலிக்க வேண்டும். இவ்வாறு செய்து பேரூராட்சிகளுக்கும் நகராட்சி களுக்கும் அதிக வருவாயைத் தேடித் தரும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரூராட்சி வருமானத்திலும் நகராட்சி வருமானத்திலும் பெரும் பகுதி நிர்வாகச் செலவுக்குத்தான் போதுமானதாக இருக்கிறது. நகராட்சிகளும் பேரூராட்சிகளும் அந்த மக்களுக்குச் செய்ய வேண்டிய அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, ரோடு வசதி சாக்கடை வசதி, ஆகியவைகளைச் செய்ய முடியாமல் இருக்கிறது; இப்படிப்பட்ட பரிதாபகரமான நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் அரசாங்கம் மானியம் கொடுக்க வேண்டும் அல்லது நகராட்சிகள் நடத்தும் பள்ளிக்கூடங்கள், வைத்திய மனைகள் ஆகியவைகளை அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டும்.

குடியாத்தம் நகராட்சியில் நிதி வசதியே இல்லை என்ற நிலை இருக்கிறது. அந்த நகராட்சி உயர்நிலைப் பள்ளியை அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நகராட்சியும் கோரி இருக்கிறது.

எனவே, நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவைகளின் வருவாயைப் பெருக்க நாடகக் கொட்டகைகள், சினிமாக் கொட்டகைகள், வாரச் சந்தை, தினசரி சந்தை, [illegible] கட்டி வாடகைக்கு விடுதல் போன்றவைகளுக்கு அரசாங்கம் பெருமளவிற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

இந்த நகராட்சிகளிலே, அல்லது பேரூராட்சிகளிலே, அல்லது ஊராட்சி ஒன்றியங்களிலே வேலை செய்கிறவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப் போவதாக அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள். நான் குறிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புவது, நகராட்சிகளிலே, பேரூராட்சிகளிலே வேலை செய்கிற அடிப்படை ஊழியர்களுக்கு, சுகாதார ஊழியர்களுக்கு வீட்டு வசதியே இல்லை. கிராமப் புறத்திலேயும் மற்ற இடங்களிலேயும் வாழ்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, வருவாய் குறைந்தவர்களுக்கு வீடு கட்டுவதற்குக் கடன் வசதி செய்து கொடுக்கும் இந்த அரசு தன்னிடத்திலே பணி புரியும் ஊழியர்களுக்கு, குறிப்பாக, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, நீண்ட நெடுங்காலமாக, வீட்டு வசதியில்லாமலிருக்கிறது, அவர்களுக்கும் வீட்டு வசதி செய்து தருவதற்கு முதன் உரிமை வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. என். எஸ். வி. சித்தன் தலைமை)

அதே போல், நகராட்சிகளிலே, பேரூராட்சிகளிலே இருக்கிற ஊழியர்களின் ஊதியத்தை எடுத்துக் கொண்டால், நான் அறிந்த வரையிலே, 20 ஆண்டுக்காலமாக, 25 ஆண்டுக் காலமாக, ஊழியர்களின் ஊதியம் உயர்த்தப்படவே இல்லை. எனக்குத் தெரியும், சொந்த அனுபவம் உண்டு. நான் காட்பாடி, தாராபுரம் நகராட்சியிலே 23 ஆண்டுக்காலமாகத் தலைவராக இருந்தேன். அந்த 23 ஆண்டுக் காலத்திலே ஊழியர்களை அதிகப்படுத்தவில்லை. இருக்கிற வரிகளைத்தான் அதிகப்படுத்தினார்கள்.



எங்கள் ஊருக்கு, காட்பாடிக்கு, முதலாவது குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின் மூலமாக 1,000 வீடுகளுக்குக் குடிநீர் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 1,000 வீடுகளுக்கு மாதா மாதம் கணக்கெடுத்து, பில் எழுதி, மீட்டர் பார்ப்பதற்கு ஒரு ஊழியரைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, இரண்டு ஆண்டுகளாகி விட்டது. கீழுள்ள, மாவட்ட அளவிலுள்ள பல அதிகாரிகள் ஒப்புதல் கொடுத்து விட்டார்கள். அரசு ஒப்புதல் அளிப்பதில் காலதாமதம் ஆகிறது.

அதே போன்று குடியாத்தம் நகராட்சியிலே 1969 ஆம் ஆண்டிலே குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு, நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த நேரத்திலே, பிட்டர்கள், எலெக்ட்ரீஷியன்களை, நகராட்சியிடமே ஒப்படைத்தார்கள். இன்றைக்கும் அவர்கள் தற்காலிகமாக இருக்கிறார்களே ஒழிய, நிரந்தரமாக்கப்படவில்லை. அரசுத் துறையிலே பல்வேறு துறைகளிலே ஒப்புதல் அளித்தும், தொடர்புடைய துறையிலே ஒப்புதல் அளிக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. அந்த நகராட்சிகளுக்கு, பேரூராட்சிகளுக்கு அடிப்படைச் சுகாதார வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்றால், அதைப் பரிசீலனை செய்து, அதற்கு ஒரு குழு அமைத்தால் கூடப் பரவாயில்லை. ஆனால், பல்வேறு நகராட்சிகளை எடுத்துக் கொண்டால், குடிநீர் வசதியில்லை, சுகாதார வசதியில்லை என்று சொல்கிற நிலைமை தமிழகம் பூராவும் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

அது மட்டுமல்ல, நகராட்சிகளிலே, பேரூராட்சிகளிலே, வேலை செய்கிற அதிகாரிகளிடத்திலே இணக்கமான வேலை முறையில்லை. நகராட்சியை எடுத்துக் கொண்டால், அங்கே இருக்கிற சுகாதார அதிகாரி, இன்ஜினியர், கமிஷனர் மூவரும் இணைந்து வேலை செய்யாமல், ஒவ்வொருவரும் தனியாக இருக்கிற நிலைமை இருக்கிறது. அந்த வேலை நிலைமைகளைச் சீர் செய்வதற்கு, என்ன நடந்திருக்கிறது, எப்படி மாற்றப்பட வேண்டுமென்பதற்கு, அதனை ஆய்வு செய்வதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த வேலை செய்பவர்களுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்திருப்பதாக அமைச்சருடைய அறிக்கையிலே இருக்கிறது. பயிற்சி மட்டும் அல்ல, இந்த வேலைகளை எப்படிச் செய்ய வேண்டுமென்று பார்க்க வேண்டும். குடியாத்தம் நகராட்சியைப் பொறுத்தவரை, அங்கே உள்ள சுகாதார அதிகாரி, நான் கேட்கின்ற சாமான்களை கமிஷனர் வாங்கிக் கொடுக்கவில்லை, நான் என்ன செய்வது என்று சொல்லிக் கொண்டு, எந்த வேலையையும் செய்வதில்லை. 20. 30 குப்பை வண்டிகள் இருந்தன. இன்றைக்கு 5 தான் இருக்கின்றன. மற்றவைகள் பழுதுபட்டு ஆண்டுகள் பலவாகின்றன. நான் அமைச்சரைத் தனியாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன், குடியாத்தம் நகராட்சியினுடைய வருவாய், அமைப்பு முறை, இவைகளைப் பரிசீலிக்கத் தனியாக

[திரு. கே. ஆர். சுந்தரம்] [1981 மார்ச் 31

அதிகாரி நியமித்தால் நிலைமைகள் தெரியும். மிகவும் சீர்கெட்ட அந்த நகராட்சி போன்று, தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். குடியாத்தம் நகராட்சியை நான் உதாரணமாகச் சொல்கிறேன், அதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இந்தப் பேரூராட்சிகளுடைய நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு, மாநில அளவிலே, தனியாகவே அதிகாரியை நியமிக்க உத்திரவிடப் போவதாக, ஏற்கனவே அமைச்சர் அறி அறிவித்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆகவே, பேரூராட்சிகளை பொறுத்து வேலைகளைப் பரிசீலிப்பதற்கும், நிர்வாகத்தைக் கவனிக்கவும், மாநில அளவிலே, தனியாக அதிகாரிக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்னையை எடுத்துக் கொண்டால், தமிழகத்தில் நிலவுகின்ற நிலைமையைப் பற்றி பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். கோவை மாவட்டத்திற்கு அடுத்த இரண்டு மாதங்களுக்குள் சிறுவாணி திட்டத்திலிருந்து தண்ணீர் கிடைக்கும் என்று சென்ற பட்ஜெட் கூட்டத்திலே அமைச்சர் சொன்னார். இது வரையிலே வேலைகள் நடைபெறவில்லை. குறிப்பாகச் சென்னையைப் பற்றிச் சொன்னார்கள். திருச்சி, மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், புதுக்கோட்டை போன்ற பல இடங்களிலே சொன்னார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், எங்களுடைய குடியாத்தம் நகராட்சியைப் பொறுத்த வரையிலே, பாலாற்றிலே தண்ணீர் இருந்தாலும் கூட, மின் சாரத் தட்டுப்பாடு காரணமாக, தண்ணீர் வழங்கப்படவில்லை. அதற்காக, ஜெனரேட்டர் வாங்க வேண்டுமென்று குடிநீர் வடிகால் வாரியம் கேட்டு, சிபாரிசு செய்திருக்கிறது. எங்கெங்கு, எந்தெந்த இடத்திலே, ஜெனரேட்டர் தேவைப்படுகிறதோ, அங்கெல்லாம் வாங்கிக் கொடுக்க வேண்டும்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு வறட்சி நிவாரணப் பணியின் கீழ் பல்வேறு மாவட்டங்களிலே கை பம்புகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எங்களுடைய ஊராட்சி ஒன்றியத்திலே 20 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 15 போட்டிருக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு மேலாகிறது. ஆனால், அதிலே ஒன்றைத் தவிர, மற்ற 14 இடங்களிலே மேல் பம்பே பொருத்தவில்லை. கேட்டால், கருவி கிடைக்கவில்லை, வாங்கவில்லை என்று சொல்கிற நிலையிருக்கிறது. அதைக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே குழித்துறை நகரத்திலே குடிநீர் வசதி பாதிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 8 மாதங்களாக அங்குள்ள மோட்டார் பழுதடைந்து, மக்களுக்குத் தண்ணீர் கிடைக்காத நிலை இருக்கின்றது. அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1981 மார்ச் 31] [திரு கே. ஆர். சுந்தரம்]

நெல்லை மாவட்டம் புளியங்குடி நகரத்திலே இந்தக் குடிநீர் தட்டுப்பாடு எப்போதும் இருக்கிறது. அங்கே சாக்கடை தெருவிலே ஓடிக்கொண்டிருக்கிறது. அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மருத்துவ மனையை எடுத்துக் கொண்டால், அது நகராட்சி மருத்துவமனையாக இருந்தாலும் கிராமப்புற மருத்துவமனையாக இருந்தாலும் அங்கே போதிய அளவுக்கு மருந்துகள் இருப்பதில்லை. அவைகளை நல்ல முறையில் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சியிலும், நகராட்சிகளிலும் ரோடுகள் போடப்படுகின்றன. சென்ற முறை மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற நேரத்தில் என்னுடைய தொகுதியிலே உள்ள பல்வேறு கிராமங்களில் ரோடுகள் சரியில்லை, அதைச் செய்து தரவேண்டுமென்று கேட்டேன். இந்த ஓராண்டுக் காலத்தில் ஊராட்சிகளிலும் சரி, அல்லது நகராட்சிகளிலும் சரி எந்தவிதமான ரோடு வேலைகளும் நடைபெறவில்லை. அப்படியே நடைபெற்றாலும் அது சரியாக இல்லை. எனக்கு முன்பு பேசிய அருமை நண்பர் ஆனூர் ஜகதீசன் அவர்கள் சொன்னதைப் போல, ரோடுகள், போட்ட 10, 15 நாட்களுக்குள் சீர்கேடடைந்து விடுகின்றன. சரியான முறையில் போடுவதில்லை. இன்றைக்கு ஊராட்சி ஒன்றியமாக இருந்தாலும் சரி, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் போடப்படும் ரோடுகளாக இருந்தாலும் சரி, வெறும் மண், அல்லது ஜல்லி போட்டு மூடிவிடுகிறார்கள். அது அதிகபட்சம் 2, 3 மாதங்களுக்கு வருகின்றன. எனவே இதை விட்டு, குறைந்தபட்சம் தார் ரோடாகப் போட்டால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தில் வேலூர் தாலுக்காவுக்கும் குடியாத்தம் தாலுக்காவிற்கும் இடையே பள்ளிகொண்டா என்னும் இடத்தில் பாலாறு ஓடிக் கொண்டிருக்கிறது. அந்தச் சாலையில் ஆயிரக்கணக்கான மக்கள் தினந்தோறும் போகின்ற நிலைமை இருக்கின்றது. எனவே அந்த ஆற்றின் குறுக்கே பள்ளிகொண்டாவில் ஒரு பாலம் கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று காட்பாடி ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு 126 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது சென்ற ஆண்டிலே. இந்த ஆண்டிலேயும் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த வேலை என்னவோ தெரியவில்லை, இது வரையில் ஆரம்பிக்கவில்லை.

அதுபோன்று நகராட்சியிலேயும், ஊராட்சிகளிலேயும் தெருவிளக்குகள் எரிவதில்லை. இது பொதுவான குற்றச்சாட்டாக இருக்கின்றது. இதைக் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு கே. ஆர். சுந்தரம்] [1981 மார்ச் 31

அடுத்து குடியாத்தம் நகரத்திலே கூட ரோடு செதி இல்லை. விளக்குகள் எரியாத நிலை இருக்கின்றது. அவைகளைக் கவனித்துத் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நகராட்சிப் பள்ளிகளிலேயும், ஊராட்சிப் பள்ளிகளிலேயும் பிள்ளைகள் உட்காருவதற்கு பெஞ்சுகள் கிடையாது. நாற்காலிகள் கிடையாது. கரும்பலகைகள் கிடையாது. பிள்ளைகள் தரையிலே உட்காரவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இவைகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ரோடுகள் போடப்படுகின்றன. அப்படி போடுகின்றபோது அந்த ரோடு தனியார் இடத்தில் இருந்தால் அதை ஆர்ஜிதம் செய்வதற்கு வசதியில்லை தானாகவே கொடுத்தால்தான் ரோடுகளைப் போடுகிறார்கள். அரசாங்கமும் அதை எடுத்துக்கொள்வதில்லை. எனவே அப்படிப்பட்ட இடங்களைக் கட்டாயம் ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தன்னிறைவுத் திட்டத்திலே ஏற்கெனவே போட்டுக் கொடுத்ததில் கன்னியாகுமரி மாவட்டத்திலே 4 ஒன்றியங்கள் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கம் இப்போது திருவெட்டாறு, தக்கலை ஒன்றியங்களை விட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. எனவே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த ஆண்டிலேயே அவைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் நடைபெறுகிற பணிகளை அந்த அதிகாரிகள் மட்டும்தான் இப்போது செய்து வருகின்றார்கள். அதோடு அந்தந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினரையும், ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவர்களையும் கொண்ட ஆலோசனைக் குழு அமைத்து, அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று அந்த வேலைகளைச் செய்தால் மக்களுக்கு உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று உணவுக்கு வேலை திட்டத்திற்கு மத்திய அரசு 1.13 காசு தருகிறது என்றும், நாம் 0.37 காசுகள் தருகிறோம் என்றும் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் தொகையை யாருக்குக் கொடுத்தாலும் அவர்கள் வேலைக்கு வரமாட்டார்கள். சாதாரண கொத்தனார் வேலைக்குப் போனாலே 7 ரூபாய், 8 ரூபாய் கிடைக்கும். இந்த நேரத்தில் நாம் கொடுக்கின்ற இந்தப் பணத்திற்கு யாரும் வேலைக்கு வருவதில்லை. எனவே இதனுடன் சேர்த்து அரசு மானியமாக 2 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1981 மார்ச் 31] [திரு. கே. ஆர். சுந்தரம்]

[முற்பகல் 11-50]

இன்றைக்கு பேரூராட்சிகளுக்கு, நகராட்சிகளுக்கு தேர்தல்கள் நடத்தப் பெறுகின்றன. அதைப்போலவே நாரியங்களுக்கும் தேர்தல் நடத்தவேண்டும். அவற்றிற்கு நாமினேஷன் செய்கிற முறை தவிர்க்கப்படவேண்டும். அந்தப் பகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள் மூலமே அவைகள் நல்ல முறையில் இயங்கமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் இப்போது சிமெண்ட் வினியோகம் நடைபெறுகிறது. அதிலே மிகப்பெரிய சீர்கேடுகள் இருப்பதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. ஆகவே, சிமெண்டுக்கு யார் மனு போட்டார்கள், அவர்கள் மனு போட்ட தேதி என்ன? எந்தத் தேதியில் யார் யாருக்கு சிமெண்ட் கொடுக்கப்பட்டது, எவ்வளவு கொடுக்கப்பட்டது போன்ற விவரங்களை தகவல் பலகை மூலம் அறிவித்தால் அது பயன் உள்ளதாக இருக்கும், மக்களுக்கும், உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் போடப்படும் ரோடுகள் தார் ரோடுகளாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தாமரைக்குளம், ராஜபாளையம் போன்ற இடங்களில் பாலம் கட்ட வேண்டும் என்று அங்கேயிருக்கிற மக்கள் நீண்டநாட்களாக கோரிக்கை விடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கையைச் சொல்கிற நேரத்தில் நான் அரசாங்கத்திடம் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக பாலங்கள், இணைப்புச் சாலைகள் கட்டப்படுகின்றன. அந்தப் பணிகள் முறையாகச் செய்யப்படுகின்றனவா என்று பார்ப்பதற்கு போதுமான ஊழியர்கள், இஞ்ஜினீயர்கள் இல்லை. ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் 50 ஊராட்சிகள் இருக்கின்றன. மற்றொரு ஒன்றியத்தில் 25 ஊராட்சிகள்தான் இருக்கின்றன. 25 இருந்தாலும் 50 இருந்தாலும் அந்த ஒன்றியத்தில் இருப்பது ஒரு இஞ்ஜினீர்தான். ஆகவே, இந்தப் பணிகளைச் செம்மையாகச் செய்யவேண்டும் என்று சொன்னால் அதற்குப் போதுமான அளவிற்கு ஊழியர்களையும், இன்ஜினீயர்களையும் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வதன் மூலம்தான் இந்தத் திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அரசு இதை கவனத்தில் கொண்டு செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பத்தில் நான் சொன்னதுபோல், நகராட்சிகள், மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில் நடைபெறுகிற வேலைகளை ஆய்வு செய்வதற்காக ஆய்வுக்குழு அமைத்து, அந்த ஆய்வுக் குழுவின் முடிவின் அடிப்படையில் வேலைகள் நடைபெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் முன் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்து என்னுடைய கருத்துக்களை முன் வைக்கிறேன்.

சாலைகள், பாலங்கள், உள்ளாட்சித் துறை ஆகிய இந்த மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு முன்வருகின்ற இந்த நேரத்தில், உள்ளாட்சித் துறையைப் பொறுத்த வரையில் முதலில் கருத்துத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி மன்றங்கள் ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றிற்குத் தேர்தல் நடைபெறாமல் இருக்கின்றது என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஊராட்சி ஒன்றியங்களைக் கலைத்தது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல, புரட்சித் தலைவர் அரசு அல்ல என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அன்று கலைத்தவர்கள் தான், தேர்தல் நடத்தத் தவறியவர்கள் தான் இன்றைக்கு இங்கே குறை சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அதே நேரத்தில் இன்றைக்கு அவைகளுக்குத் தேர்தல் நடத்த வேண்டாம் என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது. வாக்காளர் பட்டியலில் 18 வயது அடைந்தவர்களையும் இணைத்து வாக்காளர் பட்டியல் தயாரித்த பின்னர் தேர்தல்கள் விரைவில் நடத்தப்பெறும் என்று இன்றைக்கு இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிற அரசை நான் பாராட்டுகிறேன். அதே போல் இந்த ஆண்டு பல பகுதிகளில் வறட்சியாலே மக்கள் அல்லலுக்குள்ளாகியிருப்பதாலே இந்த ஆண்டுகூட தேர்தல் நடத்த முடியுமா என்கிற ஒரு சந்தேகம் எழுந்து இருக்கிறது. இருப்பினும் குறிப்பிட்ட நேரத்தில் இந்தத் தேர்தலை நடத்தி அந்த மக்களின் குறைகளைப் போக்க முன் வந்துள்ள இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

உள்ளாட்சி மன்றங்களை உள்ளடக்கிய கிராமப்புறங்களில் தன்னிறைவுத் திட்டம் என்கிற புதிய திட்டத்தின் மூலம் பல நன்மைகளைச் செய்து வருகிற இந்த அரசையும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் நான் பாராட்டி, அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் திட்டத்தின் கீழ் என்னுடைய வேதாரண்யம் தொகுதியில் உள்ள ஒன்றியத்தை இந்த ஆண்டில் சேர்த்துக் கொண்டு இருப்பதற்காக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல பகுதிகளில் இன்றைக்குத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் இன்னும் சிலபல பணிகள் சரிவர செய்யப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக வறட்சி காரணமாக தண்ணீர் கிடைக்காத காரணத்தால் போடப்படுகின்ற சாலைகள் எல்லாம் சரிவர இல்லாமல், அதற்காகப் பயன்படுத்தப்பட்ட மண், கல் எல்லாம் காற்றில் பறந்து



கொண்டு இருக்கிற நிலைமை இருக்கிறது. இதை மாற்றி வருங்காலத்தில் தண்ணீர் கிடைக்கிற காலத்தில் அந்த வேலைகளைச் செய்தால், அந்தச் சாலைகள் சரியாக இருக்கும். இல்லை என்றால் அந்தச் சாலைகள் போட்டும் பயன் இல்லாமல் போய் விடும். பின்னால் அந்தச் சாலைகள் போடப்பட்டனவா என்கிற நிலைமை வந்து விடும். ஆகவே, இந்தச் சாலைகள் போடும் திட்டத்தை அப்படிப்பட்ட நல்ல நேரம் வருகிற வரையில் நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல அந்த ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தை எடுத்துக் கொள்ளும்போது 1,500 மக்களுக்கு மேற்பட்டு இருக்கிற இடங்களில் இணைப்புச் சாலைகளை அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். எங்கள் பகுதியைப் பொறுத்த மட்டில், கிழக்குக் கடற்கரை பகுதியை எடுத்துக் கொண்டால் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மக்கள் கூட்டமாக வாழக் கூடிய நிலை இல்லை. தொகுதி அல்லது அந்தப் பகுதி பூராவும் பரந்து மக்கள் இருக்கிறார்கள். 50 குடும்பங்கள், 100 குடும்பங்கள் மொத்தமாக ஒரே இடத்தில் இருக்கக்கூடிய சூழ்நிலை இல்லை.

கிராமங்களிலே மக்கள் தொகையை பார்த்தால் கூட ஒரே இடத்தில் 3,000 பேர், 5,000 பேர் என்று இருக்கமாட்டார்கள். மொத்தத்தில் ஒரு கிராமம் பூராவும் 3,000 பேர் என்றுதான் இருப்பார்களே தவிர ஒரே இடத்தில் இருக்கமாட்டார்கள். ஆகையால் அப்படிப்பட்ட நிலையை கருத்தில் கொண்டு, சாலை அமைக்காமல் விட்டுவிடக் கூடாது. மக்கள் பரவலாக இருந்தாலும், அப்படிப்பட்ட இடங்களுக்கும் இணைப்புச் சாலைகளை ஏற்படுத்திக் கொடுத்தால்தான் இந்தத் திட்டம் சிறப்பாக அமையும். அநேகமாக கடற்கரை பகுதி முழுவதுமே மக்கள் ஒரே இடத்தில் இல்லாமல் பரவலாக இருக்கும் சூழ்நிலைதான் இருக்கிறது. சென்னையிலிருந்து தூத்துக்குடி வரையில் எல்லாக் கடற்கரைப் பகுதிகளிலும் இப்படிப்பட்ட நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. இதைக் கருத்திற் கொண்டு, இப்படிப்பட்டத் திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அதைப் போல நம்முடைய பஞ்சாயத்துக்கள், ஊராட்சி ஒன்றியங்களில் வேலை பார்க்கும் அலுவலர்களுக்கு வீடு கட்டித் தரப்படவில்லை. அதே மாதிரி என்னுடைய தொகுதியில் தலைஞாயிறு ஒன்றியத்தில் அலுவலர்களுக்கு வீடுகள் இன்னும் கட்டித் தரப்படவில்லை. வீடுகள் இல்லாததால் அலுவலர்கள் அங்கே வருவதில்லை ; வர மறுக்கிறார்கள். அந்த ஒன்றியத்திலே இருக்கிற அலுவலர்கள் தவறு செய்தால், அவர்களை மாற்றிவிட்டு வேறு அலுவலர்களை நியமிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னால், குற்றம் செய்து தண்டிக்கப்படுகிறவர்கள் தான் ஒரு தண்டனையாக அங்கே அனுப்பப்படுகிறார்கள்; வேறு யாரும் அங்கே வர மாட்டார்கள் ; அவர்கள்தான் இருக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்கிறார். எனவே

[திரு எம். எஸ். மாணிக்கம்] [1981 மார்ச் 31

இந்த நிலையைப் போக்குவதற்கு பல நல்ல காரியங்களை செய்து கொடுத்தால் தான் முடியும்; அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல இங்கே நெடுஞ்சாலைத் துறையிலே கிழக்குக் கடற்கரை சாலை அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே இந்த ஆண்டு 30 இலட்சம் ரூபாய் தஞ்சை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அடுத்தாண்டு 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்தப் பணம் போதாது. இன்னும் அதிகமாக ஒதுக்கி, சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தால்தான் சாலை வசதி இல்லாமல் இருக்கிற அந்த மக்களுக்கு பயன்படுவதாக இருக்கும். ஆகவே, இன்னும் அதிகமாக பணம் ஒதுக்கி, சாலை. அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

அதைப் போல கிழக்குத் தஞ்சை மாவட்டப் போக்குவரத்தில் மிகவும் பின் தங்கிய பகுதியாக இருக்கிறது. இந்த ஆண்டு கூட அங்கே ஒரே ஒரு புதியத் திட்டம்தான் சேர்க்கப்பட்டு இருக்கிறது. அங்கிருந்து பல திட்டங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அவை அரசின் கவனத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளை ஏற்றுச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 30 ஆண்டுகால ஆட்சி ஏற்பட்ட பிறகும் இங்கே இன்னும் போக்கு வரத்து வசதி இல்லாமல் இருக்கிறது. மற்றப் பகுதிகளுக்கு அனுப்பப்படுவது போல் ஏதோ கொஞ்சம் பணம் தஞ்சை மாவட்டத்திற்கும் போக்குவரத்து வசதிகளைச் செய்வதற்காக அனுப்பப்படுகிறது. ஆனால் தஞ்சை மாவட்டம் மற்ற எல்லாப் பகுதிகளையும் போல அல்ல. அங்கே மலை இல்லை. புதுக் கோட்டை, திருச்சி மாவட்டங்களிலிருந்துதான் ஜல்லி, சப்பி போன்றவற்றை லாரிகளில் கொண்டுவர வேண்டும். அரசாங்கம் ஒதுக்குகின்ற பணம் லாரி வாடகைக்கு போய்விடுகிறது, பாதை வசதிக்கு மிஞ்சவில்லை; அதனால் மக்களுக்குப் பலன் இல்லை. எனவே நாகப்பட்டினம் கோட்ட அளவில் இருக்கிற நெடுஞ் சாலைக்குத் தனியாகப் பணம் ஒதுக்கி வேலை செய்வதன் மூலம் தான் அங்கே போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தர முடியும்.

அது மட்டுமல்ல. தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் மேல் மட்டத்தில் இருக்கிறது. மழை நேரத்தில் தண்ணீர் தேங்கி விடுகிறது. அங்கே சாலைகள் நீரில் அமுங்கி விடுகின்றன. இப்போது சாலை போட்டால், அடுத்தாண்டு அது அமுங்கி விடு கிறது. பள்ளம் விழுந்து, குழி குழியாக ரோட்டில் காணப்படும். 20 மைல் தூரம் செல்ல வேண்டுமானால் காரில் முக்கால் மணி நேரம் பயணம் செய்ய வேண்டும். பஸ்ஸில் செல்வதாக இருந் தால் ஒன்றரை மணி நேரமாகும். மற்றப் பகுதிகளைப் போல தூரத்தைப் பார்த்து அங்கே பயணம் செய்தால் உரிய காலத்தில் போய்ச் சேர முடியாது, 4, 5 மணி நேரம் கழிந்துதான் போய்ச் சேரமுடியும். ஆகையால் அந்தப் பகுதிக்கு தனியாக பணம் ஒதுக்கி, சாலைகளை உயரமாகப் போட்டு செப்பனிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 மார்ச் 31] [எம். எஸ். மாணிக்கம்]

[நண்பகல் 12-00]

அதைப் போல வேதாரண்யத்திலிருந்து தஞ்சாவூர் வரை செல்கின்ற சாலையில், உப்பு, சவுக்கு, விறகுகள் போன்றவை ஏற்றிச் செல்லப்படுகின்றன. அந்தச் சாலை முழுவதும் பள்ளங் களாகவும், குழிகளாகவும் இருக்கின்றன. மழைக் காலங்களில் சேறு இறங்கி லாரிகள் கவிழ்ந்துவிடுகின்ற நிலைமை இருப்பதால் லாரிக்காரர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு மேல் வரமாட்டேன் என்று சொல்கிறார்கள். அதனால் அங்கே தகராறுகள் கூட ஏற்படுகின்ற நிலைமை இருக்கின்றது. அண்மையில் கூட ஒரு பிரச்சினையில் போலீஸ் வரை செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே அந்தச் சாலையை அபிவிருத்தி செய்து அங்கே இரண்டு வழிச்சாலையாக அதை மாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி இருவழிச் சாலையாக மாற்றுவதன் மூலம்தான் அந்தப் பகுதியினை அபிவிருத்தி செய்ய முடியும்.

அடுத்து எட்டுக்குடியிலிருந்து நீர்முளைக்கு வருகின்ற சாலை யில் ஒரு பாலம் கட்டவேண்டும் என்று மூன்று ஆண்டுகாலத்திற்கு முன்னே முடிவு எடுக்கப்பட்டது. அதுபற்றி டென்டர் கூட விடப்பட்டது. ஆகவே அது இந்த ஆண்டு கூட செய்யப்படாத நிலைமையிலே அங்கே உள்ள மக்கள் போராடக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே பழவனாற்றிலே கட்டக்கூடிய அந்தப் பாலத்தை இந்த ஆண்டாவது கட்டித் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் அந்த மக்களுக்கு உதவி செய்வதாக இருக்கும்.

அடுத்து மானங்கொண்டான் முள்ளியாற்றிலே பன்னாளிலே, ஒரு பாலமும், ஆதனூரிலே ஒரு பாலமும் ஆக இரு பாலங்கள் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சரவர்களும் அந்தப் பகுதிக்கு வந்து நாலு வேதபதியில் வெட்டாற்றில் பாலம் கட்டித் தருவதாகச் சொன்னார்கள். அதை உடனடியாகக் கட்டித் தர வேண்டும்.

அதைப் போன்று அடப்பாற்றிலே ஒரு பாலம் கட்டுவதற்சாக வேண்டுகோள் அரசுக்கு வந்திருக்கின்றது. அதையும் கட்டித் தரவேண்டும்.

அடுத்து எனது பக்கத்துத் தொகுதியான திருத்துறைப் பூண்டித் நகரத்தில் ஒரு வெளிப்பாலம் கட்டித்தர வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

[1981 மார்ச் 31

*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட 981-82 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் மீது நான் சில கருத்துக்களை முன்பே வைக்க விரும்புகிறேன் நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மூன்று தலைப்புக்களிலே 200 கோடிக்கு மேல் அனுமதி கட்டு பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டும், பல்வேறு திட்டங்கள் இன்னும் நிறைவேற்றப்படாமலும் இருப்பதாக நிறையப் புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புள்ளி விவரத்தின் 58 வது பக்கத்தில் மன்னார்குடி தொகுதியில் பாமினி ஆற்றிலே ஒரு பாலம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து தற்போது 30 இலட்ச ரூபாயில் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதையும் பார்த்தேன். இதைப் பார்க்கின்ற போது உண்மையிலே நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எத்தனையோ வேலைகள் அதாவது தன்னிறைவுத்திட்டம், வேலைக்கு உணவுத் திட்டம், குடிநீர் திட்டம், இணைப்புச் சாலைகள் திட்டம் இப்படிப் பல்வேறு காரியங்களை நாம் இப்போது ஜனநாயகக் கடமையிலிருந்து செய்ய வேண்டிய நிலையிலிருந்து தவறி அதிகாரிகளின் ராஜ்யமாகத்தான் நடந்து கொண்டிருக்கின்றதோ என்று நாட்டுமக்கள் சந்தேகப்படக்கூடிய நிலைமைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். மாநில அரசைக் கலைத்து நான்கு மாதங்கள் ஆளுநரின் ஆட்சி நடக்கின்றது என்று வைத்துக்கொண்டாலே சர்வாதிகார ஆட்சி நடக்கின்றது என்று எல்லாக் கட்சியினரும் பேசுகிறோம். ஆனால் 1965-ஆம் ஆண்டு தான் ஊராட்சி மன்றத் தேர்தல் நடந்தது. அதற்குப் பிறகு 5 ஆண்டுகள் கடந்து 970 ஆம் ஆண்டு முடிந்து அதற்குப்பிறகு இப்போது 1982-ஆம் ஆண்டிலே நாம் அடி எடுத்து வைத்திருக்கின்றோம். ஆக 12 ஆண்டுகளுக்கும் மேலாக கிராமப்புற பகுதிகளுக்கு நாம் எவ்வளவுதான் திட்டங்களைத் தீட்டி வேலைகளை செயல்படுத்தினாலும் அந்த வேலைகள் எல்லாம் எந்த அளவுக்கு நடைபெறுகின்றன என்பதைக் கவனிக்கவேண்டும். ஆகவே தமிழக அரசு துரிதமாக இவற்றை எல்லாம் கணக்கில் எடுத்து விரைவிலே ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் போன்றவற்றிற்கெல்லாம் உடனடியாகத் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து தன்னிறைவுத் திட்டம் என்பது ஒரு நல்ல திட்டம். இந்தத் திட்டத்தின் மூலமாக கிராமப்புற பகுதிகளில் சாலைப் போக்குவரத்து, குடிநீர் வசதிகள், பள்ளிக்கூடங்கள், மின்சாரம் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்குரிய நல்ல திட்டமாக இருக்கின்றது. அந்தத் திட்டம் எப்படி நிறைவேற்றப் பட்டு வருகின்றது? சென்ற ஆண்டிலே 69 ஊராட்சி ஒன்றியங்கள் இந்தத் திட்டத்திலே அறிவிக்கப்பட்டு இன்றைக்கு வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன.



1981 மார்ச் 31] [திரு. பொ. உத்திராபதி]

அடுத்து 150 ஊராட்சி ஒன்றியங்களுக்கு இந்த தன்னிறைவுத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இதுவரை எடுத்து முடித்த 69 ஊராட்சி ஒன்றியங்களிலும், இந்த 31—3—1981 அதாவது இன்றோடு முடிய வேண்டும் என்ற உத்தரவு இடப்பட்டிருந்தும் கூட, இன்னும் சில நாட்களுக்கு சில இடங்களில் நீட்டிக்கப்பட்டிருப்பதாக, சில தினங்களுக்கு முன்பு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். ஆனால் முடிக்கப்பட்ட வேலைகள் கூட எப்படி நடந்திருக்கிறது என்று கேட்டால், ஒரு ரோட்டில் தொடர்ந்து 2 கிலோ மீட்டர் தூரம் இத்திட்டத்தில் போடப்பட வேண்டும் என்று சொன்னால், ஒரு கிலோ மீட்டர்தான் இப்போது போட்டிருக்கிறார்கள். அப்படிப் போடப் பெற்ற சாலைகளுமே பாதியில் நிற்கிறது.

குறிப்பாக என்னுடைய பனையூர் பஞ்சாயத்திலேயே ஒரு ரோட்டில் சோமாலப்பேட்டை கிராமத்தில் அரை கிலோ மீட்டர் தூரம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இப்படி இந்த தன்னிறைவுத் திட்ட வேலைகள் எல்லாம். அவசரக் கோலத்தில் அள்ளி தெளித்தது போலவே நடந்து வந்திருக்கின்றன. நான் நேற்றைக்கு முன் தினம் திருத்துறைப்பூண்டியிலே வரம்பியம் நெடும்பலத்துக்கு அருகே ஒரு திருமணத்திற்காக சென்றிருந்தேன், அங்கே ரெயில்வே கேட்டிலிருந்து சுடுகாட்டுக்கு பாதை போட்டிருக்கிறார்கள். செம்மண் கப்பி பரப்பப்பட்டிருக்கிறது. ஆனால் ரோடு போடுவதற்கான மற்ற வேலைகள் எதுவும் நடைபெறவில்லை. தண்ணீர் தெளிக்கப் படவில்லை. மணல் கொட்டப்படவில்லை. ரோட் ரோலரைக் கொண்டு உருட்டிவிடப்படவும் இல்லை. கேட்டால் அவர்கள், என்ன செய்வது 50 ரோடுகளுக்கு ஒன்றுதான், இந்த ரோட் ரோலர்கள் இருக்கின்றன. அதனால்தான் இப்படி காலதாமதம் ஆகிறது என்று பதிலுரைக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட வேலைகள் இன்னும் செம்மையாக நல்ல முறையில் நடக்க வேண்டும் என்று சொன்னால், தஞ்சை மாவட்டத்திற்கு, இரண்டு மாதங்களுக்கு இந்த வேலைகளுக்கான கால நீட்டிப்பைக் கொடுத்தால் நலமாக இருக்கும், அந்த வேலைகள் நல்ல முறையில் நிறைவு பெற முடியும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தின் கீழ் மேலும் 150 ஒன்றியங்கள் சேர்க்கப் படுவதாக அறிவித்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் முத்துப்பேட்டை ஒன்றியம் மிகவும் பின் தங்கிய ஒன்றியம். ஆகவே, அந்தப் பகுதியினையும் இந்த 150 ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அவைகள் விடுபட்டிருந்தால், இந்த ஆண்டிலேயே அவற்றின் இறுதியில் சேர்ப்பதற்காவது அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல மின்சாரம் என்பதைக் எடுத்துக்கொண்டால், அது எப்படியிருக்கிறது என்று சொன்னால், பானையிலிருந்து சோறு எடுத்துப் போடவேண்டும் என்று சொன்னால், அப்படிப் போட வேண்டிய அகப்பையின் பிடியும் அகப்பையும் ஒன்றாக இருக்க வேண்டும். அப்படி ஒன்றாக இருந்தால்தான், சோறு எடுத்துப் போட முடியும். ஆனால், இங்கே எப்படி இருக்கிறது என்று சொன்னால், மின்சாரம் வழங்குவது மின்சார இலாகாவின் பொறுப்பு. ஆனால் அதை பராமரிக்கிற பொறுப்பு உள்ளாட்சித் துறைக்கு என்று இருக்கிறது. அகப்பையும், பிடியும் தனித் தனியாக இருக்கிறது. இதன் காரணமாக எங்காவது மின் இணைப்பு பழுது ஏற்பட்டது என்றால் முதலில் கிராம நல ஊழியரிடம் அதைத் தெரிவித்து, அவர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் மூலமாக மின்சார வாரியத்திடம் சொல்ல வேண்டும். அவர்கள் வந்து பார்த்து விட்டு இன்னின்ன பொருள்கள் கெட்டிருக்கின்றன என்று எழுதிக் கொடுத்துவிட்டு போனபிறகு, உள்ளாட்சித் துறையின் மூலம் பல்பு வாங்கிப் போட்டு ரிப்பேர்கள் இருந்தால் பழுது பார்த்து, மின்சாரம் வருவதற்குள், இரண்டு மாதங்கள் ஆகிவிடுகின்றன. இப்படிப் பல இடங்களில் ஏற்பட்டு கிராமப்புறங்களே இருண்ட சூழ்நிலையில் இருக்கின்றன. எனவே பராமரிப்புப் பணி அந்தந்த பஞ்சாயத்துக்களுக்கே அல்லது ஒன்றியங்களுக்கே என்று இருந்தால் அப்போதைக்கப்போது தேவைப்படும் மின் இணைப்பை உடனடியாக மக்களுக்குக் கொடுக்க முடியும் என்று சொல்லி அமைச்சர் அவர்கள் அதை விரிவாக பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல மின் இணைப்பு என்கிறபோது இன்னொன்றையும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. தெரு விளக்குகளுக்கு பல்பு போடுகிறார்கள். அந்த பல்புகள் எரிவதே இல்லை. கொஞ்ச நாட்களுக்கு எரியும். பிறகு பளிச் பளிச் சென்று மின்னி விட்டு அப்படியே நின்று விடும். ஏன் இந்தக் குறைபாடுகள் ஏற்படுகின்றன என்று பார்த்தால், இந்தப் பல்புகளை எல்லாம் நல்ல கம்பெனிகளிலிருந்து ஒப்பந்தம் கேட்டு வாங்கி போடுவது கிடையாது. ஏதோ ஒரு கம்பெனியிடம் பல்பு வாங்க வேண்டுமே என்பதற்காக, ஒப்பந்தம் கேட்டு வாங்கி போட்டுவிடுகிறார்கள். அதன் விளைவுதான் இப்படி பல்புகள் சரியாக எரியாமல் இருக்கின்றன. ஆகவே நான் கேட்டுக் கொள்வது எல்லாம் நல்ல பல்புகளை, நல்ல கம்பெனிகளிடமிருந்து வாங்கிப்போட வேண்டும். அப்படிப் போட்டால் அடிக்கடி போட வேண்டிய செலவும் மிச்சமாகும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் குடிதண்ணீர் பிரச்சினை குடிநீர் வடிகால் வாரியம் தண்ணீர் சப்ளை செய்கிறார்கள். ஆனால் அவர்கள் நீரேற்று குழாய்களுக்கும் கிணறுகளுக்கும் போட்டிருக்கிற மோட்டார்கள் கெட்டு விட்டால் மீண்டும் அதைப்பற்றி குடிநீர் வடிகால் வாரியத்தின், அதிகாரிக்குத் தெரியப்படுத்த வேண்டும். அப்படி தெரியப்படுத்திய பிறகு, அவர்கள் தங்களது



ஊழியர்களை அனுப்புகிறார்கள். அவர்கள் வந்து ரிப்பேர் செய்வதற்காக மோட்டாரை கழற்றி எடுத்துச் சென்றால் திரும்பக் கொண்டு போடுவதற்கு பல மாதங்கள் ஆகின்றன. எனவே இந்த வேலைகளையும் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைத்தால் மோட்டார்கள் கெட்டால் உடனுக்குடன் பழுதுபார்த்து குடி தண்ணீரை மக்கள் தடை இல்லாமல் பெறுவதற்கு வழி செய்ய முடியும். அது போலவே என்னுடைய தொகுதியில் மணவி பஞ்சாயத்தில் அப்படி ஒரு மோட்டாரை ரிப்பேர் செய்வதற்காக எடுத்துக் கொண்டு போய் பல மாதங்கள் ஆகின்றன. கேட்டால் இன்னும் ரிப்பேர் செய்யப்பெறவில்லை என்று சொல்கிறார்கள்.

அதேபோல இந்த கைப்பம்புகளை எடுத்துக்கொண்டால், இப்போது வறட்சி அதிகமாக இருக்கிறது என்ற காரணத்திற்காக நிறைய கைப்பம்புகளைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் போட்டு என்ன பயன்? போட்ட கைப்பம்புகள் அனைத்தும் கெட்டுப் போயிருக்கின்றன. ஊராட்சி ஒன்றியத்தில் அதைப்பற்றி சொன்னால் பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களுக்கு பணம் வருவது எப்போது, அதை உபயோகித்து இவர்கள் பொது மக்களுக்கு தண்ணீர் கொடுப்பது எப்போது? ஆகவே வருமானத்தைப் பார்க்காமல் ஊராட்சி ஒன்றியங்களோ ஏற்று அல்லது சர்க்காரே ஏற்று அத்தனை பம்புகளையும் ரிப்பேர் செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய முன்வரவேண்டும். எல்லா கிராமங்களுக்கும் இப்படி ரிப்பேர் ஆகிற கைப்பம்புகளை உடனுக்குடன் ரிப்பேர் செய்து கொடுத்துவிட்டால் கிராமப்புறங்களில் குடிநீர் பிரச்சினை ஓரளவிற்கு தீர்க்கப்படும். ஆகவே அரசு இதை அவசர நடவடிக்கையாக எண்ணி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-10]

அதேபோல் கைப்பம்புகளில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களுக்கு எந்தவிதமான வேலைப் பாதுகாப்பும் கிடையாது. அவர்கள் பகுதி நேர ஊழியர்களாக இருக்கிறார்கள். பம்ப்ஸ் ரிப்பேர் செய்தால்தான் அவர்களுக்கு சம்பளம். சம்பளம் கொடுக்காவிட்டால் ரிப்பேருக்கு வருவது கிடையாது. ஆகவே அந்த ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்கி அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். அதோடு அன்றாடம் குடிநீர் வழங்கவும் நம் அரசு முன்னுக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றியங்களில், கிராமங்களில் மருந்தகங்கள் இருக்கின்றன. பெரும்பாலும் டாக்டர்கள் கிடையாது. குறிப்பாக திருச்சி மாவட்டம் குளித்தலை தாலுக்காவில் பேரூரில் நான்காண்டுகளாக டாக்டர் இல்லை. பேட்டுமருதூர் மருந்தகம் இன்னும்

திறக்கப்படவில்லை. இப்படி பல குறைபாடுகள் உள்ளன. எனவே கிராம மருந்தகங்களில் உள்ள குறைபாடுகளை போக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தாய் சேய் நல விடுதிகள். அங்குள்ள செவிலியர்களுக்கு நிரந்தரமாக குடும்பக்கட்டுப்பாடு வேலைதான் இருக்கிறதே தவிர இரவு ஒரு மணிக்கு பிரசவத்திற்கு என்று அவசரமாக கூப்பிட்டால் அவர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. எந்த வேலைக்கு அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களோ அந்த வேலைக்கு என்றில்லாமல் குடும்பக்கட்டுப்பாடு வேலையில் அவர்களை ஈடுபடுத்துவதால் அவர்களுக்கு அதிகத் தொல்லைகள் இருக்கின்றன. செவிலியர்களுக்கு பயணப்படி கொடுப்பதில் சிக்கல் இருக்கிறது. அது தீர்க்கப்படவேண்டும்.

திருச்சி, சென்னை, கோவை போன்ற நகராட்சிகளில் நூறு ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட சுகாதாரத் தொழிலாளர்கள் இன்றும் அந்தளவிற்கே இருக்கிறார்கள். எனவே மக்கள் பெருக்கத்திற்கு ஏற்றாற்போல் அந்த சுகாதாரத் தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் அரிஜனங்கள் வசிக்கும் பகுதிகளிலும் மற்ற ஊர்களிலும் சுடுகாட்டுப்பாதைக்கு சண்டை போடவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த சுடுகாட்டுப் பிரச்சினையையாவது விரைவில் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களில் உள்ள குளங்களை எடுத்துக்கொண்டால், இப்போது பருவ மழை மாறிவிட்டது, தண்ணீர் வரத்து குறைந்து விட்டது. எனவே ஊருக்கு ஒரு குளம் என்ற வகையில் எடுத்துக்கொண்டு யூனியன் சார்பாக தூர் எடுத்து, ஆழப்படுத்தி நீர்ப்பிடிப்பை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகரங்களில் குப்பைகூளம் காரணமாக காலரா வருகிறது. நகரங்களின் அருகாமையில் குப்பைகளைப்போடுவதால் வியாதிகள் ஏற்பட்டுபரவுகின்றன. குப்பைகளை நெருப்பு வைத்து கொளுத்தினால் இராத்திரி பிணவாடை வீசுகிறது. ஆகவே நகருக்கு ஐந்து மைல்கள் தள்ளி குப்பைகளை போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சாவூரிலிருந்து வடுவூர், மன்னார்குடி, திருத்துரைப்பூண்டி, வேதாரண்யம், கோடியக்கரை வரை செல்லும் சாலை பற்றி திரு. எம். எஸ். மாணிக்கம் அவர்கள் சொன்னார்கள், எல்லா அமைச்சர்களுக்கும் தெரியும். அங்கிருந்து ஒரு பஸ் வந்து இங்கேயிருந்து ஒரு லாரி வந்தால் லாரி போக முடியாது. ஆகவே அங்கே இரண்டுவழிப் பாதையை ஏற்படுத்தித் தரவேண்டும்.



எனது தொகுதியில் இரண்டு பாலங்கள் அமைத்துத் தர வேண்டும். (மணியடிக்கப் பட்டது). கோமளப் பேட்டையிலிருந்து கோட்டூர் போக அய்யனாற்றில் பாலம் ஒன்றும், கோட்டூரிலிருந்து சோமாலப்பேட்டை போக கோட்டூர் யூனியன் அலுவலகத்திற்கு மேல்புறம் முள்ளியாற்றில் ஒரு பாலமும் கட்டிக்கொடுக்க வேண்டுகிறேன். 300-க்கு மேற்பட்ட குழந்தைகள் கோட்டூர் மேல் நிலைப் பள்ளிக்கு செல்கிறார்கள். அங்கே மக்கள் ஆயிரத்திற்கு அதிகமாக போகும்பாதை மணலி குன்னலூர், விலக்குடி செல்லும் ஹைவேஸ் ரோடை தார் சாலையாக மாற்றவேண்டும். முத்துப்பேட்டை யூனியனில் பாண்டி, குன்னலூர் வழியாக தொண்டியக்காடு போகும் சாலையை அகலப்படுத்தி தார் ரோடாக மாற்ற வேண்டும். கோட்டூரிலிருந்து வடபாதிமங்கலம் போகும் ரோட்டை உடனடியாக தார் சாலையாக ஆக்கவேண்டும்.

அதேமாதிரி, 22—12—1980-லே திருத்துறைப்பூண்டியிலே செய்யப்பட வேண்டிய வேலைகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி கொடுத்து, இன்னும் பல தீர்மானங்களை அரசிற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பி, அவைகள் அங்கீகரிக்கப்படாமல் இருக்கின்றன. இதை உடனடியாக அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முத்துப்பேட்டையைப் பற்றி பலநாட்களாக சொல்லி வருகிறேன். அங்கே பேருந்து நிலையம் கிடையாது. ரோட்டிலே பெண்களும், ஆண்களும் வெய்யிலிலும், மழையிலும் நின்று கொண்டு இருக்க வேண்டியிருக்கிறது. அங்கு ஓர் பேருந்து நிலையத்தை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், மேலநம்மங்குறிச்சியில் இருந்து முத்துப்பேட்டைக்கு வர வேண்டுமென்று சொன்னால், வருவாய்த் துறை அமைச்சரின் தொகுதியான பட்டுக்கோட்டையைச் சுற்றி எங்கள் தொகுதிக்கு வரவேண்டியிருக்கிறது. கிட்டகட்ட 15 மைல்கள் சுற்றி வரவேண்டியிருக்கிறது. முத்துப்பேட்டைக்கு வர பாமணி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டவேண்டும்.

திருத்துறைப் பூண்டி பேரூராட்சியை ஒரு நகராட்சியாக ஆக்க வேண்டுமெனபது நீண்டநாள் கோரிக்கை. கலைக்கப்பட்ட முந்திய ஆட்சிக்கு முன்னால் மாவட்ட ஆட்சித் தலைவரால் எடுத்துச் சொல்லப்பட்டு, மாநில உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது. அன்று கலைக்கப்பட்ட பின், ஆளுநர் அவர்களிடமிருந்து கடிதம் எழுதிக்கேட்டபோது, ஒரு பதில் கடிதம் வந்தது. அதிலே, 1981-ஆம் ஆண்டு 6 மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார்கள். இது எந்த அரசியல் காரணத்திற்காக முன்பு அறிவித்த திட்டம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றது என்பது தெரியவில்லை. எனவே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வதெல்லாம், திருத்துறைப்பூண்டி பேரூராட்சியை நகராட்சியாக ஆக்கவேண்டும். அங்கே ஜன

நெருக்கடி குடிநீர் பற்றாக்குறை உள்ளது, போக்குவரத்து சாலை வசதிகளும் மிகவும் குறைவாக உள்ளன. ஆகவே இதனை நகராட்சியாக ஆக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வால்பாறையிலே நகரியத்திலே நியமனக் குழு இருக்கிறது. இதைப்போல் பல நகரியங்கள் இருக்கின்றன. அந்த நகரியங்களில் எல்லாம் தேர்தல்களைக் கொண்டுவந்து, ஜனநாயக முறையில் மக்களுக்கு நேரடியாக பணியாற்ற உதவவேண்டும். சிறப்பு வேலைகளைச் சிறப்பாக செய்யவேண்டுமென்று சொல்லி, விரைவிலே தேர்தல்களை ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் கொண்டுவந்து, ஜனநாயக முறையிலே நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு தமிழக அரசும், நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் விரைவிலே இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சகத்தின் மானிய கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே ராட்சி நிர்வாகம், சாலைகள், பாலங்கள் என்று சொல்லக் கூடிய தலைப்புகளிலே கொடுக்கப்படுகின்ற தொகை அமைச்சகத்திற்குத் தேவையானதென்பதையும், அவைகள் கொடுக்கப்பட வேண்டுமென்பதிலும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், இவைகள் எந்தெந்த வகைகளிலே செலவிட வேண்டுமென்று கூறுகின்ற கருத்தினை இங்கே நான் வரிசைப் படுத்த விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அவர்களுக்குத் துணையாக அதிகாரிகளும் மட்டுமே தமிழகத்திலே இருக்கின்ற சிற்றூர்கள், பேரூர்கள், நகரங்கள், மாநகரங்கள் ஆகியவைகளில் நடைபெறவேண்டிய அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் பார்த்து செய்துவிடுவதென்பது எண்ணத்திற்கு இனிதாக இருக்கலாம். ஆனால், எடுத்துச் செய்வதற்கு எளிதாக இருக்காது. ஜனநாயக மரபின்படி இப்பணிகளை பகிர்ந்து கொள்ளுகின்ற நேரத்திலே செம்மைப்படுகின்றன. அவைகள் பூரணத்துவம் பெறுகின்றன. எனவே, பல ஆண்டுகளாக தேர்தல் இல்லாமல் இருக்கின்ற இந்த ஊராட்சிகளிலே எல்லாம் உடனடியாக தேர்தல் நடைபெறுவதற்கான ஆணையை தமிழக அரசு பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சிற்றூர்களானாலும் சரி, மற்ற இடங்களானாலும் சரி அந்தப் பகுதிகளிலே எந்தவிதமான பணிகளும் நடக்கவில்லை. அதிகாரிகளைப் பார்த்துக் கேட்பதற்கு பொதுமக்களுக்கு அவகாசம் கிடைப்பதில்லை. தவிர, அவர்கள் அதிகாரிகளை ஒரு கூச்ச உணர்வோடு பார்க்கிறார்கள். தவிர, அதிகாரிகளோடு அவர்களுக்கு நேரடித் தொடர்பு ஏற்படுவதில்லை. அதே நேரத்தில்,





[பிற்பகல் 12–20]

தேர்தல் நடந்திருக்குமானால், அவர்கள் ஒருவரைப் பார்த்து நல்ல துணிவோடு கேட்பார்கள். ஓட்டு வாங்க வீட்டுக்கு வந்தாயே, வீட்டு முன்னால் உள்ள தெருவைப் பார், அது நல்ல முறையிலே இல்லையே, விளக்குகள் எரியவில்லையே என்றெல்லாம் கேட்கக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும். ஜனநாயகத்திலே இந்த உரிமை மிக முக்கியமானது. சப்தம் மிக அதிகமாக இருந்தாலும், ஒரு பேரறிஞர், "ஜனநாயகம் சந்தடி மிகுந்தது; அந்த சந்தடி தான் எனக்குச் சங்கீதம்" என்று சொன்னார். ஆக சந்தடியை சங்கீதமாக எதிர்பார்க்கின்ற ஒரு ஜனநாயக வழிமுறை அமைப்பைக் கொண்டு ஒரு நாட்டிலே உடனடியாக தேர்தல்கள் நடத்தவேண்டுமென்று கேட்டு, அது தான் அடிப்படைத் தேவை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிர்வாகத்தைப் பொறுத்தவரை பல பெருமக்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அதன் தொடர்பாக நானும் நிறைய சொல்ல வேண்டும் என்றிருந்தாலும், நேரத்தை அனைவரும் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்பதற்காக நீண்ட நெடும் நாட்களுக்கு முன்பாக வகுக்கப்பட்ட சட்டத்திட்டங்களை வைத்துக்கொண்டு அவைகளை திருத்தாத நேரத்திலே இன்று பல பணிகள் செவ்வனே நடைபெற முடியவில்லை. உதாரணமாக சுகாதாரப் பணியாளர்கள். அவர்கள் தேவை அதிகமாக இருந்தாலும், அந்தத் தேவைகளை நிறைவு செய்கின்ற வகையிலே சட்டத்தைத் திருத்த வழிவகை காணவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகளைப் பொறுத்த வரையில் நகரங்களிலே ஒரு பெரிய ஆபத்து "ஏர்-பொல்லூஷன்". எண்ணூர், திருவொற்றியூர், வட சென்னை பகுதிகளில் புகைக் கூண்டுகளிலிருந்து வரக்கூடியப் புகைகளும், பெரியத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகிற விஷ நீரும் மனிதனுடைய வாழ்வுக்கு பெரிய தீங்கை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

சிற்றூர்களாவது முன்பு பச்சை பசேல் என்று இருந்தது; சாலைகள் எல்லாம் சுத்தமாக இருந்தது. இப்போது சாலைகள் செவ்வனே பராமரிக்கப்படாத காரணத்தினால் பல சாலைகள், பல நாட்களாக, பல ஆண்டுகளாக செப்பனிடப்படாது புழுதி படிந்து, காற்று வருகின்ற காலத்திலே எல்லாம் எல்லா இடங்களிலும் தூசும், தும்பும் பரவி விடுகின்றன. எனவே சிற்றூர் சுகாதாரமானது என்ற ஒரு பெயரும் போய்விட்டது. சிற்றூரும், பேரூரும் பெரிய நகரங்களும் இப்படி ஆகிவிட்டன என்று சொன்னால்மனித வாழ்விற்கு ஒவ்வாத சூழ்நிலை இப்பொழுது அமைந்திருக்கிறது. 'வான் காற்று நன்று' என்பான் பாரதி. 'உயிர் ரசம் என்பான் காற்றை' அவனே ஒரு இடத்திலே பாடுவான்' "ஊர் காற்றை மனிதர்கள் கெடுத்து விடுகின்றார்கள்"

என்று. ஊர் காற்றை மனிதர்கள் கெடுத்து விடுகின்றார்கள் என்பதற்கு காரணம் என்ன? எங்கேபார்த்தாலும் மண்ணிலே மலர்ந்த மலர்களாக மனிதன் பண்ணிவைத்திருக்கின்ற அலங்கோலங்களை நீங்கள் பார்க்கலாம். கடற்கரையிலே கூட கால் வைக்க முடியாத அளவிற்கு தரையிலே பூத்த தாமரைகள் ஏராளமாக—ஆக தரையிலே பூத்த தாமரைகள் மனிதன் நடமாடுவது என்பது முடியாத காரியமாக இருக்கின்ற காரணத்தினாலே ஊர் காற்றை மனிதர்கள் கெடுத்து விடுகின்றார்கள். என்று அவன் சொன்னான். எனவே ''ஃபேன்'' காற்று இருக்கின்ற இடங்களிலும் நமக்கு சுகாதாரம் இல்லை. ஃபேன் காற்று இருக்கின்ற இடத்திலேயும் சுகாதாரம் இல்லை என்கிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் இவைகளைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் நமது பாசத்திற்குரிய அமைச்சர் அவர்களோ, நமது நேசத்திற்குரிய அரசோ தவறாக எண்ணக் கூடாது. வீட்டிலே இந்த இடத்திலே கரையான் இருக்கிறது என்று நான் சொன்னால் நிலையை காப்பாற்றுவதற்காகத்தான், அந்த நிலையை எடுத்துச் சொல்கின்றேன். நிலையிலே கரையான் புற்று இருக்கிறது என்று சொன்னால் அதைத் தட்டிவிடுங்கள் ஏனென்றால் அந்த நிலை காப்பாற்றப்பட வேண்டும். நான் கதவு திறந்து கிடக்கின்றது என்று சொல்வதற்குரிய காரணம் களவு போய் விடக்கூடாது என்பது தானே தவிர, குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காக இல்லை. ஏனென்றால் அதிகாரிகளை வைத்து செய்கின்ற போது,—எல்லா அதிகாரிகளும் நல்ல அதிகாரிகளாக அமைந்து விடவில்லை — சில அதிகாரிகள் தன்னிறைவுத் திட்டத்தை, ''அதிகாரி தன் நிறைவுத் திட்டமாக'' நினைத்து செயல்படுவதை எல்லாம் நான் பார்க்கிறேன். ''அதிகாரி தன் நிறைவுத் திட்டம்'' என்று நினைத்துக் கொண்டிருப்பதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா? உங்களுக்குத் தெரியாமல், உங்கள் கண்களை மூடி மறைக்கின்ற அளவிற்கு எதை எதையோ செய்து காரியம் ஆற்றுகிறான். சாலை போடாமலேயே சாலை போட்ட விற்பன்னர்கள் எல்லாம் உண்டு. ஒரு இடத்திலே கல்லை குவிக்கின்றார்கள். அந்த இடத்திலே சாலை போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுவதாக கணக்கு. நாளைக்கு ஒரு லாரி வந்து இந்த கல்லை எடுத்துக்கொண்டு இன்னொரு இடத்தில் போட்டு அங்கே போடுவதாக ஒரு கணக்கு. ஆக எவ்வளவு சிறப்பாக ''ஒரு கல்லிலே இரண்டு மாங்காய்'' என்று சொல்வார்கள்—இப்போது ஒரு கல்லிலே இரண்டு கல்லை கொண்டு வருகிற ஆற்றல் படைத்தவர்களாக நம்மிலே பலர் இருக்கின்றார்கள், என்பதை நீங்கள் தெரியாமல் இருக்க மாட்டீர்கள், அனைத்தும் தெரிந்தவர்கள். அனைத்தும் உங்கள் பார்வைக்கு வந்திருக்காது என்று இந்த சட்டமன்றத்திலே நான் இதை சொல்ல விழைகிறேன். இந்தச் சாலை ஒரு பக்கம் இருந்தால், அந்த சாலையினுடைய இரு பக்கங்களில் நிழல் தருகிற மரங்களை நீங்கள் வைக்கின்றீர்கள் நல்லது. உங்களுடைய அதிகாரத்திற்குட்பட்டதை நீங்கள் செய்யவேண்டுமென்று நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். நிழல் தருகிற மரங்கள் கனியும் தருகிறது; கனி தருகிற மரங்கள் நிழல் தர மறுப்பதில்லை. சில மரங்கள் நிழல் மட்டுமே



தருவேன், கனி தர மாட்டேன் என்று சொல்லும்; ஆனால் கனி தருகின்ற மரங்கள் நிழலும் தருவோம் என்று சொல்லும். அந்த நிழல் தருகின்ற மரங்களை வைக்கின்ற பொழுது அது கனி தருகின்ற மரங்களாகவும் இருந்தால் நல்லது என்று நினைத்துச் சொன்னேன். நாங்கள் எல்லாம் பல தடவைகள் உங்களுடைய பார்வைக்கு வரவேண்டும் என்பதற்காகத்தான் எடுத்துச் சொன்னதுண்டு. எங்கே பார்த்தாலும் பன்றி வாகைகள்தான் வைத்துக் கொண்டிருக்கிறோம். வாகைகள் நமக்கு வேண்டும் நாம் வாகை சூடவும் வேண்டும், ஆனால் மரங்கள் எல்லாம் வாகையாக இருக்க வேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தளதளவென செழித்து வருகின்ற புங்கை மரம் இருக்கிறது, அதிலே பலன் கிடைக்கும், வேப்ப மரம் இருக்கிறது, அதிலே பலன் கிடைக்கும், ஏனென்றால் புளிய மரம் வைக்க வேண்டுமென்று சொல்வேன். அதிக நாளானாலும் இடையிடையே புளிய மரங்களை வையுங்கள், மற்ற இடங்களிலே புங்கை, வேம்பு வைக்கப் படவேண்டுமென்ற என்னுடைய கனிவான எண்ணத்தை நான் வெளியிட விரும்புகிறேன்.

சாலைகளைப்பற்றிச் சொல்லப்படும்போது, சில பாலங்களைப்பற்றிச் சொன்னால், சில பாலங்கள் எடுப்பாக அழகாக இருக்கின்றன. ஜெமினி ஸ்டூடியோவுக்குப் பக்கத்திலே உள்ள பாலத்தைப் பார்த்தால் மிக அழகாக இருக்கிறது, மேலே கார்கள் சரசரவென்று போய்க்கொண்டிருக்கின்ற காட்சி இருக்கிறதே மிக நன்றாக இருக்கிறது. ஆனாலும் கூட இப்படிச் சுற்றி இப்படி வாருங்கள் என்று கோடிட்டுக் காட்டினாலும் பலர் போவதில்லை. அது இல்லாமல் இருந்தால் என்ன நடந்திருக்கும் ஒரு கணப் பொழுது ஒருவன் நிற்க என்று சொல்லியிருந்தால் ஒரு கணம் நின்று அவன் போயிருப்பான், அதற்கு மேலே தாமதம் ஆவதற்கு வழியில்லை. நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், ஸ்டான்லி மெடிக்கல் காலேஜுக்குப் பக்கத்திலே இருக்கின்ற ரெயில் தண்டவாளத்தைக் கடப்பதற்கு முன்னாலே பல பிரசவிக்க வருகின்ற தாய்மார்கள் தண்டவாளத்திற்கு அருகே இருக்கின்ற கேட்டுக்குப் பக்கத்திலேயே யாரும் கேட்காமலேயே பிள்ளைகளைப் பெற்றுவிடுகிற காட்சியை நாம் பார்க்கிறோம். ஆகவே, கேட்டு சாத்தியிருக்கிற காரணத்தினால் ஆஸ்பத்திரிக் கதவுகள் திறந்திருந்தாலும் கூட பிள்ளைகள் அங்கே பிறந்து விடுகிற நிலை. அதற்குப் பக்கத்திலே இருக்கிற இராயபுரம் சாலையோ மிகவும் சிறியதாக இருக்கிறது. இராயபுரம் சாலை சிறியதாக இருந்து துறைமுகத்தினுடைய இரயில்வே கேட்டு முடி, ஸ்டான்லி ரெயில்வே கேட்டு மூடப்பட்டிருந்தால் இராயபுரத்திற்கும், திருவொற்றியூருக்கும் ஓடுகிற எத்தனை வாகனங்கள் திக்குமுக்காடுகின்றன. மிக அதிகமான செத்தைகள் இருக்கின்ற இடத்திலே தண்ணீர் போகாமல் திணறுகிறதே அதைப்போல கார்கள் திணறிக்கொண்டு இருக்கின்ற காட்சியை நீங்கள் பார்க்கலாம். நீங்கள் பாலம் கட்டுவதை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. தேவையான இடங்களிலே எண்ணூர் போன்ற இடங்களிலே, மாட்டுச் சந்தை போன்ற இடங்களிலே தேவையாக

இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன். நத்தம் என்ற ஒரு ஊர் இருக்கிறது மதுரை மாவட்டத்திலே துவரங்குறிச்சிக்குப் போகிற வழியிலே கோசிக்குறிச்சி என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரிலே 33 ஆண்டுக்காலமாக ஒரு பாலம் வேண்டுமென்று கேட்கிறார்கள். பெரிய பாலம் கூட இல்லை. அதற்குக் கீழே பெரிய நதியும் இல்லை. சில இலட்சங்களைச் செலவழித்து அந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுத்துவிட்டால் 13 கிலோ மீட்டர் சுற்றி வருகின்ற வழி மீதமாகிறது. 13 கிலோ மீட்டர் சுற்றி வருகின்ற வழி மீதம் ஆகிறது என்று சொன்னால், எவ்வளவு தூரத்திற்கு எரிபொருள் மிச்சமாகிறது என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்தாற் போல் நாம் செய்யக்கூடிய காரியங்களை கால வரையறைக்குள் செய்துவிட வேண்டும். கழிப்பிடங்களை எடுத்துக்கொள்ளுங்கள். தேர்தல் வாக்குறுதி கொடுக்கப்பட்டது கழிப்பிடங்கள் பற்றி. பகல் நேரத்திலே தாய்மார்கள் வெளியே வர இயலாது, சூரிய வெளிச்சம். இரவு நேரத்திலே வருகிறபோது திடீரென்று நாம் முன்பெல்லாம் காட்டுக்குள்ளே போகிறபோது முயல் குட்டிகள் பயந்து பயந்து பதுங்கிப் பதுங்கி ஓடுவதைப் போல் திடீரென்று கார் வெளிச்சம் வந்தவுடன் சாலையின் இரு மருங்கிலிருந்தும், மிகக் கஷ்டப்படுகிறார்கள் தாய்மார்கள். காரணம் என்ன என்று சொன்னால் அவர்களுக்கு வேறு ஒதுங்கும் இடங்கள் இல்லை, கழிப்பிடங்கள் இல்லாத காரணத்தால்—கழிப்பு இடம் நாம் செய்துகொண்டிருக்கிற நேரத்திலே—அவர்கள் அன்றாட தேவையான கழிப்பிடங்கள்கூட இல்லாத சூழ்நிலையை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். பல இடங்களில் அவர்களுக்கு மறைவிடம், செடி, கொடி இல்லாமல் போய் விட்டது. எல்லா இடங்களிலும் வீடு கட்டிவிட்டோம். மொட்டை மாடியிலே தோழர்கள் நின்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தாய்மார்கள் படுகின்ற அல்லலைப் போக்க ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முக்கியமான ஒரு செய்தியை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது, மண்டபத்தையும் பாம்பனையும் இணைக்கின்ற பாலத்தைப்பற்றிய செய்தி. ஏறக்குறைய 550 இலட்ச ரூபாய் செலவிலே அதைக் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு இருக்கிறது 1974 ஆம் ஆண்டிலே. 1974 ஆம் ஆண்டிலே கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு ஒரு ஒப்பந்தகாரருக்குக் கொடுக்கப்பட்டது. அந்த ஒப்பந்தக்காரர் கட்டிக்கொண்டு வருகின்ற நேரத்திலே காலதாமதம் ஏற்பட்டது என்ற குறை அங்கே இருக்கிறது. உண்மைதான் காலதாமதம் ஏற்படக் கூடாது. ஒப்பந்தக்காரர்கள், கால தாமதம் ஏற்பட, ஏற்பட பண வீக்கத்தினாலே மக்களுடைய வரிப் பணம் அதிகமாக அங்கே போவது வரவேற்கத் தக்கதல்ல. காலதமாதம் இல்லாமல் கட்டப்பட வேண்டும். அதைப்பற்றிய செய்திகளைச் சேகரித்துப் பார்க்கிற நேரத்திலே காலதாமதம் ஏற்படுதற்கு என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால் அவர்கள் கொடுத்த வரைபடத்தை—மண்டபம் என்ற பகுதியை எடுத்துக்



(பிற்பகல் 12-30)

கொண்டால் ஒரு பகுதியிலே இருக்கின்ற வரைபடத்தை மண்டபத்தில் இருக்கின்ற வரைபடத்தை அப்ருவ் பண்ணுவதற்கு—அங்கீகரிப்பதற்கு ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகள் ஆகிவிட்டதாகவும் பாம்பன் பகுதியிலே இருப்பதனை அங்கீகரிப்பதற்கு 11 மாதங்கள் ஆகிவிட்டதாகவும், அந்த முழுப் பாலத்தையும் இன்னொரு பகுதியினுடைய வரைபடத்தை இன்னும்கூட அங்கீகரிக்கவில்லை என்று நமக்குத் தகவல்கள் கிடைக்கின்றன.

ஆக, இந்த வரைபடத்தை அங்கீகரிப்பதற்கு ஏறத்தாழ இரண்டாண்டுகளுக்கு மேலே ஆகிவிட்டால் காலதாமதம் வருகிறது. ஆனால் காலதாமதம் கூடாதுதான். காலதாமதத்திற்குக் காரணமாக யார் இருந்தாலும் அது தவறு என்ற காரணத்திற்காக, அதற்குக் காரணம் அரசா அல்லது அதற்குக் காரணம் ஒப்பந்தக்காரர்களா என்று பார்க்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று நான் கருதுகிறேன். இருப்பினும் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது.

காலதாமதம் ஏற்பட்டதோடு அல்லாமல், இடையிலே, 1978 ஆம் ஆண்டிலே புயல் அடித்திருக்கிறது. எந்தப் புயல் அடித்தாலும் நமக்குத் தேவைப்படுவது பாலம்; எந்தப் புயல் அடித்தாலும் நமக்குத் தேவைப்படுவது உடனடியாகப் போக்குவரத்து. வெளியூர்களிலேயிருந்த வந்து கொண்டிருக்கிற மக்கள் காரிலே அங்கே போய் இறங்குகின்ற ஒரு வசதியினைச் செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்ற உள்ளார்ந்த விருப்பம் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஆனால், அவ்வாறு நிறைவேற்றப்படவில்லை என்று சொல்லுகின்ற காரணத்திற்காக, காலதாமதத்திற்கான காரணத்தைக் கேட்க, காரணத்தை ஒப்பந்தக்காரர் சொல்ல, ஒப்பந்தக்காரர் சொன்ன காரணத்தை ஏற்றுக்கொண்டு, எந்த நேரத்தில் அது முடிந்திருக்க வேண்டுமோ அந்த முடிந்திருக்க வேண்டிய நேரத்திலேயிருந்து எக்ஸ்டென்ஷன் கொடுக்கப்பட்டு விட்டது. அவர்களுக்கு இன்னும் நீங்கள் காலம் எடுத்துக்கொள்ளலாம். என்று அரசே கொடுத்திருக்கிறது.

அப்படி அரசு கொடுத்திருக்கின்ற நிலையிலேதான், இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற பிரச்னை, அந்தப் பாம்பன் பாலம், 1979-லே அதற்குரிய எக்ஸ்டென்ஷன் கொடுக்கப்பட்டு, அந்தக் கட்டுமான வேலைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே அதற்குக் கொடுக்கப்பட வேண்டிய பணம் அவர்களுக்குக் கிடைக்காத காரணத்தினாலே அவர்கள் மனுவிற்கு மேல் மனுப் போட்டு, இந்த ஒப்பந்தம் ஒரு வேளை தனக்குப் பாதகமுடையதாக ஆகிவிடுமோ என்ற எண்ணத்திலே நீதிமன்றத்திலே வழக்கிருக்கிறது.

நான் இங்கே கேட்க விரும்புவது, பல ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்படி நடப்பதில்லை, அது கண்டிக்கத்தக்கது; பல ஒப்பந்தக்காரர்கள் செய்நேர்த்தியாகக் காரியத்தை ஆற்று

வறில்லை; அதுவும் கண்டிக்கத்தக்கது. ஆனால் எந்தத் தனி ஒப்பந்தக்காரரும் ஏதோ அநீதியின் காரணத்தினாலே பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக மட்டுமே இந்தப் பேரவையிலே இதனை நான் சுட்டிக்காட்டுகிறேன்.

நீதிமன்றத்திலே இது இருந்துகொண்டிருக்கின்றபொழுது இந்த ஒப்பந்தக்காரர்களுடைய ஒப்பந்தத்தை ரத்து செய்திருக்கிறார்கள். நீதிமன்றத்திலே ஒரு மன்றாட்டு இருக்கின்ற நேரத்திலே, நீதிமன்றத்திற்கு அது கொண்டுபோகப்பட்ட நிலையிலே அது ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்கின்ற தகவல் நமக்குத் தெரிகிறது. அதனை அரசு சரிபார்க்கும் என்று நான் கருதுகிறேன்.

இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ததற்கு என்ன காரணங்களைச் சொல்கிறார்கள் என்றால், அவர்கள் செம்மையாக நடந்து கொள்ளவில்லை அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள்ளே முடிக்கவில்லை என்று. இங்கே அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் டெல்லியிலே உயர்மட்ட அதிகாரிகள் கூடிய ஒரு குழுவில் அந்த ஒப்பந்தக்காரரைப்பற்றிப் பரிசீலித்து அவரே இந்த வேலையை மீண்டும் செய்யலாம் என்ற ஒரு கருத்து அங்கே எழுந்ததாகவும் அதன் அடிப்படையிலே உடனடியாக 20 இலட்சம் ரூபாய் அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுப்பதிலே தப்பு இல்லை என்று முடிவு செய்ததாகவும் அறியப்படுகிறது. அதோடு அந்த ஒப்பந்தக்காரர் தொடர்ந்து இருக்கலாமா என்ற கருத்து அறிவதற்காக—லீகல் ஒபினியனுக்காக அட்வகேட்—ஜெனரலிடம் போனதாகவும், அட்வகேட்—ஜெனரலும் அவரிடம் இருப்பதிலே தவறில்லை என்று சொன்னதாகவும் ஒரு செய்தி வந்திருக்கிறது, ஆக, இந்த இரண்டையும் நாம் பார்க்க வேண்டும். உயர் மட்டக் குழு அதற்குச் சிபாரிசு செய்து, 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கலாம் என்று சொன்னது ஒரு பக்கம்; அட்வகேட்-ஜெனரல் இந்த ஒப்பந்தக்காரரரிடமே இந்தப் பணியிருப்பதிலே தவறில்லை என்று சொன்னது ஒருபக்கம்; நீதிமன்றத்திலே வழக்கு இருப்பது ஒரு பக்கம்.

இப்படி மூன்று பக்கங்களில் ஒரு சூழ்நிலை இருக்கின்றபொழுது, அரசின் பக்கத்திலேயிருந்து அது ரத்து என்று வந்திருக்கிறதே, இந்த ரத்து என்று வந்ததற்கு வேறு காரணம்கூட இருக்குமோ? உதாரணத்திற்காகச் சொல்ல வேண்டுமென்றால், 1978 ஆம் ஆண்டு அடித்த புயலிலே எனக்கு இவ்வளவு இவ்வளவு நஷ்டம் என்று ஒப்பந்தக்காரர் குறிப்பிட்டியிருக்கிறார். ஒப்பந்தக்காரருக்கு எவ்வளவு நஷ்டம் என்பது அல்ல நமக்கு முக்கியம். இந்தப் புயல்அடித்ததாலே உடனடியாகச் செய்யப்பட வேண்டிய பால வேலை தடைப்பட்டு விட்டது. ஆனால் ஒப்பந்தக்காரர் தனக்கு ஏற்பட்டிருக்கின்ற இழப்பு—நஷ்டயீடு நிவாரணம் கேட்கிறார். நிவாரணம் எத்தனை இலட்சம் வேண்டுமென்று அவர்கள் கேட்டார்களோ நமக்குத் தெரியாது; அரசாங்கம் எத்தனை



இலட்சம் கொடுப்போம் என்று சொன்னதோ நமக்குத் தெரியாது ஆனால் அன்று புயல் அடித்ததா இல்லையா என்பதை இப்பொழுது பிரச்னையாக ஆக்கியிருக்கிறார்கள். 1978-லே புயல் அடித்த வேகம் என்ன என்று பார்க்கின்றபொழுது சென்னையிலே இருக்கின்ற வானிலை நிலையம், (Meterological Department) அரசாங்கத்திற்குக் கொடுக்கின்றபொழுது 56 கிலோமீட்டர் வேகத்திலேதான் காற்றடித்தது என்று சொல்கிறது. ஏனென்றால் புயல் என்று சொல்லக்கூடாது 56 கிலோ மீட்டர் வேகத்திலே அடிப்பதை புயல் என்று சொல்லக்கூடாது.

56 கிலோமீட்டர் வேகத்திலேதான் அடித்தது என்பது அரசுக்குக் கொடுத்திருக்கிற சான்றிதழ். ஒப்பந்தக்காரருக்கு 85 கிலோமீட்டர் வேகத்திலே அடித்ததாகச் சான்றிதழ் கொடுத்திருக்கிறது. அரசைப் பார்த்து 56 கிலோ மீட்டர் வேகத்திலே வீசிய காற்று ஒப்பந்தக்காரரைப் பார்த்து, 85 கிலோமீட்டர் வேகத்தில் வீசியது என்று சொன்னால், இந்தக் காற்றுக்கு என்ன ஒர வஞ்சனை என்று பாருங்கள்.

அடுத்தாற்போல, பூனாவிலிருந்து வந்திருக்கிற அந்த வரைபடம் என்ன சொல்கிறது தெரியுமா? 125 கிலோமீட்டர் வேகத்திலே வீசியதாகச் சொல்கிறது. இன்னும் பாருங்கள். அங்கிருந்த பத்திரிகைகள் என்ன எழுதியிருக்கின்றன? 140 கிலோ மீட்டர் வேகத்திலே வீசியதாக எழுதியிருக்கின்றன. ஒரே காற்று, ஒரே இடத்தில் 56 கிலோ மீட்டர் வேகத்திலே, 85 கிலோ மீட்டர் வேகத்திலே, 125 கிலோ மீட்டர் வேகத்திலே, 140 கிலோ மீட்டர் வேகத்திலே. இப்படியெல்லாம் வீசியதாக ஒவ்வொருவரும் ஒரு ரிப்போர்ட் கொடுப்பது என்று சொன்னால் அரசாங்கத்தை நான் அன்போடு கேட்டுக் கொள்வேன். இப்படிப் பட்டவைகள் எல்லாம் நமக்கு ரொம்பக் கெட்ட பெயரை ஏற்படுத்தும். நியாயம் எது என்பதனைப் பார்த்து, நியாயத்தை வழங்கவேண்டும். பொதுமக்கள் நலன் பாதிக்கப்படக் கூடாது. ஒரு ஒப்பந்தக்காரரையோ, அல்லது ஒரு பொறியியல் வல்லுநரைப் பற்றியோ நமக்குக் கவலை இல்லை. பொதுமக்களுடைய நலன்—ஒரு தனி நபராக இருந்தாலும் அவருக்கு நீதி கிடைக்கவேண்டுமென்பதுதான். ஆனால், அந்தத் தனி நபரும் சமுதாயத்திற்கு ஒட்டுமொத்தத்தில் நன்மை செய்கிறாரா என்று நீங்கள் பார்ப்பீர்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே சொல்கிறேன், இந்தப் பாலம் விரைந்து முடிவு செய்யப்பட வேண்டுமென்ற கவலை என் பக்கத்திலே இருக்கிற இரும்புப் பாலம், ரெயில் போகின்ற பாலம், 1907-லே கட்டப்பட்டது. கட்டுகின்ற நேரத்திலே அதற்கு ஆயுள் 25 வருஷம்தான் கொடுத்திருக்கிறார்கள். எனவே அதனுடைய ஆயுள் அதனுடைய தகுதி, அதனுடைய வலிமை, 1932-லேயே முடிந்து விட்டது. முதலிலேயே அதனைக் கட்டியவர்கள் 25 ஆண்டுக்காலம்தான் அதற்கு டைம் கொடுத்திருக்கிறார்கள். ஆக

1932-லேயே அது முடிந்து விட, நாம் இனி ஒரு பாலத்தைக் கட்டுவதிலே இவ்வளவு தாமதங்கள் ஏற்படுமானால், பொது மக்களுக்கு ஏற்படுகிற இன்னல்களையும், இடர்களையும், துன்பங்களையும், துயரங்களையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான் உங்கள் முன்னாலே இந்தக் கருத்துக்களை வைக்கிறேன்.

அன்பிற்குரிய நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவைகளை எல்லாம் கருத்திலே கொண்டு, தேர்தல் காலத்திலே கொடுக்கப்பட்ட பல வாக்குறுதிகளை நல்ல நோக்கத்தோடு தான் நாம் கொடுத்தோம். செய்ய வேண்டுமென்ற எண்ணத் தோடுதான் நீங்கள் இருக்கிறீர்கள். நிச்சயமாக நீங்கள் செய் வீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு. குடிதண்ணீர் கொடுக்க வேண்டாமென்றா நீங்கள் நினைப்பீர்கள்? விளக்கு களை எரிக்க வேண்டாமென்றா நீங்கள் நினைப்பீர்கள்? இவ்வளவையும் செய்ய முடியும். எப்பொழுது செய்ய முடியும்? தேர்தல் நடந்து, அந்த மக்களிடம் வாக்குகள் வாங்கினோமே என்று எண்ணுகின்ற அந்த நமது பிரதிநிதிகள், மக்கள் சார் பாளர்கள், மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கின்றவர்கள் வருகின்ற நேரத்திலே அவைகள் எல்லாம் நடக்கும், எனவே சிற்றூர். பேரூர், என்று இல்லாமல், எல்லா இடங்களிலும் நாம் நலன் செய்ய வேண்டுமென்று விரும்புகின்ற நேரத்தில், உங் களுடைய எண்ணத்தை, முதலிலே சொன்னதைப் போலே, எண்ணம் இனிது, அதனை எடுத்துச் செய்வது கடினம் என்று சொல்கின்ற வகையில், உங்களுக்கு ஏற்ற ஒரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்கிக் கொண்டு, தேர்தலுக்கும் உத்தரவிட்டு, தமிழகம் நல்ல வளமாக ஒரு இடம் என்று மற்றவர்கள் போற்றிப் புகழுகின்ற வகையிலே காரியம் ஆற்ற வேண்டுமென்று உங் களுக்குப் பணிவான என்னுடைய வேண்டுகோளைத் தெரிவித்து அதற்காக உங்களுடைய மானியக் கோரிக்கையிலே நீங்கள் விரும்புகின்ற வகையிலே நிதியினைப் பெறுவதற்கு நாங்களும் ஆதரிக்கிறோம் என்று சொல்லி நன்றி, தெரிவித்து அமர்கிறேன், வணக்கம்.

*திரு. எம். சின்னராஜ்: பேரவை மாற்றுத் தலைவர் அவர் களே, சமுதாய வளர்ச்சிப் பணி, நகராட்சி நலம், மற்றும் சாலைகளும், பாலங்களும் ஆகிய இனங்களின் மீதான மானியக் கோரிக்கையை வரவேற்று எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விழைகிறேன். இந்தச் சமுதாய வளர்ச்சிப் பணியில் பேரூராட்சிகள் 605-ம், ஊராட்சி மன்றங்கள் 12,604-ம், நகரி யங்கள் 13-ம் ஆக, கிட்டத்தட்ட 3.21 கோடி மக்கட்தொகையை உள்ளடக்கிய ஒரு சமுதாய மறுமலர்ச்சித் திட்டத்திற்காக எடுத்துக் கொண்டிருக்கிற மானியம்தான் இன்று சமுதாய வளர்ச்சிப் பணி என்று குறிப்பிடப்படுவதாகும். ஆகவே, 4 கோடிக்கும் மேற்பட்ட மக்கட் தொகையில், கிட்டத்தட்ட 3½ கோடி மக்களுடைய நலனை இன்று வழிப்படுத்துகிற ஒரு துறையாக இந்தச் சமுதாய வளர்ச்சிப் பணி இருக்கிறது என்ற





காரணத்தால், உண்மையிலேயே இந்த வளர்ச்சிப் பணி பெறுகிற வெற்றிதான் நாட்டு மக்களின் நலனில் நாம் எடுத்துக் கொள்கிற முயற்சியின் வெற்றி என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, இன்று 376 ஊராட்சி ஒன்றியங்களையும் அதல் வழி நடத்துகிற கோட்டங்களாக, 51 கோட்டங்களின் அமைப்பும், 1958-ஆம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், கிராம இராஜ்யம் ஒன்றை அமைக்க வேண்டு மென்ற அந்தத் தத்துவத்தின்கீழ் அமைக்கப்பட்ட ஒரு வளர்ச்சிப் பணித் திட்டங்களாகும். ஆனால், இந்த வளர்ச்சிப் பணிகள் அந்தக் காலத்திலே துவக்கப்பட்டிருந்தாலுங்கூட, நாளாவட்டத் தில், அதனுடைய நோக்கங்கள் ஈடேறாத வகையில், இந்த ஊராட்சி ஒன்றியங்களின், ஊராட்சிமன்றங்களுடைய சுயாட் சித் தன்மைகள் பல்வேறு வகையிலும் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் அருள்கூர்ந்து கவனிக்க வேண்டும். இன்று ஊராட்சி மன்றங்கள் மேற்கொண்டிருக்கின்ற திட்டங்களில் கல்விப் பணி இருக்கிறது.

(பிற்பகல் 12-40)

சுகாதார அமைப்புகள் இருக்கின்றன. தாய்சேய் நல விடுதி
கள் இருக்கின்றன. குடி நீர் திட்டங்கள் அந்த ஊராட்சி
ஒன்றியங்களால், நிறைவேற்றப்படுகின்றன. அதேபோல் சாலை
பராமரிப்புகளும், வேளாண்மை விரிவு அலுவலர்களும் அதில்
செயல்பட்டு வருகின்றனர். அதேபோல கூட்டுறவுத் துறையைச்
சேர்ந்த அதிகாரியான ஈ.ஓ. (சி) என்ற அதிகாரி இருந்து கூட்டுற
வுத் துறையைச் சேர்ந்த பணிகளை நிறைவேற்றி வருகிறார்.
இதைத் தவிர அரசின் வளர்ச்சித் திட்டங்களான எஸ்.எப்.டி.ஏ.,
ஐ.ஆர்.டி.பி. போன்ற திட்டங்களையும் இந்த ஊராட்சி ஒன்றி
யங்கள் செயல்படுத்தி வருகின்றன. இப்படி இருக்கும்போது,
இன்று அவைகள் செயல்படுத்தாத இரண்டே இரண்டு பணிகள்
எது என்று கேட்டால் அரிசன நலத்துறையும், வருவாய்த் துறை
யும் நிறைவேற்றி வருகின்ற பணிகள்தான். மாநில அரசின்
அத்தனை திட்டங்களையும் செயல்படுத்தும் அமைப்பாக இந்த
ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. ஆகவே, எந்த நோக்கத்
திற்காக வட்டார வளர்ச்சி மன்றங்கள் டிஸ்டிரிக்ட் போர்ட்
அபாலிஷ் செய்கிறபோது ஏற்படுத்தப்பட்டனவோ அந்த,
நோக்கம்நிறைவேற்றப்பட வேண்டுமானால், இப்போது இருக்கும்
தாலுக்கா ஆபீஸ் வேலையும், அரிசன நலத்துறை செய்யும்
பணியும் இந்த ஊராட்சி ஒன்றியங்களிடத்தில் ஒப்படைக்கப்
படவேண்டும். இப்போது இந்த இரண்டு அமைப்புகள் இருப்பது
மக்களுக்கு மிகவும் இடற்பாடாக இருக்கிறது. இன்றைக்குத்
தாலுக்கா ஆபீசில் என்ன நடைபெறுகிறது என்று சொன்னால்,
நிலவரி நிர்வாகமும், நிலவரிக் கணக்கிடுவதும், நிலவரி வசூலிப்
பதும், அடங்கல் போன்ற கணக்குகளை வைத்திருப்பது போன்ற
பணிகளைத்தான் செய்கிறது. இதைத் தவிர, ஓரளவிற்குப் பங்
கீட்டு முறையையும் அந்தத் தாலுக்கா அலுவலகங்கள் செய்

கின்றன. ஆகவே, அந்தப் பணிகளையும் ஊராட்சி ஒன்றியங்கள் செய்வதற்கு மாற்றம் செய்வதன் மூலம், அந்த அமைப்புகள் கிட்டத்தட்ட அனைத்துப் பணிகளையும் முழுக்க முழுக்க செய்கிற அமைப்பாக மாற்றி, அதன் மூலம் கிராம சுய ஆட்சி நடைபெறுவதற்கு தமிழகம் முன் உதாரணமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மக்கள் இன்றைக்கு ஒரு வேலைக்காக தாலுக்கா ஆபீசுக்கும், மற்ற அனைத்து வேலைகளுக்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு செல்கிற நிலைமை மாற்றப்படக் கூடும். அப்படிச் செய்கிறபோது, எல்லா வளர்ச்சிப் பணிகளுமே ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக நடைபெறுவதற்கு இயலும். அதுவும் அங்கே ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இருப்பதன் காரணமாக மக்களின் நேரடித் தேவைகளும், குறைகளும் போக்குவதற்கான வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த அரசு அருள் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தன்னிறைவுத் திட்டத்தை நமது ஆட்சி மிக நல்ல முறையில்—அமைச்சருக்கே உரிய வேகத்தோடு—செயல்படுத்தி வருவதை யாருமே பாராட்டாமல் இருக்க முடியாது அந்தத் தன்னிறைவுத் திட்டத்தில் இன்று குடிநீர் வழங்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. ஆனால் குடிநீர் வழங்கும் திட்டத்தில் உள்ள மோட்டார் பம்பு செட்டுகள், மற்றும் உள்ள இயந்திர சாதனங்கள் ஆகியவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக அதிலே ஒரு நிறைவை எய்த முடியவில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அன்று ஆளுநர் ஆட்சி இருந்தபோது, ஆளுநரின் ஆலோசகர்களாக இருந்தவர்களிடத்தில், மோட்டார் பம்பு செட்டுகள் பழுது பட்டு விடுகின்றன, ஆகவே கிராமக் குடிநீர் திட்டம் பாதிக்கப்படுகிறது என்று சொல்லிய நேரத்தில், அந்தப் பொறுப்பை அதற்கென்று இருக்கின்ற குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படையுங்கள் என்று ஆலோசிக்காமல் உத்தரவிட்டதன் விளைவாகத்தான் இன்று குடிநீர் வடிகால் வாரியம் அந்தப் பணியைச் செய்து வருகிறது. ஆனால் அந்த வாரியத்திடம் இந்தப் பணிகளைச் செய்வதற்கான போதுமான பொறுப்பான அதிகாரிகள் இல்லை, போதுமான சாதனங்கள் மெட்டீரியல்ஸ் இல்லை, போக்குவரத்து சாதனங்கள் இல்லை, பிட்டர்கள் இல்லை, இந்தப் பணிகளை எல்லாம் மேற்பார்வை பார்க்க ஒரு அடிஷனல் டிவிஷனல் இன்ஜினீயர் என்ற அதிகாரி இருக்கிறார். அவருக்குக் கீழே கிட்டத்தட்ட 200-க்கு மேற்பட்ட கிராமங்கள் குடிநீர் பராமரிப்புக்காக ஒப்படைக்கப்பட்டது இருக்கிறது. ஆகவே, பிராக்டிகல்லாக செயல் முறையில் அவர்களால் இதை நிர்வகிக்க முடியாத நிலைமை இருக்கிறது. இந்தக் குறைபாடுகளை அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் குறைபாடுகளை நீக்குகிற வகையில் இந்தக் குடிநீர் திட்டத்தைப் பராமரிக்கிற பணியை தயவு செய்து ஊராட்சி ஒன்றியங்களே மீண்டும் ஏற்றுக் கொள்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். அல்லது



குடிநீர் வடிகால் வாரியம் அதற்குரிய தகுதியைப் பெறுகிற வரையில் அந்த ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் இருக்க உத்தரவிட வேண்டும். என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போது தான் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பல பிரச்சினைகள் தீரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் இன்று தன்னிறைவுத் திட்டத்தில் முக்கியமாக இருப்பது—மதிப்பிற்குரிய தலைவர் குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல—கழிப்பிடங்கள். கழிப்பிடங்கள் அந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். ஒரு நாகரீகமான வளர்ச்சிக்கு அடையாளம், முன்னேறிவருகிற இந்த நாட்களில் கழிப்பிடங்கள் முதலிடம் வகிக்கின்றன. இன்று கோவையைச் சுற்றி இருக்கிற கிராமங்கள் எல்லாம் பெருகி வருகின்ற நகரங்களாக மாறி வருகின்றன. பெரியநாய்க்கன்பாளையம், துடியலூர் போன்ற பகுதிகள் எல்லாம் முனிசிபாலிட்டி போன்ற அமைப்புகளைக் கொண்டு இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் எல்லாம் பப்ளிக் கன்வேயன்சுகள் மிக மிக அத்தியாவசியமான தேவையாகும். ஆகவே, வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகையைக் கொண்டு இருக்கிற ஊராட்சி மன்றங்களிலாவது பொதுக் கழிப்பிடங்கள் ஏற்படுத்துவதற்கான, திட்டங்களை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த இந்தக் குறைபாடுகளை'' தீர்க்கிற அதே நேரத்தில், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் சாலை வசதி, குடிநீர் வசதி ஆகியவைகளை அமைக்கிற நேரத்தில், அதைச் சார்ந்து இருக்கிற அரிசன மக்கள் நிரம்ப வாழ்ந்துக் கொண்டு இருக்கின்ற பகுதிகளில் அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கான திட்டங்களை இதோடு இணைக்க வேண்டும். இதை அரிசன நலத்துறை நிர்வகிப்பதாக இருந்தாலும் கூட, தன்னிறைவுத் திட்டத்தை மேற்கொள்கிற ஒன்றியங்களில் அரிசன மக்கள் குடியிருக்கும் இடங்களில் அவர்கள் 50–100 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிற இருப்பிடங்களை அவர்களுக்கு பட்டா செய்து கொடுகக வேண்டும் இந்த ஓராண்டு காலத்திற்குள் என்று தெரிவித்து, அதையும் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்க வேண்டும்.

தன்னிறைவுத் திட்டம் என்றால் உள்ளாட்சித் துறையால் நிறைவேற்றப்படுகிற திட்டம் என்று இல்லாமல் அரசு துறைகள் அனைத்தும் சேர்ந்து அந்தக் கிராமத்தை தன்னிறைவு செய்வதற்காக எடுத்துக் கொள்கிற திட்டம் என்கிற வகையில் அந்தத் துறை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை அந்தத் துறையின் பொறுப்பில் இருப்பவர்களே தீர்க்கின்ற வகையில் இணைத்து, ஏற்றுக் கொள்வதன் மூலம் பல பிரச்சினைகளை நாம் நிறைவோடு விரைவாக முடித்து விடமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாநகராட்சியாக ஆக இருக்கிற கோவை நகராட்சியில் உள்ள பிரச்சினையைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். கோவை நகராட்சியைப் பொறுத்தவரையில், அது மாநகராட்சியாக ஆக்கப்படுகிறது என்றாலும், மாநகராட்சி ஆக்ட் நிறைவேற்றப்படுவதற்கு முன்பே, மாநகராட்சிக்குரிய பகுதிகள் இணைக்கப்பட்டு விட்டன. அதன் காரணமாக அந்த நகராட்சியில் பெரும் பகுதி மக்கள் தொகை வாழ்ந்து இருக்கிறது. அந்த மக்களின் தேவைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. அதன் காரணமாக பல குறைபாடுகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. உதாரணமாக, கோவை-சத்தியமங்கலத்தை இணைக்கிற சங்கனூர் பள்ளத்திற்கு அருகே கட்ட வேண்டிய பாலம் நீண்ட நாட்களாக வேலை மேற்கொள்ளப்படாமல் இருக்கிறது. அந்தப் பாலத்தை அமைத்துக் கொடுத்தால் அந்த நகரத்தின் வளர்ச்சிப் பணிகள் சிறப்பாக இருக்கும். ஆகவே, அந்தப் பாலத்தை அமைத்துக் தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று சங்கனூர் பள்ளத்திலிருந்து மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலையை இணைக்கிற சாலைத் திட்டத்தை மேற்கொண்டு, வளர்ந்து வரும் கோவை நகரப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோவை நகரத்தின் முக்கிய பகுதியான டவுன் ஹால் ரோடில் இருந்து செல்கிற ராஜவீதி ஒரு வழிப் பாதையாக இருப்பதால், அங்கே போக்குவரத்து மிகவும் அதிகமாக இருப்பதால், நடை பாதைக்கு இடையே ஒரு பாரிகேட் போடப்பட்டு இருக்கிறது. அதை நீக்க வேண்டும் என்று வியாபாரிகள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கூட அதை சமீபத்தில் வந்து பார்த்து, அந்த பாரிகேடை நீக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அங்கே இருக்கிற காவல்துறை அதிகாரிகளும், அரசு அதிகாரிகளும் அதை எடுப்பதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். அவைகளை எடுப்பதன் மூலம் அந்த வியாபாரிகளின் நலனில் நாம் கொண்டு இருக்கும் அக்கரையை வெளிப்படுத்த முடியும் என்று கூறிக் கொள்கிறேன்.

பெரிய நாய்க்கன் பாளையம், நரசிம்ம நாய்க்கன் பாளையம், மற்றும் துடியலூர் அகியவற்றை ஒருங்கிணைத்து ஒரு நகராட்சியாக மாற்றினால், பெருகி வருகின்ற தொழில் வளர்ச்சி காரணமாக அவற்றின் தேவைகளை அவைகளே நிறைவு செய்து கொள்ளமுடியும். அவற்றின் வருமானமும் அதிகரிக்கும். இன்னும் சொல்லப்போனால் அந்தப் பஞ்சாயத்துக்களின் வருமானம் போதுமானதாக இல்லாததால் பெரும் அளவிற்கு அவைகள் கஷ்டப்படுகின்றன. ஆகவே, அவற்றை ஒருங்கிணைத்து நகராட்சியாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நெடுஞ்சாலைத் துறையிலே பணியாற்றுகிற பொறியாளர்களால் ஒரு முக்கியமான பிரச்சினை கிளப்பப்பட்டு இருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையில் பணியாற்றுகிற இன்ஜினீயர்கள் ...



டிப்ளமா படித்துவிட்டு பணிக்கு வந்து, அதன் பின்னர் பட்டங்கள் பெற்ற காரணத்தால், அந்தப் பட்டம் பெற்றத் தகுதியை முன்னிட்டும், அவர்களுக்கு உள்ள அனுபவத்தை முன்னிட்டும் அவர்களுக்கு ப்ரமோஷன் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை அரசு பரிவோடு எடுத்து கவனிக்கிற நேரத்தில், பட்டதாரி இன்ஜினீயர்களாக அந்தத் துறையில் இருப்பவர்கள் ஏதோ ஒரு நிர்பந்தத்தை ஏற்படுத்தி, அவர்களுக்குக் கொடுக்கிற பதவி உயர்வை தடுத்து நிறுத்து வருகிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இன்று கூட "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் அந்த போர்ட் ஆப் இன்ஜினீரிங் கூட்டம் கூட்டப்பட்டதைத் தொடர்ந்து ஒரு செய்தியை வெளியிட்டு இருக்கிறார்கள். இது ஒருசார்பு செய்தியாக இருக்கிறது.

[பிற்பகல் 12–50]

அதை ஒரு புறம் மட்டும் பார்க்காமல், மறுபுறம் இருக்கிறவர்கள் நிலையையும் எண்ணிப்பார்த்து, அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியதை கிடைக்கச் செய்வதை மனதிலே கொண்டு அவர்களுக்கு நியாயம் கிடைக்கின்ற வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசை கேட்டுக்கொண்டு, அரசின் பல நல்லத் திட்டங்களுக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த, மானியக் கோரிக்கைகளை வரவேற்று, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த சமுதாயநல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்தமைக்காக முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் உடனடியாக ஊராட்சித் தேர்தலை நடத்தியாக வேண்டுமென்பதில் அக்கறை காட்டினார்கள். எங்களுடைய குடியரசுக் கட்சியைப் பொறுத்த மட்டில் நான் அந்த எண்ணத்தில் கொஞ்சம் கூட மாறுபடவில்லை. இருந்தாலும், தேர்தலை நடத்துவதற்கு நியாயமான காரணங்களைக் காட்டியிருக்கிறீர்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் கிராம மக்கள் வாழும் பகுதிகளை மக்களால் தேர்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் சென்று பார்த்து மக்களுக்கு நன்மை செய்கிற கால கட்டம் மாறி, அதிகாரிகளே செய்கின்ற நிலை இருந்தாலும் கிராமப்புற மக்களுக்கு அதிகாரத்திலே யார் இருக்கிறார்கள் என்றுவேறுபடுத்திப் பார்க்கத் தெரியாத நிலைதான் இருக்கிறது. இன்றைக்குக்கூட இந்த நாட்டின் பிரதமர் இந்திரா காந்தி என்றால் தாழ்த்தப்பட்ட மக்கள் பகுதியிலே இன்றும் மொரார்ஜி தேசாய் என்று

தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலருக்கு யார், யார் ஆட்சியில் இருக்கிறார்கள் என்று புரியாமல் இருக்கிறார்கள். ஆகையால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வந்துதான் காரியங்கள் செய்ய வேண்டுமென்ற நிலை இல்லை. ஆனால், அந்த மக்களுக்கு செய்ய வேண்டியது செய்யப்பட வேண்டும். அதை யார் செய்கிறார் என்று அவர்கள் கவலைப்படவில்லை. எனவே, இருக்கிற அதிகாரத்தை வைத்து ஏழை எளிய மக்களுக்கு நன்மை செய்வதற்காக அவசரச் சட்டம் என்ற பெயரால் ஒரு '' மினி மிசா ''வைப் போட்டால் செய்யக் கூடிய காரியங்கள் உடனடியாகச் செய்யப்பட வழிவகை இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மக்களுக்கு நன்மை கிடைத்தால் போதும். அவர்களுக்கு யாருடைய ஆட்சி என்றும் இல்லை; எப்படி செய்தார்கள் என்றும் இல்லை; நன்மை கிடைத்தால் போதும். எனவே, அவசரச் சட்டத்தைப் போட்டாவது நல்ல திட்டங்களை உடனடியாக நிறைவேற்றுகிற ஒரு எண்ணத்தை அரசு மேற்கொள்ள வேண்டுமென்ற கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பள்ளிக் கட்டிடங்கள் நல்ல நிலையில் இல்லை. அங்கே அனைத்துப் பள்ளிகளுக்கும் உடனடியாகப் பள்ளிக் கட்டிடங்களை ஏற்படுத்தியாக வேண்டும். என்னுடைய தொகுதியில் நலங்கா நல்லூர் என்ற சிற்றூரில், அந்த ஊர் தோன்றியதிலிருந்து இன்று வரையில் மக்கள் பள்ளிக்கூடத்தையே பார்த்ததில்லை. அந்தக் கிராமத்திலுள்ள பிள்ளைகள் 15 வயது, 20 வயது ஆகியும் பள்ளிக்கூடத்தைப் பார்க்கவில்லை. பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டுமென்றால் 5 மைல், 6 மைல் கடந்து தான் போக வேண்டும். '' ட்ரங்க் ரோடு '' இடையிலே இருக்கிறது. அதனால் வாகனங்கள் மோதிவிடுமோ என்ற அச்சம் இருக்கிறது. ஆகையால் அந்த ஊரிலே ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சிறு பாசனத்திற்கு நல்ல பல திட்டங்களை அரசு வைத்திருக்கிறது. என்னுடைய தொகுதியில் பெரியேந்திரம் என்ற ஊரில் பெரிய ஏரி ஒன்று இருக்கிறது. அந்த ஏரியை தூர் எடுத்து, கரை கட்டி, ஆழப்படுத்தினால் 10, 15 கிராமங்களுக்கு நீர்ப்பாசனம் கிடைக்கும்; ஏறத்தாழ 5,000 ஏக்கர் பாசனம் பெறும் வாய்ப்பு இருக்கிறது.

எங்கள் மாவட்டத்தில் நான் என்னுடைய தொகுதியைப்பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். காரணம் என்னுடைய பேரணாம்பட்டுத் தொகுதி முன்னேற்றம் என்பதையே பல்லாண்டு காலமாகப் பார்க்காத பகுதியாக நிரந்தரமாக இருக்கின்ற காரணத்தால் அரசினுடைய கவனம் அங்கே திரும்பாமல் போய் விடுமோ என்ற சந்தேகம் எனக்கு வருகிறது. பேரணாம்பட்டுத் தொகுதி மிகவும் பின் தங்கிய பகுதி. அங்கே தண்ணீருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அந்தத் தொகுதியில் மாதனூர் பேரணாம்பட்டு பெரியேந்திரம் வழிய இந்த மூன்று பகுதிகளும்,



192190



முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை. இந்த மூன்று பகுதிகளிலும் மூன்று சமுதாயக் கிணறுகள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமூக நலத்திற்காக நம்முடைய அரசு நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறது. குறிப்பாக முதியோர் கல்வியை அதன்மூலம் பரப்பிக்கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு ஒரு சில அமைப்புகள் மட்டுமே அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கின்றன. டாக்டர் அம்பேத்கார் மன்றம், அண்ணா மன்றம் என்று பல இடங்களில் வைத்திருக்கிறார்கள். அந்த மன்றங்கள் மூலமும் இந்த முதியோர் கல்வியைப் பரப்ப, அந்த மன்றங்களும் இந்தப் பணியிலே ஈடுபட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

V211.31 (N8)

அதைப்போலவே ஒவ்வொரு கிராமத்திலும் மகளிர் மன்றம் ஏற்படுத்த வேண்டும். கிராமங்களில் ஏராளமான பெண்கள், படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு தையல் போன்ற தொழில்களில் பயிற்சி அளித்து, அவர்கள் ஓரளவுக்காவது வருவாய் பெற வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும். அதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் மகளிர் மன்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதை என்னுடைய வேண்டுகோளாக இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தை நாம் இன்றைக்குச் சிறப்பான முறையிலே ஏற்படுத்தி இருக்கிறோம். ஒருவேளை இந்தியாவிலே உள்ள வேறு எந்த மாநிலத்திலேயும் இந்த அளவுக்கு தன்னிறைவுத் வுத் திட்டத்தினை அமல்படுத்தி இருக்கிறார்களோ என்ற ஐயம் ஏற்படுகின்ற அளவுக்கு நாம் சிறப்பான முறையிலே ஏற்படுத்தி செயல்படுத்தி வருகின்றோம். அந்த அளவுக்கு நல்லதொரு மாற்றத்தை தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ஏற்படுத்தி இருக்கின்றோம்.

N83.17:2

திரு. ஜே. சி. டி. பிரபாகர்—தலைமை

பேரணாம்பட்டைப் பொறுத்தவரையில் இந்தத் திட்டம் மிகச் சிறப்பான முறையிலே செயல்படும் என்று எதிர்பார்க்கிறோம். இந்த ஆண்டு தான் அந்தத் தொகுதியை எடுத்துக் கொண்டிருக்கிறோம். பேரணாம்பட்டைப் பொறுத்தவரையில், பல்வேறு நல்ல திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நாம் முயற்சிகளை எடுத்துக்கொண்டாலும் அங்கே இருக்கின்ற இயற்கை, செயற்கை சூழ்நிலைகள் அந்தத் திட்டங்களுக்கு வாய்ப்பாக அமையவில்லை. அங்கே இருக்கின்ற டேனரித் தொழில் அந்தத் தொகுதியின் தண்ணீரையே மாற்றிவிடுகிறது. டேனரியின் காரணத்தால் அங்குள்ள பயிர்கள் எல்லாம் காய்ந்து விடுகின்றன.

நாமெல்லாம் கரும்பு சாப்பிடுகிறோம். அது எவ்வளவு ருசியாக இருக்கின்றது. ஆனால் எங்களுடைய பகுதியிலே உள்ள கரும்பினைச் சாப்பிட்டால் அதனுடைய சுவையே வேறு மாதிரியாக இருக்கும். அங்குள்ள தண்ணீரும் அப்படித்தான் இருக்கும். ஆகவே, இது எங்களுடைய தொகுதியிலே மிகப்பெரிய பிரசினையாக இருக்கின்றது. இது பற்றிப் பல முறை எடுத்துச் சொன்னாலும் அங்கே இருக்கின்ற டேனரித் தொழிலின் முதலாளிகள் அதைக் காதிலே வாங்குவதாகத் தெரியவில்லை. ஆகவே, இன்னும் ஓராண்டு காலத்திற்குள்ளாக வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ள எந்தப் பகுதியிலும் நல்ல தண்ணீரையே பார்க்க முடியாது. அந்த வகையிலே அந்த டேனரி அந்த மாவட்டத்தையே நாசமாக்கிக்கொண்டிபிக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த டேனரித் தண்ணீருக்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும்.

அடுத்து முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷனைப் பொறுத்த வரையில் பல சிறப்புத் திட்டங்களை நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இன்றைக்கு எம். எஸ். 52 என்ற ஜி.ஓ.வின் மூலம் 25 ஆண்டுகளுக்கு மேல் வேலை பார்த்தால் அவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். நகராட்சியிலே 7, 8 ஆண்டுகளாக, வேலை செய்கின்றவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் இந்த ஆணையை நீட்டிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து அவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்பட வேண்டும். வேலை செய்து விட்டு ரிட்டையர் ஆகின்றபோது வெறும் கையோடு செல்ல வேண்டிய நிலைமை இருக்கின்றது. ஆகவே, அவர்களுக்கு 10,000 ரூபாய் குடும்ப நல உதவித் திட்டத்தை அளிக்க வேண்டும்.

அடுத்து, பெண்களுக்கான கழிப்பிடம் நிச்சயமாகத் தேவை. எங்கள் பகுதி காடு மலைகள் நிறைந்த பகுதியாக இருந்தாலும் அங்குள்ள மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக நாகரீகம் அடைந்து வருகிறார்கள். ஆகவே, கிராமப்புறங்களில் கழிப்பிடங்கள் அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கால்நடை பராமரிப்பு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும். எங்கள் தொகுதியிலே உள்ள விவசாயிகள் கால்நடை பராமரிப்பு நிலையங்கள் இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவைகளை உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.



அடுத்து இன்றைய தினம் பெரிய அளவிலே உணவுக்கு வேலை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் மூலம் கிராமப்புற பணிகளை எல்லாம் செயல்படுத்தி வருகிறார்கள். ஆனால் சில இடங்களில் வேலைக்கு ஆட்களே கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கின்றது. இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒரு காரணம் என்னவென்றால் ரோட்டு, வீடு போன்றவைகளிலே வேலை செய்கின்றவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 9 ரூபாய் கூலி கிடைக்கின்றது. ஆனால் இந்தத் திட்டத்தின் மூலம் ஒன்றியங்களில் வேலை செய்யச் செல்கின்ற போது அவர்களுக்கு மூன்று ரூபாயும் அரிசியும் கொடுக்கப்படுகின்றது. ஆகவே, 9 ரூபாய் வேலைக்குத்தான் மக்கள் செல்கிறார்களே தவிர நாம் கொடுக்கின்ற அரிசிக்காக அவர்கள் வேலை செய்ய வருவதில்லை, தயங்குகிறார்கள். ஆகவே அரிசியையும் அதிகப்படுத்தி 3 அல்லது 4 ரூபாய் கையிலேயும் கிடைக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். வேலை செய்வதற்கு ஆட்கள் இல்லை, ஆட்கள் வரவில்லை என்ற குறையைப் போக்க வேண்டும். மேலும் ஒப்பந்த அடிப்படையிலே கூலியாட்களை ஊராட்சி ஒன்றியங்களிலே வைத்துக் கொள்ள வேண்டும். எங்கே வேலை நடந்தாலும் அவர்கள் போக வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுக்கு மாதாந்திர சம்பளம் கொடுத்து வைத்துக்கொள்ள வேண்டும், அவர்களை நிரந்தரமாக ஆக்காவிட்டாலும், ஒப்பந்த அடிப்படையிலே அவர்கள் எங்கெங்கு வேலை இருக்கின்றதோ எங்கெங்கு வேலை நடக்கின்றதோ அங்கங்கு போவதற்குரிய வகையிலே மாதாந்திர சம்பளம் கொடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். எடுக்கப் போகின்ற தன்னிறைவுத் திட்டம் [illegible]பட்டிற்கு ஒரு வழிகாட்டியாக இருப்பதால் அந்தத் தொகுதியை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1.00]

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும், சாலைகளும் பாலங்களும் பாலங்களும் என்ற மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துக்களை, இந்த அவையிலே எதிர்க்கட்சியின் சார்பாக கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து, சில

இந்த விவாதத்தை நடத்திக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, ஊராட்சிகளில், ஊராட்சி ஒன்றியங்களில் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பெற்ற, ஊராட்சித் தலைவர்கள் ஒன்றியத் தலைவர்கள் இல்லாத இந்த நேரத்தில், அந்த ஊராட்சிகளினுடைய நிர்வாகத்தைப் பற்றி பேசுவதிலே, உள்ளபடியே நான் வருத்தப்படுகிறேன். தமிழகத்தில் 12,209 ஊராட்சிகளும் பேரூராட்சிகளும் இருக்கின்றன. அந்த அனைத்து ஊராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் கலைத்து ஜனநாயகப் படுகொலையின் காரணமாக, ஊராட்சிகளில் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்கள் இல்லாத காரணத்தால் இன்றையதினம் நடைபெற வேண்டிய வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன என்பதை நான் பணிவோடு இங்கே தெரிவித்துக் கொள்வது, என்னுடைய கடமையாகும்.

எல்லா ஊராட்சிகளிலும் நிர்வாகம் சீராக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை பல்வேறு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், எந்த காரணங்களுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டனவோ, அந்த காரணங்கள் அப்படியே இருக்கின்றன. எந்த காரணங்களுக்காக ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டார்களோ அதே காரணங்கள் இன்னும் அதிகமாக பல்வேறு சூழல்களில் ஊராட்சி ஒன்றியங்களில் நீடித்துக் கொண்டுதான் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி ஊராட்சி ஒன்றியங்களில் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லாத காரணத்தினால் தான் மின்சார இணைப்புகள் சரிவர கொடுக்க முடியவில்லை. சாலைகள் சகதிகளாக இருக்கின்றன. குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்கு வேண்டுமானால் ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் ஊராட்சியில் இருக்கிற மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள் 32. அந்த 32 நீர்த்தேக்கத் தொட்டிகளில், இந்த ஆண்டு மட்டும் 19 நீர்தேக்கத் தொட்டிகள் பழுது பட்டு விட்டன. மீதம் இருப்பவைகளில் 5 இடங்களில் மின்சார மோட்டார்களைக் காணவில்லை என்று சொல்லுகிறார்கள். அவைகள் எங்கேயிருக்கின்றன? எப்படியிருக்கின்றன என்ற தகவல் இதுவரையில் இல்லை.

சென்ற ஆண்டு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் என்னுடைய ஒன்றியத்திற்கு ஒரு விழாவிற்காக வந்திருந்தார்கள், அப்படி அவர்கள் வருகிற நேரத்திலே, அந்த ஒன்றியத்தில்



இருக்கும் நீர்தேக்கத் தொட்டிகள் பழுதுபட்டிருக்கின்றன. அவைகளை சரி செய்துக் கொடுக்க வேண்டும் என்று அங்குள்ள பொது மக்கள் மனு ஒன்றை அமைச்சரிடத்திலே கொடுத்தார்கள். அந்த மனுவை வாங்கிக் கொண்ட அமைச்சர் அவர்கள், எல்லா நீர்த்தேக்கத் தொட்டிகளும் இன்னும் ஒரு மாத காலத்திற்குள்ளாக வேலை செய்ய வேண்டும் என்று உத்தரவிடுகிறேன் என்று அந்த மேடையிலேயே அதற்கான உத்தரவை இடுகிறார்கள். கூடவே சொல்கிறார்கள். ஒரு மாதம் என்று சொன்னால் அதை 31 நாட்கள் என்று கணக்கிட்டுவிடக்கூடாது. 30 நாட்கள் என்றுதான் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த 30 நாட்களுக்குள்ளாக இருக்கிற எல்லா நீர்த்தேக்கத் தொட்டிகளும் பழுது பார்க்கப்பட்டு, தண்ணீர் விடப்பட வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் மேடையிலேயே ஆணையிட்டார்கள். ஆனால் அந்த ஆணையிட்டு ஓராண்டு காலம் ஆகிவிட்டது. அவர் திறந்து வைத்த அந்த ஐந்து நீர்த்தேக்கத் தொட்டிகளிலுமே, மறுநாளிலிருந்து தண்ணீர் வரவில்லை. ஏனென்றால் அமைச்சர் அவர்கள் வருகிற நேரத்திலே, வெளியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து, மேலாக ஊற்றி, திறந்து வைப்பதற்கு வசதியாக செய்து வைத்து விடுகிறார்கள். அதனால் அவை திறந்து வைக்கப்பட்ட நாளிலிருந்து, அவைகளில் ஊற்றிய தண்ணீர் தீர்ந்துபோன பின் தண்ணீர் வரவில்லை. முறையாக மோட்டாரைப் போட்டு, வினியோகம் செய்தால் தண்ணீர் கிடைக்கும். ஒரு தற்காலிக ஏற்பாட்டைத் தானே ஒழுங்காக செய்தார்கள். அதன் காரணமாக மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல ஊராட்சி ஒன்றியங்களில் குழாய்க் கிணறுகள் பழுது பார்க்கப்படுவதில்லை. அது குறித்து சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எழுதியாகிவிட்டது. ஆனால் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குழாய்கள் ஊராட்சி ஒன்றியங்களின் கூட்டங்களில் கூட மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் எந்தவிதமான பணிகளும் எடுக்கப்படாமல் இருக்கிறது என்பதை ஆதாரங்களோடு நிரூபிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். இந்த அவையிலே அதைக் கொண்டு வந்து விவாதிக்க வேண்டும் என்பதற்காக, கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்தேன். ஆனால் அது ஏற்றுக்கொள்ளப்பெறவில்லை—வேறு சில காரணங்களுக்காக, குறுகியகால வினாவாகக் கொடுக்கலாமா என்பது குறித்து தொழிலாளர் நலத்துறை அமைச்சரிடத்தில் ஒப்புதல் கேட்டுக் கொண்டு எழுதிக் கொடுத்தேன். என்னுடைய தொகுதியில் எத்தனை குழாய்கள் பழுது பட்டிருக்கின்றன? என்ன காரணம் என்று கேட்டிருந்தேன். இது வரையில் பதில் தெரியவில்லை. அதைகூட அப்படியே விட்டு விட்டிருக்கிறார்கள். எந்தவிதக் காரியங்களும் நடைபெறவில்லை என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் சாலைகளை பராமரிப்பதற்காக எந்தவித மானியமும் அரசிடமிருந்து பெறப்பெறுவது இல்லை. அது தவறு. அந்த முறைகளை மாற்றி, ஊராட்சிகளுக்கு அரசின் சார்பாக சாலைகளை பராமரிப்பதற்காக, தனியாக மானியம் கொடுக்கப்பெறவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பராமரிப்பதற்காக அரசாங்கத்திலிருந்து ஒரு நபருக்கு 18 காசு என்று கொடுக்கப்படுகிறது. அது நபர் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. அது போதுமானதல்ல. தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில் அங்கிருக்கிற சாலைகள் அவ்வளவும் சதுப்பு நிலத்தில், சதுப்பு நிலத்தில் அமைக்கப்பட்ட சாலைகளாகும். மழை பெய்துவிட்டால் அது தார் சாலையாக இருந்தாலும்கூட பழுதுபடக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே மக்கள் அடிப்படையில் நபருக்கு 18 காசு என்று கொடுக்காமல் சாலைகளின் நீளத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு அதிகப்படியான நிதி ஒதுக்கி தஞ்சை மாவட்டத்திற்கு கொடுக்கவேண்டும். என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சமுதாயக் கிணறுகள், ஒரு சிலயிடங்களில் இந்த சமுதாயக் கிணறுகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டன. அதற்குப் பின்னால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. ஆகவே கண்டிப்பாக எல்லா உள்ளாட்சிமன்றங்களிலும் இந்த சமுதாயக் கிணறுகள் அமைக்கப்படவேண்டும். சமுதாயக் கிணறுகள் வாய்க்கால் தலைப்புகளில் அமைக்கப்படவேண்டும். நீர்த்தட்டுப் ஏற்படும்போது தண்ணீர் கொடுக்கக்கூடிய அளவிற்கு சமுதாயக் கிணறுகள் அமைக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குடிமராமத்து திட்டங்கள். குடிமராமத்து என்று சொல்கிறபோது அதுகிராமங்களில் இதுவரை சரியாக நடைபெறவில்லை. வாய்க்கால்கள் தூர்ந்து கிடக்கின்றன. சரிவர நீர்ப்பாசனம் கிடைக்காமல் இருக்கிறது. குடிமராமத்து திட்டங்கள் கண்டிப்பாக எல்லாயிடங்களிலும் நிறைவேற்றப்படவேண்டும். கிராமங்களில் உள்ள வாய்க்கால்கள் பழுதுபார்க்கப்படவேண்டும். குடிமராமத்து செய்ய ஏக்கர் ஒன்றுக்கு ஒருரூபாய் என்று கொடுப்பது போதுமானதல்ல. குடிமராமத்துக்கு எவ்வளவு செலவானாலும் அந்த அரசுச் சார்பில் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சிகளுக்கு நிதிவசதி போதுமான அளவிற்கு இல்லாத இந்நேரத்தில். குடிசைக்கு ஒரு மின்விளக்கு என்று கொடுக்கிறார்கள். அப்படி அந்த மின் விளக்கு கொடுக்க ரூ. 12.50 வீட்டு உரிமையாளர் கட்டவேண்டும். ஆனால் என்னுடைய ஒன்றியத்தைப் பொறு



உள்ளாட்சிமன்ற நிதியிலிருந்து பணத்தை எடுத்து மொத்தமாக செலவு செய்கிறார்கள். அது எந்தளவிற்குப் பொருத்தமானது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். தண்ணீர் இல்லை என்று சொல்லும்போது அதற்கு செலவு செய்யமுடியாத சூழ்நிலையில் இப்படி மின் இணைப்பிற்காக கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் அனுமதி அளித்ததா என்று தெரியவில்லை. அப்படியிருந்தாலும்கூட அதை அரசு சார்பாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குழந்தைகள் காப்பகங்கள். குழந்தைகள் காப்பகங்களை நடத்த ஆகக்கூடிய செலவினை தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்து உள்ளாட்சிமன்ற நிதியிலிருந்து கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்: அது முடியுமா என்று அமைச்சர் அவர்கள் சிந்தித்து பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட பெரிய செலவுகளை செய்யக்கூடிய அளவிற்கு வசதிபடைத்த உள்ளாட்சிமன்றங்கள் இருக்கின்றனகின்றனவா தமிழகத்தில் என்றால் இல்லை. ஆகவே இப்படிபட்ட காரியங்களுக்காக ஆகும் செலவை அரசாங்கம் மானிய கொடுத்தோ அல்லது ஒன்றிய நிதியிலிருந்தோ செலவு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேலைக்கு உணவுத் திட்டம். அந்தத் திட்டம் பல்வேறு நிலைகளில் சரியாக நடைபெறவில்லை என்று எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். இந்த வேலைக்கு உணவுத் திட்டம் என்ற திட்டத்தின்கீழ் கொடுக்கப்படுகிற அரிசி இருக்கிறதே அது தரமான அரிசியாக இருக்கிறதா என்றால் தரமில்லாத அரிசியாக, மக்கள் சாப்பிட முடியாத அரிசியாகத்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கிராமங்களிலே சொல்வார்கள், ஒரு பொருளைச் சொல்லி இதெல்லாம் வேகாது என்று சொல்வார்கள். அதேபோல் இப்படிக் கொடுக்கப்படுகிற இந்த அரிசியை இரண்டு மணிநேரம் வேகவைத்தாலும் கூட வேகாத அரிசியைத்தான் தருகிறார்கள். அந்த அரிசியைக் கூட நான் கையில் வைத்திருக்கிறேன். வேண்டுமானால் அதை நான் அமைச்சர் அவர்களிடம் கொடுக்கத் தயாராகயிருக்கிறேன். எவ்வளவு விறகு வைத்தாலும்கூட இரண்டு மணி நேரம் வேகவைத்தாலும் வேகாத அரிசியைத்தான் கொடுக்கிறார்கள். இது எங்கே இருந்து வந்த அரிசி என்று தெரியவில்லை. இப்படி தரமில்லாத அரிசியை உழைக்கக்கூடிய ஏழை மக்களுக்குக் கொடுக்கவேண்டாம் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படியிருந்தாலும், அந்த அரிசியை வாங்கிக் கொண்டு திரும்ப தரம் உள்ள அரிசியாக, மக்கள் சாப்பிடக்கூடிய அரிசியாகத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரிசி இங்கே இருக்கிறது.

**திரு மி. வின்சென்ட்:** அரிசியைக் காட்டி இந்த அரிசியை வேக வைக்க இரண்டு மணி நேரம் ஆகும் என்று சொல்கிறார்கள். அதை வாங்கி சமைத்துப்பார்த்தார்களா? அவர்கள் பேசியது உண்மைதானா என்று தெரிந்து கொள்ள ...............

[1981 மார்ச் 31

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : வாங்கி நான் சமைத்தா பார்க்கமுடியும்?

[முற்பகல் 1-10]

**திரு இரா. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் 1980-81 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 37வது பக்கத்தில், 69 ஒன்றியங்கள் எடுக்கப்பட்டிருப்பதாகவும், 1979-80-ல் 69 ஒன்றியங்கள் எடுக்கப்பட்டிருப்பதாகவும், 1980-81 ஆம் ஆண்டில் 100 ஒன்றியங்கள் எடுக்கப்படும் என்றும் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்த 100 ஒன்றியங்களிலே சென்ற ஆண்டு திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. அதற்கு முன்னாலே எடுத்துக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட 69 ஒன்றியங்களிலேதான் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே சொல்லப்பட்டபடி 100 ஒன்றியங்களிலே வேலைகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதற்கு மேலும் இந்த ஆண்டு 150 ஒன்றியங்களில் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் படித்துவிட்டு, ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள், பதில் சொல்கிறேன். இப்போது சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே உள்ளதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன்.

அடுத்து, தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக செய்யப்படுகின்ற செலவுத் தொகை இருக்கிறதே, அந்த செலவுத் தொகையில், 60 சதவீதம் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்தும் பாக்கி 40 சதவீதம் அரசின் மானியமாகப் பெற்று செலவு செய்யப்பட வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் செலவு செய்யப்படுகின்ற தொகையில் 60 சதவீதம் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செலவழிப்பது என்பது முடியாத காரியம். இப்போது நிதி வசதி இருக்கிறது. இப்போது ஊராட்சி ஒன்றியங்களிலே திட்ட வேலைகள் 4 ஆண்டு காலமாக நிறைவேற்றப்படவில்லை. அதிலே உள்ள பணத்தை நாம் இப்போது செலவு செய்கிறோம். அடுத்த ஆண்டிலிருந்து பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற இருக்கின்ற சாலைகளைப் பழுதுபார்க்க, சாலைகளை மேம்படுத்த நிதி வசதி இருக்காது. ஆகவே, இன்னும் கொஞ்சம் அதிகமாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி ஒதுக்கித்தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து பெண்களுக்கு கழிப்பிடங்கள் பற்றி எல்லோரும் பேசினார்கள். அதிலே மாறுபட்ட கருத்தில்லை. ஒவ்வொரு வீட்டிலும் கண்டிப்பாக ஒரு கழிப்பிடம் கட்டப்பட வேண்டும். ஒரு ஊருக்கு ஒரு கழிப்பிடம் போதாது. ஒரு ஊராட்சியில் பத்துக் கிராமங்கள் இருக்கும். ஆகவே வசதியான கழிப்பிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று விரும்பினால், ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு கழிப்பிடம் கண்டிப்பாகக் கட்டிக் கொடுக்க வேண்டும். குறைவான தொகையிலே இதைக் கட்டித்தரலாம்



1981 மார்ச் 31] [திரு இரா. இராசமாணிக்கம்]

கண்டிப்பாகக் கட்டித்தர வேண்டும். இந்தத் திட்டத்தை அரசு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது மிக மிக முக்கியம்.

ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டுவதற்காக 3,000 ரூபாய் கடன் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அது போதுமானதாக இல்லை. எனவே குறைந்தது 8,000 ரூபாய் அல்லது 10,000 ரூபாய் வரை உயர்த்த வேண்டும். கொடுப்பது கடன் மானியம் அல்ல. அவர்கள் திருப்பிக் கொடுக்க வேண்டும். ஆகவே அந்தத் தொகையை அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் என்னுடைய தொகுதியில் நிறைய ஆறுகள் ஓடுகின்றன. அந்த ஆறுகளிலே எல்லாம் பாலங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் குடவாசலில் பல பஞ்சாயத்து ஒன்றியங்கள் இருக்கின்றன. இராதாநல்லூர் எல்லையில் குடமுருட்டி ஆற்றில் பாலம் கட்ட வேண்டும். வடமட்டம் கூந்தலூர் சாலையில் அரசலாறு — மொட்டயாறு ஆகிய இரண்டு ஆறுகளில் பாலம் கட்ட வேண்டும் பூங்குடிமூலை எல்லையில் முட்டையாற்றில் பாலம் கட்ட வேண்டும். கடகக்குடி கிள்ளியூர் எல்லையில் நூலாற்றில் பாலம் கட்ட வேண்டும். சிமிழி பூங்காவூர் எல்லையில் கோண வாய்க்காலில் பாலம் கட்ட வேண்டும். பேரளம் அன்னியூர் சாலையில் கீர்த்திமானாறு - வடகோரையாறு இரண்டிலும் பாலம் கட்ட வேண்டும். தேதியூர் பாகசாலை எல்லையில் திருமலைராஜன் ஆற்றில் பாலம் கட்ட வேண்டும். மாவட்ட வளர்ச்சி மன்றத்திலும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது. என்பதைத் தெரிவித்து அப்படிப்பட்ட இடங்களில் ஊராட்சி ஒன்றியங்களின் பொது நிதியில் இருந்தோ, அல்லது அரசு மானியமாகவோ கொடுத்து பாலம் கட்ட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தன்னிறைவுத் திட்டத்திலே கால்நடை கிளை பராமரிப்பு நிலையங்களுக்குக் கட்டிடம் கட்ட வேண்டும். பல இடங்களில் கட்டடம் இல்லாமல் இருக்கிறது. இந்தக் கட்டிடங்களைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சியிலும், நகர நிர்வாகம், சாலைகள் பாலங்கள் போன்ற மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காந்தி கண்ட இராம இராஜ்யம், பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட பெரு வாழ்வும், புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் பூத்துக் குலுங்குகிறது என்பதை எண்ணும் பொழுது உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகின்றேன். முதற்கண் இணைப்புச் சாலைகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இணைப்புச் சாலைகள், தன்னிறைவுத் திட்டம் ஏற்படுத்தி அதன் மூலம்

[திரு. வி. பாலகிருஷ்ணன்] [1981 மார்ச் 31

ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகின்றது. இணைப்புச் சாலைகள் எல்லாம் தக்க கருவிகளும், நீரும் இல்லாத காரணத்தால் ஒரு சில இடங்களில் தடைபட்டு இருக்கின்றன. அதை ஏறத்தாழ 2 மாத காலமும், வேண்டிய கருவிகளும் கொடுத்து, அந்த இணைப்புச் சாலைகளை செப்பனிட்டுத் தரவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கிராம வேலை வாய்ப்புத் திட்டம். இதன் மூலம் 2000 பள்ளிக்கூடங்களை சீர் செய்யவும், மேலும் 1;500 பள்ளிக்கூடங்கள் கட்டவும் இந்த அரசு அனுமதி அளித்துள்ளது. இதை உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன். பல கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன. உடனே செப்பனிட வேண்டுமென்று விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சிறு நீர்ப்பாசனத்துக்கு திட்டங்களைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். நீர்ப்பாசனத் திட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து ஏறத்தாழ 50 ஏக்கருக்கு உட்பட்ட குளங்களை எடுத்து வேலை செய்யும்படி பணித்துள்ளார்கள். அந்த குளங்களுக்கு 'சப்ளை சானல்' அதாவது வாய்க்கால்கள் இரண்டு பக்கத்திலும் கரைகள் கற்கள் பதிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் நீர்ப்பாசனத்துக்கு வாய்க்கால்கள் வழியாகத் தண்ணீர் கொண்டு சென்று விவசாயிகள் ஒருவருக்கொருவர் மனத்தகராறு இல்லாமல் செயல்படும் நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும் என்பதை இந்த சந்தாப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சமுதாயக் கிணறுகள் 40 ஆயிரம் ரூபாய்க்கு வெட்டுவதற்கு அரசு அனுமதித்துள்ளது. இந்த சமுதாயக் கிணறுகள் எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களில் ஆணையாளர் மூலம் நேரடியாக அவரின் பார்வையிடப்பட்டு ஒழுங்காக செயல்படுகின்றனவா என்பதை அறிந்து நல்ல முறையில் செப்பனிட்டுத் தரவேண்டுமென்று இந்த அரசைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தாய் சேய் நல விடுதிகள் 87 இலட்சம் ரூபாய்க்கு கட்ட அனுமதி கொடுத்துள்ளார்கள். தாய் சேய் நல விடுதிகளில் பல இடங்களில் மெட்டர்னிட்டி அசிஸ்டென்ட், ஆயாக்கள் இல்லாமல் இருக்கிறது. அங்கு போதிய ஆட்களை நியமிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து 7520 அலுவலகங்கள் ஊராட்சி ஒன்றியங்களிலும் ஊராட்சிகளிலும் கட்டிடங்கள் இல்லாமல் இருக்கின்றன. என்று குறிப்பிட்டுள்ளார்கள். உண்மையிலேயே எனது கிராம பஞ்சாயத்து பாகனேரி பஞ்சாயத்திலே கூட இது வரை ஊராட்சி மன்ற கட்டிடம் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். விரைவில் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தன்னிறைவுத் திட்டம்; இது ஒரு தலை சிறந்த திட்டமாகும். ஓராண்டில் 69 ஊராட்சி ஒன்றியங்களில் எடுக்கப்பட்டு நல்ல முறையிலே அங்க பணிகள் முடிக்கப்



1981 மார்ச் 31] [திரு. வி. பாலகிருஷ்ணன்]

பட்டுள்ளன. எனது தொகுதியிலே வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அந்த திட்டம் நல்ல முறையிலே செயல்படுத்தப்பட்டு ஏறத்தாழ 15, 20 இடங்களில் பள்ளிக் கூடங்களும், இணைப்புச் சாலைகளும், ஏற்படுத்தப்பட்டுள்ளன. என்பதை இந்த சந்தர்பத்தில் சொல்லிக் கொண்டு நான் மிகவும் மனதார இந்த அரசை பாராட்டுகிறேன். தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள் மூலம்பல சாலைகள் போடப்பட்டுள்ளன. அதற்கு முன்பு 'புட் பார் ஒர்க்' வேலைக்கு உணவுத் திட்டம் என்று அழைக்கப்பட்டிருந்தது. அந்த வேலைக்கு உணவுத் திட்டத்தில் பல சாலைகள் நன்றாகப் போடப்பட்டிருக்கின்றன. அந்த திட்டத்தை தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் என்று இப்போது அறிவித்திருக்கிறீர்கள். அந்த திட்டமும் விரைவில் செயல்படுவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1–20]

அடுத்தபடியாக எங்கள் சிவகாசி நகரம் மிகப் பெரிய நகரம், தொழில் வளர்ந்த நகரம், சிவகாசியிலிருந்து விருதுநகர் செல்லும் சாலை மிகவும் பழுதடைந்திருக்கிறது. அதற்காக 15 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளதற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நான் இந்த அரசுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நான் 4, 5 தடவைகள் இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். அர்ஜுனா நதியிலே அந்தப் பாலத்தை விரைவினிலே கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சி இயக்குனர் அலுவலகத்திலே கல்விப் பிரிவு அமைக்க இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க அம்சமாகும். உறுதியாக அந்தக் கல்விப்பிரிவை அமைக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே பொறியியல் பிரிவையும் நகராட்சியில் அமைக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது அங்கே உள்ள பொறியாளர்கள் எல்லாம் குடிநீர் வடிகால் வாரியத்தோடும், நெடுஞ்சாலைத் துறையோடும் இணைக்கப்பட்டு அங்கே சேர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்காக இங்கே பொறியியல் பிரிவை அமைக்க இருப்பதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நகராட்சிகளிலே பள்ளிகள் சரியாக இயங்கவில்லை. அவைகள் நல்ல முறையிலே இயங்குவதற்காக கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாணியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியைக் கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[1981 மார்ச் 31

திரு பி. எம். தங்கவேல் ராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே கொண்டுவந்து இருக்கும் இந்த மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பாக என் பேச்சை ஆரம்பிக்க வாய்ப்பு அளித்த மைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பஞ்சாயத்துத் தேர்தல்கள், நகராட்சித் தேர்தல்களை உடனடி யாக நடத்தவேண்டுமென்றும், அப்படி நடத்துவதன் மூலம் கிராம ராஜ்யத்தை அமைக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண் டார்கள். அவர்களுடன் சேர்ந்துகொண்டு, நானும் அந்தத் தேர்தல்களை உடனடியாகக் கொண்டுவந்து மக்கள் தலைவர்கள் கிராமங்களின் நகரங்களின் நிர்வாகத்தை நடத்தக்கூடிய ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் பேசியபோது ஏதோ மாநில அரசுதான் அந்தந்த தேர்தல்களை நடத்த உத்தேசித்துள்ளதாகவும் மத்திய அரசுதான் நடத்த வேண்டாம் என்று சொல்வதைப் போலவும் சொன்னார்கள். இப்படிச் சொல்லி மத்திய அரசுக்கு களங்கம் கற்பிக்க வேண்டா மென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசு நடத்தவேண்டாம் என்று எப்போதும் சொல்லவில்லை, மாநில அரசு தான் மக்களைச் சந்திக்கப் பயப்படுகிறது. மதுவிலக்கு கொள்கையை தளர்த்தியதும், கிராம அதிகாரிகளை வேலை நீக்கியதும், வறட்சியால் தாக்கப்பட்டிருப்பதும், விவசாயிகள் போராட் டங்களும் இருப்பதால் இந்த அரசுதான் நடுங்குகிறது. இந்தக் காரணங்களினால் தான் இந்த அரசு தேர்தல்களைக் கொண்டுவரப் பயப்படுகிறது. உடனடியாக பஞ்சாயத்துக்கள், ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகளுக்கு தேர்தலைக் கொண்டுவர வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தன்னிறைவுத் திட்டம் நல்ல திட்டம்தான், எனக்கு முன்னாலே பேசிய திரு குமரி அனந்தன் அவர்கள் சில அதிகாரி கள் தன் நிறைவுத் திட்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே தன்னி றவுத் திட்டம் மக்களுக்கு பயன்படுகின்ற விதத் திலே கண்காணிப்புக் குழு ஒன்றை அமைத்து ஒவ்வொரு ஒன்றி யத்திற்கும் அமைத்து கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் குழுவின் மூலமாக மேலும் நல்ல பல காரியங்களை நிறைவேற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல திட்டங்கள் நல்லமுறையிலே இருந்தாலும் செயல்படுத்துகின்ற அதிகாரிகள் ஒத்துழைக்கவில்லை என்று கருதுகிறேன். சில திட்டங்களை பார்ட் 2 இல் சேர்த்திருக் கிறார்கள். என்னுடைய தொகுதியாகிய கிருஷ்ணராய புரத்திலே கரூருக்கு அருகாமையில் லிங்கத்தூர் பாலம் இருக்கிறது. அந்தப் பாலத்தினை பார்ட் 2-ல் சேர்த்து இருக்கி றார்கள். முன்னுரிமை அதற்குக் கொடுத்து விரைவிலே கட்டிக் கொடுக்கவேண்டுமென்று மீண்டும் ஒருமுறை நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து தன்னிறைவுத் திட்டத்தில் சில



1981 மார்ச் 31] [திரு. பி. எம். தங்கவேல்ராஜ்]

கிராமங்கள் சேர்க்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். என்னுடைய தொகுதியிலே இரண்டு இடங்கள் கடவூர் அது மலைப்பிரதேசம் சேர்க்கப்படவில்லை, கிருஷ்ண ராயபுரம், அதுவும் மலைப்பிரதேசம், அதுவும் சேர்க்கப்பட வில்லை. அந்தக் கிராமங்களிலே தன்னிறைவுத் திட்டத்தை அடுத்த ஆண்டாவது சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாட்டிலே குடிநீர் வடிகால் வாரியத்தை இந்த அரசு ஏற்படுத்தி இருக்கிறது. அந்தக் குடிநீர் வடிகால் வாரியம் உண்மையிலேயே நல்லமுறையிலே செயல்படுகிறதா என்று பார்த்தால், ஒவ்வொரு டி.டி.சி. கூட்டத்திலேயும், எல்லா மாவட்டங்களிலேயும் கூறியிருக்கிறார்கள், குடிநீர் வடிகால் வாரியம் சரியாகச் செயல்படவில்லை என்று. சிறு மோட்டார் பழுதடைந்தாலும் அல்லது கிணறு பழுதடைந்தாலும் அதற்காகச் சென்னை நகரத்தைத் தேடிக்கொண்டு வர வேண்டிய நிலைமை இருக்கிறது. இதனால் குடிநீர் கிடைக்காமல் ஆங்காங்கே மக்கள் தத்தளித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர் களுக்குப் பயன்படும் வகையில் இந்த வாரியம் நல்லமுறையில் செயல்படவில்லை; இனிமேலாவது அது நல்ல முறையில் செயல் படுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

லாலாபேட்டைக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் வந்திருந்த பொழுது அங்கேயுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பார்த்தார்கள். அந்தத் தொட்டி ஏறத்தாழ இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் கட்ட ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுது பாதியிலேயே நிற்கிறது. அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் நேரடியாகப் பார்த்தார்கள். அந்தத் தொட்டியை உடனடி யாக முடித்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மணவாசியில் இருக்கின்ற திட்டமும் பாதி யிலேயே நிற்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் மனத்திற்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் தெரியும், வேலைக்கு உணவுத் திட்டம் நல்லமுறையில் செயல்படவ்லை என்பது. மாண்புமிகு உறுப் பினர்கள் பலர் அதற்குப் பல காரணங்களைச் சொன்னார்கள். எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் திரு. இராஜமாணிக்கம் அவர்கள் கூறினார்கள். அதைப்போல இந்தத் தன்னிறைவுத் திட்டமும் நல்லமுறையில் செயல்படாமல் விட்டுவிடக் கூடாது. அரசு அதை நல்ல முறையிலே செயல்படுத்த, நல்ல அதிகாரி களை நியமித்து, அந்த வேலைகளைக் கண்காணிக்க ஒரு கண்காணிப்புக் குழுவையும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பி. எம். தங்கவேல்ராஜ்] [1981 மார்ச் 31

சிவகெங்கை போன்ற பகுதிகளில் தன்னிறைவுத் திட்டத்திலே சேர்க்கப்படவில்லை. சிவகெங்கை யூனியன் ஏற்கெனவே தன்னிறைவுத் திட்டத்திலே சேர்க்கப்படுவதாக இருந்தது. ஆனால் என்ன காரணத்தினாலேயோ இடையிலே சிவகெங்கை நீக்கப்பட்டு வேறொரு பஞ்சாயத்து ஒன்றியம் சேர்க்கப்பட்டிருக்கிறது. சிவகெங்கை சட்டமன்ற உறுப்பினர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் ஒருவேளை அது சேர்க்கப்படவில்லையோ என்று சந்தேகப்படுகிறார்கள். இதுபோன்ற சந்தேகங்கள் மக்கள் மத்தியிலே நிலவாத அளவிற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் எந்தெந்தத் தொகுதி பிற்பட்ட தொகுதியாக இருக்கிறதோ, எந்தெந்தத் தொகுதி வறட்சியாக இருக்கிறதோ அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அடுத்த முறையாவது தன்னிறைவுத் திட்டத்திலே சேர்த்துக்கொள்ளுமாறு மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அமைச்சர் கொண்டுவந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளில் பல திட்டங்கள் இருந்தாலும், அவைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை போதாது. ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை போதாது. சாலை வசதிக்காக சிறு தொகைதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பல சாலைகள் பாதியிலேயே இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். முற்றுப்பெறாத சாலை, காட்டுப்பகுதிகளுக்குப் பஸ் போக்குவரத்து ஏற்படுவதற்கு கல்வர்ட், சிறுசிறு பாலங்கள் அமைத்து இதுவரையில் பஸ் ரூட் இல்லாத பகுதிகளில் பஸ்கள் செல்லுமாறு செய்ய ரோடுகளைப் போட வேண்டும்; அமைச்சரவர்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ரோடு வசதி போன்றவைகளை அமைத்துக் கொடுப்பதற்கு ஒதுக்கியிருக்கின்ற பணம் மிகவும் குறைந்த தொகை என்பதைக் கூறிக்கொள்ள முன்வருகிறேன். இப்பொழுது இருக்கின்ற நிலையில் அரிசனங்களுக்கு வீடு கட்டுவதற்காகக் கொடுக்கப்படும் மூவாயிரத்துச் சொச்சம் ரூபாய் என்பது போதாது; குறைந்த பட்சம் ஐயாயிரம் ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். குறிப்பிட்ட ஒரு இனத்திலே உள்ளவர்கள் பன்னெடுங்காலமாக மிகவும் பிற்போக்கான நிலையிலே இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரொருவர் குறிப்பிட்டதைப் போன்று பன்றியோடு பன்றியாக நகரசுத்தித் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு நல்ல வீடும், பென்சன் போன்ற சலுகைகளும் அவர்களுடைய குழந்தைகள் படிப்பதற்கான வசதிகளும் செய்து கொடுக்க முன்வர வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 1-4-1981 ஆம் தேதி காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்



1981 மார்ச் 31]

பின்னர் பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

—எதுவுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

(96) கோரிக்கை எண் 28-ன் மீதான சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82. (தமிழ், ஆங்கிலம்).

(97) கோரிக்கை எண் 39, சாலைகளும், பாலங்களும் மற்றும் கோரிக்கை எண் 52, சாலைகளும் பாலங்களுக்கான மூலதனச் செலவு ஆகியவற்றின் மீதான தமிழ் நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிய 1980-81 ஆம் ஆண்டிற்கான ஆய்வுரையும், 1981-82 ஆம் ஆண்டுக்கான திட்டங்களும் (தமிழ், ஆங்கிலம்).

(98) தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும். (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1981).

(99) சமுதாய வளர்ச்சி கோரிக்கையைச் சார்ந்த நிதி இணைப்பு வெளியீடு 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

இணைப்பு I.

[. . . , 7 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 566-க்கான விடையைக் காண்க.]

பேரவை முன் வைக்கப்பெறும் விவர அறிக்கை

தஞ்சாவூர் மாவட்டம் வேதாரண்யம் அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான அகஸ்தியன் பள்ளி கிராமத்தில் உள்ள உப்பள நிலத்தை மத்திய அரசுக்கு குத்தகைக்கு விடப்பட்டது சம்பந்தமாக.

தஞ்சாவூர் மாவட்டம் வேதாரண்யம், அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் ஆலயத்துக்குச் சொந்தமான அகஸ்தியன் பள்ளி கிராமத்தில் உள்ள 2,490 ஏக்கர் உப்பள நிலம், ஆலய பாரம்பரை

அறங்காவலரால் 31—12—1806-ல் கிழக்கிந்திய கம்பெனிக்கு வருடம் ஒன்றுக்கு ரூ. 4,200-க்கு குத்தகைக்கு விடப்பட்டு, பின் 1858 ஆம் ஆண்டில் மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. உப்பு தயாரித்தலை மாநில அரசின் நிர்வாகத்திலிருந்து மத்திய அரசு எடுத்துக்கொண்டதால் மீண்டும் 1937-ம் ஆண்டில் மாநில அரசு, மத்திய அரசு உப்பள வருவாய்த்துறையிடம் உப்பள நிலையங்களை ஒப்படைத்தது. 1941-ல் அப்போதிருந்த அறங்காவலர் உப்பள நிலத்தினை ஆலய வசம் ஒப்படைக்க வேண்டுமென்றும், இல்லை எனில் குத்தகையை உயர்த்தித்தர வேண்டுமென மத்திய அரசைக் கேட்க, மேற்கண்ட கோரிக்கை 26—11—1941-ல் நிராகரிக்கப்பட்டதின் தொடர்பாக, உச்ச நீதிமன்றம் வரை இந்த வழக்கு சென்று மத்திய அரசுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட குத்தகை நிரந்தரமானது என்றும், ஆலயத்திற்கான குத்தகை தொகையை உயர்த்துவதற்கில்லை என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

மேற்படி உப்பள நிலம் 2,400 ஏக்கர் நிலத்தில் சுமார் 400 ஏக்கர் நிலம் மட்டும் உப்பளமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மீதம் உள்ள 2,000 ஏக்கர் நிலத்தினை மத்திய அரசினர் தரிசாக விட்டு விட்டனர். மேற்படி இடம் தரிசாகக் கிடந்ததால் மாநில அரசு மேற்படி நிலத்தினை புறம்போக்கு எனக் கருதி சிறுவிவசாயிகளுக்கு குத்தகைக்குவிட்டும் மேலும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு 'பி' மெமோ வழங்கியும், அவர்களிடம் வரிப் பணம் வசூல் செய்து வருகிறது. ஆலயத்தின் பெயரில் ரயத்துவாரி பட்டா வழங்கக் கேட்டு தஞ்சை செட்டில்மெண்ட் அலுவலருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு II.

[..43ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கொள்கை விளக்கக் குறிப்பு

**அறிமுகம் :**

ஊர்ப்புற முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு அரசு பல முன்னோடித் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. ஊர்ப்புற முன்னேற்றத்தின் இன்றியமையாத நோக்கமாக இது வரையில் கிராமப்புற வறுமையை அகற்றுவதிலும் கிராமப்புற மக்களுக்கு அடிப்படை தேவைகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் அவர்கள் வாழ்வை மேம்படுத்துவதிலும் அரசு நாட்டம் செலுத்தி வந்தது.

ஊர்ப்புற முன்னேற்றத்தில் தன்னிறைவுத் திட்டம் ஒரு புதிய வரலாற்றைப் படைக்கத் தொடங்கியுள்ளது. மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அளிப்பதில் புதிய அணுகு முறை பின்பற்றப்பட்டுள்ளது. கால வரையறையும் கணிக்கட்



பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. தேசியகிராமவேலை
வாய்ப்புத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்
திட்டம் ஆகியவை கிராமப்புற பொருளாதாரத்தை வெகு
அளவில் உயர்த்த பெரிதும் துணைபுரிந்து வருகின்றன. வறுமைக்
கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் வாழ்க்கை நிலையை
உயர்த்துவதிலும் குறிப்பாக சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு
நலம் பல விளைவிப்பதிலும் அதிகக் கவனம் எடுத்துக் கொள்ளப்
படுகிறது. கிராமப்புறங்களில் தேவையான வசதிகளை தன்னி
றைவுத் திட்டம் மற்றும் தேசிய கிராம வேலை வாய்ப்புத்
திட்டம் ஆகியவற்றின் மூலம் ஏற்படுத்திக் கொடுக்கும்போது
இத்திட்டங்கள் கிராம மக்களின் பொருளாதார நிலையை உயர்த்
தும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. எத்தனையோ பணிகள்
நிறைவேற்றப்பட்டுள்ளன எனினும் தேவைகள் இன்னும் மிகுந்து
வருகின்றன.

### சில திட்டங்களும் நடவடிக்கைகளும்

**(அ) (1) இணைப்புச்சாலைகள் :**

கிராமப்புற பொருளாதார மேம்பாட்டில் சாலை வசதி இன்றி
யமையாதது. சில கிராமங்களை சென்றடைவதற்கு சாலை
வசதிகள் கூட இல்லை. இந்தக் குறைகளை நீக்குவதற்காக
இணைப்புச் சாலைகள் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.
இணைப்புச் சாலைகள் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை
ஏற்கனவே அமைக்கப்பட்ட இணைப்புச் சாலைகளை மேம்
படுத்த பயன்படுத்தப்படுகிறது. கடந்த ஆண்டு 1,400 கிலோ
மீட்டர் நீளமுள்ள இணைப்புச் சாலைகள் மேம்படுத்தப்பட்டன.
ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் 20 சதவிகிதம் ஆதி திராவிட
மக்களுக்குப் பயன்படும் வகையில் ஒதுக்கப்படுகிறது. புதிதாக
இணைப்புச் சாலைகள் அமைப்பது மட்டுமின்றி ஏற்கனவே
அமைக்கப்பட்ட சாலைகளை மேம்படுத்தி அவைகள் நிரந்தரமாக
கிராமப்புற மக்களால் பயன்படுத்தும் வகையில் பராமரிப்பதும்
இதன் நோக்கமாகும். இந்த வகைகளுக்கு 1980-81இல் ஒதுக்கீடு
செய்யப்பட்ட தொகை ரூபாய் 100.00 இலட்சம் நன்முறை
யில் செலவிடப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டிற்கும் இதே
அளவுத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டில்
தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், இணைப்புச் சாலை பணிகளுக்
காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை இதில் சேரவில்லை.

**(2) பள்ளிக்கட்டிடங்கள் :**

ஊராட்சி ஒன்றியங்களில் 28,607 பள்ளிகள் இயங்கி வரு
கின்றன. இவைகளில் 21.101 பள்ளிகளுக்கு நல்ல கட்டிடங்கள்
அமைக்கப்பட்டுள்ளன. படிப்படியாக தமிழகத்தில் உள்ள
அனைத்து ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கும் நல்ல கட்டிடங்
களைக் கட்டிக் கொடுப்பதற்காக சிறப்பான நடவடிக்கைக
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[1981 மார்ச் 31

1980—81 இல் மொத்தம் 1,830 பள்ளிக்கட்டிடங்கள் ரூபாய் 550 இலட்சம் செலவில் கட்டப்பட்டன. 1981—82-இல் தேசிய கிராமப் புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2,000 பள்ளிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கவும் இதைத் தவிர வழக்கமான திட்டங்களின் கீழ் மேலும் 1,500 பள்ளிக்கட்டிடங்கள் கட்டவும் எண்ணப்பட்டுள்ளது. 1981—82-ல் பள்ளிக் கட்டிடங்களுக்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 550 இலட்சம்.

(3) சிறுபாசனத் திட்டங்கள் :

சிறுபாசன அமைப்புக்களை மேம்படுத்தி, பாதுகாத்து, பராமரிக்கும் பணி ஊராட்சி ஒன்றியங்களிடம் சட்ட பூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. உள்ளூர் பாசன மானியத்தின் கீழ் சிறுபாசன அமைப்புக்களை பராமரிக்கும் பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் ஐந்தாண்டு திட்டங்களாக நிறைவேற்றி வருகின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுடைய நிதி வசதிகளைக் கொண்டு சிறுபாசன அமைப்புக்களை பராமரிக்க இயலாததால் 100 மற்றும் அதற்கு மேற்பட்ட ஏக்கர் பரப்பளவைக் கொண்ட நிலங்களுக்கு நீர் வழங்கும் நீர் நிலைகளை பராமரிக்கும் பொறுப்பு பொதுப்பணித்துறையிடம் விடப்பட்டுள்ளது. 100 ஏக்கருக்குக் குறைந்த நிலப்பரப்புக்கு நீர் வழங்கும் பாசன அமைப்புக்களை ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வருகின்றன. இந்த வகையில் பல சிறு பாசன அமைப்புக்கள் உள்ளன. குளங்களை பராமரிப்பதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும் தற்போதைய மானியத்தின் அளவிலேயே தொடர்ந்து உதவித் தொகை அரசால் அளிக்கப்படும். தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் தன்னிறைவுத் திட்டம் ஆகியவை பல சிறுபாசன அமைப்புக்களை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. 1981—82-ம் ஆண்டு நிதி மதிப்பீட்டில் ரூபாய் 35.00 இலட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

(4) சமுதாயக் கிணறுகள்:

சிறு நில மற்றும் குறு நில விவசாயிகளுக்கு உதவும் வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் முன் அனுமதியோடு ரூபாய் 40,000 மதிப்பீடு வரை உபரி நிதியிலிருந்து கிணறுகள் தோண்டுவதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 1,361 கிணறுகள் ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக அரசால் கடன் வசதியும் அளிக்கப்படுகிறது. 1980—81-இல் 2 சமுதாய கிணறுகள், ரூபாய் 20,000 கடன் வசதியோடு தோண்டப்பட்டுள்ளன.

(5) சாலை பராமரிப்பு ;

ஊராட்சி ஒன்றிய சாலைகளை பராமரிப்பதற்காக 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 131-ன் கீழ் உள்ளூர் சாலை மானியம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படுகிறது. சாலைகளின் நீளம், ஒன்றியங்களின் மக்கட் தொகை



1981 மார்ச் 31]

ஆகியவற்றின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பகிர்ந்து அளிக்க 1981—82 நிதி மதிப்பீட்டில் ரூபாய் 432.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மானியம் போதுமானதல்ல என்பதால் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பல சாலை பராமரிப்பு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

## (ஆ) உற்பத்தித் திட்டங்கள்

### வேளாண்மை, கால்நடை பாதுகாப்பு மற்றும் மீன்வளம்.

ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மை மற்றும் கால்நடை பாதுகாப்பு மானியம், சில குறிப்பிட்ட வேளாண்மை, கால்நடை பாதுகாப்பு மற்றும் மீன் வளத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டங்டங்கள் "இன்றியமையாதவை" மற்றும் "விருப்பமானவை" என இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இன்றியமையாத திட்டங்களை நிறைவேற்ற இந்த மானியம் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வழங்கப்படுகிறது. இதில் எஞ்சிய தொகை சிறப்புத் திட்டங்களின் கீழ் வராத ஒன்றியங்களில் அவர்கள் விருப்பத்திற்கேற்ற திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்படுகிறது. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்துடன் இணைக்க மத்திய அரசு முடிவு செய்து இத்திட்டத்தை 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் முதல் தமிழகத்திலுள்ள 376 ஊராட்சி ஒன்றியங்களிலும் விரைவுபடுத்த முடிவு செய்தது. இந்த முடிவினால் சிறப்புத் திட்டங்கள் நிறைவேற்றும் ஒன்றியங்கள், விருப்பமான திட்டங்களை நிறைவேற்றும் ஒன்றியங்கள் என்ற பாகுபாடு இனி இருக்காது. வேளாண்மை, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளம் பற்றிய பல திட்டங்கள் எதிர் காலத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக மாறிவிடும். எனவே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கொண்டு வர இயலாத சில சிறப்புத் திட்டங்கள் எடுத்துக்காட்டாக அறுவடை களம் அமைத்தல் இதன் கீழ் 1981—82 இல் எடுத்துக்கொள்ளப்படும்.

1980—81 இல் ரூபாய் 60 இலட்சம் 376 ஊராட்சி ஒன்றியங்களுக்கு, பின்வருமாறு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது:—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (1) வேளாண்மை .. .. .. .. | 45 |
| (2) கால்நடை பராமரிப்பு .. .. .. | 12 |
| (3) மீன்வளம் .. .. .. .. | |
| 1981-82 ல் நிதி ஒதுக்கீடு ரூபாய் | 60.00 |

## (இ) சமுதாய நலப் பணிகள்

(1) ஆரம்பக் கல்வி :

1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 65(2) ஆம் பிரிவின்படி தம் எல்லைக்குள் ஆரம்பப் பள்ளிகளைத் திறந்து பராமரித்து விரைவுபடுத்தி மேம்படுத்துவதும், அவைகளுக்கு மானியம் வழங்குவதும், தனிப்பட்டவர்களால் நடத்தப்படும், ஆரம்பப் பள்ளிகளுக்கு மானியம் வழங்குவதும் ஊராட்சி ஒன்றியங்களின் கடமையாகும். ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் மற்றும் உதவிபெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பயிலும் மாணவ மாணவியரின் எண்ணிக்கை முறையே 1,31,990 மற்றும் 51,20.000 ஆகும். 1979–80-லிருந்து அரசு மானியத்தையும் ஊராட்சி ஒன்றியங்களின் பங்குத் தொகையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த வகையில் கீழ்க்கண்டவாறு செலவினம் உயர்ந்து வருகிறது :—

| ஆண்டு. | | | அரசு செலவிட்ட தொகை. | ஊராட்சி ஒன்றியங்களின் பங்கு. |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சங்களில்.) | |
| 1979–80 | .. | .. | 7,345.00 | 1,001.60 |
| 1980–81 | .. | .. | 7,521.02 | 1,024.99 |
| 1981–82 | .. | .. | 8,200.00 | 1,100.00 |

1981-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக கருத முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வாறு அவர்கள் அரசு ஊழியர்காக மாற்றப்படும் வழி முறைகளைக் நிர்ணயிப்பதற்காக ஒரு உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

(3) நல்வாழ்வுப் பணிகள் :

**ஆரம்ப நல்வாழ்வு நிலையங்கள்.**—மாநிலத்தில் மொத்தம் 382 நல்வாழ்வு நிலையங்கள் சமுதாயத்திற்கு நோய் தடுப்புப் பணிகளையும், நோய் நீக்கும் பணிகளையும் செயல்படுத்துகின்றன.

**தாய் சேய் நல விடுதிகள்.**—தாய் சேய் நலப் பணிகள் மேம்படுத்துவது ஊராட்சி ஒன்றியங்களின் கடமையாகும். தாய் சேய் நல விடுதிகளின் பராமரிப்பு செலவில் மூன்றில்இரண்டு பங்கு அரசால் உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. 1981–82 இல் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூபாய் 85.00 இலட்சம்.

**ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்.**—ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அமைத்து பராமரிக்கும் பணியும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். மேலும், ஊராட்சிகளில் கிராமப்புற



மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. ஆண்டொன்றுக்கு ரூபாய் 5,400-க்கு மேற்படாமல் பராமரிக்கப்படும் ஒரு மருந்தகத்தின் செலவில் 50 சதவிகிதத்தை அரசிடமிருந்து நிதி உதவியாக, ஊராட்சி ஒன்றியங்கள் பெற்றுக்கொள்ளலாம். 1981–82-இல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூபாய் 5.00 இலட்சம்.

**குடும்ப நல்வாழ்வு.**—ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் குடும்ப நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கு உரித்தானது. தமிழகத்திலுள்ள 376 ஊராட்சி ஒன்றியங்களிலும் சீரமைக்கப்பட்ட குடும்ப நல்வாழ்வுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.

**சமூகக் கல்வி.**—தமிழ்நாட்டில் தற்போது 13,423 சமுதாயக் கல்வி நிலையங்கள் உள்ளன. கிராமங்களில் வயது வந்தோர்கள் அண்மை நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு கலந்துரையாடலில் ஈடுபடும் வண்ணம் இந்நிலையங்கள் செயல்படுகின்றன. உள்ளூரிலுள்ள பள்ளி ஆசிரியர் அல்லது படித்தவர்கள் யாரேனும் இந்நிலையங்களில் அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்கள். செய்தித்தாள்களையும் சஞ்சிகைகளையும் படித்து அன்றைய சுவைமிகு செய்திகளில் கலந்துரையாடலை தொடங்குவது அவர்களுடைய பணி. அரசு திட்டங்களிலும் மற்றும் பல சீர்மிகு நடவடிக்கைகளிலும் மக்கள் அக்கறை கொண்டு திகழ வேண்டும் என்பதற்காக வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டு கலந்துரையாடுவது இம்மன்றங்களின் பணி. சமூகக் கல்வியின் கீழ் 1981–82-ஆம் ஆண்டிற்காக ரூபாய் 8.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**தாய் சேய் நலம்.**—1962–63-ஆம் ஆண்டிலிருந்து ஒரு ஊராட்சிக்கு ஒரு மகளிர் மன்றம் என்ற முறையில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு குறைந்தது 30 மன்றங்கள் என்ற அளவில் அமைந்துள்ள மகளிர் மன்றங்கள் கிராமப்புற மகளிர் தம் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்குப் பெரிதும் துணை புரிந்து வருகின்றன. தமிழ்நாட்டில் மொத்தம் 12,523 மகளிர் மன்றங்கள் செயல்படுகின்றன.

**ஊட்டச் சத்துணவுத் திட்டம்.**—1962–63 முதல் மத்திய அரசாலும் யுனிசெப் நிறுவனத்தாலும் குழந்தைகள் மற்றும் கருவுற்ற பெண்களின் சத்துணவு நிலையை மேம்படுத்த ஊட்டச் சத்துணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் ஐந்தாண்டு கால அளவிற்கானது. இத்திட்டம் 75 ஒன்றியங்களில் ஆரம்பிக்கப்பட்டு அவைகளில் 43 ஒன்றியங்களில் இந்தத் திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 32 ஒன்றியங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1979–80 முதல் இத்திட்டம் மாநில அரசுக்கு மாற்றப்பட்டுவிட்டது. எனவே இப்போது இது மாநில அரசு நிதியிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. 1980–81-ல் ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 83.43 இலட்சம். 1981–82-ல் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூபாய் 56.00 இலட்சம்.

**குழந்தைகள் காப்பகங்கள்.**— ஆறு வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் மற்றும் பாலூட்டும் அன்னைகள் நலனில் இத்திட்டம் அக்கறை காட்டி வருகிறது. வளரும் குழந்தைகளுக்கு அவர்களின் வளர்ச்சிப் பருவத்தில் அதிக தேவையாய் இருக்கும் சத்துணவுகளை அளிப்பது இதன் நோக்கம். கேர் (CARE) நிறுவனத்தால் சத்துணவு பொருட்கள் (80 கிராம் பாலஹார் மாவு, 7 கிராம் சாலட் எண்ணெய்) அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு காப்பகத்திலும் 80 குழந்தைகளும் 40 தாய்களும் சத்துணவு பெறுகின்றனர். 112 ஒன்றியங்களில் அமைந்துள்ள 1,711 குழந்தைகள் காப்பகங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. பயன் பெறுவோரின் எண்ணிக்கை 1,68,000. கேர் நிறுவனத்திற்கான கட்டணம், உணவு பொருட்களை குழந்தைகள் காப்பகங்களுக்கு எடுத்துச் செல்லும் செலவு, அவைகளை, சமைக்கும் செலவு, பால சேவிகா மற்றும் ஆயாக்களுக்கான ஊதியம் மற்றும் பிற செலவுகளுக்காக 1980–81-ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 19 இலட்சம்.

**வானொலி மற்றும் தொலைக் காட்சிப் பெட்டிகள்.**— ஊராட்சிகளில் வானொலிப் பெட்டிகளை நிறுவும் திட்டம் மாபெரும் அளவில் மிக வேகமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண்மை, குடும்ப நல்வாழ்வு மற்றும் அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்டுள்ள அண்மைக்கால அறிவியல் கண்டு பிடிப்புகளை, முறைகளை கிராமப்புற மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக கிராமங்களில் 384 தொலைக் காட்சிப் பெட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. 1981–82-ல் சமுதாயக் கல்வி திட்டத்தின் கீழ் 25 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க எண்ணப்பட்டுள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சிகளில் வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவனத்தில் புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள தொலைக்காட்சி பராமரிப்பு பிரிவினரால் இத்தொலைக்காட்சிப் பெட்டிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பிரிவு நகராட்சிகளிலும், சென்னை மாநகராட்சியிலும் தொலைக்காட்சிப் பெட்டிகளை நிறுவி பராமரித்து வருகிறது.

**பட்டினிச் சாவு தடுப்பு திட்டம்.**— மக்கள் நல்வாழ்வுக்கான பணிகளில் பட்டினிச் சாவு தடுப்பு திட்டம் தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டபோது ஒரு புதிய எழுச்சி தோன்றியது. உடனே உதவி வழங்குவது, இத்திட்டத்தின் சிறப்பு கூறு. இத்திட்டத்தால் பயன் பெறுவோர் உழைக்கும் ஆற்றல் பெற்றிருந்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு உதவித் திட்டத்தின்கீழ் வேலை அளிக்கவும் அவர்கள் அவ்வாறான நிலையில் இல்லாமலிருந்தால், அவர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் வழங்குவதற்கு வேண்டிய உதவிகளும் செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் உதவி பெற தகுதி படைத்தவர்களுக்கு உடனடியாக ரூபாய் 100 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் உதவி கோருபவர்களுக்கு ஆகும் பயணச் செலவையும் உணவுச் செலவையும் ஊர் நல அலுவலர் இதற்காக அவருக்கு அளிக்கப்பட்டுள்ள பணத்திலிருந்து செலவழிப்பார்.



**ஊராட்சி ஒன்றிய பணியாளர் குடியிருப்புகள்:**— இம்மாநிலத்திலுள்ள 376 ஊராட்சி ஒன்றியங்களில் 182 ஒன்றியங்களில் மட்டுமே ஊராட்சி ஒன்றிய பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. 1981–82-ல் புதிதாக 20 ஊராட்சி ஒன்றியங்களில் குடியிருப்புகள் கட்டப்படுவதற்கு ரூபாய் 60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் விரிவாக்க அலுவலர்கள், மேலாளர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் ஆகியோருக்கு ஒன்றிய தலைமையிடத்திலேயே தங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும். இத்திட்டம் தொடர்ந்து படிப்படியாக நிறைவேற்றப்படும்.

**ஊராட்சி அலுவலக கட்டிடங்கள்.**— 7,520 ஊராட்சிகளில் அலுவலகக் கட்டிடங்கள் இல்லை. ஊராட்சி ஒன்றிய அலுவலகம், வானொலி மன்றம் மற்றும் மகளிர் மன்றம் ஆகியவை அடங்கும் வகையில் ஊராட்சி அலுவலகக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இந்த முடிவிற்கேற்ப கான்கிரீட் கூரை அமைந்த ஏறத்தாழ ரூபாய் 49,000 மதிப்பீட்டிலான அலுவலக அமைப்புக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தொடக்க கட்டமாக 1980–81-ல் தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களில் 41 அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 15 இலட்சம் வழங்கப்பட்டு இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**தமிழ்நாடு ஊரக சீரமைப்புச் சங்கம்.**

வருமான வரி செலுத்துவோர் அளிக்கும் நன்கொடைகளைக் கொண்டு கிராமப்புறத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு 'தாரா' என்னும் ஒரு சங்கத்தை அரசு பதிவு செய்துள்ளது. ஊர்ப்புற முன்னேற்றத் திட்டங்களுக்கு வருமான வரி செலுத்தும் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள். தாராள மனப்பான்மை கொண்ட தனிப்பட்டவர்கள் அளிக்கும் நன்கொடைகளுக்கு முழு வருமான வரிச் சலுகை அளிக்கப்படுகிறது. இச்சங்கம் கிராமங்களில் பல நல்ல பணிகளை நிறைவேற்ற இருக்கிறது. இப்பணிகளுக்காக நிதி வழங்குவோர் கிராமங்களின் நல்லெண்ணத்தையும் பெறுவர் என சங்கம் எதிர்பார்க்கிறது. 1981–82-ல் ரூபாய் 200 இலட்சம் நன்கொடையாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 31–1–1981 வரை வருமான வரிசட்டப் பிரிவு 35 CCA-ன் கீழ் ரூபாய் 9.27 இலட்சத்திற்கான 9 விண்ணப்பங்களும் 35CC பிரிவின் கீழ் ரூ. 88.57 இலட்சத்திற்கான 14 விண்ணப்பங்களும் பெறப்பட்டுள்ளன.

**சுய வேலை வாய்ப்பு பயிற்சித் திட்டம்.**

கிராம இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புகளில் பயிற்சி அளிக்கும் மத்திய அரசின் கிராமப்புற பயிற்சித் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மை மற்றும் தொடர்புடைய துறைகளில் சுய வேலைவாய்ப்புப் பெற குறைந்தபட்சம் இரண்டு இலட்சம் பேருக்கு பயிற்சி அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் குறைந்தது

40. இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து இதன் மூலம் அவர்கள் தமக்குத்தாமே வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பயிற்சியின் கால அளவு மூன்று மாதம் முதல் ஒன்பது மாதம் வரை ஆகும். இத்திட்டத்தை ஊர் வளர்ச்சித் துறையும் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையும் மற்ற துறைகளும் நிறைவேற்றி வருகின்றன. 1980–81-ல் பயிற்சி அளிக்கப்படுவதற்காக 761 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பணி நடைபெற்று வருகிறது. 1981–82-ல் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக ரூ. 15.06 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**தன்னிறைவுத் திட்டம்.**

கிராமங்களில் பொருளாதாரம் நிலைபெற்றுத் திகழவும் அரசு நிறைவேற்றும் பல்வேறு திட்டங்களினால் கிராமப்புற மக்கள் முழுப் பயன் பெறவும் அடிப்படைத் தேவைகள் மற்றும் வசதிகள் அவர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டியதையும் அவசியமென அரசு கருதுகிறது. இந்த வசதிகள் இல்லையெனில் அரசுத் திட்டங்கள் முழுப் பயன்களை அவர்கள் பெற இயலாமல் போய் விடும். எனவே, தன்னிறைவுத் திட்டம் என்ற மாபெரும் திட்டம் 69 ஊராட்சி ஒன்றியங்களில் பின்வரும் இலக்கோடு நிறைவேற்றப்பட்டுள்ளது:—

| பணிகளின் வகை. (1) | 1980–81-ல் நிதி அளவு. (ரூபாய் இலட்சங்களில்.) (2) | இலக்கு. (3) |
|---|---|---|
| 1. குடிதண்ணீர் வழங்குதல் | 2100.00 | 2,045 குடியிருப்புகள். |
| 2. இணைப்புச் சாலைகள் | 1221·00 | 4,220 கி.மீ. |
| 3. சிறு பாலங்கள் .. | 138·00 | 4,150 |
| 4. ஆதி திராவிட மக்கள் குடியிருப்புகளுக்கு மயான சாலைகள் அமைத்தல். | 143·00 | 950 கி.மீ. |
| 5. சிறு பாசனத் திட்டங்கள் மேம்படுத்துதல். | 23·00 | 683 |
| 6. ஊரக மருந்தகங்கள் .. | 28·40 | 71 |
| 7. தாய் சேய் நல விடுதிகள் | 91·00 | 228 |
| 8. பள்ளிக் கட்டிடங்கள் .. | 545·00 | 1,364 |
| 9. ஆதி திராவிடர்களுக்கு குடி இருக்க வீடுகள் (கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்). | 252·00 | 7,000 |
| மொத்தம் .. | 4,541·40 | |



இவைகளைத் தவிர 69 தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களில் ஒரு ஒன்றியத்திற்கு 2 கழிப்பிடங்கள் வீதம் மொத்தம் ரூபாய் 8.73 இலட்சம் செலவில் பெண்களுக்கான 138 கழிப்பிடங்கள் கட்டப்படும். மேலும் ஆதி திராவிடர்களுக்குச் சொந்தமான குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கும் மாபெரும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1981–82-ல் இத்திட்டம் ஏறத்தாழ ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் மேலும் 150 ஊராட்சி ஒன்றியங்களுக்கு விரிவுபடுத்தப்படுகிறது.

**தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம்.**— இந்திய கிராமப் பொருளாதாரத்தைப் பொறுத்த வரையில் வேலையில்லாத நிலைமையும் குறிப்பிட்ட சில காலங்களில் வேலை இல்லாத நிலைமையும் குறிப்பிடத் தக்க அம்சமாகும். இதற்குத் தமிழ்நாடும் விதிவிலக்கல்ல. எத்தனையோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் வேளாண்மையையே நம்பி வாழும் எண்ணற்ற மக்களின் எண்ணிக்கை கடந்த காலம் வரை குறையவில்லை. இத்தகைய வேலையில்லா அவல நிலையைப் போக்க உழைப்புக்கு உணவுத் திட்டம் தமிழ்நாட்டில் 1978 ஏப்ரல் திங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போது இத்திட்டம் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் என அழைக்கப்படுகிறது.

(1) கிராமப் பகுதிகளில் கூடுதல் பயன் தரும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.

(2) கிராமப் புற அடிப்படைத் தேவைகளைப் பெருக்கும் வகையில் உறுதி மிக்க சமுதாய அமைப்புகளை ஏற்படுத்துதல்.

(3) மக்களின் சத்துணவு நிலையையும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துதல் ஆகிய நோக்கங்களுடன் இது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. ஒரு பணியாளருக்கு ஒரு நாளைக்கு ரூ. 1.13 வீதத்தில் கூலி அளிக்கப்படுவதற்காக ரூபாய் 186.50 இலட்சமும் 33,000 டன் அரிசியும், கட்டுமான பொருட்கள் வாங்குவதற்காக ரூபாய் 582 இலட்சமும், மத்திய அரசு வழங்கியுள்ளது. பணியாளருக்கு மேலே குறிப்பிட்ட கூலியுடன் தமிழக அரசு ஒரு பணியாளருக்கு ஒரு நாளைக்கு 37 காசு அளிக்கிறது. உழைப்புக்கு உணவுத் திட்டம் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட வேலைகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| | 1979–80. | 1980–81. |
|---|---|---|
| 1 எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை. | 42,390 | 35,946 |
| 2 செய்து முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை. | 32,914 | 18,686 |

| | | | |
|---|---|---|---|
| 3 | வழங்கப்பட்ட அரிசி .. .. | 55,483 டன்கள் | 44,813 டன்கள். |
| 4 | கூலியாக வழங்கப்பட்ட பண அம்சம் | 126.73 இலட்சம். | 195.75 இலட்சம். |
| 5 | செய்யப்பட்ட வேலையின் மதிப்பு | 920.90 | 872 30 |
| 6 | உருவாக்கப்பட்ட மனித உழைப்பு நாட்கள். | 142.04 இலட்சம். | 149 40 இலட்சம். |
| 7 | வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை. | 3.42 இலட்சம். | 1.03 கூடுதலாக. |
| 8 | 7-ல் பதிவு செய்யப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்ட எண்ணிக்கை. | 1.86 இலட்சம். | 1.56 இலட்சம். |

### வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்.

18 வயதிற்கு மேற்பட்ட உழைக்கும் தகுதி பெற்ற ஆண், பெண் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிப்பதற்காக 1979 ஆகஸ்டு திங்களில் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. கிராமப்புற ஆண் பெண்கள் இத்திட்டத்தின் கீழ் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளவேண்டும். வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பினும், விவசாய மற்றும் வேறு வேலைகளின் காரணமாக பலர் இத்திட்டத்தின்கீழ் வேலைக்கு வருவதில்லை. இவ்வாறு பெயர்களைப் பதிவு செய்து கொண்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க இயலாத நிலையில், ஒரு ரூபாய் மதிப்புள்ள அரிசி வழங்குவது இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.

கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள அரிசி ஊதியமாக வழங்கப்பட பயன்படுத்தப்படுகிறது.

### பயிற்சித் திட்டங்கள்.

பவானிசாகரில் அமைந்துள்ள மாநில கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையத்தில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு இரண்டு மாதப் பயிற்சியும், சமூகநல மற்றும் கல்வி விரிவாக்க அலுவலர்களுக்கு 30 நாள் சிறப்புப் பயிற்சியும் மாநில அளவிலான வளர்ச்சிப் பணி அதிகாரிகளுக்கு 15 நாள் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. கிராம விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் ஊர்நல அலுவலராகப் பதவியேற்க இருப்போருக்கு இரண்டாண்டு கால பணிமுன்பயிற்சியும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்நல



அலுவலர்களுக்குத் தீவிர வேளாண்மைப் பயிற்சியும் அளிக்கப் படுகிறது. இப்பயிற்சிகளைத் தவிர ஊட்டச் சத்துணவுத் திட்டம் பற்றிய பயிற்சியும் அளிக்கப்படுகிறது. கிராம விரிவாக்கப் பயிற்சி நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள தொழில் பட்டறைப் பிரிவுகளில் கிராம கைவினைஞர்களின் மகன்களுக்கு தச்சு மற்றும் இரும்பு வேலைகளில் ஓராண்டு பயிற்சி அளிக்கப் படுகிறது.

சத்தியவிஜயநகரம் மற்றும் தே. கல்லுபட்டி கிராம விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் செயல்படும் மனையியல் பிரிவுகளில் பெண் அலுவலர்களுக்கும் அலுவலர்களல்லாத பிறருக்கும் பயிற்சியளிக்கப்படுகிறது. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்துறை மற்றும் மாவட்டத் தொழில் மையங்கள் ஆகியவர்களுக்காக 1980–81ல் கிராம விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி நிலையத்தின் நிதியிலிருந்து பல பயிற்சிகள் நடத்தப்பட்டன. வேலை கிடைக்காத கிராமப்புற இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களுக்கு வேளாண்மை மற்றும் அது தொடர்பான பணிகள் மற்றும் கிராமக் கைத்தொழிகள் முதலிய தேர்ந்தெடுக்கப்பட்ட 16 வகை தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

### நகர நிர்வாகம்.

இம் மாநிலத்தில் நகராட்சிகள் திறம்பட இயங்குவதற்காக நகராட்சி நிர்வாக இணை இயக்குநர் உதவியுடன் நகராட்சி நிர்வாக இயக்குநர் பணியாற்றி வருகிறார். மதுரை, சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகியவைகளைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ஐந்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு உதவி புரிகின்றனர். மண்டல இயக்குநர்களுக்கு தம் ஆளுகைக்குட்பட்ட முதல் நிலை நகராட்சிகள் வரை அமைந்த நகராட்சிகளை ஆய்வு செய்வதோடு மற்ற அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன, சிறப்பு மற்றும் தேர்வு நிலை நகராட்சிகளை ஆய்வு செய்வது மேற்பார்வையிடுவதும் நிர்வாக இயக்குநரால் மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 107 நகராட்சிகளும் நகரிய குழுக்களும் செயல் படுகின்றன. இவைகள் ஆண்டு வருவாயின் அடிப்படையில் பல்வேறு நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலையிலும் உள்ள நகராட்சிகள் மற்றும் நகரிய குழுக்களின் விவரம் வருமாறு :—

[1981 மார்ச் 31

| நிலை. | நகராட்சிகள். | நகரியக் குழுக்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சிறப்பு நிலை .. .. .. | 5 | .. |
| தேர்வு நிலை .. .. | 9 | 3 |
| முதல் நிலை .. .. .. | 29 | 3 |
| இரண்டாம் நிலை .. .. | 33 | 2 |
| மூன்றாம் நிலை .. .. | 23 | .. |
| மொத்தம் .. | 99 | 8 |

தற்போது மக்கட்தொகை கணக்கெடுப்பின் காரணமாக சில பேரூராட்சிகளை நகராட்சிகளாக உயர்த்தும் செயற் குறிப்புகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. சில நகராட்சிகளின் நிலைகளை உயர்த்துவதற்கு நகராட்சிகளின் நிதி நிலை ஆய்வுக் குழு பரிந்துரைகள் ஆய்வில் உள்ளன.

திட்ட மற்றும் நிறுவன நிதிப் பிரிவு ஏற்படுத்துதல்.

தம் நிதி வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும் மக்களுக்கு அனைத்து சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் குடிநீர் வழங்குதல், கழிவு நீர் அகற்றல், விளக்கு அமைத்தல் கல்வி, நகரமைப்பு, பேருந்து நிலையங்கள் கட்டுதல், அங்காடிகள் மற்றும் கடைகள் கட்டுதல், சாலைகள் பராமரித்தல், குடிசைகள் மற்றும் பின்தங்கிய பகுதிகளை முன்னேற்றுதல் ஆகிய திட்டங்களை நகராட்சிகள் மேற்கொண்டு வருகின்றன. பல்வேறு காரணங்களால் நகராட்சிகளின் நிதி நிலை மிகவும் குறைவாக இருக்கிறது. நகராட்சிகளின் நிதி நிலையை மேம்படுத்த சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நகராட்சிகள் பிறர் வாயிலாகக் கிடைக்கும் நிதி உதவிகளை மட்டுமின்றி தம் சொந்த நிதியிலிருந்தும் பல்வேறு பணிகளை நிறைவேற்றி வருகின்றன. அனைத்து நகராட்சிகளிலும் பணியாளர் செலவுகளை உள்ளிட்டு ஆகும் மொத்த செலவு சராசரி ஆண்டொன்றுக்கு ரூபாய் 60 கோடி.

நகராட்சிகள், அரசின் உதவியோடு பின்வரும் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன :

1. பேருந்து நிலையங்கள், அங்காடிகள், கடைகள் கட்டுதல் போன்ற வருவாய் தரும் இனங்கள்.
2. நகராட்சி சாலை பணிகள் (கடன் மற்றும் மானிய பணிகள்).
3. விரைவுபடுத்தப்பட்ட குடிசை மேம்பாட்டுத் திட்டம்.
4. வெள்ளம், புயல் மற்றும் வறட்சி நிவாரணப் பணிகள்.
5. ஒருங்கிணைந்த நகர்ப்புற முன்னேற்றத் திட்டம்.



1981 மார்ச் 31]

6. ஒருங்கிணைந்த பிற்பட்ட பகுதி முன்னேற்றத்திட்டம்.
7. கட்டண கழிப்பிடங்கள் கட்டுதல்.
8. தனிப்பட்டவர்களின் தெருக்களில் மேம்பாட்டிற்கு நகராட்சிகளில் சுழல் நிதிகள் ஏற்படுத்துதல்.

நகராட்சிகளை நடத்திச் செல்லவும், வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கும், அவைகள் நிறைவேற்றப்படுவதை கவனிப்பதற்கும் ஒரு தனி பிரிவு நகராட்சிகளின் நிர்வாக இயக்குநருக்கு உதவும் வகையில் அவர் இயக்ககத்தில் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் கல்வி பிரிவு ஏற்படுத்தல்.

நகராட்சிகளிலும், நகரியங்களிலும் 1,100-க்கு மேற்பட்ட ஆரம்பப்பள்ளிகளும் 31 உயர்நிலைப் பள்ளிகளும், 39 மேல் நிலைப் பள்ளிகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு நிலைகளில் ஏறத்தாழ 15,000 ஆசிரியர்கள் இப்பள்ளிகளில் தற்போது பணி புரிந்து வருகின்றனர். நகராட்சி கல்வி நிலையங்கள் இயங்குவதில் மற்றும் அங்கு பணியாற்றி வரும் ஆசிரியர்களின் பணியில் மேற்பார்வை தேவை. நகராட்சி பள்ளிகளை ஆய்வு செய்ய வேண்டிய கல்வித் துறையைச் சார்ந்த அலுவலர்கள் அரசு மற்றும் தனிப்பட்டவர்களின் பள்ளிகளை ஆய்வு செய்யும் பணியோடு நகராட்சி பள்ளிகளையும் சரிவர கவனிக்க இயலவில்லை. எனவே, நகராட்சி கல்வி நிலையங்களை மேற்பார்வையிடுவதற்கும் நகராட்சி பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்தவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் பள்ளிக் கல்வி துணை இயக்குநர் நிலையில் ஒரு இணை இயக்குநர் பதவியை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திலும், மண்டல நிர்வாக இயக்குநர் அலுவலகங்களிலும் பொறியியல் பிரிவுகளை ஏற்படுத்துதல்.

தற்போது நகராட்சிகளின் பொறியியல் பணிகளை பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போன்ற பல்வேறு துறைகள் கட்டுப்பாட்டிலும் மேற்பார்வையிலும் வருகின்றன. சீரிய ஒருங்கிணைப்பு ஏற்படுத்தவும் முன்னேற்றத் திட்டங்களை திட்டுவதற்கும் பொறியியல் சம்மந்தமாக நல்ல மேற்பார்வையிடுவதற்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திலும் ஐந்து மண்டல நிர்வாக இயகுநர்கள் அலுவலகங்களிலும் உரிய பணியாளரோடு பொறியியல் பிரிவுகள் ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது. இதனால், ஆண்டொன்றுக்கு ரூபாய் 4.17 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1981–82-ல் மதிப்பிடப்பட்டுள்ள செலவு ரூபாய் 3.32 இலட்சம்.

[1981 மார்ச் 31

### நகராட்சிகள் பராமரிக்கும் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் கட்டுதல்.

பல நகராட்சி ஆரம்பப் பள்ளிகள் கூரை கட்டிடங்களில் அமைந்துள்ளன. எனவே பள்ளிகளுக்கும் நல்ல கட்டிடங்கள் கட்டுவது மிகவும் அவசியம். நகராட்சிகளின் நிதி நிலையை கருத்தில் கொண்டு 1980–81-ல் அரசு ரூபாய் 21.50 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. 1981–82லும் இதே அளவிற்கு மானியம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி மேல் நிலைப்பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் அமைந்துள்ள கட்டிடங்கள் மிகவும் பழமையானவை. சில பள்ளிகளில் இடவசதி போதுமானதாக இல்லை. ஆகவே கூரை கட்டிடங்களில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. நகராட்சிகளுக்கு உயர்நிலைக் கல்விக்காக வழங்கும் மானியம் பள்ளிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர் களுக்கு ஊதியத்திற்காக மட்டுமே வழங்கப்படுகிறது. உயர்நிலைப்பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு நிதி உதவி அளிக்க 1981–82-ல் ரூபாய் 25 இலட்சம் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

### குடிசைப் பகுதி மேம்பாட்டு விரைவு திட்டங்கள்.

பல்வேறு நகராட்சிகளில் குடிசைப் பகுதிகள் மிகுந்து காணப்படுகின்றன. குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டம் முதலில் திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் நகராட்சிகளில் 1977–1978-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் முக்கிய தேவைகளான குடிநீர் வழங்குதல், சாலை, பொதுகழிப்பிடங்கள், விளக்குகள், வடிகால்கள் முதலியவை தேர்ந்தெடுக்கப்பட்டு குடிசைப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் நகராட்சிகளுக்காக அரசு ரூபாய் 50 இலட்சம் மானியமாக வழங்கிவருகிறது. 1980–81-ல் அரசு 13 நகராட்சிகளுக்கு ரூ. 50 இலட்சம் வழங்கியுள்ளது. 1981–1982ல் நிதி மதிப்பீட்டில் ரூபாய் 50 இலட்சம் 15 நகராட்சிகளில் குடிசைப் பகுதிகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

### தனிப்பட்டவர்களின் தெருக்களை மேம்படுத்துவதற்கு நகராட்சிகளில் சுழல் நிதி ஏற்படுத்துதல்.

அனைத்து பகுதிகளிலும் நல்ல சாலை வசதிகளை ஏற்படுத்த அரசு அறிவுரை' வழங்கியுள்ளது. இவ்வசதிகளுக்கு ஏற்ப தகுந்த கட்டணங்களை அவ்வீட்டு சொந்தக்காரர்களிடம் இருந்து உடனே பெறுவதற்கு சில இடையூறுகள் இருக்கின்றன. மொத்தம் இதுபோன்ற 45 நகராட்சிகளில் 470 வீட்டு மனை திட்டங்கள் உள்ளன. இப்பணியில் நகராட்சிகளுக்கு உதவிக் கரம் நீட்டும் நோக்கத்துடன் அரசு தனிப்பட்டவர் தெருக்களை மேம்படுத்துவதற்காக 1980–81-ல் ரூபாய் இருபத்தைந்து



1981 மார்ச் 31]

இலட்சத்தை சுழல் நிதியாக வழங்கியுள்ளது. இந்தப் பணம் நகராட்சிகளில் சாலைகள் அமைப்பதற்கு கடனாக அளிக்கப்படும். மனை சொந்தக்காரர்களிடமிருந்து சாலைக்கான செலவு தவணைகளில் பெறப்பட்டு அப்பணம் மறுபடியும் தவணைகளில் சுழல் நிதியில் நகராட்சிகளில் செலுத்தப்பட வேண்டும். சுழல் நிதியில் செலுத்தப்படும் பணத்தின் மூலம் பல மனைகள் பயன்பெறும். இந்தப் பணிகள் முடிவு பெற்றதும் நகராட்சி பகுதிகளின் ஒரு பெரிய பிரச்சினையான சாலை வசதி பிரச்சினை தீர்ப்பதோடு மக்களின் முக்கிய பிரச்சினையை தீர்த்த பெருமையும் வந்தடையும்.

### உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் வாக்களிக்கும் வயது 21-லிருந்து 18 ஆகக் குறைத்ததில் வாக்காளர் பட்டியல் களைத் திருத்தி அமைக்க வேண்டியது அவசியமாயிற்று. அனைத்து ஆணையர்களுக்கும், சென்னை மாநகராட்சி ஆணையரும் மக்கட்தொகை கணக்கெடுப்புப் பணியில் 31–3–81 வரை ஈடுபட்டு இருப்பதால் அவர்களை வாக்காளர் பட்டியலைத் திருத்தும் பணிகளில் ஈடுபடுத்த வேண்டாம் என மத்திய அரசு இவ்வரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

எனவே வாக்காளர் பட்டியல்களை திருத்தி அமைக்கும் பணி, இதன் பிறகு மேற்கொள்ளப்படும். வாக்காளர் பட்டியல்கள் திருத்தியமைக்கப்பட்டதும் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்படும்.

### பயிற்சி நிலையங்கள்.

நகராட்சி ஆணையர்கள் மற்றும் நகராட்சி ஊழியர்கள் நகராட்சி நிர்வாகத்தில் திறம்பட செயலாற்றுவதற்காக பயிற்சி அளிக்க ஒரு பயிற்சி நிலையத்தை அமைப்பதற்கு எண்ணிய அரசு ஆரம்ப வேலைகளை செய்வதற்காக ஒரு சிறப்பு அலுவலரை நியமித்துள்ளது. பயிற்சி நிலையத்தைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

### நகராட்சி நிதி ஆய்வுக் குழு.

நகராட்சிகளின் நிதி நிலைமையைப் பற்றிய சிக்கல்களை ஆராய்ந்து தற்போதுள்ள நிதி வசதிகளைச் சிறந்த முறையில் செலவிட வழி முறைகளையும், மாநில வருவாயை நகராட்சிகளுடன் பகிர்ந்து கொள்ளும் முறையையும், பிற நிதி நிறுவனங்கள் வங்கிகள் போன்றவற்றிலிருந்து கடன் பெற்று நிதி வசதிகளைப் பெருக்கிக்கொள்ளும் வழிமுறைகளையும் ஆய்ந்து தக்க பரிந்துரைகளைக் கூறுவதற்காக ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு நகராட்சி நிதி ஆய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரைகள் இன்னும் அரசின் ஆய்வில் உள்ளது.

# இணைப்பு III

[43ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டம்,

## 1980–81 ஆம் ஆண்டுக்கான ஆய்வுரையும் 1981–82 ஆம் ஆண்டுக்கான திட்டங்களும்.

1. முன்னுரை.

1.1 ஒரு நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்குத் தகுந்த முறையில் சாலைகளை அமைப்பதும் அவைகளை மேம்பாடு செய்வதும் ஒரு முக்கிய வழியாகும். சாலைகளும். சாலைப் போக்குவரத்தும் அத்தகைய ஒரு முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையாக அமைகிறது. ஒரு நாட்டின் சாலை வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும், ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை. நமது நாட்டில் எண்பது சதவிகித மக்கள் கிராமங்களில் வாழ்வதால் அவர்களுக்கு தக்கதொரு சாலை அமைப்பு அடிப்படைத் தேவையாக உள்ளது. இந் நிலைமை பின்தங்கிய பகுதிகளுக்கும், பழங்குடியினர் பகுதிகளுக்கும் மிகவும் பொருந்தும்.

1.2. இந்நாடு சுதந்திரம் அடைந்த பின்பு, திட்டப் பணிகள் மூலம் இந்நாட்டில் பல்வேறு துறைகளில் குறிப்பாக நீர்ப் பாசனம், விவசாயம், தொழில், வனம், மீன்வளம், சமூக நலம் மலைவாழ் மக்கள் மேம்பாடு போன்ற பல்வேறு துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நாட்டின் முன்னேற்ற வளர்ச்சிக்கு சாலை முன்னேற்றம் அடிப்படையான பணி ஆகும். இந்நாட்டின் முன்னேற்றத்திற்கான நல்ல பலனை அடைவதற்கு அடிப்படையான சாலை வசதியை முன்னோடியாகக் கொண்டு மற்றைய ஆக்கப் பணிகளுடன் இணைந்து செயல்படுவது அவசியம். தமிழ் நாட்டை பொறுத்தவரை சாலைப் போக்குவரத்து பணிகளில் செய்து முடிக்கப்பட்டுள்ள சாதனையானது மிகவும் பாராட்டு தற்குரியதாகும். ஐந்தாவது மற்றும் ஆறாவது திட்டக் காலங் களில் குறைந்த அளவுத் தேவைத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஊரகச் சாலைகளின் மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. 1,500-ம் அதற்கு மேலும் மக்கள் தொகையுள்ள கிராமங்கள் அனைத்திற்கும் எல்லா பருவ நிலைகளுக்கும் ஏற்ற சாலைகள் மூலம் இணைப்பினை ஏற் படுத்தித் தருதலே இதன் அடிப்படை நோக்கமாகும்.

1.3. மாநில நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை பின் வரும் சாலை வகைகளின்கீழ் அதாவது தேசிய நெடுஞ்சாலை (நகர்ப் புறம்), மாநில நெடுஞ்சாலை, மாவட்ட பெருஞ் சாலைகள், மாவட்ட பிற சாலைகள் என்பதன்கீழ் சாலை களைப் பராமரித்து வருகிறது. பல்வேறு வகை சாலைகளின் நீளம் பற்றிய விவரம் வருமாறு :—



| | | |
|---|---|---|
| | | கிலோ மீட்டர். |
| தேசிய நெடுஞ்சாலைகள் (நகர்ப்புறம்) | .. .. | 139 |
| மாநில நெடுஞ்சாலைகள் | .. .. .. .. | 1,814 |
| மாவட்டப் பெருஞ்சாலைகள் | .. .. .. | 14,028 |
| மாவட்ட பிற சாலைகள் | .. .. .. .. | 17,714 |
| மொத்தம் | .. | 33,695 |

1.4. மேலும் மாநில நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையானது மைய அரசு பொறுப்பேற்கும் பணிகளை அதாவது மாநிலங்களுக்கு இடையே பொருளாதார மற்றும் அண்டை மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டப் பணிகள், மலை வாழ் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டம் பழங்குடியினர் துணைத் திட்டம் போன்ற மத்திய அரசுத் துறையின் திட்டப் பணிகளை மேற் கொள்கிறது.

2. திட்டப் பணிகள்.

தற்போதுள்ள உறுதியற்ற கட்டுமானங்களை உறுதியுடன் கட்டுதல், பாலம் கட்டப்படாத கடவுப்பாதைகளில் மதகு களும் பாலங்களும் கட்டுதல், நடைபாதைகளை அகலப் படுத்துதல், உறுதி படுத்துதல், வடிவமைப்பு இயல் மேம்பாடு போன்ற மூலப் பணிகள் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மாநில சாலைப் பணித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு துணைத் திட்டப் பணியை பொறுத்த வரையிலும் அவற்றின் நோக்கத் திற்கிணங்க அடைந்த சாதனை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

2.1 தேசிய நெடுஞ்சாலைகள்(நகர்ப்புறம்).

2.1.1. நகராட்சி எல்லைகளுக்குள் அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகள் மாநில அரசால் மேம்பாடு செய்தும் பராமரிக்கப்பட்டும் வருகின்றன. இப்பகுதிகளை தேசிய நெடுஞ்சாலைகளின் புறநகர்சாலைத் தரத்திற்கு சிறிதும் குறை படாமல் பராமரிக்கவும், நகரியப் பகுதிகளின் போக்குவரத்து நெரிசலுக்கு ஈடு கொடுக்கும் விதத்திலும், நடைபாதை நீங்க லாக உள்ள சாலைப் பரப்பு முழுவதும் தூசி படியா சாலையாக இருக்கவும் இந்நகரியப் பகுதி தேசிய நெடுஞ்சாலைகள் படிப் படியாக மேம்பாடு செய்யப்படுகின்றன. 1980–81 ஆம் ஆண் டில் ரூ. 10.99 லட்சம் செலவில் 6 பணிகள் இராணிப்பேட்டை, திருச்சி, சிங்காநல்லூர், கோயம்புத்தூர், சேலம் ஆகிய நகராட்

சிகளில் மேற்கொள்ளப்பட்டு அவைகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன. (பணிகளின் விவரங்களை இணைப்பு 1-ல் பார்க்கவும்) இத்துடன் மற்றொரு முக்கிய பெரும்பணி அதாவது பூவிருந்த வல்லி நெடுஞ்சாலையை புது ஆவடி சாலைத் சந்திப்பிலிருந்து வைணவக் கல்லூரி வரை, தேசீய நெடுஞ்சாலை 4-ல் கி. மீ. 5/4 முதல் 7/6 வரை ரூ. 100 இலட்சம் மதிப்பீட்டில் அகலப் படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. நிலத்தைக் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. 1980–81 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டுத் தொகை ரூ. 10.51 லட்சம் ஆகும்.

2.1.2. 1981–82 ஆம் ஆண்டில் இதே போன்று ரூ. 25.00 லட்சம் செலவிலான 6 பணிகள் செங்கல்பட்டு, ஆம்பூர், திண்டிவனம், விருதுநகர், பாளையங்கோட்டை ஆகிய நகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட உள்ளன. (பணிகளின் விவரங்களை இணைப்பு 2-ல் காணலாம்). 1981–82 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டுத் தொகை ரூ. 12.12 லட்சம் ஆகும்.

2.2. மாநில சாலைத் திட்டங்கள்.

மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டப் பெருஞ்சாலைகள், இதர மாவட்ட சாலைகள் போன்ற அரசுச் சாலைகளில் மூலப் பணிகளை மேற்கொள்ளுதல், சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல், உறுதியற்ற பாலங்களை புதுப்பித்தல், ஓடைக் குறுக்கீடுகளில் புதிய பாலங்கள் கட்டுதல் போன்ற பணிகள், இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

2.2.1. மாநில நெடுஞ்சாலைகள்.

2.2.1.1. 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 218.00 இலட்சம் செலவில் 4 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு அவை செயலாக்கப்பட்டு வருகின்றன. (பணிகளின் விவரங்களை இணைப்பு 3-ல் காணலாம்). 1980–81 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டு தொகை, ரூ. 18.12 இலட்சம் ஆகும். 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 18.12 இலட்சம் ஆகும். 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் நான்கு பணி களுக்கு ஒப்புதல் வழங்கமுடிவு செய்யப்பட்டுள்ளது. (பணி களின் விவரங்களை இணைப்பு 4–ல் காணலாம்). 1981–82ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 50.34 இலட்சம் ஆகும்.

2.2.1.2. திருச்சி-திருவெறும்பூரில் நிறுவப்பட்டுள்ள பெல் (BHEL) நிறுவனத்தின் தொழில் மேம்பாட்டிற்காகவும், திருச்சி-திருவெரும்பூர் பகுதிகளில் பெருகியுள்ள போக்கு வரத்தின் வசதிக்காகவும், திருச்சியிலிருந்து பெல் தொழிற் பேட்டை வரை உள்ள சாலையை நான்கு வழித் தடங்கள் கொண்ட சாலையாக அமைந்திட ரூ. 122.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் செலவில் 50 சதவீதத்தை "பெல்" நிறுவனம் ஏற்க இசைந்துள்ளது.



2.2.2. மாவட்டப் பெருஞ்சாலைகள்.

2.2.2.1. சேலம், உருக்காலைத் திட்டத்திற்கு பயனளிக் கக்கூடிய சூரமங்கலம்-தாரமங்கலம் சாலையை மேம்படுத்து வதற்கென ரூ. 157.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ள பணியானது முடிவுறும் தறுவாயில் உள்ளது. இதே போன்று இராணிப்பேட்டையில் உள்ள பெல் தொழிலகத்தின் வளர்ச்சிக்கென ரூ. 70.00 இலட்சம் செலவில் சாலைகளை மேம்படுத்துவதற்கான திட்டம் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. இத்தகைய தொழிற்சாலைகளின் முன்னேற்றத்தினால் ஏராளமான பயிற்சி பெற்றவருக்கும், பயிற்சி பெறாதவருக்கும் வேலை வாய்ப்புகள் உண்டாகக் கூடிய சூழ்நிலை தோற்றுவிக் கப்படுகிறது.

2.2.2.2. மேலும் பவானியிலுள்ள பவானி–மேட்டூர் சாலை யில் காவேரி ஆற்றின் குறுக்கே பணியின் முக்கியத்துவத்தையும் அவசரத்தையும் கருத்திற்கொண்டு தற்போதுள்ள வலிமை குறைந்த பாலத்தைப் புதுப்பிக்கவும், 'எல்லிஸ் ஸாடில்' என்னு மிடத்தில் தற்போதுள்ள பொதுப் பணித்துறையின் மதகுடன் கூடிய பாலத்திற்குப் பதிலாக சாலைப் போக்குவரத்திற்கென தனியொரு பாலத்தைக் கட்டுவதற்கும் ரூ. 175.00 இலட்சம் செலவிலான திட்டத்தை மேற்கொள்ள அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது. இப்பாலங்கள் கோவையிலிருந்து பவானி-கிருஷ்ணகிரி வழியாக பெங்களூர் செல்லும் முக்கிய இணைப்புச் சாலையில் அமைந்துள்ளது.

2.2.2.3. 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 101.90 இலட்சம் செலவில் 9 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, அவைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. (பணிகளின் விவரங்களை இணைப்பு 5-ல் காணலாம்). 1980–81 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப் பட்டுள்ள தொகை ரூபாய் 99.68 இலட்சம் ஆகும்.

2.2.2.4. 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 393.75 இலட்சம் மதிப்பீட்டில் பத்துப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்க முடிவு செய் யப்பட்டுள்ளது. (பணிகளின் விவரங்களை இணைப்பு 6-இல் காணலாம்.) 1981–82 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூபாய் 73.94 இலட்சம் ஆகும்.

2.2.3. ஏனைய மாவட்ட சாலைகள்.

2.2.3.1. 1980–81 ஆம் ஆண்டில் ரூபாய் 177.30 இலட்சத் தில் 8 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு அவைகள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. (பணிகளின் விவரங்களை இணைப்பு 7-இல் காணலாம்.) 1980–81 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 11.38 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.2.3.2. 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 120.10 இலட்சம் மதிப்பீட்டில் 8 பணிகளுக்கு ஒப்புதலளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (பணிகளின் விவரங்களை இணைப்பு 8-இல் காணலாம்.) 1981–82 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 71.14 இலட்சம் ஆகும்.

2.2.4. பிற சாலைகள் திட்டம்.

2.2.4.1. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் நிதிச் சுமையைக் குறைக்கும் பொருட்டு 50,000 ரூபாய்க்கு மேல் செலவாகக் கூடிய ஊராட்சி, ஊராட்சி ஒன்றியச் சாலைகள், விடுபட்ட பெரிய, சிறிய பாலங்கள், தாம்போகிகள், படுகைப் பாலங்கள், சாலை மேம்பாட்டுப் பணிகள் போன்ற மூலப் பணிகள் இத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்ட பாலங்களும் மேம்படுத்தப்பட்ட சாலைகளும், வருங்காலத்தில் பராமரிக்கப்படுவதற்காக உள்ளாட்சி மன்றங்களின் பொறுப்பில் திருப்பி ஒப்படைக்கப்படுகின்றன. இணைப்பு 9-இல் அடங்கியுள்ள பணிகள் முன்னேற்ற நிலையில் இருக்கின்றன. 1980–81 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூபாய் 214.70 இலட்சம்.

2.2.4.2. 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 304.95 இலட்சம் மதிப்பீட்டில் 15 பணிகளுக்கு ஒப்புதல் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (இதற்கான பணிகளின் விவரங்களை இணைப்பு 10-இல் காணலாம்.) 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 126.38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.3. நிழற் சாலைகள்.

2.3.1. சாலையோரங்களில் நெடிய சாலைகளுக்கு அழகூட்டவும், சாலைப் பயணிகள் தங்கி இளைப்பாறவும், சாலை ஓரங்களில் நிழல் மற்றும் பயன்தரும் மரங்கள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. இம்மரங்களை வளர்ப்பதனால் பின்னால் கிடைக்கக்கூடிய விறகு போன்ற பொருட்களினால் அரசுக்குத் தொடர் வருமானத்திற்கு வழிவகை செய்வதுடன், இயற்கை சூழ்நிலையும் மாறுபடாமல் பராமரிக்கப்படுகின்றது. மேலும் இத் திட்டத்தினால், கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பும், கிராமத் தொழில் முன்னேற்றமும், ஏற்பட வழி வகுக்கிறது. தற்சமயம் பல இலட்சக்கணக்கான பனை மரங்கள் மேலும் கட்டிடங்களுக்கான மரங்கள், எரிபொருள், எண்ணெய், கனிகள், மலர்கள் போன்ற பல்வகை பயன்தரும் மரங்கள் நடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இத் திட்டத்திற்கென 1980–81 ஆம் ஆண்டில் அரசு ரூபாய் 43.20 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. 1981–82 ஆம் ஆண்டின் நிழல் மரங்கள் நடுவதற்கென ரூபாய் 11.00 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2.4. கருவிகளும் தளவாடங்களும்.

2.4.1. ஒவ்வொரு ஆண்டும் அரசின் பராமரிப்பிற்கு மேற்கொள்ளப்படும் சாலைகளின் நீளம் அதிகரிப்பதாலும், மேலும் சாலைகளில் பெருகிவரும் அதிகவேகமுடைய வாகனங்களினாலும் அதன் தேவைக்கேற்ப சாலைத் தளத்தை தரமுயர்த்தி அதிக அளவில் மேம்பாடு செய்து பராமரிக்கப்பட வேண்டியுள்ளது. எனவே இப் பணிகளுக்கு தளவாடங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, நவீனப்படுத்தப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பேருந்து தடங்களை எடுத்துக் கொள்ளும், திட்டம், கிராம சாலைகள் திட்டம், கரும்பு சாகுபடி மேம்பாட்டுக்கான சாலைத் திட்டம், பழங் குடியினர் நல்வாழ்வுத் துணைத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நீலகிரி மாவட்டம் மட்டும்), மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மத்திய சாலைகள் நிதிப் பணிகள் போன்ற பல்வேறு சாலை ஆக்கப் பணிகளை நெடுஞ்சாலைத் துறை மேற்கொண்டுள்ளதால் இப்பணிகளை செவ்வனே செய்து முடிக்கப் போதுமான கருவிகளும் தளவாடங்களும் தேவைப்படுகின்றன. எனவே பழுதடைந்த மற்றும் தேய்ந்துவிட்ட தளவாடங்களையும், கருவிகளையும் படிப்படியாக புதியனவைகளைக் கொண்டு மாற்றம் செய்யவும் மேலும் நவீன கருவிகளை வாங்குவதற்கும் அரசு போதுமான நிதியினை ஒதுக்கி வந்திருக்கிறது.

2.4.2. 1980–81 ஆம் ஆண்டில் 8 கனரக சாலை உருளைகளும், 10 கல்லுடைப்பு கருவிகளும், 12 தார்க் கலவை இயந்திரங்களும், 10 ஜீப் வண்டி போன்றவைகளும் ரூபாய் 90.50 இலட்சத்தில் வாங்க திட்ட மிடப்பட்டது.

2.4.3. மேலும், 1980–81 ஆம் ஆண்டிலேயே, கருவிகள் தளவாடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் அரசு, லாரிகள், ஸ்கிட் கொள்கலம், தார் கொதிகலன் போன்ற கருவிகளை வாங்க ரூபாய் 148.00 இலட்சத்துக்கு ஒப்புதலளித்துள்ளது. மைய அரசு மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் அடைக்கப்பட்ட தாரின் அளவை மிகவும் குறைத்ததால், மேலே ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகையானது நெடுஞ்சாலைத் துறையில் சென்னை (மணலி) மற்றும் கொச்சியிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளிலிருந்து தாரினை ஒரு மொத்தமாக கொண்டு வரவும், சேமிக்கவும் வகை செய்யும். இத்துடன் நெடுஞ்சாலைத் துறையில் அதிகபட்ச அளவில் தேவைப்படும் கருவிகளும் தளவாடங்களுமான சாலை உருளைகள், சரக்கு பேருந்துகள், கல் உடைக்கும் கருவிகள் வாங்குவதற்காக 1980–81 ஆம் ஆண்டில் கிராம சாலைகள் திட்டத்தின்கீழ் அரசு மேலும் ரூபாய் 72.50 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. 1981–82 ஆம் ஆண்டிற்கு இத்தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூபாய் 70.74 இலட்சம் ஆகும்.

[1981 மார்ச் 31

2.4.4. 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் தளவாடக் கருவிகள் வாங்க பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் முடிவு செய்யப்பட்டுள்ளது. (இதற்கான விவரங்களை இணைப்பு 11-இல் காணலாம்.)

**2.5. தற்போதுள்ள சாலை இருப்புப் பாதை கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள் சுரங்கப் பாதைகள் கட்டுதல்.**

2.5.1. மேம்பாலங்கள், சுரங்கப் பாதைகளைப் பொறுத்த மட்டில் ஏற்படும் செலவினைப் பகிர்ந்து கொள்வதில் மத்திய அரசின் தற்போதைய கொள்கை வருமாறு :—

2.5.1.1. (i) அணுகு சாலை உட்பட மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள் கட்டுவதில் ஏற்படும் மொத்தச் செலவில் 50 சதவீதத்தை இரயில்வே ஏற்கும். மேற் கூறியவற்றில், மாற்று வழிச் சாலை, வடிகால்கள், தந்திப் புதை வடங்கள், தண்ணீர் எடுத்துச் செல்லும் பெருங் குழாய்கள் போன்றவற்றை அமைப்பதற்கான செலவும் அடங்கும். ஆனால், நிலத்தை கையகப் படுத்தும்போது அதில் கட்டுமானம் ஏதாகிலும் இருந்தால், அதையும் சேர்த்து ஆகும் செலவு இதில் அடங்காது.

2.5.1.2. (ii) அணுகு சாலைகள் உட்பட மொத்தச் செலவில் 50 சதவீதத்தையும், கட்டுமானத்துடன் நிலத்தைக் கையகப் படுத்துவதற்கான முழுச் செலவையும் மாநில அரசு ஏற்கும்.

2.5.1.3. (iii) பொதுவாகப் பாலங்கள் 24 அடி அகலம் உடையனவாக (இருவழித் தட அகலம்) இருக்கும். நகரங்கள் மாநகரங்களுக்கு அருகிலுள்ள பகுதிகளில் அவசியமாயின் இரு நடைபாதைகள் (ஒவ்வொன்றும் 6 அடி அகலம்) அமைக்கப்படும் இரயில்வே பாதையைக் கடப்பதற்கு வருங்காலத்தில் நிதி ஒதுக்க வேண்டியிருப்பின், அந்தப் பாலத்தின் கூடுதல் கட்டுமானத்திற்காகும் செலவு முழுவதும் இரயில்வேத் துறையினால் ஏற்றுக் கொள்ளப்படும். அத்துடன், பாலத்தின் எஞ்சிய பகுதிக்காக்கு செலவு, அணுகு சாலைகளுக்காகும் செலவு ஆகியவற்றில் அதன் பங்கையும் ஏற்கும்.

2.5.1.4. (iv) மேலே (iii) ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்ட அதாவது இரு வழி அகலத்திற்கு மேலே சாலையில் கூடுதல் அகலம் வேண்டுமென்று மாநில அரசு விரும்பினால், இக்கூடுதல் அகலத்திற்காகும் செலவும்,

(i) தற்போதுள்ள பாதையுடன் இணைப்பதற்காகப் பாலத்தின் நீளத்தை அதிகப்படுத்தும் செலவு முழுவதும் மாநில அரசும் ;

(ii) வருங்காலத்தில், கூடுதல் இரயில்வே பாதையைக் கட்டப்படுவதற்காகப் போடப்படும் எந்தவொரு கூடுதல் நீளத்திற்காகும் செலவை மாநில அரசும், இரயில்வேயும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்.



1981 மார்ச் 31]

**2.5.2. பயணிகளுக்காகும் நிதிச் செலவினங்கள்.**

2.5.2.1. சட்டப்படிக்கான விதி முறைகளின் கீழ் அமைக்கப் பட்டிருக்கும் தற்போதுள்ள சாலை-இருப்புப் பாதைக் கடவுக்குப் பதிலாக மேம்பாலங்கள், சுரங்கப் பாதைகள் அமைத்தல், தற்போதுள்ள சாலை இருப்புப் பாதை கடவுகளின் தரத்தை உயர்த்துதல், ஆளில்லாத இருப்புப் பாதைக் கடவுகளில் ஆட்களை நியமித்தல் போன்ற மாநில அரசின் பொறுப்புகளை ஏற்பதற்காக, மத்திய அரசின் இரயில்வே அமைச்சகம், 1966 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் முதற்கொண்டு, " இரயில்வே பாதுகாப்பு நிதி " எனப்படும் ஒரு நிதியை ஏற்படுத்தியது.

2.5.2.2. இரயில்வே சட்டத்தின் கீழ் வரும் சட்டப்படிக் கான விதி முறைகளின் கீழ், ஆளில்லாத சாலை-இருப்புப்பாதை கடவுகளில் ஆட்களை நியமிப்பதற்கும் தற்போதுள்ள சாலை-இருப்புப்பாதைக் கடவுகளின் தரத்தை உயர்த்துவதற்கும் இரயில் வேக்கு இந் நிதியில் 20 சதவீதம் நேரடியாக ஒதுக்கப்படுகிறது.

2.5.2.3. சாலை-இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலம், சுரங்கப் பாதைகள் அமைப்பதற்காக எஞ்சியுள்ள 80 சதவீத நிதி மாநில அரசுக்கு ஒதுக்கப்படுகிறது. சட்டப்படிக் கான விதி முறைகளின் கீழ், தற்போதுள்ள சாலை—இருப்புப் பாதைக் கடவுக்குப் பதிலாக மேம்பாலம், சுரங்கப்பாதை கட்டும் பணி, மாநில அரசு இரயில்வேயின் கூட்டு முயற்சியில் செய்யப் படுகிறது. நிலம் கையகப்படுத்துதல் நீங்கலாக இப் பணிக்காகும் செலவு, மாநில அரசாலும், இரயில்வேக்களாலும் சமமாகப், பகிர்ந்து கொள்ளப்படுகிறது. நிலம், கையகப்படுத்தலுக்கான செலவு நீங்கலாக மாநில அரசின் பங்கு தொடக்கத்தில் மாநில நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது. பின்னர், இது இரயில்வே பாதுகாப்பு நிதியிலிருந்து திருப்பிக் கொடுக்கப்படுகிறது.

2.5.2.4. சாலை மேம்பாலங்கள் நகராட்சிகளின் அதிகார வரம்பிற்குள் வருமாயின் செலவுத் தொகையில் மாநிலத்தின் பங்கு, அதாவது பணியின் மதிப்பில் 50 சதவீதம் மாநில அரசு, நகராட்சிகள் ஆகியவற்றிற்கிடையே சமமாக (மாநில அரசு 25 சதவீதம், நகராட்சிகள் 25 சதவீதம்) பிரித்துக் கொள்ளப்படு கிறது. இரயில்வே பாதுகாப்பு நிதியில் குறைந்தளவு தொகையே உள்ளதால், நகராட்சிகளுக்காகும் பங்குச் செலவைப் பொதுவாக இந்நிதியிலிருந்து திருப்பிக் கொடுப்பதில்லை.

2.5.3. 1980–81-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூபாய் 19.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.5.4. செயல்படுத்தப்படும் பணிகள் மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் ஆகியவற்றின் விவரங்கள் இணைப்பு 12 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

[1981 மார்ச் 31

2.5.5. 1981–82 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்கென ரூபாய் 2.39 இலட்சம் மேற்படி பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

2.5.6. இவை தவிர கீழ்க்காணும் சில மேம்பால கட்டுமானப் பணிகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன.

அரசின் பரிசீலனையில் உள்ள மேம்பாலங்களின் பட்டியல்.

(அ) பிற துறைகளுக்காக நிறைவேற்றப்படும் பணிகள் என்கிற முறையில் சென்னை-கல்கத்தா சாலையை இணைப்பதற்கான இணைப்புச் சாலையில் மணலிக்கு அருகே மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல்.

(ஆ) சென்னை துறைமுகத்திற்கும் இராயபுரத்திற்கும் இடையே தற்போதுள்ள சாலை இருப்புப் பாதைக் கடவுக்குப் பதிலாக மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல்.

(இ) கிண்டி இரயில்வே நிலையத்திற்கு அருகேயுள்ள மேம் பாலத்தை மேம்படுத்தல்.

2.6. பழங்குடியினர் நலத் துணைத் திட்டம்.

2.6.1. 171.10 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூபாய் 209.25 இலட்சம் செலவில் 12 பணிகளடங்கிய ஒரு பெருந் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, இப்பணிகள் ஐந்து ஆண்டுக் கால அளவில் (அதாவது 1978–1983) செயல்படுத்தப்பட வேண்டுமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட 12 பணிகளில் இரு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. முடிக்கப்பெற்றுள்ள பணிகள் மற்றும் செயற்படுத்தப்பட்டு வரும் பணிகள் ஆகியவற்றின் விவரங்களை இணைப்பு 13 இல் காணலாம். 1980–81 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்காக ரூபாய் 31.87 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 6.86 இலட்சமாகும்.

2.7. மீனவர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல்.

2.7.1. கடற்கரையோரப் பகுதியில் அநேக மீனவர் குடியிருப்புக்கள் பல, தற்பொழுது போதிய இணைப்புச் சாலை வசதியில்லாமல் உள்ளன. இதுவரை எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்களில் இம்மாதிரியான மீனவர் குடியிருப்புக்களுக்குப் போதிய போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தும்படி அமையவில்லை. எனவே, இப்பிரிவினரின் தேவைகளைக் கருத்திற் கொண்டு போதிய சாலை வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்காக இவ்வரசு முதல் தடவையாக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூபாய் 2.00 கோடி ஒதுக்கீடு செய்து ஒப்புதல் அளித்துள்ளது.



1981 மார்ச் 31]

2.7.2. ரூபாய் 93.50 இலட்சத்தில் 84.7 கிலோ மீட்டர் நீளத்திற்கு இம்மாதிரியன சாலைகளை அமைத்திட, 37 பணிகளுக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டமானது 1979–80 இல் துவங்கப்பெற்று அவ்வாண்டில் ரூபாய் 14.37 இலட்சம் செலவிடப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. பெரும்பாலான பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

2.7.3. 1980–81 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 30.00 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இரண்டாவது நிலைக்கு மேலும் 10 சாலைகளை அரசு தேர்ந்தெடுத்துள்ளது. எஞ்சிய பணிகளைத் தொடரவும், புதிய பணிகளை எடுத்துக் கொள்ளவும், 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 30.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2.8. ஊரகச் சாலைகள் திட்டம்.

2.8.1. உள்ளடங்கியுள்ள ஊரகப் பகுதிகளை வசிக்கும் கிராம வாசிகள், போதிய சாலை வசதியின்மையால் நகரிய மையங்களுக்குச்சென்று வர சிரமப்படுகிறார்கள். கிராம மக்களுக்குப் போதிய போக்குவரத்து வசதியினை அளிப்பதற்காக, கிராமங்களுக்கு அருகில் உள்ள பேருந்து செல்லும் சாலைகளுடன், அக்கிராமங்களை இணைக்கக் கூடிய, அனைத்துப் பருவ நிலைகளுக்கும் உரிய சாலைகளை அமைத்துக் கொடுத்து, கிராமங்களின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு வழிவகுக்க, இந்த அரசு பெரிதும் அக்கறை கொண்டுள்ளது. இத் திட்டத்திற்கு மிக அதிக அளவில் நிதி முதலீடு தேவைப்படுவதால், இத்திட்டத்தைப் படிப்படியாக செயலாக்கப்பட வேண்டியுள்ளது. முதல் கட்டத்தில் 1,500 அல்லது அதற்கு மேலும் மக்கட் தொகை உள்ள கிராமங்களை அருகிலுள்ள பேருந்து செல்லும் சாலையுடன் இணைப்பது இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், சில பின் தங்கிய மற்றும் வளர்ச்சியடையாத கிராமப் பகுதிகளில், மக்கள் எண்ணிக்கை 1,000 ஆக இருந்தாலும், விதிமுறையினைத் தளர்த்தவும் கூடும். இத்திட்டத்தின் கீழ், அடுத்தடுத்துள்ள பல கிராமங்களின் கூட்டு மக்கட் தொகை 1,500 ஆக இருப்பினும், அதனையும் பரிசீலனைக்கு மேற்கொள்ளபடுகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மேம்படுத்துவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டு மேம்பாட்டுப் பணிகள் முடிவடைந்த பின் வருங்காலத்தில் அவற்றைப் பராமரிப்பதற்கு அரசால் அச்சாலைகள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. இதனால், உள்ளாட்சிகளின் நிதிச்சுமை வெகுவாக குறைக்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் புதிய சாலைகள் பலவும் போடப்பட்டுள்ளன. இதுவரையில் ஐந்து நிலைகளில் சுமார் 4,819.30 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை ரூபாய் 28.25 கோடி செலவில் மேம்படுத்த இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்து நிலைகளின் கீழ் (I முதல் V வரை) 2,789 கிராமங்களும், குக்கிராமங்களும் வாகனப் போக்குவரத்திற்கு ஏற்ற சாலைகளால் இணைக்கப்பட உள்ளன.

2.8.2. இத்திட்டத்தின்கீழ் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் வரை 3,515 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் முடிக்கப்பெற்று அதற்கென ரூபாய் 18.52 கோடி செலவிடப் பட்டுள்ளது. இத்திட்டமானது ஊரகப் பகுதிகளில் ஏராளமான அளவிற்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு இலட்சம் ரூபாயும் சுமார் 5,000 உழைப்பு நாட்களுக்கான வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவது குறிப்பிடத்தக்கதாகும். இத்திட்டத்தின் முதல் மூன்று கட்டங்களும் பொதுவாக முடிக்கப்பட்டு விட்டன. நான்காவது கட்டம் வெகுவாக முன்னேறிய நிலையில் உள்ளது. ஐந்தாவது கட்டமானது, குறிப்பாக தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 69 ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளுக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளது. 1,500 அல்லது அதற்கு மேலும் மக்கட் தொகை உள்ள ஒவ்வொரு கிராமத்தையும் வாகனங்கள் செல்லும் சாலைகளுடன் எந்த சாலையும் விடுபடாமல் இணைப்பதற்கு 424.30 கிலோ மீட்டர் நீளத்திற்கான ஐந்தாவது கட்டப் பணிகள் மதிப்பீடு ரூபாய் 6.97 கோடியாகும். 1979–80-இல் இத்திட்டத்திற்கு ரூபாய் 3.00 கோடியும், 1980–81-இல் ரூபாய் 6.00 கோடியும் (இரு மடங்காக), 1981–82-இல் 7.00 கோடியுமாக அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆறாவது திட்டக்காலத்தில் இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 40.00 கோடியாகும்.

2.9. பேருந்து வழித்தடங்களை மேற்கொள்ளும் திட்டம்.

2.9.1. இத்திட்டம் 1960–61-இல் துவங்கப்பெற்று 1973–74 வரை சுமார் 12,500 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த பேருந்து வழித் தடங்கள் மேம்படுத்தப்பட்டு அவற்றைப் பராமரிப்பதற்கு அரசால் அச்சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. போதிய நிதி இன்மை காரணமாக இத்திட்டம் 1974 ஆம் ஆண்டு முதல் 1979-ஆம் ஆண்டு வரை கைவிடப்பட்டது. பின்னர் 1979–80-ஆம் ஆண்டில் மீண்டும் இத்திட்டம் ஊக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டு ரூபாய் 600 இலட்சம் செலவில் 2,510 கிலோ மீட்டர் நீளமுள்ள பல பேருந்து வழித் தடங்கள் மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. 1979–80-ஆம் ஆண்டில் ரூபாய் 600 இலட்சம் செலவில் ,000 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 1980–81 ஆம் ஆண்டில் மேலும் 3,146 கி.மீ நீளமுள்ள பேருந்து வழித்தடங்களை ரூ 10·00 கோடி செலவில் மேம்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டில் ரூ 10·00 கோடி செலவில் 2,000 கி.மீ. நீளமுள்ள பேருந்து வழித்தடங்களை மேம்படுத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. எஞ்சியவை 1981–82 ஆம் ஆண்டில் தொடரப்படும். இதற்கென வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் அதிகமாக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 13 கோடி ஆகும். இத்திட்டத்தை செயலாக்கும்பொழுது தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றது.



2·10 தன்னிறைவுத் திட்டம்

2.10.1 தமிழகத்திலுள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் தக்க இணைப்புச் சாலைகள், போதிய குடிநீர் வசதிகள், கல்விக் கூடங்கள் மற்றும் ஏனைய அடிப்படை தேவைகள் அனைத்தையும் பெற்றுத் தன்னிறைவு கொண்டதாய் விளங்க இத்திட்டம் சென்ற ஆண்டில் துவக்கப்பட்டு முதல் கட்டமாக 69 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன இத்திட்டத்தின் கீழ் ரூ. 16·44 கோடி மதிப்புள்ள பணிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கி முதற்கண் அதற்கென 1980–81ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ரூ 10·00 கோடி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் சாலை மற்றும் கட்டடப் பணிகளுக்குத் தேவைப்படும் தொழில் நுட்ப உதவிதனை நெடுஞ்சாலைத் துறை அளிக்கிறது தேவையான வடிவமைப்பு மற்றும் வழிமுறைக் குறிப்புகளை நெடுஞ்சாலைத் துறை வகுத்து அவைகள் ஊராட்சி ஒன்றிய ஆணையர் ஊராட்சி ஒன்றியப் பொறியாளர் கோட்டப் பொறியாளர் மற்றும் மாவட்ட ஆட்சியாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

2.10.2 இத்திட்டப் பணிக்கென்றே 74 உதவி கோட்டப் பொறியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் தன்னிறைவுத் திட்டப் பணிகளுக்கென ஒரு கனரக சாலை உருளையை பிரத்தியேகமாக ஒதுக்கும்படி ஒவ்வொரு கோட்டப் பொறியாளரும் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். வசதியுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுக்கென சாலை உருளைகளை வாங்கிடவும் உதவிகள் செய்யப்படுகின்றன.

2.10.3. மீதமுள்ள ஊராட்சி ஒன்றியங்களிலும் இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்படும். 1981–82 ஆம் ஆண்டிற்கென அரசு மேலும் 150 ஊராட்சி ஒன்றியங்களைத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுத்துள்ளது. இந்த ஊராட்சி ஒன்றியங்களில் எடுத்துக் கொள்ளப்படவுள்ள பணிகளுக்கான முன்னோடி ஆய்வும் மதிப்பீடு செய்யும் பணிகளும் நடந்து வருகின்றன.

### 2.11 நெடுஞ்சாலைத் துறையின் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

2.11.1 மலைப்பகுதித் மேம்பாட்டுத் திட்டமானது நீலகிரி மாவட்டத்திற்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படை நோக்கங்களாவன :

1. மலைப் பகுதி கிராமங்களில் சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.

2. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு பாற்பண்ணை வளர்ச்சி, மீன்வளம், வனம் தொழில் மற்றும் சுற்றுலா போன்ற ஏனைய பல்வேறு திட்டங்களின் கீழ் மேம்படுத்தக் கருதப் பட்டுள்ள எல்லா இடங்களுக்கும் எளிதில் செல்வதற்கான சாலை போடுதல்.

3. பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர்கள் வாழும் கிராமப் பகுதிகளை பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றம் அடைந்த மையங்களுடன் இணைக்க சாலைகள் அமைத்தல் இத்திட்டம் 1975 ஆம் ஆண்டில் துவங்கப்பெற்று ஒவ்வொரு ஆண்டும் பல பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது வரை இத்திட்டத்தின்கீழ் 47 சாலைப் பணிகளுக்கு ரூ. 272.05 இலட்சம் செலவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் இது வரை 22 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1980–81-ல் மேலும் இரு பணிகள் முடிக்கப்பெற்று மீதமுள்ள 23 பணிகள் 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயலாக்கப்பட்டு வருகின்றன.

2.11.2 முன்னேற்றத்தில் உள்ள பணிகளைத் தொடர 1981–82 ல் ரூ. 60.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2.12 வனப்பகுதியில் மலைப்பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டம் (வனப் பகுதி சாலைப் பணிகள்).

2.12.1 மலைப் பகுதியை மேம்படுத்துவதற்காக வனத் துறை தேர்ந்தெடுந்த வனத்தில் சாலைகளை அமைப்பதும். மேலும் மேம்பாடு செய்வதும் அவசியமானதாகும். 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 59.50 இலட்சம் செலவில் 3 பணிகளும். 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 1.90 லட்சம் செலவில் மேலும் 3 பணிகளும் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான விபரம் இணைப்பு 14-ல் காணலாம். 1980–81 ஆம் ஆண்டில் ரூபாய் 15.44 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 2.12 மேற்கு மலைத் தொடர்ச்சாலை வளர்ச்சித் திட்டம்

2.13.1 மலையில் விளையும் பொருட்களை சம வெளிக்குக் கொண்டு வருவதற்காக மேற்கு மலைத் தொடரில் சாலை அமைத்தல் ஏற்கெனவே உள்ள சாலைகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை இந்திய அரசின் நிதி உதவியுடன் இத்திட்டத்தின் கீழ் செயல் படுத்தப்படுகின்றன.

2.13.2 இது மத்திய அரசு ஆதரவளிக்கும் ஒரு திட்டமாகும். இத்திட்டம் 1975–76-ல் துவங்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் பின் வரும் கருத்துக்களும் முன்னேற்றங்களும் கவனத்தில் கொண்டு செயல் படுத்தப்பட வேண்டுமென திட்டக்குழு பரிந்துரை செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1. ஆடுகள், ஆவினம், கோழிகள் பண்ணைகள் போன்றவற்றின் வளர்ச்சி மற்றும் சந்தை வசதிகள் புல்வெளி அபிவிருத்தி மற்றும் உடல் நல பாதுகாப்பு வசதிகள்.

2. மலைத் தோட்டப் பயிர்களை வளர்த்தல் மண் வளத்தை மேம்படுத்துதல், நில நிர்வாக வழி முறைகள் செய்வித்தல்.

3. அணுக முடியாத பகுதிகள் மற்றும் அங்காடிகள் இடையே வழிவகை செய்வது சம்பந்தமான திட்டங்கள் மூலம் தோட்ட மற்றும் வனாந்திர வளங்களை மேம்பாடு செய்தல்.

2.13.3. இதுவரை இத்திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றில் முதலில் குறிப்பிட்ட பணி மட்டும் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய மூன்று பணிகள் செயலாக்கத்தில் பல்வேறு நிலைகளில் உள்ளன. பல்வேறு நிலைகளிலுள்ள இப்பணிகளின் விபரம் பின்வருமாறு :—

| வரிசை எண். | பணியின் விபரம். | மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.) | குறிப்பு. |
|---|---|---|---|
| 1. | சிறுமலை மலைச்சாலையை மேம்படுத்துதல். | 15.00 | முடிவு பெற்று விட்டது. |
| 2. | கும்பக் கரையிலிருந்து வெள்ளக்கவிக்கு சாலை அமைத்தல். | 15·00<br>———<br>93·00 | செயல் படுத்தப் பட்டு வருகிறது |

| | | | |
|---|---|---|---|
| 3 | தர்மாத்துப்பட்டியிலிருந்து ஆட்டூருக்கு சாலை அமைத்தல். | 35·00 / 38·60 | செயல் படுத்தப் பட்டு வருகிறது. |
| 4 | பெரியகுளத்திலிருந்து அடுக்கம் வரை சாலை அமைத்தல். | 15·00 / 20·00 | ஷை |

2.13·4. 1980–81 இல் இத் திட்டத்திற்கு ரூ. 50·00 இலட்சமும் 1981–82 க்கு ரூ. 66·51 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

2·14. கரும்பாலை வளர்ச்சிக்கான சாலைப் பணிகள்.

2·14.1. இத்திட்டம் சர்க்கரைத் துறை இயக்குநரின் கட்டுப் பாட்டின்கீழ் உள்ளது. கரும்பை உற்பத்தியாகுமிடங்களிலிருந்து சர்க்கரை ஆலைகளுக்கு எளிதாக எடுத்துச் செல்வதற்காக குறிப் பிட்ட கரும்பு வளர்ச்சி பகுதியிலுள்ள சாலைகளை மாவட்டப் பெருஞ்சாலைகள் தரத்திற்கு மேம்படுத்துவதற்காக ஆண்டு தோறும் அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. இம் மாநிலத்தில் கரும்பு வளர்ச்சிப் பகுதியில் உள்ள சாலைகள் பொதுவாக கரும்பு ஆலைகளுக்கு அருகாமையிலேயே அமைந்துள்ளன.

2·14·2. 1980–81 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மூலப் பணிகளுக்கென ரூ. 150.00 இலட்சமும் பராமரிப்புப்பிற்கென ரூ. 30·00 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளன்றுள்ளவாறு அமைக்கப்பட்டும் மேம்படுத்தப்பட்டும் உள்ள சாலைகள்களின் மொத்த நீளம் 553·20 கி.மீ. ஆகும்.

2.14.3. 1980–81 ஆம் ஆண்டில் சர்க்கரைத் துறை இயக்கு நர் அவர்கள் (சுமார்) ரூ. 20.47 இலட்சம் செலவில் 13 புதிய பணிகளை ஒப்புதலுக்காக தேர்ந்தெடுத்துள்ளார். எல்லா மதிப்பீடுகளுக்கும் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு நடப் பாண்டிலேயே பணிகளை நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப் பெற்றன.



2.15. உலக வங்கித் திட்டத்தின்கீழ் சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்.

2.15.1. உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு அரசு ஓர் உள்வட்ட சாலையினை மேம்படுத்தவும் சிறிய மற்றும் பெரிய பாலங்கள் முதலியவற்றை கட்டும் பணியையும் மேற் கொண்டுள்ளது. இப் பணிகள் இரண்டு கட்டங்களில் மேற் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளன. முதல் கட்டப் பணிகளுக் கான முதலீடு ரூ. 7.18 கோடியாகும். (இதில் பெருவழிச் சாலைகளுக்கென ரூ. 4.00 கோடியும் மாநகராட்சிப் பகுதி யிலுள்ள பிற சாலைகளுக்கு ரூ. 3.18 கோடியும் அடங்கும்.) இத் திட்டம் 1977–78இல் துவங்கப்பட்டது. 1979–80 வரை ரூ. 468.86 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 142.60 இலட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப் படுகின்றது. 1981-82க்கான ஒதுக்கீடு ரூ. 44.63 இலட்சம் ஆகும்.

2.15.2. சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் கட்டம் 1-ல் கீழ்க்கண்ட பணிகளை எடுத்துக்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளது (செலவினம் ரூ. 7.18 கோடி) :—

(1) கூவம் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுவதைச் சேர்த்து உள்வட்டச் சாலை அமைத்தல்—11.7. கி.மீ.

(2) அண்ணா சாலை, பெரியார் சாலை ஆகியவற்றில் பாதசாரிகள் மற்றும் சைக்கிள் ஓட்டிகள் ஆகியோரின் வசதிக் கென மேம்பாடுகள்—21 கி.மீ.

(3) சிறிய பாலங்களை புதுப்பித்தல்—7.

(4) உயர்மட்ட பாலங்கள் இரண்டு கட்டுதல்—

(அ) நெல்சன் மாணிக்க முதலியார் சாலை-1.

(ஆ) கான்ட்ஸ் சாலை—1.

(5) நெல்சன் மாணிக்க முதலியார் சாலையில் வாகனப் போக்குவரத்திற்கான சுரங்கப் பாதை அமைத்தல்.

(6) தண்டையார்பேட்டை இரயில் நிலையம் அருகில் வைத்தியநாத முதலி தெருவில் ஒரு மேம்பாலம் கட்டுதல்.

(7) பாதசாரிகளுக்கு நடைவழிச் சுரங்கப்பாதைகள் அமைத்தல்—8.

சந்திப்புகளில் போக்குவரத்து கட்டுப் பாட்
[illegible]

(9) சில இதர போக்குவரத்து மேம்பாட்டு வழி வகைகள்.

2.15.3. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் பின்வரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன :—

1. உள்வட்டச் சாலை அமைத்தல்—5.8 கி.மீ. நீளம்.

2. அண்ணா சாலை மற்றும் பெரியார் சாலைகளில் பாதசாரிகள் மற்றும் சைக்கிள் ஓட்டுநர்கள் ஆகியோரின் வசதிக்கான மேம்பாட்டுப் பணி - 21 கி.மீ.

3. சிறு பாலங்கள் புதுப்பித்தல்—7.

4. பாதசாரிகள் சுரங்கப் பாதைகள்—6.

5. சாலை சந்திப்புகளில் போக்குவரத்து கட்டுப்பாட்டிற்கான தானியங்கி மின் விளக்குகள் பொருத்துதல்—8.

6. ஒரு வழிப் போக்கு போன்ற சாலைகளில் அறிவிப்புகள் மற்றும் மின்னும் விளக்குகள் அமைத்தல்.

பின்வரும் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன:—

(1) உள்வட்ட சாலை — 1.9 கி.மீ. நீளம்.

(2) இரு உயர்மட்டப் பாலங்கள்.

(3) நெல்சன் மாணிக்க முதலியார் சாலையில் வாகனப் போக்குவரத்திற்கான சுரங்கப் பாதை.

(4) ஆயுள் காப்பீட்டுக்கழகம், தொற்று நோய் மருத்துவமனை ஆகிய இடங்களில் இரு பாதசாரி சுரங்கப் பாதைகள் அமைத்தல்.

(5) வள்ளுவர் கோட்டம் அருகில், சாலை சந்திப்பில், போக்குவரத்து கட்டுப்பாட்டிற்கான ஒரு தானியங்கி மின் விளக்கு பொருத்துதல்.

2.15.4. பின் வரும் பணிகள் செயல்படுத்தப் படவுள்ளன :—

(1) உள்வட்டச் சாலை—3.00 கி.மீ. நீளம்.

(2) தண்டையார்பேட்டை இரயில் நிலையம் அருகில் வைத்தியநாதன் சாலையில் ஓர் மேம்பாலம் கட்டுதல்.

) பெரியார் சாலையும் புது ஆவடி சாலையும் சந்திக்கும் போக்குவரத்து கட்டுப்பாட்டிற்கான தானியங்கி



இனம் 1 மற்றும் 3-இல் கண்டுள்ள பணிகள் நிலம் பெறப்பட்டவுடன் தொடங்கப்படும். இனம் 2-இல் கண்டுள்ள பணி தொடக்க நிலையில் உள்ளது. இப்பணிகள் அனைத்தும் ஜூன் 1982-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2.16 சென்னை மாநகர் வளர்ச்சித் திட்டம்—கட்டம் II.

2.16.1. தமிழக அரசின் பிரதிநிதிகளுடன் 1980 அக்டோபரில் கலந்தாலோசித்த உலக வங்கி மதிப்பீட்டு குழு அலுவலர்கள், பின்வரும் பணிகளை சென்னை மாநகர் வளர்ச்சித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில், நெடுஞ்சாலை துறையால் மேற்கொள்ள முடிவு செய்துள்ளனர் :—

(1) சென்னை உள்வட்டச் சாலை கட்டம் 1-ன் தொடர்ச்சியாக பாடியிலிருந்து தேசிய நெடுஞ்சாலை எண் 5 வரை இணைக்கும் 6.00 கி.மீ. சாலையை அமைத்தல் (மதிப்பு ரூ. 381 இலட்சம்).

(2) வில்லிவாலகத்திலிருந்து ஆவடி வரையிலான சென்னை—திருவள்ளூர் சாலையை 14.6 கி.மீ. நீளத்திற்கு மேம்பாடு செய்தல் (ரூ. 151.00 இலட்சம்).

(3) முகப்பேர் மனை மற்றும் வசதி திட்டத்திற்கென அணுகு சாலை அமைத்து கூவம் ஆற்றில் ஓர் பாலம் கட்டுதல் (ரூ. 67.1 இலட்சம்).

2.16.2. மேற்படி பணிகளுக்கான ஆய்வுக் பணிகள் துவங்கப்பெற்று, அவற்றிற்கான விரிவான மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் மேற்படி பணிகளுக்கு தேவைப்படும் நிலத்தை கையகப்படுத்திட முன் நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கென ரூ. 73.88 இலட்சத்திற்கான துணை மதிப்பீடும் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கென நில விபர நமூனாக்கள் (வருவாய்த்துறையால் அனுப்பப்பட்ட சிறப்புப் பணியாளர்களால்) தயாரிக்கப்பட்டு வருகின்றன. இப் பணிகளை 1983—84 ஆம் ஆண்டிற்குள் முடித்து விட திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு 1980—81 ஆம் ஆண்டிற்கு இரண்டாம் கட்டப் பணிகளுக்கென ரூ. 50.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1981—82 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 50.00 இலட்சமாகும்.

2.17 ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டம் (மாநில அரசு நிதி ஒதுக்கீடு).

2.17.1. இத்திட்டம், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சென்னை மாநகராட்சி ஆகியவற்றிடம் சென்னைப் பெருநகர்ப் பகுதியில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சாலைகளை மேம்படுத்துவதற்கு வகை செய்கிறது.

2.17.2. பின்வரும் பணிகள் இத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன :—

1. சாலைகளை அகலப்படுத்தி பலப்படுத்துதல்—12.0 கிலோ மீட்டர் நீளம்.

(அ) பெரியார் சாலை (சென்ட்ரல் சந்திப்பிலிருந்து புதிய ஆவடி சந்திப்பு வரை).

(ஆ) அண்ணா சாலை (கத்திப்பாராவிலிருந்து விமான நிலையம் வரை).

(இ) புது ஆவடி சாலை (அண்ணா நகர் சந்திப்பிலிருந்து உள் வட்டச் சாலைவரை).

2. 6. 3. கி. மீ. நீளத்திற்கு புதிய சாலைகள் மூன்று அமைத்தல்:—

(அ) வேளச்சேரி மாற்று வழிப் பாதை.

(ஆ) தரமணி இணைப்புச் சாலை.

(இ) அண்ணா நகர் மேற்கிலிருந்து அம்பத்தூர் தொழிற் பேட்டை வரை.

3. நான்கு புதிய பாலங்களை கட்டுதல் (கோட்டூர் புரத்தில் ஒன்றும் திருவொற்றியூர், பொன்னேரி, பஞ்செட்டி சாலையில் மூன்றும்.)

4. தற்போதுள்ள பாலங்களைத் திரும்பக்கட்டுதல் (சென்ட்ரல் ரயில் நிலையம் அருகில் ஒன்றும் ஆர். கே. மடம் சாலையில் ஒன்றும் மற்றுமொன்று தேசிய நெடுஞ்சாலை எண் 5-ல் 7/6 கி. மீ.ல்).

5. புற்றுநோய் நிலையம் அருகில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்துதல்.

இவற்றில் ஒரு (அண்ணா நகர் மேற்குப் பகுதியிலிருந்து அம்பத்தூர் தொழிற் பேட்டைக்குச் செல்லும்) புதிய சாலை அமைப்புப்பணி முடிவு பெற்று விட்டது.

2.17.3. பின்வரும் பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன:—

(1) 12.0. கி.மீ. நீளத்திற்கான சாலைகளை அகலப் படுத்தி பலப்படுத்துதல்—மூன்று.

(2) 5.6. கி.மீ. நீளத்திற்கு புதிய சாலைகள் அமைத்தல்—



(3) அடையாறு புற்று நோய் நிலையம் அருகில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப் படுத்துதல்—ஒன்று.

2.17.4. பின்வரும் பணிகள் தொடங்கப் பெற உள்ளன. அவையாவும் ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்படக் கூடிய நிலையில் உள்ளன :—

(1) நான்கு புதிய பாலங்கள் கட்டுதல்.

(2) தற்போது உள்ள மூன்று பாலங்களை திரும்பக் கட்டுதல்.

2.17.5 மார்ச் 1980 முடிய இத் திட்டத்தின்கீழ் ரூபாய் 55.60 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1980—81 இல் இத் திட்டத்திற்கு ரூ. 55.13 இலட்சம் செலவிடப்படும் என்று எதிர்பார்த்து அதற்கான ஒதுக்கீடு நிதி அறிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது. 1981—82 ஆம் ஆண்டிற்கு இத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளை முடிப்பதற்கென ரூ. 22.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2.18. உலகத் தமிழ் மாநாட்டுப் பணிகள்.

2.18.1. ஜனவரி 1981 இல் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிற்காக போக்குவரத்து வசதிக்கென மாநகராட்சிப் பகுதியிலுள்ள பல சாலைகள் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. சாலை சந்திப்புத் திடல்கள் பாதசாரிகள் அவற்றிற்கான கைப்பிடித் தடுப்பு வசதி போன்ற பல்வேறு வசதிகள் செய்யப்பட்டன. மேலும் சில சாலைகளில் நிழல் தரும் மரங்கள் நடப்பட்டு வளர்க்கப்பட்டன. இதன் விபரங்களை இணைப்பு 15-இல் காணலாம்.

2.19. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடுகள்..

2.19.1. ஆராய்ச்சி என்பது வளர்ச்சிப் பணிக்கு அடிப்படைத் தேவையாகும். சாலைகளை அமைப்பதற்கு ஆகும் செலவைக் குறைக்கவும் சாலைகளை அமைக்க உள்ளூரிலேயே கிடைக்கக் கூடிய மூலப் பொருட்களைப் பயன்படுத்தவும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் பல்வேறு திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும் செலவில் குறைந்த சாலைகள் அமைக்க தகுந்த மற்றும் இடைநிலை சாலை தொழில் நுட்பத்தை உருவாக்க ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாராய்ச்சிகளின் பயனாக சாலை கட்டுமானப் பணிகளில் பெருமளவிற்கு செலவு குறையும்.

2.19.2. 1980–81 ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் கீழ் ரூபாய் 13.50 இலட்சத்திற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவ்வாராய்ச்சிப் பணிகளில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியது நெய்வேலி நிலக்கரியிலிருந்து சாலைக்குத் தேவைப்படும் தாரினை பிரித்தெடுத்துத் தயாரிக்க மேற்கொண்டுள்ள பணியாகும். இதற்கென மேற்கொள்ளப்பட்டுள்ள சோதனைச் சாலை குறிப்புகள் ஊக்கம் தருவதாய் உள்ளன. மேலும் ஆராய்ச்சிக்கென ஒரு மாதிரி எந்திரம் தயாரிக்கப்பட்டு நிறுவப்பட உள்ளது. 1980–81-ஆம் ஆண்டிற்கென ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கென ரூ. 8.60 இலட்சமும் 1981–82க்கு ரூபாய் 4.01 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் மதிப்பீட்டில் பல பணிகளுக்காக ஒப்புதல் வழங்க முடிவு செய்யப்பட்டது. (விபரங்களை இணைப்பு 16-இல் காணலாம்.)

2.20. ஆய்வுப் பணிகள்.

2.20.1. மூன்று கோட்டங்களுடன் கூடிய சிறப்பு வட்டம் ஒன்று எல்லாப் பெருந் திட்டங்கள் பற்றிய ஆய்வுப் பணிக்கும் விரிவான திட்டகளையும் மதிப்பீடுகளையும் தயாரிக்கும் பணிக்கு பொறுப்பு வகிக்கின்றது. தேசீய நெடுஞ்சாலைகளைத் தவிர மாநிலத்திலுள்ள பாலப் பணிகள் முக்கிய சாலைப் பணிகள் அனைத்து குறித்தும் இவ்வட்டம் தொடக்க நிலையிலேயே விரிவாக ஆய்வு செய்து கள விவரங்களைச் சேகரிக்கின்றது. இவை சரியான முறையில் திட்டங்களை வடிவமைப்பதற்கும் மதிப்பீடுகள் தயாரிப்பதற்கும் உதவுகின்றன. இத்துடன் அரசின் ஏனைய துறைகளான தொழில் , மீனளம், வேளாண்மைத் துறை மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் பணிகள் குறித்த ஆய்வு திட்டங்கள் மதிப்பீடுகள் தயாரித்தல் ஆகிய பணிகளையும் இவ்வட்டம் மேற்கொள்கிறது.

2.21. வடிவமைப்பு.

2.21.1. முக்கிய பணிகளுக்கான வடிவமைப்புகளைத் தயாரிக்கும் பொறுப்பை இத்துறையில் உள்ள தனிச் சரகம் ஏற்கிறது. பெரிய பாலங்கள் மேம்பாலம், சுரங்கப் பாதை, நீண்ட விட்டமுள்ள முன்னரே வலுவேற்றப்பட்ட சிமிட்டிக் கற்கலவைக் கட்டுமானங்கள் போன்ற சிக்கலான கட்டுமானங்கள் ஆகியவற்றின் வடிவமைப்புகளைத் தயாரித்து தற்போதைய தொழில் நுட்ப உத்தியுடன் இணைக்கும் பணியில் இச்சரகம் பெரும்பாலும் ஈடுபடுகிறது. இதன் காரணமாக பணியை நிறைவேற்றுவதற்குச் சிக்கனமான சிறந்த வடிவமைப்புகள் கிடைக்கின்றன. வலுவற்றக் கட்டுமானங்களைக் கண்டறிந்து ஏற்கனவே உள்ள கட்டுமானத்தில் உள்ள குறைகளைப் போக்குவதற்கு அவசியமான செயற் குறிப்பைத் தயாரிக்கும் பணியையும் இச்சரகம் மேற்கொள்கிறது.





2.22. போக்குவரத்து பொறியியல் நிர்வாகப் பிரிவு.

2.22.1. நமது நாட்டில் போக்குவரத்து பெருமளவிற்கு வளர்ந்துள்ளது. அதன் காரணமாகப் போக்குவரத்தும் போக்குவரத்துப் பொறியியல் துறையும் மிகுந்த முக்கியத்துவம் அடைந்து வளர்ச்சியடைந்துள்ளது. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு போக்குவரத்துப் பொறியியல் பிரிவு ஒன்றை மாநில அரசு ஏற்படுத்தியுள்ளது. இப்பிரிவு மேற்பார்வைப் பொறியாளரது தலைமையின் கீழ்ச் செயல்படுகின்றது. இவருக்குக் கோட்டப் பொறியாளர்கள் இருவர் உதவி புரிவர். இக் கோட்டங்களில் ஒன்று சென்னையிலும் மற்றொன்று திருச்சியிலும் உள்ளன. சென்னை மாநகரிலும் மற்றும் ஏனைய முக்கியமான நகரங்களிலும் போக்குவரத்து அடையாள விளக்குகளை அமைப்பதிலும் அவசியமாயிருக்குமிடங்களிலும் போக்குவரத்து தீவுத் திடல்களை ஏற்படுத்துவதிலும் போக்குவரத்து பாதுகாப்புடனும் முறையாகவும் செல்வதற்கு போக்குவரத்துப் பாதைகளை அமைப்பதிலும் சாலைகளின் போக்குவரத்துத் தாங்கும் திறனை உரிய அளவுக்கு உயர்த்துவதிலும் நிர்வாகப் பணியாளர்களுக்கு இப் பிரிவு ஆலோசனை நல்குகிறது.

2.23. தொழில் நுட்ப ஆய்வுப் பிரிவு.

2.23.1. நெடுஞ்சாலைகள் துறை ஒவ்வோராண்டும் ரூபாய் 40 கோடி முதல் ரூபாய் 50 கோடி வரை மதிப்புள்ள பணிகளை (சாலைகளும் பாலங்களும்) நிறைவேற்றுகின்றது. அத்தகைய பெரும் பணிகளை மேற்கொள்ள சரியான தரக்கட்டுப்பாடு தேவைப்படுகிறது. அத்தகைய முறையான தரக்கட்டுப்பாட்டைக் கொண்டுவர பிரிவு ஒன்று இத்துறையில் தலைமைப் பொறியாளரது கட்டுப்பாட்டின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட மதிப்பீடுகளை ஆய்வு செய்தல், தொழில் நுட்ப கண்ணோட்டத்தில் செய்யப்பட்ட ஏற்பாடுகள் போதுமானதா என்று ஐயமறத் தெளிதல், பணிகளை நிறைவேற்றுகையில் குறிப்பீடுகள் சரிவர செயல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக பெரும் பணிகளை திடீரென்றும் திட்டமிட்டும் சென்று பார்வையிடுதல் ஆகிய பணிகளுக்கு இப் பிரிவு பொறுப்புள்ளதாகும். பணிகளை வடிவமைத்தல், நிறைவேற்றுதல் ஆகியவற்றில் தரத்தினை உயர்த்துவதற்கு இப்பிரிவு உதவுகிறது.

2.24. தமிழ்நாடு கட்டுமானப் பணிக்கழகம்.

2.24.1. அரசு மேற்கொள்ளும் பல்வேறு வகையான திட்டப் பணிகளைச் செவ்வனே ஏற்று அதனை நல்ல முறையிலும் குறித்த நேரத்திலும் செய்து முடிக்கக் கூடிய ஆற்றலும் அனுபவமும் போதிய தொழில் நுட்பத் திறமையும் உடைய ஒப்பந்தக்காரர்கள் முன்வருவது அரிதாக இருப்பது அரசின் அனுபவத்தில் தெரிய [illegible]. மேலும் சில இனங்களில் ஒப்பந்தக்காரர்கள் தங்களை

தொகையை மிக அதிகமாகத் தெரிவித்து பணிகளைக் குறித்த நேரத்தில் முடிப்பதற்கு ஆர்வம் காட்டாமல் தாமதப்படுத்தி வழக்குத் தொடர்ந்து தொல்லைகளைத் தந்து ஆக்க பணிகளுக்கு இடையூறு விளைவிக்கின்றனர்.

2.24.2. எனவே, இத்தகைய முன்னேற்றத்திற்குத் தடங்கல் விளைவிக்கக் கூடிய நிலைமைகளைத் தவிர்க்கத் தமிழக அரசானது தமிழ்நாடு மாநில கட்டுமானப் பணிக்கழகம் என்ற அமைப்பினை 1979–80 ஆம் ஆண்டில் 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் நிறுவியது. இக் கழகம் 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 9-ஆம் நாள் முதல் தன்னுடைய பணியினைத் துவங்கியது. இக்கழகத்தின் வரைமுறைகள் விரிவாக அமைக்கப்பட்டுள்ளதால் இக் கழகமானது எந்த விதமான கட்டுமானப் பணியையும் மேற்கொள்ள இயலும். இக்கழகம் அமைக்கப்படுவதனால் பின்வரும் பயன்கள் எதிர்பார்க்கப்படுகின்றன :

1. அரசு கட்டுமான பணிக் கழகம் மேற்கொள்ளும் பணிகள் லாப நோக்குடன் அல்லாமல் சிறந்த தரமுள்ள பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்கும்.

2. இந் நிறுவனத்தில் சிறந்த அனுபவமும் உயர்ந்த கல்வித் தகுதியும் உடைய பொறியாளர்கள் இடம் பெறுவர்.

3. இந் நிறுவனம் குறிப்பிடும் தொகை நியாயமானதாக இருக்கும். மேலும் முதலில் குறைந்த தொகையைத் தெரிவித்துப் பின்னர் அதிக அளவிற்கு அதனை உயர்த்தும் செயலினை இந் நிறுவனம் செய்யாது.

4. இந் நிறுவனத்தில் நிதிப் பற்றாக்குறைக்கான வாய்ப்பு ஏற்படாது. அதனால் பணிகள் தடையின்றிச் செயல்படுத்தப் படும்.

5. இந் நிறுவனமானது சாதாரணமாக எவரும் முன்வராத பகுதிகளான இடங்களிலும் நேர்மையற்ற முறையிலே அதிகமான விலை கேட்கப்படும் இடங்களில் பணிகளை மேற்கொண்டு அவைகளை நியாயமான செலவிலும் குறித்த காலத்திலும் செய்து முடிக்கும்.

. மேலும் இந்த அரசு சார்புடைய நிறுவனம் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் கட்டுமான நிறுவனங்கள் போரும் விகிதங்களுடன் போட்டியிடுவதால் இப்போட்டியானது ஒரு ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

2.24.3. இந் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்டுள்ள மூலதனம் ரூபாய் 1.00 கோடியாகும். இதற்கென தமிழக அரசு முன்னோடியாக வழி வகைக்கென ரூபாய் 20.00 இலட்சம் வழங்கியுள்ளது.





2.24.4. இந் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மதுரையில் உள்ளது.

2.24.5. இந் நிறுவனம் திறமை மிக்க பொறியாளர்களாலும் பெரும் பணிகளை ஏற்று நடத்திய சிறந்த அனுபவம் கொண்டவர்களாலும் நிர்வகிக்கப்படுகிறது.

2.24.6. தொடக்கத்தில் பொதுவாக ஏற்படும் பல தொல்லைகளுக்கு நடுவே இந்நிறுவனம் முதலாண்டின் துவக்கத்திலேயே அரசின் பல முக்கிய கட்டுமானப் பணிகளை மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கதொன்றாகும். இதற்கான விவரங்களை இணைப்பு 17-ல் காணலாம். இந்நிறுவனம் தொடங்கி ஓராண்டிற்குள்ளேயே பயன்தக்க நிறுவனம் என்பது நிரூபிக்கப்பட்டதுடன் இது ஒரு நியாயமான இலாபத்துடன் செயல்படுகிறது.

3. தேசிய நெடுஞ்சாலை.

3.1. தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு 1971 ஆம் ஆண்டு செப்டம்பரில் ஏற்படுத்தப்பட்டுத் தனித் தலைமைப் பொறியாளர் ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயல்பட்டு வருகிறது. தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு, தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களையும் மத்திய சாலை நிதித் திட்டங்களையும் கவனித்து வருகிறது. தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள் மத்திய அரசுத் துறை திட்டங்களாகும். இவற்றிற்கு மத்திய அரசு முழு நிதி உதவி அளிக்கிறது.

3.2 மத்திய சாலை நிதியிலிருந்து நிதி உதவி கிடைக்கும் திட்டங்கள் .—

3.2.1. " மத்திய சாலை நிதி " காலம் கடந்து போகாத நிதியாகும். பெட்ரோல் எண்ணெய்க்கு லிட்டர் 1-க்கு 3.5 காசு வீதம் விதிக்கப்படும் சுங்க ஆயத் தீர்வையின் மூலம் இந்த நிதிக்கு வருவாய் கிடைக்கிறது. இம்மாதிரி கிடைக்கும் மொத்த வசூலில் 80 சதவிகிதம் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளுக்காகும் செலவுகளைச் சரிக்கட்டுவதற்காக மாநில அரசுக்கு ஒதுக்கப்படுகிறது. 20 சதவிகிதத்தை " சேமத் தொகையாக " மத்திய அரசு வைத்து வருகிறது.

3.2.2. திருத்தி அமைக்கப்பட்ட முறையின்படி சாலைகள், பாலங்கள் அமைக்கும் பணிகளுக்கு குறைந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆராய்ச்சித் திட்டங்கள், போக்குவரத்து ஆய்வுகள், பொருளாதார ஆய்வுகள், இளம் பொறியாளர் பயிற்சி திட்டம் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கும் வாகனங்களில் வருவோர் தங்குவதற்கான விடுதிகள் போன்ற வழியோர வசதிகள் செய்து கொடுப்பதற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது நாம் ஏற்கனவே ரூ. 143.30 இலட்சம் பெறுமானமுள்ள ஆறு பணிகளுக்கான செயற் குறிப்புகளை அனுப்பியுள்ளோம். இவற்றிற்கான மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

3.2.3. நான்காவது திட்டம்.—

3.2.3.1. மத்திய சாலை நிதித் திட்டப் பணிகளுக்காக நான்காம் திட்டக் காலத்தில் (1-4-1969—31-3-1974) ரூ. 224.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நான்காம் திட்டக் காலத்தில் மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் யாவும், கீழக்கண்ட இரு பணிகள் தவிர, முடிந்து விட்டன :—

(1) வாணியம்பாடிக்கும் ஜாப்பராபாத்திற்கும் இடையே பாலாற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் கட்டுதல் மற்றும் வளத்திகமபண்டாவிற்கும் ஆந்திர மாநில எல்லைக்கும் செல்லும் சாலைகளை மேம்பாடு செய்தல் (ரூ. 65.23 இலட்சம்).

(அணுகு சாலையின் சிறு பகுதி நிலக் கையகப்படுத்தல் நீங்கலாக மற்ற எல்லா வேலைகளும் முடிந்து விட்டன.)

(2) வலுவிழந்த மற்றும் பழைய பாலங்களைச் சோதனைச் செய்ய ஒரு சோதனை வண்டி தயாரித்தல் (ரூ. 7.70 இலட்சம்).

(ரூ. 10 இலட்சத்திற்கு திருத்திய மதிப்பீடு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு அதன் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. சோதனை வண்டி செய்வதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஒரு பகுதி சாதனங்கள் பெறப்பட்டுள்ளன.)

3.2.4. ஐந்தாவது திட்டம்.—1—4—1974-லிருந்து 31—3—1978 வரை மற்றும் 1979 ஆவது ஆண்டு.)

3.2.4.1. ஐந்தாவது திட்டக் காலத்தில் ரூ. 252.80 இலட்சம் மத்திய அரசால் அனுமதி அளிக்கப்பட்டது. 13 பணிகளுக்கு இந்திய அரசு மூன்று நிலைகளில் அனுமதி அளித்தது. இவற்றுள் பாலாற்றின் குறுக்கே கிர்க்ககண்டிக்கு அருகில் தமிழ்நாடு மற்றும் கர்நாடக எல்லையில் பாலம் கட்டும் ஒரு பணி கர்நாடக மாநிலத்தால் செயலாக்கப்பட இருக்கிறது. இப்பணிக்கான செலவுகளை இரு மாநில அரசுகளும் சமமாக ஏற்க இருக்கின்றன. தமிழக அரசின் பங்கு செலுத்தப்பட்டுவிட்டது.

3.2.4.2. மீதமுள்ள பன்னிரண்டு பணிகளில் பதினொரு பணிகளுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டது. எஞ்சிய ஒரு பணிக்கு மட்டும் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட வேண்டியுள்ளது.



3.2.4.3. குருபகவுண்டன் ஜாகிர் மற்றும் வஞ்சிக் குழி வழியாக கிளக்காட்டிலிருந்து சங்கப்பனூர் வரை ஜீப் செல்லும் பாதை அமைக்கு பணி ரூ. 53 இலட்சம் செலவில் இந்திய அரசினால் எடுத்துக்கொள்ளப்பட்டு இப்பணி நெடுஞ்சாலைத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. ரூ. 65.00 இலட்சத்திற்கான திருத்திய மதிப்பீடு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்நோக்கி உள்ளது.

3.2.4.4. அருள்திரு கோதண்ட ராமசாமி கோவிலிலிருந்து தேசிய நெடுஞ்சாலை 49ஐ (மதுரை-தனுஷ்கோடி சாலை) இணைக்கும் சாலை அமைக்கும் பணியும், சித்தாலந்தூர் ஜெடார்பாளையம் சாலையில் ஒரு மூழ்கு பாலம் கட்டும் பணியும் முடிந்து விட்டன. பல்வேறு முன்னேற்ற நிலைகளில் உள்ள மற்றப் பணிகளை இணைப்புகள் 18 மற்றும் 19-ல் காணலாம்.

3.2.4.5. மாநில அரசு மத்திய அரசின் பங்கிற்கு இணையாக தனது பங்கினைக் கொடுக்க முன்வருமேயானால், மத்திய சாலை சேம நிதியிலிருந்து ரூ. 35 இலட்சம் அளிக்க தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. நான்காம் ஐந்தாம் திட்டக் காலத்தில் (1969-லிருந்து 1979 வரை) நடக்கும் பணிகள் குறித்து கணிசமான அளவுக்குக் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. ஆறாவது திட்டக் காலத்தின் கடைசி இரண்டு ஆண்டுகளுக்கான (1983—84 மற்றும் 1984—85) உத்தேச ஒதுக்கீடு வாய்பெறாத நிலையில் 143·30 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கான ஆறு பணிகள் தேர்வு செய்யப்பட்டு இந்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு உள்ளது. இவற்றிற்கான ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் சில பணிகளுக்கான செயற்குறிப்பு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்ப வேண்டி உள்ளது.

3.2.4.6. தமிழ்நாட்டில் ஒரு வட்டார ஆய்வுக் கூடம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக ரூ. 2·25 இலட்சத்தை மத்திய சாலை (சாதாரண) சேம நிதியிலிருந்து மானியமாக மத்திய அரசு கொடுத்துள்ளது. மேலும் அந்த ஆய்வுக் கூடத்தில் கூடுதல் சாதனங்களை வாங்குவதன் மூலம் அதிலுள்ள வசதிகளைப் பெருக்குவதற்காக ரூ. 4 இலட்சத்தை மத்திய சாலை நிதி (சாதாரண) சேம நிதியிலிருந்து கொடுத்துள்ளதோடு, ஒவ்வொரு பணிக்கும் சரிசமமாக தொகையை ஒதுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளது.

3.2.4 7. கல்ராயன் மலைச் சாலை மேம்பாடு குறித்த செலவு உட்பட 1980—81 ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு ரூ. 45·20 இலட்சம் ஆகும். 1981—82 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டமதிப்பீடு ரூ. 57·99 இலட்சமாகும்.

3.3. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்.

3.3.1. தமிழ்நாட்டில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் 1957-ல் நிறுவப்பட்டது. இது கடந்த 23 ஆண்டுகளாக நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறை மற்றும் அண்டை மாநிலங்களின் தேவைகளை நிறைவேற்றி வந்துள்ளது. இது நமது நாட்டின் தெற்கு வட்டாரங்களில் வட்டார சோதனை மற்றும் ஆராய்ச்சி ஆய்வுக் கூட நிலைக்கு உயர்ந்துள்ளது. நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்கள் பொறியியல் தொடர்பான பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற இதற்கு சென்னை பல்கலைக் கழகம் அங்கீகாரம் அளித்துள்ளது. இது போன்றே பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகமும் அங்கீகாரம் அளித்துள்ளது. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலயத்தில் அதிகரித்து வரும் நடவடிக்கைகளுக்காக அரசு இரண்டு கோட்டப் பொறியாளர்களுக்கான ஒப்புதல் அளித்துள்ளது.

3.3.2. ஆராய்ச்சிக்காகவும், புதிய கருத்துக்கள் சாலை மேம்பாட்டு பணிகள், நவீன தொழில் நுட்ப உத்திகளையும் செய்முறைகளையும் பின்பற்றுதல், பல்வேறு மண் தரத்திற்கேற்ப நடைபாதைகள் அமைத்தல், போக்குவரத்து நிலைமைகள் ஆகியவற்றிற்கு சோதனை அடிப்படையிலமாக செயல்படுவதற்கும் சோதனைப் பாதை ஒன்று ரூ. 25 இலட்சத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

3.3.3. பாலங்களின் பளு தாங்கும் திறனை சோதனை செய்வதற்காக 120 டன் செயல் திறன் கொண்ட ஒரு சோதனை வண்டியும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இச்சோதனை வண்டிக்கு 100 வழிகளில் செயல் புரியும் ஒரு கருவியை வாங்கும் முயற்சியின் பெரும் பகுதி முடிந்துவிட்டது.

3.3.4. அனுமதி அளிக்கப்பட்ட பணிகளில் நடைபெற்று வரும் பணிகள் குறித்த விவரங்கள் இணைப்பு 20-ல் விவரமாக தரப்பட்டுள்ளது.

4. வெள்ள நிவாரணப் பணிகள்.

4.1. புயலாலும் வெள்ளத்தாலும் சேதமடைந்த சாலைகளையும் கட்டுமானங்களையும் சீர்செய்வதற்காக 1977–78-ல் ஏற்படுத்தப்பட்ட கண்காணிப் பொறியாளரையும், இரண்டு கோட்டங்களையும் கொண்டு தனிப் பணியாளர்களின் அமைப்பு 1979-ஆம் ஆண்டில் வெள்ளத்தால் பெருமளவிற்கு சேதமடைந்த வேலைகளை துரிதமாக சீர் செய்வதற்கும், புதிதாக எடுத்துக் கொள்ளப்பட்ட வெள்ளத் தடுப்பு வேலைகளை முடிப்பதற்கும் 1980 ஆம் ஆண்டு துவக்கத்திலேயே மேலும் 2 வட்டங்களையும் மற்றும் 10 கோட்டங்களையும் கொண்டு பலப்படுத்தப்பட்டது.



4.2. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகள், மதகுகள், பாலங்கள், சிறு பாசன ஏரிகள், கட்டிடங்கள் ஆகியவற்றைப் பழுது பார்ப்பது மட்டுமே அரசின் நோக்கமன்று. அவற்றை வலுப்படுத்தியும் சீரமைத்தும் ஏனைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்பதே அரசின் முக்கிய நோக்கமாகும். அவ்வாறு செய்வதால் இனிமேல் ஏற்படும் வெள்ளத்தாலும், புயலாலும், பெருஞ்சேதம் ஏற்பட்டால் அதைத் தடுக்கும் வகையில் எல்லாச் சாலைகளிலும் வெள்ள நீர் போதுமான அளவுக்கு வடிந்து செல்ல வழி வகைகள் இருக்கும். இதைக் கருத்தில் கொண்டு மண்ணரிப்பு, பள்ளங்கள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில், தேவையான இடங்களில் தடுப்புச் சுவர்கள் கட்டும் பணியும் காட்டாற்று வெள்ளமும் மழை நீரும் சாலையைக் கடக்குமிடத்தில் மதகுகள் கட்டும் பணியும், கூடுதல் வடிகால்கள் அமைத்து பழைய நலிவுற்ற பாலங்களை மீண்டும் கட்டும் பணியும் ஏனைய பாதுகாப்புப் பணிகளும் முதற்கண் மேற்கொள்ளப்பட்டன.

4.3. இவற்றுடன் இயற்கைச் சீற்றம் காரணமாக ஏற்பட்ட பெருந்துயர் துடைப்பு என்பது குறித்து மத்திய அரசின் பொதுக் கணக்குக் குழு கொடுத்துள்ள ஐந்தாம் அறிக்கையில் (1977–78) பரிந்துரைத்துள்ளபடி, துயர் துடைப்புப் பணிக்கென ஒதுக்கப்பட்ட நிதி கூடியவரை மிகவும் பலனுள்ள வகையில் செலவிடப்படுகிறது. துயர் துடைத்தல் மேலும் நிலையான நன்மை பயத்தல் என்னும் இவ்விரு நோக்கங்களையும் எய்தும் வகையில் நிதிப் பற்றாக்குறை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட பணிகளை மீண்டும் மேற்கொள்வதற்காக மேற்கூறிய நிதி செலவிடப்படுகிறது. இது இனிமேல் ஏற்படும் இயற்கைச் சீற்றத்தின் பாதகமான விளைவுகளை முழுவதுமாக அகற்றாவிட்டாலும் ஓரளவிற்குக் குறைக்கக்கூடும்.

4.4. வெள்ளத் தடுப்புப் பணிகளை விரைவில் முடிக்கும் பொருட்டு இத்துறை அதிகாரிகளுக்குப் பல கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டன. சில விதிகளும் தளர்த்தப்பட்டன.

4.5. மாவட்ட வாரியாக எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை, இவற்றில் முடிவு பெற்றவை மற்றும் நடைபெற்று வருபவை இவைகளின் புள்ளி விவரங்கள் இணைப்புகள் 21-32-ல் கொடுக்கப்பட்டுள்ளது. முடிவு பெற்ற மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பெரும் பணிகளின் புள்ளி விவரங்கள் இணைப்புகள் 33-41-ல் கொடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகளைப் பூர்த்தி செய்ய ரூ. 319.33 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 1980–81 க்கு உண்டான மாவட்ட வாரியான நிதி ஒதுக்கீடும், 31–12–1980 வரையிலான செலவுத் தொகையும் இணைப்பு 42-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

4.6. குறித்த காலத்தில் சிமென்ட் மற்றும் தார் கிடைக்கப் பெறாததாலும், பெட்ரோல் டீசல் இவைகளின் விலை இரண்டு மடங்கு அதிகரித்ததன் காரணமாக மதிப்பீட்டில் ஏற்பட்ட ஏற்றத்தாலும் சில வேலைகள் முடிக்கப்பெறாமல் 1981–82லும் தொடர்ந்து செய்ய வேண்டியதாக உள்ளது. எல்லா வேலைகளை முடிப்பதற்கும், கணக்குகளை சரி செய்வதற்கும் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள தற்போதைய தனிப் பணியாளர்கள் அமைப்பு மேலும் நீடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4.7. பருவக்கால வெள்ளத்தினாலும் மற்றும் புயலினாலும் ஏற்படக்கூடிய நிலையை சமாளிக்க, கருவிகளும் தளவாடங்களும் மேற்கொண்டு வாங்க ரூ. 17.74 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

## 5. பாம்பன் பாலத் திட்டம்.

### 5.1. பொது

5.1.1. தமிழ்நாட்டில் இராமேஸ்வரம் தீவுக்கருகில் 49 ஆம் எண் தேசிய நெடுஞ்சாலையில் பாம்பன் ஜலசந்திக்கு குறுக்கே உயர் மட்ட சாலைப் பாலம் ஒன்றை ரூ. 532.87 இலட்சம் செலவில் கட்ட மத்திய அரசு, 1972 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் அனுமதி வழங்கியது. இந்தப் பாலத்திற்கு இரு பக்கங்களிலும் அணுகு சாலைகளை அமைப்பதற்காகும் செலவு ரூ. 51.01 இலட்சமும் இதில் அடங்கும். இப்பாலம் தேசிய நெடுஞ்சாலையில் அமைவதால் மத்திய அரசு இப்பணிக்கு நிதியுதவி அளிப்பதுடன், செலவு முழுவதையும் தனது பொறுப்பில் ஏற்றுக் கொள்கிறது. மத்திய அரசின் சார்பில் மாநில அரசு, இப்பணியை நிறைவேற்றி வருகிறது. இயற்கையின் சீற்றங்களை எதிர்த்தும், உவர் மண் அதிகமாகப் படிந்திருக்கும் நிலையிலும் கடலின் குறுக்கே இப்பாலம் கட்டப்படுவதால் இந்தியாவில் இவ்வகைப் பாலங்களுள் இதுவே முதலாவதாகும்.

### 5.2. முக்கியக் கூறுகள்.

5.2.1. மேற் சொன்ன பாலத்தில் ஒவ்வொன்றும் 27.13 மீட்டர் அகலமுள்ள 76 கண்கள் உள்ளன. பாலத்தின் மத்தியில் கப்பல் போக்குவரத்து வசதிக்காக 115.21 மீட்டர் அகலமுள்ள ஒரு கண்ணும் அதன் இருபுறமும் ஒவ்வொன்றும் 68.50 மீட்டர் அகலமுள்ள இரு கண்களும் அமைந்துள்ளன. இப் பாலத்தில் மொத்தம் 79 கண்கள் உள்ளன. கப்பல் போக்குவரத்துக்காக மண்டபம் பக்கம் உள்ள கண்களில் 1 சதவீதம் சாய்வுடனும் பாம்பன் பக்கக் கண்களில் 2 சதவீத சாய்வுடனும் கப்பல் போக்குவரத்துக்காக உள்ள கண்களில் கீழ்மட்டம் கடல் பொங்கும் அலை உயர் மட்டத்திலிருந்து 17.68 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அப்போதுதான் கப்பல்கள் அவ்வழியே எளிதாகக் கடக்க இயலும்.



### 5.3. முக்கியபாலம்

5.3.1. மண்டபம், பாம்பன், பக்கங்களைச் சேர்ந்த அஸ்திவாரப் பணிகளும் சார்புச் சுவர்களும் 41 பாலத் தூண்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத்துடன், 8 பாலத் தூண்களுக்கான அடித்தளம் முடிக்கப்பட்டுள்ளன. 7 பாலத் தூண்களுக்கான துணைக் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. மண்டபம் பாம்பன் பக்கங்களில் நங்கூரம் பாலத் தூண்கள் பணிகளும் கப்பல் போக்குவரத்து அடித்தளப் பணிகளும் பல்வேறு நிலைகளில் உள்ளன. முன்னரே அழுத்தப்பட்ட 45 கான்கிரீட் கம்பங்கள் வார்க்கப்பட்டு, அவற்றில் 20 கம்பங்கள் இறக்கப்பட்டுள்ளன. இந்நாள்வரை இப் பாலப் பணியில் அடைந்துள்ள சாதனை 36 சதவீதமாகும்.

5.3.2. ஒப்பந்தக்காரர் வேலை செய்வதை அடியோடு நிறுத்தி விட்டார். அநேக கால நீடிப்புகள் கொடுத்தும் வேலையை மேற்கொண்டு துவக்கவில்லை. ஒப்பந்தம் முழுவதுமாக ரத்து செய்யப்பட்டுள்ளது. மீண்டும் வேலையைத் துவக்க முன் அனுபவமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தங்கள் கோரத்தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஒப்பந்த வேலைகளின் விவரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. மீதி வேலையை பூர்த்தி செய்ய முடிவாக்கப்பட்ட ஒப்பந்த பட்டியலுக்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 5.4. அணுகு சாலைகள்.

5.4.1. பாலத்தின் இருபுறமும் உள்ள அணுகு சாலைகள் அமைக்கும் பணி பல்வேறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு பல ஒப்பந்தக்காரர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அனேக பகுதிகளில் தார் போடுதல் உட்பட சாலை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

அணுகுசாலையில் உள்ள மீதமுள்ள வேலைகள் நடைபெற்று வருகின்றன.

### 5.5. செலவு விவரங்கள்.

5.5.1. 1981 ஜனவரித் திங்கள் 31 ஆம் நாள் வரை செலவிடப்பட்ட மொத்த தொகை ரூ. 453.95 இலட்சம். 1981–82–க்கு கோரப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 75.00 இலட்சம் ஆகும்.

**5.6. பொருளாதார பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டம்.**

5.6.1. பொருளாதார பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளை அமைத்து பாலங்களை கட்டி அவற்றை மேம்படுத்தும் திட்டத்திற்கு இந்திய அரசு நிதியுதவி அளிக்கிறது. இது, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட பணிகளுக்கு மட்டுமே மத்திய அரசு ஒப்புதல் அளிக்கிறது. பன் மாநில சாலைப் பாலங்கள் குறித்த பணிகளுக்காக மத்திய அரசு முழுக் கடனுதவி அளிக்கிறது. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சாலைப் பாலப் பணிகளுக்காகும் செலவினை மத்திய அரசும், மாநில அரசும் சரிசமமாக ஏற்கின்றன.

5.6.2. கீழ்க்காணும் வகையைச் சேர்ந்த சாலைப் பால வேலைகள், இத்திட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்படுவதற்குத் தகுதியுடையவையாகும். (i) போக்குவரத்து அவசியமாயிருக்கிற பல மாநிலச் சாலைகள்; (ii) அண்மைக்காலத்திற்குள் இருப்புப் பாதைகள் அமைக்க முடியாத புதிய பகுதிகளில் புறப்பகுதிகளை இணைக்கும் சாலைகள், பாலங்கள்; (iii) அதிகமான கனிவளம் மலைத் தோட்டம் மிக்க மலைப் பகுதிகளிலும், சமவெளிப் பகுதிகளிலும் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமாக உதவக்கூடிய சாலைகளும் பாலங்களும்.

**5.7. சாதனைகள்.**

5.7.1. நான்காம் திட்டக்காலத்தில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் ரூ. 401.20 இலட்சம் செலவில் 38 பாலங்கள் கட்ட மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. அப்பணிகளுக்காக ரூ. 261.00 இலட்சம் கடனுதவியும் அளித்துள்ளது. இப்பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. இத்துடன் ஐந்தாம் திட்டக் காலத்தில் (1974—79) பொருளாதார பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின் கீழ் ரூ. 60.00 இலட்சம் செலவில் இரண்டு பணிகளை மேற் கொள்ள மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. மேற்சொன்ன பணிகளுடன் ''திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மணப்பாறை — துறையூர் சாலையில் முசிறியையும் குளித்தலையையும் இணைத்து'' காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தைக் (பெரியார் பாலம்) கட்டும் பணியும் இத்திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்டு முடிக்கப் பட்டுள்ளது. நான்காம் ஐந்தாம் திட்டத்தின் பணிகளின் கீழ் பொருளாதார பன் மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தில் இப்பணியைச் சேர்த்துக்கொள்ளும்படி மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் மத்திய அரசு, இதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. எனவே இப் பணி மாநில நிதியைக் கொண்டு நிறைவேற்றப்பட்டது.

5.7.2. மேற்சொன்ன பெரியார் பாலத்தில் மின் விளக்கு ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டபின் இப்பணியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை ...



## இணைப்பு 1.

(பத்தி 2.1.1.-ஐக் காண்க)

**1980-81ஆம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலையின் (நகர்ப்புறம்) கீழ் அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியல்.**

| தொடர் எண்ணும் மாவட்டமும். | பணியின் பெயர். | மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 வட ஆற்காடு .. | இராணிப்பேட்டை நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 46. கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும், சீர்படுத்தலும் (142/8—144/4 கிலோ மீட்டர்). | 0·70 |
| 2 வட ஆற்காடு .. | இராணிப்பேட்டை நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 4. சென்னை—சித்தூர்—பெங்களூர் சாலையில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும், சீர்படுத்தலும் (111/2—115/0 கிலோ மீட்டர்). | 1·50 |
| 3 திருச்சிராப்பள்ளி .. | திருச்சிராப்பள்ளி நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 45. சென்னை—திருச்சிராப்பள்ளி—திண்டுக்கல் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும், சரிபடுத்தலும் (322/0—323/4 கிலோ மீட்டர்). | 3·40 |

| தொடர் எண்ணும் மாவட்டமும். | பணியின் பெயர். | மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 4 கோயம்புத்தூர் .. | சிங்காநல்லூர் நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 47. சேலம்–கொச்சி சாலையில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும், சீர்படுத்தலும் (151/0—154/2 கிலோ மீட்டர்). | 2·25 |
| 5 கோயம்புத்தூர் .. | கோயம்புத்தூர் நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 47. சேலம்—கொச்சி சாலையில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும், சீர்படுத்தலும் (154/2—160/6 கிலோ மீட்டர்). | 2·70 |
| 6 சேலம் .. .. | சேலம் நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 47. சேலம்—கொச்சி சாலையில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும், சீர்படுத்தலும் (0/0—0/35 கிலோ மீட்டர்.) | 0·38 |
| | மொத்தம் .. | 10·93 |



**இணைப்பு 2.**

**1981–82 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள பணிகள்.**
**(பத்தி 2.1.2.-ஐப் பார்க்கவும்)**

**தேசிய நெடுஞ்சாலை (நகர்ப்புறம்)**

| தொடர் எண்ணும், மாவட்டமும். | பணியின் பெயர். | மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 செங்கல்பட்டு .. | செங்கல்பட்டு நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 45-ல் சென்னை திருச்சிராப்பள்ளி–திண்டுக்கல் சாலையில் கிலோ மீட்டர் 54/4–58/8வரை மேம்பாடு செய்தல். | 3·75 |
| 2 செங்கல்பட்டு .. | செங்கல்பட்டு நகராட்சி எல்லையில் தேசிய நெடுஞ்சாலை 45-ல் சென்னை–திருச்சிராப்பள்ளி–திண்டுக்கல் சாலையில் கிலோ மீட்டர் 26/2–4வரை சரக்கு பேருந்துகளுக்கான சாலை ஒதுக்கம் அமைத்தல். | 3·50 |
| 3 வட ஆற்காடு .. | ஆம்பூர் நகரியப் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை 46-ல் கிலோ மீட்டர் 68/8-ல் ஒரு பாலம் கட்டுதல். | 10.00 |
| தென்னாற்காடு .. | திண்டிவனம் நகராட்சிப் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை 45-ல் சென்னை–திருச்சிராப்பள்ளி–திண்டுக்கல் நெடுஞ்சாலையில் கிலோ மீட்டர் 23/4-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல். | 2·50 |

| தொடர் எண்ணும் மாவட்டமும். | பணியின் பெயர். | மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 5 இராமநாதபுரம் .. | விருதுநகர் நகரியப் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை 7-ல் காசி—கன்னியாகுமரி சாலையில் கிலோ மீட்டர் 42/4—45/6வரை சாலையில் மேம்பாட்டுப் பணிகள் செய்திட. | 1·50 |
| 6 திருநெல்வேலி .. | பாளையங்கோட்டை நகரியப் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை 7-ல் காசி-கன்னியாகுமரி சாலையில் கிலோ மீட்டர் 0/0—2,2வரை சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்தல். | 3·75 |
| | மொத்தம் .. | 25·00 |



## இணைப்பு 3.

(பத்தி 2.2.1.1.-ஐப் பார்க்கவும்.)

மாநில நெடுஞ்சாலைகள்.

| தொடர் எண்ணும், மாவட்டமும். | பணியின் பெயர். | மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| வட ஆற்காடு .. | காட்பாடி இரயில் நிலையம் அருகில், கடலூர்—சித்தூர் சாலையில் கிலோ மீட்டர் 1950-ல் உள்ள இரயில்வே மேம்பாலத்தைப் புதுப்பித்தல். | 126·00 |
| தென்னாற்காடு .. | சேலம்—உளுந்தூர்பேட்டை சாலையில் கிலோ மீட்டர் 76/4-ல் உள்ள பாலத்தை புதுப்பித்தல். | 9·50 |
| இராமநாதபுரம் .. | பெரம்பலூர்—மானாமதுரை சாலையில் கிலோ மீட்டர் 227/8-ல் குறுக்கிடும் வைகையாற்றின் குறுக்கேயுள்ள பலவீனமான பாலத்தைப் புதுப்பித்தல். | 60·00 |
| 4 பெரியார் .. | கோவை-சத்தி-சாம்ராஜ் நகர் சாலையில் கிலோ மீட்டர் 69/4-ல் ஒரு பாலம் கட்டுதல். | 22·50 |
| | மொத்தம் .. | 218·00 |

இணைப்பு 5—தொடர்ச்சி.

(பத்தி 2.2.2.2-ஐப் பார்க்கவும்.)

மாவட்டப் பெருஞ் சாலைகள்—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும் மாவட்டமும். | | பணியின் பெயர். | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| கோயம்புத்தூர் | .. | பொள்ளாச்சி-வால்பாறை சாலையில் கி.மீ. 8/4-ல் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டுதல். | 2·40 |
| பெரியார் | .. | ஈரோடு-பெருந்துறை சாலையில் கி.மீ. 5/4-லிருந்து ஈரோடு சத்தி சாலைக்கு கி.மீ. 6/2வரை ஈரோடு நகரத்திற்கு ஓர் ஒதுக்குப் பாதை அமைத்தல். | 29·50 |
| பெரியார் | .. | தாராபுரம் ஒதுக்குப் பாதை .. .. .. .. | 27·00 |
| தர்மபுரி | .. | கிருஷ்ணகிரி—இராயக்கோட்டா சாலையில் கி.மீ. 20/4-ல் ஓர் பாலம் கட்டுதல். | 6·00 |
| | | மொத்தம் .. | 101·90 |



இணைப்பு 6.
(பத்தி 2.2.2.3-ஐப் பார்க்கவும்).

1981–82 பாகம் II—செயற்குறிப்புகள்.

மாவட்ட பெருஞ்சாலைகள்.

| தொடர் எண்ணும் மாவட்டமும். | | பணியின் பெயர். | மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1 செங்கல்பட்டு | — | சென்னை-மகாபலிபுரம் சாலையில் கி. மீ. 19/10-ல் ஒரு பாலம் கட்டுதல். | 30·00 |
| 2 தஞ்சாவூர் | — | பாப்பாநாடு-முதுக்கூர்-பெருகவளர்ந்தான் சாலையில் கி. மீ. 24/8-ல் பாமினியாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல். | 30·00 |
| 3 கன்னியாகுமரி | — | நாகர்கோவில்-ராஜக்காமங்கலம்-சொளச்சல் சாலையில், கி. மீ. 16/2-ல் மணவாளக்குறிச்சிப் பாலத்தைப் புதிதாகக் கட்டுதல். | 25·00 |
| 4 சேலம் | — | மல்லிக்கரை—தம்மாப்பட்டி சாலையில் கி. மீ. 16/0-ல் சுவேதா ஆற்றின் குறுக்கே உள்ள உயர் மட்டப் பாலத்தைப் புதிதாகக் கட்டுதல். | 15·00 |

## இணைப்பு 6—தொடர்ச்சி.

(பத்தி 2.2.2.3-ஐப் பார்க்கவும்)

மாவட்ட பெருஞ்சாலைகள்—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும் மாவட்டமும். | | பணியின் பெயர். | மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 5 பெரியார் | .. | ஈரோடு-பவானி சாலையில் கி. மீ. 3/4-ல் ஒரு உயர் மட்டப் பாலம் கட்டுதல். | 22·00 |
| 6 தென்னாற்காடு | .. | பழைய கடலூர்-சிதம்பரம் சாலையில் பி. முத்தலூர் அருகே கி. மீ. 35/6-ல் வெள்ளாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல். | 43·00 |
| 7 மதுரை ... | .. | டி. மேட்டுப்பட்டியிலிருந்து சக்களத்துமேட்டு வரை மலைச் சாலை அமைத்தல். | 60·00 |
| 8 வடாற்காடு | .. | ஆம்பூர்-சத்கூர் சாலையில் கி. மீ. 1/4—6-ல் ஆம்பூர் அருகே பாலாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல். | 73·75 |
| 9 மதுரை ... | ... | கொம்பையிலிருந்து ராமக்கால் மேட்டுவரை சாலை அமைத்தல். | 70·00 |
| 10 திருநெல்வேலி | — | வீரவநல்லூர்-முக்கூடல் இடையில் தாமிரவருணி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல். | 25·00 |
| | | மொத்தம் .. | 3,93·75 |



## இணைப்பு 7.

(பத்தி 2·2·3·1-ஐப் பார்க்கவும்.)

இதர மாவட்டச் சாலைகள்.

| தொடர் எண்ணும் மாவட்டமும். | | பணியின் பெயர். | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1 திருச்சிராப்பள்ளி | ... | சென்னை—திருச்சிராப்பள்ளி—திண்டுக்கல் நெடுஞ் சாலையிலிருந்து கி.மீ. 314/4-ல் பிரிந்து செல்லும் காவேரி இடது கரை சாலையான திருவானைக்காவல்—கல்லணை சாலையில் கி. மீ. 2/0—14/2 வரை அகலப் படுத்தி சீரமைத்தல். | 32·00 |
| 2 திருச்சிராப்பள்ளி | ... | திருவரங்கம் அருகில், மாம்பழச்சாலை அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள காவேரிப் பாலத்திலிருந்து பிரிந்து செல்லும் காவேரி இடது கரை சாலையை மேம்பாடு செய்தல். | 10·00 |
| 3 மதுரை .. | .. | அய்யலூர்—கடலூர் சாலையை கி. மீ. 0/0 — 8/8 வரை மேம்பாடு செய்தல். | 4·80 |
| 4 இராமநாதபுரம் | .. | அபிராமம்—வீரசோழம் சாலையை 12 கி. மீ. நீளத்திற்கு மேம்பாடு செய்து கி.மீ. 2/8-ல் குறுக்கிடும் கிருதமால் ஆற்றின் குறுக்கே ஓர் மூழ்குப் பாலம் கட்டுதல். | 20·00 |

| தொடர் எண்ணும் மாவட்டமும். | | | மதிப்பீடு, (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 5 இராமநாதபுரம் | .. | பெருநள்ளியிலிருந்து உச்சிநத்தம் வழியாக சூரங்குடி செல்லும் சாலையை கி. மீ. 0/0—15/0 வரை மேம்பாடு செய்தும், தேவைப்படும் இடங்களில் வடிகால் வசதியும் செய்வது உள்ளிட்டு. | 32·50 |
| 6 திருநெல்வேலி | .. | அம்பாசமுத்திரம் பாப்பாக்குடி சாலையில் கி. மீ. 5/10-ல் குறுக்கிடும் கடானா ஆற்றின் குறுக்கே ஓர் பாலமும், கி. மீ. 8/8-ல் குறுக்கிடும் வெளவ்வால் ஓடையின் குறுக்கே ஓர் பாலமும் கட்டுதல். | 45.00 |
| 7 கோயம்புத்தூர் | .. | புஜங்கனூர்—மேட்டுப்பாளையம் சாலையில் கி. மீ. 1/10, கி. மீ. 3/2 ஆகிய இடங்களில் பாலங்கள் கட்டுதல். | 27·00 |
| 8 செங்கல்பட்டு | .. | மங்கலம்—பட்டிக்காடு சாலையில் 27 இடங்களில் சிறு பாலங்கள் கட்டுதல். | 6·00 |
| | | மொத்தம் .. | 1,77·30 |



## இணைப்பு 8.

(பத்தி 2·2.3·1-ஐப் பார்க்கவும்.)

**1981—82ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பாக செயற் குறிப்புகள்.**

இதர மாவட்டச் சாலைகள்.

| தொடர் எண்ணும், மாவட்டமும். | | பணியின் பெயர். | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1 செங்கல்பட்டு | .. | திருவேலங்காடு ர. நி. கண்ணம்மா சத்திரம் சாலையில் கி. மீ. 12/1-ல் குசஸ்தலை ஆற்றின் குறுக்கே மூழ்கு பாலம் கட்டுதல். | 26·00 |
| தென் ஆற்காடு | .. | ஆனைக்காரன்சத்திரம், மணிக்கொல்லை சாலையில் கி. மீ. 0/0—8/6 வரை தார்சாலையாக்கி மேம்பாடு செய்து வடிகால் வசதி வேலைகள் செய்தல். | 16·00 |
| 3 தஞ்சாவூர் | .. | வேளச்சேரி வெள்ளக்குடி விழல் கோட்டகம் சீதாம்பூர் சாலையில் கி. மீ. 1/6 ல் கொரையார் குறுக்கே தற்போதுள்ள வண்டி, மற்றும் நடைபாதை பாலத்தை மாற்றுதல். | 13·00 |
| 4 புதுக்கோட்டை | .. | விராலிமலை—கலமாவூர் சாலையில் கி. மீ. 10/8-ல் உள்ள பாலத்தை திரும்பக் கட்டுதல். | 6·00 |

| தொடர் எண்ணும் மாவட்டமும். | பணியின் பெயர். | மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 5 சேலம் .. | அயோத்தியாப்பட்டணம் பேலூர் சாலையில் கி. மீ. 19/4-ல் வசிஷ்டா நதி குறுக்கே ஒரு மூழ்கு பாலம் கட்டுதல். | 14·00 |
| 6 கோயம்புத்தூர் .. | குறிச்சி நாச்சியார்பாளையம் சாலையில் கி. மீ. 6/6-ல் உயர் மட்டப் பாலம் கட்டுதல். | 15·00 |
| 7 தஞ்சாவூர் .. | வெள்ளச்சேரியிலிருந்து வெள்ளக்குடி—விழல் கோட்டகம் சிதாம்பூர் சாலையை (ராஜபையன் சாவடி) கி.மீ. 0/0—7/6-ல் மேம்பாடு செய்தல். | 21·10 |
| 8 தஞ்சாவூர் .. | பூவானூர் சட்டியிலிருந்து சத்தரம் சாலையில் பாமின்யார் குறுக்கே தற்போதுள்ள நடைபாதை பாலத்தை மாற்றுதல். | 9·00 |
| | மொத்தம் .. | 120·10 |

## இணைப்பு 9.

(பத்தி 2·2·4·1-ஐப் பார்க்கவும்.)

பிற சாலைகள் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணிகளின் விபரம்.

| தொடர் எண்ணும் மாவட்டமும். | பணியின் பெயர். | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| தஞ்சாவூர் .. | திருக்கண்ணமங்கை—அம்மையப்பன் சாலையில் கி.மீ. 1/5-ல் குறுக்கிடும் ஓடம்போக்கி ஆற்றின் குறுக்கே ஓர் பாலம் கட்டி சாலையை மேம்பாடு செய்தல். | 8·25 |
| தென் ஆற்காடு .. | கருங்குழி—கள்ளக்குறிச்சி சாலையில் கி. மீ. 1/4-ல் குறுக்கிடும் செங்கால் ஓடையின் குறுக்கே ஓர் பாலம் கட்டுதல். | 3·00 |
| டிட்டோ. | காட்டுமன்னார் கோவில் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மணியா ஆதூர்—நத்தமலை சாலையை மேம்படுத்துதல். | 2·25 |
| டிட்டோ. | திருக்கோவிலூர்—கடலூர் சாலையிலிருந்து கி.மீ. 57/8-லிருந்து பிரிந்து செல்லும் 1/0 கி. மீ. நீளமுள்ள தி. புதுப்பாளையம் சாலையை மேம்பாடு செய்து, இரங்கையா கால்வாயில் ஓர் பாலம் கட்டுதல். | 2·50 |

| | | |
|---|---|---|
| மதுரை .. .. | திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் திருமங்கலம்—வீருசங்குளம் சாலையில் விடாதிகுளம் அருகில் கி.மீ. 1/4-ல் ஓர் பாலம் கட்டுதல். | 3·00 |
| சேலம் .. .. | பழையபாளையம்—சின்னப்பன் பட்டி சாலையில் கி.மீ. 1/4-ல் ஓர் தரை மட்டத் தாம்போகி கட்டுதல். | 2·00 |
| மதுரை .. .. | கட்டநாயக்கன்பட்டி—பூமலைக்குடிச் சாலையில் கி.மீ. 0/4-ல் கண்ணுள்ள தாம்போகி கட்டுதல், கி. மீ. 0/10-ல் இரு சிறு பாலங்கள் கட்டுதல், சாலையை கி.மீ. 0/0—1/2 வரை மேம்பாடு செய்தல் ஆகிய பணிகளைச் செய்தல். | 1·70 |
| தஞ்சாவூர் .. | பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில், நட்டு சாலையிலிருந்து வேடன்கோவில் வழியாக திருவரங்குறிச்சி செல்லும் சாலையை மேம்பாடு செய்தல். | 14·00 |
| டிை | அம்பலப்பட்டியிலிருந்து, செம்பலூர் எட்டிப்புலிக் காடு வழியாக சேந்தன்காடு செல்லும் சாலையை (கி.மீ. 0/0—9/4 மேம்படுத்தல் மற்றும் கிரகரம் பயம் வரை கி.மீ. 0/0—2/4 வரை இணைப்புச் சாலை அமைத்தல்). | 24·50 |
| 0 வட ஆற்காடு .. | மாமண்டூர் சாலையில் கி.மீ. 0/0—0/6-ல் ஓர் உயர் மட்ட தாம்போகி கட்டல், மற்றும், சின்ன சித் தாஞ்சி சாலையில் கி.மீ. 1/2-ல் ஓர் தாம்போகியும், வேகமங்கலம்—மாமண்டூர் சாலைகளை இணைக்கும் சாலையை கி.மீ. 0/0—1/7வரை மேம்பாடு செய்தல் மற்றும் மாமண்டூரிலிருந்து கரிமேடு வரை கி.மீ. 0/0—1/0 புதிய சாலை அமைத்தல், மற்றும் வேகமங்கலம்—மாமண்டூர், கரிவேடு—சின்ன சித்தாஞ்சி சாலைகளை மேம்பாடு செய்தல் ஆகிய பணிகளை செய்தல். | 10 00 |

## இணைப்பு 10.

(பத்தி 2.2.4.1.-ஐப் பார்க்கவும்.)

பாகம் II—1981–82க்கான செயற் குறிப்புகள்.

பிறசாலைகள் திட்டம்.



| தொடர் எண்ணும், மாவட்டமும். | பணியின் பெயர். | மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 தென் ஆற்காடு .. | சின்னசேலம்—கொக்கையூர் சாலையில் கி.மீ. 2/6-ல் வசிஷ்டா ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல் (சின்ன சேலம் ஒன்றியம்.) | 12·00 |
| 2 மதுரை மாவட்டம். | கூடலூர்—புளியங்குடி சாலையில் கி.மீ. 3/6-ல் காஞ்சி மரத்துறையில் பெரியாற்றின் குறுக்கே ஒரு உயர் மட்டப் பாலம் கட்டுதல் (கம்பம் ஊராட்சி ஒன்றியம்). | 20·00 |
| 3 டிை | கண்டமனூர்—அம்பாசமுத்திரம் இடையில் வைகை ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல். | 15·00 |
| 4 தர்மபுரி மாவட்டம். | உப்பார்பட்டி கோவிந்தபுரம் (வழி) பய்யனூர் கொம்மா பட்டி சாலையில் கி.மீ. 1/2-ல் பம்பாறு குறுக்கே ஒரு தாம்போகி கட்டுதல். | 12·00 |
| 5 கோயம்புத்தூர் மாவட்டம் | வேட்டைகாரன்புதூர்—உப்பார் சாலையில் உப்பார் ஆற்றில் கி.மீ. 4/0-ல் ஒரு உயர் மட்டம் பாலம் கட்டுதல். | 12·00 |

| | | | |
|---|---|---|---|
| சேலம் .. | .. | பீடநாய்கன்பாளையம்—களிச்சட்டியூர் சாலையில் கி.மீ. 1/0-ல் வசிஷ்டா ஆற்றின் குறுக்கே தரைமட்டப் பாலம் கட்டுதல் (ஊராட்சிச் சாலை.) | 10·00 |
| 7 தஞ்சாவூர் | .. | நன்னிலம்—மனத்தகுடி சாலையில் கி.மீ. 6/2-ல் திருமலை ராயன் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல். | 10·00 |
| 8 திருநெல்வேலி | .. | வீரவநல்லூர்—அழகப்பப்புரம் சாலையில் கி.மீ. 7/2-ல் ஒரு தாம்போகி கட்டுதல். | 5·00 |
| 9 புதுக்கோட்டை | .. | மெய்வயல் வெட்டனூர் சாலையை மேம்பாடு செய்தல் .. | 4·00 |
| 0 சேலம் .. | .. | இருகளூர்—ஊத்துப்பாளையம் சாலையில் கி.மீ. 0/0 4/6வரை மேம்பாடு செய்தல். | 5·50 |
| 1 சேலம் மாவட்டம். | | கொளத்தூர் அந்தியூர் சாலையில் சவுரிபாளையம் அருகே காக்காயன் கட்டு ஓடையில் ஒரு பாலம் கட்டுதல். | 10.00 |
| 2 திருநெல்வேலி | .. | தாமிரவரணி ஆற்றின் குறுக்கே கோபாலசமுத்திரம் அருகில் ஒரு பாலம் கட்டுதல். | 25·00 |
| 3 ராமநாதபுரம் | .. | பெரம்பலூர்—மானாமதுரை சாலையில் கி.மீ. 231/4 லிருந்து வேலூர் வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல் மற்றும் ஒரு பாலம் கட்டுதல். | 8.45 |
| 4 சேலம் .. | .. | பாலமலைக் குன்றுகளில் செட்டியூரிலிருந்து சித்தேசுவரன் கோயில்வரை சாலையை அமைத்தலும் மேம்படுத்தலும். | 120·00 |
| 5 கோயம்புத்தூர் | .. | பெருமாள்புதூர் கம்ப கவுண்டன்துறை சாலையை மேம்படுத்தலும் கி.மீ. 0/9, 4/6 மற்றும் 5/2-ல் பாலங்கள் கட்டுதலும் வடிகால் வசதி அமைத்தலும். | 36 00 |
| | | மொத்தம் .. | 3,04·95 |



## இணைப்பு 11.

(பத்தி 2.4.3.-ஐப் பார்க்கவும்)

1981—82ஆம் ஆண்டுக்கான பாகம் II திட்டம்.

எண். 4. கருவிகளும், தளவாடங்களும்.

| தொடர் எண். | விவரம். | அளவு. | விலை. இலட்சத்தில். | ரூபாய் தொகை. இலட்சத்தில். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | கனரகசாலை உருளைகள் 8—10 .. .. | 16 | .. | 32.00 |
| 2 | லாரிகள் .. .. .. .. | 6 | .. | 12.00 |
| 3 | தார் உருக்கி .. .. .. .. | 40 | .. | 6.00 |
| | மொத்தம் .. | | | 50.00 |

## இணைப்பு 12.

(பத்தி 2.5.4.-ஐப் பார்க்கவும்.)

நடந்தேறிவரும் பணிகள்.

| பணியின் பெயர். (1) | செலவு (ரூபாய் இலட்சத்தில்) நிர்வாக ஒப்புதல்/ தொழில் நுட்ப ஒப்புதல். (2) | குறிப்புரைகள். (3) |
|---|---|---|
| 1 மாயூரம்—முத்துப்பேட்டை சாலையில் 41/8 கி.மீ-ல் மேம்பாலம் கட்டுதல். | 40.00 / 40.00 | அணுகுச்சாலைகள் போடப்பட்டு வருகின்றன. தார்பரத்தில் பணி நீங்கலாக மற்ற பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 2 நாகப்பட்டினம்—கோயம்புத்தூர்—கூடலூர் சாலையில் 22/6 கி.மீ. தூரத்தில் மேம்பாலம் கட்டுதல். | 50.00 / 55.00 | அணுகுச் சாலைகள போடப்பட்டு வருகின்றன. இரயில்வே பகுதியில் வேலை நடைபெற்று வருகிறது, |
| 3 சென்னை—திருத்தணி சாலையில் 85/6 கி.மீ.-ல் சுரங்கப்பாதை ஒன்று கட்டுதல். | 18.00 / 19.00 | அணுகுச் சாலைகள் போடப்பட்டு வருகின்றன. இரயில்வே பகுதியில் பணி இன்னமும் தொடங்கப்படவில்லை. இப் பணிக்கு ரூ. 31.60 இலட்சத்திற்கான திருத்தப்பட்ட நிர்வாக ஒப்புதல், பரிசீலனையில் உள்ளது. |



### இணைப்பு—12-ன் தொடர்ச்சி.

1. ஒப்புதலளிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பணிகள்.—

| பணியின் பெயர். (1) | செலவு (ரூபாய் இலட்சத்தில்) நிர்வாக ஒப்புதல்/ தொழில் நுட்ப ஒப்புதல். (2) | குறிப்புரைகள். (3) |
|---|---|---|
| 1 மதுரை-அருப்புக்கோட்டை சாலையில் 1/6 கி. மீட்டரில் மேம்பாலம் கட்டுதல். | 35·00 / 38·50 | இரயில்வே துறையுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகின்றது. இப்பணி விரைவில் தொடங்கப்படும். இத் திட்டத்திற்கு ரூ. 83·29 இலட்சத்திற்கான திருத்திய மதிப்பீடு பரிசீலனையில் உள்ளது. |
| 2 சென்னை-கும்பகோணம்-தஞ்சாவூர் சாலையில் 176/10 கிலோ மீட்டரில் பண்ருட்டியில் மேம்பாலம் கட்டுதல். | 25·00 | இரயில்வே துறையின் கணிப்பின்படி இவ்விடத்தில் 1 லட்சம் வாகனப் போக்குவரத்து இல்லாமையால் இப் பணியை இன்னமும் இரயில்வே. தனது திட்டத்தில் சேர்க்கவில்லை இத்திட்டம் 25,000 போக்குவரத்தினை அடிப்படையாக வைத்திருந்த சமயத்தில் ஒப்புகொள்ளப்பட்டது. |

| நாடார் எண்ணும் மாவட்டமும். (1) | பணியின் பெயர். (2) | மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) (3) |
|---|---|---|
| கடலூர்-சித்தூர் சாலையில் திருவடிக்கு அருகே 21·6 கி. மீட்டரில் மேம் பாலம் ஒன்றைக் கட்டுதல். | 25·00 | ஷ |
| மதுரை மாநகராட்சி எல்லைக்குள் 7-ம் எண் தேசிய நெடுஞ்சாலையில் தத்தனேரி அருகே 438/6 கிலோ மீட்டரில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 60·00 | இரயில்வே துறை இப்பணியை இன்ன மும் தனது திட்டத்தில் சேர்க்க வில்லை. இதனைமேற் கொள்ள இரயில்வேயுடன் முயைிடப்பட் டுள்ளது. |
| திண்டுக்கல் வட்டாணம் சாலையில் நாகல் நகர் நகராட்சி எல்லைக்குள் 2/4 கிலோ மீட்டரில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 30·00 | இத்திட்டம், போக்குவரத்து எண் ணிக்கை 25,000 என்பதனை அடிப் படையாக கொண்டிருந்த சமயம் ஒப்புதலளிக்கப்பட்டது. ஆனால் தற்போது போக்குவரத்து எண் ணிக்கை 1 லட்சத்திற்கு குறை வாக உள்ளதால் இரயில்வே இத னை தனது திட்டத்தில் சேர்க்க வில்லை. |



| | | |
|---|---|---|
| 6 உளுந்தூர்பேட்டை-சேலம் சாலையில் தேவியாக்குறிச்சிக்கு அருகே மேல் பாலம் ஒன்றைக் கட்டுதல். | 30·00 | ஷ |
| 7 சென்னை-கும்பகோணம்-தஞ்சாவூர் சாலையில் பாபநாசத்திற்கு மேற்கே சுந்தரபெருமாள் கோவிலுக்கு அருகில் 279/8 கிலோ மீட்டரில் மேம் பாலம் ஒன்றைக் கட்டுதல். | 20·00 | அணுகுச் சாலைகளுக்கான ரூ. 22·00 லட்சத்திற்கான மதிப்பீடு இரயில் வேயின் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டுள்ளது. இது இரயில்வேயின் தொடர்பில் உள்ளது. சமமான ஒப் பந்தத்தின் பின்னர் இப்பணி இரயில்வேயின் திட்டத்தில் சேர்க்கப் படும். |
| 8 சென்னை-கும்பகோணம் --தஞ்சாவூர் சாலையில் பாபாநாசத்திற்கு மேற்கே சுந்தரபெருமாள் கோயிலுக்கு அருகில் 282/4 கிலோ மீட்டரில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 20·00 | இப்பணி இன்னமும் இரயில்வேயின் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட வில்லை. |
| 9 தூத்துக்குடி—திருநெல்வேலி—செங் கோட்டை-கொல்லம் சாலையில் 97/8 கிலோ மீட்டரில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 15·00 | இவ்விடத்தில் போக்குவரத்து எண் ணிக்கை 1லட்சத்திற்கு குறை வாக உள்ளதால் இரயில்வே இப் பணியை தனது திட்டத்தில் சேர்க்க வில்லை. |
| 0 இராணிப்பேட்டை-கிருஷ்ணகிரி சாலை யில் வேலூர் எல்லையில் 116/8-10 கிலோ மீட்டரில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 50·00 | இப்பணியை இரயில்வேயின் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள கேட்டுக் கொள் ளப்பட்டுள்ளது. |
| 1 திருச்சி-நாமக்கல் சாலையில் பிச்சாண் டார் கோயிலுக்கு அருகில் மேம் பாலம் ஒன்றைக் கட்டுதல். | 15· | இப்பணி ஆய்வில் உள்ளது. |

| பணியின் பெயர். | செலவு (ரூபாய் இலட்சத்தில்) நிர்வாக ஒப்புதல் தொழில் நுட்ப ஒப்புதல். | குறிப்புரைகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 12 திருச்சி—புதுக்கோட்டை சாலையில், திருச்சி சந்திப்பின் அருகிலுள்ள பாலத்தை அகலப்படுத்துதல். | 5.25 | இப்பணி குறித்து இரயில்வேயுடன் கடிதத் தொடர்பு நடைபெற்று வருகிறது. இப்பணிக்கு பொதுவான அமைப்பு இரயில்வேயிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகிறது. |
| 13 காட்பாடி இரயில் நிலையம் அருகில், காட்பாடியில் பாலத்தை புதுப்பித்தல். | 1,26.00 | இத்திட்டம் 1980–81 இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான பொதுவான அமைப்பு இரயில்வேயிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. |



## இணைப்பு—13

(பத்தி 2.6.1.ஐக் காண்க.)

### பழங்குடியினர் நலத் துணைத் திட்டம்.
### முடிவுற்ற வேலைகள் மற்றும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய வேலைகள்.

| தொடர் எண்ணும், பழங்குடியினர் பகுதியும். | பணியின் பெயர். | குறிப்புரை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| I. பச்சைமலைக் குன்றுகள் (சேலம் மாவட்டம்). | (1) ஓடைக்காடு புதூரிலிருந்து செங்காட்டுப்பட்டி மேல்பகுதி வரை சாலையமைத்தல். | வேலை முடிவு பெற்றவை. |
| II. ஜவ்வாது மலைகள் (வட ஆற்காடு மாவட்டம்). | (2) நாட்ராம் பள்ளியிலிருந்து புதூர்நாடு வரையுள்ள சாலையை மேம்படுத்துதல். | டிை |
| III. அறனூத்துமலை (சேலம் மாவட்டம்). | (3) புழுதிக்குட்டையிலிருந்து அறனூத்துமலைச்சாலை வரை சாலை அமைத்தலும் மேம்படுத்துதலும். | பணிகள் துவங்கப்பட வேண்டியவைகள். |
| IV. சித்தேரி மலைகள் (தருமபுரி மாவட்டம்.) | (4) ஹரூரிலிருந்து வலையூர் செங்கும்பட்டி வழியாக சித்தரிகலசபாடி வரையிலுள்ள சாலையை மேம்படுத்துதல். | டிை |

இணைப்பு—13-ன் தொடர்ச்சி.

(பத்தி 2.6.1.ஐக் காண்க.)

பழங்குடியினர் நலத் துணைத் திட்டம்.
முடிவுற்ற வேலைகள் மற்றும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய வேலைகள்—தொடர்ச்சி

| தொடர் எண்ணும் பழங்குடியினர் பகுதியும். | பணியின் பெயர். | குறிப்புரை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| V. கொல்லிமலைகள் (சேலம் மாவட்டம்). | (5) தென்னலூர்-வேலப்பூர் சாலையை மேம்படுத்துதல். | பணிகள் துவங்கப்பட வேண்டியவை. |
| | (6) சேலக்காடு முதல் குளிவளைவூர் வரையுள்ள சாலையை மேம்படுத்துதல். | ஷை |
| | (7) குளிவளவூர் முதல் ஓடைக்காடு வரையுள்ள சாலையை மேம்படுத்துதல். | ஷை |
| VI. ஏற்காடு மலைகள் (சேலம் மாவட்டம்.) | (8) கோட்டசேடுகுப்பம் சாலையில் 6.00 கி. மீட்டரிலிருந்து 10.50 கி.மீ. வரையுள்ள சாலையை மேம்படுத்துதல். இவ்விடத்திலும் 0.0–6.0 என்ற இடத்திலும் செய்யப்படும் குறுக்கு வடிகால் (C. D.) பணிகள் உட்பட | எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய பணிகள். |
| | (9) பட்டியாடி முதல் வள்ளூர் வரையிலுள்ள சாலையை மேம்படுத்துதல். | |
| VII. கல்ராயன் மலைகள் (தென் ஆற்காடு மாவட்டம்.) | (10) தென் ஆற்காடு மாவட்டம் வரை சாலை அமைத்தல். | |
| VIII. பச்சை மலைகள் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்). | (11) சோபனபுரம் மேல் பகுதியிலிருந்து செங்காட்டுப்பட்டி பகுதி வரையுள்ள சாலையை மேம்படுத்துதல் (தரைப்பாலங்கள் உட்பட). | ஷை |
| | (12) செங்காட்டுப்பட்டி மலைக் காட்டுச்சாலையை மேம்படுத்துதல். | ஷை |

## இணைப்பு—14

(பத்தி 2—12.1-ஐப் பார்க்கவும்.)

### மலைப்பகுதி மேம்பாடு திட்டம் வனப்பகுதி சாலைகள்

| தொடர் எண்ணும், பணியின் விபரமும். | நிர்வாக ஒப்புதல். | திருத்தப் பட்ட நி.ஒ. | நிலைமை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 ஆனைக்கட்டி-சிறுர் சாலையை கி. மீ. 0/0-7/2 வரை மேம்பாடு செய்தல். | 15.00 | 24.00 | நடைபெற்று வருகிறது. |
| 2 முடிமண்ட் சந்திப்பிலிருந்து முக்குறுத்தி, ஏரியின் மேற்கு கரை வழியாக செல்லும் சாலையை மேம்பாடு செய்தல். | 15.00 | 24.50 | ஷை |
| 3 நீலகிரி உச்சிக்குச் செல்லும் மலைப்பாதையை மேம்படுத்தல். | 7.00 | 10.90 | ஷை |
| | 37.00 | 59.40 | |
| 4 கல்லம்பாளையம் தெங்குமராட்டா சாலையை மேம்பாடு செய்தல். | 40.00 | | ஆய்வில் உள்ளது. |
| 5 தாய்ஸ்சோலா-கொரகுண்டா சாலையை மேம்பாடு செய்தல். | 50.00 | | ஷை |
| 6 சிகூர் (வாழைத் தோட்டம்) ஆனைக்கட்டி சாலையை மேம்பாடு செய்தல். | 100.00 | | ஷை |
| | 1,90.00 | | |

## இணைப்பு—15.

(பத்தி 2.18.1-ஐப் பார்க்கவும்.)

### உலகத் தமிழ் மாநாட்டுப் பணிகள்.

| தொடர் எண்ணும், பணியின் விபரமும். | வேலையின் எண்ணிக்கை. | தொகை. (இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 அரசு சாலைகளை மேம்பாடு செய்தல் .. .. .. | 11 (27.20 கி.மீ. நீளம்.) | 25.90 |
| 2 போக்குவரத்து மேம்பாடுகள் .. .. .. .. .. | 11 | 8.00 |
| 3 மர வளர்ப்பு .. .. .. .. .. | 2 பகுதிகள் (13.60 கி.மீ.) | 2.00 |
| 4 மதுரை மாநகராட்சி சாலைப் பணிகள்— | | |
| (அ) முதல் கட்டம் .. .. .. .. .. | 47 (23.50 கி.மீ. நீளம்.) | 90.00 |
| (ஆ) இரண்டாம் கட்டம் நடைபாதை .. .. .. | 30 43 (15 கி.மீ.) | 75.00 |
| (இ) மூன்றாம் கட்டம் .. .. .. .. | 1 (1.5 கி.மீ.) | 6.00 |
| 5 ஊராட்சி சாலைகள் .. .. .. .. .. | 2 | 3.00 |
| | | 2,09.90 |

## இணைப்பு—16

(பத்தி 2.19.2.-ஐப் பார்க்கவும்).

### பாகம் II, 1981-82 க்கான செயற்குறிப்பு

### ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி.

(1) மண்டல சோதனைச் சாலைகள்—மண்டல சோதனைச் சாலைகளுக்குக் கூடுதல் தேவைக் கருவிகள்—

| | |
|---|---|
| (அ) தஞ்சாவூரில் மண்டலச் சோதனைச் சாலை .. | 1.25 |
| (ஆ) மதுரையில் மண்டலச் சோதனைச் சாலை .. | 1.25 |
| (இ) சேலத்தில் மண்டலச் சோதனைச் சாலை .. | 1.25 |
| (ஈ) திருநெல்வேலியில் மண்டலச் சோதனைச் சாலை | 1.25 |
| மொத்தம் .. .. .. | 5.00 (இலட்சங்கள்.) |



## இணைப்பு—17.

(பத்தி 2.24.6.-ஐப் பார்க்கவும்.)

### தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகம் மேற்கொண்டுள்ள பணிகளின் தொகுப்பு

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. கட்டிடங்கள்— | |
| (அ) மறைமலை நகரில் உலக வங்கி உதவியுடன் சுற்றுப்புற நகரத்தியப் பணி .. | 21.00 |
| (ஆ) கட்டிட திட்டங்கள் .. .. .. .. .. .. .. | 54.00 |
| (இ) சுற்றுலாப் பகுதி .. .. .. .. .. .. .. | 22.00 |
| (ஈ) விவசாயப் பகுதி .. .. .. .. .. .. | 4.00 |
| (உ) தொழில் மற்றும் தொழிலாளர் நலம் .. .. .. .. .. | 7.00 |
| (ஊ) கல்விக் கூடங்கள் .. .. .. .. .. .. .. | 5.00 |
| (எ) மதுரையில் வணிக வரி அலுவலகக் கட்டிடம் .. .. .. .. | 40.00 |
| மொத்தம் .. .. .. | 1,53.00 |

பாலங்கள்—

| | |
|---|---|
| (அ) தேசிய நெடுஞ்சாலையில் .. .. .. .. .. .. | 81.00 |
| (ஆ) மாநில சாலைகளில் .. .. .. .. .. .. .. | 24.00 |

சாலைப் பணிகள்—

| | |
|---|---|
| (அ) மலைச் சாலைகள் .. .. .. .. .. .. .. | 48.00 |
| (ஆ) தேதிய நெடுஞ்சாலைகள் .. .. .. .. .. .. .. .. | 53.00 |
| (இ) இதர சாலைகள் .. .. .. .. .. .. .. | 33.00 |
| நீர்ப் பாசனம்:— .. .. .. .. .. .. .. .. | |
| (அ) உலக வங்கி உதவியுடன் .. .. .. .. .. .. .. | 16.00 |
| மதுரை குடிசைப் பகுதிகளின் சுகாதார வசதிகள் .. .. .. .. | 32.00 |
| மொத்தம் .. .. .. | 4,40.00 |



## இணைப்பு—18

(பத்தி 3.2.34-ஐக் காண்க.)

நான்காவது திட்டம், மத்திய சாலை நிதிப்பணிகள் 1969-1974

I. முடிக்கப்பட்ட பணிகள்—

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | கொடைக்கானலை பழனியுடன் இணைக்க லாஸ் மலைப்பாதையிலிருந்து ஒரு மலைப்பாதை அமைத்தல். | 1,25.00 |
| 2 | பண்ணைப்பட்டி—பாச்சலூர் சாலையில் உள்ள ஆதலூரில் இருந்து தண்டிக்குடி மலைச்சாலையில் கிலோ மீட்டர் 12/0-இல் இணையும் சாலை அமைத்தல். | 33.60 |
| 3 | பாச்சலூரிலிருந்து வடகாட்டிற்கும் ஒட்டன்சத்திரத்திற்கும் சாலை அமைத்தல். | 44.00 |
| 4 | போளூர் செங்கம் சாலையில் மைல் 29/6-இல் செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல். | 10.70 |
| 5 | எமனேஸ்வரம்-நைனார்கோவில் சாலையில் மைல் 0/8—7/5 கற்பரப்பி மேம்பாடு செய்து தார்ச்சாலையமைத்து சிறு பாலங்கள் கட்டுதல். | 5.20 |
| 6 | கொள்ளேகால் செல்லும் பாளையம் சாலையில் கிலோ மீட்டர் 34/0 —39/6 கற்பரப்பி மேம்பாடு செய்து தார்ச்சாலை அமைத்தல். | 13.20 |
| 7 | கோவளத்திற்கு அருகில் உள்ள கடற்கழியில் ஒரு பாலம் அமைத்தல் ... — | 25.00 |

8 வைகையாற்றின் குறுக்கே இடைக்காட்டூரில் ஒரு மூழ்கு பாலம் கட்டுதல் .. 13.78

9 அச்சிரப்பாக்கம்-வந்தவாசிச் சாலையில் கிலோ மீட்டர் 46/4-இல் சுக நதியின் குறுக்கே பாலம் கட்டுதல். .. 6.50

10 கைகலத்தூர்-பெரிய வடகரைச் சாலையில் மைல் 7/3-இல் கல்லாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல். 6.12

11 அரவக்குறிச்சி-சின்ன தாராபுரம் சாலையில் கிலோ மீட்டர் 3/2-இல் இராசாபுரம் அருகில் அமராவதி ஆற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் கட்டுதல். 13.20

12 சென்னை-பழவேற்காடு சாலையில் மைல் 23/5-6 இல் பொன்னேரி அருகே ஆரணியாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல். 20.03

13 கரவலூர் கோவில்பாளையம் சாலையில் சிறு பாலங்கள் கட்டுதல் .. .. 3.52

II. நடைபெற்றுவரும் பணிகள்—

1 வளத்திகமபந்தாவிற்கும் ஆந்திரா மாநில எல்லைக்கும் செல்லும் சாலைகள் மேற்கொள்ளப்படும். மேம்பாட்டுப் பணிகள் உட்பட வாணியம்பாடிக்கும் ஜாப்பராபாத்திற்கும் இடையே பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் ஒன்றைக் கட்டுதல். 65.23

2 வலுவிழந்த பழைய பாலங்களைச் சோதனையிடுவதற்கு ஒரு சோதனை வண்டி தயாரித்தல். 7.70



## இணைப்பு 19.

(பத்தி 3. 2. 4.4 ஐக் காண்க.)

ஐந்தாவது திட்டம் மத்திய சாலை நிதிப் பணிகள் 1974—1978.

I. முடிக்கப்பட்ட பணிகள்— (ரூபாய் இலட்சத்தில்.)

| | | |
|---|---|---|
| 1 இராமேஸ்வரம் தீவில் அருள்மிகு கோதண்டராமசாமி கோயிலை மதுரை-தனுஷ்கோடி சாலையுடன் இணைக்கும் சாலை அமைத்தல். | நி.ஒ. | 8.00 |
| | தொ.ஒ. | 8.47 |
| II. நடைபெற்றுவரும் பணிகள்— | | |
| | நி.ஒ. | 14.50 |
| 1 பென்னகரம் பெரும்பாலைச்சாலையில் கிலோ மீட்டர் 34/2—இல் தொப்பையாற்றின் குறுக்கே ஒரு உயர்மட்டப் பாலம் கட்டுதல். | தொ.ஒ. | 7.727 |
| 2 சித்தாலந்தூர்-ஜேடார்பாளையம் சாலையில் மூழ்கு பாலம் ஒன்றைக் கட்டுதல். | நி.ஒ. | 16.80 |
| | தொ.ஒ. | 2.876 |
| 3 திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை-நாகலாபுரம் சாலையில் சீவலப்பேரிக்கு அருகே கிலோ மீட்டர் 11/8 இல் தாமிர வருணி ஆற்றுக்குக் குறுக்கே ஒரு தரைப் பாலம் கட்டுதல். | நி.ஒ. | 20.50 |
| | தொ.ஒ. | 22.55 |
| 4 வட ஆற்காடு மாவட்டத்தில் பாணாவரம்-சேந்தமங்கலம் சாலையில் நெமிலி கிராமத்தின் அருகே கிலோ மீட்டர் 16/10-இல் இருந்து 17/2 வரை ஒரு தரைப்பாலம் கட்டுதல். | நி.ஒ. | 8.00 |
| | தொ.ஒ. | 8.80 |

| | | | |
|---|---|---|---|
| 5 | தெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் சோதனை அடிப்படையில் சாலை அமைத்தல். | நி.ஒ. | 22.00 |
| | | தொ.ஒ. | 22.00 |
| 6 | ஆரிய கவுண்டன் ஜாகிரிலுள்ள கீழக்காட்டை குருபகவுண்டன் ஜாகிர் வழியாக ரங்கப்பனூருடன் இணைப்பதற்கு ஜீப் செல்வதற்குரிய பாதை அமைத்தல். (கல்ராயன்மலை) .. | நி.ஒ. | 53.00 |
| | | தொ.ஒ. | 53.00 |
| 7 | ஆர்.கே. பேட்டை-பள்ளிப்பேட்டை சாலையில் கிலோ மீட்டர் 17/7 லிருந்து 18/4 வரை குசஸ்தலை ஆற்றுக்குக் குறுக்கே மூழ்கு பாலம் கட்டுதல். | நி.ஒ. | 27.00 |
| | | தொ.ஒ. | 29.27 |
| 8 | இராமநாதபுரம் புதுக்கோட்டை மாவட்டத்தில் முத்துப் பேட்டை-மிமிசல் சாலையில் 49/7 கிலோ மீட்டரில் மிமிசலுக்கு அருகே பாம் பாறு ஆற்றுக்குக் குறுக்கேயுள்ள பாலத்தினை உறையூர் திருப்புவன வாசல் ஆகியவற்றுடன் இணைப்பதற்கு இணைப்புச் சாலை அமைத்தல். | நி.ஒ. | 4.90 |
| | | தொ.ஒ. | 5.39 |
| 9 | வட ஆற்காடு மாவட்டத்தில் போளூரிலிருந்து ஜவ்வாது மலை உச்சிக்கும் ஆலங்காயத்திற்கும் செல்லும் மலைச் சாலையை மேம்படுத்தல். | நி.ஒ. | 75.00 |
| | | தொ.ஒ. | 82.50 |
| 10 | குத்தியாலுத்தூர் காட்டுப் பகுதியில் ஒரு மலைப்பாதை அமைத்து மேம்படுத்துதல்—மூன்று பகுதிகள். | நி.ஒ. | 51.50 |
| 11 | தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் விடுபட்ட இணைப்புச் சாலைகள் உட்பட குன்னான்டார் கோயில், குப்பம்பட்டி, அச்சம் பட்டி, செங்கிப்பட்டி வரையிலும் குறுக்கு வடிகால் கட்டுப் பணியும், கப்பிப்போட்டு சாலையை மேம்படுத்தும் பணியும். | நி.ஒ. | 25.385 |
| | | தொ.ஒ. | 25.385 |



| | | | |
|---|---|---|---|
| 12 | தமிழ்நாடு, கர்நாடக எல்லையில் கிர்க்கண்டிக்கு அருகே கொள்ளே காலம் செல்லம்பாளையம் சாலையை இணைப்பதற்கு பாலாறு ஆற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல் .. .. .. .. | நி.ஒ. | 10.92 |
| | | தொ.ஒ. | 13.78 |

நி.ஒ. நிர்வாக ஒப்புதல்.
தொ.ஒ. — தொழில் நுட்ப ஒப்புதல்.

## இணைப்பு 20.

(பத்தி 3.3.4.-ஐக் காண்க.)

### 1980—81-இல் அனுமதி அளிக்கப்பட்ட ஆராய்ச்சிப் பணிகள்.

| தொடர் எண். | பணியின் பெயர். | மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | சேலத்தில் ஒரு மண்டல சோதனைச்சாலை அமைத்தல் .. .. | 2.00 |
| 2 | மண் துருவி எடுக்கத் தேவையான களப்பணிக் கருவிகள் வாங்க .. | 2.00 |
| 3 | ஒரு சிறு கம்ப்யூட்டர், ஒலி, ஒளி, உபகரணம், நகல் எடுக்கும் கருவியை தற்போதைய நிலைமைக்கு தக்கபடி அமைத்தல் போன்ற கருவிகளை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு வாங்குதல். | 2.00 |
| 4 | திருநெல்வேலியில் ஒரு மண்டலச் சோதனைச் சாலை அமைத்தல் .. | 2.50 |
| 5 | கட்டுமானங்களை மாதிரிகளை பகுத்தாராய அதற்கான கருவிகள் வாங்க. | 1.5 |
| 6 | முன்பே உருவாக்கப்பட்ட சிறு பால கட்டுமான ஆராய்ச்சிப் பணியில் பயன்படுத்த ஒரு பளு தூக்கும் கருவி வாங்க. | 3.50 |
| | மொத்தம் .. | 13·50 |



## இணைப்பு 21.

(பத்தி 4.5-ஐக் காண்க.)

### கட்டுமானப் பணிகளின் சாதனை நிலை.
### 1977 வெள்ள நிவாரணம்.
### அரசு சாலைகள்.

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | வேலைகளின் எண்ணிக்கை. மேற்கொள்ளப் பட்டவை. | முடிக்கப் பட்டவை. | நடை பெற்றுக் கொண்டி ருப்பவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | செங்கல்பட்டு .. .. .. | 697 | 695 | 2 |
| 2 | தென்னாற்காடு .. .. | 694 | 694 | .. |
| 3 | வடாற்காடு .. .. .. | 456 | 456 | .. |
| 4 | திருச்சிராப்பள்ளி .. .. .. | 324 | 324 | .. |
| 5 | புதுக்கோட்டை .. .. | 583 | 583 | .. |
| 6 | தஞ்சாவூர் .. .. .. | 395 | 392 | 3 |
| 7 | மதுரை .. .. .. .. | 330 | 330 | .. |
| 8 | கோயம்புத்தூர் .. .. .. | 364 | 364 | .. |
| 9 | சேலம் .. .. .. .. | 177 | 177 | .. |
| 10 | தர்மபுரி .. .. .. | 21 | 21 | .. |
| 11 | நீலகிரி .. .. .. .. | 93 | 93 | .. |
| 12 | திருநெல்வேலி .. .. .. | 264 | 264 | .. |
| 13 | இராமநாதபுரம் .. .. | 310 | 309 | 1 |
| 14 | கன்னியாகுமரி .. .. .. | 30 | 30 | .. |
| | மொத்தம் | 4,738 | 4,732 | 6 |

இணைப்புகள் 1981 மார்ச் 31]

## இணைப்பு 22.

(பத்தி 4.5-ஐக் காண்க.)

கட்டுமானப் பணிகளின் சாதனை நிலை.

1977 வெள்ள நிவாரணம்.

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள்.

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | வேலைகளின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்டவை | முடிக்கப்பட்டவை. | நடைபெற்றுக்கொண்டிருப்பவை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | செங்கல்பட்டு .. .. .. | 1,374 | 1,373 | 1 |
| 2 | தென்னாற்காடு .. .. | 1,556 | 1,556 | .. |
| 3 | வடாற்காடு .. .. .. | 598 | 598 | .. |
| 4 | திருச்சிராப்பள்ளி .. .. .. | 932 | 932 | .. |
| 5 | புதுக்கோட்டை .. .. | 2,668 | 2,668 | .. |
| 6 | தஞ்சாவூர் .. .. .. | 575 | 575 | .. |
| 7 | மதுரை .. .. .. .. | 627 | 627 | .. |
| 8 | கோயம்புத்தூர் .. .. .. | 146 | 146 | .. |
| 9 | சேலம் .. .. .. .. | 215 | 215 | .. |
| 10 | தர்மபுரி .. .. .. | 49 | 49 | .. |
| 11 | நீலகிரி .. .. .. .. | 48 | 48 | .. |
| 12 | திருநெல்வேலி .. .. .. | 268 | 268 | .. |
| 13 | இராமநாதபுரம் .. .. .. | 1,596 | 1,596 | .. |
| 14 | கன்னியாகுமரி .. .. .. | 31 | 31 | .. |
| | மொத்தம் .. | 10,683 | 10,682 | 1 |

## இணைப்பு 23.

(பத்தி 4.5-ஐக் காண்க.)

கட்டுமானப் பணிகளின் சாதனை நிலை.
1977 வெள்ள நிவாரணம்.
சிறு பாசனக் குளங்கள்.

| தொடர் எண். | மாவட்டத்தின் பெயர். | வேலைகளின் எண்ணிக்கை. மேற்கொள்ள பட்டவை. | முடிக்கப் பட்டவை. | நடைபெற்றுக் கொண்டிருப்பவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | செங்கல்பட்டு .. .. .. .. | 633 | 633 | .. |
| 2 | தென்னாற்காடு .. .. .. .. | 508 | 508 | .. |
| 3 | வடாற்காடு .. .. .. .. | 410 | 410 | .. |
| 4 | திருச்சிராப்பள்ளி .. .. .. | 311 | 311 | .. |
| 5 | புதுக்கோட்டை .. .. .. .. | 3,499 | 3,499 | .. |
| 6 | தஞ்சாவூர் .. .. .. .. | 7 | 7 | .. |
| 7 | மதுரை .. .. .. .. .. | 432 | 432 | .. |
| 8 | கோயம்புத்தூர் .. .. .. .. | 208 | 208 | .. |
| 9 | சேலம் .. .. .. .. .. | 85 | 85 | .. |
| 10 | தர்மபுரி .. .. .. .. | 88 | 88 | .. |
| 11 | நீலகிரி .. .. .. .. .. | .. | .. | .. |
| 12 | திருநெல்வேலி .. .. .. .. | 344 | 344 | .. |
| 13 | இராமநாதபுரம் .. .. .. .. | 2,354 | 2,354 | .. |
| 14 | கன்னியாகுமரி .. .. .. .. | 37 | 37 | .. |
| | மொத்தம் .. | 8,916 | 8,916 | .. |



## இணைப்பு 24.

(பத்தி 4.5-ஐக் காண்க.)

கட்டுமானப் பணிகளின் சாதனை நிலை.
1977 வெள்ள நிவாரணம்.
கட்டிடங்கள்.

| தொடர் எண். | மாவட்டத்தின் பெயர். | வேலைகளின் எண்ணிக்கை. மேற்கொள்ளப் பட்டவை. | முடிக்கப் பட்டவை. | நடைபெற்றுக் கொண்டிருப்பவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | செங்கல்பட்டு .. .. .. .. | 147 | 147 | .. |
| 2 | தென்னாற்காடு .. .. .. .. | 105 | 105 | .. |
| 3 | வடாற்காடு .. .. .. .. | 107 | 107 | .. |
| 4 | திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 28 | 28 | .. |
| 5 | புதுக்கோட்டை .. .. .. .. | 140 | 140 | .. |
| 6 | தஞ்சாவூர் .. .. .. .. | 1,004 | 1,004 | .. |
| 7 | மதுரை .. .. .. .. | 6 | 6 | .. |
| 8 | கோயம்புத்தூர் .. .. .. .. | 59 | 59 | .. |
| 9 | சேலம் .. .. .. .. .. | 13 | 13 | .. |
| 10 | தர்மபுரி .. .. .. .. | 2 | 2 | .. |
| 11 | நீலகிரி .. .. .. .. .. | 3 | 3 | .. |
| 12 | திருநெல்வேலி .. .. .. .. | 87 | 87 | .. |
| 13 | இராமநாதபுரம் .. .. .. | 71 | 71 | .. |
| 14 | கன்னியாகுமரி .. .. .. .. | .. | .. | .. |
| | மொத்தம் .. | 1,772 | 1,772 | .. |

## இணைப்பு 25.

(பத்தி 4.5-ஐக் காண்க.)

கட்டுமானப் பணிகளின் சாதனை நிலை.

1978 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணம்.

அரசு மற்றும் வனச்சாலைகள்.

| தொடர் எண். | மாவட்டத்தின் பெயர். | வேலைகளின் எண்ணிக்கை. மேற்கொள்ளப்பட்டவை. | முடிக்கப் பட்டவை. | நடைபெற்றுக் கொண்டிருப்பவை. | கழிக்கப் பட்ட வேலைகள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | செங்கல்பட்டு | 3 | 3 | .. | .. |
| 2 | தென்னாற்காடு | 33 | 33 | .. | .. |
| 3 | வடாற்காடு | .. | .. | .. | .. |
| 4 | திருச்சிராப்பள்ளி | 243 | 243 | .. | .. |
| 5 | புதுக்கோட்டை | 10 | 10 | .. | .. |
| 6 | தஞ்சாவூர் | 640 | 604 | .. | .. |
| 7 | மதுரை | 159 | 159 | 9 | 27 |
| 8 | கோயம்புத்தூர் | 195 | 194 | .. | .. |
| | வனச் சாலைகள் | 117 | 117 | 1 | .. |
| 9 | சேலம் | 46 | 46 | .. | .. |
| 10 | தர்மபுரி | .. | .. | .. | .. |
| 11 | நீலகிரி | 423 | 405 | .. | .. |
| 12 | திருநெல்வேலி | 177 | 177 | 14 | 4 |
| 13 | இராமநாதபுரம் | 127 | 127 | .. | .. |
| 14 | கன்னியாகுமரி | 225 | 223 | .. | 2 |
| | மொத்தம் .. | 2,398 | 2,341 | 24 | 33 |



## இணைப்பு 26.

(பத்தி 4.5—ஐக் காண்க.)

கட்டுமானப் பணிகளின் சாதனை நிலை.

1978 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணம்.

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய நகராட்சிச் சாலைகள்.

| தொடர் எண். | மாவட்டத்தின் பெயர். | வேலைகளின் எண்ணிக்கை. மேற்கொள்ளப்பட்டவை. | முடிக்கப் பட்டவை. | நடைபெற்றுக் கொண்டிருப்பவை. | கழிக்கப் பட்ட வேலைகள். |
|---|---|---|---|---|---|
| | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | செங்கல்பட்டு | .. | .. | .. | .. |
| 2 | தென்னாற்காடு | 54 | 54 | .. | .. |
| 3 | வடாற்காடு | .. | .. | .. | .. |
| 4 | திருச்சிராப்பள்ளி | 484 | 484 | .. | .. |
| 5 | புதுக்கோட்டை | 105 | 105 | .. | .. |
| 6 | தஞ்சாவூர் | 558 | 536 | 1 | 21 |
| 7 | மதுரை | 67 | 67 | .. | .. |
| 8 | கோயம்புத்தூர் | 174 | 173 | 1 | .. |
| 9 | சேலம் | 54 | 54 | .. | .. |
| 0 | தர்மபுரி | .. | .. | .. | .. |
| 1 | நீலகிரி | 243 | 238 | 5 | .. |
| | ஷை நகராட்சிகள் சாலைகள் | 264 | 257 | 1 | 6 |
| | திருநெல்வேலி | 88 | 88 | .. | .. |
| | இராமநாதபுரம் | 236 | 236 | .. | .. |
| | கன்னியாகுமரி | 202 | 198 | .. | 4 |
| | மொத்தம் .. | 2,529 | 2 ,490 | 8 | 31 |

## இணைப்பு 27.

(பத்தி 4.5-ஐக் காண்க.)

கட்டுமானப் பணிகளின் சாதனை நிலை.

1978 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணம்.

சிறு பாசனக்குளங்கள்.

| தொடர் எண். | மாவட்டத்தின் பெயர். | வேலைகளின் எண்ணிக்கை. மேற்கொள்ளப்பட்டவை. | முடிக்கப் பட்டவை. | நடைபெற்றுக் கொண்டிருப்பவை. | கழிக்கப் பட்ட வேலைகள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | செங்கல்பட்டு .. .. | .. | .. | .. | .. |
| 2 | தென்னாற்காடு .. .. | 2 | 2 | .. | .. |
| 3 | வடாற்காடு .. .. | .. | .. | .. | .. |
| 4 | திருச்சிராப்பள்ளி .. .. | 145 | 145 | .. | .. |
| 5 | புதுக்கோட்டை .. .. | 16 | 16 | .. | .. |
| 6 | தஞ்சாவூர் .. .. | .. | .. | .. | .. |
| 7 | மதுரை .. .. | 31 | 31 | .. | .. |
| 8 | கோயம்புத்தூர் .. .. | 22 | 22 | .. | .. |
| 9 | சேலம் .. .. | 13 | 18 | .. | .. |
| 10 | தர்மபுரி .. .. | 10 | 10 | .. | .. |
| 11 | நீலகிரி .. .. | .. | .. | .. | .. |
| 12 | திருநெல்வேலி .. .. | 40 | 40 | .. | .. |
| 13 | இராமநாதபுரம் .. .. | 9 | 9 | .. | .. |
| 14 | கன்னியாகுமரி .. .. | 103 | 96 | .. | 7 |
| | மொத்தம் .. | 391 | 384 | .. | 7 |



## இணைப்பு 28.

(பத்தி 4.5-ஐக் காண்க.)

கட்டுமானப் பணிகளின் சாதனை நிலை.

1978 வெள்ள நிவாரணம்

கட்டிடங்கள்.

| தொடர் எண். | மாவட்டத்தின் பெயர். | வேலைகளின் எண்ணிக்கை. மேற்கொள்ளப் பட்டவை. | முடிக்கப் பட்டவை. | நடைபெற்று கொண்டிருப்பவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | செங்கல்பட்டு .. .. .. .. | .. | .. | .. |
| 2 | தென்னாற்காடு .. .. .. .. | 4 | 4 | .. |
| 3 | வடாற்காடு .. .. .. .. | .. | .. | .. |
| 4 | திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 96 | 96 | .. |
| 5 | புதுக்கோட்டை .. .. .. .. | .. | .. | .. |
| 6 | தஞ்சாவூர் .. .. .. .. | 167 | 167 | .. |
| 7 | மதுரை .. .. .. .. | 12 | 12 | .. |
| 8 | கோயம்புத்தூர் .. .. .. .. | 76 | 76 | .. |
| 9 | சேலம் .. .. .. .. | 36 | 36 | .. |
| 10 | தர்மபுரி .. .. .. .. | .. | .. | .. |
| 11 | நீலகிரி .. .. .. .. | 40 | 40 | .. |
| 12 | திருநெல்வேலி .. .. .. .. | 4 | 4 | .. |
| 13 | இராமநாதபுரம் .. ... .. .. | 48 | 48 | .. |
| 14 | கன்னியாகுமரி | 2 | 2 | .. |
| | மொத்தம் .. | 485 | 485 | .. |

## இணைப்பு 29.

(பத்தி 4.5-ஐக் காண்க.)
கட்டுமானப் பணிகளின் சாதனை நிலை.
1979 வெள்ள நிவாரணம்.
அரசு சாலைகள்.

| தொடர் எண். | மாவட்டத்தின் பெயர். | வேலைகளின் எண்ணிக்கை. மேற்கொள்ளப் பட்டவை. | முடிக்கப் பட்டவை. | நடைபெற்றுக் கொண்டிருப்பவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | செங்கல்பட்டு .. .. .. .. | 321 | 321 | .. |
| 2 | தென்னார்க்காடு .. .. .. .. | 330 | 273 | 57 |
| 3 | வடார்க்காடு .. .. .. .. | 172 | 148 | 24 |
| 4 | திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 140 | 140 | .. |
| 5 | புதுக்கோட்டை .. .. .. .. | 182 | 170 | 12 |
| 6 | தஞ்சாவூர் .. .. .. .. | 590 | 478 | 112 |
| 7 | மதுரை .. .. .. .. | 266 | 251 | 15 |
| 8 | கோயம்புத்தூர் .. .. .. .. | 68 | 56 | 12 |
| 9 | பெரியார் (ஈரோடு) .. .. .. .. | 54 | 50 | 4 |
| 10 | சேலம் .. .. .. .. | 170 | 170 | .. |
| 11 | தர்மபுரி .. .. .. .. | 41 | 33 | 8 |
| 12 | நீலகிரி .. .. .. .. | 66 | 55 | 11 |
| 13 | திருநெல்வேலி .. .. .. .. | 438 | 412 | 26 |
| 14 | இராமநாதபுரம் .. .. .. .. | 490 | 330 | 160 |
| 15 | கன்னியாகுமரி .. .. .. .. | 57 | 49 | 8 |
| | மொத்தம் .. | 3,385 | 2,936 | 449 |



## இணைப்பு 30.

(பத்தி 4.5-ஐக் காண்க.)
கட்டுமானப் பணிகளின் சாதனை நிலை.
1979 வெள்ள நிவாரணம்.
ஊராட்சி/ஊராட்சி ஒன்றியச் சாலைகள்.

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | வேலைகளின் எண்ணிக்கை. மேற்கொள்ளப் பட்டவை. | முடிக்கப் பட்டவை. | நடைபெற்றுக் கொண்டிருப்பவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | செங்கல்பட்டு .. .. .. .. | 400 | 396 | 4 |
| 2 | தென்னார்க்காடு .. .. .. .. | 820 | 748 | 72 |
| 3 | வடார்க்காடு .. .. .. .. | 112 | 73 | 39 |
| 4 | திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 103 | 103 | .. |
| 5 | புதுக்கோட்டை .. .. .. .. | 97 | 94 | 3 |
| 6 | தஞ்சாவூர் .. .. .. .. | 658 | 640 | 18 |
| 7 | மதுரை .. .. .. .. | 245 | 245 | .. |
| 8 | கோயம்புத்தூர் .. .. .. .. | 63 | 52 | 11 |
| 9 | பெரியார் (ஈரோடு) .. .. .. .. | 27 | 26 | 1 |
| 10 | சேலம் .. .. .. .. | 5 | 3 | 2 |
| 11 | தர்மபுரி .. .. .. .. | 7 | 6 | 1 |
| 12 | நீலகிரி .. .. .. .. | 15 | 10 | 5 |
| 13 | திருநெல்வேலி .. .. .. .. | 864 | 788 | 76 |
| 14 | இராமநாதபுரம் .. .. .. .. | 869 | 425 | 444 |
| 15 | கன்னியாகுமரி .. .. .. .. | 5 | 2 | 2 |
| | மொத்தம் .. | 4,290 | 3,611 | 679 |

## இணைப்பு 31.

(பத்தி 4.5-ஐக் காண்க.)
கட்டுமானப் பணிகளின் சாதனை நிலை.
1979 வெள்ள நிவாரணம்.
சிறுபாசனக் குளங்கள்.

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | வேலையின் எண்ணிக்கை. மேற்கொள்ளப் பட்டவை. | முடிக்கப் பட்டவை. | நடைபெற்றுக் கொண்டிருப்பவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | செங்கல்பட்டு | 69 | 69 | .. |
| 2 | தென்னார்காடு | 68 | 68 | .. |
| 3 | வடார்காடு | 25 | 13 | 12 |
| 4 | திருச்சிராப்பள்ளி | .. | .. | .. |
| 5 | புதுக்கோட்டை | .. | .. | .. |
| 6 | தஞ்சாவூர் | .. | .. | .. |
| 7 | மதுரை | 45 | 40 | 5 |
| 8 | கோயம்புத்தூர் | 11 | 9 | 2 |
| | | 8 | 8 | .. |
| 9 | சேலம் | .. | .. | .. |
| 10 | தர்மபுரி | 3 | 3 | .. |
| 11 | நீலகிரி | .. | .. | .. |
| 12 | திருநெல்வேலி | 197 | 197 | .. |
| 13 | இராமநாதபுரம் | 348 | 348 | .. |
| 14 | கன்னியாகுமரி | 4 | 4 | .. |
| | மொத்தம் .. | 778 | 759 | 19 |



## இணைப்பு 32.

(பத்தி 4.5-ஐக் காண்க.)
கட்டுமானப் பணிகளின் சாதனை நிலை.
1979 வெள்ள நிவாரணம்.

கட்டிடங்கள்.

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | வேலைகளின் எண்ணிக்கை. மேற்கொள்ளப் பட்டவை. | முடிக்கப் பட்டவை. | நடைபெற்றுக் கொண்டிருப் பவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | செங்கல்பட்டு | 30 | 23 | 7 |
| 2 | தென்னார்காடு | 84 | 61 | 23 |
| 3 | வடார்காடு | 28 | 24 | 4 |
| 4 | திருச்சிராப்பள்ளி | 4 | 4 | .. |
| 5 | புதுக்கோட்டை | 8 | 6 | 2 |
| 6 | தஞ்சாவூர் | 117 | 87 | 30 |
| 7 | மதுரை | 25 | 25 | .. |
| 8 | கோயம்புத்தூர் | 19 | 18 | 1 |
| | | 5 | 5 | .. |
| 9 | சேலம் | 26 | 26 | .. |
| 10 | தருமபுரி | 4 | 4 | .. |
| 11 | நீலகிரி | 8 | 7 | 1 |
| 12 | திருநெல்வேலி | 30 | 27 | 3 |
| 13 | இராமநாதபுரம் | 43 | 19 | 24 |
| 14 | கன்னியாகுமரி | .. | .. | .. |
| | மொத்தம் .. | 431 | 336 | 95 |

## இணைப்பு 33.

(பத்தி 4.5-ஐக் காண்க).

ரூபாய் 1 இலட்சம் மதிப்பீட்டுக்கு மேல் நடைபெற்றுக்கொண்டுள்ள மற்றும் முடிவு பெற்ற வேலைகளின் விவரங்கள்.

1977 வெள்ள நிவாரணம்.

| வரிசை எண்ணும், மாவட்டத்தின் பெயரும். | வேலைகளின் எண்ணிக்கை. முடிக்கப் பட்டவை. | நடைபெற்றுக் கொண்டிருப் பவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 செங்கல்பட்டு | 7 | 3 | 10 |
| 2 தென்னார்க்காடு | 3 | .. | 3 |
| 3 வட ஆற்காடு | .. | .. | .. |
| 4 திருச்சி | .. | .. | .. |
| 5 தஞ்சாவூர் | 6 | 3 | 9 |
| 6 மதுரை | 4 | .. | 4 |
| 7 புதுக்கோட்டை | 10 | .. | 10 |
| 8 ராமநாதபுரம் | 5 | 1 | 6 |
| 9 திருநெல்வேலி | 1 | .. | 1 |
| 10 கோயம்புத்தூர் | 3 | .. | 3 |
| 11 பெரியார் | .. | .. | .. |
| 12 தர்மபுரி | 1 | .. | 1 |
| 13 நீலகிரி | .. | .. | .. |
| 14 சேலம் | 5 | .. | 5 |
| 15 கன்னியாகுமரி | .. | .. | .. |
| மொத்தம் | 45 | 7 | 52 |



## இணைப்பு 34.

(பத்தி 4.5-ஐக் காண்க.)

ரூபாய் 1 இலட்சம் மதிப்பீட்டிற்கு மேல் முடிக்கப்பட்ட வேலைகளின் விவரங்கள்.

1977 வெள்ள நிவாரணம்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | மதிப்பீட்டுத் தொகை. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய்.) |
| செங்கல்பட்டு மாவட்டம். | |
| 1 திருமழிசை-சத்தியவேடு சாலையில் கி.மீ. 71/2—8-ல் உள்ள தாம்போகியை புதுப்பித்தல். | 1,50,000 |
| 2 திருத்தணி—பொதட்டூர்பெட் சாலையில் கி.மீ. 2/6-ல் உள்ள தாம்போகியை புதுப்பித்தல். | 1,65,000 |
| 3 கோயம்பேடு-விருகம்பாக்கம் சாலையில் கி.மீ. 2/4-ல் ஓர் சிறிய பாலம் கட்டுதல் .. | 1,35,000 |
| | 1,50,000 |
| 4 கூடுவாஞ்சேரி—நந்தம்பாக்கம் சாலையில் கி. மீ. 1/2-ல் உள்ள பாலத்தை புதுப்பித்தல். | 2,00,000 |
| 5 சத்ராஸ் சூரப்பன் சாலையிலிருந்து சங்கராபுரம் வழியாக லிங்காபுரம் செல்லும் சாலையில் கி.மீ. 1/4-ல் உள்ள குழாய் தாம்போகியை புதுப்பித்தல். | 3,00,000 |
| | 3,60,000 |

## இணைப்பு 34 தொடர்ச்சி.

(பத்தி 4.5-ஐக் காண்க).

ரூபாய் 1 இலட்சம் மதிப்பீட்டிற்கு மேல் முடிக்கப்பட்ட வேலைகளின் விவரங்கள், 1977 வெள்ள நிவாரணம்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். (1) | மதிப்பீட்டுத் தொகை. (2) (ரூபாய்). |
|---|---|
| **செங்கல்பட்டு மாவட்டம்.** | |
| 6 உத்திரமேரூர்—காஞ்சிபுரம் சாலையில் கி.மீ. 22/2-6-ல் பாலாற்றின் குறுக்கே உள்ள தாம்போகியை வெள்ள நிவாரணப் பணியில் பழுதுபார்த்தல். | 1,59,000 |
| 7 உத்திரமேரூர்-கம்மாளம்பூண்டி ஆலப்பாக்கம் சாலையிலிருந்து-ஆலப்பாக்கம் குவளைமேடு வழியாக கடம்பூர் செல்லும் சாலையில் கி.மீ. 3/2-ல் ஓர் மூழ்கு பாலம் கட்டுதல். | 5,00,000 |
| | 5.60,000 |
| **தென் ஆற்காடு மாவட்டம்.** | |
| 8 வெள்ள நிவாரணப் பணியின் கீழ் விருத்தாச்சலம்—ராஜேந்திரப்பட்டினம் சாலையில் கி.மீ. 1/8-10-ல் வெள்ளாற்றின் குறுக்கே உள்ள தாம்போகியைப் பழுதுபார்த்தல். | 3,00,000 |
| | 3,40,000 |
| 9 வெள்ள நிவாரணப் பணியின் கீழ் மேலப்பட்டினப்பாக்கம்—சொர்ணாவூர் சாலையில் கி.மீ. 2/1—4 வரை பழுதுபார்த்தல். | 2,00,000 |
| 10 வெள்ள நிவாரணப் பணியின் கீழ் வடதலைக் குளத்திற்கு மேல் மருதூர் வரை ஆதி திராவிட குடியிருப்பு வழி சாலையை பழுது பார்த்தல். | 1,30,000 |
| **தஞ்சாவூர் மாவட்டம்.** | |
| 11 முத்துப்பேட்டை—மிமிசல் சாலை கி.மீ. 19/6-ல் வெள்ளத்தால் சேதமடைந்த பெரிய பாலத்தை புதுப்பித்தல். | 3,50,000 |
| 12 பாப்பாநாடு மதக்கூர் பெருகவாழ்ந்தான் சாலையில் கி. மீ. 22/8-ல் வெள்ளத்தால் சேதமடைந்த மூழ்கு பாலத்தை புதுப்பித்தல். | 4,88,000 |
| 13 கலகம்—ஆவுடையார் கோவில் சாலையில் கி. மீ. 4/10-ல் வெள்ளத்தால் சேதமடைந்த தாம்போகியை பழுது பார்த்தல். | 2,25,000 |
| 14 கலகம்—ஆவுடையார் கோவில் சாலையில் கி. மீ. 10/2-ல் வெள்ளத்தால் சேதமடைந்த தாம்போகியை பழுது பார்த்தல். | 3,00,000 |
| 15 வெள்ள நிவாரணப் பணியின் கீழ் கலகம்—ஆவுடையார் கோவில் சாலையில் கி. மீ. 10/6 ல் வெள்ளத்தால் சேதமடைந்த தாம்போகியைப் பழுது பார்த்தல். | 2, 0,000 |
| 16 பெருமகளூர் அத்தாணி சாலையில் கி. மீ. 6/8-ல் வெள்ளத்தால் சேதமடைந்த தாம்போகியைப் பழுது பார்த்தல். | 3,00,000 |
| **புதுக்கோட்டை மாவட்டம்.** | |
| 17 திருச்சியிலிருந்து மேலூர் வழியாக மதுரை செல்லும் சாலை கி. மீ. 363/4-ல் உள்ள பாலத்தை புதுப்பித்தல். | 3,65 000 |
| 18 மணப்பாறை குளித்தலை சாலையில் கி. மீ. 1/2-4ல் உள்ள பாலத்தை புதுப்பித்தல். | 3,60,000 |
| 19 ஆலங்குடி அரிமலம் சாலையில் கி. மீ. 11/0-ல் குண்டாற்றின் குறுக்கே உள்ள பாலத்தை புதுப்பித்தல். | 3,25,000 |
| 20 புதுக்கோட்டை—பூதலூர் சாலையில் கி. மீ. 11/2-ல் உள்ள தாம்போகியை புதுப்பித்தல். | 1,75,000 |
| 21 வையம்பட்டி மைலம்பட்டி சாலையில் கிலோ மீட்டர் 5/6-ல் உள்ள கண் தாம்போகியை புதுப்பித்தல். | 2,10,000 |

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். (1) | மதிப்பீட்டுத் தொகை. (2) (ரூபாய்.) |
|---|---|
| 22 அறந்தாங்கி மிமிசல் சாலையில் கிலோ மீட்டர் 32/10 இல் உள்ள தாம்போகியை புதுப்பித்தல். | 4,85,000 |
| 23 காட்டுமாவடி மிமிசல் சாலையில் கிலோ மீட்டர் 46/4 இல் உள்ள பாலத்தை புதுப்பித்தல். | 4,00,000 |
| 24 ராயவரம்—கோட்ட மங்கலம் சாலையில் கிலோ மீட்டர் 3/6 இல் உள்ள கண் தாம்போகியை புதுப்பித்தல். | 1,80,000 |
| 25 ஆலங்குடி அரிமலம் சாலையில் கிலோ மீட்டர் 13,10 இல் வெள்ளாற்றின் குறுக்கே வெள்ளத்தால் சேதமடைந்துள்ள பாலத்தை புதுப்பித்தல் (திருத்திய மதிப்பீடு). | 12,65,000 |
| 26 புதுக்கோட்டை—மணப்பாறை சாலையிலிருந்து கரையூர் செல்லும் சாலை கிலோ மீட்டர் 0/8 இல் வெள்ளாற்றின் குறுக்கே வெள்ளத்தால் சேதமடைந்து உள்ள பாலத்தை புதுப்பித்தல். | 5,67,000 |
| **இராமநாதபுரம் மாவட்டம்.** | |
| 27 வைகை தாம்போகி சாலையில் சங்கிலி 725 இல் கண்வைத்த தாம்போகி அமைத்தல். | 2,96,000 |
| 28 உத்திரகோசமங்கை—சேவல்பட்டி சாலையில் கிலோ மீட்டர் 25/4 இல் சிறிய பாலம் கட்டுதல். | 1,71,000 |



| | |
|---|---|
| 29 டி. பி. சாலையிலிருந்து இராமலிங்காபுரம் செல்லும் சாலையில் கிலோ மீட்டர் 1/6இல் வடிகால் ஓடைக்கு குறுக்கே ஓர் கண் வைத்த தாம்போகி கட்டுதல். | 1,55,000 |
| 30 திருகோஷ்டியூர்—கண்டாரமாணிக்கம் சாலை கிலோ மீட்டர் 5/4-லிருந்து பிரிந்து செல்லும் பொன்னை துரித்தி சாலை கிலோ மீட்டர் 0/2-இல் பாலம் கட்டுதல். | 1,50,000 |
| 31 திருகோஷ்டியூர்—கண்டாரமாணிக்கம் சாலை கிலோ மீட்டர் 5/4 இல் உள்ள பாலத்தை புதுப்பித்தல். | 3,00,000 |
| **திருநெல்வேலி மாவட்டம்.** | |
| 32 குலசை தாண்டவன்காடு சாலையில் கிலோ மீட்டர் 6/4 இல் உள்ள தரைமட்ட தாம்போகியை புதுப்பித்தல். | 2,36 000 |
| **சேலம் மாவட்டம்.** | |
| 33 வளவந்தி கோட்டக்காடு சாலை கிலோ மீட்டர் 4/4 இல் உள்ள தாம்போகியை புதுப்பித்தல். | 1,36,000 |
| 34 கொல்லிமலைச்சாலை கிலோ மீட்டர் 11/8 இல் உள்ள தடுப்புச் சுவற்றை புதுப்பித்தல். | 1,49,000 |
| | 1,70,000 |
| 35 மாலூரெட்டி செருக்கலை சாலை (மலைச்சாலை) கிலோ மீட்டர் 6/4 இல் உள்ள பள்ளத்திற்கு வெள்ள நிவாரணப் பழுதுபார்த்தல். | 3,00,000 |
| 36 அப்பநாய்க்கன்பாளையம் சாலை கிலோ மீட்டர் 1/8 இல் உள்ள பள்ளத்திற்கு வெள்ள நிவாரணப் பழுதுபார்த்தல் (ஊராட்சி ஒன்றியச் சாலை). | 1,25,000 |
| 37 திருச்சிராப்பள்ளி—சேலம் சாலையிலிருந்து எஸ். உடுப்பம், எ. உடுப்பம் வழியாக கொண்டம்பட்டி செல்லும் சாலையை கிலோ மீட்டர் 0/0 முதல் 8/0 வரை வெள்ள நிவாரணப் பழுதுபார்த்தல். | 1,80,000 |
| **கோயம்புத்தூர் மாவட்டம்.** | |
| 38 வெள்ளக்கோயில் வழியாக செல்லும் முத்தூர் மூலனூர்சாலை கிலோ மீட்டர் 23/6-10 இல் லக்கம்பநாயக்கன்பட்டி அருகில் அமராவதி ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தை வெள்ள நிவாரணப் பழுதுபார்த்தல். | 1,30,000 |

| வரிசை எண்ணும், பணியின் பெயரும். (1) | மதிப்பீட்டுத் தொகை. (2) (ரூபாய்.) |
|---|---|
| 39 வெள்ள நிவாரணத்தின் கீழ் பவானி செல்லம்பாளையம் சாலையில் கிலோ மீட்டர் 27/8இல் உள்ள பள்ளத்தில் முழுகு பாலம் கட்டுதல். | 2,32,000 |
| 40 ஈரோடு சென்னிமலை சாலை கிலோ மீட்டர் 3.0-லிருந்து ஈரோடு பெருந்துறை சாலை 4.4இல் சேரும் சாலையில் கிலோ மீட்டர் 0.8இல் உள்ள தாம்போகியை வெள்ள நிவாரணப் பழுதுபார்த்தல். | 1,75,000 |
| தர்மபுரி மாவட்டம் | |
| 41 காடுசெட்டிப்பட்டி எருதுகோட்டை சாலையில் கிலோ மீட்டர் 11/4-இல் ஓர் மூழ்கு பாலம் கட்டுதல். | 4,80,000 |
| மதுரை மாவட்டம் | |
| 42 வெள்ள நிவாரணத்தின் கீழ் வெள்வார் கோட்டை சாலை கிலோ மீட்டர் 0.8 இல் உள்ள உயர்மட்ட பாலத்தை புதுப்பித்தல். | 2,25,000 |
| 43 வெள்ள நிவாரணத்தின் கீழ் திண்டுக்கல்—கரூர் சாலை கிலோ மீட்டர் 14.4-இல் உள்ள கண் வைத்த தாம்போகியை புதுப்பித்தல். | 4,00,000 |
| 44 வெள்ள நிவாரணத்தின் கீழ் வட மதுரை —ஒட்டன்சத்திரம் சாலை கிலோ மீட்டர் 17/2இல் உள்ள கண்வைத்த தாம்போகியை புதுப்பித்தல். | 2,75,000 |
| 45 வெள்ள நிவாரணத்தின் கீழ் வேடசந்தூர் — கோவிலூர் சாலை கிலோ மீட்டர் 2/8இல் உள்ள கண்வைத்த தாம்போகியை புதுப்பித்தல். | 3,20,000 |



## இணைப்பு—35.

(பத்தி 4,5-ஐக் காண்க.)

(நடப்பிலுள்ள ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வேலைகளின் விபரம்.)

| தொடர் எண்ணும், வேலையின் பெயரும். (1) | தொகை. (2) (ரூபாய்.) | வேலையின் நிலைமை. (3) |
|---|---|---|
| செங்கல்பட்டு மாவட்டம். | | |
| 1 திருநீர்மலை - திருமுடிவாக்கம் சாலையில் கிலோ மீட்டர் 28/4 இல் ஓர் மூழ்கு பாலம் கட்டுதல். | 2,68,000 | பிரதான வேலை முடிக்கப்பட்டுள்ளது. பழைய பாலம் உடைக்கப்பட உள்ளது. கிலோ மீட்டர் 98/4 இல் உள்ள சிறு பாலம் அகலப்படுத்த ஒப்பந்தப் புள்ளி கோரப்பட வேண்டும். வேலைக்கு ஆணை வழங்கப்பட வேண்டும். |
| 2 திருநீர்மலை—திருமுடிவாக்கம் சாலையில் கிலோ மீட்டர் 25/6 இல் ஓர் மூழ்கு பாலம் கட்டுதல். | 4,66,000 | பிரதான வேலை முடிக்கப்பட்டுள்ளது. பழைய பாலம் மற்றும் பாலக் கண்களில் நீரரிப்புத் தடுப்புத் தரையினை உடைக்கும் வேலை தொடங்கப்பட்டுள்ளது. வழிகாட்டி, கம்பங்களுக்காக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. வேலைக்கு ஆணை வழங்கப்பட வேண்டும். |

## இணைப்பு 35—தொடர்ச்சி.

(பத்தி 4-5—ஐக் காண்க.)

(நடப்பிலுள்ள ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வேலைகளின் விபரம்.)

| தொடர் எண்ணும், வேலையின் பெயரும். (1) | தொகை. (2) (ரூபாய்.) | வேலையின் நிலைமை. (3) |
|---|---|---|
| 3 திருவொற்றியூர் பொன்னேரி—பஞ்செட்டி சாலையிலிருந்து கிலோ மீட்டர் 0/4-ல் பிரிந்து சுப்பாரெட்டி பாளையம் செல்லும் சாலையில் மூழ்கு பாலம் திரும்பக் கட்டுதல். | 8,30,000 | மேற்பூச்சு முடிக்கப்பட்டுள்ளது. தடுப்பு சுவர் மற்றும் வழிகாட்டி கம்பங்கள் வைக்கப்பட வேண்டும். தற்போதுள்ள தரைப் பாலமும் உடைக்கப்படும் வேலை விரைவில் தொடங்கப் பெறும். |
| தஞ்சாவூர் மாவட்டம். | | |
| 4 அய்யம்பேட்டைபுரம்—தஞ்சாவூர் சாலையில் கிலோ மீட்டர் 0/8 இல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாலம் திரும்பக் கட்டுதல். | 4,40,000<br>——————<br>4,84,000 | பாலம் வேலை முடிவடைந்துள்ளது. அணுகுச் சாலைப் பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 5 தாமரைக்கோட்டை—வெட்டிக்குடி விக்கிரமீன் சாலையில் கிலோ மீட்டர் 1/6 இல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தரைப்பாலம் திரும்பக் கட்டுதல். | 1,70,000 | டி |
| 6 மதுக்கூர்—பட்டுக்கோட்டைச் சாலையில் கிலோ மீட்டர் 67/2 இல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாலம் திரும்பக் கட்டுதல். | 6,30,000 | டி |
| இராமநாதபுரம் மாவட்டம். | | |
| 7 மாங்குடி சாலையில் கிலோ மீட்டர் 0/2 இல் ஓர் மூழ்கு பாலம் கட்டுதல். | 2,30,000 | இணைப்புச் சுவருக்காக மண் எடுக்கும் வேலை முன்னேற்றத்தில் உள்ளது. |



## இணைப்பு 36

(பத்தி 4.5ஐக் காண்க)

(நடப்பிலுள்ள மற்றும் முடிக்கப்பட்ட ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வேலைகள்.)

1978 வெள்ளப் பணி.

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். (1) | பணிகளின் எண்ணிக்கை. முடிக்கப் பட்டவை. (2) | பணிகளின் எண்ணிக்கை. நடப்பில் உள்ளவை. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| 1 செங்கல்பட்டு | .. | 1 | 1 |
| 2 தென்னாற்காடு | .. | .. | .. |
| 3 வடாற்காடு | 4 | 2 | 6 |
| 4 திருச்சிராப்பள்ளி | 6 | 6 | 12 |
| 5 தஞ்சாவூர் | .. | 1 | 1 |
| 6 மதுரை | .. | .. | .. |
| 7 புதுக்கோட்டை | 3 | 1 | 4 |
| 8 இராமநாதபுரம் | 5 | 1 | 6 |
| 9 திருநெல்வேலி | 1 | .. | 1 |
| 10 கோயம்புத்தூர் | .. | 1 | 1 |
| 11 பெரியார் | .. | .. | .. |
| 12 தர்மபுரி | 6 | 6 | 12 |
| 13 நீலகிரி | 1 | 1 | 2 |
| 14 சேலம் | .. | .. | .. |
| 15 கன்னியாகுமரி | .. | .. | .. |
| மொத்தம் | 26 | 20 | 46 |

## இணைப்பு 37

(பத்தி 4.5ஐக் காண்க)

1978 ஆம் ஆண்டு வெள்ளத்தின்போது முடிக்கப்பட்ட ரூபாய் 1.00 இலட்சத்துக்கு மேற்பட்ட செலவு மதிப்பீடுகள் உள்ள பணிகளின் பட்டியல்.

| வரிசை எண்ணும் பணியின் பெயரும் (1) | மதிப்பீட்டுத் தொகை. (2) |
|---|---|
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்.** | |
| சிலால் கீழ் அணைக்கட்டு சாலை கி.மீ. 9/4 – 6-ல் வெள்ளத்தால் பழுதடைந்த தாம்போகி (தரைப் பாலம்) யை திருத்தி அமைக்க. | 2,18,000 |
| சென்னை—கும்பகோணம்-தஞ்சாவூர்சாலை கி.மீ. 248/6-ல் வெள்ளத்தால் பழுதடைந்த சிறு பாலத்தை திருத்தி அமைக்க. | 1,25,000 |
| டனாக் கோட்டை — ஆலங்குடி சாலை கி.மீ. 9/0-ல் வெள்ளத்தால் பழுதடைந்த மூழ்கு பாலத்தை திருத்தி அமைத்தல். | 4,60,000 |
| மாரியூர் கிராமச்சாலை கி.மீ. 04-ல் சோலவனார் ஆற்றின் குறுக்கே உள்ள வெள்ளத்தால் பழுதடைந்த சிறு பாலத்தை திருத்தியமைக்க. | 1,45,000 |
| **தஞ்சாவூர் மாவட்டம்.** | |
| மன்னார்குடி ஒரத்தநாடு, திருவோணம் சாலை கி.மீ. 37/6-ல் வெள்ளத்தால் பழுதடைந்த பள்ளத்தை சீரமைக்க. | 2,36,000 |



| | | |
|---|---|---|
| 6 | மன்னார்குடி ஒரத்த நாடு, திருவோணம் சாலை கி.மீ. 37/10-ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பள்ளத்தை சீரமைக்க. | 2,40,000 |
| 7 | மன்னார்குடி ஒரத்த நாடு, திருவோணம் சாலை கி.மீ. 40/10-ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பள்ளத்தை சீரமைக்க. | 3,40,000 |
| 8 | மன்னார்குடி, திருவோணம் சாலை கி.மீ. 41/4-ல் வெள்ளத்தால் பழுதடைந்த பள்ளத்தை சீரமைக்க. | 2,70,000 |
| 9 | மன்னார்குடி பட்டுக்கோட்டை (வழி) மகாதேவிப் பட்டிணம் சாலை கி.மீ. 16/2-ல் வெள்ளத்தால் பழுதடைந்த பள்ளத்தை சீரமைக்க | 2,00,000 |
| 10 | மன்னார்குடி பட்டுக்கோட்டை (வழி) மகாதேவிப் பட்டினம் சாலை கி.மீ. 15/8-ல் வெள்ளத்தால் பழுதடைந்த மூழ்கு பாலத்தை சீரமைக்க. | 2,00,000 |
| | **திருநெல்வேலி மாவட்டம்.** | |
| 11 | வைரவானந்தல் சாலை கி.மீ. 4/6-ல் வைரவானந்தல் ஓடையின் குறுக்கே உள்ள உயர் மட்ட மேம்பாலத்தை திருத்தி அமைக்க. | 2,70,000 |
| 12 | தேசிய நெடுஞ்சாலை 49 கி.மீ. 107/4-ல் இருந்து கி.மீ. 4/2-ல் பிரிந்து புத்தொண்டால் வழியாக ஏரவாடி கீழ்க்கரையைச் சந்திக்கும் இடத்தில் வெள்ளத்தால் பழுதடைந்த உயர் மட்ட மேம்பாலத்தை திருத்தியமைக்க. | 1,50,000 |
| 13 | சேரன்மாதேவி பனன்குடி சாலையில் கி.மீ. 26/8, 26/10 மற்றும் 27/2 – 29/6-ல் வெள்ளத்தால் பழுதடைந்த பள்ளத்தை சீரமைக்க. | 1,57,000 |
| 14 | மாணூர் பள்ளிக்கோட்டை சாலையில் கி.மீ. 2/6-ல் உள்ள சிறு பாலத்தின் வெள்ளச் சேதங்களை பழுது பார்க்க. | 1,10,00 |

## இணைப்பு 37—தொடர்ச்சி.

### (பத்தி 4.5.-ஐக் காண்க.)—தொடர்ச்சி.

### 1978 ஆம் ஆண்டு வெள்ளத்தின்போது முடிக்கப்பட்ட ரூபாய் 1.00 இலட்சத்துக்கு மேற்பட்ட செலவு மதிப்பீடுகள் உள்ள பணிகளின் பட்டியல்—தொடர்ச்சி.

| | | மதிப்பீட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| | **திருநெல்வேலி மாவட்டம்—தொடர்ச்சி.** | |
| 15 | சேரன்மாதேவி—பனகுடி சாலையில் கி.மீ. 27/2, 28/2-ல் உள்ள பள்ளத்தின் வெள்ளச் சேதங்களைப் பழுது பார்க்க. | 1,15,000 |
| | | 1,67,000 |
| | **இராமநாதபுரம் மாவட்டம்.** | |
| 16 | மதுரை—தேவக்கோட்டை சாலையில் கி.மீ. 50/8-ல் உள்ள பாலத்தைப் புதுப்பிக்க. | 1,60,000 |
| 17 | அனுமந்தகுடி—கன்னன்குடி சாலையில் கி.மீ. 8/2—4-ல் உள்ள வெள்ளத்தால் சேதப்பட்ட சிறு பாலத்தைப் புதுப்பிக்க. | 3,00,000 |
| 18 | சிவகாசி—எரிச்சிநத்தம் சாலையில் கி.மீ. 8/4-ல் வெள்ளத்தால் பழுதடைந்த மூழ்கு பாலத்தைப் புதுப்பிக்க. | 2,90,000 |
| | | 3,30,000 |



| | | |
|---|---|---|
| | **கோயம்புத்தூர் மாவட்டம்.** | |
| | பவந்த கவுண்டர் சாலை—ஈரோடு சத்தி சாலை (வழி) ஒடதுறை கி.மீ. 4/2-ல் வெள்ளத்தால் பழுதடைந்த சிறு பாலத்தை பழுது பார்க்க. | 2,80,000 |
| | **சேலம் மாவட்டம்.** | |
| | நாமக்கல்-துறையூர் சாலையில் கி.மீ. 8/6—8-ல் உள்ள மூழ்கு பாலத்தைப் புதுப்பிக்க. | 4,80,000 |
| | **நீலகிரி மாவட்டம்.** | |
| 21 | நாகப்பட்டினம்-கூடலூர்-மைசூர்சாலையில் கி.மீ. 406/8-ல் உள்ள வெள்ளத்தால் சேதப்பட்ட பாலத்தைப் புதுப்பிக்க. | 2,66,000 |
| 22 | ஊட்டி—கொலகோம்பை சாலையில் கி.மீ. 4/8-ல் வெள்ளத்தால் பழுதடைந்த சிறு பாலத்தை புதுப்பிக்க. | 2,59,000 |
| 23 | ஊட்டி—மைசூர்(வழி) சிகூர் சாலையில் கி.மீ. 16/10-ல் வெள்ளத்தால் பழுதடைந்த ஒரு சிறு பாலத்தைப் புதுப்பிக்க. | 2,20,000 |
| 24 | நாகப்பட்டினம்—கூடலூர்—மைசூர்சாலையில் கி.மீ. 408/10-ல் வெள்ளத்தால் பழுதடைந்த சிறு பாலத்தைப் புதுப்பிக்க. | 1,80,000 |
| 25 | நாகப்பட்டினம்—கூடலூர்—மைசூர் சாலையில் கி.மீ. 437/1 உள்ள வெள்ளத்தால் பழுதடைந்த முட்டுச் சுவரைப் பழுதுபார்க்க. | 1,22,000 |
| 26 | மாரெல்லா சாலையில் கி.மீ. 6/2-ல் வெள்ளத்தால் பழுதடைந்த சிறு பாலத்தைப் புதுப்பிக்க. | 3,00,000 |

## இணைப்பு 38.

(பத்தி 4.5-ஐக் காண்க.)

1978ஆம் ஆண்டின் வெள்ள நிவாரணப் பணிகளின் முன்னேற்றம்.

| தொடர் எண்ணும், மாவட்டத்தின் பெயரும். | பணியின் பெயர். | மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்ட எண். | பணியின் தற்பொழுதைய நிலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| தென்னாற்காடு மாவட்டம் | திருச்சி-சிதம்பரம் சாலையில் கி.மீ. 120/2-ல் வெள்ளத்தால் பழுதடைந்த பாலத்தைப் புதுப்பித்தல். | 13,35,000 / த.பொ.2/79 | எல்லா பாலத் தூண்களும் பக்கச் சுவர்களும் தரை மட்ட அளவு வரை முடிவடைந்துள்ளது. அணுகு சாலை வேலையும், முதல் கட்டமாக கூரை போடும் வேலையும் முன்னேற்ற நிலையிலுள்ளது. |
| திருச்சிராப்பள்ளி மாவட்டம். | பேரூர்-மேக்குடி சாலையில் கி.மீ. 0/8இல் உள்ள வெள்ளத்தால் பழுதடைந்த வண்டி மற்றும் நடைப் பாலத்தைப் புதுப்பித்தல். | 1,26,000 / த.பொ. 56/78-79 | மேக்குடி பக்கத்தில் உள்ள பக்கத்தின் தூண் வேலை முன்னேற்ற நிலையில் உள்ளது. |
| திருச்சிராப்பள்ளி மாவட்டம். | சோளிங்கநல்லூர்-இத்தாமலூர் சாலையில் கி.மீ. 1/6இல் உள்ள வெள்ளத்தால் பழுதடைந்த வண்டி மற்றும் நடைப் பாலத்தைப் புதுப்பித்தல். | 1,56,000 / த.பொ. 57/78-79 | 'டெக' எண். '3', '4' வெள்ளைப் பூச்சு முடியும் தறுவாயில் உள்ளது. எஞ்சிய வேலை முன்னேற்ற நிலையில் உள்ளது. |
| | **தஞ்சாவூர் வெள்ளப் பகுதி.** | | |
| டிை | ஓரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில்(ஊராட்சி ஒன்றிய சாலை) காரக்ஸ குடிபடி எனற கிராமத்தில் உள்ள வெள்ளத்தால் பழுதடைந்த ஜி. ஏ. கால்வாயின் (பொ.ப.து.R.D.22/10) குறுக்கே ஒரு பாலம் அமைத்தல்பற்றி. | 1,60,000 / 12/78-79. | பால வேலை முடிவடைந்துவிட்டது. அணுகு சாலை வேலை முன்னேற்ற நிலையில் உள்ளது. |
| தஞ்சாவூர் .. .. | மகாதேவப்பட்டிணம் சாலை வழியாக, மன்னார்குடி—பட்டுக்கோட்டை சாலையில் கி.மீ. 27/10-இல் வெள்ளத்தால் பழுதடைந்த ஒரு தாம்போகியினைப் புதுப்பிதத்ல். | 4,60,000 / 13/79-80 | அணுகு சாலை நிலவேலை முன்னேற்ற நிலையிலுள்ளது. |

இணைப்பு 38—தொடர்ச்சி.

(பத்தி 4, 5-ஐக் காண்க.)

1978 ஆம் ஆண்டின் வெள்ள நிவாரணப் பணிகளின் முன்னேற்றம்—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும், மாவட்டத்தின் பெயரும். (1) | பணியின் பெயர். (2) | மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்ட எண். (3) | பணியின் தற்பொழுதைய நிலை. (4) |
|---|---|---|---|
| 8 தஞ்சாவூர் .. | கரம்பியம், கீலாமங்களம் சாலை (ஊராட்சி ஒன்றிய சாலை) கி.மீ. 1/8 இல் உள்ள தாம் போகியைப் புதுப்பித்தல். | 2,10,000 / 11/78–79 | வழிகாட்டும் கம்ப வேலை தவிர மற்ற பாலவேலைகள் முடிந்துவிட்டன. |
| தஞ்சாவூர் வெள்ளப் பகுதி. | கரம்பியம், வேப்பன்காடு சாலை (ஊராட்சி ஒன்றிய சாலை) கி.மீ. 1/10 இல் உள்ள சிறு பாலத்தைப் புதுப்பித்தல். | 2,57,000 / 16/78–79 | அணுகு சாலை நிலவேலைகள் முன்னேற்ற நிலையில் உள்ளது. |
| டி | வேட்டிக்காடு, தளிகை விடுத்தி சாலை கி.மீ. 5/8-இல் உள்ள மகாராஜ சமுத்திர ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள சிறு பாலத்தை புதுப்பித்தல். | 3,00,000 / 15/79–80 | அணுகு சாலை வேலை தவிர, பால வேலை முடிந்துவிட்டது. |
| 9 தஞ்சாவூர் பகுதி .. | பாமினியாற்றின் குறுக்கே N.G.M. சாலையில் கி.மீ. 53/8-ல் உள்ள வெள்ளத்தால் பழுதடைந்த பாலத்தைப் புதுப்பித்தல். | 6,31,000 / 7/78–79 | இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. |
| 10 மதுரை பகுதி .. | போடி-குரங்கணி சாலையில் கி.மீ. 2/10-இல் வெள்ளத்தால் பழுதடைந்த பாலத்தைப் புதுப்பித்தல். | 4,50,000 / 6,25,000 / 58/78–79 / த.பொ.1/79-80 | ''கெய்ஸான்'' முறை பாலத் தூண்கள் '4'ம் '5'ம் அமைக்கப்பட்டு புதைக்கப்பட்டுவிட்டன. 'கெய்ஸான்' பக்கத்தூண்கள் அமைக்கப்பட்டு வைக்கும் தருவாயில் உள்ளன. |
| 11 இராமநாதபுரம் மாவட்டம். .. | மருதங்கநல்லூர் — ஆனையூர் சாலையில் கி.மீ. 0/2-இல் உள்ள வெள்ளத்தால் பழுதடைந்த பாலத்தைப் புதுப்பித்தல். | 1,35,000 / C.R.18/78–79 | பக்கத்தூண்களுக்கான .. நில வேலை முன்னேற்ற நிலையில் உள்ளது. |
| 12 திருநெல்வேலி பகுதி | நம்பிக் கோவில் சாலையில் கி.மீ. 4/10இல் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல். | 2,76,000 / 11/78–79. | வேலை துவங்கிவிட்டது. |
| சேலம் மாவட்டம் .. | வேப்பிலைப்பட்டி வழியாக, சேலம்-உளுந்தூர்பேட்டை .. சாலையில் கி.மீ. 3/2-இல் பாலம் புதுப்பித்தல். | 4,00,000 | வேலை முன்னேற்ற நிலையில் உள்ளது. |

இணைப்பு 38—தொடர்ச்சி.

(பத்தி 4, 5ஐக் காண்க.)

1978 ஆம் ஆண்டின் வெள்ள நிவாரணப் பணிகளின் முன்னேற்றம்—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | பணியின் பெயர். | மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்ட எண். | பணியின் தற்பொழுதைய நிலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 14 நீலகிரி மாவட்டம் .. | கட்டபெட்டா-இருஹாட்டி சாலையில் கி.மீ. 4/4—இலுள்ள வெள்ளத்தால் பழுதடைந்த சிறு பாலத்தைப் புதுப்பித்தல். | 2,84,000<br>10/78-79 | நில வேலை முன்னேற்ற நிலையில் உள்ளது. கட்டபெட்டா சாலை பக்கம் அடிப்படை கான்கிரீட் போடப்பட்டுவிட்டது. |
| 15 டை .. | தினாட் கொம்பை,-எபநாடு சாலையில், கி.மீ. 4/10 இல் வெள்ளத்தால் பழுதடைந்த பாலத்தைப் புதுப்பித்தல். | 5,00,000<br>11/78-79 | எபநாடு அருகிலுள்ள பக்கச் சுவர் வேலை முடிந்துவிட்டது. மற்ற பக்கத்தின் வேலை முடியும் தருவாயிலுள்ளது. |
| 16 டை .. | ஹல்லம்-எல்லா மலைச் சாலையில் கி.மீ. 0/8-இல், வெள்ளத்தால் பழுதடைந்த பாலத்தினைப் புதுப்பித்தல். | 4,65,000<br>18/78-79 | ஒரு பக்கச் சுவர், பாலத் தூண் வேலை முடிந்துவிட்டது. |



| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | பணியின் பெயர். | மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்ட எண். | பணியின் தற்பொழுதைய நிலை. |
|---|---|---|---|
| 17 நீலகிரி மாவட்டம் — | கூடலூர் வழியாக ஊட்டி-மைசூர் சாலையில் கி.மீ. 13/8 இல், வெள்ளத்தால் பழுதடைந்த சிறு பாலத்தைப் புதுப்பித்தல். | 1,25,000<br>9/78-79. | அணுகு சாலைகளுக்கு கற்கள் போட வேண்டும். பணி முடிந்துவிட்டது. |
| 18 டை | குன்னூர்—கோத்தகிரி .. சாலையில் கி.மீ. 0/2 இல், வெள்ளத்தால் பழுதடைந்த சிறு பாலத்தைப் புதுப்பித்தல். | 5,00,000<br>9/79-80. | ஊட்டி பக்கத்தில் பாதி அளவு 'டெக்ஸ்லாப்' முடிந்துவிட்டது. குன்னூர் பகுதியில், நில வேலையும், பக்கச் சுவர் வேலையும் முன்னேற்ற நிலையில் உள்ளது. |
| 19 டை | வட ஏரிச் சாலையில் ஊட்டி ஏரி கி.மீ. 2/2 இல் அரிகக் கால்வாய் அருகே உள்ள ஒரு சிறு பாலத்தினைப் புதுப்பித்தல். | 5,00,000<br>42/79-80. | "டெக்ஸ்லாப்" முடிந்துவிட்டது. வெளிப்பூச்சும் கைப்பிடிச் சுவர் வேலையும் முடிந்துவிட்டன. அணுகு சாலை வேலை முன்னேற்ற நிலையில் உள்ளது. |
| 20 கோயம்புத்தூர் மாவட்டம். | கோபி-தாராபுரம் சாலையில் கி.மீ. 63/6-இல் வெள்ளத்தால் பழுதடைந்த ஒரு பாலத்தைப் புதுப்பித்தல். | 5,00,000<br>7,50,000 | பால வேலை முடிவடைந்து விட்டது. அணுகு சாலை வேலை முன்னேற்ற நிலையிலுள்ளது. |

## இணைப்பு-39.

(பத்தி 4.5-ஐப் பார்க்கவும்.)

**1979 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மேற்கொள்ளப்பட்ட செலவு தொகை ரூபாய் 1 இலட்சம் அதற்கு மேற்பட்ட பணிகளின் முன்னேற்றம்.**

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | பணிகளின் எண்ணிக்கை. முடிக்கப் பட்டவை. | பணிகளின் எண்ணிக்கை. நடந்தேறி வருபவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 செங்கற்பட்டு | 3 | 2 | 5 |
| 2 தென் ஆற்காடு | .. | 1 | 1 |
| 3 வட ஆற்காடு | .. | 4 | 4 |
| 4 திருச்சிராப்பள்ளி | .. | .. | .. |
| 5 தஞ்சாவூர் | .. | 11 | 11 |
| 6 மதுரை | .. | 5 | 5 |
| 7 புதுக்கோட்டை | .. | .. | .. |
| 8 இராமநாதபுரம் | .. | 5 | 5 |
| 9 திருநெல்வேலி | .. | 2 | 2 |
| 10 கோயம்புத்தூர் | .. | 13 | 13 |
| 11 பெரியார் | .. | .. | .. |
| 12 தருமபுரி | .. | .. | .. |
| 13 நீலகிரி | .. | 2 | 2 |
| 14 சேலம் | .. | 2 | 2 |
| 15 கன்னியாகுமரி | .. | 1 | 1 |
| மொத்தம் | 3 | 48 | 51 |



## இணைப்பு-40.

(பத்தி 4.5-ஐப் பார்க்கவும்).

**முடிவடைந்த பணிகள்.**

**1979 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது மேற்கொள்ளப்பட்ட செலவுத் தொகை ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகள்.**

| (1) | (2) | (3) |
|---|---|---|
| செங்கற்பட்டு மாவட்டம் | உத்திரமேரூர்-காஞ்சீபுரம் சாலையில் (மாவட்ட பெருஞ்சாலை) கி.மீ 22/2-8-ல் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட தரைப்பாலத்தின் பகுதியைப் புதுப்பித்தல். | 4,44,000 |
| ஷை | திரூர்-சேவாப்பேட்டை கீலனூர் சாலையில் மாவட்ட பிற சாலைகள் (கி.மீ. 0/2—4-ல் வெள்ளத்தால் சேதப்படுத்தப்பட்ட திரூர் தரைப்பாலத்தைச் சீர்படுத்தல். | 2,30,000 |
| ஷை | காஞ்சீபுரம்-வந்தவாசி சாலையில் கி.மீ. 4/4—5/4 பாலார் தரைப்பாலத்தில் பாதுகாப்புப் பணிகள். | 4,99,000 |

## இணைப்பு 41.

(பத்தி 4.5-ஐக் காண்க).

### 1979 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட வெள்ளப் பணிகளின் முன்னேற்றம்.

| தொடர் எண். (1) | மாவட்டம் கோட்டத்தின் பெயர். (2) | பணியின் பெயர். (3) | ஒப்பளிக்கப் பட்ட மதிப்பீட்டுத் தொகை மற்றும் எண். (4) ரூ. | பணி நிலைமை. (5) |
|---|---|---|---|---|
| 1 | செங்கற்பட்டு மாவட்டம். | டி.பி.பி. சாலையில் கி.மீ. 0/4-ல் உள்ள பாலத்தின் இரு மருங்குகளிலும் உள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தாங்கு சுவர்களைப் பழுது பார்த்தல். | 2,60,000 / 8/80-81. | தொடங்கப்படவிருக்கும் பணிக்கான ஒப்பந்தப் புள்ளியை தலைமைப் பொறியாளர் (வெள்ளப் பணிகள்-சாலைகள்). ஏற்றுக்கொண்டுள்ளார். |
| 2 | வட ஆற்காடு மாவட்டம். | சித்தத்தூர்-கீழ்நெல்லி—பிள்ளந்தாங்குடி சாலையில் கி. மீ. 2/10-ல் உள்ள சிறு பாலத்தைப் பழுது பார்த்தல். | 2,65,000 | இருபுற அணுகுசாலைகளில் தாங்கு சுவர்கள் வேலை முடிவுற்றது. |
| 3 | ஷை. | காட்பாடி - வெங்கடகிரி கோட்டா சாலையில் கி.மீ. 52/6-8ல் உள்ள சிறு பாலத்தைப் பழுது பார்த்தல். | 2,75,000 / 3/80-81 | உடன்படிக்கை கையெழுத்திடப்பட வேண்டும். |
| 4 | ஷை. | காட்பாடி - வெங்கடகிரி கோட்டா சாலையில் (மாவட்டப் பெருஞ் சாலை) கி.மீ. 46/4-ல் உள்ள தாம்போகியை பழுது பார்த்தல். | 2,00,000 / 3,00,000 | துண்டாக்கப்பட்ட சுவர்கள் முடிக்கப்பட்டன. குப்பைக் கூளம் மற்றும் தூர் வாரப்பட்டது. மணல் பரத்தப்பட்டது. |
| 5 | ஷை. | ஆம்பூர்-சத்தியூர் சாலையில் கி. மீ. 1/4-6 (தாம்போகி) (மாவட்டப் பெருஞ்சாலை) பழுது பார்த்தல். | 2,50,000 | மத்தியப் பகுதி முடிவடைந்தது. |
| 6 | தென் ஆற்காடு மாவட்டம். | கடலூர் — விருத்தாசலம் சாலையில் (மா.பெ.சா) கி.மீ. 31/8-ல் உள்ள பாலத்தைப் பழுது பார்த்தல். | 9,00,000 / 14,25,000 த.பொ. 5/ 79-80. | தாங்கு தூண் 4, 5, 6 மற்றும் 7 படுகை மட்டத்திற்கு உயர்த்தப்பட்டது. கடலூர் பக்கம் அண்டியுள்ள பகுதியில் அடித்தளத்திற்கு ஜல்லி போடுதல் நடைபெறுகிறது. சிமென்ட் இல்லாததால் முன்னேற்றம் பாதிக்கப்பட்டுள்ளது. |

இணைப்பு 41-ன்—தொடர்ச்சி.

(பத்தி 4.5. ஐக் காண்க).

1979-ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட வெள்ளப் பணிகளின் முன்னேற்றம்.

| தொடர் எண். | மாவட்டம்/ கோட்டத்தின் பெயர். | பணியின் பெயர். | ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை மற்றும் எண். | பணி நிலைமை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | ரூ. | |
| 7 | தஞ்சாவூர் மாவட்டம் | மன்னார்குடி-ஒரத்தநாடு-திருவோணம் சாலையில் (மா.பெ.சா.) கி. மீ. 17/6-ல் தாம்போகி கட்டுதல். | 3,00,000 / 3,14,000 | அணுகுசாலை தவிர பால வேலை முடிவடைந்துள்ளது. |
| 8 | ௸ | மன்னார்குடி-ஒரத்தநாடு திருவோணம் சாலையில் (மா.பெ.சா.) கி.மீ. 26/6-ல் பாலம் கட்டுதல். | 2,25,000 / 3,15,000 | அணுகுசாலை மற்றும் மேல்சாந்து பூசுதல் தவிர பாலவேலை முடிவடைந்தது. அணுகு சாலை அமைக்கும் பணி நடைபெறுகிறது. |
| 9 | தஞ்சாவூர் கோட்டம் | எம்.எம். சாலையில் (இதர மாவட்டசாலை கி.மீ. 39/6-ல் உள்ள பாலத்தைப் பழுது பார்த்தல். | 2,50,000 / 1,85,000 | துணைக் கட்டுமானத்திற்கான பணிமுன்னேற்றத்தில் உள்ளது. |
| 10 | திருவாரூர் கோட்டம் | ஒக்கநாடு கிழக்கு-சமயங் குடிகாடு சாலையில் (ஊராட்சி ஒன்றிய சாலை) கி. மீ. 1/2-ல் பாலம் கட்டுதல். | 2,00,000 / 3,43,000 | ஒருதாங்கு தூணிற்கான துணைக் கட்டுமானமும் அபட்மென்ட் ஒன்றும் முடிவடைந்தன. மற்ற எல்லா ஐந்து தாங்கு தூண்களும் மேலும் ஒரு அபட்மென்டும் புற மட்டம் வரை உயர்த்தப்பட்டுள்ளது. |
| 11 | ௸ | கப்பலாண்டியான் சாலையில் (ஊ.ஒ.சா.) கி.மீ. 4/6-6/8 வரை பழுது பார்த்தல். | 2,53,000 | வேலை துவங்கப்படுகிறது |
| 12 | ௸ | சாலியமங்கலம்-சடையன் கோவில் சாலையில் (இ.மா.சா.)கி.மீ.0/6-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல். | 3,00,000 / 5,00,000 2/80-81 | இப்பணிக்கான வேலை ஆணை இப்பொழுது கிடைத்துள்ளது. |
| 13 | ௸ | கப்பிலாண்டியான் கிராம சாலையில் கி.மீ. 1/6 4/8 வரை லெ.நி. ப. பழுது பார்த்தல். | 3,83,000 | ஆரம்பிக்கப்பட உள்ளது |
| 14 | ௸ | கப்பலாண்டியான் கிராம சாலையில் (ஊ.ஒ.சா.) 1/6-4/8-ல் பழுது பார்த்தல். | 3,83,000 | இப்பணிக்கான வேலை ஆணை இப்பொழுது கிடைத்துள்ளது. |

இணைப்பு 41-ன்—தொடர்ச்சி.

(பத்தி 4.5 ஐக் காண்க)

**1979-ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட வெள்ளப் பணிகளின் முன்னேற்றம்.**

| தொடர் எண். | மாவட்டம்/ கோட்டத்தின் பெயர். | பணியின் பெயர். | ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை மற்றும் எண். | பணிநிலைமை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | ரூ. | |
| 15 | திருவாரூர் கோட்டம் | சிங்கப்பெருமாள் குளம்-வண்ணாரப்பேட்டை சாலையில்(ஊ.ஓ.சா.) கி.மீ. 7/6-ல் தாம்போகி கட்டுதல். | 1,50,000 / 3,95,000 | எல்லா வகையிலும் இப் பணி முடிக்கப்பட்டது. அணுகுசாலை வேலை நடைபெற்று வருகிறது |
| 16 | தஞ்சாவூர் கோட்டம் | பாப்பாநாடு-மதுக்கூர்-பெருகவாழ்ந்தான் சாலையில் கி.மீ. 3/8-ல் உள்ள சிறு பாலத்தைப் பழுது பார்த்தல். | 1,84,000 | அணுகுசாலையில் கிராதி வேலை நடைபெறுகிறது. கைப்பிடி அமைக்கும் வேலை முடிவடைந்தது. மதுக்கூர் பக்கத்தில் அணுகு சாலைக்கான ஜல்லி போடப்பட்டது. |
| 17 | மதுரை மாவட்டம் | வத்தலகுண்டு உசிலம்பட்டி சாலை (பெருமாவட்ட சாலை) கி.மீ. 3/6-ல் உள்ள சிறு பாலத்தைப் புதுப்பித்தல். | 4,00,000 / 2/80-81 | பணிக்கான உத்திரவு வழங்கப்பட்டுவிட்டது. ஒப்பந்தம் முடிவடைந்து விட்டது. தூண்கள் உட்பட நில வேலை முடிவடைந்து விட்டன, பணி சிறிதளவு நின்று விரைவில் செயலாக்கம் பெறும். |
| 18 | ஷை | தென்காசி மதுரை சாலை கி.மீ. 114/10-ல் உள்ள சிறு பாலத்தைப் புதுப்பித்தல். | 1,60,000 / 3/80-81 | மாற்றுவழிச்சாலை வேலை முடிவடைந்து விட்டது. தூளாக்கும் வேலை முடிந்துவிட்டது. அடிப்படை நில வேலை முன்னேற்ற நிலையில் உள்ளது. |
| 19 | ஷை | வீரபாண்டி—வெங்கடாசல புரம்சாலைகி.மீ.5/10-ல் உள்ள சிறு பாலத்தைப் புதுப்பித்தல். | 1,50,000 / 1/80-81 | பெருமழையினால் இந்த வேலையில் சிறிது தாமதம் ஏற்படினும் நில வேலை இப்பொழுது மீண்டும் துவங்கியுள்ளது. |
| 20 | ஷை | கோத்தகுடி ஆற்றின் குறுக்கே போத்திபுரம் சாலை கி.மீ. 3/8-ல் உள்ள பால வேலையைப் புதுப்பித்தல். | 6,00,000 / 7,50,000 த.பொ. 4/1 80-81. | ஆற்றில் நீர் பாய்கிறது. வேலை நடைபெறவில்லை. |

## இணைப்பு 41-ன் —தொடர்ச்சி.

(பத்தி 4.5ஐக் காண்க).

### 1979 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட வெள்ளப் பணிகளின் முன்னேற்றம்.

| தொடர் எண். | மாவட்டம்/ கோட்டத்தின் பெயர். | பணியின் பெயர். | ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை மற்றும் எண். | பணிநிலைமை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | ரூ. | |
| 21 | மதுரை மாவட்டம் | சோழவந்தான் அருகே, வைகை ஆற்றின் குறுக்கே உள்ள சோழவந்தான் சிறுபாலத்தில் சில பழுதுகளைப் பார்த்துப் புதுப்பித்தல். | 7,50,000 / 12,14,00 7/79-80. | சோழவந்தான் அருகே தடுப்புச் சுவர் வேலை முடிந்து, வேலை முன்னேற்ற நிலையில் உள்ளது. |
| 22 | கோயம்புத்தூர் மாவட்டம். | ஆத்தியூர் கொங்கல்காரம் கி.மீ. 1/8-4/0 முதல் 5/0-7/0 வரையில் பழுதுபார்த்தல். | 3,00,000 / 3,30,000 34/79-80. | 1/6-3/0 3/0-4/0W.B.M வேலை முடிவடைந்து விட்டது. |
| 23 | டிை | ராகல்பாவி கிராம சாலை கி.மீ. 1/8-4/2-ல் வெள்ளச் சேத நிவாரணம் (இ.மா.சா.) | 3,00,000 / 35/79-80. | 1/8-2/4 மணல் நிரப்புப் பணி முடிவுற்றது. கலவை மணல் நிரப்புப் பணி முடிவுற்றது. சரளைக் கல் சேகரிப்பு நடந்து கொண்டிருக்கிறது. |
| 24 | டிை | வெள்ளச் சேத நிவாரணம் கி.மீ. 3/4 துடியலூர் கோவில் பாளையம் சாலை (மா.பொ.சா.) | 3,00,000 / 30/79-80. | துடியலூர் பக்கம் கரை மற்றும் தூண் எண் கடைக்கால் பணி முடிவுற்றது. தண்ணீர் தேக்கத்தினால் பணி தடைப்பட்டது. |
| 25 | டிை | வெள்ளச் சேத நிவாரணம் ஆந்தையூர் கொங்கல் நகரம் சாலை கி.மீ. 4/2-ல் (மா.பி.சா.) | 1,50,000 / 2,00,000 32/79-80 | 1, 2 மற்றும் 3 தூண்களுக்கு கரைமட்ட அளவுக்கு சாங்கிரீட் போடப்பட்டுள்ளது. |
| 26 | டிை | கோயம்புத்தூர்-திண்டுக்கல் சாலை (மா.நெ.சா.) கி.மீ. 33/4-ல் உள்ள பள்ளத்திற்கு வெள்ளச் சேத நிவாரணம். | 2,19,000 / 38/79-80 | ஆற்றின் கீழ்ப்பகுதியில் தடுப்புச்சுவர் கட்டும் பணி முடிவுற்றது. நீரோட்டத்தினால் பணி பாதிக்கப்பட்டுள்ளது. |
| 27 | டிை | பொள்ளாச்சி-மீனக்கார சாலை( மா.பெ.சா.)- கி.மீ. 7/4-ல் வெள்ளச் சேத நிவாரணம். | 2,50,000 / 41/79-80 | ஆற்றின் கீழ்ப்பகுதியிலும் மேல் பகுதியிலும் தடுப்புச் சுவர் கட்டும் பணி முடிவுற்றது. பூச்சு வேலை நடந்து கொண்டிருக்கிறது. |

## இணைப்பு 41-ன்—தொடர்ச்சி.

(பத்தி 4.5 ஐக் காண்க).

### 1979-ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட வெள்ளப் பணிகளின் முன்னேற்றம்.

| தொடர் எண். | மாவட்டம்/ கோட்டத்தின் பெயர். | பணியின் பெயர். | ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை மற்றும் எண். | பணி நிலைமை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | ரூ. | |
| 28 | கோயம்புத்தூர் மாவட்டம். | பொள்ளாச்சி-பள்ளடம் சாலை (மா.பெ.சா.) கி. மீ. 6/2-4-ல் வெள்ளச்சேத நிவாரணம். | 2,00,000<br>40/79-80 | கட்டுமானப் பணி முடிவுற்றது. டபிள்யூபி எம் பூர்த்தியானது. |
| 29 | டிை | கொங்கல்நகரம்-ராமச்சந்திரபுரம் சாலை (ஒன்றியசாலை) கி.மீ. 6/9-ல் உள்ள பள்ளத்திற்கு வெள்ளச்சேத நிவாரணம். | 3,00,000<br>4,00,000<br>37/79-80 | கொங்கல் நகரம் பக்கக் கரை படுக்கை பகுதி மட்டம் காங்கிரீட் போடப் பட்டுள்ளது. பக்கக் கரை மற்றும் தூண் எண் 1 கரை மட்டத்திற்கு காங்கிரீட் போடப்பட்டுள்ளது. |



| தொடர் எண். | மாவட்டம்/ கோட்டத்தின் பெயர். | பணியின் பெயர். | ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை மற்றும் எண். | பணி நிலைமை. |
|---|---|---|---|---|
| 30 | கோயம்புத்தூர் மாவட்டம். | காரமடை—தோலம் பாளையம் சாலை (மாவட்ட பிறசாலை) யில் கி.மீ. 10/10-ல் உள்ள பாலத்தில் வெள்ளச் சேத நிவாரண வேலைகள். | 7,50,000<br>C E 3/80-81 | திருத்திய மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த அறிக்கைகள் முடிவு செய்யப்பட உள்ளது. |
| 31 | டிை | காரத்தோலாறு — குமாரமங்கலம் சாலை (மாவட்ட பெருஞ் சாலை)யில்கி.மீ. 9/10-ல் உள்ள பள்ளத்திற்கு வெள்ள நிவாரண வேலைகள். | 5,00,000<br>4,70,000<br>36/78–79 | டெக் கான்கிரீட் வேலை நடந்தேறி வருகிறது. குமாரமங்கலம் பக்கத்தில் கடைக்கால் வேலை நடந்தேறி வருகிறது. |
| 32 | டிை | திருமலையின் பாளையத்தில் சேலம்—கொச்சின் சாலையில் கி.மீ. 172/4 இல் பிரிந்து பல்லடம்—கொச்சின் புரோன் ஊன் சாலையில் கி.மீ. 48/6 இல் இணையும் சாலையில் கி.மீ. 4/6 இல் வெள்ளச் சேத நிவாரண வேலைகள். | 5,00,000<br>39/79–80 | ஒப்பந்தக்காரர் பணிகளைத் தொடங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார். |
| 33 | டிை | காரமடை — தோலம் பாளையம் சாலையில் கி.மீ. 15/4-ல் உள்ள பாலத்திற்கு வெள்ளச் சேதங்களை சீர்செய்தல். | 5,00,000<br>4,12,000 | தோலம்பாளையம் பக்கக் கரை படுகை மட்டத்திற்கு பணி முடிவுற்றது |

# இணைப்பு 41-ன்—தொடர்ச்சி.

(பத்தி 4,5-ஐக் காண்க.)

1979 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட வெள்ளப் பணியின் முன்னேற்றம்.

| தொடர் எண். (1) | மாவட்டம் கோட்டத்தின் பெயர். (2) | பணியின் பெயர். (3) | ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை மற்றும் எண். (4) ரூ. | பணி நிலைமை. (5) |
|---|---|---|---|---|
| 34 | கோயம்புத்தூர் | தேவநூர் புதூர் நலஹூர் காலனி சாலை கி.மீ. 4/2-4 இல் உயர் மட்டப் பாலம் கட்டுதல். | 6,50,000 / 5/79-80 | தூண் மூன்று மற்றும் நான்குக்கான மேல் கட்டுமான வேலை முன்னேற்றமாக நடந்து வருகிறது. |
| 35 | சேலம் .. | பட்டினம் – போதிமலை சாலையிலிருந்து ஆலவஞ்சி அம்மன் கோயில் சாலையில் கி.மீ. 0/6ல் வெள்ளச் சேத நிவாரணம். | 1,70,000 / 47/79-80 | தூண் மீதும் அபட்மென் மீதும் பெட்பிளாக் கான்கிரீட்டு பணி முடிவுற்றது. கம்பி கட்டும் வேலை நடந்து வருகிறது. |
| 36 | ஷை | பனமரத்துப்பட்டி-கம்மாலப்பட்டி சாலையில் 16/0 கி. மீட்டரில் ஒரு பாலம் கட்டுதல். | 4,99,000 | மதிப்பீடு ஒப்புதலளிக்கப் பட வேண்டியுள்ளது. |
| 37 | நீலகிரி மாவட்டம் .. | கூடலூர் சாலையில் கள்ளிக்கோட்டை வைத்திரியில் கி.மீ. 122/10-இல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறு பாலத்தை மீண்டும் புதுப்பித்தல். | 2,50,000 / 2,65,000 / 26/79-80 | கள்ளிக்கோட்டையின் பக்கம் அணைப்பு தடுப்புதளம் போடப்பட்டு மற்றப்பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. |
| 38 | ஷை .. | கள்ளிக்கோட்டை நிலாம்பூர் கூடலூர் சாலையில் கி.மீ. 108/8-ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறு பாலத்தை மீண்டும் புதுப்பித்தல். | 3,00,000 / 3,75,000 / 27/79-80 | நீலாம்பூர் பக்கம் தடுப்புத் தளம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. |
| 39 | திருநெல்வேலி மாவட்டம். | களக்காடு யம்முக் கூடல் சாலையில் வெள்ளப்பாழ் சீரமைப்பு பணியின் கீழ் தடுப்புச்சுவர் மற்றும் குறுக்கு வடிகால் அமைத்தல். | 2,00,000 / 2,07,000 / 11/80-81 | தடுப்புச் சுவருக்கு வேண்டிய பொருள்கள் சேகரிக்கப்பட்டு குழாய் வடிகால் பணி நடந்து வருகிறது. |
| 10 | ஷை | முண்டத்தூரணி வழியாக செல்லும் மேல்பாபனாசம் அணை சாலையில் கி.மீ. 10/0-24/0 இல் வெள்ளப் பாழ் சீரமைப்புப் பணியின் கீழ் அணைப்புத்தளம் கட்டுதல். | 2,00,000 | பொருள்கள் சேகரிக்கப் பட்டுள்ளன. பணியை தொடங்குவதற்குவனத் துறையின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 1 | இராமநாதபுரம் மாவட்டம். | மானாமதுரை-தெள்ளி சிட்டா நல்லூர் சாலையில் கி.மீ.13,8இல் நிரந்தரமாக புதுப்பித்தல். | 1,65,000 / 96,000 / 1,40,000 | பணி நடந்து வருகிறது. |

**இணைப்பு 41-ன்—தொடர்ச்சி.**

(பத்தி 4,5-ஐக் காண்க).

**1979-ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட வெள்ளப் பணியின் முன்னேற்றம்.**

| தொடர் எண். (1) | மாவட்டம் கோட்டத்தின் பெயர். (2) | பணியின் பெயர். (3) | ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை மற்றும் எண். (4) ரூ. | பணி நிலைமை. (5) |
|---|---|---|---|---|
| 42 | இராமநாதபுரம் | சுக்கிராப்பட்டி ஆனந்தூர் சாலையில் கி.மீ. 1/4-ல் உள்ள சிறு பாலத்தை மீண்டும் கட்டுதல். | 1,50,000 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கவேண்டும். |
| 43 | டி .. | கீலபட்டாமங்கலம்—வள்ளியூர் சாலையில் கி.மீ. 0/8 இல் உள்ள தரைப்பாலத்தை நிரந்தரமாகப் புதுப்பித்தல். (ஊ.ஒ.சா.) | 1,50,000<br>1,35,000 | ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும். |
| 44 | டி .. | கீலபட்டமங்கலம்—வள்ளியூர் சாலையில் கி.மீ. 0/8 இல் உள்ள பாலத்தை நிரந்தரமாகப் புதுப்பித்தல். (ஊ.ஒ.சா.) | 1,50,000 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். |
| 45 | டி .. | சிவகாசி — கழுகுமலைச் சாலையில் கி.மீ. 17/6-இல் உள்ள படுகை அளவு தரைப் பாலம் அமைத்தல். | 1,50,000<br>13/80—81 | ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. பணி தொடங்க வேண்டும். |
| 46 | கன்னியாகுமரி மாவட்டம். | அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத்தில் வடக்கு தாமரைக்குளம் — பாலயார் சாலையில் கி.மீ. 0/4—இல் உள்ள சிறு பாலத்தை வெள்ளப் பாழ் சீரமைப்புப் பணியின்கீழ் புதுப்பித்தல். | 8,00,000<br>8,00,000 | தொடக்கப்பணி முன்னேற்ற நிலையில் உள்ளது. நேர் பாடு குறிக்கப் பட்டுள்ளது. கோட்டப் பொறியாளர் கல்லால் ஆன தரைப் பாலத்தையும் தற்காலிகமாக உள்ள பாலத்தையும் இடிப்பதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். |
| 47 | செங்கல்பட்டு .. | மவுண்ட் — மடிப்பாக்கம் சாலையில் கி.மீ. 1/6—இல் உள்ள மூழ்குதரைப் பாலத்தை வெள்ளப் பாழ் சீரமைப்புப் பணியின் கீழ் புதுப்பித்தல். | 3,00,000 | பணி முன்னேற்ற நிலையில் உள்ளது. |
| 48 | தஞ்சாவூர் .. | காசன்காடு — பூலவேரிக் காடு சாலையில் கி.மீ. 0/0—இல் பட்டுமான்சி ஆற்றின் குறுக்கே உள்ள மூழ்கு பாலத்தை வெள்ளப்பாழ் சீரமைப்புப் பணியின் கீழ் புதுப்பித்தல். | 2,60,000 | பணி முன்னேற்ற நிலையில் உள்ளது. |

## இணைப்பு 42.

(பத்தி 4.5-ஐ பார்க்கவும்.)

1980–81-ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் 31–12–1980 முடிய ஏற்பட்ட செலவு பற்றிய விவரங்கள்.

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | அரசு சாலைகள். | | ஊராட்சி ஒன்றியச் சாலைகள். | | 259. கட்டிடங்கள். | | 306. சிறுபாசன ஏரிகள். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஒதுக்கீடு. | செலவு. | ஒதுக்கீடு. | செலவு. | ஒதுக்கீடு. | செலவு. | ஒதுக்கீடு. | செலவு. |
| | | (ரூபாய் இலட்சத்தில்). | | | | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 | செங்கற்பட்டு .. .. .. .. | 26.99 | 18.55 | 24·50 | 7·64 | 1·24 | 0.98 | 0·77 | 0·67 |
| 2 | தென் ஆற்காடு .. .. .. | 27.64 | 8.84 | 14·16 | 11·19 | 1·77 | 0·52 | 2·71 | 2·45 |
| 3 | வட ஆற்காடு .. .. .. .. | 16.35 | 7.75 | 6·69 | 4·17 | 0·88 | (—)0·25 | 0·24 | (—)0·42 |
| 4 | திருச்சிராப்பள்ளி .. .. .. | 9.67 | 8.78 | 13·20 | 8·78 | 0·22 | 0·09 | 0·14 | 0·09 |
| 5 | தஞ்சாவூர் .. .. .. .. | 18.20 | 28.95 | 26·43 | 28·50 | 2·37 | 1·21 | .. | .. |
| 6 | புதுக்கோட்டை .. .. .. | 0.84 | 2.10 | 0·57 | 1·58 | 0·45 | 0·39 | .. | .. |
| 7 | மதுரை .. .. .. .. | 30.53 | 17.64 | 27·37 | 12·42 | (—)0·20 | 1·09 | 0·20 | 0.06 |
| 8 | திருநெல்வேலி .. .. .. | 21.74 | 19.42 | 27·23 | 21·07 | 0·85 | 6·66 | 2·25 | 1·72 |
| 9 | கன்னியாகுமரி .. .. .. .. | .. | ( )1.61 | 0·05 | 0·21 | .. | .. | .. | .. |
| 10 | இராமநாதபுரம் .. .. .. | 31·92 | 18.57 | 54·87 | 25·61 | (—)0·05 | (—)0·21 | 2·31 | 2·31 |
| 11 | கோயம்புத்தூர் .. .. .. | 3·47 | 6.28 | 4·88 | 4·46 | 0·92 | 0·99 | 0·32 | 0·32 |
| 12 | நீலகிரி (உதகமண்டலம்) .. .. | 5·12 | 5.11 | 2·72 | 4·52 | 0·25 | 0·25 | .. | 0.25 |
| 13 | பெரியார் .. .. .. .. | 22·69 | 4.95 | 8.90 | 1·73 | 0·30 | 1·18 | 0·27 | 0·25 |
| 14 | சேலம் .. .. .. .. | 5·45 | 0.22 | 2·73 | 1·08 | 1·14 | 0·89 | .. | .. |
| 15 | தருமபுரி .. .. .. .. | 2·46 | 1.57 | 1·18 | 0·74 | 0·05 | 0·05 | 0·04 | 0·04 |
| | மொத்தம் .. | 2,23.14 | 1,57.22 | 2,15·48 | 1,33·70 | 10·19 | 6·84 | 9·25 | 7·49 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1981 ஏப்ரல் 1.

பங்குனி 19, ரௌத்திரி—திருவள்ளுவர் ஆண்டு 2012

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நீங்கள் அமைச்சராக ஆகி விட்டதாகக் கேள்விப்படுகிறோம். அப்படியிருக்க நீங்கள் தலைமை தாங்கி நடத்தலாமா ? (சிரிப்பு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று ஏப்ரல் 1 ஆம் தேதி என்று எனக்குத் தெரியும். (சிரிப்பு.)

''பொருள்கருவி காலம் வினையிடனோடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்''.

ஒரு செயலைச் செய்யத் தொடங்கும்போது, அதற்கு வேண்டிய பொருள், அதற்கு ஏற்ற கருவி, பொருத்தமான காலம், செய்வதற்கு உகந்த முறை ஆகிய இந்த ஐந்தினையும் மயக்கம் தீர எண்ணிப் பார்த்து பின்பு அந்தச் செயலைச் செய்யவேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### தொழிற்சாலைக்கான மின் கட்டண பாக்கி வசூல்.

*வினா எண். 579—திரு. இல. பலராமன், திரு. ரா. கிருஷ்ணன், திரு. ஆர். ரங்கசாமி, திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொழிற்சாலைகளுக்கான மின் கட்டணம் வசூலாக வேண்டிய தொகை எவ்வளவு ?

(ஆ) பெரிய தொழில் ? சிறிய தொழில் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 31-ஆம் நாள் வரை ரூபாய் 1,373.71 இலட்சங்கள்.

(ஆ) 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டுத் திங்கள் 31 ஆம் நாள் வரை உயர்மின் அழுத்த தொழிற்சாலைகள் ரூபாய் 1,164.94 இலட்சங்கள்; குறைவழுத்த தொழிற்சாலைகள் ரூபாய் 208.77 இலட்சங்கள்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு தொகை பாக்கியுள்ள தொழில் நிறுவனங்களிடமிருந்து அதை வசூலிப்பதற்கு அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை? அதில் ஏற்பட்ட தடைகள் என்ன? இதுபோன்ற பாக்கியிருப்பதால், பொதுமக்கள் மத்தியிலே, விவசாயிகள் மத்தியிலே, அவர்கள் தாங்களும் கட்டாத சூழ்நிலை உருவாகிறது அல்லவா? அப்படி உருவாக்கித் தருகிற சூழ்நிலையை அரசு வழங்குகிறது என்பதை அரசு உணருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பெரிய தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில், தேசிய பஞ்சாலை நிறுவனம் ஏற்றுக்கொண்ட, அதாவது மத்திய அரசு ஏற்றுக்கொண்ட 9 ஆலைகளிலிருந்து வரவேண்டியப் பாக்கி ரூபாய் 36.81 இலட்சம். அது சம்பந்தமாக சில சட்ட பிரச்னைகள் இருந்து வருகின்றன. ரூபாய் 104.77 இலட்சம் பாக்கி உள்ள 15 ஆலைகளுக்கு மின் துண்டிப்புகள் ஏற்கெனவே செய்யப்பட்டு விட்டன. ரூபாய் 30.9 இலட்சம் பாக்கி உள்ள 3 ஆலைகள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரூபாய் 2.41 இலட்சம் பாக்கி உள்ள இரண்டு ஆலைகள் தவணை முறையில் மின் கட்டணத்தைச் செலுத்தி வருகின்றன. ரூபாய் 9,47,24,000 பாக்கி உள்ள மால்கோ நிறுவனம் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது. தீர்ப்புக்குப் பின்னர்தான் நடவடிக்கை எடுக்க முடியும்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது அது போன்ற நிலுவைகளை வசூலிப்பதற்கான சட்டங்களை இயற்றிக் கொண்டிருக்கிறோம். அந்தச் சட்டங்களினாலே ஏதாவது பயன் கிடைக்குமா? பஞ்சாலைகளுக்கு ஏற்கெனவே முதலாளிகள் இருந்த காலத்தில், அரசு ஏற்பதற்கு முன்னால் அந்த பாக்கிகள் நின்றதா அல்லது மத்திய அரசு ஏற்ற பின்னால், அந்த நிலுவைத் தொகை நின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, குறிப்பாக இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு எந்தவித நிலுவைத் தொகைகளும் கிடையாது. இந்த நிலுவைகள் எல்லாம், ஏற்கெனவே இந்தச் தொழிற்சாலைகள் செலுத்த வேண்டிய நிலுவைகள். குறிப்பாக, 1966—67-லே கூட சில பஞ்சாலைகள் நொடித்துப்போய் "சிக்" மில்களாக ஆகிவிட்டன.





அந்தக் காலக்கட்டத்திலேயும் இருந்தது, அதற்குப் பின்னரும் நிலுவைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, பழைய பாக்கியைத்தான் நாம் இப்பொழுது வசூலித்துக் கொண்டிருக்கிறோம். நான் ஏற்கெனவே சொன்னதைப் போல், பாக்கி சுமார் ரூபாய் 13 கோடி என்றாலுங்கூட, அதிலே குறிப்பிடத்தக்க அளவுக்கு ஒரே ஒரு நிறுவனம்தானிருக்கிறது. மற்றபடி பார்க்கும்போது, ரூபாய் 1 கோடி, ரூபாய் 30 இலட்சம் என்ற அளவிலேதானிருக்கிறது. அது சம்பந்தமாக மின் துண்டிப்புகள் நடந்திருக்கின்றன, நாங்கள் நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். ஆகவே, அவைகள் எல்லாம் பழைய பாக்கிகள் என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, மொத்தம் பாக்கி நிற்கிற ரூபாய் $13\frac{3}{4}$ கோடியில் கிட்டத்தட்ட ரூபாய் 11 கோடியே 63 இலட்சம் வரைக்கும் பெரிய தொழிற்சாலைகள்தான் பாக்கி வைத்திருக்கின்றன. ஆக, பெரிய தொழிற்சாலைகள் இப்படி பாக்கி வைத்திருப்பதை வசூல் செய்வதற்கு, மின் வாரியம் அலட்சியமாக இருக்கிறதா அல்லது, அஜாக்கிரதையாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இதிலே அஜாக்கிரதை ஒன்றும் கிடையாது. நான் ஏற்கெனவே சொன்னதைப் போல 9 கோடியே 43 இலட்சம் மால்கோ நிறுவனத்தில் மட்டும்தான் பாக்கி இருக்கிறது. அது வந்துவிட்டாலே இந்த 13 கோடியிலே $9\frac{1}{2}$ கோடி வந்துவிடும். மற்ற 104 இலட்சங்களுக்கு ஏற்கெனவே நாம் மின் துண்டிப்புச் செய்திருக்கிறோம். அந்த ஆலைகள் நடக்காமல் சிக் இன்டஸ்ட்டிரியாக ஆகிவிட்டன. அவற்றை எல்லாம் புதுப்பிப்பதற்கும், மற்ற நடவடிக்கைகள் ஏதாவது மேற்கொள்வார்களானால்தான் இவைகளை நாம் வசூலிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். இந்த நிறுவனத்தைப் பொறுத்த வரையில்கூட, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, மின் துண்டிப்புக்கு நாம் உத்தரவிட்டிருக்கிறோம். ஆனால், அதை எதிர்த்து அவர்கள் நீதி மன்றத்திற்குச் சென்று "ஸ்டே" வாங்கியிருக்கிறார்கள். வழக்கு நீதி மன்றத்தில் இருக்கின்றது. நீதிமன்றத்தில் அந்த வழக்கை விரைவுபடுத்த வேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இப்போது இந்த எலக்டிரிசிடி "தெப்ட்" நடக்கிறது. குறிப்பாக பெரிய தொழிற்சாலைகளில் நேரடியாக அந்த ஒயர்லே இருந்து கம்பிகள் போட்டு எடுத்துக் கொள்வதாகச் சொல்லப்படுகிறது. இப்படிக் களவு போவதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி வருகிறோம். லைன் லாஸ் என்று சொல்வதிலே இவைகள் எல்லாம் அடங்குகின்றன. இந்த லைன் லாஸ் பற்றி தீவிரமாக ஆராய்வதற்கு—உண்மையிலேயே இது மின்சார இழப்புதானா அல்லது களவு மூலம் போகிறதா—என்பதை ஆராய்வதற்கு அரசாங்கம் ஒரு கமிட்டியைக் கூட அண்மையிலே போட்டிருக்கிறது.

திரு. ஆர். ரங்கசாமி : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைகளிலே மின்கட்டணப் பாக்கி எத்தனை ஆண்டுகளாக இருந்து வருகின்றது? இதைப் பயன்படுத்திக் கொண்டு சில விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், பல கோடி ரூபாய்கள் மின்சாரக் கட்டணம் பாக்கி வைத்திருக்கின்ற தொழிற்சாலைகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால், எங்களுக்கு 100, 200 எல்லாம் கட்ட வேண்டும் என்று கடினப்படுத்துகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இந்தத் தொழிற்சாலைகள் அனைத்தின் மேலும் வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றனவா? அப்படி என்றால் எந்தெந்தத் தொழிற்சாலைகள் என்று பெயரை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது மிகப் பெரிய நீண்ட பட்டியல். அவற்றை எல்லாம் அறிவிப்பது என்பது மிகவும் கடினமான காரியம். பொதுவாக பீரியட் ஆப் அரியர்ஸ் என்று சொல்லுகிறபோது, 1967 ஆம் ஆண்டில் இருந்து 1975–76 ஆம் ஆண்டு வரையில் வருகின்றது. இது பீரியட் ஆப் அரியர்ஸ். இதிலே மிகப் பெரிய அளவிலே தொழிற்சாலைகள் கட்டாமல் இருக்கின்றன என்பது தவறு. ஏனென்றால் ஒரே ஒரு தொழிற்சாலை மட்டும் தான் பெருமளவுக்குக் கட்டாமல் இருக்கின்றது. மற்றவைகள் எல்லாம் சாதாரணமாக அவர்களுக்கு ஒரு மாதம், 2 மாதம் அரியர்ஸ் என்ற அளவுக்கு வரும். அதில் பல தொழிற்சாலைகள் நொடித்துப்போய் இருக்கின்ற காரணத்தால் அவற்றை வசூலிக்க முடியவில்லையே தவிர, வேறு அல்ல. நாம் மின் துண்டிப்பு செய்கிறோம். விவசாயிகள் எங்களுக்கு மின் துண்டிப்புச் செய்யாதீர்கள் என்கிறார்கள். தொழிற்சாலைகளில் நாம் இன்றைக்கும் மின் துண்டிப்பு செய்கிறோம். அவர்களுக்குப் பில் கொடுத்த 15 நாட்களுக்குள் பணம் கட்டவில்லை என்றால் மின் துண்டிப்பு செய்கிறோம். இன்றைக்கு விவசாயிகள் மின் துண்டிப்பை ஏற்றுக் கொண்டால் போதுமானது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பாக்கியே இல்லாமல், குறைவில்லாத வகையில் கட்டணத்தை ஒழுங்காச் செலுத்துகின்ற தொழிற்சாலைகளுக்கு, மின்வெட்டுக் காலங்களிலே மின்சாரத்தை வழங்குவதற்கு சலுகை



அளிக்கப்படுமா ? அந்த வகையில் எடுத்துக் கொண்டால் புதிய தொழிற்சாலைகளுக்கும் இந்த மின்வெட்டுக் காலங்களில் சலுகை அளிக்கப்பட்டு, முழு மின்சாரம் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை. ஆனால், இன்று இது தேவையில்லை. ஏனென்றால் மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி என்பார்கள். அதைப்போல இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு அவர்கள் பணம் கட்டவில்லை என்றால் மின் துண்டிப்பு உடனே நடைபெறுகிறது. இன்றைய தினம் எல்லா தொழிற்சாலைகளும் ஒழுங்காகக் கட்டி வருகின்றன. இவைகள் எல்லாம் பழைய பாக்கி. அவற்றில் பல தொழிற்சாலைகள் நலிவடைந்து விட்டன. சில நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றன. ஒரு சில மத்திய அரசு மேற்கொண்டிருக்கின்றது.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் இருந்து ஒழுங்காக மின் கட்டணம் கட்டிவிடுகிறார்கள் என்று தெரிகிறது. அப்படி பாக்கி வைத்திருக்கிற சிலரும், அவர்கள் இந்த அரசு வருவதற்கு முன் பாக்கி வைத்திருந்தாலும் கூட, தொழில் முடக்கப்படுகின்ற காரணத்தாலே, அவர்கள் வைத்திருக்கிற மின்சார பாக்கியை, அவர்கள் ஜெனரேட்டர் வைப்பதாக—அவர்களே மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற அளவில், அந்த மின் கட்டணப் பாக்கியை கடனாகக் கருதி, அந்த வகையிலே சில ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் அதைப் பற்றி அரசு ஆராயும்.

(முற்பகல் 9–10)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசுக்கு வரவேண்டிய மிக அதிகமான பாக்கி ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து வரவேண்டி இருக்கிறது. 1967 ஆம் ஆண்டில் இருந்து அந்த நிறுவனத்திற்கு இப்படி அதிகமான பாக்கி இருப்பதாக அரசு அறிந்திருந்த போதிலும், அதை வசூலிப்பதற்கான நடவடிக்கையை எடுக்காததற்கான தனிக் காரணம் என்ன ? பிற மாநிலங்களில் இருப்பதைப்போல் மின்சாரக் கட்டணத்தை வங்கிகள் மூலம் வசூலிப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏன் நடவடிக்கை இல்லை என்பதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை. ஆனால், நடவடிக்கை எடுக்கவில்லை என்பது மட்டும் தெரிகிறது. மற்ற மாநிலங்களில் வங்கி

களில் மின் கட்டணம் வசூலிக்கும் முறை மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அதிலேயும் சில சங்கடங்கள் இருக்கின்றன. டெல்லியில் அந்த முறை மேற்கொண்டார்கள். அங்கே வங்கிகளில் மின் கட்டணம் செலுத்தியவர்களுக்குக் கூட மின் துண்டிப்புச் செய்யும் நிலைக்கு மின்வாரியம் சென்று இருக்கிறது. அதற்குக் காரணம் வங்கிகளிடமிருந்து மின்வாரியத்திற்குக் கணக்குகள் போய் சேருவதில் தாமதம் ஏற்படுகின்றது என்று சொல்லப்படுகிறது.

**திரு. ரா. உமாநாத் :** பேரவைத் தலைவர் அவர்களே, 11 கோடியிலே 9 கோடி ரூபாய் மால்கோ என்கிற ஒரேயொரு நிறுவனத்திடமிருந்து பாக்கி இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது சம்பந்தமாக அந்த நிறுவனம் கோர்ட்டிலே ஸ்டே ப்ரொசீடிங் வாங்கியிருப்பதாகச் சொன்னார்கள். கோர்ட்டில் இருக்கிற ப்ரொசீடிங்ஸை துரிதப்படுத்துவதற்கு—இதற்கு முன்னால் இந்தப் பிரச்சினை குறித்து கேட்டபோது—கட்டாயமாக நடவடிக்கை எடுக்கிறோம் என்று அரசாங்கம் இரண்டு முறை வாக்குறுதி அளித்து இருக்கிறார்கள். பவர் கன்சல்டேடிவ் கமிட்டியிலும் இது குறித்துச் சொல்கிறபோது கோர்ட் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கிறோம் என்று வாக்குறுதி அளித்தார்கள். இப்படி மூன்று முறை வாக்குறுதி அளிக்கப்பட்ட பின்பும் கோர்ட் நடவடிக்கையைத் துரிதப்படுத்துவதற்கு கான்கிரீட்டாக, ஸ்தூலமாக என்ன நடவடிக்கை அரசு எடுத்து இருக்கிறது ? அப்படி எடுக்கவில்லையென்றால், அந்த நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் அரசாங்கம் ஸ்லோ டவுன் பண்ணுகிற யோசனை ஏதாவது இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஸ்லோ டவுன் பண்ணுவதற்கான யோசனை இல்லை. இந்த வழக்கைப் பொறுத்த வரையில் நாம் விரைவுபடுத்த வேண்டும் என்றுதான் வற்புறுத்தி வருகிறோம். அது வழக்குகள் எடுத்துக்கொள்ளப்பட இருக்கும் " பேர் லிஸ்ட்டில் " சேர்க்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. " இட் ஈஸ் இன்க்லூடட் இன் தி பேர் லிஸ்ட் " என்று சொல்கிறர்கள். எந்த நேரத்திலும் அது எடுத்துக்கொள்ளப்படலாம் என்று சொல்கிறார்கள். அது எந்த நேரம் என்பது தெரியவில்லை. " பட் இட் ஈஸ் இன்க்லூடட் இன் தி பேர் லிஸ்ட். " அதை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் நாம் நிச்சயமாக ஈடுபட்டு வருகிறோம்.

**திரு. பாபு ஜனார்தனன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மால்கோ நிறுவனம் 9 கோடிக்கு அதிகமாக பாக்கி வைத்திருக்கிற நேரத்தில், அரசுத் தரப்பில் உள்ள வழக்கறிஞர் அந்த ஸ்டே கொடுக்கிற நேரத்தில் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்று ஒரு செய்தி கேள்விப்படுகிறோம். ஆகவே, அது குறித்து அரசு என்ன பதில் சொல்கிறது என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தும்பை விட்டு வாலைப் பிடிப்பது போல் தான் இந்தக் கோர்ட்டில் போய் நாம் நிற்பது. ஏனெனில், மின் வெட்டு அமலாக்கப்பட்ட காலத்தில் இந்த மால்கோ நிறுவனத்திற்கு அரசு மின்சாரம் கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் கோட்டாவிற்கு அதிகமாகப் பயன்படுத்தி இருக்கிறார்கள். அப்படி பயன்படுத்திய தன் காரணமாக சுமார் 7.18 கோடி ரூபாய் அபராதம் தரவேண்டியிருக்கிறது. அதை மால்கோ நிறுவனம் செலுத்தமாட்டேன் என்கிறார்கள். ஏனெனில், அப்போது இருந்த அரசு எங்களை அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ளச் சொன்னார்கள் என்று சொல்கிறார்கள். அரசாங்கத்தில் இருந்து மின் வாரியத்திற்கு ஒரு கடிதம் போய் இருக்கிறது. மின்சார வாரியம் சிபார்சு செய்து அரசாங்கத்திற்கும் அனுப்பி இருக்கிறது. அப்படி இருந்தும் அரசாங்கம் அதில் எந்த உத்தரவும் இடவில்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, விவசாயிகளுக்கு இந்தத் தொழில் கட்டுபடியாகவில்லை ; ஆகவே கட்ட மாட்டோம் என்று சொல்லி போராட்டம் நடத்துகிறார்கள் அவர்களுக்கு கட்டுப்படியாகவில்லை என்பதை நாமும் ஒப்புக்கொள்கிறோம். ஆனால், கொள்ளை இலாபம் அடிக்கிற தொழில் முதலாளிகள் இவ்வளவு பாக்கி வைத்திருப்பதற்குக் காரணம் என்ன ? அவர்களிடம் 3 மாத டிபாசிட் வாங்கவில்லையா ? அப்படி வாங்கியிருந்தால் ஒரு மாதம் கட்டணம் கட்டவில்லை என்றாலே மின்சாரத்தைத் துண்டிக்கலாமே ! அப்படித் துண்டிக்க வில்லையா ? ஏன் துண்டிக்கவில்லை ? பாக்கி வசூல் செய்ய பல்வேறு சட்டங்கள் எல்லாம் போட்டிருக்கிறீர்கள். அந்தச் சட்டங்கள்படி அவர்கள் கட்டவில்லையென்றால் கிரிமினல் வழக்குகள் போட்டு, சிறையிலே தள்ளலாம் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் நீங்கள் அந்தச் சட்டங்களைப் பயன்படுத்தாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? இப்படி பாக்கி வைத்திருப்பவர்கள்.. .. .. ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பல கேள்விகளை அடுக்கிக் கொண்டு போனால் எப்படி பதில் சொல்ல முடியும்? கேள்வி சுருக்கமாக இருக்க வேண்டும்.

**திரு. சோ. அழகர்சாமி :** ஒரு கேள்விக்குத்தான் வாய்ப்பு கிடைப்பதால் அதிலே பல கேள்விகளைக் கேட்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, விவசாயிகளுக்கு கட்டுப்படியாகவில்லை ; ஆகையால் கட்ட மாட்டோம் என்கிறார்கள் என்று சொன்னார்கள். ஒவ்வொரு தொழிலிலும் இப்படி கட்டுப்படியாகவில்லை, ஆகையால் கட்ட மாட்டோம் என்று சொல்வதாக இருந்தால் மின்சார வாரிய

மும் எங்களுக்குக் கட்டுப்படியாகவில்லை, ஆகையால் மின்சாரம் தர மாட்டோம் என்றுதான் சொல்லவேண்டிவரும். அந்த முறை தவறு. ஒரு தொழிலை நடத்துகிறவர், அந்தத் தொழிலை கட்டுப்படியாகக்கூடிய வகையில் நடத்தும் பொறுப்பு அவரைச் சார்ந்தது. அதை கட்டுப்படியாகவில்லை என்று சொல்லி மின்சார வாரியத்தின் தலையிலே சுமத்தக்கூடாது. ஒரு மாத பாக்கி வந்தவுடனே ஏன் மின் துண்டிப்பு செய்யவில்லை என்று கேட்டார்கள். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஏன் துண்டிப்பு செய்யவில்லை என்பதற்கு காரணம் தெரியவில்லை; துண்டிப்புச் செய்யவில்லை என்பது தெரிகிறது. 3 மாத டெபாசிட் வாங்கவில்லையா என்று கேட்டார்கள். இவ்வளவு பாக்கி வைத்திருக்கிறவர்களுக்கு 3 மாத டெபாசிட் என்பது "யானைப் பசிக்கு சோளப் பொரி' போன்றது. மேலும் இதிலே மின்சாரக் கட்டணப் பாக்கி ஒரு கோடி என்றால், அதற்கான அபராதம் சுமார் 7½ கோடி ரூபாய். இதிலே 3 மாத டிபாசிட்டை வைத்து என்ன செய்ய முடியும்?

புளியமரங்களுக்கான பட்டாக்களை ஒப்படை செய்தல்.

*வினா எண் 472—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசுக்குச் சொந்தமான பலன் தரும் புளியமரங்கள் தனிப்பட்டவர்களுக்கு 2–சி பட்டா வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஊராட்சிகளில் வருமானம் பெருக்கும் வகையில் அவைகளை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு மறு ஒப்படை செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) அரசுப் புறம்போக்கு நிலங்கள் 1961 முதல் ஊராட்சிகளுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு ஒப்படை செய்யப்படுவதற்கு முன் தனிப்பட்டவர்களுக்கு மேற்படி புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்கள் மீது வழங்கப்பட்ட 2-சி பட்டாக்கள் வழக்கில் உள்ளன.

(ஆ) மறு ஒப்படை செய்யும் உத்தேசம் தற்போது இல்லை. எனினும், அவற்றின் மூலம் கிடைக்கும் வரி ஊராட்சிகளின் நிதியில் சேர்க்கப்படுகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, 1961 ஆம் ஆண்டுக்கு முன்பே இந்த மாநிலத்தில் சுமார் 12 இலட்சம் பயன்தரும் புளியமரங்கள் தனிப்பட்டவர்



களுக்கு ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அவைகள் மூலம் கிடைக்கின்ற வரி ஊராட்சிகளின் நிதியில் சேர்க்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஒவ்வொரு மரத்திலிருந்தும் 100 ரூபாய், 200 ரூபாய் வருமானம் வருகிறது. ஆனால் 3 ரூபாய் கட்டணம்தான் வசூல் செய்யப்படுகிறது. இந்த மரங்களை ஊராட்சிகளுக்கே ஒப்படை செய்தால் அந்த வருமானம் முழுவதும், கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் மாநிலம் முழுவதிலிருந்தும், ஊராட்சிகளுக்கே கிடைக்கும். ஆகவே இந்த மரங்களை எல்லாம் ஊராட்சிகளுக்கு ஒப்படை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, 2-சி பட்டா வழங்கப்பட்டு, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. புறம்போக்கு நிலங்களில் அவர்களே மரங்களை வைத்து வளர்த்து அதிலிருந்து வருகிற பலன்களை அவர்கள் அனுபவித்துக் கொள்கின்ற முறையில் 2-சி பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான ரூபாய் அவைகள் மூலம் வருமானம் வரும்போது ஏன் அரசாங்கம் எடுத்துக் கொள்ளக்கூடாது, அல்லது ஊராட்சிகளுக்கு ஒப்படை செய்யக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மாநிலம் பூராவும் 2-சி பட்டா எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது; எங்கெங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது; வருமானம் என்ன; எப்படி சீர் செய்வது; வருவாயை எப்படி அரசு கணக்கில் சேர்ப்பது என்பன போன்றவைகளை அரசு யோசித்து, ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, 3 ரூபாய் தற்போது வசூல் செய்யப்படுகிறது. இந்த 2-சி பட்டா என்பது right to collect the usufructs அனுபவத்திற்கு மட்டும் இந்தக் கட்டணத்தை வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்போது தருவதை விட இன்னொரு நபர் கூடுதல் தொகை நான் தருகிறேன் என்று சொல்லி, கூடுதல் தொகை தர முன்வந்தால் முந்தியவர் உரிமையை ரத்து, செய்து, கூடுதல் தொகை தருபவர் அனுபவிக்கும் உரிமையை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 2-சி பட்டாவில் குறைபாடு இருந்தாலோ அரசுக்கு அதனால் வருகின்ற வரும்படி குறைவாக இருக்கும் என்ற நிலைமை இருந்தாலோ அதிலே இருக்கின்ற நிலைமைகளை மாற்றி ஆவன செய்வதற்கு அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## நிலப்பதிவேடுகளைப் புதுப்பிக்கும் திட்டம்.

*வினா எண் 473—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலப்பதிவேடுகளை புதுப்பிக்கும் திட்டமொன்றை செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

**மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்:** (அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில், சென்னை, கன்னியாகுமரி, பெரியார், நீலகிரி மாவட்டங்களைத் தவிர இதர 12 மாவட்டங்களில் 1–6–1979 முதல் பதிவேடுகளைப் புதுப்பிக்கும் திட்டம் நடைமுறையில் அமல் படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** தலைவரவர்களே, இந்த நிலப் பதிவேடுகளைப் புதுப்பிப்பதிலே பல குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் அதை நீக்க வேண்டும் என்றும் பல இடங்களிலே இருந்து அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் வந்திருக்கின்றதா? அப்படிப்பட்ட குறைபாடுகள் ஏதாவது இருந்தால் அதை நிவர்த்திக்க அரசு உத்தரவை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவரவர்களே கிராமங்களிலுள்ள நிலங்களின் பதிவேடுகளில் உள்ள குறைபாடுகளை நீக்குவதற்காகத்தான் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது. 12 மாவட்டங்களில் இது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. அவற்றிலே எங்கேயாவது இதை நடைமுறைப்படுத்துவதிலே குறைபாடுகள் இருந்தால் அவற்றைப் போக்குவதற்கு அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எந்த கிராமத்தில் இது நடைமுறைப் படுத்தப் படுகிறதோ அதற்கு முன்பாகவே தண்டோரா மூலமாக மக்களை கூட்டி வைத்து இன்னும் என்னென்ன காரியங்கள் செய்கிறோம் என்பது பற்றி அறிவித்துவிட்டுத்தான் செய்யப்படுகின்றது. ஆகவே எங்கேயாவது குறைபாடுகள் இருக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தெரிவித்தால் அந்தக் குறைபாடுகளைக் களைய அரசு தயாராக இருக்கின்றது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** தலைவரவர்களே, இந்தப் பதிவேடு திருத்தமானது 4 மாவட்டங்களில்தான் அமல் படுத்தப்படுகின்றது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த 4 மாவட்டங்களிலும் புதுப்பிக்கக்கூடிய திட்ட வேலைகளைச் செய்வதற்கு அரசு உத்தரவிட்டு இருக்கிறதா? மேலும் தற்போது கிராமங்களில் பணிபுரிகின்ற முன்சீப், கர்ணம் போன்றவர்கள் இல்லாத நிலையில் யார் மூலமாக அவைகளைப் புதுப்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, பதிவேடுகளைப் புதுப்பிப்பதற்கும் கிராம அதிகாரிகளுக்கும் சம்பந்தமே இல்லை. கிராம அதிகாரிகள் கணக்குகளைத்தான் எழுதுகிறார்கள். ஆகவே பதிவேடுகளைப் புதுப்பிக்கின்ற பணியைப் பொறுத்தமட்டில் தனியாக டிப்பார்ட்மென்ட் இருக்கின்றது. சர்வே டிப்பார்ட்மென்ட் போன்றவைகள் இந்தப் பணியைச் செய்து வருகின்றன.

**திரு. உ. சுப்பிரமணியன்:** தலைவரவர்களே, பதிவேடுகளைத் திருத்தும் திட்டம் அமலில் இருக்கின்ற மாவட்டங்களில் அந்தந்தப் பதிவேடுகளுடன் நிலங்களைப் பற்றிய வரைபடங்களின் நகல் ஒன்றும் இருக்க வேண்டும் என்ற வகையில் அரசு அந்த முறையைக் கொண்டுவர முன்வருமா?

**மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, பதிவேடுகளைப் புதுப்பிக்கும் திட்டத்தின் கீழ் பதிவு செய்கின்றபோது அந்தந்தக் கிராமங்களிலே எவ்வளவு பட்டாக்கள் இருந்தாலும் அந்தப் பட்டாக்களை எல்லாம் தனித்தனியாக அளந்து அதற்கு வரைபடம் போட்டு அந்தப் பட்டாக்களின் சொந்தக்காரர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. தற்சமயம் அங்கே என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றதோ அந்த மாற்றத்திற்கேற்ப அதாவது புதிதாக பள்ளிக்கூடமோ, மருத்துவமனையோ வந்தது என்றால் அந்த கிராமத்தினுடைய வரைபடத்திலே அவைகள் எல்லாம் குறிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**THIRU T. VENKATA REDDY:** Sir. In Hosur and Denkarikota, ryots are cultivating mulberry on poramboke lands. They have been promised that they would be given pattas after the non-assignment order has been removed. Now that the assignment order has been promulgated in Dharmapuri District, and as the Government has promised to give pattas to these people, will they come forward to give pattas to these people who have been cultivating on these poramboke lands?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவரவர்களே மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

## சென்னையிலுள்ள வட்டிக் கடைக்காரர்கள்.

*வினா எண் 580—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள வட்டிக் கடைக்காரர்கள் தமிழிலோ, ஆங்கிலத்திலோ அல்லாமல் இந்தியில் கணக்கு எழுதுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் தமிழில் அல்லது ஆங்கிலத்தில்தான் கணக்கு எழுத வேண்டும் என்று அவர்களை அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு சி. பொன்னையன்:** (அ) சென்னையிலுள்ள அடகுக் கடைக்காரர்கள் அனைவரும் பொதுவாக எல்லாக் கணக்குகளையும் தமிழிலும் ஆங்கிலத்திலும்தான் எழுதுகிறார்கள்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. து. புருஷோத்தமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிந்த வரையிலே சில வட்டிக்கடைக்காரர்கள, வடமொழியிலேயே கணக்கு எழுதுவதாகத் தெரிகிறது. தமிழ் தெரிந்தவர் தான் வட்டிக் கடைகளில், கணக்குப்பிள்ளையாக இருந்தாலும்கூட, வட மொழியில் எழுதுகிற நடைமுறை இருந்து கொண்டிருக்கிறது. உதாரணம் வேண்டுமானாலும் என்னால் கொடுக்க முடியும். ஆகவே, எல்லோரும் தமிழில்தான் எழுத வேண்டும். அப்போதுதான் அரசு அதிகாரிகள் கணக்கை சரி பார்க்க முடியும் என்ற வகையில் ஒரு கண்டிப்பான உத்தரவை இடுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1944 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தினுடைய 10 (1), 10 (2) ஆவது பிரிவின்படி ஸ்தல மொழியில்தான், அந்தக் கணக்குகளை எழுத வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது. ஆனால் ஸ்தல மொழியாக கன்னியாகுமரி மாவட்டத்தில் சில இடங்களில் மலையாளத்திலும், சென்னையை சுற்றியிருக்கிற வட ஆற்காடு மாவட்டத்தில் பொன்னேரி, அரக்கோணம் போன்ற சில இடங்களில் தெலுங்கிலும், வட ஆற்காடு மாவட்டத்தில் சில இடங்களில், ஆம்பூர் திருப்பத்தூர், வாணியம்பாடி நகராட்சிகளில் உருதுவிலும், சேலம் மாவட்டத்தில் ஓசூர் மற்றும் உதகை மண்டல நகராட்சிகளில் கன்னடத்திலும், அவைகள் ஸ்தல மொழியாக இருக்கிற காரணத்தினால் எழுதலாம் என்றும் 1944 ஆம் ஆண்டு அடகு கடைக்காரர்கள் சட்ட விதி 10-ன் கீழ் கொண்டு வந்து உத்தரவு இடப்பட்டிருக்கிறது. மற்ற பகுதிகளில் தமிழில்தான் எழுத வேண்டும். காரணம் தமிழ்தான் ஸ்தல மொழியாக இருக்கிறது. அதை மாற்றி யாராவது எழுதுவார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் சுட்டிக் காட்டுவார்களேயானால், அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





**திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வட்டிக் கடைக்காரர்கள் தமிழகத்தில் 15 ஆயிரத்திற்கும் அதிகமான வட்டிக் கடைகளை வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் கணக்குகளை ஆங்கிலத்திலே எழுதினாலும் கூட அந்தத் தொகைக்கு அதிக வட்டி போட்டு பொது மக்களிடமிருந்து வாங்குவது மட்டுமல்லாமல், முதலில் பெறுகின்ற வட்டியை கணக்கில் காட்டுவதே கிடையாது. ஆகவே இப்படி அவர்கள் ஏழை மக்களை சுரண்டுவதை தடுக்க, இந்த வட்டிக் கடைகளை நடத்துவதை தடை செய்துவிட்டு, கூட்டுறவுத்துறை மூலம் சாதாரண ஏழை எளியவர்களுக்குத் தேவைப்படும் சிறு சிறு கடன்களை, குறைந்தவட்டியில் கொடுத்து உதவும்படியான ஒரு நடவடிக்கையை இந்த அரசு ஏற்று நடத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தனியார் வட்டிக் கடைகளை முழுமையாக தடை செய்கிறபோது எந்த அளவிற்கு ஏழை எளிய மக்கள் வாழ்க்கையில் பல கட்டங்களில் சிக்கல் ஏற்படுகிறது என்பதை கடந்த காலத்தில் அறிந்தோம். ஆனால் தனியார் வட்டிக் கடைக்காரர்கள் ஏழைகளிடம் சுரண்டுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இன்னும் தொடர்ந்து எடுக்கப்படும். அதோடு கூட்டுறவுத் துறையின் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி, அந்த அமைப்புகளின் மூலமாக ஏழை எளிய மக்களுக்கு குறைந்த வட்டியில் அதிக கடன் கொடுக்கக் கூடிய ஒரு நல்ல நடவடிக்கைகளை கடந்த 3 ஆண்டு காலமாக அரசு எடுத்து வருகிறது. நடப்பு ஆண்டிலேயும் அதை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொள்ள விருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மககள் தங்கள் சொத்துக்களை அடகுக் கடைகளில் அடைமானம் வைக்கிறபோது, அவர்கள் அடித்துக் கொடுக்கிற அந்த ரசீதில் ஆங்கிலத்தில் தான் எழுதப்பட்டிருக்கிறது. அதனால் அந்த மக்கள் அதை படித்துப் புரிநதுக்கொள்ள இயலாத நிலையில் இருக்கின்றனர். ஆகவே தமிழ் பேசப்படும் இந்த மாநிலத்திலாவது தமிழ் மொழியில் அந்த ரசீதுகளில் எழுத வேண்டும் என்று அரசு உத்தரவு இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில் எழுத வேண்டும் என்ற உத்தரவு இருக்கிறது. ஆங்கிலத்திலும் எழுதலாம் என்கிற உத்தரவு இருக்கிறது. தமிழில் மட்டுமே எழுத வேண்டும் என்ற உத்தரவு இல்லாத காரணத்தினால், அதைப் பயன்படுத்திக் கொண்டு ரசீதுகளில் ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள். அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

[1981 ஏப்ரல் 1

**நீதி மன்றங்களில் முடிவுறாமல் உள்ள குற்ற வழக்குகள்.**

*வினா எண் 581—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் நீதி மன்றங்களில் கிரிமினல் வழக்குகள் குறிப்பிட்ட காலத்திற்குள் பைசல் செய்யப்பட வேண்டும் என முறைப்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு சி. பொன்னையன் :** (அ) ஆம்.

(ஆ) குற்ற வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் அவ்வழக்குகளை விரைவாக முடிவு செய்வதற்காக சென்னை உயர்நீதி மன்றம் இம் மாநிலத்திலுள்ள மாஜிஸ்டிரேட்டுகளுக்கு கட்டளைகள் பிறப்பித்துள்ளது.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றம், இந்த வழக்குகளை எல்லாம் விரைவாக முடிக்க வேண்டும் என்று இம் மாநிலத்திலுள்ள மாஜிஸ்டிரேட்டுகளுக்கு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் 5 ஆண்டுக் காலமாகக் கூட வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. ஒரு வழக்கு 1976 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எவ்வளவு வேண்டுமானாலும் உதாரணங்கள் என்னால் காட்ட முடியும். ஆகவே, அப்படி இருக்கிற முறையைப் போக்க, விரைவாக வழக்குகள் உடனடியாக முடிக்கப் பெற வேண்டும் என்று அரசு நீதிமன்றங்களுக்கு உத்தரவு இடுமா ? ஏனென்றால் நீண்ட நாட்கள் வழக்குகள் நடைபெற்றால், பணக்காரர்களால் அதனால் ஏற்படும் செலவைத் தாங்கிக் கொள்ள முடியும். ஆனால் ஏழைகளால் முடியவில்லை. ஆகவே, அந்த உத்தரவை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் நடவடிக்கை எடுத்து உத்தரவு கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



981 ஏப்ரல் 1]

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு சி. பொன்னையன் :** ஏழைகளுக்கு எளிதில், [illegible]முறையில் நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உயர்நீதி மன்றத்தின் மூலம் அதன்கீழ் பணி புரிகின்ற நீதிமன்றங்களுக்கு அரசாங்கம் அவ்வப்போது அறிவுறுத்தி வருகிறது.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபடியும் சொல்கிறார்கள், அறிவுறுத்தப்பட்டு வருகிறது என்று. எனது தொகுதியில் தேவனாம்பட்டு கிராமத்திலிருந்து 1976 ஆம் ஆண்டிலிருந்து ஒரு கிரிமினல் வழக்கு திருவண்ணாமலை கோர்ட்டில் இன்றுவரை நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அந்த நீதிபதி மீது நடவடிக்கை எடுக்க ஏதாவது வழி இருக்கிறதா? இல்லையென்றால் அதற்கு ஏதாவது வழிவகை செய்ய அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு சி. பொன்னையன் :** ஒரு வழக்கு தாமதமாகிறது என்றால் அதற்கு நீதிபதிகளை மட்டும் காரணம் என்று சொல்லிவிட முடியாது. பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. உதாரணமாக, இரசாயன சோதனை செய்ய வேண்டி வரும் போது தமிழ்நாட்டில் ஒரே ஒரு இடத்தில்தான் இரசாயனச் சோதனை செய்யக்கூடிய இடம் இதுகாறும் இருந்துக் கொண்டிருக்கிறது. அதுபோன்ற பிரச்சினைகளையெல்லாம் தீர்க்க மேலும் இரசாயன சோதனை செய்யக் கூடிய இடங்களை மேலும் ஒன்றிரண்டு இடங்களில் அமைக்கலாமா என்று கூட அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. ஆகவே எந்த வழக்கு என்று சுட்டிக் காட்டினால் அதுகுறித்து உயர்நீதி மன்றத்திற்கு அரசு தெரிவிக்கும்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது உயர்நீதிமன்றம் அறுபது தினங்களுக்குள்ளாக வழக்குகளை முடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். சார்ஜ் ஷீட் போட்டு அறுபது தினங்களுக்குள்ளாக வழக்குகளை முடிக்க வேண்டுமென்று சொல்லும் போது, எப்.ஐ. ஆர். என்ற முறையில் போட்டு ஆறு ஆண்டுகளாக 1976-ல் இருந்து இராமநாதபுரம் குற்றவியல் முதல் வகுப்பு நீதிபதியிடம் ஒரு வழக்கு இருக்கிறது. அதன் நம்பரை வேண்டுமானாலும் நான் சொல்கிறேன். ஆக, 1976-ல் இருந்து இது வரை அந்த வழக்கு முடிக்கப்படாமலிருக்கிறது. இது போன்ற ஆயிரக்கணக்கான வழக்குகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகள் கூடாது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னதால் சொன்னேன். இப்படி ஆயிரக்கணக்கான வழக்குகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அவற்றைத் துரிதப்படுத்த இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சாட்சிகள் ஒழுங்காக நீதிமன்றத்திற்கு வராத காரணத்தால் கூட வழக்குகள் தாமதப்படுகின்றன. இப்படிப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன என்றுதான் சொன்னேன். எந்த வழக்கு என்று தான் கேட்டேன். ஓட்டு மொத்தமாக வழக்குகள் தாமதமாகின்றன என்றால் அதைத் தவிர்க்க தீவிர நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகிறது.

திரு. ரா. உமாநாத் : அமைச்சர் அவர்கள் சார்ஜ் ஷீட் போட்ட இரண்டு மாதங்களுக்குள் வழக்குகளை முடிக்க உத்தரவு போட்டிருப்பதாகச் சொன்னார்கள். இருந்தாலும் நடைமுறையில் ஏராளமாக கேஸ்கள் தாமதமாகின்றன. கன்ஸேர்ன்ட் கீழ் கோர்ட்களில் வேகன்ஸீஸ் இருப்பதால் கேஸ்கள் அக்யூமலேட் ஆகிறது என்ற காரணம்தானா ? அப்ப்டியானால் அந்த வேகன்ஸிஸ்களை பில்லப் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அப்படி நீதிமன்றங்களில் நீதிபதிகள் பதவி காலியாக இருக்கிற இடங்களுக்கு உடனடியாக நீதிபதிகளைப் போட வேண்டும் என்று அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. என்றாலும் வழக்குகளின் தாமதத்திற்கு அது மட்டுமே காரணமல்லவென்று சுட்டிக்காட்டினேன். ஒருகாரணம், குற்ற வழக்குகளில் தொடர்பான சாட்சியங்களையெல்லாம் நீதிமன்றத்திற்கு கொண்டு வருவதற்கு காவல் துறை அதிகாரிகள் இன்னும் சற்று அதிகமாக வேண்டும், என்னென்ன காரணங்களால் தாமதம் ஏற்படுகிறது என்பது ஆய்வு செய்யப்பட்டபோது அந்த ஆய்வின் அடிப்படையில் அதிகமான காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் குற்றங்கள் சம்பந்தப்பட்ட சாட்சியங்களை நீதிமன்றங்களுக்கு கொண்டு வர வேண்டும் என்றும் அதுமட்டுமல்லாமல் விசாரணைக் கைதிகளாக இருக்கிறவர்களைக் கூட சிறையிலிருந்து நீதி மன்றத்திற்குக் கொண்டு வர அதற்கும் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இன்னும் அதிகமாக இருக்க வேண்டுமென்றும், அது மட்டுமல்லாமல் இரசாயன சோதனை செய்யக் கூடிய இடம் நம் மாநிலத்தில் ஒரே ஒரு இடத்தில்தான் இருப்பதால் தவிர்க்க முடியாத தாமதம் அங்கே ஏற்படுகிறது என்ற காரணத்தால் அதையும் தவிர்க்க அத்தகைய இரசாயனச் சோதனைக் கூடங்களை இன்னும் அதிகமாக சில இடங்களில் அமைக்க வேண்டும் என்றும் ஆய்விலிருந்து தெரிய வந்திருக்கிறது. ஒரு புலனாய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அந்த அதிகாரி மூன்று ஆண்டுகள் அந்த இடத்தில் இருந்துவிடுவார்களானால் இல்லை மூன்று ஆண்டுகள் முடிகிற கட்டத்தில் அவர் அங்கிருக்கிற நேரத்தில் புலனாய்வு மேற்கொள்ளும்போது மாற்றப்பட்டு விடுகிறார் என்ற நிலை வரும்போது வேறு ஒரு அதிகாரி வந்து புலனாய்வு மேற்கொள்ளும்போது அதனால் கூட சில சமயங்களில் தாமதம் ஏற்படுகிறது. இதுகாறும் நடைமுறையில் இருந்து வந்த வழக்கப்படி ஒரு நீதிமன்றத்திற்கு ஒரு உதவி அரசாங்க வழக்கறிஞர் என்றிருக்கிற நிலைமை இல்லாமல் மூன்று நான்கு நீதிமன்றங்களுக்கு ஒரு உதவி அரசாங்க வழக்கறிஞர் என்ற ஓர் நிலை கீழ்மட்டத்தில் இருந்த வந்தது. அதனாலும் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்க்க, ஒவ்வொரு குற்றவியல் நீதிமன்றத்திற்கும் தனியாக ஒரு உதவி அரசாங்க வழக்கறிஞர் போடவேண்டும் என்ற அடிப்படையில் அரசாங்கம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. இவையெல்லாம் நடைமுறைப்படுத்துகிறபோது இந்தப் பிரச்னைகள் தீரும் என்று நம்புகிறேன்.



திரு. மா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் அரசு எடுத்த முடிவின் காரணமாக, ஏற்கனவே குற்றவியல் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டாக இருந்தவர்கள் சிவில் வழக்குகள் விசாரிக்கின்ற முன்சீப் தகுதியைப் பெறுவார்கள். அப்போது ஏற்கனவே தேங்கியிருக்கிற குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்காக போதுமான நீதிபதிகள் இல்லாமல் இருப்பதால், அதைத் தவிர்க்கும்பொருட்டு தனியாக குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கு குற்றவியல் நீதிபதிகளை முன்சீப் காடரில் ஏற்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்டக்ரேடட் ஸ்கீம் புரோக்கிராம்படி குற்றவியல் நீதிபதிகள் சிவில் வழக்குகளை நடத்துவது மட்டுமல்ல சிவில் வழக்குகளை நடத்துகின்ற நீதிபதிகள் குற்றவியல் வழக்குகளை நடத்தலாம் என்று ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக, ஒரு டிஸ்டிரிக்ட் முன்சீப் ஒரு சப் மாஜிஸ்திரேட் எலிவேடட் டு தி ராங்க் ஆப் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்திரேட், ஆக இருவரும் ஒரே நிலையிலிருந்து சிவில், கிரிமினல் ஆகிய இரண்டு வழக்குகளையும், பர்ஸ்ட் அண்டு செகண்டு கிளாஸ் வழக்குகளை அவர்கள் மேற்கொள்ளலாம் என்று நாம் நடைமுறையில் கொண்டு வரயிருக்கிறோம். அப்போது இந்தப் பிரச்னை தீரும். அதற்கு மேலும் ஆங்காங்கு குற்றவியல் நீதிபதிகள் தேவைப்படும் என்றால் கண்டிப்பாக அரசு அதற்கு நடவடிக்கை எடுக்கும்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணத்திற்கு, ஏற்கனவே சாராய கேஸ்களை இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் நடத்திக் கொண்டு

வந்தார்கள். சர்க்கார் கொண்டு வந்த சட்டத்தினால் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக்குத்தான் விசாரிக்க அதிக ரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் 1978 ஆம் ஆண்டிலிருந்து ஆயிரக்கணக்கான கேஸ்கள் ஒவ்வொரு கோர்ட்டிலும் தேங்கி இருக்கிறது. இரண்டாம் வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக்கு, முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டு அதிகாரம் கொடுத்து, இவை களை டிஸ்போஸ் செய்வதற்கு அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்டக்ரேஷன் ஆப் ஜீடிஷியரி நடைமுறைப்படுத்துகின்றபோது இந்தப் பிரச்னை தீரும் என்று அரசு நம்புகிறது.

**தங்கமாபட்டியிலுள்ள கிராமக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மீதான புகார்.**

*வினா எண் 582—**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம், அய்யலூர் கிராமம், தங்கமா பட்டியில் உள்ள கிராம கூட்டுறவு சங்கத்திடம் மக்களுக்கு வழங்க கொடுக்கப்பட்ட சீனி மூட்டைகளை அச்சங்கத் தலைவர் விற்றுவிட்டதாக 1980 ஜுன் மாதத்தில் புகார் செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு சி. பொன்னையன் :** (அ) ஆம்.

(ஆ) வழக்குப் பதிவு செய்யப்பட்டு காவல்துறையினரின் விசாரணையில் இருந்து வருகின்றது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கத்திற்கு மக்களுக்கு வழங்கக் கொடுக்கப்பட்ட சீனியை விற்கும்போது, அந்தத் தலைவரை பொதுமக்களே பிடித்தார்கள். வழக்கில் உள்ள அந்தத் தலைவர் பதவியைப் பிடித்துக் கொண்டிருக்கிறார். வழக்கு முறையாக நடத்த, அந்தத் தலைவரை பதவியிலிருந்து நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் திரு மணிவாசகம், மற்றும் 7 பேர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது; வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. விசாரணை நடைபெற்றுக் கொண்டு வருகிறது. தலைவர் பதவியில் இருப்பவர் பற்றி, தகவல் இல்லை. தலைவர் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தகவல் இருக்குமானால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**சைதாப்பேட்டையில் கழிவு நீர் போக்கு மற்றும் குடிநீர் குழாய் இணைப்புத் திட்டங்கள்.**

*வினா எண். 583—**திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, சைதாப்பேட்டை தொகுதியில் பல்வேறு பகுதிகளில் கழிவு நீர் போக்கு (Drainage System) மற்றும் குடிநீர் குழாய் இணைப்பு திட்டங்களை நிறைவேற்ற எடுக்கப் பெற்ற நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் :** சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியானது மாநகராட்சி கோட்டங்கள் 138 முதல் 147 வரை உள்ளடங்கியதாகும்.

குடிநீர் : இத்தொகுதியில் தனியார் தெருக்களைத் தவிர ஏறக்குறைய மற்றெல்லா பகுதிகளிலும் குடிநீர் வசதி முறை செயல்பட்டு வருகிறது. இப்பகுதிகளில் தற்போது சுமார் 4,900 வீட்டு இணைப்புகள் உள்ளன. வீட்டு இணைப்பு வேண்டி மனு செய்வோருக்கு இணைப்புகளும் உடனுக்குடன் கொடுக்கப்பட்டு வருகிறது. வசதியற்றோர் நலனுக்காக இப்பகுதியில் தற்சமயம் 240 பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் அபிவிருத்தி செய்து வரும் 19 குடிசைப் பகுதிகளில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் 77 பொதுக் குழாய்களை அமைத்து, குடிநீர் வழங்கி வருகிறது. இவை தவிர மேலும் 9 குடிசைப் பகுதிகளில் 93 பொதுக் குழாய்களும் பம்புகளும், அமைத்து, குடிநீர் வழங்கப் பட்டு வருகிறது.

கழிவு நீரகற்றல் : சைதாப்பேட்டைப் பகுதியில் மாநகராட்சி கோட்டங்கள் 140 முதல் 145 வரையில் தனியார் தெருக்கள் தவிர ஏறக்குறைய மற்ற எல்லா தெருக்களிலும் பாதாள சாக்கடை வசதி செய்யப்பட்டுள்ளது. இப் பகுதிகளில் வீட்டு இணைப்பு விரும்பி மனு செய்வோருக்கு இணைப்புகள் உடனுக்குடன் கொடுக்கப்பட்டு வருகின்றன. கிண்டி, வேளச்சேரி,

[1981 ஏப்ரல் 1

பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடை வசதிக்கென ரூ. 106·46 இலட்ச மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட திட்டத்தை இவ்வாண்டு முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

[முற்பகல் 9—40]

**திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற பொழுது, தனியார் தெருக்களைத் தவிர மற்றெல்லாத் தெருக்களிலும் குடிநீர் வசதி நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறான தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். மாநகராட்சியால் பராமரிக்கப்படுகின்ற தெருக்களில் குடிதண்ணீர் இல்லை, டிரெயினேஜ் சிஸ்டம் இல்லை. இப்படி இருந்து கொண்டிருக்கிறது. சைதாப்பேட்டையைப் பொறுத்த வரையில் பல இடங்களில் குடிதண்ணீர், டிரெயினேஜ் இல்லை. இருக்கிற இடங்களில் கழிவு நீர் கலந்து வருகிறது. சி.ஐ.டி. நகரிலே 140 ஆம் வட்டத்திலே குடிதண்ணீரிலே கழிவு நீர் கலந்து வந்ததை சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நானே கூட்டிவந்து காட்டியிருக்கிறேன். தனியார், தெருக்களைத் தவிர மற்றெல்லாத் தெருக்களிலும் குடிநீர், டிரெயினேஜ் இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைச் சொல்லுங்கள்.

**திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் இன்னென்ன இடங்களில் இல்லை என்று சொல்கிறேன். கோட்டூர்புரம், ஈக்காட்டுத்தாங்கல், மேற்கு சைதாப்பேட்டை, மடுவாங்கரை மற்ற மாநகராட்சிக்கு உட்பட்ட தெருக்களிலே குடிதண்ணீர் இல்லை. கேள்வி கேட்பதாக இருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கமாக பதில் தரப்பெற்றது என்பதை வைத்துக் கொண்டு விரிவாகக் கேள்வி கேட்பதென்றால் அதை எப்படி ஏற்றுக்கொள்வது? சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட தகவல் சரியல்ல என்பதற்காக, குற்றம் சாட்ட நான் விரும்ப இல்லை. இந்த இந்த இடங்களில் இந்த வசதிகள் இல்லை என்பதை சொல்லுவது என்னுடைய கடமை என்பதால், அதைப் போக்கி நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1981 ஏப்ரல் 1]

**மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலிலே ஒரு வார்த்தையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூர்ந்து கவனித்திருந்தால் நலமாக இருந்திருக்கும். "ஏறக்குறைய மற்றெல்லாப் பகுதிகளிலும்" என்றால் ஒன்றிரண்டு இடங்கள் விட்டுப்போய் இருக்கலாம் என்பதுதான் அர்த்தம். அப்படிப்பட்ட இடங்களில் இதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

### திருப்பரங்குன்றம் பேரூராட்சிப் பகுதியில் குடிநீர் வசதியினை விஸ்தரித்தல்.

*வினா எண். 584—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் பேரூராட்சியில் குழாய் மூலம் குடிநீர் வசதி விஸ்தரிப்பு செய்து கொடுக்கும் உத்தேசம் உள்ளதா?

**மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் :** ஏற்கெனவே, குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பொழுது இதை விஸ்தரிப்புச் செய்து கொடுக்கும் உத்தேசம் இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குழாய்களில் தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சமீபத்தில் நடந்த விவசாயிகள் போராட்டத்தில் விஷமிகள் குழாய்களை உடைத்துவிட்டார்கள்; அசுத்தத்தைக் கலந்து விட்டார்கள். அவைகள் ரிப்பேர் பார்க்காமல் இருக்கின்றன. இதன் காரணமாக திருப்பரங்குன்றம் பகுதியில் சரியான முறையில் தண்ணீர் வருவதில்லை. உடனடியாக ரிப்பேர் பார்த்து தண்ணீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருப்பரங்குன்றம் பேரூராட்சியில் திருவிழாக் காலங்களில் மக்கள் குடிதண்ணீருக்காக மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், பக்கத்திலே, மாடக்குளம் கண்மாய் இருக்கிறது. அங்கே மொட்டையடித்துவிட்டு அந்த அசுத்தத் தண்ணீரிலேயே குளிக்கிறார்கள், இதனால் வியாதிகள் வருகின்றன. ஆகவே, அந்

த்த் தண்ணீரிலே குளிக்காமல் இருப்பதற்கு அரசு பிரச்சாரம் செய்யுமா? திருவிழா காலங்களிலே மக்களுக்குத் தண்ணீர் தடங்கலின்றிக் கிடைப்பதற்கு ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, அந்த ஊர் சுற்றுலா ஸ்தலம் என்ற காரணத்தால் அங்குள்ள மக்களுக்கு ஒருவருக்கு 90 லிட்டர் குடிநீர் வழங்கவும், சுற்றுலாப் பயணிகளுக்கு நபர் ஒருவருக்கு ஒரு நாளுக்கு 25 லிட்டர் தண்ணீரும் வழங்கும் வகையில் அந்தத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்ற நிலைமைகள் ஏற்படுவதற்கு நியாயமில்லை.

**தமிழ்நாட்டில் ஓடும் நதிகளில் வெள்ளக்கட்டுப்பாட்டிற்கானப் பணிகள்.**

*வினா எண். 585—**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வைகை உட்பட தமிழ்நாட்டில் ஓடும் நதிகளில் வெள்ளக்கட்டுப்பாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு தமிழக அரசு விரிவான முறையில் திட்டமொன்றை தயாரித்து வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது?

(இ) இதற்கு மத்திய அரசு உதவி உண்டா?

(ஈ) ஆம் எனில் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது :** (அ) முதல் (ஈ) வரை : சபையின் முன் ஓர் * விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையின் அடிப்படையிலே பார்க்கிறபோது செம்பரம்பாக்கத்தினுடைய ஏரியில் வெள்ளத் தடுப்பு செய்வதற்கு கரையைப் பலப்படுத்துவதற்கு 128.42 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அந்த வேலைகள் துரிதமாக நடைபெறவில்லையே, அந்த வேலைகள் துரிதப்படுத்தப்படுமா என்பதைத்

---

*388—393ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



தெரிந்துகொள்வதோடு, வைகை ஆற்றுப் படுகையிலிருந்து வெள்ளத் தண்ணீரை கிரிதமால் மற்றும் குண்டாறு படுகைக்குத் திருப்பிவிடுகின்ற வேலைகளுக்காக 104.50 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டும் அந்தப் பணிகள் துரிதமாகச் செயல் படுத்தப்படவில்லை, ஆகவே, அவைகளைத் துரிதப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே, இராஜமுகமது :** தலைவர் அவர்களே, செம்பரம்பாக்கம் ஏரியின் கரைகளைப் பலப்படுத்துகின்ற வேலைகள துரிதமாக நடைபெறவில்லையே என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சமீபத்திலே அவர்கள் போய் பார்த்திருந்தால் ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை மாற்றிக்கொண்டு இருக்கக்கூடும். அந்தப் பணிகள கிட்டத்தட்ட முடிந்துவிட்டன. கொஞ்சம்தான் இருக்கிறது. சாதாரணமாக நடைமுறையிலே உள்ள தாமதந்தானே தவிர, 90 பர்சன்ட் வேலைகள் முடிந்துவிட்டன. வெள்ளம் வந்தாலும் எந்த விதமான ஆபத்தும ஏற்படுகிற நிலைமை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வைகை ஆற்றுப் படுகையிலிருந்து வெள்ளத் தண்ணீரை கிரிதமால் மற்றும் குண்டாறு படுகைக்குத் திருப்பிவிடுகின்ற திட்டத்திற்குச் சென்ற ஆண்டு அனுமதி அளிக்கப்பட்டது. இப்போது வேலைகள் நடைபெறுகின்றன ; அதை மேலும் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** தலைவர் அவர்களே, சென்னையை அடுத்தாற்போல் உள்ள அடையாற்றின் இருமருங்கிலும் வெள்ளத் தடுப்புக் கரைகள் அமைப்பதற்காக 130 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் இருக்கிறது, அந்தப் பரிசீலனையை விரைவில் முடித்து வேலை துவங்கப்படுமா என்பதைத் தெரிந்துகொள்வதோடு திருச்சியில் போதையாற்றின் நீரோட்டத்தைத் திருப்பிவிடுகின்ற திட்டத்திற்காக ஆயிரம் லட்சம் ரூபாய் செலவில் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதையும் சீக்கிரமாகப் பரிசீலித்து வேலையைத் துவங்க ஆவன செய்யப்படுமா? அதோடு தாமிரவருணியிலே வெள்ளத் தடுப்புக் கரைகள் கட்டுவதற்குத் திட்டம் ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே வெகு விளக்கமாகத் தகவல்களைக் கொடுத்து இருக்கிறோம். நான்கு விதமாகக் கொடுத்திருக்கிறோம். முதலிலே வேலை துவங்கப்பட்டு இப்போது முடியும் தறுவாயில் உள்ள பணிகள், இரண்டாவது ஆய்வு முடிந்து பொறியாளரால் அது அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டு அரசு அனுமதி வழங்கப்பட வேண்டிய நிலையிலே உள்ளவை. மூன்றாவது மதிப்பீடு செய்யப்படுவது முடிவடையும்

நிலையில் உள்ள திட்டங்கள். நான்காவது, ஆய்வு நிலையிலே உள்ள பணிகள். இந்த நான்கு வகையிலும் உள்ள இடங்களைத் தான் நாம் இப்போது செய்து கொண்டிருக்கிறோம். வேறு இடங்களாக இருந்தால் அதைப்பற்றித் தனியாக அரசுக்கு விண்ணப்பம் கொடுத்தால் அல்லது இப்போது கேட்ட கேள்வியு வேண்டுகோளாக வைத்துக் கொண்டு அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, வைகை திட்டத்திலே 8 கோடிக்கும் அதிகமான ரூபாய் செலவு செய்யப்பட்டும், வெள்ளத்திலே அது பாதிக்கப்பட்டு இன்றைக்கு $1\frac{1}{2}$ ஆண்டுக் காலம் ஆகியும்கூட இதுவரையிலே வேலை நடைபெறவில்லை, இப்போது 1 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவிலே மீண்டும் திட்டமிடப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்குப் பிறகும் பரிசீலனை செய்யக்கூடிய நிலைமைதான் இருக்கிறது என்றால் எப்படி கண்மாய்களுக்குத் தண்ணீர் செல்ல முடியும்? அந்தத் திட்டத்தை விரைவிலேயே அமல்படுத்துவதோடு சுப்பையன் கால்வாய், வேண்டாம்பேட்டையாற்றுக் கால்வாய் ஆகிய கால்வாய்த் திட்டங்களை வைகை திட்டத்திலே சேர்த்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–50]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்த விவர அறிக்கையின் மீது கேள்வி கேட்கிறார்களா என்று தெரியவில்லை. விவர அறிக்கையிலே மிகத் தெளிவாக இருக்கிறது. தற்போது நடந்து வரும் பணிகள் என்பதிலேதான் வைகை ஆற்றுப் படுகையிலிருந்து வெள்ளத் தண்ணீரை கிரிதமால் மற்றும் குண்டாறு படுகைக்குத் திருப்பிவிடல், அதற்கு 104.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது; அதற்குமேல் அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்று தெரியவில்லை. இதில் இருப்பதைப் பற்றிக் கேட்டால் விளக்கம் சொல்ல முடியும். ஆனால் வேறு ஏதாவது சேர்க்கப்பட வேண்டும் என்றால் அதைத் தனியாகச் சொல்ல வேண்டும். இந்தக் கேள்விக்கும் அதற்கும் சம்பந்தம் கிடையாது. இது வெள்ளத்தடுப்பு சம்பந்தப்பட்ட விஷயம்; சீரமைப்புக் கால்வாய் என்பது வேறு. அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, கிரிதமால் மற்றும் குண்டாறு பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று அப்பகுதி மக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. ஆனால் இங்கே வெள்ளத் தண்ணீரைத் தடுப்பதற்காக இந்தத் திட்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, விவசாய காலத்தில்



அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கும் வகையில் இந்தக் கால்வாயில் தண்ணீரைத் திருப்பி விடுவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, இந்தக் கிரிதமால் நதியைப் பொறுத்தவரையில் கரைபுரண்டோடுகின்ற வெள்ளத்தினால் ஏற்படும் ஆபத்துக்களை உணர்ந்து அதனுடைய போக்கிலே ஒரு பகுதியை மாற்றியமைக்கின்ற அந்த வகையிலேதான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதனால்தான் கிரிதமால் மற்றும் குண்டாறு படுகைக்குத் திருப்பி விடுகிறோம். அங்கேயிருந்தும் தண்ணீர் விவசாயத்திற்குச் செல்கிறது. அதாவது வெள்ளம் அதிகமாக வரக்கூடிய பகுதிகளில் இருக்கின்ற தண்ணீரைக் குறைவாக வரக்கூடிய மேட்டுப்பாங்கான பகுதிகள், வேறு பகுதிகளுக்குத் திருப்பி விடுகிறோம். அந்தத் தண்ணீரும் விவசாயத்திற்குப் பயன்படுகிறது; அதை அப்படியே தேக்கி வைப்பதில்லை. அதுதான் படுகையிலே திருப்பி விடப்படுகிறது என்று தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறேன்.

### சிற்றார் பட்டணங்கால் நீர்த்திட்டத்திலிருந்து தேங்காய்பட்டணத்திற்கு பாசன வசதி அளித்தல்.

*வினா எண். 586—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார்:—

(அ) குமரி மாவட்டத்திலுள்ள சிற்றார் பட்டணங்கால் நீர்த்திட்டத்தின் கீழ்வரும் பட்டணம் (தேங்காய் பட்டணம்) பகுதியை சென்றடையும் பிரிவுக்கு நீர்ப்பாசனத்திற்கான நீர்வழங்கப்படுகிறதா?

(ஆ) இல்லையென்றால் பாசனத் தீர்வை வசூலிக்கப்படுகின்றனவா?.

(இ) எப்பொழுது அந்த இடங்களுக்கு நீர்வசதி செய்து தரப்படும்?.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப் பாறை பெருஞ்சாணி, சிற்றாறு அணை I மற்றும் சிற்றாறுஅணை II ஆகிய இந்நான்கு நீர்த் தேக்கங்களிலும் சேர்ந்து, ஜூன் மாதம் முதல் நாளன்று குறைந்த பட்சம் 2,000 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு இருக்கும் பொழுது, பட்டணம் பகுதிக்கும் பாசனத்திற்கு தண்ணீர் விடப்படுகிறது. பாசனத்திற்கு தண்ணீர் விடாத காலங்களில் பாசனத் தீர்வை வசூலிப்பதில்லை.

(இ) இவ்விடங்களுக்கு மேற்கண்ட நீர்த்தேக்கங்களில் உள்ள நீரின் இருப்பைப் பொறுத்து பாசனத்திற்கு நீர் வசதி தரப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே பத்துகாணி மடையிலேயிருந்து இந்தச் சிற்றார் உற்பத்தியாகிறது. பட்டணங்கால் நீர்த் திட்டத்திற்குத் தேங்காய்பட்டணம் தண்ணீர் வரும்பொழுது அங்கே சிறு மலைக் குன்றுகளும், மணலும் அந்தக் கால்வாயில் மூடியிருப்பதால் விவசாயிகளுக்குத் தண்ணீர் சரியான முறையில் வருவது கிடையாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தக் கால்வாயை இனிமேல் மராமத்து செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்ததைப்போல கால்வாயிலே மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினாலே தான் தேங்காய்ப்பட்டணம், மற்ற பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்க முடியாத நிலைமை இருக்குமேயானால் அது நிச்சயமாகப் போக்கப்படும். ஆனால் இங்கே எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்ற குறிப்புகளின் படி 2,000 மில்லியன் கன அடி தண்ணீர் மேலே குறிப்பிட்ட நான்கு அணைகளிலே இருந்தால்தான் தேங்காய்பட்டணம் பகுதிக்குத் தண்ணீர் திறந்து விடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, தண்ணீர் வராமலேயே, தூத்தூர், நீரோடி, கிராத்தூர் போன்ற இடங்களிலே விவசாயிகளிடமிருந்து தண்ணீர் தீர்வையை அதிகாரிகள் வசூல் செய்திருக்கிறார்கள். அவ்வாறு வசூல் செய்த தொகை திருப்பிக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, அரசு இதிலே மிகத் தெளிவாக உத்தரவு கொடுத்திருக்கிறது. பாசனத்திற்குத் தண்ணீர் விடாத காலங்களில் பாசனத் தீர்வை வசூலிப்பதில்லை; வசூலிக்கக் கூடாது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏதோ வசூலிக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப்பற்றித் தனியாக எழுதிக் கொடுப்பார்களேயானால் அரசு அதுகுறித்து விசாரணை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியின் காரணமாக குமரி மாவட்டத்தில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் பயிராகவில்லை. பயிராகாத நிலங்களுக்கு நில வரி வசூலிக்க மாட்டோம் என அரசு உறுதி தருமா?



மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, பாசனத்திற்குத் தண்ணீர் விடாத காலங்களில் பாசனத் தீர்வை வசூலிக்கப்பட மாட்டாது. அதிலே அரசு உறுதியாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா. எண்கள் 587, 588 இரண்டும் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. திரு. எம். சின்னசாமி, திரு. இரா. தாமரைக்கனி, திரு. வெ. அரங்கராசன்—மாண்புமிகு தொழில் அமைச்சர்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். ஒரு உறுப்பினருக்கு இரண்டு கேள்விகள்தான் அனுமதிக்கப்படும் என்று நீங்கள் ஒரு விதியைச் சொன்னீர்கள். ஆனால், இன்றையதினம் 3 கேள்விகள் ஒரு உறுப்பினருக்கு வந்திருக்கிறது. அப்படியானால் அந்த விதியைத் தளர்த்தி விட்டீர்களா? இனிமேல் 3 கேள்விகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது திரு. சின்னசாமியினுடைய கேள்வி. அதோடு, திரு. தாமரைக்கனியும் அக்கேள்வியைக் கொடுத்திருப்பதால் அவரது பெயரையும் சேர்த்திருக்கிறார்கள், போலிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அதை வரவேற்கிறேன். அந்தமாதிரி சேர்த்துக் கொடுங்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே திரு. சின்னசாமியினுடைய பெயர் மட்டும் வைக்கப்படுகிறது. திரு. தாமரைக்கனியினுடைய பெயர் நீக்கப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : I should not be mistaken. That is not my point இனிமேல் இதுபோல் மற்றவர்கள் பெயரையும் சேர்க்கலாம் என்று சொன்னேனே தவிர, இருப்பதை வேண்டாம் என்று சொல்லவில்லை. ஏனென்றால் நானும் நிறையக் கேள்விகளைக் கேட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது இருக்கிற முறையைக் காப்பாற்றினால் போதும். இன்னும் மூன்று மூல வினாக்கள் உள்ளன, 2 குறுகிய கால வினாக்கள் உள்ளன. மணி 10 ஆகப்போகிறது. யாரைக் கூப்பிட்டாலும், என்னைக் கூப்பிடவில்லையென்று சொல்கின்றார்கள். உறுப்பினர் தயவு செய்து உட்கார வேண்டும்.

[1981 ஏப்ரல் 1

## திருச்சி மாவட்டத்தில் காகித ஆலை அமைக்கும் திட்டம்

*வினா எண் 587—திரு மா. சின்னராசு : மற்றும் மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் கரூர் தாலுக்கா புகளூர் ரயில்வே ஸ்டேஷன் அருகில் பேப்பர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

*வினா எண் 588—திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) பொதுத்துறையில் நிறுவ உத்தேசித்திருக்கும் செய்தித் தாள் காகித ஆலையை எந்த இடத்தில் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது ?

(ஆ) தொழிலில் பின்தங்கிய திருச்சி மாவட்டம், துறையூரில் அந்த ஆலையை நிறுவ அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு ஆண்டிற்கு 50,000 டன் செய்தித்தாளும், 40,000 டன் எழுதுந் தாளும் உற்பத்தி செய்வதற்காக சுமார் ரூபாய் 180 கோடி செலவில் திருச்சி மாவட்டத்தில் புகளூரில் காகிதத் தொழிற்சாலை ஒன்று நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டமானது ஆசியாவிலேயே பெரிய திட்டம், முதல் திட்டம். அதை என்னுடைய தொகுதியிலே கொண்டு வருவதற்காக முதற்கண் அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய நிலங்களை ஆர்ஜிதம் செய்ய அரசு தொடங்கிவிட்டதா ? எந்த இடத்தில், எத்தனை ஏக்கர் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகிற இடம் ஏறக்குறைய 840 ஏக்கர். அதில் திருக்காட்டுத்துறை மற்றும் புஞ்சைப் புள்ளூர் போன்ற கிராமங்களில் இருக்கும் நஞ்சை நிலம், புறம்போக்கு நிலம் ஆகியவற்றை இத் திட்டத்திற்கு மாற்றுவதற்கு அரசு அனுமதி அளித்து நில ஆர்ஜித வேலைகள் நடைபெறுகின்றன.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலைக்காக எடுக்கப்படுகிற நிலங்களுடைய சொந்தக்காரர்களுடைய பிள்ளைகளுக்கு, அந்தத்



1981 ஏப்ரல் 1]

தொழிற்சாலையில் வேலையில் கொடுக்கப்படுமா ? அடுத்து, இந்தத் தொழிற்சாலைக்கான அடிக்கல் எப்பொழுது நாட்டப்படும் ? அதற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் வந்து அடிக்கல் நாட்டுவார்களா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே முழுமையாக நிலங்களை இழக்கிற குடும்பங்களுக்கு, அமைய இருக்கிற அந்தத் தொழிற்சாலையிலே பணிகள் கிட்டுகிற விதத்திலே இந்த அரசு பார்த்துக் கொள்ளும். ஆசியாவிலேயே பெரிய தொழிற்சாலையாக அமைய இருக்கிற அந்தத் தொழிற்சாலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக வந்து அடிக்கல் நாட்டுவார்கள்.

திரு. வெ. அரங்கராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த வினா கொடுத்து நீண்ட நாட்களாகி விட்டது. இப்பொழுது கரூர் பகுதிக்கு ஒதுக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம் மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கு எந்தவிதமான சிறு தொழிற்சாலையும்கூட கிடையாது என்ற காரணத்தால், துறையூருக்கு அருகிலே எரையூர் சர்க்கரை ஆலையும், காட்டூர் சர்க்கரை ஆலையும் இருக்கிற காரணத்தாலும், நிறைய கரும்புச் சக்கை கிடைப்பதாலும் மேலும் பச்சைமலை, கொல்லி மலையிலே மூங்கில்கள் அதிகமாகக் கிடைப்பதாலே, இந்தக் காகிதத் தொழிற்சாலையைத் துறையூரிலே நிறுவுவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ? அல்லது வேறு ஏதாவது ஒரு ஆலையைத் தொடங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் தேர்வு செய்யப்படுவது. அங்கே கிடைக்கும் மூலப் பொருள், தண்ணீர், நிலம் ஆகிய வசதிகளைப் பொருத்துத்தான் உள்ளது, இந்த அடிப்படையாக வைத்து கரூர் தாலுகாவில் உள்ள புகளூரில் அமைக்க ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே. கரும்புச் சக்கையைக் கொண்டு காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். திருச்சி மாவட்டத்தில் உள்ள கரூர் தாலூக்காவில் புகளூரிலும், பெரம்பலூரில் எரையூர் சர்க்கரை ஆலையும், லால்குடியில் கோத்தாரி சர்க்கரை ஆலையும், திருச்சி தாலுக்காவில் பேட்டைவாய்த்தலையில் காவேரி சர்க்கரை ஆலையும் இருக்கின்றன. இந்த 4 சர்க்கரை ஆலைகளுக்கும் மையமாக இருக்கின்ற குளித்தலையிலே இந்தக் காகிதத்

தொழிற்சாலையை அரசு அமைக்க முன் வருமா? அதோடு இதற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கிறது. அங்கே புஞ்சை நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. இதற்காக நஞ்சை நிலங்களை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்தக் காரணங்களினால் அங்கே அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 180 கோடி அளவுக்கு மதிப்பீடு இருக்கின்ற காரணத்தாலும், ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற காரணத்தாலும், அந்தத் தொழிற்சாலையை என்னுடைய தொகுதியிலேயே கூட துவங்கினால் நல்லது என்று நான் நினைக்கிறேன். ஆனால் மத்தியில் இருந்து ஒரு குழு வந்து ஆய்வு செய்து புகளூரில் அமைக்க வேண்டும் என்று அறிவித்தாகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகளூர் ரயில்வே ஸ்டேஷன் அருகில் இந்தப் பேப்பர் நிறுவனப் பணி ஆரம்பம் ஆகிவிட்டதா? அதனுடைய எம்.டி. யாக யாரைப் போட்டிருக்கிறார்கள் எந்த அடிப்படையில் போட்டு இருக்கிறார்கள். 'சிம்கோ மீட்டர்' விசுவநாதனை அதில் எம்.டி. யாகப் போடப்பட்டிருப்பது உண்மையா என்று தகவல் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்களுடைய கேள்வியின் முதல் பகுதிக்கு ஏற்கனவே நான் பதில் சொல்லிவிட்டேன். இரண்டாவது பகுதிக்கு, எம்.டி. யாக விஸ்வநாதன் நியமிக்கப்படவில்லை.

சேலம் மாவட்டத்திலுள்ள பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள்

*வினா எண் 589—திரு. ஓ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்திலுள்ள, சேர்வராயன் மலை, ஏற்காடு, கொல்லிமலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள பல்நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் (LAMPS) நிர்வாகத்தைச் சீரமைக்கவும் அவற்றின் மூலம் அரிசன மக்களுக்கு நீண்ட காலக் கடன் வழங்கவும் அரசிடம் திட்டம் உள்ளதா?



மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கப்படுவது இல்லை. பழங்குடிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள பெரிய அளவிலான கூட்டுறவுச் சங்கங்களில் இதுவரை ஆற்றிய பணிகளை மதிப்பீடு செய்யும்படி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அவரது மதிப்பீடு (Report Evaluation) எதிர்பார்க்கப்படுகிறது. அந்த மதிப்பீடு கிடைக்கப் பெற்றவுடன் இச்சங்கங்களை, தேவைப்பட்டால் சீரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ஓ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, இதுவரையில் அந்தச் சங்கத்தில் எத்தனை பேர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்? எந்தெந்தத் துறையில் என்னென்ன கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன? இதுவரையில் மொத்தம் எவ்வளவு வழங்கப்பட்டிருக்கின்றது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உள்ள 4 பெரும் பல் நோக்கு எல்லையில் உள்ள பழங்குடியினர் குடும்பங்களின் எண்ணிக்கை 15,157. இதில் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30 ஆம் நாளில் நிறுவப்பட்டதில் இருந்து 12,234 உறுப்பினர்கள் உள்ளனர். இச்சங்கங்கள் வழங்குகின்ற மத்திய காலக் கடனைக் கொண்டு பழங்குடி மக்கள் வாங்கும் உழவு மாடுகள், கறவை மாடுகள் ஆகியவற்றிற்கு 50 சதவீதம் அரசு மானியமாக தருகிறது. கடந்த ஆண்டு 68.28 இலட்சம் ரூபாய் பயிர்க் கடனும், 27.75 இலட்சம் ரூபாய் மத்திய காலக் கடனும், 0.36 இலட்சம் ரூபாய் நுகர்வுக் கடனும் வழங்கி உள்ளது.

திரு. ஓ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கங்களால் ஆதிதிராவிடர்கள், பழங்குடி மக்களுக்கு புதிய முறையில் கடன்களை வழங்கும் திட்டங்கள் என்னென்ன? எந்தெந்தத் திட்டங்களை அந்தச் சங்கங்கள் செயலாக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினரைப் பொறுத்தவரையில் வேலை வாய்ப்பு மற்றும் உற்பத்தி, வருமானம் ஆகியவற்றை அதிகரிப்பதற்காக கடன் மற்றும் ஒருங்கிணைந்த பிற பணிகளையும் வசதிகளையும் வழங்குவது இந்தப் பெரும் பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் முதன்மையான நோக்கமாகும். ஆதித் திராவிட மக்களுக்கு இந்தப் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நீண்ட காலக் கடன்கள் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1981 ஏப்ரல் 1

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, ஆங்கிலத்தில் லேம்ப்ஸ் (LAMPS) என்று போட்டு இருப்பது எங்களுக்குப் புரியவில்லை. அதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, LAMPS என்பது Large sized Multi purpose Co-operative Society.

## பதிவு செய்து பத்தாண்டுகளாகியும் வேலை கிடைக்காதோர் எண்ணிக்கை

*வினா எண் 590—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட வேலைத்தேடித்தரும் நிறுவனங்களில் District Employment (Exchanges) வேலைக்காக பெயரைப் பதிவு செய்து சுமார் பத்தாண்டுகளாகியும் இதுவரை வேலை வாய்ப்புக்கிடைக்காமல் எண்ணற்ற இளைஞர்கள் அவதியுறுவதை இந்த அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இக்குறையினை நீக்க அரசு எடுக்கவிருக்கும் துரிதமான நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மற்றும் (ஆ): வேலைவாய்ப்பகங்களில் செல்லுபடிப் பதிவேட்டில் வேலைக்காக பதிவு செய்து பத்து ஆண்டுகளுக்கு மேல் காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 30–9–1980-ல் கணக்கிட்ட மொத்த எண்ணிக்கையில் 0·7 சதவீதமாகும். இவர்களுக்கு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

1. வேலைவாய்ப்பகங்களில் சுழல் (Rotation) முறைக்கு மற்றவர்கள் போல் உட்படுத்தப்படாமல் இதர நிபந்தனைகளாகிய வயது மற்றும் கல்வித்தகுதிகளைக் கொண்டிருப்பின் வேலைக்கான காலியிடங்களுக்கு இவர்கள் பெயர்களை பரிந்துரை செய்யப்படுகிறது.

2. இவர்கள் வேலைவாய்ப்பக அதிகாரிகளிடம் தங்கள் பெயரை தகுதியான காலியிடங்களுக்கு உடனடியாகப் பரிந்துரை செய்ய முறையிடலாம்.

3. வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து நீண்ட காலமாக வேலை வாய்ப்பிற்குக் காத்திருக்கும் பதிவாளர்களுக்கு, பணியிலமர்த்தும் முன்னேற்றத்தைத் தொடர்ந்து கவனிக்க ஒரு சிறப்புப் பதிவேடு பயன்படுத்தப்படுகிறது.



1981 ஏப்ரல் 1]

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு மேலும் வேலை வாய்ப்பு அலுவலங்களில் பதிவு செய்து வேலைக்காக காத்து இருப்பவர்கள் இருக்கிறார்கள் என்று ஒப்புக் கொண்டதற்கு நன்றி. எனக்குக் கொடுத்து இருக்கிற தகவல் என்ன என்று சொன்னால், 10 ஆண்டுக் காலத்திற்கு முன்பு 22 வயது என்கிற நிலையில் அதாவது 1971-ல் பதிவு செய்தவர்களுக்கு இன்றையதினம் 32 வயது ஆகிறது. அரசாங்க உத்யோகங்களுக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால், பேக்வார்ட் கிளாசாக இருந்தால் 30 வயது என்றும் ஷெட்யூல்ட் காஸ்ட் ஷெடியூல்ட் டிரைப்ஸ் என்று சொன்னால் 35 வயது என்றும், பார்வார்ட் கிளாசாக இருந்தால் 26 வயது என்றும் இருக்கிறபோது, இப்படி 32 வயது வரையில் வேலை கிடைக்காத நிலைமை இருப்பதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது. அடுத்து, 10 ஆண்டுக்காலமாக பதிவு செய்து இருக்கும் நபர்கள் அங்கே போய் ரினியூவல் செய்வதற்கு என்று கேட்டால், அந்த அலுவலகத்தில் இருப்பவர்கள் இன்டக்ஸ் சார்ட் இல்லை என்று சொல்லி பிறகு வா என்று சொல்கிறார்கள். சில நேரங்களில் சீனியர் லிஸ்டில் இருக்கிற ராஜு என்பவருக்கு பதிலாக ஜூனியர் லிஸ்டில் இருக்கின்ற ராஜுவைச் சேர்த்து விடுகிறார்கள். இப்படி அங்கே பல முறைகேடுகள் நிகழ்கின்றன. அந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. இன்ஜினியரிங் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், உடல் ஊனமுற்றோர் என்று இப்படி பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. அதனால் அங்கே ஒன்றும் புரிவது இல்லை. அங்கே நடப்பது போன்ற ஊழல் வேறு எங்கும் நடக்கவில்லை. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. விவாதத்தில் பேசுகிறபோது சொல்லலாம்.

திரு. ப. பொன்னுரங்கம் : தனி நபர் மீது தான் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. குற்றச்சாட்டே சொல்லக்கூடாது என்று ரூல் இல்லை. அந்த இலாகா மீது பொதுவாகக் குற்றச்சாட்டு சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் கேள்வி கேட்கலாமே தவிர குற்றச்சாட்டுச் சொல்வது முறையல்ல. கேள்வியாகக் கேளுங்கள். ஒரு கேள்வி கேட்டு, அதற்கு அமைச்சர் பதில் அளித்தபிறகு மற்றொரு துணை வினா கேட்கலாம். ஒரேயடியாக மூன்று நான்கு கேள்விகள் போடுவது முறையல்ல.

திரு. ப. பொன்னுரங்கம் ; முறைகேடுகள், ஊழல்கள் அந்த இலாகாவில் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 10 ஆண்டுக்காலம் காத்திருந்து இன்னும் வேலை கிடைக்காமல் இருக்கிற வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு

[1981 ஏப்ரல் 1]

செய்து உள்ளவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு அளிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமா? ஒருதனி அதிகாரி போட்டால் போதாது, பல தனி அதிகாரிகளை ஆங்காங்கு போட வேண்டும் ஆகவே இத்தகைய குறைபாடுகளை அகற்றி, அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா?

[முற்பகல் 10.10]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் வேலை கிடைக்காதவர்களின் எண்ணிக்கை 7,856. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று பதிவு செய்து 10 ஆண்டுகளாகியும் வேலை கிடைக்காதவர்களுடைய நன்மையைக் கருதி எவ்வளவு விரைவிலே அவர்களுக்கு வேலை வாய்ப்பு செய்து தரமுடியுமோ அவ்வளவு விரைவிலே செய்துதர இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். வேலை வாய்ப்பு அலுவலகத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு முறைகேடுகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அரசுக்கு அத்தகைய தகவல் ஏதும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு, நடைபெறுகின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டினால் நிச்சயமாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே, ஸ்கில்டு அண்டு அன்ஸ்கில்டு இதிலே ஜூனியர்ஸ் எல்லாம் வேலைக்குப் போய்க்கிறார்கள்; ஆனால் சீனியர்சுக்கு வேலை கிடைக்கவில்லை. அமைச்சரவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சில விவரங்களைத் தருகிறேன். ஸ்கில்டு, திருமதி பி.ஞானமணி, பி.யு.சி. பாஸ்டு, டேட் ஆஃப் ரெஜிஸ்டிரேஷன் 7-7-1971, ரெஜிஸ்ட்ரேஷன் நம்பர் டபிள்யு-4773-71. அன்ஸ்கில்டு, தாஸரி அங்குலு, எஸ்.எஸ்.எல்.சி. ஃபெயில்டு, இந்து, ஆதி ஆந்திரா, டேட் ஆஃப் ரெஜிஸ்ட்ரேஷன் 20-12-71., ரெஜிஸ்ட்ரேஷன் நம்பர் என். டபிள்யூ 2593 71. இந்த விவரங்களை தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இவர்களுடைய ஜூனியர்ஸ் எல்லாம் வேலைக்கு போய், 4, 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. இவர்களுக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை. இவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? இவர்களுக்கு பாவ விமோசனம் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கிற சில நம்பர்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதோடு அவர்களுக்கு பின்னால் பதிவு செய்த ஜூனியர்ஸ் எல்லாம் வேலைக்குப் போயிருப்பதாகவும் சொன்னார்கள். அந்த நம்பர்களையும் தந்தால் தக்க நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும்



1981 ஏப்ரல் 1]

தவறு நடந்திருக்கிறது என்று தெரிந்தால் நிச்சயமாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, அந்த ஜூனியர்ஸ் நம்பர்கள் இருந்தால் அதையும் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அது இல்லாவிட்டாலும், இருக்கிற விவரங்களை வைத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. பி. ஷண்முகம்: தலைவரவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 8 ஆண்டுகள் 10 ஆண்டுகள் ஆகியும் வேலை கிடைக்கவில்லை; ஆனால் அவர்களுடைய வயது ஏறிக் கொண்டிருக்கிறது. 'கொடிது, கொடிது அவல வாழ்வு கொடிது' என்பார்கள். அப்படி இருக்கும்போது தயவுசெய்து வயது வரம்பை நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, வேலை பெறுவதற்கான வயது வரம்பை 55 என்று நிர்ணயிக்க அரசு முன் வருமா? 55 வயதிற்குள் எப்போது வேண்டுமானாலும் வேலைக்குப் போகலாம். வேலையற்று 'தொல்லைப்பட்டு, வெளியே திரியும் விபரீத நெஞ்சங்கள்'' என்று சி.என்.ஏ. அவர்கள் சொன்னார்கள். ஆக, வேலையற்றுத் திரியும்போது விபரீத எண்ணங்கள் வருகின்றன. ஆகவே, அத்தகைய விபரீத எண்ணம் ஏற்படாமல் இருக்க அவர்களுக்கு வேலை கொடுக்க அரசு முன்வருமா? வேலை வாய்ப்பு அலுவலகத்தில் 55 வயதுவரையில் பதிவு செய்து கொள்ளவும், வேலை பெறுவதற்கான வயது வரம்பை 55 என்று நிர்ணயிக்கவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, அத்தகைய எண்ணம் இல்லை.

வடாற்காடு வேலைவாய்ப்பு அலுவலகத்தை இடம் மாற்றுதல்.

*வினா எண். 591—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் ஆலங்காயத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தை திருப்பத்தூரில் மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதை மாற்றுவதற்காக அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, அந்த வேலை வாய்ப்பு அலுவலகம் மலைவாழ் மக்களுக்காக வைக்கப்பட்டது. அப்படி மலைவாழ் மக்களுக்காக வைக்கப்பட்டாலும் இந்த அலுவலகம் ஒதுக்குப்புறத்தில் இருப்பதால் ஜவ்வாது மலையிலிருந்து வருகிறவர்களும் ஏலகிரியிலிருந்து வருகிறவர்களும், திருப்பத்தூருக்கு வந்துதான் ஆலங்காயம் போக வேண்டும். ஆகவே, ஏழை எளிய மக்கள் இந்த வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு வருவதற்கு மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, இந்த அலுவலகத்தை மாற்றி திருப்பத்தூரில் வைக்க அரசு உத்தேசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆலங்காயத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது இந்த வேலை வாய்ப்பு அலுவலகம். அந்தப் பகுதியில் ஜவ்வாது மலையில் உள்ள மொத்த மக்கள் தொகை 61,237 ஆகும். அதிலே, 38,706 பேர் மலைவாழ் மக்கள். அதுமட்டுமல்லாமல் ஆலங்காயம், ஊராட்சி ஒன்றிய தலைமை இடமாகவும் மலை அடிவாரத்தில் போக்குவரத்துக்கான நல்ல சாலைகளுடனும் அமைந்துள்ளது. மற்றும் நிறைய வியாபார நடவடிக்கைகளை தம்மிடத்தே கொண்டுள்ள பொது இடமாக அமைந்துள்ள ஜமனாமரத்தூர் கிராமத்தை இணைக்கும் சாலையும் ஆலங்காயத்தில் அமைந்துள்ளது. ஆலங்காயம் மலை அடிவாரத்தில் இருப்பதாலும், மேலும் அரசு அலுவலகங்கள் அங்கு இருப்பதாலும் மலைவாழ் இளைஞர்களுக்கு ஆலங்காயம் வேலை வாய்ப்பு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள கஷ்டமாக இருக்காது. இந்த எண்ணத்தோடுதான் இந்த அலுவலகம் ஆலங்காயத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, ஆலங்காயம் மலை அடிவாரத்தில் மட்டும் மலைவாழ் மக்கள் வாழவில்லை. செங்கத்திலேயும் மலைவாழ் மக்கள் இருக்கிறார்கள். அவர்களும் இந்த வேலைவாய்ப்பு அலுவலகத்திலேதான் பதிவு செய்திருக்கிறார்கள். ஆகவே, செங்கத்திலே இருந்து வருகின்றவர்களுக்கும், ஏலகிரியிலிருந்து வருகிறவர்களுக்கும் திருப்பத்தூர் மையமாக இருக்கின்ற காரணத்தால் மீண்டும் பரிசீலனை செய்து திருப்பத்தூரிலே இந்த வேலைவாய்ப்பு அலுவலகத்தை அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அத்தகைய உத்தேசம் அரசுக்கு இல்லை.



திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்காயத்திலே என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற வேலை வாய்ப்பு அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றுகின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை என்று சொன்னதற்காக நன்றி. மேலும், தற்போது அதை மாற்றுவது என்ற பேச்சு அடிபட்டதன் காரணத்தால் மிகுந்த பரபரப்பு வாணியம்பாடி போன்ற பகுதிகளில் ஏற்பட்டிருக்கின்றது. இந்த அறிவிப்பின் மூலம் அந்த நிலைமை தணியும்.

மேலும், ஒரு சிறிய குறைபாடு இருக்கின்றது. அங்கே இருந்து அரசாங்க மேலதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதற்கு வசதியாக அந்த அலுவலகத்தில் தனியாக தொலைபேசி வசதி இல்லாமல் இருக்கின்றது. ஆகவே, அதைச் செய்து தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்திலே 11 இடங்களில் துணை வேலை வாய்ப்பு அலுவலகங்கள் இருக்கின்றன. அவற்றில் பல இடங்களில் தொலைபேசி வசதி இல்லாதது அரசுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கூடிய விரைவில் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. சுந்தரராஜன் : தலைவரவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே முன்பு எவ்வளவு அலுவலர்கள் அனுமதிக்கப்பட்டார்களோ அவர்கள் தான் இன்னும் பணிபுரிந்து வருகிறார்கள். தற்போது பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை பல மடங்கு பெருகி இருப்பதன் காரணத்தால் அலுவலர்களை அதிகமாக நியமிப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஆலங்காயம் வேலை வாய்ப்பு அலுவலகம் பற்றிய கேள்வி. ஆகவே, மற்ற விவரங்களைக் கேட்கக் கூடாது.

## பாலியஸ்டர் இழை நூல் உற்பத்தி

*குறுகிய கால வினா எண். 10.—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பாலியஸ்ட்டர் இழைநூல் (Polyster Staple Fibre) உற்பத்தி செய்ய உரிமம் கேட்டு யாரேனும் விண்ணப்பித்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில் அவ்விண்ணப்பத்தின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

[1981 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ரூபாய் 35 கோடி மூலதனத்தில் சுமார் 500 பேருக்கு வேலை கிட்டும் விதத்தில் ஆண்டு ஒன்றிற்கு 15,000 டன் பாலியஸ்டர் நாரிழையினைத் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தமிழ்நாட்டின் பின் தங்கிய பகுதியில் அமைக்க முன் உரிமம் வழங்க மே, 1980 இல் மைய அரசைக் கேட்டது. இத்திட்டத்திற்கு விரைவில் உரிமம் வழங்குமாறு மைய அரசை மாநில அரசு பல முறை வற்புறுத்தியது. எனினும், இப்போது இந்தத் திட்டத்திற்கான முன்னுரிமம் வழங்குவதை மைய அரசு நிராகரித்து விட்டது.

[முற்பகல் 10—20]

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, மத்திய அரசு அனுமதி மறுத்திருக்கிறது என்று சொன்னார்கள். மீண்டும் தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்தி, அதைத் துவங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பல தடவை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. பெட்ரோலிய அமைச்சர் அவர்களுக்கும், மத்திய தொழில் அமைச்சர் அவர்களுக்கும், அதைப் போலவே பாரதப் பிரதமர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களே கடிதம் எழுதியிருக்கிறார்கள். இருந்தும்கூட மத்திய அரசு இது சம்பந்தமாக மறுத்து வருகிறது. இருந்தாலும் தொடர்ந்து இதைப் பெற மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட மாநிலங்களில்தான் இந்தப் பாலியஸ்டர் இழைநூல் உற்பத்தி செய்கிற ஆலைகள் இருக்கின்றன. அங்கேயிருந்துதான் தமிழகத்திற்கு வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, என்ன காரணத்தினால் அதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'The proposal could not be approved as there is no scope for creation of additional capacity for the manufacture of the item in question'



1981 ஏப்ரல் 1]

என்றுதான் முதல்வர் அவர்களுக்கு, மத்திய தொழில் அமைச்சர் அவர்கள் காரணமாகச் சொல்லி கடிதம் எழுதியிருக்கிறார்களே தவிர, வேறு எந்தக் காரணத்தையும் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வளம் பெருக வேண்டும் என்பதினால், பாலியஸ்டர் இழை நூல் உற்பத்தி செய்கிற உரிமம் கேட்டு விண்ணப்பித்திருந்தாலும் சரியான காரணத்தைச் சுட்டிக் காட்டாமல், மத்திய அரசு நிராகரித்து இருப்பது வருந்தத்தக்குரியது என்று எடுத்துக் கொண்டாலும், மீண்டும் மத்திய அரசை வற்புறுத்தி, இந்த உரிமம் கேட்டு விண்ணப்பித்திருப்பவர்களுக்கு மத்திய அரசினுடைய சார்பிலே மாநில அரசே அந்த உரிமம் கொடுப்பதற்கான வகையில் அனுமதி பெறுவதற்கு தொடர்ந்து நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசினுடைய நிறுவனமான, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்-டிட்கோ தான் அந்த லைசன்ஸ் கேட்டு விண்ணப்பித்துக் கொண்டிருந்தது. மத்திய அரசு மறுத்திருக்கிறது. எனினும் நாம் மத்திய அரசை வற்புறுத்துகிறோம். வற்புறுத்துவோம்.

திரு. என்.எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலியஸ்டர் இழை நூல் உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருள் தமிழகத்தில் போதுமான அளவு கிடைக்கிறதா ?/ தற்போது தமிழகத்தில் அந்த ரகங்களை உற்பத்தி செய்கிற ஆலை ஏதாவது இருக்கிறதா ? பெரிய அளவில் இல்லாவிட்டாலும், சிறிய அளவிலாவது அதனை அமைப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கையைத் தொடங்கியிருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மட்டும் அல்ல. தென் மாநிலமான நான்கு மாநிலங்களிலும் இல்லை. அதனால்தான் தொடர்ந்து டிட்கோவும் வற்புறுத்திக் கொண்டு வருகிறது. அதனால்தான் முதலமைச்சர் அவர்கள், தொழில் அமைச்சருக்கும் பிரதம அமைச்சர் அவர்களுக்கும் எழுதிக் கேட்டார்கள், ஆனால் அவர்கள் மறுத்து விட்டார்கள். தொடர்ந்து இது குறித்து வற்புறுத்தப்படும் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மூலப் பொருள் பற்றிக் கேட்டார்கள். அவைகள் எல்லாம் இங்கே கிடைக்கின்றன. அதனுடைய ஃபீசிபிலிட்டி ரிப்போர்ட்டுகளை எல்லாம் அனுப்பித்தான் இதற்கான அனுமதியைக் கேட்டிருக்கிறோம்.

[1981 ஏப்ரல் 1

டிஜிட்டல் எலக்ட்ரானிக் கைக்கடியாரங்களுக்கான உதிரிப் பாகங்கள் தயாரித்தல்.

*குறுகிய கால வினா எண். 11—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் டிஜிட்டல் எலக்ட்ரானிக் கைக் கடிகாரங்களுக்கான லிக்யூட் கிரிஸ்டல் டிஸ்ப்ளே பேனல்ஸ் (Liquid Crystal Display panels for Digital Electronic Watches) தயாரிக்க உரிமம் கோரி இந்துஸ்தான் மெஷீன் டூல்ஸ் (Hindustan Machine Tools) நிறுவனம் விண்ணப்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :—(அ) ஆம்.

(ஆ) மைய அரசு இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் விண்ணப்பத்தினை நிராகரித்துள்ளது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்களினால் துவக்கப்படவேண்டும் என்று அனுமதி கேட்கப்பட்டிருக்கிற இந்தத் தொழிற்சாலைக்கு என்ன காரணத்தை வைத்து மத்திய அரசு அனுமதி மறுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, பெங்களூரில் இருக்கும் எச். எம். டி. நிறுவனம் தான் அந்த அனுமதியைக் கேட்டிருக்கிறது. அது மத்திய அரசின் நிறுவனம்தான். பெங்களூருக்குப் பக்கத்தில் தர்மபுரி மாவட்டத்தில் ஹோசூரில் இந்தப் பிரிவை ஏற்படுத்த அந்த நிறுவனம் அனுமதி கேட்டிருந்தது. நான் சமீபத்தில் சென்றிருந்தபோது கூட, மத்திய அரசின் பொறுப்பிலே உள்ள அத்தனை சம்பந்தப்பட்டவர்களையும் பார்த்து இது பற்றி முயற்சி செய்தேன். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கூட இது பற்றி கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் நமக்கு ஒரு வாரத்திற்கு முன்னாலே இது பற்றி வந்திருக்கக் கூடிய கடிதத்தில், விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது, ஏற்றுக் கொள்ளப்பெறவில்லை என்று தான் இருக்கிறது. இருந்தாலும் கூட மீண்டும் மீண்டும் தமிழக அரசு, எச்.எம். டி. நிறுவனத்தின் தொழிற்சாலையை ஹோசூரில் ஏற்படுத்துவதற்கு அனுமதி பெற முயற்சிக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 1]

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, மத்திய அரசு பாலியுஸ்டர் நாரிழையினைத் தொழிற்சாலைக்கு அனுமதிஇங்கு இல்லை என்று சொல்கிறார்கள். அதே போல் எச். எம. டி. நிறுவனத்தின் பிரிவை தமிழ் நாட்டில் உருவாக்க அனுமதி இல்லை என்றுசொல்கிறார்கள். மத்திய அரசு தமிழகத்திற்கு மறுப்பதற்குக் காரணம் இங்கே சீதோஷ்ணநிலை இல்லையா? இல்லை தொழில் கூடங்கள் அமைப்பதற்குள்ள மூலப் பொருள்கள் இல்லையா எந்த அடிப்படையில் மத்திய அரசு இவைகளையெல்லாம் மறுக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : எல்லா சீதோஷ்ண நிலையும் தமிழ்நாட்டில் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் ஏனோ மறுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்றிருதால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் மீதும், பாராளுமன்ற உறுப்பினர் திரு. அன்பரசு மீதும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் இங்கே கேட்கக் கூடாது.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, நான் இதைக் கேட்பதற்கு மிகவும வெட்கப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்கப்படுவதை கேட்பானேன் ?

திரு. து. புருஷோத்தமன் : மற்றவர்களுக்கு வெட்கம் வரவேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். நான் வேதனைப்படுகிறேன். ஜீரோஹவரில் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். ஒரு குறுகிய கால வினாவிற்கு, கொடுத்து ஒன்பது மாதங்களாகிவிட்டன. நாங்கள் தங்களிடம் தான் கேட்கவேண்டும். கேட்கிறேன். ஒரு ஷார்ட் நோட்டீஸ் க்வஸ்டினுக்கு ஒன்பது மாதங்களாகும் என்றால் நிச்சயமாக நீங்கள் எங்களைப் போல்......

[1981 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நானும் உங்களைப் போல் தான் இருக்கிறேன். நன்றி. அரசாங்கத்திடம் சொல்லியிருக்கிறோம், விரைவில் விடைகள் வரும்.

**திரு. என். வி. என். சோமு :** குமாரபாளையம் எஸ். எஸ். எம்.-ல் 300 தொழிலாளர்கள்...............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பலவிடங்களில் வேலை நிறுத்தங்கள் நடைபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் தொழிற் சங்கத் தலைவர். அவருக்குத் தெரியாதது என்ன இருக்கிறது.

**திரு. அன்பில் தர்மலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, 28 ஆம தேதி குளித்தலையில், நங்கவரம் பகுதியிலே நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானமும், ஒத்திவைப்புத் தீர்மானமும் கொடுத்திருந்தேன்............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவரவர்களுக்கு அவர்கள் பிரச்சினை முக்கியமானது. ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் எடுத்துக்கொள்ள முடியும். இன்றைய தினம் மதுராந்தகம் பிரச்சினை வருகிறது. இந்த பிரச்சினைப் பற்றி மூன்று, நான்கு நாட்களாக உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் கேட்டு, இன்றைக்குத் தான் பதில் வந்திருக்கிறது.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதுபற்றி ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உரிமை மீறல் பிரச்சினையை நான் எடுக்கிறதா, இல்லையா என்று என் ஆய்விலே இருக்கிறது. அவையிலே எடுத்த பிறகு தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு பேசலாம். ஒத்திவைப்புத் தீர்மானத்தை இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறேன். உரிமை மீறல் பிரச்சினையை பரிசீலனை செய்துதான் முடிவு செய்ய வேண்டும். அதுவரையில் அதுபற்றி பேசுவதற்கு அனுமதி அளிக்க இயலாது.

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சி உறுப்பினராக மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் மீது மாசு கற்பிக்கும் அளவிற்கு, களங்கம் கற்பிக்கும் அளவிற்கு பத்திரிக்கைகளில் செய்தி வந்திருக்கிறது. வெளியே விளம்பரம் செய்யப்பட்டும் இருக்கிறது.



1981 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒவ்வொருவர் ஒவ்வொருவரைப் பற்றி வெளியே பேசுகிறார்கள். அதற்கெல்லாம் கோர்ட் இருக்கிறது. வெளியே பேசக் கூடிய காரியங்களுக்கு இங்கே அனுமதி தர இயலாது.

**ஆ. அரசுப் பேருந்துகளில் உறுப்பினர்களுக்கு அளிக்கப் பெற்றுள்ள சலுகை.**

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, பேரவை [...] பினர்களுடைய பஸ் பாஸ் விஷயம். பேரவை உறுப்பி[...] கும், டிப்பார்ட்மென்ட்க்கும் இதில் ஒரு குழப்பம் இரு[...] அன்றாடம் அந்த ஸ்டாப்க்கும் பேரவை உறுப்பினர்[...] பிரிக்ஷன் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதால் இ[...] மாக தலையிடப்படவேண்டிய விஷயம். நேற்று கூட மாண்[...] உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் மனைவியோடு t[...] செய்யும்போது கட்டணம் வசூல் செய்ததாகச் சொன்னார்[...] திரு. பாபு ஜனார்த்தனம் அவர்கள் சென்றிருக்கிறார்கள் பாஸில் மனைவியோடு போகலாம் என்பது கன்ஸெப்ட், ஐடன்ட்டிட்டி கார்ட்டை வைத்துக்கொண்டு பஸ்ஸில் போயிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அவர்களிடம் கட்டணம் வசூலித்திருக்கிறார்கள். ஒரு எம்.எல்.ஏ. என்று தெரிந்த பிறகும் கட்டணம் வசூல் செய்வது என்பது சரியல்ல. அதனால் பிரிக்ஷன் வருகிறது. ஆகவே டிப்பார்ட்மென்ட்டுக்கும் ஒரு குழப்பம் இருக்கிறது. எனவே போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி கிளியர் செய்து விடவேண்டும். டிரான்ஸ்போர்ட் டிப்பார்ட்மென்டார் புரிந்து கொள்ளும் வகையில் க்ளியர் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதுபற்றி தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் மனைவியை உடன் அழைத்துக் கொண்டு செல்லலாம். சட்டமன்ற உறுப்பினர்கள் பயணம் செய்யும்போது மட்டும்தான் அவர்களை அழைத்துச் செல்ல முடியும். சட்டமன்ற உறுப்பினர்கள் பயணம் செய்யாதபோது தனியாக அவர்களுடைய மனைவியாக்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது என்று நான் தெளிவாக சொல்லியிருக்கிறேன். எனவே சட்டமன்ற உறுப்பினர்கள் பேருந்துகளில் பயணம் செய்கிறபோது தங்களுடைய மனைவியை உடன் அழைத்துக் கொண்டு செல்லலாம். இங்கிருக்கிற பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் விதிவிலாகு அளித்து ஒருவரை துணைக்காக யாரையாவது அழைத்துக் கொண்டு செல்லலாம், பெண்களையோ அல்லது சகோதரர்களையோ சொந்தகாரர்களையோ அழைத்துச் செல்லலாம் என்று சொல்லியிருக்கிறோம். எனவே ஆண்களைப் பொறுத்தவரையில் கட்டாயமாக மனைவியோடு சேர்ந்து பயணம் செய்யலாம். சட்டமன்ற உறுப்பினர்

[1981 ஏப்ரல் 1

பயணம் செய்யும்போது மட்டும்தான் இலவசமாகச் செல்லலாமே தவிர மற்ற நேரங்களில் அல்ல. திருமணமாகாதவர்களுக்கு இல்லை என்பதை நான் தெளிவாகச் சொல்லியாகவேண்டும்.

[முற்பகல் 10-30].

டிபார்டுமென்டைப் பொறுத்தவரை இன்னொரு பிரச்னை. இங்கே மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திருசித்தன் அவர்கள் வருகின்றபோது கட்டணம் வசூலிக்கப்பட்டதாகச் சொன்னார்கள் இந்த முறை இப்போதுதான் கொண்டு வந்திருப்பதால், எல் லோருக்கும் [illegible] தெரிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. நேற்றைய [illegible] அதற்கான அனுமதிச் சீட்டை வாங்கிவைத்திருக் [illegible] என்று என்க்குத் தகவல் கிடைத்தது. நிச்சயமாக [illegible]ப்படிப்பட்ட சம்பவம் நடக்காது என்று கருதுகிறேன்.

[illegible] மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு பாபு ஜனார்த்தனம் பொறுத்தவரை அவருடைய அந்த அடையாளச் சீட்டைக் காண்பித்தவுடன் அவர்கள் விட்டிருக்க வேண்டும். அவர்கள் ஏன் வசூலித்தார்கள் என்பதுபற்றி நிச்சயமாக விசாரிக் கிறேன். இருந்தாலும்கூட, நான் கேட்டுக் கொள்வதெல்லாம் எத்தனையோ நடத்துனர்கள் இதிலே மாறி மாறி வருகின்றார் கள். ஒருசிலருக்குத் தெரியாமல் இருக்கலாம். எல்லோருக் கும் ஒட்டுமொத்தமாகச் சொல்லிவிட்டால்கூட, இந்த அனுமதி [illegible]டு இல்லை என்று சொன்னால் அதிலே கொஞ்சம் சிரமம் ஏற் [illegible]கிறது. அதற்காகத்தான், தவறாகக் கருதக் கூடாது, [illegible]வுசெய்து கேட்டுக் கொள்கிறேன், அனுமதி சீட்டை கையில் [illegible]ாண்டு வரவேண்டும் ; அப்படிக் கொண்டுவந்தால் நல்லது. [illegible]ன் இதை ஒரு உத்தரவாகச் சொல்லவில்லை.

இன்னொன்றையும் சொல்லி விடுகிறேன். இதேபோன்று திருவள்ளுவர் பஸ் போக்குவரத்துக் கழகத்திலே பாயின்ட் டு பாயின்ட், எங்கிருந்து புறப்படுகிறதோ அந்த இடத்திலே இருந்து, வண்டி புறப்படுகிறவரை இரண்டு இடங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கி வைத்திருக்கிறோம். அதற்குப் பின்பு, உதாரணத்திற்குச் சொல்கிறேன். கோவையிலிருந்து ஒரு பஸ் புறப்படுகிற தென்றால், அந்த இடத்தில் இரண்டு இடங்கள் காலியாக வைக்கப்படும் ; ஈரோடு, சேலம் போன்ற இடங்களில் இந்த இரண்டு இடங்களை தேவையானவர்களுக்குக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஏற்கெனவே காலி யாகவே சென்னை வரும்வரை வைத்திருந்தோம். அதன் மூலமாக 1–½ கோடி ஆண்டு ஒன்றுக்கு நஷ்டம் ஏற்பட்ட காரணத் தினால் சட்டமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு அதை மாற்றி வைத்திருக்கிறோம். எனவே, இதையும் கொஞ்சம் கவனத்தில் கொண்டு, ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 1]

*திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது உரிமைச் சீட்டை கையிலே கொண்டு வரவேண்டும் என்று சொன்னார்கள். இந்த உரிமைச் சீட்டிலே இரண்டாவது விதியிலே ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அனுமதி சீட்டோடு ஒவ்வொரு பிரயாணத்தின் போதும், உறுப் பினர் பதவி அடையாளச் சீட்டைக் காண்பிக்க வேண்டுமென்று இருக்கிறது. அதை நீக்க வேண்டும். நம்பிக்கை இல்லை யென்றால் போட்டோவை ஒட்டிக் கொடுங்கள். அடையாளச் சீட்டையும் காட்ட வேண்டுமென்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி மானியத்திலே விளக்கமாகப் [illegible]லாம் என்றாலும்கூட, இப்போது பதில் சொல்கிறேன். அனுமதி [illegible] டோடு, அடையாளச் சீட்டையும் எடுத்துக் கொண்டு வரவேண் டும் என்று சொல்வதற்குக் காரணம் யாராவது கொண்டுபோய், தான் சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்லி தவறு செய்தால், உங்களுடைய பெயர் வந்துவிடும். அதையெல்லாம் கருதித் தான் அவ்வாறு சொல்லப்பட்டிருக்கின்றது. உங்களுடைய போட்டோவை ஒட்ட வேண்டுமென்று சொன்னால், அதையும் செய்துவிடலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர் கள் பெண் அங்கத்தினர்களுக்கு எல்லாம் விதிவிலக்கு என்று சொல்லிவிட்டு, திருமணமாகாத ஆண் சட்டமன்ற உறுப்பினர் களுக்கு வேறு யாரையும் உடன் அழைத்துச் செல்லக் கூடாது என்று சொல்வது, அரசியல் சட்டத்தின் 14-வது ஷரத்தின் படி ஈகுவாலிடியை அபென்ட் செய்யும் வாய்ப்பிருக்கிறது. நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஒருவருக்கு இரண்டு மனைவி கள் இருக்கலாம். அப்படி மனைவியை அழைத்துச் செல்வதில், சிக்கல்கள் வரும். இப்படி சிக்கல்கள் வராமல் இருப்பதற்கு, ஒரு மனைவி இருந்தால் அந்த மனைவியின் போட்டோவையும், இரண்டு மனைவிகள் இருந்தால் அந்த இரண்டு மனைவிகளின் போட்டோக்களையும் ஒட்டிவிட்டால் பிரச்னை வராது. ஆகவே இது சம்பந்தமாக சில அறிவுரைகளை பஸ் போக்குவரத்து கழகங் களுக்கு வழங்கினால், எம்.எல்.ஏ. க்களுக்கு சாதகமாக இருக்கும் என்பதற்காக நான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்வது போல எதுவும் இல்லை. திருமணமாகாத ஆண் உறுப்பினர் யாரையாவது உடன் அழைத்துவர வேண்டுமென்றால் பணத்தைக் கொடுத்து அழைத்து வரவேண்டும். இலவசமாக அனுமதிப்பதற்கு இல்லை

இன்னொன்று, இரண்டு தாரம் என்று சொன்னால், மூன்று, நான்கு என்று இப்படியெல்லாம் கணக்குப் போட்டால் உறுப்பினர்களுக்கு தனியாக ஒரு பேருந்தே கொடுக்கவேண்டி வரும். அது நடைமுறைக்கு ஒவ்வொத காரியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாம் அனைவரும் மக்களின் பிரதிநிதிகள். நம் பிரச்சினைகளைப் பற்றியோ பேசிக் கொணடிருப்பது சரியல்ல.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**மதுராந்தகத்தில் ஒரு பெண் மர்மமான முறையில் மரணம் அடைந்துள்ளது**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா, திருவாளர்கள் ஜி. மூர்த்தி, அ. ரகுமான்கான், திருமதி தா. இராசாம்பாள், திரு. என். எஸ். வி. சித்தன் ஆகியோர் "'9–3–81 அன்று மதுராந்தகத்தில் ஞானசவுந்தரி என்னும் பெண் மர்மமான முறையில் மரணம் அடைந்துள்ளதால், அப்பகுதியில் நிலவி வரும் பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை மெ ழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்'' இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்நதது என்பதுகுறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9 ஆம் நாள் அன்று மரணம் அடைந்த ஞானசவுந்தரி என்ற ஏழை அரிசன பெண் மதுராந்தகத்தில் தூக்கில் தொங்கவிடப்பட்டு மரணம் அடைந்ததுபற்றி ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து என்னை பேச அனுமதியளித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஞானசவுந்தரி என்ற அரிசன பெண் செய்யூர் பகுதியிலே இருந்து வேலை கேட்டு, மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினரை நாடி வந்த நேரத்திலே, மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் (கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதுராந்தகத்திலே நடந்ததைச் சொல்லுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, போலீஸ் கம்ப்ளெயின்ட்டில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போலீஸ் கம்ப்ளெயின்ட் எவ்வளவோ இருக்கலாம், அது பூராவும் சட்டமன்றத்தில் கூற முடியாது.



 [திரு. சு. முத்துசாமி]

[பேரவைத் தலைவர்]

இந்தப் பிரச்சினை பொறுத்தவரைக்கும் நான் திருமதி யசோதா அம்மையாருக்கு ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன். இது சூடான பிரச்சினை இதல் பொறுப்போடு பேசவேண்டும். வார்த்தைகளைக் கொட்டாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் நடந்த சம்பவத்தைப்பற்றி மட்டும் பேச வேண்டும்.

(முற்பகல் 10–40)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்பொழுது அந்த சட்ட மன்ற உறுப்பினரைத் தேடி வந்தார் என்று சொன்னார். அது சபைக் குறிப்பிலே இருக்கலாமா என்பதைப் பற்றி நான் தங்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். எப்.ஐ.ஆர். ஆயிரம் இருக்கலாம், அவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு இங்கே பேச முடியாது. ஒரு பெண் மர்மமான முறையிலே மரணம் அடைந்திருக்கிறார் என்று சொன்னார். அதையொட்டித் தான் பேச வேண்டும். ஆனால் அதை வைத்துக் கொண்டு இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் மீது குற்றச்சாட்டுச் சாட்டுவதைப் போல் அப்படிப் பேசுவதற்கு எந்தவிதமான அனுமதியும் விதிகளின்படி கிடையாது. அப்படிப் பேசவும் முடியாது. ஆகவே அதற்குத்தான் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்.ஐ.ஆர். போட்டாகிவிட்டதா ?

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** எப்.ஐ.ஆர். போட்டு அரஸ்ட் பண்ணிவிட்டார்கள். இறந்ததே எம்.எல்.ஏ. ஆபீசிலேதான்.

***திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, சொல்லப்பட்ட வார்த்தை, ஒரு சட்ட மன்ற உறுப்பினரைத் தேடி வந்த நேரத்திலே என்பது அவ்வளவு தான். (கூச்சல்-குழப்பம்). நான் சொல்வதை தலைவர் அவர்கள் அருள்கூர்ந்து கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தேடி வந்த நேரத்திலே என்று சொன்னதாலேயே அது ஒருவர் மீது குற்றச்சாட்டு என்று தவறாகக் கருதி அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்கள் இங்கே எதிர்ப்புத் தெரிவித்தார்கள். சட்டமன்ற உறுப்பினரைத் தேடி வந்தார் என்று சொன்னதாலேயே பிரச்சினை வந்து விடும் என்றால் பிறகு சட்டமன்ற உறுப்பினர் நடுத் தெருவிலே கூட நடக்க முடியாது. தேடி வந்தார் என்று சொன்ன காரணத்தினாலேயே பிரச்சினை வரவில்லை. தேடி வந்தபோது அவர்களை சந்தித்தாரா, சந்திக்கவில்லையா, பேசினாரா, பேசவில்லையா என்பதைப்பற்றி மறுப்புச் சொல்வதற்கு இங்கே அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், அதிலே ஏதாவது குற்றஞ் சாட்டப்

படுமானால், சந்தர்ப்பம் சூழ்நிலையை விளக்குவதற்காக தேடி வந்தார் என்று சொன்னால் அதற்கே ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு பெரிய எதிர்ப்பைக் கிளப்பினார்கள் என்றால் சூழ்நிலையை விளக்க முடியாது. நடைபெற்ற நிகழ்ச்சியிலே உள்ள குற்றம் என்பது வேறு. அவர்கள் சூழ்நிலையை விளக்குகிறபோது சட்டமன்ற உறுப்பினரைத் தேடி வந்தார் என்று சொல்வதே இடம் பெறக் கூடாது என்று சொன்னால் நாம் சட்ட மன்ற உறுப்பினராக இருக்கிற அந்த உரிமையைக் கூட இழந்து விடுவதாகத் தான் எனக்குப் பொருள்படுகிறது. சொல்லப்படுகிற கருத்திலே தவறு இருக்குமானால், தலைவர் அவர்களே, அந்தத் தவறான கருத்தை ருதித்தலாமே தவிர சூழ்நிலையை விளக்குகிறபோது சொல்லப்படுகிற கருத்தைத் தடுப்பது முறையாக எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் தாங்கள் எடுத்துக் காட்டியதைப் போல் மிகவும் எச்சரிக்கையாகப் பேச வேண்டியிருக்கிறது. இதிலே இரண்டு கருத்துக்களை முக்கியமாகத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். முதலாவது, அந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டு ஆய்வில் உள்ளது. ஆகவே கருத்துக்களைப் பரிமாறினால் அந்த ஆய்வுக்கு பாதகம் ஏற்படாத வகையில் அது அமைய வேண்டும். ஏனென்றால், The case is under investigation இரண்டாவது நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டியது, இந்தச் சட்டமன்றப் பேரவையிலே இருக்கின்ற ஒரு உறுப்பினர் மீது தனிப்பட்ட உறுப்பினர் மீது குற்றச்சாட்டு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதுவும் சட்ட மன்ற விதிகளிலே தெளிவாக இருக்கிறது. ஆகவே இந்த இரண்டு வரைமுறைகளுக்குட்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்துத் தெரிவிப்பார்களானால் நன்றாக இருக்கும்.

**THIRU K. S. G. HAJA SHAREEF:** Mr. Speaker Sir, I entirely agree with Thiru K. Anbazhagan. I request you kindly to allow the lady member to speak uninterruptedly. If there is anything, it is afterwards left to your judgment.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எனக்கிருக்கின்ற பிரச்னை என்னவென்றால், எப்.ஐ.ஆர். போட்டு, கிரிமினல் கேஸாகி வழக்குக்கே போய்விட்டது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. க. அன்பழகன் :** சப்ஜுடிஸ் அல்ல ; இன்வெஸ்டிகேஷனிலே இருக்கிறபொழுது......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கிரிமினல் கேசாக மாறிவிட்ட பிறகு அதை நாம் எடுத்து விவாதிப்பது.......





**திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். வழக்கு நீதிமன்றத்திலே இருக்குமேயானால் ஒரு குற்றச்சாட்டு நீதி மன்றத்திலே பதிவு செய்யப்பட்டு, நீதிபதியினுடைய விசாரணைக்கு உட்பட்டு விடுமானால், , சப்ஜுடிஸ் என்று சொல்லப்பட்டு, அந்த அடிப்படையிலே வாதம் வளரக் கூடாது. ஆனால் இது இன்னும் சப்ஜுடிஸ் ஆகவில்லை. குற்றச்சாட்டு இன்னார் மீது என்று இன்னும் பதிவு செய்யவில்லை அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது இன்வெஸ்டிகேஷன் என்று சொன்னார்கள். இன்வெஸ்டிகேஷனைப் பற்றியே பல பேருக்குப் பல்வேறு விதமான மன வருத்தங்கள் இருப்பதற்கு இடம் இருக்கிறது. எனவே இன்வெஸ்டிகேஷன் நிலையிலே இருக்கின்ற பொழுதுகூட சட்டமன்றத்திலே விவாதிக்கக் கூடாது என்று சொன்னால் நியாயமான உரிமைகளை, குறைகளை இந்த மன்றத்திலே எடுத்து வைக்கின்ற வாய்ப்பு இல்லாமற் போய்விடும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, விவாதிக்கக் கூடாது என்று சொல்லவில்லை. A case is registered and the case is under investigation. எனவே வாதங்கள் அந்த இன்வெஸ்டிகேஷனைப் பாதிக்கின்ற அளவிலே அமையக் கூடாது என்பதைத்தான் நான் எடுத்துச் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, எப்.ஐ.ஆர். என்றாலே கோர்ட்டுக்கு முன்னால் வந்துவிட்டது என்றுதானே பொருள்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதிருக்கின்ற பிரச்சினை என்னவென்றால், ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, வெளியே என்ன நடந்திருக்கிறது, அல்லது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்கின்ற நோக்கத்திலேதான் அந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் அமைய வேண்டுமே தவிர, இந்த மன்றத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு உறுப்பினர் மேலே குற்றச்சாட்டுச் சொல்வதற்கு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு நிச்சயமாக எந்த விதிகளிலேயும் இடமில்லை. அவர் இந்த மன்றத்தின் உறுப்பினராக இருப்பவர். வெளியே என்ன நடந்திருக்கிறது என்பதைப் பற்றிய தகவலைத் தெரிந்துக் கொள்ளலாம் ; அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று கேட்கலாம். அந்த விதத்திலேதான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, நேரடியாக அந்த ரூமுக்கு வந்தார் ; வருகிறபொழுது என்றெல்லாம் சொல்லி அந்த உறுப்பினர் மீது குற்றஞ்சாட்ட இந்த மானதீர்

ளைதப் பயன்படுத்திக் கொள்வதற்கு நிச்சயமாக எந்த விதியின் கீழும் அனுமதி கிடையாது ; அனுமதிக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குறுக்கிட்டு இந்த அவையிலே எடுத்துச் தேவையில்லாத ஒரு விளக்கத்தைத் தருகிறார் என்பதே என்னுடைய பணிவான கருத்து. ஏனென்றால் அங்கத்தினர் மீது குற்றச் சாட்டு வரக்கூடாது ; குற்றச்சாட்டாக எதையும் சொல்லக்கூடாது என்று திரும்பத் திரும்ப அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். அங்கத்தினர் மீது எந்தக் குற்றச்சாட்டும் இதுவரையில் செ ல்லப்படவில்லை. ஆனால், சொல்லப்படும் என்று எதிர் பார்த்து அந்தப் பெயரே வரக்கூடாது என்று பேசுவார்களே யானல், அது முறை தவறானது. தலைவரவர்களுக்குத் தெரிவித்துகொள்ள விரும்புகிறேன், பிரச்சினையினுடைய வடிவம் தெரியாமலேயே, பிரச்சினையைப்பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் இந்த முக்கியத்துவத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு உறுப்பினர் விரும்புகிறாரா என்று தலைவர் தெரிந்துகொள்வதற்கு முன்னாலேயே இப்படியிப்படி குற்றச்சாட்டு வரக்கூடாது என்றால் அப்படிச் சொல்கிறபொழுது அதிலே தவறான எண்ணம் ஏற்படுவதற்கு இடமிருக்கிறது. அதில் அமைச்சரவர்கள் பாது காப்பாகப் பேசுவது நல்லது என்று நான் கருதுகிறேன். ஆனால் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன், அங்கத்தினரைப்பற்றிக் குறிப்பிட்டுக் குற்றச்சாட்டு செல்லப்படுகின்ற நிலை நேரிடுமானால் அந்தக் குற்றச்சாட்டைத் தாங்கள் விலக்கி விடலம் ; அந்த குற்றச்சாட்டை பேச்சிலேயிருந்து எடுத்து விடுவதற்கான வாய்ப்பு உங்களுக்கு இருக்கிறது. ஆகவே, அவர்கள் தம் கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுராந்தகம் விவகாரம் பற்றி இப்பொழுது புலன் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதுபற்றிக் காவல்துறையினர் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார் கள். இங்கே ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து ஏன் இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்பதற்கான காரணங்களை விளக்கும்படியாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் தங்களால் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப்போல, சூழ்நிலைகளை விளக்க இந்த மன்ற உறுப்பினர்களுக்கு உரிமையிருக்கிறது. ஆனால், குற்றம் சுமத்தவோ, நாமே தீர்ப்பு வழங்கவோ இந்த மன்றத்தில் அப்படிப்பட்ட நிலையை எடுத்துக்கொள்ளக் கூடாது. சூழ்நிலைகளை விளக்குமாறு அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் ; இறுதியிலே நானும் சூழ்நிலைகளைத்தான் விளக்கப்போகிறேன். சூழ்



நிலைகளுக்குப் பிறகு, குற்றச் சாட்டுகளை காட்டுதும் தீர்ப்பு வழங்குவதும் புலன் விசரணைக்குப் பிறகு வழக்கு மன்றமும் மற்றவைகளும் எடுக்க வேண்டியது. எனவே, சூழ்நிலைகளை விளக்கலாம். சூழ்நிலைகளை விளக்கும்படியாக மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தாங்கள் ஆணை பிறப்பிக்கலாம்.

[முற்பகல் 10—50]

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பவம் பற்றி உங்களுக்குச் சொல்லிவிட்டு, அது குறித்து, யாருமே, எந்த விதத்திலும் புண்படாத வகையிலே நிலைமைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். நீங்களே அனுமதித்திருக்கிறீர்கள், ஞானசவுந்தரி செய்யூரைச் சேர்ந்த பெண் வேலை தேடித் தான் வந்தாள். வேலை தேடி வந்தவளை—குறிப்பிடுகிறேன் என்று சொல்ல வேண்டாம் ; சந்தர்ப்பத்தில் சொல்லத் தான் வேண்டும்—சட்டமன்ற உறுப்பினர் ஊரிலே இல்லை; அவருடைய அந்தரங்கக் காரியதரிசி, அவரை தன்னுடைய (கூச்சல்-குழப்பம்)..........

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அவருக்கு அந்தரங்கக் காரியதரிசியே இல்லையென்று அவர் சொல்கிறார். அந்தரங்கக் காரியதரிசி என்று இவராக அறிமுகப்படுத்த வேண்டாம். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி வருகின்ற பொழுது, நிலைமைகளை விளக்கிக் கொண்டு வருகிறார்கள். நிலைமைகளை விளக்கி முடிந்ததற்குப் பிறகு, எதை, எதை மறுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிறாரே அதை அவர்கள் மறுத்து இந்த அவைக்குத் தெரிவிப்பது கூடப் பொருத்தமாக இருக்கும். ஆக, அந்த அளவில் இருக்க வேண்டும்.

**திருமதி டி. யசோதா :** அவருடைய செயலாளர் அந்தப் பெண்ணை, சட்டமன்ற உறுப்பினர் வந்தால் வேலை கிடைத்து விடும் என்று சொல்லி....(கூச்சல், குழப்பம்) முன்னவருடைய பதிலுக்கு பிறகு மறுபடியும் பேசவிடாமல் தடுப்பது சரியாக இருக்குமா என்று நான் தெரிந்து கொள்ள ஆசைபடுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** செயலாளர் என்பதை உறுப்பினர் ''அப்போஸ்'' பண்ணுகிறார்.

**திரு துரைமுருகன் :** திரு. திருநாவுக்கரசை உட்காரச் சொல்லுங்கள். அந்த அல்லாடி கிருஷ்ணசாமியைக் கொஞ்சம் உட்காரச் சொல்லுங்கள். அவர் ஏன் அடிக்கடி எழுந்து கொண்டிருக்கிறார். (கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொல்லியபடி மாண்புமிகு உறுப்பினர் திருமதி. டி. யசோதா அவர்கள் இந்தச் சூழ்நிலையைப்பற்றி விளக்க உரிமை படைத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு மற்றவர்களும் எடுத்துச் சொல்வார்கள். கடைசியிலே நானும் சூழ்நிலையை விளக்குவேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் இங்கேயே இருப்பதன் காரணமாக, தன்னிலை விளக்கமாக, எதை, எதை அவர்கள் மறுக்க விரும்புகிறாரோ, அதை இறுதியிலே மறுக்கவும் அவர்களுக்கு உரிமை உண்டு. அவர்கள் அந்தக் கருத்தை எடுத்துச் சொல்லலாம். ஆக, நான் முதலிலேயே சொல்லிய மாதிரி, கூடுமான வரையில், குற்றச்சாட்டோ, தீர்ப்போ இல்லாமல், சூழ்நிலையை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

***திருமதி டி. யசோதா :** அவருடைய செயலாளர் அந்தப் பெண்ணையும் அவளது தாயையும் கூப்பிட்டு, உங்களுக்கு உடனே வேலை கிடைத்து விடும் என்று சொல்லி, அந்தப் பெண்ணை—விஷயத்தைச் சொல்லாமலே இருக்க முடியாது— அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட மன்ற உறுப்பினருடைய அலுவலகத்தில் அங்கேயே தங்கச் செய்திருக்கிறார். அந்த உதவியாளருடைய தாயும் இரண்டு குழந்தைகளும் அந்த அலுவலகத்தின் ஒரு பகுதியிலே தடுத்து அவர்கள் இருக்கின்றார்கள். அங்கே அந்த ஞானசவுந்தரி என்ற பெண்ணும் இருக்கின்றார். கிட்டத்தட்ட 7 மாதகாலம் அந்தப் பெண் அங்கேயே இருந்திருக்கின்றார். அவள் அந்த அலுவலகத்திலே பணி புரிந்தாள என்று நம்முடைய மரியாதைக்குரிய மதுராந்தகம் சட்ட மன்ற உறுப்பினர், பத்திரிகைகள் வாயிலாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அவரே அன்னை இந்திரா காந்திக்கு அடித்த தந்தியிலே கூடக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்தப் பெண்ணை என்னுடைய அலுவலகம் பூட்டியிருக்கிற நேரத்திலே எதிர்க்கட்சிக்காரர்கள் வேண்டுமென்றே கொண்டு போய் தகாத முறையிலே நடத்தி அங்கே இப்படிப்பட்ட மரணம் அடையக் கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே, இந்திரா காந்தி அவர்களும், கவர்னர் அவர்களும், முதல்வர் அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தந்தியும் அடித்திருக்கிறார்கள். அது தொடர்பாக, 7 மாத காலம் அந்தக் பெண் அங்கேயிருந்து கர்ப்பிணியாகி இருக்கின்றாள். கர்ப்பிணியான அந்த பெண் கடைசியிலே அந்தச் செயலாளரால் கைவிடப் படக்கூடிய சூழ்நிலையிலே தச்சூருக்கு—மன்னிக்க வேண்டும், சந்தைமேடு



என்கிற ஊருக்கு, அலுவலகத்திலேயிருந்து வீடு மாற்றம் செய்திருக்கிறார்கள். தாயையும், இரண்டு குழந்தைகளையும், அந்தப் பெண்ணையும் கொண்டு போய், அந்தக் காரியதரிசி—செயலாளர் என்கிறவர் வைத்திருக்கிறார். இடையிலே தாயையும் குழந்தையையும் தச்சூர் கொண்டுபோய், விட்டுவிட்டு, அந்த ஞானசவுந்தரி என்ற பெண்ணை மட்டும், கர்ப்பிணியான பெண்ணை அழைத்துக் கொண்டு மதுராந்தகத்திலே இருக்கிற பாபுலால் என்கிறவர் வீட்டிலே தங்கச் செய்திருக்கிறார். தங்கியிருக்கிற நேரத்திலேதான் பஞ்சாயத்து வந்திருக்கிறது. பஞ்சாயத்திலே, 8 ஆம் தேதி அன்றைக்கு நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். கலந்து கொண்டவர் அங்கே, ரூ. 500 அந்தப் பெண்ணுக்குக் கொடுத்து விடுவதற்கு தீர்ப்பளித்திருக்கிறார். அந்தப் பெண் அதை ஏற்றுக் கொள்ளவில்லையென்பது மட்டுமல்ல, அதற்குப் பிறகு இது எக்கேடாவது கெட்டுப் போகட்டும் என்று அவர் அதிலேயிருந்து விலகிக் கொண்டு வந்திருக்கிறார். பிறகு, தொடர்ந்து, அடுத்த நாள் 9 ஆம் தேதி காலை 10–00 மணிக்கு அதே அலுவலகத்திலே பஞ்சாயத்து நடைபெற்றிருக்கிறது. இன்றைக்கு போலீஸ் தரப்பிலே யாரையெல்லாம் கைது செய்திருக்கிறார்களோ அவர்கள்தான் பஞ்சாயத்துதாரர்கள்.

அங்கே பஞ்சாயத்து செய்து கொண்டிருக்கும் போது சுமார் 12–30 மணி அளவில், தாய் சொக்கம்மாளைப் பார்த்து 'நீ போய் அந்த பாப்பாலாலை அழைத்து வா' என்று சொல்லி அனுப்பிவிட்டு அந்த ஞானசவுந்திரி என்ற பெண்ணை தனியாக நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த தாய் போய் பாப்பலாலை அழைத்து வந்திருக்கிறார்கள். வந்த பாப்பலால் சைக்கிளை கீழே ஸ்டாண்டு போட்டுவிட்டு, சொக்கம்மாளும், பாப்பாலாலும், மேலே வந்த போது அந்த ஹாலைப் பார்க்கிறார்கள். பஞ்சாயத்து ஆட்களும் காணவில்லை. அந்தப் பெண்ணையும் காணவில்லை. உடனே அந்தத் தாய் சொல்லியிருக்கிறாள் தன் மகளைக் காணவில்லை என்று. உடனே பாப்பாலல் உள்ளே இருக்கிற அந்த அறையை எட்டிப் பார்க்கிற போது, அந்த அறையிலே ஞானசவுந்தரி தூக்கிலே தொங்கவிடப் பட்டிருக்கிற காட்சியைக் காண்கிறார்கள். உடனே சொக்கம்மாள் அந்த மாடியிலே இருந்து 'ஐயோ, எம்.எல்.ஏ. அலுவலகத்திலே என் பெண்ணை தூக்கிலே போட்டு விட்டார்கள்' என்று குரல் எழுப்பியிருக்கிறார்கள். அதன் பிறகு கூட்டம் அங்கே போயிருக்கிறது. அதிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் வாசுஅ வர்கள்தான் மிகத் தைரியமாக அந்தக் கயிறை அறுத்திருக்கிறார்கள். அறுத்ததற்குப் பிறகு அது அறுந்து கீழேவிழுந்துவிட்டு, அவளை மறுபடியும் எடுத்துச் சென்று ரிக்ஷாவிலே வைத்து மதுராந்தகம் மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். அங்கே நிலைமை மோசமாகப் போனதற்குப் பிறகு மறுபடியும் செங்கல்

பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள் அங்கே மிகத் தீவிரமாக சிகிச்சை செய்தும் கூட பலன் இல்லாத சூழ்நிலையில் இரவு 7—30 மணிக்கு அந்த ஞானசவுந்தரி மரணம் அடைந்திருக்கிறார். இதைக் குறிப்பிடுகிற போது பத்திரிகை யிலே பல தரப்பட்ட கருத்துக்கள் வந்தாலும் கூட, அவ்விடத் திலே வேலை செய்த பெண், அந்த எஜமானர் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர் கொண்டு வந்திருக்க, வேண்டும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அரிசனச் சமு தாயத்தைச் சேர்ந்த ஒரு பெண் பட்ட கொடுமையைப் பற்றி அவர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருந்தால், அவர் பின்னாலே இருந்து நானும் அவருக்கு ஒத்துழைப்புக் கொடுத் திருப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி மட்டும் பேசுங்கள். மற்ற வர்களைப் பற்றி பேச வேண்டாம்.

**திருமதி. டி. யசோதா :** குறிப்பாக அந்தப் பகுதியிலே இருக்கிற அனைத்துக் கட்சி மாணவர்களும் ஊர்வலம் நடத்தி இருக்கிறார்கள். அதுபற்றி நீதி விசாரணை வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அனைத்துக் கட்சிகளில் இருந்தும் துண் டறிக்கை போட்டு அவரவர்கள் தங்களுக்குத் தோன்றிய விதத் திலே எல்லாம் இங்கே அறிக்கை கொடுத்து நீதி விசாரணை வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மூன்று மாதத்திற்கு முன்னதாகவே, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. விலே ஒரு பிரிவினர், செங்கை மாவட்ட மக்கள் நல மன்றம் என்ற பெயரில் ஒரு அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். இதுபோன்று ஒரு அரிசனப் பெண்ணை, அலுவலகத்திற்கு உள்ளே வைத்துக் கொண்டு கேவலப்படுத்துவது தவறாகும் என்று சொல்லி, இது குறித்து 15—2—1981 அன்று நடைபெற்ற தி.மு.க. கூட்டத்திலே பேசியிருக்கிறார்கள். நீங்கள் வேண்டுமானால் சி. ஐ. டி. ரிப் போர்ட்டைக் கொண்டு வந்து சபையிலே வைக்கச் சொல்லுங்கள்

அந்த இடத்துக்கு 2 வழிகள் 3 வழிகள் என்றெல்லாம் சொல்லு வது தவறு. ஒரே ஒரு வழிதான். அதிலே கீழே செல்வார்களே யானால் கணக்கப்பிள்ளை வீடு இருக்கின்றது. அதற்கு வலது பக்கத்திலே செல்வீர்களேயானால், மேலே முதலாவதாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினருடைய அலுவலகம், அதற்கடுத்தபடியாக அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தினருடைய அலுவலகம், மொத்த கட்டடத்தையும் இவரே வாடகைக்கு எடுத்திருக்கிறார் என்பது மட்டுமல்ல, அவர் சொல்லுகின்ற அதே பத்திரிகைக் குறிப்பிலேதான் அனைத் திந்திய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள், அந்த ஊரைச் சேர்ந்தவரே சொல்லுகிறார்கள். அவர் செயலர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் அல்ல. அவர் சட்டமன்ற உறுப்பினருடைய காரியதரிசி.





அந்த சம்பவம் நடந்த இடம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அலுவலகம் அல்ல. அந்தச் சம்பவம் நடந்த இடம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினருடைய இடம்தான் என்று அண்ணா திரா விட முன்னேற்றக் கழகத்தின் மிகப் பெரிய உறுப்பினர் முக்கிய மாணவர் அந்தப் பத்திரிகையிலே குறிப்பிட்டிருக்கிறார். இவற்றை எல்லாம் பார்க்கிறபோது, இன்றைக்குக் குறிப்பாக சொல்ல வேண்டும் என்று சொன்னால், எங்களுடைய அருமை தலைவி இந்திராகாந்தி அமையார் கூட இது குறித்து நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். இவருடைய தந்தியும், பாராளு மன்ற உறுப்பினர் அவர்களுடைய தந்தியும், அவர்களுடைய மகஜரும் ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டு, இன்றைக்கு அரிசன சமுதாயத்தினுடைய விடிவெள்ளியாக இருக்கின்ற அன்னை இந்திரா காந்தி அவர்கள் கூட இங்கே கடிதம் எழுதி, இதற்கு ஒரு நல்ல தீர்ப்பினை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே, மதுராந்தகத்திலே நடந்த இந்தக் கொலை சம்பந்தமாக ஏற்பட்டிருக்கக்கூடிய மிகப் பெரிய பதட்ட நிலையை விவாதிப்பதற்கு இந்த அவையினுடைய இதர அலுவல் களை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்று பேரவைத் தலை வர் அவர்களே உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

**திரு. ஜி. மூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, மது ராந்தகத்தில் நடைபெற்ற ஞானசுந்தரி மரணம் பற்றி விசாரித்து, காவல் துறை வழக்குப் பதிவு செய்து இருக்கிறது. அதிலே சந்தேகப்படுகிற பேர்வழிகளை எல்லாம் அவர்கள் கைது செய்து இருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும் புவது, அந்தப் பஞ்சாயத்தில் கலந்து கொண்டவர்கள் எல்லோ ரும் கைது செய்யப்பட்டு இருக்கிறார்களா அல்லது இன்னும் விடப்பட்டவர்கள் யாரேனும் இருக்கிறார்களா என்கிற தகவ லாகும்.

இரண்டாவதாக, அந்தப் பகுதியில் ஏற்பட்ட இந்தச் சம்ப வத்தைப் பற்றி தமிழகத்திலே எங்குமே ஏற்படாத அளவிற்கு மிகப்பெரிய ஒரு பரபரப்பை அந்தப் பகுதியில் உருவாக்கியிருக்கி றார்கள் அந்தப் பகுதியில் இருக்கிற * * * * * * மிகப் பெரிய கண்டன ஊர்வலத்தை நடத்தி * * * * * * ஆகவே, இதிலே அந்த இயக்கங்களுக்குச் சம்பந்தம் உண்டா என்று சந்தேகம் ஏற்படுகிற நிலைமை இருக்கிறது. காரணம் * * * * * * * * அதிலே தலையிட்டு தலைமை தாங்கியிருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது பரிதாபம் காட்டுவது

*மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

போல் அந்த ஊர்வலத்தை அமைத்து நடத்தியிருக்கிறார்கள். அந்த மக்களுக்கு எந்த உரிமைகளையும் தரக் கூடாது, பறிக்கப்படவேண்டும் என்று ஊர்வலம் நடத்துகிறவர்கள் இந்தச் சம்பவத்தை வைத்துக்கொண்டு, அவர்கள் மீது ஏதோ பரிவு உணர்வு இருப்பது போல் நடந்துகொண்டு அந்தப் பகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினருக்குக் களங்கம் ஏற்படுத்துகின்ற அளவிலே அந்தச் சம்பவத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இதிலே உண்மையான காரணம் என்ன என்பதையும், அந்தப் பகுதியிலே இருக்கிற * * * * *

* * * * * *

இதிலே ஏதேனும் உடந்தையாக இருக்கிறார்களா என்பதையும் கண்டறிய வேண்டும் என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மதுராந்தகம் நிகழ்ச்சியைப் பற்றி விளக்குகிறபோது சூழ்நிலைகளை மட்டும்தான் விளக்கவேண்டும் மற்றவைகளைப் பற்றிக் குறிப்பிடக் கூடாது என்று ஏற்கனவே சொல்லப்பட்டு இருக்கிறது. இதிலே அரசியல் வேண்டாம். ஆகவே, அப்படிப்பட்ட கருத்துக்களை அவைக்குறிப்பில் இருந்து நீக்கிவிடலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிப்பட்ட கருத்துக்கள் குறிப்பில் இருந்து நீக்கப்பெறுகின்றன. (குறுக்கீடுகள்.)

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எந்தக் காரணத்திற்காக அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதோ அதைப் பற்றி மட்டும் விளக்க வேண்டும் என்று ஏற்கனவே சொல்லப்பட்டு இருக்கிறது. இங்கே எப்படி அந்தச் சம்பவத்தைப் பற்றிக் கூறவேண்டும் என்பதைப் பற்றித்தான் நாம் கவலைப்பட முடியுமே தவிர மாண்புமிகு உறுப்பினர் கூறியது போன்று வெளியே இருக்கிற நிலைமைகளை நாம் இங்கே விளக்கிக் கொண்டு இருக்க முடியாது. வெளியே இருப்பவர்கள் அந்த பிரச்னையை எப்படி அணுகுகிறார்கள் என்பது அவரவர்கள் சார்ந்து இருக்கிற அரசியல் கட்சிகளின் இயல்புக்கு ஏற்ப இருக்கும் அதற்கேற்றவகையில் அங்கே இருக்கின்ற அரசியல் கட்சிகள் அதற்குப் பதில் சொல்லிக் கொள்ள முடியும். அதை மக்கள் மத்தியில் அவர்கள் எடுத்து வைக்கிற நேரத்தில் அதற்கு மக்கள் மன்றம் தீர்ப்பு வழங்க வேண்டிய நிலைமையில் இருக்கிறது. ஆகவே, ஒத்தி வைப்புத் தீர்மானம் பற்றி விளக்கம் அளிக்கிறபோது சூழ்நிலைகளைப் பற்றி மட்டும்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





விளக்கம் அளிக்க வேண்டும் என்கிற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்துக்களை தாங்கள் நீக்கினீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. மூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் பேசுகின்றபோது பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி என்று சொன்னார்கள், அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் அந்த சமுதாய மக்களுக்கு ** சொல்லக் கூடாதா ?
(குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. மூர்த்தி அவர்கள் சொன்னது அவைக் குறிப்பில்ருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்). தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள். ஏற்கனவே இது சூடான ஒரு பிரச்சனையாக வரும் என்று நினைத்தேன் ; அந்த மாதிரிதான் இருக்கிறது. இப்போது இந்தப் பிரச்சனையில் இரண்டு உறுபினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து விட்டார்கள். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்த வரையில் திருமதி யசோதா அவர்கள் சொன்ன கருத்தே போதுமானது. எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இந்த அவையில் ஏற்பட்டுள்ள நிலைமையைக் கருதி வெம்மையை தணிக்கும் என்பதற்காக தாங்கள் எடுத்த முடிவை பாராட்டுகிறேன் ; வரவேற்கிறேன். ஆனாலும் இந்தப் பிரச்சனையில் இந்த அவையிலே உள்ள கட்சிகள் எந்த அளவுக்கு தங்களுடைய கடமையை ஆற்றின என்கின்ற நிலையில் திராவிட முன்னேற்றக் கழகமும் இதற்கான ஒத்திவைப்புத் தீர்மானத்தை தந்திருக்கிறது ; திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. ரகுமான்கான் அவர்கள் தந்திருக்கிறார்கள் (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில், அவருக்குப் பதிலாக நீங்களே வேண்டுமானால் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லுங்கள் ; வேறு யாரும் பேச வேண்டாம்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, தங்களுடைய சிறப்பான அனுமதியின் பேரில் இரண்டொரு கருத்துக்களை திரு. ரகுமான்கான் அவர்களுக்குப் பதிலாகச் சொல்லி விடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அம்மையார் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்கள் அடிப்

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

படையில் இந்த மதுராந்தகம் நிகழ்ச்சி குறித்து முறையான நடவடிக்கையை உரிய நேரத்தில் அரசு எடுக்கவில்லை என்பது எங்களுடைய மனக்குறையாகும். இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கூட இங்கே தரப்பட்டு, நீண்ட நாள் ஆகியும், தாங்கள் எடுத்துக் காட்டியுள்ளதைப் போல, '' அவை சூடாகிவிடும் என்பதால் நான் சிறிது ஒத்திவைத்தேன் '' என்று குறிப்பிட்டுள்ளதைப் போல இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டாலும் இடையிலே பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தலையிட்டு, அவர்கள் இதுபற்றி முதலமைச்சருக்கு கடிதம் எழுதி, அதன் பிறகு நடவடிக்கை மேற்கொள்கின்ற சூழ்நிலையை தமிழகம் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட காரியங்களில் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துவதற்காக இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் இங்கே தரப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி, இதிலே எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய வேண்டியிருக்கிறது. இங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கு திரு. உகம்சந்த் அவர்கள் விளக்கம் தருவதாகச் சொல்லி இருக்கிறார்கள். தாங்கள் அனுமதித்தால் விளக்கம் தரலாம். எனவே, உண்மையை அறிவதற்கு, ஏற்பட்ட நிகழ்ச்சிக்கு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்க காவல்துறை முடுக்கிவிடப்படவில்லை என்ற குற்றச்சாட்டைமட்டும் சொல்லி, இதுபற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திரு. அகமத் பாட்சா என்பவர் மதுராந்தகத்தைச் சேர்ந்தவர். செய்யூர் ஆதி திராவிடர் காலனியைச் சேர்ந்த கருப்பண்ண முதலியாரின் மகள் ஞானசௌந்தரி. அவரது தாயார் திருமதி சொக்கம்மாள். அவர் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர். திரு. அகமத் பாட்சாவின் தொடர்பால் கருவுற்றதாகச் சொல்லப்பட்ட ஞானசௌந்தரியின் குறைகளைக் கேட்க மதுராந்தகம் எண். 1, மீனாட்சியம்மன் கோயில் தெருவில் பஞ்சாயத்து ஒன்று 9—3—1981 அன்று பகல் சுமார் 12-30 மணிக்குக் கூடியதாகக் கூறப்படுகின்றது. திரு. அகமது பாட்சா மற்றும் திருவாளர்கள் எம். கே. சுப்ஹான், பெருமாள் நாயுடு, ராமதாஸ் ஆகிய மூன்று பஞ்சாயத்துதாரர்களும் அக்கூட்டத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது. பஞ்சாயத்துதாரர், ஞானசௌந்தரி அவர்களுக்கு வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கும்படி திரு. அகமது பாட்சாவைக் கேட்டுக் கொண்டதாகச் சொல்லப்படுகின்றது. அதற்கு திரு. அகமது பாட்சா ரூ. 500 இழப்பு ஈடாக ஞானசௌந்தரிக்குக் கொடுக்கிறேன் என்று கூறியதாகச் சொல்லப்படுகின்றது. ஞானசௌந்தரியும் அவரது தாயார் சொக்கம்மாளும் இந்தத் தீர்மானத்திற்கு ஒத்துக்கொள்ளவில்லை. எனவே இப்பிரச்சினையைத் தீர்க்க மதுராந்தகம் பேருந்து நிலையத்தில் உள்ள பாபுலால் என்ற தரகரை (புரோக்கர்) அழைத்து வரும்படி ஞானசௌந்தரியின் தாயாரை திரு. அமகது பாட்சா கேட்டுக் கொண்டதாகச் சொல்லப்படுகின்றது. திருமதி சொக்கம்மாள் அவர்களும் திரு. பாபுலாலை அழைத்துவர, தன் மகளை அவ்விடத்திலேயே விட்டுவிட்டுச் சென்றார் என்று கூறப்படுகின்றது. திரு. பாபுலால் அவர்களுடன் திருமதி சொக்கம்மாள் அவர்கள் பஞ்சாயத்து கூடிய இடத்திற்கு சுமார் பிற்பகல் 2 மணிக்குத் திரும்ப வந்தார். அப்பொழுது பஞ்சாயத்தார்கள் யாரும் இல்லை. அங்கு தன் புடவையில் உத்திரத்திலிருந்து மகள் ஞானசௌந்தரி தூக்கில் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டதாகச் சொல்லப்படுகிறது. திரு. அகமது பாட்சாவோ அல்லது பஞ்சாயத்தாரோ ஒருவரும் அங்கு காணப்படவில்லை. திருமதி சொக்கம்மாள் அவர்கள் போட்ட சத்தத்தை கேட்டு திரு. ராஜாராம், திரு. ராஜாமணி ஆகியவர்கள் விரைந்து சென்று புடவையினை அறுத்து, ஞானசௌந்தரியை மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சுமார் 2-30 மணிக்கு எடுத்துச் சென்றனர். மரண வாக்குமூலம் வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், ஞானசௌந்தரி அவர்கள் சுய நினைவின்றி இருந்ததால் மரண வாக்குமூலம் வாங்க முடியவில்லை. செங்கற்பட்டு சி.எம்.சி. மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தீவிர முயற்சிகள் எடுத்தும் பலனளிக்காமல் ஞானசௌந்தரி அவர்கள் மாலை 6.55 மணி அளவில் இறந்து விட்டார். திருமதி சொக்கம்மாள் அவர்கள் கொடுத்த புகாரின் பேரில் திரு. அகமது பாட்சா மற்றும் சுப்ஹான், ராமதர்ஸ், பெருமாள் ஆகிய மூவர் மீதும் இ.பி.கோ. 307 பிரிவின்கீழ் மதுராந்தகம் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று (எண். 107/81) பதிவு செய்யப்பட்டது. ஞானசௌந்தரி இறந்ததையொட்டி வழக்கு பின்பு இ.பி.கோ. 302 பிரிவிற்கு மாற்றப்பட்டது. திருவாளர்கள் அகமது பாட்சா, சுப்ஹான், பெருமாள் நாயுடு, ராமதாஸ் ஆகிய நால்வரும் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ளனா. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை நடத்தப்பட்டது. தூக்கு கயிறின் அடையாளம் கழுத்தில் தெரிவதைத் தவிர, வேறு உட்காயமோ, வெளிக் காயமோ ஞானசௌந்தரி அவர்களின் உடலில் காணப்படவில்லை என்று பிரேதப் பரிசோதனை செய்த மருத்துவர் கூறியுள்ளார். மேலும், ஞானசௌந்தரி அவர்களின் விசாரணையில் இரசாயனப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைக்குப் பிறகு, செய்யூரில் 10—3—1981 அன்று இரவு 9-15 மணிக்கு பிரேதம் புதைக்கப்பட்டது. இவ்வழக்கு சென்னைக் குற்றவியல் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டு புலனாய்வில் உள்ளது. புலனாய்வின் அடிப்படையில் குற்றவாளிகள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும்.

வழக்கு விசாரணையில் உள்ளதால் அங்கு எவ்விதமான பதட்டமான சூழ்நிலையும் இப்போது நிலவ வில்லை. ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். மார்ச் மாதம 12 ஆம் தேதியே புலன் விசாரணை செய்யப்பட்டு வழக்கு பதிவு பண்ணுவது முறையாக எடுக்கப்பட்டு இருக்கின்றது. இந்தியாவினுடைய தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடத்திலே இருந்து நமக்கு வந்த கடிதத்தினை அவர்கள் மார்ச் 25 ஆம் தேதிதான் எழுதினார்கள். நாம் 12 ஆம் தேதியே வழக்கு பதிவு செய்து முதலிலே 307 செக்ஷன் போடப்பட்டிருந்தது. ஞானசௌந்தரி அவர்கள் இறந்துவிட்டார் என்ற உடனே 302 செக்ஷனாக மாற்றப்பட்டு அதாவது கொலைக் குற்றம் என்ற வகையிலே தான் அந்த நான்கு பேர் மீதும் இப்போது வழக்கு தொடரப்பட்டிருக்கின்றது. அவர்கள் காவலிலே வைக்கப்பட்டு இருக்கிறார்கள். மேலும் புலன் விசாரணைக்குப் பிறகு இந்தப் பிரச்சினை நாடறிந்த ஒரு பிரச்சினையாக ஆக்கப்பட்டிருப்பதாலும், இதனால் பரபரப்பு ஏற்பட்டிருப்பதாலும் இது பற்றி இந்த மன்றத்திலே பலர் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கின்ற காரணத்தாலும், பலர் இதிலே அக்கறை கொண்டு விவாதித்திருப்பதாலும் இந்த வழக்கு அவ்வளவு எளிதிலே விடப்பட மாட்டாது என்பதையும் இதிலே உள்ளபடியே குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். யார் பாதிக்கப்பட்டிருந்தாலும், எந்த ஜாதியைச் சார்ந்தவர்கள் பாதிக்கப்பட்டு இருந்தாலும் இப்படிப்பட்ட அக்கிரமத்திற்கு ஒருவர் ஆளாக்கப்படுவாரேயானால் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே என்ற நோக்கத்தை இந்த அரசும் கொண்டிருப்பதால் நடவடிக்கையை நிச்சயமாக இந்த அரசு எடுக்கும்.

திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கும் இங்கே எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கைகள் பற்றியெல்லாம் எழுதப்பட்டு இருக்கின்றது. ஆகவே இதிலே இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தால் இதிலே மேலும் பரபரப்போ, மற்றவைகளோ அடைய வேண்டியதில்லை. இவ்வளவு தூரம் இது பிரச்சினைக்கு உள்ளானதற்குப் பிறகும், சட்டமன்றத்திலேயே இதுபற்றித் தெரிவிக்கப்பட்டதற்குப் பிறகும் காவல் துறையினரும், இந்த வழக்கினை எடுத்து நடத்துகின்றவர்களும் அலட்சியமாகவோ, அல்லது அலட்சியப் போக்கிலேயோ நடத்துவார்கள் என்று நாம் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். அதை இந்த மன்றமும் கூர்ந்து கவனிக்கும். மேலும் இதைப் பற்றிப் பரிசீலனை செய்யப்படும் என்ற நிலைமை இருப்பதாலும் யாரும் ஐயப்பாடு கொள்ள வேண்டியதில்லை என்பதை எடுத்துச் சொல்கிறேன்.



அது மட்டும் அல்லாமல், அந்த அம்மையார் தூக்கிலே
தொங்கப்பட்ட இடம் என்று சொல்லப்படுவது, மதுராந்தகம்
சட்டமன்ற உறுப்பினர் திரு. உகம்சந் அவர்களுக்குச் சொந்த
மான கட்டிடத்தின் ஒரு பகுதி என்று தான் சொல்லப்படு
கிறது. அவருடைய அலுவலகம் இருப்பது வேறு ஒரு பகுதியில்
ஒரு அறை. இந்தச் சம்பவம் நடைபெற்றது வேறு ஒரு பகுதியில்
உள்ள ஒரு அறை என்றும் சொல்லப்படுகிறது. அது குறித்து
படம் கூட போட்டுக் காட்டியிருக்கிறார்கள். இங்கே இருக்
கிறது. ஆகவே அது பற்றிய சந்தேகம் தேவையில்லை. இருந்
தாலும் கூட முறைப்படி புலன் விசாரணை தொடர்ந்து நடை
பெற்று வருவதின் காரணத்தினாலும், அதுபற்றி அரசு தக்க
விசாரணையை நடத்த இருப்பதாலும், அது பற்றி தொடர்ந்து
விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லைஎன்ற காரணத்
தினாலும், அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க
வேண்டியது இல்லை என்று அவைத் தலைவர் அவர்களைக்
கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

**திருமதி. டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தில் சில பெயர்கள் மாற்றம் இருக்கின்றன. அந்த விவரங்களைக் குறித்து கேட்பதற்கு எனக்கு அனுமதி அளிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேண்டும் என்ற தகவல்களை அமைச்சரிடம் எழுதிக் கொடுத்து கேட்டுக் கொள்ளுங்கள். தீர்ப்பு வழங்கியாகிவிட்டது. இனிமேல் தொடர முடியாது. உட்காருங்கள்.

## 4. கவன ஈர்ப்புகள்

### (அ) விவசாயிகள் ஓர் அளவுக்குமேல் தங்களிடம் இருக்கும் நெல் கையிருப்பை அரசுக்கு அறிவித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், இரா. தாமரைக்கனி, துரைமுருகன், ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை நிதித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''20 குவிண்டாலுக்கு மேல் நெல் வைத்திருக்கும் விவசாயிகள் அரசுக்கு அறிவிக்க வேண்டும் என்று அரசு அறிவித்திருப்பதால் விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த'' அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

பொதுவிநியோக முறையில் தட்டுப்பாடின்றி அரிசி விநியோகம் செய்ய அரசு தன் கையிருப்பைப் பெருக்கிக்கொள்ள வேண்டியுள்ளது.

வர்த்தக லெவி மூலம் செய்துள்ள கொள்முதல் முன்னேற்றம் பற்றி பரிசீலிக்கையில் பல விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை, எதிர்காலத்தில் அதிக விலை கிடைக்குமெனக் கருதி விற்பனை செய்யாமல் முடக்கி வைத்திருக்கின்றார்கள். மொத்த வர்த்தகர்களும் தன் கணக்கில் அந்த இருப்பைக் கொண்டு வந்தால் லெவி தரவேண்டியிருக்கும் என்ற காரணத்தினால் விலையைக் கொடுத்துவிட்டு விவசாயிகளிடமே அந்த நெல்லை வைத்திருந்து, தேவைப்பட்டபோது பத்து அல்லது இருபது மூட்டை நெல்லை அரைவைசெய்து விற்பனை செய்து வருவதாகவும், இதன் காரணமாக நெல் கொள்முதல் கணிசமாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும், சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்து தெரிவித்தனர். தஞ்சை மாவட்டத்தில் சம்பா பட்டத்தில் அறுவடையான நெல்லில் ஏறக்குறைய 50-லிருந்து 60 விழுக்காடு வரை விவசாயிகள் விற்காமலேயே தங்கள் கைவசம் முடக்கி வைத்துள்ளனர் என்றும் தெரியவருகிறது. 1967 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெல் மற்றும் அரிசி (இருப்புக்களை அறிவித்தல் மற்றும் கோருதல்) ஆணையின்படி 20 குவிண்டால் நெல்லோ அல்லது 13 குவிண்டால் அரிசியோ அதற்கு மேலாகவோ இருப்பு வைத்திருக்கும் ஒவ்வொருவரும் நெல் அரிசியின் இருப்பை சம்பந்தப்பட்ட அலுவலருக்கு 7 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும் என்ற விதி உள்ளது. அரசுக்குத் தேவைப்பட்டால் அவ்வாறு வைத்திருக்கும் நெல், அரிசியின் உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரை அடுத்த அறுவடை வரை சொந்த உபயோகத்திற்கும், விதைக்காகவும், கூலி தருவதற்கும் தேவையான நெல், நீங்கலாக மீதமுள்ளவற்றை அரசுகோரி பெறுவதற்கு மேற்கண்ட ஆணையில் வகை செய்யப்பட்டுள்ளது. இருந்தாலும் தமிழக அரசு தற்போது விவசாயிகளிடம் உள்ள





நெல், அரிசியின் அளவை தெரிந்து கொள்வதற்கான ஆணை
மட்டுமே பிறப்பித்துள்ளது. இப்படி தங்கள் கைவசம் உள்ள
நெல், அரிசி இருப்பைத் தெரிவிக்கும்படி கோருவதில் தவறில்லை.
அரசு எந்த அளவு நெல், அரிசியை மத்திய அரசிடம் பெற
வேண்டும், எந்த அளவு வெளிச் சந்தையில் வாங்கவேண்டும்,
அரிசியின் விலைவாசி எப்படியிருக்கும் என்று அறிய இது ஒரு
வழியே தவிர இதனால் விவசாயிகளுக்கு எவ்வித பாதிப்பும்
ஏற்படாது. ஆகவே அவர்கள் பீதி அடைய தேவையில்லை.

[முற்பகல் 11-20]

***திரு. இரெ. இராசமாணிக்கம்:** தலைவர் அவர்களே, தமிழ்
நாடு அரசு அறிவித்துள்ள உத்தரவில் விவசாயிகள் இருபது
குவிண்டால் நெல் அல்லது 13 குவிண்டால் அரிசியோ வைத்
திருந்தால் ஒரு வாரத்திற்குள்ளாக அவர்கள் அரசாங்கத்திற்கு
அறிவிக்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால்
நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சென்னையில் 29-3-1981-
ஆம் தேதி அன்று வியாபாரிகள் சங்க எட்டாவது ஆண்டு விழா
வில் பேசும்போது அவர்கள் பேசிய பேச்சு வியாபாரிகள் விலை
ஏறும்போது விற்கலாம் என்று எதிர்பார்த்து அரிசி, நெல்லை
பதுக்கி வைத்திருக்கிறார்கள். இப்படிச் செய்தால் ஏன் பற்றாக்
குறை ஏற்படாது? இதனால் ஒவ்வொரு வணிகரும் 13 குவிண்
டாலுக்கு மேல் அரிசி அல்லது 20 குவிண்டாலுக்கு மேல் நெல்
வைத்திருக்கக்கூடாது என்று கட்டுப்பாட்டை கொண்டுவர
வேண்டியதாயிற்று என்றும், பதுக்கிய தானியங்களை மறைக்க,
நீங்கள் அதிகாரிகளுக்குக் கொடுப்பதைக் கூடுமானவரை குறைத்
தால் சமுதாயம் உருப்படும் என்று நிதி அமைச்சர் அவர்கள்
பேசியிருக்கிறார்கள். வணிகர்களுக்கு இந்தக் கட்டுப்பாடு வந்
திருக்கிறது என்று அவர்கள் வியாபாரிகள் சங்கத்தின் ஆண்டு
விழாவில் பேசியிருக்கிறார்கள். ஆனால் அரசாங்க உத்தரவு
விவசாயிகளுக்கு இந்த உத்தரவு என்று தெரிவிக்கப்பட்டிருக்
கிறது. இதில் எது உண்மை? சாதாரணமாக இரண்டு ஏக்
கர்கள் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் கூட விதை, விவ
சாயச் செலவு, சாப்பாட்டுக்கு என்று 20 குவிண்டால் நெல்
கண்டிப்பாக வைத்திருக்கக்கூடும். அதோடுகூட இவர்கள் தாலுகா
அலுவலகத்திற்குச் சென்று அவர்கள் கொடுக்கக்கூடிய படி
வத்தைப் பூர்த்தி செய்து ஒரு ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டி கொடுக்க
வேண்டும் என்பது நியாயமானதல்ல. அதை மறுபரிசீலனை
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு
கூட, வண்டு மலரிலிருந்து தேனை எடுக்கும்போது மலரைக்
கசக்காமல் தேனை எடுப்பதுபோல் விவசாயிகள் உற்பத்தி
செய்கிற நெல்லை அவர்களைக் கஷ்டப்படுத்தாமல் வாங்க
வேண்டும் என்றும் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது, கவன ஈர்ப்பு.
ஒத்திவைப்புத் தீர்மானம் அல்ல. சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : ஆகவே மாண்புமிகு
நிதி அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து
இருபது குவிண்டால் என்பதை அதிகமாக்கியும் ஒரு வாரத்
திற்குள் கணக்குகொடுக்கவேண்டும் என்பதைக் கொஞ்சம் அதிக
நாட்கள் என்று அதிகப்படுத்திக் கொடுக்கவும் அரசு முன்
வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் சென்னை அரிசி வியா
பாரிகள் மாநாட்டில் பேசியதாக அவர்கள் படித்துக் காட்டியது
முற்றிலும் உண்மைக்குப்புறம்பான முறையில் வெளியிடப்பட்டது.
அப்படி அது பத்திரிகைகளில் வந்தது தவறு. எனது பேச்சை
சரியாக புரிந்துகொள்ளமுடியவில்லையோ, எழுதியவர்கள் ஏட்டை
கெடுத்தார்களோ எனக்குத் தெரியாது. நான் சொல்லி
யது, லெவி போட்டிருப்பது வியாபாரிகளுக்காகத்தான். 40
சத விகிதம் லெவி இங்கே வாங்குகிறோம். ஆந்திராவிலிருந்து
நெல், அரிசி வருமானால் ஏற்கனவே லெவி போட்டிருந்தது 40
சத விகிதம், 15 நாட்களுக்கு முன்னால் எடுத்துவிட்டோம்.
லெவி இல்லாமலேயே ஆந்திராவிலிருந்து வரலாம். இது வியா
பாரிகளைப் பொறுத்தது. ஆனால் உற்பத்தியாளர்களிடத்தி
லிருந்து நெல் வெளிச்சந்தையில் வராத காரணத்தால் ஏன் வர
வில்லை — இவ்வளவு வாங்கியபிறகும் ஒரு லட்சம் டன்தான்
இரண்டுமாத காலத்தில் கொள்முதல் செய்ய முடிந்திருக்கிறது
லெவி முறையில், ஏன் என்று கேட்டபோது பல மிராசுதாரர்கள்
விலை இன்னும் ஏறும் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.
ஆகவே தஞ்சை மாவட்டத்திலும் பிறயிடங்களிலும் எவ்வளவு உற்
பத்தியாயிற்று என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கணக்கிடு
வதற்கும் வெளிச்சந்தையில் வந்ததையும் கணக்கு பார்த்தால்
50 சத விகிதம், 60 சத விகிதம் இன்னும் வெளியே வராமல்
வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம்தான் வரு
கிறது. ஆக, எவ்வளவு இருக்கிறது என்று பார்த்து நாம் மத்திய
அரசைக் கேட்கவேண்டும். நம் மாநிலத்தில் எவ்வளவு இருக்
கிறது, வெளிச்சந்தையில் எவ்வளவு புழங்குகிறது என்பதைக்
கணக்கு எடுத்து வைத்திருக்கிறோம். கணக்குக்கே வராமல்
எவ்வளவு வைத்திருக்கிறார்கள் என்று தெரிந்தால்தான் மத்திய
அரசுக்கு எழுத முடியும். ஆக, இப்போது போட்டிருக்கக்கூடிய
சட்டம் 1967-ல் போட்ட சட்டம். ஒரு வாரத்திற்குள்ளாக
கொடுக்கவேண்டும் என்பது இப்போது புதிதாக நான் கொண்டு
வந்ததல்ல. மலரிலிருந்து தேனை எப்படி பறிக்கவேண்டும்
என்பதற்கு 1967-ல் என்ன முறையைக் கற்றுக்கொடுத்தார்களோ,
1974, 1975, 1976-ல் எந்த முறையைக் கையாண்டார்களோ
அதில் ஒரு இம்மியளவுகூட, காமா, புல்ஸ்டாப் கூட நீக்காமல்



அப்போது போட்ட உத்தரவை அப்படியே நடைமுறைக்குக்
கொண்டுவந்திருக்கிறோமே தவிர புதிதாக கஷ்டப்படுத்தும் நிலை
எதையும் கொண்டுவரவில்லை.

இப்போது அறிவிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோமே
தவிர கொள்முதல் செய்யக்கூடிய நிலை இல்லை. ப்ரோட்யூ
ஸர்ஸ் லெவி போடவில்லை. 13 குவிண்டால் அரிசி அல்லது
20 குவிண்டால் நெல்லுக்கு மேல் இருந்தால் அறிவிக்கவேண்டும்
என்று சட்டத்தின் விதியைப் பயன்படுத்துகிறோமே தவிர அதற்கு
மேல் இருந்தால் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இப்போது
கூட விரும்பவில்லை. அதனால் பல சங்கடங்கள் வரும். ஒவ்
வொரு வீட்டிற்குள்ளும் நுழையவேண்டிவரும். அதனால்
சங்கடங்கள் வரும். ஆகவே, எவ்வளவு வைத்திருக்கிறார்கள்
என்ற ஒரு கணக்குத் தெரிய வேண்டும். அவர்களே பார்த்து
கூட்டுறவு சங்கங்களுக்கு விற்கலாம் ; வியாபாரிகளுக்கு நல்ல
விலைக்கு விற்கலாம். நாம் புரொடியூசர்ஸ் மீது லெவி போட
வில்லை. கொள்முதல் விலை ரூ. 105-க்கு வாங்குகிறோம்.
இருக்கிற நிலைமையை அறிய வேண்டும் என்பதற்காகத்தான்,
இந்தச் சட்டத்தை உடனடியாகப் பயன்படுத்தி இருக்கிறோமே
தவிர, அவர்கள் கணக்குகளை ஒரு வாரத்திற்குள் சொல்ல
வேண்டுமென்று சொல்லப்பட்டிருகிறதே தவிர, வேறு ஒன்று
மில்லை. தங்களிடத்திலே எவ்வளவு மூட்டை அரிசி இருக்கிறது
என்பதைச் சொல்வதற்கு ஒரு மாதம் ஆகாது. ஒவ்வொருவரும்
தங்கள் கைவசம் எவ்வளவு மூட்டைகள் இருக்கின்றது என்பது
அவர்கள் மனதிலேயே இருக்கும். அந்தக் கணக்கை எழுதித் தர
வேண்டுமென்று சொல்லி யிருக்கிறோமே தவிர, அரிசியைத் தர
வேண்டுமென்று சொல்லவில்லை. ஏற்கனவே இருக்கின்ற சட்டத்
தின் அடிப்படையில்தான் ஒரு வாரத்திற்குள் கணக்கு சொல்ல
வேண்டுமென்று சொல்லியிருக்கிறாமே. 1974, 1975-ல் இத்
தகைய நிலைமை நடைமுறையில் இருந்தது. அந்த முறையைத்
தான் இப்போது சொல்லியிருக்கிறோமே தவிர, புரொடீயூசர்ஸ்
மீது நாம் லெவி போடவில்லை. பத்திரிகைகள் தவறாகப் போட்
டிருக்கின்றன. இன்றைய தினம் நாம் வியாபாரிகளுக்கு மட்டும்
தான் லெவி போட்டிருக்கிறோம் ; விவசாயிகள்மீது லெவி போட
வில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்
களே, நம்முடைய நிதி யமைச்சர் அவர்கள் அரிசி கணக்குகேட்ட
தற்கான விளக்கத்தைத் தெரிவித்தார்கள். நம்முடைய கூட்டுறவுத்
துறை அமைச்சர் அவர்கள் 31–3–1981-ல் விவசாயிகளுக்கு கூட்
டுறவுச் சங்கமாக இருந்தால், கொள்முதல் செய்கின்றபோது
நெல்லுக்கு ஒவ்வொரு குவிண்டாலுக்கும் 160 ரூபாய், 180
ரூபாய் விலையில் கொள்முதல் செய்யப்படுவதாகத் தெரிவித்
தார்கள். 160 ரூபாய் என்றால், ஒரு மூட்டை நெல் ரூ. 91·20க்கு
வாங்க வேண்டும். ரூ. 180 என்றால் ஒரு மூட்டை நெல் ரூ.
102·60-க்கு வாங்கவேண்டும். தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்த

வரை கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உயர்ந்த ரக நெல் கொள்முதல்செய்வதில்லை. சாதாரணமான நெல்லைத்தான் கொள்முதல் செய்கிறார்கள். அதுவும் பொன்னி போன்ற உயர்ந்தரக நெல்லை அவர்கள் வாங்குவதில்லை. ஆகவே, பொன்னி போன்ற உயர்ந்த ரக நெல்லை கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்வதற்கு அரசு உத்தரவிடுமா என்று கேட்டுக் கொள்வதோடு, நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த விலைக்கு, நியாய விலைக்கு வாங்க அரசு உத்தரவிடுமா என்று கேட்டுக் கொள்கிறேன்? அதோடு, காலக் கெடுவை இன்னும் கொஞ்சம் அதிகமாக்கிக் கொடுப்பதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இருக்கின்ற அரிசியின் கணக்கை அறிவிப்பது என்பது பெரிய பிரமாதமான காரியமல்ல. இருக்கின்ற அரிசியின் இருப்பைத் தெரிவிக்க ஒரு வாரங்கூடதேவையில்லை. ஏற்கனவே இருந்து வருகின்ற சட்டத்தின் நிலையைத் தான் நான் எடுத்துச் சொன்னேன். ஆகவே, வியாபாரிகள் கொள்முதல் செய்யலாம்; கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்யலாம். வெலவி போட்டால் பல கஷ்டங்கள் ஏற்படும். கூட்டுறவுச் சங்கங்களின் கொள்முதல் விலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை மனதிலே வைத்து என்னென்ன நடைமுறைகள் என்பதைக் கண்டறிந்து, அதிலே விவசாயிகளுக்கு நன்மைபயக்கத்தக்க வகையில் மாற்றங்கள் செய்யலாம். பொன்னி போன்ற உயர்ந்த ரக அரிசியை வாங்காமல் இருந்தால், அதை வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம். அதை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை வந்த மத்திய அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் மத்தியிலே போதுமான நெல் கையிருப்பில் இருக்கின்றதென்றும், வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு கையிருப்பு இருப்பதாகவும் கூறியுள்ளார்கள். ஆதலால் மத்திய அரசிடமிருந்து நம்முடைய தமிழ்நாடு அரசு வேண்டிய நெல்லை வாங்கிக்கொண்டு, இந்த லெவி திட்டத்தை கைவிடுமா? அது மட்டுமல்ல. சர்க்கார் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைக்க வேண்டிய அதிகாரிகள், வியாபாரிகளுக்கு உடந்தையாக இருக்கிறார்கள். அதையும் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தவறுகள் எங்கு நடைபெற்றாலும், முறைப்படி அதற்கென நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் மத்திய அரசாங்கத்திடம் 6 லட்சம் டன் நமக்கு செப்டம்பர் திங்கள் வரை தேவைப்படும் என்று சொல்லியிருக்கிறோ





ம். மத்திய அரசாங்கத்திடமிருந்து வருமென்று எதிர்பார்க்கிறோம். ஆனால், இதற்கிடையில் மத்திய அரசு லெவி போட்டு, அரிசி வாங்க வேண்டும்; இல்லாவிட்டால் எங்கள் இருப்பிலிருந்து தர மாட்டோம் என்று சொன்னதற்குப் பிறகுதான் நாங்கள் லெவி போடவேண்டிய அவசியம் வந்தது. ஆனால், மத்திய அரசாங்கம் உதவி செய்யுமென்று எதிர்பார்க்கிறோம். மத்திய அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் சென்னைக்கு வந்தபோது 6 லட்சம் டன் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். நம்முடைய அரசுக்குப் போதுமான நெல் வந்துவிட்டால், லெவியே போடவேண்டிய தேவை இருக்காது. ஆனால், அதுவரை லெவி தேவைப்படுகின்றது.

[முற்பகல் 11–30].

***திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திலே ஒரு பெரும் பாதகம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. காரணம் பயிரிட்ட நெல்லை வியாபாரிகளிடத்தில் கொடுத்தால், லெவியாக வாங்குகிறீர்கள். பற்றாக்குறைக்கு விவசாயிகள் வைத்திருக்கிற நெல்லையும் கணக்கு கேட்டு, கணக்கு கொடுக்காவிட்டால் உள்ளே நுழைந்து ஆபீசர் பார்ப்பார் என்று சொல்லி, 20 குவிண்டாலுக்கு மேலே இருக்கிறதா என்று அவர் மீது ஒரு வழக்குப் போட்டால், விவசாயி எதற்கு தொல்லை என்று நெல்லை விட்டு விட்டு, பணப்பயிருக்கு போய் விடுவான். ஆக முதலுக்கே மோசம் வரக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. இரண்டாவது 20 குவிண்டால் என்று சொன்னால் ஒரு பெரிய விவசாயி, நிறைய ஜனக்கட்டு இருப்பவன், அவர்களுக்கு மட்டும் வைத்துக் கொண்டிருக்கும் பொழுது, அப்போது 20 மூட்டைகளுக்கு மேல் இருக்கிறது என்று கணக்கை எடுத்தால் — உதாரணத்திற்கு சொல்கிறேன். என்னிடம் 80 மூட்டை நெல் இருப்பதாக வைத்துக்கொள்வோம்; நான் என்னிடம் 80 மூட்டைகள் இருப்பதாக எழுதிக் கொடுக்கிறேன். ஆனால் விற்கவில்லை. அதற்கு நீங்கள் என்ன செய்ய போகிறீர்கள்? என்னிடத்திலே இருக்கிற 80 மூட்டைகளை எடுத்துக் கொள்ளப் போகிறீர்களா? ஆகையால் நீங்கள்.................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உதாரணத்திற்கு ஊர் பூராவும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் என்ன செய்வார்கள் என்று சொன்னால் இருப்பதை அண்ணன் மேலும், தம்பி மேலும் வைத்திருப்பதாகச் சொல்வார்கள்; அதிகாரி உன் வீட்டிலே தான் இருக்கிறது, ஒத்துக் கொள்ள மாட்டோம் என்பார்; நாங்கள் பாகம் போய்விட்டோம் என்பார் விவசாயி; இப்படி அதிகாரிகளுக்கும், விவசாயிகளுக்கும்

ஒரு பெரிய சண்டையை ஏற்படுத்தும், எற்கனவே பயிரிட்டதற்கு குறைந்த விலைக்கு விற்று அவன் பெரிய தியாகி ஆகிவிட்டான். இது தேவையில்லாத விவகாரம். நிதி அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொல்ல வேண்டும். 20 குவிண்டாலுக்கு மேலே இருக்கிற நெல்லை எல்லாம் சர்க்கார் எடுத்துக் கொள்ளும் என்று சொல்கிறார்களா ? அது கிடையாது. தெரிந்து கொள்கிறோம் என்று கூறியிருக்கிறீர்கள். தெரிந்து கொள்வதிலே பல்வேறு விவகாரங்கள் வரும். எனவே சர்க்கார் இந்தத் திட்டத்தைக் கைவிடுவது தான் தலை சிறந்ததாகும். அதை அரசு செய்ய முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களின் யோசனையை நான் கேட்பேனேயானால், நியாய விலைக் கடைகளுக்கு அரிசி கொடுக்க முடியாத நிலைமைக்கு நான் ஆளானாலும் ஆளாவேன். ஆகையால் நான் அவருடைய யோசனையைக் கேட்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறேன். ஏன் இந்த இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது என்பதற்கான காரணங்களைத் தான் நான் எடுத்துச் சொன்னேன். ஆகவே வரவேண்டிய நெல் வரவில்லை. இன்னொன்றையும் நீங்கள் கவனிக்க வேண்டும். விலைக்கு வியாபாரிகள் நெல்லை வாங்கி மிராசுதார்கள் வீட்டிலே வைத்து விட்டு, அவர்கள் எடுத்துக் கொள்ளாமல், உங்களுடைய இருப்பிலே இருக்கட்டும் என்று சொல்லி, 10 மூட்டை, 20 மூட்டை என்று மட்டும் அரவைக்கு எடுத்துச் செல்கிற நிலைமைகள் இருக்கின்றன. அது ஏற்படுமா, ஏற்படாதா என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். 1974–75-ல் வியாபாரிகள் லெவி மட்டுமில்லாமல், நாம் புரொடியூசர்ஸ் லெவியும் போட்டிருந்தோம். இது 1974–75 ; 1975–76-ல் இந்த நிலைமை. அப்போது விவசாயிகளும் லெவி கொடுக்க வேண்டிய அவசியம் இருந்தது. ஒரு கணக்கைச் சொல்கிறேன். அப்படிப் போட்டதாலே என்னவாயிற்று என்றால் 4 இலட்சத்து 19 ஆயிரம் டன் அரிசி கிடைத்தது. அடுத்து 1975–76-ல் இரண்டு லெவியும் இருந்த போது, மிராசுதார்களிடம் வாங்கிய அளவிலே 8 இலட்சத்து 90 ஆயிரம் டன் அரிசி கிடைத்தது. அதற்குப் பிறகு விவசாயிகள் லெவியை எடுத்து விட்டு, வியாபாரிகளிடம் வாங்கிய போது ஒரு இலட்சத்து 58 ஆயிரம் டன் கிடைத்தது. இடையிலே இருக்கிற நெல் என்ன ஆகிறது ? ஆக உங்களுக்கும் தெரியாமல், நமக்கும் தெரியாமல் மிராசுதார்களும், வியாபாரிகளும் சேர்ந்து செய்கிற காரியம் அரசாங்கத்திற்கு வரவேண்டியது வராமல் போய்விடுகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்ற நெருக்கடி வந்து, மத்திய சர்க்கார் போதுமான அளவிற்குக் கொடுக்காத காரணத்தால் நமக்குப் பற்றாக்குறை ஏற்பட்டால் அவர்கள் சொல்கிற அளவிற்கு 20 குவிண்டாலுக்கு மேலே இருந்தால் எடுத்துக் கொள்வோம் என்ற ஒரு கட்டம் வரும். இப்





போது வரவில்லை என்று சொல்கிறேன். இப்போது அவர்கள் விற்றுவிட்டால் அதிகமான விலைக்கு விற்கலாம். நாங்கள் 'ப்ரொக்யூர்மெண்ட்' செய்வோம் என்றால் 105 ரூபாய்க்குத் தான் வரும். இப்போதே 160, 150 ரூபாய்க்கு விற்று விடுங்கள் என்பதற்காகத் தான் இப்போது வழி ஏற்படுத்தியிருக்கிறோமே தவிர, அந்த தொல்லை கொடுக்கிற நிலையிலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஆ. கல்வி நிலையங்களுக்கு அருகில் திரை அரங்குகள் கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ''சென்னை இராயப்பேட்டை வெஸ்லி உயர்நிலைப் பள்ளிக்கு அருகிலும், தியாகராய நகரில் சனித ஏஞ்புல்ஸ் மகளிர் பள்ளிக்கு அருகிலும் சினிமா தியேட்டர்கள் கட்டப்படுவது குறித்தும், அவ்வாறு கல்வி நிறுவனங்களுக்கு அருகில் சினிமா தியேட்டர்கள் கட்டப்படுவதைத் தவிர்க்க வேண்டிய அவசியம் குறித்தும்'' திரு. ப. தீர்த்தராமன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் இருக்கையில் இல்லை. அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு விவர அறிக்கையை அளிக்குமாறு மாண்புமிகு செய்தி அறநிலைய துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

இராயப்பேட்டை, ''பழைய உட்லண்ட்ஸ்'' அமைந்துள்ள இடத்தில் (சர்வே. எண். 1282/1, 1282/2) குளிர் சாதன வசதி கொண்ட ஒரு நிரந்தர திரை அரங்கு அமைக்க திரு. பி. எம். நாராயணசாமி என்பவர் 1970 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18 ஆம் தேதி சென்னை காவல் துறை ஆணையருக்கு விண்ணப்பம் செய்தார். திரைப்படங்கள் (ஒழுங்கு படுத்துதல்) சட்டம் மற்றும் விதிகளின்படி சென்னை மாநகராட்சி, போக்குவரத்து காவல்துறையினர், சட்டம் ஒழுங்கு காவல் துறையினர், போக்குவரத்து பொறியியல் சிறு குழு, மற்றும் நகர அமைப்பு துறையினர், ஆகியோரின் கருத்துக்கள் கோரப்பட்டன. இவர்கள் ஆட்சேபணை ஒன்றும் தெரிவிக்கவில்லை. பொதுமக்களிடமிருந்தும் கருத்துக்கள் கோரி நகர் காவல்துறை அலுவலத்தில் அறிவிப்பு பலகையில் நோட்டீஸ் ஒட்டப்பட்டது. இதற்கும் எவ்வித ஆட்சேபணையும் கிடைக்கப்பெறவில்லை. எனவே 1971 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20-ஆம் தேதி மனுதாரருக்கு ஒரு நிரந்தர திரை அரங்கம் அமைக்க தடையில்லா சான்றிதழ், திரை அரங்கம் குளிர் சாதன வசதியுடன் கூடியதாக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையுடன், வழங்கப்பட்ட...

2. அதே உரிமையாளர் 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 11 ஆம் தேதி அதே ''உட்லண்ட்ஸ்'' கட்டிடத்தில் ஒரு பகுதியை திருத்தி அமைத்து 'மினி' திரை அரங்கம் அமைக்க கோரி சென்னை காவல் துறை ஆணையருக்கு விண்ணப்பித்தார். முன்குறிப்பிட்டபடி சம்பந்தப்பட்ட துறைகள், மக்கள் ஆகியோரின் கருத்துக்கள் கோரப்பட்டன. ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படாததால், 1980 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் தேதி தடையில்லா சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. கட்டிட வரைப்படங்களுக்கு 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 29 ஆம் தேதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திரை அரங்கும் குளிர் சாதன வசதி கொண்டது. இவ்விரு திரை அரங்கங்களும் முடிவடையும் தருவாயில் உள்ளன.

3. சென்னை தியாகராயா சாலையில் 19-ஆம் எண் கொண்ட இடத்தில் ஒரு நிரந்தர திரை அரங்கு அமைக்க 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 9 ஆம் தேதி திருமதி ரெஜினா நாகேஷ் என்பவரிடமிருந்து ஒரு விண்ணப்பம் காவல் துறை ஆணையரால் பெறப்பட்டது. 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் தேதி முன்பக்கங்களில் குறிப்பிட்டபடி கருத்துகளும் ஆட்சேபணைகளும் ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் கோரப்பட்டன. எவ்வித ஆட்சேபணையும் அத்தேதிக்குள் வரவில்லை. ஏழு மாதங்களுக்குப் பின் 1979ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21 ஆம் தேதியிட்ட எதிர்ப்புக் கடிதம் ஒன்று புனித ஏன்ஜெல்ஸ் பெண்கள் மேல் நிலைப்பள்ளி நிர்வாகத்திடமிருந்தும், 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 24 ஆம் தேதியிட்ட மற்றொரு எதிர்ப்புக் கடிதம் திரு. ஏ. வெங்கடகிருஷ்ணன் என்ற வழக்கறிஞரிடமிருந்தும் காவல்துறை ஆணையாரால் பெறப்பட்டன. காலம் கடந்து பெறப்பட்ட போதிலும், இவ்விரு மனுக்களும் பரிசிலனை செய்யப்பட்டன. சம்பந்தப்பட்ட இடம் குடியிருப்பு மற்றும் வியாபாரம் நடக்கும் இடமென்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாலும், சென்னையில் பல இடங்களில் கல்வி நிலையங்களுக்கு அருகாமையில் இம்மாதிரி திரையரங்குகள் இருக்கின்றன என்பதாலும், கட்டப்போகும் திரை அரங்கு குளிர் சாதன வசதி உள்ளது என்பதாலும். இது போன்று முன்பே சென்னை நகரில் இதே புனித ஏன்ஜெல்ஸ் கல்வி நிறுவனத்திற்கு அருகில் ராஜகுமாரி திரை அரங்கும். அண்ணா சாலையில் சர்ச் பார்க் கான்வென்ட்டுக்கு எதிரில் சபையர் மற்றும் அதைச் சார்ந்த இரு திரை அரங்குகளும், க்ரைஸ்ட் சர்ச் கான்வென்ட்டுக்குப் பக்கத்தில் தேவி மற்றும் அதைச் சார்ந்த மூன்று திரை அரங்குகளும், பிளாசா திரை அரங்கும் அனுமதிக்கப்பட்டு நடை பெற்று வருவதை எல்லாம் கருத்தில்





எடுத்துக் கொண்டும், வளர்ந்து வரும் புதிய சூழ்நிலைகளை ஒட்டி, இதுபோன்ற வசதி மிக்க குளிர் சாதன திரை அரங்குகள் நகரங்களில் அமைவது கல்வி நிறுவனங்கட்கு இடையூறு இருக்காது என்ற காரணத்தாலும், 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27 ஆம் தேதி ஆட்சேபணைகள் நிராகரிக்கப்பட்டு காவல் துறை ஆணையரால் தடையில்லா சான்றிதழ் வழங்கப் பட்டுள்ளது. புதிதாக கட்டப்பட இருக்கும் திரை அரங்கின் கட்டிட வரை படங்களுக்கும் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27 ஆம் தேதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கட்டிட வேலை நடந்து கொண்டிருக்கிறது.

4. தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் பிரிவு 5 (1)-ன் படி உரிமம் வழங்கும் அதிகாரி, உரிமம் வழங்குவதா மறுப்பதா என முடிவு செய்யுமுன் திரைப்படம் கட்டவிருக்கும் இடத்தின் தகுதியைத் தன் கருத்தில் கொள்ள வேண்டும். திரைப்படங்கள் (ஒழுங்கு படுத்துதல்) சட்டத்திலோ, விதிகளிலோ கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆலயங்கள் ஆகியவற்றிற்கு சமீபத்தில் திரையரங்கு அமைக்க அனுமதி வழங்குவதை மறுக்க வகையில்லை.

## 5. அரசினர் சட்டமுன்வடிவு

### கோயமுத்தூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு, 1981

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## 6. வரவு-செலவுத் திட்டம் 1981-82 மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 28—சமுதாய நலவளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்.—தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 39—சாலைகளும், பாலங்களும்—தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண் 52 சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று 15 உறுப்பினர்கள் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் இன்று விவாதத்திற்குப் பதிலளிக்க வேண்டும். நேற்றைய தினம் திராவிட முன்னேற்ற கழகத்தில் இரண்டு பேரும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் 5 பேரும், இந்திரா காங்கிரஸ் கட்சியில் 2 பேரும், சி. பி. எம்.-ல் ஒருவரும், சி. பி. ஐ.-ல் ஒருவரும், தமிழ் நாடு காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியில் ஒருவரும், ரிபப்ளிக்கன் பார்டியில் ஒருவரும், காந்தி—காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியில் ஒருவரும் பேசியிருக்கிறார்கள். இன்று பேசாதவர்களை மட்டும் பேச அனுமதித்து சபையை காலையோடு முடிக்கலாமா, இல்லை, எல்லோரும் பேச வேண்டுமென்று சொன்னால் 3½ மணிநேரம் 4 மணிநேரம் தேவைப்படுகிறது. (குறுக்கீடு) ஆளுங்கட்சியினர் அமைச்சரிடம் நேராகவே பேசிக்கொள்ளலாம். எனவே பேசாதவர்களுக்கு வாய்ப்பு அளிக்கிறேன். திரு. து. இராசரத்தினம்.

*திரு. து. இராசரத்தினம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய நலத் திட்டங்கள், சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக நேற்றைய தினம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஊராட்சி மன்றங்களுக்கு நகராட்சி மன்றங்களுக்கு நிதி ஆதாரங்கள் போதுமானதாக இல்லை. இப்படிச் சொல்வதற்குக் காரணம் ஆண்டுக்காண்டு நிதிநிலை அறிக்கை 20 சதவிதம் என்ற அளவில் உயர்ந்து, விலைவாசிகள் உயர்ந்து போய்விட்டதன் காரணமாக அகவிலைப்படி அங்கே பணியாற்றுகின்றவர்களுக்கும் உயர்த்தப்பட்டு அங்கே இன்றைக்கு ஊதியம் தரக்கூடிய அளவுக்குக் கூட நிலைமை இல்லை என்பதோடு சமுதாய நலத் திட்டப் பணிகள் மேலும் நடைபெறாமல் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

இன்றைய தினம் நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது சென்னையைச் சுற்றியுள்ள 32 கிலோமீட்டர் தூரத்திற்குள் இருப்பவை ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும் நகராட்சி மன்றங்களும் சர்சார்ஜ் 5 சதவீதத்தை 10 சதவீதமாக மாற்றி மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. அதைப்போல 32 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ள நகராட்சிகளும் பேரூராட்சிகளும் அதை ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தரவேண்டுமென்று உத்தரவிட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.





இன்றையதினம் 1971 சென்சஸ்படி, அந்த புள்ளி விவரப்படி 18காசும் அடுத்தாற்போல் சாதாரணப் பகுதிகளிலே ஒரு கிலோமீட்டருக்கு 535 ரூபாய் என்றும் கடற்கரைப் பகுதிகளிலே 715 ரூபாய் என்றும் போடப்பட்டுள்ளது. 1971 ஆம் ஆண்டு சென்சஸ் என்பதை மாற்றி 1981 ஆம் ஆண்டு சென்சஸ்படி அதிகமாகக் கொடுப்பதன் மூலம் ஊராட்சி ஒன்றியங்கள் சிறப்பாகச் செயல்பட ஏதுவாக அமையும் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது 1981 ஆம் ஆண்டு சென்சஸ் எடுத்தாகி விட்டது. அதற்குப் பின்னாலே அந்தப் புள்ளிவிவரப்படி கொடுக்கப்படவேண்டும். கப்பிகள், ஜல்லிகள், லாரி வாடகைகள் கூடியிருக்கிற காரணத்தினாலே அப்படிக் கொடுத்தால் தான் அது ஏதுவாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

சமுதாய நலத் திட்டங்கள் மூலமாக புத்தகமும் பத்திரிகையும் வாங்கிக் கொடுப்பதைவிட தொலைக்காட்சி பெட்டிகளை வாங்கிக் கொடுத்து அந்தப் பகுதி வாழ் மக்களுக்கு நலன் பெறக்கூடிய வகையிலே நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் 1974 ஆம் ஆண்டு பூவிருந்தவல்லி ஒன்றியத்திலே 121 கை பம்புகள் போடப்பட்டன. இன்றைக்கு குடிதண்ணீர் பிரச்சினை இவ்வாறு இருக்கிறபோது அதற்காக தனி பொறியாளர் அமைப்பு ஏற்படுத்தப்பட்ட பிறகும்கூட அங்கே 26 கை பம்புகள்தான் செயல்படுகின்றன என்றால் அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது சொல்வதற்கும் செய்வதற்கும் சம்பந்தம் இல்லை என்ற சூழ்நிலைதான் இருக்கிறது.

பட்டினிச்சாவு என்றால் உதவி என்று சொல்லப்படுகிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், பட்டினிச் சாவு என்று யாராவது சொன்னால் உடனடியாக 100 ரூபாய் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்றும் எந்த அளவுக்கு எல்லோரும் வரவேற்று இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். இதுவரையில் எந்த ஊராட்சி ஒன்றியத்திலிருந்தாவது பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா?

(முற்பகல் 11—40)

அதே நேரத்திலே அங்கே கிராம நல ஊழியர்கள் மூலமாகப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்ல வேண்டும். எத்தனைப் பட்டினிச் சாவுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைச் சொல்ல வேண்டும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி

இன்றையதினம் 1971 சென்சஸ்படி, அந்த புள்ளி விவரப்படி 18காசும் அடுத்தாற்போல் சாதாரணப் பகுதிகளிலே ஒரு கிலோமீட்டருக்கு 535 ரூபாய் என்றும் கடற்கரைப் பகுதிகளிலே 715 ரூபாய் என்றும் போடப்பட்டுள்ளது. 1971 ஆம் ஆண்டு சென்சஸ் என்பதை மாற்றி 1981 ஆம் ஆண்டு சென்சஸ்படி அதிகமாகக் கொடுப்பதன் மூலம் ஊராட்சி ஒன்றியங்கள் சிறப்பாகச் செயல்பட ஏதுவாக அமையும் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது 1981 ஆம் ஆண்டு சென்சஸ் எடுத்தாகி விட்டது. அதற்குப் பின்னாலே அந்தப் புள்ளிவிவரப்படி கொடுக்கப்படவேண்டும். கப்பிகள், ஜல்லிகள், லாரி வாடகைகள் கூடியிருக்கிற காரணத்தினாலே அப்படிக் கொடுத்தால் தான் அது ஏதுவாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

சமுதாய நலத் திட்டங்கள் மூலமாக புத்தகமும் பத்திரிகையும் வாங்கிக் கொடுப்பதைவிட தொலைக்காட்சி பெட்டிகளை வாங்கிக் கொடுத்து அந்தப் பகுதி வாழ் மக்களுக்கு நலன் பெறக்கூடிய' வகையிலே நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் 1974 ஆம் ஆண்டு பூவிருந்தவல்லி ஒன்றியத்திலே 121 கை பம்புகள் போடப்பட்டன. இன்றைக்கு குடிதண்ணீர் பிரச்சினை இவ்வாறு இருக்கிறபோது அதற்காக தனி பொறியாளர் அமைப்பு ஏற்படுத்தப்பட்ட பிறகும்கூட அங்கே 26 கை பம்புகள்தான் செயல்படுகின்றன என்றால் அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது சொல்வதற்கும் செய்வதற்கும் சம்பந்தம் இல்லை என்ற சூழ்நிலைதான் இருக்கிறது.

பட்டினிச்சாவு என்றால் உதவி என்று சொல்லப்படுகிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், பட்டினிச் சாவு என்று யாராவது சொன்னால் உடனடியாக 100 ரூபாய் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்றும் எந்த அளவுக்கு எல்லோரும் வரவேற்று இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். இதுவரையில் எந்த ஊராட்சி ஒன்றியத்திலிருந்து அது பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா?

(முற்பகல் 11–40)

அதே நேரத்திலே அங்கே கிராம நல ஊழியர்கள் மூலமாகப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்ல வேண்டும். எத்தனைப் பட்டினிச் சாவுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைச் சொல்ல வேண்டும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி

[திரு. து. இராசரத்தினம்] [1981 ஏப்ரல் 1

[illegible] "சீனி சக்கரை சித்தப்பா ஏட்டிலே எழுதிப் படிப்பா'' என்று சொல்வார்கள். அந்த வகையிலே ஏட்டிலே எழுதிக் காட்டுவதற்கு ஏதுவாக இருக்கிறதே தவிர நாட்டிலே நிறைவேறுகின்ற வகையிலே செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

அடுத்து, அரிசன மக்களின் ஈமச் சடங்குகளுக்காக 50 ரூபாய் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆயிரம் ரூபாய் வீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் கடந்த ஆண்டு என்னுடைய ஊராட்சி ஒன்றியத்திலே—பூவிருந்தவல்லியிலே மட்டும் 17,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 17,000 ரூபாய் கொடுக்கப்பட்ட இடத்தில் 1,000 ரூபாயைக் கொடுத்து ஈடு கட்டினால் என்னவாகும்? ஏற்கனவே ஊராட்சி ஒன்றியங்கள் சிறப்பாக, செம்மையாகச் செயல்பட முடியாத நிலையில் நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ஈமச் சடங்குகளுக்காகக் கொடுக்கப்பட்ட பணத்தை சர்க்காரே கொடுத்து உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலைகளும் பாலங்களும் என்பதைப் பார்க்கும்பொழுது என்னுடைய பகுதியைப் பற்றித் தொடர்ச்சியாகப் பல குறைபாடுகளை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பூவிருந்தவல்லி, பட்டாபிராம் சாலை, கூவம் ஆற்றுக்கு மேலாலே 1977 ஆம் ஆண்டு வெள்ளம் அடித்து, அதன் மூலமாக 1978 ஆம் ஆண்டும் எடுத்துச் சொல்லி, அதற்குப் பிறகு கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாக எடுத்துச் சொல்லி, அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் மத்தியிலேயும், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பி, மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்பு கடிதம் கொடுத்தும்கூட இதுவரையிலேயும் அந்தப் பாலம் கட்டப்பட வேண்டுமென்ற சூழ்நிலை எப்படியோ விடுபட்டுப் போய் இருக்கிறது. நான் ஏதோ அண்ணா மேம்பாலத்தைப் போலவோ அல்லது ஏனைய மேம்பாலங்களைப் போலவோ பெரிய பாலம் கட்ட வேண்டுமென்று சொல்லவில்லை. கூவம் ஆற்றைக் கடப்பதற்கு 14 இலட்சம் ரூபாய் தான் எஸ்டிமேட். அதைக் கட்டி முடிப்பதன் மூலம் அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு நலம் பயக்கக் கூடிய நிலைமையிருக்கும்.

குடிநீரைப் பொறுத்தவரையில், கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், கிராமங்களுக்கும் குடிநீர் கொடுப்போம் என்று சொல்லுகின்ற சூழ்நிலையில், ஆவடி நகரியமோ, அம்பத்தூர் நகரியமோ 1975 ஆம் ஆண்டுத் திட்டப்படி இதுவரையில் எந்த அளவிற்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது? இதுவரையில்



1981 ஏப்ரல் 1] [திரு. து. இராசரத்தினம்]

குடிநீர் கிடைக்காமலேயே இருக்கிறது. ஆனால் அச்சிட்டுப் புத்தகத்தைக் கொடுப்பதன் மூலம் பார்க்கிறபொழுது குடிநீர் வாரியத்தின் மூலமாகக் கொடுக்கப்பட்ட புத்தகத்தில் புள்ளி விவரம் சரியாக இல்லாமல் ஏதோ ஏழு இலட்சம் லிட்டர் தண்ணீர் கொடுப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கின்ற நிலை சரியல்ல. ஒரு இலட்சம் லிட்டர் தண்ணீர்தான் கொடுக்கப்படுகிறது. ஆவடி நகரிய ஜனத்தொகையோ இரண்டு இலட்சம். அந்த மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட வேண்டாமா? பக்கத்திலே மிட்டனமல்லி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திலே ஏற்கனவே இருந்த குடிநீர்க் குழாய்கள் கூடச் செப்பனிடப்பட முடியாமல் இன்றைக்கு இந்த அரசாங்கம் இருந்துக் கொண்டிருக்கிற நிலையைப் பார்க்கின்றபொழுது குடிநீர் கொடுக்கிறோம், குடிநீர் கொடுக்கிறோம் என்று தமிழரசு பத்திரிகையில் விளம்பரம்தான் பெரிதாக இருக்கிறதே யொழிய தண்ணீர் கிடைக்காத சூழ்நிலைதான் இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். நகராட்சியாக உருவாக்கப்பட வேண்டிய நிலையிலே இருக்கின்ற அந்த நகரியத்திற்கு சிறப்பாகத் திட்டங்களை உருவாக்கிக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மன்றத்தில் உறுப்பினர்கள் சொல்லுகின்றபொழுது ஒவ்வொரு உறுப்பினரும் கூறினார்கள் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும், தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று. ஆளுகின்ற கட்சியாக இருந்தாலும் சொன்னார்கள், எதிர்கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அதைச் சொன்னார்கள். எனவே, இதிலே இருக்கின்ற குறைபாடுகளை அருள்கூர்ந்து அமைச்சரவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அவ்வாறு தேர்தல் நடத்தப்படுவதன் மூலம்தான் அந்தப் பகுதி வாழ் மக்களுக்கு நல்ல பலன்கள் சிறப்பாகக் கிட்டும் என்ற உணர்வு பொதுமக்கள் மத்தியிலே உருவாகியிருக்கிறது என்பதை உணர்ந்து அந்த நிலையை அருள் கூர்ந்து உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய நெடுஞ்சாலை என்று பார்க்கும்பொழுது சென்னையிலிருந்து பெங்களூருக்குச் செல்லுகின்ற பூவிருந்தவல்லி துணை நெடுஞ்சாலையில் குறுக்கே ஆவடி-பூவிருந்தவல்லி ரோட்டில் ஒரு ஐலண்ட் கட்டப்பட வேண்டும் என்று கடந்த மானியத்தில் சொன்னேன். இதுவரையிலே, 25, 26 பேர்கள் இறந்து போயிருக்கிறார்கள். தேசிய நெடுஞ்சாலையில் துணை வழிச்சாலையில் பூவிருந்தவல்லி ஆவடிக்கு இருக்கின்ற குறுக்கு வழிச் சாலையில் அங்கே கட்டப்படாமல் இருக்கின்ற காரணத்தால் இந்த நிலைமை இருக்கிறது. அங்கே ஒரு தார் டிரம் வைத்தார்கள். டிரம் வைத்தார்களே தவிர அது உடனடியாக ஒடிந்து விழுகின்ற சூழ்நிலையைப் பார்க்கிறோம். சாகின்றவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் சர்க்கார் இருக்கக் கூடாது. அங்கே ஒரு தீவுத்

திடல் கட்டப்படுமேயானல் விபத்துக்களைக் குறைப்பதற்கு ஏதுவாயிருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும், சாலைகளும், பாலங்களும், சாலை, பாலங்கள் குறித்து மூலதனச் செலவுக்காக, மானியக் கோரிக்கை எண் 28,39, 52 ஆகியவற்றின் கீழ் பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நேற்று அமைச்சர் அவர்கள், இந்த மானியக் கோரிக்கைகளின் மீதான அறிக்கைகளை இந்த அவையிலே வைத்ததைப் பார்த்த பொழுது நான் மிகவும் பெரு மகிழ்ச்சியும், ஆனந்தமும் அடைந்தேன். ஏனென்றால், கடந்த 20 ஆண்டு காலமாக ஆம்பூர் பகுதியிலே, நீண்ட ஒரு கோரிக்கையாக இருந்து வந்த ஆம்பூர் பாலாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுவது தொடர்பாக ரூபாய் 73.75 இலட்சம் இந்த மானியக் கோரிக்கையிலே ஒதுக்கியிருப்பதைப் பார்க்கும் போது, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் மிகுந்த மகிழ்ச்சியும், ஆனந்தமும் அடைவார்கள். அதேபோல் ஆம்பூர் நகரியப் பகுதியில், தேசீய நெடுஞ்சாலை 46 இன் கீழ் கிலோ மீட்டர் 68/8 இல் ஒரு பாலம் கிட்டத்தட்ட ரூபாய் 10 இலட்சத்தில் கட்டப்பட இருக்கிறது. ஆக, மொத்தத்தில் 1/4 பங்கு, அதாவது ரூபாய் 83.75 இலட்சம் ஆம்பூர் நகருக்கு ஒதுக்கியிருப்பதற்காக இந்த அவையிலே என்னுடைய வாணியம்பாடி தொகுதி மக்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கிராமப்புற வளர்ச்சியை எடுத்துக் கொண்டால், இன்றைக்குத் தமிழகத்திலே புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, தமிழகக் கிராமங்களிலே புரட்சித் தலைவருடைய ஆட்சிதான் ஒரு பேரொளியாக விளங்குகிறது என்று சொன்னால் அது நிச்சயமாக மிகையாக இருக்க முடியாது. கிராமத்திலிருக்கும் வறுமையை அகற்றுவதிலும், மாற்றுவதிலும் இன்றைக்கு இந்த ஆட்சி பெரும் பங்கு வகித்துக் கொண்டிருக்கிறது. பல நல்ல திட்டங்களை இன்றைக்குத் தமிழக அரசு தீட்டி, அனைத்து இந்தியாவிலும் இல்லாத தன்னிறைவுத் திட்டங்கள் போன்ற திட்டங்களையும் தேசீய வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற திட்டத்தின் மூலமாகவும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாகவும் பெரும் மாற்றத்தை கிராமபுறத்திலே ஏற்படுத்தி வருகிறது என்று சொன்னால் அது நிச்சயமாக மிகையாகாது. அதன் காரணமாக, கிராமப்



புறத்திலே வேலை வாய்ப்புகள் அதிகமாகின்றன. கிராம மக்களுடைய பொருளாதார நிலையிலே முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது என்பது உண்மைக்கு மாறான ஒன்று அல்ல.

நேற்று, இந்த அவையிலே பேசும்பொழுது, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்கள், ஊராட்சி மன்றங்களை யெல்லாம் இந்த அரசு கலைத்துவிட்டது என்று சொன்னார்கள். ஊராட்சி ஒன்றியங்களையும் நகராட்சிகளையும் கலைத்தது யார் என்பதையெல்லாம் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லையென்று நினைக்கிறேன். 1969 ஆம் ஆண்டிலே நடந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் 1972 ஆம் ஆண்டிலே நடந்திருக்க வேண்டும். ஆனால், 1976 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் வரை ஆட்சிப் பொறுப்பிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்தாமல் தள்ளி வைத்தது? அவர்கள் கூறிய காரணங்கள் எப்படி அப்பொழுது நியாய வாதங்களாகப் பட்டனவோ, அதேபோல் தான் இப்பொழுதும். இந்த அரசுக்குத் தேர்தல்களைத் தள்ளி வைக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. ஆனால், சூழ்நிலை காரணமாகத்தான் தள்ளிப் போய்க் கொண்டேயிருக்கிறது என்பதை அவர்கள் உணர வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். நேற்று இந்த அவையிலே, அவர் பேசும்போது அரிசியைக் கூட சாம்பிளாகக் கொண்டு வந்து காட்டினார்கள். ஆனால், அந்த அரிசியை எல்லாம் மத்திய அரசு தான் நமக்கு அனுப்பி வைக்கிறது என்பதை உணர வேண்டும். அந்த அரிசி சாம்பிளை நாடாளுமன்றத்திலே கொண்டு போய் காட்டியிருப்பார்களானால் அது பாராட்டுக்குரியதாக இருந்திருக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மதுரையிலே கட்டிய கழிப்பிடங்களைப் பற்றி கேலி பேசியவர்கள் நாங்கள் பூம்புகார் கட்டினோம், வள்ளுவர் கோட்டம் கட்டினோம், இவர்கள் கழிப்பிடம் கட்டுகிறார்கள் என்று சொன்னவர்கள், வீட்டுக்கு ஒரு கழிப்பிடம் வேண்டுமென்று கேட்பது மிகவும் விந்தையாக இருக்கிறது. அப்படி வீட்டுக்கு ஒரு கழிப்பிடம் கட்டுவது என்ற திட்டத்தை இந்த அரசு முதலிலே அறிவித்திருக்குமானால், உண்ணுவதற்கே வகையில்லை, கழிப்பிடம் எதற்கு என்று கேட்பார்கள். அவர்களைப் பொறுத்தவரையிலே, முன்னாலே போனால் கடிப்பதும், பின்னாலே போனால் உதைப்பதும் என்ற வகையிலே கொள்கையை வகுத்திருக்கிறார்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது.

கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகளைப் பொறுத்தவரை ரூபாய் 100 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது ரூபாய் 100 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பல கிராமங்களுக்கு. குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே ஏரிமின்னூர்,

நாங்கினேரி என்று ஒவ்வொரு கிராமத்திலும் சுத்தமாகச் சாலைகளே இல்லாமல் இருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கக் கூடிய கிராம மக்கள் நகரத்தோடு தொடர்பு கொள்ள வேண்டுமென்றால், ஏறத்தாழ 5 அல்லது 6 மைல் நடந்து வரவேண்டும். ஆகவே இந்த கிராமங்களுக்கு உடனடியாக இணைப்புச் சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

[முற்பகல் 11–50]

வேளாண்மை, கால்நடை பாதுகாப்பு, மற்றும் மின் வாரியம் இவைகளுக்கு 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதற்காக நான் பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் ஊராட்சி ஒன்றியத்திலே இ.ஓ.எச். அதாவது கால்நடை விரிவாக்க அலுவலர்களாக கால்நடை மருத்துவர்களை நியமிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். கால்நடை மருத்துவர்களை கால்நடை விரிவாக்க அலுவலர்களாக ஊராட்சி ஒன்றியங்களில் நியமிப்பதன் மூலம் கிராமப் புறங்களில் நல்லவளர்ச்சி பெற முடியும் என்பது என்னுடைய கருத்தாகும். கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களிலும் மற்றும் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களிலும் இந்த கால்நடை விரிவாக்க அலுவலர்களாக, கால்நடை மருத்துவர்களை நியமித்திருக்கிறார்கள். நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்தக் கருத்தில் உடன்பாடு இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே, அவர் தன்னுடைய பதிலில் இதற்கு நல்லதொரு விளக்கத்தை அளிப்பார் என்று நம்புகிறேன். வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணை சபாநாயகர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்களின் மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு உங்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் கூறிக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் பல வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அந்த வளர்ச்சித் திட்டங்கள் எல்லாம், கடந்த 5, 6 ஆண்டுகளாக தடைபட்டு கிராமப் பகுதியில் திட்டமிட்ட வளர்ச்சித் திட்டங்கள் நடைபெறவில்லை என்பதை அரசுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்தில், ஊராட்சி ஒன்றியத்திலே ஆரம்ப காலத்தில் மகாத்மா காந்திஜி அவர்கள் இந்தத் திட்டத்தை கிராம ராஜ்யம் என்ற முறையிலே கிராமப் பகுதியிலே பரவலாக அந்த அதிகாரங்களை பகிர்ந்து அளிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்தினார்கள். ஊராட்சி ஒன்றியங்களிலே இதற்கு முன்பு பல்வேறு அதிகாரங்கள் இருந்தன. ஆனால், கால அடிப்படையில் கொஞ்சம் கொஞ்சமாக அந்த அதிகாரம் பறிக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில்





யில் எடுத்துக் கொண்டால், ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீர் வசதியை பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் சேர்ந்து பல திட்டங்களை போட்டு, இந்தக் குடிநீர் பிரச்சினையைத் தீர்த்து இருக்கிறார்கள். பின்னர் இந்த குடிநீர் வடிகால் வாரியம் என்ற திட்டம் ஒன்று தமிழகத்திலே வந்தது. அந்தத் திட்டத்திலே, இராம ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கிணறு தோண்ட வேண்டும் என்றால் அது ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் செய்தால் 20,000 செலவு ஆகும். இந்த குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செய்தால் அது 40,000 செலவாகிறது. அப்படி அதிக செலவானாலும் அதைப் பராமரிக்கின்ற அதிகாரங்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருக்கின்றதா அல்லது குடிநீர் வடிகால் வாரியத்திற்கு இருக்கிறதா என்று பாகுபாடுகள் இருக்கின்றன.

குடிநீர் வாரியம் தான் இதற்குப் பொறுப்பு என்று சொன்னால், அதற்கு வாரியம் தன்னுடைய கடமை முடிந்து விட்டது என்று போய்விடுகிறார்கள். அதன் பின்னர் அந்தக் குழாயில் ஏற்படும் ரிப்பேர்கள், பைப்லைன்களில் ஏற்படுகின்ற ரிப்பேர்கள் யார் செய்வது என்று வரையறுக்கப்படாமல் இருக்கின்றது. வாரியத்தைக் கேட்டால் ஊராட்சி ஒன்றியம்தான் என்றும், ஊராட்சி ஒன்றியத்தைக் கேட்டால் வாரியத்தைக் கேளுங்கள் என்றும், சொல்லத்தக்க நிலை இருக்கின்றது. அவர்களை தொகுதி எம். எல். ஏ.க்கள் சென்று கேட்டாலும் அந்த வாரியத்தில் ஒன்றும் சரியாகப் பதில் சொல்வது கிடையாது. நாங்கள் அமைச்சரிடம் சொல்லுகிறோம். அவர்கள் வேண்டுமானால் அனுப்படும் என்ற நிலைதான் இருக்கிறது. அந்த வாரியத்தில் உள்ள அதிகாரிகள் சரியான முறையில் ஒத்துழைப்புத் தருவதில்லை. அதனால், பஞ்சாயத்து யூனியனில் உதவிப் பொறியாளர் ஒருவரை நியமித்து, பஞ்சாயத்து யூனியன் பொறுப்பில் உள்ள குடிநீர்க் குழாய்களைப் பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது ஒரு பிட்டருக்கு 100 குடிநீர் குழாய்களுக்கு மேல் பராமரிப்புப் பணி கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவர் நான்கு யூனியன்களில் உள்ள குழாய்களை பராமரிக்க வேண்டும் என்று சொன்னால் எப்படி முடியும்? எனவே, குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் இந்தக் குழாய்களை பஞ்சாயத்து யூனியன் மூலம் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் மக்களுக்குக் குடிநீர் சிறந்த முறையில் வழங்குவதற்கு இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது ஆங்காங்கு வறட்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மத்திய அரசு உழைப்புக்கு உணவுத் திட்டத்தின் கீழ் இலட்சக்கணக்கான டன் அரிசி கொடுத்து இருக்கிறது. அதனை அரசாங்கம் சரியாக விநியோகிக்கவில்லை என்பதை அறிகிறேன். ஒரு இடத்தில குடிநீர் குட்டை வெட்ட வேண்டும் என்பதற்காக

கிராம சேவக் நடவடிக்கை எடுத்தால், அதற்கான பணியாளர்களை வைத்து இரண்டு கிலோ மீட்டர் அந்த வாய்க்கால் வெட்டப்பட வேண்டும் என்று சொன்னால், அதற்காக 2 கிலோ அரிசியும், ரூபாய் 1—50 பணமும் கொடுக்கப்படுகிறது. அது முறைப்படி கொடுக்கப்படுவது இல்லை. அந்த வேலையும் சரிவர செய்யப்படுவது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒழுங்காக கரைகள் போட்டுக்கொடுக்காத காரணத்தால், மழை பெய்தால் மண் சரிந்து மீண்டும் அதே பள்ளத்தில் விழுந்துவிடுகிறது. அதன் காரணமாக ஏரிக்கு வருகிற தண்ணீரும் நின்று விடுகிறது. பின்னர் அதிகப்பணம் செலவிட்டால் தான் அதைச் சீர் செய்ய முடியும். ஆகவே, அந்தத் குளத்திற்கான திட்டத்தை போடுகிறபோதே நடு குளத்தில் மண்வெட்டினால்தான் மக்களுக்கு அந்தப் பணி உபயோகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகள் நல்ல வகையில் உற்பத்தி செய்வதற்கு நல்ல விதைகள் கிடைப்பது இல்லை. ஆகவே, உழவர்களுக்கு உதவி செய்கிற வகையில் நல்ல விதை கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே, தரமான விதைகள் குறைந்த விலையில் கொடுப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே, கண்டுபிடிக்கப்பட்ட நல்ல அரிசி விதைகளான ஐ. ஆர். 8, ஐ. ஆர். 20 தற்போது வீரியம் குறைந்து ஏக்கருக்கு 4 மூட்டை, 6 மூட்டைதான் கிடைக்கிறது. இந்த அரசாங்கம் தரமான விதைகளைத் தயாரிக்க நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறைந்த டெண்டர்கள் போடுகிறவர்களிடமிருந்து தான் விதைகளை வாங்குகிறார்கள். குறைந்த விலைக்கு வாங்கினால் அது எப்படி தரம் உள்ளதாக இருக்கும். தரம் உள்ள விதைகளாக இருக்க வேண்டும் என்று சொன்னால் கொஞ்சம் விலை கூடுதலாக கொடுக்கத்தான் வேண்டும். ஆனால், அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் குறைந்த விலையில் வாங்குகிற காரணத்தால் நல்ல விதைகள் கிடைப்பது இல்லை. ஆகவே, விவசாயிகள் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு நல்ல விதைகள் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சின்னச் சின்ன, பாலங்கள் கட்டுகிற வேலைகளை இப்போது ஒன்றியத்திடம் கொடுத்து இருக்கிறார்கள். மண்வெட்டிப்போடுகிற வேலையையே எங்களால் சரியாகச் செய்ய முடியாமல் இருக்கிறபோது, இப்படிப்பட்ட பாலங்களை எப்படிச் செய்ய முடியும் என்று அவர்கள் கேட்கிறார்கள். ஓடை போன்ற ஓடுகின்ற சிறிய சிறிய வாய்க்கால்களுக்கு குறுக்கே பாலங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விருத்தாசலம் தொகுதியில் மணிமுத்தாறு ஓடுகிறது. அந்த ஆற்றின் மறுபகுதியில் 20 கிராமங்கள் இருக்கின்றன. இருப்பினும் இடையில் ஒரு பாலம் இல்லாத



காரணத்தால் அந்தப் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த மக்கள் அனைவரும் நெடுந்தூரம் சுற்றி வர வேண்டி இருக்கிறது. சுதந்திரம் அடைந்து 33 ஆண்டுகள் ஆன பின்பும் ஒரு கிராமத்தை இணைக்க ஒரு பாலம் கட்டாததால் இந்த நிலைமை இருப்பதால் அதன் குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[நண்பகல் 12—00]

பஞ்சாயத்துத் தேர்தலை இந்த அரசு உடனடியாக நடத்த வேண்டும். கிராமங்களில் அரசு இன்றைக்குப் பல கமிட்டிகளை அமைத்திருக்கிறது. அதை கட்சி சார்பற்ற கமிட்டி என்று சொல்லுகிறார்கள். எங்கள் பகுதியிலே வறட்சி கமிட்டி என்று ஒன்று இருக்கிறது. நான் மட்டும்தான் மாற்றுக்கட்சி; மற்றவர்கள் எல்லாம் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். அதைப் போலவே அறநிலையத் துறையிலும் கமிட்டி இருக்கிறது; கூட்டுறவுச் சங்கங்களிலும் அப்படித்தான் இருக்கிறது. இம்மாதிரி கமிட்டிகளை அமைக்கும்போது எல்லாக் கட்சிக்காரர்களும் இடம் பெற வேண்டும்; அரசு இதிலே பாரபட்சம் காட்டக் கூடாது. புரட்சித் தலைவர் அரசு நல்ல அரசு என்று சொல்லப்படுகிறது. மக்களுக்கு நன்மை செய்வதற்காக என்னுடைய யோசனையைச் சொல்கிறேன்.

நேரம் இல்லாத காரணத்தால் ஒரு சிறிய கதையை மட்டும் சொல்லி, முடித்துக்கொள்கிறேன். ஒரு ஆற்றைக் கடப்பதற்கு இரண்டு நபர்கள் சென்றார்கள். ஆற்றில் பெருவெள்ளம், ஆற்றைக் கடக்க என்ன செய்யலாம் என்று இருவரும் யோசித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு காளை மாடு வாலை ஆட்டிக்கொண்டு, ஆற்றில் குதித்து நீந்தியது. ஒருவன் அந்த காளையின் வாலைப் பிடித்துக்கொண்டு போனான். அடுத்து ஒரு நாயும் ஆற்றில் குதித்து சென்றது. மற்றவன் அந்த நாயின் வாலைப் பிடித்துக்கொண்டு போனான். காளைமாட்டின் வாலைப் பிடித்தவன் கரை சேர்ந்தான். ஆனால், மற்றவன் ஆற்றோடு போனான். நாயும் ஆற்றோடு போய் விட்டது. நீங்களும் அப்படிப்பட்டவர்களை நண்பர்களாக வைத்துக்கொள்ளக்கூடாது. நம்பத் தகுந்தவர்களை, நல்லவர்களை நண்பர்களாக்கிக்கொள்ள வேண்டும்; நாணயம் உள்ள கட்சியோடு இணைந்து கொள்ள வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ரி. வேசல் ஆதிந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவைமுன் வைத்திருக்கிற மானியக்கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்காக முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் கிராமப்புறங்களில் பல்வேறு சீரமைப்பு வேலைகள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல முறையில் திட்டங்களை வகுத்து, செயல்படுத்துகிறார்கள். இருந்தாலும் என்னுடைய தொகுதியிலுள்ள சில குறைபாடுகளை மட்டும் சுட்டிக்காட்டி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் கிராமப் பஞ்சாயத்துக்களில் வீட்டு வரி, தொழில் வரி வசூல் செய்யப்படவில்லை. இதனால் ஏதாவது சர்டிபிகேட் வாங்க வேண்டுமென்றால் முடியவில்லை. வீட்டு வரி ரசீது இருந்தால்தான் கோர்ட்டுக்களில் ஜாமீன் கொடுக்க முடியும்; ரேஷன் கார்டு வாங்க முடியும் என்று இருப்பதால் வீட்டு வரி ரசீது இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே, காங்கிரஸ் ஆட்சியில் இருந்ததைப் போல ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலும் கிளார்க் நியமிக்கப்பட்டு, அவர்கள் மூலமாக ஒழுங்காக வரி வசூல் செய்ய ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது 4 பஞ்சாயத்துகளுக்கு ஒரு கிளார்க் இருக்கிறார். அவர் ஒழுங்காக அலுவலகத்திற்கு வருவதில்லை; எப்போதும் பஞ்சாயத்து அலுவலகம் மூடிக் கிடக்கிறது. பொதுமக்கள், ஏழை எளிய மக்கள் அதனால் வரிப் பணம் கட்ட முடியவில்லை. எனவே, பஞ்சாயத்து அலுவலகங்களைத் திறந்து, எப்போதும் செயல்படுகின்ற வகையில் ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு கிளார்க் நியமிக்க ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு கிராமப்புறங்களில் குடி தண்ணீர் தருகிறார்கள். ஆனால் மோட்டார் மூலம் தண்ணீர் ஏற்ற வேண்டிய இடங்களில், மோட்டர் பழுதடைந்துவிட்டால் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகத்தான் மோட்டாரை பழுதுபார்க்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பழுதுபார்ப்பது என்றால் அதற்கு மாதக்கணக்கில் காலமாகிறது. அதனால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். கிராமப் பஞ்சாயத்துக்களே பழுது பார்க்கும் வேலையைச் செய்தால் விரைவிலே செய்யலாம். ஆகவே கிராமப் பஞ்சாயத்துக்களே மோட்டர்களை பழுது பார்க்க ஆணையிட வேண்டுகிறேன்.

அடுத்தபடியாக கிராமப் பஞ்சாயத்துப் பாதைகளை பல இடங்களில் மக்கள் ஆக்கிரமித்து, அடைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அப்புறப்படுத்தி, அந்த பாதைகளை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உடன்குடி ஒன்றியம் இருக்கிறது: அந்த ஒன்றியத்தில் போதுமான பணம் இல்லாத காரணத்தால் பல்வேறு திட்டங்கள் பாதிக்கப்பட்டு, வேலை நடைபெற





வில்லை. ஆகவே, அந்த உடன்குடி ஒன்றியத்தை தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொண்டு, நல்லமுறையில் திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல ஆறுமுகநேரி பஞ்சாயத்தில் குடிதண்ணீருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது; அங்கே செயல் திட்டங்களை நிறைவேற்ற வருமானம் இல்லை. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்செந்தூர் ஒரு பெரிய யாத்திரிகஸ்தலமாக இருக்கிறது அங்கு தினசரி இலட்சக்கணக்கான மக்கள் வருகிறார்கள். அந்தப் பேரூராட்சி பஸ் நிலையத்தை விஸ்தரிக்க திட்டமிட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்தப் பணியை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உடன்குடிப் பகுதியில் கொட்டங்காடு, திருச்செந்தூரை அடுத்த நடுநாலுமூலைக்கிணறு போன்ற பகுதிகளில் குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு, குடிநீருக்காக தோண்டப்பட்டு, தண்ணீர் போதுமான அளவுக்கு இருக்கிறது என்று கண்டு பிடிக்கப்பட்டும் இன்று வரையில் அவைகளை சீல் போட்டு மூடி வைத்திருக்கிறார்கள். அதனால் எந்தப் பயனும் இல்லை. ஆகவே, உடனடியாக அந்த குடிநீர் திட்டங்களைச் செயல்படுத்தி உடன்குடி, திருச்செந்தூர் போன்ற ஊர்களுக்கு விரைவாக குடிநீர் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலைப் போக்குவரத்தைப் பொறுத்தவரையில் திருச்செந்தூரில் இருந்து திருநெல்வேலிக்கு செல்லும் பாதையை குறும்பூருக்கும் ஆழ்வார் திருநகரிக்கும் இடையில் அகலப் படுத்த வேண்டும். நிறைய குறுக்கு வளைவுகள் இருக்கின்றன. அவைகளை நேர்படுத்தி, அகலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தார் கிடைக்காததால் சாலைகள் மிகவும் பழுதாகி இருக்கின்றன. அவற்றை சீர் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ரோடுகளைப் பராமரிக்க காங் கூலிகள் உடனடியாக நியமனம் செய்யப்படவேண்டும். பழுதான ரோடுகளை உடனடியாகச் சீர் செய்வதற்கு போதுமான கூலிகள் இல்லை. திருச்செந்தூரிலிருந்து செட்டிகுளம் வழியாக செல்கின்ற சாலையில் நங்கைமொழி என்னும் ஓடையில் பாலம் கட்டவேண்டும். அந்த இடத்தில் மழைக் காலங்களில் தண்ணீர் பெருகுவதால் போக்குவரத்துக்கு தடை ஏற்படுகின்றது சேதுவாய்க்கால்—குரும்பூர் சாலையும் பழுது பார்க்கவேண்டும். தைலாபுரம்—மெய்ஞ்ஞானபுரம், சாலை நீண்ட நாட்களாக பழுதாகி இருக்கின்றது. உடனடியாக அதைப் பழுதுபார்க்க

[திரு. சி. [illegible]] [1981 ஏப்ரல் 1

வேண்டும். இப்படியாக என்னுடைய கருத்துக்களைக் கூறி அதை அமைச்சரவர்கள் நிறைவு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு ஆ. வெள்ளைச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சமுதாய வளர்ச்சி மற்றும், நகர நிர்வாகம், சாலை மேம்பாடு ஆகிய கோரிக்கைகளின் மீது பேசுகின்ற நல்ல வாய்ப்பை அளித்தமைக்கு என்னுடைய நன்றியைக் கூறிக் கொண்டு என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் 1500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு சாலை அமைக்கின்ற நல்ல திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் கட்டி முடிக்கப்பட்ட நகர்ப்புற நெடுஞ்சாலைத் திட்டத்திலும் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்ற பணிகளிலும் திண்டுக்கல் நகரம் சேர்த்துக்கொள்ளப்படாதது மிகவும் வருந்தத்தக்கது. அதை உடனடியாக சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் பல் வேறு சாலைப் பணிகளைத் தொடங்க வேண்டிய கட்டாய சூழ்நிலையில் இருக்கின்றன.

என்னுடைய தொகுதியிலே உள்ள ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் நிதிநிலைமை மிகவும் மோசமாக இருக்கின்ற காரணத்தால் ஊராட்சி ஒன்றிய சாலைகள் நல்ல முறையிலே பராமரிக்கப்படாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே அரசு தேவையான மானியத்தைக் கொடுத்து அங்கே இருக் கின்ற ஊராட்சி ஒன்றிய சாலைகளை நல்லமுறையிலே பராமரிப்பதற்கு ஏதுவான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சின்னாளப்பட்டி ஒரு பெரிய நகரம். அங்கு 30,000-க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். அது இன்னும் நாரியமாகவே இருந்து வருகின்றது. அதை உடனடியாக நகராட்சியாக ஆக்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீராமபுரம் கிட்டத்தட்ட 10, 15 கிராமங்கள் [illegible] நகரியமாக இருக்கின்றது. அதைப் பிரித்து [illegible] வேண்டும் என்ற கோரிக்கையினை [illegible]



1981 ஏப்ரல் 1] [திரு. ஆ. வெள்ளைச்சாமி]

சின்னாளப்பட்டி நகரத்தைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த போது 1972 ஆம் ஆண்டில் 35 இலட்சம் ரூபாயில் ஒரு குடிநீர் திட்டம் நிறை வேற்றப் படுகின்ற சூழ்நிலையில் இடைத் தேர்தல் வந்தது. ஆனால் இடைத் தேர்தலின் முடிவிற்குப் பிறகு குழாய்கள் எல்லாம் போடப்பட்ட அந்த திட்டம் கைவிடப்பட்டது குழாய்கள் எல்லாம் தூக்கிக் கொண்டு செல்லப்பட்டுவிட்டன. ஆகவே அதை மீண்டும் ஏற்படுத்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து ஸ்ரீராமபுரம் பேரூராட்சியில் போளியம்மனூர் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையிலே 1972 லே வறட்சி நிவாரணப் பணியின் கீழ் திட்டம் நிறைவேற்றப் படுகின்றபோது அதுவும் இடைத் தேர்தலின் முடிவிற்குப் பிறகு கைவிடப்பட்டது. அங்கே 1½ இலட்சம் ரூபாய் செலவில் குழாய்கள் எல்லாம் பதிக்கப்பட்டன. அந்தத் திட்டம் கைவிடப்படுவிட்டது. பதிக்கப்பட்ட குழாய்கள் மண்ணிலே கிடைக்கின்றன. கடந்த 8 ஆண்டுக் காலமாக அந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதுபற்றி நானும் இரண்டு முறை சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்களும் அதற்குப் பதில் சொல்லி இருக்கிறார்கள்.

முன்பு குடிநீர் வாரியத்தின் தலைவராக இருந்த ஏ. கே. அரங்கநாதன் அவர்களை நேரிலேயே அழைத்துச் சென்று காட்டி இருக்கிறேன். அவர் அப்போது நகராட்சியின் மூலம் உங்களுடைய பங்கை செலுத்துங்கள், திட்டத்தை நிறை வேற்றிக் கொடுக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். ஸ்ரீராம புரம் டவுன் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் தண்ணீர் தட்டுப்பாடு மிகவும் அதிகமாக இருக்கின்றது. ஆனால் அவர் கள் கட்ட முடிந்த தொகையான 5000 ரூபாயைக் கட்டி இருக்கிறார்கள். ஆகவே அதைக் கணக்கில் எடுத்து அந்தக் குடிநீர் திட்டத்தை எப்படியும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வந்து, நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12—10).

அதேபோல் என்னுடைய தொகுதியில் ரெட்டியார் சத்திரம் என்னும் பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டு, கடும் வறட்சியில் இருக்கிறது. அங்கே குடிதண்ணீர் பிரச்சினை மிகமிக அதிகமாக இருக்கிறது. அப்படிப்பட்ட வறட்சிகளைப் போக்க நல்ல முறை யிலே திட்டங்களை தீட்டியிருக்கிறார்கள் என்று வறட்சிப் பணி களிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, வறட்சிப் பிரதே

[திரு. ஆ. வெள்ளைச்சாமி] [1981 ஏப்ரல் 1

மான என்னுடைய தொகுதிக்கு, குடிநீர்ப் பிரச்சினையை தலையாய வேலையாய் எடுத்துக் கொண்டு, நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஊராட்சிகளின் பராமரிப்பில் இருக்கும் சாலைகள் நல்ல முறையில் இல்லை. ஆகவே அந்த ஊராட்சி ஒன்றிய சாலைகளை எல்லாம் அரசின் பராமரிப்பில் எடுத்துக் கொண்டு, மக்களுக்கு சாலை வசதிகளை நல்ல முறையில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சின்னாளப்பட்டியைப் பொறுத்தவரையில் அங்கே ஊராட்சி ஒன்றியம் நல்ல முறையில் செயல்பட முடியாத நிலையில் இருக்கிறது. ஏனென்றால், போதுமான பண வசதி அங்கே இல்லை. ஆகவே எல்லா சாலைகளும் பழுது அடைந்திருக்கின்றன. குறிப்பாக அதிலே தர்மத்துப்பட்டியிலிருந்து ஆடலூர் செல்லும் சாலை மிக மோசமான நிலையில் இருக்கிறது. ஆகவே, அரசு கட்டாயமாக அந்தச் சாலையின் பராமரிப்பை ஏற்றுக் கொண்டு, அவைகளை நல்ல முறையில் மேம்படுத்த வேண்டும். இல்லை என்றால் அதிக அளவில் நிதி உதவி செய்து, அவைகளை ஏற்று நடத்தும் வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று இந்த ஊராட்சிகளுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தத் தொகுதியில் மலைப்பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு சில சாலைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் பல்வேறு சாலைகள் விடப்பட்டிருக்கின்றன. ஆகவே, அங்குள்ள சாலைகள் அனைத்தையுமே ஏற்று செம்மைப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஆலனூரில் இருந்து சோலைக்காட்டிற்கும், சோலைக்காட்டிலிருந்து, பச்சைமலைக்கும் ஒரு சாலையை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல என்னுடைய தொகுதியில் திண்டுக்கல்-நத்தம் சாலையில் ஒரு மேம்பாலம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று என் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, நான் எடுத்துக் கூறிய குடிதண்ணீர் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு உண்டான வாய்ப்புகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சின்னாளப்பட்டி குடிநீர்த் திட்டமும், போளியம்மனூர் குடிநீர்த்திட்டமும் நீண்ட நாட்களாக வலியுறுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, அவைகளை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும், சின்னாளப்பட்டி ஊராட்சியை நகராட்சியாக்க வேண்டும், ஸ்ரீராமாபுரம் நகரியம் பிரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுவிடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.



1981 ஏப்ரல் 1]

*திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தின் மீது திண்டுக்கல் நகரில் இருக்கும் குடிதண்ணீர் பிரச்சினையைக் கொண்டு வரலாம் என்று கருதுகிறேன். இரண்டு இலட்சம் மக்கள் வாழக்கூடிய ஒரு நகரத்திலே கடந்த 10, 15 ஆண்டுக்கலாமாகவே கடுமையான குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு, இன்று மிகவும் மோசமான நிலையை அடைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி, அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் இதிலே மிகவும் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

25 ஆண்டுகளுக்கு முன்னாலே சித்தய்யன்கோட்டை என்ற இடத்திலே காமராஜ் நீர்த் தேக்கம் என்ற திட்டம் ஒன்று போடப்பட்டு, அணை ஒன்று கட்டப்பட்டது. இன்று ஜனத்தொகை பெருகி, தொழில் வளர்ச்சியும் அடைந்திருக்கக் கூடிய அந்த நகரத்திலே குடிதண்ணீர் பற்றாக்குறை மிகப் பெரிய பிரச்சினையாக அமைந்திருக்கிறது. இந்த அணைக்கு வரவேண்டிய தண்ணீர் கூட முழுமையாக வர முடியாமல் சில நிலப்பிரபுக்களினால் தடுக்கப்பட்டு வருகிறது என்ற தகவல்கள் அரசாட்சியினருக்கு அவ்வப்போது அனுப்பப்பட்டு வருகின்றன. ஏனோ அலட்சியமாக, கவனக் குறைவாக இருப்பதன் காரணமாக 3 கோடி ரூபாய் செலவு செய்து அணையைக் கட்டியும், இரண்டு இலட்சம் மக்கள் குடிப்பதற்கு போதுமான தண்ணீர் கிடைக்க முடியாத ஒரு துயர நிலை தொடர்ந்து நீடிக்கிறது. இந்த அணைக்கு வரும்படியான நரசிங்கபுரம் கால்வாய், ராஜ கால்வாய் தண்ணீர் முழுவதும், இந்த அணைக்கே திருப்பி விடப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே இந்த அணையைக் கட்டுவதற்கான உத்தரவை இடும்போதே பக்கத்திலே இருக்கக் கூடிய நிலங்களுக்கு ஒருபோக சாகுபடிக்கு தேவையான தண்ணீரைக் கொடுத்து விட்டு, பாக்கித் தண்ணீர் குடி தண்ணீர் உபயோகத்திற்காக பயன்படுத்த வேண்டும் என்று தெளிவான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறோம். ஆனால் இந்த உத்தரவு நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்த காரணத்தினால், மிக கஷ்டமான சூழ்நிலையில், தண்ணீர் நெருக்கடி மேலும் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது.

அதேபோல திண்டுக்கல் வளர்ந்து வரும் ஒரு நகரம். அதற்குப் பக்கத்திலே சின்னாளபட்டிக்கும் குடி தண்ணீர் கொடுக்கிறோம்: அப்படிப்பட்ட சூழ்நிலையில், இந்தச் சித்தய்யன் கோட்டை, அணையின் மூலம் இரண்டு இலட்சத்திற்கு மேல் மக்கள்தொகை பெருகிவரும் நிலையில் சித்தையன்கோட்டை காமராஜர் அணையின் மூலம் குடிதண்ணீர் கொடுப்பதற்கு இயலாது, அதற்கு

மாறாக, வைகை, பக்கத்திலே இருக்கும்படியான மருத நதியிலிருந்து, அல்லது—வேறு சில பகுதிகளான கொடைக்கானல் பேரிஜம் போன்ற இடங்களிலிருந்தும், திண்டுக்கலுக்கு தண்ணீர் கொடுக்கும்படியான ஒரு மாற்று—அடிஷனல் திட்டம் போடுவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இப்போதுள்ள நெருக்கடியை தீர்ப்பதற்கு பெரு முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று கொடுக்கப் பட்டுள்ள வெட்டுப் பிரரேரணைகளை பார்த்தாலே பல்வேறு பகுதிகளிலும், நீரேற்று நிலையங்களுக்கு ஜெனரேட்டர்கள் வேண்டும் என்ற கோரிக்கைதான் மிகப் பெரிய கோரிக்கையாக எழுந்துக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது.

தமிழ்நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடு இன்றுள்ள அரசினால் மட்டும் ஏற்பட்டதல்ல. அது வழிவழியாக ஐந்தாண்டுத் திட்டங்களினால், அதன் சீரழிவினால் ஏற்பட்டிருக்கக்கூடிய நிலை. நீர் ஏற்றும் நிலையங்களுக்கு தொடர்ச்சியாக 24 மணி நேரமும் தட்டுப்பாடின்றி மின்சாரம் கிடைத்தால்தான் நம் குடிநீர் பிரச்சினைக்கு ஒரு குறைந்தபட்ச உதவியை செய்ய இயலும். ஆனால் இன்று அவ்வாறு கிடைக்கவில்லை. ஆகவே திண்டுக்கல் குடிநீர் திட்டத்திற்குக் கூட இந்த ஜெனரேட்டர் பொருத்துவதற்கு முயற்சி செய்து அந்த நகரசபைக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வருகிற தண்ணீரை சரியான முறையில் பம்ப் செய்ய முடியாததால் மேட்டுப் பாங்கான இடங்களுக்கு திண்டுக்கல் நகரில் தண்ணீர் கிடைப்பதில்லை. அதற்குரிய ஏற்பாட்டையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திண்டுக்கல் நகரை நான்கு பகுதிகளாகப் பிரித்து, சவுரியார்பாளையம், பாரதிபுரம், கோவிந்தாபுரம், மரியநாதபுரம் என்ற பகுதிகளில் பெரிய மேல் நிலை தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட வேண்டும். அப்போதுதான் மேட்டுப் பகுதிக்கு தண்ணீர் கிடைக்கும். வருகிற தண்ணீரை எல்லாப் பகுதி மக்களுக்கும் கிடைக்கும் படியான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும். இப்போது மாதா மாதம் ரூபாய் 5, ரூபாய் 6, ரூபாய் 7 என்று தண்ணீருக்காக வரி கொடுக்கிறார்கள். தண்ணீர் இல்லாமலேயே தண்ணீருக்கு வரி கொடுக்கிறார்கள். வரி கொடுப்பதில் கூட பிரச்சினை இல்லை. ஆனால் தண்ணீருக்கு மார்க்கம் வேண்டாமா என்று மக்கள் கேட்கிறார்கள். ஆகவே அரசு இதை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

நகரில் தண்ணீர் வசதியைப் பெருக்க ஆழ்குழாய்க் கிணறுகளை அதிகமாகத் தோண்டுவதற்கு ஏற்பாடு தேவை. ஏற்கனவே தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கும் ஒடுக்கம் தண்ணீர்



திட்டத்தை மராமத்து செய்து அதிகப்படியான அளவிற்கு தண்ணீர் கொடுக்க முடியுமா என்பதையும் அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறை என்று சொன்னால் சுகாதாரத் தொழிலாளர்கள் தான் நினைவிற்கு வருவார்கள். அந்த சுகாதாரத் தொழிலாளர்களைப் பொறுத்து சர்க்கார் அந்தத் துறையில் தொழிற்சங்கங்களுடன் செய்திருக்கக் கூடிய ஒப்பந்தங்களை அமல்படுத்த முயற்சி செய்ய வேண்டும். குடும்ப நல நிதி என்று சொல்லும்போது அந்த தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய நிலையில் உள்ள சுகாதாரத் தொழிலாளர்கள் இறந்து விட்டால் அவர்கள் குடும்பத்தினருக்கு ரூபாய் 10,000 கொடுக்க வேண்டும் என்ற திட்டம் கடந்த சில ஆண்டுகளாக அங்கே அமல்படுத்தப்படவில்லை. திண்டுக்கல் நகரைப் பொறுத்து நான்கு ஆண்டுகளாக அந்தத் திட்டம் அமல்படுத்தப்படாமல் இருக்கக்கூடிய ஒரு துயர நிலையைப் போக்கி அந்த சுகாதாரத் தொழிலாளர்கள் பிரச்சினையில் அரசு அதிக அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைக் கூறி முடித்துக் கொள்கிறேன். உள்ளாட்சித் துறையில் பணம் இல்லாமல் எந்த வேலையையும் செய்ய முடியாது. தகப்பனது ஒட்டு கோமணத்தைக் கொண்டு குழந்தையின் குளிருக்கு போர்த்துவது முடியாது. தமிழ்நாட்டில் ஒரு தனியார் நிறுவனம் கடந்த ஆண்டு மட்டும் சம்பாதித்த நிகர வருமானம் 16 கோடி ரூபாய். மதுரையில் ஒரு நிறுவனத்திற்கு ஒரு கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. ஆக, இப்படிப்பட்ட பெரிய பெரிய தொழிற்சாலைகளுக்கு, ஆலைகளுக்கு புது வரிகள் போடாமல் இருக்கிற பணத்தை வைத்துக் கொண்டு. அதிலும் 95 சதவீதம் நிர்வாகச் செலவுக்குப் போகிறது என்றால் மக்கள் மத்தியில் அரசு கெட்ட பெயரைத்தான் சம்பாதிக்க முடியும். ஆகவே நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால். இந்த உள்ளாட்சித் துறையில் சில சட்டத் திருத்தங்கள் கொண்டு வந்து பெரிய மூலதனம் போட்டு தொழில்கள் நடத்தக் கூடியவர்களுக்கு அதிக வரி போட அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எண். 28, 39, 52 ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கையில் பொதுவாக பாலங்கள், சாலைகள் பராமரிப்பு போன்ற பிரச்சினைகள் இருந்தாலும் கூட நான் என் தொகுதி பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். எனது தொகுதியைப் பொறுத்தவரையில் கலசப்பாக்கம்

காட்பாடி பாலங்களை தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளலாம். அதுமட்டுமல்ல. பள்ளிக்கூடங்களுக்கு போதுமான அளவிற்கு இடவசதியில்லாமல், கட்டிடவசதி இல்லாமல் இருக்கிறது. மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் மரத்தடியில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை ஒவ்வொரு தொகுதியிலும் இருந்து வருகிறது.

குடிநீர் வசதியை எடுத்துக்கொண்டால், காட்பாடி ஒன்றியத்தையொட்டிய காந்தி நகரில் பொதுக் குழாய்கள் 31யையும் சம்பந்தப்பட்ட இலாகா பொறியாளர் இராமராவ் அப்புறப் படுத்தி விட்டார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திருச்சி மாவட்டம் அரியலூர் மருத்துவமனையில் நோயாளிகளுக்கு குளிக்கக்கூடத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். வெளியே இருந்து தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. கேவை மாவட்டத்திலும் இந்த நிலைமைதான். தொண்டாமுத்தூரில் தண்ணீரே இல்லாமல் சுகாதரா வசதி இல்லாமல் மக்கள் கஷ்டப் படுகிறார்கள். சேலம் மாவட்டத்தில் மேட்டூர் தாலுகாவில் 1969 இல் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர் சம்பந்தப்பட்ட வேலைகள் இன்னும் முடிக்கப்படாமல் இருக்கிறது.

[பிற்பகல் 12–20]

அதேபோல் நீலகிரி மாவட்டத்திலே 1936 ஆம் வருஷம் தண்ணீர்த் தொட்டி கட்டப்பட்டு, அந்தத் தண்ணீர் தொட்டியிலேதான் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. அதனால் அங்கே தண்ணீர் நெருக்கடி. அதை மாற்றியமைக்க வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எல்லாத் தாலுக்காக்களிலும் கடுமையான வறட்சி நிலைமை நிலவுகிறது. ஆனால், அரசுத் தரப்பிலே அதற்கான ஆணைகள்பே டப்பட்டும், அங்கே அவைகள் அமல்நடத்தப்படவில்லை. அவைகள் அங்கே நடைமுறைப்படுத்தப்பட்டதா என்பதை அரசு பார்க்க வேண்டும். குறிப்பாக அமைச்சர் அவர்கள் இவைகளை கவனிக்க வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய மாவட்ட ஆட்சித் தலைவர், வளர்ச்சி மன்றக் கூட்டங்களையோ, அபிவிருத்தி செய்வதற்கான கூட்டங்களையோ, மற்றும் எந்தவிதமான கூட்டங்களையோ அடிக்கடி கூட்டுவது இல்லை. கடந்த 10 மாத காலத்தில் ஒரு கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார் எள்பதையும் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.





தண்ணீர் வசதிக்காக பல ஆணைகள் பிறப்பிக்கப்படுவதாக பத்திரிகைகளிலே செய்திகளை அமைச்சர் அவர்கள் விடுகிறார்கள். ஆனால், நடைமுறையில் தண்ணீர் சம்பந்தமான வேலைகள் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. சேத்துவண்டை என்ற கிராமத்தில் குடிப்பதற்கே தண்ணீர் கிடையாது. அர்ச்சுனாபுரம் என்ற கிராமத்திலும் குடிப்பதற்கு தண்ணீர் கிடையாது. அதே போல் பிரம்மபுரம் என்ற அரிசன காலனியிலும் குடிப்பதற்கு தண்ணீர் கிடையாது. இப்படி இன்னும் பல கிராமங்களிலே இத்தகைய நிலைமைகள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் பகுதிகளிலே இதுவரை எந்தவிதமான வேலைகளும் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, இவைகளுக்கு, உடனடியான நடவடிக்கைகளைத் துரிதமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் 7, 8 பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு ஒன்றிரண்டு நிமிஷங்கள் கிடைப்பதே கஷ்டம். உங்களுக்கு 3 நிமிஷங்கள் கொடுத்தாகி விட்டது. சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். தர்மபுரி மாவட்டத்திலே, கிருஷ்ணகிரி தாலுகாவிலே மரிக்கம்பட்டியிலே எரிசாராயத் தொழிற்சாலை வைத்திருப்பதன் காரணமாக, அங்கே விடுகின்ற கழிவு நீரினால் 300 ஏக்கர்கள் நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும், இதனால் அந்த நகரத்திலே குடிநீர் பாதிக்கப்பட்டிருக்கின்றதென்றும், அதை நீக்க வேண்டுமென்று நீண்டகாலமாகக் கேட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்காததால், இன்றைய தினம் உண்ணாவிரதம் இருக்கின்ற நிலைமை வந்திருக்கிறது. அதைத் தவிர்க்க, இந்த அரசு உடனடியாக துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**திரு. எஸ். ஆண்டித் தேவர் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 28, 39, 52-இன் கீழ் மானியக் கோரிக்கைகள் வைத்து, அதன் மீது அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பாக என்னுடைய கருந்துக்களைக் கூற அனுமதித்ததற்காக உங்களுக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மூன்று தலைப்புக்களின் கீழ் மானியங்கள் கோரியிருக்கிறார்கள். கிராமப் புற வளர்ச்சி, சாலைகள் மேம்பாடு திட்டத்திற்காக இன்னும் அதிகமான பணம் கோரி கொடுப்பதிலே எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், இதுவரையிலும் கொடுக்கப்பட்ட பணங்கள் முறைப்படி செலவழிக்க இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகள், ஒழுங்காக நடைபெறுகின்றதா என்பதைச் சொல்லுகின்றபோதுதான் நான் சில கருத்துக்களில் வேறுபடுகிறேன்.

காட்பாடி பாலங்களை தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளலாம். அதுமட்டுமல்ல. பள்ளிக்கூடங்களுக்கு போதுமான அளவிற்கு இடவசதியில்லாமல், கட்டிடவசதி இல்லாமல் இருக்கிறது. மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் மரத்தடியில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை ஒவ்வொரு தொகுதியிலும் இருந்து வருகிறது.

குடிநீர் வசதியை எடுத்துக்கொண்டால், காட்பாடி ஒன்றியத்தையொட்டிய காந்தி நகரில் பொதுக் குழாய்கள் 31யையும் சம்பந்தப்பட்ட இலாகா பொறியாளர் இராமராவ் அப்புறப்படுத்தி விட்டார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திருச்சி மாவட்டம் அரியலூர் மருத்துவமனையில் நோயாளிகளுக்கு குளிக்கக்கூடத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். வெளியே இருந்து தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. கோவை மாவட்டத்திலும் இந்த நிலைமைதான். தொண்டாமுத்தூரில் தண்ணீரே இல்லாமல் சுகாதார வசதி இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். சேலம் மாவட்டத்தில் மேட்டூர் தாலுகாவில் 1969 இல் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர் சம்பந்தப்பட்ட வேலைகள் இன்னும் முடிக்கப்படாமல் இருக்கிறது.

[பிற்பகல் 12—20]

அதேபோல் நீலகிரி மாவட்டத்திலே 1936 ஆம் வருஷம் தண்ணீர்த் தொட்டி கட்டப்பட்டு, அந்தத் தண்ணீர் தொட்டியிலே தான் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. அதனால் அங்கே தண்ணீர் நெருக்கடி. அதை மாற்றியமைக்க வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எல்லாத் தாலுக்காக்களிலும் கடுமையான வறட்சி நிலைமை நிலவுகிறது. ஆனால், அரசுத் தரப்பிலே அதற்கான ஆணைகள்பேடப்பட்டும், அங்கே அவைகள் அமல்நடத்தப்படவில்லை. அவைகள் அங்கே நடைமுறைப்படுத்தப்பட்டதா என்பதை அரசு பார்க்க வேண்டும். குறிப்பாக அமைச்சர் அவர்கள் இவைகளை கவனிக்க வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய மாவட்ட ஆட்சித் தலைவர், வளர்ச்சி மன்றக் கூட்டங்களையோ, அபிவிருத்தி செய்வதற்கான கூட்டங்களையோ, மற்றும் எந்தவிதமான கூட்டங்களையோ அடிக்கடி கூட்டுவது இல்லை. கடந்த 10 மாத காலத்தில் ஒரு கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார் என்பதையும் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.





தண்ணீர் வசதிக்காக பல ஆணைகள் பிறப்பிக்கப்படுவதாக பத்திரிகைகளிலே செய்திகளை அமைச்சர் அவர்கள் விடுகிறார்கள். ஆனால், நடைமுறையில் தண்ணீர் சம்பந்தமான வேலைகள் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. சேத்துவண்டை என்ற கிராமத்தில் குடிப்பதற்கே தண்ணீர் கிடையாது. அர்ச்சுனாபுரம் என்ற கிராமத்திலும் குடிப்பதற்கு தண்ணீர் கிடையாது. அதே போல் பிரம்மபுரம் என்ற அரிசன காலனியிலும் குடிப்பதற்கு தண்ணீர் கிடையாது. இப்படி இன்னும் பல கிராமங்களிலே இத்தகைய நிலைமைகள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் பகுதிகளிலே இதுவரை எந்தவிதமான வேலைகளும் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, இவைகளுக்கு, உடனடியான நடவடிக்கைகளைத் துரிதமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 7,8 பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு ஒன்றிரண்டு நிமிஷங்கள் கிடைப்பதே கஷ்டம். உங்களுக்கு 3 நிமிஷங்கள் கொடுத்தாகி விட்டது. சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. என். ஏ. பூங்காவனம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். தர்மபுரி மாவட்டத்திலே, கிருஷ்ணகிரி தாலுகாவிலே மரிக்கம்பட்டியிலே எரிசாராயத் தொழிற்சாலை வைத்திருப்பதன் காரணமாக, அங்கே விடுகின்ற கழிவு நீரினால் 300 ஏக்கர்கள் நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும், இதனால் அந்த நகரத்திலே குடிநீர் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்றும், அதை நீக்க வேண்டுமென்று நீண்டகாலமாகக் கேட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்காததால், இன்றைய தினம் உண்ணாவிரதம் இருக்கின்ற நிலைமை வந்திருக்கிறது. அதைத் தவிர்க்க, இந்த அரசு உடனடியாக துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**திரு. எஸ். ஆண்டித் தேவர்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 28, 39, 52-இன் கீழ் மானியக் கோரிக்கைகள் வைத்து, அதன் மீது அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற அனுமதித்ததற்காக உங்களுக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மூன்று தலைப்புக்களின் கீழ் மானியங்கள் கோரியிருக்கிறார்கள். கிராமப் புற வளர்ச்சி, சாலைகள் மேம்பாடு திட்டத்திற்காக இன்னும் அதிகமான பணம் கோரி கொடுப்பதிலே எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், இதுவரையிலும் கொடுக்கப்பட்ட பணங்கள் முறைப்படி செலவழிக்க இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகள், ஒழுங்காக நடைபெறுகின்றதா என்பதைச் சொல்லுகின்றபோதுதான் நான் சில கருத்துக்களில் வேறுபடுகிறேன்.

கிராம இராஜ்யம் என்று சொல்லி, பஞ்சாயத்து யூனியன்கள் என்ற அமைப்புக்கள் அமைத்து, சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகள் ஆன பின்னர், இந்த அமைப்புக்களிலே, சில அமைப்புக்களை எடுத்துவிட்டார்கள். விவசாயத் துறையை எடுத்துவிட்டார்கள்! அதே போல் கால்நடைப் பிரிவினை, இன்னும் பலவற்றை இந்த ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலே இருந்து எடுத்து விட்டார்கள். அது மட்டுமல்ல. இந்த ஊராட்சி ஒன்றியங்கள் சரிவர செயல்படுவதன் மூலம்தான் கிராம இராஜ்யத்தை ஏற்படுத்த முடியும் என்று நாம் அனுமதித்து, அங்கே கிராம இராஜ்யங்கள் நடைபெறுவதற்காக, இந்தத் தலைப்புக்களிலே சாலைகள் அமைக்க, சமுதாயக் கிணறுகள் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

கிராமப்புறங்களிலே இணைப்புச் சாலைகள் போடவேண்டுமென்று சொன்னால், எந்தக் கிராமங்களுக்குப் இணைப்புச் சாலைகள் போட முடியாத நிலை, சட்டச் சிக்கல் இருக்கிறது. சில கிராமங்களிலே தனியார் நிலங்களை கிராமப்புற ரோடுகள் என்ற தலைப்பின் கீழ் ஆர்ஜிதம் செய்ய முற்படும்போது, தனியார் நிலங்களை எடுக்க முடியாத அளவுக்கு சட்டமிருக்கிறது. ஆனால், நேஷனல் ஹைவேஸ் ரோடு போடவேண்டுமென்று சொன்னால், அதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. சட்டத்திலே. அந்த சட்ட முறையைப் பயன்படுத்தி நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கான சட்டங்களைக் கொண்டு வரவேண்டும். ஏறத்தாழ 15 ஆண்டு காலமாக காமையார்பட்டி என்ற கிராமத்தில், 1,300 அங்கத்தினர்களைக் கொண்ட அந்த ஊரில், ரோடு வசதியில்லாத முறையில், காரிலேகூட பெண்களை மருத்துவமனைக்கு கொண்டுபோக முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டும். இந்த அரசு இதிலே என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அதற்காக ஒரு நல்ல சட்டத்தை கொண்டு வந்து, இந்த மன்றத்திலே நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லுகிறேனே தவிர, இணைப்புச் சாலைகள் போடுகிறோம் என்று திட்டம் போட்டால் அது நடக்காது என்று நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல் சமுதாய கிணறுகள் என்ற பெயராலே 40 ஆயிரம், 50 ஆயிரம் என்ற செலவில் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியில் 10 கிணறுகள் இருக்கின்றன. அந்த கிணறுகள் பயன்படுத்தப்படவில்லை. இந்த அரசினுடைய இலட்சக் கணக்கான பணம் வீணாகிறது என்று சொல்லிக் கொள்கிறேன். அதற்காகத்தான் நாங்கள் சொல்கிறோம், தேர்தல்கள் நடத்தப் படவேண்டுமென்று; தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் இருக்க வேண்டும். அவர்கள் இல்லாத காரணத்தால், பஞ்சாயத்திலே அவர்கள் செலவிடும் திட்டங்களை நீங்கள்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்—பட்டியல் போட்டு கேட்டால் 2,995 ரூபாய்க்குள் அவர்கள் போட்டிருப்பார்கள். அதற்கு மேலே வேண்டுமென்று சொன்னால்





ஏ.டி.டி.இ. அவர்களுடைய அனுமதி வேண்டும் என்பதற்காக குறைந்த பணத்தில் போட்டு அங்கே பங்கிட்டுக் கொள்கிறார்கள் என்று குற்றச்சாட்டினை சொல்லாமல் இருக்க முடியாது. காரணம் மூவாயிரம் ரூபாய்க்குள் அந்த ரோட்டிலே மண் அள்ளி போடுகிறேன் என்று வைத்துக்கொள்கிறார்களே தவிர, முக்கியமான வேலைகளைச் செய்ய அவர்கள் முன் வருவதில்லை. இதனால் கிராமப்புறப் பகுதியில் சாலைகள், பாலங்கள் முதலியவை போடப்படாமல் இருக்கிறது.

கிராமப்புறத்தில் இருக்கிற குடிதண்ணீர் வசதி மிகவும் மோசமாக இருக்கிறது என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. 1975 ஆம் ஆண்டு தமிழகத்திலே அப்போது உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்கள் என்னுடைய தொகுதியிலே மேல்நிலைத் தொட்டியை திறந்திருக்கிறார்கள். அந்தத் தொட்டியை திறந்து வைத்ததற்குப் பின்னால் அந்த பம்ப் செட்டைப் பார்க்க முடியவில்லை. அதற்கு பின்னால் அங்கு பெண்களுக்கு குடிதண்ணீரே கிடைக்கவில்லை. ஏழாயிரம் ரூபாய் பெறுமான முள்ள பம்ப் செட் காணாமல் போயிருக்கிறது. போலீசிலும் தகவல் கொடுக்கப் படவில்லை. எங்கே போய் விட்டது என்பதும் தெரியவில்லை. என்னுடையத் தொகுதியில் 10, 15 மேல் நிலைத் தொட்டிகள் இருக்கின்றன. தமிழகத்தில் முழுவதும் எவ்வளவு இருக்கிறது என்று தெரியாமல் போனாலும், பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவிடப்பட்டு கட்டப்பட்டு மூன்று, நான்கு ஆண்டுகள் ஆகின்றது. அங்கே பம்ப் செட்டுக்கள் பொருத்தப்பட்டிருக்கிறது. அவைகள் பழுதடைந்திருப்பது, சிறு சிறு காரணங்களுக்குத்தான் என்றாலும் அவை பழுதுபார்க்கப்படாமல் இருக்கின்றன. ஒரு மேல்நிலைத் தொட்டியில் ஏதோ கசிவு இருக்கிறதாம்; உடனே அதற்கான பம்ப் செட்டை எடுத்துவந்து விட்டார்கள். கசிவுகளை நீக்குவதற்கு என்ஜினீயர்கள் இல்லையா? பக்ரா நங்கலிலேயே கசிவை அடைத்து விடுகிறோம் என்று சொன்னால் மேல் நிலைத் தொட்டியில் கசிவு இருக்கிறது என்று சொல்லி பம்ப் செட்டை எடுத்து வந்து விட்டார்கள். இதை மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்திலேயே சொல்லியிருக்கிறேன்.

என்னுடைய ஊரிலே 79 குழாய் பம்ப்புகள் போடப்பட்டிருக்கின்றன. அதிலே 29 இப்போது புதிதாக போடச் சொல்லி பணம் கொடுத்திருக்கிறார்கள். 150 அடி ஆழம் போட்டிருந்தால் பைப்புகள் தண்ணீரைத் தொடுகிற அளவிற்கு போடப்படவில்லை. 25 அடி பைப் தான் போட்டிருக்கிறார்கள். பாக்கி குழாயை அடிக்கு 20 ரூபாய் என்று எத்தனை விற்றார்களோ, தெரியவில்லை, போரிங் போட்டு, அந்த ஆழத்திற்கு குழாய் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நகர நிர்வாகம் என்று சொல்கிறார்கள், 10, 15 ஆண்டுகளாக உசிலம்பட்டி: அதனுடைய முக்கியத்துவம் உங்களுக்குத் தெரியும்; மதுரையிலிருந்து கேரளா வரைக்கும்......

கிராம இராஜ்யம் என்று சொல்லி, பஞ்சாயத்து யூனியன்கள் என்ற அமைப்புக்கள் அமைத்து, சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகள் ஆன பின்னர், இந்த அமைப்புக்களிலே, சில அமைப்புக்களை எடுத்துவிட்டார்கள். விவசாயத் துறையை எடுத்துவிட்டார்கள்! அதே போல் கால்நடைப் பிரிவினை, இன்னும் பலவற்றை இந்த ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலே இருந்து எடுத்து விட்டார்கள். அது மட்டுமல்ல. இந்த ஊராட்சி ஒன்றியங்கள் சரிவர செயல்படுவதன் மூலம்தான் கிராம இராஜ்யத்தை ஏற்படுத்த முடியும் என்று நாம் அனுமதித்து, அங்கே கிராம இராஜ்யங்கள் நடைபெறுவதற்காக, இந்த அமைப்புக்களிலே சாலைகள் அமைக்க, சமுதாயக் கிணறுகள் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

கிராமப்புறங்களிலே இணைப்புச் சாலைகள் போடவேண்டுமென்று சொன்னால், எந்தக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் போட முடியாத நிலை, சட்டச் சிக்கல் இருக்கிறது. சில கிராமங்களிலே தனியார் நிலங்களை கிராமப்புற ரோடுகள் என்ற தலைப்பின் கீழ் ஆர்ஜிதம் செய்ய முற்படும்போது, தனியார் நிலங்களை எடுக்க முடியாத அளவுக்கு சட்டமிருக்கிறது. ஆனால், நேஷனல் ஹைவேஸ் ரோடு போடவேண்டுமென்று சொன்னால், அதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. சட்டத்திலே. அந்த சட்ட முறையைப் பயன்படுத்தி நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கான சட்டங்களைக் கொண்டு வரவேண்டும். ஏறத்தாழ 15 ஆண்டு காலமாக காடையாம்பட்டி என்ற கிராமத்தில், 1,300 அங்கத்தினர்களைக் கொண்ட அந்த ஊரில், ரோடு வசதியில்லாத முறையில், காரிலேகூட பெண்களை மருத்துவமனைக்கு கொண்டுபோக முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டும். இந்த அரசு இதிலே என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அதற்காக ஒரு நல்ல சட்டத்தை கொண்டு வந்து, இந்த மன்றத்திலே நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லுகிறேனே தவிர, இணைப்புச் சாலைகள் போடுகிறோம் என்று திட்டம் போட்டால் அது நடக்காது என்று நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல் சமுதாய கிணறுகள் என்ற பெயராலே 40 ஆயிரம், 50 ஆயிரம் என்ற செலவில் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியில் 10 கிணறுகள் இருக்கின்றன. அந்த கிணறுகள் பயன்படுத்தப்படவில்லை. இந்த அரசினுடைய இலட்சக்கணக்கான பணம் வீணாகிறது என்று சொல்லிக் கொள்கிறேன். அதற்காகத்தான் நாங்கள் சொல்கிறோம், தேர்தல்கள் நடத்தப்படவேண்டுமென்று; தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் இருக்க வேண்டும். அவர்கள் இல்லாத காரணத்தால், பஞ்சாயத்திலே அவர்கள் செலவிடும் திட்டங்களை நீங்கள்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்—பட்டியல் போட்டு கேட்டால் 2,995 ரூபாய்க்குள் அவர்கள் போட்டிருப்பார்கள். அதற்கு மேலே வேண்டுமென்று சொன்னால்



ஏ.டி.டி.இ. அவர்களுடைய அனுமதி வேண்டும் என்பதற்காக குறைந்த பணத்தில் போட்டு அங்கே பங்கிட்டுக் கொள்கிறார்கள் என்று குற்றச்சாட்டினை சொல்லாமல் இருக்க முடியாது. காரணம் மூவாயிரம் ரூபாய்க்குள் அந்த ரோட்டிலே மண் அள்ளி போடுகிறேன் என்று வைத்துக்கொள்கிறார்களே தவிர, முக்கியமான வேலைகளைச் செய்ய அவர்கள் முன் வருவதில்லை. இதனால் கிராமப்புறப் பகுதியில் சாலைகள், பாலங்கள் முதலியவை போடப்படாமல் இருக்கிறது.

கிராமப்புறத்தில் இருக்கிற குடிதண்ணீர் வசதி மிகவும் மோசமாக இருக்கிறது என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. 1975 ஆம் ஆண்டு தமிழகத்திலே அப்போது உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்கள் என்னுடைய தொகுதியிலே மேல்நிலைத் தொட்டியை திறந்திருக்கிறார்கள். அந்தத் தொட்டியை திறந்து வைத்ததற்குப் பின்னால் அந்த பம்ப் செட்டைப் பார்க்க முடியவில்லை. அதற்கு பின்னால் அங்கு பெண்களுக்கு குடிதண்ணீரே கிடைக்கவில்லை. ஏழாயிரம் ரூபாய் பெறுமான முள்ள பம்ப் செட் காணாமல் போயிருக்கிறது. போலீசிலும் தகவல் கொடுக்கப்படவில்லை. எங்கே போய் விட்டது என்பதும் தெரியவில்லை. என்னுடையத் தொகுதியில் 10, 15 மேல் நிலைத் தொட்டிகள் இருக்கின்றன. தமிழகத்தில் முழுவதும் எவ்வளவு இருக்கிறது என்று தெரியாமல் போனாலும், பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவிடப்பட்டு கட்டப்பட்டு மூன்று, நான்கு ஆண்டுகள் ஆகின்றது. அங்கே பம்ப் செட்டுக்கள் பொருத்தப்பட்டிருக்கிறது. அவைகள் பழுதடைந்திருப்பது, சிறு சிறு காரணங்களுக்குத்தான் என்றாலும் அவை பழுதுபார்க்கப்படாமல் இருக்கின்றன. ஒரு மேல்நிலைத் தொட்டியில் ஏதோ கசிவு இருக்கிறதாம்; உடனே அதற்கான பம்ப் செட்டை எடுத்துவந்து விட்டார்கள். கசிவுகளை நீக்குவதற்கு என்ஜினீயர்கள் இல்லையா? பக்ரா நங்கலிலேயே கசிவை அடைத்து விடுகிறோம் என்று சொன்னால் மேல் நிலைத் தொட்டியில் கசிவு இருக்கிறது என்று சொல்லி பம்ப் செட்டை எடுத்து வந்து விட்டார்கள். இதை மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்திலேயே சொல்லியிருக்கிறேன்.

என்னுடைய ஊரிலே 79 குழாய் பம்ப்புகள் போடப்பட்டிருக்கின்றன. அதிலே 29 இப்போது புதிதாக போடச் சொல்லி பணம் கொடுத்திருக்கிறார்கள். 150 அடி ஆழம் போட்டிருந்தால் பைப்புகள் தண்ணீரைத் தொடுகிற அளவிற்கு போடப்படவில்லை. 25 அடி பைப் தான் போட்டிருக்கிறார்கள். பாக்கி குழாயை அடிக்கு 20 ரூபாய் என்று எத்தனை விற்றார்களோ, தெரியவில்லை, போரிங் போட்டு, அந்த ஆழத்திற்கு குழாய் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நகர நிர்வாகம் என்று சொல்கிறார்கள், 10, 15 ஆண்டுகளாக உசிலம்பட்டி: அதனுடைய முக்கியத்துவம் உங்களுக்குத் தெரியும்: மதுரையிலேயிருந்து கேரளா வரைக்கும்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்து விடுங்கள். இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : துணைத் தலைவர் அவர்களே, முதல் வரிசையில் இருப்பவர்கள் நேற்றெல்லாம் அரை மணி நேரம் 'பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்று நீங்கள் பேசியிருந்தால் அரை மணி நேரம் கொடுத்திருக்கலாம். இன்று 5 நிமிடங்கள் தான் ஒவ்வொருவருக்கும். இன்னும் அரை நிமிடம் தான் இருக்கிறது, சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : துணைத் தலைவர் அவர்களே, இப்படி இருந்தால் எல்லாவற்றையும் எழுதி வந்து விடுவது ; இனிமேல் அப்படித்தான் செய்யலாமென்று நினைக்கிறேன். ஒரு தீசிஸ் கொண்டு வந்து, மானியங்களின் மீது என்னுடைய பேச்சு என்று கொடுத்துப் போய் விடலாமா என்று நினைக்கிறேன். (சிரிப்பு.)

(பிற்பகல் 12–30)

என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற நிலையைச் சொல்கிறேன். அங்கே ஒரு ஏ. டி. இருக்கிறார். அவர், அவர் வருவதற்கு முன்பு இருந்த எஞ்சினியர் துவக்கிய வேலையாக இருந்தால் மெஷர்மென்ட் எடுக்க மாட்டேன் என்று சொல்கிறார். அந்தக் காரணத்தினால் 3, 4 பாலங்கள் அப்படியே இருக்கின்றன. இப்போது எஸ்டிமேட் கொடுங்கள் என்றால் கொடுக்கமாட்டேன் என்கிறார், நான் முடிக்கப்போகிற வேலையாக இருந்தால்நான் கொடுப்பேன் என்று சொல்லி அப்படிப்பட்ட வேலையாகத் தான் எடுத்துக்கொள்வார். இந்த நிலைமை இருப்பதால் வேலைகள் நடைபெறவில்லை, அதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கு தொடர்ச்சி மலையில் கும்பரக்கரையிலிருந்து வெள்ளக்காடு வரையிலே செல்கிற சாலைக்கு சென்ற ஆண்டே நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருந்தது. ஆனால் நேற்றுத்தான் அதற்கு டெண்டர் கோரப்பட்டிருக்கிறது, நேற்றைய தினம் இந்தியன் எக்ஸ்பிரஸில்தான் 31 ஆம் தேதி தான் கேட்டிருக்கிறார்கள். இநத நிலையில் இப்போது இந்த ஆண்டு வேறு அதே வேலைக்காக 15 இலட்சம் ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அரசு நல்ல எண்ணத்திலே பணம் ஒதுக்கினாலும் கூட ஒதுக்கப் படுகின்ற பணம் முறையாகப் பயன்படுத்தப் படுகிறதா என்பதைப் பார்க்கவேண்டும். அதிகாரிகள் உடனடியாக வேலையைத்



துவக்காமல் மார்ச் 31 ஆம் தேதி கடைசி நாளிலே இப்படிச் செய்து கல்லையோ, மண்ணையோ அள்ளிக்கொட்டி பாலம் முடிந்துவிட்டது என்று சொல்கிறார்கள், இதனால் மறு வருஷம் அந்தப் பாலம் போய்விடுகிறது. ஒரு ஆண்டு முழுவதும் விட்டு விட்டு அதிகாரிகள் கடைசி நாளிலே இப்படிச் செய்வதால்தான் அரசுக்குக் கெட்ட பெயர் வருகிறது. நான் இதை ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். இந்த ஆண்டு அதற்காக 15 இலட்சம் ரூபாய் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அடுத்த ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி டெண்டர் விடாமல் துரிதமாக வேலைகளைச் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து மதுரையிலிருந்து கம்பம் போகிற ரோடு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது அமைச்சர்களுக்குத் தெரியும். கேரளா வரை போகிற ரோடு அது. அந்த ரோடிலே செட்டியா பட்டி வரைக்கும் செல்கிற ஒரு பாலம் இருக்கிறது. அந்தப் பாலத்தைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு வருகிறது. அந்த ஆற்று மணலில் வண்டிகள் வந்தால் இறங்கிவிடுகின்றன. அதைப் போலவே இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே முத்துபாண்டிபட்டி என்ற இடத்திலே ஒரு பாலம் கட்டுவதற்காக 1976 ஆம் ஆண்டு 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீடு என்று சொன்னார்கள். ஆனால் அடுத்த ஆண்டு ரிவைஸ்டு எஸ்டிமேட் என்று போட்டு 50 ரூபாய் ஆகும் என்று சொன்னார்கள். அதற்கு ஏ. டி. டி. இ. சாங்ஷன் வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் சாங்ஷன் செய்வதற்கு முன்னால் இந்த ஆண்டு அதற்கு என்ன எஸ்டிமேட் என்று கேட்டால் 6 இலட்சம் ரூபாய் ஆகும் என்று சொல்லி அதை அரசு அனுமதித்தால் கூட செய்ய முடியாது என்று சொல்கிற நிலைமைக்கு அதிகாரிகள் வந்துவிட்டார்கள். திட்டமிட்டே இப்படி சில அதிகாரிகள் செய்து கொண்டு இருக்கிறார்கள். 1976 ஆம் ஆண்டே செய்திருந்தால் அந்தப் பாலத்தை 40 ஆயிரம் ரூபாயில் கட்டியிருக்க முடியும். இல்லை அடுத்த ஆண்டாவது துரிதமாகச் செயல்பட்டு வேலையை முடித்திருந்தால் 50 ஆயிரம் ரூபாயில் கட்டியிருக்க முடியும். ஆனால் இப்போது 6 லட்சம் என்று கொண்டுவந்துவிட்டு அரசுக்கு பாலத்தை கட்டவில்லை என்ற கெட்ட பெயர் உண்டாக்குகிற முறையிலே சில பேர்கள் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை நான் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தத் துறைக்கு மானியக் கோரிக்கைகள் வந்தால் இந்த மன்றம் அனுமதிக்கத் தயாராக இருக்கிறது. ஆனால் அவைகளை முறைப்படி செலவழிக்கக் கூடிய முறையிலே தேர்ந்து எடுக்கப்பட்ட மன்றங்களை சீக்கிரமாக அமைக்கவேண்டும், அல்லது அதிகாரிகளை முடுக்கிவிட வேண்டும், முடுக்கி விடுகிறோம் என்று சொல்கிறபோது நேரடியாக நீங்கள் போய் பார்த்து மார்ச் 31 ஆம் தேதிக்கு

கொண்டு வருகிற நிலைமை இல்லாமல் முறைப்படுத்தி பாலத்திற்குள்ளே வேலைகளை அந்த அந்த ஆண்டிலேயே செய்ய வேண்டும், அப்படிச் செய்தால் கிராம வளர்ச்சித் திட்டத்திற்காக நிதி கொடுப்பதிலே எங்கள் இயக்கத்திலே கருத்து மாறுபாடு இல்லை என்பதைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி, நகர நிர்வாகம், சாலைகளும் பாலங்களும் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாய வளர்ச்சிப் பணிகள் குறித்துப் பேச 5 மணித் துளிகள் மட்டுமே ஒதுக்கியிருப்பது உண்மையிலே ஒரு சாதனையையும் சொல்ல முடியாத நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாடு சுதந்திரம் அடைந்து 3·3 ஆண்டுகள் ஆகியும் கூட இதற்கு முன்பு ஆண்டவர்களும், அரசியல்வாதிகளும் கிராமங்களையும் கிராமங்களிலே உள்ள மக்களையும் மறந்து விட்டு நகரத்தின் மீதே தங்களுடைய பார்வையை செலுத்திக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுடைய நலன்களுக்காக அவர்கள் நலம் பெற வேண்டுமென்ற முறையிலே புரட்சித் தலைவர் அவர்கள் பல திட்டங்களைத் தீட்டி, அதிலே மாபெரும் திட்டமாக இருக்கிற திட்டம் தான் இந்த தன்னிறைவுத் திட்டமாகும்.

மகாத்மா காந்தியடிகள் பொருளாதார ரீதியிலும், சுயதேவைகள் பூர்த்தியடையும் வகையிலேயும் கிராமங்கள் முன்னேற வேண்டுமென்று எண்ணினார்கள். ஆனால் மகாத்மா காந்தி கனவு கண்ட அந்தக் கிராம ராஜ்யத்தை யாராலும் அமைக்க முடியாத நிலை இருந்தது. சிற்றூர்கள் எல்லா வகைகளிலேயும் மேம்பாடு அடைந்தால்தான் சமுதாயமும், நாடும் மேம்பாடு அடையும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு சமயம் கூறினார்கள். அந்தக் கூற்றின் அடிப்படையில் தன் இன்றைய தினம் தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரில், இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழகத்திலே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. 376 ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்ட தமிழகத்தில் ஏற்கனவே 69 ஒன்றியங்களில் இந்தத் தன்னிறைவுத் திட்டம் சீரும் சிறப்புமாக நடத்தி முடிக்கப்பட்டு, மேலும் 150 ஊராட்சி ஒன்றியங்களில் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளிலே முனைப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

1920 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம், இன்றைக்கு 61 ஆண்டுகள் ஆகியும் திருத்தப்படாமல் இருக்கிறது. புனிதமாகப் போற்றிப் பாது



காக்கப்பட வேண்டிய அரசியல் சட்டமே அடிக்கடி திருத்தப்படுகின்ற நிலையில் இந்த நகராட்சிச் சட்டத்தை அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறோம். இப்பொழுதிருக்கின்ற காலத்திற்கும், நிலைமைக்கும் ஏற்ப திருத்தங்கள் செய்யப்படாமல் நகராட்சிகளில் வாழும் ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சிகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு உயர் மட்டக் குழு ஒன்றை அமைத்து நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களினுடைய வருவாயைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் குறைகளையும் தேவைகளையும் பற்றி இதுவரையில் எடுத்துக் கூறினார்களே தவிர, அந்தத் தேவைகளையும், குறைகளையும் நிவர்த்தி செய்வதற்கான நிதி ஆதாரங்களுக்கான வழிவகைகளைச் சொல்லவில்லை. (மணியடிக்கப்பெற்றது.)

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது எல்லாம் நன்றாகச் செய்திருக்கிறார்கள் என்றெல்லாம் உறுப்பினர்கள் பேசினார்கள். ஆனால் செகன்ட் லிஸ்டைப் பார்க்கின்றபொழுது வடாற்காடு மாவட்டத்திலே....................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, இந்த செகன்ட் லிஸ்டிலே வடாற்காடு மாவட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றவர்கள் யாருடைய தொகுதியுமே இல்லாத காரணத்தினால்....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, பிரதான எதிர்க்கட்சியின் சார்பிலே மாண்புமிகு திரு. அன்பில் அவர்கள பேசவிருக்கிறார்கள். அவர்களிடத்தில் அந்தத் தகவலை அவர்கள் தரலாம்.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் யாருடைய தொகுதியும் இல்லாத காரணத்தினால் இது கட்சிக் கண்ணோட்டத்தோடு நடைபெறுகிறது என்ற காரணத்தினால் வடாற்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக எம். எல். ஏ.க்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(வடஆற்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி மற்றும் சாலைகள், பாலங்கள் மானியத்திலே பேசவாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி என்னுடைய உரையைத் துவக்குகிறேன். எனது கம்பம் தொகுதியில் காஞ்சிமுறத்துறை என்ற இடத்திலே வெகு நாட்களாகப் பாலம் கட்ட வேண்டுமென்ற ஒரு நிலை இருக்கும்பொழுது, இன்று எங்களது புரட்சித் தலைவரவர்களின் ஆட்சியில் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரவர்களுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுக்கும், அந்தப் பாலம் கட்ட அனுமதி அளித்தமைக்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதைப் போலவே, போம்பை அடிவாரத்திலிருந்து ராமக்கல் மெட் வரை ஒரு சாலை வேண்டுமென்று வெகு நாட்களாக அந்தப் பகுதியிலுள்ள மக்கள் இருபதாண்டுக் காலத்திற்கும் மேலாகக் கோரிக்கை விட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று அது நிறைவேறப்போவதை எண்ணி உண்மையிலேயே அந்தப் பகுதி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியடைகின்றார்கள்.

எனது தொகுதியைப் பொறுத்த வரையில், காஞ்சிமுறத்துறை பாலத்திற்கு இருபது இலட்சம் ரூபாயும், ராமக்கல்மெட்டு பாதைக்குக் கிட்டத்தட்ட எழுபது இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கியமைக்காக எனது தொகுதி மக்களின் சார்பாக இந்தத் தமிழக அரசை மனதாரப் பாராட்டுகிறேன். அதற்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

[பிற்பகல் 12–40]

இப்பொழுது எனது தொகுதியிலே லோயர் காம்பிலிருந்து குமுளி வரை செல்லும் பாதை மிகவும் மோசமான பாதையாக இருக்கிறது. அது மலைப் பாதையாக இருப்பதால், அமைச்சர் அவர்கள் அதைக் கவனத்தில் கொண்டு, மேற்சொன்ன அந்தப் பாதையை நல்ல முறையில் செப்பனிட்டு, தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கம்பத்திலிருந்து கம்பம்பெட்டு செல்லும் பாதையைப் போட்டு கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாகின்றன. இன்னும் ஒரு இடத்தில் கூட சிறிது பழுது பார்க்கும் வேலையும் நடைபெறவில்லை. அதைச் சீர்மைத்துக் கொடுக்கும்படியாக வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.



உத்தம பாளையத்திலிருந்து சுருளி நீர்வீழ்ச்சிக்குச்செல்லும் பாதை மிகவும் மோசமாக இருக்கிறது. அங்கே ஒரு டவுன் பஸ் சாதாரணமாக 5 தடவை போய் திரும்பி வருவதாக இருந்தால், இப்பொழுது 4 முறைதான் போகக் கூடிய நிலை இருக்கிறது. அங்கே பள்ளிகளுக்குச் செல்லும், ஆசிரியர்களும், மாணவர்களும் தாமதமாகப் போகவேண்டிய துர்ப்பாக்கியமான நிலை இருக்கிறது. ஆகவே, அந்தச சாலையை உடனடியாகச் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே கூடலூர் என்ற பேரூராட்சி நகராட்சியாகக் கூடிய அத்தனை தகுதிகளும் பெற்றிருக்கின்றது. அதனை உடனே நகராட்சியாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் பச்சைகுமாச்சி ஹைவேஸ் பகுதியிலே 7 டிவிஷன்கள் இருக்கின்றன. 12 ஆயிரத்துக்கு மேல் ஜனத்தொகையிருக்கிறது. அந்தப் பச்சைகுமாச்சி ஹைவேஸை பேரூராட்சியாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று விரும்பி, வேண்டி கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

* திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முதலில், இந்த 28,39,52 மானியக் கோரிக்கைகள் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு கடந்த பட்ஜெட்டிலே, நிதிநிலை அறிக்கையின் மீது போடி தொகுதிக்காக நான் வைத்த கோரிக்கைகள் அத்தனையையும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு குடிநீர் வடிகால் அமைச்சர் அவர்களும் செய்து கொடுத்ததற்காக, என்னுடைய தொகுதி மக்களுடைய சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

அதைப் போல், நான் கோரிய போடி பூதிப்புரம் பாலத்திற்கு ரூ. 7½ இலட்சம் மதிப்பீட்டிலே பாலமும், போடி தேவாரம் பக்கத்திலே இருக்கக்கூடிய சாக்குளுத்துமெட்டு ரோட்டிற்கு சுமார் ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டிலே சாலையும் 1981 ஆவது ஆண்டிற்கு ரூ. 20 இலட்சம் ஒதுக்கீட்டையும் சோத்துப்பாறையிலிருந்து அகமலைக்கு சுமார் ரூ. 75 இலட்சத்திலே ஒரு சாலையும் அமைக்க இருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். போடி நகருக்கு ரூ. 96.32 இலட்சத்திலே ஒரு குடிநீர் விஸ்தரிப்புத் திட்டத்தை ஏற்படுத்தி கொடுத்ததற்காகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கே. எம். எஸ், சுப்பிரமணியன்] [1981 ஏப்ரல் 1

என்னுடைய போடி தொகுதி சாலைகள், அதுவும் நெடுஞ்சாலை பராமரிப்பிலுள்ள சாலைகள்—போடி—தேனி சாலை, போடி தேவாரம் சாலை—மிக மோசமாக இருக்கின்றன. அதைப் பழுதுபார்த்துக்கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, நேரம் குறைவாக இருப்பதால், இத்துடன் விடை பெறுகிறேன்.

*திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கை மீது பேச எனக்குச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பெரியகுளம் தொகுதியில் கும்பக்கரையிலிருந்து வெள்ளகெவிக்கு ரோடு போடவும், பெரியகுளத்திலிருந்து அடுக்கத்திற்கு ரோடு போடவும், பெரியகுளத்திலிருந்து அகமலைக்கு ரோடு போடவும், கொடைக்கானல் மலைப் பாதையை டம்டம்பாறை வரை அகலப்படுத்தவும் நிதி ஒதுக்கி உள்ளமைக்காக, எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொடைக்கானலைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து கொடைக்கானலுக்கு வரவேண்டுமானால், ஏறத்தாழ 10 மைல் நடந்து வரவேண்டும். விவசாயிகள் தங்களுடைய விளை பொருட்களைக் கொண்டு வருவதற்கு சுமை கூலியாகவும், குதிரை வாடகையாகவும் மிகமிக அதிகமாகச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. அதே நேரத்திலே, மார்க்கெட்டுக்குக் கொண்டு வரக்கூடிய பொருள்கள் காலகாலத்திலே வராததால், அழுகி நாசமாகி விடுகின்றன. அந்தக் குறையைப் போக்க கொடைக்கானல் மலைப் பகுதியிலே உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் சாலை வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொடைக்கானல் டம்டம்பாறை வரை உள்ள பாதை மிகமிக மோசமான பாதையாகும். அந்தப் பாதையிலே அடிக்கடி விபத்துக்கள் நடப்பதால், அந்தப் பாதைக்கு மாறு பாதையாக, பூலத்தூர், தும்மலப்பட்டி இணைப்புப் பாதையை அமைக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளம் மிகப் பழமையான நகராட்சிகளில் ஒன்றாகும். அதே போல அங்குள்ள ரோடுகளும் பழமையான மண் ரோடுகளாக இருப்பதால் ஊர்திகள் கிளப்புகின்ற தூசியால் காச நோய் அதிகம். ஏற்பட ஏதுவாக இருப்பதால் காச நோய் தடுப்பு நிலையம் ஏற்படுத்தவும் தார் ரோடு போடவும் கேட்டுக் கொள்கிறேன்.

பெரியகுளம் பாம்பாற்றின் மீது பாலமும் வடுகபட்டி வரர்கநதியின் பாலமும் விரைவில் அமைக்கக் கேட்டுக்கொள்
[illegible]



1981 ஏப்ரல் 1]

*திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கோரி இருக்கிற இந்த மானியக் கோரிக்கையின் மீது இரண்டொரு வார்த்தைகளை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலிலே மாநில நெடுஞ்சாலை என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள மானாமதுரை—வைகை ஆற்றின் குறுக்கே ஒரு புதிய பாலம் கட்ட 60 லட்சம் ரூபாயும், பெரம்பலூர் மானாமதுரை சாலையில் வேலூர் வரையிலும் சாலை அமைத்து மேம்பாடு செய்தல் மற்றும் பாலம் அமைப்பதற்கு 8—3/4 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்து இருப்பதற்காக நான் அமைச்சரைப் பாராட்டுகிறேன். ஏறத்தாழ 532 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அதிலே 453 லட்சம் செலவழிக்கப்பட்டு மொத்த வேலையிலே 36 சதவிகிதம் முடிக்கப்பட்ட பாம்பன் பாலத்தின் வேலை எங்கே கைவிடப்பட்டுவிடுமோ என்று நினைத்துக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அதற்கும் 1981—82ல் 75 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். விரைவிலே ஒப்புதலைப் பெற்று அந்த வேலையை செய்து தரவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பாசேத்தி—படமாத்தூர் சாலையில் வைகை ஆற்றின் மீது ஒரு சப்மெர்ஜிபள் பிரிட்ஜ் கட்டப்பட்டிருக்கின்றது. அந்தப் பாலமே மணலுக்கு அடியில் இருக்கிறது. ஆகவே அதைக் கட்டியவர்கள் எப்படி இதைத் கட்டினார்கள் என்பதை விசாரித்து அவர்கள் மீதும் அதற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீதும் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன் அந்த பாலத்தை உயர்த்திக்கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். என்னுடைய பகுதியிலே மிகவும் மோசமாக இருக்கின்ற வயல்சேரியிலிருந்து, கரிசல்குளம் வழியாக தாமரைக்குளம் ரோடு பழையனூரிலிருந்து கல் மடைக்கு ஆலத்தூர், திருவாத்தூர், தச்சநல்லூர், தாமரைக்குளம் வழியாக ரோடு மற்றும், 1980—81லே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட திருப்புவனம்—ஏனாதி ரோடுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. நகரப் பஞ்சாயத்துக்களில் போதிய பணவசதி இல்லாத நிலையில் சுகாதாரம் மற்றும், ரோடு வசதிகள் மோசமாக இருக்கின்றன. ஆகவே தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் நகர்ப்பஞ்சாயத்துக்களுக்கும் போதிய நிதி வசதிகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணிஅடிக்கப்பட்டது.)

[திரு. க. பாரமலை] [1981 ஏப்ரல் 1

அடுத்து, கரும்பாலை சாலைகள் என்ற தலைப்பின்கீழ் பல ரோடுகள் போடப்பட்டு வருகின்றன. அந்த ரோடுகள் கரும்பாலைக்குப் பக்கத்திலேதான் போடப்படுகின்றன. அவைகளை, கரும்பாலைக்கு எங்கிருந்தெல்லாம் கரும்பு வருகின்றனவோ அந்தப் பகுதியிலே உள்ள ரோடுகளை மேம்பாடு செய்வதற்குரிய நிதி வசதியை செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

திரு. சி. சிவப்பிரகாசம்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலை பராமரிப்பு சார்பில் நடைபெறும் இந்த மானியக் கோரிக்கையில் என்னுடைய தொகுதி சார்பாக ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கொல்லிமலையில் போடப்பட்டுள்ள நெடுஞ்சாலை சாலைகளில் 70 பின்வளைவு சாலையை மாற்றி 40 பின்வளைவு சாலையாகக் குறைத்து, போக்குவரத்தினை சீரமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆண்டு மலைவாழ் மக்கள் மேம்பாட்டிற்காக பார்ட் 2 திட்டத்தில் சாலை வசதிகளை சேர்த்து அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு முடிந்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-50]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து திரு. அன்பில் தர்மலிங்கம் பேசுவார்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: துணைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேச வாய்ப்பு அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி, சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும்.

*திரு. ஏ. சாகுல் ஹமீது: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் சார்பாக நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நானும் இங்கே பார்த்துக்கொண்டு இருக்கிறேன், எதிர்க்கட்சி சார்பாகவும், ஆளும்கட்சி சார்பாகவும் இங்கே பேச அழைக்கப்பட்டு, உறுப்பினர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள், * * *

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேசுவதற்கு வாய்ப்பு வேண்டும் என்று கேட்டவுடனே அளிக்கப்பட்டு இருக்கிறது. இங்கே எல்லா மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் மதிப்பு அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அப்படி பேசுவது கூடாது. அதை அவைக்குறிப்பில் இருந்து நீக்குகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1981 ஏப்ரல் 1] [பேரவைத் துணைத் தலைவர்]

திரு. ஏ. சாகுல் ஹமீது: என்னுடைய தொகுதியில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கல், சாலை அபிவிருத்தி ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், கடையநல்லூரில் மேல் கடையநல்லூர்—கருங்குளம்—மலைப்பாட்டை ரோட்டை செப்பனிட்டுக் கொடுக்கவேண்டும், அதன் மூலம் அந்தப் பகுதியிலிருந்து விளைபொருள்களை விவசாயிகள் கொண்டுவர உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அடுத்தாற்போல் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, கடையநல்லூரில் இருந்து வலசை போகிற ரோட்டின் குறுக்கே ஒரு ரயில் கேட் உள்ளது. அந்த ரயில் கேட்டை இரவு 7 மணிக்கு மூடிவிட்டு, மறு நாள் காலை 7 மணிக்குத்தான் திறக்கிறார்கள். அதன் காரணமாக அந்தப் பகுதியில் உள்ள மக்கள் காலை 7 மணி வரை அவசர மருத்துவ உதவி போலீஸ் உதவி தீயணைப்பு உதவி மற்றும் பல உதவிகளை இரவு நேரங்களில் பெற்றுக் கொள்வதற்கு இயலவில்லை. அதற்காக நாங்கள் ரயில்வேத் துறையை அணுகினோம். அவர்கள் சம்மதம் தெரிவித்து, அதற்காக கேட்டை திறந்துமூட ஒரு ஆளை நியமிக்கவேண்டும் என்று அரசுக்கு எழுதியிருப்பதாக அறிகிறேன். ஆகவே, அந்த ரயில்வே கேட்டை திறந்து மூட ஒரு ஆள் நியமிக்க அந்த அரசு ஆணையிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் குடிநீர் தட்டுப்பாடு இருக்கிறது. இப்போது வறட்சி திட்டத்தின்கீழ் அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அந்த இரயில்வே கேட்டிற்கு ஒரு ஆள் நியமனம் செய்வதற்கு உடனடியாக ஆணைகள் பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி என்பது இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. முதலாவது பராந்தகசோழன் காலத்தில் ஏற்பட்டது. தமிழகத்தில் ஊராட்சி மன்றங்கள் இல்லாத காலத்தில் ஊர்பஞ்சாயத்துக்கள் கூடி குடவோலை மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த அமைப்புகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. அதற்குச் சான்றாக உத்திரமேரூர் செப்பேடுகளே இருக்கின்றன என்பதை நாம் அனைவரும் அறிவோம். அப்போது ஆரம்பிக்கப்பட்ட அந்த முறையில் வெள்ளைக்காரர்கள் ஆட்சிக் காலத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு, அதற்குப்

பிறகு 1858-ல் மேயோ பிரபுவால் பரிசீலிக்கப்பட்டு, 1884 ஆம் ஆண்டில் சென்னை லோக்கல் அட்மினிஸ்டிரேஷன் ஆக்ட் கொண்டு வரப்பட்டு, அதன் கீழ் பஞ்சாயத்துச் சட்டம் இயற்றப் பட்டது. அதற்குப் பிறகு 1928-லே முதன்முதலாக தமிழ் நாட்டில் 300 பஞ்சாயத்துக்கள் துவங்கப்பட்டன. பிறகு. 500 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கும் கிராமப் பஞ்சா சாயத்து அவசியம் என்று கருதி, அது மாற்றியமைக்கப்பட்டது. 1934-ல் தாலுக் போர்ட்டுகள் கலைக்கப்பட்டன. மாவட்ட மன்றங்களே அதனுடைய நிர்வாகத்தையும் ஏற்றுக் கொண்டன. அப்போது மக்கள் ஆட்சி முறை இல்லாததால் கலெக்டரே தலைமையேற்று ஆட்சி நடத்துகிற முறை இருந்தது. அதை மாற்றியமைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு 1952 ஆம் ஆண்டு அன்றைய பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் உலக உத்தமர் காந்தியடிகள் பிறந்த அக்டோபர் மாதம் 2-ம்தேதி 1952 ஆம் ஆண்டில் முதன்முதலாக தேசிய வளர்ச்சித் திட்டம் உள்ளாட்சி வளர்ச்சித் திட்டம் என்கிற திட்டத்தைத் துவக்கினார் கள். அந்தத் திட்டம் சரியாக நடைபெறாத காரணத்தால் அப்போது இருந்த எஸ். கே. டே அவர்களை அழைத்து, அந்தத் திட்டத்தை கிராம மக்களுக்கு மட்டுமே பயன்படுகிற வகையில் மாற்றியமைக்கப்படவேண்டும், மற்றவர்களுக்குப் பயன்படக் கூடாது என்று சொல்லி ஒரு மாற்றுத் திட்டத்தை வகுக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். எஸ். கே. டே அவர்கள் ஒரு திட்டத்தைத் தயாரித்தார்கள். அது பிரதமருக்கு அனுப்பப்பட்டது. அதன்பிறகு அந்தத் திட்டமும் செயல்படவில்லை என்று கருதி 1958 ஆம் ஆண்டு பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்த சமுதாய நலத் திட்டத்தை இந்தியாவுக்கு அறிமுகப்படுத்தினார் கள்.

அப்போது அவர்களைக் கேட்டார்கள், ஏன் இப்படி மாற்றிக் கொண்டே இருக்கிறீர்கள் என்று கேட்டபொழுது அவர்கள் "நாய் வாலை ஆட்டவேண்டுமென்று நான் கருதுகிறேன்; ஆனால் நாயே வாலை ஆட்டுகிறது. அந்த வாலை வெட்ட வேண்டும்; நேஷனல் எக்ஸ்டென்ஷன் ஸ்கிம் என்பது ஒரு சமுதாய நலத் திட்டம்: சமுதாயத்தில் அடித்தளத்திலே இருக்கிற மக்களுக்கு இது பயன்பட வேண்டும்" என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் திட்டம் தயாரிக்க பலவந்தராய் மேத்தா அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அதன் பிறகுதான் இன்றையதினம் அது சமுதாய நலத் திட்டம் என்று நடைபெற்று வருகிறது. அதனுடைய நோக்கம், பலவந்தராய் மேத்தா அவர்கள் 3 டயர் அமைப்பில் திட்டம் தயாரித்தார்கள். முதல் டயர், கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் ஜனநாயகமுறைப் படி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அடுத்தது, பிளாக் டெவலப்மெண்ட்-பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்ந்தெடுக் கப்பட வேண்டும். அதற்கு அடுத்து மாவட்ட அளவில் ஜில்லா





போர்டு இருக்க வேண்டும். இதுதான் பலவந்தராய் மேத்தா திட்டம். இன்றையதினம் அந்த அமைப்பு இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்று தான் சொல்ல வேண்டும். மூன்று டயரில் இரண்டு இல்லை. பஞ்சாயத்தும் இல்லை. தேர்தலும் இல்லை. பஞ்சாயத்து யூனியனும் இல்லை. ஜில்லா அளவில் இருக்கிறதா, இல்லையா என்பது சந்தேகமாக இருக்கிறது.

இப்படிப்பட்ட நேரத்தில்தான் நம்முடைய அமைச்சர் சமுதாய நலத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு கேட்டு, இந்த மன்றத்திலே கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், இந்த திட்டங்கள் சரியாக இயங்கவில்லை. திட்டங்களைப் போடுகிறோமே தவிர, திட்டங்கள் நிறைவேற்றப்பட வாய்ப்பு இல்லை. என்பது என்னுடைய குற்றச்சாட்டு. பஞ்சாயத்து இருந்தால், பஞ்சாயத்து யூனியன் இருந்தால், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், தலைவர்கள் இருந்தால் நிச்சயமாக இந்தத் திட்டங்கள் செயல்பட நல்ல பல வாய்ப்புகள் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் பஞ்சாயத்து தேர்தல் இல்லை; பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தல் இல்லை. நிர்வாகம் அதிகாரிகள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதனால் சமுதாயத் திட்டம் சரியாக நடைபெறவில்லை. உத்தமர் காந்தி கண்ட கனவும் நடைபெறவில்லை; அண்ணா அவர்கள் சொன்ன கிராம ராஜியம் கிராம ராஜியம் என்ற நோக்கமும் ஈடேறவில்லை.

தன்னிறைவுத் திட்டத்தைப்பற்றி இங்கே சொன்னார்கள். நான் இந்தத் தன்னிறைவுத் திட்டம் புதிதாக வந்திருக்குமோ என்று கருதினேன். காரணம், நான் ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும் இருந்திருக்கிறேன். இந்தத் துறைக்கு அமைச்சராகவும் இருந்திருககிறேன். அப்போது இருந்ததைவிட இந்தத் திட்டத்தில் ஏதாவது புதிதாக இருக்கிறதா என்று பார்த்தேன். இன்றைக்கு பத்திரிகையில் செயலாளர் அறிக்கை விட்டிருக்கிறார் இதுபற்றி. அவர் குறிப்பிட்டிருப்பது-இப்படிப்பட்ட வசதிகள் ஏற்படுத்துவது என்பது ஒரு இமாலயப் பணி. ஆனால் இந்த வசதிகளை நிறைவேற்ற தடைக் கற்களாக இருப்பது நிதி வசதி இன்மை. அது மட்டுமல்ல. திட்டப் பயிற்சிப் பெற்ற பணியாளர்கள் இல்லை. மற்றும் சிமின்ட், இரும்பு மற்றும் திட்டங்களுக்கு போதுமான சாமான்கள் கிடைக்கவில்லை என்று சொல்லி விட்டு, மேலும் விளக்கிச் சொல்கிறார். குடிதண்ணீர் வழங்குதல், இணைப்புச் சாலைகள், சிறு பாலங்கள் அமைத்தல், ஆதிதிராவிட மக்கள் குடியிருப்புகளுக்கு மயான சாலைகள் அமைத்தல், சிறு பாசன திட்டங்கள் மேமபடுத்துதல், ஊரக மருந்தகங்கள், தாய் சேய் நல விடுதிகள் அமைத்தல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டு

மும் எங்களுக்குக் கட்டுப்படியாகவில்லை, ஆகையால் மின்சாரம் தர மாட்டோம் என்றுதான் சொல்லவேண்டிவரும். அந்த முறை தவறு. ஒரு தொழிலை நடத்துகிறவர், அந்தத் தொழிலை கட்டுப்படியாகக்கூடிய வகையில் நடத்தும் பொறுப்பு அவரைச் சார்ந்தது. அதை கட்டுப்படியாகவில்லை என்று சொல்லி மின்சார வாரியத்தின் தலையிலே சுமத்தக்கூடாது. ஒரு மாத பாக்கி வந்தவுடனே ஏன் மின் துண்டிப்பு செய்யவில்லை என்று கேட்டார்கள். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஏன் துண்டிப்பு செய்யவில்லை என்பதற்கு காரணம் தெரியவில்லை; துண்டிப்புச் செய்யவில்லை என்பது தெரிகிறது. 3 மாத டெபாசிட் வாங்கவில்லையா என்று கேட்டார்கள். இவ்வளவு பாக்கி வைத்திருக்கிறவர்களுக்கு 3 மாத டெபாசிட் என்பது ''யானைப் பசிக்கு சோளப் பொரி' போன்றது. மேலும் இதிலே மின்சாரக் கட்டணப் பாக்கி ஒரு கோடி என்றால், அதற்கான அபராதம் சுமார் 7½ கோடி ரூபாய். இதிலே 3 மாத டிபாசிட்டை வைத்து என்ன செய்ய முடியும்?

## புளியமரங்களுக்கான பட்டாக்களை ஒப்படை செய்தல்.

*வினா எண் 472—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசுக்குச் சொந்தமான பலன் தரும் புளியமரங்கள் தனிப்பட்டவர்களுக்கு 2—சி பட்டா வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஊராட்சிகளில் வருமானம் பெருக்கும் வகையில் அவைகளை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு மறு ஒப்படை செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) அரசுப் புறம்போக்கு நிலங்கள் 1961 முதல் ஊராட்சிகளுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு ஒப்படை செய்யப்படுவதற்கு முன் தனிப்பட்டவர்களுக்கு மேற்படி புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்கள் மீது வழங்கப்பட்ட 2-சி பட்டாக்கள் வழக்கில் உள்ளன.

(ஆ) மறு ஒப்படை செய்யும் உத்தேசம் தற்போது இல்லை. எனினும், அவற்றின் மூலம் கிடைக்கும் வரி ஊராட்சிகளின் நிதியில் சேர்க்கப்படுகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, 1961 ஆம் ஆண்டுக்கு முன்பே இந்த மாநிலத்தில் சுமார் 12 இலட்சம் பயன்தரும் புளியமரங்கள் தனிப்பட்டவர்



களுக்கு ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அவைகள் மூலம் கிடைக்கின்ற வரி ஊராட்சிகளின் நிதியில் சேர்க்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஒவ்வொரு மரத்திலிருந்தும் 100 ரூபாய், 200 ரூபாய் வருமானம் வருகிறது. ஆனால் 3 ரூபாய் கட்டணம்தான் வசூல் செய்யப்படுகிறது. இந்த மரங்களை ஊராட்சிகளுக்கே ஒப்படை செய்தால் அந்த வருமானம் முழுவதும், கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் மாநிலம் முழுவதிலிருந்தும், ஊராட்சிகளுக்கே கிடைக்கும். ஆகவே இந்த மரங்களை எல்லாம் ஊராட்சிகளுக்கு ஒப்படை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, 2-சி பட்டா வழங்கப்பட்டு, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. புறம்போக்கு நிலங்களில் அவர்களே மரங்களை வைத்து வளர்த்து அதிலிருந்து வருகிற பலன்களை அவர்கள் அனுபவித்துக் கொள்கின்ற முறையில் 2-சி பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான ரூபாய் அவைகள் மூலம் வருமானம் வரும்போது ஏன் அரசாங்கம் எடுத்துக் கொள்ளக்கூடாது, அல்லது ஊராட்சிகளுக்கு ஒப்படை செய்யக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மாநிலம் பூராவும் 2-சி பட்டா எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது; எங்கெங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது; வருமானம் என்ன; எப்படி சீர் செய்வது; வருவாயை எப்படி அரசு கணக்கில் சேர்ப்பது என்பன போன்றவைகளை அரசு யோசித்து, ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, 3 ரூபாய் தற்போது வசூல் செய்யப்படுகிறது. இந்த 2-சி பட்டா என்பது right to collect the usufructs அனுபவத்திற்கு மட்டும் இந்தக் கட்டணத்தை வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்போது தருவதை விட இன்னொரு நபர் கூடுதல் தொகை நான் தருகிறேன் என்று சொல்லி, கூடுதல் தொகை தர முன்வந்தால் முந்தியவர் உரிமையை ரத்து, செய்து, கூடுதல் தொகை தருபவர் அனுபவிக்கும் உரிமையை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 2-சி பட்டாவில் குறைபாடு இருந்தாலோ அரசுக்கு அதனால் வருகின்ற வரும்படி குறைவாக இருக்கும் என்ற நிலைமை இருந்தாலோ அதிலே இருக்கின்ற நிலைமைகளை மாற்றி ஆவன செய்வதற்கு அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே நான் தங்கள் மூலமாக ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தற்போது குடிநீர் வடிகால் வாரியமும், உள்ளாட்சித் துறையும் ஒன்றுக்கொன்று தொடர்பே இல்லாமல் இருக்கின்றது. அப்படி இருக்கக்கூடாது. ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்க வேண்டும். இவர்கள் எல்லாம் எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்களே தவிர அந்தத் திட்டங்களை யார் போடுவது என்ற பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. பல இடங்களிலே திட்டங்கள் போடப்பட்டும் அது சரியாக இயங்காத நிலைமை இருக்கின்றது. அப்படிப்பட்ட நிலையில் ஏன் இந்தத் திட்டங்களை நிறைவேற்றவில்லை என்று உள்ளாட்சித் துறையிடம் கேட்டால் எங்களுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்கின்ற நிலைமை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே நான் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்றால் உள்ளாட்சித் துறையிலே கிராமங்களுக்கு குடிநீர் வழங்குகின்ற திட்டமும் அமைய வேண்டும். குஜராத்திலே இருப்பது போன்று இந்தத் திட்டத்திற்கென்று தனி இலாகாவே ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ரூரல் டெவலப்மென்ட் ஒர்க்ஸ் என்பதைப் பொறுத்தவரையில் ஏற்கனவே ஒரு எஸ்.இ. மட்டும் போடப்பட்டதாக ஞாபகம் இருக்கின்றது. இப்போது தண்ணிறைவுத் திட்டம் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்பதால் அதற்கு தனி இலாக்காவையே அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே, இங்கே உணவுக்கு வேலை கொடுக்கிற திட்டம் என்ற பெயரால் ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டு, அது பூரணமாக வெற்றி பெற்று வந்ததாகச் சொல்லப்பட்டது. ஆனால் பல இடங்களில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவே இல்லை. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், அந்த அரிசியை யாரும வாங்குவது கிடையாது. அரிசிக்குப் பதிலாக காண்டிராக்டில் வேலையை ஒப்பந்தம் செய்துவிட்டு, அந்த அரிசியை வேறு விதங்களில் விற்கப்படுகிறது. நான் குறை கூற வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. அதைப் போக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். அந்த அரிசியை வாங்கிக் கொண்டு வேலை செய்ய ஆட்கள் யாரும் வருவது இல்லை. அது காண்டிராக்ட் மூலமாக நடத்தப்பட்டு வருகிறது. ஆகவே மக்களுக்கும் இந்த திட்டத்திற்கும் தொடர்பே இல்லை என்று நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, பஞ்சாயத்துக்கள் கலைக்கப்பட்டதற்குப் பிறகு அங்கே மக்கள் குழு என்ற பெயரால் ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. அந்தக் குழுவிலே ஏற்கனவே அனுபவப்பட்டவர்களை, அல்லது ஏற்கெனவே பஞ்சாயத்து தலைவர்களாக



இருந்தவர்கள்—அவர்கள் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள்—அல்லது விவரம் தெரிந்தவர்கள் வேறு யாராவது நியமிக்கப்படுகிறார்களா என்றால், இல்லை. பல இடங்களில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அமைப்பாளர்கள் கொடுக்கிற பட்டியலின் படிதான் நியமிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. என்னுடைய தொகுதியிலே கூட அப்படி நடைபெற்றிருக்கிறது. அந்தச் சம்பவத்தைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கூட விவரமாக சொன்னேன். அங்கே யார் யாருக்கு காண்டிராக்டுகள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும்கூட எடுத்துச் சொன்னேன். விசாரிப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல இங்கே இந்த முறை புகுத்தப்படுவதினால், மக்களாட்சி அங்கே நடைபெறவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே கர்ப்பிணிகளுக்கு 50 ரூபாய் 3 மாதங்களுக்கு கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதிலே கொத்தாம்பட்டி பிளாக் மட்டும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, ஏதாவது எடுத்திருக்கிறார்களா என்று பார்த்தால், ஒன்றும் இல்லை. கர்ப்பிணிகளே மற்றப் பகுதிகளில், இல்லைபோல் இருக்கிறது. கோட்டாம்பட்டி பகுதியில் மட்டும் எடுத்து விட்டு மற்ற ஒன்றியங்களுக்கெல்லாம் ஏன் எடுக்கவில்லை என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மாத்திரம் அல்ல, ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் செயல் படுத்தப்படாமலேயே இருக்கின்றன. அது மாத்திரம் அல்லாது எங்களுடைய தலைவர் கூட இங்கே ஒரு குற்றச்சாட்டை அவையிலே எடுத்து வைத்தார்கள். அதாவது சைதாப்பேட்டைப் பகுதியில், ஒரு அண்ணா மருத்துவ மனை என்ற பெயராலே ஒரு கட்டடம் கட்டி, ஒரு கொட்டகையைப் போட்டு அதை ஆக்கிரமித்துக் கொண்டு, அதிலே அண்ணாவின் பெயரை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று. அதைப்பற்றி எங்கள் தலைவர் குறிப்பிட்டபோது, நம்முடைய மரியாதைக்குரிய அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அப்பொழுது சொன்னார்கள். இப்பொழுது அங்கே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய சமீபத்திலே நான் போய் பார்த்தேன். இப்பொழுது அண்ணா உருவம் பொறித்த ஒரு கொடி பறந்துக் கொண்டிருக்கிறது. முன்பு இல்லை—இந்தச் செய்கை பொதுமக்களின் நலனுக்கு விரோதமானது என்பதை குறித்து, மாநகராட்சி தலைவருக்கும், சொல்லியாகி விட்டது. இங்கே எங்கள் தலைவரே சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும்

[திரு. அன்பில் தர்மலிங்கம்] [1981 ஏப்ரல் 1

இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நகராட்சியைப் பொறுத்தவரையில், எந்தெந்த வரி விதிப்புகளின் மூலம் நகராட்சியினுடைய வருவாயை அதிகப்படுத்துவது, அல்லது எந்தெந்த வழிகளில் நகராட்சியின் வருவாயை அதிகரிக்கச் செய்வது என்பது பற்றி ஒரு அதிகாரி பல இடங்களுக்குச் சென்று அறிந்து வந்தார்கள். இன்றையதினம் பத்திரிகையிலே பார்த்தால் அந்த ராவ் என்பவர் மாற்றப்பட்டிருக்கிறார். இதற்காகவே பிரத்யேகமாகப் போய் படித்து வந்ததற்குப் பிறகு, அப்படி படித்ததற்கான வேலை அவருக்குக் கொடுக்கப் பெறவில்லை. அரசாங்கப் பணத்திலே செலவழிக்கப்பட்டு, அந்த வழிகளையெல்லாம் அறிந்துக் கொள்ள வேண்டும் என்று போய் [illegible]தவர்—அதிகமான நிதிநிலை ஆதாரத்தை எப்படி பெருக்க முடியும்? என்பதை அறிந்துக் கொண்டு வந்தவர் இன்றைக்கு திடீரென்று மாற்றப்பட்டிருக்கிறார். ஏறத்தாழ இந்த 7 ஆண்டுகளில் 11 அதிகாரிகள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல, சமீபத்தில்,

RDC 1/81 —Minutes of the Review meeting held by the Revenue Officer on 12.3.1981.

Present : A. Francis, B.A.,
Revenue Officer.

Missing bills pointed out by the Audit have been referred to ranges above. Bills surrendered by the Tax Collectors could have easily been verified and many items accounted for payment in the Account Books and Account Registers could have also been verified instead of allowing the items lying of. But no ranger is dare to do so this work

என்று பலவற்றை எழுதியிருக்கிறார்கள். இதிலே என்னையும் விசாரித்தபோது அந்த வரி கட்டியவர்களுக்கு ரசீது இருக்கிறது. பணம் கட்டியதற்கான ரசீது கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கணக்கிலே பார்க்கிறபோது அவர் பெயரிலே வரவில்லை.

(பிற்பகல் 1–10).

ஆனால் ரசீது அவர்களிடத்தில் இருக்கிறது. அந்த ரசீதை எடுத்துக் கொண்டு போய் எப்படி பாக்கி என்று கேட்டால் அதில் பல விவகாரங்கள் வந்துக் கொண்டிருக்கின்றன. அதனால் மாநகராட்சி 75 இலட்சம் ரூபாய் காணாமல் போயிருக்கிறது என்ற ரிப்போர்ட்டை அவர்களுடைய குழுவே அன்றைக்கு பரிசீலனை செய்து அதுவும் வந்திருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும்.



1981 ஏப்ரல் 1] [திரு. அன்பில் தர்மலிங்கம்]

இதுபோல் பல்வேறு குற்றச்சாட்டுகள் ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரையிலும், நகராட்சிகள் பொறுத்தவரையிலும், மாநகராட்சிகள் பொறுத்தவரையிலும் என்னிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் பலவற்றை அமைச்சர் அவர்களிடம் நான் கொடுக்க இருக்கிறேன். எனவே இப்போது நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால் உடனடியாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். அதற்குப் பிறகுதான் இந்த தன்னிறைவுத் திட்டம் தன்னிறைவுத் திட்டமாக நல்ல முறையில் செயல்படும். எனவே ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும். மத்திய அரசின் சென்ஸஸ் கணக்குகளைக் கேட்க வேண்டியதில்லை. ஏற்கனவே நம் பஞ்சாயத்து யூனியன்களில் எல்லாம் எடுக்கப்பட்டு விட்டன. நான் கூட வேடிக்கையாகச் சொன்னேன். 18 வயது என்று குறைக்க வேண்டும் என்று சொன்னபோது, ஏற்கனவே 18 வயதானவர்கள் எல்லாம் சேர்ந்து விட்டார்கள் என்று. சட்டமன்றத் தேர்தலில் அவர்கள் வோட்டு போட்டு விட்டார்கள். நாடாளுமன்றத் தேர்தலுக்கும் கூட அவர்கள் வோட்டுப் போட்டுவிட்டார்கள். ஆகவே இனிமேல் புதிதாக சேர்க்க வேண்டியதில்லை என்று சொன்னேன். மத்திய அரசைக் குற்றஞ்சாட்டினால், மத்திய அரசு கூட இப்போது முடிந்து விட்டது. இதில் மத்திய அரசுக்கும் நமக்கும் சம்பந்தம் இல்லை. காரணம், நாடாளுமன்றத்திற்கு எடுத்த லிஸ்ட் வேறு, சட்டமன்றத்திற்கு இருப்பது வேறு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருப்பது வேறு. ஊராட்சிமன்றங்களுக்கான தேர்தலுக்காக லிஸ்டை ஏற்கனவே எடுத்து முடித்தாகிவிட்டது. ஆகவே மத்திய அரசை குறை கூற வேண்டியதில்லை. ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களை நடத்தினால்தான் தன்னிறைவுத் திட்டம் தன்னிறைவுத் திட்டமாகச் செயல்படும்.

இன்னொன்றையும் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். 1974 ஆம் ஆண்டு ரெவின்யூவும், ஊராட்சியும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டது. அப்படி பிரிக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றப்பட்டு வந்தது. டி.டி.ஓ. ஆக இருக்கிறார். அவரோடு சரி. அதற்கு மேல் அந்த இலாகாவில் ப்ரமோஷன் இல்லை. தப்பித் தவறி டிஸ்ட்ரிக்ட்டுக்கு வந்தால் ஒருவருக்குத்தான் வரும். அல்லது அவர் ரிட்டையராகிற காலத்தில் ஜாயின்ட் டைரக்டர் ஆப் முனிசிப்பாலிட்டீஸ் என்று வருவார். ஆனால் ரெவன்யூ டிப்பார்ட்மென்டில் இருப்பவர்கள் கணக்குப் பிள்ளை, முன்சீப் இல்லை என்றால் ரெவன்யூ இன்ஸ்பெக்டர் முன்சீப்பாக ஆகிவிடுகிறார். அவர்களுக்கு, ரெவன்யூ டிப்பார்ட்மென்டில், இருப்பவர்களுக்கு எல்லாக் கதவுகளும் திறந்திருக்கும். ஆனால் மற்ற டிப்பார்ட்மென்டிலிருந்து யாராவது நுழைந்து விட்டால் கதவைச் சாத்தி விடுவார்கள். இதை நான் சொல்லவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நன்றா

அவர்களிடம் ஒரு முறை கேட்டேன். இந்த நூற்பாலைகளுக்கு எல்லாம் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போட்டு அவர்கள் மானேஜிங் டைரக்டர்களாக இருந்தார்கள். நான் ஒரு நூற்பாலைக்குத் தலைவராக இருந்தேன். என்கீழ் மூன்று பேர்கள் வேலை செய்தார்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அப்போது. ஒருநாள் இயக்குனர்களுக்கும் மற்றவர்களுக்கும் தகராறு ஏற்பட்டு அவர் ஒரு கேள்வி கேட்டார். அதற்கு அவர்கள், I am not your subordinate என்று சொன்னார்கள். உடனே அவர் கேட்டார், பின் ஏன் ஐயா என்னிடம் வந்தாய் என்று. இரண்டு பேர்களையும் சும்மா இருங்கள் என்று சொல்லி அண்ணாவிற்கு ஒரு கடிதம் எழுதினேன். நீ மட்டும் எழுதினால் போதாது இன்னும் இரண்டு பேர்களை எழுதச் சொல் என்று சொன்னார். பிறகு இரண்டு மூன்று பேர்கள் எழுதினார்கள். உடனே அண்ணா அவர்கள் எழுதி தன் திருக்கரத்தால் கையெழுத்துப் போட்டார்கள். ஐ.ஏ.எஸ்.. ஆபீஸர்ஸ் வேண்டியதில்லை, அவர்கள் பழகுகிற, நடக்கிற முறை வேறு. இது தொழிலாளர்களிடம் பழக வேண்டியது, அடி மட்டத்தில் இருந்து வந்தவர்களிடம் பழகுவது, எனவே டி.ஆர்.ஓ. கிரேடில் இருந்தால் போதும் என்று டி.ஆர்.ஓ. க்களைப் போட்டார்கள். கலெக்டர் மேற்பார்வை பார்க்க வேண்டாம் என்று சொல்லவில்லை. இப்போதுள்ள அமைப்பில் அவர்கள் தான் பார்க்க வேண்டும். டி.டி.ஓ. என்று தனியாகப் பிரித்து அந்த இலாகா சரியாக இயங்கவில்லை. அவர் மட்டும் வேலை பார்க்கிறார். கிராமங்களை எடுத்துக் கொண்டால் கிராம சேவக்கிலிருந்து அங்கே பணியாற்றுகிறவர்கள் எல்லோரும் மக்களோடு தொடர்புடையவர்கள். அவர்களுக்கு உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ஏ.பி.டி.ஓ. மட்டும் போடுவது போதாது. தனி என்ஜினியரைப் போட வேண்டும். அவர்களுக்கு அவர்களே அளவு எடுக்கிற அதிகாரம் வழங்க வேண்டும்.

அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. டீ.டீ. ஓக்களுக்கு ஆபீஸ் கிடையாது. இதை எல்லா இடங்களிலும் பார்க்கிறோம். நம்முடைய பஞ்சாயத்து அலுவலகத்தைச் சார்ந்தவர்கள், கலெக்டர் ஆபீசிலே ஒரு மூலையிலே இருக்கிறார்கள். டீ.டீ.ஓ. ஆபீஸ், ஆர்.டீ.ஓ. ஆபீசில் ஒரு பகுதியாக இருக்கிறது. அவர்களுக்கு என்று தனிக் கட்டிடம் கிடையாது. அவர்களுக்கு என்று தனியாக போன் கிடையாது. இன்னும் சொல்லப் போனால், அவர்களுக்கு வாகன வசதிகூட கிடையாது. அப்படி எங்காவது செல்ல வேண்டுமானால், மற்றவர்கள் தயவிலேதான் போக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே இவைகளை யெல்லாம் கவனத்தில் கொண்டு, இந்தத் திட்டம் நிறைவேற்றுகின்ற போது, அவர்களுக்கு டீ.ஆர்.ஓ. வரை பதவி உயர்வு கொடுக்க அரசாங்கம் யோசனை செய்ய



வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே, இந்த இலாகாவின் வேலைகளை துரிதப்படுத்துவதற்கு, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. துரைமுருகன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கும்போது, வெளியே நிதி அமைச்சர் அவர்கள், பத்திரிகை பேட்டி ஒன்றில் எம்.எல்.ஏ.க்களுக்கு 1,500 ரூபாய் சம்பளம் உயர்த்தியிருப்பதாகச் சொல்லியிருப்பது இந்த அவையை மீறிய செயல் ஆகாதா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்று ஏப்ரல் 1 ஆம் தேதி என்பதற்காகச் சொல்லுகிறீர்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, மானிய கோரிக்கைகள் எண். 28, 39, 52 ஆகிய இந்த மூன்று மானியக் கோரிக்கைகளின் மீதும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், 29 பேர்கள் இங்கே தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துகள் எல்லாம் இன்று இங்கே எடுக்கப்பட்டு, சட்டமன்றக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கின்றன. இங்கே முக்கியமாக, சமுதாய வளர்ச்சி, நகர நிர்வாகம் போன்ற மானியங்களின் மீது பல்வேறு கருத்துக்கள் எடுத்துச் சொல்லபட்டிருக்கின்றன. சமுதாய வளர்ச்சிக்காக தமிழக அரசு பல முன்னோடித் திட்டங்களை வகுத்து செயல்படுத்திக் கொண்டு வருகின்றது என்பதையும், கிராமப்புறங்களில் வறுமையை அகற்றுவதும், அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்துவதும், அவர்கள் வாழ்வை மேம்படுத்தவும், கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்தவும், நலிந்த பிரிவினர் நலம்பெற வாழ்வளிப்பதும், இந்த அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, இந்தத் திட்டங்களின் அடிப்படையில் தான் நகரப்புறங்களும், கிராமப்புறங்களும் இன்று அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அளவில் திட்டங்கள் தீட்டப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இன்னும் குறிப்பாக, இப்படிப்பட்ட கிராமங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அதன் மூலமாக அண்ணல் காந்தியடிகள் எந்த கிராம ராஜ்யத்தை அமைக்க வேண்டுமென்று விரும்பினார்களோ, ஆசிய ஜோதி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்காக பல்வேறு அறிஞர் பெருமக்களை யெல்லாம் கொண்டு, இப்படிப்பட்ட திட்டங்களைத் தீட்டி, நடைமுறைப் படுத்தினார்களோ, பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த தமிழகத்தில் எப்படிப்பட்ட கிராம ராஜ்யத்தை அமைக்க வேண்டு

[திரு. ப. குழந்தைவேலு] [1981 ஏப்ரல் 1

மென்று விரும்பினார்களோ, அந்த கிராம ராஜ்யத்தை இன்று ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான், தமிழகத்தின் முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் தன்னிறைவுத் திட்டத்தை தன்னுடைய தன்னிகர் இல்லாத் திட்டமாக, தமிழகத்திற்குக் கொடுத்து, அதன்மூலம் இன்று நடைபெற்று வருகின்றது. குறிப்பாக, கிராமப்புறங்களைப் பொறுத்த அளவில் அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில், இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அருமை அண்ணன் அன்பில் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்ற காலத்திலேகூட இது போன்ற திட்டங்களை நாங்கள் செயல்படுத்தி வந்தோம். மேற்கொண்டு தன்னிறைவுத் திட்டம் என்று போடுவதிலே, என்ன தனிப்பட்ட ஒரு கருத்து இருக்கிறது என்று கேட்டார்கள். நான் பணிவன்போடு அண்ணன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் — தன்னிறைவுத் திட்டத்திலே அடிப்படைத் தேவைகளை, வசதிகளை செய்து கொடுப்பதாகத்தான் இந்த திட்டம் கிராஷ் புரோகிராமாக, ஒரு தீவிரத் திட்டமாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், முன்பிருந்த ஆட்சிகளிலே செய்திருக்கிறார்களா, இல்லையா என்ற கருத்திற்கு நான் போகாமல், முன்பிருந்த ஆட்சி காலத்தில் அடிப்படை வசதிகளை இப்படி ஒரு கால கெடு கொடுத்து, ஒரு ஆண்டு காலத்தில், இவ்வளவு ஒன்றியங்களில் இவ்வளவு வேலைகள் முடிக்க வேண்டும் என்று திட்டமில்லை. ஆகவே நான், இதை ஒரு தன்னிறைவுத் திட்டமாகக் கொண்டு வந்து, கால கெடு கொடுத்து, இன்னென்ன ஊர்களில், இந்த இந்த ஒன்றியங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று, இன்னென்ன திட்டங்கள் செயல்படுத்த வேண்டுமென்ற முறையிலே இந்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றது. ஆகவே, தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றித் தனியாகச் சொல்ல வேண்டுமானால், ஒரு கால கட்டத்திலே 69 ஒன்றியங்கள் எடுக்கப்பட்டு, 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளுக்குள் பல்வேறு வேலைகள் முடிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு தனிப் புத்தகம் இங்கே மன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே சட்டமன்றத்தில் அந்தப் புத்தகம் இடம்பெறவில்லை என்று சொன்னாலும், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்களாகவே அதைப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 1-20]

எந்தெந்த ஒன்றியங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன, என்னென்ன வேலைகள் நடைபெறுகின்றன என்பதற்கான குறிப்புகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. அடிப்படை வசதிகள் என்கின்ற அளவிலே இணைப்புச் சாலைகள்



1981 ஏப்ரல் 1] [திரு. ப. குழந்தைவேலு]

ஏற்படுத்தி இருக்கிறோம். 1,400 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 1980–81 ல் 100 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1981–82 ல் 100 இலட்சம் ஒதுக்கி அதற்கான பணிகள் கோடிட்டு குறிப்பிடப்பட்டிருக்கின்றன

அதேபோல பள்ளிக்கூடங்களில், ஊராட்சி ஒன்றியங்களில் 28,607 பள்ளிகள் இயங்குகின்றன. அதிலே கட்டிடங்கள் உள்ளவை மட்டும் 21,101 ; ஏறத்தாழ ஏழாயிரத்திற்கும் மேல்பட்ட இடங்களில் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் இல்லை. பள்ளிக்கூடங்களுக்கு கட்டிடங்கள் நிரந்தரமாக வேண்டுமென்கிற அடிப்படையிலே, தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. 1980—81 ல் கட்டப்பட்ட பள்ளிக் கட்டிடங்கள் எண்ணிக்கை 1,830 முன்பிருந்த ஆட்சி காலத்தில் இப்படி ஆயிரக்கணக்கான அளவில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டினார்களா என்பது அவர்களுக்கே தெரிந்த உண்மை. ஆகவே, அருமை அண்ணன் அவர்களும் ஏற்றுக்கொள்வார் என்று நம்புகிறேன்.

1981–82 ல் 550 இலட்சம் ரூபாய் ஒதுக்கி கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டத்திலே இரண்டாயிரம் பள்ளிக் கட்டிடங்களும், இதர திட்டங்களின் மூலமாக 1,500 பள்ளிக் கட்டிடங்களும், ஆக 3,500 பள்ளிக் கட்டிடங்கள் 21 கோடி ரூபாய் செலவழித்து இந்த ஆண்டிலே நடைமுறைப்படுத்தி இருக்கிறோம். இந்த நேரத்திலே கனம் காமராஜர் அவர்களை நினைவு கூறுவது சரியாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். ஏன் என்று சொன்னால் கல்வி கண்ணைக் திறந்தவர் கனம் காமராஜர் அவர்கள். பள்ளிக்கூடங்கள் இல்லாத ஊரிலே பள்ளிகள் திறக்கவேண்டுமென்கின்ற எண்ணத்தோடு அவை கட்ட வேண்டுமென்று காமராஜர் அவர்கள் கூறுவார். இந்த நேரத்திலே அவர்களுடைய புகழுக்கு புகழ் சேர்க்கின்ற வகையிலே, பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்த கருத்தைக் கொண்டிருந்தார்களோ, அந்த அளவிலே புரட்சித் தலைவர் அவர்கள் பள்ளிக் கட்டிடங்கள் இல்லாமல் இருந்ததை, அந்த இடங்களில் எல்லாம் பள்ளிக் கட்டிடங்கள் ஏற்படுத்தி புகழோடு புகழ் சேர்க்கின்ற வகையிலே பாடுபட்டு வருகின்றார்கள். உண்மையிலே இதுவரையில் கனம் காமராஜர் அவர்கள் காலத்திலே கூட இவ்வாறு ஆயிரக்கணக்கான பள்ளிகள் கட்டியதற்கு சரித்திரம் இல்லை. சரித்திரத்தை திருப்பி பார்க்கிற பொழுது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, அதற்கு முன்பு 20 ஆண்டு காலம் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி இருந்தது. ஒரே ஆண்டில் 3,500 பள்ளிக் கட்டிடங்கள் கட்டியதற்கு, யாராவது, எந்த ஆட்சியாவது, இந்தியா முழுவதிலும் இருக்கின்ற 22 மாநிலங்களில் எந்த மாநிலத்திலாவது

கட்டுவதற்கு திட்டமிட்டிருக்கிறார்களா என்று சொன்னால்
வேறு யாரும் இல்லை என்று சொல்லி, நமது தமிழக முதல்வர்
அவர்கள்தான் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி பள்ளிக் கட்டிடங்கள் இல்லாத இடங்கள் இருக்கக்
கூடாது என்கிற அடிப்படையில் முன்பு பெரியவர்கள் சொல்
வார்கள் கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று.
இப்பொழுது புதுமொழியாக நிரந்தர பள்ளிக்கட்டிடம் இல்லாத
ஊரிலே குடியிருக்க வேண்டாம் என்கிற அளவிற்கு புது புது
திட்டத்திலே புதிய உலகை ஏற்படுத்தி வருகிறோம்.

அதே போல் ஆரம்ப பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரி
யர்கள் 1,31,990, மாணவ மாணவியர் எண்ணிக்கை 51
இலட்சத்து 20 ஆயிரம். அங்கே 1979–80 ல் 73 கோடியே
45 இலட்சம் ரூபாய் செலவிடப் பட்டது. 1980–81 ல்
75 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.
1981–82 ல் 82 கோடி ரூபாய் செலவிடப்படுவதற்கு
திட்டம் தீட்டப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் ஆசிரியப் பெருமக்கள் எல்லாம் ஒரு
கோரிக்கையை அரசுக்கு வைத்தார்கள். அவர்களை அரசு
ஊழியர்களாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டார்கள்.
புரட்சித் தலைவர் அவர்கள் புன்னகையோடு அந்த கோரிக்
கையை ஏற்றுக் கொண்டு வருகின்ற 1981 ஆம் ஆண்டு ஜூன்
திங்கள் 1ஆம் நாள் முதல் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை
அரசு ஊழியர்களாக கருத முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல கிராமப் பகுதிகளுக்கு நகர் புறத்திலே இருக்கிற
வசதியும், வாய்ப்பும் கிராம மக்களுக்கு கிடைக்க வேண்டும்
என்பதற்காக இன்று எல்லா பஞ்சாயத்துக்களிலும் வானொலி
பெட்டிகள் வைக்கப் பெற்றிருக்கின்றன. ஏறத்தாழ 41 ஆயி
ரம் வானொலிப் பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கின்றன.
தொலை காட்சி பெட்டி வேண்டுமென்று கிராமங்களிலே எழுப்
பப்பட்ட கோரிக்கையின் அடிப்படையிலே, தொலை காட்சிப்
பெட்டிகளும் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை
யிலும் தொலைக்காட்சிப் பெட்டிகளில், அதுவும் சென்னை
தொலைக்காட்சி நிறுவனத்தின் மூலமாக ஒளிப்பரப்புகின்ற
காட்சியை 100 கிலோ மீட்டர் தூரத்திற்குத்தான் நாம் பார்க்க
முடியும். இந்த 100 கிலோ மீட்டர் தூரத்தில் கிராமப்புற பஞ்
சாயத்துக்கள் 1,000-க்கு மேற்பட்டவைகள் இருக்கின்றன.
ஆனால் கொடுக்கப்பட்டிருக்கின்ற தொலைகாட்சிப் பெட்டி
களின் எண்ணிக்கை 384. ஆகவே எல்லா பஞ்சாயத்துக்களுக்
கும், அந்த ஆயிரம் பஞ்சாயத்துகளிலே 919 பஞ்சாயத்துக்
களிலே இந்த ஆண்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்





படுகின்றன. ஆகவே, அதற்காக ஆகிற செலவு 36 இலட்சத்து
76 ஆயிரம் ரூபாய். இதிலே அரசாங்கம் கொடுக்கக்கூடிய மானியம்
75 சதவீதம். பஞ்சாயத்துக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய
செலவு 25 சதவீதம். ஆகவே அரசின் 75 சதவீத மானியத்
துடன் தொலைகாட்சிப் பெட்டிகள் எல்லாப் பஞ்சாயத்துக்
களுக்கும் கொடுக்கப்படுகின்றன. ஆகவே, இதிலே நாம் தன்
னிறைவை அடைகிறோம் என்பதை நான் பெருமையோடு
சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின் அடிப்படையிலே முதல் கட்ட
மாக 69 ஒன்றியங்கள் எடுக்கப்பட்டன. இரண்டவதாக 150
ஒன்றியங்கள் எடுக்கப்படுகின்றன. மூன்றாவது கட்டமாக 157
ஒன்றியங்கள் எடுக்கப்படுகின்றன. ஆகவே இந்த ஆண்டிலே
150 ஒன்றியங்களுக்காக 109 கோடி ரூபாய் செலவிட இருக்
கிறோம் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்
கிறேன். ஆகவே இதுபோன்ற நிலைமைகள் முன்பு இருந்த
அரசு காலங்களிலே இல்லை என்பதை நான் மீண்டும் மீண்டும்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைப் போல 157 ஒன்றியங்
களுக்கு ஏறத்தாழ 120 கோடிக்கு மேலே ஒதுக்கியிருக்கிறோம்.
ஆகவே, 300 கோடி ரூபாய் கிராமப்புறங்களை அபிவிபித்தி
செய்ய வேண்டும், அடிப்படை வசதிகளை மக்களுக்குச் செய்து
கொடுக்க வேண்டுமென்ற முறையிலே அந்த வேலைகள் நடந்து
வருகின்றன.

கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பற்றி இங்கே
அருமை அண்ணன் அன்பில் அவர்களும் மற்றும் உள்ள நண்பர்கள்
எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இந்த நேரத்திலே நான்
ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். கொடுக்கப்
படக்கூடிய அரிசி சரியில்லை அல்லது காண்ட்ராக்ட் முறையில்
இவை செய்யப்படுகின்றன, ஊழல் இருக்கிறது என்று சொன்
னார்கள். குறிப்பாக சொல்வதன் மூலம், எந்த இடத்திலே
எங்கே அப்படி இருக்கிறது, ஊழல் இருக்கிறது, மோசமான
அரிசி இருக்கிறது என்பதை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.
அருமை நண்பர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் இங்கே அரிசி
யைக் கொண்டுவந்து காட்டி இரண்டு மணி நேரம் வேக வைத்
தாலும் இது வேகாது என்று சொல்லி ஒரு பொட்டலத்தை
மேலே தூக்கிக் காட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இதுதான்
அந்த அரிசி என்று சொன்னார்கள். நண்பர் வின்சென்ட்
அவர்கள் அவர்களிடமிருந்து அந்தப் பொட்டலத்தை வாங்கி
என்னிடம் கொண்டு வந்து தந்தார்கள். அதை நான் வாயிலே
போட்டுப் பார்த்தபோது எவ்வளவு நல்ல அரிசியைக் கொடுத்து
திருக்கிறார்கள் என்றுதான் எனக்குத் தெரிந்தது. எப்படியா
வது ஒரு களங்கத்தை ஏற்படுத்த வேண்டும், மாசு கற்பிக்க
வேண்டும். எப்படியாவது அரசின்மீது ஏதாவது ஏற்படுத்த
வேண்டுமென்ற கருத்திலே சொல்லியிருப்பார்கள் என்று நான்

நினைக்கவில்லை, அவர்களை அறியாமலே அப்படிப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்திருக்கலாம். கொடுக்கப்படக்கூடிய அரிசி நல்ல அரிசியாக இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, கொடுக்கப்படக்கூடிய அளவும் சரியாக இருக்க வேண்டும் என்பது தான் இந்த அரசினுடைய எண்ணம். எங்காவது ஊழல் நடைபெற்றிருக்கலாம், இல்லை என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை. ஆனால் அப்படி நடந்திருக்கிறது என்றால் எங்கே எந்த இடத்திலே என்று குறிப்பிட்டு கோடிட்டுக் காட்டிச் சொல்வதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். எங்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையிலே அப்படிப்பட்ட கடமையாற்ற வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கிராமப்புறங்களிலே வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு கடந்த ஆண்டு 76 ஆயிரம் டன் அரிசி விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 1 இலட்சம் டன் வேண்டும் என்று மைய அரசைக் கேட்டிருக்கிறோம். அதன் மூலமாக கிராமப்புறங்களிலே வேலை இல்லாமல் இருக்கிறவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும், அதன் மூலமாக குளங்களைத் தூர் எடுக்கவும், சாலைகளை அமைக்கவும், பள்ளிக்கூட கட்டிடங்களைக் கட்டவும் இதைப்போன்ற பணிகள் நடைபெற இருக்கின்றன. தன்னிறைவுத் திட்டத்திலே 150 ஒன்றியங்களை எடுக்க இருக்கிறோம். இப்போது ஒன்றியங்களிலே வளர்ச்சி அலுவலர், பி.டி.ஓ., ஒருவர்தான் இருக்கிறார். அவர் ஒருவர் மட்டும் இருந்தால் பணிகள் சீராக செம்மையாக நடக்காது என்ற காரணத்தினால் கூடுதல் வளர்ச்சி அலுவலர், ஏ.பி.டி.ஓ. போட வேண்டுமென்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

[பிற்பகல் 1–30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கூடுதல் பி.டி.ஓஸ் போட வேண்டும் என்கின்ற திட்டம் அரசின் பரிசீலனையிலே இருக்கிறது. கூடிய சீக்கிரம் அதற்குரிய ஆணைகள் நம்முடைய தமிழக முதல்வரவர்களால் பிறப்பிக்கப்பட இருக்கிறது என்பதனை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கிருக்கக்கூடிய இயக்குநரகம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டும் இருப்பதைப்போல இருந்து கொண்டிருக்கிறது; பேரூராட்சிகளுக்கும் சேர்த்து அந்த இயக்குநரகம் இருந்தாலும் கூட, பேரூராட்சிகளுக்காகத் தனியாக ஒரு இயக்குநரகம் ஏற்படு



வதற்கும் இந்த அரசு செயல்முறைப் படுத்துவதற்குமான திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்த இருக்கிறது என்பதனை நான் பணிவன்போடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மக்கள் குழுவைப் பற்றி நம்முடைய அருமை அண்ணன் திரு. அன்பில் அவர்கள்கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆளுங் கட்சிக்காரர்கள் மட்டுமே இந்த மக்கள் குழுக்களிலே இருக்கின்றார்கள்; எதிர்க் கட்சிக்காரர்கள் இருக்கின்ற வாய்ப்பு இல்லை என்பதனை எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏற்கனவே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களெல்லாம் அந்த மக்கள் குழுவிலே சேர்க்கப்பட்ட நேரத்திலே நாங்கள் இந்த மக்கள் குழுவிலே இருக்க மாட்டோம்; நாங்களெல்லாம் இராஜினாமா செய்கின்றோம் என்று சொல்லி ஏற்கெனவே நீங்கள் தினசரி பத்திரிகையிலேயெல்லாம் வெளியிட்டீர்கள். ஆனால், ஒருசிலயிடங்களில் மட்டுமே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் இராஜினாமா செய்திருக்கின்றார்கள்; பல்வேறு இடங்களில் இன்னும் இருந்து கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே இராஜினாமா செய்கிறோம் என்று சொல்லிவிட்டு அங்கே சில பேர் இருப்பதும், சில பேர் வெளியிலே நடப்பதும் என்ற இப்படிப்பட்ட நிலைமைகள்கூட மக்கள் குழுவிலே இருக்கிறது என்பதனை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் குழுவைப் பொறுத்த வரையில் என்னுடைய எண்ணமெல்லாம் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இருக்க வேண்டும்; நடக்கின்ற வேலைகளை ஆய்வு செய்ய வேண்டும்; நடக்கின்ற பணிகள் ஒழுங்காக நடைபெற வேண்டும்; தொடர்ந்து நடைபெற வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு மக்கள் குழு அமைக்கப்பட்டது. மக்கள் குழு ஒரு மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும்; அங்கே ஆலோசனைகள் தெரிவிக்கப்பட வேண்டும்; அந்த ஆலோசனைகளுக்கேற்றவாறு பணிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்; அப்படி நடைமுறைப்படுத்தப்படவில்லையென்றால் என்ன காரணத்திற்காக அந்தப் பணிகள் தேக்கமடைந்திருக்கின்றன அல்லது முடக்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதனை அங்கேயிருக்கக்கூடிய கோட்ட வளர்ச்சி அலுவலர் போன்றவர்கள் மக்கள் குழு உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், ஒரு சில ஒன்றியங்களில் இன்னும்கூட ஒரு மாதத்திற்கு ஒரு முறை கூட்டமே கூட்டவில்லை, பல மாதங்களாகக் கூட்டம் கூட்டவில்லை என்பதெல்லாம் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்றிலிருந்து—நான்

[திரு. ப. குழந்தவேலு] [1981 ஏப்ரல் 1

வேறு பணிகள் நடக்கவில்லை. காரணம் அங்கே, நிதிநிலை சரியாக இல்லை. அங்கே இருக்கக்கூடிய சாலைகள் பழுதடைந்திருக்கின்றன. அங்கே போகின்ற, வருகின்ற மக்களுக்குச் சரியாக அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லையென்ற காரணத்திற்காக, ரூபாய் 12 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே, ரூபாய் 6 இலட்சம் அரசாங்கத்தினுடைய மானியமாகக் கொடுக்கப்படுகிறது. ரூபாய் 6 இலட்சம் கடனாகக் கொடுக்கப்படுகிறது.

அடுத்ததாக, நகராட்சிகளைப் பொறுத்த அளவில் இன்று 107 நகராட்சிகள் இருந்தாலும், 107 நகராட்சிகளின் நிதிநிலையும் சரியாக இல்லை. இன்னும் பழம்பெரும் நகராட்சியென்று சொல்லப்படுகிற வாலாஜா நகராட்சியிலேகூட நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால், அங்கே பல்வேறு பணிகள் நடைபெறவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் அனுசரித்துத்தான் இன்று வருவாய் வரக்கூடிய அளவுக்கு சில திட்டங்களை நாம் ஏற்கெனவே கடந்த ஆண்டிலே அறிவித்தோம். அதன் மூலமாக, திரை அரங்குகள் கட்டுவது, நாடகக் கொட்டகைகள் ஏற்படுத்துவது, ''ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்''—கடைகள், போன்றவைகள் கட்டுவது என்று அந்த அளவில் திட்டங்கள் தீட்டப்பட்டு, செயல்முறைப்படுத்த வேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டோம். அது குறித்து இன்று 7 நகராட்சிகளில் திரை அரங்குகள் கட்டுவதற்கு இன்று அரசாங்கத்திடம் பணம் கேட்டிருக்கிறார்கள். அந்த 7 நகராட்சிகள்—(1) தூத்துக்குடி ; (2) திருநெல்வேலி ;(3) ஆத்தூர் ; (4) இராசிபுரம் ; (5) காரைக்குடி ; (6) உடுமலைப்பேட்டை ; (7) இராமநாதபுரம் ஆகியவையாகும். ஆகவே, இந்த 7 இடங்களிலே திரை அரங்குகள் கட்டுவதற்காக அவர்கள் பணம் கேட்டிருக்கிறார்கள். பணம் கொடுப்பதாக இருக்கிறோம். ஆகவே, திரை அரங்குகள் இந்த ஆண்டிலிருந்து கட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல், சென்னை மாநகராட்சியிலே கூட, 9 இடங்கள் பார்க்கப்பட்டு, அந்த 9 இடங்களிலும் திரை அரங்குகள் கட்ட வேண்டும், அந்தத் திரை அரங்குகளெல்லாம் லேட்டஸ்ட் பேஷன்களாக, சமீபத்திலே புதிதாகப் போடப்படுகிற மாடல்களாக இருக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு டிசைன்கள் பார்க்கப்பட்டு வருகின்றன ; பல்வேறு இடங்களைப் பார்த்து வந்திருக்கின்றோம். ஆகவே, கட்டுகின்ற நேரத்திலேகூட வருமானத்தை அதிகரிக்கின்ற அளவிற்கு அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட இருக்கின்றன என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1981 ஏப்ரல் 1] [திரு. ப. குழந்தைவேலு]

இந்த ஆண்டு வருமானத்தைப் பெருக்க, ரெமுனரேட்டிவ் என்டர்பிரைசஸ் என்கின்ற அளவிற்காக, இந்த அரசு ரூபாய் 3 கோடி ஒதுக்கியிருக்கிறது. கடந்த ஆண்டு ரூபாய் 2 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த ஆண்டு அது ரூபாய் 3 கோடியாக ஆக்கப்பட்டிருகிறது.

அதே போல, கட்டணக் கழிப்பிடங்கள் எங்கெங்கு ஏற்பட முடியுமோ, அங்கே அவைகளையெல்லாம் ''Pay n use l t ines ஆக ஏற்படுத்த வேண்டுமென்கிற கொள்கை ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு அந்த மாநகராட்சிகளிலும், மற்றுமுள்ள நகராட்சிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன் மூலமாக இந்த ஆண்டிலும் கூட 100-க்கு மேற்பட்ட Pay n use l trines'' கட்டணக் கழிப்பிடங்கள் கட்ட வேண்டுமென்று நாம் நகராட்சிகளைக் கேட்டிருக்கிறோம். ஆகவே, இந்த ஆண்டிலே அந்தச் செயல் முறைத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே போல், நகரத்திலே பல்வேறு குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. குடிசை மேம்பாட்டிற்காக இந்த ஆண்டு ரூபாய் 200 இலட்சம் 1980–81ல் ஒதுக்கப்பட்டு, 19 நகராட்சிகளில் 110 குடிசைப் பகுதிகள் 3·9 இலட்சம் மக்களுக்காக இந்தத் திட்டம் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதே போல், சுழல் நிதி—ரிவால்விங் பண்ட்—அதற்காக ரூ. 25 இலட்சம், 26 நகராட்சிகளுக்கு 70 கிலோ மீட்டர் சாலைகள் அமைப்பதற்கு 1981–82-ல் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து செயல்முறைப்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

[பிற்பகல் 1–40]

மேலும் இந்த நகராட்சிகளைப் பொறுத்த வரையில் பொறியியல் பிரிவு இல்லாத காரணத்தினால் பல்வேறு வேலைகள் தேக்கப்பட்டு, முடக்கப்பட்டு வருகின்றன. அதற்காக இந்த ஆண்டில் இருந்து பொறியியல் பிரிவு தனியாக ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. 'டெக்கினிகல் செல்' ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமாக ஒரு தலைமைப் பொறியாளர், 5 செயல் பொறியாளர்களுடன், நகராட்சி வேலைகளுக்காக அவர்கள் தனியாக இயங்குவார்கள். ஆகவே இது ஒரு புதிய திட்டம். இந்த ஆண்டிலிருந்து நாம் இதைச் செயல்படுத்த இருக்கிறோம்.

அதுபோலவே இந்த நகராட்சிகளுக்காக கணக்கு பிரிவு, கல்விப் பிரிவு ஆக 2 பிரிவுகளும் இந்த ஆண்டில் இருந்து ஏற்படுத்தப்படுகிறது.

[திரு. ப. குழந்தைவேலு] [1981 ஏப்ரல் 1

Accounts wing, Planning and Education wings are sanctioned in the office of the Director of Municipal Administration.
என்கின்ற வகையில், இன்று நிர்வாக இயக்குநராக இருக்கக்கூடிய அந்த நகராட்சிகளின் இயக்குநருக்கு உதவி செய்யக்கூடிய அளவில் இந்த 2 புதிய திட்டங்களும் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

நமது அருமை அண்ணன் அன்பில் அவர்கள்கூடக் கேட்டார்கள் நீங்கள் ஏன் தேர்தலைக் கண்டு பயப்படுகிறீர்கள். ஏன் தேர்தலை நடத்தவில்லை. பஞ்சாயத்துகளுக்குத் தேர்தல் நடத்தி இருக்கவேண்டும். நகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்தி இருக்க வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்வேன். தேர்தலைக் கண்டு பயப்படுகின்ற கூட்டம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல, என்பதனை நான் மீண்டும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த நேரத்திலும் தேர்தலைக் கண்டு நாங்கள் பயந்தது இல்லை. தேர்தலைக் கண்டு பயந்து ஓடியவர்கள் எல்லாம் எங்கெங்கோ இருக்கிறார்கள் என்பதும் எங்களுக்கு நன்றாகத் தெரியும்.

நான் இன்னும் குறிப்பாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலே 37'2 சதவிகிதம் என்ற விகிதத்தில் இங்கே நமக்கு நாடாளுமன்றத்திற்கு இடங்கள் கிடைத்த நேரத்தில் கூட, "புரட்சித் தலைவர் அவர்கள் தேர்தலை அறிவித்தார்கள். இந்த மன்றத்திலே கூட சொன்னார்கள் நாங்கள் தேர்தலை நடத்த தயாராக இருக்கிறோம் வருகிற ஏப்ரல் மாதத்தில் இந்தத் தேர்தலை நடத்த இருக்கிறோம் என்று தேதி குறிப்பிட்டுக் கூட நாங்கள் வெளியிட்டோம். அந்த நேரத்தில் நாம் எதிர்பாராத வண்ணம், ஜனநாயகத்திற்கு விரோதமாக ஒரு செயல் நடத்தப்பட்டு, கடந்த 17—2—1980 அன்று ஆட்சி கலைக்கப்பட்டது. ஆட்சி கலைக்கப்பட்ட காரணமாகத்தான் இந்தத் தேர்தலை ஒத்திப் போட வேண்டிய நிலை ஏற்பட்டதே தவிர, வேறு எந்தக் காரணமும் இல்லை. அதற்கு அடுத்தாற்போல, 9—6—1980-லே இந்த நாட்டிலே ஆட்சிப் பொறுப்பை மீண்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொண்டது. அதற்குப் பின்னாலே கூட, தேர்தலை நடத்த வேண்டும் என்று உடனடியாக நாம் தெரிவித்த நேரத்தில் 18 வயது வந்தவர்களுக்கு எல்லாம் வாக்குரிமை அளிக்கப்படவேண்டும் என்று பொதுவான கருத்து எல்லாக் கட்சித் தரப்பிலும் பேசப்பட்டது. அதற்காக எதிர்க்கட்சி மற்றும் எல்லா கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட்டம் நடத்தப்பட்டு இதிலே ஒரு தீர்வு கண்டு அதன் மூலமாக 18 வயது வந்தவர்களுக்கு எல்லாம் வாக்குரிமை அளிக்கப்பட்டது. அதன் மூலமாக இன்று புதிய வாக்காளர்களாக 36 இலட்சம் பேர்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள், 21 வயதுக்கு குறைந்தவர்கள்



1981 ஏப்ரல் 1] [திரு. ப. குழந்தைவேலு]

என்ற அளவில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் தேர்தலில் இருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் 2 கோடியே 4 இலட்சமாக இருந்தது இன்று 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த உரிமைகள் கொடுக்கப்பட்டதன் காரணமாக இன்றைக்கு 2 கோடியே 40 இலட்சம் வாக்காளர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் தேர்தலை நடத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் பல்வேறு குறுக்கீடுகள், தடைகள் எல்லாம் இருந்ததன் காரணமாகத்தான் இந்தத் தேர்தல் ஒத்திப்போடப்பட்டுள்ளது. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இந்தத் தேர்தல்களை 31—3—1981 வரையிலும் நடத்த வேண்டாம் என்றும், ஜனத் தொகை கணக்கெடுப்பு நடந்துகொண்டிருக்கிறது என்றும், மத்திய அரசு உள்துறை அமைச்சகத்தில் இருந்து நமக்குத் தாக்கீது வரப்பெற்றன. அதன் காரணமாகக் கூட ஒத்திவைக்கப்படவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது. அண்ணன் அவர்கள் கூடச் சொல்லலாம். ஏன், நீங்கள் நடத்தி இருக்கலாமே, மத்திய அரசுக்கும் இந்தத் தேர்தலுக்கும் என்ன இருக்கிறது, என்று கூடக் கேட்கலாம். ஆனால் இந்த ஜனத் தொகைக் கணக்கெடுப்பிலே ஈடுபட்டுக் கொண்டு இருக்கக்கூடியவர்கள் நகராட்சிகளிலே இருக்கக்கூடிய ஆணையாளர்கள். பஞ்சாயத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகள் இவர்கள் எல்லாம் ஈடுபட்டதன் காரணமாகத்தான் இந்தத் தேர்தலை நாம் ஒத்திப் போட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆனாலும் இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பின்னாலே அனைத்துக் கட்சிக் கூட்டம் நடக்க இருக்கிறது. அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே எப்போது தேர்தலை வைத்துக் கொள்ளலாம் என்கின்ற முடிவினை நாம் எடுத்துக்கொள்ள இருக்கிறோம். அதற்குப் பின்னாலே ஒரு நல்ல நாள் பார்த்து, அதுவும் மழைக் காலமாக இல்லாமல் நல்ல காலம் பார்த்து, இந்தத் தேர்தலை நடத்த இருக்கிறோம் என்பதனை நான் இந்த நேரத்தில் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும், தேர்தல் வைக்க வேண்டும் என்று சொன்னால், நகராட்சிகளிலும் மாநகராட்சிகளிலும் இந்த 18 வயது வந்தவர்களும் அதற்கு மேற்பட்டவர்களும் 21 வயதுக்குக் குறைந்தவர்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்படாமல் இருக்கின்றது. இவர்களையும் நாம் எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே அவர்களைச் சேர்த்துக்கொண்ட பின்னர்தான் நகராட்சிகள், மாநகராட்சிகள் போன்றவைகளுக்கு தேர்தல் எப்போதுநடத்தப்படும் என்பதனைப் பின்னாலே அறிவிக்க இருக்கிறோம். ஆகவே தேர்தலைப் பொறுத்த வரையில் இந்த அரசு எப்போதும் தயாராக இருக்கிறது என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ப. குழந்தைவேலு] [1981 ஏப்ரல் 1

இங்கே பல்வேறு உறுப்பினர்கள் கேட்டார்கள். தன்னிறைவு திட்டத்தின் கீழ் கிராமத்தை மட்டும் ஏன் எடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள், நகர்ப்புறங்களையும் ஏன் எடுத்துக்கொள்ளவில்லை என்று பல்வேறு உறுப்பினர்கள் கேட்டார்கள். அவர்களுக்கு நான் ஒரு கருத்தை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமப் புறங்களில் முதலில் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படுவதற்கான காரணம், கிராமப்புறங்கள் முன்னேற்றம் அடைந்தால்தான் நாடு முன்னேற முடியும் என்கிற கருத்தின் அடிப்படையில் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில் நான் கிராமங்களுக்கு முதலிடம் தரப்பட்டு இருக்கிறது.

இங்கே மானியக் கோரிக்கைகள் எடுக்கப்படுகிறபோது, முதலில் இந்த மானியக் கோரிக்கைகள்—சமுதாய நலத் திட்டங்கள்— எடுத்துக்கொள்வதற்கான காரணம் இது போன்ற மானியக் கோரிக்கைகள் முதன் முதலாக நிறைவேற்றப்படுவதன் மூலம் கிராமப்புறங்கள் வளர்ச்சியில் இந்த அரசு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதை நாட்டு மக்கள் உணர முடியும். கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் வாழ வேண்டும். கிராமங்களில் உள்ள மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும். அவர்கள் வாழ்வில் ஒளி வீச வேண்டும். அவர்களுடைய எதிர் காலம் ஒளிமயமாக அமைய வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த மானியக் கோரிக்கைகளுக்கு முதலிடம் கொடுத்து எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இங்கே நேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ராஜசேகரன்—இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்—ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதேபோல இங்கே பேசிய மாண்புமிகு அம்மையார் அவர்கள் மது விலக்குப் பற்றிக்கூறுகிறபோது, ' தாயின் மீது ஆணையிட்டவர் எங்கே போய்விட்டார், என்று எல்லாம் கேட்டார்கள். நேற்று பேசிய மாண்புமிகு உறுப்பினர் ராஜசேகரன் அவர்கள் மதுவிலக்குப் பிரச்சாரத்தை நல்ல முறையில் திறம்படச்செய்வார் என்று எதிர்பார்த்தேன் ஆனால் அவர் கேட்டுக்கொண்டது எல்லாம் மது விலக்கைத் தளர்த்தி இருக்கிறீர்கள், அதற்காகக் கொடுக்கப்படும் லைசென்சை உடல் ஊனமுற்றவர்களுக்குக் கொடுங்கள் என்று கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். இன்று அவர்—ராஜசேகரன்—வருவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் வரவில்லை. ஒரு பக்கம் மது விலக்கு வேண்டும் என்று சொல்லப்படுகிறது, இன்னொரு பக்கம் லைசென்சு எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்கிற நிலைமை இருக்கிறது. இதை இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். (குறுக்கீடுகள்).



1981 ஏப்ரல் 1]

**திரு. நா. சுந்தரராஜ் :** துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குக் குறித்து எங்கள் கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் பேசியதைக் குறிப்பிட்டு இங்கே அமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள். மதுவிலக்குச் சம்பந்தப்பட்டவரையில் எங்கள் கொள்கையை இந்த அவையில் நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். மதுவிலக்கைத் தமிழ்நாடு பூராவிலும் தீவிரமாக அமல் நடத்தவேண்டும் என்பது எங்கள் கொள்கையாகும். அதிலே எந்த விதமான மாறுபாடும் இல்லை. இங்கே பேசுகின்ற நேரத்தில் திரு. ராஜசேகரன் அவர்கள் மதுவிலக்கைத் தளர்த்தி இருப்பதால் உடல் ஊனமுற்றவர்களுக்கு லைசென்சு கொடுங்கள் என்ற கோரிக்கையைதான் வைத்தார்களே தவிர எங்களது கொள்கைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கிளாரிபிகேஷன் கொடுத்தது போதும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு மேற்கொண்டு தேவைப்பட்டால் பேசலாம்.

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :** இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரியவர் தியாகராசன் அவர்கள் ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார்கள். நாங்கள் நல்லவர்களோடு கூட்டுச்சேர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அந்தக் கோரிக்கையை அப்படியே அவர்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். தயவு செய்து நீங்களும் நல்ல கட்சிகளோடு கூட்டுச் சேருங்கள். நாசவேலைகள் செய்கிற கட்சியோடு கூட்டு சேரவேண்டாம். ஏனெனில் கடந்த காலத்தில் நடைபெற்ற சரித்திரத்தைப்புரட்டிப் பார்க்க வேண்டும். இந்திரா காந்தியை எப்படித் தாக்கினார்கள், எப்படிப் பேசினார்கள், அப்படிப்பட்டவர்களோடு நீங்கள் இப்போது கூட்டு சேர்ந்து இருக்கிறீர்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[பிற்பகல் 1-50]

அடுத்தபடியாக மானியக் கோரிக்கைகள் 39 மற்றும் 52—சாலைகளும், பாலங்களும், அவை குறித்த மூலதனச் செலவுகளைப் பொறுத்தவரை, ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு சாலைகளும் பாலங்களும் அடிப்படையானவை என்பதும் தமிழகத்தில் சாலைப் போக்குவரத்துப் பணி மிகவும் சிறப்பாகச் செய்யப்பட்டு தமிழக அரசு இதிலே ஒரு சாதனை புரிந்துள்ளது என்பதும் அனைவருக்கும் தெரியும்.

அதைப்போல மாவட்ட பெரும் சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை கணிசமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 1979–80-ல் இப்பணிக்காக 69 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது; 1980–81-ல் 497 இலட்சம் ஒதுக்கப்பட்டது; இந்த

[திரு. ப. குழந்தைவேலு] [1981 ஏப்ரல் 1

ஆண்டில் அதாவது 1981-82-ல் 573 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த வகையில் மிகவும் கணிசமாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதர சாலைகளைப் பொறுத்தவரையில், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் சாலைகளைப் பொறுத்தவரையில் கடந்த 1979–80 ஆம் ஆண்டில் 165.87 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது; 1980–81-ல் 311 இலட்சம்; இந்த ஆண்டில் அதாவது 1981-82-ல் 304·95 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மேலும் 50,000 ரூபாய்க்கு மேற்பட்ட சாலைகளாக இருந்தால், அந்தச் சாலைகள் பராமரிப்புப் பணியை நெடுஞ்சாலைத் துறையே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கருத்து அரசின் ஆய்வில் இருக்கிறது. இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான அளவுக்குப் பணம் இல்லாத காரணத்தால் போடப்பட்ட சாலைகள் பழுது பார்க்கப்படாமல், செம்மைப்படுத்தப்படாமல் பழுதடைந்த நிலையிலேயே இருக்கின்றன. ஆகவே, 50,000 ரூபாய்க்கு மேற்பட்ட சாலைகளை எல்லாம் செம்மையாகப் பழுதுபார்த்து, செப்பனிட நெடுஞ்சாலைத் துறையே எடுத்துக்கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல இணைப்புச் சாலைகள், கிராமப்புறச் சாலைகள் பராமரிப்புச் செலவுக்கும் அதிகமாகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1980–81 ஆம் ஆண்டில் 17 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது; 1981–82-ல் 22 கோடி ரூபாய் அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல கரும்பு அபிவிருத்திச் சாலைகளைப்பற்றியும் பல மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கருத்து சொன்னார்கள். அந்த கரும்பு அபிவிருத்திச் சாலைகளுக்கு இந்த ஆண்டில்தான் முதன் முதலாக 30 இலட்சம் ரூபாய் தனியாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரையில்



1981 ஏப்ரல் 1] [திரு. ப. குழந்தைவேலு]

அதற்கு தனியாக நிதி ஒதுக்கப்படவில்லை; ஒதுக்கப்பட்டதாக சரித்திரம் இல்லை. ஆனால் புதிய சரித்திரத்தை, புகழுக்கு புகழ் சேர்க்கிற புதிய சரித்திரத்தை மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அதைப்போல பல்வேறு சாலைகள் சரியாகப் போடப்படவில்லை; போட்ட சாலைகளில் மண் காற்றிலே பறந்துவிடுகிறது; புழுதி ஏற்படுகிறது; ரோடு ரோலர் போட்டு சரியாகப் பராமரிக்காததால் இப்படி ஏற்படுகிறது என்று சொன்னார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 964 ரோடு ரோலர்கள் தேவை. ஆனால் 620 ரோடு ரோலர்கள்தான் இருக்கின்றன. அதிலும் பல ரோடு ரோலர்கள் பழுதடைந்து, ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லமுடியாமல் இருக்கின்றன. அவைகளைப் பழுதுபார்க்கும் அதே நேரத்தில் 1980–81 ஆம் ஆண்டில் 50 ரோடு ரோலர் புதிதாக வாங்கப்பட்டிருக்கிறது. 1981–82 ஆம் ஆண்டில் மீண்டும் புதிதாக 50 வாங்க இருக்கிறோம். எல்லா ரோடு ரோலர்களையும் உடனே ஒரே நேரத்தில் வாங்கிடலாம் என்று நினைத்தால், நாம் நினைக்கின்ற அளவுக்கு உற்பத்தியாகவில்லை; நமக்குக் கிடைக்கவில்லை. மாதத்திற்கு இரண்டு, மூன்று என்றுதான் கிடைக்கின்றன. அதன் காரணமாகத்தான் இதிலும் தன்னிறைவு ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆனால் உற்பத்தி செய்கிற இடத்தில் போதுமான அளவுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இல்லாத காரணத்தால் 50, 50 ஆக வாங்குகிறோம். தொடர்ந்து இதிலும் தன்னிறைவு அடைந்துவிடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பல உறுப்பினர்கள் சாலைகள் அமைக்க வேண்டும் பாலங்கள் போட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அவர்களுக்கு எல்லாம் பெருமையோடு சொல்லிக்கொள்வேன் இந்த ஆண்டில் இரண்டாவது பகுதி திட்டத்தின்கீழ் பல்வேறு பகுதிகளில் அதிகமான திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. 1980-81, 1981–82 ஆம் ஆண்டுகளில் புதிய வரலாற்றைப் படைக்கின்ற வகையில் இரண்டாம் பகுதி

திட்டத்திற்கு முறையே ரூ. 96.48 இலட்சமும், ரூபாய் 963 இலட்சமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு இவ்வளவு பெரிய தொகை இரண்டாம் பகுதி திட்டத்தில் ஒதுக்கப்பட்டதாக சரித்திரம் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இன்னொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் கேட்கின்ற பணத்தைக் கொடுக்க வேண்டும்; ஒதுக்க வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு இருக்கிறது.

ஆனால் நிதி நிலைமை, காலம் இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டுதான் நாம் அதைச் செயல்படுத்தவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாலைப் போக்குவரத்துஎன்பதைப் பொறுத்தவரையில் 1980—81-ல் 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1981—82-ல் அது 13 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒரு முக்கியமான பிரச்சினை. அருமை நண்பர் திரு. குமரி அனந்தன் அவர்களும், திரு. க. பாரமலை அவர்களும் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் பாம்பன் பால வேலை பற்றி எடுத்துச் சொன்னார்கள். இந்த திட்டத்தைப் பொறுத்தவரையில் இன்று அந்த வழக்கு நீதி மன்றத்திலே இருக்கின்றது. இதற்கு விளக்கமாக நான் சில குறிப்புகளைக் கொண்டு வந்திருந்தாலும் இப்போது சொல்ல முடியாத நிலைமையிலே இருக்கின்றேன். அப்படிச் சொன்னால் அது சப்ஜுடிஸாக ஆகிவிடக்கூடுமோ என்ற பயத்தின் காரணமாகத்தான் நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை. ஆனாலும் பாம்பன் பால வேலைத் திட்டத்தை நாம் துவக்கவேண்டும். அந்தப் பாலத்தை துவக்குவதன் மூலமாக நல்ல பலன் இருக்கும் என்பதால் அதற்காக நாம் பாடுபட்டுவருகிறோம். ஆகவே எவ்வளவு சீக்கிரமாக இந்தப் பணியை முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்திலே செய்து முடிக்க வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து வருகின்றது இந்த அரசு என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோன்று இன்னொன்று பற்றியும் சொல்ல விரும்புகிறேன். கண்காணிப்புப் பொறியாளர்கள் நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கின்றார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வேலைகள் அதிகமாக இருக்கிறது என்றும், ஜூரிஸ்டிக்ஷன் அதிகமாக இருக்கின்றது என்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. ஆகவே கண்காணிப்புப் பொறியாளர்களை அதிகமாக்கவேண்டும் என்றும் வேலைப் பளுவைக் குறைக்க வேண்டும் ; வேலை சுத்தமாகச் செய்யப்படவேண்டும் என்றும் அரசு கருதிக்கொண்டிருக்கின்றது. அந்த வகையிலே பொறியாளர்களின் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டும் என்ற திட்டத்தை அரசினுடைய ஆய்விலே எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற்காகப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் சாலைகளும், பாலங்களும் சாலைகள்-பாலங்களுக்கான மூலதனச் செலவுகள் என்பவை பற்றி 29 மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் ஒருவேளை பதில் சொல்லாமலும் கூட இருக்கலாம் என்று நினைக்கிறேன். அதற்குக் காரணம் என்ன வென்றால் போதிய நேரம் இல்லாமைதான். சொல்ல வேண்டாம் என்ற எண்ணம் இல்லை என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எங்களுடைய எண்ணங்களையும், கோரிக்கைகளையும் நாங்கள் குறிப்பேடுகளிலே எடுத்து வைத்துக் கொண்டு இருக்கிறோம். அப்படிக் குறிப்பேடுகளிலே இடம் பெறவில்லை என்றாலும் சட்டமன்றக் குறிப்பேட்டில் இடம் பெற்றிருக்கின்றது. ஆகவே அவைகளை எல்லாம் கவனத்திலே கொண்டு பணியாற்றுவோம் என்பதைச் சொல்லி யார் யார் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்களோ அதை எல்லாம் வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

கோரிக்கை எண் 52

திருவாளர்கள் சு. பாலன், தி. க. நல்லப்பன், ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் இல. பலராமன், டி. மணி, பொ. விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண் 52, சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,95,08,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 2-4-1981 ஆம் தேதி காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-03 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்,

244. தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு பண்டகச்சாலைச் சட்டத்தின் விவர அட்டவணையில் (1) ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு தகடுகள் (2) பாலிதின் மணிகள் (3) Alpha Mol (கோழித் தீவனம்) போன்ற பண்டங்களைச் சேர்ப்பது தொடர்பாகவும் சேமிப்புக் கட்டணங்களை நிர்ணயிப்பது குறித்தும் விதிகளை உருவாக்குவது தொடர்பாக உணவுத் துறையின் 19-7-1980 ஆம் தேதியிடப்பெற்ற 171 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு பண்டகசாலைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1951) 27(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].



245. தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் 1966-67 மற்றும் 1967-68 மற்றும் 1968-69 முதல் 1970-71 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டுக் கணக்குகள் (ஆங்கிலம்) (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### [ஆ] அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

100. சட்ட விதிகள் ஆய்வு குழுவின் முதல் அறிக்கை (ஆங்கிலம்).

101. 1980-81 ஆம் ஆண்டிற்கான அரசினர் உறுதிமொழிக் குழுவின் முதல் அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு

[274 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 585-க்கான விடையைக் காண்க.]

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டில் ஓடும் நதிகளிலும் சென்னை மாநகர் அதன் சுற்றுப் புறங்களிலும் வெள்ளக் கட்டுப்பாட்டிற்கான பல பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் பல பணிகள் ஆய்வில் உள்ளன. இவைகளின் விவரம் வருமாறு :—

தற்போது நடந்துவரும் பணிகள்.

| மாவட்டம். | பணியின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை. (ரூபாய் இலட்சங்களில்.) | பணியின் தற்போதைய நிலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (i) செங்கல்பட்டு .. | செம்பரம்பாக்கம் ஏரியைப் பலப்படுத்துதல். | 128.42 | மதிப்பீட்டிற்கு அரசு அனுமதியளிக்கப்பட்டு பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. |
| (ii) சென்னை .. | ஓட்டேரி நுல்லா .. .. | 13.53 | பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. |



| | | | |
|---|---|---|---|
| ii) இராமநாதபுரம் | வைகை ஆற்றுப்படுகையிலிருந்து வெள்ளத் தண்ணீரை கிரிதமால் மற்றும் குண்டாறு படுகைக்குத் திருப்பிவிடல். | 104.50 | பணிகள் நடந்து வருகின்றன. |
| iv) சென்னை .. | வியாசர்பாடியில் வடிகால் அமைத்தல். | 25.00 | ஷை |
| (v) சென்னை .. | கொடுங்கையூர் கால்வாயை சீரமைத்தல். | 34.44 | ஷை |

அரசின் பரிசீலனையில் உள்ள திட்டங்கள்.

| | | | |
|---|---|---|---|
| i) செங்கல்பட்டு .. | வேளச்சேரி ஏரியின் உயரத்தைக் குறைத்தல். | 9.00 | திட்ட மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. |
| ii) செங்கல்பட்டு .. | அம்பத்தூர் ஏரியின் உபரித் தண்ணீரை மொகப்பையார் ஏரிக்குத் திருப்பிவிடல். | 31.00 | தலைமைப் பொறியாளரிடமிருந்து கேட்கப்பட்டுள்ள சில குறிப்புகள் எதிர் பார்க்கப்படுகின்றன. |
| (iii) செங்கல்பட்டு .. | அடையாற்றின் இருமருங்கிலும் வெள்ளத்தடுப்புக் கரை அமைத்தல். | 130.00 | திட்ட மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. |
| (iv) செங்கல்பட்டு .. | கோட்டூர்புரத்தில் அடையாற்றில் கரை அமைத்தல். | 4.32 | தலைமைப் பொறியாளரிடமிருந்து கேட்கப்பட்டுள்ள சில விவரங்கள் எதிர் பார்க்கப்படுகின்றன. |

| மாவட்டம். (1) | பணியின் பெயர். (2) | மதிப்பீட்டுத் தொகை. (3) (ரூபாய் இலட்சத்தில்.) | பணியின் தற்போதைய நிலை. (4) |
|---|---|---|---|
| | **அரசின் பரிசீலனையில் உள்ள திட்டங்கள்—தொடர்ச்சி.** | | |
| (v) தென் ஆற்காடு .. | கடலூர் தாலுகாவில், மேல் குமார மங்கலத்திலிருந்து பகண்டை கிராமம் வரை பொன்னியாற்றின் வடக்குப் பக்கம் வெள்ளத் தடுப்புக்கரை அமைத்தல். | 17.00 | திட்ட மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. |
| | **மதிப்பீட்டுத் தயாரிப்பு முடிவடையும் நிலையில் உள்ள வெள்ளத் தடுப்புத் திட்டங்கள்.** | | |
| (i) செங்கல்பட்டு .. | பொன்னேரி எல்லைக்குள் கொசத் தலையார் நதிக்கு தடுப்புக்கரை அமைத்தல். | 447.00 | மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. |
| (ii) செங்கல்பட்டு .. | பெரியபாளையத்தில் ஆரணியாற்றிற்கு வெள்ள தடுப்புக்கரை அமைத்தல். | 562.00 | டி |
| (iii) தென் ஆற்காடு .. | பிடாகத்திலிருந்து கவள்ளியம்பாக்கம் வரை பொன்னியாற்றின் இடது பக்கம் வெள்ளத் தடுப்புக் கரை அமைத்தல். | 4.00 | டி |



| மாவட்டம். (1) | பணியின் பெயர். (2) | மதிப்பீட்டுத் தொகை. (3) | பணியின் தற்போதைய நிலை. (4) |
|---|---|---|---|
| (iv) தென் ஆற்காடு .. | பண்ருட்டியில் பண்ணியம்பாக்கம் எல்லைக்குள், காடிலம் நதிக்கு வெள்ளத்தடுப்புக் கரை அமைத்தல். | 8.90 | டி |
| (v) தென் ஆற்காடு .. | சிதம்பரம் தாலூக்காவில் மணிமுத்தா நதி மற்றும் வெள்ளார் இணையும் இடத்தில் நில அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் அமைத்தல். | 10.50 | டி |
| (vi) தென் ஆற்காடு .. | சிதம்பரம் தாலூக்காவில் புவனகிரியில் வெள்ளாற்றின் இரு மருங்கிலும் வெள்ளத் தடுப்புக்கரை அமைத்தல். | 33.50 | டி |
| (vii) தென் ஆற்காடு .. | கல்லக்குறிச்சி தாலூக்காவில் தியாகராயபுரம் எல்லையில் மணிமுக்த நதியின் இரு மருங்கிலும் வெள்ளத் தடுப்புக்கரை அமைத்தல். | 2.35 | டி |
| (viii) தென் ஆற்காடு .. | பண்ருட்டி தாலூக்காவில் லட்சுமி நாராயணபுரத்தில் செட்டிய பட்டோடை ஏரிக்கரையை உயர்த்துதல். | 8.00 | டி |
| (ix) தென் ஆற்காடு .. | கடலூர் தாலுக்காவில் மருதூரிலிருந்து எலந்தம்பட்டி வரை காடிலம் நதியின் இடது புறம் வெள்ளத் தடுப்புக் கரை அமைத்தல். | 9.00 | டி |

| மாவட்டம் (1) | பணியின் பெயர். (2) | மதிப்பீட்டுத் தொகை. (3) (ரூபாய் இலட்சத்தில்.) | பணியின் தற்போதைய நிலை. (4) |
|---|---|---|---|
| (x) ராமநாதபுரம் .. | மங்கள பெரிய ஏரிக்கு உபரித் தண்ணீர் செல்வதற்குக் கால்வாய் அமைத்தல். | 8.80 | மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. |
| **மதிப்பீட்டுத் தயாரிப்பு முடிவடையும் நிலையில் உள்ள வெள்ளத் தடுப்புத் திட்டங்கள்—தொடர்ச்சி. ஆய்விலுள்ள வெள்ளத் தடுப்புத் திட்டங்கள்.** | | | |
| (i) தென் ஆற்காடு .. | சாரம் ஓடைக்கு வெள்ளத் தடுப்புக் கரை அமைத்தல். | 0.74 | திட்டம் ஆய்வில் உள்ளது. |
| (ii) டி .. | மணம் பூண்டி ஏரியின் கால்வாயை பழுது பார்த்தல். | 1.15 | டி |
| (iii) டி .. | திருக்கோயிலூர் தாலுகாவில் அருள் கண்ட நல்லூர் மு. நார்குளத்தில் பொன்னியாற்றிற்கு வெள்ளத் தடுப்புக் கரை அமைத்தல். | 11.00 | டி |
| (iv) டி .. | விழுப்புரம் தாலுகாவில் களிஞ்சிக் குப்பத்திற்குப் பக்கத்தில் பொன்னியாற்றின் இடது பக்கம் வெள்ளத் தடுப்புக்கரை அமைத்தல். | 6.60 | டி |
| (v) டி .. | மலட்டாற்றின் இருபுறமும் பொன்னியாற்றின் இடது பக்கம் வெள்ளத் தடுப்புக் கரை அமைத்தல். | 8.40 | டி |
| (vi) டி .. | தொழுதூர் கிராமத்திற்கு அருகில் வெள்ளாற்றின் இடது பக்கம் வெள்ளத் தடுப்புக் கரை அமைத்தல். | 5.30 | டி |
| (vii) டி .. | விருதாசலம் தாலூகாவில் மொசதலை வரை வெள்ளாற்றில் வெள்ளத் தடுப்புக் கரை அமைத்தல். | 4.87 | டி |
| (viii) திருச்சிராப்பள்ளி. புதுக்கோட்டை. | கோரையாற்றின் நீரோட்டத்தைத் திருப்பிவிடுதல். | 1,000.00 | டி |

(இ) மற்றும் (ஈ) வெள்ளக் கட்டுப்பாடு திட்டங்களுக்கென்று மட்டும் மைய அரசு தனியாக நிதி ஒதுக்கீடு செய்வதில்லை. வெள்ளக் கட்டுப்பாடு திட்டங்கள் மாநில திட்டங்களில் ஒரு பகுதியாக இடம் பெறுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட மாநில திட்ட வேலைகள் யாவும் மத்திய, மாநில அரசு நிதி உதவியுடன் நிறைவேற்றப்படுகின்றன.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை 1981 ஏப்ரல் 2

பங்குனி 20, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்மிகு பேரவைத் தலைவர் :**

'' உளர்எனினும் இல்லாரொடு ஒப்பர் களம்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்''

கற்று வல்லவர் அவைக்களத்திற்கு அஞ்சி, தாம் கற்றவைகளைக் கேட்பவர் உள்ளத்தில் பதியுமாறு சொல்ல முயல வேண்டும். இவ்வாறு சொல்ல இயலாதவர் உயிரோடு இருந்தாலும், செத்தவராகவே கருதப்படுவர்.

### (1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தேர்தல் கலவரங்கள்

*வினா எண். 592—திரு. கே. ஆர். சுந்தரம் : திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 மே மாதத்தில் தமிழகத்தில் நடைபெற்ற சட்ட மன்ற தேர்தலின் போது கலவரங்கள் நடைபெற்றனவா ?

(ஆ) அதனால் எவ்வளவு பேர்கள் பாதிக்கப்பட்டார்கள் ?

(இ) எத்தனை பேர் இறந்தனர் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(ஆ) மொத்தம் 1,035 பேர்கள் பாதிக்கப்பட்டனர். படு காயமடைந்தவர்கள் 38 பேர்களும், சிறு காயமடைந்தவர்கள் 986 பேர்களும், கொலையுண்டவர்கள் 11 பேர்களும் இதில் அடங்குவார்கள்.

(இ) இறந்தவர்களின் எண்ணிக்கை 11 பேர்கள் மட்டும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : இப்படிப்பட்ட அரசியல் நிகழ்ச்சிகள் போக்கில் பாதிக்கப்பட்டவர்களுடைய குடும்பங்களுக்கு அரசாங்கத்திலிருந்து ஏதாவது மானியம் வழங்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் இனியாவது வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5,000 உதவி நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்டவர்கள் குடும்பத்திற்கு ரூ. 5,000 கொடுக்கப்பட்டதாக அறிகிறேன். சிறு காயம் அடைந்தவர்களுக்கு ஏதாவது நிதி உதவி அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : படுகாயம் உற்றவர்கள் குடும்பத்தினருக்கு ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாய் உதவி நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. என். பழனிவேல் : 1980-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின் போது நடைபெற்ற கலவரங்களில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காயமுற்றதாகவும், 11 பேர்கள் இறந்ததாகவும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள், எந்தெந்த இடங்களில் அந்தக் கலவரங்கள் நடந்தன ? அதனால் அரசியல் கட்சிகள் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கலவரங்கள் நடந்த இடங்கள் அவ்வளவையும் எடுத்துச் சொல்வது என்பது அப்படி குறிப்பிட்டுக் காட்ட இயலாது. ஆனால் 11 நபர்கள் இதில் கொலையுண்டிருக்கிறார்கள். அதில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆறு பேர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் ஒருவர். இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர் ஒருவர். கட்சி சார்பற்றவர்கள் 3 பேர்கள். ஆக 11 பேர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதில் 11 பேர்களை கொலை செய்தவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டு பல்வேறு பிரிவுகளின்படி ஆங்காங்கு வழக்குகள் தொடரப்பட்டு வழக்குகள் விசாரணையில் இருந்து வருகின்றன. கட்சி சார்பற்றவர் ஒருவர் கொலை செய்யப்பட்டு வழக்கு நடைபெற்றது. இந்திரா காங்கிரஸ் ஊழியர்கள் வாக்கு சேகரிக்கும் போது கவுண்டர்களுக்கும் தேவர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதலில் திருமதி தாத்தம்மாள் கல்லெறியப்பட்டு பலத்த காயமுற்றார். சிகிச்சைக்காக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு 18—5—1980-ல் மரணமடைந்தார். குற்றவாளிகள் அனைவரும் கைது செய்யப்





பட்டனர். இக்குற்றம் குறித்து தேனி காவல் நிலையத்தில் குற்ற எண் 312/80 பிரிவு 147, 336, 323 இ.பி. கோ.வின்கீழ் வழக்கு தொடரப்பட்டு மதுரை கூடுதல் செஷன்ஸ்நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்தது. குற்றம் சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டனர்.

திரு. குத்திரியப்பன் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் தேர்தல் அலுவலகம் கட்டும் போது ஏற்பட்ட சண்டையினைத் தொடர்ந்து திரு. குத்திரியப்பன் முருகன் என்பவரால் கத்தியால் தாக்கப்பட்டார். சிகிச்சைக்காக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு 18- 5—1980 அன்று மரணமடைந்தார். குற்றவாளி கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து ஒட்டன் சத்திரம் காவல் நிலையம் கு. எண் 151/80 பிரிவு 324, 302 இ. பி. கோ. வின் கீழ் வழக்கு தொடரப்பட்டது. மதுரை கூடுதல் செசன்ஸ் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார் மற்ற விசாரணைகள் எல்லாம் வழக்கு மன்றத்தில் இருந்து வருகின்றன.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகத்திலே கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் அகமத் பாஷா என்பவர் ( * * * * * * * * ) உயிரோடு பெட்ரோல் ஊற்றி எரிக்கப்பட்டார் என்பது உண்மையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் வழக்கு மன்றத்திலே இருக்கிறது. எரிக்கப்பட்டது உண்மையா என்று கேளுங்கள். * * * என்பதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : இந்த வழக்குகள் காவல் துறையின் எப்.ஐ.ஆர்.-ல் இருக்கிறது. அரசியல் தலையீட்டால் முறைப்படி வழக்கு போடவில்லை என்று இரண்டுபேர்கள் மீது நீதி மன்றத்தில் 164 சட்டத்தின்கீழ் வழக்குகள் போட்டுள்ளனரா ? இறந்த அகமத் பாஷா குடும்பத்திற்கு நிவாரணம் அளிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு திருத்தம்—வாகைக்குளம் பதிலை முதலில் தவறாகச் சொல்லிவிட்டதற்கு வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன். வாகைக்குளம் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களுக்குதான் நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது. பொதுவாக, தேர்தல் கலவரத்தில் ஈடுபட்டு, இறந்தவர்களுக்கு நிதி வழங்கப்படுவதில்லை. எனவே, இதிலே நிதி வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

வாகைக்குளம் துப்பாக்கிச் சூட்டால் மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதி உதவி.

*வினா எண் 593—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாகைக்குளம் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4-ம் நாள் துப்பாக்கிப் பிரயோகத்தால் மரணமடைந்த பாக்கியத்தம்மாள், முத்துவேலம்மாள் ஆகியோரின் குடும்பங்களுக்கும் மற்றும் அவர்களுடன் துப்பாக்கிச் சூட்டில் மரணமடைந்தவர்களது குடும்பங்களுக்கும் நிதியுதவி அளிக்கப்பட்டதா ?

(ஆ) இல்லையெனில் நிதியுதவி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பாக்கியத்தம்மாள் முத்துவேலம்மாள் ஆகியோர் துப்பாக்கிச் சூட்டினால் மரணம் அடைந்திருக்கிறார்கள். அதோடு அந்தக் குடும்பத்திலுள்ள பெரியவர்களும், கைக்குழந்தைகள் எல்லாம் இந்த துப்பாக்கிச் சூட்டில் மரணம் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த வாகைக்குளம் துப்பாக்கிச் சூட்டின் காரணமாக முத்துவேலு என்பவர் மரணமடைந்தார். அவருடைய வாரிசான திருமதி பூரணம்மாளுக்கு நிவாரண நிதி ரூ. 5,000 வழங்கப்பட்டிருக்கிறது. அரசு என்பவர் இறந்துபட்டார். அவருடைய வாரிசான திருமதி பத்ரகாளியம்மாளுக்கு ரூ. 5,000 அளிக்கப்பட்டிருக்கிறது சக்கரைத் தேவர் என்பவர் இறந்திருக்கிறார். அவருடைய வாரிசான திருமதி அரியனாட்சிக்கு ரூ. 5,000 நிவாரணத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. பாக்கியம் என்பவர் இறந்து, அவருடைய வாரிசாகக் கருதப்பட்ட திரு. வேலுத் தேவருக்கு ரூ. 5,000 நிவாரணத் தொகை அளிக்கப்பட்டிருக்கிறது. அதே போல் புலியடியான் என்பவர் இறந்து, திருமதி மீனாள் என்கிற அவருடைய வாரிசுக்கு ரூ. 5,000 நிவாரணத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.



திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த துப்பாக்கிச் சூட்டில் ஒரு குழந்தையும் இந்த வகையில் மரணம் அடைந்ததாக செய்தி பத்திரிகையிலே வந்தது. அந்தக் குழந்தையின் குடும்பத்திற்கும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை.

திரு. இரெ. இராமமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாகைக்குளம் துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்தவர்கள் எத்தனை பேர்கள் ? அவர்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து பொது மக்கள் 19 பேர்கள். இந்த 19 பேர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 வீதம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அளிக்கப்பட்டிருக்கிறது. இதிலே காவல் துறையைச் சேர்ந்தவர்கள் 23 பேர்கள் காயமடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் ஆயிரம் ஆயிரம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகைக்குளத்தில் ஆழ்கிணறு தோண்டி கடலாடிக்கு தண்ணீர் கொண்டு வருவது சம்பந்தமாகத்தான் இந்த சம்பவம் நடைபெற்றது. எனவே, அந்தத் திட்டத்தை இப்போது அரசாங்கம் கைவிட்டதா ? அல்லது இன்னும் பரிசீலித்துக்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. பொது மக்களுடைய முழு ஒத்துழைப்பும், முழு ஆதரவும் பெற்றதற்குப் பிறகு, அதுபற்றி அரசு முடிவு செய்யும்.

[முற்பகல் 9-10]

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர்களை, குறிப்பாக தென் காசிப் பகுதியில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த வினா வாகைக்குளத்தைப் பற்றியது.

## Adulteration of Milk.

*Q. No. 594—THIRU N. KITTAPPA: will the Hon. the Minister for Rural Industries be pleased to state:

(a) whether the Bureau for Parliamentary work, Madras has written to the Deputy Inspector General of Police, Food Cell, about the adulteration of milk produced by the Tamil Nadu Dairy Devolopment Corporation during the year 1978 and 1979; and

(b) if so, the details of the action taken thereon?

மாண்புமிகு திரு. கே. ஏ கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) இம் மனுக்கள் யாவும் தமிழ்நாடு பால்வள நிறுவனத்தினால் மயிலாப்பூரில், சித்திரக்குளம் வட்டாரத்தில் உள்ள தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பால் வழங்கு நிலையத்திலிருந்து வழங்கப்படும் பாலில் கலப்படம் செய்யப்படும் குறைகளைப் பற்றியதாகும். பாலில் கலப்படம் செய்யும் குற்றங்களின்மேல், சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த சுகாதார அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதாகும். ஏனெனில் அவர்கள்தான் உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழ் சோதனையிட மாதிரி பால் எடுக்க அதிகாரம் பெற்றவர்கள். ஆகவே, காவல் துறையில் இதைக் குறித்து ஒரு நடவடிக்கையும் எடுக்க இயலாது. இந்த காரணங்களினால் இவ்விதமான மனுக்கள் வந்தால் அவற்றை சென்னை மாநகராட்சி சுகாதார அலுவலருக்கு காவல்துறை மேல் நடவடிக்கைக்காக அனுப்பி விடுகிறது. இந்த மனுக்கள் காவல் துறைக்குச் சம்பந்தமில்லையென்றாலும் இதில் கூறப்பட்ட குறைகளை நீக்க மண்டல காவல் துறை அதிகாரியினால் பால்வள நிறுவன நிர்வாக இயக்குநரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அவரும் தக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலில் கலப்படத்தை பொறுத்தவரையில், பாலில் இருக்கக்கூடிய கொழுப்புச் சத்தை எடுத்து விட்டு, தண்ணீர் கலந்து விற்கிறார்கள். இவ்வாறு செய்யும் வியாபாரிகளின் மீது அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே குறிப்பிட்டபடி இதற்கென தனி அலுவலர்கள் இருக்கிறார்கள். ஆய்வில் குற்றம் என்று கண்டுபிடிக்கப்பட்டால் சட்டப்படி தண்டனைகள் வழங்கப்படுகின்றன.



திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலில் கலப்படம் என்பதிலே தனியார்கள் அந்த குற்றங்களைச் செய்தால் வழக்கு தொடர்வது பற்றி ஆட்சேபணை இல்லை. கூட்டுறவுப் பால் நிறுவனங்களில் விற்பதற்குப் பால் எடுத்து வருகின்றபொழுது அதிலே கலப்படம் என்று குற்றம் வந்தால், கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மீது வழக்கு போடுவது சரியாக இருக்காது. எங்கிருந்து பால் எடுத்து வரப்படுகிறதோ, அது சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் சரியாக இருக்கும். அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் பரிசீலிக்கப்பட்டு ஆவன செய்யப்படும்.

## மதுரை மாவட்டத்தில் மாம்பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 595—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத் துறையில் மாம்பழச்சாறு பதனிடும் தொழிற்சாலையை மதுரை மாவட்டம் நத்தம் தாலுகாவில் அமைக்கும் உத்தேசம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மதுரை மாவட்டத்தில் பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை ஒன்றை கூட்டுறவு முறையில் அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் பகுதியில் ஏராளமாக மாம்பழங்கள் விளைகின்றன. வருகின்ற காலத்திலாவது மாம்பழச்சாறு பதனிடும் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்த தொழிற்சாலை அமைப்பது பற்றி தொழில் வணிக இயக்குநரிடம் குறிப்பில்லை. தொழில் வணிக இயக்குநர், இத்தகைய தொழிற்சாலை மதுரை பகுதியில் நிறுவ வாய்ப்புகள் ஏதாவது இருக்கிறதா என்பதை மதுரை மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; பெரியகுளம், போடிநாயக்கனூர், நத்தம் கொட்டாம் பட்டி போன்ற வறட்சிப் பகுதிகளில் ஏராளமாக மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கனிகளில் சிறந்தது மாங்கனி என்று சொல்லப்படுகிறது. தனியார்கள் மாம்பழங்களை பதனிட்டு பானமாக கொடுக்கிறார்கள்; ஆந்திர மாநிலத்தில் ஜெல்லி போன்று செய்து ஏராளமாக விற்பனை செய்கிறார்கள். ஆகவே வறட்சிப் பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகளை ஊக்கு விக்கின்ற வகையிலே, மாம்பழங்கள் உற்பத்தியை அதிகரிக்கும் விதத்திலே, இந்த பானம், ஜெல்லி போன்ற பதார்த்தங்களை உற்பத்தி செய்ய அரசு முயற்சிகள் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, காதி மற்றும் கிராம வாரியத்தின்கீழ் 1980—81 ஆம் ஆண்டு 50 தனியார்கள் பழச்சாறு தொழிற்சாலைகளுக்கு ஒரு தொழிற்சாலைக்கு 10 ஆயிரம் ரூபாய் கடன் என்ற வகையில் 5 லட்சம் கடனாக தர சம்மதித்துள்ளது. அந்தத் திட்டத்தின்படி இதுவரையில் 36 தொழிற்சாலைகளுக்கு 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் கடனாக அளித்திருக்கிறார்கள். இன்னும் தேவைப்பட்டால் காதி மற்றும் கிராம வாரியத்தின் வாயிலாக 14 தொழிற்சாலைகளை விரிவுப் படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : பேரவைத் தலைவர் அவர்களே; சேலத்து மாம்பழத்தைப் போன்று தென்காசி, கடையநல்லூர் போன்ற வட்டாரங்களிலே மிகுந்த ருசியுள்ள மாம்பழங்கள் அதிக மாக உற்பத்தியாகின்றன. தென்காசியிலிருந்து பம்பாய்க்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. தென்காசியிலே ஒரு பழச்சாறு தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே; இல்லை.

திருப்புடைமருதூர் ஆலயத் திருப்பணி.

*வினா எண். 596— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

**(அ) திருநெல்வேலி மாவட்டம் திருப்புடைமருதூர் ஆலயத் திருப்பணித் திட்டம் ஏதும் பரிசீலனையில் உள்ளதா?**

**(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?**



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம் திருப்புடைமருதூர் அருள்மிகு நாறும்பு நாதசுவாமி ஆலயத்தின் திருப்பணி வேலைகள் செய்ய ரூ. 1,16,500 மற்றும் ரூ. 1,10,000 மதிப்பீட்டில் இரண்டு மதிப்பீடு கள் அங்கீகரிக்கப்பட்டு பிரதான ஆலயத்தின் மேல் தளம் பழுது பார்த்தல் வேலையின் ஒரு பகுதி மட்டும் நடந்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருப்புடைமருதூர் கோயில் திருப்பணி வேலையைத் துரிதப்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருப்பணி வேலைகள் 1973 ஆம் ஆண்டிலே துவக்கப்பட்டு இருக்கின்றன. அந்த ஆலயத் திற்குப் போதுமான நிதிவசதி இல்லை. நிதி வசதிகளை மனதில் கொண்டு முதலிலே அவசியமாகச் செய்ய வேண்டிய சில முக்கிய வேலைகளை சுமார் 90 ஆயிரம் ரூபாய் செலவிற்குள்ளாக செய்ய இயலுமா என்பதைப் பற்றி அறநிலையத் துறையின் ஆணையர் பரிசீலந்துக் கொண்டிருக்கிறார்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்த திருப்புடைமருதூர் கோயிலினுடைய பக்தர்கள் தீண்டாமை கடை பிடிக்கப் படுவதால் இரண்டாயிரம் பக்தர்களுக்கு மேல் இந்து மதத்தில் பாதுகாப்பு இல்லை என்பதால் மதம் மாறிவிட்டார்கள். ஆகவே அப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு அரசு நட வடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்த திருப்புடைமருதூர் அருள்மிகு நாறும்புநாதசுவாமி ஆல யத்தின் திருப்பணி வேலைகள் பற்றித்தான் கேள்வி. அதற்குத் தான தகவல் என்னிடத்திலே இருக்கிறது. மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் சொல்கிறபோது இந்து மதத்திலிருந்து பாதுகாப் பிற்காக மதம் மாறியிருக்கிறார்கள் என்று தெரிவித்து இருக்கிறார்கள். தனிக் கேள்வி கேட்பார்களானால் தகவலை விவரமாகச் சேகரித்துத் தர முடியும்.

**வனத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் முந்திரித் தோட்டங்கள்.**

*வினா எண். 597— திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

*வனத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் முந்திரி தோட்டங் களிலிருந்து உற்பத்தியாகும் முந்திரிக் கொட்டையைச் சேகரித்து குமரி மாவட்டத்திலிருக்கும் முந்திரி ஆலைகளுக்கு முறையாக விநியோகம் செய்யும் உத்தேசம் உண்டா?*

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் இல்லை.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டும் இந்த முந்திரி ஏலத்திலே கிலோ ஒன்றுக்கு 6¼ ரூபாய் அளவிலே ஏலம்போனதாக தகவல் கூறுகிறது ஆனால் இப்போது அதனுடைய விலை 7 ரூபாயிலிருந்து 12. ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது. ஆகவே விலை உயர்வின் காரணமாக நேரடியாக முந்திரி கழகத்தைக் கொண்டு சேகரித்து தமிழ்நாட்டிலே இருக்கிற 150 முந்திரி ஆலைகளுக்கு ஆலைகளுக்கு போதுமான முந்திரி இல்லாத காரணத்தால் அவைகளுக்குச் சீராக கொடுக்கக்கூடிய முறையிலை ஏற்பாடு செய்யுமா? இந்த முந்திரி அடுத்த மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறதே அதைத் தடுக்ககூடிய முறையிலே நம்முடைய மாநிலத்திலேயே நாம் சேகரித்துச் செய்து அந்த முந்திரி ஆலைகளுக்கு விநியோகம் செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்த முந்திரிக் கொட்டை பற்றாக்குறையின் காரணமாக அதற்குச் சரியான விலை தரவேண்டுமென்பதனால் பொது ஏலத்திலேயே விற்பனை செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பதைப் போன்று 6 ரூபாய் என்பது இல்லை. அது சில ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்திருக்கலாம். இந்த ஆண்டு உச்ச கட்ட விலையாக 10·80 ஒரு கிலோவுக்கு ஏலம் போயிருக்கிறது.இது மிக உயர்ந்த விலையாகப் போய் இருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கு உள்ளே இருக்கின்ற தொழிற்சாலை அதிபர்கள் இந்தப் போட்டியிலே பங்கேற்பதில், அதிக விலை கொடுத்து வாங்குவதிலே எந்த ஆட்சேபணையும் இல்லை ; வெளி மாநிலத்தவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று விதி இல்லை. தேவையானவர்கள் அந்தப் போட்டியிலே கலந்து கொண்டு அதிக விலை கொடுத்து வாங்கினால் அரசுக்கும் அந்த வருமானம் கிடைக்கும்.

[முற்பகல் 9-20].

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, குமரி மாவட்டத்திலிருக்கும் இந்த முந்திரித் தொழிற்சாலைக்கு முந்திரிக் கொட்டை கிடைக்கவில்லை என்ற காரணத்தினாலும், கேரளாவிலிருந்தும் அனுப்பாததன் காரணமாகவும் அந்தத் தொழிற்சாலை பாதிக்கப்பட்டிருக்கும் நிலை ஏற்படுகிறது. எனவே, நம்முடைய வனத்துறையில் உற்பத்தியாகும் முந்திரிக் கொட்டைகளை ஏலத்தில் விடுவதற்குப் பதிலாக, அதற்கு நியாயமான விலையை நிர்ணயம் செய்து அந்தத் தொழிற்சாலைக்கு





முறையாக சப்ளை செய்கின்ற முறையைக் கொண்டு வந்தால் தொழிற்சாலையும் சீராக நடக்கும் ; நமக்கும் நிரந்தரமான தொகை வருமே, அதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதிலே நியாயமான விலை என்பதை தனியார் நடத்தும் ஒரு தொழிற்சாலையில் எப்படி நிர்ணயிக்க முடியும் என்பது நம்மால் முடிவு செய்ய இயலாத ஒன்றாகும். தனியார் நடத்தும் தொழிற்சாலை இலாப நோக்கத்தில் நடத்தப்படுகிறது. ஆகவே, பொது ஏலத்திலே அவர்கள் தேவையான அளவிற்கு நல்ல விலை கொடுத்து அவர்களே எடுத்துக்கொள்ள, ஏலம் கேட்க வாய்ப்பிருக்கிறது. அப்படித் தேவையானவர்கள் அதிக விலை கொடுத்து வாங்கினால் தேவையான மூலப்பொருள் இங்கேயே கிடைக்கும்.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர்களே, ஏற்கெனவே அமைச்சரவர்கள் சொன்ன பதிலில் கடந்த ஆண்டிலோ அல்லது இந்த ஆண்டிலோ பத்து ரூபாய் அளவிற்கு விலை நிர்ணயம் செய்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது கேரள மாநிலத்தில் முதல் தரமான முந்திரிக்கு கிலோவிற்கு 12 ரூபாய் என்று அதிகபட்ச விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற, குமரி மாவட்டத்தில் இருக்கின்ற முந்திரி அதிபர்களுக்குத் தராமல் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் கொள்முதல் செய்வதால் அடுத்த மாநிலத்திற்கு எடுத்துச் செல்வதற்கான வாய்ப்பு இருக்கிறது ; கர்நாடக மாநிலத்திற்குக்கூட எடுத்துச் செல்வதாக தெரிகிறது. ஆகவே, முந்திரிக் கொட்டையை சேகரித்து முறையாக விலை நிர்ணயம் செய்து அரசு கொடுத்தால் இலாபமும் வரும் ; நம்மிடத்தில் பற்றாக்குறை இருப்பதால் தொழில் ஸ்தம்பித்து இருப்பதிலிருந்து பாதுகாப்பும் கொடுக்க முடியும என்பதை உணர்த்த அந்த முறையை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே கிடைத்திருக்கின்ற தகவலின் படி, கேரள மாநிலத்தில் 11 மாவட்டங்களிலுள்ள எல்லா நிலையங்களுக்கும் சேர்த்து 9—2—1980 முதல் குவிண்டாலுக்கு 570 முதல் 600 வரைதான் மாநில அரசால் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நாம் இந்த ஆண்டு விற்றிருக்கிற விலை இந்த 10.80 என்று எடுத்தால் ஆயிரத்தைத் தாண்டுகிறது. ஆகவே, நம்முடைய விலை உயர்ந்திருக்கிறது என்பது இந்த விவரங்களிலிருந்து நமக்குக் கிடைக்கிறது. பொதுவாக ஏலம் எடுக்கின்றவர்கள் அந்தத் தொழிற்சாலை சம்பந்தப்பட்டவர்கள்தான். தனி வியாபாரிகள் யாரும் இந்த விலைக்கு

எடுப்பதில்லை. காரணம், தனியாக ஒரு வியாபாரி ஏலத்திலே எடுத்து அதற்குப் பிறகு தொழிற்சாலைகாரருக்கு விற்பது என்றால் அது அவ்வளவு சுலபமானதும் அல்ல. ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிப்பதைப்போல, நம்முடைய கன்னியாகுமரி பகுதியில் இருக்கிற தொழிற்சாலை அதிபர்கள் ஒன்று சேர்ந்து அவர்கள் சரியான திட்டத்தை அரசுக்கு அறிவிப்பார்களேயானால், உயர்ந்த விலையைத் தருவதற்கு அவர்கள் முன்வருவார்களேயானால் இந்த முந்திரி நம்முடைய மாநில எல்லைக்குள்ளே இருக்கிற தொழிற்சாலைகளுக்குப் பயன்படுகிற விதத்தில், அப்படி மீறி வெளியிலே போக முடியாத அளவிற்கு ஏதாவது தடை விதிக்க இயலுமா என்பதைப்பற்றியும் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. வ. சந்திரமூர்த்தி: பேரவைத் தலைவரவர்களே, முந்திரிப் பருப்பின் விலை ஒவ்வொராண்டும் உயர்ந்துகொண்டே செல்கிறது. ஆகவே, முந்திரிப் பருப்பு பதனிடும் தொழிற்சாலை ஒன்றை அரசே தொடங்கி, தமிழகத்தில் உற்பத்தியாகின்ற முந்திரிக் கொட்டைகளைப் பருப்பாகப் பதனிட்டு வேறு மாநிலங்களுக்கு அனுப்புவதற்கான முயற்சியை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுவொரு மிகப்பெரிய தொழிற்சாலையாக நடத்த முடியாத அடிப்படையிலே நடைபெற்று வருகிற தொழிற்சாலையாகும். ஆகவே, சிறுசிறு உரிமையாளர்கள் இந்தத் தொழிற்சாலையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதிலே அரசு தலையிட்டு இப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலையை அமைக்க முன்வருவது என்பது அவ்வளவு ஆலோசகரமானதும் அல்ல; பொது நன்மைக்கு உகந்ததும் அல்ல என்பதுதான் இந்த அரசு கொண்டிருக்கிற கருத்து.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 1977-78-லே, 1,444 டன்னும், 1979-ஆம் வருடத்திலே 1,281 டன்னும் தான் முந்திரி உற்பத்தி செய்திருக்கிறது. இன்று தமிழ்நாட்டில் முக்கால் இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு இந்த அளவு முந்திரி காணாது என்ற காரணத்தினாலே, 1979-80-ஆம் வருடத்திலே தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 53.5 ஹெக்டேர் நிலப்பரப்பிலே மட்டும்தான் முந்திரி பயிரிடப்பட்டிருக்கிறது. என்ற காரணத்தினாலே, 1980-81-ஆம் வருடத்திலே 250 ஹெக்டேர் அளவிலே தோட்டம் போடுவதற்கு திட்டம் போட்டு முழுமையாக எடுக்கப்படாததன் காரணமாக இன்று வனத்துறையிலே பெரிய அளவிற்கு மரம் நடுவதற்கான வசதியில்லாத இடங்களிலே அதிகமான முந்திரிச் செடிகளைப்





பயிரிட்டு முக்கால் இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகப்படுத்த வனத்துறைக்கா தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டினுடைய புள்ளி விவரங்களின்படி 19,990 ஹெக்டேரில் நாம் தமிழகத்திலே இதற்காக முந்திரி மரங்களைப் பயிரிடுகிற நிலங்களாக வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு அறிவித்திருக்கிற நிதிநிலை அறிக்கையிலும், திட்டத்திலும், இந்த முந்திரி வளர்ப்பையே ஒரு பயிர் போன்று வளர்க்கிற திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிக கவனம் செலுத்தப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சட்டமன்ற நிகழ்ச்சிகளை ஒலிபரப்புதல்.

வினா எண் 598—திரு. ந. பழனிவேல்: மாண்புமிகு செய்தி அறநிலையை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சட்டப்பேரவை கூடும் நாட்களில் சென்னை வானொலி நிலையம் சட்டமன்ற நிகழ்ச்சிகளை தினமும் 10 நிமிடம் மாத்திரமே ஒலிபரப்புவதை மாநில அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதை அதிகப்படுத்த மாநில அரசு முயற்சி ஏதும் எடுத்துள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** (அ) ஆம்.

(ஆ) இது தொடர்பாக ஒலிபரப்பு நேரத்தை அதிகமாக்க இயலுமா என்று சென்னை வானொலி நிலையத்தாருக்கு கடிதம் எழுதப்பட்டது. அதற்கு தற்போது அவர்களுக்குள்ள விதிமுறைகளின்படி 10 நிமிடங்களுக்குமேல் அதிகரிக்க இயலாதெனவும், நாடாளுமன்ற இருசபைகளின் நிகழ்ச்சிகளும் தில்லியிலிருந்து 15 நிமிடங்களுக்கு ஒலிபரப்புவதைப்போல தமிழக சட்டமன்ற இருசபைகளின் நடவடிக்கைகள் பற்றிய ஒலிபரப்பையும் 15 நிமிடங்களுக்கு அதிகரிக்கும் யோசனையை தங்களது தலைமை இயக்கத்திற்கு தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சென்னை வானொலி நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது சட்டமன்றம் வருஷத்திலே, 80, 90 நாட்கள் கூட நடைபெறுவது கிடையாது. பத்திரிகைகளிலே சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் பொதுமக்கள் முழுவதுமாகத் தெரிந்துகொள்ளக் கூடிய

[திரு. என். பழனிவேல்] [1981 ஏப்ரல் 2

வாய்ப்புக் கிடையாது. ஆகவே, குறைந்த பட்சம் 20 நிமிடமாவது நமது நிகழ்ச்சிகளை, சட்டமன்றம் நடக்கும் காலங்களில் மக்கள் கேட்கும்படியாக அதை ஒலி பரப்புவதற்கு அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புது டில்லியினுடைய நாடாளுமன்ற நடவடிக்கைகளே 15 நிமிடங்களுக்குத்தான் ஒலி பரப்பப்படுகிறது என்கிற தகவலைத் தந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த அளவிற்காவது இந்தத் தமிழகத்தினுடைய சட்டமன்ற நடவடிக்கைகளை ஒலிபரப்புகின்ற முயற்சிக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நம்முடைய தமிழக அரசு நேரடியாகவே மத்திய ஒலிபரப்புத் துறை அமைச்சருக்கும் வானொலி நிலைய அதிகாரிகளுக்கும் எழுதி மேலும் முயற்சிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மாநிலச் செய்திகள் என்கிற தலைப்பிலும் தமிழக சட்டமன்றத்தினுடைய முக்கிய நடவடிக்கைகள் அல்லது குறிப்புகளைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, டெல்லியில் நடக்கக்கூடிய செய்திகளை 15 நிமிடம் தான் ஒலி பரப்புவதாகச் சொன்னார்கள். தமிழக சட்டமன்றத்தைப் பற்றி நான் சொல்வது, இந்தப் பிராந்தியத்தில் தமிழ் பேசக்கூடிய மக்கள் சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் தமிழகத்திலே மட்டும், தமிழிலே இந்த நிகழ்ச்சிகளை 20 நிமிடம் நாம் ஒலிபரப்புவதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு வற்புறுத்தியாவது, அதை வாங்குவதற்கு, இனியும் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, டெல்லியினுடைய நிகழ்ச்சிசை சொன்னதற்கு காரணம், டெல்லியினுடைய பொறுப்பிலே, மத்திய அரசாங்கத்தினுடைய பொறுப்பிலே, அகில இந்திய வானொலி நிலையம் இருக்கிறது. நாடாளுமன்றம் என்பது இந்தியத் துணைக் கண்டம் முழுவதற்கும் பொறுப்பேற்றுக் கொண்டு நடத்தப்படுகிற ஒரு மன்றமாகும். ஆகவே, அந்த நடவடிக்கைகளுக்கே அகில இந்திய அளவிலே 15 நிமிடங்கள்தான் ஒதுக்கப்படுகிறது என்பதற்காக அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை ஒட்டிதான் மாநில நடவடிக்கைகளுக்கும் அந்த அகில இந்திய வானொலி விதிமுறைகளை நிர்ணயிக்கிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவேதான் குறைந்த பட்சம் அந்த 15 நிமிட நேரமாவது மாநிலங்களுக்கு, மாநில சட்டமன்ற நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்க இயலுமா என்பதைப் பற்றி அரசு எழுதும்



1981 ஏப்ரல் 2]

வற்புறுத்தும். ஆனால், முடிவு எடுக்க வேண்டியது, அகில இந்திய வானொலித் துறையும் மத்திய அரசினுடைய அமைச்சரகமும்தான்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, அந்த 10 நிமிடங்கள் இன்றைக்கு நம்முடைய நிகழ்ச்சிகளை, ப்ரொசீடிங்ஸை ஒலிபரப்புவதற்காக உபயோகப்படுத்தினாலும், அந்த 10 நிமிடங்களிலே, நம் ப்ரொசீடிங்ஸ் சம்பந்தமாக, ரெஃபரன்ஸ் வருகிறபொழுது, நம்முடைய அவையைப் பாதிக்கக் கூடிய சீரியஸ் விஷயம் நடந்துகொண்டிருக்கிறது. அமைச்சர் சொன்னார். மாநிலச் செய்திகள் பற்றியும் மாநிலச், செய்திகளிலும் சரி, சட்டமன்றத்தில் இன்று என்ற தலைப்பிலும் சரி, அந்த இரண்டு ஐட்டத்திலும், மாநில அரசாங்கத்தைப் பற்றி, இங்கே நடக்கக்கூடிய விவாதத்தில் குற்றச்சாட்டு இருக்கிறது என்று சொன்னால், அது தண்ணீர் மாதிரி, வெள்ளம் மாதிரி, சரளமாக ஒலிபரப்புகிறார்கள். ஆனால், இங்கே நடக்கிற டிஸ்கஷனில், சென்ட்ரல் கவர்ன்மென்ட்பற்றி கிரிட்டிசிஸம், அல்லது ரூலிங் பார்ட்டி சென்ட்ரலைக் கிரிட்டிசிஸம் செய்தால், அது இருட்டடிக்கப்படுகிறது. நான் கூட அன்றைக்குப் பேசியதை நீங்கள் கவனத்திருப்பீர்கள்? சென்ட்ரல் கவர்ன்மென்ட், ரூலிங் பார்ட்டி, மோர் பவர்ஸ்—இதெல்லாம் பேசினேன். அன்றைக்கு சாயங்காலம் 6-30 மணிக்குக் கேட்டேன். தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று உமாநாத் கேட்டுக்கொண்டார், 'சேஃபஸ்ட்' ஏற்பாடு 'அவாய்ட்' பண்ணுவதற்கு. ஆகவே நான் அமைச்சரைக் கேட்டுக் கொள்வது, ஆல் இந்திய ரேடியோவிடத்திலும், அதனுடைய நிர்வாகிகளிடத்திலும், மத்திய அரசாங்கத்திடத்திலும் உணர்த்துவார்களா? அதாவது, அதனுடைய அட்மின்ஸ்ட்ரேஷன் சம்பந்தமாக, கைட்லைன்ஸ், அவர்களுக்குத்தான் உரிமையனாலும், இந்த அவையினுடைய ப்ரொசீடிங்ஸ் ஒலிபரப்புவது சம்பந்தமாக, இந்த அவையினுடைய கைட்லைன்ஸ்ஸும் உரிமையும் they have to carry out என்ற கடமையைத் தயவுசெய்து உணர்த்துவீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

[முற்பகல் 9-30.]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற நடவடிக்கைகளை, அவர்கள் சட்டமன்றத்திலே நடக்கின்ற கருத்துக்கள் அல்லது உணர்வுகளின் அடிப்படையில் ஒலிபரப்ப வேண்டும் என்பது, ஒரு முக்கியமான உரிமையாகும், அவர்கள் செய்யவேண்டிய கடமையாகும். அதைப்பற்றி முன்னாலே கூட இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தை எழுப்பி அதற்கு மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் நீங்களே அதற்குப் பதில் அளித்திருக்கிறீர்கள். ஆனால் அரசு சார்பில் இந்திய

அரசுக்கும், அகில இந்திய வானொலிக்கும் இந்தக் கருத்தை நாங்கள் பொதுவாக எழுத முடியும், எழுதுகிறோம். ஆனால் சட்டமன்ற நடவடிக்கைகளை எப்படி வெளியிடப்பட வேண்டும் என்கின்ற விதிமுறைகளில் அதற்குள்ள உரிமைகளின் அடிப்படையில் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுப்பது பொருத்தமாக இருக்கும், பயனுள்ளதாக இருக்கும்.

திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற நடவடிக்கைகளை 10 நிமிடம் இருப்பதை 15 நிமிடம் பண்ணவேண்டும் என்று கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது. 10 நிமிடம் பண்ணினாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூறியதைப்போல அரசுத் தரப்பில் மாநில ஆட்சியை எதிர்த்துச் சொல்லுகிற கருத்துக்கள் பிரபலமாக ஒலிபரப்பப்படுகிறது. மத்திய சர்க்காரைப் பற்றி வேண்டுதல் அல்லது குறைபாடு அல்லது கோரிக்கைகள் என்ற அடிப்படையில் எழுப்பப்படுகின்ற எந்தக் கருத்துக்களையும் வானொலி ஒலிபரப்புவதில்லை என்பதற்கு அமைச்சர் ஏதாவது நடவடிக்கை எடுப்பாரா ? இப்போது வானொலி செய்தியைத் தயாரிக்கின்ற ஒரு பொறுப்பை மாநிலத்திலே இருக்கின்ற செய்தித் துறையைக் கொண்டு சட்டமன்ற நடவடிக்கைகளைத் தயாரித்து வானொலிக்கு அனுப்பப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய வானொலி நிறுவனத்திற்குச் செய்தி அனுப்புகின்ற பொறுப்பை அவர்கள் தான் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள்தான் ஏற்றுக் கொள்ள முடியும். ஆகவே நாம் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அந்தச் செய்தியை அனுப்ப இயலாது. அப்படி ஒரு வேளை அனுப்பினாலும், அது அப்படியே ஒலிபரப்பப்படுமா என்பதற்கும் உண்மையாக உத்திரவாதம் கிடையாது. நிச்சயமும் கிடையாது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுப் பரவலாக இருந்து வருகிறது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டு வருகிற சூழ்நிலையைக் கவனித்தால் அவரவர்கள் தங்களுடைய கோணங்களில் இருந்து பார்த்துக் கொண்டு குற்றச்சாட்டுக்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிரச்சினையை இந்த சட்டமன்றத்திலே விவாதிப்பதைப் போல, இதை விட பலனுள்ள வகையிலே, இதற்கு நாம் பயன்பெற வேண்டுமானால், இங்கே இருக்கின்ற கட்சிகள் தங்களுடைய பிரதிநிதிகள் மூலம் நாடாளு மன்றத்தில் இந்தப் பிரச்சினைகளை எழுப்பினால் இதற்குத் தக்க பலன், தக்க இடத்திலே இருந்து நியாயம் கிடைக்கும் என்பது அரசின் கருத்து.



திரு. பெ. கு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்ற நிகழ்ச்சிகளுக்கு 15 நிமிடங்கள்தான் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாராளுமன்றச் செய்திகள் பல மொழிகளில் இருக்கின்ற வானொலி நிலையத்தார்கள் ஒலிபரப்புகிறார்கள். தமிழ்நாட்டிலே இருக்கக் கூடிய வானொலி நிலையம் இந்த தமிழ்நாட்டு சட்டமன்ற நிகழ்ச்சிகளை சரியாக ஒலிபரப்புவதில்லை. பல ஆயிரக்கணக்கான கிராமங்களிலே செய்தித் தாள்கள் வாசிக்க முடியாத மக்கள்தான் தமிழகத்திலே இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது இந்த தமிழ்நாட்டு சட்டமன்ற நிகழ்ச்சியை பொதுமக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். இதற்கு அதிக நேரம் ஒதுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை இன்று தமிழ் நாடு அரசு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி அதிக நேரம் வாங்க வேண்டும். இன்னொன்று, கவுன்சிலும் காலையிலே நடைபெறுவதாலே ஏற்கனவே பேரவைக்குக் கொடுத்த நேரம் கூட போய் விட்டது. அதையாவது மாலையிலே வைத்து, டைம் கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சட்டமன்றத்தில் இன்று' என்ற தலைப்பிலே ஒலிபரப்பப்படுகிற செய்தி முன்பும் சரி, இப்போதும் சரி இரண்டு அவைகளையும் சேர்த்துத்தான் ஒலிபரப்பப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற கருத்து அகில இந்திய வானொலியிலே செய்திகளை, நாடாளுமன்ற செய்திகளை பரப்புகிறபோது அது பல்வேறு சூழ்நிலையிலே அதிக நேரத்தில் அதிக செய்திகளைத் தரும் வாய்ப்பு இருக்கிறது என்கிற ஒரு கருத்தை சொன்னார்கள். ஆனால் மாநில அளவிலே அந்தந்த மாநில ஒலிபரப்பு நிறுவனங்களைத் தவிர வேறு வசதிகள் இல்லை என்பதும், கிராமங்களுக்கு இப்போது பத்திரிகைச் செய்திகளை விட ஒலிபரப்புச் செய்திகள் அகில இந்திய ரேடியோவின் மூலம் தான் செல்கிறது என்பதும் நாம் கவனத்திலே எடுத்துக் கொள்ளவேண்டிய ஒரு முக்கியமான குறிப்பு. அந்தக் குறிப்பை உணர்ந்து மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி மாநில சட்ட மன்றத்தினுடைய நடவடிக்கைகளை அந்தந்த மாநில வானொலி நிலையங்கள் அதிக அளவிலே பரப்புவதற்கு வாய்ப்பு தரவேண்டும் என்பதை மீண்டும் வற்புறுத்தி எழுதும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எஸ் ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவை நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்காக 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டாலும், இந்த மன்றத்தில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை உண்மையான முறையில் சொல்வதற்கு நேர்மாறான வகையில் ஒலிபரப்புவதாக இந்த மன்றமும்,

அரசும் அறிந்து இருக்கிறது. அதை யார் தயார் செய்கிறார்கள் சட்டமன்றத் தலைவர் அவர்களே, அந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்து அனுப்பி, அதை அவர்கள் ஒலிபரப்புவதற்கு உறுதுணையாக ஒரு ரெடியோ செய்தி தயாரித்து அனுப்ப அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டப் பேரவைத் தலைவரிடத்தில் கேள்வி போட்டு இருக்கிறார்கள். அதற்கு நான் எப்படி பதில் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. என்.எஸ்.வி. சித்தன்: தலைவர் அவர்களே, தமிழக அரசு வெளியிடும் 'தமிழரசு' பத்திரிகையில் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் தான் வருகின்றன. இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சியினர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளைப் பற்றி வருவது இல்லை (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சித்தன் அவர்களின் உணர்வுகள் எனக்குப் புரிகின்றன. ஆனால் சட்டமன்றத்தின் முன் உள்ள வினாவின் அடிப்படையில் தான் துணை வினா எழுப்பவேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, நம்முடைய அரசு வெளியிடும் பத்திரிகையிலேயே இப்படி நிலைமை இருக்கிறது என்று மத்திய அரசு நிர்வாகத்தில் இருக்கிற அகில இந்திய ரேடியோவைக் குறைகூறுகிறபோது நான் சொல்லக் கூடாதா என்பதற்காகக்கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வானொலியில் நடைபெறுகிற நிகழ்ச்சியைப் பற்றித்தான் இங்கே மன்ற உறுப்பினர்கள் வினாக்களேஎ எழுப்பினார்களே தவிர மத்திய அரசைக் குறை கூறவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை வானொலியில் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் கட்சிபேதம் இன்றி, எல்லோருக்கும் முக்கியத்துவம் கொடுத்துத் தான் வெளியிடப்படுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசிய கருத்துக்களை எல்லாம் விட்டு விட்டு ஏதோ ஒரு பகுதியை மட்டும்





சொன்னதாகச் சொன்னார்கள். மத்தியில் உள்ள ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினராக நான் இருந்தாலும் எனது பேச்சிலும் எல்லாவற்றையும் விட்டு விட்டு, விலை உயர்வைப் பற்றி பேசினார். என்று மட்டும் சொன்னார்கள். ஆகவே பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கைகள் ஒலிபரப்பப் படுகின்றன என்பதை அரசு ஏற்றுக் கொள்ளுமா.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திற்குண்டான உரிமைகளையும், அதனுடைய நிகழ்ச்சிகளையும் அதிகமாக ஒலி பரப்பச்செய்ய இங்கே கோரிக்கைகள் வைக்கிறபோது கேள்வி—பதிலிலேயே இப்படி மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து வேறுபாடு கொண்டு இருந்தால் அது அகில இந்திய வானொலிக்கு மிகச் சுலபமாகப் போய்விடும். இதிலே கட்சி வேறுபாடு என்பதைவிட, இங்கே தெரிவிக்கிற கருத்துக்கள் சரிவர ஒலி பரப்பப்படாமல் கருத்து வேறுபாடாக இருப்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் இங்கே கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். அந்தக் குறைபாடு சில நேரங்களில் குற்றச்சாட்டு என்கிற வகையில் பொதுமக்களால் கவனிக்கப் பட்டு வருகிறது. அவர்கள் விரும்பும் கருத்தை அதிகப்படுத்துவதும், தேவையற்ற கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் தேவையுள்ள கருத்தைக் குறைத்துக்கொள்வதும் வாடிக்கையாக இருக்கிறது என்ற பரவலானக் கருத்து பொதுமக்களிடத்திலும் இருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்களிடத்திலும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் 'தமிழரசு' பற்றி தெரிவித்ததால் சொல்லிவிடுகிறேன், அதற்கு பெயரே 'தமிழரசு'. ஆகவே, அதிலே தமிழக அரசின் நடவடிக்கைகளைப் ப்ற்றித்தான இருக்கும். சட்டமன்ற நடவடிக்கைகள் இருக்காது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்னை வானொலி நிலையத்தைப் பற்றி பல்வேறு புகார்களை இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். ஏற்கனவே டெலிபோன், ரயில்வே போன்றவைகளுக்கு ஆலோசனைக் குழுக்கள் இருப்பதைப்போல் சென்னை வானொலி நிலையத்திற்கும் இருக்கிற ஆலோசனைக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் இது போன்ற குறைபாடுகளைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமாறு அது குறித்து மத்திய அரசுக்கு மாநில அரசு கடிதம் எழுதுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தைப் பற்றியும் மத்திய அமைச்சர்களுக்கும், மத்திய அமைச்சகத்திற்கும், வானொலித் துறைக்கும் தகவலைத் தெரிவிக்கும் இந்த அரசு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, வினா 599.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, எங்கள் கட்சியிலிருந்து ஒருவருக்குக்கூட குறிப்பிட்ட இந்த வினாவில் துணைக் கேள்விக்கு வாய்ப்புத் தரவில்லை ; இது முக்கியமான வினா. எங்களுக்கு வாய்ப்புத் தரும் வரையில் நான் உட்கார மாட்டேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த கேள்விக்கு நிறைய நேரம் ஒதுக்கிவிட்டேன். மேலும், நேரம் ஒதுக்குவதற்கில்லை. நீங்கள் உட்கார மறுத்தால் உங்கள் கட்சித் தலைவர் உங்களைக் கட்டுப்படுத்திக்கொள்வார். தயவுசெய்து உட்காருங்கள். அடுத்து வினா 599.

அரசுப் பண்ணைகளில் விதை உற்பத்தி செய்தல்.

*வினா எண் 599—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து விதைகளை அரசுப் பண்ணைகளிலேயே உற்பத்தி செய்து அளிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தமிழக விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து விதைகளையும் அரசுப் பண்ணைகளிலே உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். இந்த மாநிலத்து விவசாயிகளுக்குத் தேவையான விதைகளில் எத்தனை விழுக்காடு அரசுப் பண்ணைகள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது ? எத்தனை விழுக்காடு தனியார் பண்ணைகள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நெல், சோளம் விதைகளில் 7 சதவீதம், கேழ்வரகு 15 சதவீதம், வீரிய ஒட்டு சிறுதானியங்கள் 30 சதவீதம்—இந்த அளவில் அரசு விதைப் பண்ணைகள் மூலம் விதைகள் விவசாயிகளுக்கு விற்பனைச் செய்யப்படுகிறது. எஞ்சியவை தனியார் விதை உற்பத்திப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.



1981 ஏப்ரல் 2]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, ஒன்றிய அளவில் இருக்கிற விவசாயிகளுக்கு நிலக்கடலை விதை தனியாரிடமிருந்து வாங்கி விநியோகம் செய்யப்படுகிறது. அதனால் அந்த விதைகள் முளைக்கும் திறன் குறைவாக இருக்கிறது. ஆகையால், முளைக்கும் திறன் குறைவாக உள்ள விதைகளை ''பர்ச்சஸ்'' பண்ணும் அதிகாரிகள் அதற்கு பொறுப்பு ஏற்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, எண்ணெய் விதைகளுக்கு என்று புதிதாக இயங்கும் இயக்கம் இது பற்றி ஆராயும்,

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, நம்முடைய விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து விதைகளையும் அரசுப் பண்ணைகள் மூலம் விநியோகம் செய்வார்களா என்று கேட்டதற்குத் தனியார் விதைப் பண்ணைகளிலிருந்தும் விதைகளைப் பெற்று அரசு விநியோகிப்பதாகச் சொன்னார்கள். எந்த அடிப்படையில் தனியாரிடம் இருந்து விதைகளைப் பெற்று விநியோகிக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அரசுப் பண்ணைகள் மூலம்தான் விதைக் காய் உற்பத்திச் செய்யப்படுகிறது. அதன் பிறகு அதைத் தனியார் பண்ணைகளுக்குக் கொடுத்துத் தேவையான அளவுக்கு உற்பத்திச் செய்யச் சொல்லி அந்த விதைகளை அரசு பெற்று, அதற்குச், சான்றளிப்பும் பெற்று, விற்பனைச் செய்யப்படுகிறது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, அரசுப் பண்ணைகளில் குறைந்த அளவு விதைகளே உற்பத்திச் செய்யப்படுகின்றன. ஆகையால், விவசாயிகளுடைய முழுத் தேவையையும் பூர்த்தி செய்ய அரசு விவசாயப் பண்ணைகளே வாங்கி, அதைச் சோதனை செய்து, விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய முறையை அரசு ஏற்படுத்துமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நமக்கு உள்ள நிதி ஆதாரம், இந்த விதைப் பண்ணைகளின் பரப்பளவு ஆகியவைகளை ஒட்டித்தான் நாம் விதைகளை உற்பத்திச் செய்கிறோம். ஆகவே, நம் மாநிலத்திற்குத் தேவையான அனைத்து விதைகளையும் உற்பத்திச் செய்யும் சாத்தியக்கூறு இல்லை.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் விதைகள் விநியோகிக்கப்படுகின்றன. ஆனால் விதைகளை விநியோகம் செய்யும்போது அவை சரியாக

வழங்கப்படவில்லை. ஆகவே, ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் விதைகள் தேவையான அளவுக்கு, தேவைப்படுகிற நேரத்தில் தரமான விதைகளை அந்தந்த சமயத்தில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இதுபோன்ற குறைகளை அகற்ற அரசு ஆராயும்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, நமது விவசாயப் பண்ணைகள் மூலம் கொடுக்கக்கூடிய விதைகள் ஆனாலும் தனியார் பண்ணைகள் மூலம் கொடுக்கக்கூடிய விதைகள் ஆனாலும் விவசாயிகள் அவைகளைப் பெற்று விவசாயம் செய்வது சிரமமாக இருக்கிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இப்படிப்பட்ட குறைபாடு அதிகமாக இருக்கிறது. சிறு விவசாயிகளுக்கு இந்த விதைகளைக் கொடுக்கும்போது பாதி விலையாகவும் பாதி மானியமாகவும் கொடுக்க எதிர்காலத்தில் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, எதிர்காலத்தில் இதை பரிசீலிக்கலாம்.

திரு. இரா. சண்முகம் : தலைவரவர்களே, தனியார் உற்பத்தி செய்கின்ற விதைகளுக்கு அரசு தரப்பிலே கிடைக்கின்ற பணம் விரைவில் கிடைக்காத காரணத்தால் விதை உற்பத்தி செய்து தருவதற்கு விவசாயிகள் மறுக்கிறார்கள். ஆகவே விவசாயிகளிடமிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்தில் விதைகளைப் பெற்றுக் கொண்டு பணம் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அரசு முன்வரும்.

### முல்லுவாடியிலுள்ள எண்ணெய் மூலவிதைப் பண்ணை.

*வினா எண் 600—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தாலுக்காவில் உள்ள முல்லுவாடி கிராமத்தில் நிறுவப்பட்டிருக்கும் (செயலற்ற நிலையில் உள்ள) எண்ணெய் மூலவிதைப் பண்ணையைச் செயல்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) மேலும் அதை விஸ்தரிக்கும் எண்ணம் ஏதேனும் அரசுக்கு உண்டா?



மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. ஏ. எம். சேதுராமன் : பேரவைத் தலைவரவர்களே, வேளாண்மை பற்றி விளக்குவதற்காக எண்ணை மூலதனப் பண்ணை எவ்வாண்டு துவக்கப்பட்டது என்பதையும் அந்தப் பண்ணை எதனாலே செயலற்றுக் கிடக்கிறது என்பதையும் இதுபோன்ற பண்ணைகள் தமிழ்நாட்டில் எத்தனை இருக்கின்றன என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, எப்போது துவக்கப்பட்டது, எத்தனை பண்ணைகள் போன்ற விவரங்கள் எல்லாம் தற்போது என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை போன்று ஆற்காடு தாலுக்காவில் முல்லுவாடி என்ற கிராமமே இல்லை. துரைவாடி நகரம் என்ற இடத்தில் தான் எண்ணை மூலவிதைப் பண்ணை இருக்கின்றது. அது செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றது.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவரவர்களே, இது போன்ற எண்ணெய் மூலவிதைப் பண்ணைகளை மேலும் உருவாக்குவதன் காரணமாக சூரியகாந்தி எண்ணெய் விதைகளை விவசாயிகளுக்கு அளித்து விவசாயத்திற்கும் உதவி செய்து, சூரியகாந்தி எண்ணெய் தமிழ்நாட்டில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இருப்பதால் அந்த எண்ணெய் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும் மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து வேணடிய நடவடிக்கையை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இது போன்ற கருத்துக்களை ஆராய்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் எண்ணெய் விதைக்கென்று தனி இயக்ககமே தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது.

### முடையூரிலிருந்து பெரிய தச்சூர் செல்லும் சாலையினை சீர் செய்தல்

*வினா எண் 601 : திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், முடையூரில் இருந்து கம்பந்தூர், கீழ் பாப்பாம்பாடி, கீழ் மாம்பட்டு, அணிலாடி, பிடாரிபட்டு வழியாக பெரிய தச்சூர் செல்லுகின்ற சாலையை கரும்பு உற்பத்தி சாலைத் திட்டத்தின் கீழ் எடுத்து சீர் செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. டி. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் முடையூரில் இருந்து கம்பந்தூர், கீழ் பாப்பாம்பாடி, கீழ் மாம்பட்டு, அணிலாடி பிடாரிபட்டு வழியாக பெரிய தச்சூர் செல்லுகின்ற சாலையை கரும்பு உற்பத்தி திட்டத்தின் கீழ் சீர் செய்யமுடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டிருக்கின்றார்கள். ஆனால் இப்போது அந்தத் திட்டம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் வருங்காலத்திலேயாவது அதனுடைய அவசியத்தை எண்ணிப்பார்த்து அந்தச் சாலையைச் சீர் செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இந்தச் சாலையைப் பற்றி அந்த இடத்திலே உள்ள சவுத் இண்டியா சர்க்கரை ஆலையில் இருந்து பரிந்துரை ஏதும் அரசுக்கு அனுப்பவில்லை. அவர்கள் அனுப்பி வைத்தால் ஆராயப்படும்.

### வேதாரண்யம் வேளாங்கண்ணி சாலைப் பாலத்தில் சுங்கம் வசூல் செய்தல்

*வினா எண் 602 : திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம்-வேளாங்கண்ணி சாலையில் கட்டப்பட்ட பாலத்தில் கடந்து செல்லும் வாகனங்களுக்கு சுங்கம் வசூல் செய்யப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதை நிறுத்திவிடும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

### Township for Nagoor

* Q. No. 603—THIRU R. UMANATH : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) Whether there is any proposal under consideration to constitute a township for Nagoor town in Nagapattinam taluk; and

(b) if so, the details thereof ?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, நாகூர் தற்போது நாகப்பட்டிணம் முனிசிபாலிட்டிக்கு உட்பட்டதாக இருக்கின்றது. நாகப்பட்டினம் முனிசிபாலிட்டியின் ஃபைனான்ஸ் நிலைமை மிகவும் நலிவுற்றதாக இருக்கின்றது. கந்தூரி பெஸ்டிவல் நடக்கின்றபோது 10 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வருகின்ற இடமாக அது இருக்கின்றது. அங்குள்ள மக்கள் தொகையும் அதிகமாக இருக்கின்றது. ஆகவே, நாகூரின் சுகாதார நிலைமையை நாகப்பட்டினம் முனிசிபாலிட்டியால் கவனிக்க முடியாத நிலைமை இருக்கின்றது. அதனால் பலநோய்கள் வருகின்றன. ஆகவே நாகூர் நகரியத்தை ஏற்படுத்துவதற்குரிய வகையிலே சற்று எஃபக்டிவாக டீல் பண்ணுவதற்கு இந்த அரசு ஏன் ஏற்பாடு செய்யக் கூடாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, பேரூராட்சியை நகராட்சியாக ஆக்க வேண்டும் என்றாலும் நகராட்சியை நகரியமாக ஆக்க வேண்டும் என்றாலும் சில விதிமுறைகள் இருக்கின்றன. Certain norms are being followed அந்த நிபந்தனைகளின் படி நாம் நகராட்சியை நகரியமாக மாற்ற முடியாது. அந்த நிபந்தனைப்படி 20,000-க்குக் குறையாமல் மக்கள் தொகை இருக்க வேண்டும். சாதாரணக் கணக்குகளிலே ரூபாய் 2 இலட்சத்திற்கும் குறையாத பணம் இருக்க வேண்டும். பொதுக் கணக்குகளிலே 3 இலட்சம் ரூபாய்க்கு மேலே பணம் இருக்க வேண்டும். இந்த விதிகளுக்கு உட்பட்டு வந்தால்தான் செய்ய முடியும். மேலும், மத்திய அரசிலே இருந்து 1981-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் வரையிலும் இதுபோன்ற நிலைமைகளை மாற்றியமைக்கக் கூடாது என்கின்ற உத்தரவு அதாவது பேன் ஆர்டர் இருக்கின்றது.

There is a ban order imposed by the Central Government

அது இருப்பதால் இப்போது பரிசீலிக்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறோம்.

திரு. ரா. உமாநாத் : மத்திய அரசிடமிருந்து அப்படிப்பட்ட புதிய அமைப்புக்களை உண்டாக்கக்கூடாது என்ற பேன் இருந்தாலும் நம்முடைய மாநில அரசு புரப்போஸல்ஸை ஆய்வு செய்வதற்கு மத்திய அரசின் தடை குறுக்கே நிற்காது. ஆகவே, அந்த ஊரைச் சுற்றி பல கிராமங்கள் இருக்கின்றன.

மேலும், ஏராளமான பில்கிரிம்ஸ் வந்து போவதால் பில்கிரிம் டாக்ஸ் போடலாம். அந்த முறையிலே வழிவகைகளை உண்டாக்க முடியும். ஆகவே, கான்ஸ்ட்டிட்யூட் பண்ணுவதற்கு பேன் ஆர்டர் தடையாக இருந்தாலும் அதற்கான நிலைமைகள் பற்றி ஆய்வு செய்வதற்குரிய வகையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்வார்களா?

(முற்பகல் 9–50]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, நாகப்பட்டிணத்தைப் பொறுத்த வரையில், நிதிநிலை சரியில்லை என்ற காரணத்தால், நேற்றுக்கூட 12 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி 12 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருந்தாலும், அங்கே குறை இருக்கிறது என்பதை மாண்புமிகு உமாநாத் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனாலும், அவைகளை எல்லாம் பரிசீலனை செய்து, நகராட்சியை நகரியமாக ஆக்குவதற்கு என்னென்ன வழி முறைகள் தேவையோ அவைகள் எல்லாம் எடுத்துக்கொண்டு பரிசீலிக்கப்படும்.

## நிலக்கோட்டை—காமுப்பிள்ளை சத்திரம் நெடுஞ்சாலையின் குறுக்கே ஓடும் ஓடைகளின்மீது பாலம் கட்டும் பணி

*'வினா எண். 604—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதியில் நிலக்கோட்டை—காமுப்பிள்ளைச் சத்திரம் நெடுஞ்சாலையின் குறுக்கே உள்ள இரண்டு ஓடைகளால் மழைக் காலங்களில் பஸ் போக முடியாமல் மக்கள் கஷ்டப்படுவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால் அந்த ஓடைகளின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஓடைகள் மீது பாலங்கள் கட்டும் பணி எந்தவித திட்டத்திலும் இடம் பெறவில்லை. இப்பணிகளை இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைமையைப் பொறுத்து மேற்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

**திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நீண்ட நெடுநாட்களாக இருந்து வரும் பிரச்னை. அங்கிருக்கும் டிபார்ட்மெண்ட் அதிகாரிகளை அணுகி கேட்டால் எஸ்டிமேட் போடப்பட்டு சேங்ஷனுக்கு அனுப்பப்பட்டி



ருக்கிறது. சேங்ஷன் ஆகிவிட்டது, டெண்டர் கால்—பார் செய்யப்போகிறோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். இங்கே அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை என்று சொல்கிறார். ஒரு வேளை, தவறான தகவல்களை ஏதாகிலும் டிபார்ட்மெண்டிலிருந்து அமைச்சருக்கு அனுப்பப்பட்டிருக்குமோ என்னவோ? உண்மை நிலை என்ன என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் கொடுக்கக்கூடிய கோரிக்கைகளின் அடிப்படையில் நாங்கள் சம்பந்தப்பட்ட துறைகளை புரோபோசல் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். அவர்கள் அவ்வாறே புரோபோசல் தயார் செய்து அனுப்பியிருக்கலாம். ஆனால் அப்படி அனுப்பியிருப்பதாலேயே அந்தத் திட்டங்கள் செயல்முறைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று பொருள் அல்ல. நிதிநிலை சரியாக இருக்குமேயானால், எடுத்துக் கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இரண்டு பாலங்களுக்கும் அவ்வாறே புரோபோசல்கள் வந்திருக்கின்றன. மொத்தம் 4 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, வருகிற காலத்தில் நிதிநிலை சரியானால், இந்தத் திட்டங்களை எடுத்துக்கொள்வது சம்பந்தமாக ஆலோசிக்கப்படும்.

**திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் வரும் ஆண்டிலே எடுத்துக்கொள்ளப்படும் என்ற அருமையான நல்ல அஷ்யூரன்ஸை கொடுத்திருக்கிறார்கள். அதை வைத்துப் பார்த்துக் கொள்ளலாம். இருந்தாலும் கூட இந்த நிலக்கோட்டைப் பகுதி தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பணிகள் சிறப்பாக நடைபெற்றிருக்கக்கூடிய பகுதி. அப்படி பல வேலைகள் செய்யப்பெற்றிருக்கும்போது, இந்த வேலை அப்படியே நின்றுபோனால், நமது அரசுக்கு அது நல்லதா? 4 இலட்சம் ரூபாய் என்பது ஒன்றும் அப்படி அதிகமான தொகை அல்ல. ஆகவே, விரைவில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது 4 லட்சம் ரூபாய் அப்படி ஒன்றும் அதிகம் இல்லை என்றார். அவரைப் பொறுத்தவரையில் 4 இலட்ச ரூபாய் என்பது குறைவாக இருக்கலாம். ஆனால், இந்த அரசைப் பொறுத்த வரையில் 4 லட்சம் ரூபாய் ஒரு யூனியனுக்குச் செலவு செய்யப்படுகிற தொகை, அதை ஒரு பகுதிக்கு மட்டுமே ஒதுக்குவதில் பல நிதிநிலை சங்கடங்கள் ஏற்படும். ஆகவே, இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு அந்தத் திட்டங்களை உருவாக்குவது பற்றிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பாலங்கள், மிக செங்குத்தான மலைப் பகுதியின் அருகே உள்ள இடங்கள். அதிலே ஒரு முழங்கால் அளவு தண்ணீர் வந்தால் கூட, அந்த இடத்தைக் கடக்க முடியாது. விவசாயத்திற்குச் செல்கிற மக்கள் கூட, அப்படி தண்ணீர் வரும் காலத்தில், வீடு திரும்ப வேண்டும் என்றால், பல மணி நேரம் காத்திருந்து பிறகே செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்த அவசியத்தைக் கருதி, துரிதமான நடவடிக்கை எடுத்து அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு ஆணையிட முன் வருமா? என்று அறியவிரும்புகிறேன் .

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வினா எண்கள். 605, 606, 607, 608 ஆகியவை ஒத்திவைக்கப்படுகின்றன.

பேருந்துக் கட்டண உயர்வு.

*வினா எண் 609—திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல் உயர்த்தப்பட்டுள்ள பஸ் கட்டண உயர்வு மிக அதிகமானது என்ற எதிர்ப்பு தமிழகமெங்கும் ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைக் குறைக்க அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு.ச. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் பூராவும் அதை எதிர்த்தது என்று சொல்ல முடியாது. சில இடங்களில் சுற்றுப் பயணம் செய்து பார்த்தபோது, கட்டணத்தை இப்படி திடீரென்று உயர்த்தியது தவறு. உயர்த்தியது பொதுவாக தவறு இல்லை என்றாலும், படிப்படியாக உயர்த்தியிருக்கலாம் என்ற அளவில் கருத்துக்கள் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்டன. அதன் அடிப்படையில் தான் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17 ஆம் நாள் முதல் கட்டணங்களைக் குறைத்திருக்கிறோம்.

**திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் கட்டணம் உயர்ந்திருக்கிறது என்பதை இங்கேயும் எல்லாக் கட்சிகளும் எதிர்த்திருக்கின்றன. பொதுமக்களும்





கடுமையாக எதிர்த்திருக்கிறார்கள். பெட்ரோல், டீசல் போன்றவற்றை வீண் விரயம் செய்யாமல், சிக்கனப் படுத்தும் முறையை சி.ஆர்.சி. போன்ற இடங்களில் பயன்படுத்தப்படுகிறது. அதே முறைகளைப் பயன்படுத்தி டீசல், பெட்ரோல் சிக்கனம் செய்து கட்டணங்களைக் குறைப்பதற்கு அரசு முயற்சிக்குமா அல்லது உயர்த்துவதற்கான யோசனையைக் கைவிடுமோ என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பெரிய எதிர்ப்பு இருப்பதாகச் சொன்னார்கள். இங்கே நான் ஒரு கருத்தைச் சொல்ல வேண்டுமென்றால் எதிர்ப்புகள் இருந்தாலும் எதற்காகச் செய்கிறோம் என்பதை நாம் பார்த்தாக வேண்டும். வீண் விரயமாகிறது என்று சொன்னார்கள். அப்படி வீண் விரயமாகவில்லையென்பதுதான் இங்கிருக்கிற கணக்கு. சி.ஆர்.சி.யில் ஒரு முறையைக் கடைபிடிப்பதால் லாபம் வருகிறது என்று சொன்னார்கள். எல்லாயிடங்களிலும் அது கடைபிடிக்கப்பட்டு வருகிறது. சி.ஆர்.சி. உங்களுக்குத் தெரிந்திருப்பதால் சொல்கிறீர்கள். மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும் அதே முறை கடைப்பிடிக்கப்படுகிறது அங்கே எந்தவிதமான விரயமும் செய்யப்படவில்லை. விலையேற்றம் காரணமாக இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கிறதே தவிர ஏற்கனவே இலாபத்தில் ஓடிக்கொண்டிருப்பது எந்தவிதமான விலையேற்றமும் இல்லாமல் நஷ்டம் ஏற்பட்டிருந்தால் ஏற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே இலாபத்தில் ஓடிக்கொண்டிருந்தது இன்று நஷ்டத்தில் ஓடுகிறது என்றால் மற்றப் பொருள்களின் விலைகள் ஏறியிருக்கின்றன. அடுத்துவரும் கேள்விக்கு எல்லாம் பதில்களும் சொல்ல இருக்கிறேன்.

**திரு. ஏ.சி. சண்முகம்:** பஸ் கட்டண உயர்வு அதிகம் என்பது ஒரு பக்கமிருக்க மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் பஸ் கட்டணம் குறைவு என்பதை அரசு அறியுமா? போக்குவரத்துக் கழகங்கள் கட்டணங்களை ஏற்றவில்லை என்பதால் உலக வங்கி கொடுக்க வந்த முன் பணம் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியது அவ்வளவும் உண்மை. பக்கத்து மாநிலங்களில் இருப்பதைவிட மிக மிகக் குறைவான கட்டணத்தைத் தான் நாம் வசூல் செய்து கொண்டிருக்கிறோம். இங்கே நகரப் பேருந்தைப் பொறுத்தவரையில் எனக்கு கொஞ்சம் கால அவகாசம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பாதியில் மணி அடித்து விடாதீர்கள். இது மிகவும் முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் இதை விளக்குவதற்காக நான் இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். சொல்வதற்கு நிறைய கருத்துக்கள் இருக்கின்றன.

[1981 ஏப்ரல் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறைய வினாக்கள் இருக்கின்றன. துணை வினாவும், பதிலும் சுருக்கமாக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** நகரப் பேருந்துகள், பொறுத்தவரை நாம் இப்போது வசூலித்துக் கொண்டிருக்கிற தொகை 48 கிலோ மீட்டருக்கு ரூபாய் 1.45 வசூலிக்கிறோம். அதே நேரத்தில் கர்நாடகா மாநிலத்தில் ரூபாய் 2.75 இதே 48 கிலோ மீட்டர் கொண்டுபோய் விடவேண்டுமானால் வசூலிக்கிறார்கள். கேரள மாநிலத்தில் ஏறத்தாழ மூன்று ரூபாய் வசூலிக்கிறார்கள். ஆந்திர மாநிலத்தை எடுத்துக் கொண்டால் ரூபாய் 2.60 வசூலிக்கிறார்கள். மற்றப் பேருந்துகளுக்கு இங்கே ரூபாய் 31.25 வசூலிக்கும் இடத்தில் கர்நாடகாவில் ரூபாய் 40 என்றும், ஆந்திராவில் ரூபாய் 37.50 என்றும் வசூலிக்கிறார்கள். எனவே நாம் எந்த வகையிலும் பஸ் கட்டணத்தை அதிகமாக்கிவிடவில்லை. இன்றைய தினம் இருக்கிற சூழ்நிலை, கட்டணத்தை உயர்த்த வேண்டிய சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோமே தவிர நாம் உயர்த்த வேண்டுமென்று நினைக்கவில்லை. டீசல் விலை 1976 ஆம் ஆண்டில் இருந்ததைவிட இன்றைய தினம் ரூபாய் 1.30 உயர்ந்திருக்கிறது. ஒரு கிலோ மீட்டர் ஓட, டீசலுக்கு மட்டும் நாற்பது காசு அதிகமாகச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. 1974 ஆம் ஆண்டு ஒரு முறை கட்டணத்தை உயர்த்தினர்கள். பிறகு 1976 ஆம் ஆண்டில் ஒரு முறை உயர்த்தினார்கள். இதற்கு இடைப்பட்ட காலத்தில் மற்றப் பொருள்களின் விலைகள் ஏறவில்லை. ஆனால் நன்மை கருதி கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள் என்று நம்புகிறேன். அதற்குப் பிறகு பொருள்களின் விலையேற்றம் காரணமாக அன்றைய தினம் பாடி கட்டுவதற்கு, சேஸிஸ் வாங்க மொத்த விலை ரூபாய் 1,40,000. ஆனால் இன்றைய தினம் அதற்கு ரூபாய் 2,60,000 ஆகிறது என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் டீசலைப் பொறுத்தவரையில் 1976 ஆம் ஆண்டில் கட்டணத்தை உயர்த்துவதற்கு முன்பே அன்றைய தினம் இருந்தற்கு ரூபாய் 1.30 விலை அதிகமாக ஆகியிருக்கிறது. பஞ்சாபில்கூட அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் பேசும்போது இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் நிச்சயமாக கட்டணத்தை உயர்த்தித்தான் ஆக வேண்டும் என்றுகூட பேசியிருக்கிறார்கள். நாம் இதை உயர்த்தக் காரணம் பல போக்குவரத்து கழகங்களை இன்னும் பிரித்து அமைக்கவேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். உதாரணமாக, கே. டி. சி., பி. ஆர். சி. சி.ஆர்.சி.



1981 ஏப்ரல் 2]

சி.டி.சி., இவை அதிகப் பரப்பளவைக் கவனித்துக் கொண்டிருப்பதால் சில கிராமங்களை நேரடியாகப் பார்த்துக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. எனவே இந்த அரசாங்கத்தின் திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு போக்குவரத்துக் கழகம் என்ற முறையில் அமைக்க வேண்டுமென்று நாம் திட்டம் போட்டிருக்கிறோம். சென்னை நகரில் படிக்கட்டுப் பயணம் எவ்வளவு சிரமமாக இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். 400 புதிய பேருந்துகளைப் போட வேண்டும் என்று பார்த்தோம். 400 புதிய பேருந்துகளைப் போட வேண்டுமென்று நாங்கள் திட்டம் போட்டோம். 400 பழைய பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன, அவை ரொம்ப மோசமாகயிருக்கின்றன என்ற காரணத்தால், ஆனால் விலை உயர்வு காரணமாக அதைச் செய்ய முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். இது வரையில் ஏறத்தாழ 12 கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டமாகியிருக்கிறது.

ஏறக்குறைய 70 கோடி கடன் பெறுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. இன்னும் கூட உலக வங்கி 12 கோடியே 60 இலட்சம் கடன் கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றையதினம் இந்த பஸ் கட்டணத்தை உயர்த்தினால்தான் கொடுக்க முடியும், இல்லாவிட்டால் நஷ்டம் ஏற்படும் என்று சொல்லி விட்ட காரணத்தினால், சென்னையிலே மட்டும் இதற்கான வண்டிகளை விடுவதற்கான வழியில்லாமல் இருக்கின்றது என்பதைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அதேபோன்றுதான், பல இடங்களில் பணி மனைகள் அமைக்க வேண்டியிருக்கிறது.

(முற்பகல் 10—00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் வினா-விடை நேரத்தை நீட்டிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** எனக்கிருக்கின்ற எண்ணமெல்லாம் ஏற்கனவே இந்த போக்குவரத்து வசதியைப் பெற்றிருப்பவர்கள் ஒரு 20 பைசா, 30 பைசா கூட கொடுத்து விடலாம். இப்போது வசதி இல்லாத காரணத்தால், மேலும் பேருந்து வசதிகளை செய்து கொடுக்க முடியவில்லை. எனவே, தங்கள் ஒத்துழைப்பைத் தரக் கூடாதா என்பதை உங்களுக்குக் கேள்வியாக வைக்கிறேன். நீங்கள் சொல்லலாம், ஏன் அரசாங்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை வரும்போது விரிவாகப் பேசிக் கொள்ளலாம். இப்போது சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** அதோடு, உலக வங்கியைப் பொறுத்தவரையிலும் சரி அல்லது அரசாங்கம் வாங்குவதாக இருந்தாலும் சரி, இதிலே காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தினால், அதாவது போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டமில்லாத வகையிலேதான் இந்த வசதிகளைச் செய்து தர முடியும். என்னைப் பொறுந்தவரை இங்கே இடமில்லாமல், நின்று போகின்ற பயணிகளைப் பார்த்து, படியில் தொங்கிக் கொண்டு போகின்ற பயணிகளைப் பார்த்து நின்று விடுகின்றவர்களுக்கு பேருந்து வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறோம். அதற்கான முழு ஒத்துழைப்பையும் தருவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கின்ற காரணத்தினால், உங்கள் முழு ஒத்துழைப்பைத் தர வேண்டுமென்று விரும்புகிறேன்.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே இன்றைய தினம் அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு விடை அளித்தது எதிர்காலத்தில் இது ஒரு முன் உதாரணமாகிவிடும். தாங்கள் இதை அனுமதிக்கக் கூடாதென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால் அமைச்சர்கள் கேள்விக்கு விடை அளிக்கின்ற வகையில் இருந்தால் அடுத்த கேள்வியைக் கேட்பவருக்கு ஒரு கருத்தைத் தருவதற்கு பயன்படுவதாக இருக்க வேண்டும். முழு விளக்கமும் தர வேண்டுமென்பதல்ல. விளக்கம் தருகின்ற வகையிலே வாத அடிப்படையிலே இந்த மன்றத்தில் பேசுவது கேள்வியைக் கேட்பவரும் அப்படி வாதம் நடத்துகின்ற வகையிலே கேள்வியை கேட்கும்படி அமைந்துவிடக்கூடாது. எனவே கேள்வி நேரத்தில் இப்படிப்பட்ட வாதங்கள் அமைச்சர் அவர்களின் இப்படிப்பட்ட பதில் இடம்பெறாத வகையில் நீங்கள் அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கனவே நான் அமைச்சர் அவர்களிடம் சொல்லிவிட்டேன். சுருக்கமாகக் கேள்விக்குப் பதில் மட்டும் இருந்தால் போதும் என்பதாக. திரு. கிருஷ்ணமூர்த்தி.

**திரு வி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பஸ் கட்டண உயர்வு தமிழ்நாடு பூராவும் அரசாங்கமே பேருந்துகளை நடத்துகின்ற சந்தர்ப்பம் இருக்குமானால்* அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற விளக்கத்தை நாம் ஏற்றுக்கொண்டு நாம் கொடுக்கக்கூடிய கட்டணங்கள் அரசாங்கத்திற்கு செல்லுகின்ற காரணத்தினால் அதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் தமிழ்நாட்டிலே இன்னும் தேசியமயமாக்கப்படாத பேருந்துகள் நிறைய இருக்கின்றன. அமைச்சர் அவர்களுடைய பதிலை வைத்துக்கொண்டு



அவர்கள் அதிகமான கட்டணத்தை ஏற்றுவதற்கு இதையே முன் உதாரணமாகக் காட்டிக் கொள்ளலாம். என்னுடைய கேள்வியெல்லாம் அரசாங்கம் தன்னுடைய பேருந்துகளை ஓட்டாத வழித்தடங்களில் தனிப்பட்டவர்கள் பஸ்களை ஓட்டுகின்ற சமயத்திலே அதிகமான கட்டணங்களை வசூலிக்கிறார்கள். அரசாங்கம் அப்படி ஓட்டுகின்ற சமயத்தில் ஒரு காம்படிஷன் ஏற்படுகிறது. அந்தச் சமயத்தில் தனிப்பட்டவர்கள் கூட அந்தக் கட்டணத்தை குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒருவருக்கு ஒருவர் இவ்வாறு பேசிக் கொள்ளக் கூடாது. அமைதியாக இருக்க வேண்டும் * என்ற வார்த்தை அவைக் குறிப்பிலே இருக்கவேண்டாம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** என்னுடைய கேள்வியெல்லாம் தனிப்பட்டவர்கள் பேருந்துகளை ஓட்டுகின்ற மார்க்கங்களில் அரசாங்கப் பேருந்துகள் ஓடுகின்ற காரணத்தினால் போட்டிகள் ஏற்பட்டு அரசாங்கக் கட்டணம் குறைவாக இருக்கின்றதால் தனிப்பட்டவர்களும் அந்தக் கட்டணத்தைக் குறைத்துக் கொள்ளுகிறார்கள். அந்த முறையைப் போக்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே அதுபோன்று அரசாங்கப் பேருந்துகள் இல்லாத இடங்களில் தனியார்கள் அதிக கட்டணம் வைத்துக்கொண்டு லாபம் ஈட்டுவதாக பல முறைகள் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும் நம்மைப் பொறுத்தவரை இங்கே தனிப்பட்ட பேருந்துகள் தனியார் துறையிலே அப்படி அதிகமான கட்டணம் வசூலித்தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க முடியும்; அதற்குச் சட்டத்திலே இடமிருக்கிறது. மேலும் நான் இங்கே சொல்லிய பதிலை வைத்துக்கொண்டு கட்டணத்தை உயர்த்திவிடுவார்கள் என்றும் சொல்கிறார்கள். அரசாங்கத்தினுடைய உத்தரவில்லாமல் கட்டணத்தை, உயர்த்த முடியாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே அவ்வாறு ஏற்படாது.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பிற மாநிலங்களுடன ஒப்பிட்டு நம்முடைய பஸ் கட்டணத்தை உயர்த்துவது என்ற அளவில் நாம் பார்க்காமல் மொத்தத்திலே இன்று 63 விழுக்காடு வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்கள் தமிழகத்தில் இருப்பதால் கட்டணத்தை உயர்த்துவது அவர்களுக்கு கஷ்டங்களை ஏற்படுத்துகிறது என்ற உணர்விலே இருந்து ஏற்கனவே மத்திய அரசு கடந்த ஐந்து ஆறு ஆண்டுகளில் பெட்ரோல், டீசல் மீது கலால் வரியும், வருமான வரியும், விற்பனை வரியும் உயர்த்திக் கொண்டே போவதைத் தடுக்க வேண்டுமென்று, இந்த மக்களின் சார்பிலே இந்த வரிகளை ரத்து செய்தாலே கட்டணத்தை உயர்த்தாமல் இருக்க முடியும் என்று ஒரு பொது கருத்து இருக்கிறதே, அதை இந்த மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்த்து, அதற்கேற்ப செய்யவேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. அங்கே அதிகமாக இருக்கிறது, நாங்கள் உயர்த்தினாலும் கூட, நிச்சயமாகச் சொல்கிறேன், அந்த அளவிற்கு வராது; அதைவிடக் குறைந்த அளவிற்குத்தான இருக்கும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எண்ணத்தை மத்திய அரசாங்கத்திற்குப் பிரதிபலிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறித் துணிகளுக்கு நவீன வடிவமைப்பு நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 610— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கைத்தறித் துணியில் உற்பத்தியைப் பெருக்க நவீன வடிவமைப்பு நிலையம் அமைக்கும் திட்டம் ஏன் இன்னும் செயல்படுத்தப்படாமல் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். என. இராசேந்திரன்; நவீன வடிவமைப்பு நிலையங்கள் மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீன வடிவமைப்புடன் தயாரிக்கப்படும் கைத்தறித் துணிகளின் டிசைன்கள் பார்ப்பதற்கு அழகாகவும்



தரமாகவும் இருக்கின்றன. ஆனால் விற்பனை ஆவதில்லை. தனியார்கள் தரம் குறைந்த துணிகளைக் கூட நல்ல டிசைன் போட்டு விற்கிறார்கள். திரைப்பட நடிகைகளின் பெயர்களை வைத்து கவர்ச்சிகரமாக விற்பனை செய்கிறார்கள். ஆகவே இப்படி கவர்ச்சிகரமாக பெயர் வைத்து விற்பனை அதிகப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயாரிக்கப்படுகின்ற துணிகளுக்கு கவர்ச்சிகரமான பெயர்கள் வைப்பதின் அடிப்படையிலே கடந்த தீபாவளியின் பொழுது 'சில்டான்', 'சில்கோல்ஸா' என்ற பெயர்கள் வைக்கப்பெற்று பிரமாண்டமான அளவு வரவேற்பை பெற்றிருக்கிறது. நவீன பெயர்களை வைத்திருப்பது மக்களை பெருமளவில் கவர்ந்திருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீன வடிவமைப்பு நிலையங்கள் மூலம் கைத்தறி துணியின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இப்போது கைத்தறித் துணிகள் அதிகமான அளவு தேக்கமாக இருக்கிறது. இந்த நிலையில் உற்பத்தியை பெருக்குவதால் நல்ல விலை போகுமா? வெளிநாடுகளில் நம் கைத்தறி துணிகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறதா? என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் கைத்தறி நெசவாளர்கள் தயாரிக்கின்ற தரமான துணிகளுக்கு வெளிநாடுகளில் மிக பிரம்மாண்டமான அளவில் வரவேற்பு இருக்கிறது. சமீபத்தில் வெளிநாடுகளுக்கு நான் போயிருந்தபோது கூட, அங்கு வியாபாரிகள் நம் துணிகளை அதிக அளவில் வாங்குவதற்கு உத்தரவாதம் கூறியிருக்கிறார்கள். ஜப்பான், ஹாங்காங், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் மிகவும் அதிக அளவு வரவேற்பு இருக்கிறது. ஜப்பான் நாட்டிலே, ஜப்பான் தாய்மார்கள் அணிகின்ற அந்த துணியை அங்குள்ள வியாபாரிகள் காஞ்சீபுரத்தில் தயாரித்து கொடுக்கின்ற அளவிற்கு அங்கு ஒரு துணி புரட்சியை உண்டு பண்ணுவதற்கு, ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக தமிழ்நாட்டிற்கு வந்து கலந்து பேச இருக்கிறார்கள், என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10—10]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: பேரவைத் தலைவர் அவர்களே, நவீன டிசைன் பொறுத்தமட்டில் நான்கு மாவட்டங்களில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்

கள் சொன்னார்கள். திருநெல்வேலி மாவட்டத்திலே ஒன்று அமைப்பதற்கு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? எப்போது அது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, 1981–82-ஆம் ஆண்டில் 3½ இலட்சம் ரூபாய் செலவில் நெல்லை மாவட்டத்தில் இடம் குறிப்பிடாமல் ஆரம்பிப்பதற்கான முடிவை அரசு எடுத்திருக்கிறது. இன்னமும் புதுரகத் துணிகளை உற்பத்தி செய்வதற்காக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இரண்டு வடிவமைப்பு நிலையங்களை ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த நவீன வடிவமைப்பு நிலையங்களிலே கொடுக்கிற வடிவமைப்புகளை நெசவாளர்கள் நெய்யமுடியாத துணிகளும் இருக்கின்றன. இந்த நிலையை மாற்ற நெசவாளர்களை கலந்துகொண்டு இந்தத் திட்டத்தைச் செயல்முறைப்படுத்த அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, நம்முடைய நெசவாளர்கள் அருமையான திறமைபெற்றவர்கள், எந்த நவீன டிசைனைக் கொடுத்தாலும் திறமையாக நெய்து கொடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, நவீன வடிவமைப்பு நிலையங்கள் பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அண்மையிலே வெளிநாடுகளுக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் சென்று வந்திருக்கிறார்கள். அவர்கள் நம்முடைய தமிழ்நாட்டிற்கு ஏதேனும் நவீனத் திட்டங்களைப் பரிசாகக் கொண்டு வந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்களைச் சந்தித்து, அங்கே இறக்குமதியாளர் சங்கம் இருக்கிறது, அங்கே சன்சைன் சிடியிலே ஒரு பிளாட்டையே வாடகைக்கு எடுத்து அவர்கள் நடத்திவருகிறார்கள். அங்கே இன்டர்நேஷனல் மெர்ச்சன்ட்ஸ் அனைவரும் வந்து கூடிப் பேசி ஒவ்வொரு நாட்டுப் பொருளையும் பார்த்து ஆர்டர்களைக் கொடுக்கிறார்கள். அந்த சன்சைன் சிடியில் நம்முடைய கைத்தறி துணிகளுக்காக ஷோகேஸ் வைப்பதற்கும் அவர்கள் விரும்புகிறார்கள். அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். ஜப்பான் நாட்டிலே எக்ஸ்போர்ட்டர்ஸ் அசோசியேஷன் துணைத் தலைவர் அவர்கள் அந்த நாட்டினுடைய



பிரதமரோடு நெருங்கிய பழக்கம் உள்ளவர்கள். அவர் டெக்னிக்கல் அசிஸ்டென்ஸ், நவீன இயந்திரங்களையும், புராஸஸிங், பிளீச்சிங், பிரின்டிங் போன்றவற்றிற்காக கேந்திரங்களை அமைத்துக் கொடுப்பதற்காக டெக்னிக்கல் அசிஸ்டென்ஸ் நமக்கு பிரியாகக் கொடுப்பதாகச் சொன்னார்கள். இன்னும் அதுபற்றிய விவரங்களை அறிக்கை மூலம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : கைத்தறி உற்பத்தி பெருகுவதற்காக நவீன வடிவமைப்பு நிலையங்களை அமைக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கைத்தறி துணிகள் ஏற்கெனவே தேக்கமடைந்து இருக்கின்றன, நல்ல டிசைன் துணிகளை விற்க முடியாது தேக்கம் ஏற்பட்டிருப்பதால் கைத்தறி தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். தேக்கமடைந்த துணிகளை உடனடியாகக் கொள்முதல் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பியோ அல்லது ஏலம் போட்டோ விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலமாக கைத்தறித்தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பரிசீலிக்கப்படும்.

சேலம் மாவட்டம் வெள்ளார் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 611—திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், வெள்ளார் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் மருத்துவமனை துவக்கப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழாது.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளார் கிராமத்திலே இரண்டாவது கால்நடை மருத்துவமனையை ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கை மேச்சேரி ஒன்றியத்தினுடைய ஆணையரிடமிருந்து வந்திருக்கிறதா? வந்திருந்தால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வெள்ளார் கிராமம் சேலம் மாவட்டம் மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது. மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்திலே மேச்சேரியில் ஒரு கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது. மேச்சேரியிலிருந்து வெள்ளார் கிராமம் 8 கிலோ மீட்டர் தூரத்தில்தான் உள்ளது. ஆகவே, மேலும், ஒரு மருந்தகம் ஏற்பட்டால் அது அந்த ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டாவது கால்நடை மருந்தகம் ஆகும். மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், வெள்ளார் கிராமத்தில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த வேண்டுமென்று மட்டுமே தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. ஆனால், இரண்டாவது கால்நடை மருந்தகமாக ஏற்படுத்தக்கோரும் கால்நடை மருந்தகத்திற்காகும் செலவினத்தில் 50 சதவீதம் பங்குத் தொகை கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்டத் தேவையான நிலம் மற்றும் நிரந்தரக் கட்டிடம் கட்டி முடிக்கும் வரையில் வாடகையில்லாத கட்டிடம் ஒதுக்குவது சம்பந்தமான தீர்மானம் ஏதும் நிறைவேற்றப்படவில்லை. மேற்கூறிய தீர்மானங்களைப் பெற கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். அவரிடமிருந்து செயற்குறிப்பு முழு வடிவில் அரசுக்கு வந்தவுடன் வெள்ளாரில் கால்நடை மருந்தகம் ஆரம்பிப்பது சம்பந்தமாகப் பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## தகவல் கோரல்

(அ) அரசுத் துறைகளில் பெயர்ப்பலகைகள் தமிழில் இருத்தல்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, பக்கத்திலிருக்கின்ற நம்முடைய புதிய பில்டிங்கிலே ஒவ்வொரு துறைக்கும் செயலாளர்கள் இருக்கிறார்கள். ஆனால், பெயர்ப் பலகை பூராவும் ஆங்கிலத்திலே இருக்கிறது. எனவே, ஆங்கிலம் தெரியாதவர்கள் எந்த மாடிக்குப் போவது என்று தெரியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ஒவ்வொரு இடத்திலும் தமிழிலே எழுதி வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை அரசு கவனத்தில் கொள்ளலாம்.



ஆ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் முதலமைச்சருக்கு எதிராக டேப் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைப் பிரச்சினை என்னவாயிற்று ? அதில் பிரைமாபேஸி கேஸ் இருக்கிறபொழுது அதை எடுத்துக் கொள்வதுதான் நியாயம். அதை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதற்கு என்ன காரணம் ? கொடுத்து ஒரு வார காலம் ஆயிற்று. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள் ; நானும் கொடுத்திருக்கிறேன். என்னை மட்டும் அவசரம் அவசரமாக உடனே உரிமைக் குழுவிற்கு அனுப்பினார்களே. எனவே, அதையும் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் சம்பந்தமாக.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திடீர், திடீரென்று கேட்டால் எப்படி பதில் சொல்வது ? என் அறைக்கு வந்து சேருங்கள்.

3. உரிமைப் பிரச்சினை,

வானொலியில் பேரவை நடவடிக்கை தவறாக அறிவிக்கப் பெற்றது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவை உரிமைப் பிரச்னை. 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாள் அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு ஜி. சொக்கலிங்கம் அவர்கள் "வானொலி" மீது ஒரு ஒழுங்குப் பிரச்சனையைப் பேரவையில் எழுப்பினார். 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் அன்று தாம் விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ளாத போது அன்று மாலை "சட்ட மன்றத்தில் இன்று" என்ற தலைப்பில் வானொலியில் அவர் தம் உரையைப் படித்ததாக ஒலி பரப்பப்பட்டதாகக் கூறினார். அதை உரிமை மீறல் பிரச்சனையாக அறிவிப்புக் கொடுத்தால் எடுத்துப் பரிசீலிப்பதாக நான் தெரிவித்தேன். அன்றே மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கலிங்கம் அவர்கள் வானொலி மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்பைக் கொடுத்தார். இதுகுறித்து வானொலி இயக்குநருக்கு விளக்கம் கேட்டு எழுதப்பட்டது. பேரவையில் இப் பிரச்சனை எழுப்பப்பட்டு விட்டதால் உரிமை மீறலாகப் பேரவையில் எடுக்குமுன் வானொலி இயக்குநரின் விளக்கத்தைப் பெற, இது குறித்து அவருக்கு எழுதப்பட்டது.

வானொலியிலிருந்து வந்துள்ள விளக்கத்தில் திரு. வெங்கடேசன் என்பதற்குப் பதிலாக திரு. சொக்கலிங்கம் என்று நிருபர் தவறாகக் குறிப்பிட்டார் என்றும், மேலும், 1981 ஆம்

[பேரவைத் தலைவர்] [1981 ஏப்ரல் 2

ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் அன்று மாலையே திரு. வெங்கடேசன் எம். எல். ஏ. அவர்கள் இது குறித்து வானொலி நிலையத்தாரின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது இந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டது என்றும், மறுநாள் காலை 6-50 மணி செய்தி அறிவிப்பில் திருத்த அறிக்கை அளிக்கப்பட்டது என்றும், தவிர 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாள் அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கலிங்கம் அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சனையும், அதற்குப் பேரவைத் தலைவரின் தீர்ப்பும் ஒலிபரப்பப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் அவர்கள் கடிதத்தில் பின்வருமாறும் கூறப்பட்டுள்ளது:—

"As the Hon. Speaker is aware that such mistakes are likely to occur in AIR News Services as in any other News Organisation".

பேரவை நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை, தவறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

பேரவை நிகழ்ச்சிகளை வெளியிடுவதில் தவறுகள் நேருமானால் அவை உரிமை மீறல் பிரச்சனை எழுப்பப்படலாம் என்பதால் இம்மாதிரியான தவறுகள் நேரலாம் என்று சமாதானம் கூறுவது சரியல்ல. தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்வதுடன், அவ்வாறு தவறுகள் நேருமிடத்து அத் தவறுகளுக்குத் திருத்தம் கொடுப்பதுடன், நேர்ந்துவிட்ட தவறுகளுக்கு வருத்தம் தெரிவிப்பதும் மரபாகும். எனவே இம்மரபை வானொலி பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

தற்போது நேர்ந்த தவறுகள் திருத்தப்பட்டபடியாலும் மேலும் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்வதாக வானொலி நிலையத்தார் தெரிவித்துள்ளதாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு சொக்கலிங்கம் அவர்கள் அறிவிப்புக் கொடுத்துள்ள பிரச்சனையை வலியுறுத்தாமல் இத்துடன் விட்டுவிடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்,

### திருச்சி மாவட்டத்தில் நிலவரிக்காக ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப் பெறுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் அன்பில் தர்மலிங்கம், ரா. உமாநாத், இரா. கருப்பையா ஆகியோர் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாள் சனிக்கிழமை அன்று திருச்சி மாவட்டம் குளித்தலை வட்டம்,



1981 ஏப்ரல் 2] [பேரவைத் தலைவர்]

நங்கவரம் கிராமத்தைச் சேர்ந்த நச்சலூருக்கு, கரூர் கோட்டாட்சியாளர், குளித்தலை வருவாய்த் துறை அதிகாரிகள் மணப்பாறை டி. எஸ். பி. தலைமையில் நிலவரிக்காக ஜப்தி நடவடிக்கை எடுத்ததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து பேரவையில் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைத் குறித்து, சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாள் சனிக்கிழமை அன்று குளித்தலை வட்டம், நங்கவரத்தைச் சேர்ந்த நச்சலூர் என்ற கிராமத்திற்கு அதிகாரிகள் ஏறத்தாழ 150 பேர் காவலரோடு, புடைசூழ சிறு விவசாயிகளுடைய வரி பாக்கிக்காக கூட்டுறவு வரி அல்ல, கிஸ்தி பாக்கி செலுத்தவில்லையென்பதற்காக, அங்கேசென்று அங்கேயிருக்கிற ஒரு சிலரின் பெயர் மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்; சிறு விவசாயி திரு. பாஸ்கரன் என்பவர்—அவருடைய வீட்டிலிருந்து ஸ்டீல் கட்டில் ஃபான் இரண்டையும் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இலட்சுமண ரெட்டியார் என்ற சிறு விவசாயி—5 ஏக்கருக்கு உட்பட்டவர்—அவர் வீட்டிலிருந்து பித்தளை பானை 3, பித்தளை குடம் 2, போவணி 1, ஆகியவற்றை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அதைப் போலவே ஒருசிலர் வீட்டிலிருந்து காசிப் பானை, நாற்காலி, போவணி இவைகள் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இன்னும் சிலர் வீட்டிலிருந்து உழவு மாடுகள் ஜோடி 2, பித்தளை பாத்திரம், வீட்டுக் கதவுகள் 2 பிடுங்கப்பட்டிருக்கிறது போலாச்சி ரெட்டியார் என்பவருடைய வீட்டிலிருந்தது.

அது மாத்திரமல்ல, இந்த வறட்சி காலத்தில் அங்கே உழுவதற்கென்று வைக்கப்பட்டிருந்த டிராக்டர்களிலிருந்த டிரெய்லர்கள் கூட எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. அதைப் போல, ஏறத்தாழ 10 குடும்பங்களிடமிருந்து எடுத்துச் சென்றது மாத்திரமல்ல, அதற்கு மேலும் பயமுறுத்தி வருகிறார்கள். இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருவதாக குளித்தலையிலிருந்து வந்தவர்கள் இப்பொழுதுகூட எனக்குத் தகவல் தெரிவித்து இருக்கிறார்கள். மேலும் நாளை முதல் இன்னும் தீவிரமாக நடவடிக்கை எடுத்து, அத்தகைய நடவடிக்கைகளைத் துரிதமாக எடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். எங்களுக்கு அச்சமாக இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள், இதுவரையிலே உழவு மாடுகளை ஜப்தி செய்ததாக சரித்திரத்திலே கூட இல்லை. உழவு மாடுகளை மாத்திரம் அல்ல, வீட்டிலேயேருந்த போவாணி, குடம், பானை, குடி தண்ணீர் பானைகளைத் கூடக் கொண்டு சென்றிருப்பது இந்த

வறட்சிக் காலத்திலே சரிதானா என்பதைத் தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். வறட்சி ஒரு பக்கம் இருக்கிறது; அதே சமயத்தில் அங்கே வரி கொடுக்க முடியாத சூழ்நிலையும் இருக்கிறது. நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இப்பொழுது எந்தெந்த வகையிலே விவசாயிகளுக்காக வரிகளைத் தள்ளிக் கொண்டுவருகிறோம் என்று நிதிநிலை அறிக்கையிலும் சொல்லி இருக்கிறார்கள். கவர்னர் அறிக்கையிலும் சொல்லப்பட்டு இருக்கிறது. அதனாலே விவசாயிகள் இந்தவட்டியில்லாமல் கூடக்கடன் கட்டலாம் என்ற காரணத்தால் கூட அவர்கள் கட்டாமல் இருந்திருக்கலாம். ஆனால் உடனடியாக திடீரென்று அறிவிப்பு கூட இல்லாது 150 காவல் துறையினர் மற்ற ரெவின்யூ அதிகாரிகளோடு சென்று அங்கு எடுத்துச்சென்றது மாத்திரம் அல்ல இன்னும் அச்சுறுத்துகின்ற வகையிலே நடந்துகொண்டிருக்கிறாகள். அதற்கு உடனடியாக தீர்வு காண்பதற்காக, இந்தச் சபையினுடைய இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கஃளே, சென்ற 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2 ஆம் நாள் அன்று பகல் 12 மணி அளவில், திருச்சி மாவட்டம் குளித்தலை வட்டம் நங்கவரம் கிராமத்தைச் சேர்ந்த நச்சலூரில் கரூர் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி தலைமையில், டி. எஸ். பி. அவர்கள் துணையோடு மற்றுங் 150க்கும் மேற்பட்ட காவல் துறையினரை அழைத்துச் சென்று அதிகாரிகள் புடைசூழ, அந்தக் கிராமத்தில் இருக்கின்ற விவசாயிகள், அவர்கள் வீட்டிலே இல்லாத நேரத்தில் அவர்களுடைய வீடுகளில் புகுந்து, கிடைத்த சாமான்களை எடுத்துச் செல்லக்கூடிய முறையில் எடுத்து வந்திருக்கிறார்கள். இம்மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்பதை ஏற்கனவே தமிழக அரசு வறட்சியின் காரணமாக எந்த நேரத்திலும் ஜப்தி நடவடிக்கைகள் எடுக்க மாட்டோம் என்கின்ற முறையிலே அறிவித்து இருக்கின்றது. அது மட்டுமல்ல விவசாயிகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக உச்ச மட்டக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்த உச்சமட்டக்குழுவினுடைய முன்னிலையிலே இந்தப் பிரச்சினை இருந்து வருகின்றது. இதற்கிடையில் அதிகாரிகள் ஜப்தி செய்யப்போகிறோம் என்ற அறிவிப்பு கூட கிடையாது. வீட்டிலே இருக்கிற முன்புறக் கதவுகளை எடுத்து வந்திருக்கிறார்கள். உழுவதற்காக இருக்கிற மாடுகளைப் பிடித்து வந்திருக்கிறார்கள். அந்த வண்டியோடு பிடித்து அதை போலீஸ் லாரியோடு இணைத்து அந்த லாரி வேகத்திலேயே அந்த வண்டியை இழுத்து வரக்கூடிய அளவுக்குச் செய்திருக்கிறார்கள்.



எடுத்து வந்த சாமான்களுக்கு முறையாக ஜாபிதா தயார் செய்து அந்த வீட்டிலே இருந்தவர்களிடத்திலே அல்லது அந்த வீட்டிலேயோ ஒட்டவில்ல. அந்த ஜாபிதா நேற்றைக்கு முன்தினம் ஜப்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு, நாங்கள் இன்னின்ன பொருள்களை ஜப்தி செய்திருக்கிறோம் என்று கதவுகளிலே ஒட்டுவதற்காக வந்தார்கள். 28 ஆம் நாள் எடுத்துச் சென்ற பொருட்களுக்கு 31 ஆம் நாள் ஒட்டியிருக்கின்ற வகையிலே அதிகாரிகள் அங்கே சென்றார்கள். இம்மாதிரியான முறையிலே இந்தப் போலீசை வைத்துக் கொண்டு மக்களுக்கு விவசாயிகளுக்கு அச்சத்தை உருவாக்கி, அரசு இன்றையதினம் அறிவித்திருக்கின்ற கொள்கைகளுக்கு எதிராக செயல்படக்கூடிய அளவுக்கு இன்றைய தினம் இந்த அதிகாரிகள் நடந்திருக்கிறார்கள். அவர்களுடைய நடவடிக்கைள் அத்துமீறியதாக, சட்டத்திற்கு விரோதமாக இருக்கிறது என்பதை நான் குறிப்பிடவிரும்புகிறேன். இது அந்தக் கிராமத்திலே மட்டுமல்ல. அதைஒட்டியிருக்கக்கூடிய பல கிராமங்களிலும் அன்றையதினம் போலீசார் புடைசூழ வந்திருக்கிறார்கள் இம்மாதிரி விவசாயிகள் மத்தியிலே ஏற்படுத்தி இருக்கிற இந்த நிலைமையின் காரணமாக இந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களும், அந்தத் கிராமத்திலேயே இருக்க முடியாது என்ற நிலைமை கூட ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதன் காரணமாக மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற அச்ச உணர்வை போக்குவதற்காக அந்த மக்களுக்கு இந்த அதிகாரிகளின் அத்துமீறிய நடவடிக்கைகளின் காரணமாக ஏற்பட்டிருக்கக் கூடிய நடவடிக்கைகளில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காக இந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதோடு இதுசம்பந்தமாக ஒரு முழுமையான விசாரணை நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இந்த விவகாரம் பற்றி முழுமையாக விசாரித்து முடிவு செய்வதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த சம்பவம் (high-handedness of the worst type) போல் ஆகும். மற்றவர்கள் எல்லாம் சொன்னார்கள். நான் அதை ரிப்பீட் பண்ண விரும்பவில்லை. பித்தளைப் பானைகள் உழவு மாடுகள் எடுத்துப்போன போது அதே இடத்திலே வீட்டுக் கதவை ஏன்பிடுங்கிச்சென்றார்கள். They have taken so many things வீட்டுக் கதவைப் பிடுங்கினார்கள் என்று சொன்னால் அது ஒரு டிஸ்டிரக்டிவ் ஆட்டிடுட், அல்லவா ? அது ஒரு வஞ்சம் தீர்க்கின்ற ஆட்டிடுட் அல்லவா ? வெறும் கலக்ஷன் ஆட்டிடுட்டா ? மிலிட்டரி ஆபரேஷன் நடந்த மாதிரி நடத்தப்பட்டிருக்கிறது. சரண்டர் ஆன அன்னிய நாட்டு கைதிகளைக் நடத்துகிற மாதிரி

கூட இன்றைக்கு நம்முடைய சொந்த ஜனங்களை நடத்தாமல் நடத்தி இருக்கிறார்கள். அங்கே உள்ள மாவட்ட கலக்டருக்கு தெரிந்து என்ற நான் சொல்லமாட்டேன். அவர் உத்தரவின் பேரில் தான் இது நடந்துள்ளது என்பது எனக்குக் கிடைத்தத் தகவல். ஏழை விவசாயிகள், விவசாயத் தெரிழிலாளிகள் மீது திருச்சி மாவட்ட கலக்டருக்கு சமீபத்திலே ஒரு விரோத மனப்பான்மை Prejudiced attitude ஏற்பட்டுள்ளதாக என்னுடைய அனுபவத்திலே நான் பார்த்து வருகிறேன். அந்த மாதுரி பல நிகழ்ச்சிகள் அந்த மாவட்டத்தில் நடந்திருக்கின்ற சூழ்நிலை, எந்த அளவுக்கு அது சட்ட விரோதமானது என்பதை மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா கூறினார். அவர் கூறுகின்றபோது ஜப்திக்குப் போன உடனே அந்த லிஸ்ட் போடவேண்டும். 28-ம் தேதியே போட்டிருக்கவேண்டும். ஆனால் அப்படிப் போட வில்லை. ஆனால் 31-ந் தேதிதான் அங்கே ஒட்டுகிறார்கள். அப்படி 28-ம் தேதி எடுத்துச் சென்ற பொருள்களுக்குண்டான ஜாபிதர்வை 31-ந் தேதி ஒட்டுகிறார்கள் என்றால் Is it not a fradulent ஏற்பாடு ] அது பிராடு பண்ணுகிற் வேலை தானே. 28-ந் தேதி எடுத்துச் சென்ற் பொருள்கள் லிஸ்ட்டை 31-ந் தேதி ஒட்டினால் It is a fradulent matter அதிகாரிகளே இப்படிச் செய்தால் அப்புறம் என்ன ஆவது? ஆகவேதான் கலெக்டர் இதிலே சம்பந்தப்பட்டு இருக்கிற விஷயமாக இது இருப்பதால், அந்த வட்டாரம் பூரா பதட்டமாக இருப்பதனால் பத்திரிகை களிலேயும் செய்திகள் வந்துளளதாலும், மாநிலத்திலே வேறொரு அயன்ஸ் ஆரம்பிக்கிறது என்ற அச்சம் ஜனங்களுக்கு எற்பட்டிருப் பதனாலே மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப் பற்றி விவாதிக்க வேண்டும் இந்த அவையில் என்று சொல்லியிருக்கிறார் கள். இங்கே முதலிலே குறிப்பிட்ட மாண்புமிகு உறுப்பினர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் பேசுகிறபோது சிறு விவசாயிகள் என்று குறிப்பிட்டார்கள். அதற்குப் பிற்கு மாண்புமிகு உறுப் பினர் உமாநாத் அவர்கள் சொல்கிறபோதும் சிறு விவசாயிகள் என்று குறிப்பிட்டதோடு மட்டுமல்லாமல், ஏழை விவசாயிகள் என்றும், அந்த விவசாய தொழிலாளர்களிடத்தில் மாவட்ட



ஆட்சித் தலைவருக்கு விரோதம் என்றும் குறிப்பிட்டார்கள். திரு. கருப்பையா அவர்கள் சொல்கிறபோது கூட சிறு விவ சாயிகள் என்று இங்கே குறிப்பிட்டார்கள். நான் உங்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: அவர்கள் சிறு விவசாயிகள் என்று நான் சொல்லவில்லை. ஜெனரல்லாக அப்படி ஒரு ஆட்டிடியூட் அங்கே டெவலெப் ஆகியிருக்கிறது என்று நான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நாடு பாதி, நங்கவரம் காதி பன்று சொல்வார்கள். நாடு பாதி நங்கவரம் பாதி என்று சொல்வதற்குக் காரணம், நங்கவரத்தில் இருக்கும் நிலங்களிலிருந்து கிடைக்கும் வருவாய், நாடு பூராவிலும் இருந்து கிடைக்கும் வருவாய் அளவிற்குச் சமம் என்று சொன் னார்கள். அதையெல்லாம் அறிந்து தான் முன்பு நான் சார்ந்து இருந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் முன்பு ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். நங்கவரத்தில் 4 ஏக்கர் 5 ஏக்கர் நிலம் வைத்து இருப்பது மற்ற இடங்களில் பல ஏக்கர் நிலங்கள் வைத்து இருப்பதற்கு ஒப்பாகும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

இந்த நேரத்தில் நான் ஒன்றை இங்கே தெரிவித்துக் கொள் வேன். சிறு விவசாயிகள் மீது கடுமையான நடவடிக்கை எது வும் எடுக்கப்படவில்லை. அது மட்டுமல்ல, இனி மேலும் எடுக்கப்படமாட்டாது என்பதை நான் உறுதி அளிக்கிறேன். சிறு விவசாயிகள் மீது மட்டுமல்ல. நடுத்தர விவசாயிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எதிர் காலத்திலும் கடுமை யான நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்று உறுதி அளிக் கிறேன்.

ஆனால் இந்தக் குறிப்பிட்ட பகுதியில் நன்றாகத் தண்ணீர் பாய்ந்து, நன்றாக விளைந்து இருக்கிறது. அதையெல்லாம் பார்க்கமாட்டாமல் தான் மாண்புமிகு உறுப்பினர் அன்பில் அவர்களும்—அப்போது மாவட்ட கட்சித் தலைவராக இருந்தார் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் சேர்ந்து அங்கே ஒரு போராட்டம் நடத்தினார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆனால் அன்று போராட்டம் நடத்தியவர்கள் இன்றைக்கு இங்கே தீர்மானம் கொண்டு வந்து இருக்கிறார்கள். அங்கே இருப்பவர்களுக்கு வருவாய் அதிகம் வந்து இருந்தபோதிலும், அதிக வருவாய் பெற்றவர்கள் நியாயமாகத் தரவேண்டிய பணத்தை அரசுக்குத் தரவில்லை என்பதைத் தான் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

டாக்டர் மு கருணாநிதி: தலைவர் அவர்களே, "பாயின்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன்" நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதோ நங்கவரம் பகுதியில் ஏற்பட்ட வளத்தையும் குளித்தலையில் ஏற்பட்ட வளத்தையும் பார்க்க மாட்டாமல் எதிர்க் கட்சித் தலைவர் அங்கே போராட்டம் நடத்தினார்கள் என்று குறிப்பிட்டார்கள். அந்தப் போராட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் கலந்து கொண்டதை மறந்து இருக்கமாட்டார்கள் என்று எண்ணுகிறேன். அப்போது நடந்த போராட்டம் 'கையேறு வாரம் மாட்டேறு வாரம்' என்று அங்கேயுள்ள உழவர்கள் சார்பில் அந்த நங்கவரம் ஜமீனை எதிர்த்து நடந்த போராட்டமாகும். இப்போது எடுக்கப்பட்ட ஜப்தி நடவடிக்கை அந்த நங்கவரம் பண்ணை மீது அல்ல. நடைபெற்று இருப்பது அங்கேயுள்ள சாதாரண விவசாயிகளின் மேல் என்பதுதான் இப்போதைய பிரச்னை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நான் சொல்ல விரும்புவது, நங்கவரம் என்கிறபோது அது எப்படிப்பட்ட வளமான பகுதி என்பதைக் குறிப்பிடுவதற்காக அதை எடுத்துக் காண்பித்தேனே தவிர, எத்தனையோ இடங்களில் பெரும் புள்ளிகள் இருக்கிறபோது இந்த நங்கவரத்தை ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காக சொன்னேனே தவிர, அங்கே இருக்கும் வருவாய் எந்த அளவிற்கு அதிகம் என்பதைச் சுட்டிக்காட்டி அதன் காரணமாக அது தெரிந்தெடுக்கப்பட்டது என்பதற்காகச் சொன்னேனே தவிர, அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

அங்கே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஏறக்குறைய 7½ ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் அதிகமாக உள்ளவர்களுக்கு மட்டுமே எடுக்கப்பட்டது.

திரு. இரா. கருப்பையா: 2½ ஏக்கருக்குள்ளே உள்ளவர்கள் மீதும் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அவர்களுக்கு முன் கூட்டியே அறிவிப்புகள் எல்லாம் கொடுக்கப்பட்டு, நீங்கள் இவ்வளவு பணம் செலுத்த வேண்டும்; இவ்வளவு நாளைக்குள் செலுத்தவேண்டும் என்று அறிவிப்பு கொடுக்கப்பட்டு, அந்த காலம் முடிந்த பிறகு அங்கே ஜப்தி நடவடிக்கை எடுக்கிறார்கள். ஜப்தி நடவடிக்கை எடுக்கும்போது அதிகமாக பணம் செலுத்த வேண்டியவர்கள் மீது மட்டும், பெரும் விவசாயிகள் மீது மட்டும் தான் ஜப்தி நடவடிக்கை எடுக்கிறார்கள். இங்கேயும் அப்படித் தான் ஜப்தி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



அது மட்டுமல்ல. காவல் துறையினரை அழைத்துச் சென்றதாக சொன்னார்கள். 1979-ஆம் ஆண்டு அங்கே வருவாய்த் துறை அதிகாரிகள் அந்தக் கிராமத்தில் தங்களுடைய கடமைகளைச் செய்ய சென்றபோது கடமைகளைச் செய்ய விடாமல் தடுத்தது மட்டுமல்லாமல் ஒரு தாசில்தார் 'கேரோ' செய்யப்பட்டிருக்கிறார். ஆகவே, அப்படிப்பட்ட சம்பவங்கள் நிகழாமல் இருக்க, அசம்பாவிதங்கள் ஏற்படாமல் இருக்க காவல்துறையினர் அழைத்துச் செல்லப்பட்டு, ஓரிடத்தில் நிறுத்தப்பட்டார்களே தவிர, யாரையும் அச்சுறுத்துவதற்காகவோ அல்லது பயமுறுத்துவதற்காகவோ அல்லது ஏதாவது கலவரம் ஏற்பட்டால் அமைதியை ஏற்படுத்துவதற்காகத்தான் அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. சிறு, சிறு விவசாயிகளிடத்திலே வசூல் செய்தார்கள் என்று சொன்னார்கள். அப்படி அல்ல. யார், யாரிடம் வசூல் செய்தார்கள் என்றால்—வாசு ரெட்டியார், அவர் கொடுக்க வேண்டியது 480 ரூபாய். சிறிய விவசாயியாக இருந்தால் தண்ணீர் தீர்வைப் பணம் இவ்வளவு கொடுக்க வேண்டியிருக்காது என்பது உங்களுக்குத் தெரியும். அதுபோல வயிரவ ரெட்டியார், 19 ரூபாய்; ராஜு 1998 ரூபாய்; குள்ளம்மாள் 1,087 ரூபாய்; நடராஜன்-1,6?9 ரூபாய்; ராமசாமி-1,739 ரூபாய்; வெங்கடாசலம்-1,192 ரூபாய்; ஜயசாமி- 1,4 7 ரூபாய், இப்படி நீண்ட பட்டியலைப் படித்துக் கொண்டு போகலாம். 4 ரூபாய் 500 ரூபாய், 2, 00 ரூபாய் என்று அவர்கள் தண்ணீர் தீர்வை செலுத்த வேண்டியதிருக்கிறது. அவர்கள் எல்லாம் சிறிய விவசாயிகள், அல்லது நடுத்தர விவசாயிகள் அல்ல எல்லோரும் பெரிய விவசாயிகள்; வசதி படைத்தவர்கள். வசதி படைத்தவர்கள் மீதுதான் இம்முறைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

நான் முதலிலே சொன்ன மாதிரி சிறிய விவசாயிகள்; நடுத்தர விவசாயிகள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்காது என்று உறுதியளிக்கிறேன். இரண்டாவதாக வறட்சிப் பகுதிகளிலே வரி வசூல் தளர்த்தப்பட்டிருக்கிறது; தளர்த்தப்பட்டு இந்த அரசு அதை அமுல்படுத்தும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே குறிப்பிடும்போது சிறு விவசாயிகள் மீது அத்துமீறி நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். சிறு விவசாயிகள் மீது அத்து மீறி நடவடிக்கை எடுக்கப்பட்டது உண்மையானால் அது சம்பந்தமாக அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும். அது மட்டுமல்ல; அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிகாரிகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. மக்களுக்காகத்தான் அதிகாரிகளும், இந்த அரசும் இருக்கிறார்கள். ஆகவே, அத்து மீறி நடவடிக்கை எடுத்திருந்தால் அந்த அதிகாரிகளை காப்பாற்ற வேண்டுமென்று நான் சொல்லமாட்டேன். எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தகவல்—சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் விடப்பட்டிருக்கிறார்கள்; பெரிய விவசாயிகள் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது.

அந்தப் பகுதியில் அமைதி இல்லை என்று சொன்னார்கள். அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் எந்தவிதமான அசம்பாவிதமும் இல்லை. அமைதியின்மையும் இல்லை; அமைதியாக இருக்கிறது என்ற காரணத்தால், சிறு விவசாயிகள் மீது நடவடிக்கை எடுத்திருந்தால் அரசு அதை கவனிக்கும் என்று நான் உறுதியளித்திருப்பதால், அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம்: தலைவரவர்களே. ஒரு விளக்கம் ஏதோ கொலையே நடந்திருக்கிறது என்று சொன்னார்கள்; நங்கவரம் போராட்டம் பற்றிச் சொன்னார்கள்; அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம்: நான் சொன்னது கொலை அல்ல; கெரோ.

(முற்பகல் 10—40)

திரு. அன்பில் தர்மலிங்கம்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், கொடுக்கப்பட்ட லிஸ்டிலே உள்ள சிறு விவசாயிகளை விட்டு விட்டார்களே, 5 ஏக்கருக்கு உட்பட்டவர்களை விட்டு விட்டார்களே, பானை சட்டியை எல்லாம் தூக்கிச் சென்றிருக்கிறார்கள் என்ற பிரச்சினையைக் கவனிக்காமல் விட்டு விட்டார்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு என்று சில மரபுகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.



8. அறிக்கை அளித்தல்

கல்வி அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1981-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 12-ஆம் நாள் அன்று, 1981-ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1981)-இன் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளிக்கையில் நான் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டேன்.

"அதற்குப் பிறகு யு.ஜி.ஸி. கிராண்ட் 5 இலட்சம் ரூபாய்க்குப் பட்டப் படிப்பிற்காக தந்திருந்தார்கள். அப்படி தரப்பெற்ற அந்தப் பணத்தை இந்தக் கல்லூரி நிர்வாகம் சரியான முறையில் எதற்காக தரப் பெற்றதோ அதற்குப் பயன்படுத்தவில்லை"

அதைக் கீழ்க்கண்டவாறு திருத்திக் கொள்ள வேண்டும்.—

"யு.ஜி.ஸி-யில் இருந்து கிராண்ட் 5 இலட்சம் ரூபாய் தருவதற்காக தகுதி பெற்ற நிலை இருந்தும் அந்த 5 இலட்சம் ரூபாயை பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்து பெறுவதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை."

6. கவன ஈர்ப்புகள்.

அ. திருவொற்றியூர்-பொன்னேரி பகுதி மீனவர்களிடையே தொடர்ந்து மோதல் ஏற்பட்டு வருவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவொற்றியூர், பொன்னேரி பகுதி மீனவர்களிடையே 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ஆம் நாள் முதல் தொடர்ந்து நடக்கும் மோதல் குறித்து திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், இரா. தாமரைக்கனி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, திருவொற்றியூர், பொன்னேரி பகுதி மீனவர்களிடையே 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ஆம் நாள் முதல் தொடர்ந்து நடக்கும் மோதல் குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

## கவன ஈர்ப்புகள்

[1981 ஏப்ரல் 2

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்,

**அறிக்கை.**

1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாள் அன்று திருச்சின்னான்குப்பத்தைச் சேர்ந்த கட்டுமர மீனவர்கள் எண்ணூர் நதி முகத்துவாரத்தில் இருந்து வடக்கே உள்ள காட்டுப் பள்ளி எனும் பகுதியில் விசைப்படகுகளின் உதவியுடன் எட வலையினைப் பயன்படுத்தி மீன்களை பிடித்துக்கொண்டிருந் தனர். எடவலை மீன்பிடிப்பு என்பது பைபோல் அமைந்துள்ள மீன் வலையினைக் கொண்டு கடல்நீர் மேற்பரப்பில் கூட்டமாக உள்ள மீன்களை கட்டுமர மீனவர்கள் பிடிப்பது ஆகும். ஆனால் இம்மீன் பிடிபபதற்காக எடவலையினை கரையில் இருந்து மீன் பிடிக்கும் இடத்திற்கும், மீன்பிடித்த பின்னர் கரைக்கும் இழுத்துவர விசைப்படகுகள் பயன்படுத்தப்பட்டன. இதன் காரணமாக விசைப்படகுகளுக்கு தடை செய்யப் பட்ட தூரமான கரையில் இருந்து மூன்று மைல்கள் தூரத்திற் குள், அவைகள் செல்ல அதனால் இதர வகையான வலைகள் சேதமுற்றதாகத் தெரிகிறது. ஆகவே திருச்சின்னான்குப்பத்தை சேர்ந்த கட்டுமர மீனவர்கள் மீன் பிடிப்பதற்காக விசைப் படகினைப் பயன்படுத்துவதை நெட்டுக்குப்பம், தாழங்குப்பம் சுத்தி ராக்கம், காசிகோயில் குப்பம் பகுதிகளைச் சார்ந்த மீனவர் வர்கள் ஆட்சேபிக்க, திருச்சின்னான்குப்பத்தைச் சேர்ந்த மீனவர் களுக்கும், மேற்கூறிய இதர குப்பங்களைச் சேர்ந்த மீனவர் களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. காவல் துறையினர் தலையிட்டு நிலைமையினைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். அன்று பகல் பொழுதில் தாழங்குப்பத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவர் தாக்கப்பட்டதாக பரவிய வதந்தியை நம்பி நெட்டுக் குப்பம். தாழங்குப்பம் மற்றும் இதர குப்பங்களைச் சார்ந்த மீனவர்கள் அனைவரும் எண்ணூர் அருகே கூட்டமாகக் கூடி திருச்சின்னான்குப்பத்தைச் சார்ந்த மீனவர்களை தாக்கத் துவங் கினர். காவலர்கள் தலையிட்டு நிலைமையினைக் கட்டுப்படுத் தினர். மீண்டும் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19 ஆம் நாள் அன்று 2 மணியளவில் திருச்சின்னான்குப்பத்தைச் சேர்ந்த மீன வர்கள் சென்னை நகரத்தை ஒட்டியுள்ள நல்ல தண்ணீர் ஓடை யினை சேர்ந்த மீனவர்களை தாக்கியதில் சிலர் காயமுற்றனர். காவலர் விரைந்து சென்று அமைதியை நிலை நாட்டினர்.

மேலே கூறப்பட்டுள்ள கலவரங்களை குறித்து காவலரால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இக்கலவரங்களில் காயமுற்றோர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். காவலர் ரோந்து நீடிக்கப்பட்டுள்ளது. கலவரப் பகுதியில்



தடை சட்டம் ஒரு வாரத்திற்கு அமுலில் இருந்து வரும். குப்பத் தின் முக்கிய நபர்களைக் கொண்ட அமைதி குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20 ஆம் நாள் அன்று 3 மணிக்கு மீனள நூலக அரங்கில் அமைதிக்குழுவின் கூட்டம் நடைபெற்றது. இதில் வருவாய்த்துறை அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள், மீன்துறை அலுவலர்கள் மற்றும் பல்வேறு மீனவ குப்பங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். கலவரங்களுக்கான காரணங்களை ஆய்ந்தபின்னர் அமைதி காக்க ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. அதன்படி கட்டுமர மீன் பிடிப்பிற்காக எடவலை, வாலாவலை போன்றவைகளை விசைப்படகினைக்கொண்டு இழுத்துச் செல்லக்கூடாது. அவ் வப்போது கூட்டப்படவிருக்கின்ற அமைதிக்குழு கூட்டத்தில் குறைகளைப் பேசி தீர்த்துக்கொள்ளலாமே தவிர நேரடி நட வடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவரவர்களே, திரிசனாங்குப்பம் மற்றும் அதற்கடுத்து அமைந்த குப்பங்க ளான தாழங்குப்பம், திருவொற்றியூர் குப்பம், நொச்சிகுப்பம், காசிக்கோயில் குப்பம், இவை எல்லாம் திருவொற்றியூர் குப்பத் தைச் சேர்ந்தவை. இவர்கள் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாள் அன்று மீன் பிடிக்கச் சென்றபோது இவர்களுக்கும் பொன்னேரி குப்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டு இருக்கிறது.

ஆனால் பத்திரிகைகளில் கூட தவறான செய்திகள் வந்திருக் கின்றன. கட்டுமர மீனவர்களுக்கும், விசைப்படகுக்காரர் களுக்கும் தகராறு என்ற பிரச்சினை அல்ல இது. இது கட்டுமர மீனவர்களுக்கு மத்தியிலே ஏற்பட்டிருக்கின்ற தகராறு ஆகும். ஆனால் விசைப்படகு பற்றிய பிரச்சினை எப்படி வந்தது என்று நீங்கள் கேட்கலாம். விசைப்படகுக்காரர்கள் 3 மைலுக்கு அப்பால் சென்றுதான் மீன் பிடிக்க வேண்டும் என்று விதிகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விளக்கங்கள் எல்லாம் அமைச்சரவர்களுக்குத் தெரியும். ஆகவே சுருக்கமாகக் கேள்வி மட்டும் கேளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு என்றால் கேள்வி கேட்கலாம் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் கூட ஒரு முறை சொன்னார், பல வார்த்தை களிலும் கேள்வி கேட்கலாம், சில வார்த்தைகளிலும் கேட்கலாம். மாண்புமிகு உமாநாத் அவர்களுக்கு அப்படி அனுமதித்திருக் கிறீர்கள். அவருக்கு ஒரு நீதி, எங்களுக்கு ஒரு நீதியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உமாநாத் அவர்கள் அப்படியெல்லாம் நடந்துகொள்ளவில்லை.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, இப்போது இல்லை. முன்பு ஒரு முறை கால் அட்டென்ஷனில் உமாநாத் அவர்கள் பேசும்போது, திரு. சங்கரய்யா அவர்கள் கேட்கும் கேள்விகளை 10 வார்த்தைகளிலும் கேட்கலாம், 100 வார்த்தைகளிலும் கேட்கலாம். ஒத்தி வைப்புத் தீர்மானங்களில் தான் அமைச்சரின் அறிக்கைக்குப் பிறகு கேட்க முடியாது, என்று சொல்லியிருக்கிறார். அது பேரவை நடவடிக்கை குறிப்புகளிலும் இடம் பெற்றிருக்கிறது. குறுக்கிடுவதற்கு உங்களுக்கு அதிகாரம் உண்டு. வேண்டாம் என்று சொன்னால் கேள்வியே கேட்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையிலேயே என்னென்ன விவரங்கள் கொடுக்கப்பெறவில்லை என்றெல்லாம் நான் விளக்கித்தான் சொல்ல முடியும். அனுமதித்தால் மேற்கொண்டு பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்பதைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே. கடலிலிருந்து 3 மைல்கள் தள்ளி விசைப்படகுகள் மீன் பிடிக்க வேண்டும். கட்டுமரங்களை 12, அல்லது 15 மைல் தூரத்திற்கு. மீன் பிடிக்கும் பகுதிகளுக்கு அழைக்துச் செல்லவும் அந்த விசைப்படகுகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்த வேலைகள் செய்ய 4 மரங்கள் தேவை. அதேபோல் 16 அடி விஸ்தீரணமுள்ள வலைகள் பெரிய பெரிய வலைகள் உண்டு. 20 பேர்கள் சேர்த்து இழுத்து வேலை செய்யக்கூடிய வலைகள் அவை. அது போல் 17 செட்டுகள் இருக்கின்றன. அவைகள் அனைத்தும் நாசம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த நாச வலைகளைப்பற்றிய குறிப்பே இதில் இல்லை. அந்த நஷ்டத்திற்கு ஏதாவது ஈடுசெய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? அல்லது பரிசீலனையாவது செய்யப்படுகிறதா. அதைப்பற்றி எந்தக் குறிப்பும் இந்த அறிக்கையில் இல்லை. இப்படி அவைகள் நாசம் செய்யப்பட்டிருப்பதால், அவர்கள் தொழில் கருவி இல்லாமல் தொழில் செய்ய வகையறியாது மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி அரசு தீர ஆலோசனை செய்து நடவடிக்கை எடுக்குமா ? அடுத்து.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் கேள்விக்கு நிதியமைச்சர் பதில் சொல்லட்டும். பிறகு அடுத்த கேள்வியைக் கேட்கலாம்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாள் அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் குறித்து, துறையினர் கொடுத்திருக்கும் விவரங்களைத்தான் நான் தந்திருக்கிறேன். தரப்படாத விவரங்கள், வெளிவராத விவரங்கள், மாண்புமிகு உறுப்பினர்களிடத்தில் இருக்குமேயானால், அவற்றை என்னிடத்திலே அளிப்பார்களேயானால் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்ற சம்பவங்களுக்கு பரிகாரம் செய்யும் வகையில் அரசு அதைப்பற்றி ஆலோசிக்கும்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தகராறு நடைபெறுவதற்கு முன்னாலே, போலீசார்களின் முன்னாலே ஒரு பஞ்சாயத்து நடைபெற்றிருக்கிறது. சம்பந்தப்பட்ட ஒரு குரூப்பைச் சேர்ந்தவர்கள் தொழிலுக்குப் போகக்கூடாது என்று கண்டிஷன்கள் கூடப் போட்டிருக்கிறார்கள். அதற்கு அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே ஒரு டென்ஷன் நிலை இருந்திருக்கிறது. அப்படி ஒரு சூழ்நிலை இருக்கிறது என்று போலீசாருக்கு நன்றாகத் தெரியும். தெரிந்திருந்தும் அவர்கள் அலர்ட்டாக இல்லாத காரணத்தால், இப்படிப்பட்ட தகராறுகள் ஏற்பட்டு, இரண்டு மூன்று பேர் சாக நேரிட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சண்டையே போலீசாரினால்தான் ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், நெட்டுக்குப்பம், தாழங்குப்பம் பகுதியில் உள்ள மீனவர்களை பிடித்துக்கொண்டு வந்து, அவர்களுடைய எதிரிகளான திருச்சினாங்குப்பத்தைச் சேர்ந்த மீனவர்களிடம் போலீசார்களே ஒப்படைத்திருக்கிறார்கள். இது போலீஸ் செய்ய வேண்டிய காரியமா ? எதிரிகளிடம் கொண்டு வந்து ஒப்படைக்கலாமா ? அவர்கள் நன்றாக அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். ஆகவே இந்தச் சம்பவங்களுக்கெல்லாம் காரணம் போலீசார்கள் தான் என்று குற்றம் சாட்டுகிறேன். இப்போதும் கூட 56-எச். பஸ் ரூட்டுகள் அங்கே போவதில்லை என்று சொல்கிறார்கள். அவ்வளவு டென்ஷன் இருக்கிறது, ஆகவே, அந்தச் சூழ்நிலையை கட்டுப்படுத்துவதற்கு அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்குமா? சம்பவத்திற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் குடியிருப்புகளுக்கிடையே இப்படிப்பட்ட தகராறுகள ஏற்படுகிறபோது, அதனைத் தீர்த்து வைத்து சமரசம் செய்கின்ற வேலைகளை ஆங்காங்கே இருக்கின்ற காவல் துறையினர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே காவல் துறையினர் இரண்டு மூன்று முறைகள் முயன்று சமரசம் செய்து வைத்து இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது அதற்கென ஒரு குழுவும் அமைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்திருக்கிறார்கள்.

காவல் துறையினர் எவ்வளவு முறைகள் இவ்வாறு சமரச முயற்சியில் ஈடுபட்டாலும், சம்பந்தப்பட்ட மீனவப பெருங்குடி மக்களுக்கிடையே உள்ள மாச்சரியங்கள் போக்கப்பட வேண்டும் என்றால், அந்த மக்களிடையே பெரியவராக, தலைவராகக் மதிக்கப்படுபவராக உள்ள பெருமகன் சொன்னால் ஏற்றுக்கொள்வார்கள். ஏனென்றால், பலபேர் இதிலே தலையிட்டாலும் அவர்கள் கேட்பதில்லை. எனவே அப்படி ஒரு ஏற்பாட்டை செய்வது மிகமிக நல்லதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அந்த வகையில் முயலலாம். ஆனால், காவல் துறையினர் அங்கே அமைதியை நிலைநிறுத்துவதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, ஒரு பக்கம் சார்ந்து ஒரு பக்கம் மாறுபட்டிருக்கிற ஒரு சூழ்நிலை இருக்குமேயானால், மேல் அதிகாரிகள் மூலமாக விசாரித்து, அவர்கள் மேல் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்யும். எல்லா சாரருக்கும் பொதுவாக நடந்துகொள்ள வேண்டும், நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதைதான் அரசின் கொள்கையாக ஏற்று, அதற்கேற்றவாறே காவல் துறைக்கும் உத்தரவு இட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்ற விவரங்கள் இருந்தால், அதைப்பற்றி அறிந்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கிறோம். நானே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மற்றவர்களுக்கும் இது பற்றி தொலைபேசி மூலமாக பேசி ஏற்பாடு செய்கிறேன். அவர்கள் அங்கே நேரிடையாகச் சென்று விசாரித்து அறியவும், சமரச நடவடிக்கைகளில் ஈடுபடவும் இது போன்ற நடவடிக்கைகள் தொடரமல இருக்கவும் நடவடிக்கை எடுக்கும்படி, நானே அவர்களுக்கு தொலைபேசி மூலம் பேசி ஏற்பாடு செய்கிறேன்.

[முற்பகல் 10–50]

சமரசம் ஏற்படுகிற நேரத்திலும் கூட சில பேர்கள் கைது செய்யப்பட்டதாக வந்து சொன்னார்கள். அந்த சமரசம் ஏற்பட்டு இரு சாராரும் ஒத்துக்கொண்டு பேசினால் அது சம்பந்தமாக இருக்கிற சாதாரண வழக்குகளைக் கூட நீங்கள் விட்டு விடலாம், அவர்கள் சம்மதத்தின் பேரில் என்று சொல்லியிருக்கிறேன். சில பேர்கள் துன்பப்படுத்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதைப் பற்றியும் கவனித்து அறிக்கை தரும்படி சொல்லியிருக்கிறேன். அதைப்பற்றி என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது பற்றி துறையினர் ஆராய்ந்து வருகிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சென்னையில் மீனவர்களிடையே ஆண்டாண்டுக் காலமாக இதே தகராறு நடந்து கொண்டிருக்கிறது. யாரும் தீர்க்க முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. இப்போது அரசாங்க அதிகாரிகளையும் மீனவ சமுதாயத் தலைவர்களையும் வைத்து ஒரு





சமாதானக் குழு அமைக்கப்பட்டுள்ளதா ? இந்த சமாதானக் குழுவில் சர்வ கட்சிகளையும் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்து நேரடியாக அந்த மீனவர்களிடம் போய் அவர்கள் குறைபாடுகளை அறிந்து அவற்றை நீக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது பற்றி அறிக்கையில் விவரமாகக் குறிப்பிட்டு இருக்கிறேன். அங்குள்ள முக்கியமானவர்களை, மற்றவர்களையெல்லாம் சேர்த்து ஒரு சமாதானக் குழு அமைக்கப்பட்டு அவர்கள் அதில் ஈடுபட்டு ஓரளவு சமாதானம் செய்திருக்கிறார்கள். இருந்தாலும் மாச்சரியங்கள் காரணமாக மீனவர்களை மீனவர்களே தாக்கி அவர்களே கெடுத்துக்கொள்ளும் ஒரு சூழ்நிலை இருப்பது வருந்தத்தக்கது. ஆகவே, அரசாங்க அதிகாரிகளும் காவல்துறையினரும் எவ்வளவுதான் ஈடுபட்டாலும் அந்தந்தக் குப்பங்களில் இருப்பவர்கள், அங்குள்ள பெரியவர்கள் சமாதானப்படுத்தும் முயற்சியினை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கான முறையில் அவர்களையெல்லாம் அழைத்து அடிக்கடி பேசி ஒரு முடிவிற்கு வரும்படியாகவும் வருவாய்த்துறை அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, மீனவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக திருமதி. எம். எஸ். சுப்புலட்சுமி, திரு. என். எஸ். கிருஷ்ணன் இவர்களின் சகுந்தலை, படகோட்டி போன்ற படங்களைத் திரையிட்டு ; மீனவர்களுக்கு இலவசமாகப் போட்டு காண்பித்து மீண்டும், மீண்டும் அவர்களிடையே தகராறு ஏற்படாத வண்ணம் ஒரு முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நல்ல கருத்துக்களைப் பரப்ப திரைப்படங்கள் நல்லதொரு சாதனம். ஆனால், இந்த படகோட்டி படம் மற்றவை எல்லாம் பல தடவை பார்த்த பிறகும் செய்கிறார்கள் என்பது தான் நமக்கு வருத்தமாகயிருக்கிறது. அவர்கள் காசு கொடுத்து அக்கறையோடு பார்க்கும்போதே மாற்றிக்கொள்ளாத கருத்தை அவர்களுக்கு இலவசமாகக் கொண்டுபோய் காண்பிப்பது, அவர்கள் பார்ப்பது என்றால் அலட்சியம் வருமே தவிர, பொறுப்போடு பார்ப்பார்களா என்பதைக் கவனிக்க வேண்டும். இப்படிப்பட்ட படங்கள் மூலம் திருந்துகிறவர்களும் உண்டு, ஆனால் பல பேர்கள் திருந்தாதவர்களும் இருக்கிறார்கள் என்பதற்கு இது எடுத்துக்காட்டு. இருந்தாலும் அப்படிப்பட்ட முயற்சிகளில் இயன்றவரை அரசு ஈடுபட்டுத்தான் வருகிறது.'

ஆ. திருச்சி மாவட்டம் மணச்சநல்லூர் அரிசி ஆலைகள் இயங்காமல் இருப்பது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு.
வாளர்கள் எம். கே. இராஜமாணிக்கம், இரா. கருப்பையா,
ரா. உமாநாத், ஆர். நவநீதகிருஷ்ணப்பாண்டியன், பி. ஈஸ்வர
மூர்த்தி என்கிற செ. ரணம், என். வரதராஜன், ஜே. ஹேமச்
சந்திரன், பி. முசிறிப்புத்தன், எம். சின்னசாமி, எம். ஆறுமுகம்,
மு. அப்பாதுரை ஆகியோர் ''திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
மணச்சநல்லூர் பகுதியில் கொள் முதலுக்கு முன்பாக லெவி
கேட்டதாலும், அரிசி கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்பட்ட
தாலும், அரிசி ஆலைகள் இயங்காமல் சுமார் 5,000 தொழிலா
ளர்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து'' கவன
ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர்
இதை நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. எம். கே. ராஜமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ''திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணச்ச
நல்லூர் பகுதியில் கொள்முதலுக்கு முன்பாக லெவி கேட்டதாலும்,
அரிசி கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்பட்டதாலும், அரிசி
ஆலைகள் இயங்காமல் சுமார் 5,000 தொழிலாளர்கள் பாதிக்
கப்பட்டிருப்பது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம்
வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு
கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர்
அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்ட வியாபாரிகள் தங்களுக்கு
வேண்டிய நெல்லை தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து வாங்கி வரு
கின்றனர். ஆனால், இவர்கள் நேரடியாக வாங்காமல் அனுமதி
பெறாத தரகர்கள் மூலம் வாங்கி பல்வேறு இடங்களில் இருப்பு
வைத்து லெவி ஏய்ப்பு செய்கின்றனர். பதுக்கிவைக்கப்பட்டுள்ள
இருப்பைக் கண்டுபிடிக்கும் பொருட்டும், கள்ளத்தனமாக வாங்
கிய இருப்பை கணக்கில் கொண்டு வரும் பொருட்டும், குடிமைப்
பொருள் வழங்கு துறை அதிகாரிகளும், காவல் துறையினரும்
சோதனை இட்டனர். கள்ளத்தனமாக வாங்கும், அனுமதி
பெறாத தரகர்கள் பிடிக்கப்பட்டனர். அவர்களிடம் இருந்து
இருப்பும் கைப்பற்றப்பட்டது. இதை எதிர்த்து வர்த்தகர்களும்,
ஆலை அதிபர்களும் முன்னதாக லெவி கேட்கப்படுகிறது என்றும்
ஏற்கெனவே லெவி வாங்கி விட்டதற்கு மீண்டும் லெவி கேட்கப்
படுகிறது என்றும் தவறான குற்றச்சாட்டை கூறி வருகின்றனர்.
லெவி தராதவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லை
என்றால், லெவி முறையை சரிவர நடை முறைப்படுத்த
முடியாது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார்.





மணச்சநல்லூரில் ஆலைகள் இயங்குவதாகவும் லெவி கிடைப்ப
தாகவும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவரின் அலு
வலகத்திலிருந்து தகவல் கிடைத்துள்ளது. இருப்பினும், முன்ன
தாக லெவி வாங்குவதோ அல்லது லெவி கொடுத்த நெல்,
அரிசியைக் கொண்டு செல்ல அனுமதி வழங்க மறுப்பதோ கூடாது
என்று மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அறிவுரை கூறப்பட்டுள்ளது.

***திரு. எம். கே. ராஜமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே
அளித்த விளக்கத்தில் அட்வான்ஸ் லெவி கேட்கவில்லை என்று
மாவட்ட ஆட்சித் தலைவர் பதிலளித்திருப்பதாகச் சொன்னார்
கள். மாவட்ட வழங்கல் அதிகாரி அவர்கள் 1981-ஆம் ஆண்டு
மார்ச்சு திங்கள் 9-ஆம் நாள் அன்று ஒரு சுற்றறிக்கையை எல்லா
ஆலை அதிபர்களுக்கும் வியாபாரிகளுக்கும் அட்வான்ஸ் லெவியாக
25 டன் அரிசியோ அல்லது 50 டன் நெல்லோ கொடுக்க வேண்டு
மென்ற முறையிலும், மாவட்ட வழங்கல் அலுவலகம்,
மணச்சநல்லூரிலிருந்து ஒவ்வொரு மில்களும் மொத்தமாக 3,000
டன் லெவி கொடுக்க வேண்டுமென்ற உத்தரவைக் குறிப்பிட்டு,
1981-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ஆம் தேதிக்குள் கொடுக்
காவிட்டால், உங்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்
கின்ற அளவிலே இங்கே அறிக்கையை கொடுத்திருக்கிறார்கள்.
அதனுடைய உண்மை நகல் இங்கே என்னிடத்திலே இருக்கிறது.
மேலும், அவர்கள் மிரட்டுகின்ற வகையிலே.............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியாகக் கேட்க
வேண்டும். திரு. பொன்னுரங்கம் அவர்களுக்கு ஒரு நீதி, உங்களுக்கு
ஒரு நீதி இல்லை. அப்படியிருந்தால், அது பிரச்சினையாக பின்னால்
வந்து விடும். கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. எம். கே. ராஜமாணிக்கம் :** புலனாய்வுத் துறை
யினரை அனுப்பி, அங்கே 40 சதவீதம் லெவி கொடுத்து வந்த
நெல்லை அவர்கள் பரிசீலனை செய்து, பார்த்து, அவர்களுடைய
புத்தகத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமான,
மேற்படியார் புத்தகத்தில் அவரவர்கள் கணக்குகளின் இருப்பு,
புத்தகத்தின் இருப்பு ஆகிய இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து
பிறகு சரியாக உள்ளது என்று சொல்லப்பட்டது. ஆனால், அவ
ரவர்கள் புத்தகத்தில் கண்டுள்ள இருப்பை, கோடவுனிலே வைக்க
வில்லை, ஆனால், இருப்பு பூராவும் அந்த மில் காம்பவுண்டுக்குள்
ளாகவைத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அந்த நெல்லை அரிசி
யாக்குவதற்கு, பதப்படுத்துவதற்கு, தண்ணீர் தொட்டிகளில் ஊற
வைத்து, வேகவைத்து, பின்னர் ஆலைகளுக்கு வந்ததும், அங்கே
குறிப்பிட்ட இடத்திலே, காம்பவுண்டுக்குள்ளே அந்த நெல்லை
வைத்திருக்கிறார்கள். எப்படியாவது வழக்குகளைத் தொடர
வேண்டுமென்ற கெட்ட நோக்கத்தோடு, மாவட்ட ஆட்சித் தலை
வர் அவர்கள், இதுவரை அரசு உத்தரவை.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மணச்சநல்லூர் எங்கேயிருக்கிறது, எவ்வளவு தூரம் இருக்கிறது என்றெல்லாம் போக வேண்டாம். கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. எம். கே. ராஜமாணிக்கம் : அரசு உத்தரவிட்டும், அந்த அரசு உத்தரவை மதிக்காமல் அதிகார துஷ்பிரயோகம் செய்கின்ற காரணத்தினால், 5,000 ஆலைத் தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, மணச்சநல்லூர் பகுதியிலே உள்ள அரிசி ஆலை அதிபர்கள், மற்றவர்கள் பற்றிய குறைபாடுகளைக் கூறினார்கள். ஒரு தடவை லெவி வாங்கிவிட்டு மீண்டும் லெவி கேட்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைக் கூறினார்கள். அப்படி அட்வான்ஸ் லெவி கேட்பதாக குற்றச்சாட்டுச் சொன்னபோது, அப்படி அட்வான்ஸ் லெவி கேட்பது தவறு; அப்படியிருந்தால் அது தடுத்து நிறுத்தப்படும் என்று சொன்னேன். ஆனால், அனுமதிக்கப்படுகின்ற நெல்லுக்கு அதிகமாக நெல், பதுக்கப்பட்டிருக்குமானால், அது தவறு ; அதன்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், ஒரு தடவை லெவி கட்டி விட்டால், மறுபடியும் லெவி கட்ட வேண்டுமென்ற நிலை இருக்கக்கூடாது. ஆனால், அட்வான்ஸ் லெவி கேட்டதாகச் சொல்லப்படுகிறது. நான் திருச்சிக்குச் சென்றபோது, இதைப் பற்றிக் கேட்டபோது, உணவு வழங்கு அதிகாரி அப்படியில்லை என்று சொன்னார். அப்படியிருந்தால், இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அதற்கான ஆதாரங்களைக் காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆதாரங்கள் எழுத்து மூலமாக இருக்கின்றது என்று சொன்னதற்குப் பிறகு, தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த எழுத்து மூலமான குறிப்பை என்னிடத்தில் தருவார்களானால், 2 நாட்களுக்குள் இந்தப் பிரச்சினை குறித்து உடனடியான நடவடிக்கைகளை எடுக்கிறேன். அரசின் மூலமாக அதற்கான ஆணை பிறப்பிக்க ஏற்பாடு செய்கிறேன்.

[முற்பகல் 11-00]

திரு. எம். கே. ராஜமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, 40 சதவீதம் லெவி கொடுத்ததற்கு பின்னாலே, மீதமுள்ள 60 சதவீதம் நெல்லுக்கு அவர்கள் பெர்மிட் கேட்கிறார்கள். மணச்சநல்லூரிலிருந்து குறிப்பாக நீலகிரி மாவட்டத்திற்கு தான் அரிசி கொண்டு செல்லப்படுகிறது. அப்படிக் கொண்டு செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. இன்று



வரை அனுமதி கிடைக்கவில்லை என்று தந்தி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லெவி கொடுத்ததற்கு பின்னால் அனுமதி வழங்க மறுத்தால் அதுவும் தவறு தான். 40 சதவீதம் லெவி கொடுத்த பிறகு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக் காட்டுவீர்களேயானால்—மறுக்கப்படக் கூடாது. வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லலாம். இந்தியா முழுவதும் ஒரே 'ஜோன்' என்று ஆனபிறகு, நாம் ஆந்திராவிலிருந்து நெல் லெவி இல்லாமல் இங்கு கொண்டு வரலாம் என்று போட்டிருக்கிறோமே தவிர, இங்கிருந்து கேரளாவிற்கும் மற்ற இடங்களுக்கும் போக வேண்டுமென்றுச் சொன்னால் 40 சதவீதம் லெவி கொடுத்து விட்டு தான் கொண்டு போக வேண்டும். லெவி கொடுத்ததற்குப்பிறகு அனுமதி வழங்கப்படுவதற்கு மறுக்கப்பட்டிருக்கிறது என்றால் அதுவும் தவறு. அப்படி இருக்குமேயானால் அந்த நிலைமைகள் ஏற்படாமல், அதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்தப் பிரச்சினை, அட்வான்ஸ் லெவி கொடுக்க வேண்டுமென்று கூறியதன் காரணமாக மணச்சநல்லூரில் 29 அரிசி ஆலைகள் மூடப்படக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதிகாரிகளுடைய உத்தரவின் நகல்களும் என்னிடத்தில் இருக்கின்றன. 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15ஆம் நாளன்று 3,000 டன்னுக்கு லெவி கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். இங்கு அமைச்சர் அவர்கள் அட்வான்ஸ் லெவி கொடுக்க வேண்டாமென்று சொல்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் தங்கள் அதிகாரங்களைத் தவறான முறையிலே பயன்படுத்தி அங்கே அந்த நிலைமைகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே இது சம்பந்தமாக மாநில உயர் பொறுப்பிலே இருக்கின்ற ஒரு அதிகாரியை அனுப்பி, இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி நான் முதலிலேயே விளக்கம் கொடுத்திருக்கிறேன். இப்படி குறிப்புகளை முன் கூட்டியே என்னிடத்தில் தந்திருப்பார்களேயானால் அதற்கான முயற்சிகளை எடுத்திருக்கலாம். இருக்கிறது என்று சொன்னால், நான் கேட்ட பொழுது அவர்கள் அப்படி இல்லை என்று சொன்னார்கள். முன்பே தந்திருந்தால் அப்போதே நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகளை எடுத்திருக்கலாம். ஆகவே இதை வைத்துக்கொண்டு

நான் நடவடிக்கை எடுப்பதற்கு இருக்கிற காரணத்தினாலே, லெவி கொடுத்த பிறகு அனுமதி வழங்க மறுக்கப்படுகிற நிலைமை இல்லாத வகையிலும், லெவி கொடுத்த பிறகு மீண்டும் லெவி கேட்காத வகையிலும், அட்வான்ஸ் லெவி கேட்காத வகையிலும், அரசு உடனடியான முயற்சிகளை மேற் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே உண்மை என்ன என்பதை அரசுக்கே தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அவசியம் இருக்கிறது. அதன் காரணமாக நான் கேட்கிறேன், இது சம்பந்தமாக ஒரு உயர்தர அதிகாரியை அனுப்பி விசாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைப்பட்டால், உயர்தர அதிகாரியை வைத்து நான் நிலைமைகளைப் புரிந்துக் கொள்ள வேண்டுமென்றால் நானே ஏற்பாடு செய்கிறேன்.

* திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்வான்ஸ் லெவி என்பது இப்போது இருக்கிற உத்தரவு—மில்லர்கள் வாங்கினால் வாங்கியதிலே 40 சதவீதம் கொடுக்க வேண்டுமென்பதே தவிர அவர்கள் ' ப்ரொக்யூர்மென்ட் ஏஜெண்டாக '' அரசாங்கம் நியமிக்கவில்லை. ' பர்சேஸ் ' பண்ணினால் 40 சதவீதம் கொடுக்க வேண்டும். அதனால் தான் அட்வான்ஸ் லெவி கூடாது என்று நீங்கள் உத்தரவு போட்டிருக்கிறீர்கள். அப்படி நீங்கள் போடவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள் என்பது தான் இப்போது இருக்கிற ' சீரியசான ' பிரச்சினை. N w, t t kes a serious p opo tion ை என்று சொன்னால், இது தனி தாசில்தாரிடமிருந்து—நான் பூராவும் படிக்கவில்லை—' கிளியராக ' இருக்கிறது; இந்த மாவட்டத்தில் எல்லா பகுதிகளிலும் சம்பா அறுவடை முடிவடையும் நிலையில் உள்ளது. லெவிக்காக இந்த மாவட்டத்தினுடைய குறியீட்டை அடைய முடியவில்லை. அவர்கள் இறங்கவில்லை புரக்யூர்மென்டிலே. ஆகவே அந்த மாவட்டத்திலே 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளைக்குள் 25 டன் அரிசி அல்லது 50 டன் நெல் லெவிக்கு ஒதுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி அங்கே கோட்டா கொடுத்திருக்கிறார்கள். ஆகவே உண்மைக்குப் புறம்பாக அமைச்சருக்கே தகவல் கொடுத்திருக்கிறார்கள் என்றால் அது மச்மோர் சீரியஸ் மேட்டர் ஆகிறது. நீங்கள் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்திருக்கலாம், ஆனால் கேரி அவுட் ஆகவில்லை. அந்தக் கலெக்டருக்கும் தெரிந்து கேரி அவுட் ஆகவில்லை என்ற நிலைமை இருப்பதால் அவருக்கும் பங்கு





உண்டா என்பதை ஹை லெவலில் விசாரிக்க வேண்டும். ஆகவே இதற்காக ஒரு என்குயரி போட்டு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை கேட்க விரும்புகிறேன். நான் ரிக்கார்டை படித்துக் காட்டியிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய விவரக் குறிப்புகளைத் தந்ததற்குப் பிறகு அதன் மீது நடவடிக்கை எடுத்து நீதியை வழங்குவதற்கு அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேவைப்பட்டால் அதற்கென ஒரு தனி அதிகாரியை விசாரணை செய்யச் சொல்லி அறிக்கை தரச் சொல்கிற முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். இதைப்பற்றி முதலிலே நான் ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: தலைவர் அவர்களே, இந்த லெவியினுடைய உத்தரவிலோ அல்லது அந்த உத்திரவு அமல்படுத்தப்படுவதிலோ ஏற்பட்ட கோளாறின் காரணமாக அரிசியாலைகள் மூடப்பட்டு, இன்றைக்கு 5 ஆயிரம் தொழிலாளர்கள் ஒரு மாத காலமாக வேலையில்லாமல் பட்டினியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்கவோ அல்லது தகுந்த நிவாரணம் அளிக்கவோ அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிந்துக் கொள்வதோடு, அந்த உத்தரவினாலே கோளாறு ஏற்பட்டதை விசாரிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள், சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து அதை விசாரித்து அறிவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது அந்தப் பிரச்சினை எழவில்லை. முதலிலே தான் அதைப்பற்றி ஆராய்ந்து துறையின் அளவுக்கு விசாரணை செய்து நானே நடவடிக்கை எடுப்பேன் என்பதைத்தான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். அந்த அளவிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

* திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, நம் அரசாட்சியினுடைய உத்திரவை அமல் நடத்துவதைப்பற்றி கவன ஈர்பிலே கேட்கவில்லை. 359 லைசென்ஸ்தார்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலே குவிண்டாலுக்கு 160 ரூபாய்க்கு கொள்முதல் செய்கிறார்கள். ஆனால் இவர்களை மட்டும் 40 பர்சன்ட் 105 ரூபாய்க்குக் கொடுங்கள் என்று கேட்பதால் அவர்கள் 40 லட்ச ரூபாய் வரையிலே அரசுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே விசேஷமாக தமிழ் நாட்டிலே உள்ள நிலைமைகளை உத்தேசித்து கூட்டுறவுத்துறைக்கே குவிண்டால் ரூ. 160க்கு ஆலை அதிபர்கள் 40 சதவீத லெவியைக் கொடுக்கலாம் என்ற முறையிலே கூட்டுறவு

சங்கங்களே அதைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற ஏற்பாடுகளை செய்து இப்படிப்பட்ட சிக்கலை அரசாங்கம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படியும் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறோம். வியாபாரிகள் 40 சதவீதம் லெவியைக் கொடுத்துவிட்டு மீதியை கூட்டுறவு சங்கங்களுக்கே அவர்கள் விற்கலாம். வியாபாரிகளிடமும் கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கலாம். 40 சதவீத லெவியைக் கொடுத்துவிட்டு மீதம் உள்ள 60 சதவீதத்தை அவர்கள் கட்டுபடியாகிற விலைக்கு என்றால் கூட்டுறவு சங்கங்களுக்கும் கொடுக்கலாம். கொடுத்தால் கூட்டுறவு சங்கங்களும் வாங்கலாம் என்று சொல்லியிருக்கிறோம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** அதிகாரிகள் காரணமாக 5 ஆயிரம் தொழிலாளர்கள் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தகுந்த நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய பரிசீலனை இப்போது இல்லை.

[முற்பகல் 11-10.]

**திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அட்வான்ஸ் லெவி கட்ட வேண்டுமென்று வற்புறுத்துவது சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட புட் செகரட்டரி அவர்களிடம் புகார் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலும்கூட 5,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இந்த முறையை முழுமையாகப் பரிசீலனை செய்து, ஒரு நல்ல நடவடிக்கைக்கு வருவதற்கு அரசு ஹை லெவல் கமிட்டி என்பதை உறுதி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றிய நடவடிக்கை எடுப்பேன் என்றும் நான் சொல்லியிருக்கிறேன்.

**திரு. மு. அப்பாதுரை :** தலைவரவர்களே, இம்மாதிரி நிலை ஏற்படுவதற்குக் காரணம் நம்முடைய தமிழக அரசு கடைப்பிடிக்கக்கூடிய தவறான உணவுக் கொள்கை என்று நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் முழுமையான முறையில் இந்த உணவுக் கொள்முதலைச் செய்திருக்குமென்று சொன்னால் இப்படி ஆலை முதலாளிகளிடம் நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஆகவே, இந்தக் கொள்கையை



அரசு ஒத்துக்கொள்கிறதா ? வருங்காலத்திலேயாவது இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாவண்ணம் அறுவடைக் காலங்களில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் நெல் கொள்முதலைச் செய்வதற்கு அரசு முன்வருமா ? இப்படிப்பட்ட தவறைத் தெரிந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே சர்வ கட்சிக் குழு போட்டாகிவிட்டது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில் ஒரு இம்மி அளவுகூட, கடுகளவுகூடத் தவறு கிடையாது. மத்திய அரசும் மாநில அரசும் உணவுக்கொள்கையை இருக்கின்ற நெருக்கடி நிலைமை என்று பார்த்து வகுக்கிறோம். எனவே, கொள்கையிலே எப்படிப்பட்ட தவறும் இல்லை. ஆனால் கொள்கையை நிறைவேற்றுவதிலே நாணயமாய், நேர்மையாய், உண்மையாய் நிறைவேற்றக்கூடிய பலபேர் இருக்கிறார்கள். சிலபல இடங்களில் குறைபாடுகள் ஏற்படக்கூடும். அந்தக் குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படுகின்றபோது நாம் அதைத் தீர்க்கத் தயாரா இருக்கிறோம். செய்ய வேண்டியதைச் செய்யாமல் விடுவது குறை ; செய்யக் கூடாத ஒன்றைச் செய்வது குற்றம். இந்த இரண்டும் இருக்குமேயானால்கூட அதைத் தீர்ப்பதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும். கொள்கையைப் பொறுத்து எந்த நிலையும் ஏற்படவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## 7. அரசினர் சட்ட முன்வடிவு

### மாவட்டக் காவல் — சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1981.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு மாவட்டக் காவல்—சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்கு பிரச்னையைக் கிளப்புகிறேன். என்னவென்றால், இது அவையையே அவமதிக்கிற காரியமாகும். அரசினர் சட்டமுன்வடிவிலே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மாவட்டக் காவல் — சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவை திரு. எம். ஜி. இராமச்சந்திரன், முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்கள் என்று போடப்பட்டிருக்கிறது. அவைக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள். கூட்டுப் பொறுப்பு இருக்கலாம். ஆனாலும் அவைக்கு வந்திருக்கும்போது, இங்கே இருக்கக்கூடிய . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூட்டுப் பொறுப்பு அதிலே ஒன்றும் தப்பில்லை. அது முறையானதும் கூட. .

திரு. அ. ரகுமான்கான் : சபைக்கு வந்திருந்தும் சம்பந்தப்பட்ட முதலமைச்சர் முன்மொழிய மாட்டேன் என்று சொன்னால் . . . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை நீங்கள் சொல்வது தவறு, எந்த அமைச்சர் வேண்டுமானாலும் இன்னொரு அமைச்சருக்காக முன்மொழியலாம். அது சாதாரணம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயே அப்படி இருந்திருக்கிறது. அப்பொழுது நீங்கள் சட்டமன்ற உறுப்பினராக இல்லை. ஆகவே உங்களுக்குத் தெரியவில்லை: (பலத்த மேசையொலி) (குறுக்கீடு) கூட்டுப்பொறுப்பு ஆகவே, அது எல்லாக் காலத்திலும் எல்லாச் சட்டமன்றங்களிலும் இருக்கிற நடைமுறை. ஆகவே அதில் ஒன்றும் ஒழுங்குப் பிரச்னைக்கு இடம் இல்லை.





8. வரவு-செலவுத் திட்டம் 1981-82 வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 36—பாசனம்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 27,91,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் குடவாசல் ஒன்றிய எல்லையில், தேதியூர் எல்லையில் விவசாயிகளின் நன்மைக்காக திருமலைராஜன் ஆற்றில் திருகு மதகு அமைக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 27,91,54,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

திரு. ந. சிவஞானம் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் குருங்குளம் அருகில் செல்லும் வடிகால் வாய்க்கால் நீரைத்தேக்கி செக்டேம் கட்டி பாசன வசதி கொடுப்பது சம்பந்தமாக பரிசீலிக்க என்பதுபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 27,91,54,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, குடியாத்தம் மோர்தன அணைகட்ட நிதி ஒதுக்காதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 27,91,54,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. பொ. விஜயராகவன் : தலைவரவர்களே, கன்னியகுமரி மாவட்டத்தில் சிற்றாறு பட்டணம்கால் நீர்ப்பாசனத் திட்டத்திற்குட்பட்ட கடைவரம்பு, நிலப் பகுதிகளுக்குப் பல ஆண்டுகளாகத் தண்ணீர் ஒழுங்காகச் சென்று சேராதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 27,91,54,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண். 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 33,10,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.

திரு. ந. வேணுகோபால் : தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு தொகுதியில் சாத்தனூர் அணையின் ஆயக்கட்டு பகுதியில் உள்ள எல்லா ஏரிகளையும் கடந்த பத்து ஆண்டுகளாக செப்பனிடாமல் இருப்பதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,10,42,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் .''

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, கல்லணைக் கால்வாயிலிருந்து பிரியும் உழவயல் வாய்க்காலிலிருந்து நெய்வேலி



கிராமத்திற்குப் பாசன வசதி செய்து கொடுக்கப் பாசனக் கால்வாய் வெட்டுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,10,42,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, பழனி வட்டத்தில் நீண்ட நாட்களாய் ஆய்விலுள்ள குதிரை ஆறு அணையை கட்டவேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,10,42,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம் விளாத்திகுளம் வட்டாரத்தைச் சேர்ந்த டி.புதுப்பட்டி கிராமத்தில் ஒரு புதிய பாசனக் கண்மாய் அமைப்பதில் ஏற்படும் காலதாமதத்தைப் போக்க வேண்டுமென்று விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,10,42,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

THIRU P. VIJAYARAGHAVAN : Mr. Speaker Sir, to discuss Policy I move that the allotement of Rs. 33,10,42,000 under Demand No. 50 Capital outlay on irrigation be reduced by Rs. 100.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது கருத்து தெரிவிக்க விரும்புகிறாரா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டின் பாசனம் பற்றிய மானியக் கோரிக்கை மீதான நீர்ப்பாசனம் சம்பந்தப் பட்ட விஷயங்கள் அச்சிடப்பட்டு என்னுடைய உரையாக இங்கே வைக்கப் பட்டிருக்கிறது. அதை இந்த அவையிலே நான் வாசித்ததாக தயவுசெய்து எடுத்துக் கொண்டு அவைக் குறிப்பிலே இடம் பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேலான ஆலோசனைகளைக் கேட்டதற்குப் பிறகு, என்னுடைய கருத்தை இறுதியாகச் சொல்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பிலே சென்ற ஆண்டு நடைபெற்ற மானியக் கோரிக்கையின் விவாதத்தின் பொழுது நான் கலந்துகொண்டு முழுமையாக என்னுடைய கருத்.துக்களை கூறியிருக்கிறேன். சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அந்தப் பொதுப் பணித் துறையினுடைய குறிப்பிலே எல்லா இடங்களிலுமே என்னுடைய பெயரை விட்டுவிட்டு, திரு. ஏ. டி. கருப்பையா, எம்.எல்.ஏ., என்ற பெயரைக் குறிப்பிட்டு, அது எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தவறான முறையிலே அச்சிட்டுக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதோடு......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது திருத்தப்படும்.

* திரு. பாபு ஜனார்த்தனம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப பொதுப்பணித் துறை, பாசனத் துறை மானியக்கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்தமைக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இன்றைக்கு கடுமையான வறட்சி இருக்கின்ற நிலைமையில், பாசன நிலைமையைப் பொறுத்த வரையிலும் நாம் ஒரு போர் கால நடவடிக்கையைப் போல எடுக்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். மாண்புமிகு

* 515—ம் பக்கத்தில் இணைப்பு (அ) ஆக அச்சிடப்பெற்றுள்ளது.





அமைச்சர் அவர்கள் இந்தத் துறையிலே பல திட்டங்களைச் சொல்லி, அவைகள் செயல் முறையில் நடந்து வருவதாகச் சொல்லி இந்த குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். பொதுவாக இன்றையதினம் கடுமையான வறட்சி இருக்கிற இந்த நேரத்தில் அந்த வறட்சியைப் பயன்படுத்திக் கொண்டு என்னென்ன வகையிலே பாசன வேலைகளைச் செய்ய வேண்டுமோ அந்த வகையிலே எல்லாம் பாசனத்திற்கு உரிய ஏரி, கண்மாய்கள் வாய்க்கால்கள் போன்றவைகளை எல்லாம் எந்த அளவுக்கு அபிவிருத்தி செய்ய வேண்டுமோ அந்த அளவுக்கு அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.20]

நிலத்தடி நீரைப் பொறுத்தவரையில், மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் பேசியபோது, நிலத்தடி நீரை மிக விரைவிலே ஆய்வு செய்து நல்ல எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை பேராசிரியர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் இன்றையதினம் நாம் ஆய்வு செய்திருக்கிற அளவு இந்த மானியக் கோரிக்கைப் புத்தகத்திலே 30 சதவிகிதத்திற்கு மேலான இடங்களில்தான் முடிவடைந்திருக்கிறது என்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மீதியுள்ள 70 சத விகிதம் இடங்கள் 1985 ஆம் ஆண்டுக்குள் ஆய்வு செய்யப்படவிருக்கிறது. என்பதை இந்தப் புத்தகத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது எல்லாம், இதை விரைவு படுத்தி நிலத்தடி நீரை அதிகமாகக் கொண்டு வருவதற்கான திட்டத்தை தீட்டவேண்டும். தமிழ்நாட்டில் உள்ள மிகப் பெரிய ஏரிகள் அனைத்தும் இன்றையதினம் காய்ந்து போயிருக்கின்றன. அவைகளிலே தண்ணீரே இல்லாமல் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஏரிகளில் நல்ல ஆழமுள்ள கிணறுகளாக தோண்டி நிலத்தடி நீரை உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு ஏரியிலும் குறைந்தது 3 கிணறுகளை ஆழமாகவும், அகலமாகவும் வெட்டினால், தண்ணீர் வரத்துள் அதிகமாக வருவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு ஏரியை எடுத்து கிணறுகளை ஏற்படுத்த வேண்டும். அதிகமான அளவிலே கிணறுகளை ஏற்படுத்தினால் தண்ணீர் கிடைப்பதற்கும், நீர் உயர்வதற்கும் வழியாக இருக்கும்.

சில மாநிலங்களில் இப்படிப்பட்ட பரிட்சார்த்தமான நிலைமையை செய்து அந்த மாநிலங்களிலே நிலத்தடி நீரை உயர்த்தி, பாலைவனங்களை சோலை வனங்களாக மாற்றியிருக்கிறார்கள். ஆகவே நிலத்தடி நீரை உயர்த்துவதற்கு திட்டவட்டமாக ஒரு முடிவை எடுக்க வேண்டும். அது 1935 ஆம் ஆண்டு வரையில் இல்லாமல் அதற்குள்ளேயே இந்த நிலத்தடி நீரை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இன்றையதினம் 100 ஏக்கருக்கு உள்ளே இருக்கின்ற நீர் நிலைகளை பராமரிப்பதற்கு அந்த ஒன்றியங்களுக்கு ஒப்படைக்க வேண்டுமென்று இந்த மானியக் கோரிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். 100 ஏக்கர்களுக்கு உள்ளே இருக்கின்ற அந்த சிறிய பாசன ஏரிகளையும் ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கின்ற இந்த நிலை இல்லாமல் பொதுப் பணித் துறையே அந்தப் பணியைச் செய்தால் நல்ல முறையில் நடைபெறும் என்பது என்னுடைய கருத்து. ஆகவே எல்லா ஏரிகளையும் பராமரிக்கின்ற பணியை பொதுப்பணித் துறையே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஏனென்றால் அந்த டெக்னிக்கல் பீபபிள்கள் எல்லாம் அதிகமாக யூனியனில் இருக்கமாட்டார்கள். யூனியன் இன்ஜினீர் சூப்பர்வைசர்கள் போன்றவர்கள் அதிகமாக கிடையாது. ஆகவே பி.டபிள்யூ.டியே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

பெரும்பாலான சிறிய பெரிய ஏரிகளின் மதகுகள் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. அங்கே பெரிய ஏரிகளாக இருந்தாலும், சரி சிறிய ஏரிகளாக இருந்தாலும் சரி அந்தப் பலகை சிஸ்டம் நல்ல முறையில் இல்லை. அந்த ஸ்குரு சிஸ்டம் அங்கே ஏற்படுத்தினால், தண்ணீர் வீணாகாமல் இருக்கும். பலகை என்ற நிலைமை ஏற்படுத்திவிட்டால் அதை யார் வேண்டுமானாலும் தூக்கி வைக்கிறநிலை ஏற்படும். ஸ்குரு சிஸ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, சின்ன பெரிய ஏரிகளின் வரத்துக்கால்வாய்கள், நிலத்திற்குச் செல்லும் பாசன வாய்க்கால்கள் இவைகள் எல்லாம் மாற்றப்பட்ட நவீன முறையில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை பரிசீலிக்க வேண்டியது மிகவும் அவசியமான நிலைமையாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.





இன்றைய தினம் அளிக்கப்பட்டு இருக்கிற மானியக்கோரிக்கை கொள்கை விளக்கக்குறிப்பு புத்தகத்தில் சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் கொண்டுவரப்படுவது மீண்டும் வற்புறுத்தப்பட்டு இருப்பதாகச்சொல்லி இருக்கிறார்கள். இன்றைக்கு ஒரு பெரிய குழப்பம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. சென்னைக்கு வருகின்ற நீர் கட்டளைக் கால்வாயிலிருந்து வருகின்ற திட்டத்தின் அடிப்படையிலா அல்லது கிருஷ்ணா நதி நீர்த்திட்டத்தின் அடைப்படையிலா அல்லது வேறு திட்டந்தின் அடிப்படையிலா என்று தெரியவில்லை. கிருஷ்ணா நதி நீர் திட்டத்தின் ஆய்வு வேலைகள் நடைபெற்றுக்கொண்டு இருப்பதாகச் சொல்கிறார்கள். இப்படி பல ஆய்வுகள் நடைபெறுகின்றன. நமக்குத் திடமான ஒரு கொள்கை இருக்கவேண்டும். சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவருவதற்கு எந்தத திட்டத்தை நாம் அமல் நடத்தப்போகிறோம் என்று முடிவு எடுக்க வேண்டும். அதற்காக வேண்டுமானால் சர்வகட்சிக் கூட்டம் கூட்டி, சென்னைக்கு எந்தத் திட்டத்தின் அடிப்படையில் தண்ணீர் கொண்டு வரலாம் என்கிற கருத்தை அறிந்து முடிவுக்கு வரலாம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பல திட்டங்களை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு இருப்பதால் இங்கே குறிப்பில் தரப்பட்டு இருக்கிறது. பல திட்டங்களை எடுத்துக் கொள்ள் இருக்கிறோம் என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்லவேண்டுமானால்; பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம் முடிவுறும் நிலையில் இருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். தஞ்சாவூர் கால்வாய்களை நவீனப்படுத்தும் திட்டம் ரூ. 281 லட்சம் மதிப்பீட்டில் பரிசீலனையில் இருந்து வருகின்றன என்று சொல்லப்பட்டு இருக்கிறது. பெரியார். வைகை பாசனத் திட்டங்களை வேளாண்மை விரிவாக்கப் பணிகளுக்காக திருத்தியமைக்கப்படும் திட்டம் இதில் அடங்கியுள்ளது. காவரி கழிமுகப் பகுதியில் வடிகால் திட்டத்தைப் புதுப்பிக்க திட்ட மதிப்பீட்டின் கீழ் இடம் பெற்றுள்ளது. குடகனாறு நீர்த்தேக்கத் திட்டம் திரும்பவும் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அதைப் போலவே ஈச்சம்பாடி அணைத்திட்டம் குறித்து கவனிக்க தனியாகக் கோட்டம் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. உப்பாறு அணைத் திட்டத்திற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டு திட்ட மதிப்பீடு 90 லட்சம் என்கிற வகையில் சொல்லப்பட்டு இருந்தும் அந்தத் திட்டம் தொடங்கப்பட்டதாக இன்னும் அறிவிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படி பல அணைகள் பல திட்டங்கள் பாசனத்தைப் பொறுத்த வரையில் அறிவிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். அவைகளைத் துரிதப்படுத்தி பல அணைகளை உடனடியாகக் கட்டித் தருவதன் மூலம், வறட்சி நிலைமையில் அதைப்பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாச

[திரு. பாபு ஜனார்த்தனம்] [1981 ஏப்ரல் 2

ணத்தைப் பொறுத்தவரையில் இநு கிராமங்களின் உணவுப் பிரச்சினை வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு இருக்கிறது என்பதால் அந்தக் கிராமங்களின் முன்னேற்றத்தில் முக்கியத்துவம் கருதி இதைத் துரிதப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

செய்யாறு தொகுதியில் பல சிறிய, பெரிய ஏரிகளைத் தூர் எடுக்கவேண்டும் என்று அந்தத் தொகுதி மக்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். வறட்சி நேரத்தில் அந்தத் தூர் எடுக்கும் பணியை அங்கேயிருக்கிற கிராம மக்களைக் கொண்டு நிறைவேற்றினால் பல மக்கள் நம் மாநிலத்தை விட்டு பிற மாநிலங்களுக்குச் செல்லும் நிலைமையைத் தவிர்க்கமுடியும். அந்தப் பகுதி மக்கள் அங்கேயே கூலி வேலை செய்து தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொள்ளமுடியும். ஆகவே, ஏரிகளில் தூர் வாரும் பணியை அந்தப் பகுதி கிராம மக்களைக் கொண்டு செய்ய வேண்டும் என்று கேட்டுச்கொள்கிறேன். மேலும், ஏரிகளில் தூர் வாரும் பணிகளோடு, அந்தக் கரைகளை பலப்படுத்தவும், அதற்கு ரிவிட்மென்ட் செய்யவும் போன்ற பணிகளை இந்த நேரத்தில் எடுத்துக் கொண்டால் கிராம மக்களுக்கு வறட்சி நிலையில் வேலை கொடுத்தது போல் அல்லாமல், எதிர்காலத்தில் அந்த ஏரிகளை பாசனத்திற்கு பெரும் அளவிற்குப் பயன்உள்ளதாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல பெரிய ஏரிகளில் சலங்கல்கள், மதகுகள் பழுதுபட்ட நிலையில் இருக்கின்றன. அவற்றை யெல்லாம் சீர்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், மாமண்டூர் ஏரி, தண்டரை அணைக்கட்டு வலது புறக் கால்வாய் ஆகியவை மராமத்து செய்யவேண்டும்.

மாமண்டூர் ஏரி 4,000 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் பாயும் தன்மையுடையது. அதனுடைய சிறு பாசனக் கால்வாய்களை நவீனப்படுத்தும் பணியை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

இன்னொரு முக்கியமான கருத்தை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். பல ஆறுகளின் ஆயில் இன்ஜின் வைத்து அனுமதி பெறாமலேயே தண்ணீர் எடுத்து வருகிறார்கள். என்னுடைய தொகுதியில் கூட இது நடக்கிறது. இவற்றைத் தடுத்து நிறுத்தவேண்டும். குறிப்பாக என்னுடைய தொகுதியில் அரசாணிப்பாலை என்கிற இடத்தில் ஆற்றுவாய்க் காலில் 14 ஆயில் இன்ஜின்களைப் போட்டு அனுமதி பெறாமலேயே, சட்டரீதியாக அனுமதி பெறாமலேயே அந்தக் கால்வாயில் இருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதன் காரணமாக அந்தக் கால்வாயை நம்பி பயிர் செய்யும் விவசாயிகளின் விவசாயம் பாதிக்கப்படுகிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 2] [திரு. பாபு ஜனார்த்தனம்]

[முற்பகல் 11—30]

அதே நேரத்தில் அரசுபணிப்பாலை மக்களுக்கு குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. இப்படிப்பட்ட தவறான முறையிலே அங்கே தண்ணீரைப் பயன்படுத்துகிறார்கள். இதுபற்றி ஏற்கனவே நான் ரெவின்யூ அமைச்சருக்கும் நீர்ப்பாசன அமைச்சருக்கும் குறிப்புகள் கொடுத்திருக்கிறேன். உடனடியாக இந்தத் தவறை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தனூர் அணை மேல்மட்டக் கால்வாய்த் திட்டம் கலைஞர் ஆட்சியில் போடப்பட்டது. இது பற்றி, இன்னும் 1977-லிருந்தே ஆய்வு செய்யப்படுகிறது, ஆய்வு செய்யப்படுகிறது என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் நிர்வாகப் பொறியாளர்களின் அறிக்கையும் பெறப்பட்டுள்ளது. அது அரசின் ஆய்வில் உள்ளது. இந்தத் திட்டம் செயல்பட்டுத்தப்பட்டால் 10, 15 கிராமங்களுக்கு பாசன வசதி கிடைக்கும். அதோடு திருவண்ணாமலைப் பகுதிக்கு குடிதண்ணீரும் கிடைக்கும். ஆகவே, இந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி பல்வேறு திட்டங்கள் 1977-லிருந்தே ஆய்வில் இருக்கிறது, நடைமுறையிலே இருக்கிறது; மீண்டும் பரிசீலிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அமைச்சர்களுக்கு ஒரு அருமையான வார்த்தை ''பரிசீலிக்கப்படுகிறது'' என்பது. அதுவா, இதுவா என்று கேட்கும்போது பரிசீலிக்கப்படுகிறது, அல்லது பரிசீலிக்கப்படும் என்று சொன்னால் அது 'மதில்மேல் பூனையாக' இருக்கிறதே தவிர கடைசி முடிவு எப்படி இருக்கிறது என்றால் 'நெகட்டிவ்' தான் ஆகவே, இந்த பரிசீலிக்கப்படுகிறது என்ற வார்த்தையை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர்கள் ஏதோ ஒருவகையில் பதில் சொல்லும்போது பரிசீலிக்கப்படுகிறது என்று சொல்லாமல், இது எடுக்கப்பட்டிருக்கிறது, இது முடிக்கப்பட்டிருக்கிறது, இது நடந்துகொண்டிருக்கிறது என்று சொன்னால் உண்மை நிலையைத் தெரிந்து கொள்ள முடியும்.

இந்த வறட்சி நிலைமையில் பொதுப்பணித் துறையில் இருக்கிறவர்கள் போர்க்கால நடவடிக்கைபோல் பணிகளில் ஈடுபட்டு, இந்த நாட்டு மக்களுக்கு நல்ல பணிகளைச் செய்ய வேண்டும் ; அப்படியானால்தான் கிராமங்கள் பயனடையும் என்று தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நீர்ப்பாசனம் குறித்த மானியக் கோரிக்கைமீது எனது கருத்துக்களை எடுத்துவைக்க விரும்புகிறேன்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரிய மற்றும் நடுத்தர பாசனத்திட்டங்களுக்கும், பாசன அமைப்புகளை நவீனப்படுத்தும் பணிகளுக்கும் 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது 56 சதவீதமாகும். எதிர்பார்க்கப்படும் பாசனப் பரப்பு 66,000 ஹெக்டேராக இருக்கிற நிலையில் புதியதொரு உத்வேகத்தோடு நீர்ப்பாசனத் துறை அமைச்சரவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ரூ. 71.34 கோடி செலவில் நிறைவேறி வருகின்ற 8 நீர்ப்பாசனத் திட்டங்களின் வாயிலாக பயன்பெறத்தக்க பாசனப் பரப்பு 43,800 ஹெக்டேராக இருக்க, 440.12 கோடி முதலீட்டில் சுமார் 39 திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருப்பதுவும் 68 கோடி ரூபாய் செலவில் பெரிய நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசன அமைப்புகளின் மூலம் 83,000 ஹெக்டேர் ஏக்கர் நிலம் பயனடைய வழிவகை செய்யப்பட்டிருப்பதும் மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

அதோடு நீண்ட நெடுநாளைய கோரிக்கையான சோத்துப்பாறை, குதிரையாறு ஆகிய திட்டங்கள் மதுரை மாவட்டத்தின் வறண்ட பகுதிகள் பயனடைய எடுத்துக்கொள்ள வழிவகை செய்திருப்பதனை வரவேற்கிறேன் ; நன்றி சொல்கிறேன்.

அதைப்போல சிறுபசனத் திட்டங்களுக்காக 18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய வகைசெய்யப்பட்டுள்ளது. 1981–82-ஆம் ஆண்டுக்கு 200 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேற்பரப்பில் கிடைக்கும் நீரை அதிக அளவில் பயன்படுத்தியுள்ள நிலையில் தமிழகம் சிறுபாசன அமைப்புகளின் மூலம் அதிக நீர்ப்பாசன வசதிசெய்து தரமுடியும். ஆகையால் சிறிய நீர்ப்பாசன வாரியம் அல்லது நில நீர்க் கழகம் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதன்மூலம் தேங்கியுள்ள அரசின் ஆய்வில் உள்ள பல திட்டங்களைத் துரிதப் படுத்தி முடிவடையச் செய்யவேண்டும் என்ற செயற்குறிப்பை அரசின் பரிசீலனைக்கு வைக்கிறேன்.

பின்தங்கிய வறட்சிப் பகுதிகளின் பாசனத் திட்டங்களுக்கு 1981–82-க்கு 5.71 கோடி ரூபாய் செலவில் 2920 ஹெக்டேர் ஏக்கருக்கு பாசன வசதி அளி...



முதலியவைகளை அதாவது அடிப்படையான சில நார்ம்ஸை மாற்றியிருப்பதையும் நான் பாராட்டுகிறேன். இது சம்பந்தமாக வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கு பயன்செலவு முறைகள் எதையும் அரசு கண்டிப்பாக பின்பற்றாது என்றும் அவை சிக்கனமற்ற திட்டங்களாக இருந்தாலும் கூட அது மக்களுக்குத் தேவை என்ற வகையிலேயும், மக்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதாக இருப்பதால் இவற்றை நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையிலேயும் புரட்சிகரமான திட்டத்தை ஏற்படுத்தி இருப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசைப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தினை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது அதன் பயன்செலவு விதி (பி.சி. ரேஷியோ)யை மட்டும் கணக்கில் எடுக்காமல், அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் அதன் மூலம் வரக்கூடிய வணிகப் பயிர் உற்பத்திப் பயனையும், மதிப்பையும் சுற்றுலாப் பயணிகள் அத் திட்டத்துக்கு வந்து செல்வதனால் ஏற்படுகின்ற வரவுகளையும் திட்டங்களை தாமதப்படுத்துவதனால் ஏற்படுகின்ற, உயர்ந்துவிடுகின்ற நிலையினையும் (எஸ்காலேஷன் சார்ஜஸையும்) கருத்தில் கொண்டு திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் என்ற என்னுடைய உள்ளக் கிடக்கையை அரசுக்கு தெரியப்படுத்த விழைகின்றேன்.

வெள்ளக் கட்டுப்பாட்டு அமைப்புகளுக்கும், வெள்ளக் கட்டுப்பாட்டுப் பணிகளுக்காக 4 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயும், 5 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயும் 3 கோடி, 4 கோடி என்ற நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. 6-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 19 கோடி ரூபாய் என்ற அளவுக்கு நிதி ஒதுக்கி இருப்பதையும், 1981–82 ஆம் ஆண்டுக்கு 65.06 இலட்சம் ஒதுக்கீடு செய்திருப்பதையும் வரவேற்கின்ற அதேநேரத்தில், மதுரை பெரியகுளம் கோட்டத்தில் லோயர் கேம்ப் வைரவனுரு என்கின்ற இடத்திலிருந்து பெரியகுளம் வரை, அரசின் ஆய்விலுள்ள ஆங்கிலேயர் காலத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ள 18 ஆம் வாய்க்கால் திட்டத்தினை ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன். இதன் மூலம் கம்பம், தேனி, போடி, பெரியகுளம் ஆகிய பகுதிகளில் உள்ள மேட்டுப்பாங்கான புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறுவதோடு, நிலத்தடி நீர் பெருகுவதற்கான சாத்தியக்கூறுகளும் இருக்கின்ற காரணத்தால் இத்திட்டத்தினை ப்ளட் கேரியர் கேனல் என்ற வகையில் ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன். அதுபோல் கடந்த கால வெள்ளத்தின்போது அடித்துச் செல்லப்பட்ட ஆத்தங்கரைப்பட்டி அணையினை மீண்டும் கொஞ்ச தூரம் மேலே உள்ள இடத்தில் கட்டி, தேனித் தொகுதியின் குப்பிநாயக்கன்

பட்டி, இலட்சுமிபுரம், கங்காய்ப்பட்டி, நாராயணபுரம், சங்கரலிங்கபுரம், பள்ளப்பட்டி, காமாட்சிபுரம் ஆகிய கிராமங்கள் பயனடையும் வகையில், இடது பக்கக் கால்வாய் ஒன்று அமைத்துத் தரவேண்டும். அரசின் ஆய்விலுள்ள சண்முகா நதித் திட்டத்தை ஓடைப்பட்டி, அப்பிப்பட்டி, அழகாபுரம், அம்மாபட்டி, அய்யனார், கிளியூர், கள்ளிசேர் வைப்பட்டி சின்ன ஓவுலாபுரம் ஆகிய கிராமங்கள் பயனடையும் வகையில் இந்தத் திட்டத்தினை செயல்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறு விவசாயிகளுக்கு உதவுகின்ற வகையில் குழாய் கிணறுகள் கழகம் ஏற்படுத்துகின்ற முடிவினை வரவேற்கிறேன்.

அதைப்போன்று நதி நீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்திய நாட்டிலே உள்ள டோட்டல் சர்பேஸ் ஃப்ளோ 1,440 எம்.ஏ.எஃப்.. அதிலே 50 சதவீதம் சுமார் 720 எம்.ஏ.எஃப். என்பது தென் கிழக்கு பருவ மழையின் மூலமாக 650 எம்.ஏ.எஃப்பும், மழைக் காலங்களில் 70 எம்.ஏ.எஃப்பும் சேர்ந்ததுமாகும். இது மொத்தம் கிடைக்கின்ற நீரின் அளவு. இவ்வளவு நீரையும் தேக்குவதற்கு 20 பெரிய அணைகளும் 4,500 மைல் நீளமுள்ள கால்வாய்களும் தேவை என்று ஒரு அறிக்கை மத்திய அரசால் வகுக்கப்பட்டிருக்கின்றது. அந்த அறிக்கையினைக் கடந்த காலத்திலே மத்திய அரசினுடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சராக இருந்த கே. எல். ராவ் அவர்கள் இது 50,000 கோடி அளவிலே உள்ள பெரிய திட்டம் என்றும், அது மஹலி அன்எக்கனாமிக் என்றும் கூறி கைவிட்டுவிட்டு நடைமுறை சாத்தியக்கூறான வகையில் நதிகளை இணைக்கின்ற வகையில் திட்டங்கள் கொடுத்திருக்கின்றார்கள்.

தென்னகத்தைப் பொறுத்தவரையில் மேற்கு நோக்கி ஓடி கடலில் வீணாகும் நீரைத் தமிழகத்திற்குத் திருப்பி விடுவதும், அதைப்போன்று யமுனா, வைகை போன்ற ஆறுகளை இணைக்கின்ற திட்டம், அதாவது 2,500 மைல் நீளமுள்ள கால்வாயினை வெட்டுகின்ற 1 இலட்சம் க்யூசக்ஸ் தண்ணீர் கிடைக்கின்ற 6,000 கோடி மதிப்பிட்டிலே உள்ள 25 மில்லியன் ஏக்கர் பாசன வசதி பெறுகின்ற திட்டத்தினை செய்து கொடுக்கின்ற எதிர்காலத் திட்டத்தினைப்பற்றி தமிழக அரசு மத்திய அரசோடு பேசி அதற்கான வழி வகைகளை ஆராயவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

தென்னிந்திய நதிகளை இணைக்கின்ற திட்டம் முதலில் பரிசீலிக்கப்பட்டு, 6-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்த்துக்கொள்ள வேண்டும் என்கிற நிலை இருக்கிறது என மத்திய





திட்டக் கமிஷன் உறுப்பினரும், விவசாய நிபுணருமான டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் கூறியுள்ளார்கள். அவர்கள் கூறியுள்ள அந்தக் கருத்துக்களை அடியொற்றி, தமிழக அரசு தொடர்பான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நல்ல சந்தர்ப்பத்திலே இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். நதிகளை தேசீயமயமாக்குவது பற்றி பேச்சு எழுகிறபோது, அப்படி தேசீயமயமாக்க முடியாது என்று கருத்துக்கள் வருகிற நேரத்தில், இங்கே இருக்கக்கூடிய, தேசீயத் தோழர்கள் அந்தக் கொள்கையை வலியுறுத்துவதன் மூலம், அனைத்து நதிகளையும் தேசீயமயமாக்க வழி செய்ய வேண்டும் என்று கோரி, மக்களுக்கு நண்பர்களாக மாறவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 36.—பாசனம், எண் 50. பாசனம் குறித்த மூலதனச் செலவுகள் ஆகிய இரு மானியக் கோரிக்கைகள் மீது, இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நமது மாநிலத்தின் முக்கிய நீர்ப்பாசனங்களாகப் பயன்படுத்தப்படுபவை முறையே, ஆற்றுப்பாசனம், ஏரிப்பாசனம், கிணற்றுப் பாசனம் ஆகியவைகளாகும். இவைகளில், கிட்டத்தட்ட 25 இலட்சம் ஏக்கர்கள் அளவிற்கு ஆற்றுப்பாசனத்திற்கும், ஏரிப் பாசனத்திற்கும் உபயோகப்படுகின்றன. ஆனால், கிட்டத்தட்ட 75 இலட்சம் ஏக்கர் நிலங்கள் கிணற்றுப் பாசனத்தின் மூலம் பயன்பெறுகின்றன. இந்த மூன்று பாசனங்களுமே ஒன்றுக்கொன்று நிறைய வித்தியாசம் உள்ளவை. கிணற்றுப் பாசனத்திற்கு நிலத்தடி நீர் மிகவும் தேவை. பெரும்பகுதி நிலங்கள் கிணற்றுப் பாசனம் பெறுவதால், நிலத்தடி நீரை அதிகப்படுத்துவதற்கு அரசு கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 6-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பாசனத் திட்டங்களை நவீனப்படுத்துவதற்காக ரூபாய் 150 கோடி ஒதுக்கப் பெற்றிருக்கிறது என்றும், அதில் 56 சதவீதம் பாசன அமைப்புகளை நவீனப்படுத்துகின்ற திட்டங்களாக இருக்கும் என்றும் கூறியிருக்கிறார்கள். அதேபோன்று, இந்த 6-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசனத்திற்காக 31 திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பெறும் என்றும், அவற்றின் மொத்த மதிப்பீடு 440.12 கோடி ரூபாய் ஆகும் என்றும், அதில் ஏழு திட்டங்கள் அந்த 6-ஆவது திட்டத்திலேயே முடிக்கப்பெறுவனவாக உள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது.

[திரு. சி. பழனிமுத்து] [1981 ஏப்ரல் 2

அதேபோன்று சிறு பாசனத் திட்டங்களுக்காக 18 கோடி ரூபாய் செலவுசெய்து, அதன் மூலம் 42 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி கிடைக்கும் என்றும் கூறியிருக்கிறார்கள். அதேபோன்று பெரிய நீர்ப்பாசன திட்டங்களின்கீழ், 1980-81 ஆம் ஆண்டில் பரம்பிக்குளம்-ஆளியாறு, மற்றும் பெரியாறு-வைகை நவீனப்படுத்துதல் போன்ற திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இந்தப் பெரியாறு-வைகை மேம்பாடு திட்டத்தின் மூலமாக கூடுதலாக ஒரு 25,000 ஏக்கர் நிலங்கள் பாசனத்திற்கு கொண்டு வரப்படும் என்றும் கூறியிருக்கிறார்கள்.

நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களில் மேலும் நான்கு புதிய திட்டங்கள் சேர்க்கப்பட்டிருப்பதாகவும், அந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்திற்கு என்று என்ன திட்டம் இருக்கிறது என்று துருவிப் பார்க்கையில், இரண்டு திட்டங்களுக்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. அவற்றில் கரியக்கோவில் நீர்த்தேக்கத் திட்டம் ஒப்பளிக்கப்படவில்லை என்றும் ஆனைமடுவு நீர்த்தேக்கத் திட்டம் ஒப்பளிக்கப்பட்டுவிட்டதாகவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலே அந்த இடங்களில் காட்டாறுகள் அதிகம். அந்தக் காட்டாறுகளின் மத்தியிலே இந்த நீர்த்தேக்கங்கள் கட்டப்படுமேயானால், நிறைய விவசாய நிலங்கள் பயன்பெற்று, வளம் ஏற்படும். சேலம் மாவட்டத்திற்கென பிரத்யேகமான திட்டங்கள் இதிலே இந்த அறிக்கையிலே எதுவும் கூறப்படவில்லை. ஆகவே, இவைகளை மாஸ்டர் பிளேன்களாக உருவாக்கி, வறட்சிப் பிரதேசமான சேலம் மாவட்டத்திற்கு, இந்தத் திட்டங்களை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் ஆகவே, அதற்கான சாத்தியக் கூறுகளை வழிமுறைகளை—நார்ம்ஸ் என்று கூறுவார்கள்களே அத்தனகைய முறைகளை ஆராய்ந்து, தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று என் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து. சிறு பாசனத்தை எடுத்துக் கொண்டால் 1981-82 இல் சிறப்புக் சிறுபாசனத் திட்டங்களுக்காக ரூபாய் 2 கோடியும். தூர்வாரி புனரமைக்கும் திட்டங்களுக்காக ரூபாய் 4 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பெற்றிருப்பதாகத் தெரிகிறது. அதிலே 40 வேலைகள் முடிக்க திட்டமிட்டிருப்பதாக இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது.

தூர் எடுத்தல், மதகுகள் அமைத்தல், வரத்துக் கால்வாய்கள் வெட்டுதல், வடிகால் அமைத்தல், முதலியவைகள் மூலம் மாநிலத்திலுள்ள சிறு பாசன நீர்நிலைகளை மேம்படுத்தவும், தரப்படுத்தவும், இத் திட்டங்கள் வகை செய்யப்பெற்றிருப்பதாக இதிலே கூறப்பட்டிருக்கிறது. வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் மாவட்டங்களுக்கு, இப் பாசனத் திட்டங்களை செயல்படுத்த,



1981 ஏப்ரல் 2] [திரு. சி. பழனிமுத்து]

வழக்கமாக மேற்கொள்ளும் விதிமுறைகளையும், நெறிமுறைகளையும் பின்பற்ற வேண்டியதில்லை. சிக்கனமற்றதும் ஆதாயமற்றதுமான திட்டங்களாக இருந்தாலும்கூட, அப்பகுதி வாழ் மக்களுக்கு பயன்பெறும் வகையில் உதவும் நோக்கத்துடன் கொண்டு வரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திற்கு கிருஷ்ணா நதி நீர் ஆந்திராவிலிருந்து வர வேண்டும் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள். அந்த முறையில் எங்கள் காங்கிரஸ் கட்சி சார்பாக எங்களால் ஆன முழு முயற்சியையும் எடுத்துக் கொள்வோம்.

சேலம் மாவட்டம் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டமாகும். ஏழை எளிய விவசாயிகள் தங்கள் நிலங்களில் பயிர் செய்து தற்போது பயிர்கள் எல்லாம் காய்ந்து விட்டன. மழை பெய்கின்ற காலங்களில் மழை அதிகமாக இருப்பதால்—எங்கள் பகுதியில் காட்டாறுகள் அதிகமாக இருக்கின்றன—காட்டாறுகளில் ஓடுகின்ற தண்ணீர் வீணாகக் கடலில் சென்று கலந்து விடுகிறது. ஆகவே வீணாக கடலில் செல்லும் தண்ணீரை தேக்கி பயன்படுத்த அணைக்கட்டுகள் அல்லது ஏரிகள் கட்டிக் கொடுத்தால் அந்தத் தண்ணீரை அங்குள்ள விவசாய மக்கள் பயன்படுத்தி விவசாயம் செய்வதற்கும், அவர்கள் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளவும் வாய்ப்பாக இருக்கும்.

அதேபோல் பெத்தநாய்க்கன் பாளையத்தில் வசிஷ்ட நதி ஆற்றில் ரெட்டி அணைத் திட்டத்தை ஆரம்பித்து வேலைகளைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடந்த ஆண்டு ரூபாய் 3,63,000-க்கு மதிப்பீடுகள் அனுமதி அளிக்கப்பட்டது. தற்போது அந்தத் திட்டம் அதிக நன்செய் நிலங்களுக்குத் தண்ணீர் பாசனம் கொண்டு வரும் திட்டமாகத் தீட்டப்படுகிறது. தற்போது அந்த அணையின் மதிப்பீடுகள் 12 இலட்சம் ரூபாயாகும். எனவே அந்த அணைத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்தி வேலைகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் புதிய ஏரிகள், குட்டைகள் முதலியன ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சேலம் மாவட்ட மக்கள் கடினமாக உழைக்கக்கூடிய மக்கள். சேலம் மாவட்டம் ஏரிப் பாசனம், கிணற்றுப் பாசனம் இவற்றை ஓரளவு கொண்ட ஒரு மாவட்டமாகும். காவிரி நீர் இருந்தாலும் சேலம் மாவட்டத்திற்கு அது ஓரளவு கூட பயன்படவில்லை. ஆகவே காவிரித் தண்ணீரை கால்வாய்கள் மூலம் கொண்டு வந்து எங்கள் பகுதிக்குக் கொடுக்க வேண்டும்.

ஆத்தூர் ஒன்றியத்திலுள்ள அப்பமசமுத்திரம் அருகே மலையடிவாரத்தில் காட்டு ஓடையின் குறுக்கே தண்ணீரைத் தேக்கி வைக்க ஏரி ஒன்றைக் கட்ட வேண்டும். அதே போல் ராமநாயக்கன்பாளையம் கிராமத்திற்கு வடக்கே காட்டு ஓடையின் குறுக்கே ஏரி ஒன்றும் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 1975-ஆம் ஆண்டில் காட்டாறுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து கிட்டத்தட்ட ஐம்பது ஏக்கர் நிலங்கள் மூடப்பட்டுவிட்டன, கிணறுகளும் மூடிவிட்டன. எனவே அதுபோன்ற காட்டாறுகள் குறுக்கே செக்டாம்ஸ் கட்ட வேண்டும் அல்லது சிறிய ஏரிகளாவது கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ராமநாய்க்கன்பாளையத்திற்கு வடக்கே மலையடிவாரத்தின் அருகில் ஆனை வாரியின் குறுக்கே ஒரு அணை கட்டினால் அப்பகுதி மக்கள் விவசாயத்திற்கு பயன்படும். அதோடு நிலத்தடி நீர் மட்டம் மிகச் சுலபமாகக் கிடைக்கும். எனவே காட்டாற்றுத் தண்ணீரையும் மலைச் சரிவுகளிலிருந்து வரும் தண்ணீரையும் தேக்கி வைத்தால் பாசன வசதி கிடைக்க ஏதுவாகும்.

கந்தசாமிபுதூருக்கு மேற்கே ஏரச்சக்கல் ஓடையின் குறுக்கே ஒரு அணை கட்டித் தரவேண்டும். அது குறித்து பொதுப்பணித் துறை மேற்பார்வை பொறியாளர் அவர்களும் மற்ற அதிகாரிகளும் பார்வையிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தினை நிறைவேற்றித் தந்தால் பாசன வசதி அதிகப்படியாகக் கிடைக்கும்.

சீலியம்பட்டி ஊருக்கு வடக்கே மலையடிவாரத்தில் ஒரு சிறிய ஏரி கட்ட வேண்டும். தாண்டவராயபுரம் பெரும்பள்ளம் ஓடையில் குட்டை ஒன்றும் அமைக்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆத்தூர் புது ஏரி தூர் எடுத்தல், உடையம்பட்டி லட்சுமண சமுத்திரம் ஏரி தூர் எடுத்தல், அய்யலூர் கோவில் ஏரி தூர் எடுத்தல், கொண்டையம்பள்ளி ஏரி தூர் எடுத்தல் இவைகளைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கூட மூலப்புதூர், கூடமலை ஆகிய இடங்களில் புதிய ஏரிகள் அல்லது சிறு குட்டைகளாவது கட்டித் தர வேண்டும் எங்கள் மாவட்டத்தில் ஆற்றுப் பாசனம் மிக மிகக் குறைவு. கிணற்றுப் பாசனம்தான் அதிகமாக இருக்கிறது. எனவே கிணற்றுப் பாசனத்தை அதிகமாக்க நீர்த் தேக்கங்கள், ஏரிகளை எங்கள் மாவட்டத்தில் அமைத்துத் தர அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.





மேற்கு நோக்கி பாயும் உபரி நீரை இராமநாதபுரம், மதுரை கோவை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கு திருப்புவது பற்றி தமிழ்நாட்டு முதல்வர் அவர்கள் கேரள முதல் அமைச்சர் அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

மேலும், இந்த ஏரிகளை செயல்படுத்த வேண்டுமென்று பல வருஷங்களாக வேண்டுகோள் விடுத்தும், அந்த ஏரிகள் செயல்படுத்த முடியாமல் இருக்கின்றன. ஆகவே, தமிழகத்திலே நிலத்தடி நீரானது கீழே நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. நிலத்தடி நீரை அதிகப்படுத்த, பெரிய நீர்த் தேக்கங்களை அணைக் கட்டுகளைக் கட்டினால், அந்த நீர்த் தேக்கங்களினால் நிலத்தடி நீர் பெருகும். ஆகவே, அந்த முறையில் நிலத்தடி நீரைப் பெருக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறி, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

திரு. மு. சுந்தரராஜன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டிற்கான பாசனத் துறை மானியத்தின் மீது பேசுவதற்கு அனுமதி அளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் சார்ந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்திற்கு நீர்ப்பாசன வசதிகள் இல்லாமல் இருந்து வந்த அந்த நிலைமையை மாற்றி அமைக்கின்ற வகையிலே கேரளாவிலே இருந்து தண்ணீர் திருப்பி விடப்பட இருப்பதால், இராமநாதபுரம் மாவட்டம் பயன்பெறும் என்ற நம்பிக்கை அளிக்கின்ற இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்ல, மேற்கு இராமநாதபுரத்தில் வெம்பக்கோட்டை நீர்த் தேக்கத் திட்டத்தை 325·60 இலட்சம் செலவிலும், குள்ளூர் சந்தை நீர்த் தேக்கத் திட்டத்தை 121 இலட்சம் செலவிலும் இன்றைக்கு வேலை நடந்துக் கொண்டிருக்கிறது. அதிலே, கீழச் சந்தை திட்டத்தைப் பொறுத்த அளவில், ஏற்கனவே அ.தி.மு.க. ஆட்சி இருந்த காலத்தில், முதல்வர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, திரும்ப அந்த ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, இங்கேயிருந்த கவர்னர் ஆட்சி, அதை நிறுத்தி வைத்து, இன்றைக்கு மீண்டும் இந்த ஆட்சி வந்தபின், இந்த வேலைகள் எல்லாம் 1980 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறபோது, எங்கள் மாவட்டத்தின் சார்பாக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டிலே இருக்கான்குடி நீர்த் தேக்கத் திட்டத்திற்கு 600 இலட்சம் செலவிலேயும், கோல்வார்ப்பட்டி நீர்த்தேக்கத் திட்டத்திற்கு 381 இலட்சம் செலவிலேயும், ஆணைக்கூட்டம்

நீர்த் தேக்கத் திட்டத்திற்கு 183 இலட்சம் செலவிலேயும் மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் இன்று இந்தத் திட்டங்களை எடுத்திருப்பதற்காக, இந்த அரசை நாங்கள் உள்ளபடியே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேபோல், கோல்வார்பட்டி நீர்த் தேக்கத் திட்டத்தைப் பொறுத்த வரையில், ஏற்கனவே அங்கே ஒரு கண்மாய் இருக்கிறது. இந்த கோல்வார்ப்பட்டி கண்மாய், இராமநாதபுரம் பெரிய கண்மாய்க்கு அடுத்த கண்மாயாக இருக்கிறது என்று கருதப்படுகிறது. இந்தக் கண்மாயை ஏற்கனவே கிட்டத்தட்ட 18 கோடி செலவிலே செப்பனிட இருந்தது. அந்தப் பகுதி முழுவதும் அரிசனங்கள் வாழக் கூடிய பகுதியாகும். அந்தக் கண்மாயில் தூர் எடுக்க வேண்டுமென்று பல வருடங்களாக அந்தப் பகுதியிலே இருந்து விண்ணப்பங்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. கோல்வார்ப்பட்டி நீர்த் தேக்கத் திட்டம் ஏற்கனவே இருப்பதால், அதோடு இந்த கோல்வார்ப்பட்டி கண்மாய்த் திட்டத்தையும் சேர்த்து, தூர் எடுத்து ஆழப்படுத்தினால், பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பாசன வசதி பெறுவதோடு, அங்கே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட அரிசன மக்களுக்கும் குடிநீர் வசதிபெற வாய்ப்பாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதனால் விவசாயமும் பெருகும். அப்படி இந்த கோல்வார்ப்பட்டி நீர்த்தேக்கத் திட்டத்தை செயல்படுத்துகின்றபோது, ஏற்கனவே இந்த கோல்வார்ப்பட்டி கண்மாயினால் பாசன வசதி பெற்று வந்த நிலங்களை பாதிக்காத அளவிலே பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை விடுவது என் கடமை என்று கருதுகிறேன்.

ஆணைக்கூட்டம் நீர்த் தேக்கத் திட்டத்தை அந்தப் பகுதி மக்கள் அது எப்போது வருமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நீர்த் தேக்கத் திட்டத்திலிருந்து இன்றைக்கு தெற்கே மட்டும் ஒரு கால்வாய் அமைத்து, சிவகாசிக்கு எடுத்துச் செல்ல இருப்பதாக உணர்கிறேன். நான் இன்னொரு வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். இந்த ஆணைக்கூட்டம் நீர்த் தேக்கத் திட்டத்திற்குப் பக்கத்திலே விருதுநகர் குடிநீர் திட்டத்திற்கான ஏரி அமைந்திருக்கிறது, ஆகவே, தெற்கே போட இருக்கின்ற கால்வாயோடு, வடக்கே போகும் ஒரு கால்வாயை அமைத்தால், விருதுநகருக்கு குடி தண்ணீர் கிடைப்பதோடு, அந்த ஏரியை நிரப்புவதற்கும் பயன்படும்.

புதுக்கோட்டை கண்மாய், வெள்ளூர் கண்மாய், ஆமத்தூர் கண்மாய், செங்குன்றபுரம் கண்மாய், பாலாலி கண்மாய் ஆகியவைகளிலே தண்ணீர் நிரப்புவதற்கு தோதுவாக இருக்கும். ஆகவே, இதையும் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். கலையாங்குளம் கண்மாயைப் பொறுத்த வரையில், இந்தக் கண்மாயிலும் தண்ணீர் கொண்டு வரவேண்டும்.





வருடாவருடம் அந்தப் பகுதி மக்களிடையே தகராறு ஏற்படுகிறது. அதற்கு ஆரம்பத்திலேயே ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்.

வள்ளியூர் என்ற இடத்திலே கண்மாய் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே இப்போது 35 ஏக்கர்கள்தான் பாசனம் பெறுகிறது. அதிலே தூர் எடுத்து தண்ணீர் விட்டால், 10 ஏக்கர்களுக்கு மேல் பாசனம் கிடைக்கும். மீதி ஏக்கருக்கு அந்த கண்மாயில் இருக்கிற தண்ணீரே காணாமல் இருக்கிறது. ஆரம்ப ஒப்பந்தத்தின்படி கலையன்குளம் கண்மாய்க்குத் தண்ணீர் வந்த பிறகுதான் அதை அடைக்கவேண்டுமென்று உத்தரவு இருக்கிறது என்ற காரணத்தினால் அடிக்கொருமுறை இந்த கலையன்குளம் கண்மாய்க்காரர்களுக்கும், அந்த பகுதி மக்களுக்கும் கண்மாயைத் திறந்து விடுவதில் தகராறு ஏற்பட்டு, ஆர்.டி.ஓ., அவர்கள் போய் அடிக்கடி சமாதானம் செய்கின்ற நிலைமை இருக்கிறது. வடமலைக்குறிச்சி பெரிய கண்மாய் இருக்கிறது. அதில் வருடா வருடம் மழை பெய்து தண்ணீர் நிரம்பி ஓடிவந்து கவுசிக மகாநதியில் கலக்கின்றது. அப்படி வெள்ளம் வருகின்ற காலத்தில் தண்ணீர் அதிகமாக வருகிற காரணத்தால் பக்கத்திலே இருக்கிற அய்யனார் போன்ற கிராமங்களில் தண்ணீர் நிரம்பி, சிறு குழந்தைகளை எல்லாம் அடித்து செல்கிற சூழ்நிலை இருக்கின்றது. அங்கு தண்ணீரை தடுத்து நிறுத்தி அந்த கலையன்குளம் கண்மாய்க்குப்போய் சேர்கிற அளவுக்கு செய்தோமேயானால் அந்த கண்மாய் நிரம்புகின்ற நிலைமை ஏற்படும். அந்த ஊரும் காப்பாற்றப்படும்.

வடமலைக்குறிச்சி கண்மாயை ஆழப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை மக்கள் விடுத்திருக்கிறார்கள். அதிகாரிகள் பார்வையிட்டு, மண் வெட்டி போட இடம் வேண்டுமென்று கேட்டார்கள். அந்த ஊர் மக்கள் 4 ஏக்கர் நிலம் ஒதுக்கியும், இதுவரையில் அந்தத் திட்டம் செயல்படாமல் இருக்கிறது. சீக்கிரமாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யக் கோருகிறேன்.

[திரு. வி. வி. சுவாமிநாதன் தலைமை]

என்னுடைய விருதுநகர் தொகுதியில் எரிச்சநத்தம் கிராமத்தைச்சுற்றி ஆறு கண்மாய்கள் இருக்கின்றன. இந்த கண்மாய்களுக்கு வரும் உபரி தண்ணீர் திசை திருப்பப்பட்டு விட்டதால், வருடாவருடம் கண்மாய்களுக்குத் தண்ணீர் சரியாக வருவதில்லை. இந்தக் கண்மாய்களுக்கு எரிச்சநத்தம் கிராமத்திற்கு மேற்கே பாரப்பட்டி கண்மாயின் உபரி தண்ணீர் செல்லும் ஓடையையும், அதைத் தொடர்ந்துள்ள உப்போடையையும் இணைந்து உள்ள இடத்திலிருந்து அந்தத் தண்ணீரை மறித்து எரிச்சநத்தம் கண்

மாய்க்கும் செவல்குளம் கண்மாய்க்கும், கால்வாய் மூலம் உபரித் தண்ணீரைக் கொண்டு வருவதின் மூலம் எரிச்சநத்தம், செவல் குளம், தாளிக்குளம். குமிளங்குளம், கொத்தனேரி, நல்லையன் குளம், கண்டனேரி ஆகிய ஏழு கண்மாய்கள் நீர்ப் பாசன வசதி பெற்று சுமார் 1,500 ஏக்கர் நிலங்கள் வரை பாசன வசதி பெறுகிறது.

நிலத்தடி நீரைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். நிலத்தடி நீரைப் பொறுத்தவரையில் அரசாங்கத்திலோ, பாங்குகளிலோ கடன் போட்டு கிணறு தோண்ட வேண்டுமென்று விவசாயிகள் அணுகுகின்ற போது, நிலத்தடி நீரைப் பெறுவதற்கு "கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட்" இருந்தால்தான் லோன் கிடைக்கும் என்ற நிலைமை இருக்கிறது. ஆனால், பணக்காரர்களும், மற்றவர்களும், "கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட்" இல்லாமலேயே கிணறுகளைத் தோண்டுகின்ற நிலைமை தமிழ்நாட்டிலே பல இடங்களில் இருக்கின்றன. இதைப் போக்குகின்ற விதத்தில் அரசாங்கம், யாராக இருந்தாலும் "கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட்" இருந்தால்தான் இதை பெற முடியும், வாங்கத்தான் வேண்டுமென்கின்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

*திரு. டி. மணி: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசன மானியக்கோரிக்கை மீது நான் சேர்ந்திருக்கிற இயக்கத்தின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக இந்த கால்வாய்கள் வெட்டப்பட வேண்டுமென்றாலும் சரி, அணைக்கட்டு கட்டவேண்டுமென்றாலும் சரி, இது போன்ற மற்ற திட்டங்கள் என்றாலும் சரி, அதற்குச் சொல்கிற காரணம் ஆய்விலே இருக்கிறது என்று சொல்கிற வார்த்தை பயன்படுத்துகின்றார்கள். அதுமட்டுமல்லாமல் பரிசீலனையில், இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆய்வு, பரிசீலனை என்றால் அதற்கு எத்தனை ஆண்டுக் காலம் என்பதைப் பற்றிச் சொன்னால், ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டு என்று குறிப்பிட்ட காலத்தில் அந்தப் பணிகளை செய்து முடிக்கவேண்டும். குறிப்பாக என்னுடைய மாவட்டத்திலே இருக்கிற பள்ளிக்கூடம் அணைக்கட்டுத் திட்டம் சம்பந்தமாக இரண்டு ஆண்டுகளாக ஆய்வு வேலை ஆரம்பிக்கப்பட்டு இன்னும் அறிக்கை சமர்ப்பிக்கப் படாத நிலையில் இருக்கிறது. எனவே, இந்த ஆய்வு என்று சொல்கிற வார்த்தைக்கு எந்தக் காலக் கட்டத்திற்குள் வேலை முடிக்கப்படும் என்பதை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

கால்வாய்கள் சம்பந்தப்பட்ட வரையில் குறிப்பிட்டுச் சொன்னால் குறிப்பிட்ட காலத்தில் அந்தப் பணிகள், முடிக்கப்படுவதில்லை. அதற்கும் பரிசீலனை என்று சொல்கிறார்கள். குமரி





மாவட்டத்திலே திற்பரப்பு கால்வாய் என்று சொல்லுகிற கால்வாயை 1960-க்கு முன்னாலேயே அந்த கால்வாய் கோரிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பொழுது என்ன சொல்கிறார்கள் என்றால் அந்த கால்வாய்க்கு வருகிற தண்ணீர் கோதையாறு பிராஜெக்ட்டுடன் சேர்ந்தது என்கிறார்கள். ஆனால், அது கோதையாறு திட்டத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை.

நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் ஒரு கேள்வியை கேட்கின்றபொழுது அது பத்து காணியிலிருந்து உற்பத்தி ஆகி வருகின்ற ஆற்றிலிருந்து தண்ணீரை பெறுகின்ற பகுதி திற்பரப்பு அணை.

[நண்பகல் 12—00]

அது போன்று திற்பரப்பு கால்வாய்—அந்தக் கால்வாய் வெட்டப்பட வேண்டியிருக்கிறது. அந்தக் கால்வாய் வெட்டப்பட வேண்டுமென்று நீண்ட நெடுங்காலமாக கோரிக்கை வைக்கப்பட்டிருந்தாலும் காலாகாலத்தில் வேலை ஆரம்பிக்கப்படவில்லை என்ற நிலை தான் இருக்கிறது. ஆகவே வேலைகள் ஆரம்பிக்க காலா காலத்திலே வேலை துவக்க வெகு சீக்கிரத்திலே முடிக்கப்பட வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யவேண்டும். அடுத்து வேலைகள் நடைபெறுகின்ற இடத்திலே வேலைகள் நடக்க ஆண்டுகள் அதிகமாய் விட்டாலும் வேலைகள் நன்றாக அமைவதில்லை. காரணம் ஒரு ஆண்டு தாண்டி அடுத்த ஆண்டு போனால் விலைவாசி ஏறிவிடுகிறது. சிமெண்ட் விலை உயர்கிறது. கம்பி விலை உயர்கிறது. அதோடு கூட சம்பளமும் உயர்கிறது. உதாரணமாக குமரி மாவட்டத்திலே ஒரு மண்வெட்டும் தொழிலாளிக்கு சம்பளம் 12, 13 ரூபாய், அதேபோல ஒரு கொத்தனாருக்கு கொடுக்கிற கூலி 20 ரூபாய் வரையிலும் இருக்கிறது. 1978—79-ஆம் ஆண்டிலே வேலையை ஆரம்பித்து 1981-ஆம் ஆண்டிலே முடிக்கிற காலத்திலே விலைகள் உயர்ந்து கூலியும் உயருகிற காரணத்தினால் வேலையை அந்தப் பணத்திற்குள் முடிக்க முடியாத காரணத்தால் சில ஒப்பந்தக்காரர்கள் வேலையை விட்டு விட்டுப் போய் விடுகிறார்கள். ஆகவே, வேலையை முடிக்க மொத்தம் 3,4 ஆண்டுக் காலம் என்று வைத்துக்கொண்டு முடிக்க வேண்டும், அப்படி முடிக்கப்படுகிறபோது வேலைகள் முடிக்கிறக் காலத்திலே எந்தளவிற்குப் பொருள்களின் விலைகள் ஏறும் என்பதையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு அந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குளம், கண்மாய், ஏரிகள் சம்பந்தப்பட்ட வரையில் 20 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த பரப்பளவு இருக்கிறதா என்றால் இல்லை. குளமாக இருந்தாலும் சரி, கண்மாயாக இருந்தாலும்

சரி, அணையாக இருந்தாலும் சரி, குளத்தைத் தூர் வார்கிற போது அந்த மண்ணை கரைகளிலே போடுகிறோம். அதைபோலவே ஏரிகளை தூர்வாருகிறபோது அந்த மண்ணை கரைகளிலேயே போட்டுவிடுகிறோம், அதனால் கரைகளிலே குடிசைகளைப் போடுகிறார்கள், கரைகளிலே பயிர்கள் ஏற்றப்படுகின்றன. அதனால் பின்னாலே அந்த நிலத்திற்கு தூசி பட்டா கொடுக்கப்படுவதைப் பார்க்கிறோம். இருபது ஆண்டுகளுக்கு முன்னாலே ஏரி, குளம், அணைகளுக்கு இருந்த கொள்ளளவு இப்போது குறைந்து இருக்கிறது. குறிப்பாக பேச்சிப்பாறை அணையை எடுத்துக் கொண்டால் அதன் கொள்ளளவு குறைந்து போய் இருக்கிறது. அதைப்போலவே சிற்பரப்பு அணையின் கொள்ளளவு இப்போது குறைந்துபோய் விட்டது. நாகர்கோவிலில் நாஞ்சில் நாட்டிலே பறக்கைக் குளம் என்று இருக்கிறது. அது 125 ஏக்கருக்கு அதிகமாக உள்ள குளம். இன்றைக்கு அந்தக் குளத்தின் கொள்ளளவு பெருவாரியாகக் குறைந்துவிட்டது. அருகிலே மண்ணைக் கொட்டுவதால்—காரணம் அந்த மண்ணை வெட்டுகிறபோது அதைக் கொண்டு செல்வதற்கான நிதி ஒதுக்கப்படுவதில்லை—அதனால், அதனுடைய நீர்ப்பிடிப்பு பகுதியிலேயே மண்ணைப் போடுவதால் குளத்தின் அசலம் குறைந்து கொள்ளளவு குறைந்து விடுகிறது. ஆகவே, மண்ணை எடுத்துச் செல்வதற்கான நிதியையும் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்திலே குளங்களை ஆக்கிரமிக்கக் கூடிய போக்கு இருக்கிறது. நாகர்கோவிலிலே ஒழுகின சேரி என்ற இடத்திலே பாலசுந்தரம் மருத்துவ மனை இருக்கிறது. அதற்கு அருகாமையிலே ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளத்தின் கரைகள் எல்லாம் ஆக்கிரமிக்கப்பட்டு குடிசைகள் போடப்பட்டிருக்கின்றன. அந்தக் குடிசைகளை எடுக்கச் சொல்கிறபோது பிரச்சினையாகிவிட்டது, குடிசைகள் போட்டு, பத்து ஆண்டுக்காலம் சென்று பார்த்தால் குளங்கள் எல்லாம் கால்பந்தாட்ட மைதானங்களாகக் காட்சியளிக்கிற நிலை உருவாகி, விவசாயிகளுக்கு பாசன வசதி கிடைக்காத நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே, குளங்கள், அணைகள், ஏரிகளை ஆக்கிரமிக்கின்ற நிலை நீக்கப்படவேண்டும். சித்தாறு இரண்டு அணை இருக்கிறது. அங்கே கேட்ச்மெண்ட் ஏரியாவிலே காலி இடத்திலே அதிகாரிகள் விவசாயிகளுக்கு பயிர் ஏற்றுவதற்காக விவசாயிகளுக்கு குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். இந்த நிலை நீடித்தால் அணைகள் எந்த அளவுக்குப் பாதுகாக்கப் பட முடியும் என்பதைப் பார்க்கவேண்டும். ஆகவே, இந்த நிலை நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே 16 ஆயிரம் ரெவின்யூ கிராமங்களிலே கிட்டத்தட்ட மழை நீரைத் தேக்கி கால்வாய்கள் மூலமாக நீர் விநியோகம் செய்யப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே





இருந்ததைவிட இப்போது 1981—82-ல் எந்த அளவுக்கு கூடுதல் நீரைத் தேக்கி பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது? வாய்ப்பு பெருகியிருக்கிறதா? எந்த அளவுக்கு கூடுதலாக பயிர்களை ஏற்ற முடியும் என்ற அளவுகோலை வைத்துப் பார்க்கிற போது 1980-க்கும் 1982-க்கும் எந்த அளவுக்கு முன்னேற்றம் இருக்கிறது என்பதை முன்னேற்பாடாகப் பார்த்து எவ்வளவு அணைகளை அதிகப்படுத்திக்கொள்ள முடியும் என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். இப்படிப்பட்ட பொதுவானக் காரியங்களைச் சொல்லி, என்னுடைய மாவட்டத்தில் இருக்கின்ற ஒரு சில முக்கியமான பிரச்னைகளைப்பற்றி நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

எங்களுடைய மாவட்டத்திலே நான் முதலிலேயே சொன்னேன் பள்ளிக்கூடம் அணைக்கட்ட வேண்டும் என்று அந்த அணை கட்டினால் அது சம்பந்தமாக இரண்டு கோரிக்கைகள் நிறைவேறும். அது என்னவென்று சொன்னால், ஒன்று தண்ணீரைத் தேக்கி சீராக விநியோகம் செய்வதால் தண்ணீர் கிடைக்காத மூன்று நான்கு கிராமங்களுக்கு, குறிப்பாக அண்டுவோடு கிராமம், இடைக்கோடு கிராமம், விளவங்கோடு கிராமம் ஆகிய இப்படிப்பட்ட மூன்று நான்கு கிராமங்களுக்கு அந்தத் தண்ணீரைக் கொடுப்பது என்பதாகும். ஏற்கெனவே மழைக் காலத்தில் அண்டுவோடு கிராமம், இடைக்கோடு கிராமம், பாகோடு கிராமம், பழகல் ஆகிய கிராமங்களில் முல்லையாற்றில் வருகின்ற அதிகத் தண்ணீரின் காரணமாக நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சேதமடைகின்றன. ஆகவே, இந்த சேதத்தைத் தடுப்பது என்பது ஒன்று. நீரை தேக்கி வைத்துச் சீராக விநியோகம் செய்வது என்பது மற்றொன்று. ஆக இந்த இரண்டு தேவைகள் இதில் பொருந்தியிருக்கின்றன. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவதெல்லாம், இந்த நிதியாண்டிலே அதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதாகும். இது நீண்டகாலமாக உள்ள எங்களது கோரிக்கை. இது ஒன்று.

அடுத்து, இரண்டாவது, மடிச்சல் கால்வாயைப் பற்றியது. அந்த மடிச்சல் கால்வாயைப் பற்றிப் பல்வேறு கேள்விகளை நாங்கள் கேட்டு, பல்வேறு பதில்களைத் தந்திருக்கிறார்கள். ஆனால், அதிலே இருக்கின்ற பிரச்னை என்னவென்றால், 1963 ஆம் ஆண்டிலே நெய்யாறு அணைத்திட்டம் பூர்த்தியாகி நெய்யாறு இடது கரை கால்வாய் என்பது முடிக்கப்பட்டது. அந்தக் காலத்திலேயிருந்து இந்த மடிச்சல் கால்வாய் வேண்டுமென்றே கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது. 1963 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட அதனுடைய ஆய்வு வேலைகளை முடித்தார்கள். ஆனால், கேரளாவிலிருந்து தருகின்ற தண்ணீரிலே தகராறு என்று சொன்னார்கள். அந்தத் தகராறைப் பொறுத்த மட்டில் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், அங்கே சென்று

நாம் பார்த்தோமேயானால் வினாடிக்கு 60 கன அடி தண்ணீர் வந்தால் இந்த இடது கரை வாய்க்காலிலிருந்து ஓவர் ஃப்ளோ ஆகிவிடுகிறது. ஆகவே, மடிச்சல் கால்வாய்க்குத் தண்ணீர் கொடுக்க முடியுமா என்றால் முடியும். நான்கு பிரதானப்பட்ட ஓடைகள் வழியாகத் தண்ணீர் ஒழுகி லீக்கேஜாகிப் போய்விடுகிறது. அதைத் தடுத்தாலே இந்த மடிச்சல் கால்வாய்க்குத் தண்ணீர் கொடுக்க முடியும்.

ஏற்கெனவே சமீபத்தில் கேரள மாநில அரசோடும், அதிகாரிகளோடும் பேசி அவர்கள் தெளிவான ஒரு கருத்தைத் தந்திருக்கிறார்கள். ஒரு வினாடிக்கு 110 கன அடி தண்ணீர் தர முடியும் என்ற உத்தரவாதம் கூட அந்த அரசிலிருந்து அறிவிக்கப்பட்ட பிறகும் கூட அந்த பணி சேர்த்துக்கொள்ளப்பட முடியவில்லை. ஆகவே, என்னுடைய பணிவான வேண்டுகோளெல்லாம் அந்த மடிச்சல் கால்வாய்த் திட்டத்தை இந்த நிதியாண்டில் சேர்த்துக் கொள்ள வேண்டும். 1971-72 ஆம் ஆண்டுக் காலத்திலே சீரணிப் படையினரால் அந்த மடிச்சல் கால்வாயின் ஆரம்ப வேலைகள் செய்யப்பட்டு, அந்தக் கால்வாய் போடப்பட்டிருக்கிறது. அந்தக் கால்வாயின் அகலம் இரண்டு அடிதான். அதற்கு மேலே இல்லை. ஆகவே, மழைக் காலங்களிலே மண் இடிந்து வழிந்து நிரம்பி விடுகிறது. ஆகவே, முறையாக அந்த மடிச்சல் கால்வாயை வெட்டினால் அதற்குப் பின்னால் இருக்கின்ற சுமார் 20 குளங்களுக்குத் தண்ணீர் கொடுத்தால், விளவங்கோடு கிராமத்திலுள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயனடையும். ஆகவே, அந்த முறையில் அதைச் செய்து முடித்துத்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, திற்பரப்பு கால்வாயினுடைய பிரச்சினை இதுதான். இதைப்பற்றி நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசனப் பிரச்சினையைப் பற்றி நான் சொல்கின்றபொழுது, ஏற்கெனவே வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற நேரம். இவ்வாறு வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில் எங்கள் மாவட்டத்திலே வறட்சிப் பகுதியிலே சேர்த்துக் கொள்ளப்படவில்லை. எங்களுடைய மாவட்டத்தை முழுமையாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் மாவட்டத்தினுடைய பல்வேறு கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே, ஜனவரி மாதம் நான் வருவாய்த் துறை அமைச்சரவர்களிடம் பல்வேறு கிராமங்களில் பயிர்கள் கருகிப்போயிருக்கின்றன; வறட்சி பாதித்துள்ளது என்ற தகவலைக் கொடுத்துள்ளேன். ஆனால் முதல் கட்டமாக, வறட்சிப் பணிக்காக பத்து இலட்சம் ரூபாய் தான் அந்தப் பகுதிக்கு அனுமதித்திருக்கிறார்கள். குன்னத்தூர் கிராமம், கிள்ளியூர் கிராமம், ஆறுதேசம் கிராமம், விளவங்கோடு கிராமம், கல்குளம் தாலுகாவினுடைய பல





கிராமங்கள், கொல்லங்கோடு கிராமம் ஆகிய இவைகளெல்லாம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்தப் பணிகளுக்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து, அதன் மூலம் குளங்களைத் தூர்வாருவது போன்றவற்றைச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விளாத்துறை லிப்ட் இர்ரிகேஷனைப் பற்றி எடுத்துக் கொண்டால், ஏற்கனவே சித்தாரினுடைய கால்வாயினுடைய ஒரு பகுதி அந்த வழியாகச் சென்ற காரணத்தினால் அந்தத் தண்ணீர் போதுமானது எனக் கருதி அந்த லிப்ட் இர்ரிகேஷனிலே இயங்கி வந்த இயந்திரங்களை எடுத்துச் சென்றுள்ளார்கள். விளாத்துறை லிப்ட் இர்ரிகேஷன் புனரமைக்கப்பட்டால் நான்கு கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும். குறிப்பாக குன்னத்ணீர், ஆறுதேசம், கிள்ளியூர் போன்ற கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும். ஆகவே, அந்த ஏற்பாட்டைச் செய்து முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தஞ்சாவூர் ஏரி என்று சொல்லப்படுகின்ற ஏரியும், வடுவூர் ஏரியும் ஆழப்படுத்தப்பட்டு, அந்தக் கரைகள் செப்பனிடப்பட வேண்டும்.

கிழக்குத் தஞ்சை முழுவதும் என்ன நிலைமை இருக்கின்றது என்றால் அங்கே மழைக் காலங்களில் ஏராளமான தண்ணீர் வருகின்ற காரணத்தினால் அந்தத் தண்ணீர் முறையாக வடிகால் மூலம் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யாததன் காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் உள்ள பயிர்கள் சேதமடைகின்றன. ஆகவே, அந்த வடிகால்களைப் பராமரித்து சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 12—10)

அதுபோல் திருவாரூர், நன்னிலம், திருத்துறைப்பூண்டி ஆகிய தாலுக்காக்களிலே இருக்கிற நிலை இதுதான். அந்தத் தாலுக்காக்களிலே இருக்கிற அந்தப் பிரச்சினையையும் முடித்துத் தர வேண்டும்.

அதுபோன்று நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, வாசுதேவநல்லூரில் உள்ள உள்ளார் அணைக்கட்டுத் திட்டமும் ஆய்வு செய்யப்பட்டு பல ஆண்டுகளாகிவிட்டன. ஆனால் ஆய்வு வேலைகள் முடிந்து, அதற்குப் பணம் ஒதுக்கீடு செய்தும், அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 'வடக்கு கோடைமேலழகிய கால்வாய், தெற்குக் கோடை மேலழகிய' கால்வாய், நதி உண்ணிக் கால்வாய், கீறியாறு அணைத் திட்டம்,' இந்த வேலைகளையும் அவசரமாகச் செய்து

கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். வட ஆற்காடு மாவட்டம் மோர்தானா அணை குடியாத்தம் பகுதியிலே இருக்கிறது. அதனுடைய ஆய்வுப்பணிகள் இன்று ஓரளவு முடிந்திருக்கின்றன. அந்த வேலையைச் செய்து முடிக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இந்தப் பணிகளையெல்லாம் முறையாக, சரியாகச் செய்து முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

*திரு க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் கொண்டு வந்திருக்கிற பாசனங்கள் மீதான மானியக் கோரிக்கையை இந்த மாமன்றம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோரி, என்னுடைய ஒரு சில கருத்துக்களை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் ஆட்சியிலே வறட்சி அதிகமாக இருக்கிற நேரத்திலே, இன்றையதினம் வறட்சியைப் போக்குவதற்குப் போர்க்கால நடவடிக்கையாக, புரட்சித் தலைவர் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, இன்றைக்கு நீர்ப்பாசன மானியக் கோரிக்கை வந்திருப்பது மிகவும்பொருத்தமானதுதான். ஏனென்றால், வள்ளுவப் பெருந்தகை சொல்வார் :

'' விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி ''

மழையில்லாமல், வானம் பொய்த்துவிட்டால் இந்த விரிந்த உலகத்திலே பசி உள்ளே சென்று வாட்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், வானம் பொய்த்தாலுங்கூட, மழையில்லாமல் போனாலுங்கூட நாட்டு மக்கள் பசியாலும், வறட்சியினாலும் தண்ணீரில்லாமலும் வாடக் கூடாது என்று போர்க்கால நடவடிக்கைகளை இன்றைய தினம் புரட்சித் தலைவர் எடுத்திருப்பது நாட்டு மக்களுடைய பசியைப் போக்குகிறது என்ற அளவுக்கு இருக்கிறது என்று சொன்னால், அது மிகையாது.

இன்னுங்கூடச் சொல்வார், வள்ளுவர் :

'' தானம்தவம் இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்காது எனின் ''.

இந்த வறண்ட உலகத்திலே மழை பெய்யவில்லையென்றால், இந்த உலகத்தினுடைய ஒவ்வொரு மனிதனும் தான் செய்யக்கூடிய தானமும், தனக்கென்று விருப்பமாகச் செய்யக்கூடிய தவ ஒழுக்கமும் நிலைத்து நிற்காது என்று சொல்வார். ஆனால், அப்படிப்பட்ட காரியங்களாலே, வானம் பெய்யவில்லை, வறட்சி அதிகமாக இருக்கிறது. இருந்தாலுங்கூட, அதையெல்லாம், புரட்சித் தலைவர் அவர்கள் நேரிலே சென்று, அந்த வறட்சியைப்



போக்க, புரட்சிகரமான திட்டங்களைத் தமிழகத்திலே தீட்டி செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். ஆகவேதான் இன்றைய தினம் நீர்ப்பாசனத் துறை இந்த அளவிற்குத் தமிழகத்திலே, இந்த வறட்சி நேரத்திலே செயல்படுகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் எல்லோருமே அறிவார்கள். குறிப்பாக, நீர்ப்பாசனங்களிலே பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப் பாசனம் மற்றும் தடுப்புச் சுவர் எழுப்புவது போன்ற பல நிலைகள் இருந்தாலும், பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையிலும், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் தமிழகத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

அதே போன்று பெரியார்—வைகைத் திட்டம். பெரியார் திட்டம் கேரள மாநிலத்தினுடைய எல்லையிலே இருந்தாலும், கேரள மாநிலத்திலே இருந்தாலும், உலக வங்கியினுடைய உதவி கொண்டு, இன்றையதினம் அந்த அணையை விஸ்தரிக்கும்படி செய்து புரட்சித் தலைவருடைய அரசு, 1977 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டுக் கொண்டு வருவதை நான் அங்கே நேரில் சென்று பார்த்து பெருமகிழ்ச்சி அடைந்தேன். ஏனென்றால், எந்த நேரத்தில் அணை உடையுமோ என்ற அச்சம் இருக்கிற காரணத்தால், அந்த அணையைப் பலப்படுத்த வேண்டுமென்று சொல்லி, ஆழமான அணையை அகலப்படுத்த நல்ல திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

அதேபோல் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரை, திருச்சி மாவட்டத்திலே இரண்டு திட்டங்களும், குமரி மாவட்டத்திலே ஒரு திட்டமும், தர்மபுரி மாவட்டத்திலே ஒரு திட்டமும் இருப்பதும் பாராட்டுக்குரியது. இராமநாதபுரம் மாவட்டம், மதுரை, சேலம், கன்னியாகுமரி, கோவை போன்ற மாவட்டங்களிலும் அங்கங்கு பல திட்டங்களைப் புரட்சித் தலைவர் அரசு இன்றைய தினம் நல்ல முறையிலே செயல்படுத்திக் கொண்டு வருவதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் அறிவார்கள்.

அதேபோல், இன்றைய தினம் 40 ஹெக்டேர் நிலங்கள் நஞ்சை இருந்தும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை பெருக்க வேண்டும் என்றும், ஏரிகள், குளங்கள் இருந்தால், அவைகளைப் பராமரிக்க வேண்டுமென்றும் இன்றையதினம் எந்த நிலமும் தரிசாக இருக்கக் கூடாது, விளையக்கூடிய எந்த நிலமும் தரிசாக இருக்கக் கூடாது என்பதற்காக சிறு நீர்ப்பாசனமாக இருந்தாலும் அவைகளை மேம்படுத்த நல்ல திட்டங்களைத் தீட்டி, தமிழக அரசு செயல்பட்டு வருவதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதி சீர்காழி. அந்த சீர்காழித் தொகுதியிலே, தஞ்சை மாவட்டத்தின் கடைசியில் இருக்கும் அந்தத் தொகுதியிலே, சீர்காழியில் இருந்து பூம்புகாருக்குப் போகும் வழியில் 2 ஏரிகள் இருக்கின்றன. சிறுவாலி ஏரி ஒன்றும் அடுத்து பெருந்தோட்டம் ஏரி என்று ஒன்றும் இருக்கின்றன. அவை சீர்காழியில் இருந்து பூம்புகாருக்குச் செல்லும் வழியில் இருக்கின்றன. அவை பொதுப்பணித்துறையினரால் பராமரிக்கப் படுகின்றன. அவைகளை, பொதுப்பணித் துறைநல்ல முறையிலே மேற்பார்வை செய்து பராமரித்தால், அவைகளைச் சுற்றுலா மையமாக ஆக்கினால், அருகிலே பூம்புகாருக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் இவைகளையும் பார்த்து பயனடையக் கூடிய அளவுக்கு விளங்கும் என்பதிலே ஐயமில்லை. ஆனால் அந்த ஏரிகளின் மேடான பகுதியில் தற்போது தனியார்கள் ஆக்கிரமித்து விளை நிலமாக ஆக்கி, நெல் போன்ற விளைப் பொருள்களைப் பயிர்செய்துத் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அரசுக்கும் எந்த விதமான தொகையையும் கொடுப்பதில்லை. ஆகவே அரசு உடனே அந்த ஏரிகளை எடுத்து, ஆழப்படுத்தி அந்தக் கரைகளை பலப்படுத்தவேண்டும். சிறுவாலி ஏரி ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களுக்கும், பெருந்தோட்டம் ஏரி 700 முதல் 800 ஏக்கர் நிலங்களுக்கும் தண்ணீர் விநியோகம் செய்யக் கூடியவையாக இருக்கும். அப்படிப்பட்ட ஏரிகளை அரசு உடனடியாக கவனத்தில் எடுத்துக்கொண்டு, அவை பூம்புகாருக்கு பக்கத்தில் இருப்பதால், பூம்புகாருக்கு அதிக சுற்றுலாபயணிகள் வருவதானால் அவைகளையும் பார்த்துவிட்டு வருவார்கள். அதனால் அரசுக்கு அதிகமான வருவாய் கிடைக்க வழி கிடைக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல வெள்ளத் தடுப்பு என்று சொன்னால் கொள்ளிடத்தை நினைக்காமல் இருக்க முடியாது. கொள்ளிடம் தடுப்பணையில் இருந்து என்னுடைய தொகுதியிலுள்ள பழையாறுக்கு வந்து கடலில் கலக்கின்றது. ஏறக்குறைய 150 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. வெள்ளத் தடுப்பு சரியான முறையிலே, கடந்த காலங்களிலே நடைபெறாததால், அந்தக் கரைகள் சரியான முறையில் பலப்படுத்தாமல் இருந்ததனால், இன்றையதினம் என்ன நடக்கிறது என்றால், சிறு வெள்ளம் கொள்ளிடத்திலே வந்தாலும் அந்தக் கரை உடைந்து பல கிராமங்கள் நாசமடைகின்ற நிலை ஏற்படுகின்றது. அந்த நிலையைப் போக்கவேண்டும் என்று சொன்னால், தமிழக அரசு, அந்தக் கரையின் வலது பக்கத்துக் கரையையும், இடது பக்கத்துக் கரையையும் பலப்படுத்தி நல்ல முறையில் செம்மைப் படுத்தி, வெள்ளக்காலங்களில் எவ்வளவு தண்ணீர் வந்தாலும் அந்த வெள்ளம் கரைகளை உடைக்காத அளவுக்கு வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்துக் கடல் அரிப்புத் திட்டத்தில் என்னுடைய சீர்காழி தாலுகாவில் உள்ள பூம்புகார் பகுதியில் கடல் அரிப்பைத் தடுக்க வேண்டும் என்று தமிழக அரசு திட்டத்தை தீட்டியிருப்பதற்காக அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், ஏற்கனவே அங்கே பூம்புகாரிலே பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அங்கே கண்ணகிக்கும் கோவலனுக்கும் மணி மண்டபம் எழுப்பினார்கள். சுற்றுலா மையத்தை ஏற்படுத்தினார்கள். ஆனால் கடலில் அலை அடித்தால் அந்தக் கலைக் கூடத்தை வந்து தாக்கும். அந்த நிலையைப் போக்க 'எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும், அப்பொருள் மெய்ப் பொருள் காண்ப தறிவு'. 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு' என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு இவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்து அந்தக் கலைக் கூடம் வீணாகக் கூடாது என்பதற்காக இன்றையதினம் தடுப்புச் சுவர் எழுப்பி அந்தக் கலைக் கூடத்தைக் காப்பாற்ற எண்ணம் கொண்டிருப்பதற்காக புரட்சித் தலைவர் அவர்களை மனமாறப் பாராட்டுகிறேன்.

என்னுடைய தொகுதியில் 15 மீனவ கிராமங்கள் இருக்கின்றன. அங்கே 15 ஆயிரம் 20 ஆயிரம் மீனவ மக்கள் வாழ்கிறார்கள். அந்த மக்களுக்கு நல்ல நிவாரணம் அளிக்க வேண்டும் என்றால், அந்தப் பகுதி பூராவிலுமுள்ள தாழ்வான பகுதிக்கு தடுப்புச் சுவர் எழுப்பி அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டு, இந்த மானியத்திலே பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, இந்த மானியக் கோரிக்கையில் கேட்ட தொகையை இந்த மாமன்றம் வழங்கவேண்டும் என்று கேட்டு, முடிக்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 12-20]

*திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசன மானியக் கோரிக்கை எண் 36, 50-ன் பேரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் ஆற்று நீர், மழை நீர், நிலத்தடி நீர் என்று 3 பிரிவுகளாக பிரிக்கலாம். ஆற்று நீரைப் பொறுத்தவரையில் ஏற்கனவே தமிழகத்தில் பல்வேறு ஆறுகளை தேக்கி, அணையாகக் கட்டி, பாசனத்திற்குத் திருப்பி விடப்பட்டு இருந்தாலும் இன்றையதினம் மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, வீணாகச் சமுத்திரத்தில் கலக்கும் அந்த நதி நீர் குறித்து கேரள அரசோடு தொடர்புகொண்டு, தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்கான பேச்சு வார்த்தைகளில் அரசு ஈடுபட்டு இருக்கிறது என்று குறிப்பு இருப்பது வரவேற்கத்தக்கதாகும். அதே சமயத்தில் திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்கள்,

[திரு. தி. கா. நல்லப்பன்] [1981 ஏப்ரல் 2

மற்றும் கோவை மாவட்டத்தின் ஒரு பகுதியிலும் இந்த மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைத் திருப்பி விட்டால் முழுமையாக நீர்ப்பாசனத்திற்கு அவை பயன்படுவதோடு, அந்த மாவட்டங்களிலே இருக்கின்ற வறட்சி நிலைமை அனைத்தும் போக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில், 10—15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட வாய்க்கால்களில் ஏற்படுகின்ற கழிவு நீரைத் தவிர்த்து, அதைப் பாதுகாத்துப் பாசனத்திற்காகப் பயன்படுத்துகிற வகையில் இங்கே குறிப்பு கொடுத்து இருக்கிறார்கள். அப்படிப்பயன்படுத்துகிற காலத்தில் என்னுடைய தொகுதியில் கீழ்பவானி வாய்க்கால், பெருந்துறை ஒன்றியத்தில் 6 பஞ்சாயத்திலும், ஈரோடு ஒன்றியத்தில் 5 பஞ்சாயத்திலும் பாய்கிறது. அவற்றில் கசிகின்ற நீரை சமமான பகுதியில் மண்ணை இருபுறமும் போட்டு தடுத்து அந்த வாய்க்காலில் கொண்டு சென்று இருக்கிறார்கள். அதன் காரணமாக ஏறக்குறைய 20 சதவீதம் 25 சதவீதம் கசிவு நீர் செல்கிறது என்று சொல்கிறார்கள். இதைச் சிறந்த முறையில் முழுமையாகத் தடுத்து நிறுத்தினால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பயன்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

1924-ஆம் ஆண்டில் கருநாடக மாநில அரசுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட அந்த நதிநீர் பிரச்னை இன்னும் பேசித் தீர்வு காணமுடியாமல் இருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் திருச்சிராப்பள்ளி கட்டளைக் கால்வாயிலிருந்து சென்னை நகரத்திறகு குடிநீர் கொண்டு வரவேண்டும் என்று நிலைமை உள்ளதால் நாம் ஏற்கனவே மத்திய அரசோடு பேசி, மத்திய அரசும் ஒப்புக்கொண்டு இருக்கிற கிருஷ்ணா நதியில் இருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருகிற திட்டத்தை மேற்கொள்வோமானால், அந்த நீரையும் முழுமையாகப் பயன்படுத்தமுடியும். காவிரியில இருக்கிற அந்த நீரை விவசாயத்திற்கு முழுமையாகப் பயன்படுத்தமுடியும். அதன் காரணமாக கிருஷ்ணா நதியிலிருந்து வருகின்ற அந்த நீர் நமக்கு லாபகரமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மழை நீரைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பெரும்பாலும் திருநெல்வேலி மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம், இன்னும் ஓரிரு மாவட்டங்கள் கண்மாய்கள், குளங்கள், குட்டைகள் ஆகியவற்றையே நம்பி இருக்கின்றன. பெருமழை பெய்கிற காலங்களில் அந்தக் கண்மாய்கள் நிரம்பி, அங்கே விவசாயத்திற்கும், குடிநீருக்கும் முழுமையாகப் பயன்படுகின்றன. ஆனால் கண்மாய்கள் முறையாக பழுது பார்க்காத காரணத்தால், ஒழுங்குபடுத்தாத காரணத்தால், அவைகளுக்கு மழை நீர் ஒழுங்காக வருவது இல்லை. அவைகள் வேளாண்மைக்கும் பயன்படாமல், மக்களுக்கும் பயன்படாமல் சமுத்திரத்தில் சென்றுகலக்க நேரிடுகிறது. ஆகவே, இந்த வறட்சி



1981 ஏப்ரல் 2] [திரு. தி. கா. நல்லப்பன்]

நிவாரணப்பணிகளின் அடிப்படையில் அந்தக் கண்மாய், குளங்கள், குட்டைகள் ஆகியவற்றில் தூர் எடுத்து, அதனை ஆழமாகச் செய்யவேண்டும். நீர்வரத்துக்கால்வாய்களையும் மராமத்து செய்யவேண்டும். அங்கே மரங்களோ அல்லது வசதி படைத்தவர்களோ ஆக்கிரமிப்பு செய்து இருந்தால் அவர்களை முறையாக அப்புறப்படுத்தவேண்டும். அதன் மூலம் அந்த நீர்ப்பாசனத்தை முறையாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக நிலத்தடி நீர்த் திட்டம். இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் கோவை மாவட்டத்திலும் பெரியார் மாவட்டத்திலும் ஏறத்தாழ 100 அடிக்குக் குறையாமல் 120 அடி 130 அடி ஆழத்தில் கிணறுகள் வெட்டி, கிணற்றிலிருந்து நீர் எடுத்துப் பயன்படுத்துகிறார்கள். அப்படிப் பயன்படுத்துமபோது அங்கே மின்சாரத் தேவை அதிகமாக இருக்கிறது. கிணறுகள் அதிக ஆழமாக இருப்பதால் முறையாக மின்சாரம் இல்லாமல் நீரை எடுத்துப் பயன்படுத்த முடியாது. ஆகவே, அந்தப் பகுதிகளில் வரிசைப்படி மின் இணைப்புக் கொடுக்கும் முறையை சற்று தளர்த்திக்கொடுக்க வேண்டுமென்று, இந்த மானியத்திற்கு சம்பந்தம் இல்லை என்றாலும், கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் ஆலங்காட்டில் கோரையாறும், கண்டகுறிச்சி ஆறும் சந்திக்கும் இடத்தில் ஒரு சைபனைக் கட்ட வேண்டும். மேலும் கால்வாய்களில் தண்ணீர் தேங்கி விடாமல், ஒழுங்காக தண்ணீர் போவதற்கு உரியமுறையில் வடிகால் வெட்டி தண்ணீரைக் கடலிலே விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் குழாய்க் கிணறுகள் அமைப்பதைப் பொறுத்தமட்டில் எங்கள் கட்சி அதை முழுமையாக வரவேற்கிறது. சமுதாயக் கிணறுகள் அமைக்கப்பட்டு, அவை மூலம் கிராமங்களில் சிறு விவசாயிகளுக்குத் தண்ணீர் கொடுப்பதை முழுமையாக வரவேற்பதோடு கடந்த காலத்திலே அம்மாதிரியான ஒரு திட்டம் பரிசீலிக்கப்பட்டு அது என்ன காரணத்தாலோ கைவிடப்பட்டதாகச் சொல்கிறார்கள். அது எந்த அளவுக்கு உண்மை என்று எனக்குத் தெரியாது.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரையில், 100 ஏக்கருக்கும் கீழே உள்ள பாசனக் கண்மாய்களை ஊராட்சி ஒன்றியத்திடம் விட்டிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத்தில் கண்மாய் பராமரிப்புக்கு ஏதாவது திட்டம் தீட்ட வேண்டுமானால் அவர்கள் நீர்ப்பாசனத் துறையைத்தான் அணுக வேண்டியிருக்கிறது. நீர்ப்பாசனத் துறையிடம் இருந்துதான் தகவலைப் பெற்று, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். ஆகவே, 100 ஏக்கருக்குக் குறைவான பாசனக் கண்

மாய்களும் நீர்ப்பாசனத் துறையின் நேரடிப் பராமரிப்பில் இருந்தால், அவர்களே, சென்று பார்த்து, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ள முடியும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் என்னுடைய தொகுதியில் சித்தம்பட்டிக் குளம், குயவன் குட்டைக் குளம் ஆகிய இரண்டு குளங்கள் வெட்டப்பட்டு, நீண்ட காலமாக முறையாக தண்ணீர் வரத்து இல்லாமல் நீரைத் தேக்கி வைக்க முடியவில்லை. அந்த ஒன்றியத்தைக் கேட்டால் நீர்ப்பாசனத் துறையைக் கேட்க வேண்டும் என்கிறார்கள். நீர்ப்பாசனத் துறையைக் கேட்டால் அது ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்டது என்கிறார்கள். இப்படிப்பட்ட இருவேறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. ஆகவே, அனைத்து நீர்ப்பாசனக் கண்மாய்களும், நீர்ப்பாசனத் துறையிடமே இருக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 36,000 குளங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அவைகளை மராமத்து செய்வதற்கு 1981—82-ஆம் ஆண்டுக்கு நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவாக இருப்பதாக நான் நினைக்கிறேன். இந்தக் குளங்கள் அனைத்தையும் இந்த வறட்சி ஏற்பட்டிருக்கிற காலத்தில் மராமத்து செய்கிறபோது முழுமையாக மராமத்து செய்ய வேண்டும். ஓரத்தில் இருக்கிற மண்ணைச் செதுக்கி, மேலே போட்டு உயரப் படுத்தியது போல் மராமத்து செய்யாமல், முழுமையாக ஆழப் படுத்தி, நல்ல முறையிலே வேலைகள் செய்யப்பட்டால்தான் 10, 20 ஆண்டுகளுக்கு மேடிட்டுப் போகாமல், தண்ணீர் தேங்கி நிற்கும். அந்த வகையில் வேலை நடக்கிறதா என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டிய ஒரு நிலை இருக்கிறது.

(பிற்பகல் 12-30)

அடுத்ததாக கோவை மாவட்டத்திலே நீண்ட காலமாகப் பேச்சு வார்த்தையிலே இருக்கின்ற திட்டம் பாண்டியாறு, புன்னம்புழா திட்டம், மத்திய அமைச்சராக திரு. சி. எஸ். அவர்கள் இருந்தபோது ஒரு மாநாட்டை கோவை மாவட்டத்திலே நடத்தி பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று பேசினார்கள். இன்றைய தினம் இந்த அறிக்கையில் கூட அந்தத் திட்டம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆகவே இந்தத் திட்டத்தை முழுமையாகச் செயல்வடிவத்திற்குக் கொண்டு வந்து கோவை, பெரியார் மாவட்டத்தின் முழுமையான நீர்ப்பாசன வசதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு எனக்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. சென்னிமலை என்கிற கந்தசாமி:** மாண்புமிகு பேரவை மற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரிய மற்றும் நடுத்தர திட்டங்களுக்காகவும் தற்போதுள்ள பாசனத் திட்டங்களை நவீனப்படுத்துவதற்காகவும் 151 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழகத்திலே விவசாயம் முன்னேறினால் தான் நாடு முன்னேற்றம் அடையும் என்ற அளவிலே ஒரு விவசாய நாடாக இருக்கின்றது. அந்த எண்ணத்தை மனதிலே கொண்டு தான் எங்கெங்கு நீர்ப்பாசன வசதி செய்து தர வாய்ப்புகள் இருக்கின்றதோ அங்கங்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க இப்படிப்பட்ட திட்டங்களை அரசு தீட்டி உள்ளது குறித்து தமிழக மக்கள் பாராட்டுகிறார்கள்.





கேரளத்தில் மேற்கு நோக்கி ஓடும் தண்ணீரை கிழக்கு நோக்கித் திருப்பி, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டம் போன்ற வறட்சிப் பகுதிகளுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க தமிழக அரசின் முதல்வர் அவர்கள் பல தடவை கேரள அரசை அணுகினார்கள். அதாவது எங்களிடம் நெல் விளையும் பூமி இருக்கின்றது, உங்களிடம் தண்ணீர் இருக்கின்றது, ஆகவே தண்ணீரை எங்களுக்குக் கொடுத்தால் உங்களுக்கு நாங்கள் அரிசி அனுப்புவோம் என்று பல தடவை அணுகிக் கேட்டார்கள். ஆகவே கேரளத்தின் ஆளும் கட்சியாக இருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் இங்கே இருக்கின்ற உறுப்பினர்களும் இதற்கு ஒத்துழைப்பு தந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர உதவ வேண்டும் என்று நான் இந்த சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காவிரி நீர்ப் பிரச்சினை பல நாட்களாக முடிவடையாமல் இருக்கின்றது. ஆகவே அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் இந்தப் பிரச்சினை பற்றி மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி உடனடியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த ஆண்டு புதிய 4 நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 9 நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்ததில் ஒன்று என்னுடைய தொகுதியைச் சேர்ந்த நொய்யலாற்றுத் திட்டமாகும். இந்தத் திட்டம் ஏற்கனவே காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலே இருந்து இருக்கின்றது பல தடவை முயன்றும் இதுவரை இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை. இப்போது புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் இதற்குத் தீர்வு காண முன் வந்து இருப்பதை நான் என்னுடைய தொகுதியின் சார்பிலே வரவேற்று நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் 3 ஆறுகள் ஓடியும் ஒன்று கூட இதுவரை பயன்படுத்தப்படவில்லை. நொய்யலாற்றுத் திட்டத்தின் மூலம் 15,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் வாய்ப்புள்ளது.

ஆகவே, அரசு உடனடியாக இந்த ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளாக இந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த படியாக, குடகனாற்றுத் திட்டம் என்பது ஒரு பெரிய திட்டம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த போது கட்டப்பட்டு உடைந்த அணையாகும் இது. இந்த அணையை மீண்டும் புதுப்பிக்கும்போது ஏற்கனவே திட்டமிட்ட படி குழித்துறை போன்ற தொகுதிகளுக்குக் கொண்டு செல்லாமல், என்னுடைய தொகுதியிலே இந்த ஆறு ஓடிக் கொண்டிருப்பதால் அங்கே அணை கட்டித் தர வேண்டும்.

வேடசந்தூர் அணை கட்டப்பட இருக்கின்றது. அங்கே பயன்படுத்தியது போக மீதித் தண்ணீரைப் பாசனம் பெறாத என்னுடைய தொகுதியிலே பயன்படுத்துவதற்குரிய வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கீழ் பவானி நவீனப்படுத்தும் திட்டம் இந்த செயற் குறிப்பிலே சேர்க்கப்பட்டிருக்கின்றது. இதை விரைவில் செயல்படுத்தவேண்டும். அப்படி செயல்படுத்தினால் என்னுடைய தொகுதியில் 0 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வாய்ப்புள்ளது.

அடுத்து, அமராவதி ஆறு என்னுடைய தொகுதியிலே ஓடிக் கொண்டிருக்கின்றது. அந்த ஆற்றை யாரும் பயன்படுத்த வில்லை. அதையும் நல்ல முறையிலே பயன்படுத்துகின்ற வகையிலே ஒரு அணை கட்டித் தர வேண்டும். சுற்றி சிறுசிறு குளங்களை வெட்டித் தர வேண்டும். மழைக் காலத்தில் அவற்றில் தண்ணீர் நிரம்பினால் வறட்சி போன்ற நிலமை கூட இருக்காது. வறட்சி காலத்திலே கூட போதிய அளவு தண்ணீர் கிடைக்கும் என்று கூறிக் கொள்கிறேன். நொய்யலாறு. கீழ் பவானி, அமராவதி போன்ற மூன்று பாசனத் திட்டங்களையும் விரைவுப்படுத்தி, துரிதப்படுத்தி என்னுடைய தொகுதி மக்களுடைய வறட்சியைப் போக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் ஏனென்றால் அவர்கள்மிக மிக வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டங்கள் செயலுக்கு வந்தால், அவர்களுக்கு அது ஒரு பெரிய நிவாரணத்தைக் கொடுக்கும். அதைக் கருத்தில் கொண்டு, இந்தத் திட்டங்களைத் துரிதப்படுத்த வேண்டுமென்று என் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். இவைகள் பெரிய திட்டங்கள். அம்மக்களுக்கு தற்போதைய குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க, வறட்சியைப் போக்க, சிறு சிறு பாசனத் திட்டங்களைச் செய்து கொடுத்தால், அவர்களின் அவதி நிலையிலிருந்து தற்காலிக நிவாரணமானது அவர்களுக்குக் கிடைக்கும். ஓரளவு குடிதண்ணீர் பிரச்சினை தீர்க்கப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, நதிகளை தேசியமயமாக்குவது



பற்றி இங்கேயும் கூட பரவலாகப் பேசப்பட்டது. அவ்வாறு நதிகள் தேசியமயமாக்கப்படுமேயானால், தமிழகம் நல்லதொரு பயனை அடையும் வாய்ப்பு இருக்கிறது, எனவே, அதை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன் என்பதைக் கூறி, எனக்கு வாய்ப்பளித்தமைக்காக தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசன மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே இப்பொழுது ஏற்பட்டிருக்கிற வறட்சி சூழ் நிலையில் நீர்ப்பாசனத்துறை போர்க்கால நடவடிக்கைகளைப் போல நடவடிக்கைகளை எடுத்தால்தான், மக்களுக்கு இந்த நீர்ப் பாசனத்துறை நல்ல முறையில் சேவை செய்ய முடியும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நான் சார்ந்திருக்கும் மாவட்டமான வட ஆற்காடு மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டமாகும். அந்த மாவட்டத்தில் பாலாறு பேசின் ரூல்ஸ் அடிப்படையில் என். ஓ. சி. எனப்படும் 'நோ அப்ஜெக்ஷன் சர்ட்டிபிகேட்' வாங்க வேண்டும் என்கிற ஒரு நடைமுறை இருக்கிறது. விவசாயிகளுக்கு அவர்களுடைய சொந்தமான நிலத்தில் ஒரு ஏக்கரில் கிணறு கட்ட வேண்டும் என்றால் கூட பாலாறு என்.ஓ.சி. சர்ட்டிபிகேட் கேட்கிறார்கள். அந்த சர்ட்டிபிகேட்டை பாலாற்றுக்கு அருகே இருக்கக் கூடிய கிராமங்களில் மட்டும் கேட்டால் பரவாயில்லை. பாலாற்றைக் கடந்து ஏறத்தாழ 50, 60 மைல் தூரத்தில் உள்ளவர்களுக்கும் கூட, போளூர் கலசப்பாக்கம் போன்ற பகுதிகளில் உள்ளவர்களுக்கும் கூட, இந்த பாலாறு என். ஓ. சி. சர்ட்டிபிகேட் கேட்கிறார்கள். இப்படி இந்த சர்ட்டிபிகேட்டுகளை கேட்கின்ற நேரத்திலே, வறட்சியாக இருக்கிற அந்த மாவட்டத்திலே, எந்தெந்தப் பகுதிகளுக்கு மட்டும் சர்ட்டிபிகேட் வேண்டுமோ, அவைகளை பரிசீலனை செய்து திட்டவட்டமாக குறிப்பிட்டு, அவைகளுக்கு மட்டும், அந்த சர்ட்டிபிகேட் பெற்று வந்தால் போதும் என்றும், மீதி உள்ள இடங்களுக்கு, மறு பரிசீலனை செய்து, அந்த சர்ட்டிபிகேட் வழங்கும் முறையை இல்லாது செய்ய வேண்டும் என்றும் முதலிலே உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்வது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியான திருப்பத்தூர் தொகுதி மிகவும் பின் தங்கிய தொகுதி—வறட்சியான தொகுதி. ஆனால் இந்தத் தொகுதியை வறட்சி நிவாரணப் பணி திட்டத்திலேயும் சேர்த்துக்கொள்ளவில்லை, தன்னிறைவுத் திட்டத்தின் கீழேயும்

சேர்த்துக்கொள்ளப்பெறவில்லை. ஏனென்று எனக்குத் தெரிய வில்லை. இருந்தாலும், என்னுடைய தொகுதியின் நீண்டநாள் கோரிக்கையான ஆண்டியப்பனூர் ஓடைத் திட்டம் என்னும் ஒரு திட்டத்தைத் தற்போது எடுத்துக்கொள்ளப் பெற்றிருப்பதாக இந்த அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக என் னுடைய நன்றியை அமைச்சர் அவர்களுக்கு, என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அணையின் மதிப்பீடு 136 இலட்சம் ரூபாய் என்று குறிப்பிடப்பெற்றிருக்கிறது. ஆனால், இதற்கு இன்னும் இடம் கூட ஒதுக்கப்பெறவில்லை. ஒப்பளிக்கப் பெறவில்லை என்றும், இந்த அறிக்கையிலே குறிக்கப்பெற்றிருக்கிறது. இதற்கு இன்னும் இடம் கூட ஒதுக்கப் பெறாமல் இருப்பது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் இந்தத் திட்டம் 1974 ஆம் ஆண்டிலேயே போடப் பெற்ற ஒரு திட்டமாகும். ஆனால், இது ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட புதிய திட்டங்களில் ஒன்று என்றும், இது 1980–85-க்குள் மேற்கொள்ளப்படக்கூடும் என்றும் இந்த அறிக்கையிலே அச்சிடப்பெற்றிருக்கிறது. என்னுடைய தொகுதியான திருப்பத்தூர் தொகுதி நிலத்தடி நீரைத்தான் நம்பியிருக்கிற தொகுதி என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார் கள் என்று நம்புகிறேன்.

(பிற்பகல் 12–40)

ஆதலால் 85-யை மனதில் கொள்ளாமல் உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், 1974-இல் திருப்பத்தூர் அருகே பெருமாப்பட்டு அருகில் உள்ள ஜலாக்காம்பாறை என்ற இடத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது பொதுப்பணித்துறை அமைச்சராக பொறுப்பேற்றிருந்த மாண்புமிகு திரு. ப. உ. ச. அவர்கள் ஒரு புதிய ஏரி கட்ட வேண்டுமென்று திட்டமிட்டு, அந்த ஏரி கட்டுவதற்கு அடிக்கல்லும் நாட்டப்பட்டு விட்டது. அடிக்கல் நாட்டு விழாவும் நடந்தது. அதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. ஆனால், இந்தத் திட்டத்தில் அது சேர்க்கப்படவில்லை. எனவே, அந்தத் திட்டத்தையும் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஜலாக்காம்பாறை ஒரு நல்ல சுற்றுலா மையமாகக்கூடிய இடமாகவும் இருப்பதால் அந்த ஏரி கட்டித் தருகிற திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட் டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருப்பத்தூரில் ஒரு ஏரி உள்ளது. பெரிய மழை அல்லது வெள்ளம் வரும்போது அந்த ஏரியின் கரைகள் உயரம் இல்லாத காரணத்தால் தண்ணீர் தேங்கி கரை உடைந்து பல



குடிசைகள் அடித்துச் செல்லப்பட்ட நிலைமைகள் கூட ஏற்பட் டுள்ளன. எனவே, அந்த ஏரியை ஆழப்படுத்தி, ஏரிக்கரைகளை யும் அகலப்படுத்தி உயரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியில் உள்ள ஒன்றியத்தில் ஏரிகள் நிறைய இருக் கின்றன. அந்த ஏரிகளை எல்லாம் செப்பனிட நிதி அதிகமாக ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றியத்திலிருக்கும் ஏரிகளைப் பற்றிய விவரம் கேட்டால் ஏரிகளுக்கு நான்பொறுப்பில்லை என்று சொல்லுகிறார்கள் ஒன்றியத்தினர், அதே நேரத்தில் பொதுப் பணித்துறையைக் கேட்டால் அது எங்கள் பொறுப்பில் இல்லை என்று சொல்லுகிறார்கள். எனவே, அந்த ஏரிகளை யாரிட மாவது, யாருடைய பொறுப்பிலாவது ஒப்படைக்க வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்தப் பொறுப்பை யாரிடம் ஒப்படைக்க வேண்டுமோ அவர் களிடம் ஒப்படைத்து, பராமரிக்கப்படாத ஏரிகளை பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என் தொகுதியில் பாம்பாறு என்ற ஆறு இருக் கிறது. அது சரியான முறையில் செப்பனிடப்படாத காரணத் தால் பல குடிசைகள் அடித்துக்கொண்டு போகக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, பாம்பாற்றின் ஓரத்தில் இரண்டு பக்கங்களிலும் நல்ல முறையில் தடுப்புச் சுவர்கள் கட்டித்தர வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் இப்போது வறட்சி இருக்கிற நிலையில் அந்த ஆற்றில் தண்ணீர் வராத காரணத்தால் அந்தத் திட்டத்தை மேற்கொண்டு உடனடியாக தடுப்புச் சுவர்கள் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

மழை வந்தால் வேலைகள் செய்ய முடியாது. எனவே, இந்த வறட்சி நேரத்தில் ஏரிகளை உடனடியாக செப்பனிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை போர்க்கால நடவடிக்கை கள்போல் எடுத்து உடனடியாக அந்த வேலைகள் மேற்கொள்ளப் பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல்தான் இங்கே காவேரி பிரச்னை பற்றிய குறிப் பிருக்கிறது. இந்தப் பிரச்னையில், காவேரி டெல்டா பகுதியில், இருக்கின்ற விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாத அளவுக்கு விரை விலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதி நிலத்தடி நீரை நம்பியிருக்கிற காரணத்தினால், நீங்கள் உடனடியாக இந்தத் திட்டங்களை யெல்லாம் மேற்கொண்டு, நல்ல முறையிலே செய்து, எங்கள் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து, அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன், நன்றி.

* திரு. பி. ஜி. நாராயணன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது நடக்கின்ற விவாதத்தில் கலந்துகொண்டு, பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறுகிறேன். விவசாயம் மற்றும் தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்த எந்த மாநிலத்தை எடுத்துக்கொண்டாலும், அங்கே பாசன வசதி, நல்ல நிலையில் இருப்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களில் வேளாண்மையும், தொழில் துறையும் செழித்து வளர்ந்திருப்பதற்குக் காரணம் அங்கே நீர் ஆதாரங்கள் தேவைக்குமேல் இருப்பதுதான். அந்த அளவுக்கு தமிழகத்தில் நீர் ஆதாரங்கள் இல்லையென்பதால், இருக்கின்ற நீர் ஆதாரங்களை வைத்துக்கொண்டு, முடிந்த அளவுக்கு பாசன வசதியை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு தமிழக அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆறாவது திட்டக் காலத்திலே, பெரிய பாசனத் திட்டங்களுக்கும், நடுத்தர பாசனத் திட்டங்களுக்கும் 150 கோடி ரூபாய், சிறு பாசனத்திற்கு 18 கோடி ரூபாய் ஒதுக்கி, பாசனத்திற்கு முன்னுரிமை கொடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன். அடுத்த ஆண்டில் மட்டும் புதிதாக 20,500 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு திட்டமிட்டிருப்பதை வரவேற்கிறேன்.

தமிழகத்திலே இருக்கக்கூடிய பெரிய நதிகளில் பாசனத்திற்கு முழுமையாகப் பயன்படுத்துகின்ற அளவிலே தண்ணீர் இல்லாத காரணத்தினால், இனிமேல் பாசன வசதியைப் பெருக்குவதற்கு ஏற்கனவே இருக்கும் பாசனத் திட்டங்களை நவீனப்படுத்தி, ஏற்படும் தண்ணீர் இழப்பைத் தடுத்து, அந்தத் தண்ணீரை மிச்சப்படுத்தித் தரவேண்டிய நிலையிலே இருக்கிறோம். பெரியார் மாவட்டத்திலே பாசன வசதிக்குப் பயன்படும் கீழ்பவானி, மேட்டூர் அணைக்கட்டுத் திட்டத்தில் இருக்கும் கால்வாய்கள் நீண்டநாட்களாக தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றன. அந்த மேட்டூர் கால்வாய், கீழ்பவானி கால்வாய் ஆகியவைகளில் தூர் எடுத்து, அங்கே சிமெண்ட் லைனிங் கொடுத்தால், பெருமளவிற்கு நீரை மிச்சப்படுத்தி, மிச்சப்படுத்துகின்ற அந்த தண்ணீரை வைத்துக்கொண்டு, மேலும் பல ஏக்கர்களுக்குப் பாசன வசதியை ஏற்படுத்த முடியும். ஆகவே, கீழ்பவானி, மேட்டூர் கால்வாய்களில் சிமெண்ட் லைனிங் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காகும் செலவு அதிகமாக இருந்தாலும், அதனால் கிடைக்கும் பலன் நல்ல முறையில் இருப்பதால், தமிழகத்திலுள்ள அனைத்துப் பாசனத் திட்டங்களிலுள்ள கால்வாய்களுக்கு சிமெண்ட் லைனிங் கொடுத்து, தண்ணீரை மிச்சப்படுத்தி, பாசனத்தைப் பெருக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக்



கொள்கிறேன். புதிய பாசனத் திட்டங்களை மேற்கொள்ளும் போது Benefit cost ratio என்ற நிபந்தனையை முழுமையாக தூய்மையாக பின்பற்றுவதால் பல புதிய பாசன திட்டங்கள் உருவாக முடியாத நிலை உள்ளது. ஆகவே Benefit cost ratio நிபந்தனையை தளர்த்தி பாசன திட்டங்களை மக்கள் நலன் கருதி ஆய்வு செய்தால் பல புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் தமிழகத்தில் உருவாக வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டும் புதிய பாசனத் திட்டங்களை மேற்கொள்கின்றபோது, என்னுடைய தொகுதியில் பல பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருந்து வருகிறது. ஆய்விலே இருக்கிறதாக சொல்லப்படுகிறது. ஆகவே, அட்டவணைப்புதூரில் சித்தாறு அணைத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் கூடுதலாக 2,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். அதை மக்கள் வரவேற்பார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தை (சித்தார் அணை திட்டம்) விரைவுபடுத்தி, நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதை நிறைவேற்றினால் தமிழகத்தில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி விளைச்சலைப் பெருக்கும் நோக்கத்தோடுதான், மேற்கு நோக்கி பாய்ந்து வீணாகக் கடலில் கலக்கும் நதி நீரை கிழக்காகத் திருப்பிவிட்டு, பாசன வசதியைப் பெருக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பெரு முயற்சி மேற்கொண்டு வருவதையும், மாநிலம் முழுவதும் குழாய்க் கிணறுகள் அமைக்க, குழாய் கிணறு கழகம் அமைத்து, நிலத்தடி நீரை முழுமையாக பாசன வசதிக்குப் பயன்படுத்தும் திட்டத்தையும் நல்ல மனம் படைத்த அனைத்து விவசாயப் பெருமக்களும் வரவேற்கிறார்கள்.

(பிற்பகல் 12-50)

என்னுடைய தொகுதியில் பல்பாடி, ஓலகடம், மைலம்பாடி, பருவாச்சி, புன்னம், ஜப்பை, ஒரிச்சேரி, ஆப்பக்கூடல் ஆகிய கிராமப் பகுதியானது காலம் காலமாக வருடம் முழுவதும் வறட்சிப் பகுதியாக உள்ளது. இதில் பெரும் பகுதி மழையை எதிர்பார்த்து சாகுபடி செய்யும் நிலையிலேயே உள்ளது. மேட்டூர் வலதுகரை வாய்க்காலை சிமெண்ட் லைனிங் கொடுத்து நவீனப்படுத்துவதால் மிச்சமாகும் தண்ணீரை இந்தப் பகுதி நிலங்களில் பாசன வசதி செய்ய இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி. ஜி. நாராயணன்] [1981 ஏப்ரல் 2

என்னுடைய தொகுதியில் மொத்தம் 15 குளங்கள் இருக்கின்றன. இவைகள் நீண்ட நாட்களாக தூர் எடுக்காமல் இருந்து வருகின்றன. இந்த 15 குளங்களிலும் தூர் எடுத்து, ஆழப்படுத்தி கரைகளை பலப்படுத்தினால் மழை காலங்களில், தண்ணீரை குளங்களில் தேக்கிவைத்து பாசன வசதியைப் பெருக்க வாய்ப்பு ஏற்படும். இதனால் அதைச் சுற்றியுள்ள கிணறுகளிலும் தண்ணீர் வசதி ஏற்படும் நிலை உண்டாகும். இப்படி குளங்களை நவீனப்படுத்தும் பணியில் வறட்சியாலும், வெள்ளத்தாலும் ஏற்படக்கூடிய பல கோடிக்கணக்கான இழப்பை தவிர்க்க முடியும்.

பவானி ஆற்றில் மணல் மேடுகள் பெருமளவில் காணப்படுவதால் மழை காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் பொழுது, ஆற்றோரப் பகுதியிலும் பெரும்சேதத்தை அடிக்கடி ஏற்படுத்தி வருகின்றது. ஆகவே, பவானி ஆற்றில் மணல் மேடுகளை அகற்றி தூர் எடுத்து கரையைப் பலப்படுத்தித் தர இந்த அரசு ஆவன செய்யவேண்டும். அப்படி செய்தால் ஆற்றோர ஊர்களும், நிலங்களும் வெள்ளச் சேதத்திலிருந்து காப்பாற்றப்படும் சூழ்நிலை ஏற்படும் என்பதைக் கூறிக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நீர்ப்பாசன மானியக் கோரிக்கை மீது காங்கிரஸ் (இ) சார்பில் என் கருத்துக்களைக்கூற விழைகிறேன்.

நம்முடைய தமிழ் நாட்டிலே நீர் ஆதாரங்களில் குறிப்பாக காவிரி ஆறு தான் இதயமாக விளங்கின்றது, இந்த நீர் கிடைக்குமா என்று தான் நம்பியிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு அச்ச உணர்வு தோன்றியிருக்கிறது. 1924-ஆம் ஆண்டிலே காவிரி நீர் ஒப்பந்தம் ஏற்பட்டு. 1974-ல் அந்த ஒப்பந்தம் காலாவதி ஆகிவிட்டது என்பதால் விவசாய பெருங்குடி மக்களுக்கு அந்த அச்ச உணர்வு ஏற்பட்டிக்கிறது. வருகின்ற காலத்தில் 1974-ஆம் ஆண்டிலே காலாவதி ஆகிவிட்ட அந்த ஒப்பந்தத்தை தமிழ்நாடு அரசு மீண்டும் புதுப்பிக்கத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால் இன்று தஞ்சை மாவட்டம் அந்தக் காலாவதி ஆகிவிட்ட அந்த ஒப்பந்தம், பெருமளவு நீரத்திற்கே அடிப்படையாக இருக்கிற காவிரி தண்ணீர் இல்லாவிட்டால் மிக பாதகமான சூழ்நிலை ஏற்படும். அது ஏற்படாத வண்ணம் விவசாயிகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சென்ற நிதி



1981 ஏப்ரல் 2] [திரு. ந. சிவஞானம்]

நிலை அறிக்கையில் கட்டளைக் கால்வாய்திட்டத்தை சென்னைக்கு குடிநீர் கிடைக்கும் திட்டம் ஆய்விலே இருக்கிறதென்று சொன்னார்கள். தமிழ் நாட்டுக்கும், கர்நாடகத்திற்கும் காவிரி திட்டத்தில் ஒப்பந்தம் ஏற்படாத நிலையில் கட்டளைக் கால்வாய்த் திட்டம் மூலம் தண்ணீர் கொண்டு வருவது நல்லது அல்ல.

அதுமட்டுமல்லாமல், தஞ்சை விவசாய பெருங்குடி மக்களுக்கு திருச்சி விவசாய பெருமக்களுக்கு 'அக்யூர்ட் வாட்டர்' கொடுக்க முடியாத சூழ்நிலையில், அந்த பகுதி மக்கள் பாதிக்கப் பட்டிருக்கிற காரணத்தால் இந்தத் திட்டத்தை அரசு கைவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியிலே நடைபெற்ற விவசாய மாநாட்டிலே திருச்சி விவசாய மக்களும், தஞ்சையைச் சேர்ந்தவர்களும், ஒன்றாக சேர்ந்த இந்த கட்டளைக் கால்வாய் திட்டத்தை அரசு கொண்டு வரக்கூடாது என்று ஆட்சேபனை செய்கிற வகையிலே, அன்றைய தினம் அன்னை இந்திரா காந்தி அம்மையாருக்கும், தமிழக முதல்வருக்கும் தகவல் அனுப்பியிருக்கிறார்கள். 1974 ஆம் ஆண்டோடு காலாவதி ஆகிவிட்ட காவிரி நீர் திட்டத்தில் தமிழ்நாடு அரசும் கர்நாடக அரசும் கேரள அரசும் புதிதாக பேசவிருக்கிறார்கள் என்ற காரணத்தினால் இந்தப் புதிய திட்டத்தைக் கொண்டு வரக்கூடாது என்பதை ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 1976 ஆம் ஆண்டிலே தலைமை அமைச்சர், மரியாதைக்குரிய அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் சென்னைக்கு குடிநீர் கிருஷ்ணா தண்ணீர் திட்டத்திலிருந்து கொடுப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதி இப்போது நமது கொள்கை குறிப்பு விளக்கத்திலே கூட, ஏறத்தாழ தமிழ்நாட்டின் பகுதியில் எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆந்திராவிலே ஜூன் மாதத்திற்குள்ளாக அந்த வேலை முடிந்து விடும் என்று சொல்கிறார்கள். தை நிறைவேற்றி சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த நீரை வைத்து குடிநீர்ப் பிரச்சினை யைத் தீர்த்த பிறகு கிருஷ்ணா நதி தண்ணீரை விவசாயத்திற்குப் பயன் படுத்துவதற்கான முயற்சிகளையும் மாநில அரசு மேற் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கேரள மாநிலத்திலே மேற்கு நோக்கிப் பாய்கிற ஆறுகளின் நீர் கடலிலே வீணாகிறது. அந்த நீர் கடலிலே சென்று வீணாகாமல் பாசனத்திற்குக் கிடைக்கக்கூடிய வகையிலே இந்த அரசு முயற்சிகளை செய்ய வேண்டும் தமிழக முதல்வர் அவர்கள் குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் சேர்ந்து பேசி, கேரளத்திருந்து மேற்கே சென்று

கடலிலே வீணாகிற நீரைத் தமிழ்நாட்டிற்குத் திருப்பி விட்டு இங்கே பாசனத்திற்காக அந்தத் தண்ணீரைக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அங்கேயிருந்து ஏறத்தாழ 1,500 டி.எம்.சி. தண்ணீரில் மூன்றில் ஒரு பங்கு கடலில் விழுந்து, வீணாகிறது. அதைத் தமிழ்நாட்டிற்குக் கொடுத்தால் அதன் மூலம் தமிழ்நாட்டிலே வறட்சிப் பகுதியாக இருக்கின்ற மதுரை இராமநாதபுரம் திருநல்வேலி. கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களுக்கு அது பயன்படும். அதற்கான முயற்சிகளிலே அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கோதாவரி-காவேரி இணைப்புப் பணி நடைபெற வேண்டும். தமிழ்நாடு, ஆந்திரர், கேரளா, மைசூர் ஆகிய மாநிலங்களிலே ஓடுகின்ற பல்வேறு நதிகளை ஒன்றாக இணைத்து பாசன வசதிகளைப் பெருக்க தமிழ அரசு முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். நதிகளை தேசிய மயமாக்க வேண்டும். ஒரு பகுதியிலே வெள்ளம், மற்றொரு பகுதியிலே வறட்சி என்ற நிலைமைகளையெல்லாம் பார்த்து நதிகளைத் தேசிய மயமாக்குகிறபோது அதற்கான நடவடிக்கைகளை மைய அரசு எடுக்கிறபோது அதற்கான ஆதரவை இந்த அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் ஆற்றுப் பாசனம், ஏரிப்பாசனம், கிணற்றுப் பாசனம் என்று மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். ஆற்றுப் பாசனத்தைப் பொறுத்த மட்டில் நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பல்வேறு அணைகளைக் கட்டி எல்லாத் திட்டங்களையும் தீட்டி விட்டார்கள். இன்றைக்கு அவைகளை நவீனப் படுத்துகின்ற வேலைகளை நாம் செய்து வருகிறோம். இன்றைக்கு நதிகளின் நீர் வேளாண்மைக்குச் சிக்கனப்படுத்திப் பயன்படுத்துவதற்கும், மேலும் ஆயக்கட்டுகள் சேர்ப்பதற்கும் திட்டங்கள் உள்ளன. பெரியாறு-வைகை மேம்பாடு திட்டம், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் காவிரி மேம்பாட்டுத் திட்டம் இவைகள் மிக நல்ல முறையிலே செயல்பட்டு வருகின்றன. அந்தக் காலத்தில் தன்னுடைய தோட்டத்திலே ஓடிய காவிரிக்கு கரைகளைக் கட்டினான், கல்லணையைக் கட்டினான் கரிகாலன் என்பது வரலாறு. இன்றைக்கு காவிரி டெல்டாப் பகுதியை நவீனப்படுத்த வேண்டும். என்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதன் மூலமாக நீர்ப்பாசன ஆதாரங்களை நவீனப் படுத்தி பெருக்கவேண்டும். கல்லணை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்டது அந்த அணை இன்றைய தினம் நிபுணர்களால் பாராட்டத்தக்க அளவுக்கு அமைந்திருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கல்லணையிலிருந்து பல பிரிவுகள் இன்றைக்குப் போய்க் கொண்டிருக்கின்றன. ஆகவே, காவிரி டெல்டா பகுதியை மேலும் வளமுள்ளதாக்க நவீனமாக்க வேண்டும். நல்ல முறையிலே அபிவிருத்தி செய்ய வேண்டும். அதை





சுற்றுலா மையமாக்க வேண்டும். தஞ்சை, திருச்சி ஆகிய இரண்டு மாவட்டங்களையும் இணைக்கிற பகுதியாக இருப்பதால் அதை சுற்றுலா மையமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1957-ஆம் ஆண்டு வைகை அணைக்கட்டு கட்டுகிற நேரத்தில் உறுதியளிக்கப்பட்ட சிவகங்கைப் பகுதிக்கு வைகை பெரியாறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ் கிடைக்கும் உபரித் தண்ணீரை முன்னுரிமை கொடுத்து கண்டிப்பாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். அந்தத் திட்டத்தை நவீனப்படுத்தினால் அதன் மூலம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வர முடியும், இராமநாதபுரம் என்றாலே வறட்சிப் பகுதிதான், அந்த வறட்சிப் பகுதிக்கு அதன் மூலம், நீர் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விருத்தாசலத்தில் உள்ள மணிமுத்தாறு நதியில் உள்ள விருத்தாசலம் அணை, மேமாத்தூர் அணை ஆகிய இரண்டு அந்நியர் ஆட்சி புரிந்த காலத்தில் கட்டப்பட்டவை. அவைகளினால் விவசாயிகள் பாசன வசதி பெற்றுப் பயனடைந்தார்கள். மணிமுத்தா, மயூரா, கோமுகி என்று மூன்று அணைகள் மேலே கட்டப்பட்டு இருப்பதால் கீழே உள்ள விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவர்கள் உரிமை பாதிக்கப்பட்டாலும் கீழே உள்ள ஆயக்கட்டுதாரர்களைப் பாதிக்காமல் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நிலத்தடி நீர் நம் தமிழ்நாட்டில் பல இடங்களில் கிடைக்கின்றன என்பது பல சோதனைகள் மூலம் தெரிய வருகின்றது.

(பிற்பகல் 1-00)

அந்த அடிப்படையில் '' மாநிலக் குழாய் கிணறுகள் கழகம் '' ஏற்படுத்தப்படுவதை நான் வரவேற்கிறேன். ஏனென்றால் இந்த மாநிலத்தில் பல சமுதாயக் கிணறுகள் அமைக்கப்பட்டு அவைகள் செயலிலே இல்லை. யார் நிர்வாகத்தைச் செய்வது என்று தெரியாத நிலை இருக்கிறது. அங்கே சென்றால் மோட்டார் இல்லை, இன்னொரு இடத்திற்குச் சென்றால் மின்சாரம் இல்லை, இன்னொரு இடத்திற்குச் சென்றால் ஒன்றுமே இல்லை என்ற நிலையில் யார் நிர்வகிப்பது என்று தெரியாமல் ஐடிலாக அங்கே கிடக்கின்றன. ஆகவே, சமுதாயக் கிணறுகள் நல்ல முறையில் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஏரிப் பாசனத்தைப் பொறுத்த வரையிலே, தமிழ் நாட்டில் ஏறத்தாழ 37,000 ஏரிகள் உள்ளன. இந்த ஏரிகள் அனைத்திற்கும் 9.5 கோடி ரூபாய் முதல் தவணையாக

வறட்சி நிதியில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வறட்சி நிதியில் ஏரிப் பகுதிகளுக்கு நிச்சயமாகச் செய்ய வேண்டும். மனித சக்தியின் மூலம் மட்டும் இந்த ஏரிகளில் தற்போது ஒன்றும் செய்ய முடியாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏறக்குறைய ஒன்பது மாத காலமாகத் தண்ணீரே இல்லாமல் அவை காய்ந்து போயிருக்கின்றன. அதனால் மனிதர்கள் அந்த மண்ணை எடுக்க முடியாத சூழ்நிலை இருப்பதால் புல்டோசர்கள் போன்ற இயந்திரங்களைக் கொண்டு அந்தக் கரைகளைப் பலப்படுத்த வேண்டும்; தூர் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சிப் ப[illegible]ன்ற [illegible]ங்கே தூர் எடுக்க வேண்டும். தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக [illegible] மாவட்டத்தில் வறட்சிப் பகுதியிலே மாண்புமிகு [illegible] [illegible]ரர்கள் சுற்றுப் பயணம் செய்த நேரத்தில் ஒரு [illegible]யாக் கிணற்றைக் கட்டினேன். வல்லுண்டான்பட்டி என்ற [illegible]க் கிணறு. கம்யூனிட்டி பேசின் வெல் — அங்கே [illegible] [illegible]யும் [illegible] [illegible]கிற [illegible]டிநீர் [illegible]யும் கொடுக்கப்படுகிற[illegible] [illegible]ளுக்குத் தண்ணீர் வசதியும் [illegible] பகுதி[illegible] [illegible]ற பரீட்[illegible]த்த [illegible]ட்டத்தை அங்கே [illegible]ட்ட [illegible]சி[illegible] தீட்டி இ[illegible] பணை, வருவாய்த்துறை அமைச்சர் [illegible]ளுக் [illegible] [illegible]ண்பி[illegible]. அதன் மூல ம[illegible] ப[illegible] [illegible]ட்டங்களிலே [illegible] படவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள என்னுடைய திருவோணம் தொகுதியில் 1981-82 ஆம் ஆண்டில் சி[illegible]ப [illegible]னத் [illegible]ட்டத்தில் சின்னப் [illegible]க்கோட்டை நீரேற்று நிலையத்தையும், பின்னையூர் மகிலே [illegible] [illegible]ணைக்கட்டுத் திட்டத்தையும், ஒரத்தநாடு வட்டம் பெய்யுண்டான் கோட்டை நீரேற்று நிலையத்தையும் இந்த அரசு ஏற்படுத்தியிருப்பதையும் நன்றி பாராட்டுகிறேன்.

இன்னும் கீழ்க்கண்ட திட்டங்களையும், 1981-82 ஆம் ஆண்டிலே செய்ய வேண்டும், வறட்சிப் பகுதியாக இருப்பதால் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வல்லம் அருகிலுள்ள முதலைம்பட்டி வாரியில் ஒரு அணை கட்டி அந்தப் பகுதி மக்களின் நெடுநாளைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

வல்லம்-புதூர் கூத்தக்குடி ஏரியைப் பலப்படுத்தித் தூர் எடுத்தல், கரையைப் பலப்படுத்தல் போன்ற வேலைகளைச் செய்ய வேண்டும்.





கட்டளைக் கால்வாயிலிருந்து, தஞ்சை ஒன்றியத்திலுள்ள ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டு வந்து, வல்லுண்டான்பட்டு ஏரி, குருங்குளம் ஏரி, நாஞ்சிக் கோட்டை ஏரி போன்றவைகளுக்குத் தண்ணீர் கிடைக்க வசதி செய்து கொடுக்க வேண்டும்.

கட்டளைக் கால்வாயிலிருந்து சுமார் பத்து கிலோ மீட்டர் தூரம் வரை வாய்க்கால் வெட்டி ஆச்சான் அணை வரையில் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சைக்கு, வாய்ந்த கடலைக்குத் தண்ணீர் கொடுத்ததற்காக நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்கும், நீர்ப்பாசனத் துறை அமைச்சரவர்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பகுதியிலே சூழ்நிலையிருப்பது என்னவென்றால், தஞ்சைத் தேக்கத்திலும், ஈச்சங்கோட்டைத் தேக்கத்திலும், வெட்டிக்காடு தேக்கத்திலும், நீரைத் தேக்கி அளந்து கொண்டு விவசாயப் பெருமக்களுக்கு அதிகாரிகள் விற்கிறார்கள். அதை உடனடியாக நிறுத்த வேண்டும். ஆகவே, தான் நீரை லிட்டர் கணக்கிலே விற்பதைத் தடுக்க வேண்டும்.

ஒக்கநாடு கீழையர் பகுதியில் உள்ள நீரேற்று நிலையம் சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களுக்குச் செயல்படுகிறது. ஆனால் இப்பொழுது ஆயிரம் ஏக்கர்களுக்குத்தான் பாசனம் இருக்கிறது. மேலும் ஆயிரம் ஏக்கர்களுக்குப் பாசன வசதி அளிக்க இந்த அரசு முயல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரத்தநாடு வட்டத்திலே நெய்வேலி ஏரி என்று இருக்கிறது. இந்த ஏரிக்கு 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் திட்டம் தீட்டப்பட்டு பொறியாளர் அவர்களிடத்திலே இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். இந்த ஆண்டிலே வறட்சிப் பகுதியாக அதை எடுத்து இந்த நெய்வேலித் திட்டத்தை அதில் சேர்க்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சிப் பணிகளில் திருவோணம் பகுதிக்கு மேலும் பல திட்டங்களைத் தீட்டுவதோடு மட்டுமல்லாமல் நிதியையும் மேலும் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக்கொண்டு, இன்றைக்குத் தமிழக அரசானது இந்த வறட்சிக் காலத்தில், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்கிற உன்னத நோக்கத்தோடு பல்வேறு பாசனத் திட்டங்களை அறிமுகப்படுத்தி இருக்கிறது. பெரிய நீர்ப்பாசனத்

[திரு. எம். சின்னசாமி] [1981 ஏப்ரல் 2

திட்டங்கள், நடுத்தர சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், தற்போ
துள்ள பாசனத் திட்டங்கள் ஆகியவற்றை விரிவாக்குதல், கண்
மாய்களை நவீனப்படுத்துதல், மிகவும் பின்தங்கிய வறட்சிப் பகுதி
யிலே பாசன திட்டங்களை அதிகப்படுத்துதல், பொது ஈகவே,
பாதமான பருவ மழை இருந்தாலும், பொதுப்பணித் துறையானது
சிறப்புப் பாசனத் திட்டங்கள் இப்படி பல்வேறு பாசன திட்டங்
களை இந்த அரசு இன்றைக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறது. பல்
வேறு திட்டங்கள் இன்றைக்கு அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.
இவைகள் எல்லாம், இன்றைக்கு இந்த அரசானது கிராமங்களிலே
இருக்கிற புஞ்சை நிலங்களை, நீர்பாய் நிலங்களாக மாற்றுவதில்
எந்த அளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்
காட்டுகிறது. ஆனால், அதே நேரத்தில், இன்றைக்கு நாமெல்
லாம் கவலை கொள்ளும் வகையில் இருப்பது, காவேரி நதி
நீர் ஒப்பந்தம். 1924-இல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படை
யில் இன்றைக்கு காவிரி நதி நீர் பங்கீடு இருக்க வேண்டுமென்
பதில், தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர்கள்
பல்வேறு கட்டங்களில் மத்திய அரசோடும், மைசூர் அரசோடும்
பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல
மல், தமிழகத்தினுடைய ஒட்டு மொத்தமான கருத்துக்களைப்
பிரதிபலிக்கும் வகையில், இங்கேயிருக்கிற அனைத்துக் கட்சித்
தலைவர்களையெல்லாம் அழைத்துப் பல கூட்டங்களைக் கூட்டி,
அவர்களுடைய அரிய ஆலோசனைகளைப் பெற்று, மைசூர் அர
சுக்கும், மத்திய அரசுக்கும் அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார்
கள். அது மட்டுமல்லாமல், தமிழக அரசினுடைய தலைமைப்
பொறுப்பேற்றிருக்கிற முதலமைச்சர் என்கிற காரணத்திற்காக
மட்டுமல்லாமல், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம் ஆட்சிப் பொறுப்பில் இல்லாத நேரத்திலே கூட, மைசூ
ருக்குச் சென்று காவிரி நதி நீர்ப் பற்றிப் பேசியிருப்பதிலிருந்து
அவர்கள் காவிரி நதி நீர் பங்கீட்டு முறையினால், தமிழகத்திற்கு
எந்தவிதத்திலும் பாதகம் ஏற்படக் கூடாது என்பதிலே எந்த
அளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணுகின்ற
பொழுது உள்ளபடி தமிழக மக்கள் அத்தனை பேரும் நன்றி
தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அதே நேரத்தில், இன்றைக்குச் சென்னை நகருக்கு ஏற்
பட்டிருக்கிற குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குகிற வகையில்
கடந்த கால அரசுகள் எல்லாம் செய்யாத ஒரு சாதனையை
கிருஷ்ணா நதியிலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்கான
திட்டத்தை அரசு முனைப்போடு ஆராய்ந்து வருகிறது. அதுமட்டு
மல்லாமல், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளில் விழுகின்ற உபரி
நீரைத் திருப்பி விடுகின்ற முயற்சியில் இன்றைக்கு இந்த அரசு
அக்கறை கொண்டிருக்கிறது. பல்வேறு கட்டங்களில், இரண்டு
மூன்று தடவைகளில், கேரள அரசோடு இந்த அரசு பேச்சு
வார்த்தை நடத்தியிருக்கிறது. அப்படி உபரி நீர் இங்கே திருப்பி
விடப்படுகிறது என்று சொன்னால், மதுரை, நெல்லை, முகவை



1981 ஏப்ரல் 2] [திரு. எம். சின்னசாமி]

கோவை போன்ற மாவட்டங்களில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்
புஞ்சை நிலங்களில் அது பாய்ந்து, தமிழகம் உணவுத் துறையில்
தன்னிறைவு பெறுவதற்கான ஏற்பாட்டை இந்த அரசு செய்து
வருவதை, அந்த முயற்சியை நாம் பாராட்டியாகவேண்டும்.

அதே போல், குடகனாறு திட்டம். அது உடைந்து போன
தற்குப் பிறகு, அந்தத் திட்டம் வருமா, வராதா என்று மக்கள்
ஏங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில், இன்றைக்கு அரசு அதை
எடுத்துக்கொண்டிருப்பது உள்ளபடியே பாராட்டத்தக்க ஒன்
றாகும். அதே போல், நொய்யல் திட்டம். அந்த நொய்யல்
திட்டம் என்பது பழங்கதையாய், பழங்கனவாய் கடந்த கால
ஆட்சியில் இருந்து வந்தது. இன்றைக்கு அந்தத் திட்டத்திற்கு
ஒரு உருவம் கொடுத்து, தமிழக அரசு நிறைவேற்றும் நிலையிலே
இருக்கிறது. ஆனால், அதிலே ஒரு சிறிய வேண்டுகோளை
மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சருக்குத் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நொய்யல் ஒரிஜினல் திட்ட
மானது, கரூர் தாலுக்காவுக்கு அருகிலேயுள்ள உங்காம்பாளையம்
என்ற இடத்திலே கட்டப்பட்டு, கரூர் தாலுகாவிலே, வேப்ப
மங்கலம், புஞ்சைப்புகளூர், புஞ்சைத் தொட்டி, ஆத்தூர், மண்
மங்கலம் போன்ற கிராமங்களிலே பல்லாயிரக்கணக்கான புஞ்சை
நிலங்களை, நஞ்சை நிலங்களாக மாற்றுவதற்கான திட்டம் முதலி
லே இருந்தது. பிறகு என்ன காரணத்தாலோ, அந்தத் திட்டம்
இன்றைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அப்படி மாற்றப்பட்ட
நேரத்திலும் கரூர் தாலுகாவிலே பரமத்தி ஒன்றியத்திலே, 10,000
ஏக்கர் நஞ்சையாக மாறக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது.
அந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி, என்னுடைய கரூர்
தொகுதியிலே இருக்கிற அந்த 4, 5 கிராமங்களுக்கும் அந்தத்
திட்டத்தின் பலன் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, இந்த அரசு நீர்ப்பாசனத்துறையிலே எவ்வளவு நடை
முறை அறிவோடு செயல்படுகிறது என்பதற்கு ஒரு உதாரணம்
சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் புகளூர் நதி
நீரேற்றுப் பாசனச் சங்கம் கடந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்
ஏற்படுத்தப்பட்டது. பிறகு, திராவிட முன்னேற்றக் கழக அரசு,
புஞ்சைப்புகளூர் நதி நீரேற்றுப் பாசனத்தில் இருக்கிற கோவிந்தம்
பாளையம், தளவாபாளையம், ஆகிய 5 திட்டங்களில், தெளிப்
பான் முறையைக் கொண்டு வந்தார்கள். தெளிப்பான் முறை
என்பது நம்முடைய நிலத்திற்கு ஒத்து வராது. அது ஒரு வீணான
திட்டம். அது நடைமுறைக்கு ஒத்து வராத திட்டம். அந்தத்
திட்டத்தைக் கை விட வேண்டுமென்று, அன்றைக்கு விவசாயி
கள் அனைவரும், ஒருமித்த குரலில், ஒன்றுபட்ட குரலில்
அரசாங்கத்திற்குச் சொன்னார்கள். ஆனால், அந்தச் சங்கத்தில்
இருந்த தலைவர்களும், அன்றைக்கிருந்த அந்த ஆட்சியாளர்

களும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து, பிறகு விவசாயி களுடைய மாறுபட்ட நிலை கண்டு. அந்தத் திட்டம் தோல்வி யுற்றது. பிறகு, அந்தத் திட்டத்திற்காக வாங்கப்பட்ட பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கருவிகள் 10 ஆண்டு காலமாக அந்தத் திட்டம் தொடங்கப்படாமலிருந்த காரணத் தால், விவசாயிகளுக்கும், அரசாங்கத்திற்கும் நட்டம் ஏற்படுத்தி யிருக்கிறது. அதாவது இலட்சக்கணக்கான ரூபாய்கள் நட்டம்.

[பிற்பகல் 1–10]

அதற்குப் பிறகு நம்முடைய அன்னை இந்திய அண்ணா திராவி விட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து அந்தத் தெளிப்பன் முறையைக் கைவிட்டு நடுநீர்பாசன முறையை மாற்றினார்கள். இன்றைக்கு புஞ்சை புகலூர் திட்டமும், நடை யனூர் திட்டமும் செயல்பட்டு வருகிறது. ஓரத்தை, தலா பாளையம், கோவிந்தம்பாளையம், ஆகியவற்றிற்கான திட்டங்கள் செயல்படாமல் இருக்கின்றன. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தின் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், தயவு செய்து என்னுடைய தொகுதிக்கு வந்து இந்த 3 திட்டங்களையும் பார்வையிட்டு அவைகளை உடனடியாக நிறைவேற்றுகின்ற சாத்தியக்கூறுகளை ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் 3,000 ஏக்கர் ஆயக்கட் டுள்ள புகலூர் வாய்க்கால் ரீ-மாடல் செய்வதற்கான ஆய்வு இருப்பதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப் பட்டு இருக்கிறது. இந்தத் திட்டம் இரண்டு மூன்று ஆண்டு களாக ஆய்வில் இருக்கிற காரணத்தால் அதைத் துரிதப்படுத்தி அந்த வாய்க்கால்களைச் சீரமைத்து, பாசன வசதியை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் பாப்பன்ன முதலியார் வாய்க்கால் இருக்கிறது. அந்த வாய்க்கால் நெருகிராமம், பெரியபாளையம் வழியாகச் செல்கிறது. அதற்குத் தெற்கே 1½ கிலோ மீட்டர் தொலைவில் நிலங்கள் தண்ணீர் பாயாமல் மூடிக் கிடக்கின்றன. அதற்கு வேண்டிய தண்ணீர் சிவந்திபாளையம், என்ற கிராமத்திலேயும், வாங்கல் கருப்பன்பாளையம் என்ற கிராமத்திலும் வீணாகப் போய் காவிரி ஆற்றில் கலக்கிறது. அந்த வாய்க்கால்களை ஆழப்படுத்தி, தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்தால் 5,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வாய்ப்பு இருக்கிறது. அந்தத் திட்டத்தையும் விரைவுபடுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, என்னுடைய தொகுதியில் மணமங்கலம், புதுப்பா ளையம் கிராமங்களில் ஒரு பாசனத் திட்டம் இருப்பதாக, அது கடந்த 10 ஆண்டு காலமாக செயல்படாமல் இருக்கின்றது. அதையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப் பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் கரூரில் மேலபாளைத் துக்கும் புளியூருக்கும் இடையிலே அமராவதி ஆற்றுக்கு குறுக்கே வாட்டர் ரெகுலேட்டர் ஆண்டுதோறும தற்காலிகமாகப் போடப்படுவதும வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலத்தில் அணை அடித்துப் போய் விடுவதும் அதனால் அங்கே இருக்கின்ற மகசூல் எல்லாம் பாதிக்கப்படுவதும் ஆண்டு தோறும் நடைபெறுகின்ற விஷயமாகும். ஆகவே, அதற்கு. ஆண்டு தோறும் நாம் செலவிடும் பணத்தை, நிரந்தரமாக செல விட்டு, அதைக் கட்டினால் நலமாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் சிறு விவசாயி கள் பயனடைகின்ற வகையில், சிறு விவசாயிகள் ஆள்மட்ட நிலத்தடி நீரைக் கொண்டு வந்து அவர்களாலே பாய்ச்சுவது இயலாத காரியம் என்று சொல்லி, சமுதாயக் கிணறுகளை அமைத்து, அதற்காக மாநில குழாய்க் கிணறுக் கழகம் ஏற் படுத்துவதை நான் வரவேற்கின்றேன். அதே நேரத்தில் இன் றைக்கு வறட்சியான நேரததில் புதிய கிணறுகளைத் தோண்டு வதற்கும், பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் விவசாயி களுக்கு அரசு கடன் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இன்றைக்குப் பல்வேறு பாசனத் திட்டங்களை அறிமுகப்படுத்தி, பல்வேறு பாசனத் திட்டங்களை அமல்படுத்துகின்ற இந்த மகத் தான மானியக் கோரிக்கையை வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. இ. முத்துராமலிங்கம் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனம் குறித்த இந்த மானி யக் கோரிக்கை மீது நான் சார்ந்த இருக்கின்ற இயக்கமான காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின சார்பாக எனது கருத்துக் களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய தமிழகததைப் பொறுத்தவரையில், ஒரு சில வற்றாத ஜீவ நதிகள் தான் இந்தத் தமிழகத்தை வளப்படுத்திக் கொண்டு இருக்கின்றன. குறிப் பாக, காவிரி, வைகை, தாமிரபரணி போன்ற இந்த 3 நதிகள் தான் தமிழகத்தில் ஜீவ நதிகளாக அமைந்து இருந்து, ஒரு சில மாவட்டங்களை வளப்படுத்திக்கொண்டு இருக்கின்றன. நம் முடைய பாரதத்தைப் பொறுத்தவரையில் கங்கை, காவிரி இணைப்புத் திட்டத்தை ஆய்வில் வைத்து இருப்பதைப் போன்று,

[திரு. இ. முத்துராமலிங்கம்] [1981 ஏப்ரல் 2

நம்முடைய தமிழகத்தில் உள்ள ஜீவ நதிகளான காவிரி, வைகை, தாமிரபரணி ஆகியவற்றையும் இணைத்து, குமரிக் கடல் வரையில் விட்டால், தமிழகத்தின் பாசன வசதிகள் மேம்படுவதுடன் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களும் நிரந்தரமாக பாசன வசதியைப் பெறும் என்பதால் இந்தத் திட்டத்தை அரசு மேற்கொள்ளவேண்டு என்கிற கோரிக்கையை இங்கே முன் வைக்கிறேன்.

அடுத்து, கேரளா மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாய்கின்ற நதிகளின் உபரி நீரைத் தமிழகத்தின் தென் மாவட்டத்திற்குப் திருப்பிவிடும் திட்டத்தை மனதில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தியதற்காக என்னுடைய இயக்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் திட்டத்தை எவ்வளவு விரைவாகச் செயல்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவாகச் செயல்படுத்த கேரள அரசோடு பேசி முடிவுகாண வேண்டும் என்கிற கோரிக்கையையும் இங்கே முன் வைக்கிறேன்.

மாநிலக் குழாய் கழகம் அமைத்து ஆங்காங்கே சமுதாயக் கிணறுகளையும் குழாய் கிணறுகளையும் அமைப்பதை நான் வரவேற்கிறேன். இந்தத் திட்டத்தை எங்கள் மாவட்டத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில்—எந்தவிதமான பாசன வசதியும் இல்லாத இடங்களில், கிணற்றுப் பாசனத்தையே நம்பி இருக்கிற இடங்களில் அமைப்பதற்கு முதன்மை கொடுத்து ஆங்காங்கு சமுதாயக் கிணறுகளை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதி சம்பந்தப்பட்ட ஒரு சில பிரச்சினைகளை இங்கே முன் வைக்க விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சி நடந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்தது. இப்போது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி நடக்கிறது. தேர்தல் காலங்களில் போட்டியிடுகின்ற ஒவ்வொரு கட்சியினரும் அங்கே வருகை தருகின்ற நேரத்தில் எல்லாம் நம்பியாற்றுத் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று சொன்னார்கள். ஆனால் ஒவ்வொரு முறையும் அதைப் பற்றிக் கேட்கிற நேரத்தில் அரசு தரப்பில் சொல்லப்படுகின்ற பதில் அந்தத் திட்டம் தலைமைப் பொறியாளரின் ஒப்புதலுக்காகக் காத்துக் கொண்டு இருக்கிறது என்பதாகும். ஏறத்தாழ 25 லட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்படவேண்டிய அந்த திட்டம் இன்றைய தினம் ஏறத்தாழ 147 லட்சத்திற்கு எட்டியிருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தை இந்த நடப்பு ஆண்டிலேயே ஏற்று செயல் படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறேன். இந்த திட்டத்தை நிறைவேற்றினால் ஏறத்தாழ 2000 ஏக்கர் புஞ்சை நிலம் பாசன வசதிபெறும். ஏற்கெனவே மழைக் காலங்களில் போதுமான அளவிற்கு நீர் அந்த ஆற்றிலேயே ஓடி கடலில் வீணாகக் கலக்கிறது. இந்த நிலையை மாற்றி உடனடியாக அந்த நம்பியாற்று திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கிறேன்.



1981 ஏப்ரல் 2] [திரு. இ. முத்துராமலிங்கம்]

அடுத்து, நான்குனேரி தாலுக்காவில் ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து தெரிவிக்க விரும்புகிறேன். கொடுமுடி ஆற்றுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். 1975-ம் ஆண்டு அந்தத் திட்டம் அமல் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டு ஏறத்தாழ 50 லட்சம் அளவிற்கு வேலைகள் நடைபெற்று இருந்த போதிலும் ஒரு சிலரின் எதிர்ப்புக் காரணமாக குறிப்பாக இந்திரா காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் நிலம் பாதிக்கப் படுகிறது என்கிற காரணத்திற்காக, அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிலம் 113 ஏக்கர். இதிலே அரசின் புறம்போக்கு நிலம் 50 ஏக்கர் இருக்கிறது. ஆகவே, தனியார் நிலம் ஏறத்தாழ 60 ஏக்கர் தான் எடுக்க வேண்டியிருக்கிறது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆலத்துறை திட்டத்தின் வேலைகளைத் துரிதப்படுத்தி உடனடியாக முடித்துத் தரவேண்டும் என்று கோரிக்கை வைக்கிறேன். வருவாய்த் துறையில் ஆங்காங்கு உள்ள குளங்களையும் ஊராட்சி ஒன்றியக் குளங்களையும் பொதுப்பணித் துறையிடம் தகுந்த முறையில் பராமரிப்பதற்கும், கண்காணிப்பதற்கும் ஒப்படைத்து இருக்கிறார்கள். அதற்குப் போதுமான பணியாளர்கள் இல்லாததால் அவைகள் சரிவர பராமரிக்கப்படவில்லை ஆகவே அதற்குப் போதுமான பணியாளர்களை நியமிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-20]

ஆலத்துறை திட்டத்தில் அடங்கிய 9 அணைக்கட்டுகளில் வடக்கன்குளம் ஆறாவது அணைக்கட்டு. ஆனால் என்ன காரணத்தாலோ அது சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அதற்கு மேலேயும் சேர்க்கப்பட்டிருக்கிறது; கீழேயும் சேர்க்கப்பட்டிருக்கிறது; இது மட்டும் சேர்க்கப்படவில்லை, இதையும் அந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது வறட்சி நிவாரணப் பணி நடைபெறுகிறபோது வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற அனைத்துப் பகுதிகளிலுள்ள குளங்களையும் தூர் எடுத்து ஆழப்படுத்தி, கரைகளையும் பலப் படுத்த வேண்டுமென்ற கோரிக்கையையும் இங்கே வைக்கிறேன்.

திருச்செந்தூர் தாலூக்காவில் கடம்பா குளம் ஒரு பெரிய குளமாக இருக்கிறது. பல நூற்றாண்டுகளாக அந்தக் குளம் மராமத்து செய்யப்படாமல் மண் மேடிட்டு, மழை காலத்தில் தண்ணீர் தேங்காமல் இருக்கிறது. அந்தக் குளத்தையும் மராமத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீண்டும் ஒரு முறை என்னுடைய இராதாபுரம் தொகுதியில் உள்ள நம்பியாற்றுத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து,

வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற அந்தப் பகுதி மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று நடைபெறும் 1981-82 ஆம் ஆண்டுக்கான நீர்ப்பாசனத்தின் மீதான மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு முதற்கண் நன்றியினைக் கூறி, மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள 1981-81 ஆம் ஆண்டுக்கான பாசனம் மீதான எனது கருத்தையும் எனது தொகுதில் செயலாக்க வேண்டிய நீர்ப்பாசன திட்டத்தையும் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்களுக்கு இந்த ஆண்டு 22.73 கோடி அரசு ஒதுக்கியுள்ளதை பெரிதும் வரவேற்கிறேன். தமிழகத்தில் பசுமைப புரட்சியினை உருவாக்க, தமிழகத்தில் விவசாய பாசன நிலங்களைப் பெருக்க பெருமளவில் நீர்த்தேக்கங்களையும், சிறிய பாசனத் திட்டங்களையும் உருவாக்கி செயல்படுத்த முனைந்துள்ள புரட்சித் தலைவர் அரசுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் பாசன நிலங்களை அதிகரிக்க புரட்சித் தலைவரின் புரட்சிகரமான பல பெரும், நடுத்தர, சிறிய பாசனத் திட்டங்களைச் செயலாக்கி, தமிழகத்தின் உணவு நிலைமையைத் தன்னிறைவாக்க எண்ணியுள்ளதை பெரிதும் வரவேற்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கொல்லிமலையில் உள்ள பெரியாறு ஐந்தாறு நீர்வீழ்ச்சிகளை பெரிய நீர்த்தேக்க அணைகளாக மாற்றி, பல்லாயிரக்கணக்கான நிலங்களுக்கு பாசன வசதி செய்துதர ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

கொல்லிமலை ஆறு அணைக்கட்டுத் திட்டம் பரிசீலனையில் உள்ளதை, மின்சாரம் எடுக்கவும் வசதியாக இரு துறைகளும் சேர்ந்து இந்த திட்டத்தை எந்த இடத்தில் அமைத்தால் சிறப்பாக இருக்குமோ அந்த இடத்தில் அமைத்து, விரைவாக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலையில் ஓடும் இரு சிறு ஆறுகளை சிறிய அணைகள் மூலம் தேக்கி, இந்த கொல்லிமலை மக்கள் அவற்றால் நிரந்தர பாசன வசதி பெற வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கொல்லிமலையிலுள்ள திண்ணார் நாட்டில் ஓடுகின்ற ஆற்றில் தேவானூர் அருகே ஒரு நீர்த்தேக்கத்தை அமைத்து, 2,000 ஏக்கர் நிலம் நிரந்தர பாசனப் வசதி பெற விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.





சேந்தமங்கலம் தொகுதியிலுள்ள நாமக்கல்பேட்டை ஒன்றியத்துக்கு உட்பட்ட பெரியகோம்பை கிராமத்தின் அருகில் உள்ள கொல்லிமலையிலிருந்து வரும் ஆறான சின்னாற்று ஓடையின் குறுக்கே நீர்த் தேக்க அணைக் கட்டி, அதனால் 5,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது சேந்தமங்கலம் தொகுதியில் உள்ள காளப்பநாய்க்கன் பட்டி, நடுகோம்பை பஞ்சாயத்துக்குட்பட்ட இடங்களில் உள்ள கருமலையிலிருந்து வரும் ஆற்றில் மூலக்காடு என்ற இடத்தில் சிறிய நீர்த்தேக்கம் அமைத்து 1,500 ஏக்கர் நிலங்களும், 400 கிணறுகளும் பாசன வசதி பெற ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

நடுக்கோம்பை அருகே ஓடும் வண்ணாம்சோலை ஆற்றை தடுத்து அதில் நடுத்தர நீர்தேக்கம் அமைத்து 2,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

நாமகிரிப்பேட்டை ஒன்றியத்துக்கு உட்பட்ட மங்களபுரம் பஞ்சாயத்தில் உள்ள அணைப்பாளையம், ஒரம்பு பகுதிகளிலுள்ள சிறிய ஓடைகளை தேக்கி சிறிய நீர்ப்பாசனத் தேக்கத்தை உருவாக்கி அந்தப் பகுதி கிணறுகளுக்கு நன்மை அளிப்பதன் மூலம் வாய்க்கால் மூலம் 500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திற்குப்பட்ட சிங்கிலியன் கோம்பை அருகில் ஓடும் ஆற்றில் சிறு பாசன நீர்த்தேக்கம் கட்டி, கிணறுகளுக்கும் 1,000 ஏக்கர் பாசன வசதி பெறவும் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள ஊனந்தாங்கல் கிராமத்தின் அருகில் ஓடும் ஆற்றில் சிறிய நீர்பபாசன அணை அமைத்து, 500 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி செய்ய வேண்டுகிறேன்.

சேந்தமங்கலம் பகுதியிலுள்ள பெரியகுளம், நாச்சிப்புதூர் குளம் முதலிய குளங்களை ஆழப்படுத்தி நீர்த்தேக்கத்தை அதிகப்படுத்த வேண்டுகிறேன்.

புதுச்சத்திரம் ஒன்றியத்திலுள்ள சிறு சிறு குளங்களை ஆழப்படுத்தி நன்கு சீரமைத்து அதன் மூலம் கிணறுகளில் வறட்சி ஏற்படாத நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் பல பெரிய நீர்த்தேக்கங்களையும், சிறிய, நடுத்தர நீர்த்தேக்கங்களையும் உருவாக்கி தமிழகத்தின் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய புரட்சித் தலைவரின் புரட்சிகரமான நீர்ப்பாசனத் திட்டங்களையும். தன்னிறைவுத் திட்டத்தில் சிறு

நீர்ப்பாசன பணிகள் செய்ய உள்ளதையும், ஏரி பாசனம் நவீன படுத்தும் திட்டத்திற்காக மாநிலம் முழுவதும் 12,000,00 ஒதுக்கியுள்ளதை பெரிதும் வரவேற்கின்றேன்.

அடுத்தபடியாக சேலம் மாவட்டத்தில் ஆனைமடுவு நீர்த் தேக்கத்திற்கு 351 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருப்பதையும் கரிய கோயில் நீர்த்தேக்கத்திட்டத்திற்கு 3,680 இலட்சம் ஒதுக்கியுள்ளதையும் நான் பெரிதும் வரவேற்கிறேன்.

கொல்லிமலை திட்டத்திற்கு 489 லட்சம் ஒதுக்கியுள்ளதை வரவேற்கிறேன். சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு சேலம் மாவட்டத்தில் 2 திட்டங்கள் எடுக்க அரசு எண்ணியுள்ளது. இதில் என்னுடைய தொகுதியில் உள்ள சிறு பாசனத் திட்டத்தை எடுத்துக்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

ஏற்காடு மலையில் ஓடும் சிறு சிறு ஆற்றினைத் தேக்கி அதனால் மலைவாழ் மக்கள் வருடம் பூராவும் பாசன வசதி பெற ஏற்பாடு செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

வாழப்பாடி ஒன்றியத்திலுள்ள வேளூர் அருகில் உள்ள புழுதிக்குட்டை கிராமத்தில் அருகில் ஓடும் பெரிய ஆற்றை நடுத்தர நீர்த்தேக்க அணைகளாகக் கட்டி அதன் மூலம் 2,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லி மலையிலுள்ள வாழவந்திநாடு கிராமத்திலுள்ள் சந்தனப்பாறை ஆற்றில் நீர்த்தேக்கம் அமைத்து சுமார் 1,500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுவதுடன் கொல்லிமலை சுற்றுலா இடமாக உள்ளதால் இந்த நீர்த் தேக்கத்தில் படகு விட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரச் செய்ய நீர்ப்பாசன துறை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. எம். சின்னராஜ்: மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற நீர்ப்பாசன துறை மானியத்தினை வரவேற்று சில கருத்துக்களை முன் வைக்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கின்ற முக்கியப் பிரச்சினைகளில் நதி நீர்ப் பிரச்சினைதும், வேலை வாய்ப்புப் பிரச்சினையும் மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளாக இருக்கின்றன என்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம்,





தேசியத்தைப் பற்றியும், தேசிய நீரோட்டத்தைப் பற்றியும் பேசுகிறவர்கள் தயவுசெய்து தமிழ்நாட்டில் நதி நீர் ஓடுவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்பதையும் அதன் மூலமாகத்தான் நீங்கள் இந்தத் தமிழ்நாட்டு மக்களின் நண்பர்களாக திகழ முடியும் என்பதையும் முதலில் நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைப் பற்றி நீண்ட நெடுங் காலமாகப் பேசப்பட்டு வருகின்றது. கோவை மாவட்டத்தின் ஒரு பகுதி நதியையே பார்க்காத ஒரு இடமாக இருக்கின்றது. பாண்டியாறு புன்னம்புழாயாற்றி பல தலைவர்கள் பேசியாகி விட்டது. இனிமேல் அதைப் பற்றிப் பேசுவதற்குக் கூட எங்கள் பகுதியில் உள்ள எந்த ஒரு அரசியல்வாதியும் அச்சப்படுகின்ற நிலைமைதான் இருக்கின்றது. கோவை மாவட்டத்தின் ஒரு பகுதியான கோயம்புத்தூர், அவினாசி தாலுக்காக்களில் பெரும் பாலான இடங்கள் நிரந்தர வறட்சிப் பகுதியாக காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. பவானி நொய்யலாற்றுத் திட்டம் போன்றவை சாத்தியக் கூறான திட்டம். இதற்காக மத்திய அரசையோ, கேரள அரசையோ கலந்து கொள்ளாமல் நமக்கு இருக்கின்ற பவானி நீரையே பகிர்ந்துகொண்டு குறிப்பிட்ட இரண்டு வறண்ட தாலுக்காக்களுக்கும் பயன்படுகின்ற வகையில் இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு அரசு மிகத் தீவிரமான முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று வறட்சிப் பகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய பகுதியிலே இருக்கின்ற கிணறுகளின் ஆழம் 100 அடி, 125 அடி, 150 அடி என்ற அளவிலே இருக்கின்றது. இரண்டு மோட்டார் போட்டுத்தான் நீர் இறைக்கவேண்டிய நிலைமை இருக்கின்றது. ஆகவே இந்தப் பிரச்சினை பற்றிப் பார்க்கின்றபோது தஞ்சை போன்ற மற்ற மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்காமல் வறண்ட கோவை மாவட்டத்திற்கு வேண்டிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பிரத்தியேகமான திட்டத்தின் மூலம் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சிறு அணைக்கட்டுகளை, அதாவது நீரோடைத் தடுப்பு அணைக் கட்டுக்களையாவது கட்டவேண்டும். அதன் மூலம் மழைக் காலங்களில் வெள்ளம் ஏற்படுகின்றபோது தண்ணீரைத் தேக்கி அதன் மூலம் கிணறுகளில் ஊற்றுக்கால் ஏற்படுவதற்காவது வசதி செய்ய முடியும். அப்படி இந்த அணைக்கட்டுகளைக் கட்டுகின்ற முயற்சியை மேற்கொள்கின்ற போது பி.சி. ரேஷியோவின்படி பார்த்து அதாவது, கட்டுபடியாகக் கூடிய நிலையில் இல்லை என்று கூறி இந்த அணைக் கட்டுக்கள் கட்டுவதைத் தடுத்துவிடுகின்ற நிலைமை ஏற்படுகின்றது. ஆகவே இந்தப் பகுதியில் உள்ள இந்த திட்டங்களைப் பொறுத்தவரையில் பி.சி. ரேஷியோ என்பது தளர்த்தப்பட வேண்டும். நொய்யலாற்றில் வெள்ளம் ஏற்படுகின்றபோது அது காவிரியில் கலந்து, கடலில் வீணாகக் கலக்கின்றது. ஆகவே நாம் உணவை சேமிப்பது போன்று நீரையும் சேமித்து வைப்பது அவசியமாகும். ஆகவே மழைக் காலங்களில் வெள்ளத்தினால்

வருகின்ற தண்ணீரைச் சேமித்து வைக்கின்ற திட்டங்களைப் பொறுத்தவரையில் பி.சி. ரேஷியோ பார்க்காமல் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நதிகளைத் தேசியமயமாக்கும் கொள்கையினைப் பொறுத்தவரையில் இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அதைப் பல கட்டங்களிலே நாம் வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். எதுவெல்லாமோ தேசியமயமாக்கிக் கொண்டிருக்கின்ற மத்திய அரசு முதல் கட்டமாக நதிகளைத் தேசியமயமாக்கி நதிநீரைப் பகிர்ந்து கொடுக்கின்ற திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குழாய் கிணறுகளுக்கென்று வாரியம் ஏற்படுத்துகின்ற முயற்சியை அரசு மேற்கொண்டு நிறைவேற்ற இருக்கின்றது. அதேபோல் நதி நீர்ப் பங்கீட்டுக்கும் ஒரு அமைப்பு Water Management Board நிறுவவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3 ஆம் நாள்) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

102. 1981–82 ஆம் ஆண்டின் பாசனம் பற்றிய மானிய கோரிக்கை மீதான நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் உரை (தமிழ், ஆங்கிலம்).

103. 1981-82 ஆம் ஆண்டில் பாசனம் மற்றும் நிலநீர் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

104. 1980-81 ஆம் ஆண்டு நீர்ப்பாசனம் மீதான மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின் போது சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் அளித்த ஆலோசனைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவர அறிக்கை (தமிழ்).





## இணைப்பு அ.

[462-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

### பாசன மானியக் கோரிக்கை 1981—82

#### விளக்க உரை.

தற்போதுள்ள பாசன அமைப்புகளை விரிவாக்குவதற்கு ஏற்படும் செலவும், அவற்றைப் பராமரிப்பதற்கான வழக்கமான செலவும், வெள்ளம், புயல், வறட்சி ஏற்படும் சேதங்களை ஈடுசெய்வதற்கான செலவும், ''கோரிக்கை 36 பாசனம்'' என்பதன் கீழ் வழங்கப்படும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும்.

புதிய பாசனத் திட்டங்கள், தொழிற்சாலைகளுக்கு நிலத்தடி நீர் வழங்கும் திட்டங்கள் ஆகியவற்றின் செலவு ''கோரிக்கை-50 பாசனம் மீதான மூலதனச் செலவு'' என்பதன் கீழ் பெறும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும்.

#### ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பாசனம்.

2. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கும் மற்றும் தற்போதுள்ள பாசன அமைப்புகளை நவீனப்படுத்தும் திட்டங்களுக்கும் ரூ. 150 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 56 விழுக்காடு, தற்போதுள்ள பாசன அமைப்புகளை நவீனப்படுத்தும் திட்டங்களுக்காகும். பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களின் மூலம் 66,000 ஹெக்டேர் (1.63 இலட்சம் ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி பெற ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் வகை செய்கிறது.

ஆறாவது திட்டத் தொடக்கத்தில் நிறைவேற்றப்பட்டு வந்த எட்டு பெரிய நடுத்தர மற்றும் நவீனப்படுத்தும் திட்டங்கள், ஆறாவது திட்ட காலத்தில் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டங்களின் விபரங்கள் இணைப்பு 1 ல் கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளை நிறைவேற்ற ரூ. 71.34 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. 39 திட்டங்கள் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே எடுத்துக் கொள்ளப்படும். இவற்றின் மதிப்பீடு ரூ. 440.12 கோடி. இந்தத் திட்டங்களுள், ஏழு திட்டங்கள் ஆறாவது திட்ட காலத்திலேயே முடிக்கப்பட உள்ளன. ஏனையவை அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிவடையும். இந்த புதிய திட்டங்களின் விபரம் இணைப்பு II-ல் உள்ளது.

ஆறாவது திட்டத்தில் சிறு பாசனத் திட்டங்களுக்காக 18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், 17,000 ஹெக்டேர் (0.42 இலட்சம் ஏக்கர்) புதிய நிலப்பரப்பு பாசனம் பெறும்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம், ரூ. 168 கோடி செலவில் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் 83,000 ஹெக்டேர் (2.05 லட்சம் ஏக்கர்) நிலங்கள் பாசனம் பெற வகை செய்கிறது.

வெள்ளத் தடுப்பு, பாசன வடிகால் திட்டங்களுக்கும் மற்றும் கடல் அரிப்பு தடுப்புத் திட்டங்களுக்கும் முறையே ரூ. 22 கோடியும் மற்றும் ரூ. 6 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் ஆய்வு, அடையாறு நீர் ஆய்வு நிலையத்தின் மேம்பாடு முதலியவற்றிற்கு ரூ. 9.74 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் விவரங்கள் இணைப்புகள் III மற்றும் IV-ல் தரப்பட்டுள்ளன.

### பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனம்.

3. பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்களுக்கு 1981–82-ல் 22.73 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள்.

4. 1980–81-ல் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் (கோயமபுத்தூர் மாவட்டம்) மற்றும் பெரியாறு வைகை நவீனப்படுத்தும் திட்டம் (மதுரை மாவட்டம்) ஆகிய இவ்விரண்டு பெரிய திட்டங்களின் வேலைகள் நடைபெற்று வந்தன.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் (பாசனப் பகுதி மட்டும்) ரூ. 66.72 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டு பயனளித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1.02 லட்சம் ஹெக்டேர் (2.53 லட்சம் ஏக்கர்) நிலங்களுக்கு சுற்று முறையில் நீர் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் ஆயக்கட்டை விரிவாக்கி, கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் உள்ள பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, பல்லடம் மற்றும் தாராபுரம் வட்டங்களில் 0.47 லட்சம் ஹெக்டேர் (1.15 லட்சம் ஏக்கர்) கூடுதல் நிலங்களுக்கும் பயன் கொடுப்பதற்கான திட்ட வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஆயக்கட்டு விரிவாக்க வேலைகளின் மதிப்பீடு ரூ. 14 கோடியாகும். இந்த வேலை 1985-ல் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.



பெரியாறு-வைகை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பாசனக் கால்வாய்களை நவீனப்படுத்துவதின் மூலம் சேமிக்கப்படும் நீரைப் பயன்படுத்தி கூடுதலாக 10,300 ஹெக்டேர் (25,455 ஏக்கர்) நிலத்துக்குப் பாசனத்திற்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதைய மதிப்பீடுகளின்படி இத் திட்டத்திற்கு ரூ. 72 கோடி செலவாகும். இந்தத் திட்டம் 1977-ம் ஆண்டு முதல் உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது. பெரியாறு பிரதான கால்வாய் நவீனப்படுத்துவது அநேகமாக முடிந்து விட்டது. திருமங்கலம் பிரதான கால்வாய் (28.03 கி. மீ.) மேம்படுத்தும் வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கிளைக் கால்வாய்களைப் புதுப்பிக்கும் வேலைகள் நடந்து வருகின்றன. திட்டப் பகுதிகளில் 397 கி. மீ. நீளத்திற்குப் புதிய கிராமச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 1984 ஆம் ஆண்டு திட்ட வேலைகள் முடிவடையலாம். இதுவரை இத் திட்டத்திற்கு ரூ. 20.35 கோடி செலவிடப்பட்டுள்ளது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980–85-ல்) இதற்காக ரூ. 56.06 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

### நடுத்தரப் பாசனத் திட்டங்கள்.

5. முந்தைய ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட 12 நடுத்தரப் பாசனத் திட்டங்களின் வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. திருச்சி மாவட்டத்தில் இரண்டும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒன்றும், தர்மபுரி மாவட்டத்தில் ஒன்றும் ஆக நான்கு புதிய நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்தது. அவையாவன : (1) திருச்சி மாவட்டம் லால்குடி வட்டத்தில், உப்பாற்றின் குறுக்கே ரூ. 90 லட்சம் மதிப்பீட்டில் நீர்த் தேக்கம் கட்டும் திட்டம். இத்திட்டம் 720 ஹெக்டேர் (1,785 ஏக்கர்) புதிய புஞ்சை நிலங்களுக்குப் பயனளிக்கும். (2) திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் சித்தமல்லி ஓடையின் குறுக்கே ரூ. 240 இலட்ச மதிப்பீட்டில், நீர்த் தேக்கம் கட்டும் மற்றொரு திட்டம். இத்திட்டம் 340 ஹெக்டேர் (829 ஏக்கர்) நிலங்களில் பாசன வசதியை உறுதி செய்வதுடன், 1700 ஹெக்டேர் (4202 ஏக்கர்) புதிய புஞ்சை நிலங்களுக்கும் பயன் அளிக்கும். (3) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1,460 ஹெக்டேர் (3,600 ஏக்கர்) இருபோக நஞ்சை நிலங்கள் பாசன உறுதி பெறவும், 930 ஹெக்டேர் (2300 ஏக்கர்) இருபோக நஞ்சை நிலங்களின் பாசன பற்றாக்குறையை நீக்கவும், ரூ. 246 லட்ச மதிப்பீட்டில் அனந்தனாறு கால்வாயை சீரமைக்கும் திட்டம். (4) தர்மபுரி மாவட்டத்தில் சூலகிரிக்கு அருகே சின்னாற்றின் குறுக்கே ரூ. 95 லட்சம் செலவில் நீர்த் தேக்கம் அமைத்தல். இதனால் 353 ஹெக்டேர் (871 ஏக்கர்) இருபோக புஞ்சை நிலங்கள் பயனடையும். இத் திட்டங்களின் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கன்குடி நீர்த் தேக்கத் திட்டம், ஆனைக்குட்டம் நீர்த் தேக்கத் திட்டம் மற்றும் கோல்வார்பட்டி நீர்த் தேக்கத் திட்டம், மதுரை மாவட்டத்தில் குதிரையாறு நீர்த் தேக்கத் திட்டம் மற்றும் சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டம், சேலம் மாவட்டத்தில் ஆனைமடுவு நீர்த் தேக்கத் திட்டம் மற்றும் கரியக்கோவில் நீர்த் தேக்கத் திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் திருப்பரப்பு வலப்புற வாய்க்கால் நீட்டிக்கும் திட்டம் மற்றும் கோவை மாவட்டத்தில் நொய்யல் நீர்த் தேக்கத் திட்டம் ஆகிய ஒன்பது நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு நடப்பு ஆண்டு 1981–82-ல் ஒப்புதல் வழங்குவதற்கான சாத்தியம் உள்ளது. இத் திட்டங்களின் மதிப்பீடு ரூ. 34 கோடி ஆகும். இத்திட்டங்களினால் 18,230 ஹெக்டேர் (45,000 ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி பெறும். தவிர தற்போதுள்ள 2,430 ஹெக்டேர் (6,000 ஏக்கர்) ஆயக்கட்டு நிலங்கள் பாசன உறுதி பெறும். 45,100 டன் அதிக உணவு உற்பத்தி கிடைக்கும்.

### தற்போதுள்ள பாசனத் திட்டங்களை நவீனப்படுத்துதல்.

6. தமிழ்நாட்டில் ஒரு சில பெரிய நதிகளே உள்ளன. அவைகளும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஏற்கனவே உள்ள ஆற்று நீர்ப்பாசனத் திட்டங்களில் பல மிகப் பழமையானவையாகும்.

இத் திட்டப் பகுதிகளில் காலப் போக்கில் ஏற்பட்ட சீர்கேட்டினாலும், மண்ணின் தரம் குறைந்ததாலும், கால்வாய்களில் நீர் இழப்பு கணிசமாக அதிகரித்துள்ளது. மேற் பரப்பு நீரின் பெரும் பகுதி பயன்படுத்தப்பட்டுள்ளதால், தற்போது ஏற்படும் நீர் இழப்புகளைத் தவிர்த்து பாசன வசதியைப் பெருக்குவதற்கான வழிமுறைகளைக் காண்பதவசியமாகிறது.

உலக வங்கியின் உதவியுடன் அரசு ஏற்கனவே பெரியாறு—வைகை நவீனப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. விஞ்ஞான அடிப்படையில் நவீனப்படுத்தும் முறைகளினால் இத் திட்டத்தின் முடிவில் உத்தேசமாக 3.5 டி. எம். சி. தண்ணீர் மிச்சப்படுத்தலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ரூ. 366 கோடி செலவில் காவிரி டெல்டாவை நவீனப்படுத்துவதற்கு விரிவான திட்ட அறிக்கை ஒன்று அலுவலர்களைக் கொண்ட சிறப்புக் குழுவினால் இறுதியாக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்கு உலக வங்கியின் நிதி உதவி கோரப்படும்.



இதே போன்று, நான்கு பெரிய ஆறுகளின் பாசனத் திட்டங்கள் நவீனப்படுத்துவதற்கான ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவையாவன:—

1. பெரியார், திருச்சி மாவட்டங்களில் அமைந்துள்ள கீழ்பவானித் திட்டம்;

2. கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள கோதையாறு திட்டம்.

3. வட ஆற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் அமைந்துள்ள கீழ் பொன்னியாறு திட்டம்.

4. மணிமுத்தாறு பிரதானக் கால்வாய் மற்றும் தாம்பிரபரணி திட்டம்.

கீழ்பவானி பாசனத் திட்டத்தையும், கீழ் பொன்னியாறு பாசனத் திட்டத்தையும் நவீனப்படுத்துவதற்கான முதல் நிலை திட்ட அறிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டு விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் கோதையாறுத் திட்டம், மணிமுத்தாறு பிரதான கால்வாய் மற்றும் தாம்பிரபரணி திட்டம் ஆகிய திட்டங்களை நவீனப்படுத்துவதற்கான முதல் நிலை ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வகைக்காக ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 86.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1981–82ம் ஆண்டில் ரூ. 11.47 கோடி செலவிடப்படவிருக்கிறது.

### பாசனத் திட்டங்கள் ஆய்வு

7. 31,200 ஹெக்டேர் அதாவது 78,000 ஏக்கர் நிலங்கள் பயனடையும் வகையில் ரூ. 59 கோடி பெறுமான 28 நடுத்தர பாசனத் திட்டங்கள் பொதுப்பணித் துறையின் ஆய்வுப் பிரிவின் விரிவான ஆய்வில் உள்ளன. விவரங்களை இணைப்பு V-ல் காண்க. தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு ஆற்றுப்படுகைகளின் நீர் வரத்து நீரின் மட்டம் குறித்தல், மற்றும் மிகுதியாகக் காணப்படும் நீர் வளத்தை மதிப்பிடுதல் முதலான பணிகளும் இந்த ஆய்வுப் பிரிவினால் நடத்தப்படுகின்றன. பாசனத் திட்டங்களின் ஆய்வுப் பணியை அதிகரிக்க வேண்டுவதின் அவசியத்தைக் கருதி, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆய்வு வேலைகளுக்காக மட்டும் ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## நீரியல் மற்றும் நீர் நிலையியல் ஆய்வகம், பூண்டி.

8. நீரியல் மற்றும் நீர் நிலையியல் ஆய்வகமானது சிவில் பொறியியல் துறையின் முக்கியமான பிரிவான நீரியல் மற்றும் நீர் நிலையியல் சம்பந்தப்பட்ட ஆய்வுப் பணிகளில் அதாவது அடிப்படை ஆய்வு (Basic Research) மற்றும் துணை ஆய்வு (Applied Research) ஈடுபட்டுள்ளது.

பாசனப் பொறியியல் பிரிவில், நீரியல் மற்றும் நீர் நிலையியலைச் சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகின்றது. வடிவமைப்புப் பிரிவினர் உருவாக்கி வடிவமைத்துத் தரும் உத்தேச பாசனத் திட்டங்களுக்கான வடிவமைப்புகளின் செயல் திறனை சிற்றுருவின் (Model) துணைகொண்டு ஆய்வுசெய்து சிக்கனமான மற்றும் பாதுகாப்பான பாசன அமைப்புகளை உருவாக்குவதற்கு இவ்வாய்வகம் துணை செய்கிறது.

அடிப்படை ஆராய்ச்சிப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் கடல் அரிப்பு, கடல் அலைகள் பற்றிய நீரியல், மேற்பரப்பு நீர் ஆவியாவதினால் ஏற்படும் இழப்பு, அனலாக் (Analog) கம்ப்யூட்டர் மூலம் கிணறுகளில் கிடைக்கும் நிலத்தடி நீர், மற்றும் நீர்ப் பிடிப்புப் பரப்பில் மண்வளத்தைக் காத்தல் போன்றவை சம்பந்தமான ஆய்வுகள் இவ்வாய்வகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்சமயம் இவ்வாய்வகம் மேற்பார்வைப் பொறியாளர் தகுதியிலுள்ள ஒரு இயக்குநரின் நிர்வாகத்திலுள்ளது. நீரியல் மற்றும் நீர் நிலையியலின் ஆய்வுப் பணிகளின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, இந்த ஆய்வகத்தின் நிலையினை உயர்த்தி இதனை நிர்வகிக்க தலைமை பொறியாளர் தகுதியுடைய இயக்குநரை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது.

## சிறுபாசனம்.

9. 1980–81 ஆம் ஆண்டில், சிறப்புச் சிறுபாசனத் திட்டத்திற்காக ரூ. 200 இலட்சங்களும், தூர்வாரிப் புனரமைக்கும் திட்டங்களுக்காக ரூ. 10 இலட்சங்களும், ஒதுக்கீடு செய்யப்பட்டன. நிலுவையில் உள்ள 129 வேலைகளில், 1980–81-ல் 50 வேலைகள் செய்து முடிக்கப்பட்டன. இந்த வேலைகளினால் 2,000 ஹெக்டேர் (5,000 ஏக்கர்) நிலங்கள் பயனடையும்.

1980–81-ல் ரூ. 68.18 இலட்ச மதிப்பீட்டில் 14 புதிய சிறப்பு சிறுபாசனத் திட்டங்களுக்கும் ரூ. 2.19 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி புனரமைக்கும் திட்டங்களுக்கும் அரசு ஒப்பளித்துள்ளது.





1981–82 ஆம் ஆண்டில், சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களுக்காக ரூ. 200 இலட்சங்களும், தூர்வாரிப் புனரமைக்கும் திட்டங்களுக்காக ரூ. 4 இலட்சங்களும நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வாண்டில் 40 வேலைகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் 2,000 ஹெக்டேர் (5,000 ஏக்கர்) புதிய மற்றும் பாசனப்பற்றாக் குறை நிலங்களும் பயனடையும்.

சிறப்புச் சிறுபாசன திட்டங்கள் மற்றும் தூர்வாரிப் புனரமைக்கும் திட்டங்களின் ஆய்வு துரிதப்படுத்தப்பட்டு, இன்றைய தேதியில் ரூ. 154 இலட்ச மதிப்புள்ள திட்டங்கள் தீவிர பரிசீலனையில் உள்ளன.

இந்தத் திட்டங்களின் விவரங்களை இணைப்பு VI-ல் காணலாம்.

சிறு பாசனத்திற்காக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கீடு ரூ. 18 கோடி ஆகும்.

## தீவிரப்படுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டங்கள்.

10. 40 ஹெக்டேர் (100 ஏக்கர்) மற்றும் அதற்கு மேற்பட்ட நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கக்கூடிய நீர் நிலைகளின் பராமரிப்பு பொறுப்பைப் பொதுப்பணித்துறை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ள 40 ஹெக்டேருக்கு (100 ஏக்கர்) குறைவான பாசன வசதி அளிக்கக்கூடிய நீர்நிலைகளை, தரப்படுத்தி பொதுப்பணித்துறை, ஊராட்சி ஒன்றியத்திடம் பராமரிப்பதற்காக ஒப்படைக்கும். முந்தைய ஜமீன்களைச் சார்ந்த நீர்நிலைகளும் அவ்வாறே பொதுப்பணித் துறையினரால் தரப்படுத்தப்படும்.

1974 ஆம் வருடம் முதற்கொண்டே இந்த தீவிரப் படுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தூர் எடுத்தல், மதகுகள் அமைத்தல், வரத்துக் கால்வாய்கள் வெட்டுதல், வடிகால் அமைத்தல் முதலியவை மூலம் மாநிலத்திலுள்ள சிறு பாசன நீர் நிலைகளை மேம்படுத்தவும், தரப்படுத்தவும் இத்திட்டம் வகை செய்கிறது. இவ்வேலைகளுக்கு 1980–81 ஆம் ஆண்டில் பொதுப்பணித்துறையின் பராமரிப்பிலுள்ள நீர் நிலைகளுக்கு ரூ. 75 லட்சமும், ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பிலிருக்கும் நீர் நிலைகளுக்கு ரூ. 50 லட்சமும் முன்னாள் ஜமீன் குளங்களின் பராமரிப்பிற்கு ரூ. 10 இலட்சமும் ஒதுக்கப்பட்டன. 1981–82 ஆம் ஆண்டில் முறையே ரூ. 75 லட்சம், ரூ. 40 லட்சம் மற்றும் ரூ. 8 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளன. சிறு பாசன நீர் நிலைகளை தரப்படுத்தும் மற்றும் மேம்படுத்தும் வேலையை விரைவுபடுத்த ஒரு விரிவான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1981 ஏப்ரல் 2

## கண்மாய்களை நவீனப்படுத்தும் திட்டம்.

11. உலக வங்கியின் ஆலோசனைக்கிணங்க, 1979–80-ம் ஆண்டில் மூன்று கண்மாய்களில் முன்னோடி ஆய்வுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் இரண்டு கண்மாய்களில் ஆய்வுகள் முடிவடைந்துவிட்டன. மூன்றாவது கண்மாயில் ஆய்வுகள் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் சில கண்மாய்களில் முன்னோடி ஆய்வுகளை மேற்கொள்ளும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. இந்த முன்னோடி ஆய்வுகளின் முடிவுகளின் அடிப்படையில் 200 ஹெக்டேர் (500 ஏக்கர்) அதற்கும் மேற்பட்ட ஆயக்கட்டுக்களுக்கு பாசன வசதி அளிக்கும் 500 கண்மாய்களை நவீனப் படுத்துவதற்கான ரூ. 119.08 கோடி மதிப்பீடு கொண்ட திட்டத்திற்கு உலக வங்கியின் உதவி கோரப்படும்.

## மிகவும் பின்தங்கிய வறட்சிப் பகுதிகளுக்கான பாசனத் திட்டங்கள்.

12. மிகவும் பின் தங்கிய மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மண்டல ஏற்றத்தாழ்வுகளை நீக்கவும் மற்றும் அப்பகுதிவாழ் மக்களின் பொருளாதார வசதியை உயர்த்துவதற்கும் இவ்வரசு பல திட்டங்களை நடுத்தர மற்றும் சிறு பாசன திட்டங்களின் கீழ் செயல்படுத்த தீர்மானித்துள்ளது. இம் மாவட்டங்களில் ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்ட திட்டங்களை இந்த வருடத்திலும் மற்றும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் எடுத்துக்கொள்ளலாம் என தீர்மானித்துள்ளது. ஏனெனில், இம்மாவட்டங்களில் இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் தற்போதுள்ள நிலங்கள் பாசன வசதி உறுதி பெறுவது மட்டுமின்றி புதிய நிலப்பரப்பும் பாசன வசதி பெறும். வறட்சியால் பாதிக்கப்பட்ட இப்பகுதிகளில் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கு வழக்கமாக கடைபிடிக்கப்படும் பயன் செலவு முதலிய விதிகளை அரசு மிகவும் கண்டிப்பாக கடைப்பிடிக்காது. சிக்கனமற்றதும், ஆதாயமற்றுதுமான திட்டமாக இருந்தாலும் கூட இப்பகுதிவாழ் மக்களுக்கு உதவும் நோக்கத்துடனும் அம்மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் இத்திட்டங்களை முடிந்த அளவு நிறைவேற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திட்டத்தட்ட ரூ. 26.3 கோடி செலவில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 20,390 ஹெக்டேர் (50,400 ஏக்கர்) கூடுதல் நிலங்களுக்கு பாசன வசதியும் தற்போது உள்ள 1,320 ஹெக்டேர் (3,260 ஏக்கர்) நிலங்களுக்கு பாசன உறுதியும் அளிக்கப்படும். 1981–82-ல் ரூ. 5.71 கோடி செலவில் 2,920 ஹெக்டேர் (7,220 ஏக்கர்) புதிய நிலங்களுக்கு பாசன வசதியும் 130 ஹெக்டேர் (320 ஏக்கர்) நிலங்களுக்கு பாசன உறுதியும் அளிக்கப்படும்.



1981 ஏப்ரல் 2]

## பாதகமான பருவ நிலை—பொதுப் பணித்துறையின் சிறப்புத் திட்டம்.

13. இம் மாநிலத்தில், பருவ நிலை தவறியதால் பாதிக்கப்பட்ட 11 மாவட்டங்களில், அப்பகுதிவாழ் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும், அதே சமயத்தில், நிலையானசொத்துகளை உருவாக்கும் பொருட்டும், பொதுப்பணித்துறை நீர்ப்பாசன வேலைகளை தீவிரமாக மேற்கொண்டு நிறைவேற்ற திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சாத்தியமான இடங்களில் புதுக்குளங்கள் வெட்டுதல், தற்போதுள்ள கண்மாய்கள், அணைக் கட்டுகள், வாய்க்கால்கள் முதலிய நீர் நிலைகளை மேம்படுத்துதல், ஆறுகளில் வெள்ளத் தடுப்பு கரைகளை வலுப்படுத்துதல் மற்றும் கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தல் போன்ற பணிகள் அடங்கும். வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் பொதுப் பணித்துறையின் நீர்ப்பாசன வேலைகளை மேற்கொள்ளுவதற்கு முதல் தவணையாக ரூ. 9.5 கோடி செலவிட அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இதன் மூலம் நாளொன்றுக்கு வறட்சி பகுதியில் வசிக்கும் சுமார் ஒரு லட்சம் பேர்களுக்கு முதற் கட்டமாக 6 மாத காலத்திற்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குடிதண்ணீர் தட்டுப்பாடு உள்ள பகுதியில் குடி தண்ணீர் வழங்க பொதுப்பணித்துறையின் நிலத்தடி நீர்ப் பிரிவில் ஏற்கனவே ஆய்வு வேலைகளுக்கு அமைக்கப்பட்டிருந்த 331 குழாய் கிணறுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவற்றின் விவரங்களை இணைப்பு VII-ல் காண்க.

## நீர்ப்பாசன வளம்.

14. 1980–81 ஆம் ஆண்டில் பரம்பிக்குளம் ஆளியாறு ஆயக்கட்டு விஸ்தரிப்பு திட்டத்தின் ஒரு பகுதி மூலம் புதிதாக 11,000 ஹெக்டேர் (27,440 ஏக்கர்) நிலங்கள் பயனடையும்படி பாசன வசதி உருவாக்கப்பட்டுள்ளது. 1981–82-ஆம் ஆண்டில் மேலும், 8,300 ஹெக்டேர் (20,500 ஏக்கர்) புதிய நிலங்களுக்கு பாசன வசதி உருவாக்கப்படும். அதாவது, பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் 6,520 ஹெக்டேர் (16,500 ஏக்கர்) பாம்பாறு நீர்த் தேக்கத் திட்டம் மூலம் 1,620 ஹெக்டேர் (4,000 ஏக்கர்) நிலங்கள் புதிதாகப் பாசன வசதி பெறும்.

## 1980-81 ஆம் ஆண்டில் பருவநிலை.

15. 1980–81-ஆம் ஆண்டு காவிரி படுகையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் மட்டுமே தென்மேற்குப் பருவமழை சாதாரணமாக இருந்தது. பெரியாறு, தாம்பிரபரணி மற்றும் கோதையாறு நீர்ப்

பிடிப்புப் பகுதிகளில், இது வழக்கத்தை விடக் குறைவாக இருந்தது. இம்மாநிலத்தில் ஏறக்குறைய எல்லா மாவட்டங்களிலும் வடகிழக்கு பருவ மழை தவறியதின் விளைவாக மாவட்டங்களின் பலபகுதிகளில் கடுமையான வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது. அரசால் நியமிக்கப்பட்ட ''பயிர் மற்றும் பருவ நிலை ஆய்வுக் குழு'' பலமுறை கூடி நீர்த் தேக்கங்களிலும், கண்மாய்களிலும் உள்ள நீர் நிலைகளை ஆய்வு செய்து நிலைமைக்கேற்ப தக்க நடவடிக்கை எடுத்துள்ளது. பருவ மழை தவறியதின் காரணமாக பாசனத் திட்டங்களிலிருந்து தண்ணீர் வருவது சில இடங்களில் ஒத்தி வைக்கப்பட்டது. சில திட்டங்களில் குறிப்பிட்ட பகுதிகளுக்கு மட்டும் தண்ணீர் விடப்பட்டது. சில பாசனத் திட்டங்களில் தண்ணீர் திறந்துவிட இயலவில்லை.

வெள்ளத் தடுப்பு.

16. வெள்ளத் தடுப்புப் பணிகளுக்கு 1981–82-ஆம் ஆண்டில் ரூபாய் 65.06 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 104.50 இலட்சம் மதிப்பீட்டில் வைகைப் படுகையிலிருந்து குண்டாறு மற்றும் கிருதுமால் படுகைகளுக்கு வெள்ள நீரை திருப்பும் திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இம்மாநிலத்தில் அதிக அளவில் வெள்ளத் தடுப்புத் திட்டங்களை மேற்கொள்ள ரூபாய் 19 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் வைகை ஆறு, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கோரையாறு, தென்ஆற்காடு மாவட்டத்தில் கடிலம் மற்றும் வெள்ளாறு, செங்கல்பட்டு, மாவட்டத்தில் கொசஸ்தலையாறு சென்னையில் அடையாறு மற்றும் கூவம் ஆகியவைகளில் வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ள திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

காவிரி நீர்.

17. காவிரி நீர்ப் பங்கீடு பற்றி 1980 செப்டம்பர், டிசம்பர் ஆகிய திங்களில் மாண்புமிகு மத்திய பாசன அமைச்சரின் தலைமையில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் பாண்டிச்சேரி மாநில முதல்வர்களிடையே மேலும் இரண்டு சுற்று பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. 1924ஆம் ஆண்டு உடன்படிக்கை இன்னும் அமுலில் உள்ளது எனவும், மறு ஆய்வின் பேரில் ஏற்படும் எந்த உடன்படிக்கையும் 1924 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் அடிப்படையிலேதான் இருக்க முடியும் எனவும் ஏற்கனவே தமிழக அரசு எடுத்த நிலை இந்தப் பேச்சு வார்த்தைகளில் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. தற்போது உள்ள ஆயக்கட்டின் நலன்கள் முழுவதும் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் வற்புறுத்தப்பட்டது. இந்தப் பேச்சு வார்த்தைகளில் எந்தவித



உடன்பாடும் ஏற்படவில்லை. முடிவில் ஒவ்வொரு படுகை மாநிலமும் காவிரி நீர் பற்றிய தத்தம் வரைவு செயற் குறிப்பை மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. இது பற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னையில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டங்கள் பல முறை நடைபெற்றன. கூட்டத்தின் நடவடிக்கைகளில் ஒத்துழைத்து பிரச்சினை மீது தங்கள் அரிய ஆலோசனைகளை எடுத்துக் கூறிய கட்சித் தலைவர்களுக்கு தமிழக அரசு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. இது பற்றி இறுதிக் கூட்டம் விரைவில் கூட்டப்பட்டு அதில் மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டிய செயற் குறிப்பு பரிசீலனைக்கு வைக்கப் படும். தமிழ்நாட்டு மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கருத்துக்களைக் கூட்டத்தில் அறிய வாய்ப்பு ஏற்படும். இந்தப் பிரச்சினையில் நேர்மையான, நியாயமான முடிவு காண முடியும் என்றும் உடன்பாடு விரைவில் ஏற்படும் என்றும் தமிழக அரசு நம்பிக்கை கொண்டிருக்கிறது.

தமிழகத்திற்கு கிருஷ்ணா நதி நீர்.

18. சென்னை நகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்திசெய்ய ஆந்திராவிலுள்ள ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து பூண்டி நீர்த்தேக்கத்திற்கு 15 டி.எம்.சி. நீரைக் கொண்டு வருவதற்கான கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின் கள ஆய்வு வேலைகள் முடிவடைந்துள்ளன. இத்திட்டம் தொடர்பாக ஆந்திர எல்லைக்குள் நடைபெறும் வடிவமைப்பு, மற்றும் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கும் வேலை 1981 ஜூன் திங்களில் முடிவடையுமென ஆந்திர அரசு குறிப்பிட்டுள்ளது. தமிழக பகுதி எல்லைக்குள் திட்ட மதிப்பீடு வேலைகள் முடிவடைந்து விட்டன. இத்திட்டத்தின் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டபின் இத்திட்டம் நிறைவேற்றுவது பற்றிய சாத்தியக்கூறுகள் பரிசீலிக்கப்படும்.

மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைத் திருப்பி விடுதல்.

19. கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் உபரி நீரைத் தமிழகத்தில் இராமநாதபுரம், மதுரை, கோவை, மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கு திருப்புவது பற்றி அண்மையில் தமிழக முதல்வர், கேரள முதல்வர் அவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்.

கேரள மற்றும் கர்நாடகத்திலுள்ள மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் உபரி நீரை, கிழக்கே திருப்பி வறட்சிப் பகுதிகளை வளப்படுத்தும் பொருட்டு உபரி நீரைக் கணக்கிடுமாறு மத்திய அரசால் நியமிக்கப்பட்ட தொழில் நுட்பக் குழு தனது அறிக்கையை இறுதியாக்கி, மத்திய நீர்க் குழுவுக்கு சமர்ப்பிக்கும் நிலையிலுள்ளது. குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு பரிசீலித்து, உபரி நீரை நல்ல முறையில் பயன்படுத்துவது பற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமென இவ்வரசு நம்புகிறது.

### நிலத்தடிநீர்.

20. இந்தத் தலைப்பில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 9.70 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் நிலத்தடி நீர் ஆய்வுக்கு ரூபாய் 6.93 கோடியும், அடையாறு நீராய்வு நிலையத்தில் ஆய்வுப் பணிகளுக்கு ரூபாய் 43 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. 1981–82-ஆம் ஆண்டுக்கு ரூபாய் 58.38 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முதலில் ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக நில நீர் வளம் ஆய்வு செய்யப்பட்டது. தற்போது ( Sub- basin) சப் பேசினை ஒரு யூனிட்டாக வைத்து நுண்ணிய முறையில் நிலத்தடி நீர் வளம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த மாநிலத்தில் நுண்ணிய முறையில் நடத்தப்பட்டு வரும் ஆய்வு 30 விழுக்காடுகளுக்கு மேலான இடங்களில் முடிவடைந்துள்ளது. இன்னும் பாக்கியுள்ள இடங்களில் இவ்வாய்வு 1985-ஆம் ஆண்டிற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலத்தடி நீர் பிரிவினால் ஆய்வு செய்யப்பட்ட நிலத்தடிநீர் வளம் மற்றும் விவசாய மறுநிதி காப்பீட்டுக் கழகம் அனுமதித்து பண உதவி வழங்கிய யூனிட்டுகள் ஆகிய விவரங்கள் அட்டவணை VIII-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

### மாநிலக் குழாய்க் கிணறுகள் கழகம்.

21. ஆழ் மட்டத்தில் உள்ள நிலத்தடி நீரை குழாய்க் கிணறுகள் மூலம் வெளிக்கொணர்ந்து பாசனத்திற்கு பயன்படுத்துவது சிறு விவசாயிகளால் இயலாத ஒன்றாகும். மேலும், குறைந்த அளவே உள்ள நிலத்தடி நீரை நல்ல முறையில் சிக்கனமாக பயன்படுத்துவது மிக அவசியம். மேற்கண்ட குறிக்கோளுடன் சமுதாயக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, மாநிலக் குழாய்க் கிணறுக் கழகம் என்ற அமைப்பின் மூலம் இயக்கி, பராமரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இக் கழகம் குழாய்க் கிணறுகளை அமைத்து, விவசாயிகளுக்கு பாசனத்திற்கு நீர் வழங்குவதுடன், தண்ணீர் தீர்வையையும் வசூல் செய்யும். இதற்காக, மாநிலக் குழாய்க் கிணறுகள் கழகத்தினை நிறுவ அரசு முடிவெடுத்துள்ளது. இக்கழகத்தினை நிறுவுவதற்கான வழிவகைகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

22. 1980–81-ஆம் ஆண்டு பாசனத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டுக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களையும் யோசனைகளையும் அரசு கவனத்தில் கொண்டுள்ளது. அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.





### இணைப்பு 1.

(அ) தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்ற திட்டங்களுள் 1980-85-ல் திட்டக் காலத்தில் முடிக்கப்படவிருக்கும் திட்டங்கள்.

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | மாவட்டம். | திட்டச் செலவு. (ரூபாய் லட்சங்களில்) | ஆரம்பிக்கப்பட்ட தேதி. | முடிக்க குறிக்கப் பட்டுள்ள தேதி. | 1980–85-ல் எதிர்பார்க்கப்படும் பயன்கள். பரப்பு ஆயிரம் ஹெக்டேர்களில். | 1980–85-ல் எதிர்பார்க்கப்படும் பயன்கள். கூடுதல் உணவு உற்பத்தி (டன்களில்). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 பரம்பிக்குளம்— ஆளியாறு. | கோயம்புத்தூர்— பெரியார் | 6,671.50 | 1959 | 5/81 | 6.52 | 16,100 |
| 2 பெரியாறு— வைகை கால்வாய்களை நவீனப்படுத்துதல். | மதுரை— ராமநாதபுரம் | 7,200.00 | 4/74 | 3/85 | 2.90 | 5,736 |
| 3 சாத்தனூர் மேல் மட்ட அணைக் கட்டிலிருந்து வலது புறக் கால்வாய் வெட்டுதல். | வட ஆற்காடு— தென் ஆற்காடு. | 465.00 | 12/1974 | 3/81 | 2.00 | 4,940 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | குண்டாறு | திருநெல்வேலி | 82.00 | 6/1979 | 9/82 | 0.04 | 0.80 |
| 5 | தெலவரபள்ளி | தருமபுரி | 606.65 | 3/1977 | 3/83 | 3.24 | 8,010 |
| 6 | வீராணம் ஏரி கால்வாய்களை மேம்படுத்துதல் (முன்னோடி திட்டம்). | தென் ஆற்காடு. | 11.00 | 6/1978 | 6/81 | கூடுதல் பயன் இல்லை. | |
| 7 | சேர்வலார் .. | திருநெல்வேலி | 511.00 | 1977 | 6/81 | டி | |
| 8 | குடகனாறு .. | மதுரை .. | 1,090.00 | 1973 | .. | 3.60 | 8,900 |
| | | | | | | 18.30 அல்லது 18,300 | 43766 அல்லது 43,800 ஹெக்டேர். |

(இ) தற்போது நடைபெற்றுவரும் திட்டங்களுள் 1980–85-க்கு பின்னும் தொடர்ந்து நிறைவேற்றப்படும் திட்டம்

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | மாவட்டம். | திட்டச் செலவு ரூபாய் (லட்சங்களில்.) | ஆரம்பிக்கப் பட்ட தேதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| தஞ்சாவூர் கால்வாய்களை நவீனப்படுத்துதல் | தஞ்சாவூர் .. | 20,000.00 | 1967 |



## இணைப்பு II.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட புதிய திட்டங்கள்/இனிமேல் 1980–85-ல் மேற்கொள்ளப்படவேண்டிய புதிய திட்டங்கள்

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | மாவட்டத்தின் பெயர். | திட்டத்தின் செலவு (இலட்சத்தில்.) | தொடங்கப் பட்ட தேதி. | முடிக்க நிச்சியிக்கப் பட்ட தேதி. | 1980–85-ல் எதிர்பார்க்கப்பட்ட கூடுதலான பயன். பரப்பு. (ஆயிரம் ஹெக்டரில்). | கூடுதல் உணவு உற்பத்தி (டன்னில்). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| நீர்ப்பாசனத் திட்டங்கள் : | | | | | | |
| 1 பரம்பிக்குளம் ஆயக்கட்டு விரிவு படுத்தும் திட்டம் | கோவை மற்றும் பெரியார். | 1,400 | 6/79 | அடுத்த திட்டத்திற்கு உபரி பணிகள் மாற்றப் படும். | 32.64 | 80,653 |
| 2 தும்பலஹள்ளி நீர்த்தேக்கத் திட்டம். | தர்மபுரி .. | 205 | 6/79 | 3/83 | 0.92 | 2,273 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இருக்கன்குடி நீர்த்தேக்கத் திட்டம். | இராமநாதபுரம். | 600·00 | ஒப்பளிக்கப்படவில்லை. | .. | . | .. |
| கோல்வார்பட்டி நீர்த்தேக்கத் திட்டம். | ஷை | 381·00 | ஷை | .. | .. | .. |
| ஆனைக்குட்டம் நீர்த்தேக்கத் திட்டம். | ஷை | 183·00 | ஷை | .. | . | . |
| ஆனைமடுவு நீர்த்தேக்கத் திட்டம். | சேலம் .. | 351·00 | ஷை | .. | .. | .. |
| கரியகோயில் நீர்த்தேக்கத் திட்டம். | சேலம் .. | 368·00 | ஷை | .. | .. | .. |
| சோத்துப்பாறை நீர்தேக்கத் திட்டம். | மதுரை .. | 601·00 | ஷை | .. | .. | .. |
| குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டம். | மதுரை .. | 301·00 | ஷை | .. | .. | .. |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| மதுராந்தகம் ஏரி வலதுபுற வாய்க்கால். | செங்கற்பட்டு. | 188·00 | ஷை | .. | .. | .. |
| கேசரிகுல்லி ஹள்ளா நீர்த்தேக்கத் திட்டம். | தர்மபுரி .. | 279·00 | ஷை | .. | .. | .. |
| ஆண்டியப்பனூர் ஓடை. | வட ஆற்காடு. | 136·00 | ஷை | .. | .. | .. |
| சோலகல ஹள்ளி. | கோவை | 200·00 | ஷை | .. | .. | .. |
| சென்னம்பட்டி அணைக்கட்டு நீர்த்தேக்கத் திட்டம். | மதுரை .. | 170·00 | ஷை | .. | .. | .. |
| மருதயார் நீர்த்தேக்கத் திட்டம். | திருச்சிராப்பள்ளி. | 380·00 | ஷை | .. | .. | .. |
| அடவிநாயனார் கோவில் நீர்த்தேக்கத் திட்டம் | திருநெல்வேலி. | 287/00 | இனி தொடங்கப்படும். | அடுத்தத் திட்டத்திற்கு உபரி பணிகள் மாற்றப்படும். | .. | .. |

(5)

...வீனப்படுத்தும் திட்டங்கள்—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 அனந்தனார் வாய்க்காலை புதுப்பிக்கும் திட்டம். | கன்னியா குமரி. | 246·00 | .. | .. | 1·00 | 2,470 |
| 0 திருப்பரப்பு அணைக்கட்டு வலது கரைக் கால்வாய் விரிவாக்கம். | கன்னியா குமரி. | 47·00 | பரிசீலனையில் உள்ளது. | 0·19 | 470 | .. |
| 1 சேலம்-திருச்சி மாவட்டங்களில் காவிரி வாய்க்காலை நவீனப்படுத்தும் திட்டம். | சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி. | 2,000·00 | விரிவான ஆய்வில் உள்ளது. | .. | ... | ... |
| கீழ்பவானித் திட்ட கால்வாயை நவீனப்படுத்தும் திட்டம். | பெரியார் மற்றும் திருச்சி. | 4,900·00 | டிை | .. | .. | ... |
| சாத்தனூர் நீர்த் தேக்கத்திற்கு கீழ் பொன்னையாற்றினை நவீனப்படுத்தும் திட்டம். | வடஆற்காடு மற்றும் தென் ஆற்காடு. | 1,600·00 | டிை | ... | ... | ... |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| கோதையாறு முறையை நவீனப்படுத்தும் திட்டம். | கன்னியா குமரி. | 1,509·00 | விரிவான ஆய்வில் உள்ளது. | .. | .. | .. |
| கல்லணைக்கட்டு கால்வாய் ஒழுங்கு படுத்தும் திட்டம். | தஞ்சாவூர் மற்றும் புதுக் கோட்டை. | 8,000·00 | டிை | .. | .. | .. |
| கீழ்கொள்ளிடம் அணைக்கட்டு முறையை நவீனப்படுத்தும் திட்டம். | தென்ஆற்காடு. | 2,000·00 | டிை | .. | .. | .. |
| மணிமுத்தாறு பிரதான கால்வாய் முறையை நவீனப் படுத்தும் திட்டம். | திருநெல் வேலி. | 300·00 | டிை | .. | .. | .. |
| தாம்பரபரணி ஆறு வாய்க்கால் முறையை நவீனப்படுத்தும் திட்டம். | டிை | 2,000·00 | டிை | .. | .. | .. |
| ஏரி பாசன நவீனப் படுத்தும் திட்டம். | மாநிலம் முழுவதும். | 12,000·00 | டிை | | .. | .. |
| | | 44,011.83 அல்லது 440.12 கோடி | | | 47·46 ஆயிரம் ஹெக்டேர் | 1·17,272 அல்லது 1,17,300 டன்கள். |

# இணைப்பு III.

## வெள்ளத்தடுப்பு, வடிகால் மற்றும் கடல் அரிப்பு தடுப்புத் திட்டங்கள்.

| வரிசை எண்ணும், திட்டத்தின் பெயரும். (1) | மதிப்பீட்டுச் செலவு. (2) | ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் (1980–85ல் மூலதன) ஒதுக்கீடு. (ரூபாய் லட்சத்தில்) (3) |
|---|---|---|
| வெள்ளத் தடுப்பு மற்றும் வடிகால் திட்டங்கள் – | | |
| அ) நடைபெற்று வரும் திட்டங்கள் – | | |
| 1. காவிரி தடுப்பு அணை மற்றும் காவிரி வடிநிலத்தில் மற்ற வெள்ளத்தடுப்புத் திட்டங்கள். | 498·80 | 108 87 |
| 2. செம்பரம்பாக்கம் ஏரி மேம்பாடு செய்தல் .. .. | 128·42 | 97·23 |
| 3. ஓட்டேரி நல்லா மேம்பாடு செய்தல் .. .. .. | 13·53 | 7 40 |
| 4. காவிரி டெல்டாவில் வடிகால் திட்டங்கள் .. .. | 1,664·10 | 300·00 |
| மொத்தம் I(அ) .. | 2,304·85 | 513·50 |
| ஆ) ஆறாவது திட்டத்தில் (1980–85) புதிய திட்டங்கள் – | | |
| 1. வைகை வடிநிலத்திலிருந்து வெள்ள நீரை திருப்பிவிடுதல் | 104·50 | 104·50 |
| 2. கோரையாற்றிலிருந்து வெள்ள உபரி நீரை திருப்பிவிடுதல் | 1,800·00 | 150.00 |
| 3. பன்ருட்டி நகரத்தை பாதுகாக்க கடிலம் ஆற்றின் இடது கரையில் வெள்ள தடுப்புக்கரை கட்டுதல். | 8·18 | 8·18 |
| 4. தென் ஆற்காடு மாவட்டத்தில் மேல் குமாரமங்கலம் கிராமத்திலிருந்து பகண்டை கிராமம் வரை, பொன்னியாற்றின் வலதுகரையில் வெள்ள தடுப்புக்கரை கட்டுதல். | 17·00 | 17.00 |
| 5. செங்கல்பட்டு மாவட்டத்தில், பொன்னேரி எல்லைக்குள் கொஸஸ்தலையார் ஆற்றிற்கு வெள்ளத்தடுப்பு கரை கட்டுதல். | 447 00 | 100·00 |
| 6. செங்கல்பட்டு மாவட்டத்தில் பெரியபாளையம் கிராம எல்லைக்குள் ஆரணியாற்றிற்கு வெள்ளத் தடுப்பு கரை கட்டுதல். | 562 00 | 100.00 |
| 7. வெள்ளாற்றின் கீழ், சேத்தியாதோப்பு அணைக்கட்டிலிருந்து புவனகிரி சாலை பாலம் வரை வெள்ளத் தடுப்புக்கரை கட்டுதல். | 34 00 | 34·00 |
| 8. வெள்ளாற்றின் கீழ் புவனகிரி சாலை பாலத்திலிருந்து வங்காளவிரிகுடா வரையில் வெள்ள தடுப்பு கரை கட்டுதல். | 46 00 | 46.00 |

## இணைப்பு III—தொடர்ச்சி.

ளத்தடுப்பு, வடிகால் மற்றும் கடல் அரிப்பு தடுப்புத் திட்டங்கள்—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும், திட்டத்தின் பெயரும். (1) | மதிப்பீட்டுச் செலவு. (2) | ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் (1980-85ல் மூலதன ஒதுக்கீடு). (ரூபாய் லட்சத்தில்) (3) |
|---|---|---|
| 9. தென்னாற்காடு மாவட்டத்தில் பரவனாற்றிலிருந்து நேராக பெருமாள் ஏரி ஆயக்கட்டு நிலங்களில் வடிகால் வசதிக்கு பரவனாற்றை மேம்பாடு செய்தல். | 180·00 | 57.00 |
| 0 வடக்கு பக்கிங்காம் கால்வாயில் இருந்து கடலுக்கு சுருக்கு வழி கால்வாய் அமைத்தல். | 200·00 | 200·00 |
| 11. ராமாபுரம் பாலத்தில் இருந்து திரு. வி. க. பாலம் வரை அடையாற்றில் வெள்ளத் தடுப்புக் கரை கட்டுதல். | 170·00 | 170.00 |
| 12. வேளச்சேரி மற்றும் அதன் புறப்பகுதிகளுக்கு வெள்ளப்பாது காப்பின் பொருட்டு வடிகால் அமைப்பது. | 8·00 | 8·00 |



| | | |
|---|---|---|
| 1. கோட்டூர்புரம் வெள்ளத் தடுப்புக் கரையை அடையாற்றின் வலது கரை வரை நீடித்தல். | 4·32 | 4·32 |
| 1. செம்பரம்பாக்கத்தில் புதிய ஏரி ஒன்றை அமைத்தல் .. | 50 00 | 25·00 |
| 5. விஜயராகவபுரம், கே. கே. நகர் மற்றும் ஜாபர்கான் பேட்டை பகுதிகளுக்கு வெள்ள நிவாரணம் அளித்தல். | 21·00 | 21·00 |
| 6. சேத்துப்பட்டு ரயில் பாலம் வரையில் கூவம் ஆற்றில் தூர் எடுத்தலும், மற்றும் ஆற்றின் போக்கை சீர் செய்தலும். | 44·00 | 44·00 |
| 7. கூவம் ஆற்றின் கரைகளை மேம்பாடு செய்தல் .. | 40.00 | 40.00 |
| 8. வடக்கு பக்கிங்காம் கால்வாயினை மேம்பாடு செய்தல் .. | 15 00 | 15.00 |
| 9. ஓட்டேரி நல்லாவை நிரந்தர மேம்பாடு செய்தல் .. | 21·00 | 21.00 |
| 0. வடசென்னை வெள்ள நிவாரணத்திற்காக அம்பத்தூர் உபரி தண்ணீரை மொகப்பையாற்றிற்கும் மற்றும் கூவம் ஆற்றிற்கும் திருப்பிவிடுதல். | 47·00 | 47.00 |
| 21. கொரட்டூர் ஏரியின் உபரி தண்ணீரை மாதவரம் ஏரிக்கு திருப்பிவிடுதல். | 35·00 | 35.00 |
| 22. மாதவரம் ஏரி உபரித் தண்ணீரை ரெட்ஹில்ஸ் ஏரிக்குத் திருப்பிவிடுதல். | 35·00 | 35,00 |
| 23. செம்பரம்பாக்கம் மைனர் பேசினிலுள்ள 9 பெரிய ஏரிகளுக்கு வெள்ளக் கட்டுப்பாட்டுப் பணிகள் செய்தல். | 14 00 | 14.00 |

இணைப்பு III—தொடர்ச்சி.

நீர்ப்பு, வடிகால் மற்றும் கடல் அரிப்பு தடுப்புத் திட்டங்கள்—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும், திட்டத்தின் பெயரும். | மதிப்பீட்டுச் செலவு. | ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் (1980–85ல்) ஒதுக்கீடு. (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 4. கூவம் பேசினிலிருந்து 7 பெரிய ஏரிகளுக்கு வெள்ளக் கட்டுப்பாட்டுப் பணிகள் செய்தல். | 10.50 | 10.50 |
| 5. கூவத்தின் வெள்ள நீரை பூண்டி வடிநிலத்திற்கு திருப்பி விடுதல். | 45·00 | 45.00 |
| 6. அடையாற்றின் மைனர் பேசினிலிருந்து 9 பெரிய ஏரிகளுக்கு வெள்ளக் கட்டுப்பாட்டுப் பணிகள் செய்தல். | 15·00 | 15.00 |
| 7. அடையாற்றின் வெள்ளத்தை கோவளத்தின் பள்ளத்தாக்கிற்கு திருப்பிவிடுதல். | 150·00 | 15.00 |
| 8. ரெட்ஹில்ஸின் உபரி வாய்க்காலை மேம்பாடு செய்தல். | 170.00 | 170.00 |
| மொத்தம் 1 (ஆ) | 4,293.50 | 1,686.50 |
| மொத்தம் வெள்ளக் கட்டுப்பாடு வடிகால்—திட்டம் I (அ) (ஆ) | 6,598.35 | 2,200.00 |



கடல் அரிப்பு தடுப்புத் திட்டங்கள்.

(அ) நடைபெறும் திட்டங்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் தடுப்புச்சுவர் கட்டுவது.

(ரூபாய் இலட்சத்தில்.)

| | | |
|---|---|---|
| 1. முட்டம் துறை .. .. .. | 14.50 | 8.22 |
| 2. ஏணயம் புத்தம் துறை .. .. | 46.40 | 25.00 |
| 3. காந்திமண்டபத்திற்கும் நீச்சல் குளத்திற்கும் இடையே. | 9.20 | 9.20 |
| 4. முன்னூர்த் துறை .. .. .. | 6.05 | 6.05 |
| 5. ஏணயம் (விரிவாக்கம்) .. .. | 2.54 | 2.54 |
| 6. கடிய பட்டினம் .. .. | 9.36 | 9.36 |
| 7. ராஜமங்கலத்தில் பன்னி வாய்க்கால் | 5.42 | 5.42 |
| 8. பள்ளத் துறை .. .. .. | 3.55 | 3.55 |
| மொத்தம் .. | 97.02 | 69.34 |

(ஆ) ஆறாவது ஐந்தாண்டு (1980—85) திட்டத்தின் புதிய திட்டங்கள்.

கன்னியாகுமரி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 1. சின்னவிளைத் துறை .. .. | 14.63 | 14.63 |
| 2. பெரியவிளைத் துறை .. .. | 10.00 | 10.00 |
| 3. பெரியகாடு .. .. .. | 23.00 | 23.00 |
| 4. நீரோடித் துறை .. .. .. | 18.15 | 18.15 |
| 5. புத்தன் துறை .. .. .. | 16.88 | 16.88 |
| 6. கேசவன் புத்தன் துறை .. | 16.20 | 16.20 |
| 7. மேலமணக்குடி .. .. .. | 16·60 | 16.00 |

| | | | |
|---|---|---|---|
| 8. | கோவளம் .. .. .. | 23.60 | 23.60 |
| 9. | பொழிக்கரை .. .. .. | 18.42 | 18.42 |
| 10. | வாணியக்குடி .. .. .. | 26.95 | 26.95 |
| 11. | ராமன் துறை .. .. | 17.27 | 17.27 |
| 12. | சென்னையில் ராயபுரம் மற்றும் எண்ணூர். | 30.80 | 30.80 |
| 13. | தஞ்சாவூர் மாவட்டத்தில் பூம்புகார் | 1.00 | 1.00 |
| 14. | கன்னியாகுமரி மாவட்டத்தில் 22 கடற்கரை கிராமங்கள். | 361.60 | 243.56 |
| 15. | தென் சென்னையில் சாந்தோம் | 14.20 | 14.20 |
| 16. | திருநெல்வேலி மாவட்டத்தில் இடிந்தகரை. | 40.00 | 40.00 |
| | மொத்தம் .. | 648.70 | 530.66 |
| | கடல் அரிப்பு தடுப்புத் திட்டங்கள் மொத்தத் தொகை. | 745.72 | 600.00 |

## இணைப்பு IV.

### நிலத்தடி நீர்த் திட்டங்கள்.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் திட்டங்கள்— | |
| (1) நிலத்தடி நீர் (ஆய்வு) .. .. .. | 693.00 |
| (2) நீர் நிலையம் .. .. .. .. | 43.41 |
| புதிய திட்டங்கள். | |
| (1) சுகாதாரக் கேட்டின் ஆராய்ச்சி .. .. | 2.50 |
| (2) செயற்கை முறை ரிசார்ஜ் .. .. | 15.00 |
| (3) ஆலோசனை சேவைகள் .. .. .. | 120.00 |
| (4) குழாய் கிணறுகள் கழகம் .. .. .. | 100.00 |
| மொத்தம் .. | 973.91 |



## இணைப்பு V.

### நடுத்தரப் பாசனத் திட்டங்கள் (ஆய்வில் உள்ளவை)

| சை எண்ணும், திட்டத்தின் பெயரும். | மாவட்டம். | தோராய மதிப்பீடு. ரூபாய் (இலட்சத்தில்) | பயனடையும் நிலங்கள். (தோராய மதிப்பு ஏக்கரில்). புதிய நிலங்கள். | பாசன உறுதி பெறும் நிலங்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சாத்தனூர் உயர் மட்ட கால்வாய்த் திட்டம் .. .. | வட ஆற்காடு .. | 470 | 6,000 | 2,200 |
| தொட்ட ஹல்லா திட்டம் .. | தர்மபுரி .. | 284 | 4,800 | .. |
| கோவிலாறு திட்டம் .. | ஷை | 124 | 1,500 | .. |
| கல்லாறு திட்டம் .. .. | ஷை | 163 | 2,000 | .. |
| மேல் பம்பாறு திட்டம் .. | ஷை | 156 | 3,500 | .. |
| வரட்டாறு திட்டம் .. | ஷை | 77 | 1,026 | .. |
| ஆனைப்பாடி வாரி திட்டம் .. | திருச்சிராப்பள்ளி | 144 | 2,556 | .. |
| கொல்லிமலைத் திட்டம் .. | ஷை | 489 | 5,100 | .. |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 9 மருதையாறு (தவத்துக்குளம்) திட்டம். | திருச்சிராப்பள்ளி | 380 | 6,350 | .. |
| 0 கோம்புப் பள்ளம் நீர்த் தேக்கத் திட்டம். | கோயம்புத்தூர் | 70 | 361 | .. |
| 1 சித்தாறு நீர்த்தேக்கத் திட்டம் | ஷை | 200 | 2,160 | .. |
| 2 பெல்லஹல்லா நீர்த்தேக்கத் திட்டம். | ஷை | 125 | 1,305 | .. |
| 3 மண்ணரை அணைக்கட்டுத் திட்டம். | ஷை | 103 | 600 | 600 |
| 4 பெரும் பள்ளம் நீர்த் தேக்கத் திட்டம். | ஷை | 275 | 2,614 | .. |
| 5 சின்னக்கரை ஓடை நீர்த் தேக்கத் திட்டம். | ஷை | 92 | 1,700 | .. |
| 6 வழுக்குப் பாறை பள்ளம் நீர்த் தேக்கத் திட்டம். | ஷை | 254 | 1,536 | 800 |
| 7 நல்லதங்காள் ஓடை திட்டம (ஆத்தூர்) | ஷை | 250 | 3,000 | 184 |
| 8 நல்லதங்காள் ஓடைதிட்டம் (குளத்துப் பாளையம்). | ஷை | 350 | 4,000 | .. |
| சின்ன வேடம்பட்டி திட்டம் | ஷை | 120 | 600 | .. |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| மலட்டாறு திட்டம் .. | இராமநாதபுரம் | 295 | 4,341 | 385 |
| நம்பியாறு திட்டம் .. .. | திருநெல்வேலி | 78 | 400 | 550 |
| கங்கைகொண்டான் பெரிய கண்மாய் விரிவாக்குப் திட்டம். | ஷை | 66 | 1,300 | .. |
| உப்போடை திட்டம் .. | ஷை | 99 | 664 | 900 |
| ஆண்டியப்பனூர் ஓடை நீர்த் தேக்கத் திட்டம். | வட ஆற்காடு .. | 136 | 2,000 | .. |
| சோலகலஹல்லி நீர்த் தேக்கத் திட்டம். | கோயம்புத்தூர் | 200 | 2,700 | 110 |
| செென்னம்பட்டி அணைக்கட்டுத் திட்டம். | மதுரை .. | 170 | 995 | 1,400 |
| மருதையாறு நீர்த் தேக்கத் திட்டம். | திருச்சிராப்பள்ளி | 400 | 6,240 | .. |
| அடவிநாயனார் கோயில் நீர்த் தேக்கத் திட்டம். | திருநெல்வேலி | 287 | 800 | 770 |
| | | 5,857 அல்லது 59 கோடி. | 70,148 78,047 அல்லது 78,000 ஏக்கர் (31,200 ஹெக்டேர்) | 7,899 |

## இணைப்பு VI.

**(அ) 1980–81 இல் அங்கீகரிக்கப்பட்ட சிறப்புச் சிறுபாசனத் திட்டங்கள் மற்றும் தூர்வாரி புனரமைக்கும் திட்டங்கள்.**

| வரிசை எண். | மாவட்டம். | ஒப்புதல் அளிக்கப் பட்ட பணிகளின் எண்ணிக்கை. | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்.) | பயன்பெறும் நிலங்கள் (ஏக்கரில்). புதிய நிலங்கள். | இடைப் பட்ட நிலங்கள். | பாசன உறுதி பெறும் நிலங்கள். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | **(1) சிறப்பு சிறு பாசனத் திட்டங்கள்.** | | | | | |
| 1 | செங்கல்பட்டு .. | 1 | 11.00 | 306 | .. | 253 |
| 2 | வட ஆற்காடு .. | 3 | 3.14 | .. | 41 | 337 |
| 3 | தென் ஆற்காடு .. | 2 | 7.67 | .. | 45 | 1,485 |
| 4 | தஞ்சாவூர் .. .. | 2 | 11.38 | 995 | .. | .. |
| 5 | இராமநாதபுரம் .. | 1 | 0.95 | 49 | .. | .. |
| 6 | திருநெல்வேலி .. | 4 | 33.25 | 340 | 486 | 726 |
| 7 | கோயம்புத்தூர் .. | 1 | 0.79 | 57 | .. | .. |
| | மொத்தம் .. | 14 | 68.18 | 1,747 | 572 | 2,801 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| | **(2) தூர்வாரி புனரமைக்கும் திட்டங்கள்.** | | | | | |
| 1 | திருச்சிராப்பள்ளி .. .. | 1 | 1.11 | 47 | 25 | 213 |
| 2 | மதுரை .. .. .. | 1 | 1.08 | .. | 24 | 736 |
| | மொத்தம் .. | 2 | 2.19 | 47 | 49 | 949 |

(இ) ஆய்வு முடிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ள சிறப்பு சிறு பாசனத் திட்டங்கள் மற்றும் தூர்வாரி புனரமைக்கும் திட்டங்கள் :—

| வரிசை எண். | மாவட்டம். | | திட்டங்களின் எண்ணிக்கை. | மதிப்பீட்டுத் தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1 | வட ஆற்காடு .. | .. | 5 | 2.865 |
| 2 | தென் ஆற்காடு | .. | 2 | 29.000 |
| 3 | திருச்சிராப்பள்ளி | .. | 6 | 12.550 |
| 4 | புதுக்கோட்டை | .. | 1 | 1.040 |
| 5 | தஞ்சாவூர் .. | .. | 1 | 11.500 |
| 6 | மதுரை .. | .. | 4 | 27.210 |
| 7 | திருநெல்வேலி .. | .. | 7 | 53.530 |
| 8 | பெரியார் .. | .. | 1 | 16.100 |
| | மொத்தம் | .. | 27 | 153.795 |



(உ) சிறப்பு சிறு பாசனத் திட்டப் பணிகள்.

1980-81 மற்றும் 1981-82 நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள்.

| | மாவட்டம். | | | 1980—81-ல் சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின் கீழ் முடிக்கப்படவிருக்கும் பணிகளின் எண்ணிக்கை. | 1981—82-ல் சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின் கீழ் முடிக்கப்படவிருக்கும் பணிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| | (1) | | | (2) | (3) |
| 1 | செங்கல்பட்டு | .. | .. | 2 | 8 |
| 2 | வட ஆற்காடு | .. | .. | 1 | 5 |
| 3 | தென் ஆற்காடு | .. | .. | .. | 5 |
| 4 | திருச்சிராப்பள்ளி | .. | .. | 3 | 5 |
| 5 | தஞ்சாவூர் | .. | .. | 4 | 4 |
| 6 | மதுரை .. | .. | .. | 7 | 1 |
| 7 | இராமநாதபுரம் | .. | .. | 7 | 4 |
| 8 | திருநெல்வேலி | | .. | 3 | 2 |
| 9 | கோயம்புத்தூர் | .. | .. | 7 | 2 |
| 10 | நீலகிரி .. | .. | .. | 1 | .. |
| 11 | பெரியார் | .. | .. | 6 | 2 |
| 12 | சேலம் .. | .. | .. | 9 | 2 |
| | | | மொத்தம் | 50 | 40 |

| | | |
|---|---|---|
| 1980—81-ல் பயனடையும் பரப்பு | .. | 2,000 ஹெக்டர்/ 5,000 ஏக்கர் |
| எதிர்பார்க்கப்படும் கூடுதல் உணவு உற்பத்தி. | .. | 4,000 டன் |
| 1981—82-ல் பயனடையும் பரப்பு | .. | 2,000 ஹெக்டர்/ 5,000 ஏக்கர் |
| எதிர்பார்க்கப்படும் கூடுதல் உணவு உற்பத்தி. | .. | 4,000 டன் |

## இணைப்பு VII.

### பாதகமான பருவநிலைகள் 1980-81.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாவட்ட வாரியாக குடிதண்ணீர் வழங்க ஒப்படைக்கப்பட்ட மற்றும் ஒப்படைக்கவிருக்கும் துளைக் கிணறுகளின் (Bore Wells) விபரங்கள்.

| வரிசை எண்ணும் மாவட்டமும். | வறட்சிக்குப் பிறகு தமிழ்நாடு வடிகால் வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட துளை துவாரங்களின் எண்ணிக்கை. | இன்னும் ஒப்படைக்கப்பட வேண்டிய துளை துவாரங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 செங்கல்பட்டு .. .. | 9 | 7 |
| 2 தென் ஆற்காடு .. .. | .. | 12 |
| 3 வட ஆற்காடு .. .. | 35 | 59 |
| 4 தர்மபுரி .. .. .. | 76 | 5 |
| 5 கோயம்புத்தூர் மற்றும் பெரியார். .. | .. | 28 |
| 6 சேலம் .. .. .. | 39 | 18 |
| 7 திருச்சிராப்பள்ளி .. .. | 55 | .. |
| 8 தஞ்சாவூர் .. .. | .. | 23 |
| 9 புதுக்கோட்டை .. .. | .. | 29 |
| 10 இராமநாதபுரம் .. | 26 | .. |
| 11 மதுரை .. .. .. | 35 | 11 |
| 12 திருநெல்வேலி .. .. | 56 | 9 |
| 13 கன்னியாகுமரி .. .. | .. | 1 |
| மொத்தம் .. | 331 | 202 |



## இணைப்பு VIII (I).

### மாவட்டங்களில் நில நீர் வளம்.

| வரிசை எண்ணும் மாவட்டமும். | நில நீர் இருப்பு | | எடுக்கப்படும் நில நீர் அளவு | | மீதம் இருக்கும் நில நீர் அளவு டிசம்பர் '79 முடிய. | |
|---|---|---|---|---|---|---|
| | ஆ.மி.க. அடியில். | மி. ஏ. அடியில். | ஆ.மி.க. அடியில். | மி. ஏ. அடியில். | ஆ.மி.க. அடியில். | மி. ஏ. அடியில் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 செங்கல்பட்டு .. | 70.10 | 1.63 | 29.18 | 0.67 | 43.99 | 1.01 |
| 2 வட ஆற்காடு .. | 92.79 | 2.12 | 59.24 | 1.36 | 33.54 | 0.77 |
| 3 தென் ஆற்காடு .. | 170.05 | 3.95 | 46.17 | 1.06 | 125.44 | 2.88 |
| 4 தர்மபுரி .. | 52.27 | 1.20 | 20.04 | 0.46 | 25.70 | 0.59 |
| 5 சேலம் .. .. | 44.43 | 1.02 | 30.74 | 0.69 | 21.34 | 0.49 |
| 6 பெரியார் .. | 37.89 | 0.87 | 21.34 | 0.49 | 15.68 | 0.36 |
| 7 கோயம்புத்தூர் .. | 23.52 | 0.54 | 20.90 | 0.48 | 5.23 | 0.12 |
| 8 திருச்சிராப்பள்ளி | 97.13 | 2.23 | 33.10 | 0.76 | 64.03 | 1.47 |
| 9 புதுக்கோட்டை | 35.71 | 0.81 | 8.71 | 0.20 | 27.00 | 0.62 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | மதுரை .. .. | 68.38 | 1.57 | 37.89 | 0.87 | 30.05 | 0 69 |
| 11 | இராமநாதபுரம் | 165.08 | 3.79 | 16.99 | 0.39 | 148.10* | 3.40* |
| 12 | திருநெல்வேலி .. | 54.47 | 1.25 | 21.78 | 0.50 | 40.07 | 0.92 |
| 13 | கன்னியாகுமரி .. | 7.40 | 0.17 | 0.77 | 0.02 | 6.53 | 0.15 |
| 14 | தஞ்சாவூர் .. | 75.35 | 1.73 | 8.71 | 0.20 | 66.64 | 1.53 |
| | மொத்தம் .. | 994.57 | 22.90 | 355.56 | 8.15 | 663.34* | 15.69* |

ஆ. மி.க. அடியில்—ஆயிரம் மில்லியன் கன அடியில்.

மி. ஏ. அடியில்—மில்லியன் ஏக்கர் அடியில்.

*உப்பு நீர்ப்பகுதியும் சேர்ந்தது.



## இணைப்பு VIII (2)

விவசாய மறு நிதி வளர்ச்சிக் காப்பீட்டுக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அளவைகளும் (Units) பொருளுதவியும்—மார்ச் 1980 வரை.

| வரிசை. எண்ணும், விபரமும். | நடைமுறையில் இருக்கும் திட்டங்கள். | | முடிவு பெற்ற திட்டங்கள். | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பொருளுதவி (இலட்சத்தில்.) | எண்ணிக்கை. | பொருளுதவி (இலட்சத்தில்.) |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 புதிய கிணறுகள் .. .. | 4,785 | | 5,366 | |
| 2 இறவை இயந்திரங்களுடன் கூடிய புதிய கிணறுகள். | 15,831 | | 18,263 | |
| 3 ஆழப்படுத்தும் கிணறுகள் .. | 8,393 | | 7,042 | |
| 4 ஆழப்படுத்தும் கிணறுகளும் இறவை இயந்திரங்களும். | 4,121 | | 8,025 | |
| 5 இறவை இயந்திரங்கள் .. | 14,499 | | 5,622 | |
| 6 மிதமான ஆழமுள்ள குழாய்க் கிணறுகளும் இறவை இயந்திரங்களும். | 3,800 | | .. | |
| 7 நடுத்தர ஆழமுள்ள குழாய்க் கிணறுகளும் இறவை இயந்திரங்களும். | 700 | | .. | |
| | | 4,137.82 | | 2,702.27 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆழ்துளைக் குழாய் கிணறுகளும், பம்பு செட்டுகளும். | 7,000 | | | |
| குழாய்க் கிணற்றுடன் கூடிய அகண்ட கிணறுகளும், இறவை இயந்திரங்களும். | 497 | | | |
| கமலை இறவைக் கிணறுகள் .. | 150 | | | |
| இறவைக் கிணறுகள் .. | 304 | | | |
| | 46,231.35 | 4,137.22 | 34,241.50 | 2,702.27 |
| | (அளவைகள்) | | | (அளவைகள்). |

மொத்த அளவைகள் : 80472.75

மொத்த தொகை : ரூ. 6840.09 (இலட்சத்தில்)

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1981 ஏப்ரல் 3.

பங்குனி 21, ரௌத்திரி-திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. ராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

'' பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்''.

நல் அறிஞர்கள் குழுமியுள்ள அவையின் கீழ், சிறந்த பொருள்களை அவர்கள் உள்ளத்தில் நன்கு பதியுமாறு சொல்ல இயலாதவர்கள், பல அரிய நூல்களைக் கற்றவராயினும், உலகுக்கு பயன் இல்லாதவர்களே ஆவர்.

### 1. வினாக்கள்-விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 612, 613 இரண்டும் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்பெறுகின்றன.

#### சண்முகாநதி நீர்மின் திட்டம் மற்றும் மேட்டூர் அனல் மின் திட்டம்.

***வினா எண் 612 –திரு. ச அங்குசாமி :** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சண்முகாநதி நீர்மின் திட்டம், மேட்டூர் அனல் மின் திட்டம் ஆகிய திட்டங்கள் எந்த அளவில் உள்ளன ?

(ஆ) அதுபற்றிய முழு விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) மற்றும் (ஆ) சண்முகாநதி நீர்மின் திட்டம் மைய அரசின் பரிசீலனையில் உள்ளது. மேட்டூர் அனல் மின் திட்டத்திற்கு மைய அரசு செப்டம்பர் 1980 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மின் வாரியம் எடுத்து வருகிறது.

## சண்முகாநதி நீர்மின் திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தை மேட்டூருக்கு மாற்றுதல்.

*வினா எண் 613—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனியிலிருந்து செயல்பட்ட சண்முகாநதி நீர்மின் திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் மேட்டூருக்கு மாற்றப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

(இ) இந்த மின் திட்டத்தின் திறனளவு எத்தனை மெகா வாட் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) ஆம். சண்முகாநதி நீர்மின் திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் பழனியிலிருந்து மேட்டூருக்கு, 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல் மாற்றப்பட்டுள்ளது. சண்முகாநதி, காவிரி நதியின் உபநதியாகையால் இம்மின் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குவது காவிரி நீர்ப்பங்கீடு பற்றிய பிரச்சினையோடு தொடர்புடையது. மத்திய மின்சார அதிகாரக் குழுவின் ஒப்புதல் இத்திட்டத்திற்கு இன்னும் கிடைக்கவில்லை. எனவே, மேட்டூர் அனல் மின் திட்ட ஆரம்ப வேலைகளைக் கவனிப்பதற்காக மேற்பார்வைப் பொறியாளரின் அலுவலகம் பழனியிலிருந்து மேட்டூருக்கு மாற்றப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டத்தின் மின் உற்பத்தித் திறன் 30 மெகா வாட் ஆகும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தினால் தமிழகத்திற்கு எத்தனை மெகா வாட் மின்சார உற்பத்தி கிடைக்கும் என்பதையும், அதில் தொழில் துறைக்கு எத்தனை சதவீதம், வீட்டு உபயோகத்திற்கு எத்தனை சதவீதம் பயன்படுத்தப் பெறும் என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 30 மெகாவாட் கிடைக்கும். மின்சாரம் கிடைத்ததற்குப் பிறகு, அதை எப்படி பங்கீடு செய்வது என்பதைப் பற்றி ஆலோசிக்க லாம்.



திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, சண்முகா நதி நீர்மின் திட்டத்திற்கு மைய அரசின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் கடந்த ஒரு ஆண்டுக் காலமாகவே பழனியில் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் செயல்பட்டதே, அது எப்படி செயல்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது கிடைக்கும் என்ற நம்பிக்கையில் செயல்பட்டு வந்தது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிடைக்கும் என்ற நம்பிக்கையில் செயல்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த நம்பிக்கை இப்போது குறைந்ததற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் விரிவாக அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை காவிரி நதி நீர் பங்கீடு பிரச்சினையோடு இணைத்து கேரள கர்நாடக அரசின் ஒப்புதல் தேவை என்று அந்த இரு அரசுகளுக்கும் மத்திய அரசு கடிதம் எழுதி கேட்டிருக்கிறது. அந்த ஒப்புதல் கிடைக்கும் வரை நாம் காத்திருக்கத்தான் வேண்டும். எவ்வளவு கால வரையறைக்குள் கிடைக்கும் என்பதைக் குறித்து நான் உத்தரவாதம் அளிக்க இயலாது.

திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமேயானால் தமிழகம் மின்சாரத்தில் தன்னிறைவு பெறுவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது யானைப் பசிக்கு சோளப் பொறிதான்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அனல் மின் திட்டத்திற்கு மைய அரசினுடைய ஒப்புதல் கிடைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்பொழுது வேலை தொடங்கப்படும் ? எவ்வளவு இந்தத் திட்டத்திற்கு செலவு ஆகும் என்று மதிப்பிடப்படுகிறது ? எப்பொழுது பணி நிறைவு பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: வேலை ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காகும் செலவு ரூபாய் 189.7 கோடியாகும். இந்தத் திட்டத்திற்கு வேண்டிய

கருவிகளை, இயந்திரங்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதி வேண்டுமென்று நாம் மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். அண்மையில் நானும் மத்திய அமைச்சருக்கு கடிதம் எழுதினேன். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு அதைப் பற்றி பரிசீலிப்பதாக தகவல் தந்திருக்கிறார்கள்.

திரு. என். வரதராஜன் : தமிழ்நாட்டில் மின்சாரம் என்பது கல்யாணம் ஆகியும் பிரம்மச்சாரி என்ற கதையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, ஒரு ஒருங்கிணைந்த மின்சார உற்பத்தித் திட்டம் என்ற முறையில் அனல் மின்சாரம், புனல் மின்சாரம், அணு மின்சாரம் சம்பந்தமாக ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தைத் தீட்ட தமிழக அரசு முயற்சி செய்யுமா? மாநில அரசே இப்படிப்பட்ட சில திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முன்முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஒருங்கிணைந்த திட்டம் இல்லை என்பது பொருள் அல்ல. ஆனால், தமிழகமே ஒரு ஒருங்கிணைந்தத் திட்டத்தைத் தீட்டுவதற்கு ஏற்ற வசதிகள் அனைத்தையும் பெற்றிருக்கிறதா, அதிகாரங்கள் முற்றும் பெற்றிருக்கிறதா என்றால் இல்லை என்பதுதான் நிலைமை. புனல் மின்சாரத் திட்டத்தை நாம் நிறைவேற்றிவிட்டோம், அனல் மின்சாரத் திட்டத்திற்கான நிலக்கரி அண்டை மாநிலங்களிலிருந்து பெற வேண்டிய ஒன்று, அணுமின் திட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசு நிறைவேற்ற வேண்டிய ஒன்று. ஆகவே, மற்றவர்களிடம் மனு போடுகிற நிலைமையில் நாம் இருக்கிறோமே தவிர, நாமே திட்டம் தீட்டி நிறைவேற்றுகிற நிலை இல்லை. அதுதான் இன்றுள்ள சூழ்நிலை. கல்யாணம் ஆகியும் பிரம்மச்சாரி என்பதல்ல, கல்யாணம் பண்ணிக்கொண்டு பல குழந்தைகளை பெற்றுக்கொண்டுதான் இருக்கிறோம்.

திரு. மு. அம்பிகாபதி : மேட்டூர் அனல் மின் நிலையத்திற்குத் தேவையான டிஸைன் எங்கே தயாரிக்கப்படுகிறது? ஏனென்றால், தூத்துக்குடியில் அந்த டிஸைன் தகராறு செய்கிறது. சோவியத் யூனியன் டிஸைன் ரொம்ப நல்ல டிஸைனாக இருக்கிறது என மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். டிஸைன் போடும்போதே நல்ல டிஸைன் போடுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா? டிஸைன் போட்டுவிட்டு பின்னால் தகராறு ஏற்பட்டு அதாவது ரிப்பேராயிருக்கிறது, ஆகவே, கரன்ட் உற்பத்தியில் கஷ்டம் இருக்கிறது என்று மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கூறாமல் இருப்பார்களா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தூத்துக்குடியில் இருக்கிற அந்த மின் இயந்திரங்கள் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டவை. அதனால் நமக்கு சில சிரமங்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றை நாம் புறக்கணித்துவிடவும் முடியாது. அதே நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு மின் திட்டத்திற்காவது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கும்போது அது ஓரளவிற்கு உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யவும் நம் தொழில் நுட்ப அறிவு வளரவும் பயன் அளிக்கும் என்ற அடிப்படையில் இதைக் கேட்கிறோம். ஒரு குறிப்பிட்ட நாட்டிலிருந்துதான் வரவேண்டும் என்று வற்புறுத்துவது நிச்சயமாக சரியாகயிருக்காது. அப்படி மத்திய அரசிடமிருந்து அனுமதி கிடைத்தால் நாம் க்ளோபல் டென்ட்டேர்ஸ் மூலம் அதற்கு ஒப்பந்தம் கேட்போம். அவற்றில் எவை நல்ல இயந்திரங்களாக இருக்கின்றன என்று பார்த்து நாம் வாங்குவோம். ரஷ்யாவில் இருந்து வந்துள்ளதைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே நெய்வேலியில் அவர்கள் அதை வைத்து மின் உற்பத்தி செய்துகொண்டு இருக்கிறார்கள். அதைத்தான் நான் குறிப்பிட்டேன். இதற்கும் அதற்கும் சம்பந்தப்படுத்தி மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட வேண்டாம்.



திரு. ப. நெடுமாறன் : இந்த சண்முகா நதி மின் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி இன்னும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த சண்முகா நதி கொடைக்கானல் நீர்ப்பிடிப்புப் பகுதியில் உற்பத்தியாகி பழனிமலைக் குன்றுகள் வழி பாய்ந்து பொரந்தலாறு அணை வழி செல்கிறது. ஏற்கெனவே, பொரந்தலாற்றில் ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. இந்த அணைக்கு மேல்தான் இந்த நீர் மின் திட்டம் அமைக்கப்பட இருக்கிறது. ஆகவே, இதற்கு மத்திய அரசு அனுமதி அவசியமா? ஏற்கெனவே ஒரு அணை கட்டப்பட்டு விட்டதே, அதற்கு மேல் இந்த மின் திட்டம் வருவதால் மத்திய அரசு அனுமதி அவசியமா என்பதோடு ஏற்கெனவே காவிரி நீர் சிக்கல் இருந்தும் ஹேமாவதியில் கர்நாடகா அரசு அணை கட்டி, மத்திய அரசு அனுமதியில்லாமல் எல்லா வேலைகளையும் முடித்திருப்பதை மனதில் கொண்டு இந்த வேலையை உடனடியாகத் துவக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கொள்கை பற்றிய பல பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பியிருக்கிறார்கள். ஆனால், உண்மையில் இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் யாருமே எதிர்ப்பு தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. இந்தத் திட்டத்தின் நீர்ப்பிடிப்புப்பகுதி முழுவதும் தமிழ்நாட்டில் இருக்கிறது. அதே நீர் காவிரி ஆற்றுக்கு வந்து சேருகிறது. இருந்தாலும் இந்த நதி காவிரி கிளை நதி என்ற ஒரே காரணத்திற்காக காவிரிப்பிரச்சினையை இதில் சேர்த்து மத்திய அரசு அந்த இரு அரசாங்கங்களுக்கும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அண்மையில் கேரள அமைச்சர் இங்கே வந்திருந்தபோது அவர்களிடத்தில் கூட இதைப்பற்றி சொன்னேன். ஏனென்றால், சண்முகா நதியில் இருக்கிற தண்ணீர் கர்நாடகாவிற்குப் போகப்போவதில்லை, கேரளாவிற்கும் போகப்போவதில்லை. ஆகவே, இதில் ஒப்புதல் அளிக்க அவர்கள் தயங்கவேண்டிய அவசியமில்லை என்று எடுத்துச் சொன்னேன்.

கேரள அரசு அதை பரிவோடு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதைப் பற்றி பேசுவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். கர்நாடகா அரசு என்ன கருத்து கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. மத்திய அமைச்சரிடம் சொல்லி இந்த மூன்று மாநிலங்களுடைய அதிகாரிகளையும் அமைச்சர்களையும் அழைத்துப் பேச வேண்டுமென்று நானும் நம் முதல் அமைச்சர் அவர்களும் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறோம். இதிலே என்ன முடிவு வருகிறது என்பதைப் பார்த்துக்கொண்டு மற்றபடி செய்யலாம். நாமே நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று அவர்கள் சொன்னார்கள். அப்படிச் செய்தால், அதற்கான திட்டத்திற்கு நிதி ஒதுக்க மாட்டார்கள். மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் சேர்ந்து போடுகின்ற திட்டத்திற்குத்தான் நிதி கிடைக்கும். நாம் சொந்தப் பணம் போட்டு செய்து கொள்ளலாம் ; அதை யாரும் தடுக்க முடியாது.

[முற்பகல் 9–10]

**திரு. வே. இரா. ஜெயர்மன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சண்முகா நதி காவிரியின் உப நதி என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதன் காரணமாக, சில திட்டங்கள் காவிரி நீர் ஒப்பந்தம் முடிவானதற்குப் பிறகு செய்யலாம் என்றும் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த நதிநீர் ஒப்பந்தம் முடிவு தெரியாமல் இருக்கின்ற நிலையில், மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து கூட்டுத் திட்டமாக ஒகேனகல் திட்டத்தைப்போல், மத்திய அரசே இந்தத் திட்டத்தை துவக்குவதற்கு ஏற்பாடு செய்ய, பங்கீடு பற்றி பிறகு முடிவெடுத்துக் கொள்ளலாம் என்று தமிழக அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ச, இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசு இதை நிறைவேற்ற வேண்டுமென்று நாம் வற்புறுத்தப் போவதில்லை. ஏனென்றால், நாம் சொல்வதில் நியாயம் இருக்கிறது. இந்த நியாயத்தைப் புரிந்து கொள்ளலாம்; மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். நாம் அதற்கான வழிவகை தேட வேண்டும்.

**வாழைக்குளம் கண்மாய்ப் பகுதியிலுள்ள பனை ஏறும் தொழிலாளருக்கு மனைப்பட்டா வழங்கல்.**

***வினா எண் 614—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவில்லிபுத்தூர் வட்டம், வாழைக்குளம் கண்மாய் உள்வாயில் பனை ஏறும் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைப்பட்டா கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டத்திலுள்ள வாழைக்குளம் கண்மாய் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானது. அக் கண்மாயில் சுமார் 15 ஏக்கர் நிலப் பரப்பில் 57 பனை ஏறும் தொழிலாளர்கள் ஆக்கிரமிப்பு செய்து, குடிசைகள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாழைக்குளம் கண்மாய்க்கு அருகில்தான் பனை ஏறும் தொழிலாளர்கள் வேலை செய்யும் பனை மரங்கள் இருக்கின்றன. அங்கேதான் அவர்கள் குடியிருப்பதற்கான சூழ்நிலை இருக்கிறது. 20 வருஷங்களுக்கு மேலாக அவர்கள் அரசாங்கத்திற்கு தண்டத் தீர்வை கட்டி குடியிருக்கிறார்கள். இந்தக் கண்மாய்க்கு வருகின்ற தண்ணீரால் அந்தக் குடிசைப் பகுதிகளுக்கு பாதிப்பு கிடையாது. அதுமட்டுமல்ல. இந்தக் கண்மாயில் கடந்த 20 வருஷங்களாக நீர் நிரம்பிக்கொண்டு வருகிறபோது, எவ்விதமான பாதிப்பும் இல்லாத காரணத்தினால், இந்த கண்மாய் புறம்போக்கை நத்தம் புறம்போக்காக மாற்றி அரசு இந்த 57 தொழிலாளர்களுக்கு பட்டா போட்டுக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்மாய் பொதுப் பணித் துறையைச் சார்ந்ததாக இருக்கிறது. அது மட்டுமல்ல. நீங்கள் சொல்கிறபோதுகூட, 57 பேர்கள் 15 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிற போது ஒரு ஏக்கரிலே மூன்றே ஆக்கால் குடிசைகள் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதிலே இருந்து ஆக்கிரமிப்பு எந்த அளவிற்கு இருக்கிறது என்பது நன்கு தெரிகிறது. அது மட்டுமல்ல. அந்தக் குடிசைகள் அந்தக் கண்மாய்க்குத் தண்ணீர் வருகின்ற ஆற்றின் படுகையில் போடப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதை பொதுப்பணித்துறை கண்டித்திருக்கிறது. ஆகவே, வேறு இடம் கொடுக்க வேண்டிய நிலையிலிருக்கிறது. இங்கே கொடுக்க வாய்ப்பில்லை என்று நான் கருதுகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, ரெவின்யூ அதிகாரிகள் இதுவரையில் அதற்கு ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. 20 வருடங்களாக தண்டத் தீர்வை வசூல் பண்ணியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. இந்தக் கண்மாய்க்கு பாதிப்பு ஏற்படுகிறது என்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்தால், நான் நேரடியாகக் காண்பிக்கிறேன். எனவே மறுபடியும் இதைப் பற்றி பரிசீலனை செய்து, நேரடியாக கவனம் செலுத்தினால் நல்ல முடிவு எடுக்கலாம் என்பதால் அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 20 வருஷங்களாக அதைக் கொடுக்க முடியவில்லை என்று சொன்னால், அதில் எவ்வளவு சிக்கல் இருக்கிறது என்பது தெரிகிறது. இருந்தாலும், அதைப் பற்றி ஆராய்வதற்கு அரசு கடமைப்பட்டிருக்கிறது.

### இடைநிலை தமிழ் ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு.

*வினா எண். 615—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

முதல் நிலை தமிழ் ஆசிரியராக தன் தகுதியை உயர்த்திக் கொண்ட இடைநிலை ஆசிரியர்களுக்கும் ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்க உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இக்கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியத்தை உயர்த்துவது எப்போது முதல் செயலுக்கு வரும்? அப்படி செயலுக்கு வருகின்ற தருவாயில் இடைநிலை ஆசிரியர்களுக்கு 20 ஆண்டுகள் ஊழிய காலத்திற்கு சிறப்புநிலை வழங்கவேண்டுமென்ற உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசியர்களுக்கு புலவர் பட்டம் பெற்றால் ஊக்க ஊதியம் தரப்படுமா என்பது தான் மூலக்கேள்வி. அது பரிசீலனையில் இருக்கிறது என்று பதில் சொல்லியிருக்கிறேன். பரிசீலனை முடிந்த பின் முடிவிற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். மேற்கொண்டு எதுவும் சொல்வதற்கில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு பேருந்திலே கல்விப் பயணம் செய்ய அரைக் கட்டண சலுகை வழங்கும் உத்தேசம் அரசிற்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி கேட்கவும்.



திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைத் தொடக்கப்பள்ளியில் இருக்கிற 8-வது வகுப்பை உயர்நிலைப்பள்ளியோடு இணைப்பதாக அறிகின்றேன். அப்படியானால் தலைமை ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றப்படுவார்களா ? தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் நிலை என்ன ? அவர்கள் தலைமையாசிரியர்களாக உயர்த்தப்படுவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வி. இன்னும் அதுபற்றி முடிவு எடுக்கவில்லை. பிற மாநிலங்களில் அந்த முறையைப் பின்பற்றுகின்றார்கள். அது ஒரு சிறந்த முடிவு என்கிற கருத்தின் அடிப்படையிலே அந்தக் கருத்தை எல்லோரும் பேசவேண்டுமென்று சொல்லப்படுகிறது. முடிவு எடுக்கிறபோது நாம் பரிசீலனை செய்வோம்.

### திருக்கோவிலூர் கூட்டுறவு நகர வங்கியில் நடைபெற்ற முறைகேடுகள்.

*வினா எண். 616—திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் கோவாப்பரேட்டிவ் அர்பன் பாங்க் லிமிடெட் இ. 25/1975-ல் சுமார் 45-க்கு மேற்பட்ட முறைகேடுகள் காரணமாக ரூபாய் பல்லாயிரக்கணக்கில் பணம் விரயம் செய்யப்பட்டுள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது ?

(இ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ஓ. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் 65-வது பிரிவின் கீழ் திருக்கோவிலூர் கூட்டுறவு நகர வங்கி செயல்படும் விதம் பற்றி விசாரணை செய்தபோது வேறு முறைகேடுகள் தெரிய வந்துள்ளன.

(1) 1973 ஆம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டுவரை (16—2—1978) வரை வங்கி ஈடுபட்டு வந்த காப்புறுதி வியாபாரத்தில் கிடைத்த இன்ஷூரன்ஸ் கமிஷன் பணத்தை வங்கியின் செயலாளர் எடுத்துக் கொண்டது ;

(2) 31—5—1977, 20—6—1977 மற்றும் 21—6—1977 ஆகிய நாட்களில் வங்கியின் செயலாளர் பொய் கூறி பயணப்படி பெற்றுக் கொண்டது ;

(3) வங்கிக்கு வரவேண்டிய பணத்தை 28—5—1978 லிருந்து 21—9—1978 வரை வசூல் செய்த பணத்தை வங்கியின பில் கலெக்டர் வங்கியில் கட்டாதது ; மற்றும்

(4) வங்கிக்கு வரவேண்டிய பணத்தை 9—8—1978-லிருந்து 20—9—1978 வரை வசூல் செய்ததை வங்கியின் பதிவேட்டு எழுத்தர் வங்கியில் கட்டாதது முதலியன ஆகும்.

(இ) இவ்வங்கி நல்ல முறையில் நடத்தப்படாததால், வங்கியின் நிர்வாகக் குழுவை ஏன் கலைக்கக்கூடாதென 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 72-வது பிரிவின் கீழ் வங்கியின் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு 30—4—1980 அன்று நிர்வாகக் குழுவைக் கலைப்பதற்கு முன் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. நிர்வாகக் குழு உறுப்பினர்களின் பதிலை பரிசீலித்து கடலூர் இணைப்பதிவாளர் இவ்வங்கியின் நிர்வாகக் குழுவை கலைத்து 22—11—1980 முதல் தனி அதிகாரி மூலம் அவ்வங்கியின் நடவடிக்கைகளை கவனிக்க ஆணையிட்டுள்ளார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து 1973லிருந்து முறைகேடுகள் நடைபெற்றிருப்பது தெரிய வருகிறது. இதில் நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 65 என்க்யுவரி என்றாலே அதிகாரி மட்டுமே அதைத் தீவிரப்படுத்திவிட முடியாது. குற்றவாளிகளும் ஒத்துழைக்க வேண்டும். இருசாரரும் காரணமாக இருந்திருக்கலாம். அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முறைகேடுகளில் ஈடுபட்ட பணங்கள் பூராவையும் வசூலிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அதுமட்டுமல்லாமல் சீக்கிரமாக தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட போர்டிடம் ஒப்படைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைகேடுகளில் ஈடுபட்டவர்களிடமிருந்து அந்தப் பணத்தை வசூலிக்க சட்டரீதியாக கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் ஒட்டுமொத்த





மாக தமிழகத்தில் புதிய கூட்டுறவுச் சட்டம் வந்தவுடன், விரைவிலே நடக்க இருக்கிற தேர்தலோடு இந்தத் தேர்தலும் நடத்தப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல் இறபோது நடிவடிக்கை எடுக்கப்படுவதாக சொன்னார்கள். அந்த பணம் கையாளப்பட்டதில், 'அபிஷியலாக' இருந்த வர்கள் எத்தனை பேர், 'நான்-அபிஷியல்' எத்தனை பேர்கள் அவர்கள் மீது இன்னும் நடவடிக்கை எடுக்கப்படாமலிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதிகாரிகள் அதில் தவறு செய்திருக்கிறார்கள் என்று எதுவும் இல்லை. இது கூட்டுறவு டிபார்ட்மெண்ட் இல்லை, சங்கம். சங்கத்தினுடைய பொறுப்பிலே இருக்கிற டைரக்டர்கள் மற்றவர்கள், அந்த சங்கத்தை நடத்துகிற பணியாளர்கள், சிலர் அந்த தவறுகள் செய்து, அவர்கள் மீது நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கிறது. சங்கமும் கலைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட எந்த அளவிற்கு தொகை என்பதற்கு தகவல் இல்லை.

## விவசாயப் பணி செய்யும் ஏழை அரிசன தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : *வினா எண் 617 மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலமில்லாத விவசாயப் பணியில் ஈடுபடும் ஏழை அரிசன தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் அளிக்கப்பட வேண்டியதை உறுதிப்படுத்துமாறு மாநில அரசை மத்திய அரசு வற்புறுத்தி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராமானந்தம் : 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் புதுடெல்லியில் மாநிலங்களின் ஆளுநர்கள், முதலமைச்சர்கள், காவல் துறை, தலைமைச் செயலர்கள் மாநாட்டில் குறைந்த அளவு ஊதியச் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று மாநில அரசுகளை கேட்டுக்கொண்டுள்ளது. விவசாய சம்மந்தமான தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசு நிர்ணயம் செய்துள்ள ஊதிய விகிதங்களை கட்டாயமாக அமுலாக்கும்படி மாவட்ட ஆட்சியாளர்கள்

கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இதனால் விவசாய வேலை களில் ஈடுபடும் நிலமற்ற ஆதி திராவிடர்களும் பயன் அடைவார்கள்.

[முற்பகல் 9-20]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, இந்த குறைந்த பட்ச ஊதியத்தை உறுதிப்படுத்து கின்ற முறையிலே ஏழை எளிய அரிசன மக்களுக்கு அந்தக் கூலி கிடைக்கக்கூடிய முறையிலே மாவட்ட ஆட்சித் தலைவர் கள் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்களா? அதை அமல் நடத் தாதவர்கள் எத்தனை பேர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அவ்வப்போது இதை தீவிரமாகச் செயல்படுத்த வேண்டுமென்று அறிவுறுத்தி யிருக்கிறோம். விவசாய தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் கொடுக்கின்ற உத்திரவை செயல்படுத்த வேண்டு மென்று தலைமைச் செயலாளர் அவர்கள் மாவட்ட ஆட்சி யாளர்களுக்கு 1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 6 ஆம் நாளன்று நேர்முகக் கடிதம் மூலம் அறிக்கை விடுத்துள்ளார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, அரசாங்கமே நிர்வகித்து வருகின்ற பல்வேறு பண் ணைகளிலே குறிப்பாக கிள்ளிகுளம், அபிஷேகபட்டி ஆகிய பண்ணைகளிலே குறைந்த பட்ச ஊதியம் கொடுக்கப்படவேண்டு மென்று தொழிலாளர்கள் போராடிய ஒரே காரணத்தினாலே அவர்களுக்கு வேலை இல்லாத நிலைமை ஏற்பட்டது என்பது அரசுக்குத் தெரியுமா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அது பற்றிய தகவல் என்னிடம் இல்லை.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட கூலியை அமுல்படுத்துவதிலே பிரதான தடை என்னவென்றால் பரம்பரை பரம்பரையாக வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் சட்ட கூலி கேட்டவுடனே—பேக்டரியாக இருந்தால் 2, 3 பேர்கள் டிஸ்மிஸ் பண்ணுவார்கள்—ஆனால் இங்கே என்டையர் பிளாக்கையே 600 பேர்களை டிஸ்பிளேஸ் செய்து புதிய ஓர்க்கர்ஸை கொண்டுவந்து குறைந்த கூலியைக் கொடுத்து வேலைசெய்ய வைக்கிறபோது போலீஸ் அவர்களுக் குத்தான் குறைச்சலான கூலியை வாங்குகிறவர்களுக்குத்தான் பாதுகாப்புக் கொடுக்கிறார்கள். அப்படிப் பாதுகாப்புக் கொடுக் கும்போது ரெவின்யூ அபிஷியல்ஸ் சொன்னாலும் நிலக்கிழார் கள் கேட்பது இல்லை. [illegible]



அறுவடை முடிந்துவிடுகிறது. பாய்க்காட்டிங் ஓல்ட் ஓர்க்கர்ஸ் தான் நடந்துகொண்டிருக்கிறது. சமீபத்திலே மாநாடு நடந்ததாக அமைச்சர் சொன்னார். இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட இன்ஸ் ட்ரக்ஷன்ஸ் போலீஸுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இப் பிரச்சினைப்பற்றி அரசு என்ன முடிவு எடுத்து இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அது பற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை. ஆனால் குறைந்தபட்ச ஊதியத்தை எப்படியும் உறுதியாக செயல்படுத்தவேண்டு மென்பதற்காக இப்போது இருக்கக்கூடிய அமைப்பிலே ஏதே னும் மாற்றங்கள் செய்யலாமா என்பதுபற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, குறைந்தபட்ச கூலி கேட்டால் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களின் வறு மையைப் பயன்படுத்தி உண்மைக்குப் புறம்பான முறையிலே அவர்கள் மீது பொய்யான வழக்குகள் போடப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட புகார்கள் ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா? மேலும் பல ஆண்டுகளாக, 5 ஆண்டு களுக்கு மேலாகியும்கூட இன்னும் அவை முடிவு பெறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அதுபற்றிய தகவல் என்னிடம் தற்போது இல்லை.

திரு. ஜே. எஸ். இராசு: பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்ச கூலி கிடைக்கவேண்டுமென்ற அந்த சட்டத்தை நல்ல முறையிலே நிர்வகிப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலை வர்களுக்கு அறிவுரை கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது உண்மையெனில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எந்த அதிகாரியை அந்த அந்த மாவட்டங் களிலே அதற்காக நியமித்து இருக்கிறார்கள்? எந்த லெவலில் அந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது? ஏதேனும் சில கிராமங்களுக்குச் சென்று பார்த்தபோது குறைந்தபட்சக் கூலியை நடைமுறைப்படுத்த மறுக்கிறார்கள் என்ற தகவல் அரசுக்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ரெவின்யூ அபி ஷியல்ஸ்தான் இம்பிளிமெண்டிங் அதாரடிஸ் சரியாக இருக்கிறதா இல்லையா என்று பார்ப்பது அவர்கள்தான்.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவரவர்களே, அரசு நிர்ணயித்திருக்கின்ற குறைந்தபட்சக் கூலியினுடைய அளவு என்ன? தவிர, கிராமங்களில் அந்த விவசாயப் பண்ணையில் வேலை செய்து கொண்டிருக்கின்ற ஏழை அரிசனத் தொழி

லாளர்களுக்கு அந்த ஊதியத்தைக் கொடுக்காமல், கம்பு, ராகி, சோளம் போன்ற பொருட்களை மட்டுமே கொடுத்து, அரசு நிர்ணயித்திருக்கின்ற கூலிக்கொள்கைக்கு மாறாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதனால் தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற பட்டியல் தற்சமயம் என்னிடத்தில் இல்லை. பொதுவாகப் பலயிடங்களில் இந்தச் சட்டம் சரியாக அமல்படுத்தப்படவில்லை என்பதை இந்த அரசு அறியும். அதற்குக் காரணம், நான் முன்பே ஒருமுறை சொல்லியிருக்கிறேன், விவசாயத் தொழிலாளர்களிடத்தில் தொழிற்சங்க அமைப்புக்கள் இன்னும் வலுவுள்ளதாக ஆகி, இருக்கின்ற சட்ட முறைகளைச் செயல்படுத்த அவர்கள் முயற்சிக்க வேண்டும். இதை ஒழுங்காகச் செயல்படுத்த அரசு என்ன செய்யலாம் என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குறைந்தபட்சக் கூலியை அமல் செய்வதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். திருச்சி மாவட்டம் மணப்பாறையில் 31 ஆம் தேதியன்று பாய்ஸ்டோன் நிர்வகிக்கக்கூடிய 85 ஏக்கர்களில் அங்கு பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் குறைந்தபட்சக் கூலி கேட்டார்கள் என்பதற்காக......

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; குறைந்தபட்சக் கூலியிலே ஒவ்வொரு தெரு, வீடு, கிராமம் என்று கேட்டுக்கொண்டு போனால் எப்படி பதிலை எதிர்பார்க்க முடியும்? இதையெல்லாம் வேறுவகைகளிலே கொண்டு வாருங்கள். கேள்வி நேரத்திலே மணப்பாறையிலேயிருந்து மன்னார்குடி வரையில் போனால் என்ன செய்வது ?

திரு. ஆர். கருப்பையா : அரசாங்கம் அமல் செய்கிற கூலி கேட்டதற்காக 23 பெண்கள், 14 ஆண்கள் ஆக 37 பேர் 31 ஆம் தேதியன்று கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் போலீசாரால். ஆகவே, இம்மாதிரி குறைந்தபட்சக் கூலி மறுக்கக்கூடிய இடங்களில் போலீசார் கூலியைப்பெற்றுத் தருவதற்கான முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, எந்தச் சூழ்நிலையில் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற தகவல் அரசிடம் இல்லை. விரிவாக ஏதாவது புகார் வந்தால் அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யும்.



திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை அமுல்படுத்தக் கூடிய நடவடிக்கைகளைப்பற்றி அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். தென்னார்க்காடு மாவட்டத்திலே, காட்டுமன்னார்கோவில் தாலுக்காவில் ஸ்ரீமுஷ்ணம் என்ற இடத்தில்...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுப்படையான கேள்வியில், காட்டுமன்னார்குடி, மன்னார்குடி, மணப்பாறை என்று கேட்டுக்கொண்டிருந்தால் அவர்களிடம் எப்படித் தகவலை எதிர்பார்க்க முடியும் ?

திரு. எஸ். இளையபெருமாள் : பேரவைத் தலைவரவர்களே, கடந்த பத்து மாத காலமாகப் பதில் சொல்லும்பொழுது, அரசின் கவனத்தில் இருக்கிறது என்பது, ஜில்லா கலெக்டர் கவனிப்பார் என்பது, தகவல் இல்லை என்பது என்ற இந்த முறையில் இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தயவு செய்து நான் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம், இந்தக் குறைந்த பட்சக் கூலிச் சட்டம் சம்பந்தமாக எந்தெந்த ஜில்லாக்களில், எந்தெந்த நிலச்சுவான்தார்கள் கொடுக்கவில்லை, எந்தெந்த அரசாங்க விதைப் பண்ணைகளில் கொடுக்கப்படவில்லை ? அப்படிக் கொடுக்காதது சம்பந்தமாக அரசுக்கு அவர்கள் மூலம் தகவல் வந்திருக்கிறதா ? வந்திருந்தால் அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி சொல்லப்பட்டதா ? கிராமங்களில் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை அமல் நடத்துகின்ற நிலையில் நிலச்சுவான்தார்களும் ஏன் அரசாங்க பண்ணை அதிகாரிகளும் கூட போலீஸ் மூலமாக மிரட்டி கைது செய்யும் பொதுப்படையான காரியங்கள் நடந்து கொண்டிருப்பது உண்மையா இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குறைந்த பட்சக் கூலியை நிர்ணயித்தவுடன் அதைப் பெறுவது எப்படி என்பதற்கு வழிவகைகள் இருக்கின்றன. அதை அவர்கள் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் அந்த முறைகள் இருப்பது போதுமானது அல்ல என்று இந்த அரசு கருதுகிறது. இத்தனை ஆண்டுகளாக இருந்து வருகின்ற முறை சரியல்ல என்று கருதுகிறது. இதை மாற்றியமைக்க வேண்டுமென்பதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. போலீஸ் தலையீடு என்பதைப் பற்றியெல்லாம் அவ்வப்பொழுது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படுமேயானால் அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்யும்.

திரு. ஜி. மூர்த்தி : பேரவைத் தலைவரவர்களே, குறைந்த பட்சக் கூலி நிர்ணயச் சட்டத்தை அமல்படுத்தாத நிலப்பிரபுக்களின் நிலங்களை நஷ்டஈடு தராமல் கைப்பற்றுகின்ற திட்டத்தை மத்திய அரசுக்கு இந்த மாநில அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இதில் மிகுந்த சட்டப் பிரச்சினைகள் இருக்கின்றன; ஆழமாகப் பரிசீலனை செய்ய வேண்டும்.

திரு. சே. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்காக அரசால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற குறைந்தபட்சக் கூலி வேண்டுமென்று கேட்டதற்காக, அவ்வாறு கேட்கக் கூடாது என்று, அவர்கள்மீது பொய் வழக்குகள் போடப்பட்டு, கைது செய்தது மட்டுமல்லாமல், அவ்வாறு கொடுக்காமல் இருப்பவர்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, அந்தக் குறைந்தபட்சக் கூலி வேண்டுமென்று கேட்டவர்களுக்கு விரோதமாக போலீஸ் இருப்பது நியாயமா? எனவே, குறைந்தபட்சக் கூலி கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தும் முறையிலே ஏதாவது ஒரு தீவிரமான நடவடிக்கையைத் தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயம் கொடுக்க வேண்டுமென்பது இந்த அரசினுடைய எண்ணம் என்பது மட்டுமல்ல, அதை எப்படியும் செயல்படுத்த வேண்டுமென்று கருதுகிறோம், ஆகையால்தான் நான் இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிக்கை அனுப்பியிருப்பதைப் பற்றிச் சொன்னேன். போலீஸ் தலையீடு, போலீஸ் தலையீடு என்று எல்லா உறுப்பினர்களும் சொல்கிறீர்கள். எனவே, குறிப்பாக இந்த இடத்தில் இப்படி நடக்கிறது என்று இந்த அரசுக்குப் புகார் வருமானால் அதைப்பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும். (குறுக்கீடு) மணப்பாறை என்ற உடனே நான் நடவடிக்கை எடுத்துவிட முடியாது. தனியாக முறையீடு அனுப்பினால் நடவடிக்கை எடுக்க முடியும்.

பாலாற்றில் நிலத்தடி நீர் குறித்த ஆய்வு.

* வினா எண் 618—திரு. இல. பலராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம் பாலாற்றில் நிலத்தடி நீர் ஆய்வு செய்யப்பட்டு சில ஆண்டுகளில் குடிக்க லாயக்கற்றதாக ஆகும் எனக் கூறப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எதனால் இந்நிலை ஏற்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :— (அ) பாலாற்றின் சில பகுதிகளில் நிலத்தடி நீர் குடிப்பதற்கு லாயக்கற்றதாக உள்ளது என அறியப்படுகிறது. மேற்படி



நிலத்தடி நீர் பாதிப்பு எவ்வளவு என்பதும், இனிமேல் எப்படி ஆகும் என்பதும், மேற்கொண்டு இரண்டு ஆண்டுகளுக்கு பரந்த அளவு ஆராய்வு செய்த பின்னர்தான் கூற இயலும்.

(ஆ) தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து கழிவு நீரை விடுவதும் கழிவு உப்பும் திறந்த வெளிகளில் விடுவதும் பாலாற்றின் சில பகுதிகளில் உள்ள நிலத்தடி நீர் குடிப்பதற்கு லாயக்கற்றதாக இருப்பதற்கு முக்கிய காரணம் எனப்படுகிறது.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோல் பதனிடுவதால் வெளியேறும் அந்தக் கழிவு நீர் பாலாற்றுக்கு வருவதால், பாலாற்றின் குடிநீர் குடிக்க லாயக்கற்ற நீராக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தோல் பதனிடும் கழிவு நீரைப் பாலாற்றில் கலக்காமல் வேறிடத்தில் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு முக்கியமான விஷயம் என்று அரசு கருதுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தினுடைய வட பகுதியில் இருக்கிற பல்வேறு நகரங்கள், கிராமங்கள் குடி தண்ணீருக்குப் பாலாற்றைத்தான் நம்பிக் கொண்டிருக்கின்றன. பல்லாண்டுகாலமாக, இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் பாலாற்றில் வந்து சேருவதால், தண்ணீர் கெட்டுவிடுகிற சூழ்நிலையிருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் இன்னும் மெத்தனமாக இருப்பதாகத்தான் எங்களுக்கெல்லாம் தெரிய வருகிறது. ஆகவே, உடனடியாக, விரைவாக, நடவடிக்கை எடுத்து, குடிதண்ணீர் கெடாமல் இருப்பதற்கும், அந்தக் கழிவு நீரை வேறு பகுதியில் திருப்பிவிடவும், வட பகுதியிலிருக்கிற மக்களைக் காப்பாற்றவும் அரசாங்கம் மிக விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா இடங்களிலும் கெட்டுப் போய்விடவில்லை. சில இடங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, பல்லாண்டுக் காலமாக இருந்து வருகிறது. எனவே, நாங்கள் அதைப் பற்றி ஆராய்வு நடத்தி வருகிறோம். இரண்டு ஆண்டுக் காலத்தில் பரந்த அளவு ஆராய்வு முடிந்துவிடும். அதற்கிடையிலும் ஆய்வு செய்து வருகிறோம். அதோடு, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு கருதுகிறதோ, அதை நிச்சயமாகச் செய்யும்.

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். பாலாற்றுக் குடி நீர்ப் பிரச்சனை ஆண்டுக்கணக்கிலே உள்ள ஒன்று. ஆய்வு கட்ட அளவில் மட்டும் இருந்தால் போதாது, உடனடியாக நடவடிக்கை எடுத்து, தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரை ஆவியாக்குகின்ற வகையில் தொழிற்சாலைகள் மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையை மாற்றுவதற்கு என்ன, என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரிலிருந்து காவேரிப்பாக்கம் வரையுள்ள எல்லா தோல்ஷாப் தொழிற்சாலைகளிலிருந்தும் கழிவு நீர் ஆற்றுக்குப் போகிறது. அதன் விளைவாக, குடி தண்ணீர் கெட்டுப் போகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் தவிர்க்க மாவட்டம் முழுவதும் எடுக்க வேண்டும். குறிப்பிட்ட பகுதி மட்டும் எடுத்தால் போதுமா? அதை அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆராய்ந்த காரணத்தால்தான் மேற்படி நிலத்தடி நீர் பாதிப்பு எவ்வளவு என்பதும், இனிமேல் எப்படி ஆகும் என்பதும், மேற்கொண்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பரந்த அளவு ஆராய்வு செய்த பின்னர்தான் கூற இயலும்.

பீடித்தொழிலாளர் சேமநலநிதி குறித்த ஆலோசனைக் குழு.

*வினா எண். 619—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1976-ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர் சேமநலநிதிச் சட்டத்தின் கீழ் மத்திய ஆலோசனை கமிட்டி ஒன்றை அமைக்க மத்திய அரசு ஏற்பாடு செய்யப்பட்டு வருவது தமிழக அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் செயல்பாட்டில் பீடித் தொழிலாளர்களுக்கு என்ன நன்மைகள் கிடைக்க உள்ளன?

(இ) அக்கமிட்டியில் மாநில அரசின் சார்பில் பிரதிநிதிகள் இருப்பார்களா?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம். 1976-ஆம் ஆண்டு பீடித்தொழிலாளர் சேமநல நிதிச் சட்டத்தின்கீழ் மைய அரசு தமிழ்நாடு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்திருக்கிறது.

(ஆ) மேற்கண்ட குழு மேற்கண்ட சட்டத்தை நிர்வகிக்கும் விஷயங்களிலும், மேற்கண்ட நிதியை பீடித் தொழிலாளர்களின் நல்வாழ்விற்கும், முன்னேற்றத்திற்கும் தேவையென்று கருதப்படுகின்ற திட்டங்களுக்கும், வசதிகளுக்கும் பயன்படுத்தப்படும் விஷயங்களிலும் மைய அரசுக்கு இக்குழு அவ்வப்போது ஆலோசனை வழங்கும். மேற்கண்ட நிதி பீடித் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்காக கீழ்க்காணும் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது:—

(1) பொது சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

(2) மருத்துவ வசதிகளை அதிகரித்தல், நோய்களைத் தடுத்தல்.

(3) தண்ணீர் வசதிகளை அமைத்தல், அதிகரித்தல்.

(4) கல்வி வசதிகளை அமைத்தல், அதிகரித்தல்.

(5) வீட்டு வசதிகளை அதிகரித்தல்.

(6) பொழுதுபோக்கு வசதிகள் அமைத்தல்.

(7) சத்துணவு அளிப்பதோடு, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

(8) பீடித் தொழிலாளர்களின் நல்வாழ்வோடு தொடர்புடையதும், மைய அரசால் ஒப்புதலளிக்கப்பட்டதுமான திட்டங்களை நிறைவேற்றுமுகத்தான் மாநில அரசுக்கு அல்லது உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அல்லது தனியார்களுக்கு கடன் அல்லது மானியம் வழங்குதல்.

(இ) ஆம்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பீடித் தொழிலாளர்கள் சேமநல நிதியில் இருந்து பல்வேறு காரியங்கள் நடைபெறுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தற்போது எத்தனை வீடுகள் அந்தச் சேமநல நிதியில் இருந்து கட்டப்பட்டு இருக்கின்றன. எத்தனைக் குழந்தைகளுக்கு கல்வி வசதி செய்து தரப்பட்டுள்ளது? எத்தனை இடங்களில் பீடித் தொழிலாளர்கள் நலனுக்காக வேண்டி மருத்துவ வசதிகள் செய்யப்பட்டு இருக்கின்றன? மேலும், எத்தகைய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அந்த விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. தனி கேள்விபோட்டால் விவரமாகத் தருகிறேன்.

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்கள் மிகவும் ஏழை எளியவர்கள் என்பது மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியும். இன்றைய தினம் அவர்கள் குடிசையில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பொறுப்பில் இருக்கும் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அவர்களுக்கு என்று தனியாக வீட்டு வசதி ஏற்படுத்திக்கொடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்விக்குத் தொடர்புடையது அல்ல.

திரு. க. பரமலை : தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல அந்த பீடித் தொழிலாளர்களுக்குப் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக பெங்களூரில் தலைமையகமாகக் கொண்டு உதவி இன்ஜீனியர் ஒருவர் மத்திய அரசால் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதைப்போல தமிழ்நாட்டிற்கு அப்படிப்பட்ட உதவி இன்ஜினீர் அலுவலகம் ஏற்படுத்துவதற்கு மத்திய அரசை நமது அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அலுவலகம் தான் அங்கே இருக்கிறதே தவிர அந்தக் குழுவின் தலைவர், உறுப்பினர்கள் எல்லோரும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களின் நலனை முன்னிட்டு பல்வேறு திட்டங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். இந்த சேமநல நிதி எந்த முறையில் வசூலிக்கிறார்கள் ? எவ்வளவு தொகை இதுவரையில் வசூலித்து இருக்கிறார்கள் ? நம்முடைய தமிழ் நாட்டிற்கு எவ்வளவு பணம் இந்த ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது ? எத்தனை வீடுகள், எத்தனை மருத்துவ மனைகள், எங்கெங்கே கட்டப்பட்டு இருக்கின்றன என்கிற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, டுபேக்கோ அதாவது புகையிலை மீது போடப்படும்—செஸ் நிதியில் இருந்து— வரும் பணத்தைக்கொண்டு இந்தக் குழு செயல்படுகிறது. இப்போது அந்த செஸ் வசூலிக்கப்படுவது நிறுத்தப்பட்டு இருக்கிறது. எனவே, இனி செஸ் வரி போட்டால் தான் அந்த நிதி சேரும். இதுவரையில் அந்த நிதியில் எவ்வளவு பணம்



சேர்ந்து இருக்கிறது என்கிற தகவல் என்னிடத்தில் தற்போது இல்லை. அந்தக் குழு செயல்படவேண்டுமானால் புகையிலை மீது போடப்படும் செஸ் வரி மீண்டும் கொண்டு வரவேண்டும் என்கிற முறையில் மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம்.

**Drinking Water Supply to Alandur area from river Palaru**

*Q. No. 620.— Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Labour be pleased to state.

(a) whether it is proposed to augment the Drinking Water Supply for the Alandur Assembly Constituency and by bringing water from Palaru; and

(b) If so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) பாலாற்றுப்படுகையில் பழைய சீவரத்துக்கும், வாலாஜாபாத்துக்கும் அருகில் உள்ள இரண்டு நிலையங்களிலிருந்து நீர் எடுத்து ஆலந்தூர், பல்லாவரம் மற்றும் வழியிலுள்ள ஊர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**குத்தாலம் ஒன்றியத்திலுள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி.**

*வினா எண் 621—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் ஒன்றியத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மின் மோட்டார்கள் அனைத்தும் பழுதாகி பல மாதங்களாகியும் இதுவரை பழுது பார்க்கப்படாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம், எனில் பொது மக்களுக்கு குடிநீர் கிடைக்க மாற்று ஏற்பாடுகள் ஏதாவது செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 22 மின்இறைப்பான்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியத்தின் பராமரிப்பில் உள்ளன. இவற்றில் 15 மின் இறைப்பான்களில் பழுதுகள் நிவர்த்தி செய்யப்பட்டு நன்றாக இயங்கி வருகின்றன. மீதமுள்ள 7 மின் இறைப்பான்களில் பழுதுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவை கூடிய விரைவில் இயங்கப்படும்.

(முற்பகல் 9-40)

திரு. பெ. ஊ. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்த குத்தாலம் ஒன்றியத்தில் இருக்கிற மேல் நிலை தொட்டிகளிலே

ஏழு இயங்கவில்லை என்று சொன்னார்கள். எல்லாத் தொட்டிகளையும் பழுதுபார்க்கும் வேலையை குடிநீர் வடிகால் வாரியம் எடுத்திருக்கிறதா ? குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய பராமரிப்பில் வராத தொட்டிகளும் அங்கே இருக்கின்றனவா ? அந்த 7 நீர்த் தேக்கத் தொட்டிகளையும் இந்த வறட்சிக் காலத்தில் பழுது பார்க்கவில்லை என்றால் வேறு எப்போது பழுதுபார்க்க திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அவை கூடியவிரைவில் இயங்கும் என்று சொல்லியிருக்கிறேன்.

### உலக வங்கி உதவியுடன் நடைபெறும் நீர்ப்பாசன திட்டங்கள்.

*வினா எண் 622.—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கி உதவி பெற்று பாசனத் திட்டங்களை நவீனப்படுத்தும் திட்டங்கள் எத்தனை, தமிழ்நாட்டில் நடைபெற்று வருகின்றன ? அவை யாவை ?

(ஆ) உலக வங்கி உதவியுடன் நவீனப்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் என எந்தெந்த பாசனத் திட்டங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றன ?

(இ) கன்னியாகுமரி மாவட்ட பாசனத் திட்டங்கள் உலக வங்கி உதவிக்கென ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனவா ? அதன் மீது அரசு எடுத்த முடிவுகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது :— (அ) தற்போது உலக வங்கி உதவி பெற்று தமிழ்நாட்டில் பெரியாறு—வைகைப் பாசனத் திட்டம் ஒன்றுதான் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள ஏரிகளை நவீனப்படுத்துதல், கீழ் பவானித் பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துதல், கோதையாறு பாசனக் கால்வாய்களை நவீனப்படுத்துதல், காவிரி டெல்டா சீரமைப்பு செய்தல் ஆகிய நான்கு திட்டங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

(இ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கோதையாறு பாசனத் திட்டம் முழுவதையும் நவீனப்படுத்தும் திட்டம்



விரிவான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு முடிந்த பிறகு, உலக வங்கியின் உதவி பெறுவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவரவர்களே, ஒரே ஒரு திட்டம் மட்டும்தான் இப்போது நடைபெற்று வருகிறது. இன்னும் பல்வேறு திட்டங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் ஆய்வு நடைபெற்று வருகின்ற திட்டங்கள் வேலை நடைபெற எடுத்து கொள்ளப்படும் என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, இப்போது வைகை-பெரியாறு நவீனப்படுத்தும் திட்டம் நடைபெற்று வருகிறது. இது 1978 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட திட்டம். 1978 ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் வேலை முடிய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். மற்றத் திட்டங்களை எல்லாம் ஆய்வு செய்து, பிரிலிமினரி ரிப்போர்ட் நம்மிடம் இருக்கிறது. அதை வைத்து சந்தர்ப்பம் வரும்போது பேச்சு வார்த்தை நடத்தி, உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு நீர்ப்பாசனத் திட்டத்தின் முதல் ஆய்வு நடந்து வருகிறது என்று சொன்னார்கள். அதோடு நெய்யாறு இடதுகரை சானல், சித்தாறு-பட்டணம்கால் ஆகிய பாசனத் திட்டங்களின் கீழுள்ள கடைவரம்பு நிலங்களுக்கு தண்ணீர் செல்லவில்லை ; அந்தத் திட்டங்களில் ஏதோ கோளாறு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே, அந்தத் திட்டங்களையும் ஆய்வுக்கு எடுத்து, அவைகளையும் இந்த உலக வங்கி உதவித் திட்டத்தின்கீழ் எடுத்து வேலை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, கோதையாறு பாசனத் திட்டம் பற்றி மட்டும் கேட்டதால், அதற்கான குறிப்பு மட்டும் இருக்கிறது. கடைக்கோடி பாசன நிலங்களுக்கு தண்ணீர் போகவில்லை என்பதை மனதிலே கொண்டுதான் அதை நிறைவேற்ற திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கிற குறிப்புகளையும் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, உலக வங்கி உதவித் திட்டத்தின்கீழ் பெரியாறு இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம் ஒன்றுதான் எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்குத் தேவையான 72 கோடி ரூபாயில் உலக வங்கி 20 கோடிதான் தருவதாக இருக்கிறது. பாக்கிப் பணம் கொடுப்பதற்கு நம்

முடைய அரசுத் திட்டத்தில் ஏதோ முட்டுக்கட்டை இருப்பதாகச் சொல்லி, தாமதமாவது உண்மையா ? அந்த முட்டுக் கட்டையை நீக்கி, 72 கோடிக்கு அனுமதி தரப்படுமா ? கொடுக்கப்பட்ட 20 கோடி ரூபாயில் பெரியாறு இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம் காண்டிராக்டர்கள் கட்டும் போது முன்னால் இருந்ததை விட உயர்த்திக் கட்டியதன் மூலம் தண்ணீர் வாய்க்காலிலே போகவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படி இருந்தால் அதை திருத்தி அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, இந்த வைகை-பெரியாறு மேம்பாடுத் திட்டம் முதலில் 4104 இலட்சம் மதிப்பீட்டில்தான் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு திருத்த மதிப்பீடு தயாரிக்க வேண்டிய சூழ்நிலை வந்தபோது, 65 கோடி ரூபாயில் திருத்திய மதிப்பீடு செய்து அனுப்பினோம். அது பரிசீலனையில் இருக்கும்போது விலைவாசி ஏற்றத்தின் காரணமாக 72 கோடி ரூபாய்க்கு வந்துவிடும் என்று கருதப்பட்டு, 72 கோடி ரூபாய்க்கான திட்டம் தயாரித்து அனுப்பப்பட்டது. இதன் காரணமாக வேலை எதுவும் தடைபடவில்லை; தொடர்ந்து நடைபெறுகிறது. இந்த வேலையில் எடுப்பு அணை ஒன்று 58 கிலோ மீட்டர் தூரத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது; கால்வாய்கள் நவீனப்படுத்தும் வேலையில் சில இதுவரை முடிக்கப்பட்டு விட்டன: வேலை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காண்டிராக்டர்கள் உயர்த்திக் கட்டியதால் சில குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன என்று சொன்னார்கள். தனியாக வேறு கேள்வி போட்டால் விரிவாக பதில் சொல்ல முடியும்.

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, உலக வங்கி உதவியுடன் கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துவதினால் எந்தெந்த பகுதிகள் பயனடையும் ? அதனால் எவ்வளவு ஏக்கர் நிலம் பயனடையும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னால் 25,570 ஏக்கர் இருபோக நன்செய் பாசன நிலங்களுக்கு பாசன உறுதி ஏற்படும். 6,940 ஏக்கர் இருபோக நன்செய் நிலம் புதிதாக இந்த ஆயக்கட்டின் கீழ் பாசனம் பெறும்: திருநெல்வேலி மாவட்டத்தில் இராதாபுரம் பகுதியில் சுமார் 10,000 ஏக்கரும், கன்னியாகுமரி மாவட்டத்தில் பட்டணங்கால் கடைக்கோடியில் 5,700 ஏக்கர் நிலம் புன்செயிலிருந்து நன்செய் நிலமாக மாறக்கூடிய நன்மைகள் இதனால் ஏற்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் 1981—82 ஆம் ஆண்டு பாலிசி நோட்டில் கோதையாறு மாடர்னைசேஷன் ஸ்கீம் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.



ஏற்கெனவே அமைச்சரவர்கள் இங்கே விளக்கம் கூறும் போது பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு இந்த மாடர்னைசேஷன் ஸ்கீமினால் பயன் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் 6-வது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள்ளாக இந்த மாடர்னைசேஷன் ஸ்கீமை நடத்தி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, முதலில் கேட்கும்போதே சொன்னேன். பெரியாறு கால்வாயை நவீனப்படுத்தும் திட்டம் 1978 ஆம் ஆண்டில் தொடங்கி 5 ஆண்டுகளுக்குள் முடிக்கவேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அதைத்தான் இப்போது செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். மற்றவைகளை எல்லாம் ஆய்வு செய்து திட்டங்கள் தயாரித்திருக்கிறோம். அதைத்தான் கொள்கை விளக்க குறிப்பிலே கொடுத்திருக்கிறோம். விரைவு படுத்துவதிலே தடை-ஒன்றும் இல்லை. சில வேலைகளை செய்துக்கொண்டிருக்கிறோம். மேலும் எடுத்துக்கொள்ள இருக்கும் திட்டங்கள், இன்னும் தேவையான திட்டங்கள் என்று கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் இருக்கின்றன. ஆகவே, தேவையைக் கருதி, அந்த அந்த சந்தர்ப்பத்தில் வேலைகளை விரைவுபடுத்தலாம்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவரவர்களே தமிழகத்திலுள்ள ஏரிகளையும், காவேரி டெல்டா பகுதியையும் விரிவுபடுத்த உத்தேசம் இருக்கிறதா ? அதற்கு எவ்வளவு மதிப்பீடு என்று கணக்கிடப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலுள்ள ஏரிகளை நவீனப்படுத்தவும் காவேரி டெல்டா பாசனப் பகுதிகளை சீரமைப்புச் செய்யவும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஏரிகள், குறிப்பாக 500 ஏக்கருக்கு மேல் பாசனம் அளிக்கும் 490 ஏரிகள் முதலில் எடுத்துக்கொள்ளப்படும். இந்தத் திட்டத்திற்கு 120 கோடி ரூபாய் செலவாகும் என்று ஒரு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதைப்போல காவேரி டெல்டாவை நவீனப்படுத்தும் திட்டமும் எடுத்துக்கொள்ளப்படும். இதற்கு 366.60 கோடி ரூபாய் மதிப்பீடாகும். இதுவும் மொத்தமாக கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆரம்ப கால வேலைக்கு 37 கோடி ரூபாய் தேவைப்படும் என்று இப்போது கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு ஆ. வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, இது போன்ற உலக வங்கி உதவி பெறும் திட்டங்களுக்கு உலக வங்கி நிபந்தனை ஏதும் விதித்திருக்கிறதா? மதுரை மாவட்டத்தில் பெரியாறு திட்டம் தவிர வேறு ஏதாவது திட்டங்கள் நவீனப்படுத்தும் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே அவர்கள் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொருவிதமான நிபந்தனைகளை போட்டிருக்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்லலாம். மதுரை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், வைகை—பெரியாறு திட்டம் அந்த மாவட்டத்தை ஒட்டிதான் செய்யப்பட்டு வருகிறது.

**மாங்கோம்பை ஆற்றின் கரைகளைச் சீரமைத்தல்.**

* வினா எண் 623 திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம், வடமதுரை ஒன்றியத்தில் ஆண்டுதோறும் உடைப்பு ஏற்படும் 'மாங்கோம்பை' ஆற்றின் கரைகளைச் சீரமைக்க மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டும் பணி தொடங்குவதில் காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன?

(ஆ) அப்பணி எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:— (அ) வடமதுரை பஞ்சாயத்து ஒன்றியம் எல்லையில் மாங்கோம்பையார் ஆற்றில் வெள்ளத் தடுப்பு கரைகளை சீரமைக்க ஒரு திட்டம் தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) திட்டம் ஒப்புதல் பெற்ற பின் வேலை துவங்கப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, 1977 ஆம் ஆண்டிலே அந்த ஆற்றில் வெள்ளத்தடுப்பு கரைகள் பழுதடைந்தன. சாதாரணமாக சிறு மழை வந்தால் கூட பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே அரசு அதை விரைவாகச் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, ஏற்கனவே தல அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கின்றது. இருந்தாலும் கூட திட்டத்தின் மீது சில குறிப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கேட்டு இருப்பதால் அந்த குறிப்புகளை விரைவாகப் பெற்று உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.



**தமிழ்நாட்டில் கருப்புக்கல் கிடைக்குமிடங்கள்**

*வினா எண் 624—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள கருப்புக்கல் உள்ள இடங்களில் அரசு எடுத்துக்கொண்ட இடம் எத்தனை ?

(ஆ) ஆம் எனில், எடுத்துக்கொண்ட இடங்கள் எவை ?

(இ) இன்னும் எடுக்கப்படாத இடங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; (அ), (ஆ) மற்றும் (இ) விடைகள் அடங்கிய *விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ப. சுந்தரம் ; பேரவைத் தலைவரவர்களே, அரசுக்கு தேவைப்படாமலும், அரசால் உபயோகப்படுத்தப்படாமலும் இருக்கின்ற கருப்புக்கல் உள்ள இடங்களை அரசுக்கு வருவாய் வருகின்ற இடங்களை மட்டும் வைத்துக்கொண்டு மீதி இடங்களைத் தனியாருக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப் போன்ற எண்ணம் அரசினிடத்திலே இல்லை.

திரு. ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருப்புக்கல்லை தமிழகத்திலே இருந்து ஏற்றுமதி செய்வதற்கு தடை இருக்கின்றதா ? ஆனால் ஆந்திரா மூலமாகவும், கர்நாடகா மூலமாகவும், கேரளா மூலமாகவும் இங்குள்ள கற்களை எடுத்துச் சென்று ஏற்றுமதி செய்கிறார்களே, இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கின்றது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, கருப்புக்கல்லை ஏற்றுமதி செய்வதற்குத் தடையே இல்லை.

**சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு துவக்கப்படும் சிறுதொழில் நிறுவனங்கள்.**

*வினா எண் 625—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

---

* 681 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

(அ) சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு (சிமெண்ட் குழாய், ஆஸ்பெஸ்டாஸ் குழாய்) புதிதாக துவக்கப்படும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு சிமெண்ட் ஒதுக்கீடு தரக்கூடாது என அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் புதிதாக துவக்கப்படும் சிமெண்ட்டைப் சிறு தொழில் வளர்ச்சியை உத்தேசித்து இந்த கட்டுப்பாடு தளர்த்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. த. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்கு இடமே இல்லை என்று கூறினார்கள். தமிழகத்தில்தான் அதிகமான அளவு சிமெண்ட் உற்பத்தி செய்யப்படுவதாலும், படித்த பட்டதாரி மாணவர்கள் அதிகமாக இருப்பதாலும் அவர்கள் இதைப்போன்ற புதுத் தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்வந்தால் அவர்களுக்கு விதிவிலக்கு தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்கெனவே சிமெண்ட் பொருட்கள் தயாரிக்கின்ற சிறு சிறு நிறுவனங்களுக்கு நாம் இப்போது 13,600 மெட்ரிக் டன்கள் சிமெண்ட் ஒதுக்கி அவர்களுக்கு அனுமதியும் கொடுத்திருக்கின்றோம். மத்திய அரசினிடத்திலே இருந்து முந்தைய காலாண்டுக்கு கொடுத்தது 3,95,400 மெட்ரிக் டன் இந்த காலாண்டுக்கு நமக்குக் கொடுத்திருப்பது 25,000 மெட்ரிக் டன் ஆகவே இதிலிருந்து இப்போது சிமெண்டிற்காக பதிவு செய்திருக்கின்ற நிறுவனங்களுக்கு அவர்களுடைய தேவையில் 75 சதவிதத்தைத்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே புதிதாக இப்போது யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. ஆறுமுகம் :** தலைவரவர்களே, பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் எத்தனை இருக்கின்றன. ஆஸ்பெஸ்ட்டா சீட்டைப் போன்றவற்றை உற்பத்தி செய்யக்கூடிய சிறு தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் எத்தனை இருக்கின்றன?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** சிறு நிறுவனங்கள் எத்தனை என்கின்ற விவரங்கள் என்னிடத்திலே தற்போது இல்லை. ஆனால் அவைகளுக்கு மொத்தம் ஒதுக்கி இருக்கின்ற சிமெண்ட் 13,600 மெட்ரிக் டன்கள்.



**திரு. சேலம் மு. ஆறுமுகம் :** பேரவைத் தலைவரவர்களே, இந்த சிமிண்ட் குழாய் போன்றவைகளைப் புதிதாக தயாரிக்க பெர்மிட் கொடுக்கப்பட மாட்டாது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் ஏற்கனவே இந்தத் தொழிலை செய்கின்றவர்கள், அதிகமானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையிலேயும் தொழிலை விஸ்தரிக்கின்ற நிலையிலே உள்ளவர்களுக்கும் அதிகமான கோட்டா சிமிண்ட் ஒதுக்க மறுக்கப்படுகின்றது. அதேமாதிரி கட்டிடங்களுக்குத் தேவையான மொசைக் டைல்ஸ் போன்றவற்றைத் தயாரிக்கக் கூடியவர்களுக்கும் அனுமதி மறுக்கப்படுகிறது. இந்த நிலையினை அரசு அறியுமா ? இந்த நிலையைப் போக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, சிறுசிறு அளவிலே இதைப்போன்ற சிமிண்ட் பொருட்கள் தயாரிக்கின்ற நிறுவனங்களின் தேவை 18 டன்னுக்கு குறைவாக இருந்தால் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அனுமதி வழங்கலாம். ஆனால் பலர் இப்படி சிறு சிறு நிறுவனங்கள் என்று பதிவு செய்து வைத்துக்கொண்டு தனக்குரிய கோட்டா சிமிண்டை வாங்கி சிறு தொழில்களைச் செய்யாமல் அப்படியே விற்றுவிடுகின்ற நிலைமை இருக்கின்றது. இவற்றை எல்லாம் முழுமையாக ஆய்வு செய்துதான் 18 டன்னுக்கு குறைவாக சிமிண்ட் தேவைப்படுகின்ற நிறுவனங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அனுமதி வழங்குகிறார்கள்.

## சிமெண்ட் பற்றாக்குறை.

***வினா எண் 626—திருவாளர்கள் ந. ரமணி, இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிமெண்ட் கிடைக்காத நெருக்கடி வளர்ந்துள்ளது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா ?

(ஆ) கள்ளமார்க்கெட்டில் சிமெண்ட் கிடைத்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில் இது பற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) ஆம்.

(ஆ) கள்ள மார்க்கெட்டில் சிமெண்ட் கிடைத்து வருவது பற்றி அரசின் கவனத்திற்கு பொதுவாக அவ்வப்பொழுது கொண்டு வரப்படுகிறது.

(இ) குறிப்பாக கொண்டு வரப்படும் குற்றச்சாட்டுகளில், மாவட்ட ஆட்சியாளர்கள் அத்தியாவசியமான பண்டங்கள், மற்றும் சம்பந்தப்பட்ட சட்ட விதிகளில் அளித்துள்ள அதிகாரத்தின்படி, பதுக்கல் கள்ள மார்க்கெட் முதலிய வகைகளில் ஈடுபடும் தனி நபர் மற்றும் வியாபாரிகளின் மீது அவ்வப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதி மன்றங்களில் வழக்கு போடப்பட்டு தண்டனை கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. குமரி அனந்தன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியினுடைய முதல் பகுதியிலேயே சிமெண்ட் கிடைப்பது நெருக்கடியான நிலைமையில் இருப்பது பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறது. அப்படி சிமெண்ட் கிடைப்பதே நெருக்கடியாக இருக்கும் நிலையில், சில இடங்களில் செங்கல் வடிவிலே உள்ள சிமெண்ட் கற்களை உபயோகித்து கட்டிடங்கள் கட்டப்பெறுவதையும், தெருவிலே பெயர்ப்பலகை வைக்கிறபோது, அதற்கு கருங்கற்களை பயன்படுத்தாமல் சிமெண்ட் பலகைகளை பயன்படுத்துவதையும் தடுத்து அதை மிச்சப்படுத்துவதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : செங்கல்வடிவிலே சிமென்டை யார் பயன்படுத்துகிறார்கள்? கொஞ்சம் விளக்கம் கூற முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவர் யோசனையைத் தான் சொல்கிறார். சிமெண்ட் மிச்சப்படுத்துவதற்கு நல்ல யோசனைதான் இது. திரு. பாபு ஜனார்த்தனன்.

**திரு. பாபு ஜனார்த்தனன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ள மார்க்கெட்டில்தான் சிமெண்ட் கிடைக்கிறது. ஓபன் மார்க்கெட்டில் கிடைப்பதில்லை. கள்ள மார்க்கெட்டில் விலை அதிகமாக இருப்பதால், அதை பணக்காரர்கள் தான் வாங்க முடியும். ஏழைகளால் வாங்க முடிவதில்லை. ஆகவே 1, 2, 3 மூட்டைகள் தேவைப்படுகிற சாதாரண குடிசை வாழ் மக்களின் உபயோகத்திற்கு, சிமெண்ட் மூட்டைகள் தாராளமாக கிடைப்பதற்கு, ஒரு எளிய ஏற்பாட்டை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்காங்கே உள்ள வட்டார அலுவலகங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் அனுமதியைப் பெற்று, சாதாரண மக்கள் சிறிய அளவில் வாங்கிக் கொள்ளலாம். ஆனால் முழு அளவில் சிமெண்ட் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய நிலைமை நமக்கு இல்லாததற்குக் காரணம் மத்திய அரசிடம் இருந்து நாம் கேட்டிருந்த அளவிற்கு சிமெண்ட் வரவில்லை என்பதுதான். 1981ஆம் ஆண்டுக்கான முதல் குவார்ட்டருக்கு 1 இலட்சம் மெட்ரிக் டன் அதிகமாக வேண்டும் என்று கேட்டிருந்



தோம். ஆனால் அவர்கள் 25,000 மெட்ரிக் டன்கள் தான் கொடுத்தார்கள். சென்ற ஆண்டு, 3,95,400 மெட்ரிக் டன்கள் கொடுத்தார்கள். ஆனால் தேவை அதைப்போல மூன்று மடங்கு இருக்கிறது. எனவே அந்த அடிப்படையிலேதான் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**திரு. செ. சிவசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, கள்ள
மார்க்கெட்டில் தாராளமாக சிமெண்டு கிடைக்கிறது. ஆனால்
ஓபன் மார்க்கெட்டில் கிடைக்கவில்லை என்றால், உற்பத்தி
அதிகம் இருக்கிறது என்பது தெரிகிறது. ஆனால் கள்ள மார்க்
கெட் அதிகமாகியிருக்கிறது என்பது தான் பொருள். அதை
ஒழிப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்
பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, கள்ள மார்க்கெட்டில் தாராளமாக
கிடைக்கிறது என்பதை ஒத்துக் கொள்வதற்கில்லை. கள்ள
மார்க்கெட்டில் சிமெண்ட் கிடைத்து வருவது பற்றி அரசின்
கவனத்திற்கு பொதுவாக அவ்வப்போது கொண்டு வரப்படுகிறது
என்றுதான் சொன்னேன். அப்படி எங்காவது வெளியில் நடப்
பதாக உறுப்பினர்கள் அறிந்தால், எங்களிடம் தெரிவித்தால்
தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ச. பாலகிருஷ்ணன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, என்னுடைய மாவட்டத்திலே தனியார் சிமெண்ட்
ஆலை லாபகரமாக நடக்கிறது. அரசினுடைய சிமெண்ட் ஆலை
8 கோடி ரூபாய் நஷ்டம் காட்டியிருக்கிறது. அதற்கு என்ன
காரணம்? அதைப் போக்க என்ன நடவடிக்கையை அரசு
எடுக்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மூலக் கேள்விக்கும் இதற்
கும் சம்பந்தம் இல்லை. உட்காருங்கள்.

**திரு. ப. தீர்த்தராமன்** : சிமெண்ட் பெர்மிட்டுகளைப் பெற
விண்ணப்பங்களைக் கொடுத்து,
ஒரு நபரே பல பெயர்களில் வாங்கி கள்ள மார்க்கெட்டில் விற்
கிறார்களே, அது பற்றி அரசுக்குத் தெரியுமா? அவர்கள் மீது
நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. சோ. அழகர்சாமி.

**திரு. குமரி அனந்தன்** : திரு. தீர்த்தராமன் அவர்களின் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் வராது. பதில் பெறுகிற அளவிற்கு கேள்விகள் கேட்டால்தான் பதில் கிடைக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலுரைக்கும்போது, சிமென்ட் மூட்டைகள் அதிக அளவில் ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்பதாக சொன்னார்கள். அது தேவை தான். ஆனால் இருக்கிற சிமெண்டை தேவைப்படுகிறவர்களுக்கு கிடைக்கக் கூடிய வகையில், பெர்மிட்டுகள் கொடுக்கின்ற அலுவலகத்தில், விண்ணப்பங்கள் பெற்று வரிசைப் பிரகாரம், ஒரு பட்டியலைப் போட்டு, இன்னின்னாருக்கு இவ்வளவு சிமெண்ட் மூட்டைகளுக்கு பெர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று வரிசைப் பிரகாரம், பட்டியல் போட்டு கொடுக்கும் வகையில் ஒரு முறையை ஏற்படுத்த அரசு முன் வருமா ? ஏனென்றால் பெர்மிட் பெற்றவர்களே திரும்ப திரும்ப பெற்று வெளியில் விற்றுக் கொண்டிருப்பதினால் தான் கள்ள மார்க்கெட் அதிகமாகிறது. அதை குறைக்கும் வகையில் இத்தகைய நடைமுறையைக் கொண்டு வர அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன் ? (பதில் இல்லை.)

[முற்பகல் 10–00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : வட்டாட்சி அலுவலகத்திலோ அல்லது ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலோ வருகிற மனுக்கள் தேவையின் அடிப்படையில் முறையாக பரிசீலிக்கப்படுகிறது. அதில் ஏதாவது முறைகேடுகள் இருந்தால், வட்டாட்சி அலுவலகத்திலோ அல்லது ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலோ இருக்கிற அதிகாரிகள், பி.டி.ஓ அல்லது தாசில்தார் யாராவது தவறு செய்கிறார்கள் என்று சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு உப்பு உற்பத்தி நிறுவனம்

*வினா எண். 627—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழ்நாடு உப்பு உற்பத்தி கார்ப்பரேஷன் (Tamil Nadu Salt Corporation Ltd.,) தஞ்சாவூர் ஜில்லா வேதாரண்யம் பகுதியில் சுமார் 6,000 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ரூபாய் 3 இலட்சம் செலவில் உப்பளம் அமைப்பது உண்மையா?

(ஆ) ஆம் என்றால் அதன் பலன் என்ன ?

(இ) இத்திட்டத்தில் பண துஷ்பிரயோகம் செய்யப்பட்டது உண்மையா ?

(ஈ) ஆம் எனில் அதன் மீது அரசு நடவடிக்கை என்ன?

(உ) மேற்படி கார்ப்பரேஷன் சென்னையில் செயல்படுவதை மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டம பட்டுக்கோட்டை வட்டம் மரவக்காடு - வடகாடு கிராமங்களில் 5,400 ஏக்கராக்கள் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டப் பகுதியில் தல எல்லை தேறுபாடு குறிப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதில் 4,092.33 ஏக்கர் பரப்பளவு உப்பு உற்பத்திக்குகந்தது என தீர்மானிக்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 120 இலட்சமாகும்.

இத்திட்டத்தில் இதுவரை (பிப்ரவரி 1981) ரூபாய் 5.58 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலமாக 10 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் மற்றும் 300–400 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் Seasonal labourers) அளிக்கப்பட்டு வருகிறது. 1982 ஆம் ஆண்டு முதல் கட்டமாக இத்திட்டத்தில் 10,000 டன் உப்பு உற்பத்தி செய்யப்படும். இத் திட்டம் எல்லா வகையிலும் பூர்த்தியாகும் பொழுது 20,000 டன் உப்பு உற்பத்தி செய்யும என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சிப்சம் (Gypsum) போன்ற கனிமங்களும் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டம் முழுமையாக செயல் படுத்தப்பட்டபின் 100 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும், 1,000 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

(இ) இல்லை.

(ஈ) வினா எழவில்லை.

(உ) நிர்வாக அலுவலகத்தை சென்னையிலிருந்து மாற்றும் திட்டம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் வராது. பதில் பெறுகிற அளவிற்கு கேள்விகள் கேட்டால்தான் பதில் கிடைக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலுரைக்கும்போது, சிமென்ட் மூட்டைகள் அதிக அளவில் ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்பதாக சொன்னார்கள். அது தேவை தான். ஆனால் இருக்கிற சிமென்டை தேவைப்படுகிறவர்களுக்கு கிடைக்கக் கூடிய வகையில், பெர்மிட்டுகள் கொடுக்கின்ற அலுவலகத்தில், விண்ணப்பங்கள் பெற்று வரிசைப் பிரகாரம், ஒரு பட்டியலைப் போட்டு, இன்னின்னாருக்கு இவ்வளவு சிமெண்ட் மூட்டைகளுக்கு பெர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று வரிசைப் பிரகாரம், பட்டியல் போட்டு கொடுக்கும் வகையில் ஒரு முறையை ஏற்படுத்த அரசு முன் வருமா? ஏனென்றால் பெர்மிட் பெற்றவர்களே திரும்ப திரும்ப பெற்று வெளியில் விற்றுக் கொண்டிருப்பதினால் தான் கள்ள மார்க்கெட் அதிகமாகிறது. அதை குறைக்கும் வகையில் இத்தகைய நடைமுறையைக் கொண்டு வர அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்? (பதில் இல்லை.)

[முற்பகல் 10–00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : வட்டாட்சி அலுவலகத்திலோ அல்லது ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலோ, வருகிற மனுக்கள் தேவையின் அடிப்படையில் முறையாகப் பரிசீலிக்கப்படுகிறது. அதில் ஏதாவது முறைகேடுகள் இருந்தால், வட்டாட்சி அலுவலகத்திலோ அல்லது ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலோ இருக்கிற அதிகாரிகள், பி.டி.ஓ. அல்லது தாசில்தார் யாராவது தவறு செய்கிறார்கள் என்று சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

### தமிழ்நாடு உப்பு உற்பத்தி நிறுவனம்

*வினா எண். 627—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழ்நாடு உப்பு உற்பத்தி கார்ப்பரேஷன் (Tamil Nadu Salt Corporation Ltd.,) தஞ்சாவூர் ஜில்லா வேதாரண்யம் பகுதியில் சுமார் 6,000 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ரூபாய் 3 இலட்சம் செலவில் உப்பளம் அமைப்பது உண்மையா?

(ஆ) ஆம் என்றால் அதன் பலன் என்ன?

(இ) இத்திட்டத்தில் பண துஷ்பிரயோகம் செய்யப்பட்டது உண்மையா?

(ஈ) ஆம் எனில் அதன் மீது அரசு நடவடிக்கை என்ன?

(உ) மேற்படி கார்ப்பரேஷன் சென்னையில் செயல்படுவதை மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் மரவக்காடு-வடகாடு கிராமங்களில் 5,400 ஏக்கராக்கள் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டப் பகுதியில் தல எல்லை தேறுபாடு குறிப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதில் 4,092.33 ஏக்கர் பரப்பளவு உப்பு உற்பத்திக்குகந்தது என தீர்மானிக்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 120 இலட்சமாகும்.

இத்திட்டத்தில் இதுவரை (பிப்ரவரி 1981) ரூபாய் 5.58 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலமாக 10 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் மற்றும் 300–400 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் Seasonal labourers) அளிக்கப்பட்டு வருகிறது. 1982 ஆம் ஆண்டு முதல் கட்டமாக இத்திட்டத்தில் 10,000 டன் உப்பு உற்பத்தி செய்யப்படும். இத் திட்டம் எல்லா வகையிலும் பூர்த்தியாகும் பொழுது 20,000 டன் உப்பு உற்பத்தி செய்யும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சிப்சம் (Gypsum) போன்ற கனிமங்களும் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டம் முழுமையாக செயல் படுத்தப்பட்டபின் 100 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும், 1,000 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

(இ) இல்லை.

(ஈ) வினா எழவில்லை.

(உ) நிர்வாக அலுவலகத்தை சென்னையிலிருந்து மாற்றும் திட்டம் இல்லை.

[1981 ஏப்ரல் 3

திரு. மெ. ஆண்டி அம்பலம் : வேதாரண்யம் பகுதியில் இந்த கார்ப்பரேஷன் ஆறாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் உப்பளம் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். அது இலாபத்தில் ஓடுகிறதா? நஷ்டத்தில் ஓடுகிறதா? சென்னையில் உள்ள அந்தக் கார்ப்பரேஷனை வேதாரண்யம் பகுதிக்கு மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : சென்னையில் இருக்கிற அந்த கார்ப்பரேஷன் தலைமை அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் அரசுக்கு இல்லை. 1981-இல்தான் உற்பத்தி துவங்கப்பட இருக்கிறது. இப்போது ஆரம்ப வேலைகள்தான் நடந்துகொண்டிருக்கின்றன. இதுவரை ஐந்து இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதில் முழுமையாக செலவு செய்யப்படுகிற பணம் 120 இலட்சமாகும். இத்திட்டத்தில் ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு 10,000 டன் உப்பு உற்பத்தி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பூர்த்தி செய்யப்படுகிறபோது 1,20,000 டன் அளவுக்கு உப்பு உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி : சென்னையில் இருக்கிற இதன் தலைமை அலுவலகத்தை இராமநாதபுரத்திற்கு மாற்ற வேண்டும் என்று போர்ட் ஆப் டயரக்டர்ஸ் மீட்டிங்கில் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம அரசுக்கு இல்லை என்று அமைச்சர் சொல்லிவிட்டார்.

திரு. து. புருஷோத்தமன் : நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது... (இ) பிரிவிற்கு பதில் அளிக்கும்போது—" இல்லை " என்று சொன்னார்கள். ஆடிட் ரிப்போர்ட் என்னிடம் இருக்கிறது. அதில்,

"The Company has been incurring losses since inception and the accumulated losses up to 31st December 1978 work out to Rs. 18·08 lakhs, representing 40 per cent of their paid-up capital."

என்று சொல்லியிருக்கிறார்கள். 1977-இல் முதன்முதலாக இந்த உப்பு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அதில் ஒரு டன் உப்பு உற்பத்தி செய்வதற்கு எஸ்டிமேட்டட் காஸ்ட் ரூபாய் 36 என்று கணக்கிடப்பட்டுள்ளது. முதன் முதலாக 1977-இல் 3,400 டன் உப்பு உற்பத்தி செய்ய டன் ஒன்றுக்கு ரூபாய் 232 உற்பத்திச் செலவு ஆகியிருக்கிறது.

உற்பத்திச் செலவு எஸ்டிமேட் 36 ரூபாய் என்று.........



981 ஏப்ரல் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி என்ன என்ப துச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அவர் ஒரு கார்ப்பரேஷன் அறிக்கை ய வாசித்துக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் வர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நஷ்டத்திற்கும், கையாடலுக்கும் வித்தியாசம் இருக்கிறது. பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தி ருகாத காரணத்தினால், நஷ்டம் இருக்கிறது. கையாடல் என் து வேறு; நஷ்டம் என்பது வேறு. அதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பணம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கும், நஷ்டத்திற்கும வித்தியாசம் இருக்கிறதென்று சொல்லிவிட்டார்கள். இப்போதுதான் கேள்வி கேட்டீர்கள். உட்காருங்கள்.

THIRU DURAI MURUGAN : The hon. Member is pleading that the answer is inadequate.

MR. SPEAKER : The hon. Member may bring the matter in another form.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம உப்பு என்று சொன்னாலே, வேதரத்தினம் பிள்ளை அவர்களின் நினைவுதான் வரும். 51 ஆண்டுகளுக்கு முன்பு இதே மாதம், ஏப்ரல் மாதத்தில்தான் இராஜாஜி அவர்கள் தலைமையில் உப்பு சத்தியாக்கிரகம் செய்வதற்கு சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் உயிர்நாடியாக இருந்தார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குமரி அனந்தன் அவர்களே, இது வரலாறு நேரமில்லை; கேள்வி நேரம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சர்தார் வேதரத்தினம் அவர்களின் பெயர் வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்? வேதாரண்யம் என்றாலே சர்தார் வேதரத்தினம் என்று வருகின்ற அளவிற்கு இருப்பதால், தேசியத்தை மதிக்க, தேசியவாதிகளை மதிக்க இந்த அரசு தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்? ஏனென்றால்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேசியத்தை மதிப்பதற்கும், உப்புக்கும் என்ன சம்பந்தம்? அப்படியென்றால் உப்புக்கு வரியை எடுத்திருக்க வேண்டும்; எடுக்கவில்லை. அது வேறு

திரு. மெ. ஆண்டிஅம்பலம் : வேதாரண்யம் பகுதியில் இந்த கார்ப்பரேஷன் ஆறாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் உப்பளம் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். அது இலாபத்தில் ஓடுகிறதா? நஷ்டத்தில் ஓடுகிறதா? சென்னையில் உள்ள அந்தக் கார்ப்பரேஷனை வேதாரணயம் பகுதிக்கு மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : சென்னையில் இருக்கிற அந்த கார்ப்பரேஷன் தலைமை அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம அரசுக்கு இல்லை. 1981-இல்தான் உற்பத்தி துவங்கப்பட இருக்கிறது. இப்போது ஆரம்ப வேலைகள்தான் நடந்துகொண்டிருக்கின்றன. இதுவரை ஐந்து இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதில் முழுமையாக செலவு செய்யப்படுகிற பணம் 120 இலட்சமாகும். இத்திட்டத்தில் ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு 10,000 டன் உப்பு உற்பத்தி இருக்கும என்று எதிர்பார்க்கப்படுகிறது. பூர்த்தி செய்யப்படுகிறபோது 1,20,000 டன் அளவுக்கு உப்பு உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி : சென்னையில் இருக்கிற இதன் தலைமை அலுவலகத்தை இராமநாதபுரத்திற்கு மாற்ற வேண்டும் என்று போர்ட் ஆப் டயரக்டர்ஸ் மீட்டிங்கில் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம அரசுக்கு இல்லை என்று அமைச்சர் சொல்லி விட்டார்.

திரு. து. புருஷோத்தமன் : நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது...(இ) பிரிவிற்கு பதில் அளிக்கும்போது—'' இல்லை '' என்று சொன்னார்கள். ஆடிட் ரிப்போர்ட் என்னிடம் இருக்கிறது. அதில்,

"The Company has been incurring losses since inception and the accumulated losses up to 31st December 1978 work out to Rs. 18·08 lakhs, representing 40 per cent of their paid-up capital."

என்று சொல்லியிருக்கிறார்கள். 1977-இல் முதன்முதலாக இந்த உப்பு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அதில் ஒரு டன் உப்பு உற்பத்தி செய்வதற்கு எஸ்டிமேட்டட் காஸ்ட் ரூபாய் 36 என்று கணக்கிடப்பட்டுள்ளது. முதன் முதலாக 1977-இல் 3,400 டன் உப்பு உற்பத்தி செய்ய டன் ஒன்றுக்கு ரூபாய் 232 உற்பத்திச் செலவு ஆகியிருக்கிறது.

உற்பத்திச் செலவு எஸ்டிமேட் 36 ரூபாய் என்று.........



மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி என்ன என்பதைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஒரு கார்ப்பரேஷன் அறிக்கையை வாசித்துக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நஷ்டத்திற்கும், கையாடலுக்கும் வித்தியாசம் இருக்கிறது. பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தி ஆகாத காரணத்தினால், நஷ்டம் இருக்கிறது. கையாடல் என்பது வேறு; நஷ்டம் என்பது வேறு. அதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பணம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கும், நஷ்டத்திற்கும வித்தியாசம் இருக்கிறதென்று சொல்லிவிட்டார்கள். இப்போதுதான் கேள்வி கேட்டீர்கள். உட்காருங்கள்.

THIRU DURAI MURUGAN : The hon. Member is pleading that the answer is inadequate.

MR. SPEAKER : The hon. Member may bring the matter in another form.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம உப்பு என்று சொன்னாலே, வேதரத்தினம் பிள்ளை அவர்களின் நினைவுதான் வரும். 51 ஆண்டுகளுக்கு முன்பு இதே மாதம், ஏப்ரல் மாதத்தில்தான் இராஜாஜி அவர்கள் தலைமையில் உப்பு சத்தியாக்கிரகம செய்வதற்கு சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் உயிர்நாடியாக இருந்தார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குமரி அனந்தன் அவர்களே, இது வரலாறு நேரமில்லை; கேள்வி நேரம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சர்தார் வேதரத்தினம் அவர்களின் பெயர் வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்? வேதாரண்யம் என்றாலே சர்தார் வேதரத்தினம் என்று வருகின்ற அளவிற்கு இருப்பதால், தேசியத்தை மதிக்க, தேசியவாதிகளை மதிக்க இந்த அரசு தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்? ஏனென்றால்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேசியத்தை மதிப்பதற்கும், உப்புக்கும் என்ன சம்பந்தம்? அப்படியென்றால் உப்புக்கு வரியை எடுத்திருக்க வேண்டும்; எடுக்கவில்லை. அது வேறு

விஷயம். அந்த விவகாரத்திற்குள் போக வேண்டாம். உங்களுடைய உணர்வுகளை மதிக்கிறேன். இப்போது தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுமையாக தேசியவாதிகள் என்று சொல்லக்கூடியவர்கள் செய்ததைவிட, புரட்சித் தலைவர் அவர்கள் தேசியவாதிகளை மதித்து, இதுபோன்ற விழாக்கள் எல்லாம்.. ......(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொழில் அமைச்சர் அவர்களை தேசியத்தைப் பற்றிக் கேட்டால், இப்படியெல்லாம் தான் பதில் வரும். தொழிலைப் பற்றி மட்டும் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தேசியவாதிகளை இந்த அரசு மதிக்கிறது. இன்னும் கேட்டால், புரட்சித் தலைவர் அவர்கள் அரசு தேசியவாதிகளை மிகவும் மதிக்கிறது. அதனால்தான், பல தேசியவாதிகளுக்காக இந்த அரசு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டதற்கு பின்னால், இவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு மாவட்டத்திலும் விழாக்களை நடத்திக் கொண்டிருக்கிறது. சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் பெயர் பற்றிச் சொன்னது, நல்ல யோசனை.

*Employment Opportunities abrood*

*Q. No. 628—THIRU N. KITTAPPA, THIRU V. SATHIAMOORTHY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) Whether the Government have set up any Employment Office to find placements abroad; to job - seekers from this State and

(*b*) If so, the details thereof?

மாண்புமிகு. திரு. எம். விஜயசாரதி: (அ) ஆம்.

(ஆ) மேற்குறித்த குறிக்கோளினைப் பின்பற்றுவதற்கென மாநில அரசு, அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், சென்னை என்னும் பெயரில் ஓர் அமைப்பினை நிறுவியுள்ளது. அது முழுதும் தனியார்க்குரிய நிறுவனமாக 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் அன்று இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது.





திரு. வ. சத்தியமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்று வேலை வாங்கித் தருவதாக பல கிராம ஏழைத் தொழிலாளர்களை பல கும்பல்கள் மோசடி செய்து வருகின்றன. அதைத் தடுக்கும் முறையில், இத்தகைய வெளி நாடுகளுக்கு வேலை வாங்கித் தரும் நிறுவனம் மூலமாகத் தான் அழைத்துச் செல்லவேண்டும் என்ற அளவிலே ஒரு சட்டத்தை இயற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10·10]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தை இயற்றுவது என்பது இயலாத காரியம். இதில் என்ன நடவடிக்கை எடுக்கமுடியுமோ, அது குறித்து இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. வ. சத்தியமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே. இது முடியாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியுள்ளார்கள். இன்றையதினம் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், ஒப்பிலான், ஆப்பனூர் போன்ற கிராமங்களில் உள்ளவர்கள். நூற்றுக்கு மேற்பட்டவர்கள் தலா பத்தாயிரம் வீதம் இந்த அநாமதேய நபர்களிடம் கொடுத்து ஏமாற்றம் அடைந்துள்ளார்கள். இந்நிலையில் இதைப் போக்கும் வகையில் சட்டம் கொண்டு வருவது அவசியம் என்பதை அரசு இனி மேலாவது உணர்ந்து வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று அவர்களுடைய தொகுதியினைச் சேர்ந்த ஏழைகள் பணத்தைக் கொடுத்து ஏமாந்திருப்பது, முழுவதும் தனியார்கள் நிறுவனங்களிடம் கொடுத்து ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். அதை உணர்ந்துதான் அரசு, மத்திய அரசோடு கலந்தாலோசித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, வெளி நாடுகளுக்கு வேலைவாய்ப்பிற்காகச் செல்லக்கூடியவர்களுக்கு சரியான பாதுகாப்பு தரவும், வேலை வாய்ப்பை தேடித் தரவும் 'ஓவர்சீஸ் எம்ப்ளாய்மென்ட்' என்று இந்த அரசால் ஆரம்பிக்கப்பட்டிருக்கப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அப்படிப் பட்ட அமைப்பு இருக்கிறதா? இயங்குகிறதா? அதில் யார் பணியாற்றுகின்றார்கள்? அவர்களுக்கு சம்பளம் உண்டா? அப்படியில்லை என்றால் அது எதற்கு? இதுபோன்ற விவரங்களை தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்திற்கு 6–7–1979 முதல் ஒரு முழு நேர நிர்வாக இயக்குநர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதனுடைய மொத்த மூலதனம் 50 இலட்சம் ரூபாய். தற்போது 10 இலட்சம் ரூபாய் இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிறுவனத்தைப் பொறுத்தவரையில் ஒரு நிர்வாக இயக்குநர், இரண்டு உதவி மேலாளர்கள், ஒரு உதவியாளர், ஒரு சுருக்கெழுத்தாளர், ஒரு தட்டச்சர், மூன்று அடிப்படை ஊழியர்கள், ஒரு ஓட்டுநர், ஒரு காவலர் ஆகியவர்களுடன் இந்த நிறுவனம் இயங்கி வருகிறது. இந்த நிறுவனத்தைப் பொறுத்த வரையில் ஒரு 'ஆட்படை ஊற்றுப் புள்ளி விவர' வங்கியை பராமரித்து வருகிறது, 'மேன் பவர் டேட்டா பாங்க்'. இந்த வங்கியில் இதுவரையில் 28–2–1981 முடிய 2903 நபர்கள் பதிவு செய்துள்ளனர்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி நாடுகளில் வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி ஏமாற்றுகின்ற தனியார்கள் பற்றி இங்கே கூறிப் பிட்டார்கள். அப்படி தனியார்கள் ஏமாற்றுகின்ற ஒரு காரணமே முறையாக இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிற நிறுவனத்தைப் பற்றி விளம்பரம் செய்யப்படவில்லை என்பதுதான். குறிப்பாக கிராமப்புறங்களில் இருக்கிற பலரும் பயன்பெறுகின்ற அளவிற்கு தென் மாவட்டங்களில் இப்படி வேலை வாய்ப்பு நிறுவனங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுந்த விளம்பரம் இல்லை என்று சொன்னார்கள். அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் தென் மாவட்டங்களில் தனியாக அமைப்பதற்கு அரசுக்கு— உத்தேசம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே நிலவுகின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தை பயன் படுத்தி அரபு நாடுகளில் வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில், இளைஞர்களிடம் ரூபாய்கள் வசூலிக்கப்பட்டு பின்னர் பல மோசடிகள் நடந்து வருகின்றன. எதிர்காலத்திலாவது இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் இருப்பதற்கு தவறான நிறுவனங்களின் மீது எடுக்கின்ற நடவடிக்கைகளைக் கடுமையாக எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பதில் சொல்கின்றபொழுது சொல்லியது போல, மத்திய அரசிடம் இது குறித்து கலந்து ஆலோசித்து [illegible] நடவடிக்கை எடுக்கப்படும்,



திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வெளி நாடுகளில் வேலை தேடித் தருகின்ற நிறு
வனத்தில் ஏறத்தாழ இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள்
பதிவு செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதுவரை
யில் வெளிநாடுகளில் எத்தனை பேர்களுக்கு இந்த நிறுவனம்
வேலை வாங்கித்தந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர்
அவர்களே, 1979ஆம் ஆண்டு செப்டம்பரில் முதலிலே 19
பேர்களை ஐக்கிய அரபுக் குடியரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறது.
1979ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 17 பேர்களில்
அபுதாபிக்கு அனுப்பி வைத்திருக்கிறது. 1981 ஜனவரி,
பிப்ரவரி மாதங்களில் 70 பேர்களை ஈராக் நாட்டிற்கு அனுப்பி
வைத்திருக்கிறது. ஆக மொத்தம் 106 பேர்களை இதுவரையில்
அனுப்பிவைத்திருக்கிறோம். அது மட்டுமல்ல, 1981ஆம் ஆண்டு
மார்ச் மாதம் சோத்தத் பில்டர்ஸ் நிறுவனத்தின் மூலம் 102
பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கூடிய
விரைவில் அனுப்பிவைக்கப்படுவார்கள்.

திரு. [illegible] அன்புமுகன் : தலைவர் அவர்களே, வெளிநாடு
களிலே வேலை கிடைப்பதைத் தமிழ்நாட்டு மக்கள் முழு அளவிலே
பயன்படுத்திக்கொள்கிற வாய்ப்புக்களை நல்ல முறையிலே
ஏற்படுத்துவதற்காகவும்— வேறு சில மாநிலங்களிலே அந்த
அந்த மாநிலங்களுடைய மக்களுக்கு வாழ்வு கொடுக்கிற வகை
யிலே அவர்கள் உறுதுணையாக இருக்கிறார்கள்— அதைப்போன்று
வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், பல்வேறு வெளி
நாடுகளுக்கு தனியார்கள் ஏஜென்சி மூலமாக அதிக ஆட்கள்
எடுக்கப்படுகின்ற வாய்ப்பு, சூழ்நிலை இருக்கின்ற காரணத்தி
னாலே அப்படி தனியார்கள் ஆட்கள் எடுப்பதை முறைப்படுத்து
வதற்கு, ஒழுங்குபடுத்துவதற்கு, ரிஜிஸ்டர் செய்து அனுப்பு
வதற்கு ஏற்பாடு செய்கின்ற முறையிலே நடவடிக்கை எடுத்து
தனியார்களும் ஆட்களை எடுத்து அனுப்புகிற வாய்ப்புக் குறைந்து
விடாமல் அது மங்காமல் இருக்கின்ற வகையிலே அரசு அவைகளை
ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான முயற்சிகளிலே ஈடுபடுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தனியார்கள் நடத்து
கின்ற அந்த நிறுவனங்களை முற்றிலும் அகற்றிவிடவேண்டும்
என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. மாண்புமிகு எதிர்க்
கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்
போன்று ஒழுங்குபடுத்த சில மாற்றங்களைச் செய்ய அரசு
முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலம்பாடியிலுள்ள நடுநிலைப்பள்ளி.

*வினா எண் 629—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு
ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா :

S.F. 128-66—6

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டம் ஆலம்பாடியிலுள்ள அரிசன நல இலாகாவால் நடத்தப்படும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றுமாறு அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஜே. எஸ். இராசு :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைச் சேர்ந்த ஆலம்பாடியிலே இயங்குகின்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்க வேண்டுமென்ற கோரிக்கை 1980ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேரடியாகவே தரப்பட்டது. இல்லை என்ற பதிலை அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். எப்படியிருப்பினும், 6ஆவது ஐந்தாண்டுக் திட்டக் காலத்தில் ஆதிதிராவிட நல இலாகாவால் ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் மாற்றுவதற்குத் திட்டம் இருப்பதாக அறிக்கை இருக்கிறது. அந்த வாய்ப்பையாவது பயன்படுத்தி ஆலம்பாடி கிராமத்திலே உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வருகிற ஜூன் மாதத்திலே கல்வியாண்டிலிருந்து கொண்டுவர அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** அந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில் மிக அருகிலேயே பெரம்பலூரிலே ஒரு உயர்நிலைப் பள்ளி இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதை அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. ஜே. எஸ். இராசு :** ஆலம்பாடி கிராமத்திலே கிழக்கே பெரம்பலூர் செல்லவேண்டுமானால் இடையிலே யோனேரி பாளையம் ஆறு இருக்கிறது. மழைக்காலங்களிலே மாணவ மாணவியர்கள் சென்று வர முடியாது. குரும்பலூர் என்ற இடத்திற்குச் செல்லவேண்டுமென்றாலும் அதே ஆறு இடையிலே வருகிற பகுதி இருக்கிறது, ஆகவே மாணவ மாணவியர் மழைக் காலங்களிலே போய் வரமுடியாது. 50 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெறுகிற பள்ளியாக அந்தப் பள்ளியிருப்பதால் நிறைய மாணவர்கள், மாணவியர்கள் அதே கிராமத்தில் இருக்கிறார்கள், இடையிலே ஆறுகள் இருப்பதால் மாணவர்கள் மாணவியர்கள் போகமுடியாத நிலைமையில் சிரமப்படுகிறார்கள். எனவே



தனியாகப் பரிசீலித்து அரசாங்கமே விதிவிலக்கு கொடுத்து உயர்நிலைப் பள்ளி உருவாக்கலாம் என்ற விதி அரசாங்கத்திலே இருக்கிறது. அதைப் பயன்படுத்தி அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எம். விஜயசாரதி :** பேரவைத் தலைவரவர்களே, அரசு இது குறித்துப் பரிசீலிக்கும்.

**காங்கேயத்திலுள்ள அரிசன நல தாசில்தார் அலுவலகத்தை இடம் மாற்றுதல்.**

***வினா எண் 630.**—**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பெருந்துறை பவானி மற்றும் தாராபுரம் வட்டங்களுக்கான அரிசன தாசில்தார் அலுவலகம் காங்கேயத்தில் உள்ளதை அரிசன மக்களின் நலன் கருதி பெருந்துறைக்கு மாற்றும் உத்தேசம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** இல்லை.

[முற்பகல் 10-20]

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலிருந்து பெரியார் மாவட்டம் பிரிக்கப்பட்ட பின் வேலை அதிகமாயிருக்கிறது என்று இந்த அரிசன நலத்துறை அலுவலகம் மாவட்டத்தில் ஒரு ஓரத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, அரிசன நல மக்களின் நலன் கருதி, இது மையமாக இருக்கின்ற பெருந்துறைக்கு மாற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆறு வட்டங்கள் உள்ளன. அங்கே இருக்கின்ற மூன்று தனி வட்டாட்சியர்கள், ஒவ்வொருவருக்கும் இரண்டு இடங்கள் என்ற விகிதத்தில் பிரித்துக் கொடுக்கப்பட்டு, பெருந்துறையையும் தாராபுரத்தையும் ஒரு வட்டாட்சியர் கவனித்து வருகின்றார். அந்த வட்டாட்சியருடைய அலுவலகம் காங்கேயத்தில் இயங்கி வருகிறது. பெருந்துறைக்கும், தாராபுரத்திற்கும் இடையே இருக்கின்ற தூரம் சுமார் 70 கிலோ மீட்டர். ஆனால் தற்போதுள்ள இந்தக் காங்கேயம் பகுதி, பெருந்துறைக்கும் தாராபுரத்திற்கும் மத்தியில் 35 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

ஆகவே, இந்த இடத்திலே அமைந்திருக்கின்ற இந்த அலுவலகத்தினால் இரண்டு வட்டங்களிலேயும் இருக்கின்ற ஆதிதிராவிடப் பெருமக்கள் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு மிகவும் வசதியாக இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போன்று பெருந்துறைக்கு மாற்றினோம் என்று சொன்னால் தாராபுரத்திலே இருக்கின்ற ஆதிதிராவிடப் பெருமக்கள் ஏறத்தாழ 70 கிலோ மீட்டர் பயணம் செய்து அவர்களுடைய குறைகளைச் சொல்ல வேண்டியிருக்கும் என்ற காரணத்தினால் இதைப் பரிசீலப்பதற்கில்லை.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாற்றாகுதற்கு முன் 12 மைல் சென்று ஈரோடு அரிசன நலத் துறை தாசில்தார் அலுவலகத்தில் வேலைபார்க்க வேண்டியிருந்தது. மாற்றப்பட்ட பின் நிலைமை என்னவென்றால் 20 மைல் தூரம் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, பெருந்துறை ஒன்றியத்தையாவது ஈரோட்டுடன் இணைக்கின்ற உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவரவர்களே, அத்தகைய உத்தேசம் இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்னார்கள், அதை மாற்றியது மந்தியில் இருப்பதற்காகவும், அவர்களுடைய சௌகரியத்திற்காகவும் என்று சொன்னார்கள். ஆனால் அவர்களுடைய சௌகரியத்திற்காக வேண்டி ஒரு ஜீப் வசதி கொடுத்தால்தான் நல்ல முறையில் செய்ய முடியும். அங்கே ஜீப் வசதியும் கொடுப்பதில்லை; யூனியன் என்று சொன்னால் அவர்களும் கொடுப்பதில்லை; வெல் பேர் ஆபீஸ் என்றால் ஜில்லாவிற்கு ஒரு ஜீப்தான் இருக்கிறது. அதனால் அவர்களால் சரிவர வேலைகளைச் செய்ய முடியவில்லை. ஆகவே, தமிழ் நாட்டில் ஒட்டுமொத்தமாக அதிகாரிகளை அதிகரிக்க வேண்டும் அல்லது அவர்களுக்கு வாகன வசதிகளையாவது செய்து தரவேண்டுமென்ற எண்ணம் எதிர்காலத்திலாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகன வசதி செய்து தருவதற்கு நிதி வசதி இல்லை. ஆனால், அதிகாரிகளைப் பொறுத்தவரையில் அதிகப்படுத்துவதைக் குறித்து அரசு பரிசீலிக்கும்.

கரூர் அரசினர் மாணவியர் விடுதி.

வினா எண் 631—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



(அ) திருச்சி மாவட்டம் கரூர் அரசினர் மாணவியர் விடுதி தற்போது இயங்கி வரும் இடத்தை காலி செய்ய வேண்டுமென கோர்ட் தீர்ப்பு வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) சென்னை உயர்நீதி மன்றம் கரூரில் உள்ள விடுதியினை 30–4–1981-க்குள் காலி செய்யும்படி தீர்ப்பு அளித்துள்ளது.

(ஆ) சென்னை உயர் நீதி மன்றத்தின் தீர்ப்புப்படி திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூரில் உள்ள அரசு ஆதி திராவிட மாணவியர் இல்லம் ஜவஹர் பசாரில் 578 கதவு எண் உள்ள வேறொரு வாடகை கட்டிடத்திற்கு 16–3–1981 அன்று மாற்றப் பட்டுவிட்டது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது மாற்றப்பட்டுள்ள இந்த மாணவியர் இல்லம் மிகவும் சந்தடியான பசாரில் உள்ள நெருக்கடியான இடத்தில் இருக்கிறது. ஆகவே, அதற்கென்று அரசாங்கம் சொந்தமான இடத்தை வாங்கி, சொந்தமாகவே கட்டிடம் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே என்னுடைய கட்சியின் சார்பாகவும், மற்ற பல கட்சிகள் சார்பாகவும் மதுரை இன்ஜினீயரிங் கல்லூரியில் நடைபெற்ற இரண்டு மாணவர்கள் கொலை பற்றி....

(கூச்சல்—குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுரை என்ஜினியரிங் கல்லூரியில் நடைபெற்ற சம்பவம் குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக இருந்தேன். ஏனென்றால், 30 பேர்கள் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், நிலக்கரி பற்றாக்குறை பற்றி ஒரு பெரிய பிரச்னை பத்திரிகைகளிலே வந்துவிட்டது என்று எல்லாக் கட்சித் தலைவர்களும் குறிப்பிட்டதனால் அதுபற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தை இன்று எடுத்துக் கொள்ள இருக்கிறேன். (குறுக்கீடுகள்) நிலக்கரி இன்றைக்கு வேண்டாமென்றால் நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்—(குறுக்கீடுகள்) இன்று காலையிலே எல்லாக் கட்சித் தலைவர்களும் என்னுடைய அறைக்கு வந்து நிலக்கரி பற்றிய பிரச்சனைக்கு முன்னிடம் தந்து இன்று எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். கட்சித் தலைவர்களின் வேண்டுகோள்படி இன்றைக்கு நிலக்கரி பற்றி எடுத்துக் கொள்ள முடிவு செய்தேன். (குறுக்கீடுகள்) ஒரு நாளைக்கு ஒரு தீர்மானம்தான் எடுத்துக் கொள்ளப் பெறும்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இன்றியமையாத இரண்டு தீர்மானங்களை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும்போது அவை முன்னவர் விதியைத் தளர்த்த வேண்டுமென்ற பிரேரணையை முன்மொழிந்து, அதை இந்த அவை ஏற்றுக்கொள்வது மரபாக இருந்து வருகிறது. அதை அவை முன்னவர் கடைபிடிக்கத் தாங்கள் வழி வகுத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : விதியை இன்று மட்டும் தளர்த்துவதற்கு இந்த அவையினுடைய அனுமதியைத் தாங்கள் கோரலாம், இதையே முன்மாதிரியாகக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இன்றைக்கு இந்த விதியைத் தளர்த்தி இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்களைத் தாங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு மட்டும் என்றால் பரவாயில்லை. (குறுக்கீடு) எனக்கிருக்கிற சிரமத்தை எதிர்க்கட்சித் தலைவர் உணர்ந்து கொள்ள வேண்டும். அந்தப் பக்கம் 4, 5 கட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். அந்த 5 கட்சித் தலைவர்களும் ஒவ்வொரு மானியத்திலும் பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. பேசுவதற்கு நேரம் இல்லை. மானியத்திற்கு 2 நாட்கள் ஒதுக்குகிறோம் என்றாலும் வினாக்கள் விடைகள் முடிந்து விவகாரங்கள் முடிந்து ஒத்தி வைப்புத் தீர்மானம் முடிந்து, கவனஈர்ப்புத் தீர்மானம் முடிந்து, மானியக் கோரிக்கை விவாதத்தை எடுத்துக்கொள்ளும்போது, மணி 11–30 ஆகிவிடுகிறது......



திரு. என். எஸ். வி. சித்தன் : பிற்பகலிலும் அவையை வைத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தயாராக இருக்கிறீர்கள். எல்லாக் கட்சித் தலைவர்களும் தயாராக இல்லை. எப்படி உங்கள் வேண்டுகோளை நான் ஏற்க முடியும் ? எல்லாக் கட்சித் தலைவர்களையும் நீங்கள் வேண்டுமானால் கன்வின்ஸ் பண்ணுங்கள். தினசரி மாலையிலும் பேரவையை வைத்துக் கொள்ள எனக்கு ஆட்சேபணை இல்லை. இரவு 12 மணி வரைக்கும் அல்லது 2 மணி வரைக்கும் நடத்த வேண்டுமென்று சொன்னால் கூட நான் பேரவையை நடத்தத் தயார்., அது வேறு. இருக்கிற சூழ்நிலையிலே என்ன செய்யலாம் என்று யோசனை செய்ய வேண்டும், மானியக் கோரிக்கையிலே பேசும்பொழுது ஒவ்வொரு கட்சித் தலைவரும் எனக்கு நேரம் கொடுக்கவில்லையென்று கோபித்துக் கொள்கிறார்கள். கட்சித் துணைத் தலைவர்களும் எங்களை மதிக்கவில்லையென்று கோபித்துக் கொள்கிறார்கள். பின்னால் இருப்பவர்களும் எங்களை விட்டு விட்டார்களென்று கோபித்துக் கொள்கிறார்கள். கோபித்துக் கொள்கிற உரிமை எல்லோருக்கும் இருக்கிறது, ஆனால் இருக்கிற சூழ்நிலை என்ன ? நேரம் இருந்தால் ஒரு நாளில் இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்வதிலே எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஒரு ஒத்திவைப்பு தீர்மானத்தை எடுத்துக் கொண்டால் கூட 45 நிமிடங்கள் தேவைப்படுகின்றன.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் என்ற அடிப்படையிலே அந்த எண்ணத்தைக்கொண்டு செல்வதை விட, இன்றைய தினம் அரசாங்கத்திற்கு நெருக்கடியான ஒரு சட்டம், மின்சாரத் துறையிலே ஏற்பட்டுவிட்ட காரணத்தாலே அதை ஒரு சிறப்புத் தீர்மானமாகத் தாங்கள் கருத வேண்டும்.

மற்றொன்று, கட்சிகளுக்கு உறுப்பினர் எண்ணிக்கை அடிப்படையிலே நேரங்களைப் பங்கிட்டுத் தருகிற ஒரு முறையை வைத்துக் கொண்டு, அதற்கு மேலே 5 நிமிடம், 10 நிமிடம் சபாநாயகர் அவர்கள் சலுகை காட்டுவது என்ற ஒரு முறைதான் அடிப்படையிலே பின்பற்ற வேண்டியது என்று நான் பலமுறை கேட்டுக் கொண்டிருக்கிறேன். அந்த முறையிலே அந்தப் பங்கீட்டு நேரம் இந்த அவையிலே அறிவிக்கப்பட்டுவிட வேண்டும். பாராளுமன்றத்திலே இருக்கிற முறைபோல், அதற்குமேலே தாங்கள் சலுகை காட்டலாமே தவிர, அடிப்படை நேரத்திலேயே, ஒவ்வொரு முறையும் பங்கிடுகிறபொழுது, ஏதாவது ஒரு காரணத்தாலே, சில கட்சிகள் அதிக நேரம் எடுத்துக்கொள்கிற நிலைமை வளருவது, மொத்தமாக விவாதத்தை நீடிப்பதற்குக் காரணமாக இருக்கிறது. ஆகவேதான் அந்த நேரப் பங்கீட்டை முறைப்படுத்தி அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது இருக்கிற நடைமுறை என்னவென்றால், பெரிய கட்சிகளுக்கு அவரவர்களுக்கு உரிய நேரத்தைக் கொடுத்துவருகிறோம். சிறிய கட்சிகளுக்கும் அவர்களுக்குரிய நேரத்தைக் கொடுத்து திருப்திபடுத்துகிறோம். பெரிய கட்சிகள் தங்கள் நேரத்தைக் கொஞ்சம் விட்டுக் கொடுக்க வேண்டும்—தியாகம் செய்ய வேண்டும் என்றால் பிரச்னை வந்துவிடும். ஆகவே அந்த நிலைக்குப் போகாமல் இருக்கிற நேரத்தைக் கணக்கிட்டு ஓரளவு பங்கிட்டுக் கொடுத்து பிரச்னை எழாமல் அவையை நடத்திச் செல்ல வேண்டியதாக இருக்கிறது. எனவேதான் கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரையும் கூப்பிட்டு, நேற்று அந்த மானியத்திலே அந்தக் கட்சி பேசியது, இந்த மானியத்திலே நீங்கள் பேசுங்கள் என்பதாகக் கேட்டுக் கொண்டு அவர்களைச் சமாதானப்படுத்தி அவையை நடத்திச் செல்கிறோம். அவர்களும் ஒத்துழைப்புத் தந்து வருகிறார்கள். அடுத்து கட்சித் தலைவர்களது வேண்டுகோளுக்கிணங்க, அவசரம் முக்கியத்துவம் கருதி இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்களையும் இன்றைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

### 3. அரசினர் தீர்மானம்.

### விதி 58-ஐத் தளர்த்தல்.

*[முற்பகல் 10–30.]*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" ஒரு நாள் கூட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானம் விவாதிக்கப்பெறலாகாது என்கிற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 58–ஐ இன்று தளர்த்த வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

### 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

(அ) மதுரை தியாகராயா பொறியியல் கல்லூரி மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில் இரு மாணவர்கள் மரணம் அடைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : " மதுரையை அடுத்துள்ள திருப்பரங்குன்றத்தில் தியாகராயா பொறியியல் கல்லூரியின் இரு மாணவர்கள் பிரிவுக்கிடையே மோதல் ஏற்பட்டதன் விளைவாக இரு மாணவர்கள் மரணம் அடைந்துள்ளதால்



கல்லூரியிலே 3, 4 சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அங்கே ஜாதி, இனம் என்ற அடிப்படையிலே கலவரங்கள் நடந்திருக்கின்றன. அப்படி நடக்கின்றபோது, அந்தக் கல்லூரியை நடத்துகின்றவர்களே அதற்கு உறுதுணையாக, தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பின்னணியாக இருக்கிறார்கள் அல்லது உயர்ந்த சமுதாயத்தினருக்கு பின்னணியாக இருக்கிறார்கள் என்ற செய்திகள் எல்லாம் அரசுக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட தேர்தல்கள் கல்லூரியிலே நடத்துவதற்கு அரசு ஒரு வரைமுறை செய்யவேண்டும். பொதுத் தேர்தல்போல் விளம்பரங்கள் செய்கிறார்கள். மிகக் கடுமையான முறையிலே தேர்தலை நடத்துகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிகழ்வினைத் தமிழகத்திலே உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் நிகழாவண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டும். இது மட்டுமல்ல, தமிழகத்திலே குழந்தைகளைப் பெற்று, பண விரயம் செய்து, படிக்க வைக்கக்கூடிய தாய் தந்தையர், இப்படிப் பிணமாக மகனைப் பார்க்கக்கூடிய ஒரு பரிதாப நிலை இருக்கின்றது என்பதை நான் இந்த மன்றத்தின் மூலம் தெரிவித்து, தமிழக அரசு இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது; கட்டாயம் இருக்கிறது. ஆகவே, இந்த முக்கியமான நிகழ்வினைக் குறித்து விவாதிக்க, இன்றையதினம் இந்த மன்றத்தின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் இஞ்சினியரிங் கல்லூரி படுகொலை சம்பந்தமாக சோமசுந்தரம், ஜம்புலிங்கம் ஆகிய இரண்டு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் இறந்தது குறித்து இங்கே ஒத்திவைப்பு தீர்மானம் எங்கள் கட்சியின் சார்பிலே கொடுத்திருந்தோம். அந்தப் பகுதியிலே வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லாதவர்கள், மேல்ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் மாணவர் அமைப்பின் பேராலே கல்லூரியை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து வைத்து, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தேர்தலில் நின்றாலே அவர்களை அடிப்பதும், உதைப்பதும், அப்படி அவர்கள் வெற்றி பெற்றால், கல்லூரியில் எந்தவிதமான நிகழ்ச்சிகளும் நடத்த முடியாமல் தடுப்பது என்கிற வகையிலே ஜாதியின் வெறியினாலே, அந்த வகையிலே இந்தச் சம்பவத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இந்தத் தேர்தலில் வெற்றிபெற்ற தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பேரவைக் கூட்டத்தை நடத்தமுடியாதபடி, அங்கேயிருந்த மேல்ஜாதிக்காரர்கள் தடுத்து நிறுத்தி, கலாட்டா செய்திருக்கிறார்கள். அங்கே போலீஸ் ஸ்டேஷன் பக்கத்திலேயே இருக்கிறது. அப்படியிருந்தும், இந்தப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறது. அங்கே பக்கத்திலே வீடுகள் எதுவும் கிடையாது. அது ஒரு பரந்த வெளிப் பகுதியாக இருக்கிறது. அதே நேரத்திலே போலீஸ் ஸ்டேஷனைத் தாண்டித்தான் கல்லூரிக்கு வரவேண்டும்.

35,40 மாணவர்கள் அந்தபோலீஸ் ஸ்டேஷனைக் கடந்து வந்திரு
கிறார்கள். எப்படி அவர்கள் கவனிக்காமல் போய்விட்டார்க
என்பதை எண்ணிப் பார்க்கவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்
ஒரு வேளை காவல்துறையினர்கூட அக்கறை காட்டாம
போய்விட்டார்களோ என்று ஐயப்படுகிற அளவிற்கு இந்த
சம்பவம் நடைபெற்றிருக்கிறது. பல ஆண்டுகளாக நடைபெ
கிற சம்பவம். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்
கேட்டுக் கொண்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு மா
பிரச்சினையாக, இது போன்ற சம்பவங்கள் இருக்கின்ற
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்கம் இ
ஒரு தனி பாலிசியாகவே எடுத்துக் கொண்டு நிரந்தரமாக ஒ
திட்டம் தீட்டி இதுபோன்ற சாதிக்கலவரங்களை நீக்கவேண்டும்
இதற்குக் காரணமானவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்
வேண்டும். நல்லதொரு திட்டத்தைத் தீட்டவேண்டுமென்
அளவிலே, இதில் படுகொலை செய்யப்பட்ட பிள்ளைகளின்
குடும்பங்களுக்கு 10 ஆயிரம் வீதமாவது ஒவ்வொரு குடும்ப
திற்கும் அரசு கொடுக்க வேண்டும். குடும்பத்தார். பிள்ளை
களிடமிருந்து எவ்வளவோ எதிர்பார்த்திருப்பார்கள்? நான்
சொல்வதே குறைந்த அளவாக இருந்தாலும், அரசாங்கமே
அவர்களின் குடும்பத்தைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க
வேண்டும். இதுபோன்ற பல பிரச்சினைகளைப் பேச இந்த
அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கல்வி அறிவும், அதன் மூலமாக சமுதாய ஒப்புரவும்
மக்களிடையே மலர்ந்து மணம் வீசவேண்டுமென்று நாம்
எதிர்பார்த்துக் கொண்டிருந்தும் அதற்காகப் பணியாற்றியும்
வரும் இந்த நேரத்தில் மதுரை, திருப்பரங்குன்றம் தியாக
ராசர் கல்லூரி விடுதியில் மாணவர்களிடையே ஏற்பட்ட
மோதலில் தூத்துக்குடியைச் சேர்ந்த ஐம்புலிங்கம் என்ற மாண
வரும் எப்போதும்வென்றான் என்ற சிற்றுரைச் சேர்ந்த சோம
சுந்தரம் என்ற மாணவரும், மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்
பிட்டதைப் போல படுகொலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.
கத்தியைத் தீட்டாமல், புத்தியைத் தீட்டவேண்டுமென்று
பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவுரை வழங்கியிருயிருந்தும், அதே
போல் சமுதாயத்தில் எவ்விதமான. வேறுபாடுமின்றி ஒன்று
பட்டு ஒரே சமுதாயமாக தமிழ்த் திருநாடு விளங்கவேண்டுமென்று
தந்தை பெரியார் அவர்களும், பல்வேறு தலைவர்களும் சிறப்
பான பணிகளை ஆற்றினார்கள் என்றாலும் கூட இன்றைக்கு
இத்தகைய துன்பகரமான படுகொலை நிகழ்ச்சி அதுவும்
கல்விக்கூடத்தில் நடைபெறுகிறது என்றால் நாம் நிச்சயமாக
ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய கட்டத்திற்கு வந்து இருக்கிறோம்
என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



கல்லூரிகளில் தேர்தல் காரணமாகவோ அல்லது மாண்புமிகு உறுப்
பினர்கள் குறிப்பிட்டதைப் போல ஜாதி வேறுபாடு காரண
மாகவோ இப்படிப்பட்ட கலவரங்கள் நிகழ்வதை நாம் நிச்சய
மாகத் தடுக்க வேண்டும். ஐம்புலிங்கம், சோமசுந்தரம், ஆகிய
இருவரைத் தவிர, ஜெயபால், தங்கராஜ், ஆறுமுகம் என்ற
மாணவர்கள் உயிர் ஊசலாடுகின்ற நிலையில் மருத்துவ மனை
யில் இருக்கின்றார்கள். இது தொடர்பாக 50 மாணவர்கள்
மேல் வழக்கு தொடரப்பட்டு ஆய்விலே இருப்பதாக நமக்குத்
தகவல் தெரிகிறது. நான் இந்த செய்தியைச் சொல்வதற்கு
வருத்தப்படுகிறேன். சமீப காலமாக சட்டம் ஒழுங்குப் பிரச்
சினை தமிழ்நாட்டிலே மிகவும் கெட்டிருக்கிற அடையாளமாக
இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள், கல்விக்கூடத்தில் கொலைகள் நடக்
கின்றன. நான் குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.
இது தொடர்பாக அல்ல, நினைவுபடுத்த இன்னொன்று—
ஒரு பத்து, பதினைந்து நாட்கள் முன் திருச்சி எஸ்.ஆர்.சி.
கல்லூரியிலே ஒரு மாணவி, இரண்டாம் வருடம் பட்டப்படிப்பு
படித்து வந்த மாணவி விடுதி அறையிலே கொலை செய்யப்பட்ட
தாகச் சொல்லப்படுகிறது. அரசாங்கத்திற்கு செய்தி வந்ததா
என்று தெரியவில்லை. திருச்சி மாவட்டத்திலேயே பெரிய
செய்தியாக, சோகமான செய்தியாக மக்களாலே பேசப்பட்டு வருகி
றது. அதேபோல முதலமைச்சர் அவர்கள் அறையைத்தாக்கக்
கூடிய அளவிற்குப் பாதுகாப்பு நிலைமைகள் கெட்டு இருப்பதால்,
சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை கவனிக்கவேண்டும். இப்படிப்
பட்ட சூழ்நிலை இன்றைக்கு உருவாகிக்கொண்டிருக்கிறது. குன்
றின் மீது இட்ட விளக்காக விளங்குவார்கள் என எதிர்
பார்க்கப்பட்ட இரு தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கொலை
செய்யப்பட்டுள்ளார்கள். பொறியியல் கல்லூரியிலே படித்து
விட்டு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை உயர்த்துவதற்கு, அவர்
களுடைய குடும்பத்தை உயர்த்துவதற்கு உதவி புரிபவர்களாக
இருக்க வேண்டுமென்றும், நம்முடைய எதிர்காலத்தில் ஒளி
மயமாக இருப்பார்கள் என்று அந்தப் பெற்றோர்கள் எண்ணி
யிருப்பார்கள். இப்போது வாடிக்கொண்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 11-00]

இதிலே ஜாதிப் பிரச்சினை இருப்பதாகக்கூட பரவலாகப்
பேசப்படுகிறது. அது உண்மையாக இருக்குமானால் நிச்சய
மாக அதைத் தடுப்பதற்கும் அத்தகைய உணர்வுகள் பரவாமல்
இருக்கச் செய்வதற்கும் அரசும் நிர்வாகமும் முயலவேண்டும்.
அக்டோபரிலே நடைபெற்ற அந்தத் தேர்தல் சமயத்திலே
அதற்கு ஒரு நல்ல முடிவு ஏற்பட்டிருக்குமானால்—அதை அப்
போதே முடித்து வைப்பதற்கு கல்லூரி நிர்வாகம் முயன்றிருக்க
வேண்டும். சில மாதங்களாகவே புகைந்துகொண்டிருக்கின்ற
நிலைமையை போக்க ஏன் நிர்வாகம் முயலவில்லை என்பதை
ஆராய்ந்து பார்க்கக் கடமைப்பட்டு இருக்கிறோம். உள்ளபடியே
மாணவர்கள் மட்டுமே கலவரத்தில் ஈடுபட்டு அத்தகைய

செயல்களுக்கு ஆளானார்களா அல்லது வேறு பலர், வெளியார்கள், குண்டர்கள், சமூக விரோதிகள் தலையிட்டார்களா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று. கல்லூரித் தேர்தல் ஒழுங்குப்படுத்தப்படுவதற்கு நல்ல வழிமுறைகளைக் கண்டு அறிந்து தமிழகத்திலே எதிர்காலத்திலே செம்மைப்படுத்தப்பட நல்ல நிலைமையை உருவாக்கவேண்டும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அதைப்பற்றி நாம் விரிவாக விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, கடந்த மார்ச் 31-ஆம் தேதி மதுரையிலே தியாகராசா பொறியியல் கல்லூரியில் இரண்டு மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதும், 3 மாணவர்கள் படுகாயங்கள் அடைகின்ற அளவுக்கு தாக்கப்பட்டிருப்பதும் தமிழகத்தை உலுக்குகின்ற செய்தியாக இருப்பது மட்டுமல்ல, தமிழக வரலாற்றில் இப்போது மாணவர்கள் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்படுவதும், இப்படி படுகாயப்படுத்தப்புடுவதும் இதுதான் முதல்முறை என்று எண்ணத்தக்க அளவுக்கு மிகப் பயங்கரமாக நடைபெற்றிருக்கிறது. இது ஏறத்தாழ 6 மாதங்கள் புகைந்துகொண்டிருந்த போதும் அது வெடித்துக் கிளம்பி இதுபோன்ற சூழ்நிலைகள் உருவாகாமல் கல்லூரி நிர்வாகம் தக்க காலத்திலே நடவடிக்கை எடுத்திருக்குமானால் இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்காமல் இருந்த கல்லூரி நிர்வாகம் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. இன்றைக்கு தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கின்றபோது, திண்டாமை இருக்கக்கூடாது என்று பேசிக்கொண்டிருக்கின்றபோது. கல்லூரிகளிலே இளைஞர்கள் சமுதாயத்திலே மாணவர்கள் சமுதாயத்திலே தீண்டாமைக் கொடுமைகள் இருந்து கொண்டு இருப்பதோடு மட்டுமல்லாமல் வேரூன்றி வளர்ந்து கொண்டு இருப்பதும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று, தடுத்து நிறுத்தப்பட வேண்டிய ஒன்று. குறிப்பாக இன்னொரு மதுரைக் கல்லூரியில் ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தேர்தலில் வெற்றி பெற்று வந்துவிட்டார்கள் என்ற காரணத்திற்காக அவர்களால் அந்த யூனியனுடைய நிகழ்ச்சிகளே நடத்தப்பட முடியாமல் செய்திருக்கிறார்கள். ஸ்போர்ட்ஸ் பீல்ட், விளையாட்டுத் துறையிலே இரண்டு தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மிகுந்த அளவுக்கு ஈடுபட்டு அவர்கள் வெற்றி பெற்றுவிடுவார்கள் என்பதற்காக அவர்கள் போட்டிகளிலே கலந்துகொள்ள முடியாத அளவுக்கு தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பள்ளித் தலங்கள் அனைத்தும் வன்முறைக்கு வித்திடுகின்ற இடங்களாக மாறிவிட்டன என்ற நிலைமை வருத்தத்திற்கு உரியதாகும். இதற்கு முற்றுப்புள்ளிவைத்தாக வேண்டும், இதைத் தடுத்தாக வேண்டும் கல்லூரி நிர்வாகமும் மாணவர்கள் அமைப்பும் செயல்படவேண்டிய



முறைகள் வகுக்கப்பட்டு அவைகள் தெளிந்த நீரோடை போல் செயல்படக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுப்பது அவசியமாகிறது. ஆகவே இதுபோன்ற காரியங்களை நாம் விவாதிப்பதற்காக இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. எல். இளையபெருமாள் : இராமநாதபுரம் ஜில்லாவிலே அழகப்பா எஞ்சினியரிங் கல்லூரியில் உள்ள நிலைமை பற்றி நான் கொடுத்து இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இதிலே வராது.

திரு. எல். இளையபெருமாள் : எப்போது அதை எடுத்துக் கொள்ள போகிறீர்கள்? பெர்மிஷன் கொடுத்தால் இப்போதே நான் பேசி விடுகிறேன். இதே நிலைமைகள் அங்கேயும் உருவாகும். அமைச்சர் அவர்கள் அங்கே சென்றிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து தகுந்த பதில் கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்கள் கட்சியிலேயிருந்து தாங்களே பேசியிருக்கலாம். இன்னொருவரைப் பேசச் சொல்லிவிட்டு சீனியர் என்ற உரிமையிலே பேச ஆரம்பித்தால் நல்லதல்ல.

திரு. எல். இளையபெருமாள் : சேர் ரூலிங் கொடுத்தால் எனக்கு அதிலே ஆட்சேபணையில்லை. அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதால் சொல்கிறேன். அங்கே இதுபோன்ற நிலைமைகள் இருக்கின்றன. அதற்குக் காரணம் அரசு என்பதை யாரும் மறந்துவிட வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வாறு எழுப்புவது முறையாக இருக்காது. வேறொரு முறை காரைக்குடி பற்றி இன்னொன்றைக் கொண்டு வரலாம். அவர்களுடைய உணர்ச்சிகளை நான் புரிந்து கொள்கிறேன். ஒவ்வொன்றும் உணர்ச்சியாகத்தான் வரும். இந்த வயதிலே உணர்ச்சிவசப்படக் கூடாது.

திரு. எல். இளையபெருமாள் : உணர்ச்சி வசப்படவில்லை. நாடு பூராவும் நடக்கிறது. அதைச் சொல்வதற்குப் பர்மிட் செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பர்மிட் செய்வது என்பது அல்ல பிரச்னை. ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் சில வரைமுறைகளை கடைபிடித்தாக வேண்டும்.

திரு. எல். இளையபெருமாள் : இதிலே நீங்கள் மென்ஷன் செய்திருக்கிறீர்கள்; படித்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருப்பரங்குன்றத்தில் தியாகராயர் பொறியியல் கல்லூரியின் இரு மாணவர்கள் பிரிவுக்கிடையே மோதல் என்பதுதான், 30 பேர் கொடுத்திருக்கிறார்கள்; திரு. இளையபெருமாள் மட்டும் அல்ல, அழகப்பா எஞ்ஜினீயரிங் கல்லூரி பற்றி உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசியபொழுது சொல்லிப் பேசச் சொல்லியிருக்கலாம்.

THIRU L. ELAYAPERUMAL : I leave it to the Chair to decide. I do not want to argue. But this is injustice . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கட்சிக்கு ஒருவரை நாம் அனுமதிக்கலாம்.

திரு ரா. உமாநாத் : நீங்கள் சொல்வது கரெக்ட். கட்சிக்கு ஒருவருக்கு அந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறபொழுது அந்தக் கட்சியிலே பேசியவர்களிடம் கொடுத்துப் பேசச் சொல்லியிருக்க வேண்டுமென்று சொன்ன கருத்து சரியானதுதான். ஆனால் நீங்கள் இண்ட்ரொட்யூஸ் செய்கிறபொழுதே இந்த சப்ஜெக்ட்டோடு அவர் சொல்லியிருக்கக் கூடிய காரைக்குடி கல்லூரியும் உண்டு என்று அனவன்ஸ் பண்ணி இருப்பதினாலே அமைச்சரவர்கள் பதில் கூறுகிறபொழுது அதையும் கவர் பண்ணிக் கூற வேண்டும் என்பதுதான் பாயிண்ட்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரி இறுதியாண்டு மாணவர்களுக்குப் பிரிவுபசார விழா நடத்துவது குறித்து, அக்கல்லூரியின் இரு பிரிவு மாணவர்களிடையே கருத்து வேறுபாடு 28—3—1981 முதல் இருந்திருக்கிறது. 30—3—1981 அன்று காலை, கல்லூரி முதல்வரிடம் ஒரு பிரிவு மாணவர்கள் சென்று, தங்களை மற்றொரு பிரிவு மாணவர்கள் அச்சுறுத்துவதாகப் புகார் செய்தனர். இதனால் கல்லூரி முதல்வர் மற்றொரு பிரிவினரை அழைத்து, கல்லூரி விடுதியிலிருந்து நீக்கிவிட்டார்கள். நீக்கப்பட்டவர்கள் விடுதிக்கு அடிக்கடி வருதல் கூடாது என அறிவுறுத்தியுள்ளார். 30—3—1981லிருந்து, இரு பிரிவினருக்குமிடையே பதட்ட நிலை ஏற்பட்டு, மாணவர்களில் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரைத் தாக்க ஆரம்பித்துள்ளனர். இந்தக் கலவரத்தில் கல்லூரியின் பேரவைச் செயலர் திரு. ஜம்புலிங்கம் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டார். திரு. ஜம்புலிங்கம், உடனடி சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆயினும், தீவிர சிகிச்சையளித்தும் பயனின்றி, திரு. ஜம்புலிங்கம் 31—3—1981 அன்று காலை இறந்து விட்டார்.



இதே கலவரத்தினிடையே திரு. சோமசுந்தரம் என்ற மூன்றாம் ஆண்டு மாணவரும் தாக்கப்பட்டு அவ்விடத்திலேயே மரணம் அடைந்தார். மரணம் அடைந்த மாணவரான திரு. சோமசுந்தரத்தின் உடலும் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மேற்கண்ட கலவரத்தில் காயமுற்ற மூன்று மாணவர்கள், புற நோயாளிகளாகச் சிகிச்சை பெற்றனர். குத்தப்பட்ட மற்றொரு மாணவரான திரு. ஜெயபால் என்பவர், உள்நோயாளியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார். மேற்கண்ட சம்பவம் குறித்து, இதுவரை 29 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். திருப்பரங்குன்றம் காவல் நிலையக் குற்ற எண் 65/81-ல், இந்தியத் தண்டனைச் சட்டம் 147, 148, 323, 324, 302 மற்றும் 307 ஆகிய பிரிவுகளின் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சி பற்றிய விசாரணையை மதுரை மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் (தெற்கு) தன்னுடைய நேரடி மேற்பார்வையில் மேற் கொண்டு குற்றவாளிகளைப் பிடிக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

[முற்பகல் 11-10].

இரு பிரிவு மாணவர்களிடமும் தீவிர விசாரணையை மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் நேரடியாக மேற்கொண்டுள்ளார். மேலும், காவல் துறையைச் சேர்ந்த மோப்ப நாயும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தியாகராசர் பொறியியற் கல்லூரி மற்றும் விடுதி ஆகியவை காலவரையன்றி மூடப்பட்டுள்ளதாகக் கல்லூரியின் முதல்வர் அறிவித்துள்ளார். தியாகராசர் பொறியியற் கல்லூரிப் பகுதியிலும் மதுரை இராஜாஜி மருத்துவமனைப் பகுதிகளிலும் மற்றும் நகரின் முக்கியமான இடங்களிலும் தகுந்த காவல் துறை பந்தோபஸ்து போடப்பட்டிருக்கிறது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மாணவர்களைக் கொலை செய்த நபர்களை ஆதாரத்தோடு பிடிக்கும் முயற்சியில் காவல் துறையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். மேலும், மதுரை மாவட்ட துணை ஆட்சித் தலைவர் நிலைமையைத் தீவிரமாகக் கண்காணித்து வருகிறார்.

இந்தக் கலவரம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தெரிவித்த உணர்வுகளோடு அரசின் சார்பிலேயும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலேயும் நானும் என்னுடைய உணர்வுகளைத் தெரிவித்து அந்தச் சம்பவங்களை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

29-ஆம் தேதி மதுரை அமெரிக்கன் கல்லூரி நூற்றாண்டு விழாவிலே கலந்துகொள்ளச் சென்றிருந்த நான் அன்றைக்குக் காலையிலே, மதுரையிலே, பத்திரிகையிலே பார்க்கிறபொழுது, தியாகராசர் பொறியியற் கல்லூரியிலே மாணவர்கள் இரு பிரிவாகப்பிரிந்து அடித்துக் கொண்டார்கள். கல்லூரி மூடப் பட்டது என்கிற சூழ்நிலை மதுரைக் கல்லூரியிலே, அதை போல் வேலூர் அரசினர் கலைக் கல்லூரியில் மாணவர்கள் இரு பிரிவாகப் பிரிந்து அடித்துக் கொண்டதன் காரணமாக அந்தக் கல்லூரியும் மூடப்பட்டது என்கிற செய்தியினைப் பார்த்தேன். அந்தச் சம்பவங்களை அடிப்படையாக வைத்துதான் கடந்த இரண்டு ஆண்டுகாலமாக, கல்லூரிகளிலே, மாணவர்கள் மத்தியிலே இருந்து வருகிற ஒரு விதமான கண்டிக்கத்தக்க, விரும்பத் தகாத ஒரு போக்கினை அந்த விழாவின் மூலமாக மக்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய கடமையை நான் செய்தேன். அத்தகைய நிலைமைகளை அரசு கவனித்து வருகிறது என்பதை யும் அதை அரசு விரும்பவில்லையென்பதையும், அரசு அத்த கைய நிலைமைகளைக் கண்டித்து தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதையும் நான் அந்த விழாவின் மூலமாகச் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இதற்கெல்லாம் அடிப்படை காரணம், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்ததைப் போல, ஆண்டுதோறும் நடை பெறுகிற பேரவைத் தேர்தல்தான். பேரவைத் தேர்தலும், பேரவைத் தேர்தல் மூலமாக மாணவர் தலைவரும், செயலா ளரும் வேண்டுமென்று நாம் விரும்புவதெல்லாம், அங்கே படிக்கின்ற மாணவர்கள் படிப்பை பெறுவதோடு மட்டுமல்லா மல், அவர்கள் தங்களுடைய நிலைமைகளை அல்லது நல்ல ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வதற்கு இந்த அமைப்புகள் எல்லாம் பயன்பட வேண்டுமென்பதற்காகத்தான் அவைகளை யெல்லாம் நாம் ஆதரித்து தக்க நிலைமைகளை உருவாக்கி வைத்திருக்கிறோம். ஆனால இரண்டு ஆண்டு காலமாக நாம் பார்க்கின்ற நிலைமைகள் எல்லாம் மாணவர்களுடைய கல்வி யைப் பாதிக்கின்ற வகையிலேயும் இப்பொழுது சமீபத்திய நடவடிக்கைகளை நாம் பார்க்கின்றபொழுது, அவர்களுடைய உயிருக்கே பாதுகாப்பற்ற நிலையை உருவாக்குகின்ற வகையி லேதான் அத்தகைய அமைப்புகள் பயன்படுத்தப்பட்டு வரு கின்றன. அதற்குக் காரணம் தெரிந்தோ, தெரியாமலோ, மாணவர்கள் தங்களைப் பல்வேறு அரசியல் கட்சிகளோடு தொடர்புபடுத்திக் கொள்கிறார்கள். அரசியல் கட்சியோடு தொடர்பு வைத்துக்கொள்கிறபொழுது அவர்களுடைய உதவி யைத் தேர்தல் நேரத்திலே பெற முயற்சிக்கிறார்கள். தேர்தல் நேரத்திலே மட்டும் அல்லாது, தங்களுக்குச் சங்கடமும் ஏற்படு கின்ற நேரத்திலே, வெளியிலே இருக்கிற தங்களைச் சார்ந்தி ருக்கிற அல்லது தங்களுக்குத் தெரிந்தவர்களுடைய, வேண்டிய வர்களுடைய உதவியைப் பெறுகின்ற முயற்சியிலே ஈடுபடு கிறார்கள். அந்த வேளையிலே, வெளியிலே இருக்கின்றவர்



ரற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின்
இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு, திரு
வாளர்கள் ப. நெடுமாறன், க. பாரமலை, என். எஸ். வி.
சித்தன், மு. அம்பிகாபதி, மு. அப்பாதுரை, என். வரதராஜன்,
ரா. கிருஷ்ணன், ரா. உமாநாத், என். பழனிவேல், எஸ். என்.
இராமசாமி, இ. முத்துராமலிங்கம், எஸ். ஆண்டித்தேவர்,
பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திருமதி ஏ. எஸ். பொன்
னம்மாள், திருவாளர்கள் ஜி. மூர்த்தி, உ. சுப்பிரமணியம், செ.
சிவசாமி, தி. கா. நல்லப்பன், ஏ. டி. கருப்பையா, எம். ஆறு
முகம், ஜே. எஸ். இராசு, பொ. விஜயராகவன், அ. ரகுமான்கான்,
சி. பழனிமுத்து. ஏ. சந்திரசேகரன், திருமதி இராசாம்பாள்,
திருவாளர்கள் எஸ். இராசாராமன், செ. இராமலிங்கம், இ. எஸ்.
எம். பக்கீர் முகமது, திரு. எல். இளையபெருமாள் ஆகியோர்
தீர்மானம் கொடுத்துள்ளனர்.

திரு. இளையபெருமாள் அவர்கள் அழகப்பா கல்லூரி பற்றி
யும் குறிப்பிட்டுள்ளார்கள். இது எப்படி அவசர முக்கியமானது
என்பது குறித்துச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்கி
றேன். திரு. ப. நெடுமாறன்.

*திரு ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்
களே, மதுரையில் உள்ள தியாகராசர் பொறியியற் கல்லூரியில்
விரும்பத்தகாத சூழ்நிலை ஏற்பட்டு அங்கே இரண்டு மாணவர்
கள் பரிதாபகரமான முறையிலே கொலை செய்யப்படக்கூடிய
ஒரு நிலைமை உருவாகியிருக்கிறது. அங்கே கடந்த நவம்பர்
மாதத்திலே யூனியன் தேர்தல் நடந்து, அதிலிருந்து மாணவர்களி
டையே அபிப்பிராய பேதங்கள் இருந்து வந்ததாகச் சொல்லப்
படுகிறது. மாணவர்கள் மத்தியில் இருந்த அபிப்பிராய
பேதங்கள் இரண்டு மாணவர்களைப் படுகொலை செய்யக்கூடிய
அளவிற்கு அங்கே நிலைமை மாறி, மோசமாகி இருப்பதை
இந்த அவையில் உள்ள எல்லா தரப்பினரும் அறிந்து வருந்து
கிறார்கள் என்பதில் ஐயமில்லை. சோமசுந்தரம் என்கிற
மாணவர் இரவு 1 மணிக்கு ஹாஸ்டலுக்குத் திரும்பி வந்து
கொண்டு இருந்த நேரத்தில், அவரைச் சிலபேர் சூழ்ந்து கொண்டு
அந்த இடத்திலேயே படுகொலை செய்து இருக்கிறார்கள்.
அதற்குப் பின்னாலே அந்த வெறிகொண்ட கும்பல், மாணவர்
கள் விடுதிக்குள் நுழைந்து ஜம்புலிங்கம் என்ற மாணவனின்
அறையை உடைத்து, உள்ளே உறங்கிக்கொண்டு இருந்த அந்த
மாணவனைப் படுகொலை செய்து இருக்கிறார்கள். அவனும்
அங்கேயே காலமாகியிருக்கிறான். இதைத் தவிர மேலும்
ஜெயபால், தங்கராஜ், ஆறுமுகம் என்ற 3 மாணவர்களும்
அங்கே தாக்கப்பட்டு, அவர்களின் உயிர் ஊசலாடுகிற நிலைமையில்
மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதை

யொட்டி மதுரையில் அனைத்துக் கல்லூரிகளிலும் மாணவர்கள் மத்தியில் பதட்ட நிலை உருவாகியிருக்கிறது. எல்லா மாணவர் களும் இதை எதிர்த்து அமைதி ஊர்வலம் ஒன்றை நடத்தியிருக் கிறார்கள். மதுரை நகரத்தில் ஒரு பதட்ட சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். இறந்துபோன இரண்டு மாணவர்கள் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், அவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அமைத்துள்ள மாணவர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இதிலே அரசியல் மாற்சர்யங்கள் இருந்தாலும், அல்லது சாதி மாச்சரியங்களாக இருந்தாலும் மாணவர்களின் விடுதிக்குள் புகுந்து மாணவர்களைப் படுகொலை செய்யக்கூடிய ஒரு நிலைமை உருவாகி இருப்பது ரொம்பவும் வருந்தத்தக்கது. இதைக் கண்டு தமிழகம் இன்று அதிர்ச்சி அடைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இதிலே அரசு உடனடியாக தலையிட்டு, இந்தப் படுகொலைக்கு யார் காரணமோ அவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது கடுமை யான முறையில் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பொறியியல் கல்லூரியிலே மட்டும் இப்படிப்பட்ட நிலைமை என்பது இல்லாமல் மதுரைக் கல்லூரியிலும் இதுபோன்ற வேண் டாத சம்பவங்கள் நடந்து அங்கேயும் கலவரங்கள் உருவாகி இருக்கின்றன. மாணவர்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த வேண்டாத நிகழ்ச்சிகளைத் தடுப்பதற்குமுன் எச்சரிக்கை யான நடவடிக்கைகளை கல்லூரி நிர்வாகிகள் எடுக்கவில்லை என்பது தெளிவாக தெரிகின்றது. ஆகவே அரசும் இதை மனதில் கொண்டு இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்திலே நிகழாமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது பற்றி விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

திரு என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றத்திலே இருந்து வந்திருக்கின்ற செய்திகள் நம்முடைய நெஞ்சங்களை உலுக்குவதாக உள்ளன. கழிந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற பேரவைத் தேர்தலை ஒட்டி மாணவர்கள் மத்தியிலே இரு கோஷ்டிகள் ஏற்பட்டு அதன் விளைவாக அந்தக் கல்லூரியிலே இரண்டு மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 3 பேர் கவலைக்கி டமான நிலைமையிலே அரசு மருத்துவ மனையிலே அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஒரு மாணவனை இன்ஜினியராக ஆக்குவதற்கு அரசு ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாய் வரை செலவிடுகின்றது என்று சொல்கிறார்கள். தன்னுடைய மகன் படித்துப் பட்டம் பெற்று வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை தேடித் தரவேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்த பெற்றோர்களுக்கு மாணவர் கள் படுகொலை செய்யப்பட்டது குறித்த செய்தி பேரிடியாக



இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக ஐம்புலிங்கம் என்ற மாணவனின் தந்தை அந்த மாணவனின் படிப்புக்காக தனக்குச் சொந்தமாக இருந்த இரண்டு வீடுகளையே விற்று விட்டார். மேலும் சில நாட்களுக்கு முன்புதான் அவரிடம் 500 ரூபாய் படிப்புச் செலவுக்காக மகன் கேட்டபோது வட்டிக்குக் கடன் வாங்கி அனுப்பி வைத்தார் என்ற செய்தியினைக் கேட் கின்றபோது, மிகுந்த வேதனையாக இருக்கின்றது. இப்படிப் பட்ட நிலையில் தன்னுடைய மகன் கொலை செய்யப்பட்டு விட்டான் என்ற செய்தியைக் கேட்டபோது அது அவருக்கு எவ்வளவு பெரிய பேரிடியாக இருந்திருக்கும் என்பதை நம் மாலே கற்பனை செய்து கூடப்பார்க்க முடியவில்லை. கல்லூரிப் பேரவை மற்றும் மாணவர் தலைவர் போன்ற தேர்தல் நிலைமையினைப் பார்க்கின்றபோது கவலை அளிக்கக்கூடிய தாக இருக்கின்றது. பொதுத் தேர்தலையே மிஞ்சுகின்ற அளவுக்கு மாணவர் பேரவைத் தேர்தல்களிலே விளம்பரங்கள் செய்வதும், வாகனங்களிலே ஏறிக்கொண்டு ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் செய்வதும் நடந்து வருகின்றது. மாணவர்களின் பணமும் நேரமும் இந்த வகையிலே வீணாகிக் கொண்டிருக் கின்றது. ஆகவே மாணவர்கள் தேர்தல் போன்றவற்றை கட்டுப்படுத்தவேண்டியது அவசியம் என்று அரசும் மற்றவர்களும் உணர வேண்டிய தருணம் வந்திருக்கின்றது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கடந்த அக்டோபர் மாதத்திலே மாண வர் தலைவர் தேர்தல் நடந்தது. இப்போது ஏப்ரல் மாதத்திலே இந்த மோதல் நடந்திருக்கின்றது. எனவே இடைப்பட்ட இவ்வளவு நாட்களும் மாணவர்களிடையே பதட்ட நிலையும் பரபரப்பான சூழ்நிலையும் இருந்திருக்கின்றது என்பது தெளிவாக இருக்கின்றது. ஆனால் கல்லூரி நிர்வாகமோ, பிரின்சிபாலோ, காவல் துறையோ இதனைக் கண்டறியவில்லை என்பது போன்ற பல்வேறு மிக முக்கியமான பிரச்சினைகள் எழுகின்றன. இது குறித்து பல்வேறு கல்லூரிகளில் அடையாள ஸ்ட்ரைக் கூட செய்து வருகிறார்கள். ஆகவே இதுபோன்ற நிகழ்ச்சிகள் தமிழகத்திலே மேலும் பரவக் கூடாது என்பதற் காகவும் தற்போது மாணவர்கள் மத்தியிலே இருக்கின்ற பதட்ட நிலை குறித்தும் விவாதிக்க பேரவையின் இதர அலு வல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்திலே உள்ள தியாகராயர் பொறியியல் கல்லூரியிலே இரண்டு மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். சோமசுந்தரம், ஐம்புலிங்கம் என்ற இரண்டு மாணவர்களும் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாணவர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் இவர்கள் என்றும் கூறப்படுகின்றது. இந்த இரண்டு மாணவர் களும் படுகொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். மூன்று

மாணவர்கள் படுகாயம் அடைந்திருக்கின்றார்கள். ஜெயபால்,
ஆறுமுகம், தங்கராஜ் போன்ற ம7ணவர்கள் படுகாயம்
அடைந்து இருக்கிறார்கள்.

[முற்பகல் 10-40]

அக்டோபர் மாதம் நடந்த தேர்தலைத் தொடர்ந்து மார்ச்
மாதத்திலே இந்தப் படுகொலை நிகழ்ந்திருக்கிறது. நிர்வாகம்
முறையாக இவைகளைக் கவனிக்காமல் விட்டதன் விளைவாகத்
தான் இத்தகைய படுகொலை நடைபெற்று இருக்கிறது.

மதுரை பொறியியல் கல்லூரியில், ஜாதிய உணர்வுகளுடன்
மாணவர்கள் செயல்படுவதாக, இதே சட்டமன்றத்திலே முன்பே
எடுத்துச் சொல்லப்பட்டது. அரிசன மாணவர் தண்ணீர்
குடித்த குவளையிலே கூட மேல்சாதி மாணவர் தண்ணீர் குடிக்க
மாட்டார் என்கிற திமிரான போக்குகள் அந்தக் கல்லூரியிலே
நடைபெற்றிருக்கின்றன என்றால் அப்படிப்பட்ட மாணவர்கள்
வெளியேற்றப்பட வேண்டும். ஏழை மாணவர்கள் எந்த
வகுப்பில் வேண்டுமானாலும் பிறந்திருக்கலாம். அரிசனவகுப்பாக
இருக்கலாம், செட்டியார் வகுப்பாக இருக்கலாம். எந்த வகுப்
பிலும் ஏழைகள் இருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட ஜாதிய
உணர்வுகள் மாணவர்களுக்கிடையில் இருக்கக் கூடாது.

ஜாதிய உணர்வுகள் வளர்க்கப்படுவதே, சில கல்லூரிகளில்
இருக்கிற சில ஆசிரியர்களின் செயல்களால்தான் என்பது
எனக்கு நன்றாகத் தெரியும். மன்னார்குடி கல்லூரியில் கூட
அப்படிப்பட்ட ஒரு ஆசிரியர் இருக்கிறார். அப்படிப்பட்ட
ஆசிரியர்களைத் தயங்காமல் வெளியேற்ற வேண்டும். தான்
பெற்ற செல்வன் இன்ஜினியரிங் படித்துவிட்டு, வீட்டுக்குத்
திரும்புவான் என்று அந்தத் தாய் எதிர்பார்த்துக் கொண்டி
ருக்க, படிக்கச் சென்ற அந்த மாணவன் பிணமாக எடுத்துச்
செல்லப்படுகிறான். தூத்துக்குடிக்கு பக்கத்திலே இருக்கிற அந்த
ஊருக்குப் பிணமாக எடுத்துச் செல்லப்படுகிறான் என்று சொன்
னால், அந்தக் கல்லூரி நிர்வாகம் எந்த அளவிற்கு இருக்கிறது
என்பதைப் பற்றி சர்க்கார் பரிசீலிக்க வேண்டும். இதற்கு
அடிப்படையான பிரச்சினை தாழ்த்தப்பட்ட அரிசன வகுப்பைச்
சேர்ந்த மாணவன் என்ற உணர்வினாலே வந்தது என்றுதான்
நான் கருதுகிறேன். இப்படிப்பட்ட ஜாதிய உணர்வைத்
தூண்டும் ஆசிரியர்களாக இருந்தாலும் மாணவர்களாக
இருந்தாலும், உடனடியாக அவர்கள் கல்லூரியிலிருந்து வெளி
யேற்றப்பட வேண்டும். இல்லையென்றால் தமிழகத்தில்
பல கல்லூரிகளில் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும். அது
மட்டும் அல்ல, இந்தச் சம்பவத்திலே தாக்கப்பட்டிருப்பவர்
யார் என்று கேட்டால், கல்லூரியினுடைய மாணவர் சங்கச்
செயலராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர், மார்க்சிஸ்ட் கம்யூ



னிஸ்ட் கட்சியின் மாணவ அமைப்பைச் சேர்ந்தவர் என்று
சொல்லுகிறார்கள். அவர் படுகொலை செய்யப்பட்டிருக்
கிறார். ஆகவே, இவர்கள் திட்டமிட்டு, குறிவைத்து
தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே,
இதுபற்றிய விரிவான ஒரு விவாதத்தை நடத்த, இந்த
அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மதுரைக்கு அருகில் உள்ள, தியாகராசர் பொறியியல்
கல்லூரியில் 31—3—1981 ஆம் தேதியன்று அதிகாலை 1 மணி
யிலிருந்து 2 மணி அளவில் கல்லூரி மாணவர்கள் சங்கத்தின்
பேரவைச் செயலரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்
உறுப்பினருமான ஐம்புலிங்கம் 4 வது ஆண்டு மாணவன்,
சோமசுந்தரம் மூன்றாவது ஆண்டு மாணவன் இருவரும்
மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்கள்—மற்றும் ஜெயபால், ஆறு
முகம், தங்கராஜ் போன்றவர்கள் படுகாயமுற்று, அதிலே,
ஐம்புலிங்கமும், சோமசுந்தரமும் இரவு தாக்குதலுக்கு உள்ளாகி,
சில மணிநேரத்திலே இறந்தார்கள் என்று சொல்லப்
படுகிறது. ஐம்புலிங்கம், சோமசுந்தரம் தவிர, காயம்
அடைந்த மற்ற மாணவர்கள் மருத்துவ மனையிலே சேர்க்கப்
பட்டிருக்கிறார்கள் என்று தகவல்.

இந்தத் தகவலிலே, மாணவர்களில் ஒரு சிறு பகுதியினரும்
அவர்களால் திரட்டப்பட்ட வெளியிலே இருக்கக் கூடிய
குண்டர்களும் இரவு நேரத்திலே குறி வைத்துத் தாக்கியிருக்கிறார்
கள் என்பதுதான் மிக முக்கியமானதாகும். இந்தத் தாக்கு
தல் மாணவர்களிடையே ஏற்பட்ட சண்டை சச்சரவுகளினால்,
கோபதாபங்களினால் திடீரென எடுத்த சூழ்நிலையின் காரண
மாக விளைந்த தாக்குதல் அல்ல. திட்டமிட்டு இரவு இரண்டு
மணிக்கு, வெளியே இருக்கும் குண்டர்களை உதவிக்கு திரட்டிக்
கொண்டு, கல்லூரி விடுதிகளில், படுத்துக் கொண்டிருக்கும் மாண
வர்களை எழுப்பி, வெட்டி படுகொலை செய்திருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல. இதிலே படுகொலை செய்யப்பட்ட
ஐம்புலிங்கம் கல்லூரியினுடைய பேரவைச் செயலராக தேர்ந்
தெடுக்கப்பட்டிருப்பவர். இந்திய மாணவ அமைப்பின் உறுப்பி
னர். படுகொலை செய்யப்பட்ட சோமசுந்தரம் இந்திய மாணவர்
சங்கத்தின் செயலாளர். இவர்கள் தாக்கப்பட்டு படுகொலை
செய்யப்பெற்றிருக்கிறார்கள். ஆகவே, இது திட்டமிட்டு செய்
யப்பட்ட, குறிவைத்து தாக்கப்பட்ட ஒரு படுகொலை. இறந்து
பட்ட அந்த மாணவர்கள் ஏழை அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்
கள். சாதாரண விவசாயத் தொழிலாளர்களுடைய குழந்தை
கள். அந்தக் குழந்தைகள் அன்றைக்கு மதுரை நகரில்
படுகொலைப்பட்டதைப் பார்த்த அவர்களது பெற்றோர்கள்
எப்படி கண்ணகி மதுரை வீதிகளில், மதுரையை எரிப்பதற்கு

முன் அழுது புலம்பினாள் என்று வரலாற்றிலே படித்தோமோ, அதுபோல அந்தப் பெற்றோர்கள் கதறினார்கள். அவ்வளவு தான் என்னால் சொல்ல முடியும். நான் இந்தப் பேரவைக்கு சொல்ல விரும்புவது எல்லாம், ஒரு தலைசிறந்த பொறியியல் வல்லுனராக, ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகனை உற்பத்தி செய்வது என்பது மிக அற்புதமான ஒரு வேலை.

பெற்றோர்கள் உழைப்பு முழுவதையும் கொடுத்து கடன் வாங்கி தன் வீட்டை விற்று படிக்க வைத்திருக்கக்கூடிய மாண வனை சாதி அகந்தை காரணமாகப் படுகொலை செய்வதைத் தமிழகம் சகிக்கக்கூடாது. தலைவர்களின் படங்கள் இங்கே இருக்கின்றன. பாரதி அன்று கூறினான், 'இனி ஒரு விதி செய் வோம் அதை எந்த நாளும் காப்போம்' என்று. அப்படி குரல் கொடுத்த பாரதி வழிவந்த நாம் எழுபது ஆண்டுகளுக்குப் பின்னால் தாழ்த்தப்பட்ட சகோதரர்களை கை தூக்கி மேலே கொண்டுவரவேண்டும் என்று விரும்புகிறபோது, இப்படி சமுதாயத்திலுள்ள முற்போக்கு சக்திகள் விரும்புகிற போது ஒரு சிறிய பிரச்சினையைப் பெரியதாக்கி இன்று படு கொலையே நடந்து பெற்றோர்கள் கதறி அழும்படியான ஒரு காட்சியை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வரு கிறேன்.

இதில் அரசாங்கம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது ஒன்று உள்ளது. இந்த தியாகராசர் பொறியியல் கல்லூரியில் சில ஆண்டுகளாகவே இப்படிப்பட்ட சர்ச்சைகள் மறைமுகமாக வளர்ந்து வந்துள்ளன. மாணவர் சங்கங்கள் நிர்வாகத்தின் ஊழலை வெளிப்படுத்துகிறது என்ற நிலையில் இரண்டு கோஷ்டிகள் மூன்று கோஷ்டிகள் என்று வைத் துக்கொண்டிருப்பது நிர்வாகத்திற்கு எப்போதுமே வசதியாக இருக்கும் என்ற காரணத்திற்காக அது ஊக்குவிக்கப்படுகிறது, பலப்படுத்தப்படுகிறது. அது கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இந்தக் கல்லூரிக்கு மிக அருகாமையில் திருப்பரங் குன்றம் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. இந்தவழியாகத்தான் கல்லூரி விடுதிக்குள் வர இயலும், வரவேண்டும். இவ்வளவு இருந்தும் இந்தப் படுகொலை நடந்திருக்கிறது என்றால் நிர் வாகத்தின் கை இருக்கிறதா என்று அச்சப்படவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, இதை நான் ஜாதி உணர்வாக மாற்ற விரும்ப வில்லை. ஆனால் இந்த உணர்வு ஆங்காங்கே தலை காட்டுகிறது. இதில் கல்லூரி நிர்வாகத்தின் ஊழல் தன்மை இருக்கிறதா என்று அரசாங்கம் கண்டறிய வேண்டும். இப்படிப்பட்டதொரு நிலை இருப்பதைப்பற்றி கல்வி இலாகாவோ அல்லது போலீஸ் இலாகா வோ அரசாங்கத்திற்குத் தகவல் கொடுத்தார்களா என்பதையும் அறியவிரும்புகிறேன்,



அடுத்து, இப்போது கைது செய்யப்பட்டவர்கள் மிக வசதி படைத்தவர்களாக சக்தி படைத்தவர்களாக இருக்கிறார்கள். இந்தச் சமுதாயத்தில் அவர்கள் தப்பித்துக்கொள்ள சந்தர்ப் பங்கள் உண்டு. குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்படாத வர்களில் குண்டர்களும் உண்டு. அந்தக் குண்டர்கள் எங்கே வசதி பெற்றார்கள், எப்படி வரவழைக்கப்பட்டார்கள் என்பதையும் கண்டறிய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு மகத்தான கடமை நம் மாநில அரசு முன்னால் இருக்கிறது. மாநில அரசும் மாநில அரசைச் சார்ந்திருக்கக் கூடிய தலைமைக்காவல் துறையைச் சேர்ந்த அலுவலர்களும், இதில் நிச்சயமாகத் தலையிட்டு, கவனம் செலுத்தி இந்த வழக்கை நடத்தவும், இதில் கைது செய்யப்படாதவர்களை கைது செய்யவும் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். இப்படு கொலையை வழக்கமான ஒரு படுகொலையாகக் கருதக் கூடாது. மாணவர்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவே பெற்றோர் களுக்கு அச்சம் ஏற்படுத்துகிற, நம் தமிழகத்திற்குக் களங்கம் ஏற்படுத்துகிற ஒரு படுகொலையாக இதைக் கருதவேண்டும் என்று வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

இப்போது அந்தக் குடும்பங்கள் தத்தளித்துக் கொண்டிருக் கின்றன. அவ்வளவுதான் நான் சொல்ல முடியும். அவர்கள் பெற்றோர்களின் எதிர்காலக் கனவுகள் — அந்த மாணவர்கள் உயிரோடு இருந்தால்— வாழ்வில் முன்னேற்றம் காணலாம் என்று எண்ணியதெல்லாம் மண்மேடாகி நிற்கிறது. அந்தக் குடும் பங்களுக்கு உதவி செய்வதற்கு—ஏதோ வழக்கமாக உள்ள நிலை யாக எடுத்துக்கொள்ளாமல்—போதுமான நிதி உதவி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருப்பதால், பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. எஸ். என். இராமசாமி : பேரவைத் தலைவர் அவர் களே, மதுரை திருப்பரங்குன்றம் தியாகராசர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற சம்பவம் மிகவும் குமுறும் முறையில் நடை பெற்றுள்ளது. நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தல் காரணமாக தகராறு ஏற்பட்டு சோமசுந்தரம், ஜம்புலிங்கம் என்ற இரண்டு மாணவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். நல்லமுறையில் படித்து பட்டம் பெற்று இன்ஜினியர்களாக வந்து தமது குடும்பங்கள் மேலுக்கு வரும் என்று நினைத்திருந்த அவர்கள் தாய் தந்தை யர் இன்று கதறியழும் நிலையில் இருக்கிறார்கள். ஆகவே இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க கல்லூரிகளில் தேர்தல் முறைகளில் தவறு நடைபெறாமல் இந்த அரசாங்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி இரண்டு மாணவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கும் நிலையில், பேர வையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவா திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10—50]

திரு. எஸ். ஆண்டித் தேவர் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மாணவர்கள் மத்தியில் நடக்கக்கூடாத ஒரு நிகழ்வினைக் குறித்து இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற, இந்தத் தீர்மானத்தில் எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் விளக்கமாகச் சொன்னார்கள். இருந்தாலும் ஜம்புலிங்கம் என்ற மாணவர் இரவு இரண்டாவது ஆட்டம் சினிமா பார்த்துவிட்டு வரும்போது, குண்டர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு, கொடூரமாகத் தாக்கப்பட்டு, அவரது உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும்போது, அவர் வேலியிலே தூக்கி எறியப்படுகின்ற அளவிற்கு இந்தச் சம்பவம் நடத்தப்பட்டிருக்கிறது. அவருக்குத் துணையாக வந்த சோமசுந்தரம் என்ற மாணவரும் மிகக் கடுமையாக தாக்கப்பட்டு, மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லக்கூடிய வழியில் இறந்திருக்கிறார். இன்னும் 3 மாணவர்கள் கொடூரமாகக் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி தாக்கப்பட்ட இந்த மாணவர்களின் நிகழ்வினைக் குறித்து அங்கேயிருக்கின்ற நிர்வாகம் எந்த முறையில் நடந்திருக்கிறது என்பதையும் பார்க்கவேண்டும். தேர்வு நடந்ததற்குப் பின்னர் அங்கே மாணவர்கள் மத்தியில் பலமுறை இது போன்ற சம்பவங்கள் ஏற்பட்டு, நிகழ்வுகள் இருந்துஇருக்கின்றன. இந்தச் சம்பவம் நடந்த அந்த நுழைவாயிலின் 200 கெஜ தூரத்தில் காவல்நிலையம் இருக்கிறது. இவ்வளவு பெரிய சம்பவம் நடந்திருந்தும், இந்தச் சம்பவம் குறித்து காவல் துறையினருக்கு முன்னதாக நிர்வாகம் அறிவிக்கவில்லை. நிர்வாகம் இதுசம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கத் தயாராக இல்லை. காவல் துறையும் இந்தச் சம்பவம்—நிகழ்வு நடந்து, அதற்கு நீண்ட நேரம் கழித்துத்தான் அங்கே வந்திருக்கிறது. அதிலே 29 மாணவர்கள் கைது செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால், திட்டமிட்டு, வெளியேயிருந்து குண்டர்களைக் கொண்டுவந்து தாக்கியிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட குண்டர்கள் யார்? அங்கே அவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. 29 மாணவர்கள் இப்போது கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். தவறு செய்தவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டுமென்பதில் எங்களுக்கு எத்த ஐயப்பாடும் இல்லை. இருந்தாலும், இப்போது தமிழகத்திலே இருக்கின்ற அத்தனைப் பெற்றோர்களும், கலக்கத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். இனிமேல் குழந்தைகளைக் கல்லூரிகளுக்கு அனுப்ப முடியுமா என்ற கலக்கத்தில் இருக்கிறார்கள். ஒன்று, இறந்து பிணமாகப் பார்க்கிறோம். அல்லது கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்களாகப் பார்க்கிறோம் என்ற நிலை இருக்கிறது. ஒவ்வொரு தாய் தந்தையரின் உணர்வினை நான் இங்கே எடுத்துக் காட்டுகிறேன். கல்லூரிக்கு அனுப்புகின்ற மாணவர்களைப் பிணமாகப் பார்ப்பது அல்லது கொலைக் குற்றம்புரிந்தவராகப் பார்ப்பது என்ற அளவிற்கு இன்றைய தமிழகத்திலே நடந்திருக்கிறது. அது மட்டுமல்ல, மதுரைக்



கள், விரும்பத்தகாத சக்திகள், அல்லது சமூகவிரோத சக்திகள், கல்லூரிக்குள் நுழையும், மாணவர்கள் பிரச்சினைகளிலே தலையிடுவதுமான நிலைமை மாணவர்களாலேயே உருவாக்கப்படுகிற நிலை ஏற்படுகிறது. அதன் காரணமாக இன்றைக்கு நம்முடைய இரண்டு மாணவர்களுடைய உயிர்களை இழக்கிற துர்பாக்கியமாக நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைக் கண்டிக்கிற அதே நேரத்தில், இந்தப் பிரச்சினைக்கு காரணமான, அடிப்படை காரணங்களை ஆராய்ந்து பார்த்து அதற்குத் தீர்வு காண வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, இன்றைய நிலைமையிலே இப்பொழுது நான் சொல்ல விரும்புகின்ற ஒரு கருத்து, கூடிய வரையில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்து, நாம் இந்தப் பிரச்சினையை அவர்கள் முன்னால் வைத்து, விவாதிக்க இருக்கிறோம். இது ஒரு தனிப்பட்ட சம்பவம் அல்ல. இது இன்றைக்கு மாணவர்கள் உலகத்திலே காணப்படுகிற ஒரு விரும்பத்தகாத போக்காக இருக்கிறது. சொல்ல வேண்டுமென்றால், காரைக்குடி கல்லூரி மட்டுமல்ல, பல்வேறு கல்லூரிகளை என்னால் சொல்ல முடியும். தற்போது, குறிப்பாகச் சொல்ல விவரங்கள் என்னிடத்திலே இல்லையென்பதால் சொல்ல இயலவில்லை. அப்படிப் பல்வேறு கல்லூரிகளிலே அத்தகைய சம்பவங்கள் நடக்கிறபொழுது, நிர்வாகமும் மற்றவர்களும் அந்த..............

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது காரைக்குடியிலே மட்டும் அல்ல என்று சொன்னார்கள். உண்மைதான். எனக்கு அதில் ஆட்சேபனை இல்லை ஆனால் அந்தச் சம்பவத்திற்குப் பிறகுதான் அங்கே ஜாதிக் கலவரம் ஏற்பட்டு முதல் நாள் ஆரம்பித்தது என்று அமைச்சர் அவர்கள் அங்கே இருந்தபோது கூட ஒரு பகுதி மாணவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் முறையிட்டதாகக் குறிப்பிட்டார்கள். அங்கே நடந்த நிகழ்ச்சிக்கும் மதுரை இன்ஜினியரிங் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சிக்கும், அழகப்பா கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா என்கிற நிலைமையை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பல்வேறு கல்லூரிகளிலே மாணவர்கள் மத்தியில் இருக்கிறது. ஜாதி அடிப்படையில் நான் சொல்ல விரும்பாததற்குக் காரணம் இந்த தியாகராசா பொறியியல் கல்லூரியிலே 'தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஜம்புலிங்கம் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார் என்றால் பெரும்பாலான மாணவர்கள் மத்தியில் அந்த உணர்வு இல்லை என்பதை இது எடுத்துக் காட்டுகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பெரும்பாலான மாணவர்களுக்கு அந்த உணர்வு இல்லை. ஆகவே

அவர்கள் அதற்கு அப்பாற்பட்டு, நாம் விரும்பத்தக்க உணர்வுகளோடு இருக்கிறார்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது. ஆனால் இத்தகைய உணர்வுகளோடு செயல்படுகிறவர்கள் அந்தக் காரியங்களில் ஈடுபட்டு இருக்கக்கூடும் என்பதை நாங்கள் மறுக்கவில்லை. அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் நான் இங்கே குறிப்பிட விரும்புவது, அரசைப் பொறுத்தவரையில் இதுபோன்ற தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகிற மாணவர்கள் மீது கல்லூரி நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்கிறபோது டந்த இரண்டாண்டு காலமாக நாங்கள் அதில் தலையிடவில்லை. கல்லூரி முதல்வர்கள் நடவடிக்கை எடுத்தால் எடுத்ததுதான். அவர் டி.சி. கொடுத்தால் போகவேண்டியதுதான். அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த மாணவனாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்தக் கட்சியைச் சேர்ந்த மாணவர்களாக இருந்தாலும் சரி இந்த ''இன்டிசிப்ளின்'' என்ற முறையில் ஒரு தவறான நடவடிக்கையில் ஈடுபட்டதன் காரணமாக கல்லூரி முதல்வர் ஒரு நடவடிக்கை எடுத்தால் அதற்கு அதிகாரம் உள்ளவர் அந்தக் கல்லூரி முதல்வர்கள் தான் என்கிற முறையில் நாங்கள் அதிலே தலையிடுவது இல்லை. இந்தக் குறிப்பிட்ட கல்லூரியில்கூட நடவடிக்கை எடுத்து அவர்கள் வெளியேற்றி இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கல்லூரி நிர்வாகம் நடவடிக்கை எடுக்காமலேயே கவனிக்காமலேயே இருந்து விட்டது என்கிற குற்றச்சாட்டை நாம் கூறமுடியாது. அவர்களால் முடிந்த அளவிற்கு செய்து இருக்கிறார்கள். அதுவும் மாணவர்களை நாம் அணுகுகிறபோது, மாணவர்கள் பிரச்சினைகளில் ஈடுபட்டு இருக்கிறபோது அவர்களைக் கண்டிக்கிறபோது எவ்வளவு பாதுகாப்போடு செயல்படவேண்டியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். எந்தக் கட்டத்திலும் நாம் பாதுகாப்போடு தான் பேச வேண்டியிருக்கிறது. ஆகவே, மாணவர்களைப் பொறுத்தவரையில் செய்கிற காரியங்களை நாம் நல்ல முறையில் பரிசீலித்து, தீவிரமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விரும்புகிறோம். அத்தகைய ஒரு சிறந்த முடிவு எடுக்க, ஒரு அமைதியான சூழ்நிலையில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து, அவர்களுடைய கருத்துக்களை அறிந்து, அந்த அடிப்படையில் நாம் முடிவு எடுக்கலாம். அடுத்து இது போன்ற நிகழ்ச்சிகளுக்கு இடம் இல்லாத வகையில், இடம் தராத வகையில் நாம் காரியங்களை ஆற்றவேண்டும். ஒன்று, வன்முறைச்செயல்கள் இனி எந்தக் காரணத்தைக் கொண்டும் கல்லூரி வளாகங்களில் ஏற்படாத நிலை உருவாக்குகிற வகையிலும், இரண்டாவதாக, வெளியார்கள் அவர்கள் குண்டர்களாக இருந்தாலும் சரி அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி அவர்கள் கல்லூரி மாணவர்களிடையே புகுந்து இத்தகைய தவறான நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்தவோ அல்லது அவர்களுக்கு பாதிப்பு உண்டாக்குகிற வகையிலோ நடக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை. நிச்சயமாக நாம் பரிசீலித்து, நல்ல வகையில் ஒரு முடிவு எடுக்கிற வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. அ. ரகுமான்கான் :** யூனியன் தேர்தல் காரணமாகத்தான் இப்படிப்பட்ட பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. அதற்கு நான் ஒரு யோசனையை அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஒவ்வொரு பட்டப்படிப்பு வகுப்பறையிலும் கிளாஸ் ரெப்பிரசென்டேடிவ் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களில் ஒருவரை ரகசிய தேர்தல் மூலம் தலைவராகத் தேர்ந்தெடுக்கலாம். இப்படிச்செய்தால் இந்தத் தேர்தல் ஜெனரல் எலெக்ஷன் போல் இல்லாமல் நல்லமுறையில் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த முறையை அரசு பின்பற்றுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதை விட நல்ல யோசனைகள் கூட மாண்புமிகு உறுப்பினர்களிடத்தில் தோன்றலாம். ஆகவே, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டுகிற நேரத்தில் தலைவர்கள் மூலம் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தால் அதையெல்லாம்பரிசீலிக்கலாம். ஆகவே, இது குறித்து இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இசைவு மறுக்கப்பெறுகிறது.

## ஆ. எண்ணூர் மின் நிலயத்தில் நிலக்கரி பற்றாக்குறையினால் உற்பத்தி பாதிக்கப் பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** '' "நிலக்கரிப் பற்றாக்குறையின் காரணமாக எண்ணூர் அனல் மின் நிலையத்தில் மின்சாரம் உற்பத்தி செய்வதில் ஏற்பட்டுள்ள நெருக்கடியினால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் '' என்று கேட்டு திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. உமாநாத், ஜே. ஹேமச்சந்திரன், சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, எம். ஆறுமுகம், மு. அப்பாதுரை, பொ. உத்திராபதி, என். எஸ். வி. சித்தன், பொ. விஜயராகவன், பாபு ஜனார்த்தனம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியம் என்பது குறித்துச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன். திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம். . . .

[முற்பகல் 11—20].

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** தலைவரவர்களே, இன்று மாநிலம் பூராவும் ஏற்கெனவே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. பேலும் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிற முறையிலே பல சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்லப்போனால் நம்முடைய எண்ணூர் அனல்

மின்சார நிலையத்திற்கு 5,000 டன் நிலக்கரி ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் ஒதுக்கப்பட்ட நிலக்கரி எண்ணூருக்கு வந்து சேரவில்லை. 5,000 டன்னுக்குப் பதிலாக 2,400 டன்தான் வருகிறது. அதுவும் வாகன் தட்டுப்பாடு என்ற பெயரால் வராத நிலை ஏற்படுகிறது. ஆக இதன் காரணமாக எண்ணூரிலே இருக்கக்கூடிய அனல் மின்சார நிலையம் சரியாக இயங்காத நிலை ஏற்படுகிறது.

அது மட்டுமல்ல, மெஷின் கோளாறு காரணமாக 110 மெகா வாட் மின்சாரத்திற்குமேல் அங்கே உற்பத்தியாக வழியில்லை, கடந்த 3 நாட்களாக இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நிலக்கரி பற்றாக்குறையைச் சுட்டிக்காட்டி, அனுப்ப வேண்டுமென்று அரசுத் தரப்பிலே கேட்டால் உடனே உங்களுக்கு சீக்கிரம் அனுப்பி வைக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் வருவதில்லை. மீண்டும் கேட்டால் ஒரிசாவில் இருக்கிற 'கல்ச்சர்' நிலக்கரி சுரங்கத்தைச் சுட்டிக்காட்டி அங்கே கேளுங்கள் என்று கையைக் காட்டுகிறார்கள். வாகன் பிரச்சினைப் பற்றிச் சொல்வதாக இருந்தால் இரயில்வே இலாகாவினர் ஒரிசா கல்ச்சர், நிலக்கரி சுரங்கத்திலிருந்து நிலக்கரியை எடுத்துவர தண்டவாளம் இல்லை என்று கையை விரிக்கிறார்கள். இந்தக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி மத்திய அரசைக் கேட்டால் அவர்கள் 'போகாத ஊருக்கு வழிகாட்டக்கூடிய நிலை'யில் இருக்கிறார்கள்.

அனல் மின்சாரத்தைப் பொறுத்தவரையில் 8 மில்லியன் யூனிட் ஏற்கெனவே உற்பத்திச் செய்யப்பட்டு வந்தது. பல்வேறு காரணங்களால் அது இன்றைக்கு 4 மில்லியன் யூனிட்டுகளாகக் குறைந்திருக்கிறது. இதனால் மேலும் மின்சாரம் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இன்றைக்கு நீர்த் தேக்கங்களில் தண்ணீர் இல்லை. ஆகவே, மேலும் மேலும் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டு, இன்றைக்கு மிகப்பெரிய பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. மேலும் பற்றாக்குறை ஏற்படும் பெரும் அபாயம் இருந்துகொண்டிருக்கிறது. ஆகையால் அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து, இந்த மிக முக்கியமானப் பிரச்சனைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இன்றைக்கு பத்திரிகையிலே வந்த செய்தியைப் பார்த்து மாநிலத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் பெரும் கவலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கிற மின்சாரமே பல காரணங்களால் திடீர், திடீரென்று நின்றுவிடுகிறது. அது மட்டுமல்ல. பெரும் பகுதிகளில் கொஞ்சம் கொஞ்சம் இருக்கிற தண்ணீரை இறைப்பதற்குக் கூட போதுமான அளவுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை. இப்போது 4, 5 மணி நேரத்திற்கு விவசாயக் காரியங்களுக்கு மின்சாரம் கொடுக்க ஏதோ ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது கூட கிடைக்க வாய்ப்பு இல்லை. குறிப்பாக விவசாயத்தில், கொஞ்



சம் இருக்கிற பயிரும் தீய்ந்து போகும் என்ற கவலை ஏற்பட்டிருக்கிறது. இதற்குப் பிரதான காரணம் நிலக்கரி சரியாக வந்து சேரவில்லை. ஆகவே அனல் மின்சார நிலையங்கள் சரியாக இயங்காமல் உற்பத்தி பாதிக்கப்பட்டு, பற்றாக்குறை மிகப் பெரும் அளவுக்கு உயரும் என்கிற அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

நிலக்கரி வருவதற்கு ஏற்கனெவே வாகன வசதி சரியாக இல்லை. வாகன வசதி இருந்தால் கரி கிடைக்கவில்லை. ஆகவே, வேண்டுமென்றே ஒரு நெருக்கடி நிலையை ஏற்படுத்துவதற்காக நிலக்கரி அனுப்பாமல் இருக்கிறார்களோ என்ற சந்தேகம், நமக்கு ஏற்படுகிறது. மின்சாரம்கிடைக்காமையால் அநேகமான தொழிற்சாலைகள் சரியாக இயங்கமுடியவில்லை. இன்றைக்கு விவசாயம் மிக அத்தியாவசியமான ஒன்று. அதற்கும் மின்சாரம் கிடைக்காத காரணத்தால் இன்றைக்கு ஒரு பெருத்த அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு சரியான காரணத்தை நாம் கண்டறிய வேண்டும். அது மட்டுமல்லாமல் மத்திய அரசை இதுபற்றி வற்புறுத்தி உரிய நடவடிக்கையும் எடுக்க வேண்டும்.

இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் நிலக்கரி ஒரு நாளைக்குக்கூட கையிருப்பில் இல்லை என்றால் இது மிகவும் மோசமான ஒரு நிலைமையாகும். இதற்கு என்ன காரணம்? மத்திய அரசிடம் முன் எச்சரிக்கையாக கேட்கப்பட்டிருக்கிறதா? அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? உரிய நடவடிக்கை எடுக்க மாநில அரசு தவறி இருக்கிறதா? என்பவற்றை எல்லாம் நாம் தெரிந்துகொள்வதோடு, எதிர்காலத்தில் இத்தகைய குறைபாடுகள் ஏற்படாமல் இருக்க என்ன ஏற்பாடு என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டியிருப்பதால், இன்றைக்கு மக்களுடைய கவலையைப் போக்க வேண்டிய அவசியம் இருப்பதால்; இந்த மிக முக்கியமான பிரச்சனையைப்பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இன்றைக்கு எண்ணூரிலே மின்சார உற்பத்திக்கு ஏற்பட்டிருக்கிற தட்டுப்பாடு காரணமாக தமிழ்நாட்டிலே இருக்கிற தொழிற்சாலைகளுக்கும், அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிற பல்வேறு வகையிலான தொழிலாளர்களுக்கும் பாதிப்பு ஏற்படுவது குறித்தும், அதனால் நாட்டின் உற்பத்தி குறைவது குறித்தும் நமக்கு பெரும் கவலை ஏற்படுகிறது.

தமிழகத்திற்குத் தேவையான 30 மில்லியன் யூனிட்டுகளிலே 24 மில்லியன் யூனிட்டுகள்தான் இப்போது உற்பத்தி செய்யப்படுகின்றது என்ற செய்தியினை நாளேடுகளின் மூலமாக நாம் அறிகிறோம். தற்போது அனல் மின் நிலையங்களிலே மின் உற்பத்தி அதிகமாக இல்லாததால் அனல் மின் நிலையங்யங்களையே பெரிதும் நாம் நம்பி இருக்கவேண்டிய நிலைமை

இருக்கின்றது. இந்த அனல் மின் நிலைய மின் உற்பத்தியை முழுமையான அளவிலே முடுக்கி விடுவதற்குரிய வகையிலே அரசு கூடுமானவரை எல்லா முயற்சிகளையும் முனைப்பாகவும் முன்னெச்சரிக்கையாகவும் எடுத்துக் கொண்டு இருக்க வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

ஆனால் இங்கே பேசிய எதிர்க் கட்சிகளை சார்ந்த உறுப்பினர்கள் இந்த நிலக்கரி கோட்டா விஷயத்திலே ஏதோ மத்திய அரசு இந்த மாநில அரசைப் பொறுத்தவரையில் பாரபட்சமாக நடந்து கொள்வதைப் போலவும் வேண்டுமென்றே அவ்வாறு செய்வது போலவும் உணர்வு ஏற்படுகின்ற வகையிலே கருத்துக்களை இங்கே தெரிவித்து இருப்பது மெத்த வருந்தக்கூடிய ஒன்று. அது கண்டிக்கக்கூடிய ஒன்று. நம்முடைய மாநிலத்திலே நிலக்கரி தட்டுப்பாடு என்று சொன்னவுடனே இதனை மைய அரசின் கவனத்திற்கு நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்தபோது மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. கனிகான் சவுத்திரி அவர்கள் தமிழகத்திற்குத் தேவையான நிலக்கரியினை சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து சப்ளை செய்துயுமாறு ஆணையிட்டிருப்பதாக நமக்கு நாளேடுகளின் மூலம் செய்திகள் தெரிய வந்தன.

அடுத்தபடியாக தமிழகத்திற்கு வரவேண்டிய நிலக்கரி மராட்டிய மாநிலத்திற்குத் திருப்பி விடப்பட்டிருப்பதை அறிந்து அதனை மீண்டும் தமிழகத்திற்குகே திருப்பி அனுப்புவேண்டும் என்ற ஆணையை மத்திய அமைச்சர் அவர்கள் பிறப்பித்தது பற்றியும் செய்திகள் நாளேடுகளின் மூலமாக வந்து கொண்டிருக்கின்றன. இதுபற்றி எல்லாம் முறையாக மத்திய அரசு ஆணையிட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல, தமிழகத்திலே மின்சார உற்பத்திக்கு தடங்கல் இல்லாத வகையில் எல்லா வகையான உதவிகளையும் மத்திய அரசு முறையாகச் செய்துகொண்டிருக்கின்றது. இன்னும் சொல்லவேண்டும் என்றால் ஒரிசாவிலே உள்ள டால்சேர் நிலக்கரி சுரங்கத்திலே இருந்து நிலக்கரியைத் தமிழகத்திற்கு அனுப்புவதற்கு உரிய முயற்சியை மத்திய அரசு எடுத்து கொண்டிருக்கின்றது என்ற செய்தியையும் நமக்குக் கிடைத்துக்கொண்டிருக்கின்றது. .........(குறுக்கீடு) ....... தலைவரவர்களே, அவர்கள் பேசுகின்றபோது நான் பேசாமல் தானே இருந்தேன். ஆகவே இது முக்கியமான பிரச்சினை. இதைப்பற்றி நான் தெளிவுபடுத்தவேண்டும். மின்சார உற்பத்தி பற்றிய பிரச்சினை.......... (குறுக்கீடு) ஆகவே இந்தமாதிரியான மின்சாரத் தட்டுப்பாட்டை மாநில அரசு முன்னமேயே எதிர்பார்த்து அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அடுத்து அவர்கள் நிலக்கரியை அனுப்புவதாக இருந்தாலும் போதிய வாகன வசதி இல்லை. என்று சொல்லப்படுகின்ற நிலைமையில் நம்முடைய மாநில அரசுபோதிய வாகனங்களை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.



தமிழக அரசினிடத்திலே பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் இருக்கின்றது. அதன் மூலமாகவாவது நமக்கு அதிகமான செலவு ஏற்பட்டாலும் கூட கப்பல்களை அனுப்பி அதன்மூலம் நிலக்கரியினைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சி செய்திருக்க வேண்டும். அதுமட்டுமல்ல, பொருள் போக்குவரத்துக் கழகம் இருக்கின்றது. அவற்றின் மூலம் அதாவது லாரிகள் மூலமாவது நிலக்கரி கொண்டுவருவதற்குரியமுயற்சியினை நமது அரசு செய்திருக்கவேண்டும். அவற்றிலே ஓரளவு முயற்சியினை செய்திருப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். ஆகவே தமிழகத்தில் தற்போது போதிய அளவில் மின்சாரம் உற்பத்தி செய்வதில் தமிழக அரசு முனைப்பாகச் செயல்படவேண்டும். ஆகவே இது தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் வருவதாலும், தமிழகத்திலே இன்று ஒரு பதட்ட நிலை உருவாகி இருப்பதாலும், இது குறித்த விரிவாக விவாதிக்க வேண்டி இருப்பதாலும் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. பொ. விஜயராகவன் : தலைவரவர்களே, இன்றைய தினம் தமிழகத்திலே கடுமையான மின்வெட்டு ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் நிலக்கரி தட்டுப்பாட்டின் காரணமாக எண்ணூர் அனல் மின் நிலையத்தில் ஏறத்தாழ 110 மெகாவாட் மின் உற்பத்தி செய்கின்ற இயந்திரங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற நிலைமை என்னவென்றால் அன்றாடம் காய்ச்சிகள் போன்று அந்த அனல் மின் நிலையங்கள் நிலக்கரி வருமா வராதா என்று எதிர்பர்த்துக் கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. அனல் மின் நிலையங்களில் தொடர்ந்து மின் உற்பத்தியை நடத்த முடியாத நிலைமை இருக்கின்றது. மேலும் தமிழகத்திற்கு சிங்கரேணியிலிருந்து வரவேண்டிய நிலக்கரி என்ன காரணத்தால் மராட்டிய மாநிலத்திற்குப் போய்விடுகின்றது என்பது தெரியவில்லை. இதை ஒழுங்காகக் கட்டுப்படுத்தி தமிழகத்திற்கு அனுப்பவேண்டிய நிலக்கரியினை ஒழுங்காக தமிழகத்திற்கு அனுப்புவதற்குரிய மத்திய அரசு இன்றைக்கு என்ன செய்துகொண்டிருக்கின்றது என்பது என்போன்றவர்களுக்குப் புரியவில்லை.

மேலும் ஒரிசாவிலே உள்ள டால்சேர் நிலக்கரி சுரங்கத்திலே இருந்து நமக்கு நிலக்கரி வேணடும் என்று கேட்டால் அங்கே வேன்கள் இல்லை என்றும் ஆகவே அவைகளை அனுப்புவதற்குரிய வழிவகைகள் இல்லை என்றும் சொல்லப்படுகின்றது எனவேதான் நிலக்கரி சப்ளை செய்ய முடியவில்லை என்றும் சொல்கிறார்கள்.

[முற்பகல் 11—30]

நெய்வேலியிலிருந்து தமிழகத்திற்கு கிடைக்கவேண்டிய மின்சாரத்தின் அளவுகூட இன்றைக்கு குறைவாக இருக்கிறது. கேரள மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு வந்து கொண்டிருந்த

மின்சாரத்தின் அளவையும் குறைத்திருக்கிறார்கள். இப்படி ஏற்கெனவே மின் வெட்டு இருந்துகொண்டிருக்கிற நேரத்தில், அதற்கும் மேலாக வரவேண்டிய இடங்களிலிருந்து, வரும் மின்சாரத்தின் அளவும் குறைந்திருக்கிறது. ஆகவே தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளில் வேலை செய்யு தொழிலாளர்கள், தொழில் நிறுவனங்கள், விவசாயிகள், பொது மக்கள் ஆகிய யாவருமே மிகுந்த கவலைக் கொண்டிருக்கிறார்கள் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, சமுதாயத்தின் நன்மையைக் கருதி, தமிழ்நாட்டிற்கு வரக்கூடிய அபாயத்தை குறைக்க வேண்டும் என்பதற்காக உள்ள நிலையை எடுத்துச் சொல்லி, கேட்க வேண்டிய உரிமையைக் கேளுங்கள் என்று சொன்னால், ஏற்கெனவே இருக்கக்கூடிய மத்திய மாநில உறவைக்கூட இதனால் கெடுத்து விடுவார்கள் என்று சொல்வது என்ன பொருளில் கூறப்படுகிறது என்று தெரியவில்லை. அது மட்டும் அல்ல, ஒரு வேளை அது ஒரு விதமான மிரட்டலோ என்று கேட்க விரும்புகிறேன்.

ஆகவே, இருக்கிற சூழ்நிலையை உணர்ந்து, மத்திய அரசு எந்த பரஈபட்சமும் காட்டாமல், மாநிலங்களுக்கு உள்ள பிரச்னைகளின் தேவைகளின் அடிப்படையில். நிலக்கரியை தருவதற்கு முன் வரவேண்டும். அந்த வகையில் நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இந்தப் பிரச்சினையில் கட்சி வேறுபாடு பார்க்காமல், கட்சி மாச்சரியங்களுக்கு இடம் கொடாமல், தமிழக மக்களுடைய பிரச்னை என்பதை உணர்ந்து எல்லாக் கட்சிகளும் இவ்விஷயத்தில் ஒன்று படவேண்டும். அதைக் கேட்டு பெறுவதற்கு நம் மாநில அரசும் முன் வரவேண்டும். ஏனென்றால், இது தொழில்களைப் பாதிக்கக் கூடிய பிரச்னை, எல்லா வளங்களைக் குறித்த பிரச்னை, உற்பத்தியைப் பெருக்குகிற வகையில் ஏற்படுகிற பிரச்சினை, மக்களின் அன்றாடத் தேவைகளில் ஏற்படுகிற பிரச்னை. ஆகவே, இத்தகைய பிரச்னைகளில், நீண்ட நேரம் கருத்துக்களை பரிமாற, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூர் அனல் மின்சக்தி நிலையத்திற்கு, நாள் ஒன்றுக்கு 5,000 டன் நிலக்கரி தேவை என்றும், அந்த எண்ணூர் நிலையத்திற்கு மாதவாரியில் 11/2 லட்சம் டன் நிலக்கரி தேவை என்றும், அதேபோல தூத்துக்குடி மின் நிலையத்திற்கு மாதம் ஒன்றுக்கு 11/2 லட்சம் டன் தேவை என்ற நிலையும், ஆனால் அங்கே கிடைக்கிற நிலக்கரி மாதம் ஒன்றிற்கு ½ லட்சம் தான் என்ற நிலையும் இன்று தமிழகத்தில் இருக்கிறது.

அத்தோடு எண்ணூரிலே 110 மெகாவாட் மின்சக்தி நிலையும் ஒன்று கெட்டுவிட்டது என்ற நிலைமையும், தமிழகத்திற்கு ஒரு ஆபத்தான நிலையைத் தந்திருக்கிறது. இந்த



நிலையில் மின்சாரத்தால் தமிழகம் முழுவதும் பாதிக்கப்படுகிற ஒரு பகட்டமான நிலைமை இருக்கிறது. கைக்கும் வாய்க்கும் அன்றாடம் காய்ச்சுகிற நிலைமை என்று தினமணி பத்திரிகை குறிப்பிட்டிருப்பதைப்போல ஒரு ஆபத்தான நிலைமை தான் இருக்கிறது. சிங்கரேணியிலிருந்தும், ஒரிசாவிலிருந்தும் நிலக்கரியை உடனடியாக பெறுவதற்கான நடவடிக்கைகளை, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அமைச்சரவையும் துரிதப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எண்ணூருக்குத் தேவையான 1½ லட்சம் டன் நிலக்கரியும், தூத்துக்குடி மின்நிலையத்திற்குத் தேவையான 1½ லட்சம் டன் நிலக்கரியையும், பெறுவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வலியுறுத்துகிறேன். எண்ணூரிலே 110 மெகாவாட் கொண்ட ஒரு மின்சக்தி நிலையம் கெட்டு விட்டதால், பெரிதும் பாதிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைவிட கடுமையான பாதிக்கக் கூடிய ஒரு நிலைமை, மின் சக்தியைப் பொருத்த வரையில் மே, ஜூன் மாதங்களில் தமிழகத்தில் ஏற்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அது மட்டும் அல்லாமல், இன்றைய தினம் வியாசர்பாடி போன்ற இடங்களில், சில தனியார்கள், நிலக்கரியை மலைபோல் குவித்து வைத்துக் கொண்டு, வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு யார் அந்த உரிமையைக் கொடுத்தது? அப்படிப்பட்ட நடவடிக்கைககளை தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, ஆபத்தான நிலைமை மின்சக்தியைப் பொருந்த வரையில் தமிழகத்தில் ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிற காரணத்தால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதை விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**Thiru K. S. G. Haja Shareef** : Mr. Speaker Sir, I am very grateful to you for giving me 2 or 3 minutes to speak. I want to explain certain position. So far as Tuticorin is concerned, I believe there is no difficulty in getting coal by sea. So far as Ennore is concerned, the coal is allotted from Singareni Collieries. We require to the extent of about lakh and sixty five thousand or seventy thousand tonnes. But, I am told that last month we have received one lakh six thousand tonnes, and earlier a little less or so.

What strikes me is that this Government must keep a representative or create a small agency to look after the various parties and co-ordinate and despatch. If the man is there with an incentive that he will be paid so much per tonne, it will be his

interest to see that he despatches as much nearer to our target as possible. I believe this system was there about two years ago When the Railway made a lot of facilities to move the coal, this system was abolished. I would request the Minister to consider and see that this system is reintroduced and an effective agent or a man is posted who can co-ordinate with the various organisations and send as much coal as possible.

With all these things, I find that the Government is still to find out why we are not reaching the target of each unit Now we are getting not more than 40 to 50 per cent and the remaining 55 to 60 per cent we are not getting. What is it that stands there in the way of getting it; I have been insisting that we should try to produce the maximum capacity. Even if we produce 70 to 75 per cent it will be much better, and there will not be any power cut at all ever at the peak season of summer. My strong recommendations are that Government immediately sets up an agency there at Singareni to look after their interests, who will see that he despatches as much as possible. I am sure that if an effective man is put up there, he will despatch even 1½ lakhs tonnes or more than 1½ lakhs tonnes of coal. Thank you, Sir.

*மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கனவே நிலைமை களை தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். ஆகையால் நான் நீண்டநேரம் அதைப்பற்றி விளக்கம் சொல்லவேண்டிய அவசிய மில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஏற்கனவே மின் வெட்டு அமலில் உள்ளது. ஆனால் மின் பற்றாக்குறை என்று இருந்துவந்த நிலைமை மின்சார நெருக்கடி என்று ஆகிவிடக் கூடாது என்பதுதான் இன்றைக்கு நமக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய கவலை.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாஜா செரீப் அவர்கள் பேசும்போது, எண்ணூர் அனல் மின் நிலையம் முழு உற்பத்தியை யும் செய்யவேண்டும், அதாவது அதன் முழுத் திறனையும் பயன் படுத்தவேண்டும் என்று சொன்னார்கள். எண்ணூர் மட்டுமல்ல, எண்ணூர், நெய்வேலி, தூத்துக்குடி ஆகிய மூன்று அனல் மின் நிலையங்களும் முழு உற்பத்தி செய்தால்தான் கோடைக்காலத் தில் நம் மின்சாரத் தேவையை சமாளிக்கமுடியும். இல்லை யென்றால் சமாளிக்கமுடியாது. ஆனால் இன்றுள்ள நிலைமை என்னவென்றால் எண்ணூர் அனல் மின் நிலையத்தை பொறுத்தவரையில் அது என்றைக்கு துவக்கப்பட்டதோ அன்றிருந்து இதுவரை இல்லாத அளவிற்கு கடந்த மார்ச் மாதம் மிகவும் திறமையாகச் செயலாற்றியிருக்கிறது. 303 மில்லியன்



யூனிட்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்திருக்கிறது. 68·7 சத விகிதம் அந்த அனல் மின்சார உற்பத்தி நிலையத்தில் இருந்து நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்தியா முழுவதிலும் 43 சத விகிதம் தான் மின் உற்பத்தி விகிதம். சாதாரணமாக உலகம் முழுவதும் 60 லிருந்து 65 சத விகிதம் என்று சொல்வார்கள். ஆனால் எண்ணூரில் கடந்த மாதம் 68·7 சத விகிதம் மின் உற்பத்தி செய்து மிகப்பெரிய ஒரு சாதனையைக் காட்டியுள் ளது. நான் கூட அந்தப் பொறியாளர்களையும் அங்கிருக்கிற தொழிலாளர்களையும் பாராட்டி அரசாங்கத்தின் சார்பில் ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறேன். ஆனால் இந்தளவிற்கு அது திறமையாக செயல்பட ஆரம்பித்த பிறகு அதற்கு தேவையான நிலக்கரி இல்லாமல் போயிருப்பது மிகப்பெரிய குறையாகும். கடந்த 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய, இந்த மாத ஆரம்பத்திலிருந்து ஒரு யூனிட், 110 மெகாவாட்ஸ் உற்பத்தித்திறன் கொண்ட ஒரு யூனிட் இயக்க முடியவில்லை, ஏனென்றால் நிலக்கரி இல்லை. இதுதான் இப்போது ஏற்பட் டிருக்கிற நிலைமை. இதனால் மின் தேவையைச் சமாளிப் பதற்காக நாம் நீர் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து மின் சப்ளை எடுக்கிறோம். இது எந்த நிலையில் கொண்டுபோய் விடும் என்றால் ஜூன் மாதம் மழை வரவில்லையென்றால் நம் முடைய நீர்தேக்கங்களில் உள்ள நீரும் போய்விடும். ஆகவே நீர்தேக்கங்களில் நீர் இல்லாது, அனல் மின் உற்பத்தி நிலையங்கள் இயங்கவில்லை என்றால் ஜூன் மாதம் பெரியதொரு நெருக்கடி கடியை நாம் சமாளிக்கவேண்டிவந்துவிடும். அதனால் தான் இது சம்பந்தமாக மத்திய அரசு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று நாம் கேட்டுவருகிறோம்.

இங்கே பேசுகிறபோது இது சம்பந்தமாக அரசாங்கம் அவ்வப் போது என்ன நடவடிக்கைகள் எடுத்தது, அதிகாரிகளையெல் லாம் பார்த்தீர்களா, சந்தித்தீர்களா என்று கேட்டார்கள்.

[முற்பகல் 11–40].

[மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை.]

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிலைமை பற்றி பிப்ரவரி மாதம் 17 ஆம் தேதி மத்திய மின்சக்தி அமைச்சர் அவர்களுக்கு நேர்முகக் கடிதம் எழுதியிருந்தேன். மூன்று நாட்களுக் குத் தேவையான ஸ்டாக் தான் இருக்கிறது, உடனடியாக நிலக் கரியை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன். அதன் விளைவாக பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் ஓரளவிற்கு அவர்களும் கொஞ்சம் சப்ளையை அதி கரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால், அவர்களிடத் திலிருந்து எனக்கு 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் தேதியன்று, கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருப்பது :- சிங்கரேணி நிலக்கரி உற்பத்தி நிலையத்தில் தொழில் தகராறு இருக்கிறது; ஆகவே நிலக்கரி உற்பத்தி

செய்யமுடியாத நிலையிருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல், ரயில்வே வாகன்களின் பற்றாக்குறையைச் சுட்டிக்காட்டி, ரயில்வே அமைச்சர் திரு. கேதார பாண்டே அவர்களுக்கு பிப்ரவரி மாதத்தில் கடிதம் எழுதினேன். அவரும் போதுமான வாகன்கள் கொடுப்பதிலே கஷ்டமில்லை, நிலக்கரி பற்றாக்குறையான சூழ்நிலை இருக்கின்றது என்று மார்ச் 26 ஆம் தேதி கடிதம் எழுதியிருக்கிறார். நிலக்கரி கொடுக்கின்ற இடத்திலே நிலக்கரி இல்லை என்று சொல்லப்படுகிறது. சாதாரணமாக, டிசம்பர் மாதத்தில் 1,009 வாகன்கள் தேவைப்பட்டது; ஆனால் மார்ச்சிலே 838 வாகன்கள் நிலக்கரி தான் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. எனவே, நான் என்ன செய்ய முடியும் என்று எழுதி, நமக்கே அவர் ஒரு வேண்டுகோள் வைத்திருக்கிறார். ஆந்திர அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லி, இந்த நிலக்கரி பிரச்னையைத் தீர்க்க, உற்பத்தியை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும்படி தெரிவித்திருக்கிறார். இது இன்றைக்கு மட்டும் திடீரென்று ஏற்பட்ட புதிய பிரச்னை அல்ல. இதை முன்கூட்டியே மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறோம்; மத்திய அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறோம். இது சம்பந்தமான காரியங்களைச் செய்வதற்கு எஸ். ஈ. அளவிலே ஒரு அதிகாரியை நியமித்திருக்கிறோம். ஆனால், எனக்கிருக்கிற சங்கடமெல்லாம், இந்த அனல் மின் நிலையங்கள் இயங்குவது பற்றிய ஒரு தெளிவான திட்டவட்டமான நடவடிக்கையை மத்திய சர்க்கார் மேற்கொள்வதில்லை என்பதை நான் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், நிலக்கரியை கோடைக்காலத்தில் மட்டும் கொடுத்தால் போதும் என்ற நிலையிருக்கிறது. அது சரியல்ல. நிலக்கரியை மழைக் காலத்திலும் அவர்கள் கொடுக்கவேண்டும். அப்போது நாம் அவற்றை தேக்கி வைத்துக்கொண்டால், கோடை காலத்திலே பயன்படுத்திக் கொள்ளலாம். ஜூலையிலிருந்து, டிசம்பர் வரை பருவ மழைக் காலம். அப்போது அனல் மின் நிலையங்கள் இயங்காது. மத்திய சர்க்கார் என்ன நினைக்கிறதென்றால், அப்போது எதற்கு நிலக்கரி என்று நினைக்கிறது. அப்போது நிலக்கரி அனுப்பினால், அவற்றை நாம் தெர்மல் ஸ்டேஷன்களிலே தேக்கி, ஸ்டாக் செய்து வைத்துக் கொண்டால், கோடைக் காலத்திலே பயன்படுத்திக் கொள்ள உதவியாக இருக்கும். ஆக, மத்திய சர்க்காருக்கு இதை வற்புறுத்தி, தெர்மல் ஸ்டேஷன்களிலே இருக்கின்ற நிலைமையை எழுதியிருக்கிறோம்.

எண்ணூர் அனல் மின் நிலையமானாலும், தூத்துக்குடி அனல் மின் நிலையமானாலும் எவ்வளவு நிலக்கரியை மொத்தமாகத் தருவதாக அவர்கள் ஒப்புக் கொள்கிறார்களோ, அதை மாதந்தோறும், ஆண்டு முழுவதும் அந்த அளவுக்கான நிலக்கரியை அவர்கள் அனுப்பத் தவறக் கூடாது என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்னொன்று, எண்ணூர் அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரை, மாதத்திற்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் டன் நிலக்கரி தேவை. ஆனால்,



இதை 80,000 டன்னாகக் குறைத்து விட்டார்கள். இப்போது இதைப்பற்றி நான் வற்புறுத்தி, ஒரு இலட்சம் டன் என்ற அளவுக்கு லிங்கேஜாக ஒரு ஒதுக்கீடாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்த ஒரு இலட்சம் டன் வருவதில்லை. அதனால் தான் இப்போது பற்றாக்குறை. ஆனால் நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புவது, இதை ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் டன் என்கின்ற அளவுக்கு ஒதுக்கீட்டை உயர்த்தவேண்டும். அது சிங்கரேணியிலிருந்து கிடைக்கவேண்டும். தல்சாரிலிருந்து எடுத்துச்செல் என்று சொல்லப்படுகிறது. அது ஒரிசா மாநிலத்திலே இருக்கிறது. அங்கிருந்து கொண்டு வருவதற்கு இயலாது என்று சொல்லப்படுகிறது. இது அங்கே இடது கைக்கும், வலது கைக்கும் உள்ள பிரச்னை. அதை அவர்கள்தான் தீர்மானிக்கவேண்டும். எண்ணூர் மின் திட்டத்தைப் பொறுத்தவரையில், சிங்கரேணியிலிருந்து மாதத்திற்கு ஒரு இலட்சம் ஐம்பதாயிரம் டன் நிலக்கரி நமக்கு நிர்ணயம் செய்து, அதை மாதந்தோறும், ஆண்டு முழுவதும் அனுப்பினால், நமக்கு இந்தப் பிரச்னை எழாது. பருவ மழைக் காலத்தில், அனுப்பும்போது நாம் அவைகளைப் பெற்றுக்கொண்டு, கோடைக் காலத்தில் பயன்படுத்திக் கொள்ளலாம். இடையிலே தடங்கல் ஏற்பட்டாலும், இத்தகைய பிரச்னைகள் எல்லாம் வராது. இதையெல்லாம் மத்திய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் நேற்றைய தினம், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசினேன். இரண்டு, மூன்று நாட்களாக முயற்சித்தேன், அவர்கள் டெல்லியிலே இல்லை. நேற்றைய தினம் அவர்களிடத்திலே பேசினேன். அவர்களும் இந்த நிலைமையை உணர்ந்து நாளைய தினம் ஹைதராபாத் வருவதாகவும் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். நானும் அவர்களிடத்திலே முடியுமானால் நானும் ஹைதராபாத் வருகிறேன் என்று சொன்னேன். எப்படியாவது நிலக்கரியை அளவு உயர்த்துவதற்கும், மாதந்தோறும் ஒழுங்காக வருவதற்கும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி இருக்கிறேன். அவர்களிடம் இன்னொன்றையும் எடுத்து சொன்னேன். சிங்கரேணியில் உற்பத்தி ஆகிற நிலக்கரி பெருமளவிற்கு ஆந்திராவிற்கு பயன்படுகிறது. பிறகு நாம் தான் பயன்படுத்துகிறோம். இந்த நிறுவனம், ஆந்திர அரசும், மத்திய அரசும் சேர்ந்து நடத்துகிற நிறுவனம். மத்திய அரசின் சார்பிலே தமிழக அரசு அதிகாரியை அந்த நிறுவனத்திலே, போர்ட் ஆப் டைரக்டர்ஸிலே போட வேண்டுமென்று நான் மத்திய அரசிடம் கேட்டிருக்கிறேன். ஏனென்றால் ஆந்திரா பயன்படுத்துகிறது; நாம் பயன்படுத்துகிறோம். மத்திய அரசு யாரோ ஒருவரை அவர்கள் சார்பிலே நியமிப்பதற்கு பதிலாக தமிழகத்தின் மின்சார வாரியத்தைச் சேர்ந்த ஒருவரை அந்த சிங்கரேணி நிறுவனத்திலே போடுவீர்களேயானால் அந்த பிரச்னைகளை அவர்களே தீர்த்துக் கொள்வார்கள். ஆக அதையும் நாம் அவர்களிடத்தில் வலியுறுத்தி இருக்கிறோம். மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள். நேற்று அவர்களிடத்திலே கூட விவரத்தைச் சொல்லி அவர்களும் டெல்லிக்கு

பேசவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். அவர்கள் பேசினால் மட்டும் போதாது. அவர்கள் கட்சியிலே கூட தீர்மானம் போடவேண்டும். இதற்கெல்லாம் தான் தீர்மானம் போட வேண்டுமே தவிர வேறு எதற்கெல்லாமோ போடுவதினால் நிச்சயமாக பலன் ஏற்படாது.

**Thiru K. S. G. Haja Shareef :** Sir, I would suggest that the Government adopt c rtain busin ss tactics also. If they keep an agency the , a very effectiv and influential man and give him so much per tonn , the whole problem, I assure the Hon. Minister, will be solv d. If h wants any help in this direction, I am prepered to extend the help to him.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—** தலைவர் அவர்களே, அவர்கள் எல்லா உதவிகளையும் செய்து தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் தான் தமிழ் நாடு காங்கிரஸ் மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, வேறு அல்ல.

**Thiru K. S. G. Haja Shareef :** I have already taken action and I will continue to take action in this matter.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மிக்க நன்றி. அத்தகைய நடவடிக்கைகள் மூலம் மத்திய, மாநில அரசுகளுக்கு மட்டுமல்ல, தமிழக மக்களுக்கு, உங்களுடைய இயக்கத்திற்கும் ஒரு நல்ல எண்ணம் உருவாவதற்கு அது பயன்படும் என்ற காரணத்தாலே தான் நான் இந்த கருத்தை தங்கள் முன் வைத்தேன். ஆகவே எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. மத்திய அரசு நமக்கு மூன்று விதங்களில் உதவி செய்வார்கள் என்றால் இந்தப் பிரச்சினை தீரும். கொடுக்கப்படுகிற நிலக்கரி அளவு உயர்த்தப்பட வேண்டும். இரண்டாவது மாதந்தோறும், ஆண்டு முழுவதும் ஒழுங்காக அனுப்புவதற்கு அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். மூன்றாவது, சிங்கரேணி நிலக்கரி நிறுவனத்திலே நம்முடைய பிரதிநிதியை டெல்லி சார்பிலே அங்கே போடவேண்டும்.

இந்த மூன்றும் அவர்கள் செய்து தர வேண்டுமென்று இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் அதை தெரிவித்து, இதற்கு மேலும் அவையை ஒத்தி வைத்து பேச வேண்டிய அவசியம் இல்லை என்கிற காரணத்தினாலே, அவையை ஒத்தி வைக்க தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்கு பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.



## அ. கோவை நகரில் ரேஷன் கடைகளில் கோதுமை கொடுக்கப் பெறாதது.

" கோவை நகரத்தில் ரேஷன் கடைகளில் மக்களுக்கு கோதுமை கிடைக்காமலும், ஏதாவது ஒரு சமயத்தில் கிடைத்தாலும் ஒரு குடும்ப கார்டுக்கு இரண்டு கிலோ மட்டுமே கொடுக்கப்படுவதாலும் பெரும் நெருக்கடி ஏற்பட்டு மக்கள் மத்தியில் தோன்றியுள்ள பதட்ட நிலை'' பற்றி திருவாளர்கள் கே. ரமணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், ரா. கிருஷ்ணன், இரா. தாமரைக்கனி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை நகரத்தில் ரேஷன் கடைகளில் மக்களுக்கு கோதுமை கிடைக்காமலும், ஏதாவது ஒரு சமயத்தில் கிடைத்தாலும் ஒரு குடும்ப கார்டுக்கு இரண்டு கிலோ மட்டுமே கொடுக்கப்படுவதாலும் பெரும் நெருக்கடி ஏற்பட்டு மக்கள் மத்தியில் தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கோதுமை விளைவது இல்லை. தமிழ்நாட்டின் நுகர்வோர்களின் தேவையை பொது விநியோக முறையின்கீழ் நிறைவு செய்வதற்கென மைய அரசு மாதந்தோறும் 3,000 டன்கள் கோதுமையை ஒதுக்கீடு செய்கிறது. இந்த 3,000 டன்கள் கோதுமையும் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் நுகர்வோர்களுக்கு குடும்ப அட்டைகளின்மூலம் வழங்கப்படுவதற்கென பகிர்ந்தளிக்கப்படுகிறது. கடந்த 3 மாதங்களில் கோவை நகரத்துக்கென பகிர்ந்தளிக்கப்பட்ட கோதுமையின் அளவு முறையே மாதம் ஒன்றுக்கு 130 டன்கள். இந்த கோதுமை குடும்ப அட்டை ஒன்றுக்கு 2 கிலோ முதல் கிலோ வரை என்ற அளவில் மாதந்தோறும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. கோவை நகரத்தில் உள்ள மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை சுமார் 1.00 இலட்சத்துக்கு மேலாகும். அட்டை ஒன்றுக்கு 2 கிலோ என்று கணக்கிட்டாலும் மொத்த தேவை மாதம் ஒன்றுக்கு 200 டன்களுக்கு மேலாகும். நம் மாநிலத்துக்கு ஒதுக்கீடு செய்யப்படும் கோதுமையின் குறைந்த அளவைப்பொறுத்து பல்வேறு மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிப்பு செய்யப்பட்டு வருகிறது. தேவையைவிட மிகவும் குறைவாக ஒதுக்கீடு உள்ளதால் தான், தேவைப்பட்ட அளவிற்கு கோதுமை வழங்க முடிய

தில்லை. மைய அரசை பல கட்டங்களிலும் இவ்வரசு கூடுதல் ஒதுக்கீடு கோரி விண்ணப்பித்துக்கொண்டுள்ளது. இருப்பினும் குறைந்த அளவு கோதுமையே ஒதுக்கீடாக கிடைத்து வருகிறது. அதிக அளவு கோதுமை ஒதுக்கீடு வந்தாலொழிய நுகர்வோர் எல்லோரின் தேவையையும் நிறைவு செய்ய இயலாது. இருப்பதை வைத்துக்கொண்டு இந்த அரசு விநியோகம் செய்து வருகிறது.

[முற்பகல் 11-50]

திரு. பீ. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : ஏற்கெனவே மத்திய சர்க்காருடைய கோதுமை ஒதுக்கீடு போதுமானதாக இல்லை மீண்டும் கேட்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் சொல்லப்போனால் தமிழ்நாட்டிலே வறட்சியின் காரணமாக, விளைவின்மை காரணமாக, அரிசித் தட்டுப்பாடு அதிகமாக ஏற்பட்டு இருக்கிற இந்தச் சூழ்நிலையில் மேலும் இதைச் சுட்டிக்காட்டி அதிக அளவுக்குக் கோதுமை அனுப்பப்படவேண்டுமென்று வற்புறுத்தி அதிக கோதுமையைப் பெற்று விநியோகம் செய்ய அரசுமுன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போன்று உணவுப் பற்றாக் குறை ஏற்பட்டு இருக்கிற சூழ்நிலையில் அதிகமான அளவுக்கு கோதுமையை வாங்குகிற பழக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே இப்போது அளிக்கப்படுகின்ற இந்த 3 ஆயிரம் டன்னை வைத்துக்கொண்டு போதுமான அளவுக்கு விநியோகம் செய்ய முடியாது. தேவைப்படுகிற அளவுக்குக் கொடுக்க முடியாவிட்டாலும் 10 ஆயிரம் டன்னாவது கொடுத்தால்தான் ஓரளவுக்கு தேவையைப் பூர்த்தி செய்யமுடியும் என்று மத்திய அரசுக்கு சில நாட்களுக்கு முன்னாலே கூட எழுதியிருக்கிறோம். ஆனால் அவர்கள் வட பகுதியிலே உள்ளவர்களுக்கு கோதுமையின் தேவை அதிகமாக இருப்பதன் காரணமாக பற்றாக் குறை என்று சொல்கிறார்கள். நமக்கு அரிசிதான், தேவையென்றாலும்கூட கோதுமையை புழங்குகிறவர்கள் இருக்கிறார்கள், ஆகவே ஓரளவுக்கு அதிகமாகத் தரவேண்டுமென்ற முறையிலே தான் 10 ஆயிரம் டன் வழங்கவேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறோம். மேலும் மேலும் வற்புறுத்துவதற்கு இந்த அரசு முன்வரும்.

திரு. என். வரதராஜன் : கோதுமை போதுமான அளவுக்கு மத்திய அரசின் கையிருப்பில் இருக்கிறது, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் ஏராளமான கையிருப்பு இருக்கிறது என்ற தகவல் வருகிறது. தமிழ்நாட்டில் கோதுமையைக் கொண்டு உற்பத்தி செய்கிற மாவு ஆலைகள், கோதுமை மாவு, ரவை, ஆட்டா மாவு இவைகளை உற்பத்தி செய்கிற ஆலைகள் போதுமான கோட்டா கொடுக்கப்படாத காரணத்தால் முடங்கிக்



கிடக்கின்றன, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள், தமிழ்நாட்டில் வறட்சி இருக்கிறது, இவ்வளவையும் கொண்டு மாநில அரசு கேட்கும்படியான 10 ஆயிரம் டன்னையாவது கொடுக்கவேண்டுமென்று உடனடியாக மத்திய அரசை வற்புறுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே குறிப்பிட்டபடி முதலிலேயே எழுதினோம். இப்போது 2, 3 நாட்களுக்கு முன்னாலே கூட வற்புறுத்தி எழுதியிருக்கிறோம். அரவையாலைகளுக்குப் பயன்படுகின்ற வகையில் 5, 6 மாதங்களுக்கு 65 ஆயிரம் டன் என்று அனுப்பிக்கொண்டிருந்தார்கள். இப்போது அதையும் 30 ஆயிரம் டன்களாகக் குறைத்துவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்று ரவை, மைதா போன்றவை உற்பத்தியில் இடர்ப்பாடு ஏற்பட்டிருக்கிறது, அதிகமாக அளிக்கவேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். எல்லா மாநிலங்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். குறைந்த அளவு 40 ஆயிரம் டன்னாவது கொடுத்தால்தான் ஓரளவுக்கு தேவையைப் பூர்த்தி செய்யமுடியும் என்று சொல்லி அதிகமாகக் கேட்டிருக்கிறோம். பொது விநியோகத்திற்கு 3 ஆயிரம் டன் போதாது, 10 ஆயிரம் டன்னாவது தரவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாட்டு மக்கள் அரிசி உணவை தான் முக்கியமாகச் சாப்பிடுகிறார்கள். அதனால் அதிகமானவர்கள் நீரிழிவு வியாதியால் பாதிக்கப்படுகிறார்கள். அந்த வியாதிக்கு தகுந்த உணவு கோதுமைதான். ஆகவே மற்ற மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்திற்கு அதிகமாக ஒதுக்கவேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு வேண்டுகோள் விடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்பை தான் முதலிலே தெரிவித்தேன். 3 ஆயிரம் கொடுக்கிறார்கள், அது போதாது, 10 ஆயிரம் டன்னாவது கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திவருகிறோம். மீண்டும் மீண்டும் வற்புறுத்துவோம்.

ஆ. தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தில் பல பதவிகள் நிரப்பப் பெறாமல் இருப்பது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தில் பல மாதங்களாக, ஒருங்கிணைப்பு ஆசிரியர் பதவி, பாடநூல் தயாரிப்பாளர், உதவியாளர், பதவி, கண்காணிப்பாளர் போன்ற பதவிகள் நிரப்பப்படாமல் இருப்பது குறித்தும், அதனால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள்

குறித்தும் திருவாளர்கள் இரா. கருப்பையா, தி.கா. நல்லப்பன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவருவார்கள். திரு இரா. கருப்பையா.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தில் பல மாதங்களாக, ஒருங்கிணைப்பு ஆசிரியர் பதவி பாடநூல் தயாரிப்பாளர், உதவியாளர் பதவி, கண்காணிப்பாளர் போன்ற பதவிகள் நிரப்பப்படாமல் இருப்பது குறித்தும், அதனால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்தும்'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் பள்ளிகளுக்கான அரசுப் பாட நூல்களை வெளியிட்டு வருகிறது. தமிழ்நாட்டிற்கு மைய அரசு ஒதுக்கீடு செய்யும் மலிவு விலைத் தாளைக் கொண்டு நோட்டுப் புத்தகம் தயாரித்து விநியோகிக்கும் வேலையையும் பாடநூல் நிறுவனம் 1979 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் .செய்துவருகிறது. இந்தப் பணிகளை செவ்வனே செய்வதற்கு தேவையான பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு நிரப்பப் பட்டுள்ளன. ஒருமுகப்படுத்தும் பதிப்பாசிரியர் பணியிடம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் பாடநூல்களை எழுதும் ஆசிரியர் குழுவும் பாடநூல்களை ஆய்வு செய்யும் வல்லுநர் குழுவும் அனுப்பும் கையெழுத்துப் பிரதிகளை நிறுவனத்தில் உள்ள பதிப் பாசிரியர்கள் பார்த்து அச்சுக்கு அனுப்பி வருவதால் ஒருமுகப் படுத்தும் பதிப்பாசிரியர் தேவையில்லை, என்று கருதி பாட நூல் நிறுவனம் அப்பணியிடத்தை நிரப்பவில்லை. கண்காணிப் பாளர் பணியிடங்கள் எதுவும் நிரப்பப்படாமல் இல்லை.

மேலும், தமிழ்நாட்டுப் பாடநூல் அலுவலக அமைப்பு முறை குறித்து பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறையைச் சார்ந்த (Organisation and Methods Cell) விரிவான ஆய்வு செய்து அறிக்கை ஒன்றினை அளித்துள்ளது. அக்குழு தனது அறிக்கையில் பாடநூல் நிறுவனத்தில் இருக்கக் கூடிய பல்வேறு பணியிடங்கள் மற்றும் அமைப்பு முறைகளைப் பற்றி பல்வேறு பரிந்துரைகள். செய்துள்ளது. அப்பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. அதன் மீது எடுக்கப்படும் முடிவை ஒட்டி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.



பாடநூல் நிறுவனம் எல்லாப் பணிகளையும், தற்போது உள்ள பணியாளர்களைக் கொண்டே, செவ்வனே செய்துவருகிறது. பொதுமக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் பாட நூல்களைக் குறித்த காலத்திற்கு முன்பே தயாரித்து எல்லா மாவட்டங்களுக்கும் விநியோகித்து வருகிறது.

திரு. ஆர். கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பாடநூல் நிறுவனத்தில் ஒருங் கிணைப்பு ஆசிரியர் பதவி ஒன்றும், பாடநூல் தயாரிப்பாளர் பதவி மூன்றும், இன்னும் உதவியாளர் பதவிகள், கண்காணிப் பாளர் பதவிகள் காலியாக இருப்பதாகத் தெரிகிறது. எல்லா நபர்களும் இருக்கின்றபொழுதே பாடப் புத்தகங்கள் உரிய காலத்தில் கிடைக்கவில்லை என்ற புகார் இருந்து வருகிறது. இதன் விளைவாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, உரிய காலத்தில் இந்தப் பாடப் புத்தகங்களைக் கொண்டு வருவதற்கு இந்த இடங்களைப் பூர்த்தி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நிர்வாகச் சீர்திருத்தத் துறை, பாட நூல் நிறுவனத்தினுடைய அமைப்பு முறையை ஆராய்ந்து ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறது. அதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பரிசீலனை முடிவில் தேவையான நடவடிக்கைகளை நாம் எடுக்கவிருக்கிறோம். இதிலே பாட நூல் நிறுவனமே புத்தகங்களை எழுதுகின்ற பொறுப்பை வைத்துக்கொண்டிருந்ததினாலே பல குறைபாடுகளை நாம் கண்டோம். ஆகவே, அந்தப் பொறுப்பைப் பள்ளிக் கல்வித் துறை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற ஒரு கருத்தும் இருக் கிறது. ஆகவே, இந்த இரண்டின் அடிப்படையிலேயும் முடிவுகள் எடுக்கப்படும்.

திரு. ஆர். கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பாடப்புத்தகங்களைச் சரியான முறையில் ஒருமுகப்படுத்தி ஒருங்கிணைந்து கொண்டு வர ஒருங்கிணைப்பு ஆசிரியர் பணி இடம் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் இப் பொழுது எழுதும் ஆசிரியர் குழுவும் ஆய்வு செய்யும் வல்லு நர் குழுவும் இதைப் பூர்த்தி செய்யலாம் என்று கூறப்பட்டிருக் கிறது. இந்தப் பணிகளை இவர்கள் எவ்வாறு செய்ய முடியும். ஆகவே, ஒருங்கிணைப்பு ஆசிரியர் பதவியை மீண்டும் நியமிப் பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தப் புத்தகத்தை எழுதுகின்ற பொறுப் பையே பாடநூல் நிறுவனத்திடமிருந்து எடுத்துப் பள்ளிக் கல் வித் துறையிடம் தந்து விடலாமா என்கின்ற ஒரு கருத்தை

நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம், என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன். அந்த அடிப்படையிலே தேவையான பதவிகளை உருவாக்குவோம்; அல்லது தேவையான நபர்களை நாம் வைத்துக்கொள்வோம்.

**திரு. தி. கா. நல்லப்பன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே இதைப்பற்றிக் கூறப்பட்டிருந்தாலும் வருடாவருடம் பள்ளிகள் திறந்து இரண்டு மாதம் மூன்று மாதங்கள் கழித்துத்தான் பாடப் புத்தகம் குழந்தைகளுக்குக் கிடைக்கின்றன. ஆகவே, இதையும் கருத்திற்கொண்டு, இந்த ஆண்டாவது அந்தப் பாடப் புத்தகங்கள் குறித்த காலத்தில் கிடைக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு தலைவரவர்களே, பாடப்புத்தகங்கள் குறித்த காலத்தில் வருவதற்கான அந்த நடவடிக்கைகளை அந்த நிறுவனம் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பதவிகளை நிரப்புவது என்பது வேறு ; பாடப்புத்தகங்களைத் தயாரிப்பதற்கான ஒரு அடிப்படையிலேதான் இந்தப் பதவிகள் உருவாக்கப்பட்டன. அந்தப் பணியை அவர்களிடமிருந்து எடுக்க வேண்டுமென்று நாம் நினைக்கின்றோம்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவு.

### கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு, 1981

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



## 7. வரவு-செலவுத் திட்டம் 1981–82 வாக்கெடுப்பு—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 36—பாசனம்.

(ஆ) கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி.

**திரு. த. ஆறுமுகம்** : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவரவர்களே, பொதுப்பணித் துறை, பாசனம் மீதான மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு சில கருத்துக்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1981–82 இல் ஒதுக்கப்பட்ட தொகை 27,91,54,000 ரூபாய் என்றும், அதே போல் 33,10,42,000 ரூபாய்க்கு மேற்படாமல் வழங்குமாறு அமைச்சரவர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்தத் தொகையை ஒதுக்கினால் மட்டும் போதாது. இந்தத் தொகையெல்லாம், தமிழகத்திலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய கடுமையான வறட்சி உள்ள நேரத்தில், நல்லமுறையில் செலவழிக்கப்பட வேண்டுமென்றால், அரசுத் துறைச் செயலாளராக நிர்வாகம் தெரிந்த, ஒரு டெக்னிக்ஸ் தெரிந்த எஞ்ஜினியர் அரசுச் செயலாளராக நியமிக்கப்பட வேண்டும்.

[நண்பகல் 12–00]

அப்படி நியமித்தால்தான் அந்தப் பணிகள் எல்லாம் சிறப்பான முறையில் நடைபெறும். ஆனால், இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரை, அதிலும் பொதுப் பணித் துறையைப் பொருத்த வரையில், 6 மாதகாலமாக இத்துறை மிகவும் மந்தமான நிலைமையில் இருக்கிறது. ஏனென்றால், இன்றைக்கு 50 உதவி செயற் பொறியாளர்கள் இதுவரை போடப்படவில்லை. ஏ. இ. பதவிகள் 10-ம், செயற் பொறியாளர்—இ.இ. 2-ம் கண்காணிப்புப் பொறியாளர்—எஸ். இ. 2-ம் தலைமைப் பொறியாளர் ஒன்றும் 6 மாத காலமாக போடப்படவில்லை, அவர்கள் இன்றைக்குப் பணியில் இல்லை. நல்ல விவரம் தெரிந்த பொறியாளர் அரசுத் செயலாளராக இருந்தால், அவர் சிறப்பான முறையில், உடனுக்குடன் நிர்ணயித்து, இதையெல்லாம், நிரப்ப; செயல்படுத்த முடிந்திருக்கும். அதன் காரணமாக இன்றைக்குத் தமிழகத்தில், தலைமைப் பொறியாளர் பதவி காலியாக உள்ளதால், பெரியார் அணைத் திட்ட வேலைகள் பெரும் அளவு பாதிக்கப் பட்டிருக்கிறது. திட்ட வேலையில் போதிய முன்னேற்றங்கள் இல்லாத காரணத்தால், உலக வங்கி தரக்கூடிய ரூ. 8 கோடியை இன்றைக்கு இழக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுமோ என்று நான் கருதுகிறேன்.

அதோடு மட்டுமல்ல, தஞ்சை, காவிரி, மேம்பாட்டு திட்ட வேலைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. அரசு ஆணை வெளியிட்டாலும், அரசும், அதிகாரிகளும் ஒத்துழைத்தால்தான் அந்த வேலைகள் எல்லாம் உடனுக்குடன் நடைபெறும். வறட்சியாக இருக்கிற நேரத்தில், அந்த வேலைகளை எல்லாம், உடனடி

யாகப் பூர்த்தி செய்து வைத்தால்தான் பெரியார் போன்ற திட்டங்களையெல்லாம் நாம் செயல்படுத்த முடியும். இல்லையென்றால், எவ்வளவு தொகை ஒதுக்கினாலும், அது வீணாகக் கூடிய சூழ்நிலைதான் உருவாகும் என்பதை மாண்புமிகு துணைத் தலைவர் மூலமாக அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, இன்றைக்கு 100 ஏக்கருக்குக் கீழ்ப்பட்ட நிலங்களுக்குப் பாசனம் அளிக்கும் குளங்களை, ஒன்றியங்களும், 100 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களுக்குப் பாசனம் அளிக்கும் குளங்களை, பொதுப் பணித் துறையும் எடுத்துக் கொண்டாலும் ஒன்றியத்தின் குளங்களை, ஒன்றியத்தின் மூலமாக வெட்டுகிற நேரத்தில், பொதுப் பணித் துறையும் அந்தக் குளங்களை வெட்டுகின்றன. குறிப்பாக, அரியலூர் வட்டத்தில் ஒரு குளம் ஒன்றியத்தின் மூலமாகவும் வெட்டப்பட்டிருக்கிறது. பொதுப் பணித் துறை மூலமாகவும் வெட்டப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, இரு அலுவலகங்களுக்கும் மோதல் ஏற்படுகிற நேரத்தில், நடந்தது நடந்துவிட்டது. இனி, நல்லபடியாக நடக்கட்டும் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு வறட்சியாக இருக்கிற நேரத்தில், பொதுப் பணித் துறைக்கு ஒதுக்கிய தொகை எத்தனை கோடியாக இருந்தாலும் அது நல்லமுறையில் செலவழிக்கப்படுகிறதா என்பதைத் தலைமைப் பொறியாளர்களும், கண்காணிப்புப் பொறியாளரும் கவனிக்கிறார்கள் என்ற சூழ்நிலை இருக்க வேண்டும்.

1977—78-ல் ஒரு பயங்கரமான புயல் ஏற்பட்ட நேரத்தில், என்னுடைய தொகுதியில் நிவாரண வேலைகள் மேற் கொள்ளப் பட்ட நேரத்தில், தலைமைப் பொறியாளரும், கண்காணிப்புப் பொறியாளரும் வந்து பார்த்தார்கள். அதே போல், வறட்சிக் காலத்திலும் பெரிய அதிகாரிகள் வந்துபார்த்தால்தான் வேலைகள் நல்ல முறையில் நடைபெறும். இல்லையென்றால், பயங்கரமான சூழ்நிலை உருவாகி, ஊழலுக்கு வித்தாகும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், அரியலூர் பகுதியைப் பொருத்த மட்டில் மிகவும் கடுமையாக வறட்சி ஏற்பட்டிருக்கிறது. புள்ளம்பாடி வாய்க்கால், நீண்ட நாட்களாகத் தூர் எடுக்கப்படவில்லை. அதைத் தூர் எடுத்தால் பளிங்காநந்தம், விளாகம், சன்னையூர், வெங்களூர், கண்ணனூர், சுக்கிரனேரி வரை சென்று 18,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். அந்த வாய்க்காலை ஆழப் படுத்த வேண்டுமென்றும், கிளை வாய்க்காலைத் தூர் எடுத்து, ஆழப் படுத்த வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், தமிழகத்திலுள்ள குளங்கள், அணைகளின் மதகுகள் அனைத்தும் இன்றைக்கு பழுதடைந்திருக்கின்றன. அவைகளை, ஒன்றியங்களின் மூலமாகச் செப்பனிட வேண்டும். அதே போல், இன்றைக்கு எல்லா குளங்களும் ஒன்றியங்களாலும் தூர் எடுக்கப்பட்டிருக்கின்றன, பொதுப் பணித் துறையாலும்



தூர் எடுக்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் வறட்சி ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில், கிராம மக்களுக்கு அந்தத் தொகைப் போய்ச் சேர வேண்டும். எந்த, எந்தக் குளங்களை எந்த அளவுக்கு வெட்டியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, அதை மீண்டும் வெட்டுவதாக இருந்தால், இங்குள்ள அதிகாரிகள் அங்கு சென்று பார்த்து, அதற்குப் பிறகு அனுமதி அளித்தால்தான் அந்த வேலைகள் நல்லமுறையில் நடைபெறும்.

அதே போல், வறட்சி நேரத்தில் எந்த வேலையையும் டென் டர் மூலம் செய்யும், வகையில், டென்டர்தாரர்களிடம் ஒப் படைக்க வேண்டும். டென்டர் மூலம் விட்டால்தான் ஒப்பந்தக் காரர்கள் நல்ல முறையில் செய்வார்கள். இல்லையென்றால், நேற்று என்னுடைய தொகுதியிலிருந்து ஒரு தொலைபேசிவந்தது. எனது தொகுதியிலிருக்கிற வேலைகளை எங்களுக்குத்தான் ஒப்படைக்க வேண்டுமென்று ஆளூங் கட்சிக்காரர்கள் கோருகிறார்கள் என்று அங்கிருந்து அதிகாரி தொலைபேசி மூலம் கூறி இருக்கிறார். ஆகவே, எந்தக் கட்சியினர் செய்தாலும் பரவாயில்லை, அதை டென்டர் மூலம், ஒப்பந்தத்தின் மூலம் தான் செய்ய வேண்டும்.

திரு. ஏ. சி. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் அந்த வேலையைச் செய்ய வேண்டுமென்றும் கேட்கிறார்கள் என்று குறிப்பிட்டு அவருக்குத் தந்தி வந்து இருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்கு ஆதாரம் ஏதாவது அவர்கள் வைத்துக் கொண்டு இருக்கிறார்களா ?

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு உறுப்பினர்க்கு ஆதாரம் வேண்டுமானாலும் கொடுக்கிறேன். சென்ற மாதம் 27-ம் தேதியே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும், சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடத்திலும் இது குறித்துக் கொடுத்து இருக் கிறேன். ஆகவே, ஆதாரம் தருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

சென்னைக்கு குடிநீர் கொண்டு வருவதற்காக கிருஷ்ணா நதிநீர் திட்டம் எடுத்து இருக்கிறீர்கள். இரண்டாண்டு கால மாக அந்தத் திட்டம் பற்றி பேசப்பட்டு வருகிறது. அதற்காக தனி இலாகாகூட ஏற்படுத்தப்பட்டு, சென்னையில் இருந்து 20 கி. மீ. வரையில் கிருஷ்ணா நதி நீர் வருவதற்கான ஆய்வுப் பணிகள் முடிந்து இருக்கிறது. அதேபோல் ஆந்திரா பகுதியிலும் ஆய்வு வேலைகள் நடைபெறுகின்றன. அதற்கான பணத்தையும் ஜீப் வாங்குவது போன்றவற்றையும் தமிழக அரசே ஏற்றுக் கொண்டு இருக்கிறதா ? சென்னைக்குக் கிருஷ்ணா நதி நீர் கொண்டு வந்தால் அது நல்ல முறையில் மக்களுக்குப் பயன்படும். ஆகவே அந்தத் திட்டத்தை நல்ல வகையில் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரியலூர் தொகுதியில் நந்தியாறு வாய்க்கால் என்று ஒரு வாய்க்கால் இருக்கிறது. அது தூர் எடுக்கப்படாமல் இரு

கிறது. அதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதை போல் செம்பியக்குடி அருகில் ஒரு பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். நந்தியாறு வாய்க்கால் பகுதியில் பல விவசாயிகள் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். அவற்றை உடனடியாக அப்புறப்படுத்தி, அந்த வாய்க்காலை அகலப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. சி. வி. வேலப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981–82-ஆம் ஆண்டுக்கான பாசனம் குறித்த மானியக் கோரிக்கைகள் ஆன 36, 50 ஆகியவற்றின் மீது எனது கருத்துக்களை எடுத்துச் சொல்ல விழைகிறேன். காலம் அதிகம் இல்லாத காரணத்தால் முதலில் என்னுடைய தொகுதியைப் பற்றிய பிரச்சினைகள் மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

காவிரியிலும், காவிரி பிரிவு வாய்க்காலிலும் நீர் எடுத்துக் கொள்ளலாம் என்று 1950-ஆம் ஆண்டு அரசாங்கம் தண்டோரா போட்டு பிரச்சாரம் செய்தது. அதை அனுசரித்து காவிரியிலிருந்தும் காவிரி வாய்க்கால்களிலும் இருந்தும் பம்ப் செட்டுகள் போட்டு விவசாயிகள் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்தார்கள். அதைத் தொடர்ந்து அவ்வப்போது அனுமதி அளிக்கப்பட்டு வந்தது. அப்படி அளிக்கப்படுகிற அனுமதிகள் காலம் கடந்து வழங்கி வருவதாகவே அமைந்தது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், 1962-ஆம் ஆண்டுக்கு அனுமதி வருகிறது என்று சொன்னால், அது 1961-ஆம் ஆண்டில் பயன்படுத்தியதற்கு ஆன அனுமதியாக இருக்கும். இப்படியே தொடர்ந்து வந்து கொண்டு இருந்த காரணத்தால், இறுதியாக அதற்கு அளிக்கப்பட்ட அனுமதி 2—10—1961 வரையில் தான் ரெகுலரைஸ் செய்து இருந்தது. அதற்குப் பிறகு அந்த நிலங்களில் உள்ள விவசாயிகள் எல்லாம் பர்மிட் இல்லாமல், அனுமதி பெறாமல் தொடர்ந்து 4–5 ஆண்டுகாலம், தண்ணீர் எடுத்து வந்தார்கள். பிறகு தொடர்ந்து அனுமதி வரும் என்கிற மனப்பான்மையை விவசாயிகள் பெற்று விட்டதால், அனுமதி பெற்ற பிறகுதான் உபயோகிக்க வேண்டும் என்கிற மனப்போக்கு ஏற்படவில்லை. ஆகவே, அந்தப் பகுதியில் ராஜகுமாரபாளையம், மோகனூர் பிரிவு வாய்க்கால் ஆகிய பகுதிகளில் இந்த நிலை தொடர்ந்து இருந்து வருகிறது.

[பிற்பகல் 12–10]

கடந்த 20 ஆண்டு காலமாக அது அனுமதிக்கப்படாத நிலை இருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியில் காவிரியிலிருந்து பம்பு செட் மூலம் தண்ணீர் எடுத்து விவசாயம் செய்கின்ற விவசாயிகள் சில கோடி ரூபாய்களை தண்டத் தீர்வையாகக் கொடுத்



திருக்கிறார்கள். மின்சாரம் கிடைக்காத நிலையில் அவர்கள் ஆயில் எஞ்சின் வைத்து, அதனாலும் அவதிப்படுகிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு அரசு காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ள அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, வாய்க்கால்கள் பழைய காலத்தில் வெட்டப்பட்டவை. அவைகளை 'ரீ மாடல்' செய்ய வேண்டும். ரீ மாடல், செய்து, அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும். அப்படி ரீ மாடல் செய்கிறபோது அதற்கு விவசாயிகள் பங்குத் தொகை கட்ட வேண்டுமென்று அரசாங்கம் கேட்கும் நிலை வந்துவிடக்கூடாது. காரணம் 20 ஆண்டுக் காலமாக அவர்கள் கொடுத்த தண்டத் தீர்வையே பல கோடி ரூபாய் இருக்கிறது. இப்போது அவர்கள் விவசாயமும் செய்ய முடியாமல், அதை விடவும் முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு, வாய்க்கால்களை ரீ மாடல் செய்து, அவர்களுக்கு பலன் அளிக்கின்ற வகையில் அமைச்சரவர்கள் துரித நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு 'பெர்மிட்' வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கூட்டுறவு துறையின் மூலம் அங்கே இருக்கிற விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி, விவசாயத்திற்கு நீர் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அது நல்ல முறையில் நடைபெற்றாலும் கூட்டுறவுத் துறை என்ற காரணத்தால் அரசாங்கம் கடன் வழங்கியிருக்கிறது ; மின்சாரத் துறை மின்சாரம் வழங்கியிருக்கிறது. அங்கே மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டு, 100 விவசாயிகள் சேர்ந்து ஒரு சங்கத்தை அமைத்து அதன் மூலம் தண்ணீர் எடுக்கிறார்கள். 4, 5 மணி நேரம்தான் மின்சாரம் வரும் என்று சொல்லும்போது அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் கூட்டுறவுத் துறையில் வாங்கிய கடன்களை அவர்கள் கட்ட முடியாத சூழ் நிலை ஏற்படுகிறது. போட்ட முதலே கிடைக்காத போது கடனை கட்ட முடியாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் அப்படி இருக்கிற கடன்களை தவணைகள் மூலம் கட்டுவதற்கு வழிவகை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், அந்த விவசாயிகள் வைத்திருக்கிற 100 எச். பி., 60 எச். பி., 40 எச். பி. மோட்டார்கள் சரியாக இயங்கும் அளவுக்கு பார்த்து, அதிலே ஒரு தனிக்கவனம் செலுத்தி, தேவையான மின்சாரத்தை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீர்பாசனத் துறை என்று சொல்லும்போது இன்றைக்கு தமிழகத்தில் இருக்கிற நீர் நிலைகள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டு விட்டன என்று சொல்லுகிறார்கள். அதனால் கேரளத்தி

லிருந்து, மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து கடலிலே போய் விழுகிற தண்ணீரை, நமது அரசு அவர்களோடு பேசி, தமிழகத்திற்கு கொண்டு வந்து, அதை நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு தமிழக மக்களுக்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இருக்கிற தண்ணீரைத்தான் நாம் பயன்படுத்துகிறோம் என்ற நிலை இல்லாமல் தமிழகத்தில் நிலத்தடி நீர் ஏராளமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள் ; அப்படி இருக்கிற இடங்களில் அரசாங்கமே பரிசீலனை செய்து, அரசாங்கத்தினுடைய பொறுப்பிலே அந்த இடங்களை எடுத்து, ராட்சச குழாய்களை அமைத்து, தண்ணீரைப் பெற்று, விவசாயத்திற்கு நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்ள அரசாங்கம் வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கம் இப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்யும்போது, ஒவ்வொரு நீர்பாசன அமைப்பிலேயும் விவசாயிகள் அடங்கிய குழுவைப் போட வேண்டும். அவர்கள் பரிசீலனை செய்து எந்தெந்த நேரத்தில் தண்ணீர் எவ்வளவு வேண்டுமென்று சொல்லுகிறார்களோ அந்த அளவுக்கு வழங்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவேரி ஆறு போன்ற பெரிய ஆறுகளில் இருந்து வெள்ளப் பருவக் காலங்களில் தண்ணீர் வீணாக கடலிலே போய் விழுகிறது.

இது நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகின்றது. சேலம் மாவட்டத்தில் காவிரியில் வீணாகின்ற தண்ணீரை திருமணிமுத்தாறு ஆற்றில் விட்டால் பல நீர்த் தேக்கங்கள் அதன் மூலம் ஏற்பட்டு ஒரு முறை நீர் வந்தால் கூட அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு அது பெரிதும் பலனளிக்கும். ஆகவே, அப்படிப்பட்ட காரியங்களை எடுத்து காவிரித் தண்ணீரை பயன்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கங்கை காவிரி இணைப்புகளைப் பற்றி சொல்லப்படுகின்ற திட்டத்தினை தமிழக அரசு வற்புறுத்தி உடனடியாக அதைச் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு எனக்கு பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

*திரு. பி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981—82-ஆம் ஆண்டு பாசனம் குறித்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 8 பெரிய, நடுத்தர மற்றும் நவீனப்படுத்தும் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இதிலே செயங்கொண்டம் தொகுதி



மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ''சுத்தமல்லி'' நீர்த் தேக்கத் திட்டம் சேர்க்கப்பட்டிருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக எனது நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடையார் பாளையம் வட்டம், பல ஆண்டு காலமாகவே மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தப் பகுதியில் பல வரலாற்றுச் சிறப்புமிக்க ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளில் தலைமையாக இருப்பது பொன்னேரி. அதை வராலாற்றிலே சோழகங்கம் என்பதாகக் கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தப் பொன்னேரியின் சுற்றளவு சுமார் 12 மைல் இருந்ததாக வரலாற்றிலே கூறப்பட்டிருக்கின்றது. கொள்ளிடத்திலே இருந்து 60 மைல் நீளத்திற்கு வாய்க்கால் வசதி செய்திருந்ததாகவும் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்த வரலாற்று சிறப்புமிக்க பொன்னேரியினை தமிழக அரசு புதிய நீர்ப்பாசனத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், திருச்சி, தென்னாற்காடு, போன்ற மாவட்டங்களில் உள்ள பல ஏரிகளை நிரப்புவதற்கு நல்ல வாய்ப்பாக அமையும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு செயங்கொண்டம் தொகுதிக்கு கொள்ளிடத்திலிருந்து நீர்ப்பாசனம் தரும் ஒரே வாய்க்கால் பொன்னாற்று சேனலாகும். இந்த பொன்னாற்று சேனலின் மூலம் 10,000 ஏக்கர் நன்செய் நிலங்கள் பயன் பெறுகின்றன. கொள்ளிடத்திலே அடிக்கடி வெள்ளம் வருகின்றபோது அணைக்குடி, அருண்மொழி, அண்ணகாரன்பேட்டை போன்ற கிராமங்களில் வாழும் மக்கள் வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கின்றது. இதனால் அங்குள்ள நிலங்களும், பயிர்களும் பாதிக்கப்படுகின்றன. வீடுகள் தண்ணீரில் மூழ்கி விடுகின்றன. கால்நடைகள் சேதப்படுத்தப்படுகின்றன.

கொள்ளிடத்தில் இருந்து வரும் வெள்ளத்தினால் பொன்னாற்று சேனலின் தலைப்பில் மணல்மேடு பெரிதாக எழுந்து விடுகின்றது. கொள்ளிடத்து நீர் பொன்னாற்று சேனலிற்கு வருவதை இந்த மணல்மேடுகள் தடுத்து விடுகின்றன. இதற்காக என்ஜினியர்கள் சில திட்டங்களை வைத்திருக்கிறார்கள். கொள்ளிடத்தின் தெற்குக் கரையில் தடுப்புச் சுவர் துறையில் இரண்டு கட்ட வேண்டும். இச் சுவர்கள் கொள்ளிடத்தின் தண்ணீர்ப் போக்கை மாற்றி பொன்னாற்று சேனலில் தடங்கள் இல்லாமல் தண்ணீர் வருவதற்கு உதவும்.

அடுத்து தமிழக அரசு கொள்ளிடம் ஆற்றில் ஒரு செக் டாம் கட்டித் தர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். கொள்ளிடத்திலே இருந்து வருகின்ற அதிகமான நீரினைத் தடுத்து பொன்னாற்று சேனலுக்கு தண்ணீர் வருகின்ற ஒரு திட்டத்தைத் தீட்டித்தந்தால் அதனால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் நல்ல முறையில் சாகுபடியாகும்.

அதே போன்று செயங்கொண்டம் தொகுதியிலே கருவாட்டு என்ற ஓடையிலே ஒரு அணை கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உலக வங்கியின் உதவியுடன் கீழ் காவிரியிலிருந்து வருகின்ற பல கால்வாய்களை நல்ல முறையில் சீர்திருத்தம் செய்வதற்கு பல திட்டங்களை வைத்திருக்கின்றார்கள். அந்த திட்டங்களை அரசு முனைப்பாக செயல் படுத்த வேண்டும்.

அடுத்து நமது பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சர் ஆக இருந்தபோது பத்திரிக்கை நிருபரிடம் ஒன்று சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் அநேகமாக எல்லா பெரிய நீர்த் தேக்கங்களும் கட்டி முடித்தாகி விட்டது என்று குறிப்பிட்டார்கள். அதையும் இன்றைக்கு நமது நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் தனது உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே ஒரு சில பெரிய நதிகளே உள்ளன. அவைகள் அனைத்தும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-20]

இந்த நேரத்தில் தமிழகத்தின் பாசன வசதிகளைப் பெருக்க மத்திய திட்டக் கமிஷன் பரிசீலித்து வரும் செய்தியை பத்திரிகைகளில் படித்தேன். மத்திய திட்டக் கமிஷனின் உறுப்பினரும், விவசாய நிபுணருமான திரு. எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் பின் வருமாறு கூறியிருக்கிறார் :—

" தென்னிந்தியாவில் உள்ள நதிகளை இணைப்பதற்கான விரிவான திட்டமொன்றை மத்திய திட்டக் கமிஷன் பரிசீலித்துக் கொண்டு வருகிறது. காவிரி, கிருஷ்ணா, கோதாவரி உட்பட தென்னிந்தியாவில் உள்ள பல்வேறு நதிகளை இணைப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் மேற்கொண்டு 2½ கோடி ஹெக்டேர் சுமார் 6¼ கோடி ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி ஏற்படும் " என்று கூறியிருக்கிறார்.

அண்டை மாநிலங்களில் உபரி நீராக கடலில் விழும் தண்ணீரை வீணாக்காமல் இத்திட்டத்தின் மூலம் பயனுள்ள வகையில் பாசனத்திற்கு பயன்படுத்த வழி வகை செய்யலாம். இதனை தமிழக அரசு முனைப்பாக தொடர்ந்து முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து விவசாயிகளுக்கு கிணறுகள் வெட்ட நிலவள வங்கி மூலம் கடன்கள் வழங்கப்பட்டன. அவற்றில் சில கிணறுகளில் தண்ணீர் கிடைக்காமல் போய்விடுகிறது. அப்படி தண்ணீர், கிடைக்காமல் போய் விடுகின்ற கிணறுகளுக்கு, அதற்கென வாங்கப்பட்ட கடன்களை முழுவதும் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சூழ்நிலையில் ஏழை எளிய விவசாயிகளுக்கு பாசன வசதி செய்து தரும் வகையில் புதிய திட்டம் ஒன்றை அரசாங்கம் அளித்திருக்கிறது. இதற்காக அரசே சமுதாயக் கிணறுகளை அமைக்கவும், மாநிலக் குழாய் கிணறு கழகம் ஒன்றை ஏற்படுத்தவும் வகை செய்திருப்பதாக கூறியிருக்கிறது. எங்களுடைய செயங்கொண்டம் தொகுதியில் நிலத்தடி நீரை பயன்படுத்த பல வாய்ப்புகளை இயற்கை வழங்கியிருக்கிறது. இங்கே சமுதாய நல ஆழ் குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டால், இப்பகுதியில் விவசாயம் முன்னேறும்.

எனது செயங்கொண்டான் தொகுதியில் பொதுப் பணித் துறையினால் ஆய்வு வேலைகளுக்காக துள்ளாரங்குறிச்சி, குருவாரப்பன் போயில், மேலளைக்குழி போன்ற இடங்களில் ஆழ்க் குழாய் கிணறுகளை போட்டும், அவைகள் பயன்படுத்தப் பெறாமல், வேலை செய்யாத நிலையில் இருக்கின்றன. இவைகளை உடனடியாகப் பயன்படுத்தி, அப்பகுதியிலுள்ள மக்களுக்கு குடி தண்ணீர் வசதியைச் செய்து தர இந்த அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய செயங்கொண்டம் தொகுதியில் டிப்பளூர் யூனியனை முதலில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1980—81-ஆவது ஆண்டிற்காக எடுத்திருந்தார்கள். பின்னர் என்ன காரணத்தினாலோ நீக்கப்பட்டு விட்டது. அதை மீண்டும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, துணைத் தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

திரு. த. வீராசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981—82 ஆம் ஆண்டு பாசனம் மீதான மானியக் கோரிக்கைகள் மீது பேசுகிற வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''நீரின்றி அமையாது உலகம்'' என்று சொல்லுவார்கள். இன்று நாட்டிலே ஏற்பட்டிருக்கக் கூடிய வறட்சியின் காரணமாக, இந்த மன்றத்திலே எவ்வளவு பெரிய பிரச்சினைகள் எழுந்தன என்பதை தாங்கள் அறிவீர்கள். அப்படிப்பட்ட பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்பதற்காக, புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலே அமைந்த இந்த அரசில், அந்தத் துறையின் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர்

அவர்கள், அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, கிட்டத்தட்ட, மொத்தமாக 61 கோடியே 1 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், உள்ளபடியே, இந்த ஆட்சியைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள், பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட் மென்ட் பற்றி குறிப்பிடுகிற நேரத்தில், பப்ளிக் வேஸ்டேஜ் டிபார்ட்மென்ட் என்று ஒரு முறை குறிப்பிட்டார். அதை மாற்ற வேண்டும் என்பதற்காகவே, இந்த அரசு இன்று ஏரிக் குளங்களை நவீனப்படுத்தி; மேம்படுத்தி, அதன் மூலம் பாசனத்தைப் பெருக் கவும், அணைகள் பல கட்டியும், கால்வாய்கள் மூலமாக ஆற்றி லிருந்தும் பாசனம் பெறுகின்ற முறையில், நவீன விஞ்ஞான அமைப்புகளை மேற்கொண்டு, வறட்சியினால் பாதிக்கப்பட்ட புஞ்சை நிலங்களுக்கும் பாசன வசதி செய்து தருகிற ஒரு திட் டத்தை தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது. அப்படி மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கூறிய கருத்துக்களிலிருந்து, அந்தத் துறையை மாற்றி அமைக்க வேண்டும் என்பதற்காகவே இப்படி பயன் உள்ள பல புதிய திட்டங்களை அமைத்திருக்கிற பெருமை, இந்தத் துறையைப் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு பாசனத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தலைமை பொறுப்பேற்றிருக் கும் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் சாரும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்று ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக ரூபாய் 150 கோடியும், சிறு பாசனத் திட்டங்களுக்காக 18 கோடி ரூபாயும் ஒதுக்கி யிருப்பதற்காக இந்த அரசை நான் மனதாரப் பாராட்டுகிறேன். பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 150 கோடியில் 56 சதவீதம் பாசனத் திட்டங்களை நவீனப்படுத்த இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. இதனால் 1.63 இலட்சம் ஏக்கர் பாசனம் வளம் பெற வகை செய்யப்படுகிறது என்று குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது விவசாயிகளின் துயரைத் துடைக்க இந்த அரசு மேற்கொண்டுள்ள திட்டம் என்று சொல்லி அதற்காக இந்த அரசை மனதாரப் பாராட்டுகிறேன். 39 திட் டங்கள் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 440.12 கோடி ரூபாய் செலவில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன. ஏழு திட்டங்கள் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிவடையும் என்றும் எஞ்சியுள்ளவை வருகிற ஆண்டுகளில் முடிக்கப்படும் என்று இந்த குறிப்பில் கூறப்பட்டுள்ளது. அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1981—82 பாசனத்திற்காக ரூபாய் 26.6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் நாட் டில் விவசாய உற்பத்தியைப் பெருக்கவும் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தவும் சிறப்பு சிறு நீர்ப் பாசனத் திட்டங்களை இந்த



அரசு அறிவித்திருக்கிறது. அதன் வாயிலாக, அணைகள் கட்டு வதற்கும், டாம்ஸ் அமைத்தல், கைவிடப்பட்ட ஏரிகளைப் புதுப்பித்தல், புதிய பாசனத் திட்டங்களை ஏற்படுத்துதல் இவை மூலம் விரைவாக பயன்பெற்று உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையில் இந்த அரசு திட்டம் தீட்டி அதற்காக 1981—82 நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தூர்வாரி புனரமைக்கும் திட்டங்களுக்காக பத்து இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் தீவிரப்படுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டங்கள் என்ற திட்டத்தின் கீழ் குளங்களை, 100 ஏக்கருக்கும் அதற்கு அதிக மான ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கிற குளங்களைப் பொதுப் பணித்துறையிலும், 100 ஏக்கருக்கு உட்பட்ட ஏக்கர் களுக்கு பாசன வசதி அளிக்கும் குளங்களை ஊராட்சி ஒன்றியங் களும் பராமரிக்க இந்த அரசு வழிவகை செய்திருக்கிறது. நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்றால், 100 ஏக்கருக்குக் குறைவாக பாசன வசதி அளிக்கிற நீர்நிலைகளை யும் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைத்து அவர்கள் அவற்றை செப்பனிட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரூபாய் 366 கோடி செலவில் காவிரி டெல் டாவை நவீனப்படுத்துவதற்காக திட்ட அறிக்கை இறுதியாக்கப் பட்டுள்ளது என்று இங்கே கூறப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தை யும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலை வர் அவர்கள் மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளை கிழக்குப் பகுதிக்கு திருப்பிவிட, வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு பயன்படும் வகையில் கர்நாடக அரசுட னும், கேரள அரசுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருவ தாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்காக முதல் அமைச்சர் அவர்களுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள் கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனம் சம்பந்தமாக இந்த மானியக் கோரிக்கை மீது நேற்று எங்கள் கட்சி சார்பில் தோழர் மணி அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். கோரிக்கை 36 என்ற தலைப் பின் கீழ் ரூபாய் 27,91,54,000-க்கும் மானியக் கோரிக்கை எண் 50-இன் கீழ் ரூபாய் 33,10,42,000-க்கும் அனுமதி கோரி அமைச் சர் அவர்கள் தமது மானியக் கோரிக்கைகளை வைத்திருக் கிறார்கள். தமிழ்நாட்டில் நமக்கு நீர்ப் பற்றாக்குறை என்பது மிகவும் சிக்கலான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே மிகவும் யோசித்து நிலத்தடி நீரை பயன்படுத்தினால்தான் நாம்

ஓரளவு சமாளிக்கக்கூடிய நிலையில் இருக்கிறோம். ஆகவே நான் வேண்டிக் கொள்வது என்னவென்றால், சமுதாயக் கிணறுகளை மிகப் பெரிய அளவில் ஆங்காங்கு தோண்டினால் ஓரளவிற்கு நாம் பாதுகாப்பு கொடுக்க முடியும். அதைப் பயன்படுத்தமுடியும். எனவே சமுதாயக் கிணறுகளை ஆங்காங்கே விரிந்தளவில் ஏற்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறேன்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 168 கோடி ரூபாய் செலவில் பாசனத் திட்டங்கள் செய்து முடிக்கப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதுபோல் தண்ணீர் தடுப்பு மற்றும் பாசன வடிகால் திட்டங்களுக்கும், கடலரிப்புத் திட்டங்களுக்கும் 22 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 12-30]

நிலத்தடி நீர் ஆய்வு செய்வதற்காக 9.74 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், 1981—82-ஆம் ஆண்டில் பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக 22.73 கோடி ஒதுக்கீடு செய்து, இன்றைக்கு பெரியார், வைகை மேம்பாட்டுத் திட்டம் 1977-ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்காக இன்று வரை 20.35 கோடி செலவிடப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. உலக வங்கி உதவிபெற்று இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

மேலும், சென்ற ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்ட 12 நடுத்தர வேலைகள் இன்றைக்கு முன்னேற்றத்தில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். திருச்சி, கன்னியாகுமரி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கு 6.70 கோடி செலவாகுமென்றும், இதனால் 13,587 ஏக்கர்கள் ஒருபோகம், மற்றும் இருபோக பாசனத்திற்கு வழி கிடைக்கும் என்று சொன்னார்கள். 1981—82இல் 9 நடுத்தர திட்டங்கள் 34 கோடி செலவில் எடுத்துக்கொள்ள இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலும், குறிப்பாக, மதுரை, இராமநாதபுரம், சேலம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் இதனால் பயன்பெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில், இன்றைக்குக் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் என்னுடைய தொகுதியிலுள்ள பழனியில் குதிரை ஆறு திட்டம் நீண்ட நெடுங்காலமாக ஆய்வு செய்யப்பட்டு, நிதி ஒதுக்கப்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைய தினம் மானியக் குறிப்பிலே 3.01 கோடி செலவிலே அதை எடுத்துக்கொள்ளப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் உண்மையிலேயே சந்தோஷப்படுகிறேன். அதை இந்த ஆண்டு, முன் வரிசையிலே வைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு வருமென்று சொல்லவில்லை. ஆகவே, இந்த ஆண்டே அதை செயல்படுத்தினால், நலமாக இருக்கும். ஏனென்றால் அமைச்சர் அவர்கள் இந்தப் பகுதிக்கு 6 மாதங்களுக்கு முன்பு வந்தபோது



அதை ஏற்றுக்கொள்வதாகச் சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இதை நிறைவேற்றுவதன் மூலம், அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும். 10, 20 கிராமங்களுக்கும் இதன் மூலம் நிரந்தரமாக குடிநீர் பிரச்சினை தீர்ப்பதற்கு உதவியாக இருக்கும்.

அதேபோல், இன்றைக்கு சோத்துப்பாறை திட்டத்தை எடுத்து நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும். அபிவிருத்தி என்ற பெயரால், இன்று விவசாயிகள் மீது அதிக அளவிலே வரிகள் போடப்படுவதாக பல இடங்களில் புகார்கள் கூறியிருக்கிறார்கள். இதையெல்லாம் குறைப்பதற்கு முயற்சி, எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல், இன்றைக்கு பழனிப் பகுதியில் வரதமா நதி அணைக்கட்டிலிருந்து 3, 4 மைல்களுக்கு வாய்க்கால் வருகின்றது. அந்த வாய்க்கால்கள் மணல் மேடிட்டு, தண்ணீர் பாதிக்கு மேல் வீணாகிறது. அந்த வாய்க்கால்களுக்கு சிமெண்ட் ஸ்லாப் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியிலே உள்ள மக்கள், அங்கே அமைச்சர் அவர்கள் வந்தபோது அவரிடம் இதைப்பற்றி வற்புறுத்தியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களும் கவனிப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, இந்த ஆண்டு சிறுகச் சிறுக அதை செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவுக்கு வேலைத் திட்டம் என்ற திட்டத்தில் ஒரு 300, 400 ஏக்கர்கள் பாசனக் குளங்கள் கூட வெட்டுவதற்கும், ஆழப்படுத்துவதற்கும் பயன்படுத்தலாம். இன்றைக்கு தன்னிறைவுத் திட்டத்திலே என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய குளங்கள், கால்வாய்களில் இந்த வேலைகள் செய்யப்படவில்லை. ஆகவே, இத்தகைய வேலைகளை எடுத்துச் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதுபோல், பெரியகுளம் தாலுகாவில் வவ்வால் துறை என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அங்கே 16 கண்மாய்கள் அந்த அமைப்பிற்குள் போடப்பட்டு, 1569 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுவதாக சொல்லுகிறார்கள். ஆனால், குளங்கள் மிகவும் மேடாக இருக்கின்றன. அதனால், வரக்கூடிய தண்ணீர் 20 நாட்கள் அல்லது ஒரு மாதத்திற்குத் தான் வருகிறது. ஆகவே, அதை ஆழப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், அந்தப் பகுதி விவசாய மக்களுக்கு உபயோகமாக இருக்கும். அவர்களும் ஒரு மனு அனுப்பியிருக்கிறார்கள். 1,500 ஏக்கர் பாசனம் பெறும் இந்தத் திட்டத்தை இந்த அரசு எடுத்து முடிக்க வேண்டும்,

அதேபோல், காவிரி நீர்ப் பிரச்சினையில் எங்களுடைய கட்சியின் தலைமை, சர்வகட்சிக் கூட்டத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறது, இந்த அமைப்பிலே வாதாடி, இப்போது 28 இலட்சம்

ஏக்கர் பெறும் வசதி எந்த விதத்திலும் பாதிப்பு இல்லாமல் மற்ற அரசியல் கட்சிகளுடன் பேசி, இதைத் துரிதமாக முடித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. பொ. **விஜயராகவன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசனம் குறித்த மானியக் கோரிக்கை மீது நான் சார்ந்திருக்கிற ஜனதா கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதன் முதலாக நான் குறிப்பிட விரும்புவது, சென்னைக்கு குடி தண்ணீர் கொண்டு வருவதற்கான கட்டளை கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றும் என்ற அளவிலே அன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். மீண்டும் சர்வ கட்சிகளை அழைத்துப் பேசி ஒரு முடிவு எடுக்கப்படும் என்றும் சொன்னார்கள். நான் இந்த அரசை மிகப் பணிவோடு கேட்டுக் கொள்வேன். கட்டளைக் கால்வாய் திட்டத்தை கைவிட வேண்டும். ஏனென்று சொன்னால், ஏறத்தாழ கட்டளை கால்வாய் திட்டத்தின் மூலம் 15 டி. எம். சி. தண்ணீர் சென்னைக்கு கொண்டு வரவேண்டுமென்றால் 75 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் குறிப்பாக திருச்சி மாவட்டத்தில் குளித்தலை, முசிறி, லால்குடி போன்ற தாலுக்காக்களில் பயிர் செய்ய முடியாமல் பாழாகும். அதற்கு பதிலாக நீங்கள் ஏற்கெனவே முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிற கிருஷ்ணா நதி தண்ணீரைக் கொண்டு வர எல்லா முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி. எம். சி. தண்ணீர் எடுப்பதற்கு அவர்கள் ஆட்சேபம் இருப்பதாக தெரிவிக்கவில்லை. ஆகவே, கிருஷ்ணா தண்ணீரை சென்னை மாநகரத்திற்கு கொண்டுவர தீவிரமான நடவடிக்கை எடுத்து, கட்டளைக் கால்வாய் திட்டத்தை அடியோடு கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பாசனத் துறையைப் பொறுத்தவரையில், என்னுடைய மாவட்டமான குமரி மாவட்டத்தில் கோதையாறு, சித்தார் பட்டணங்கால், நெய்யாறு பாசனத் திட்டம் ஆகிய மூன்று பாசனத் திட்டங்கள் இன்றைக்கு செயல்படுகின்றன. கோதையாறு திட்டத்தைப் பொறுத்த வரையில் அதை நவீனப்படுத்துவதற்கு முயற்சிகள் ஆய்வில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவாக அதை முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடை மடைப் பகுதிகளுக்கு, அங்குள்ள நிலங்களுக்கு தண்ணீர் போய் சேருவதில்லை.

அதைப்போல சித்தார் பட்டணங்கால் திட்டத்திற்கு நல்ல முயற்சிகள் இந்த அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் தண்ணீர் முழுமையாக இருந்தாலும் கூட கடை மடை பகுதி நிலங்களுக்கு தண்ணீர் போய் சேருவதற்கு முடியாமல் இருக்கின்றன. 10 கிலோ மீட்டர் வரைக்கும், பிரதான கால்வாயில் அந்த திட்டம் தொடங்கிய நாளிலிருந்து இதுவரைக்



கும் ஒழுங்காக பராமரிப்பு வேலைகள் செய்யவில்லை. காரணம் கேட்டால், '' விஜிலென்ஸ் கேஸ் '' இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். '' விஜிலென்ஸ் கேஸ் '' முடிந்து விட்ட சூழ்நிலையில் பிரதான கால்வாயை (மெயின் சானல்) மற்ற கால்வாயையும், புனர் அமைப்பு செய்யவேண்டுமென்று, சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை நவீனப்படுத்துவதைப் போலவே நெய்யாறு திட்டத்தை கேரளா மாநில அரசோடு நாம் குறித்த 150 டி. எம். சி. தண்ணீரைப்பெற்று, கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் வழங்குவதற்கு வழி வகைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளம், மழை காலங்களில் ஏற்பட்ட உடைப்புகள் பல இன்னும் குமரி மாவட்டத்தில் சீர்செய்யப்படாமல் இருக்கின்றன. 1978 ஆம் ஆண்டு வெள்ளம் வந்தபோது '' கீழ் குளம் ஏலா '' என்ற இடத்தில் ஏற்பட்ட உடைப்பு இன்றும் சீர் செய்யப்படாமல் இருக்கின்றது. பலமுறை இது குறித்து வாதாடிப் பார்த்து விட்டோம். எடுத்துச் சொல்லி இருக்கிறோம். இன்று வரையில் அதற்கு ஒரு முடிவும் இல்லை. இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், வாதாடுகிற நிலையிலே எங்களை வைத்து விடுங்கள், போராடுகிற கட்டத்திற்கு இந்த அரசு தள்ள வேண்டாம், கடல் அரிப்புக்காக தடுப்புச் சுவர்கள் கட்டுவதற்குப் பல திட்டங்கள் சொல்லியிருக்கிறார்கள். இராமன் துறை போன்ற இடத்தில் கடல் அரிப்புக்காக திட்டம் செயல் பட இருக்கிறது. வெகு விரைவாக முடிக்கப்பட வேண்டும். குமரி மாவட்டத்தில் முள்ளூர் துறையில் அந்தப் பணிகள், கடல் அரிப்பு தடுப்புச்சுவர் தேங்காய்பட்டணம் வரையில் விரிவுபடுத்தி அதை நல்லமுறையில் கொண்டு வர வேண்டும்.

குளங்களைப் பொறுத்தவரையில் குமரி மாவட்டத்தில் இருக்கின்ற குளங்கள் ஏறத்தாழ 100 ஏக்கருக்கு குறைவாக பாசனத்தை கொடுக்கக்கூடியவை அதிக அளவில் இருக்கின்றன. குமரி மாவட்டத்திற்கு விதிவிலக்கு அளித்து இருக்கின்ற குளங்களை எல்லாம் பொதுப்பணித்துறையே நவீனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து, அதன் மூலம் தண்ணீரை வெகுவாக சேமிக்க உதவ வேண்டும். எல்லா பகுதிகளுக்கு இதன் மூலம், தண்ணீர் கொடுக்க முடியும். இதற்கு குமரி மாவட்டத்திற்கு விதிவிலக்கு கொடுத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-40]

*திரு. சே. **அழகர்சாமி** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பாசனத் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற மானியக் கோரிக்கைகளின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அரசினுடைய முக்கியமான கடமையாகும்.

ஆங்கிலேயர்கள் காலத்திற்கு முன்னால்கூட சமுத்திரத்திலே போய் விழுகிற வீணாகிற தண்ணீரை ஆங்காங்கே கண்மாய்கள் அமைத்து இருக்கிறார்கள் என்பதை நாம் காண்கிறோம். அந்தக் கண்மாய்களை எல்லாம் சீர்திருத்தம் செய்வதற்காக பல திட்டங்களை போடுகிறோம் என்று சொல்லப்படுகிறது. பாசனம் என்ற தலைப்பிலே ஒதுக்கக் பட்ட பணம் கடந்த ஆண்டிலே 28 கோடியே 33 லட்சத்து 22 ஆயிரம். அது இந்த ஆண்டு அதிகமாக்கப்பட்டு இருக்க வேண்டும். சென்ற ஆண்டு 28 கோடி என்றால் இந்த ஆண்டு 30 கோடியாவது ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் அதே வேலைகள்தான், அதே ஆட்கள் தான், ஊதியம் உயர்ந்திருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு 27 கோடியே 91 லட்சத்து 54 ஆயிரம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலேவே சென்ற ஆண்டு பாசனம் குறித்த மூலதன செலவுக்கு என்று 37 கோடியே 69 லட்சத்து 58 ஆயிரம் ஒதுக்கப்பட்டிருக்கிறபோது இந்த ஆண்டு 33 கோடியே 10 லட்சத்து 42 ஆயிரம் தான் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 5 கோடி ரூபாய் குறைந்திருக்கிறது. இது மிக மிக வருந்தத்தக்க விஷயம். அதே மாதிரி சிறுபாசனம் என்ற தலைப்பிலே சென்ற ஆண்டு தூர் வாருகின்ற பணிக்களுக்காக என்று 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது, இந்த ஆண்டு 4 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. போன ஆண்டு 169 வேலைகள் நிலுவையில் இருக்கிறபோது, 50 வேலைகள் செய்யபோவதாகத் திட்டமிடப்பட்டது. இந்த ஆண்டு அது அதிகமாக இருக்க வேண்டும், 60 வேலைகள் என்றாவது இருக்க வேண்டும். 1981—82 ஆம் ஆண்டிலே 40 வேலைகள் முடிக்கப்பட இருக்கிறது என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது, போன ஆண்டு 50 வேலைகள் இந்த ஆண்டு 40 தான் என்று குறைக்சப்பட்டுள்ள நிலைமைதான் இருக்கிறது. மேலும் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிகமாக ஒதுக்குவதற்கு பலவிதமான நியாயங்கள் இருக்கின்றன. இன்றைக்கு வறட்சி ஏற்பட்டிருப்பதன் காரணமாக உயர்த்தப்பட்டு இருக்கவேண்டும். 36 ஆயிரம் குளங்கள் இருக்கின்றன, தமிழகத்திலே அவற்றிலே 30 ஆயிரம் குளங்களிலே தண்ணீர் இல்லை, சில இடங்களிலே மழைகாலங்களிலேதண்ணீர் தேங்காது கடலிலே போய் வீணாகிறது. காரணம் பல குளங்களிலே மேடேறி, தூர் எடுக்காததன் காரணமாக, ஆழப்படுத்தாதன் காரணமாக பழுதடைந்ததன் காரணமாக, தண்ணீர் 1, 2 மாதங்களுக்குக் கூட தேங்காமல் போகிறது. மேலும் அதற்காக ஒதுக்கப்படுகிற பணம் முறையாக அந்த இடங்களுக்குப் போய் சேராமல் கான்ட்ராக்ட் விடுவதன் மூலமாக முழுப் பலனும் கிடைக்கவில்லை என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். நீர்ப்பாசனம் தேவையானது மட்டுமல்ல, நமக்குப் பெரிய ஆற்றுப் பாசனமோ ஆற்று வளமோ மிகமிகக் குறைச்சல். காவேரி, வைகை, தாமிரவருணி என்ற ஒரு சில ஆறுகளைத் தவிர நமக்கு ஜீவ நதிகள் கிடையாது. மேற்கே நோக்கிப் பாய்கின்ற ஆறுகளின் உபரி நீரை தமிழ்நாட்டிற்கு திருப்பிவிட முதல் அமைச்சர் அவர்களும் கேரள முதலமைச்சர் அவர்களும் பேச்சுவார்த்தை நடத்தியதாக அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பணியை சீக்கிரமாக முடித்து அவர்களுக்கு உணவும் அரிசியும் தாராளமாக உற்பத்தி செய்து தருகிறோம் என்று சொல்லி உபரி நீரைப் பெறுவதற்கான கடுமையான முயற்சிகளை செய்ய வேண்டும். கிருஷ்ணா நதி நீர் பற்றி சொல்லப்படுகிறது. ஆந்திராவிலே எல்லையிலே உள்ள வேலைகள் எல்லாம் முடிந்து விடும் சீக்கிரத்திலே என்று சொல்லப்படுகிறது. நம்முடைய மாநிலத்திலேயும் வேலைகள் எல்லாம் முடிக்கப்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அதைத் துரிதப்படுத்தி சென்னை நகருக்கு கிருஷ்ணா நிதி நீரை வேகமாகக் கொண்டு வர வேண்டும். சமீபத்திலே சொல்லப்பட்ட கட்டளை கால்வாய்த் திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும், இனியும் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. திருச்சி, தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு காவிரிப் பாசனத்தைப் பெறும் அந்த விவசாயிகளுக்கும் இருக்கிற தண்ணீருக்கும் கஷ்டம் வந்துவிடுமோ என்ற பயத்தை ஏற்படுத்த வேண்டாம். அந்த யோசனையை கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிருஷ்ணா நதி நீரை சென்னை நகரத்திற்குக் கொண்டு வருகின்ற பணிகளை எவ்வளவு சீக்கிரத்திலே முடியுமோ அவ்வளவு சீக்கிரத்திலே செய்ய வேண்டும்.



சிறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ், புதிய புதிய வேலைகளைத் தொடங்கும் காலத்தில் 100 ஏக்கருக்கு மேற்பட்ட பாசனக் குளங்கள் பூராவும் பொதுப் பணித் துறையின் கீழும், 100 ஏக்கருக்குக் குறைவாகப் பாசனம் பெறக் கூடிய அந்தப் பாசனக் குளங்களையெல்லாம் ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிர்வாகத்தின் கீழும் விடக்கூடிய ஒரு முறையை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். ஊராட்சி ஒன்றியத்திற்குக் கொஞ்சம், பி.டபிள்யூ. டி.க்கும் கொஞ்சம் என்பதற்குப் பதிலாக நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்ட குளங்களை புதுக் குளங்கள் அமைப்பதோ, ரிப்பேர் செய்வதோ இவை அத்தனையும் பொதுப் பணித் துறையினுடைய மேற்பார்வையினுடைய நிர்வாகத்திலே விடப்பட வேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். ஏனென்று கேட்டால், இந்த வேலைகளைச் செய்யும் காலத்தில், ஊராட்சி ஒன்றிய வேலைகளைப் பூராவும் மேற்பார்வை இடுவதோ, அதற்கு வேண்டிய சேங்க்ஷன செய்வதோ, அதற்காகப் பொதுப் பணித்துறைக்குத்தான் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தப் பணிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்காமல் மொத்தமாக அனைத்து வேலைகளுக்கும், பாசனம் சம்பந்தப்பட்ட கண்மாய்கள் அமைப்பது, ரிப்பேர் செய்வது, மராமத்து செய்வது போன்று வேலைகளையெல்லாம் பொதுப் பணித் துறையினுடைய பொறுப்பிலோ விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் இன்றைக்கு ஏறத்தாழ 36,000 குளங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு குளத்திற்கும் நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், மழைக் காலங்களில்

பெய்யக்கூடிய தண்ணீரைத் தேக்கி வைப்பதன் மூலம் ஊர்களிலே உள்ள குடிநீர்க் கிணறுகளிலே, பக்கத்திலே உள்ள விவசாயிகளுக்கு வேண்டிய பாசனக் கிணறுகளிலே தண்ணீர் அளவு வாட்டர் லெவல் மேலே வருவதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, புதுக் குளங்களை அமைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு வேண்டிய அதிகமான முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

பலயிடங்களில் பார்த்தால், குளங்கள் ஆரம்ப காலத்திலே இருந்ததைவிட, மூன்று நான்கு அடி மேலே ஏறியிருக்கிறது. அதையெல்லாம் தூர் எடுக்க மிகத் தீவிரமான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அம்மாதிரி செய்திருந்தால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற வறட்சியில் கொடுமையைத் தணிக்க பயனுள்ளதாக இருந்திருக்கும். சென்ற ஆண்டு அதிக மழை பெய்து அந்தத் தண்ணீரைத் தேக்கி வைத்திருந்தால், இந்த ஆண்டு மழை இல்லை என்றாலும் கூட, இரண்டு மூன்று மாதங்களுக்குத் தண்ணீர் தேங்கியிருந்தது என்றால் கிணறுகளிலே தண்ணீர் இருந்து குடிநீர்க் கஷ்டமாவது இல்லாமல் இருந்திருக்கும். பாசனத்திற்குத் தண்ணீர்க் கஷ்டம் இருந்தாலும் குடிநீருக்கு ஓரளவிற்குக் கஷ்டம் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கும். அதையெல்லாம் செய்வதற்கு மிகத் தீவிரமான நடவடிக்கைகளை நீர்ப்பாசனத் துறை அமைச்சரவர்கள் வேகமாகச் செய்ய வேண்டுமென்பதற்குத் திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மிகவும் பின்தங்கிய வறட்சி பகுதிகளுக்கான பாசன திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் சிக்கனமற்றதும், ஆதாயமற்றதுமான திட்டமாக இருந்தாலும் கூட முடிந்த அளவு நிறைவேற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியை எடுத்துக் கொண்டால், கோவில்பட்டி, சங்கரன்கோயில், ஒட்டப்பிடாரம், விளாத்திகுளம் ஆகிய இந்தத் தாலூகாக்கள் பூராவும், இன்னும் நாங்குனேரி தாலூக்கா போன்ற இடங்களில எல்லாம் மிகவறட்சியாக உள்ளது. குடிதண்ணீர்ப் பஞ்சம் என்பது மட்டுமல்லாமல், ஆடு மாடுகளுக்குக் கூடத் தண்ணீர் இல்லாமல் போய் விட்டது. ஆங்காங்குள்ள அந்தக் குளங்களை அமைக்க வேண்டுமென்று சொன்னால், இது சிக்கனமானது அல்ல. அன்-எகானாமிக் ஸ்கீம், ஆகவே தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொல்லக்கூடிய நிலைதான் இருக்கிறது.

குறிப்பாக எங்கள் வட்டாரத்திலே உள்ள ஒரு நிலைமையைப் பற்றி தொடர்ந்து நான் 12 வருடங்களாக இந்த அசெம்பிளியிலே சொல்லிக் கொண்டுதான் இருக்கிறேன். எங்கள் ஊர்ப் பக்கத்திலே ஒரு குளம், டி. புதுப்பட்டி என்ற ஒரு குளம். அந்தப் பேப்பர் இங்கே மெட்ராஸிக்கு வருகிறது ; மறுபடியும் விவசாய டிபார்ட்மெண்டுக்கு போகிறது ; பிறகு கலெக்டரிடத்திலே போகிறது. மறுபடியும் சீஃப் என்ஜினியர் ஆபீசுக்கு வருகிறது: நானும் போய்ப் பார்த்துக்கொண்டே இருக்கிறேன். அந்தப்



பேப்பருக்குப் பின்னாலே போய்க் கொண்டிருக்கிறேன். 12
வருடமாகிவிட்டது. இன்னும் என்னவென்று தெரியவில்லை.
ஒரு வேலையை எடுத்தால் அதைத் துரிதப்படுத்தி, வேகமாகச்
செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

இராமநாதபுரம், தர்மபுரி போன்ற வறட்சியான பகுதிகளிலே புதிய குளங்களை அமைக்கக் கட்டுப்படியாகுமா, அதிகச் செலவாகுமா என்பதையெல்லாம் பார்க்காமல், ஆதாயம் உள்ளதா என்று பார்க்காமல் அந்த வேலைகளைச் செய்து முடிக்க வேண்டும். ஆதாயம் என்றால் நெல் வருவது மட்டும் ஆதாயம் என்பது அல்ல. அந்தக் குளங்களிலே தண்ணீர் நிரம்பி விட்டது என்று சொன்னால், பக்கங்களிலுள்ள கிணறுகளை ஆழப் படுத்த வேண்டாம், குடிநீருக்கு நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் அதிகச் செலவு செய்ய வேண்டியிருக்காது. அவர்களுக்கு வேலை குறையும், பாசனத் துறை அமைச்சரவர்கள் அதிகக் கவனம் செலுத்திவிட்டார்கள் என்றால் கிணறுகளை ஆழப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படாது. ஆகவே, அந்த முறையில் இதைக் கொஞ்சம் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிதாக ஓர் யோசனையைச் சொல்லியிருக்கின்றீர்கள். அது நல்ல யோசனை. ரொம்ப நாட்களாக, எங்கள் விவசாயச் சங்கத்தைப் பொறுத்த வரையில் இந்த யோசனையைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் என்று வைத்துக் கொண்டிருப்பவர்களால் கிணறு வெட்ட முடியாது. கிணறு வெட்டுவது என்றால் இருபதாயிரம், முப்பதாயிரம் ரூபாய் செலவு ஆகும்.

ஆகவே, கிணறு வெட்ட முடியாத இப்படிப்பட்ட இடங்களிலே, எங்கெங்கு தண்ணீர் சக்தி இருக்கிறதோ அங்கே குழாய்க் கிணறுகளை அமைத்து, அதன் மூலம் யார் யார் பாசனத்திற்குத் தண்ணீர் பெறுகிறார்களோ அவர்களிடமிருந்து கட்டணம் வசூலித்துக் கொள்ளலாம். இப்பொழுது தண்ணீர் தீர்வை ஏக்கருக்கு 40 ரூபாய் 50 ரூபாய் என்று வாங்குவது மாதிரி அதற்கும் இவ்வளவு என்று வசூல் செய்து கொள்ளலாம். இந்தக் கழகத்தை நிறுவ முடிவெடுத்துள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக அமைத்து எங்கெங்கு முடியுமோ ஆங்காங்கு குழாய்க் கிணறுகளை அமைத்து அந்த வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பக்கத்திலே முன்னால் அமைத்த கண்மாய்கள் பல இருக்கின்றன. கோவில்பட்டி தாலுக்காவிலே, சித்திரம்பட்டி, சங்கரன்கோவில் தாலூகாவிலே உள்ள ஒரு கண்மாய், இனாம் மணியாச்சி, இளவிப்பட்டி ஆகிய கோவில்பட்டி தாலூகாவிலுள்ள கண்மாய்களெல்லாம் அமைத்து ஏறத்தாழ ஏழெட்டு வருடங்

ரிவிட் மென்ட் சிமிண்டுப் பலகைகளைப் போடுவது, பிறகு மழை வந்தால் தண்ணீரில் அது போய்விடும் என்ற நிலை இருக்கக் கூடாது. கால்வாயைச் சரி செய்கிற பெரிய ஸ்கீம் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. ஆகவே, இதைக் கவனிக்கவேண்டும்.

கடைசியிலே, முக்கியமானது, சென்ற ஆண்டை விட, இந்த ஆண்டு ஏன் நிதி குறைந்திருக்கிறது? போன ஆண்டை விட ஒன்றில் மட்டும் குறையவில்லை. மொத்தத்திலே. ரூ. 65 கோடி போன ஆண்டு என்றால், இந்த ஆண்டு ரூ. 60 கோடி தான் ஒதுக்கீடு ரூ. 5 கோடி குறையவேண்டிய காரணம் என்ன? எல்லாவற்றிற்கும் அதிக நிதி ஒதுக்கிக் கொடுக்கும்போது, இதை ஏன் குறைக்க வேண்டும். நீர்ப்பாசனம் முக்கியமானது. அது மட்டுல்ல, இந்த வருஷம் வறட்சி வந்ததற்குப் பிறகு அந்த வறட்சி ஏன் வந்தது என்று ஆலோசிக்கும்போது, இனிமேல் வறட்சி வந்தாலும் கொஞ்சம் தாக்குப்பிடிக்கிற மாதிரி குடி தண்ணீர், ஆடுமாடுகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், குளங்களைத் தூர் எடுத்தல், கால்வாயைத் தூர் எடுத்தல். மராமத்துச் செய்தல், புதிதாக குளங்களை அமைத்தல் ஆகியவற்றில் அதிகமான கவனம் செலுத்த வேண்டும். வேறு செலவுகளைச் செய்வதை விட, இது ஒரு மூலதனச் செலவு, இந்த மூலதனச் செலவு செய்வதன் காரணமாக, உற்பத்தி அதிகமாகப் பெருகி, நாட்டுக்கு வளத்தைப் பெருக்கும் உற்பத்திப் பெருக்கத்தின் மூலமாக விலைவாசி குறைந்து, பல பேருக்கு வேலைகள் கிடைக்கும். பி. டபிள்யூ. டி. மூலம் பல கட்டிடங்கள் கட்டுகிறார்கள். கட்டிடம் கட்டுவதில் பிரயோஜனம் இல்லை. வாடகைக் கட்டிடத்திலே கூட இருந்துவிடலாம். அதே நேரத்தில், ஒரு குளம் வெட்டினால், எத்தனையோ வருஷங்களுக்கு உற்பத்தி செய்யக்கூடிய சாதனமாக அது அமையும். ஆகவே அது சம்பந்தமாக, இப்போதாவது வாதாடி, கடைசியிலே அந்த நிதி ஒதுக்கிட்டின்போது அதிகமான நிதியைப் பெற்று, வேலைகளையெல்லாம் துரிதமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். தவசி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசன மானியத்தின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். நீர்ப்பாசன மானியத்தின் மீது பேசுகின்ற இந்த நேரத்தில், கேரள-கருநாடக அரசுகளோடு பேசி, அதன் மூலம் தென் மாவட்டங்களில் நீர்ப்பாசன வசதிகளை அதிகரிப்பதற்காக முயற்சிகளை மேற்கொண்டு வருகிற எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மன்றத் தலைவர் அவர்களுக்கும், இந்த மன்றத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



எனது தொகுதியில் இருக்கிற மக்கள் நீண்டநாட்களாக கோரிவருகின்ற பிரச்னைகள் குறித்து எடுத்துச் சொல்லவிரும்புகிறேன். வைகை சிரணி வாய்க்கால் வெட்டு மராமத்து உடனடியாக எடுத்துக்கொள்ளப்படவேண்டும். 1974 ஆம் ஆண்டில் அது கட்டப்பட்டது. 1979 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மழையின் காரணமாக அடித்த வெள்ளத்தில் அதனுடைய கரைகள் முழுமையாக பெரிதும் உடைந்துபோய், அதில் கட்டப்பட்டு இருந்த பாலங்கள், மதகுகள், மடைகள் எல்லாம் உடைந்துவிட்டன. அவைகள் இன்றையதேதிவரையில் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. அந்தக் கால்வாய் முழுவதையும் செப்பனிட்டுத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மெந்நந்தி, செவ்வூர், முதலூர் ஆகிய 3 இடங்களிலும் வைகை ஒருபுறம் அடையாளம் தெரியாமல் வெள்ளம் வந்ததால் தரைமட்டமாகியிருக்கிறது. அதனால் அந்தப் பகுதி விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அதைச் செப்பனிட்டுத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆர். எஸ். மங்களம் கால்வாய்க்குச் செல்லும் மேலநாட்டார் கால்வாய், கீழ்நாட்டார் கால்வாய் ஆகியவை வைகைக்கு வடபுறம் அதனுடைய கட்டிடங்கள், கரைகள், மதகுகள், பாலங்கள் எல்லாம் சிரழிந்து கிடக்கின்றன. அவற்றையும் செப்பனிட்டுத்தரவேண்டும். அதன் கிளைக்கண்மாய்களையும் செப்பனிட்டுத்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதாவது வைகையின் தென்புறத்தில் உள்ள களரிக்கால்வாய், கூத்தன்கால்வாய் ஆகியவையும் சிரழிந்து கிடக்கின்றன. அவற்றின் மதகுகளையும் கட்டிடங்களையும், பாலங்களையும் சீர்படுத்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கேயுள்ள மடைகள், மதகுகள், கட்டித்தரவேண்டும் என்கிற கோரிக்கை எழுப்புகின்ற அதே நேரத்தில் அந்த மடைகளில் தலைமை வாய்க்கால்களை சிமென்ட் போட்டுக் கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் கிழக்கு இராமநாதபுரம் பகுதிகளில் குறிப்பாக பரமக்குடி பகுதிகளில்—கடலோரப்பகுதிகளில் களிமண் தரைகள் இருப்பதால் அந்தத் தலைமை வாய்க்கால்களில் நண்டுகள் துளை போட்டு, அதன் காரணமாக, ஏரிகளில் இருந்து தலைமை வாய்க்கால்கள் மூலமாக கிளைவாய்க்கால்களுக்குச் செல்கின்ற தண்ணீர் வீணாக சென்றுவிட நேரிடுகிறது. இதன் காரணமாக அந்தப் பகுதிகளில் உள்ள ஏரிகள், கண்மாய்கள் நிறைந்து, வழிந்து, அந்தத் தண்ணீர் 6 மாத காலம் பாசனத்திற்கு வரும் என்று விவசாயி நம்பியிருந்தால், 3 மாதம் 4 மாதத்திற்கு மேல் வராத நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையைத் தடுத்து நிறுத்தி, அந்த ஏரிகளில் தண்ணீர் நல்ல முறையில் 6 மாதகாலம் என்கிற குறிப்பிட்ட காலத்திற்கு வருகின்ற

வரையில் அந்த தலைமைக்கால்வாய்களைச் சிமெண்ட் மூலம் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டு, இந்த மானியத்தின் மீது பேச அனுமதித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இங்கே நடந்து கொண்டிருக்கிற இந்த நீர்ப் பாசனத் துறை நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய தொகுதியினுடைய நிலையினை, எடுத்துக் கூற வாய்ப்பு நல்கியதற்காக தங்களுக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

'' புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும் ''.

என்ற வாய்மொழிக்கு ஒப்ப, மாண்புமிகு புரட்சித் தலைவரின் இதயம் கவர்ந்த நாவலர் பட்ஜெட்டை ஆதரித்து, நீர்ப்பாசனத் துறை பற்றிய மானியங்களின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கிறேன்.

நீண்ட புல கருத்துக்களை, நடுத்தர விவசாயிகளுடைய எண்ணங்களை விளக்கமாகப் பேசுவதற்கு தாங்கள் அனுமதிக்க மாட்டீர்கள் என்பதால் சுருக்கமாகப் பேச முற்படுகிறேன். எனக்கு முன்னாலே பேசிய அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களிலே, இன்றையதினம் இந்த நீர்ப்பாசனத்துறை மானியங்களை பாராட்டியும், சிலபேர்கள் குறைகள் கூறியும் அமர்ந்திருக்கிறார்கள்.

எதிர்க்கட்சியிலே இருக்கிற மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் முதன் முதலாகப் பேசும்போது இது கண் சிமிட்டிய பட்ஜெட் என்றும், கானல் நீர் பட்ஜெட் என்றும் சொன்னார்கள். உள்ளபடியே எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இந்த ஏழை எளிய மக்களுக்கு கிராமப் புறங்களிலே வாழ்கின்ற இந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அவர்களுடைய கண்களைத் திறந்திருக்கிற மிக முக்கியமான பட்ஜெட் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டை கானல் நீர் என்று குறிப்பிட்டார்கள். கானல் நீர் போன்று தமிழகத்து கிராமப் புறங்களிலே விவசாய பெருங்குடி மக்கள் தவழ்ந்து கொண்டிருந்தார்களே அந்த நிலையைப் போக்குவதற்காக இந்த அரசு கிராமப்புற மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி, இந்த நீர்ப்பாசனத் துறை மானியத்திலே தெளிவான விளக்கங்களை இங்கே தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய தொகுதி பற்றிய சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.



திருச்சி மாவட்டத்தில் திருவெறும்பூர் பகுதியில் மேட்டுக் கட்டளைக் கால்வாயின் தென்புறமாக இருக்கிற கிட்டத்தட்ட 10 கிராமங்களில்—சின்னசூரியூர், பெரியசூரியூர், கும்பக்குடி போன்ற கிராமங்கள்—நீர்ப்பாசன வசதி இல்லாமல் விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பகுதியில் கடந்தாண்டில் விவசாயத் துறையிலே கண்டு பிடித்த உயர் ரக நாற்றுகளை நட்டு, உடனே அறுத்துவிட்டார்கள். இப்படிப் பட்ட நிலைமைகள் ஏற்படாமல் இருக்க மேட்டுக் கட்டளைக் கால்வாயிலிருந்து அவர்களுக்கு தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்து, அவர்களுக்கு வாழ்வளித்து, காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கிற கொத்தம்பட்டி கிராமத்தில் ஒரு குளம் இருக்கிறது. கிட்டத்தட்ட 200 ஏக்கர் தண்ணீர் பாயும். அப்படி இருந்தும் அந்தக் குளம் இதுவரை வாய்க்கால் இல்லாமல், தண்ணீர் தேங்காமல் அந்தப் பகுதியிலே இருக்கிற நிலங்கள் எல்லாம் பாழடைந்து, ஏழை எளிய மக்கள், விவசாயிகள் அந்த நிலங்களை பயன்படுத்த முடியாமல் அல்லல்படுகிறார்கள். அந்த மக்கள் பயனடைய, நமது அரசு அந்தக் குளத்திற்கு தண்ணீர் வரத்து வாய்க்காலை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

* திரு. ॥. நெடுமாறன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த பாசனம் மீதான மானியக் கோரிக்கையிலே நம்முடைய அமைச்சரவர்கள் உரையை ஒட்டி எங்களுடைய இயக்கத்தின் கருத்துக்களை இங்கே வைக்க விரும்புகிறேன்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில், தமிழகத்தில் பாசன வசதி பெறுகிற நிலம் என்பது கிட்டத்தட்ட 25.70 இலட்சம் ஹெக்டர்தான். இது மொத்த நிலப்பரப்பில் 43.80 சதவீதம்தான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆக நம்முடைய பாசன வசதி என்பது இன்றைக்கு மிகக் குறைவாக இருக்கின்றது. மேற்கொண்டும் பாசன வசதிகளை எப்படி பெருக்கலாம் என்பதற்கான நல்ல திட்டங்களைப் பற்றி இந்த உரையிலே நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். உலக வங்கி உதவியுடன் பெரியாறு, வைகை போன்ற பாசன திட்டங்களை நவீனப்படுத்தும் திட்டம் செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின் முடிவிலே உத்தேசமாக 3.5 டி.எம்.சி. தண்ணீர் மிச்சப்படலாம் என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே 3.5.டி.எம்.சி. தண்ணீர் மிச்சப்படுவதை எந்தெந்த பகுதிகளுக்கு கொடுக்கப்படலாம் என்பது பற்றியும் அமைச்சரவர்கள் இங்கே குறிப்பு காட்டி இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே ஒரு பணிவான வேண்டுகோளை மதுரை நகர மக்களின் சார்பிலே

வைக்க விரும்புகிறேன். மதுரை நகர மக்களுக்கு தினமும் மொத்தம் 55 எம.ஜி.டி. தண்ணீா தேவை. ஆனால் இப்போது கிடைப்பது 15 எம்.ஜி.டி. தண்ணீர்தான். 6 இலட்சம் மக்கள வாழக்கூடிய 55 எம்.ஜி.டி. தண்ணீர் தேவைப படக்கூடிய மதுரைக்கு 5 எம்.ஜி.டி. தண்ணீர்தான் வெய்யில் காலத்தில் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே வைகையை நவீனப் படுத்தும் திட்டத்தின் கீழே மிச்சமாகும் நீரிலே ஒரளவுத் தண்ணீரை, மதுரை குடிநீருக்கு ஒதுக்கித் தர வேண்டும் என்று அமைச்சருக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

மதுரையிலேயும் மதுரையின் சுற்றுப்புறங்களிலேயும் ஏறத்தாழ 10-க்கு மேற்பட்ட கண்மாய்களில் வீடுகள் கட்டப்பட்டு அந்தக் கண்மாய்களின் மூலம் பாசனம் பெறுகின்ற நிலங்கள் எல்லாம் குடியிருப்புப் பகுதிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே அநத, 10 கண்மாய்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த அநத நீரினை மதுரையின் குடிநீருக்கு ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏரிகள், கண்மாய்கள் ஆகியவற்றை மராமத்து செய்வதைப் பற்றி சில நல்ல திட்டங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஏறத்தாழ 37,000-க்கு மேற்பட்ட கண்மாய்களும், குளங்களும் உள்ளன. இவற்றின் மூலம் சுமார் 10 இலட்சம் ஹெக்டேர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. மொத்தப் பாசனத்திலே இது 3-இல் ஒரு பகுதியாக இருக்கின்றது. இந்த ஏரிகளின் மராமத்து நிர்வாகத்தைப் பற்றி அமைச்சரவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இதிலே நூறு ஏக்கருக்கு மேலே உள்ள பாசன வசதி பெறக்கூடிய ஏரிகளை மராமத்து செய்கிற உரிமை அரசுக்கு இருக்கின்றது. மற்றவைகள் எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களிடம் அளிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். நான், அமைச்சரவர்கள் ஒன்றைக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஏரிகளின் மராமத்து நிர்வாகம் மட்டும் அரசின் பொறுப்பிலே இருக்கின்றதே தவிர, இந்த ஏரிகளின் நீர் நிர்வாகம் அரசின் கையிலே இல்லை. அதை அரசு கவனித்துச் செய்ய வேண்டும். இந்த ஏரிகளின் வாய்க்கால்கள் முதலியவை நீண்ட காலமாக பராமரிக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் பேசும்போது அவர்களுடைய பகுதியிலே மூன்று கண்மாய்கள் ஏற்படுத்தப்பட்டும் தண்ணீர் பாயவில்லை என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட குறைகள் எல்லா ஊர்களிலும் இருக்கின்றது.

இந்த மாதிரி கண்மாய்களின் மூலம், நீர் எடுத்துச் செல்கின்றபோது கண்ட கண்ட இடங்களிலே எல்லாம் வெட்டி நீர் எடுத்துச் சென்று விடுகின்ற நிலைமை இருக்கின்றது. இதைத் தடுப்பதற்கு இன்றைக்கு இருக்கக் கூடியஅமைப்பிலே எந்த வழியும் இல்லை. இவ்வாறு தண்ணீர் எடுப்பதற்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை.



மேலும் வயலுக்கு வயல் நீர் பாய்ச்சுகின்ற முறை இருப்பதன் மூலமாகவும் நிறைய நீர் வீணாகின்றது. நாம் ஏற்கெனவே நீர்ப் பற்றாக்குறை மாநிலமாக இருக்கின்றபோது இப்படி நீர் வீணாவதைத் தடுப்பதற்குரிய வகையிலே நீர் நிர்வாகத்தையும் அரசே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்றேன்.

அடுத்து 200 ஹெக்டேர் பரப்புக்கு மேல் உள்ள நிலத்திற்குப் பாசன வசதி அளிக்கக்கூடிய ஏரிகள் 490-க்கு மேலே இன்றைக்கு இருக்கின்றன. இந்தப் பெரிய ஏரிகளை மராமத்து செய்வதன் மூலமும், இவற்றை நவீனப்படுத்துவதன் மூலமும் 18 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கும் என்று இங்கே மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

[பிற்பகல் 1—10]

இதன் மேல் மேலும் 54,000 ஹெக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கப்படும் என்றும் நான் அறிகிறேன். ஆகவே, உலக வங்கி இந்தத் திட்டத்திற்கு உதவி செய்ய முன் வந்திருப்பதை நல்ல முறையில் பயன்படுத்தி கொண்டு தமிழகத்தில் உள்ள பெரிய ஏரிகள் அனைத்தையும் சுமார் 490 ஏரிகளையும் உடனடியாக நவீனப்படுத்துவதற்கான திட்டத்தை அரசாங்கம் உடனடியாக நிறைவேற்ற வேண்டும். அதை அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன்.

அதன் மூலம் உணவு உற்பத்தி சுமார், 3,78,000 டன்கள் அதிகமாகும் என்றும் நான் அறிகிறேன். இது ஒரு எட்டாண்டுக் காலத் திட்டம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இதற்கு வெளிநாட்டு அன்னிய செலாவாணி என்பது தேவையில்லை. நம்முடைய கிராமங்களிலேயே ஏராளமான தொழிலாளர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், அந்த ஏரிகளை நவீனப்படுத்தவும், அதன் மூலம் பாசன வசதிகளை அதிகரிக்கவும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும் உலக வங்கியிடமிருந்து உடனடியாக இதற்குக் கடன் வாங்கி இந்தத் திட்டத்தை அமுல் நடத்த வேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

நம்முடைய பகுதிகளிலே ஓடுகிற பல்வேறு ஆறுகளிலும், நீரே ஓடாத பாலாறு போன்றவைகளில் கூட, சில நேரங்களிலே, வெள்ளக் காலங்களிலே நிறைய தண்ணீர் வருகிறது. அந்த நீர் வீணாக கடலிலே போய் விழுவதை நாம் பார்க்கிறோம். அப்படி வெள்ளக் காலத்திலே வீணாக சமுத்திரத்திலே விழுகின்ற நீரை ஆங்காங்கே தடுப்பதற்கும், சில ஏற்பாடுகளை நாம் செய்ய வேண்டும். ஆங்காங்கே ஸ்டோரேஜ் டாங்க்ஸ் என்று சொல்லக் கூடிய பாண்ட் ஸ்கீம் என்று சொல்கிறார்களே அந்தத் திட்டத்தை அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

ஆங்காங்கே ஏரிகளை, கண்மாய்களை உருவாக்கி வெள்ளக்
காலங்களில் வரக்கூடிய அதிகப்படியான நீரைத் தேக்கி, அதை
நாம் பாசன வசதிகளுக்குப் பயன்படுத்தாமல், அந்தப் பகுதி
களில் நிலத்தடி நீரை அதிகரிப்பதற்கு உதவிகரமாக இருக்கக்
கூடிய திட்டத்திற்கு நாம் உபயோகப்படுத்த வேண்டும். இதன்
மூலம் நிலத்தடி நீர் அதிகரிக்கப்படும். பின்னாலே வறட்சி ஏற்
படக்கூடிய காலங்களிலே, அந்தப் பகுதி மக்களுக்கு அது உதவி
யாக இருக்கும். ஆகவே, அந்தத் திட்டத்தையும் பரிசீலனை
செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே வற்புறுத்த விரும்பு
கிறேன்.

அதேபோல சர்ஃபேஸ் வாட்டரைப் பற்றி அமைச்சர் அவர்
கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். சர்ஃபேஸ் வாட்டரில்
பெரும் அளவு நாம் பயன்படுத்தியாகிவிட்டது. ஆனால், நிலத்
தடி நீரை அந்த அளவிற்கு நாம் முறையாகப் பயன்படுத்தினோமா
என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.
அமைச்சர் அவர்களுடைய உரையிலே அதைப்பற்றிச் சொல்லி
யிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

'' ஐக்கிய நாடு சபையினுடைய வளர்ச்சித் திட்டத்தின் உதவி
யுடன் 1966-72 வரை ஒரு விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சி
தமிழகத்திலே நடத்தப்பட்டிருக்கிறது. அதற்கென தமிழ்நாடு
நிலத்தடி நீர்ப் பிரிவு ஒன்று சி. ஈ. தலைமையிலே அமைக்கப்பட்
டிருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே அதற்கென ஒரு
திட்டமும் வகுக்கப்பட்டதாக எனக்குத் தெரிகிறது. ஆனால்,
இன்று அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டுவிட்டது. மூன்று
ஆண்டுகளுக்கு முன்னாலே, நிலத்தடி நீரைப் பற்றிய விஞ்ஞான
பூர்வமான ஆராய்ச்சி நடத்தப்பட்டு, அதை முறைப்படுத்துவதற்
காக வகுக்கப்பட்ட அந்தத் திட்டம், அமுல்படுத்தப்பட்டிருக்குமே
யானால், இன்றைக்கு வறட்சி நிலை, நமது மக்களுக்கு இவ்வளவு
சிரமங்களைத் தந்திருக்காது. எதனாலே அந்தத் திட்டம் அப்
படியே இருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் ஆராய
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே நிலத்தடி நீரை நாம் முறைப்படுத்தாவிட்டால்,
கிணறுகள் வெட்டப்படுவதையோ அதிலே பம்புகள் வைக்கப்படு
வதையோ அனுமதி கொடுப்பதையோ நாம் வரைமுறை செய்யா
விட்டால், அதன் விளைவாக எதிர்காலத்தில் பல அபாயங்கள்
நமக்கு ஏற்படும். நிலத்தடி நீர் வரைமுறை இல்லாமல் உப
யோகப்படுத்தப்படுமேயானால், அதன் விளைவாக, பின்னால
விவசாயிகளுக்கு பெரிய சிரமங்கள் ஏற்படும் என்பதையும் இந்த
நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் டியூப் வெல் கார்ப்பரேஷன், அமைக்க
விருப்பதைப் பற்றி அவர்கள் உரையிலே சொல்லியிருக்கிறார்கள்.
அதை வரவேற்கிறேன், ஏற்கெனவே, சென்ற பட்ஜெட்



உரையிலே கூட அது பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஒரு
ஆண்டு காலமாக அந்தக் கார்ப்பரேஷன் அமைக்கப்படவில்லை
உடனடியாக அதை அமைத்து அதன் மூலம் விவசாயம் வளர்
வதற்கு அமைச்சர் அவர்கள் உதவி செய்ய வேண்டும் என்று நான்
இந்த நேரத்திலே வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, கிருஷ்ணா நதித்திட்டம் பற்றி எனக்கு முன்னால்
பேசிய உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். அது சம்
பந்தமாக நான் மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்
களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். மத்திய நீர்ப்பாசனத்துறை
ஸ்டேட் அமைச்சர் திரு. அன்சாரியிடம் இருந்து வந்த பதிலை
நான் ஏற்கெனவே நமது அமைச்சர் அவர்களிடம் கொடுத்து
இருக்கிறேன். கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தண்ணீர்
தமிழ்நாட்டிற்கு தருவதற்கு அவர்கள் ஆயத்தமாக இருக்கிறார்
கள். எப்படி பெற்றுக்கொள்வது என்பதை நாம்தான் முடிவு
செய்ய வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கட்
டளைக் கால்வாயிலிருந்து சென்னைக்கு நீர் கொண்டுவருவது
என்பது—நாம் எடுத்துவரக்கூடிய நீர் காவிரியில் இருக்கக்கூடிய
நீர். புதிதாக அண்டை மாநிலத்திலிருந்து, கிருஷ்ணாவிலிருந்து
15 டி.எம்.சி. வருவதுதான் நமக்கு இலாபகரமானது.
ஆகவே, அந்தத் திட்டத்தை விரைவாக அமல்படுத்த வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இந்தத் துறை
யைப்பற்றிய சில முக்கியமான பிரச்னைகளைக் கொண்டு வர
விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் இளமையும்,
ஆர்வத் துடிப்பும், செயலாற்றலும் மிக்கவர். இந்தத் துறையை
முற்றிலுமாக சீரமைத்துத் தர வேண்டிய நிலைமை இன்று உள்
ளது. இந்தத் துறையில் இன்று என்ன நடக்கிறது? பதவி
கள் பல இன்று காலியாக இருக்கின்றன. ஏ.இ. பதவிகள்
150-க்கு மேல் இன்று காலியாக இருக்கின்றன. ஏ.இ.இ. பதவி
கள் 70-க்கு மேல் இன்று காலியாக இருக்கின்றன. இ.இ. பதவி
கள் பத்துக்கு மேல் இன்று காலியாக இருக்கின்றன. எஸ்.இ.
பதவிகள் இன்று 2-க்கு மேல் காலியாக இருக்கின்றன. ஸி.இ.
பதவிகள் 2-க்கு மேல் இன்று காலியாக இருக்கின்றன. உலக
வங்கியின் உதவியோடு செயல்பட்டு வருகிற பெரியாறு-வைகை
திட்டத்திற்கான ஸி.இ. பதவி எட்டு மாதங்களாக காலியாக
இன்னும் ஆள் நியமிக்கப்படாமல் இருக்கிறது. இதுபோன்ற
காரியங்களினால் பல பணிகள் இன்று முடங்கிக் கிடக்கின்றன.
எனவே, இந்தப் பதவிகளுக்கெல்லாம் தகுதி வாய்ந்தவர்களை
நியமித்து அரசாங்கப் பணிகளை முடுக்கிவிட வேண்டும்.

ஏ.ஜே.இ.யாக இருப்பவர்களுக்கு ஏ.இ.இ. யாக பதவி உயர்வு
பெற இந்தத் துறையைப் பொறுத்த வரையில் 15 ஆண்டுகள்
அவர்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. ஆனால், அவர்களோடு

படித்து அவர்களைப்போல் வேறு துறைகளில் வேலை பார்ப்பவர்கள் இந்தத்துறையிலிருந்து பல்வேறு துறைகளாக இன்று பிரிக்கப்பட்டிருப்பதால், எலக்ட்ரிஸிட்டி போர்ட், வாட்டர் போர்ட், ஹவுசிங் போர்ட் என்று பல இருக்கின்றன. அவைகளில் பணியாற்றுகிறவர்களுக்கு ஐந்து ஆண்டுகளில் பதவி உயர்வு கிடைக்கிறது. ஆனால், 15 ஆண்டுகள் ஆனாலும்கூட இந்தத்துறையில் இருப்பவர்களுக்கு எ.இ.இ. பதவி உயர்வு இல்லை. இதுபோன்ற குறைகள் இந்தத் துறையில் தொடர்ந்து நீடிக்குமானால் அவர்கள் அவர்களுடைய பணிகளை செம்மையாகச் செய்யமுடியாத ஒரு நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே, இதைப்பற்றியும் அரசு கவனிக்க வேண்டும். இதற்காக இந்தத் துறையைப் பற்றி முற்றிலும் சீரமைப்பதற்காக ஒரு என்ஜினியரிங் கமிஷன்யை அரசாங்கம் நியமித்து அந்தக் கமிஷனின் சிபார்சுகளைப் பெற்று இந்த துறையை முற்றிலும் சீரமைக்க வேண்டும். என்ஜினீயர்களுக்குள்ள ஊதிய முரண்பாடுகளைக் கவனிக்க அமைக்கப்பட்ட சி. வி. ஆர். பணிக்கர் குழு சிபார்சுகள் என்னவாயிற்று என்று தெரியவில்லை. அந்தச் சிபார்சுகளை அமல்படுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். உத்தரப்பிரதேசத்தில் இருப்பதைப்போல் இங்கும் ஒரு என்ஜினியரிங்-இன்-சீப் பதவியை அரசு உருவாக்கி அதன் மூலம் இத்துறையை சீரமைக்க வேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் நீர்ப்பாசனத்துறை மீதான மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்து கொள்ள அனுமதி அளித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் தமிழகம் முழுவதும் பெரும்பாலும் பருவ மழையைத்தான் நம்பியிருக்கிறது. இங்கு பெரும்பகுதியான நிலங்கள் ஆற்றுப்பாசனத்தின்கீழ் இல்லை. இருக்கிற நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பங்கு தான் பாசன வசதியைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால் அதில் கூட 30 சதவீதம்தான் ஆற்றுப்பாசனத்தையும் கால்வாய் பாசனத்தையும் பொருத்திருக்கிறது. மொத்த நிலப்பரப்பில் 14 சதவீதம் ஏரி, குளங்களை நம்பியிருக்கிறது. பாசனத்தைப் பொறுத்த வரையில். இதில் நீர்ப்பாசனத்துறைக்கு அதுவும் குறிப்பாக சிறுபாசனத்திட்டங்களுக்கு ஒதுக்கியிருக்கிற தொகை மிக மிகக் குறைவாக இருப்பதை நாம் பார்க்கிறோம் : ஆகவே, இருக்கிற தொகையை வைத்துத்தான் இதை சிறப்பாக நடத்த வேண்டும். என்ற நிலை இந்தத் திட்டங்கள் எவ்வளவு முக்கியமானவை, இந்தத் துறை எவ்வளவு முக்கியமானது என்பதை வலியுறுத்தி அதிகத் தொகை ஒதுக்கி செயல்பட்டிருக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்,



[பிற்பகல் 1-20]

இங்கே கொடுக்கப்பட்ட புத்தகத்திலே, பாசனம் மற்றும் வெள்ளத் தடுப்புத் திட்டத்திலே, முதலாவதாக பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம் பற்றி சொல்லி இருக்கிறார்கள். இதிலே தமிழ் நாட்டிலும், கேரளாவிலும் தற்போது பாசன வசதி 12,5000 ஹெக்டேர்கள் அதாவது 30,000 ஏக்கர்கள் பாசன வசதி உறுதிப்படுத்துதல் என்றெல்லாம் சொல்லி, பாசன வசதி என்பது இன்றியமையாத ஒன்று என்பதை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்திலே எல்லா வேலைகளும் முடிவடைந்து விட்டதாகவும், ஆங்காங்கே சிறுசிறு வேலைகள் தவிர, மற்றெல்லா வேலைகளும் முடிந்து விட்டதாகவும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே வேடிக்கை என்னவென்று சொன்னால், ஆடிட்டர் ஜெனரல் ஆப் இண்டியா ரிப்போர்ட்டிலே, பக்கம் 23-லே

"The shortfall was mainly due to less expenditure under "Periyar System" and Parambigulam Aliyar Project" on account of non-execution of work owing to non-finalisation of tenders, scarcity of explosives required for rock blasting, non-settlement of land acquisition proposals."

என்பதற்கான காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இதுதான் இந்தத் திட்டங்களை விரைவுபடுத்த முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இதிலே ஒரு பகுதி டெக்னிகல் பிரச்னையாக இருப்பதால், அதற்குக் காலதாமதம் ஆவதை நாம் தடுக்க முடியாது. ஆனால், அரசாங்கம் செய்ய வேண்டிய டெண்டர் பைனலிசேஷன் போன்ற வேலைகள் எல்லாம்கூட காலதாமதம் ஆகிறது. அப்படி ஆவதைத் தவிர்த்து, விரைவுபடுத்துகின்ற நோக்கம் இருக்கிறதா என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டி, இப்படியெல்லாம் காலதாமதம் ஆகக்கூடாது; இப்படிப்பட்ட முக்கியமான திட்டங்களையெல்லாம் விரைவாக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கொடுக்கப்பட்டிருக்கின்ற நேரம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், சுருக்கமாகச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, தென்னாற்காடு மாவட்டத்தில் பெண்ணையாற்றின் கரையில் வடக்குப் பக்கத்திலே இருக்கின்ற கரையிலே பல கிராமங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மழைக்காலத்திலே, அந்தக் கிராமங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, பிடாகம்,

அத்தியூர் போன்ற சில கிராமப் பகுதிகளுக்கு ஏறக்குறைய 5, 6 அடி அளவில் மணல் மேடிட்டிருந்ததை, புல்டோசர் வைத்து நிறுவி, நிலங்களை மறுபடியும் சீரமைத்துக் கொடுத்தார்கள். அதைப் போல, வருகின்ற காலத்திலே வெள்ளக் காலங்களிலே இடையூறு ஏற்படாத அளவுக்கு அங்கே தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை நீண்டநாட்களாக வைத்திருக்கிறோம். மரகதபுரம், பிடாகம் குச்சிபாளையம், அத்தியூர் திருவாதி, வேளியம்பாக்கம், தளவானூர், காவணிப் பாக்கம், திருப்பாச்சனூர், தென்முச்சிபாளையம், சேர்ந்தனூர் அரசமங்கலம் ஆகிய கிராமங்களில், அந்தப் பகுதிகளில் அடிக்கடி வெள்ளம் வருகின்ற ஆபத்து ஏற்பட்டு, மிகவும் நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், அரசாங்கம் ஒரு கொள்கையை வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். தமிழகத்தில் ஆறுகளுடைய வடக்குப் பகுதியில்—அதாவது இடது கரையிலே தடுப்புச் சுவர் அமைப்பதை ஒரு கொள்கையாக வைத்துக் கொள்ளவில்லை—வலது கரையில் தான் வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால், அதே நேரத்தில் பண்ருட்டியில் இருக்கின்ற, அந்த நகரத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற காரணத்தினால், வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு 8.18 இலட்சம் செலவில் ஒரு திட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அதிலே பார்த்தால், பண்ருட்டி நகரம் வடது கரையில்தான் இருக்கிறது. அதற்கு மட்டும் செலவழிக்கலாம் என்பதை மகிழ்ச்சியோடு வரவேற்றாலும், அதேபோல் பெண்ணாற்றின் வடகரையில் இருக்கும் பகுதிகளைச் சீரமைப்பதற்காக தடுப்புச் சுவர் கட்டுவதற்காக பணம் ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், தென் ஆற்காடு, வட ஆற்காடு, மாவட்டங்கள் பலன்பெற நந்தன் கால்வாய் திட்டத்தை, மாண்புமிகு அமைச்சராக இருந்த ப.உ.ச. அவர்கள் அக்கறை காட்டி, எடுத்துக் கொண்ட அந்தத் திட்டம் இப்போது கிடப்பில் இருக்கிறது. அதை எடுத்து, விரைவிலே நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விழுப்புரத்தைப் பொறுத்தவரையில், கோலியனூர் வாய்க்கால், கண்டம்பாக்கம் வாய்க்கால், விழுப்புரம் வாய்க்கால், ஆழங்கால் வாய்க்கால் ஆகியவைகள் ஆற்றிலே இருந்து பிரிந்து பல ஏரிகளுக்கு தண்ணீர் தரக்கூடிய வாய்க்கால்களாக இருக்கின்றன. அந்த வாய்க்கால்கள் எல்லாம் பல ஆண்டுகளாக சீரமைக்கப்படாமல், தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றன. ஒவ்வொரு வாய்க்காலும், 12 லிருந்து 15 ஏரிகளுக்கு பாசன வசதி அளிக்கக்கூடிய வாய்க்கால்களாக இருக்கின்றன. அவைகளையெல்லாம் சீரமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



அதே போல், விழுப்புரத்திலே உள்ள ரயில்வே கழிவுநீர் வந்து சேர்ந்து, மகாராஜபுரம் போகும் ஊரல் வாய்க்கால் இருக்கிறது. அதை சீரமைத்துத் தந்தால், 200, 300 ஏக்கர்கள் பாசன வசதி ஏற்படுத்தித் தர முடியும்.

விழுப்புரத்திற்கு பக்கத்தில் வளவனூர் ஏரியை 23 இலட்சம் செலவில் சீரமைப்பதற்கும், தூர் எடுப்பதற்கும் 1976 ஆம் ஆண்டிலே ஒரு திட்டம் போடப்பட்டு, அதற்காக அரசாணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், 77-லே அதைப் 10 இலட்சமாகக் குறைத்து, இதுவரையில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதை விரைவு படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், விழுப்புரம் தாலுகாவில் மிகப் பெரிய ஏரிகள் என்று சொல்லக்கூடிய மருதூர், பூந்தோட்டம், விழுப்புரம், எருமணத்தாங்கல், மகாராஜபுரம், பொய்யாப்பாக்கம், சாலை அகரம், மேல்பாதி, கோலியனூர், பனங்குப்பம், கனாங்கர், பாணாம்பட்டு, கல்பட்டு, மாம்பழம்பட்டு, அரியலூர், கெடார், காணை, காங்சியனூர், பெரும்பாக்கம், ஆரியூர், சோழகனூர், சோழாம்பூண்டி, திருவாமாத்தூர், ஆலாத்தூர், வெராட்டிக் குப்பம், முத்தாம்பாளையம், மாதிரிமங்கலம், மேல்பாதி ஆகிய ஏரிகள் சீரமைக்கப்பட வேண்டுமென்று பல மனுக்கள் கொடுக்கப்பட்டிருந்தும், இன்னும் சீரமைக்கப்படாமல் இருக்கின்றது. அரசு அதனை கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தென்ஆற்காடு மாவட்டத்தில் திட்டக்குடி தாலூகா வெலிங்டன் நீர் தேக்கம். இது 28 ஆயிரம் ஏக்கர் ஆயக்கட்டு உள்ளது. கடை மடை பகுதிகளில் தண்ணீர் கிடைக்கவில்லை. சீரமைப்பு செய்யப்படவில்லை. விவசாயிகள் பலமுறை மனு கொடுத்திருக்கிறார்கள். ஆறு மாதத்திற்கு முன் 7, 8 ஏரிகளை சீரமைக்க வேண்டுமென்று சொல்லி செய்திருக்கிறார்கள். முறையாக செலவு செய்யப்படவில்லை. மேலும் குறிஞ்சிப்பாடி பெருமாள் ஏரி, 20, 30 வருடமாக தூர் வாரவில்லை. பொது மக்கள் இதுபற்றி கேட்டுமிருக்கிறார்கள். அதிகமான ஆயக்கட்டுள்ள ஏரி. இன்னும் தூர் வாரப்படவில்லை.

அடுத்து செங்கல்பட்டு மாவட்டத்தில் செம்பரம்பாக்கம் ஏரி 13 ஆயிரம் ஆயக்கட்டு உள்ள ஏரி. வரத்து வாய்க்கால் புதிதாக வெட்ட வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. அதை அரசு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சேயாறில் நார்த்தாம்பூண்டி தடுப்புச்சுவர் கட்டித்தர வேண்டும். சேயாற்றில் இருந்து துரிஞ்சாபுரம், மல்லவாடி, ஊசாம்பாடி ஏரிகளுக்கு கால்வாய் தோண்டப்பட வேண்டும். கலசப்பாக்கம்

தொகுதியில் மிருகண்ட நதியில் காந்தபாளையம் அருகில் அணை ஒன்று கட்டப்பட வேண்டும். ஆற்றுக்கால்வாய்களில் மணல் போக்குகளை சுத்தம் செய்ய வேண்டும்.

திருவண்ணாமலை சமுத்திரம் ஏரிக்கு சாத்தனூர் அணை தண்ணீரை கொண்டு ரும் கால்வாய்த் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் செங்கத்தின் அருகில் குப்பநத்தம் அணை, போளூரின் அருகில் செண்பக தோப்பு அணை, பெண்ணையாற்றிலிருந்து செய்யாற்றுக்கு கால்வாய் வெட்டப்பட முடியுமா என ஆராயவேண்டும் மாவட்ட நீர் பாசன மாநாடு காலம் தவறாமல் 6 மாதத்திற்கு ஒரு முறையாவது நடைபெற வேண்டும். மதிபீட்டு குழுவிலே கூட அறிக்கையிலே ஏரிகளில் ஆக்கிரமிப்புகள் அதிகமாக இருக்கின்றன அவற்றையெல்லாம் உடனடியாக நீக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஏரி, குளம், கண்மாய் பாசனத் திட்டங்களுக்காக உலக வங்கி தொடர்பு கொண்டு உடனடியாக போர் கால நடவடிக்கையைப் போலவும் 5 ஆண்டு, 6 ஆண்டு காலத்திற்குள் முடித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசனம் குறித்து மானியக்கோரிக்கைகளின் மீது, மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்களுடைய மேலான ஆலோசனைகளை அவர்கள் சேர்ந்திருக்கிற அல்லது , பல்வேறு பகுதிகளுக்கு அரசு செய்ய வேண்டிய, அல்லது செய்து கொண்டிருக்கிற பணிகளை விரைவு படுத்த வேண்டிய அவசியம் பற்றியும், கோரிக்கைகளையும் இங்கே சொல்லி இருக்கிறார்கள். மேலும், பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேச ஆர்வத்தோடு இருந்தாலும், நேரம் குறித்து அந்த வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கவில்லை. இருந்தாலும், அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அந்த அந்த தொகுதிகளிலே செய்யப்பட வேண்டிய வேலைகளையும், பணிகளையும் குறித்து தயவு செய்து எழுதி கொடுப்பீர்களே யானால் இப்போது நிலவுகின்ற வரட்சியை ஒட்டி நாம் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய போர் கால நடவடிக்கையில் அந்த பகுதிகளையும் சேர்த்து, காரியங்கள் விரைவு படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே, பேசவாய்ப்பில்லாத அல்லது பேசமுடியாத மாண்புமிகு உறுப்பினர்கள் குறித்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1.30]

இந்த புதிய பொறுப்பை நான் ஏற்றுக்கொணடதற்குப் பிறகு ஒவ்வொரு சட்டமன்ற பேரவை உறுப்பினருக்கும், மேலவை உறுப்பினருக்கும் நானே நேரடியாக நேர்முகக் கடிதம் அனுப்பியிருக்கிறேன். உங்களுடைய தொகுதிகளிலே நீண்ட காலமாக நீங்களும், மற்றவர்களும் நிறைவேற்ற வேண்டுமென்று கோரியும், நிறைவேற்றப்பட்டாமல் இருக்கக் கூடிய திட்டங்கள் அவை பெரிய நீர்ப்பாசனத்திட்டங்களாக இருந்தாலும் சரி, அல்லது



நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களாக இருந்தாலும் சரி, அல்லது சிறப்பு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களாக இருந்தாலும் சரி, முன்னுரிமை கொடுத்து எதை முதலில் எடுத்துக் கொண்டால் நல்லது என்று குறிப்பிட்டுச் சொல்வீர்களானால் அந்த அடிப்படையிலே அதை நாங்கள் நிறைவேற்றுவதற்குத் தயார்படுத்திக் கொள்வோம்என்ற முறையிலேதான் அந்த கடிதத்தை எழுதியிருக்கிறேன் கடிதங்கள் இரண்டு முறைகள் அனுப்பப்பட்டன. மூன்றாவது முறை ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் நினைவுப் படுத்தி, இன்னும் உங்களிடமிருந்து பதில் வந்து சேரவில்லை, அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறேன். அதற்குப் பதிலாக, பல்வேறு கருத்துக்களை பல்வேறு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த முறையினை நாங்கள் கையாள்வதற்குக் காரணம், தேவைகளை முடிவு செய்கிறபோது எதை முதலிலே எடுத்துச் செய்ய வேண்டுமென்று நாம் முடிவு செய்கிறபோது பொறியியல் வல்லுநர்கள் அவர்கள் ஒரு கோணத்திலிருந்து பார்த்து சிலவற்றை முடிவு செய்கிறார்கள். அதனால் நீங்கள் பொது மக்களுக்கு உள்ள பிரச்சினைகளையொட்டி முக்கியம் என்று கருதுகிற திட்டங்கள் இரண்டாவது வரிசைக்கு தள்ளப்பட்டு விடுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. காரணம் அவர்களுக்கு நாம் கொடுத்து இருக்கிற விதிமுறைகளின்படி அவர்கள் தயாரிக்கிறபோது அது பொருளாதார ரீதியிலே கட்டுப்படியாகிறதா நீர்வரத்து எப்படி இருக்கிறது என்கின்ற விதிமுறைகளுக்கு உட்பட்டு அவர்கள் தயாரிக்கிறார்கள். எனவே தான் சட்ட மன்ற உறுப்பினர்கள் பல்வேறு பகுதிகளிலே 20 ஆண்டுகள், 30 ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டிருக்கிற ஒரு நேரத்தில் இதோ வருகிறது, அதோ வருகிறது என்று சொல்லி அந்தத் திட்டங்கள் அப்படியே நின்று விடுகின்றன. எனவே அவைகளையெல்லாம் முன்னுரிமை கொடுத்துச் செய்ய வேண்டுமென்ற. அடிப்படையிலே தான் நாங்கள் கடிதங்களை எழுதினோம். இன்னும் கூட முழுவதுமாக கடிதங்கள் வந்து சேரவில்லை. என்றாலும் 100, 150 சட்டமன்ற உறுப்பினர்கள் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். ஒருவேளை மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தத்தொகுதி பெரிதாக இருக்கலாம். போய்ப் பார்த்து அனுப்புவதற்கு காலதாமதம் ஏற்படலாம். இருந்தாலும் கூட அவர்கள் எழுதிக் கொடுப்பார்களானால் தனியாக வைத்து ஒவ்வொரு திட்டமாக நாங்கள் பொறியாளர்களுக்குத் தெரிவித்து தொடர்ந்து அதை எடுத்துச் செய்கிறீர்களா, செய்ய வேண்டும், உடனடியாகச் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுவதற்கு வசதியாக இருக்கும். அந்த முறையிலே இப்போது நாம் சில திட்டங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது சிறிய சிறப்பு நீர்ப்பாசன திட்டங்களுக்கு எல்லாம் முன்னுரிமை கொடுத்து நிறைவேற்ற வேண்டும், காரணம் மேல்மட்ட நீர்களை நாம் அதிகமாக பயன்படுத்தி விட்டோம் நிலத்தடி நீர் தான் இனி

இருக்கிற நீரை ஏரிகளையும், குட்டைகளையும், கண்மாய்களை
யும் பராமரித்து கொள்ளளவை அதிகப்படுத்தி நீர் வளத்தை
நாம் காப்பற்றுவதன் மூலம் உற்பத்திகளை பெருக்க முடியும்
என்ற அணுகு முறையைப்பற்றி மேலான கருத்துக்களை எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். அது நம்மைப்போன்ற பற்றாக்குறை
மாநிலத்திலே கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான விஷயம்
காரணம் நாம் உள்ள மேல்மட்ட நதிநீர்களை எல்லாம் பயன்
படுத்தி விட்டோம். யூஸ்டு அப் ரிவர் என்று சொல்லக்கூடிய
அளவுக்கு எல்லாம் பயன்படுத்தப்பட்டு ஆறுகளாகவே இருக்
கின்றன. எனவே நாம் சிக்கன நடவடிக்கை மூலமாக திட்டங்
களை எப்படி நிறைவேற்ற வேண்டுமென்று பார்த்துக் கொண்
டிருக்கிறோம். இதற்கு முன்பெல்லாம் ஒரு புதிய குளத்தை
அமைக்க வேண்டுமென்றால் அந்தக் குளத்தினால் எவ்வளவு ஏக்
கர்களுக்கு பாசன வசதி அளிக்க முடியும், அதன் மூலம் எவ்வளவு
டன்கள் அதிகமாக உற்பத்தி வருகிறது என்ற ஒரு கணக்கைப்
பார்த்து ஒரு டன்னுக்கு 3,500 ரூபாய் வரை செலவு செய்யலாம்
என்று பொருளாதார ரீதியாக கட்டுப்படியாகிறது என்று பார்த்
தோம். ஆனால் இப்போது உள்ள வறட்சி நிலையில் அந்த
விதிகளை எல்லாம் வைத்துப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.
3,500 ரூபாய் என்று கூட பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம்.
15 ஆயிரம் வரை ஒரு டன் உற்பத்திக்கு செலவானாலும் பரவா
யில்லை, உடனடியாக புதிய குளங்களை அமைத்து பாசன வசதி
களுக்கு வழிவகை செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டு அரசு
உத்திரவிட்டு அந்த அடிப்படையிலே 73 புதிய குட்டைகள் 83
லட்சம் ரூபாய் செலவிலே வறட்சி காலத்திலே உடனடியாகச்
செய்யப்பட வேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது. அதைப்
போல புதிய நீர்ப்பாசன அணைக்கட்டுகள் 15 பாசன மராத்து
வேலைகளுக்கு 4380 இடங்களில் 10 கோடியே 48 லட்சம் ரூபாய்
செலவிலே மராமத்து வேலைகள் உடனடியாக முடுக்கிவிடப்
பட்டிருக்கின்றன.

குளங்களை ஆழப்படுத்துகின்ற வகையில் 366 இடங்களிலே
ஒரு கோடி ஐம்பது இலட்சம் ரூபாய் செலவு செய்து இந்த வறட்
சிக் காலத்திலே நிவாரணப்பணியாகத் தீவிரமாகச் செயல்பட
வேண்டுமென்று பொதுப்பணித்துறைக்கு இப்பொழுது முதல்
கட்டமாக 9·5 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறோம் என்றா
லும் கூட 14 கோடி ரூபாய்க்குமேல் இன்றைக்கு திட்டங்கள்
எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பின் தங்கிய பகுதி என்று பார்க்கின்றபொழுது பொருளாதார
ரீதியாகக் கட்டுப்படியாகிறதா இல்லையா என்பதையெல்லாம்கூட
இரண்டாவது பட்சமாக வைத்துக் கொண்டு, நாம் அவைகளை
நிச்சயமாகச் செயல்படுத்தி ஆக வேண்டும். நம்முடைய நாட்
டின் நிலை அப்படியிருக்கின்ற காரணத்தினால் பின் தங்கிய பகுதி
களை வளப்படுத்துவது எப்படியென்பதைப் பிறகு பார்க்கலாம்.
இது இந்த ஆட்சிக்காலம் என்று அல்ல, பொதுவாகவே வர



லாற்று ரீதியாகவே பார்க்கின்றபொழுது இங்கே அணைகளைக்
கட்டி, பாசன வசதிகளை முறைப்படுத்தி, சிறந்த முறையிலே
விஞ்ஞான ரீதியாக விவசாயம் செய்யப்பட்டு வந்திருக்கிறது.
உணவு உற்பத்தி செய்யப்பட்டு வந்திருக்கிறது என்பதை நாம்
பார்க்கிறோம். கல்லணை என்பது அதற்குப் பெரிய எடுத்துக்
காட்டு. இன்றைக்கு அந்த ஆண்டுகளிலே கட்டப்பட்ட ஒரு
அணை அப்படி உலகத்திலே இருக்கும் என்று சொல்ல முடியாது.
ஆகவே, நம்முடைய நாட்டினுடைய மனோநிலை, அந்தச் சிந்
தனை வழியே, முறையாக அணைகளைக் கட்டிப் பாசன வசதி
களைப் பெருக்க வேண்டுமென்று ஒரு நல்ல தன்மையிலேயே
அமைந்தத விளைவாகத்தான் ஒவ்வொரு ஆட்சிக் காலத்திலே
யும், கிட்டத்தட்ட இந்த அணைக்கட்டுத் திட்டங்கள், நீர்ப்
பாசனத் திட்டங்களுக்கு ஒரு தனிக் கவனம் செலுத்தி, முன்னுரிமை
கொடுத்து செய்யப் பட்டு வந்திருக்கிறது.

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்தில் செய்யப்
பட்டதைபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கூட இங்கே குறிப்
பிட்டார்கள். அது உண்மைதான். அவர்களுடைய காலத்
திலே ஓரளவிற்கு அதிலே அதிகக் கவனம் எடுக்கப்பட்டு, பெரும்
பான்மையான பகுதிகள், அணைக்கட்டுகள் எல்லாம் உருவாகி
நம்முடைய தமிழகத்தினுடைய உற்பத்தி அதிகமாவதற்கு ஒரு
அடிப்படையை அவர்கள் உண்டாக்கினார்கள். அதற்குப்பிறகு
இன்றைக்கு நாம் இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே மிகத்தெளி
வாக சொல்லியிருக்கிறோம். அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு புதிதாக எடுத்
துக் கொள்ளப்பட்ட திட்டங்கள் என்று நீங்கள் பார்ப்பீர்களே
யானால், அதிலே அந்தந்த நிலைகளைக் குறிப்பிட்டுச் சொல்லி
யிருக்கிறோம். ஏறக்குறைய என்று சுமாரான கணக்கிலே என்று
சொன்னாலும் கூட, இதுவரையில் நிறைவேற்றப்பட்டு வருகின்ற
திட்டங்களுக்காக சுமார் 50 கோடி ரூபாய்க்குமேல் நாம் செலவு
செய்திருக்கிறோம். புதிதாகக் திட்டங்களை, இடங்களைக்
கண்டுபிடித்து, நீர் அளவைக் கண்டுபிடித்து, அந்தப் பகுதியி
னுடைய மக்களினுடையே தேவைகளை மனத்தில் வைத்து அதை
நாம் செய்திருக்கிறோம். அதைப் போலவே, எடுக்க வேண்
டிய திட்டங்கள் என்று சொல்லி ஒரு கணக்கைப் பார்த்தாலும்,
அதிலே ஒரு 50 கோடி ரூபாயை நாம் ஒதுக்கியிருக்கிறோம்.
அதற்குப் பிறகு, ஏற்கெனவே முந்தைய ஆட்சிக் காலங்களிலே
உருவாக்கப்பட்ட திட்டங்கள், அதை நவீனபடுத்துவதன் மூல
மாக நாம் சிக்கனமான முறையிலே, நீரை அதிகமாகச் சேமித்து
அதை அதிகமாக பாசன வசதி பெறுவதற்கான சூழ்நிலையை உண்
டாக்க வேண்டுமென்று அடிப்படையில் நவீனப்படுத்தப்பட
வேண்டிய திட்டங்கள்—அது ஏற்கெனவே ஒவ்வொரு ஆட்சிக்
காலத்திலேயும் உருவாக்கப்பட்ட திட்டங்கள்தான். ஆனால்
அதையே நவீனப்படுத்துவதன் மூலமாகக் கூடுதலான பகுதிகளுக்கு
நீர்ப் பாசன வசதி கொடுக்க முடியுமென்ற அடிப்படையில் இப்

பொழுது விரிவான ஆய்விலே உள்ள திட்டங்கள் என்று எடுத்துக் கொண்டால், 343 கோடி ரூபாய் அளவிலே அந்தத் திட்டங்களை நாம் ஒவ்வொன்றாக வைப்பதற்கு முதல் கட்டமாக இரண்டாவது கட்டமாக நாம் எடுத்துச் செயல்பட வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். ஆகவே, இப்படி நாம் ஏற்கெனவே திட்டங்களை நிறைவேற்றி முடிந்துவிட்டது என்று இருந்தாலும் கூட, இப்படி நவீனப்படுத்துவதன் மூலமாகப் புதிய புதிய முறைகளைக் கையாள்வதன் மூலமாகத்தான் இவைகளை நாம் பாதுகாக்க முடியும் என்று நம்முடைய அரசு கருதுகிறது.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள், பாலாறு பேசினைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது. வெள்ளக் காலங்களிலே சில நேரங்களில் அதிகமான அளவிற்கு தண்ணீர் சென்று விடுகிறது; பிறகு இப்பொழுது வறட்சி என்று சொல்லுகின்றபொழுது நிலத்தடி நீர் கீழே போய்விடுகிறது; அங்கே ஒன்றும் செய்ய முடியாத நிலைமையிருக்கிறது. எனவே ஆங்காங்கே பாண்ட் ஸ்கீம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஸ்டோரேஜ் டாங்க்ஸ் கட்ட வேண்டுமென்று குறிப்பை இங்கே சொன்னார்கள். அதன் மூலமாக அந்த நிலத்தடி நீரைத் திரும்பவும் பழைய இடத்திற்குக் கொண்டு வருவதற்கு, அதாவது ஆர்ட்டிபிஷியல் ரிச்சஸ்-ஏற்கனவே நம்முடைய தலைமைப் பொறியாளர் (கிரவுண்ட் வாட்டர்) அவர்கள் திட்டக் குழு உறுப்பினர்களோடு விவாதித்து அப்படிப்பட்ட ஒரு திட்டத்தைக் கொண்டு வருவது தமிழகத்திலே, குறிப்பாக, முன்னோடித் திட்டமாகப் பாலாறு பகுதியிலே கொண்டு வருவதுகூட நல்லது என்று கருத்துத் தெரிவித்துக் கொள்கை அளவிலே அந்த விவாதத்திலே அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாகக் கூட அவர்கள் சொன்னார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினரவர்களும் அதே ஒரு கருத்தைச் சொல்வதைப் பார்க்கின்றபொழுது நம்முடைய தலைமைப் பொறியாளர் அவர்களுடைய கருத்தையே அவர்கள் இங்கே பிரதிபலிப்பதைப் போன்ற ஒரு சந்தோஷமான உணர்வு இந்த அரசுக்கு ஏற்படுகிறது. அதை நிச்சயமாக நாம் பரிசீலித்தாக வேண்டும். அதாவது மழைக்காலங்களிலே கூடுதலாக நீர்வளம் அங்கே இருக்கின்ற பொழுது, ஆங்காங்கே குளங்களிலே நீரைத் தேக்கி வைப்பதன் மூலமாக நிலத்தடி நீரை நாம் பாதுகாத்துக் கொண்டு வருகிறோம். இப்படி எதிர்பாராத வறட்சி ஏற்படுகின்றபொழுது இந்தத் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்வோமேயானால், எப்படியும் மூன்று நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை இப்படியொரு சோதனை வந்து கொண்டேயிருக்கிறது. அப்படிப்பட்ட காலங்களிலே இந்த நீரைப் பயன்படுத்துவதன் மூலமாக ஒரு கடுமையான நிலைமையைத் தவிர்க்க முடியும் என்ற அந்தக் கருத்தை நிச்சயமாக நாங்கள் கவனத்தோடும், அக்கறையோடும் பரிசீலனை செய்து தனித் திட்டமாகவே உருவாக்கி அதைத் தமிழகத்திலே பல்வேறு பகுதி களிலே, பாலாறு பேசின் என்று மட்டும் நாம் எடுத்துக் கொள்ளத்தேவையில்லை.



(பிற்பகல் 1–40)

ஒவ்வொரு மையமான பகுதிகளிலும் அப்படிப்பட்ட 'பான்ட்ஸ் ஸ்கீம்' களை நாம் உருவாக்க வேண்டும். அதன் மூலமாக நிலத்தடி நீரினுடைய அளவைக் காப்பாற்றுவதற்கும், வறட்சிக் காலங்களிலே நிலைமைகளைச் சமாளிப்பதற்கும், அந்த நீரைப் பயன்படுத்தலாம். அது ஒரு நல்ல யோசனை. அதை நிச்சயமாக இந்த அரசு கவனத்திலே கொண்டு சீரிய முறையிலே செயல்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் சொல்கிறபொழுது, சென்ற ஆண்டு ஒதுக்கிய அளவிற்குக் குறைவாக இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றார். பொதுவாக, பாசனத்தைப் பொறுத்த அளவில், அதிலே இருக்கிற நடைமுறை, அதைத் தயாரித்த உடனே—ஒரு கட்டிடம் கட்ட வேண்டுமென்ற வேலைக்கு நாம் கவனிக்க வேண்டிய விஷயங்களை விட, பாசனத் திட்டங்களுக்கு, இன்னும் அதிகமாகவே அதனுடைய 'ஹைட்ராலஜி' அவைகளையெல்லாம் பார்த்து, டெக்னிக்கலாக சில விஷயங்களைக் கவனித்துத் தயாரிக்க வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக, இந்த அளவுக்குத் திட்டங்களை விரைவாக நாம் தயாரித்து, அதற்கேற்ப நிதியை ஒதுக்குகிறோம். ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகச் செலவிடப்பட வேண்டுமென்பதிலே அரசு அக்கறையாக இருக்கிறது. சென்ற ஆண்டு சேர்வலாறு மின் திட்டத்திற்கு ரூபாய் 2½ கோடி டெப்பாசிட் செய்யப்பட்டது. அது இப்பொழுது தேவையில்லை. அதே போல், ஃப்ளாட் டாமேஜுக்காக, ரூபாய் 1½ கோடி ஒதுக்கப்பட்டது. டி.ஏ.பி. திட்டம் முடிவடையும் நிலையிலிருப்பதால், இந்த ஆண்டு அதற்கு நிதி ஒதுக்கத் தேவையில்லையென்ற அந்தக் காரணத்தினால்தான் ரூபாய் 5 கோடி அளவுக்குக் குறைத்துவிட்டதே தவிர, மற்றபடி அந்தத் திட்டங்களை அந்த அளவிற்கு நாம் எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். இன்னும் கூடுதலாக, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பார்த்தால், மிக விளக்கமாக நாம் சொல்லியிருக்கிறோம். குறைந்த பட்சம் 90 சதவீதம் அனைத்து இடங்களையும் நாம் பயன்படுத்தி விட வேண்டுமென்கிற அளவிற்கு வர வேண்டுமென்ற திட்டத்திற்கே நாம் தயாராக இருக்கிறோம். எனவே, அவைகளை இன்னும் நிச்சயமாக விரைவுபடுத்துவதற்கும் சீரிய முறையிலே செயல்படுத்துவதற்கும் அரசு தயாராக இருக்கிறது. நீங்கள் சொன்ன யோசனைகளை, நீங்கள் சொன்ன பெரிய குற்றச்சாட்டுகள் என்று கூட நான் கூற மாட்டேன். நானே இருக்கிற நடைமுறை தவறுகளை நீங்கள் சுட்டிக்காட்டுவதை வரவேற்கிறேன்.

அதிலேயும் சில இடங்களிலே பதவிகள் நிரப்பப்படாமல் இருப்பதன் காரணமாக ஏற்பட்ட சூழ்நிலை கூட கவனத்திற்குக்

கொண்டு வரப்பட்டது. அதை உடனடியாக, விரைவாக, நிரப்பப்பட வேண்டிய பதவிகளை, நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்கும்.

காரியங்களை நாம் மேலும் வேகமாகச் செய்தாக வேண்டும். காரணம், இன்றைக்கு நாம் ஒரு பெரிய பஞ்சத்தை அல்லது கடுமையான நிலைமையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிற காரணத்தாலே, அவைகளை எல்லாம் நிச்சயமாக நாம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லவேண்டிய ஒரு விஷயம், நம்முடைய துறையைப் பொறுத்த அளவில், இப்பொழுது தனியாக ஆய்வு செய்வதற்கென்று ஒரு தலைமைப் பொறியாளர் வைத்து அவர்கள் முழு அளவிலே, எங்கெங்கு வாய்ப்பு வசதிகள் இருக்கின்றனவோ, அவைகளை எப்படிப் பயன்படுத்த முடியும் என்பதை ஆய்வுகள் மூலமாகச் செய்து கொண்டு வருகிறார்.

இவ்வளவு கோடிக் கணக்கான ரூபாய்க்குத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டதற்குத் தனியாகத் தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டது தான் காரணம். அதுபோல், சிறப்புச் சிறு நீர்ப்பாசனம் 'மைனர் இரிகேஷன்' திட்டங்களுக்காகத் தனித் தலைமைப் பொறியாளர்; இரிகேஷனுக்கென்று ஒரு தலைமைப் பொறியாளர். அதேபோல், நிலநீர் ஆய்வு, நிலத்தடி நீர் என்று தலைமைப் பொறியாளர் பொறுப்பிலே இருக்கிறது. மேலும் கூடுதலாக, பூண்டியிலே இருக்கக்கூடிய ஆராய்ச்சி நிலையத்திலே ஒரு தலைமைப் பொறியாளர் பதவியைக் கூடுதலாக உயர்த்தியிருக்கிறோம். இன்னும்கூட இரண்டு மூன்று தலைமைப் பொறியாளர் பதவிகளை ஏற்படுத்தி, நாம் இந்தத் திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்கு என்ன செய்ய முடியும் என்பதை அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அதை நாம் உடனடியாக நிறைவேற்றுவதன் மூலமாக, நல்லமுறையில் பணியாற்ற இயலும். திட்டமிடுகிறோம், பணத்தை ஒதுக்குகிறோம். ஆனால், அதைச் செலவு செய்யக்கூடிய நேரத்தில் சில இடர்ப்பாடுகள் பொறியாளர்களுக்கும் இருக்கலாம், மற்றவர்களுக்கும் இருக்கலாம். அவைகளை உடனடியாகக் களைந்தெறிந்து, தீவிரமாக நாம் அதை நிறைவேற்ற முனையும்போது, நிச்சயமாக அதைவிட இன்னும்கூட அதிகமான அளவுக்கு நிதியை நாம் செலவழிப்பதற்கான வாய்ப்பிருக்கிறது. அதுதான் அடிப்படை ஆதாரம். 'நீரின்றி அமையாது உலகம்' என்று சொன்னால், அது இலக்கிய வளத்திற்கோ, சுவைக்கோ சொல்வதல்ல. அடிப்படை அதுதான். இன்றைக்கு எவ்வளவோ பெரிய தொழிற்சாலைகள், திட்டங்கள் எல்லாம் இருந்தாலுங்கூட மழை இல்லை என்கிறபொழுது மின் சார வெட்டு வந்துவிடுகிறது. பல்வேறு பிரச்சினைகளை நாம் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது; குடிதண்ணீர் பிரச்சினை;



கால்நடைப் பிரச்சினை; தீவனப் பிரச்சினை என்று எல்லாமே வந்துவிடுகிறது. ஆகவே, அதிலே நாம் அதிகமான கவனம் செலுத்த வேண்டும். அதிலே பல்வேறு முனைப்பான காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதிலே நிச்சயமாக எந்தவிதமான மாறுபாடும் இல்லை. சென்ற ஆண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகின்றபொழுது, மேலவையிலே பேசுகின்ற பொழுது என்ன, என்ன கருத்துக்களை, அல்லது கோரிக்கைகளை அல்லது ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்களோ, அதையெல்லாம் பரிசீலனை செய்து, பதிலை புத்தக வடிவிலே அச்சிட்டுக் கொடுத்திருக்கிறோம். இன்னும் கூட, அடுத்த முறை இந்தப் பதிலை அச்சிட்டு வைக்கும்போது, இன்னும் விரிவான முறையிலே, ஆய்விலே இருக்கிறது என்பதைக் கூட, கொஞ்சம் குறைக்கின்ற அளவிலே, இருக்கிறோம். காரணம், நம்முடைய உறுப்பினர், மாண்புமிகு திரு. துரை முருகன் போன்றவர்கள் எல்லாம், இனிமேல் உங்களை நான் வேறுவிதமாக அழைக்கப் போகிறேன். தகவல் இல்லையென்று சொன்னால், தகவல் இல்லாத மந்திரி என்று சொல்வேன் என்றெல்லாம்கூட வேடிக்கையாகச் சொன்னார்.

அதைக்கூட முடிந்த அளவிற்குக் குறைத்து ஒரு பாசிட்டிவ் ரிப்ளையாக—முடிவான ஒரு பதிலாக அந்தந்தத் திட்டங்கள் குறித்து சொல்வதற்கு முயற்சி எடுக்கப்படும். அநத வகையில் இதில் கவனம் செலுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், ஏதோ சட்டமன்றத்தில் சொல்கிறார்கள், நாம் அதைக் குறித்து வைத்துக்கொண்டு இருக்கிறோம் என்கிற நிலைமை இல்லாமல், அந்த விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, முழு அளவில் கவனம் செலுத்தி, அதைச் செய்வது முக்கியமான கடமை என்பதை நான் நிச்சயமாக உணர்கிறேன். இங்கே தெரிவிக்கப்பட்ட கருத்தை எந்த விதத்திலும் அலட்சியம் செய்யாமல், உங்கள் மனதை நிறைவு செய்கிற வகையில், அந்தக் காரியங்களைச் செய்ய அந்தத் துறை இயந்திரம் முடுக்கி விடப்படும், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து இருக்கிறார்கள். அதிலே பல்வேறு திட்டங்களைக் குறிப்பிட்டு அதுகுறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். ஆங்காங்கே இருக்கும் கண்மாய்கள், பாசன ஏரிகள், குளங்கள் சரியாக கவனிக்கப்படவில்லை என்கிற கொள்கையில் அடிப்படையில் கொடுத்து இருக்கிறார்கள். அவைகளை எல்லாம் முடிந்த அளவிற்கு துரிதமாகச் சீர் செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக நம்முடைய அரசுஇயந்திரங்கள் முடுக்கி

விடப்படும் என்று கூறிக் கொண்டு, உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு துரித நடவடிக்கை எடுக்கும் என்பதை உறுதியாகச் சொல்லி, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை தயவுசெய்து திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** இது சாப்பாட்டு நேரம். எல்லோரும் பசியாக இருக்கிறார்கள். ஆகவே, நான் அதிக நேரம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மக்களின் நன்மைக்காக ஒரு தகவலை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே நீர்ப்பாசன மானியக் கோரிக்கை மீதான கொள்கை விளக்கக் குறிப்பு அச்சிட்டு உறுப்பினர்களுக்குத் தரப்பட்டு இருக்கிறது. அதிலே சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருவதைப் பற்றி குறிப்பிடுகையில் கிருஷ்ணா நதி நீர் திட்டம் பரிசீலிக்கப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. எனக்குக் கிடைத்த தகவல்படி அதற்காக அலுவலகம் கூட ஏற்படுத்தப்பட்டு, அந்தத் திட்டத்தின் சாத்தியக் கூறுகள் பற்றிய ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு இருந்த போதிலும், அந்தத் திட்டத்திற்காக குறிப்பிட்டு ஒதுக்கப்பட்ட தொகை திருப்பி அனுப்பப்பட்டு இருக்கிறது என்பதாகும். இந்தக் குறிப்பு காம்ட்ரோலர் அன்டு ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டில் இருக்கிறது. ஆகவே, அது ஆய்வில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து, நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் கட்டளைக் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு எல்லா பாசிபிளிட்டீஸ்சும் இருக்கிறது, என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அது நிறைவேற்றப்படுமா ? அல்லது ஏற்கனவே இருக்கும் வீராணம் திட்டம் கைவிடப்பட்டதே, அது அமல்படுத்தப்படுமா ? இந்த 3 திட்டத்தில் எந்தத் திட்டம் வர வேண்டும் என்று ஆய்வு செய்யப்படுகிறது, அதற்கான முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மற்றொன்றையும் கேட்க விரும்புகிறேன். மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைத் தமிழகத்திற்குப் பயன்படுகிற வகையில் திருப்பி விடுகின்ற கோரிக்கை இருக்கிறது. கேரளாவில் இருக்கும் அமைச்சர் தெளிவாகச் சொல்லி விட்டார்கள். அதைத் திருப்பி விட அனுமதிக்க முடியாது என்று. அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, அது வெறும் ஆய்வுதானா, அல்லது அதனுடைய நிலை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ? அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, நான் சில விஷயங்களை இங்கே பேசக்கூடாது, தவிர்க்கப்படவேண்டும் என்று இன்னும் சொல்லப்போனால்—பிடிவாதமாக இருந்து வருகிறேன். காரணம், நாம் பெற்றுக் கொள்கிற டெயில் என்டில், ரிசிவிங் என்டில் இருக்கிறோம்.



பல்வேறு பிரச்னைகள் பல காலகட்டங்களில் வந்து இருக்கின்றன. அதையெல்லாம் நாம் ஆராய்ச்சி செய்து கொண்டு இருக்க முடியாது. மாநிலங்களுக்கு இடையிலுள்ள நதிகள் நீர் பிரச்னையில் நாம் கடந்த 3—4 ஆண்டுகாலமாக எந்த அளவிற்குப் அக்கறை காட்டி வருகிறோம் என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்களும், இதற்கு முன்பு நீர்ப்பாசனம் பொறுப்பில் இருந்த நம்முடைய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும், இன்றைக்கும் தொடர்ந்து அவர்களும், மற்றும் நீர்ப்பாசனத் துறையை அவ்வப்போது பொறுப்பேற்று வரும் அமைச்சர்களும் கலந்து கொண்டிருக்கிற கூட்டங்கள், மத்திய அரசோடு அணுகி இருக்கும் முறைகள், கேரள அரசோடு பேசி இருக்கும் பேச்சு வார்த்தைகள் இவைகளின் அடிப்படையில் வைத்துப் பார்த்தால் ஒரு நல்ல சுமுகமான சூழ்நிலையை உருவாக்கிட கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறோம் என்பது தெரியும். அதிலே ஒரு நம்பிக்கையோடு இருக்கிறோம். அதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. 30—40 ஆண்டுகாலமாக இருக்கும் பிரச்னையை வந்தவுடனே தீர்த்துவிடமுடியும் என்று சொல்லமுடியாது. ஒரு கனிவான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதன் அடிப்படையில் மேற்குநோக்கிப் பாயும் நதிகளை அதிகமாகச் சொல்லமுடியாது நிச்சயமாக ஓரளவிற்கு நாம் நம்முடைய வறட்சிப் பகுதிகளில் தவித்துக்கொண்டு இருக்கும் மாவட்டங்களின் நிலைமைகளைப் போக்க அந்த நீரைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது, அதிலே நம்பிக்கையோடு இருக்கிறோம். அந்த முயற்சியில் ஒவ்வொரு அடியாக முன்னேறிக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-50]

இங்கே கிருஷ்ணா நதித் திட்டமா, கட்டளைக்கால்வாய்த் திட்டமா, அதுவா, இதுவா, என்று சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்து பேசி, ஒரு முடிவு எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். காரணம், இதிலே பல நுட்பமான கருத்துக்கள் இருக்கின்றன. இப்படி நுட்பமான கருத்து என்று சொல்லி, தப்பித்துக்கொள்கிறேன் என்று தயவுசெய்து யாரும் எண்ணிவிட வேண்டாம். எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, முடிவு செய்ய இருக்கிறோம். அதுவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் பொறுமையோடு இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதங்கள் இத்துடன் முடிவுற்றன. மானியக் கோரிக்கைகளுக்கான வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கோரிக்கை எண் 36—பாசனம்.

திருவாளர்கள் ந. சிவஞானம், கே. ஆர். சுந்தரம், பொ. விஜயராகவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி "மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 27,91,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

திருவாளர்கள் த. வேணுகோபால், ந. சிவஞானம், என். பழனிவேல், சோ. அழகர்சாமி, பொ. விஜயராகவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி "மானியக் கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 33,10,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4 ஆம் நாள் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-52 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

(246) பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1978–79 ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 அ. பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

105. நீர்ப்பாசனம் மீதான 1980–81 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின் போது சட்ட மன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் அளிக்க கருத்துரைகளின்மீது எடுக்கப்பட்ட தொடர்நடவடிக்கைகளின் விவர அறிக்கை (ஆங்கிலம்).

## இணைப்பு I

[581ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 624-க்கான விடையைக் காண்க].

(அ) தமிழ்நாட்டில் கருப்புக்கல் உள்ள இடங்களில் தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு 18 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் 17 இடங்களில் தமிழ்நாடு கனிம நிறுவனம் கரும்பாறைகளை உற்பத்தி செய்து வருகிறது.

(ஆ) எடுத்துக்கொண்ட இடங்கள் பின்வருமாறு :—

| இடம். | மாவட்டம். | பரப்பளவு. (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. பேவலூர் காப்புக்காடு .. | தர்மபுரி .. | 8.39 |
| 2. அரிஜனஹள்ளி .. | ஷை | 101.92 |
| 3. கோபிநாதம்பட்டி .. | ஷை .. | 49.25 |
| 4. டொன்னகுட்டஹள்ளி .. | ஷை .. | 203.02 |
| 5. சிந்தாலப்பாடி .. | ஷை .. | 153.27 |
| 6. மாட்டத்தஹள்ளி .. | ஷை .. | 117.30 |
| 7. ஜாம்மனஹள்ளி .. | ஷை .. | 32.07 |

| இடம். | மாவட்டம். | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 8. மஞ்சிநாயக்கனஹள்ளி .. | ஷை .. | 19.67 |
| 9. பத்ரஹள்ளி .. .. | ஷை .. | 7.92 |
| 10. ஜாரி குரிச்சி .. .. | ஷை .. | 42.10 |
| 11. புலிக்குன்றம் .. .. | செங்கற்பட்டு .. | 24.88 |
| 12. இரும்புலி ஒரகடம் காப்புக் காடு. | ஷை .. | 8.00 |
| 13. எல்லிக்கரடு .. .. | பெரியார் .. | 10.80 |
| 14. வி. பரங்கனிக் குன்னம் .. | தென்னாற்காடு | 37.39 |
| 15. உடையார்நத்தம் .. | ஷை .. | 10.25 |
| 16. குன்னம் .. .. | ஷை .. | 81.52 |
| 17. பைத்தூர் காப்புக்காடு .. | சேலம் .. | 5.03 |

(இ) எஞ்சியுள்ள 121 குவாரிகளில் 19 குவாரிகளுக்கு தமிழ் நாடு கனிம நிறுவனம் உரிமம் வேண்டி அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. ஏனைய குவாரிகள் தொடர்பாக அவைகளை இலாபகரமாக நடத்த முடியுமா என்பதைப் பரிசீலித்து அவைகளுக்கும் விண்ணப்பிப்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

122190

V211,31'N81
N83-175 2